INDEX TO
TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

9th, 11th and 16th to 18th APRIL 1979.
VOLUME CLX (Nos. 1 to 5).

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

Legislative Council Department
Fort St. George, Madras-600009.

PRICE *Rupee:* 1]

D
Y211, 32 N79
N80-16032
121984

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLX (Nos. 1 TO 5.

9th, 11th and 16th to 18th April 1979.

TABLE OF CONTENTS.

Monday, 9th April 1979.

		PAGES
Personnel of the Government of Tamil Nadu		i–v
Principal Officers of the Tamil Nadu Legislative Council		vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies		ix–xii
1. Questions and Answers	...	1–20
2. Announcement *re*—		
Decision of the Business Advisory Committee	...	20–21
3. Statement under Rule 82 of the Council Rules *re*—		
Distribution of Kerosene	... ...	21–30
4. Adjournment Motion *re*—		
Police firing at Aruppukottai	...	31–41
5. Point of Information *re*—		
Non-taking up of Adjournment Motions	...	41–43
6. Call Attention Notices—		
(1) Closure of Anna Middle School, Veerakeralampudur, Tirunelveli district	...	44–46
(2) Transfer of Sewage Pumping Station from Division No. 34 to Division No. 33 of Madurai Corporation	...	46–48

7. Government Motion—
Discussion on the Policy Note on Education ... 48–86

8. Papers laid on the table of the House ... 87–91

Wednesday, 11th April 1979.

1. Questions and Answers ... 179–210

2. Information *re*—
Obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi ... 210–216

3. Call Attention Notice—
Burning of 500 houses and 11 persons alive in a clash between Harijans and Hill Tribes in three villages near Ootacamund ... 216–218
218–379

4. Discussion on the Policy Note on Education—*cont.*

5. Papers laid on the table of the House 379–380

Monday, 16th April 1979.

1. Obituary Reference *re* death of Thiru A. Ponnappa Naidu, former Member of the Council 389

2. Questions and Answers 389–417

3. Information *re*—
Adjournment Motions given notice of 417–418

4. Call Attention Notices—
(1) Irregular supply of molasses for the manufacture of non-edible oils 419
(2) Leather tanning industry in Tamil Nadu affected by accumulation of stocks 419–420

5. Government Motion—
Discussion on the Policy Note on Agriculture ... 420–496

6. Papers laid on the table of the House ... 496–497

Tuesday, 17th April 1979.

PAGES

1. Suspension of Question-Hour 559

2. Adjournment Motions—
(1) Stoppage of sanction of loans to farmers in Salem district by Co-operatives 559–563
(2) Bus accident near Kalasapakkam in North Arcot district resulting in death of 13 persons 563–564

3. Announcement *re*—
Decision of the Business Advisory Committee ... 564

4. Call Attention Notices—
(1) Heavy rainfall in Kanyakumari district and consequent damage to crops and loss to farmers ... 565–566
(2) Discontinuance of free supply of text-books to poor students of linguistic minorities in Hosur, Denkanikottai and Sulagiri Panchayat Unions in Dharmapuri district 567–568

5. Government Motions—
(1) Election of nine members to the Privileges Committee 569
(2) Election of six members to the House Committee
(3) Discussion on the Policy Note on Agriculture—*cont.* 571–602
(4) Discussion on the Policy Notes on Medical and Public Health 602–660

6. Papers laid on the table of the House 660–661

Wednesday, 18th April 1979.

1. Questions and Answers 739–758

2. Information *re*—
Sample bottles of Siddha Medicines given to Members on 18th April 1979 759–760

PAGES

Wednesday, 18th April 1979—*cont.*

3. Call Attention Notices—
   (1) Hardship caused to Graduate Teachers who participated in the agitation in 1973 in the form of suspension, loss in earned leave, break in service, loss of pay, etc. 760–762
   (2) Insistence on B.T. Teachers in Chengalpattu district to give declaration to forgo promotion if unwilling to be posted to Higher Secondary Schools 763

4. Government Motions—
   (1) Discussion on the Policy Notes on Medical and Public Health—*cont.* 764–833
   (2) Discussion on the Policy Note on Community Development and Panchayat Development ... 833–888
   (3) Discussion on the Policy Note on Nationalised Road Transport and Shipping 889–908

5. Papers laid on the table of the House ... 909

Index 951–997

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

Members of the Council of Ministers.

1. The HONOURABLE THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The HONOURABLE THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works [Buildings], Establishment Works relating to Public Works Department.

3. The HONOURABLE THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The HONOURABLE THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The HONOURABLE THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The HONOURABLE THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price Control.

7. The HONOURABLE THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona.

8. The HONOURABLE THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money lending, Legislation on Chits and Registration of Companies.

9. The HONOURABLE THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The HONOURABLE THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdhan.

11. The HONOURABLE THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The HONOURABLE THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newspaper Control, Hill Tribes and Bonded Labour.

13. The HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The HONOURABLE THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The HONOURABLE SELVI P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The HONOURABLE THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. இ. மனோகரன் (நிதித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத்துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை.

6. மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் ;—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிற்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக்காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. ஓ. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூகநலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கைத்தறி, கதர், நெசவு, நூல்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

திரு. ம.பொ. சிவஞானம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. க. இராமமூர்த்தி.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த.பி. டெல்லிதுரை, பி.எஸ்.சி., பி.எல்.

விவாதப் பதிவாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
1 அப்துல் வகாப், திரு. கே. எஸ்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
2 அறிவழகன், திரு. க., எம்.ஏ.	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி.
3 ஆறுமுகம், திரு. சி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
4 ஆற்காடு வீராசாமி, திரு. நா.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
5 இரத்தின பாலகுருசாமி, திரு.	நியமனம்.
6 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
7 இராமகிருஷ்ணத் தேவர், திரு. எஸ்.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
8 இராசா முகமது, திரு. கா. (கிராமத் தொழில்துறை அமைச்சர்.)	மாநிலச் சட்டமன்றப் பேரவை,
9 இராமமூர்த்தி, திரு. க. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
10 இளம்பரிதி, திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
11 எலமந்தா, திரு. பி., எம்.ஏ.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
12 கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ., எம்.ஏ., பி.எல். (கூட்டுறவுத் துறை அமைச்சர்)	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
13 சங்கரலிங்கம், திரு. ம. எம்.ஏ.	திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி.
14 சந்தோஷம், திரு. டி., எம்.ஏ., பி.எல்.	தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
15 சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்).	நியமனம்.
16 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி.	நியமனம்.
17 சுந்தரேசத் தேவர், திரு. என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
18 சுவாமிநாதன், திரு. ஜி., பி. பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்.)	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
19 டிமாண்டி, திரு. டி. வி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
21 தங்கவேலு, திரு. ஏ. ..	மாநில்ச் சட்டமன்றப் பேரவை.
22 தமிழரசி, திருமதி சி. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
23 தாமஸ், திரு. பி. ஆர். ..	மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி.
24 தாமோதரன், திரு. ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
25 வெற்றிடம்	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
26 திராவிடமணி, திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
27 நல்லசிவன், திரு. ஆ. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
28 நாராயணசுவாமி, திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
29 நீலநாராயணன், திரு. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
30 பால்சுப்பிரமணியம், திரு. கு. மா.	நியமனம்.
31 பாலசுப்ரமணியம், திரு. ஆ.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
32 புலவர் புலமைப்பித்தன்	நியமனம்.
33 பெரியண்ணன், திரு. வீ. ஆர்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
34 மணி, திரு. கோ. சி. ..	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி.	நியமனம்.
36 மாணிக்கம், திரு. ப. ..	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
37 மியாகான், திரு. ஜே. எம்.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
38 மீனாட்சிசுந்தரம், திரு. க்.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள்.
39 முத்துசாமி, திரு. செ. ..	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
40 முருகேசன், திரு. எச். எல்.	நியமனம்.
41 ராமலிங்கம், திரு. சி.	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
42 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா.	வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள்.
43 வசந்த பை, திரு. ஜி. ..	சென்னை பட்டதாரிகள் தொகுதி.
44 வில்வம், திரு. ஏ. கே. ..	நியமனம்.
45 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்).	மாநிலச் சட்டமன்றப் பேரவை.
46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ்.	நியமனம்.
47 ஹண்டே, டாக்டர் எச்.வி.	சென்னை பட்டதாரிகள் தொகுதி.
48 வெற்றிடம்	மாநிலச் சட்டமன்றப் பேரவை.

தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும் (1)	தொகுதி (2)
49 வெற்றிடம்	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 வெற்றிடம்	செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 வெற்றிடம்	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
52 வெற்றிடம்	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
54 வெற்றிடம்	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
55 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
56 வெற்றிடம்	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
57 வெற்றிடம்	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெற்றிடம்	வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெற்றிடம்	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெற்றிடம்	தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 வெற்றிடம்	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62 வெற்றிடம்	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 வெற்றிடம்	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை ண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் ிரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Institute of Film Technology, Madras.

* 271 Q.—THIRU S. RAMAKRISHNA THEVAR (on behalf Thiru K. Ramamoorthi) :—Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) the number of persons working in the Institute of Film Technology, Adayaru, Madras, on (i) honorary, (ii) part-time and (iii) full-time basis; and

(b) the financial commitment for each of the categories of ersons for a year?

சென்னை, திரைப்படத் தொழில் நுட்பவியல் நிலையம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்) : ாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட ினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) (i) கௌரவப்பணி (ii) பகுதி நேரப்பணி மற்றும் (iii) முழு நேரப்பணி ஆகிய அடிப்படையில் சென்னை, அடையாறு, திரைப்படத் தொழில் நுட்பவியல் நிலையத்தில் எத்தனை பேர் பணி புரிகின்றனர் ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு வகைப் பணியாளர்களுக்கும் எவ்வளவு செலவிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) & (இ) திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியில் எழுபத்து ஒன்பது முழு நேர அலுவலர்களும், ஒரு வருகைப் பேராசிரியரும் ((Visiting Professor)) பணி

புரிகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு முழுநேர அலுவலர்களுக்காக ரூ. 6.03 இலட்சமும், வருகைப் பேராசிரியருக்காக ரூ. 18,000ம் செலவிடப்படுகிறது. கௌரவ அலுவலர்களோ, பகுதி நேர அலுவலர்களோ அங்கு பணி புரியவில்லை.

Arasu Studios, Guindy.

* 272. Q.—THIRU S. RAMAKRISHNA THEVAR (on behalf of THIRU K. RAMAMOODTHI): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state the total investment by the State Government on the construction of Arasu Studios in Guindy ?

கிண்டி அரசு படப்பிடிப்பு நிலையம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கிண்டியிலுள்ள அரசு படப்பிடிப்பு நிலையத்தைக் கட்டுவதற்காக, மாநில அரசு, மொத்தமாக முதலீடு செய்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அரசு படப்பிடிப்பு நிலையம் (Arasu Studios) மற்றும் ஒலிப்பதிவு அரங்கம் (Re-recording Theatre) கட்டுவதற்கு அரசின் மொத்த செலவு ரூபாய் 6.29 லட்சமாகும்.

திரு. வே தங்கப்பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிண்டியிலுள்ள அரசு படப்பிடிப்பு நிலையம் கட்டும் பணி எந்த ஆண்டு துவக்கப் பட்டது? எந்த ஆண்டு அந்தப் பணி முடியும் என்று அரசு எதிர்பார்க்கிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்தப் படப் பிடிப்பு நிலையம் எந்த ஆண்டு துவக்கப்பட்டது என்ற வினாவிற்கு பதிலாக, அந்நிலையம் 1962 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது என்பதைச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அந்தப் பணி எந்த ஆண்டு முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வினா எதைப் பொறுத்து என்று எனக்குப் புரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: அரசு படப்பிடிப்பு நிலையத்தில் தொடர்ந்து விஸ்தரிப்புப் பணி நடைபெற்று வருவதாகக் கேள்விப்பட்டேன். குறிப்பாக கடந்த இரண்டாண்டுகளாக விஸ்தரிப்புப் பணி நடைபெற்று

வருவதாகக் கேள்விப்பட்டேன். அவ்வாறு விஸ்தரிப்புப் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா? விஸ்தரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டிருந்தால், அது எப்போது முடிவடையும் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அப்படிப்பட்ட திட்டமிட்ட விஸ்தரிப்புப்பணி எதும் தற்போது நடைபெறவில்லை. அவ்வப்போது அந் நிலையத்திற்குத் தேவைப்படும் கருவிகள் மட்டுமே வாங்கப்படுகின்றன. அல்லது அவசியமான விஸ்தரிப்பு வேலைகள் என்று கருதப்படுபவை மட்டுமே அவ்வப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம்: கிண்டி அரசு படப்பிடிப்பு நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுகிற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா? அதற்குத்தான் இந்தத் தொகை செலவிடப்படுகிறதா அல்லது மேலும் விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்ள இத்தொகை பயன்படுத்தப்பட இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இங்கே அவையில் நான் தந்த கணக்கு, இப்படப்பிடிப்பு நிலையம் கட்டுவதற்காக தொடக்க காலத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிற தொகை பற்றியதாகும். இதைத் தவிர, தொடர்ந்து இந்நிலையத்திற்காகத் தேவைப்படும் கருவிகளை வாங்குவதற்கு செலவழிக் கப்பட்டிருக்கிற தொகை ரூ. 6,30,916 ஆகும். ஆக இதுவரை முதலீடு செய்யப் பட்டிருக்கிற தொகை ரூ. 12.60 இலட்சமாகும். இதைத் தவிர புதிதாக திட்டமிட்ட பணி ஒன்றும் தற்போது மேற்கொள்ளப்படவில்லை.

Reinstatement of Teachers.

* 273 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to State—

(a) whether it is a fact that a number of teachers, who have been ordered reinstatement by the Joint Director of School Education, have not been reinstated by the respective managements; and

(b) if so, the number of such cases, from 20th June 1974, till 19th July 1977 ?

[1979 ஏப்ரல் 9

ஆசிரியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளல்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்கள் பலருக்கு மீண்டும் வேலை கொடுக்கும்படி, பள்ளிக்கல்வி இணை இயக்குநர் ஆணை பிறப்பித்திருந்தும்கூட, சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்தினர் அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், 20—6—1974 முதல் 19—7—1977 வரை அத்தகைய நேர்வுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) 19. ஆனால் இவர்களுள் 10 ஆசிரியர்கள் வேறு பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கல்வித் துறையின் மூலமாகவே மேல்முறையீடு செய்திருக்கிறார்கள் ஆனால் மேல்முறையீடு செய்யப்பட்ட பள்ளிகளின் மேனேஜ்மெண்ட்டார் நீதிமன்றங்களில் 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். அத்தகைய 'ஸ்டே'வை நீக்குவதற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டபோது, அந்தப் பள்ளிகளின் நிர்வாகத்தின் சார்பாக ஆஜராகும் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால், அந்தப் பள்ளிகளைக் குறித்து 'ஸ்டே' நீக்கப்படாமல், அப்பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பாகவும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அது அவர்களுக்கு பாதகமாகவும் இருக்கிறது என்ற காரணத்தால், அந்த 'ஸ்டே'-வை நீக்க அமைச்சர் அவர்கள் துறைக்கு ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வழக்குகள் நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மேல் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்குகளைக் கொஞ்சம் விரைவாக நடத்த முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளும்.

திரு. பி. ஆர். தாமஸ்: தனியார் பள்ளிகள் கட்டுப்பாடு சட்டம் வந்த உடனே. சிறுபான்மையோர் அல்லாத அநேக தனியார் பள்ளி நிருவாகங்கள் கூட நீதிமன்றங்களுக்குச் சென்று இடைக்காலத் தடை உத்தரவைப்

79 ஏப்ரல் 9]

ற்றிருக்கிறார்கள். ஆனால் அரசுத் துறையின் மூலமாக வழக்கு மன்றத்
ற்குச் சென்று அத்தகைய தடைகளை நீக்க வேண்டுமென்று கேட்டபோது,
ரு சில நிருவாகங்களின் பள்ளிகளைப் பொறுத்து 'ஸ்டே' மட்டுமே நீக்கப்
ட்டது. குறிப்பிட்ட சில தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில்,
வைகளின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு வராத காரணத்தால், அந்தப்
ள்ளிகளைப் பொறுத்த 'ஸ்டே' இன்னும் நீக்கப்படாமல் இருக்கின்றது.
தைக் காரணம் காட்டி, அத் தனியார் பள்ளிகளின் நிருவாகங்கள்
ங்களுக்குப் பாதுகாப்பைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இதனால் பாதிப்பு
ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்தத் 'தடை'யை நீக்குவது என்றால், அதை ஆசிரியர்கள் செய்ய முடியாது, அரசுதான் கல்வித்துறையின் மூலம் அதை நீக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும். எனவே கல்வித் துறை இத் தடைகளை நீக்க நீதிமன்றத்திற்கு உடனடியாக மனு செய்யும் வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நீதிமன்றத்திற்கு வழக்குகள் கொண்டு செல்லப்பட்டிருப்பதால், ஆசிரியர்களுக்கு கல்வித் துறை ஏற்கெனவே எல்லா வகையான ஒத்துழைப்பையும் அளித்துக்கொண்டிருக்கிறது. ஒருசில பள்ளிகளைப் பொறுத்தவரையில், நடைபெறும் வழக்குகளில் அரசு வழக்கறிஞர்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றால், அதைப்பற்றிய விவரத்தை அளித்தால், நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி: கோவை மாவட்டம் சத்தியமங்கலத்தில் உள்ள கஸ்தூரிபாய் நிகேதன் உயர்நிலைப்பள்ளியைப் பொறுத்தவரையில், டிரிபியூனலுக்கு வழக்கு சென்றபோது, நிருவாகத்திற்கு எதிராக வழக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் பாதிக்கப்பட்ட ஆசிரியருக்கு உரிய சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டும், இன்னும் கொடுக்கப்படவில்லை. பிறகு மேனேஜ்மெண்ட்டின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துகொள்ளப்பட்டது. இந்த முறையீடு செய்யப்பட்டும் 1½ ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. பாதிக்கப்பட்ட ஆசிரியர் உத்தியோகமும் இல்லாமல், பட்டினியாக இருந்து வருகிறார். எனவே இத்தகைய சூழ்நிலையில் அந்த ஆசிரியருக்கு வாழ்வு காலப்படியாவது கொடுக்கும் வகையில் ஒரு நிரந்தர மாற்று ஏற்பாட்டை, நீதிமன்றத்தின் மூலமாகச் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்ய எந்தச் சாத்தியக்கூறுமில்லை. கோர்ட்டில் இதைப்பற்றிக் கேட்கலாம். கோர்ட்டு ஆணையிட்டால், பிறகு அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஆசிரியர்களில் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் ஆணை பிறப்பித்திருந்தும்கூட, மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படாத ஆசிரியர்களின் எண்ணிக்கை 19 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் 10 பேர் வேறு பள்ளிகளில் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். எனவே மீதியுள்ள 9 பேர்களின் நிலைமை என்ன? அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள நிருவாகங்கள் ஏன் மறுக்கின்றன? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தீர்ப்பாயங்களில் இரண்டாவது முறையீடு செய்து கொண்டவர்கள் 2 ஆசிரியர்கள், உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு போட்ட ஆசிரியர்கள் 3. அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பணி புரிபவர்கள் 2. அரசின் பரிசீலனையில்—நிலுவையில் உள்ளவர் ஒருவர். தேவையான பள்ளியில் நியமிக்க நடவடிக்கையில் இருந்து வருகிறவர் ஒருவர்.

திரு. ம. சங்கரலிங்கம்: அரசுப் பொறுப்பில் இருக்கிற பள்ளியைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஒருவரை நியமிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தப் பள்ளிக்கான இடம் ரெயில்வேக்குச் சொந்தமானது. ஆனாலும் அந்தப் பள்ளி மாநில அரசின் முழு மான்யத்தையும் பெற்று வருகிறது. எனவே அந்தப் பள்ளி மத்திய அரசின்கீழ் வருமா என்று ஆய்வு செய்து வருகிறது.

*274 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Private High Schools, Districtwise, which have not reinstated the teachers whose services were terminated, even after the Government have ordered their reinstatement from 1975 till date; and

(b) the action taken thereon by the Government?

1979 ஏப்ரல் 9]

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1975 முதல் இன்றுவரை தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தும், அவ்வாறு வேலையில் சேர்க்காத உயர்நிலைப் பள்ளிகள், மாவட்ட வாரியாக எத்தனை?

(இ) அவைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) சென்னை—3, செங்கல்பட்டு—1, திருச்சி—11, கோயம்புத்தூர்—6, தென் ஆற்காடு—1, தஞ்சாவூர்—1, மதுரை—1, ஆகமொத்தம் 24.

(இ) மேல் முறையீட்டு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை அல்லது ஆசிரியரல்லாத பணியாளர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள, ஆணை பிறப்பித்தும் பள்ளி மேலாண்மைகள் மேற்படி ஆணைகளை நிறைவேற்றாத நிலையில், பள்ளிக் கல்வித்துறையைச் சார்ந்த ஆய்வாளர்கள், சம்பந்தப்பட்ட பள்ளியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்க ஏற்பாடு செய்ய பணிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களையும், ஆசிரியரல்லாதவர்களையும், சம்பந்தப்பட்ட பதவிகளுடன் வேறு தேவையுள்ள தனியார் பள்ளிகளுக்கோ அல்லது அரசுப் பள்ளிகளுக்கோ அல்லது உள்ளாட்சி நிறுவனங்களினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கோ மாற்றம் செய்ய ஆணை பிறப்பித்துள்ளது. ஆனாலும், தீர்ப்பாயங்களிலோ, வழக்கு மன்றங்களிலோ, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரியரல்லாத பணியாளர்கள் அல்லது பள்ளி மேலாண்மைகள் முறையீடு செய்வது தீர்ப்பாகாமல் நிலுவையிலிருந்தால் இவ்வாணையைச் செயல்படுத்த இயலாது.

(பிற்பகல் 4-10)

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தனியார் பள்ளிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருந்தும், இன்னும் 24 ஆசிரியர்கள் மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீர்ப்பாயம் அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்ப்புக் கொடுத்த பிறகும், அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளாத

நிறுவனங்களின் மீது அரசு நடவடிக்கை எடுத்ததா? ஆசிரியர்கள் பாது காப்புச் சட்டப்படி, தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத பள்ளிகளை அரசே எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 24 ஆசிரியர்களை பள்ளி மேலாண்மைகள் வேலையில் திரும்பச் சேர்த்துக்கொள்ளவில்லை. இதில் அரசாணை 1664, கல்வி, நாள் 4—9—1978-ல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளபடி அப்பள்ளிகளிலுள்ள காலி பதவிகளுடன் வேறு பள்ளிகளில் 11 ஆசிரியர்கள் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மீதியுள்ள 13 ஆசிரி யர்களுள்—

(1) தீர்ப்பாயங்களுக்கு முறையீடு செய்து நிலுவையில் உள்ளவை—2;

(2) உயர் நீதி மன்றத்திற்கு ரிட் மனு செய்துள்ளவர்கள்—7;

(3) அரசு மானிய உதவி பெறாத பள்ளிகளில் பணிபுரிபவர்கள்—2;

(4) பள்ளி மேலாண்மை செய்ய முறையீடு அரசின் ஆய்வில் உள்ளது—1;

(5) தேவையான பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டு வருபவர்களின் எண்ணிக்கை—1;

ஆக மொத்தம் 13.

திரு. செ. முத்துசாமி: கீழ் மட்டத்தில் இருக்கக் கூடிய டிரிபியூனலில் சட்டரீதியாக ஆசிரியர்களுக்குத் தீர்ப்பு வழங்கப்படும்போது, மேற்கொண்டு கோர்ட்டுக்குச் செல்லக்கூடியவர்கள் ஆசிரியர்களுக்குரிய சம்பளப் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் வழக்குப்போட வேண்டுமென்ற விதி வைக்கப்பட்டி ருக்கிறது. இது ஒரு நல்ல ஏற்பாடு. தீர்ப்பு ஆசிரியர்களுக்குச் சாதகமான பின்னர், நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்திற்குச் செல்லுகிறார்கள். உயர்நீதி மன்றத்திற்குச் செல்லும்போது, ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைக் கட்டி விட்டுத்தான் வழக்குப் போட வேண்டுமென்ற விதியில்லை. இந்த விதியில்லாத காரணத்தால், பல ஆண்டுகளாக வழக்கை இழுத்தடிக்கிறார்கள். இதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே டிரிபியூனலின் தீர்ப்பை எதிர்த்து நிர்வாகத்தினர் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போடுவதாக இருந்தால், ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கட்டிவிட்டுத்தான் போட வேண்டுமென்று சட்ட விதிகள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை அரசு பரிசீலிக்கும்.

Teachers of Government High Schools of North Arcot district.

* 275 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a condition has been prescribed to the effect that, if the Teachers of Government High Schools of North Arcot district desire to write the examination for higher studies, their students should have secured not less than 60 per cent of marks in S.S.L.C. Public Examination in the subjects handled by them; and

(*b*) if so, whether the Government will take steps to remove this condition which is not in force in other districts?

வடஆற்காடு மாவட்ட அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் மேல்படிப்புக்கான தேர்வு எழுத விரும்பினால், அவர்கள் நடத்தும் பாடங்களில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வில் (S.S.L.C. Public Examination) 60 சதவிகிதத்திற்குக் குறை யாமல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டி ருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பிற மாவட்டங்களில் இல்லாத இந்த நிபந்தனையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இப்போது அம்மாதிரி நிபந்தனைகள் எதுமில்லை.

(இ) இப்பிரச்சினை எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அவ்வாறு ஒரு நிபந்தனையை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் அனைத்துப் பள்ளிக் கூடங்களுக்கும் எழுத்து மூலமாக அனுப்பியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு முறையிட்டதின் பேரில் அந்த ஆணையை, ரத்து செய்யாமல், தற்காலிக நடவடிக்கையாக அந்த ஆண்டு மட்டும் ஆசிரியர்களுக்கு

அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. அந்த ஆணை உயிரோடிருக்கும் வரையில் தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். ஆகவே அந்த ஆணையை ரத்து செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மேற்படிப்புக்கு எந்த ஆசிரியர் சென்றாலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர், முதன்மைக் கல்வி அதிகாரிகளிடம் வற்புறுத்தியிருக்கிறார்.

திரு. க. அறிவழகன் : மேல்படிப்புக்குச் செல்லுகிற ஆசிரியருக்குத் தடை எதும் விதிக்கக்கூடாது என்று நிலைமை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கற்பட்டிலே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மேற்படிப்புக்குச் செல்லுகிற நேரத்தில், அவர்களைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லாப் பள்ளிகளுக்கும் நெறியாளர் அவர்களுடைய ஆணையை அனுப்பி ஆசிரியர்கள் மேற்படிப்புக்குச் செல்லுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசினுடைய அதிகார வரம்பைப் பொறுத்து, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

Technical High Schools.

* 276 Q.—Thiru K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal to convert the Technical High Schools into Higher Secondary Schools; and

(*b*) if not, the reason therefor ?

தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளை, உயர்இடைநிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1979-80 ஆம் ஆண்டிலிருந்து தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளை, தொழில் நுட்ப மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Fare Concession to Teachers.

* 277 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government have any scheme to give fare concession to the teachers to travel in the Tamil Nadu State Transport Buses, as is being given by the Central Government to the teachers for travelling in trains ?

ஆசிரியர்களுக்கு கட்டணச் சலுகை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆசிரியர்கள் ரயிலில் பயணம் செய்வதற்கு கட்டணச் சலுகையை மத்திய அரசு வழங்கியிருப்பதுபோல், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துப் பேருந்துகளில் ஆசிரியர்கள் பயணம் செய்ய, கட்டணச் சலுகை வழங்க அரசு திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இவ்வாறு ஒரு சலுகையைக் கொடுத்திருக்கிறது. தனியாக ஆசிரியர்கள் கல்விப் பயணத்தை மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு அரைக் கட்டணச் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆசிரியர்கள் குழுவாகச் சென்றாலும் கூட, கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் துறை இலாபத்தில் நடக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைத்தால், ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகையை அளிக்க முடியும். அதிகமான செலவு ஒன்றும் ஆகிவிடாது. ஆகவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஆசிரியர்கள் கல்விப் பயணத்திற்குச் செல்லும்போது—உல்லாசப் பயணத்திற்கல்ல—இந்தச் சலுகையை அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் நடக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் போக்குவரத்துக் கழகங்கள் பெறுகின்ற இலாபமெல்லாம் தற்போது சாலைகளைச் செப்பனிடுவதற்காகவும், அவற்றைப் பராமரிப்பதற்காகவும் ஒதுக்கப்பட வேண்டுமென்று முடிவு எடுத்து அந்த அடிப்படையில் இலாபத்தில் பெரும் பகுதி சாலைகளுக்காக ஒதுக்கப்படுகிறது. அதோடு இலாபத்தின் ஒரு பகுதி, தொழிலாளர்களுக்கு வேண்டிய சலுகைகளை அளிப்பதற்காகவும், சேம நலத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்பட வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தொழிலாளர்களுடைய நலனுக்காக ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிற ஆசிரியர்களின் நலனுக்காக, ஓர் ஆண்டில் குறிப்பிட்ட காலத்திலே பயணம் செய்யலாம் என்ற விதிமுறையை வகுக்கலாம். ஆகவே நான் முன்பு சொன்னதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பிரச்சினையெல்லாம், ஆசிரியர்களுக்கு மட்டும் இந்தச் சலுகையை அளிப்பது என்பதல்ல. தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படிக்கிற அனைத்து மாணவர்களுக்கும் இந்தச் சலுகையைக் கேட்கிறார்கள். பெருநகர்ப் பிரிவிலே இந்தச் சலுகை மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்களுக்கும் இந்தச் சலுகை வேண்டுமென்ற தார்மீகக் கோரிக்கையை கிராமப்புறங்களில் எழுப்பி வருகிறார்கள். ஏற்கெனவே பல்வேறு சலுகைகளை அளித்திருப்பதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூபாய் 1,87,74,000 அளவுக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது. பெருநகர்ப் பிரிவில் பணிபுரிகிற தொழிலாளர்களுடைய போனஸ் குறைந்துவிடக்கூடாது என்பதற்காக அரசு இத்தொகையை ஈட்டுத்தொகையாகத் தருகிறது. இத்தகைய சிக்கல்கள் இருப்பதாலும், இதுபோன்ற கோரிக்கைகள் பல்வேறு பகுதியில் இருந்து வருகின்றன என்பதாலும், ஏனைய பிரிவினரைவிட ஆசிரியர்களுக்குத் தேவையான ஒன்று என்றாலும், இந்தச் சலுகையை அரசு அவர்களுக்கு அளிக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : இந்தச் சலுகையை ஆசிரியர்களுக்கு அளிக்க வாய்ப்பில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன், கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய

மாணவர்களுக்கு, பெரு நகரில் உள்ள மாணவர்களுக்கு அளிப்பதைப்போல பாஸ் கொடுத்து உதவுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? நட்டம் என்பதை மட்டும் கணக்கிலே கொள்ளாமல், கிராமத்திலுள்ள பிள்ளைகளும் முன்னேற வேண்டும் என்ற வகையில் இந்த அரசு அதை அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராமப்புறத்திலுள்ள மாணவர்களுக்கு இந்தச் சலுகையை அளிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை அரசு பரிசீலித்ததால்தான், அவர்களுடைய 'தார்மீகமான' கோரிக்கை என்று நான் சொன்னேன். போக்குவரத்துக் கழகங்களுக்கு இழப்பு ஏற்பட்டால், அதை ஈடு செய்ய மக்களிடம்தான் வரிப் பணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : இங்கே பெருநகரிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்குச் சலுகை வழங்கப்படுவதற்குக் காரணம், அவர்கள் முழுக் கட்டணத்தையும் செலுத்த முடியாது என்பதுதான். நகரத்திலே இருப்பவர்களுக்கு ஒருவிதமான சலுகை அளிப்பதும்; கிராமத்திலே உள்ளவர்களுக்குச் சலுகை என்று சொல்லும்போது நஷ்டம் ஏற்படுகிறது என்று சிந்திப்பதும் தர்மம் தானா? நகரத்தில் ஒரு சலுகையை அளிக்கும்போது, கிராமத்தில் உள்ளவர்களுக்கும் அளிக்க வேண்டும். ஏற்படக்கூடிய நஷ்டத்தைப் பற்றிச் சிந்திக்காமல், இந்த அரசு வேறு வகையிலே அதை ஈடு செய்யக்கூடிய வகையில் வழி கண்டு கிராமப்புறத்து மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது தர்மம் அல்ல என்பதை உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், 'தார்மீகம்' என்று கூறினேன்.

Bus Service between Christianpet and Reddipalayam.

* 278 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the stage carriage plying on the route between Christianpet and Reddipalayam of North Arcot district by a private operator, has been stopped;

(b) if so, the action taken against the permit holder and also to provide transport facilities to the public between those two places;

(c) whether any representation has been made to the Transport Authority by the Villagers of Reddipalayam, to reintroduce the above service; and

(d) if so, the action taken thereon ?

கிறிஸ்டியன்பேட்டைக்கும் ரெட்டிபாளையத்திற்கும் இடையே பேருந்து வசதி.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டம், கிறிஸ்டியன்பேட்டைக்கும் ரெட்டிபாளையத்திற்கும் இடையே உள்ள வழித்தடத்தில் தனியார் பேருந்து உரிமையாளர் நடத்தி வருகின்ற பயணப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) அனுமதி வைத்திருப்பவருக்கு எதிராகவும், மேற்சொன்ன இரண்டு இடங்களுக்கு இடையே பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காகவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(உ) மேற்சொன்ன போக்குவரத்துப் பணியை மீண்டும் கொண்டு வருவதற்காக, ரெட்டிபாளையத்தின் கிராம மக்கள் போக்குவரத்து அதிகார மன்றத்திடம் முறையீடு ஏதேனும் செய்துள்ளனரா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 193-ன்படி தனது உரிமத்தை ஒப்புவித்துவிட்டபடியால் பேருந்தின் உரிமையாளர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(உ) ஆம்.

(எ) காட்டுக்காநூரிலிருந்து, ரெட்டிபாளையம் வரை செல்லும் பாதை மிகவும் குறுகியதாக இருப்பதாலும், பேருந்துப் போக்குவரத்திற்குத் தக்க அளவில் மக்கள் போக்குவரத்து அப்பகுதியில் மிகவும் குறைவாக இருப்பதாலும், ரெட்டிபாளையத்திற்கு உடனடியாக போக்குவரத்து வசதி செய்யும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசினிடம் இல்லை.

(பிற்பகல் 4-20)

Filariasis.

* 279 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government have taken any steps to arrest the spreading of Filariasis in Pudukkadai area of Vilavancode taluk, and Thalakkulam area of Kalkulam taluk, Kanyakumari district; and

(b) if so, the details thereof ?

யானைக்கால் வியாதி.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், புதுக்கடை வட்டாரத்திலும் கல்குளம் வட்டம், தலக்குளம் வட்டாரத்திலும், யானைக்கால் வியாதி பெருகி வருவதைத் தடுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதுபற்றி விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(இ) குமரி மாவட்டம் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுக்கடை பேரூராட்சிப் பகுதியில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,800 செலவில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு 1977-ம் ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது. குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்திலும், அதனைச் சார்ந்த மண்டைக்காடு, கள்ளுக்கோட்டம், தலக்குளம், மண்டே மார்க்கெட் போன்ற பகுதிகளிலும் முதுநிலை பூச்சியியல் அறிஞரால் ஆய்வு செய்யப்பட்டு இந்நோய் அப்பகுதிகளில் பரவி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேவையான செயற்குறிப்புகள் தீட்டி அதற்கு உள்ளாட்சி மன்றங்களின் ஒப்புதலும் ஊரக-வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலும் பெற பொது சுகாதாரம், தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

[1979 ஏப்ரல் 9

திரு. ம. சங்கரலிங்கம்: புதுக்கடை, தலக்குளம் வட்டாரங்களில் உள்ள நிலப்பகுதி சதுப்பு நிலப் பகுதியாக இருப்பதாலும் நீர்த் தேக்கங்களில் கடல் நீர், கழிவு நீர் மிகுதியாகத் தேங்கியிருப்பதாலும், ஆண்டுக்காண்டு யானைக் கால் நோய் அதிகப்பட்டுக்கொண்டிருக்கிறது. 1975 முதல் ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு பேர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் என்ன? அந்த நோய் பரவுவதைத் தடுத்து நிறுத்த, சிகிச்சை தருவதற்குரிய பிரிவினை தலைமை மருத்துவ மனையிலே புதுக்கடை, தலக்குளம் பகுதியில் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: கன்னியாகுமரி மாவட்டத்தில் புதுக்கடை பேரூராட்சி மற்றும் ஆழாங்குளம் ஊராட்சியில் ரூ. 3,800 ஆண்டொன்றுக்கு செலவில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தால் செயற்படுத்தப்பட 31—12—1977 ஆம் நாளிட்ட 2638 ஆம் எண்ணுள்ள அரசு ஆணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கல்குளம் வட்டம், குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மொந்தைக் காடு, கல்லுகூடம், தலக்குளம், திங்கள் சந்தை ஆகிய ஊராட்சிகளில், கோயம் புத்தூரிலுள்ள முதுநிலை பூச்சியியல் அறிஞரால் பொது ஆய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டது. அதன்படி அவ்வூராட்சி ஒன்றியத்தால் செயல்படுத்தப் படுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ. 25,000 செலவில் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றை அவர் மக்கள் நல்வாழ்வு, தடுப்பு மருத்துவத்துறை இயக்குநருக்கு அனுப்பினார். இந்தச் செயற்குறிப்பு மக்கள் நல்வாழ்வு தடுப்பு மருத்துவத்துறை இயக்குநரால் குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, ஊராட்சி ஒன்றியத்தால் மக்கள் நல்வாழ்வு, தடுப்பு மருத்துவத்துறை இயக்குநருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது. அது கிடைக்கப் பெற்றதும், அரசின் ஒப்புதலுக்கு வரும். அது அரசுக்கு வந்த பின்னர் ஆய்வு செய்யப்படும்.

திரு. ம. சங்காலிங்கம்: ஊராட்சி ஒன்றியத்திற்கு சிறிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு இந்த நோய் தீர்க்கப் பட முடியாது. இந்த நோயைத் தடுக்க, மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து தனியாக ஒரு மருத்துவரை அங்கே நியமனம் செய்து, அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னென்ன சிகிச்சைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய அரசு முன்வருமா?

1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்கின்ற யோசனையும் பரிசீலிக்கப் படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: கன்னியாகுமரி மாவட்டத்தில் சில ஊர் களிலே யானைக்கால் வியாதி இருக்கிறது என்பது குறித்து இந்தக் கேள்வி இருக்கிறது. ஆனால் யானைக்கால் வியாதி கடற்கரைப் பகுதியை ஒட்டியுள்ள பகுதிகளில் இருக்கிறது. தமிழ்நாட்டிலே இது பரவலாக இருக்கிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். கடற்கரைப் பகுதியிலே யானைக்கால் வியாதி வர என்ன காரணம்? அரசு அதைப்பற்றி ஆராயுமா? அதைத் தடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித் திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: இந்த வியாதி 'விழுலெக்ஸ்' என்னும் ஒருவித கொசுவினால் உண்டாகிறது. இதுபோன்று தண்ணீர் அதிகமாகத் தேங்குகின்ற பகுதிகளிலெல்லாம் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு வழிவகைகள் இருக்கின்றன. இப்போது அந்தக் கொசுப் பெருக்கத்தைத் தடுப்பதுதான் இந்த நோயைத் தடுக்க வழிவகையாக இருக்கிறது. அதற்கு இப்போது தக்க வழிவகைகள் இல்லை. இந்த வியாதியை மக்களிடமிருந்து அறவே ஒழிப்பதற்கு தகுந்த வழிமுறைகள் இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. அது இப்போது மருத்துவத் துறையின் ஆய்வில் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்த யானைக்கால் நோயை அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்யலாம் என்கிறார்கள். கேரள சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்த நோய் ஏற்பட்டு ஒரு தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின் மூலம் அவருக்கு குணமாக்கி யிருக்கிறார்கள். அறுவைச் சிகிச்சையின் மூலம் யானைக்கால் வியாதியைக் குணப்படுத்தும் முறையைக் கையாளும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: யானைக்கால் வியாதி ஏற்பட்டு முற்றி கால் பருத்துவிடும். அப்படிப் பருத்து கிட்டத்தட்ட யானைக் காலைப் போல கால் மாறிவிடுகின்றது. இதற்கு முன்னாலே இந்த வியாதி யைக் குணப்படுத்த முடியாது என்ற நிலைமை இருந்தது. தற்போது அந்த நோயை ஒரு அறுவை சிகிச்சை மூலம் சரிப்படுத்தலாம். நரம்பிலிருந்து ஒருவிதமான திரவத்தை வெளியே வரச்செய்து அதற்குப் பின்னாலே அந்த வீக்கத்தை வடியச் செய்து, அந்த வீக்கம் குறைந்த பிறகு, உப்பியிருக்கின்ற

தோலை எடுத்து, ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து சரிபடுத்துகிறார்கள். தற்போது தஞ்சையிலே இருக்கின்ற ஒரு மருத்துவக் கல்லூரியில் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறை சரியான பலன் தருகிறதா என்று பார்க்கிறார்கள். அதுபற்றித் தெரிந்த பிறகு, அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக் கால் நோய் பரவுவதைத் தடுக்கக்கூடிய வகையில் ஒரு ஸ்பெஷலிஸ்ட் அங்கு அனுப்பப்பட்டு, அதைப் பற்றி ஆய்வு செய்து, அங்கே அந்த நோயைத் தடுக்க, ரூ. 25,000-க்கு ஒரு திட்டத்தைப் போட்டு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். இதைத் தடுப்பதில் ஒரு ஆண்டுக் காலமாக தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்பெஷலிஸ்ட் கொடுத்த அறிக்கையின் படி இந்த நோயைத் தடுப்பதற்காக உடனடியாக ரூ. 25,000 செலவில் உள்ள அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மக்களுக்குத் தேவையானவைகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம். ஆனால் அதற்கு என்று சில வழிவகைகள், விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளை நாம் பின்பற்றித்தான் ஆக வேண்டும். இது ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு என்று ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். மாவட்டம் அளவிற்குச் செயல்படுவதற்கு அவர்கள் பொறுப்பேற்று இருக்கிறார்கள். இதுபற்றி அவர்களிடமும் தகுந்த ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Extension Educators in Family Welfare Department.

* 280 Q. THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether as per G.O. Ms. No. 1280, Health and Family Welfare, dated 26th May 1976, all the Extension Educators in Family Welfare Department are to be made permanent in other posts suitable to them; and

(*b*) if so, the number absorbed in suitable posts and the number awaiting to be absorbed as on 12th September 1978?

குடும்பநலத்துறையின் விரிவாக்க போதகர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடும்பநலத் துறையிலுள்ள விரிவாக்க போதகர்கள் (Extension Educators) அனைவரும் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறையின் 26—5—1976 நாளிட்ட 1280-ஆம் எண் அரசாணைக்கிணங்க அவர்களின் தகுதிக்கேற்ப பிறபதவிகளில் நிரந்தரமாக்கப்பட இருக்கிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், 12—9—1978 அன்றுள்ளவாறு, தக்க பதவிகளில் அவ்வாறு நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? நிரந்தரமாக்கப்பட இருப்பவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) & (இ) மைய அரசின் அறிவுரைகளுக்கிணங்க நான்கு வகைகளாக இருந்த நகர்ப்புற குடும்பநல நிலையங்கள் மைய அரசின் பணி அமைப்புப்படி 26—5—1976 ஆம் நாளும் 1280 (நிலை) நல்வாழ்வு என்னும் கொண்ட அரசு ஆணையில் மூவகை நகர்ப்புறக் குடும்பநல நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டன. மூன்றாம் வகை நகர்ப்புற குடும்ப நல நிலையங்களுக்கான மைய அரசின் பணி அமைப்பில், விரிவாக்க போதகரின் பணியிடம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, மகப்பேறு துணைச் செவிலியின் பணியிடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மைய அரசின் அறிவுரைப்படி, மூன்றாம் வகை நகர்ப்புற குடும்பநல நிலையங்களில் உள்ள விரிவாக்க போதகர்கள் வேறு தகுந்த பணியிடங்களில் அமர்த்தப்படும் வரை அவைகளிலேயே தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்பட வேண்டும். இம்மாநிலத்தில் உள்ள மூன்றாம் வகை நகர்ப்புற குடும்பநல நிலையங்களில் 28 விரிவாக்க போதகர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் விரிவாக்க போதகர்களாக தொடர்ந்து இருக்கிறார்கள். வேறு இடங்களில் அவர்களுக்குப் பொருத்தமான பணியிடங்கள் இல்லாமையினால் அவர்களில் எவரும் வேறிடத்தில் அமர்த்தப்படவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ்: இவ்வாறுள்ள குடும்பநலத்துறை விரிவாக்கப் போதகர்களுக்கு ஆண்டுதோறும் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறதா? மற்ற ஊழியர்களுக்கு கொடுக்கின்ற மற்ற சலுகைகள் வழங்கப்படுகிறதா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : விரிவாக்கப் பணியிலே பணி யாற்றுகின்றவர்களுக்கு, மத்திய அரசின் திட்டத்தின் அடிப்படையில் எந்தெந்த வகையில் சலுகைகள் வழங்கப்படுகின்றதோ, அந்த அளவுக்கு இவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது :—

11.4.1979	புதன்கிழமை	கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் தொடரும்.
12.4.1979 முதல் 15.4.1979	வியாழக்கிழமை ஞாயிற்றுக்கிழமை	கூட்டம் இல்லை.
16.4.1979	திங்கட்கிழமை	வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.
17.4.1979	செவ்வாய்க்கிழமை	மருத்துவம், பொதுச் சுகாதாரம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.
18.4.1979	புதன்கிழமை	சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.

19.4.1979	வியாழக்கிழமை	சமூக நலன் மற்றும் இந்து அறநிலையம், அறக் கட்டளைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
20.4.1979	வெள்ளிக்கிழமை	கூட்டுறவுகொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
21.4.1979	சனிக்கிழமை	உணவு, நுகர் பொருள் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
22.4.1979	ஞாயிற்றுக்கிழமை	விடுமுறை.
23.4.1979	திங்கட்கிழமை	தொழில் மற்றும் தொழி லாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.
24.4.1979	செவ்வாய்க்கிழமை	நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவை ஆய்வு செய்தல்.
25.4.1979	புதன்கிழமை	தனி உறுப்பினர் அலுவல்.
26.4.1979 27.4.1979	வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை	1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்வாரியத் தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.

மேற்கொண்டு நிகழ்ச்சி விபரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம்போல் மாலை 4 மணி முதல் 7 மணிவரை நடைபெறும்.

3. மேலவை விதி 82ன்- கீழ் அமைச்சரின் விளக்க உரை.

மண்ணெண்ணெய் விநியோகம் குறித்து.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு மேலவைத் தலைவ ரவர்களே, சென்ற இரண்டு வாரங்களாக தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்த கெரசின் தட்டுப்பாட்டிற்கு அவசரமாகத் தீர்வு காணும் வகையில் சென்ற வாரம் வெள்ளிக்கிழமையன்று நானும், உணவுத் துறைச் செயலரும் மத்திய அரசின் பெட்ரோலியம் அமைச்சர் மாண்புமிகு திரு. பகுகுணா அவர்களைச் சந்தித்து நிலைமையை விளக்கினோம்.

ஒவ்வொரு மாதமும் கொசினை மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. 1979 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், சனவரி மாதத்தில் நமக்கு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை விட, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஒதுக்கீடு குறைவாகவும், ஏப்ரல் மாத ஒதுக்கீடு மார்ச் மாத ஒதுக்கீட்டை விட மேலும் குறைவாகவும் இருந்துள்ளன. இதை மத்திய அரசுக்கு நாங்கள் எடுத்துக் காட்டினோம். சென்ற ஆண்டு அதே மாதத்திய ஒதுக்கீட்டின் அடிப்படையில் இந்த ஆண்டு அந்த மாதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்ற நிலைமை விளக்கப்பட்டது. அந்த அடிப்படை பொருத்தமானது என்று வாதத்திற்கு ஏற்றுக்கொண்டால்கூட, அந்த அடிப்படையின் கீழும் இந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் நமக்குக் கிடைத்த ஒதுக்கீடுகள் குறைவாகவே இருந்தன என்பதை எடுத்துக் காட்டினோம். 1979ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் தமிழகத்திற்குக் கொசின் ஒதுக்கீடு 26,806 மெட்ரிக் டன்கள் ஆகும். பிப்ரவரி மாதத்தில் 26,466 மெட்ரிக் டன்கள் ; மார்ச் மாதத்தில் 26,838 மெட்ரிக் டன்கள் ; ஏப்ரலில் 24,733 மெட்ரிக் டன்கள். ஆக சென்ற நான்கு மாதங்களில், கொசின் ஒதுக்கீடு படிப்படியாகக் குறைந்துள்ளது. ஆகவே இந்த அடிப்படையிலும் நம் மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய ஒதுக்கீடு கிடைக்கவில்லை என்று எடுத்துக் காட்டப்பட்டது.

1978ஆம் ஆண்டு ஒதுக்கீடுகளுடன் ஒப்பிட்டால்கூட, 1978 மார்ச்சில் ஒதுக்கீடு 27,754 மெட்ரிக் டன்கள். 1979 மார்ச்சில் 26,838 மெட்ரிக் டன்கள். அது போலவே, 1978 ஏப்ரலில் ஒதுக்கீடு 25,339 மெட்ரிக் டன்கள் ; 1979 ஏப்ரலில் 24,733 மெட்ரிக் டன்கள். மாத ஒதுக்கீடு முக்கியமல்ல என்றும், சென்ற ஆண்டு அதே மாதத்தில், எவ்வளவு தமிழகத்தில் செலவாயிற்றோ அதற்குக் குறையாமல் இந்த ஆண்டு அதே மாதத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்று விவாதத்தின்போது விளக்கப்பட்டது. இந்த அடிப்படையில் பார்த்தாலும், 1979 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாத ஒதுக்கீடுகள். 1978 ஆம் ஆண்டு அதே மாதங்களில் செலவான எண்ணெயைவிடக் குறைவாகவே இருந்துள்ளன. 1978 மார்ச்சில் செலவானது 26,769 மெட்ரிக் டன்கள். 1979 மார்ச் ஒதுக்கீடு 26,838 மெட்ரிக் டன்கள். 1978 ஏப்ரலில் செலவானது 26,088 மெட்ரிக் டன்கள். 1979 ஏப்ரல் ஒதுக்கீடு 24,733 மெட்ரிக் டன்கள்.

ஆகவே, எந்த அடிப்படையைக் கொண்டு பார்த்தாலும், தமிழகத்திற்கு 1979 ஆம் ஆண்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் கொசின் ஒதுக்கீடுகள் குறைவாகவே உள்ளன என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டி, இந்த ஒதுக்கீட்டை உடனடியாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அமைச்சரிடம் வலியுறுத்தினோம். சர்வதேச நிலைமைகளையொட்டி, நம் நாட்டிற்கு மொத்த

மாகக் கிடைத்துவரும் கொசின் அளவு பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், நம் கோரிக்கையைக் கருத்தில் கொள்வதாக மத்திய அமைச்சர் தெளிவு படுத்தினார்.

ஆகவே, இப்போதைய ஒதுக்கீடு, நம் தேவைக்குப் பெரிதும் குறைவாக உள்ளது என்பதை நாம் உணர்ந்து, கிடைக்கும் கொசினைச் சீராக விநியோகிக்கத் திட்டம் வகுப்பது அவசியமாகிறது. முன்பும், அவ்வப்போது, கொசின் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டு. போக்குவரத்திலோ, விநியோகத்திலோ தற்காலிகமாக ஏற்பட்ட சில இடர்ப்பாடுகள் காரணமாக எழுந்தது, அந்தத் தட்டுப்பாடு. ஆனால், இப்பொழுதோ நம் நாட்டிற்கு மொத்தமாகக் கிடைக்கும் கொசின் அளவு உயர்ந்தாலொழிய, இப்பிரச்சினைக்குத் தீர்வு நிரந்தரமாகக் காண இயலாது என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும், சமையல் வாயு வழங்குவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால், சென்னை நகரத்தில் அதையே நம்பியிருந்த ஏறக்குறைய 1.25 லட்சம் குடும்பங்கள் சமையல் வாயு கிடைக்காத காரணத்தினால் கொசினை வாங்க முற்பட்டுள்ளனர். அண்மையில் மத்திய அரசு கொசின் மீது கலால் வரியை உயர்த்தியதைத் தொடர்ந்து விற்பனையில் ஏற்பட்ட விளைவுகளும் இந்த நெருக்கடி வலுப்பதற்கு ஏதுவாக இருந்தன. ஒரு புறம் ஹை ஸ்பீட் டீசல் எண்ணெயின் விலைக்கும் பெட்ரோல் விலைக்கும், மறுபுறம் கொசின் விலைக்கும் இடையே கணிசமான வேறுபாடு இருக்கும் காரணத்தால், கொசினை, வாகனங்கள் ஓட்டுவதற்காகப் பயன்படுத்தும் போக்கும் வளர்ந்தது. இப் பல்வேறு காரணங்களினால் இப்பொழுது தமிழகத்தில் ஏற்பட்ட கொசின் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு நீண்ட கால நோக்குடன் நிரந்தரமான தீர்வுகள் காண்பது அவசியமாகிறது. ஆகவே, குடும்பக் கார்டின் அடிப்படையில் கொசினை வழங்குவது என்று கொள்கை முடிவு செய்து, முதற்கட்டமாக சென்னை நகரைப் பொறுத்தவரையில் இம்மாதம் முதற்கொண்டு, மாதத்திற்கு இரு முறை 3 லிட்டர், ஆக மொத்தம் மாதத்திற்கு 6 லிட்டர்கள் கொசின், குடும்ப அட்டைகளின்பேரில் வழங்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, சென்னையில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றான ஜார்ஜ் டவுன் பகுதியில் இம்மாதம் 5ஆம் தேதி முதற்கொண்டு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் நடத்தி வருகின்ற ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைகளின்பேரில் கொசின் வழங்கும் திட்டம் செயல்படத் தொடங்கி விட்டது. இத்திட்டத்திற்கு மக்களிடையே பேராதரவும் வரவேற்பும் கிட்டியுள்ளது. நமக்கு மன நிறைவு அளிக்கக்கூடியதாக உள்ளது. இன்னும், இரண்டு வாரக் காலத்திற்குள் இத்திட்டம் சென்னை நகரின் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். அதற்கிடையில் சென்னை நகரின் மற்ற பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும்

நடத்தும் ரேஷன் கடைகளின் கண்காணிப்பில், அக் கடைகளுக்கு முன்பாகவே கைவண்டிக்காரர்கள் மூலமாகக் குடும்ப அட்டைகளின் அடிப்படையிலேயே கெரசின் விநியோகம், இம்மாதம் 7ஆம் தேதி முதற் கொண்டு நடந்து வருகிறது. இவற்றின் காரணமாக, விநியோகத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடி கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குடும்பக் கார்டின் அடிப்படையில் கெரசின் விநியோகத்தைச் சீராக நடத்த வேண்டுமென்றால், கெரசின் விநியோகப் பொறுப்பு முழுமையாக மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியம். இதுவரை உள்ள முறைப்படி கெரசின் விநியோக மொத்த வியாபாரிகள், 'இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்' போன்ற ஆயில் கம்பெனிகளால் தேர்ந்து எடுக்கப்பட்டு நியமிக்கப்படுகின்றனர். அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் மாநில அரசிடமிருந்து உரிமம் பெற்றுக் கொள்கிறார்களே ஒழிய, அவர்களைத் தேர்ந்தெடுப்பதிலோ, நியமிப்பதிலோ, மாநில அரசுக்குப் பங்கும், பொறுப்பும் கிடையாது. நெருக்கடி ஏற்படுகின்ற நேரங்களில் மட்டும் மாநில அரசு, விநியோகத்தில் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்து, நிலைமையைச் சீர் செய்ய தலையிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது சீரான விநியோகத்திற்கு உகந்ததல்ல. ஆகவே கெரசின் தட்டுப்பாடு இனி எப்போதும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும், விநியோக முறை முறிந்துவிடாமல் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை எடுக்கவும், பொது விநியோக முறையின்கீழ் கெரசின் வழங்குவது ஒன்றுதான் நிரந்தரமான தீர்வாகும். இதைச் செயல்படுத்த வேண்டுமென்றால் கெரசின் மொத்த வியாபாரத்தில் அரசுச் சார்பு நிறுவனங்களுக்கு இப்பொழுது பங்கு எதுவுமே இல்லாத நிலை மாறி, படிப்படியாக அவர்களிடம் பங்கும், பொறுப்பும் ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதை நாங்கள் திரு. பகுகுணா அவர்களிடம் வலியுறுத்தினோம். இக்கருத்தை அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். இனிமேல் தனியார் வியாபாரி எவரையும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும், மற்ற கம்பெனிகளும் கெரசின் மொத்த வியாபாரிகளாக நியமிக்க மாட்டார்கள் என்றும், அரசுச் சார்புடைய நிறுவனமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உடனடியாக மொத்த வியாபாரிகளில் ஒருவராக நியமிக்கப்படுமென்றும், மொத்த வியாபாரிகளுக்குச் செய்யப்படும் ஒதுக்கீட்டு முறையை மறு ஆய்வு செய்ய மத்திய அரசு இப்போது தனியாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையொட்டி அரசுச் சார்புடைய நிறுவனங்களுக்கு மொத்த ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுமென்று திரு. பகுகுணா அவர்கள் எங்களிடம் தெரிவித்தார். பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்த போதிலும் இதுவரை நம் கருத்து மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்த

லைக்கு மாறாக, திரு. பகுகுணா அவர்கள் நம் கோரிக்கையினைக் கொள்கை
ளவில் முழுமையாக ஏற்றுக்கொண்டு அதைப் படிப்படியாகச் செயல்படுத்து
தற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிடுவதற்கு
றுதி அளித்ததற்காக அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் நம்
ன்றியைச் செலுத்த விரும்புகின்றோம்.

இந்தக் கொள்கை முடிவுகள் மத்திய அரசால் செயல்படுத்தப்படும்பொழுது
ாளடைவில் அரசுச் சார்பு நிறுவனங்களுக்கு கெரசின் மொத்த விநியோகத்
ில் பெருவாரியான பங்கு கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இந்தப்
ின்னணியில்தான் நாம் குடும்பக் கார்டுகளின் பேரில் கெரசினை விநியோகிக்க
முடிவு எடுத்துள்ளோம். அது வெற்றிகரமாக செயல்படுவதற்கான சூழ்நிலை
ளும் வெகு விரைவில் உருவாகும் என நம்புகின்றோம். முதற்கட்டமாக
சென்னை நகரில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், படிப்படியாக மாநிலம்
முழுவதும் விரிவாக்கப்பட்டு, தமிழக அரசின் புதிய திட்டத்தின்கீழ் கிராமந்
தோறும் திறக்கப்பட்டுள்ள நியாய விலைக்கடைகளின் மூலமாக கெரசின்
விநியோகம் நாளடைவில் முழுமையாக மேற்கொள்ளப்படும். சர்வதேச
நிலைமைகளின் காரணமாக நம் நாட்டுக்கு மொத்தமாகக் கிடைக்கும்
கெரசின் அளவைப் பற்றி பல கேள்விக் குறிகள் எழுந்துள்ள இந்நேரத்தில்,
கிடைப்பதைச் சீராக விநியோகிப்பதற்கு இம்முறை ஒன்றுதான் சிறந்த
வழி என்று இந்த அரசு நம்புகிறது. இந்த முறையைச் செயல்படுத்துவதற்குச்
சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தரவும், மொத்த கெரசின் வியாபாரத்
தில் அரசு சார்புடைய நிறுவனங்களுக்கு முக்கிய பங்கும், பொறுப்பும்
அளிக்கவும், திரு. பகுகுணா அவர்கள் ஒத்துக் கொண்டது நமக்குப்
பேருதவியாய் அமைந்துள்ளது.

சென்ற மாத நடுவில் கெரசின் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு ஒரு முக்கிய
காரணம் சென்னை நகரிலுள்ள கைவண்டி வியாபாரிகளில் ஒரு சிலரும்,
மற்றும் சில்லரை வியாபாரிகளில் ஒரு சிலரும், நிலைமையை தவறாகப் பயன்
படுத்திக்கொண்டு, பதுக்குதல், முடக்குதல், அதிக விலைக்கு விற்பது போன்ற
சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதேயாகும். குடும்பக் கார்டு விநி
யோக முறை செயல்படும் நேரத்தில் இந்தத் தவறுகளுக்கு இடம் இருக்காது.
அதே சமயத்தில் கைவண்டிக்காரர்களுக்கு இயன்ற அளவு நிவாரணம்
அளிக்கும் வகையில் தமிழக அரசு, கிடைக்கும் கெரசினில் குடும்பக் கார்டு
களின் அடிப்படையில் விநியோகம் செய்யத் தேவையானதை ஒதுக்கி வைத்துக்
கொண்டு, எஞ்சிய கெரசினை கைவண்டிக்காரர்களின் மூலம் உரிய பாதுகாப்பு

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 ஏப்ரல் 9

களுடன் விநியோகம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகளின் காரணமாக, சென்ற சில வாரங்களாக ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நிலைமைகள் நீங்கி, கெரசின் விநியோகம் சீராக இயங்கும் என்று அரசு நம்புகிறது. இப்பிரச்சினையில் மிகுந்த நாட்டம் கொண்டு அக்கறையுடன் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம் இதற்கு நிரந்தரமான பரிகாரம் காணும் வகையில் அரசுக்கு உதவி செய்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திரு. க. இராமமூர்த்தி அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளித்து இருப்பதால் அதை நான் எடுத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையின் மீது ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு விளக்கம் எழுப்பி அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர அனுமதியளிக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, தாங்கள் விளக்கம் கேட்பதற்கு அனுமதி அளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு பிரச்சினை மீது எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகு, உறுப்பினர்கள் அதைப்பற்றிப் பேசிய பிறகு, அறிக்கை தந்திருந்தால், இதைவிட நன்றாக, நல்ல மரபாக இருந்திருக்கும். விதி 82-ன்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் படித்தார்கள். நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நாங்கள் பேசிய பிறகு, இதே அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்திருந்தால், அது இன்னும் சிறப்பாக, நல்ல மரபாக அமைந்திருக்கும். அந்த முறையை தயவுசெய்து மாண்புமிகு தலைவரவர்கள் காத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் தருகிறார்கள் என்றால், அதில் முதலில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து இதைப்பற்றி வருங்காலத்தில் முடிவெடுப்பதுபற்றிப் பார்க்கலாம். இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் கேட்கலாம்.

ஏப்ரல் 9]

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த றிக்கையில் நம்முடைய மாநிலத்தில் மண்ணெண்ணெயைச் சீரான முறையில் நியோகிப்பதன் மூலம் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைத் தீர்க்க செய்திருக் ம் ஏற்பாட்டினைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசோடு இதுபற்றி வாதித்து மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினைத் தீர்க்க வழிவகை செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இனிமேல் 10 நாளைக்கு உள்ளே மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, ஒரு சீரான நிலைமை உருவாகக் கூடிய நிலையை அது வெளிப்படுத்துகிறது. இன்றைக்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடு மட்டுமல்ல, டீசல் அதிக விலைக்கு விற்கப்படும் நிலையும் இருக்கிறது. கிராமப்புறங்களில் விவசாயிகளுக்கு லிட்டர் 2½ ரூபாய்க்கு டீசல் விற்கப்படுகிறது. சென்னை நகரைப் பொறுத்தவரை, கியாஸ் சரியாகக் கிடைக்காததனால், கியாஸை அடுப் பெரிக்கப் பயன்படுத்திக் கொண்டிருந்தவர்கள்கூட மண்ணெண்ணெயை அடுப் பெரிக்க பயன்படுத்துகிறார்கள். கிராமங்களைப் பொறுத்தவரை, மண்ணெண்ணெயை 70 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் விளக்கெரிக்கத்தான் பயன் படுத்துகிறார்கள். இன்றைக்கு விறகு விலை டன் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. அது சீரான விலையில் கிராமப்புறங்களில் கிடைக்க இது வரை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் கூட இன்றைக்கு கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு நிலைக்கு ஆளாகி, விறகுக்குப் பதிலாக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். மண்ணெண்ணெய் சீராகக் கிடைக்காத காரணத்தால், கடந்த ஒரு மாத காலமாக பொதுமக்கள் பலவிதமான நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தியன் ஆயில் கார்ப்ப ரேஷனிலிருந்து வியாபாரிகள் மண்ணெண்ணெயை வாங்கிக்கொண்டு அதை அவர்கள் சரியான முறையில், பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவில்லை. அவர்கள் மண்ணெண்ணெயைப் பதுக்குகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை, அரசாங்கம் இந்த நேரத்தில் அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகளால் பதுக்கப் பட்டு ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் மண்ணெண்ணெயை வெளியே கொண்டு வருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு சீரான முறை யில் குடும்ப ரேஷன் கார்டு மூலம் மண்ணெண்ணெயை விநியோகம் செய்வதற் குரிய வழிவகையைச் செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். இதை முன்னாலேயே செய்திருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தலைவரைப் பார்த்துப் பேச மாட்டேன் என்கிறார்கள் (சிரிப்பு). சுருக்கமாக விளக்கத்தை மட்டும் கேட்கலாம்.

[1979 ஏப்ரல் 9

லைவரைப் பார்த்துப் பேசினால், தலைவர் அவர்கள் மணியடித்து விடுவார்களோ என்ற காரணத்தினால்தான், தலைவரைப் பார்த்துப் பேசவில்லை. குடும்பக் கார்டு மூலம் சீராக மண்ணெண்ணெய் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்ததை மறுபடியும் வரவேற்கிறேன். அதுபோல உடனடியாக அரசு தீவிரமான நடவடிக்கை எடுத்து வியாபாரிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் மண்ணெண்ணெயை வெளியே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, விரைவிலே நல்ல ஒரு தீர்வு ஏற்படும் என்கிற நம்பிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தாலும் இது அகில உலக, தேசியப் பிரச்சினையாக இருப்பதால், அவ்வளவு சுலபமாகத் தீர்க்கப்படுகின்ற அல்லது தீர்க்கப்படும் என்று நம்பிக்கை கொள்கின்ற அளவிலே இல்லை என்பதை மனதில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு கண்டாக வேண்டும். சென்னை நகரில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் படுகின்ற அல்லல்களுக்கு அளவே இல்லை. காலையில் மண்ணெண்ணெய் வாங்க வீட்டை விட்டுச் சென்றவர்கள் மாலையில்தான் வீடு திரும்புகிறார்கள். கூட்டம் கூட்டமாக வீட்டை விட்டு பெண்களும் குழந்தைகளும் வெளியே வந்து மண்ணெண்ணெய்க்காக கியூவில் நிற்கிற பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நம் கண்ணில் படுகின்ற காரணத்தால், இதில் வேகமாக ஒரு தீர்வு கண்டாக வேண்டிய அவசியத்தை உணர்கின்றோம். நகராட்சி மன்றங்களில் கூட இதே மாதிரி நிலை இருக்கிறது. அங்கேயும் விரைவிலே மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண வேண்டும். இன்றைய தினம் பொருளாதார நிலையின் காரணமாக நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் விறகை மறந்து விட்ட நிலையில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகிறார்கள். மண்ணெண்ணெய் அவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்ட உடனேயே இதில் தீர்வு காண அரசு தீவிர முயற்சிகள் எடுத்திருக்க வேண்டும். மத்திய அரசு இது பற்றிச் சொல்லியிருக்கிறது என்பது ஒரு புறம் இருக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து அதிகமான எண்ணெய் வாங்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இன்னொரு புறம் கிடைக்கின்ற மண்ணெண்ணெயைத் தவறாகப் பயன்படுத்துகின்ற நிலை நாட்டில் இருக்கிறது. நமது மாநிலத்தில் ஏராளமான பெட்ரோல் பங்குகள் இருக்கின்றன. ஆனால் ஒரு மாவட்டத்தில் 4 அல்லது 5-க்கு மேல் பெட்ரோலில் மண்ணெண்ணெய் கலக்காத பெட்ரோல் பங்குகளே இருக்காது.

979 ஏப்ரல் 9]

* THIRU A. R. DAMODARAN: This is an extraordinary charge and I must protest against it. What the Chairman of the Indian Oil Corporation said was that there were certain auto-rickshaws which were misusing kerosene with petrol, and not that petrol bunks were adulterating petrol with kerosene.

திரு. க. இராமமூர்த்தி : கார் வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட பெட்ரோல் பங்கிலிருந்து தான் பெட்ரோல் போடுகிறார்கள். சுலபமாக வேறு பெட்ரோல் பங்குக்கு அவர்கள் போவதில்லை. மண்ணெண்ணெயை அவர்கள் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆட்டோ ரிக்ஷாக்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு வாகனங்களாக இருந்தாலும் சரி, மண்ணெண்ணெய் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கார், பஸ், லாரிகளிலேயிருந்து வருகிற புகையினைப் பார்க்கும்போது, அது மாதிரித் தெரிகிறது. மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக ஏற்கெனவே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் டீசல் பற்றாக்குறையாலும் விலை உயர்வாலும் விவசாயிகள் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே உடனடியாக அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண நடவடிக்கை எடுப்பார்களா? நகரில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பிறகுதான் நகராட்சி மன்றங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்கி முறையைப் பின்பற்றாமல், நகராட்சி மன்றங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பிறகுதான், நகரிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வு கா வேண்டும் என்கிற முறையில் இதற்குப் பரிகாரம் காண முன்வர வேண் மென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, you have permitted the to speak because they have given notice of adjournment motion I gave a motion about 10 days ago whereby I wanted to conve to the Government certain other difficulties and now we ha no opportunity of representing them.

(பிற்பகல் 4.50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அறிக்கைக்கு அப்புறம் விவா கிடையாது. அவர்களைச் சொல்லிக்கொள்ளத்தான் நான் அனுமதித்தே அது மாபாகிவிடக் கூடாது. பிரச்சினையுடைய முக்கியத்துவத் முன்னிட்டு . . . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: என்னுடைய அறிக்கையிலே ஏற்கெனவே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு மேலாக நான் இப்போது அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து சில நியாயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட பேசுகின்ற நேரத்தில், பதுக்கல் எதனாலே ஏற்படுகிறது என்பதைபற்றியெல்லாம் சொன்னார்கள். சென்னையிலே கூட, கைவண்டிக்காரர்கள், சில்லறை விற்பனையாளர்கள் இவர்கள் எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு கூடுதலான விலைக்கு விற்பது அல்லது பதுக்குவது அல்லது அதிலே கலப்படம் செய்வது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இந்த நிலைமைகள் எல்லாம் நம்முடைய நாட்டிலே நீண்ட காலமாக இருந்து கொண்டு வருகிறது. இவற்றையெல்லாம் எப்படித் தடுப்பது என்பதிலேதான் இப்போது நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம். உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமானால், கைவண்டிக்காரர்கள் சென்னையிலே மாத்திரம் 900 பேர் இருக்கிறார்கள். அவர்கள் மண்ணெண்ணெய் டெப்போக்களிலிருந்து மண்ணெண்ணெய் எடுத்துக்கொண்டு தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்கிறார்கள். அதிகாரிகளைக் கொண்டு அவர்களைக் கண்காணிப்பது என்பது ஆகாத்த நிச்சயமாக முடியாதகாரியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில், இவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக 'கைவண்டிக்காரர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பதில்லை' என்று முடிவெடுத்தால், உடனே அவர்கள் ஊர்வலம் வருகிறார்கள். அப்போது அதற்கு எதிர்க் கட்சி வரிசையிலேயிருந்து உறுப்பினர்கள் முழுப்பங்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகின்ற நிலைமையும் இன்றைய தினம் நாட்டிலே இருப்பதை நான் மிகவும் வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்றாலும், பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்ட பின்னர் இன்றைய தினம் நிலைமை ஓரளவிற்குக் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், முன்னால் இருந்த பிரச்சினை இந்த மாதம் 5-ம் தேதியிலிருந்து நிச்சயமாக இல்லை. இந்தத் திட்டத்தை நாம் மற்ற நகர்ப்புற பகுதிகளுக்கும், கிராமப் பகுதிகளுக்கும் எவ்வளவு துரிதமாக விரிவு படுத்த முடியுமோ அவ்வளவு துரிதமாக விரிவுபடுத்தும் முயற்சியிலே இன்றைய தினம் உணவு நுகர்பொருள் துறை பொறுப்பேற்றுக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, இந்தப் பிரச்சினைகள் நிச்சயமாகத் தீரும் என்கின்ற உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அருப்புக்கோட்டை துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. தங்கப்பாண்டியன், திரு. கோ. சி. மணி, திரு. க. இராமமூர்த்தி, ஆகியோர் அருப்புக்கோட்டை துப்பாக்கிப்பிரயோக சம்பவம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதியின் கீழ் வருகிறது என்று சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதுசம்பந்தமாக, ஏற்கெனவே விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த வரம்புக்கு உட்பட்டு கருத்துக்களைச் சொல்லுமாறு வேண்டுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, 4-ம் தேதி அருப்புக் கோட்டைத் தொகுதியில் வாகைகுளம் பஞ்சாயத்தில் நடைபெற்றிருக்கிற துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக நேற்றைய நிலவரப்படி 5 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மதுரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மற்றும் 5 பேர்கள் அவர்களுடைய ஜீவமரணப் போராட்டத்தில் இருந்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், அரசாங்கத்தினுடைய அணுகுமுறை, நடைபெற்ற இந்த சம்பவங்களில் எப்படி இருந்தது என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் நினைவுபடுத்திய அந்த நீதி விசாரணையை மனதில் வைத்துக்கொண்டு, சில கருத்துக்களைச் சொல்ல என்னை அனுமதிக்க வேண்டுகிறேன். எங்களைப் பொறுத்தமட்டில்—குறிப்பாக என்னைப் பொறுத்தமட்டில் இது மிகவும் வேதனையான நிகழ்ச்சி என்று நான் கருதுகிறேன். எங்களுடைய இயக்கத்தினுடைய தலைவர், கொள்கை மறவன் திரு. ஆசைத்தம்பி மரணத்தையொட்டியும், அதேநேரத்தில் அய்ந்து மறவ மாணிக்கங்கள் அந்த மண்ணிலே மடியப்பட்டிருக்கின்றன. அந்தத் துயர சம்பவத்தையும் பற்றி, இந்த மன்றத்திலே, நெஞ்சிலே எனக்கு வேல்பாய்ந்த உணர்ச்சியோடு பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையை ஈர உணர்வோடு கவனிக்கிறேன், மனிதாபிமானத்தோடு கவனிக்கிறேன் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். * * அரசாங்கத்தினுடைய சொத்துக்களுக்கு அணு அளவுக்குக்கூட குந்தகம் ஏற்படாதபோது, ஒரு அதிகாரி கூட பாதிக்கப்படாதபோது, அங்கே அய்ந்து பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், நிச்சயமாகப் பரிகாரம் கண்டிருப்போம் என்று இன்றைய தினம் சொல்கிறார்கள். * *.

---

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவாதத்திற்குப் போய், விவரமாகப் பிரச்சினையை ஆராயும் அளவுக்கு இந்தப் பேச்சு செல்கிறது என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பது விசாரணைக்கு உரியதாக ஆக்கப்பட்டிருக்கிற நேரத்தில், இப்படிச் செய்திகளைக் கேள்விப் பட்டுச் சொல்வது சரியா என்பதைப்பற்றி மேலவைத் தலைவர் அவர்கள் முடிவெடுக்க வேண்டும். நேரடியாகப் பார்த்த நிலையில் ஒருவர் எப்படிச் சொல்ல முடியுமோ அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது பொருத்தமுடையதாக இருக்குமா என்பதையும், இது அவைக்குறிப்பிலே இருக்க வேண்டியதுதானா என்பதையும் பதில் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு நாங்கள் ஆளாகும்போது என்னென்ன பிரச்சினைகள் வெளிவரும் என்பதையும், அதன்மூலம் விசாரணைக்குப் பொறுப்பேற்றிருக்கின்றவர்களுக்கு இது சாதகமாக அமையுமா என்பதையும் தயவுசெய்து மேலவைத் தலைவர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நானும் அதைக் கவனித்தேன். உறுப்பினர் அவர்கள் விவரங் களுக்கு உள்ளே போனால், நிச்சயமாக அந்த நிலைமைகளைப் பாதிக்கும். ஆகவே, இந்த அரசு என்ன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்களோ, அதைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நான் உண்மையிலேயே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படும். அரசிடமிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துச் சில விவரங் களைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும், மக்களை ஆதரித்துச் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது நீதி விசாரணையைப் பாதிக் காமல் இருந்தால், நான் சொல்லும் இந்த விஷயமும் நீதி விசாரணையைப் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்படிப்பட்ட எந்தச் செய்தியும் நான் பத்திரிகையாளர்களிடம் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேற்கொண்டு பேசலாம்.

1979 ஏப்ரல் 9]

திரு. வே. தங்கப்பாண்டியன் : இப்போது அங்கே போலீஸ் குவிக்கப் பட்டிருக்கிறது. ஒரு சமுதாயக் கலவரமோ, அல்லது இரண்டு கோஷ்டிகளுக் கிடையிலான கலவரமோ அங்கே இல்லை. நெல்லை மாவட்டத்தில் மணி முத்தாறிலே இருந்து போலீசாரைக் கொண்டு வந்து அங்கே குவித்திருக்க வேண்டிய தேவையில்லை. நான் பார்த்தேன் டி.என்.டி. 2360 லாரி அங்கே இருக்கிறது. அங்கே பக்கத்திலேயே போலீஸ் இருக்கிறது. அதைப் பயன் படுத்தியிருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இவ்வளவு விரிவாகப் போவதானால், ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நெல்லை மாவட்டத்திலிருந்து போலீஸ் வரவழைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு கிழக்குப் பக்கத்திலிருந்து யாரும் பயணம் செய்யக்கூடாது என்று கிழக்குப் பக்கத்திலிருந்து வரும் பஸ்களையெல்லாம் தடுத்திருக்கிறார்கள். மேலும் காயம்பட்டவர்கள் எல்லாம் அருப்புக்கோட்டை மருத்துவ மனையிலே இருக்கிறார்கள். அது தாலுக்கா மருத்துவமனை. அங்கே போதிய மருத்துவ வசதிகள் கிடையாது. இது போன்று பல பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. நான் இன்னும் சொல்வேன் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவுசெய்து சீக்கிரம் முடிவுக்கு வாருங்கள். சும்மா விவரங்களைப்பற்றிப் பேசாமல், ஒத்திவைப்பதற்கான காரணங்களைச் சொல்லுங்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : காயமடைந்தவர்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் அங்கு இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்களும் வந்தார்கள். அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் இந்தப் பதவியில் இருக்கிறவரை, அந்தப் பகுதியில் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். நான் அனுமதிக்கமாட்டேன். இப்படியே பேசினால், அப்புறம் எல்லாவற்றையும் எடுக்கச் சொல்வேன். என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியிலே பெண்கள் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பரிசிலனை செய்வதற்கு, தற்போது அங்கே உள்ள அதிகாரிகள் இருந்தால், நிச்சயமாக நீதி விசாரணை சரியாக நடக்காது. அங்குள்ள பெரிய போலீஸ் அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வெளியூருக்கு மாற்றிவிட்டு புதிய அதிகாரிகளை நியமித்தால், ஏழையெளிய மக்களுக்கு நியாயம் கிடைக்க வாய்ப்பேற்படும். ஆகவே, அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே போக்குவரத்துக்கு எந்தவிதமான தடங்கலும் ஏற்படக்கூடாதென்றும், காயம்பட்டவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே அரசாங்கமும் மிக அதிகமான அக்கறை செலுத்தி உண்மையான நீதி விசாரணைக்கு முழு

(பிற்பகல் 5-00)

ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். ஆகவே, இதில் அரசாங்கம் கோபம் கொள்ளாமல், * * * என்னத்தைக் கொள்ளாமல், அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கிவிடலாம் என்று எண்ணிடும் நிலைமைக்கு ஆளாகாமல் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை செய்யும் வகையில், அவர்களுடைய மனதில் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும். எனவே இதைக் குறித்து விரிவாகப் பேச . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த அரசைப் பொறுத்த வரையில் * * * எதுவும் கிடையாது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருப்பதைத்தான் * * * என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : * * * என்று சொன்னால் அதுவே தீர்ப்பாகிவிடுகிறது. எனவே அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட ஆணையிடுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : ஆத்திரத்தில் நான் அப்படிச் சொல்லியிருக்கலாம். சம்பவம் குறித்து நீதிவிசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், அதனைக் குறித்து விரிவாக இங்கே பேசுவதற்கு அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ற

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வாகைக்குளத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைப் பொறுத்தவரை அரசாங்கத்தால் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஒன்றை மட்டும் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சொந்தத் தொகுதியைச் சேர்ந்ததாகும். அங்கே இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற பிறகு, நீதி விசாரணை முடிவடையும் வரையில் தண்ணீர் குழாய் போடுவது சம்பந்தமான அனைத்து வேலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு தண்ணீர் பைப் போடுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அந்த வேலை இந்த அளவுக்கு அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது அவசியம்தானா என்ற சந்தேகத்தை நமக்கெல்லாம் உருவாக்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டின் விளைவாக இதுவரை தமிழகத்தின் சரித்திரத்திலேயே நடைபெறாத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, அதற்குப் பிறகு வந்த தி.மு.க. ஆட்சியிலும் சரி, அதற்குப் பிறகு வந்த நெருக்கடி நிலையின் போதும் சரி, இதுபோன்ற ஒரு துப்பாக்கிச் சூட்டின் காரணமாக பெண்கள் இறந்தது என்பது தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லை. இப்போதுதான் முதன்முறையாக இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், எந்தச் சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது என்பதை விட, * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதைப்பற்றி விசாரிப்பதற்குத்தான் நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார். எனவே இப்படிப்பட்ட நேரத்தில் எதிர்பார்க்கும் சூழ்நிலை இருந்தது என்று திட்டவட்டமாகத் தெரிவிப்பது நல்லதுதானா என்பதை தலைவர் அவர்கள் முடிவிற்கு விட்டுவிடுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எடுத்துக்காட்டாக சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லும்போதே, அதற்கு ஆதாரம் இருப்பதைப்போல் அமைந்துவிடுகிறது. எனவே இது அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களின் முடிவிற்கு விட்டுவிடுகிறேன்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 9

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்புடன் அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஓராண்டுக் காலத்திற்கு மேலாகவே தண்ணீர்க் குழாய்கள் அமைப்பது சம்பந்தமாக பல்வேறு நிலைகளில் சம்பவங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆகவே இதை அரசு கூர்ந்து கவனித்திருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, சில நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். இன்றையதினம் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், என்னால் முழுமையான வகையில் கருத்துக்களைச் சொல்ல முடியவில்லை என்றாலும் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதில் சுருக்கமாகப் பேசினால்தான் தப்பித்துக் கொள்ள முடியும். இல்லாவிட்டால் கஷ்டம். (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி : நடைபெற்றுவிட்ட சம்பவங்கள் மகிழ்ச்சி தருவனவாக இல்லை என்பது மட்டுமல்ல, எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்குவனவாகவும் இல்லை என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. அங்கு, இங்கு என்று கடைசியாக பெண்கள் மீதே பாய்ந்திருக்கிற நிலை விபரீதமாக மாறிவிடுமோ என்ற சந்தேகத்தை உருவாக்குகிறது. எனவே இவையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைத்து கவனத்திற்குக் கொண்டு வந்து பரிகாரம் காணுவதற்காக விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையிலே ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் எந்த உணர்வோடு தங்களுடைய கருத்துக்களையெல்லாம் எடுத்து வைக்க விரும்பினார்களோ அதில் சிறிதளவுக்கும் எங்களுடைய உணர்வுகள் பின்தங்கிவிடவில்லை என்பதையும், நாங்களும் அந்த வகையில் அவர்களோடு, அவர்களுடைய உணர்வுகளோடு ஒன்றுபட்டு இருக்கிறோம் என்பதையும் நான் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சம்பவம் நடைபெற்ற இடம் என்னுடைய தொகுதி, என்னுடைய தொகுதி என்று குறிப்பிட்டார்கள். நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, தமிழ் நாட்டிலுள்ள அத்தனை தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள்தானே தவிர, எனக்கென்று ஒரு தனித் தொகுதி கிடையாது என்ற நிலையில்தான்

1979 ஏப்ரல் 9]. [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தேர்தலில் நின்றதன் விளைவாக மட்டும் ஒரு தொகுதி எனக்குச் சொந்தமாகிவிடுகிற அளவுக்கு நான் எண்ணாமல் . . . .

திரு. க. இராமமூர்த்தி : அந்தத் தொகுதியைச் சார்ந்த மக்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அவர்களுடைய எம்.எல்.ஏ. ஆவார்கள். அவர்கள் தங்களுடைய எம்.எல்.ஏ.விடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்று எண்ணினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தான் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எம்.எல்.ஏ. என்று போட்டுக் கொள்வதைவிட மனித உணர்வோடு, தொண்டன் என்ற நிலையில் நான் தமிழகம் முழுவதற்கும் என்னைச் சொந்தமுடையவனாகக் கருதி வாழ விரும்புகிறேன் என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தியர்கள் முழுவதற்கும் என்று சொல்லலாமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மனிதர்கள் அனைவருக்கும் என்று சொல்லிக்கொள்வேன். மனித உணர்வோடு ஒரு சிறு தொண்டன் என்ற நிலையில் பணியாற்ற விரும்புகிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் இந்த அவையில் எதையெதை வெளியிடக்கூடாதோ அவைகளையெல்லாம் வெளியிட வேண்டிய அளவுக்கு என்னை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளாக்கிவிட்டார்கள். அவர்கள் தங்கள் மனவேதனை காரணமாக சில விவரங்களை இங்கே எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால், நானும் அவை தொடர்பாகச் சிலவற்றைக் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிற அறிக்கை முழுவதையும் படிக்க வேண்டாமென்றுகூட நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இது பரிசீலிக்கப்பட்டு, நிபுணர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகே, இந்தத் திட்டம் துவங்கப்படும் என்று ஒரு உத்தரவாதம் அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நிபுணர்களுடைய அனுமதியின் பேரில் தான் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களுக்குப் பிறகுதான், இத்தனை அடி ஆழம் என்று அவர்கள் கணக்கிட்டுக் கொடுத்த பிறகுதான், இங்கே கிணறு வெட்டுவதால் தண்ணீர் குறையாது என்று அவர்கள் சொன்னதற்குப் பிறகு தான், இந்தத் திட்டம் துவங்கப்பட்டு 12 கிலோ மீட்டர் அளவுக்கு குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. இன்னும் போடப்பட வேண்டிய குழாய்களின் நீளம் 4 கிலோ மீட்டர்தான்.

இவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று மேலவைத் தலைவர் அவர்கள் விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம். எனக்கு ஆட்சேபணையில்லை.

அடித்து, தாய்மார்கள் சுடப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். துப்பாக்கிச் சூடு நடைபெறும்போது சுடுவதில் உள்ள அடிப்படை நோக்கத்தை நாம் சிந்திக்க வேண்டும். வகுப்பு வாதக் கலவரத்தின்போது அல்லது ஜாதிக் கலவரத்தின்போது அல்லது அது போன்ற சம்பவங்களின்போது பெண்கள் சுடப்பட்டாலும் அது ஒருவேளை நியாயமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நான் சொல்வது ஜாதிக் கலவரமானாலும் சரி, வகுப்புவாதக் கலவரமானாலும் சரி, துப்பாக்கிச் சூடு இல்லாமல் ஒரு சமாதானமான முடிவை அடையும் சூழ்நிலை உருவாக்கப் படுவது என்பதுதான் ஒரு அரசுக்குப் பெருமையே தவிர, துப்பாக்கிச் சூட்டின் மூலம்தான் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது என்பது நிச்சயமாக எந்த ஒரு அரசுக்கும் பெருமை தராது. அதிலும் காவல் துறையைக் கையில் வைத்துக்கொண்டு ஆட்சி செய்கிற ஒரு ஆட்சிக்கு, அந்த ஆட்சியின் நல்லெண்ணத்திற்கு அது நல்ல அடையாளமல்ல.

காவல் துறையினர் அங்கே முன்கூட்டியே பெருமளவில் கொண்டுபோய் குவித்து வைக்கப்பட்டிருந்தார்கள், ஆயிரக் கணக்கில் அவர்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்றெல்லாம் இங்கே சொல்லப்பட்டது. இந்தச் செய்தி, தகவல் உண்மையிலேயே தவறான செய்தியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

துப்பாக்கிச் சூடு நடைபெற்றதை அறிந்ததும் அன்று காலையிலேயே 12 மணி அல்லது 1 மணிக்குச் சென்று அங்கே இருந்தவர்களையெல்லாம் நான் சந்தித்துப் பேசிவிட்டு வந்திருக்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். அவர்களிடத்தில் நான் விவரமாகப் பேசிவிட்டு வந்திருக்கிறேன். அவர்களுடைய எண்ணங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு வந்திருக்கிறேன். துப்பாக்கிச் சூட்டில் தாக்குண்டவர்கள், பெயருக்கு மருத்துவமனை என்று சொல்லுகிற கட்டிடத்தில் கிடத்தப்பட்டு கவனிப் பாரற்று இருக்கிறார்கள் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டிருக்கிறது. கொஞ்சம் ஆபத்தாக இருக்கிறது, நிலைமை மோசமாக இருக்கிறது என்று தெரிந்த உடனேயே அப்படிப்பட்டவர்கள் உடனடியாக மதுரை மருத்துவமனைக்கு மாற்றப்படுவதற்காக நான் இரவோடு இரவாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி, மதுரையிலிருந்து ஒரு டீம் ஆப் டாக்டர்களுக்கு ஏற்பாடு செய்தேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-10)

அந்த அளவுக்கு உதவியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே மனம் திறந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இந்தப் பிரச்சினை நீதிபதியின் முன்னால் இருப்பதால், இன்னும் சில விஷயங்களை, இந்த அறிக்கையில் உள்ளவைகளைப் படிக்க வேண்டுமா என்று ஐயுறுகிறேன். ஆனால் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு குடி தண்ணீர் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினை. இன்னும் பல ஊர்களுக்குக் குடி தண்ணீர் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. மக்களுக்குக் குடி தண்ணீர் ஏன் இன்னும் கொடுக்கப்பட வில்லை என்ற கேள்வியை பல நேரங்களில் பல உறுப்பினர்கள் கேட்டிருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், குடி நீர் வழங்குவதில் ஏன் கால தாமதம் ஏற்படுகிறது என்று கேட்டபோது, நாங்கள் எவ்வளவு வேதனைப் பட்டோம் என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படிப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக, நாங்கள் கடமையாற்ற வேண்டும் என்று எண்ணி, அதிகாரிகளுக்குச் சில அறிவுரைகளை வழங்கி விரைவாக முடித்தே தீர வேண்டும்; நிறைய மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று நாங்கள் சொல்லும் போது, அவர்கள் நிறைவேற்றப் போகும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்ற நிலைமை ஏற்படுமானால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று காவல் துறையிடம் கேட்பது முறையான உரிமையாகும். அந்தக் கடமையைச் செய்ய வேண்டியது காவல் துறையினுடைய பொறுப்பு என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் சுடத்தான் வேண்டுமா, தாக்குதல் நடக்கத்தான் வேண்டுமா என்றால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் விரும்பினால் எடுத்துவிடலாம். * *

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, நீதி விசாரணையில் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிலவற்றைச் சொல்லுவதால் நான் சொல்லுகிறேன் *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போலீஸ்காரர்கள்பற்றிக் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டிய குறிப்புகள் எதையும் சொல்ல வேண்டியதில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேள்விகள் கேட்கப்பட்டு பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப் படும்போது, நான் பதிலே சொல்லவில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால்தான் நான் சொன்னேன். நீங்கள் விரும்பினால் அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம். கேள்விகள் எழுப்பப்படாமல் இருந்திருந் தால், பதில்கள் தேவையாக இருக்காது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதற்காக, தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். அங்கு நடந்த சாவைப் பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் * * சொன்னார்கள்.

மேலவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும் இதையும் நீக்கி விடலாம் * * * ஆகவே என்ன நடந்திருக்கிறது என்பதைப்பற்றி நீதிபதி தீர்ப்புக் கூற இருக்கிறார்கள். ஆகவே அந்தக் கேள்வியை விட்டுவிடுவதாக இருந்தால், என்னுடைய பதிலையும் விட்டுவிடுவதில் ஆட்சேபணையில்லை * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் கேட்ட கேள்வி நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதையும் நீக்கிவிடலாம். நான் நன்றியுடையவனாக இருப்பேன் * * . நான் தாயை வணங்குகிறவன் என்ற நிலையிலே ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். நான் அவர்களைச் சந்தித்தேன். கணவனை இழந்த தாய்மார்களைச் சந்தித்தேன். குழந்தைகளைச் சந்தித்தேன் ; பெரியவர்களைச் சந்தித்தேன். இறுதியாக அவர்களுடைய வேண்டுகோள் ஒன்றாகத்தான் இருந்தது. “ஒரு நாள் நீங்கள் வாருங்கள். இங்கிருந்து தண்ணீர் இறைப்பதைப் பாருங்கள். இங்கே என்ன நிலைமை ஏற்படுகிறது என்று பார்த்து அதற்குப் பிறகு நீங்களே முடிவு செய்யுங்கள். அந்த முடிவை நாங்கள் ஒத்துக்கொள்ளு கிறோம்” என்று அளவுக்கு அவர்கள் என்னிடம் தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளுக்குக் கொடுத் திருக்கிறேன். வேறு எதையும், சிக்கலான பிரச்சினையின் விவாதத்திற் குள்ளே செல்லுகிற அளவுக்கு நான் எதையும் சொல்லவில்லை என்பதை இந்த மேலவையிலே தெரிவித்து, என்னிடமுள்ள அறிக்கையை முழுவதும்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

படிக்க நான் தயாராக இருந்தாலும், துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டுமென்று யாரும் எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை என்பதையும் தெரிவித்து, இந்த பிரச்சினை நீதிமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே இந்த நீண்ட அறிக்கையைப் படிப்பதன் மூலம் சில பிரச்சினைகளை மறைமுகமாக மக்களுக்குச் சொல்லுவதாக ஏற்படும் என்பதால் அவைகளைச் சொல்லாமல் விட்டு விட்டு, இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கை களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீதிமன்றத்திடம் அந்த வழக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதால், நீதிபதி இதில் என்ன முடிவைச் சொல்லுகிறார்களோ, என்ன கருத்தைத் தெரிவிக்கிறார் களோ, அதிகாரிகளை அங்கிருந்து மாற்ற வேண்டுமென்று கட்டளையிட்டார் களானாலும், அதையும் இந்த அரசு நிச்சயமாகச் செய்யும், அதில் எந்தவிதச் சந்தேகமும் வேண்டாம் என்று சொல்லி, இதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பின் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு என் அனுமதியை மறுக்கிறேன்.

5. தகவல் கோரல்.

ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இன்று காலையில் ஆசிரியர்கள் கோட்டையின் முன்பு உண்ணாவிரதம் இருக்க வந்தபோது 26 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம் முடிந்தவுடன், கல்விக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதம் தொடங்க இருக்கிறது. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் முதலாவதாகச் சொற்பொழிவாற்ற விரும்பினால், முதலிலே அவர் பேசும்போது இது குறித்துக் குறிப்பிடலாம். அதுதான் மரபு.

திரு. செ. முத்துசாமி : கல்வி குறித்த பொது விவாதத்தின் போது பேசு வதற்கு வாய்ப்பிருந்தாலுங்கூட, அவர்கள் உண்ணாவிரதம் இருந்தது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் நான் கொடுத்திருப்பதை இப்போது எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பல விஷயங்களைப்பற்றி பேசும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் உள்ள விஷயத்தையே முக்கியமாக எடுத்துக்கொண்டு பேசலாம். கல்வி சம்பந்தப் பட்ட விவாதத்தில் ஆசிரியர்கள் குறித்துப் பேசலாம். ஆகவே இப்போது நான் அனுமதிக்கவில்லை.

திரு. செ. முத்துசாமி : ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கிறார்கள். அவர்களுடைய நிலை பற்றி கல்வியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்னுடைய தீர்ப்பை நான் கொடுத்து விட்டேன். அதற்கு மேலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விஷயத்திற் குள்ளே போய் பேசுவது சரியல்ல.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் உண்ணா விரதம் இருந்தது குறித்தும் அதில் 26 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது குறித்தும் இந்த அவையில் பிரச்சினையை எழுப்ப எனக்கு அனுமதி மறுக்கப்படுவதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நான் இங்கிருந்து வெளியேறுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மற்றவர்களை விட மாண்புமிகு உறுப் பினருக்குத்தான் ஆசிரியர்களின்பால் அக்கறை இருக்கிறது என்று விளம்பரப் படுத்தும் நோக்கம் இருந்தால், அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மரபுகளை மீறிப் பேசுவதற்கு ஆசிரியர்களுக்கு இந்த அவையில் நான் இடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே தவறான முறையிலே விளம்பரப்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, நான் கூட ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது என்னுடைய ஆலோசனையில் இருக்கிறது.

***திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பிரச்சினைப்பற்றிக் கல்வி விவாதத்தின்போது பேசலாம் என்று குறிப்பிட் டீர்கள். இன்றைக்கு என்.ஜி.ஜி.ஓ. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டம்

நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் கூட ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் தந்திருக்கிறேன். ஆசிரியர் பிரச்சினையைத்தான் எழுப்பக் கூடாது என்றால், என்.ஜி.ஜி.ஓ.வினருடைய பிரச்சினையை ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? அதைப்பற்றி எந்தவித அறிவிப்பும் இங்கே கொடுக்கப்பட வில்லையே.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு ஊழியர்கள் சம்பந்தமாக நான் கொடுத்துள்ள தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும், அல்லது எடுத்துக் கொள்ளப் படாது என்று கூட அறிவிக்கவில்லை. ஆசிரியர்கள் பற்றி அறிவிக்கப் படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நான் சொல்லுவதைப் புரிந்துகொள்ள வேண்டும். எடுத்துக்கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அதனுடைய நிலை என்னவென்று கூட அறிவிக்கவில்லையே.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அறிவிப்பது முறையல்ல. அதை ஆய்வு செய்ய எனக்கு அவகாசம் உண்டு.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியும், என்.ஜி.ஜி.ஓ. வினரைப் பற்றியும் உள்ள பிரச்சினைகளைச் சொல்லுவதற்கு அனுமதி அளிக்காததால், நானும் வெளி நடப்புச் செய்கிறேன்.

(பிறகு மாண்புமிகு உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் முடிவு கட்டிவிட்டு வந்திருக்கிறார்கள் போலும்.

6. கவன ஈர்ப்பு.

(1) திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் அண்ணா நடுநிலைப் பள்ளி செயல்படாமல் இருப்பது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மேலவைத் தலைவர் அவர்களே, மேலவை விதிகளின் 42-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

" திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் அண்ணா நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் தாக்கப்பட்டதும் அப் பள்ளி செயல்படாமல் அங்குள்ள மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்பட்டுள்ள நிலையைக் குறித்தும் ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விவர அறிக்கையிலே, திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம் புதூரில் தனியாரால் நடத்தப்பட்டு வரும் அண்ணா நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் கடந்த இரண்டாண்டுகளாக பல்வேறு தகராறுகள் நடந்து வருவதாகவும், நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகமாக இருப்பதாகவும், அந்த ஊழல்களைக் குறித்து ஆசிரியர்கள் அரசுக்குத் தெரிவித்திருப்பதாகவும், அங்குள்ள 19 ஆசிரியர்களில் 16 ஆசிரியர்கள் இந்தக் குறையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு—அதாவது பள்ளி நிர்வாகியின் மனைவியும், பள்ளி நிர்வாகியின் இரண்டு சகோதரர்களும் ஆக 3 பேர் தவிர—மற்ற ஆசிரியர்கள் இந்த ஊழலை இரண்டு வருடங்களாக எடுத்துச் சொன்னதற்குப் பிறகு 7—2—1979 அன்று அரசைச் சேர்ந்த பள்ளித் துணை ஆய்வாளர் ஆய்வு-பரிசீலனை செய்வதற்குப் போன நேரத்தில் அவருடைய முன்னிலையிலேயே அப் பள்ளியின் நிர்வாகியின் மனைவியும், திருமதி ராஜம்மாள் என்ற மற்றொரு ஆசிரியையும் சேர்ந்து திரு. மரியஜோயின் என்ற ஆசிரியரை கத்தியால் குத்த முயன்றதாகவும் அப்போது அருகில் இருந்த பள்ளி நிர்வாகியின் தம்பி அல்போன்ஸ் என்பவரும் நிர்வாகியின் மகன் துரைராஜ் என்பவரும் அவரைத் தடுத்து நிறுத்தியதாகவும் அரசு தந்த அறிக்கையிலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச்

@ 92-94 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சூழ்நிலையில் அரசே தலையிட்டு அந்தப் பள்ளியைப் பார்வையிட முதன்மைக் கல்வி அதிகாரியை அனுப்பியிருக்கிறது. ஏனென்றால் அங்கே 407 மாணவர்கள் இருக்கிறார்கள். 19 ஆசிரியர்கள் பணி புரிகிறார்கள். 19 ஆசிரியர்களில் பள்ளி நிர்வாகியின் மனைவி ஒருவர், அவருடைய சகோதரர் இருவர். இந்த மூவரைத் தவிர மற்ற 16 ஆசிரியர்களும் இந்தக் குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நிர்வாகத்தினர் இதைச் சிறுபான்மையினர் பள்ளி என்று அறிவிக்க வேண்டுமென்று, வழக்கைப் போட்டு விட்டுத் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அது ஒரு கிரிஸ்டியன் மிஷனரி பள்ளி அல்ல. ஒரு தனி நபர் பள்ளி. எனவே இந்தப்

(பிற்பகல் 5-20)

பிரச்சினை தீரவும், சுமுக நிலையை ஏற்படுத்தவும், அங்குள்ள பதட்ட நிலையை நீக்கவும் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பதினாறு ஆசிரியர்களும் ஒரே கோவிலில் போய் தங்கியிருக்கிறார்கள். மூன்று ஆசிரியர்கள் வேறு இடத்தில் போய் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வெளியே போகவே அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இரண்டு மாத காலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பள்ளியை முதன்மைக் கல்வி அதிகாரி அல்லது ஒரு பள்ளித் துணை ஆய்வாளர் பொறுப்பில் விட வேண்டும், அல்லது இந்தப் பள்ளியை அரசே எடுத்து நிர்வகிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பள்ளி சிறுபான்மையினர் பள்ளி என்று வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கின்றது என்ற செய்தியை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியை அரசு எடுத்து நடத்துகின்ற பிரச்சினை இப்போது எழவில்லை. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தரவும், இந்தப் பள்ளிப் பணியாளர்களை மாற்றுவதற்கும் அதிகாரிகளுக்கு இப்போது அறிவுரை அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் பள்ளியிலே படித்த மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுத முடியாத நிலைமையில் இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் தேர்வு எழுதி மேல்வகுப்புக்குச் செல்ல வாய்ப்பு அளிக்கப்படுமா? இந்தப் பள்ளியை நடத்துபவர்கள் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்தவர்

களாக இருப்பதால், இவர்களுக்கு சிறுபான்மையினருக்கு வழங்கும் பாதுகாப்புகள், சலுகைகள் எல்லாம் உண்டா? அவர்கள் மீது இதுவரையில் அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றி வழக்கு மன்றத்திலே வழக்கு இருக்கின்ற காரணத்தினால், அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். உரிமையில்லை என்று வழக்கு மன்றத்தில் சொல்லிவிட்டால், நமக்கு நடவடிக்கை எடுப்பதற்கு எளிதாகிவிடும். மாணவர்களைப் பொறுத்த வரையில், அங்கே யூனியன் பள்ளி ஏதாவது இருக்குமானால், அங்கே அவர்கள் சேர்ந்து தேர்வு எழுத முயலலாம். இதற்குத் தேவையான வழிமுறைகளை வகுக்க கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

(2) மதுரை மாநகராட்சியில் கழிவு நீரேற்று நிலையத்தை 34-ம் தொகுதியிலிருந்து 33-ம் தொகுதிக்கு மாற்றுவது குறித்து.

THIRU J. M. MIAKHAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely, the transfer of Sewage Pumping Station of Madurai Corporation from Division No. 34 to Division No. 33 and the consequent hardship caused to the families in that area.

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இது மதுரை இஸ்மாயில்புரம் கழிவு நீரேற்று நிலையத்திற்கு நில எடுப்பு சம்பந்தப்பட்டதாகும். நில எடுப்பு நகராட்சியின் 33 தொகுதியில் நாகூர்தோப்பு எனப்படும் ஒரு பகுதியில் எடுக்கப்பட உள்ளது. இந்த இடம் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஆய்வு நிலையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டது. சுற்றுப்புற நிலத்தின் உயர் அளவுகளையும் மற்றுமுள்ள தொழில் நுட்ப காரணங்களையும் கணக்கில் கொண்டு தேர்வு செய்யப்பட்டதாகும். மேலும் தற்சமயம் ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்துள்ள இடம்தான் பொருத்தமானதும், ஆற்றுக்கரையை ஒட்டி குழாய்கள் அமைக்க ஏதுவானதாகவும் உள்ள இடமாகும். தொடக்கக் காலத்திலிருந்தே இந்த இடம்தான் அரசின் உயர்மட்ட அதிகாரியால் பார்வையிட்ட பிறகு, கழிவு நீரேற்று நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடமே தவிர வேறு எந்த இடமும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே, 34-ம் என் தொகுதியான மூமன்பேட்டையில் முதலில் கழிவு நீரேற்று நிலையத்திற்காக முதலில் நில எடுப்பு செய்வதாக இருந்ததாகவும் பின் தொகுதி 33-க்கு மாற்றம் செய்யப்பட உள்ளது என்று சொல்வது சரியாகாது.

மேற்கூறிய கழிவு நீரேற்று நிலையத்தை தொகுதி 33-ல் இருந்து மாற்றம் செய்யக் கோரிய மனு பெறப்பட்டது. அதன்பேரில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் மேற்கூறிய கழிவு நீரேற்று நிலையத்திற்கான இடத்தை முதன

முதலாகவே தேர்ந்தெடுக்கப்பட்டதாலும், அதற்கான ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டு முறையாக பரிசீலிக்கப்பட்டு தக்க காரணங்கள் இல்லாததால் நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். 33-வது வட்டத்தில் 150 குடியிருப்புகளுக்கும் மேல் இருப்பது உண்மையே. ஆனால் நிலம் எடுக்கும் பகுதியில் சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்படுமென்று தகவல் வந்துள்ளது. அதுபோலவே 34-ம் வட்டத்திலும் குடியிருப்புகளும், தொழிற்கூடங்களும் உள்ளதாகவும் தெரிகிறது.

ஒருங்கிணைக்கப்பட்ட நகரமைப்புத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ. 13.40 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் அகற்றும் திட்டம் வகுக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகிறது.

திரு. ஜே. எம். மியாகான்: தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் வெளியிட்ட விவர அறிக்கையில் இஸ்மாயில்புரத்தில் கழிவு நீரேற்று நிலையத்திற்கு நிலம் எடுக்க வேண்டுமென்று தீர்மானித்து முடிவு செய்திருக்கிறார்கள். 34-வது வட்டம் இஸ்மாயில்புரத்திலிருந்து இப்போது 33-வது வட்டத்திற்கு மாற்றும்போது அந்தப் பகுதியில் உள்ளவர்களுடன் அலுவலர்கள் கலந்து பேசியதாக, அவர்களுக்குத் தகவல் தந்ததாகத் தெரியவில்லை. முதலில் தேர்ந்தெடுத்த இடத்தில் டெக்னிஷன் சொல்கின்ற கருத்துக்கள் என்ன என்பதும் எனக்குத் தெரியாது. அந்தப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பகுதியில் தொழில் கூடங்களும், குடியிருப்புகளும், அரசினருக்குச் சொந்தமான நிலங்களும், தனியார் இடங்களும் இருப்பதாகத் தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. ஜே. எம். மியாகான்: 150 குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரத்திலிருந்து ஒரு இடத்தை மாற்றி வேறு இடத்தில் செய்ய இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் ஆங்கிலத்திலேயே விளக்கம் கேட்கலாம்.

திரு. ஜே. எம். மியாகான்: நான் தமிழில் பேச முயற்சிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் பேச்சு முடிந்ததா?

THIRU J. M. MIAKHAN: If needed, I will repeat it in English. It will be easier for me.

There are more hardships that would be caused by the transfer of this pumping station from the original place, that is, Ismailpuram to the new place known as some Tope. Formerly, it was intended to be started in the original place. I do not know the technical difficulties but it was already decided upon by the Corporation of Madurai. Therefore, I request the Government to stick to their original programme and remove the hardship of the people.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் முன்பு படித்ததுபோல, 34-வது வட்டத்தில் நிறுவுவதாக முதலில் திட்டம் வைத்திருந்து பிறகு 33-வது வட்டத்திற்கு மாற்றவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆரம்ப காலத்திலேயே 33-வது வட்டத்திலேயே வைப்பது என்றுதான் முடிவு எடுக்கப்பட்டது. அங்கேயிருந்துகூட அப்ஜக்ஷன்ஸ், எதிர்ப்பு மனுக்கள் வந்து பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. 33-வது வட்டத்திலேதான் நிறுவுவதாக ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை இருப்பதாக எனக்கு வந்திருக்கின்ற தகவல். மேலும் 150 குடும்பங்கள் இருப்பது உண்மைதான். இதில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் 50 குடும்பங்கள்தான். மேலும் ஒரு தகவல் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இடத்திற்கு நானும் சென்று இருக்கிறேன். அங்கு நான் சென்றிருந்தபோது நல்ல வரவேற்புகூட கிடைத்தது. அங்கு நடந்த கல்யாணம் ஒன்றுக்குக்கூட அழைத்துக்கொண்டு போனார்கள். விருந்துகூட கொடுத்தார்கள். மேயர் திரு. முத்து அவர்கள்கூட வந்திருந்தார்கள். அந்தப் பகுதி இஸ்லாமியர்கள் மெஜாரிட்டியாக இருக்கின்ற பகுதியாக இருக்கிறது. அங்குள்ளவர்கள் பைப்புகள் ஆற்று ஓரமாகத்தான் வருகின்றன என்று சொல்லி எனக்குப் பாராட்டுக் கூறி அனுப்பினார்கள். அது எனக்கு ஞாபகம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அரசின் தீர்மானம்.

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு@ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

@ 94-177 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்ட கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

வழக்கம்போல் பல அங்கத்தினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாம் இதற்காக இரண்டு நாட்கள் ஒதுக்கியிருக்கிறோம். இருந்தாலும் போதுமான கால அவகாசம் இருக்காது. ஆகவே மாண்புமிகு அங்கத்தினர்கள் சுருக்கமாகவும், அதே நேரத்தில் சுவையாகவும் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

திரு. வி. ஆர். பெரியண்ணன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்று நம்முடைய தலைமையிடத்திலே, சில ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து அவையிலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருந்தார்கள். அது பற்றி விவாதத்திலேயே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதால், தலைவரவர்கள் அதற்கு அனுமதி மறுத்தார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த மாதம் 24 ஆம் தேதி, 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையிலே, ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த நேரத்திலேகூட, ஆசிரியர்கள் பிரதிநிதிகளும், நானும் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, பல விஷயங்களை எடுத்துச் சொன்னோம். ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக, இன்று அடையாள உண்ணாவிரதம் இருக்கிறார்கள்; எனவே அமைச்சரவர்கள் ஆசிரியப் பிரதிநிதிகளையும், மற்றவர்களையும் அழைத்து, பிரச்சினைகளை சுமுகமாகவும், விரைவாகவும் தீர்க்கவேண்டுமென்று அந்த நேரத்திலே கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். அதற்கு அமைச்சரவர்கள் சில விளக்கங்கள் கொடுத்திருந்தாலும், ஆசிரியப் பெருமக்களுக்கு அதிலே நம்பிக்கை ஏற்படாத காரணத்தாலும், ஆசிரியர் சமுதாயத்திற்கு இந்த அரசு நிச்சயமாக நன்மை செய்யாது என்ற எண்ணம் ஆசிரியர்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிற காரணத்தாலும், இன்று, கோட்டையைச் சுற்றித் தடை உத்தரவு இருந்தாலும், தடையை மீறி உண்ணாவிரதம் இருப்போமென்ற எண்ணத்தோடு, கோட்டையை நோக்கி வந்த ஆசிரியப் பிரதிநிதிகளைக் கைது செய்து, சிறைப்படுத்தியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒரு கருத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்று 20 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற நிலைமை மேலும் மேலும் வளர்ந்தால், நிலைமைகள்

[திரு. வி. ஆர். பெரியண்ணன்] [1979 ஏப்ரல் 9

மோசமாகும். பள்ளிக்கூடங்களில் எல்லாம் பள்ளி இறுதித் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம் இது. இந்த நேரத்திலே ஆசிரியர்களெல்லாம் இதுபோன்ற நிலைமைகளில் ஈடுபடுவதால், அரசு உடனடியாக இதில் தீர்வு காணவேண்டும். அப்படித் தீர்வு காணாவிட்டால், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

1978 சனவரி மாதத்தில், மதுரை ஆசிரியர் கூட்டணி தென் மண்டல மாநாட்டிலே நாங்கள் கோரிக்கைகளை எடுத்து வைத்தோம், அமைச்சரவர்கள் ஆவன செய்வதாகச் சொன்னார்கள் என்று ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சொல்லுகிறார்கள். மாநாடுகளில் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நேரத்தில், அங்கே அமைச்சர்கள் என்ன சொன்னார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது. அமைச்சர்கள் சொன்னதைச் செய்யவில்லை என்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். எனவே அமைச்சர்கள் சொன்னதைச் செய்ய முடியாததற்கு என்ன காரணம் என்பதை அவையிலே அமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னால், எங்களைப் போன்றவர்கள் அதைப்பற்றிப் புரிந்து கொள்ள முடியுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல முறை கோரிக்கைகள் வைக்கிறோம், கவனிக்கவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். அன்று சொன்னதையே நான் மீண்டும் சொல்கிறேன். ஆசிரியர்களும், அமைச்சரும் பேசும்போது, இடையிலே உள்ள எங்களைப் போன்றவர்களுக்கு விவரம் தெரிவதில்லை. எனவே அந்தப் பிரச்சினை பற்றி அமைச்சரவர்கள் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமென்று மாநாட்டிலே சொன்னோம், ஏன் முடியவில்லை என்பதையெல்லாம் விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைச்சரவர்கள் விளக்கங்கள் தந்தால், நாங்கள் புரிந்துகொள்ள முடியும். சென்ற மாதம் 24 ஆம் தேதி ஆசிரியர்கள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். இன்று கோட்டையை நோக்கி, தடையை மீறி வந்திருக்கிறார்கள். எனவே இந்த நிலைமைகள் வளர்ந்துகொண்டு போகாமல், உடனடியாகத் தடுத்து நிறுத்த அமைச்சரவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைப் பள்ளிகளைப்பற்றி ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குகின்ற நேரத்தில், முதலில் 400 பள்ளிகள் என்றும், பிறகு 500 பள்ளிகள் என்றும் சொல்லி,

1979 ஏப்ரல் 9] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

கடைசியில் 970 பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக அரசு மாற்றியது. மேல்நிலைப் பள்ளியாக ஒரு பள்ளியை மாற்ற வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கு அரசு சில 'கண்டிஷன்கள்' போட்டது. என்னென்ன வசதிகள் இருக்க வேண்டுமென்பதற்கு பட்டியல் தந்தார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொருவராக வந்து, நான் பணம் கட்டுகிறேன் என்று தனிப்பட்ட முறையில்—அரசியல் ரீதியிலோ, செல்வாக்கிலோ கேட்கும் நேரத்தில், ஒவ்வொரு பள்ளிக்கூடமாக மேல்நிலைப் பள்ளியாக்கினோம். அதிகப் பள்ளிகளை ஏற்படுத்தியதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அப்படி மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தும்போது ஒரு பள்ளிக்கும், மற்றொரு பள்ளிக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கிறதென்பதைப் பார்க்கவில்லை. ஒரு ஏக்கர் கிரவுன்ட் இல்லாத பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக்க அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அங்கே மாணவர்கள் குறைவாக இருக்கிறார்கள். மாணவர்கள் அதிகமாகவும், 5 ஏக்கர் அளவிற்கு கிரவுன்டும் உள்ள பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்க வேண்டுமென்று சொல்லும்போது, அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. புதிதாக மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கும்போது, சரியான முறையில் சர்வே செய்யவில்லை என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் 7, 8 மைல்களுக்குப் பள்ளிகள் இல்லை. சில இடங்களில் 3 மைல்களில் பள்ளி இருக்கிறது. முதலில் இல்லையென்று சொல்லிவிட்டு, கடைசி நேரத்தில் மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அனுமதி கொடுத்தோம். அப்படிப்பட்ட பள்ளிகளிலே மாணவர்கள் சேராத நிலை ஏற்பட்டு, வேறு பள்ளிகளிலே சேர்ந்த மாணவர்களை இங்கே அழைத்து வந்து, அங்கே அவர்கள் பணம் கட்டியிருந்தால், இங்கே நாங்கள் கட்டுகிறோமென்று சொல்லி, மாணவர்களைச் சேர்த்தார்கள். எனவே மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட பள்ளிகள், அதற்குத் தகுதியுடையவைகள்தானா என்பது பற்றி இந்த ஆண்டுத் தொடக்கத்திலே கணக்கு எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சேந்தமங்கலம் ஒன்றியத்தில், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சி இருக்கிறது. அங்குள்ள உயர்நிலைப் பள்ளிக்கு 5 ஏக்கர் இடம் இருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். 10 ஆம் வகுப்பில் 4, 5 செக்ஷன்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். காலம் கடந்த பிறகு சொல்கிறீர்களென்று சொல்லி, தட்டிக் கழித்துவிட்டார்கள். இப்படி அதிக மாணவர்கள், வசதிகள் உள்ள பள்ளிகளுக்கு அனுமதி இல்லாமலும், கிரவுன்ட் இல்லாத பள்ளிகளுக்குக் கொடுத்தும் இருக்கிறார்கள். எனவே தமிழ் நாட்டில் இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மேல் நிலைப் பள்ளிகள் அத்தனையும் அதற்குப் பொருத்தமானவைதானா என்று பார்க்க வேண்டும். சர்வே செய்து, தகுதியுடையனவா என்று

பார்த்து, தகுதியில்லாத நிலை இருந்தால், அவைகளை மாற்ற வேண்டும். அமைச்சரவர்கள் வேறு பள்ளிகளுக்கு அனுமதி வழங்க முடியாதென்று சொன்னார்கள். 5 ஏக்கர் கிரவுண்டுள்ள, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாண வர்கள் படிக்கும், பள்ளி விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட காளப்ப நாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியில் ஒரு மாணவன் படித்துவிட்டு வரும்போது, ஒரு தொழிலை நடத்தும் அளவிற்குப் பயிற்சி அளிக்கப்படுமென்று சொன்னார்கள். சில இடங்களில் கைத்தறி சம்பந்தப்பட்ட பாடங்கள் போதிக்கப்படுமென்று சொன்னார்கள். நர்சிங் பயிற்சி கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். வங்கி மற்ற தொழில்களில் நேரடியாக ஈடுபட பயிற்சி அளிக்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால் வங்கி இல்லாத இடங்களிலே அந்த வகுப்புகளை ஆரம்பிப்பதாலோ, கைத்தறி சம்பந்தப்பட்ட தறிகள் இல்லாத இடங்களில் அந்தப் பயிற்சியை ஆரம்பிப்பதாலோ பயனில்லை. கைத்தறிக்கான பயிற்சி கொடுக்கும் இடங்களில், அதற்கான தறியை வைத்து, பயிற்சி அளித்தால் தான், மாணவர்கள் தெரிந்துகொள்ள முடியும். கைத்தறி சம்பந்தப்பட்டவர்களை, அதிலே பயிற்சி பெற்றவர்களை ஆசிரியர்களாக அல்லது பகுதி நேர **ஆசிரியர்களாகப் போட்டு, அவர்களுக்குப்** பயிற்சி கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பயிற்சியைத் துவக்கு கிறோம். அடுத்த ஆண்டு பயிற்சியை முடித்துவிட்டு வரும்போது, அவர்கள் தொழிலில் ஈடுபட வேண்டும். அடுத்த ஆண்டு அவர்கள் தறியில் நெய்யத் தயாராக இருக்க வேண்டும். அந்த அளவிற்கு வேண்டிய வசதிகளைச் செய்யாமல் இருக்கிறோம். அவைகளை உடனடியாகச் செய்ய வேண்டும். வங்கிகள் இருக்கும் இடங்களில், அவை சம்பந்தப்பட்ட வகுப்பு இருக்க வேண்டும். விவசாயத்தைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கும்போது, 'அட்லீஸ்ட்' ஸ்பிரேயராவது இருக்க வேண்டும். பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிப்பதற்கான ஸ்பிரேயர்கூட இல்லையென்றால், விவசாயத்தைப்பற்றி எப்படிப் படிக்க முடியும்? திட்டங்கள் அழகாக இருக்கின்றன. என்னென்ன திட்டங்கள் துவக்க வேண்டுமென்று திட்டங்கள் இடுகின்றோமோ அவற்றுக்கு வேண்டிய உபகரணங்கள் இல்லை. அதற்கான ஆசிரியர்கள் இல்லை. உபகரணங்களும், ஆசிரியர்களும் இருந்தால்தான், அந்தப் பயிற்சி வெற்றிகரமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 900 மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்கியதில், 3 அல்லது 4 பள்ளிகள் முன்மாதிரிப் பள்ளிகளாக, எல்லா வசதிகளும் பெற்று, சென்னையிலோ, சென்னைக்குப் பக்கத்திலோ இருக்கின்றன. கிராமங்களிலுள்ள பள்ளிகளில் தொழிற் கல்வியைச்

சொல்லிக் கொடுக்கச் சொல்லிவிட்டு, அங்கே ஏன் வசதிகளைச் செய்யவில்லை? சென்னையிலுள்ள சில உயர்நிலைப் பள்ளிகளில்தான் அந்த வசதிகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றித்தான் இதில் சொல்லியிருக்கிறார்களென்று

(பிற்பகல் 5-40)

நினைக்கிறேன். ஔவை இல்லம் மேல்நிலைப்பள்ளி, சென்னை, ஜெயராஜ் நாடார் மேல்நிலைப் பள்ளி, நாகமலை சர்வஜன மேல்நிலைப்பள்ளி, கோயம்பத்தூர்; வெஸ்லி மேல்நிலைப் பள்ளி, சென்னை, போன்ற குறிப்பிட்ட நல்ல பள்ளிக்கூடங்களில் தொழில்களை நேரடியாகத் தாமே செய்து கற்பது என்கிற முறையில் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இப்படிப்பட்ட வசதிகள் இல்லாதிருப்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அந்த வசதியை கிராமங்களுக்கும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், தர்மபுரி போன்ற இடங்களிலெல்லாம் மேல்நிலை வகுப்புகளைத் திறக்க ஏற்பாடு செய்திருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரியில் ஒரு முதன்மைக் கல்வி அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலை, சேந்தமங்கலம் ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் ஒரே ஒரு பள்ளி ஆய்வாளர்தான் இருக்கிறார். சேந்தமங்கலத்தில் மட்டும் அந்தப் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் இருக்கிறது. இரண்டு பகுதிகளுக்கும் ஒரே ஒரு ஆய்வாளர்தான் இருப்பதால், அவரால் கொல்லிமலையையும், சேந்தமங்கலத்தையும் சரியாக கவனிக்க முடியவில்லை. ஆகவே கொல்லிமலையில் தனியாக விரைவில் ஒரு பள்ளி ஆய்வாளரை நியமிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கொல்லிமலை ஒன்றியத்திலே 14 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பல கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அங்குள்ள சில பள்ளிகளில் ஒரு ஆசிரியர்தான் பணிபுரிகிறார். ஓராசிரியர் இருக்கின்ற பள்ளிகளில் அதற்குரிய போதுமான மாணவர்கள் இல்லை. மலை சூழ்ந்த கொல்லிமலைப் பகுதியில் கிராமங்களுக்கு வந்து போவதற்குப் போதுமான வசதிகள் இல்லை. மழைக் காலங்களில் மாணவர்கள் சரியான நேரத்திற்கு வந்து போக முடியவில்லை. ஓர் ஆசிரியர் பணி புரிகின்ற பள்ளிகளில் எல்லாம் போதிய மாணவர்கள் இல்லாத காரணத்

தால். அங்கே இருக்கக்கூடிய பகுதிகளை 4 அல்லது 5 பகுதிகளாகப் பிரித்து மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற வகையிலே "ரெசிடென்ஷியல் ஸ்கூல்" வசதியைச் செய்து கொடுத்து, பள்ளிக்கூடம் துவக்குகின்ற நேரத்தில் உணவு வசதி போன்ற அடிப்படை வசதிகளை அவர்களுக்கு அளித்து கல்வி அறிவை அந்தப் பகுதியில் பரவலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மலைவாழ் பகுதியைச் சேர்ந்த மக்கள் உண்மையாகவே கல்வி அறிவைப் பெற வேண்டும், உண்மையாகவே அவர்களுக்குக் கல்வியை போதிக்க வேண்டும், உண்மையாகவே அவர்களுக்குக் கல்வியைப் புகுத்த வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணம் அரசுக்கு இருக்குமேயானால், அங்கேயுள்ள சிறுவர்கள் தங்கிப் படிக்கக்கூடிய "ரெசிடென்ஷியல் ஸ்கூல்" வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நூலக ஆணைக் குழுபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நூலக ஆணைக் குழுக்கள் இருக்கின்றன. சென்னையிலுள்ள 160 டிவிஷன்களிலும் நூலகங்களுக்கென்று சொந்தமாகக் கட்டிடம் கட்டப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சொன்னதாக நினைக்கிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவ்வாறு அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே சில திட்டங்களைப்பற்றி இந்த அரசு சொல்லும்போது, கிராமங்களிலுள்ள மக்களுக்காக, கிராமத்திலிருந்துதான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, நகரில் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். சென்னையிலுள்ள 160 டிவிஷன்களிலும் உள்ள நூலகங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டப் போகிறார்கள். கிராமங்களில் சொந்தமாகக் கட்டிடம் ஒன்றும் இல்லாமல், 10 பேர் கூட உட்கார்ந்து படிக்க வசதி இல்லாமல், நூலகங்கள் இருக்கின்றன. பேரூராட்சி மன்றங்களில் நூலகத்தை நடத்துவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். இன்றைய தினம் அங்குள்ள நூலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் நடைபெறுகின்றன. கிராமங்களிலுள்ள நூலகங்களுக்கும் ஏன் சொந்தமாகக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அரசு தீட்டக் கூடாது? மழை பெய்தால் கிராமங்களிலுள்ள நூலகங்களில் புத்தகத்தைப் பாதுகாத்து வைக்கக் கூடிய வசதி கூட இல்லை. ஆகவே கிராமங்களிலுள்ள நூலகங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். முன்பெல்லாம் நூலக ஆணைக் குழுவில் தலைவர், உறுப்பினர்கள் எல்லாம் இடம் பெற்றிருந்தார்கள். மாவட்டத்திலுள்ள நூலக வளர்ச்சி,

கிராமங்களில் எந்தெந்தப் பகுதிகளில் நூலகங்களை அமைக்க வேண்டும் என்பன போன்ற எல்லா விஷயங்களையும் கவனத்தில் கொண்டு காரியங்களை நல்ல மாதிரியாகச் செய்து வந்தார்கள். இப்பொழுது அந்த அதிகாரம் அதிகாரிகளின் கையில் இருக்கிறது. கல்வி இலாகாவிலுள்ள அதிகாரி ஒருவர் அதைப் பற்றி இப்பொழுது கவனித்துக் கொள்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் அதில் இடம் பெற்றிருந்தால், அவர் அங்கே உட்கார்ந்து, இவ்வளவு வசதி தேவை, இவ்வளவு புத்தகங்கள் தேவை, இவ்வளவு நூலகங்களை மாவட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம், இன்னும் இவ்வளவு ஏற்படுத்தப்படவேண்டும் என்கிற விவரங்களை எல்லாம் வைத்துக்கொண்டு உரியவர்களிடமிருந்து அதைப் பெற்றுத் தர வசதியாக இருந்திருக்கும். இப்பொழுது அதிகாரிகள் மயமாக இருப்பதால், அங்கே இருப்பவர் இயக்குநர் பதவிக்குக் குறைந்தவராக இருப்பதால், டைரக்டர் என்ன சொல்வாரோ என்று பயந்து கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தலைவரையும், உறுப்பினர்களையும் நியமித்து மாவட்ட ஆணைக் குழுவை அமைப்பதற்குரிய வழிவகையை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

* திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கல்வித் துறை மானியத்தின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். 1979-80 ஆம் ஆண்டு கல்வித் துறையின் செலவுக்காக மொத்தம் 264 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய தொகை. ஆனாலும்கூட கல்வித் துறையிலே இன்றைக்கு இருக்கின்ற தேவைகள், மக்களிடையே ஏற்பட்டிருக்கக்கூடிய கல்வித் தேவைகள், ஆசிரியர்களிடையே இருக்கின்ற பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற தேவைகள் இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, இந்தத் தொகை போதவே போதாது. "Education is a National Investment" என்று பொருளாதார மேதை ஆல்பிரெட் மார்ஷல் கூறியிருக்கிறார். அந்தப் பொருளாதார மேதையின் கருத்தை நம்முடைய நிதித் துறை ஒத்துக்கொள்வதேயில்லை. வேண்டா வெறுப்பாக கல்வித் துறைக்கு இந்தத் தொகை வீணாக ஒதுக்கப்படுகின்றது என்ற கருத்தில் அவர்களால் இந்தத் தொகை ஒதுக்கப்படுகிறது என்பதை நாம் தெளிவாக உணர முடிகிறது. தினமணிப் பத்திரிகையில் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். "கல்வித் துறைக்கு என்று செலவிடப்படும் பணம் வீணான தொகை என்று அரசினாலும் பொதுமக்களாலும் கருதப்படுகின்ற மனப்பான்மை உடனடியாக மாறவேண்டும். மற்றத் துறைகளைப் போல் இதிலும் நல்ல பலன் உடனடியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும்

நிலை போக வேண்டும். வியாபார நோக்குடன் கல்வித் துறையைப் பார்க்கவே கூடாது." இப்படி நாங்கள் கூறினால் மதிப்பு இல்லை. ஆனால் பத்திரிகைகள் இப்படிக் கூறினால் மதிப்பு அளிப்பார்கள். அதனால்தான் தினமணிப் பத்திரிகையில் வந்ததைக் கூறுகிறேன். மிகவும் தெளிவாக அது கூறுகிறது. இலாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல், இதனால் எதிர் காலத்தில் வரக்கூடிய நன்மைகள் எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். கல்வித் துறையிலே எதிர்காலத்தில் உருவாகக்கூடிய அறிவுச் செல்வங்கள் எந்த அளவுக்கு நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதன் மூலம் வரக்கூடிய நன்மைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதையெல்லாம் பார்த்து நிதித் துறை கல்வித் துறைக்குப் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன். ஒரு அரசு கல்வித் துறைக்குச் செலவிடும் தொகையின் மூலம் எந்த வகையில் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்துக்கு, வளர்ச்சிக்கு அது உதவுகிறது என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை எல்லாம்.

அடுத்தபடியாக, கல்வித் துறைக்காக ஒதுக்கப்படுகின்ற முதலீட்டைப் பொறுத்தவரை "Education is a National Investment" என்று சொல்லும்போது போடுகின்ற முதலீடு ஒழுங்காகச் செலவழிக்கப்படுகின்றதா, சொல்லப்படுகின்ற திட்டங்கள் செம்மையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன என்றால், எந்த அளவுக்கு அந்தப் பணம் நல்ல முறையில் ஆக்கபூர்வமான முறையில், முழுப் பயன் அளிக்கக்கூடிய முறையில் செலவிடப் படுகின்றது என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நான்கு அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்பு கல்வித் துறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை கொடுக்க ஒரு நிபுணர் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு ஓர் அறிக்கையை அரசுக்குத் தந்தது. தமிழக கல்வித் துறையைப்பற்றி அந்த நிபுணர் குழு ஒரு நல்ல அறிக்கையைக் கொடுத்தது. அந்த அறிக்கையிலே மிகக் கடுமையான விமர்சனம் இருந்த தால், அந்த அறிக்கையை இந்நாள் வரை வெளியிடவே இல்லை. அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. குழுவால் கொடுக்கப்பட்ட அறிக்கையில் கடுமையான விமர்சனம் அல்லது குறைபாடுகள் கூறப்பட்டிருந் தால் அல்லது சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், அவற்றை அரசு நிவர்த்தி செய் திருக்க வேண்டுமேயொழிய, அறிக்கையை இதுவரை வெளியிடாமலிருப்பது சந்தேகத்தை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. குறைகளை நிவர்த்தி செய்ய அரசு தயாராக இல்லை என்கிற பொருள்பட நடந்துகொள்கிறது

என்பது மட்டும் நமக்கு நன்றாகத் தெரிகிறது. ஐதராபாத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அந்த நிபுணர் குழு இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து அறிக்கையைக் கொடுத்த பிறகு, இந்த அரசு அந்த அறிக்கையை இதுவரை வெளியிடாமலிருப்பது வருத்தத்தை அளிக்கிறது. அந்த அறிக்கையை வெளியிட வேண்டும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திலே கொண்டு அவற்றைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது ஒரு மிக முக்கியமான கருத்தை மிக அழகாகச் சொல்லி யிருக்கிறது. கல்வித் துறையைச் சீர்திருத்த வேண்டுமென்று அது சொல்லி யிருக்கிறது. இப்பொழுது கல்வித் துறையிலுள்ள அமைப்பு முறைகளைப் பார்த்தால், கல்வித் துறைக்கு என்று ஒதுக்கியிருக்கின்ற கோடிக்கணக்கான பணம் "சேதம்" என்று அது சொல்லியிருக்கிறது. அதுதான் அந்த அறிக் கையின் மிக முக்கியமான மையக் கருத்து. அந்த நிபுணர் குழு கோடிக் கணக்கான பணம் "சேதம்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு அறிக்கை தந்தது என்றால், அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டியது கல்வித் துறையினுடைய, இந்த அரசினுடைய மிக முக்கியமான கடமை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வித் துறையைப் பொறுத்தவரை, என்னைப் போன்ற உறுப்பினர்களால் அடிக்கடி சொல்லப்படுகின்ற பிரச்சினை, சிவப்பு நாடா முறையை ஒழிப்பது பற்றியதாகும். இந்த சிவப்பு நாடா முறையை நீக்கினாலொழிய, கல்வித் துறையால் தீட்டப்படுகின்ற நல்ல திட்டங்களுடைய பலன்கள் ஆசிரியர் களுக்கும், பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் சென்று அடைய முடியாது என்பது என்னுடைய கருத்து. இந்த சிவப்பு நாடா முறையை ஒழிக்க வேண்டுமென்று நீண்ட காலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. கல்வித் துறையிலே சிவப்பு நாடா முறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அது சீர்திருத்தப்படுவதற்குரிய அறிகுறிகள் தெரியவில்லை. சிவப்பு நாடா முறை தீர்ந்துவிடும் என்பதற்குரிய நம்பிக்கை, மாற்றப்படும் என்பதற்குரிய நம்பிக்கை, அறிகுறி மக்களிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் வர வேண்டும்.

(பிற்பகல் 5-50)

அப்படிப்பட்ட ஒரு சீர்திருத்த நடவடிக்கையை அரசு விரைந்து செயல் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சான்றாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே இருக்கின்ற ஆசிரியர்கள் பிரதிநிதிகள் நாங்கள் ஆறு பேரும், 'கல்வித் துறையில் இருந்து வெளியிடப்படுகின்ற மிக முக்கியமான ஆணைகள் எல்லாம் எங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அரசு என்ன

செய்கிறது என்று ஆசிரியர் பிரதிநிதிகளுக்குத் தெரியும்' என்று ஒரு கோரிக்கை வைத்து; அதன்மீது கல்வித் துறைச் செயலாளர் ஒரு ஆணையை வெளியிட்டார். அந்த ஆணை 26—9—1978-ம் நாளன்று வெளியிடப்பட்டது. கல்வித் துறையிலே வெளியிடப்படுகின்ற முக்கியமான ஆணைகளுடைய நகல்கள், இந்த ஆறு ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த ஆணை செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது. அந்த ஆணையை ஏற்று இதுவரை மூன்றே மூன்று அரசாணைகள்தான் எங்களுக்கு வந்திருக்கின்றன. கல்வித் துறையில் செப்டம்பருக்குப் பின் இந்த மூன்றே மூன்று ஆணைகள்தான் வெளியிடப்பட்டனவா? இல்லை. ஏராளமான ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களுக்கு நலனளிக்கக் கூடிய அளவிலேகூட பல ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் எங்களுக்கு மூன்றே மூன்றுதான் வந்திருக்கின்றன. கல்வித் துறைச் செயலாளர் வெளியிட்ட அந்த அரசாணை அமுல்படுத்தப்படவில்லை என்று எழுத்து மூலமாகக் கூட நான் கொடுத்திருக்கிறேன். அந்த ஆணை குறித்து என்ன செய்தார்கள்? உடனே, கல்வித் துறைச் செயலாளர் வெளியிட்ட அந்த ஆணை, முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. முதன்மைக் கல்வி அதிகாரிகள் அதனைப் பெற்றுக்கொண்டு, மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பினார்கள். அவர்கள் என்ன செய்தார்கள்? அதே ஆணையைக் காப்பியெடுத்து எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கல்வித் துறைச் செயலாளர் என்ன அனுப்பினாரோ அந்த ஆணையின் நகலை எங்களுக்கு அனுப்பினார்கள். The same copy was sent to us. ஆசிரியர்கள் பிரதிநிதிகளுக்கே இந்த நிலைமை என்றால், ஆசிரியர்களுக்கு என்ன நிலைமை என்று தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிகப்பு நாடா முறைக்கு இது மிகச் சிறந்த சான்று. இப்படி 6 மாதங்களுக்கு மேலாக ஒரு ஆணை அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது. இவ்வாறுதான், ஆசிரியர்களின் நலனுக்காக வெளியிடப்படுகின்ற பல ஆணைகள், பல வருடங்களாக, பல மாதங்களாக அமுல்படுத்தப்படாமல், மிகச் சாதாரணமாக விவாதங்கள் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எல்லாம் கூட இன்றையதினம் தீர்க்கப்படாமல், அவைகளை இங்கே சட்டமன்றங்களிலே பேசவேண்டிய கட்டாயச் சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். தயவுசெய்து இவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட போக்கு சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட போக்கை மேலும் நாம் வளர்க்க வேண்டுமா என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றன. அதிலே, முன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய பிரச்சினைகள், இரண்டாம் உரிமை கொடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகள், விரைவாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என்று பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இருக்கின்ற பிரச்சினைகளை நாங்கள் அவ்வப்போது கல்வித் துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கூடக் கொண்டு வருகின்றார்கள். இருக்கின்ற பட்டியல்களிலிருந்து மாதம் இரண்டு மூன்று பிரச்சினைகள் என்று எடுத்துக்கொண்டு இவற்றை இந்த மாதம் தீர்ப்பது, அடுத்த மாதம் வேறு இரண்டு, மூன்று பிரச்சினைகளைத் தீர்ப்பது என்று மாதந்தோறும் இரண்டு மூன்று பிரச்சினைகள் விதம் தீர்த்தால்கூட, கடந்த ஆண்டுகளிலே எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கலாம். அப்படிப் பட்டியல் போட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய ஒரு மனப் பக்குவம் கல்வித் துறையிலே வளர வேண்டும்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்படுகிறதா என்பதைக் கல்வித்துறை சிந்திக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர்கள். ஆசிரியராக இருந்தவர்கள் இந்த அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கின்றார்கள். ஆளும் கட்சிக் கொறடா ஆசிரியராக இருந்தவர். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆசிரியராக இருப்பவர். நம்முடைய எம். எல். ஏ. க்களிலே பலர் ஆசிரியர்களாக இருந்தவர்கள். இப்படியெல்லாம் இருந்தும் கூட, ஆசிரியர்களுக்கு உரிய மரியாதை கிடைக்கிறதா என்றால், இல்லை. அண்மையிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் சொல்ல வேண்டும். அண்மையிலே டெல்லியிலே "Orientation course on the appreciation of fine arts" என்று ஒரு கருத்தரங்கு நடந்தது. தமிழகத்திலிருந்து ஆசிரியர்களும், சில தலைமையாசிரியர்களும் அதற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களை அனுப்பும்போது, 'உங்களுக்கு டெல்லியிலே உள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடத்திலே தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்யப்படும்' என்று சொன்னார்கள். ஆனால் அங்கு அவர்கள் போன பின்பு, அங்குள்ள அதிகாரிகள், இது சம்பந்தமாக எந்தவிதமான குறிப்பும் எங்களுக்கு வரவில்லை என்றும் ஆகவே, 'நீங்கள் எல்லாம் தங்குவதற்குச் சொந்தமாக ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்' என்றும் சொல்லி விட்டார்கள். வேறு மாநிலங்களிலிருந்து வந்தவர்கள், அந்தந்த மாநில அரசுக்குச் சொந்தமாக டெல்லியிலே உள்ள கட்டிடங்களில் தங்குவதற்கு சம்பந்தப்பட்ட கல்வித் துறை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் இங்கே அப்படிப்பட்ட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுக்கிறோம் என்பதற்காகவே, அண்மையில் நடந்த இந்த நிகழ்ச்சியை நான் கூறுகிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 9

அடுத்தபடியாக, கல்வியைப்பற்றி ஒருசில சொல்ல விரும்புகிறேன். உழைப்பிற்கு மரியாதை கொடுக்காத, மாணவர்கள் மனதிலே உழைப்பின் மீது நம்பிக்கை ஏற்படுத்தாத, நம்பிக்கையை வளர்க்காத எந்தக் கல்வியும் உருப்படாது என்ற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் எவ்வளவோ சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் மாணவர்களுக்கு உழைப்பின் மீதுள்ள நம்பிக்கையையும், பற்றுதலையும் வளர்க்கக்கூடிய அளவுக்கு ஒரு கல்வி முறையைக் கொண்டு வந்திருக்கிறோமா? அதற்கான முயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். தொழிற் கல்வி என்று மேல்நிலை வகுப்புகளில் நாம் ஒரு சிலருக்கு வாய்ப்புக் கொடுக்கிறோம். படிக்கின்ற மாணவர்கள் அனைவரின் மனதிலும் உழைப்பின் மீது மரியாதையும் நம்பிக்கையும் வளர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தவில்லையென்றால், கல்விக்காக நாம் செலவழிக்கக்கூடிய தொகை 'சேதம்' என்று சொல்வதற்குரிய ஒரு நிலை உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய திட்டத்திலே மாணவர்கள் உழைப்பதற்கு என்னென்ன வழிவகை செய்திருக்கிறோம்? மாணவர்கள், ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கூட உழைக்காவிட்டால், அவ்வாறு உழைக்க நாம் ஒரு வாய்ப்பு அளிக்காவிட்டால், நாம் கொண்டு வந்திருக்கும் இந்தத் தொழில் கல்வித் திட்டம் எதிர்காலத்திற்கு எந்தவிதமான ஆக்கப்பூர்வமான பலனையோ, நன்மையையோ தராது என்பது என்னுடைய கருத்தாகும். காந்தியடிகளிலிருந்து அனைத்து அறிஞர்களும் இந்தக் கருத்தையே சொல்லி வந்திருக்கிறார்கள். இதைத்தான் வெளி நாடுகளிலேயும் அவர்கள் செய்து காட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் பல்வேறு பெயர்களைக் கொடுக்கிறார்கள். நாம் பல்வேறு கல்வி முறை பற்றிப் பேசும்போது, உழைப்பிற்கு மரியாதை கொடுக்கும் கல்வி முறை பற்றியுங் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பயிற்சி மொழிபற்றி என் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பயிற்சி மொழி பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து, கல்வித் துறையில் உள்ள பல்வேறு சிறந்த அறிஞர்களைக் கூட்டி வைத்துப் பேசி தீவிரமான முடிவு செய்ய வேண்டிய நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். தாய்மொழி மீது மாணவர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ நம்பிக்கையில்லாத ஒரு நிலைமை இருப்பதால், அவர்களுடைய மனதில் நம்பிக்கையை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும் என்று நாம் முடிவெடுக்க வேண்டும். முதலிலே தமிழிலே பயிற்சி மொழித் திட்டம்

1979 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

வந்தபோது, அப்போது இருந்த கல்வி அமைச்சர் அவர்கள் அதை "double fold scheme" என்று சொன்னார்கள். தாய் மொழி மூலம் கல்வி, அதே நேரத்தில் ஆங்கிலத்தினுடைய தரமும் குறைந்துவிடக்கூடாது என்று double fold scheme என்று கொண்டு வந்தார்கள். நானும் தாய்மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்தவன். என்னைப் போல நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்திருக்கிறார்கள். எங்களது கல்லூரியில் படித்தவர்களானாலும், அல்லது வேறு கல்லூரிகளிலே படித்தவர்களானாலும் தாய்மொழி மூலம் படித்ததனால் எங்களுடைய நம்பிக்கை குறைந்து போகவில்லை. இன்னும் சொல்கிறேன், தமிழிலே படித்ததற்காக வாழ்நாள் முழுவதும் அதை நினைத்துப் பெருமைப்படுவேன். தமிழிலே படித்ததன் காரணமாக சிந்தனையை வளர்த்துக்கொள்ளும் பக்குவம் எனக்குக் கிடைத்தது; சூழ்நிலை எனக்குக் கிடைத்தது. அப்படிப்பட்ட தாய்மொழியை வளர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். காந்தியடிகள்கூட என்ன சொன்னார்கள்? நான் ஒரு சர்வாதிகாரியாக மாறினால், இந்த நாட்டினுடைய சர்வாதிகாரியாக மாறினால், உடனடியாக நான் ஒரு ஆணையிடுவேன். அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாய்மொழி மூலமாகப் பாடங்கள் போதிக்கப்பட வேண்டும் என்று ஆணையிடுவேன். அதற்கு வேண்டிய பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் காத்திருக்கமாட்டேன் என்று அவர் சொன்னார். அது மிக விரிவான ஒரு பேச்சு. அதுபற்றிக் கட்டுரை எழுதியிருக்கிறார். எதற்காகச் சொல்கிறேன் என்றால், தாய்மொழி மூலம் கல்வி கற்பிப்பதன் மூலமாக சிந்தனையாளர்களை உற்பத்தி செய்ய முடியும். நல்ல விஞ்ஞானிகளை உருவாக்க முடியும். நாட்டுக்கு நல்ல ஆக்க பூர்வமான திட்டங்களை உருவாக்கக் கூடிய நிபுணர்களை உருவாக்க முடியும். தற்போது இருக்கும் கல்வி முறையிலே, வேற்றுமொழியில் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்தக் கல்வி முறையிலே, அப்படிப்பட்ட சிந்தனையாளர்களை, விஞ்ஞானிகளை, நிபுணர்களை நாம் உருவாக்க முடியாது. தமிழ் நாட்டிலே நோபல் பரிசு பெற்றவர்களே இல்லை என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே; அப்படிப்பட்ட நிலைமைகள் வராது. தாய்மொழி மூலம் படிக்கின்ற நிலையை உருவாக்கினால்தான், நோபல் பரிசு பெறுபவர்கள் உருவாவார்கள், விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள், நிபுணர்கள் நமக்குக் கிடைப்பார்கள். நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அது உதவும். சின்னஞ்சிறிய ஜப்பான் நாட்டை நாம் எடுத்துக்கொண்டால் உலகத்திலே மிகவும் முன்னேறிய நாடுகளோடு போட்டி போடக்கூடிய அளவிலே அவர்கள் விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு படித்தறிந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களும் தாய்மொழி மூலம்தான் கல்வியைப் பெறுகிறார்கள். இதையும் நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். அப்படி அவர்கள் தாய்மொழியிலே கல்வி கொடுக்க முடியும் என்றால், நாம் ஏன் கொடுக்க முடியாது? பெற்றோர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்றால், அதற்கு என்னென்ன வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசு தீவிரமாக யோசிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பற்றிப் பேசும்போது, ஆசிரியர்களைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. "Teacher is the nerve centre of education" அவர்களுடைய குறைகளைப்பற்றிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருப்பதால், இங்கே அதிகமாக எடுத்துச்சொல்ல நான் விரும்பவில்லை. "Nerve centre of education" என்று சொல்லப்படுகின்ற அந்த ஆசிரியர்களுடைய நிலை, பொருளாதார நிலை, எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும், அது இன்றையதினம் எப்படி இருக்கிறது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். மூன்றாவது

(பிற்பகல் 6-00)

ஊதியக் குழு அமைக்கப்பட்டது. அதன் விளைவு என்ன ஆனது என்றால், ஏற்கெனவே இருந்த பிரச்சினைகளை அது அதிகப்படுத்திவிட்டது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், தங்களுக்கு மிக அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. புதிதாக முரண்பாடுகளை உருவாக்காதீர்கள், ஏற்கெனவே இருக்கிற முரண்பாடுகளைக் களைவதற்கான முயற்சியை மேற்கொள்ளுங்கள் என்றுதான் கேட்கப்படுகிறது. ஆசிரியர்களான எங்களுக்குக் 'கொட்டிக் கொடுக்க வேண்டும்' என்றோ 'வாரிக் கொடுக்க வேண்டும்' என்றோ கேட்கவில்லை. ஆசிரியர் சமுதாயத்திற்கிருக்கிற மிகப் பெரிய நல்ல தன்மை என்னவென்றால், 'சிறிதளவு கிடைத்தாலும் அதற்கு மிகப் பெரிய அளவில் நன்றியுணர்ச்சியோடு இருப்பார்கள்' என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களேகூட, ஒருமுறை கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, ஏற்கெனவே இருந்த முரண்பாடுகளைக் களைய வேண்டுமென்று வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியச் சமுதாயத்தின் மத்தியில் இன்றையதினம் 3-வது ஊதியக் குழுவின் மூலமாகப் புதிய பல முரண்பாடுகளை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த முரண்பாடுகளைப் போக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இன்றையதினம் ஆசிரியர்கள் போராட்டத்தைத் துவக்கி சிறைப்பட்டதோடு, தொடர்ந்து போராடிக் கொண்டும் இருக்கிறார்கள். அந்த முரண்பாடுகளையெல்லாம் களைய

வேண்டுமென்று பல மாதங்களாக வற்புறுத்தியும்கூட, அவைகளைக் களையத் தக்க வகையில் நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களின் ஊதியத்தைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எப்போதுமே ஆசிரியர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு, அவர்களுடைய பணி மிக உயர்ந்த பணி என்று சொல்லிக்கொண்டே ஆசிரியர்களை எல்லாக் காலத்திலும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. ஆசிரியர்கள் தினத்தன்று வாழ்த்துச் செய்தியை அனுப்பி, "ஆசிரியர்கள் வருங்காலச் சமுதாயத்தின் சிற்பிகள்" என்று இந்த நாட்டுப் பிரதமரும், மத்திய கல்வியமைச்சரும், மாநிலக் கல்வியமைச்சரும் அறிக்கைவிட்டு ஆசிரியர்களைத் திருப்திப்படுத்த முடியாது. அவர்களை உண்மையிலேயே திருப்திப்படுத்த வேண்டுமென்றால், ஆசிரியர்களின் பொருளாதார வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும். அதற்கான முறையில் அரசாங்கத்தின் செயல்முறை அமையவில்லை. அந்த வகையில் 3-வது ஊதியக் குழு ஆசிரியர்களுக்குப் பெருத்த அநீதியை இழைத்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே ஏற்கெனவே இருக்கிற முரண்பாடுகளைக் களையத் தக்க வகையில் உடனடியாக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இதில் காலந் தாழ்த்துவதன் மூலம் ஆசிரியர்களின் கிளர்ச்சியை மேலும் வளர்க்கும் சூழ்நிலையை உருவாக்கக்கூடாது என்று நான் கல்வித் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் அரசின் முன் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றி மிக விரிவாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் விளக்கியிருக்கிறோம். அவைகளை மீண்டும் மீண்டும் இங்கே வற்புறுத்திக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆயினும் 1978-79ஆம் ஆண்டிற்குரிய பள்ளி மாணவர் எண்ணிக்கை பற்றிய சதவிதப் புள்ளிவிவரத்தை இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். 14 வயது முதல் 17 வயது வரையிலான பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 30 சதவீதம்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட வயதில் இருக்கிற மாணவர்கள் வறுமை காரணமாக பள்ளிகளுக்கு வராமல் வெளியே வேலை செய்யச் சென்று விடுகிறார்கள் என்பது தான் இதற்குக் காரணம். ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாத காரணத்தால்தான் இந்த வயதில் உள்ள மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவதில்லை என்பது போன்ற பலதரப்பட்ட காரணங்கள் இருக்கின்றன. எனவே இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய நாம் என்ன செய்யலாம் என்பதைச் சிந்திக்க வேண்டும். இதில் என்னுடைய சொந்தக் கருத்து

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 9

ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தற்போது துவக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு மதிய உணவு இலவசமாக அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அரசாங்கம் விரிவுபடுத்த முன்வர வேண்டும். அப்படி உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இலவச மதிய உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் போது, எந்தக் காரணத்தைக் கொண்டும் அதில் ஆசிரியர்களை ஈடுபடுத்தக் கூடாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனவே இந்த மதிய உணவுத் திட்டத்தை, விரிவுபடுத்துவதன் மூலமாக தற்போது இருக்கும் 'wastage drop out' மூலம் மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கிற குறைவு இனியாவது இல்லாமல் தவிர்க்கலாம் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, கல்வித் துறையின் நிருவாகத்தைப்பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தருமபுரி மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் நியமிக்கப்பட இருக்கிறார் என்ற அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போலவே நீலகிரி மாவட்டத்திற்கு என்று ஒரு தனியான முதன்மைக் கல்வி அலுவலர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என்று முதன்மைக் கல்வி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கின்றன. இவைகள் குறித்து அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தொடக்கப் பள்ளிக்கு என்று ஒரு தனியான இயக்குநர் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மேல்நிலைப் பள்ளிக் கல்வி என்பது இன்று மிகப் பெரிய அமைப்பாக இருக்கிறது. மேல்நிலைக் கல்வி மிகச் சிறப்பாக அமைய அது செம்மையாக நிருவகிக்கப்பட, மேல்நிலைக் கல்வி நிருவாகத்திற்கு என்று ஒரு தனியான இயக்குநர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒவ்வொரு துறைக் கல்விக்கும் இயக்குநர்களை நியமித்து, அதிகாரத்தைப் பரவலாக ஆக்குவதன் மூலம்தான் கல்வித்துறையில் நாம் எதிர்பார்க்கும் வளர்ச்சியை அடைய முடியும். அவ்வாறில்லாமல் இருக்கிற இயக்குநரே ஆயிரக் கணக்கான வேலைகளையும் தன் தலையில் இழுத்துப் போட்டுக்கொண்டு செயலாற்றுவது என்பது சிக்கலான நிலையைத்தான் உருவாக்கும் என்பதை அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

நான் ஏற்கெனவே ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறேன். தற்போது 3 அல்லது 4 மாவட்டங்களுக்கு ஒரு Inspectress of Girls Schools என்ற அதிகாரி இருக்கிறார். இதன் காரணமாக அவர்களால் தங்களுடைய பணியை ஒழுங்காகக் கவனிக்க இயலவில்லை. குறைந்தது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு 'இன்ஸ்பெக்ட்ரஸ் ஆப் கேர்ல்ஸ் ஸ்கூல்ஸ்' என்று நியமித்தாலாவது சரியாக இருக்கும் என்று சொல்லி, இந்தக் கருத்தையும் கல்வித் துறை பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நிதி உதவி செய்யும்போது, ஏற்கெனவே ஓரளவுக்கு வசதிகளுள்ள கட்டிடங்களைக் கொண்ட பள்ளிகளும் இருக்கின்றன—அப்படிப்பட்ட பள்ளிகளில் ஷிப்ட் முறையை அமுல்படுத்தி, கட்டிட வசதியே இல்லாத பள்ளிகளுக்கு மட்டும் கட்டிடங்கள் கட்ட நிதி வசதி செய்ய கல்வித் துறை முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன், ஏற்கெனவே நல்ல கட்டிட வசதிகளைப் பெற்றிருக்கிற பள்ளிகளில் ஷிப்ட் முறையில் இரண்டு வேளை வகுப்புகளை நடத்துவது நலம் பயப்பதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், விரிவான விவாதம் இந்த அவையிலே நடைபெற இருக்கிறது. அப்போது அதைப்பற்றி முழுமையாகப் பேசிக் கொள்ளலாம் என்றாலும், முக்கியமான ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பெட்டிக்கடை வைப்பதற்கு என்று ஒரு வங்கியிடம் 100 ரூபாய் கடன் பெற்றாலும், அங்கே ஒரு அறிவிப்பு செய்யப்படுகிறது. அதாவது "It is aided by the State Bank of India or Central Bank of India" என்று ஆனால் லட்சக் கணக்கான ரூபாய் மக்களின் வரிப் பணத்திலிருந்து இந்தத் தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டாலும்கூட, அவர்கள் ஒரு இடத்தில்கூட இந்தப் பள்ளிகளுக்கு அரசாங்க நிதியுதவி கிடைத்திருக்கிறது என்று குறிப்பிடுவதே இல்லை. தனியார் பள்ளிகளானாலும் சரி, தனியார் கல்லூரிகளானாலும் சரி, அவர்கள் அரசாங்க நிதியுதவி பெறுவதை எங்கேயும் குறிப்பிடுவதே இல்லை. ரெக்கார்டுகளிலானாலும் சரி, மற்றும் போர்டுகளிலானாலும் சரி எங்கேயும் குறிப்பிடுவதில்லை. எனவே அரசு உதவி பெறுகிற அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் "This School is aided by the State/Central Government" என்று குறிப்பிடப்பட வேண்டும் என்ற ஆணையை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும். இது மிக மிக அவசியமானது. எனவே இதிலும் கல்வித் துறை கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 9

தற்போது பள்ளிகளில் மருத்துவ சோதனை, மாணவர்களைப் பொறுத்த வரையில், நடைபெற்று வருகிறது. உடல் நலத்தைப்பற்றி மட்டும்தான் இங்கே கவனிக்கப்படுகிறதே தவிர, உள்ளத்தால் ஊனமுற்ற மாணவர்களை அங்கே கவனிப்பதற்கு எந்த ஏற்பாடுமில்லை. ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு சைக்கியாட்டிரிக்—உள இயல் நிபுணர் மூலமாக குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மாணவர்களுக்கு ஒரு உள இயல் சோதனை நடத்த வழிவகை செய்ய வேண்டும். தற்போது நாட்டில் நிறைய Psychology படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய திறமையை பள்ளிகளில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

ஆங்கில போதனைத் தரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று English Teaching Campaign என்று இப்போது நடத்தப்பட்டு வருகின்றது. தற்போது பட்டதாரி ஆசிரியர்களுக்கு 3 மாவட்டங்களிலும் இடைநிலை ஆசிரியர்களுக்கு 6 மாவட்டங்களிலும் ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு பயிற்சி பெறுகிற ஆசிரியர்கள் உண்மையிலேயே அதை நடைமுறையில் கடைப்பிடிக்கிறார்களா என்றால் இல்லை. காரணம் அந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டா மென்று நிர்வாகத்தில் உள்ளவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இதற்குச் சரியான முறையில் ஒரு "Follow up" கிடையாது, கண்காணிப்பு கிடையாது. காரணம் ஆங்காங்கே இருக்கிற Immediate Superior களின் ஆதரவு இதற்கு இல்லாமல் இருக்கிறது. எனவே இந்தத் திட்டம் பயன் உள்ளதாக இருக்க வேண்டுமென்றால், இதற்காகச் செலவிடப்படும் பணம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றால், அனைத்து மாவட்டங் களிலும் இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களைத் துவக்கி அதிக அளவில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து, இதை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே இந்தப் பயிற்சிக்கு வருகிற ஆசிரியர்களுக்கு நாளொன்றுக்கு 6 ரூபாய் தினப்படி தரப்படுகிறது. இதை விடுத்து தமிழக அரசின் "T.A., D.A." விதி முறைகளின்படி அவர்களுக்குப் பயணப்படியும் தினப் படியும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அடுத்து, இரண்டு பிரிவுகளாக இயங்கி வந்த பள்ளிகளின் இணைப்பைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது "Integration of A Wing and B Wing Schools". இது பல ஆண்டுகளாக பல்வேறு கட்சிகளும், ஆசிரியர்களின் சங்கங்களும் கோரி வந்த ஒன்று. அண்மையில் அரசாங்கம் இதில் ஒரு முடிவெடுத்தது. ஆனால் முடிவெடுத்த பிறகு ஒரு பெரிய தேக்க நிலை உருவாகியிருக்கிறது. காரணம் சிலர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் இதில் ஒரு தேக்க நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கல்வித் துறையில் என்ன "Practical Approach" வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வில்லை. அதாவது நீதி மன்றத்தில் சரியான நீதி கிடைக்கச் செய்ய கல்வித் துறை என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாக்கப் படாத காரணத்தால், ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு பெரிய குழப்பமான சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வழக்கில் முதல் ரெஸ்பான்டண்ட்—பிரதிவாதி கல்வித் துறையின் செயலாளர். இரண்டாவது பிரதிவாதி பள்ளிக் கல்வி இயக்குநர், 3-வது பிரதிவாதி பட்டதாரி ஆசிரியர்களின் சங்கத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர். அரசின் சார்பாக ஆசிரியர்களுக்கு நீதி கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பது தெரியாத காரணத்தால், ஆசிரியர்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. எனவே இந்த வழக்கை மிக விரைவாகத் தீர்க்க உருப்படியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதையும் கல்வித் துறையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, தனியார் துறைப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடம் காலி ஏற்படும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. அதைப் போல பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று ஆணையிடப்பட்டதாகத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டதோ அதைப் போலவே பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்க வேண்டுமென்ற ஆணையையும் அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது எவ்வாறு விடப்பட்டது என்று புரியவில்லை. இதையும் கல்வித் துறை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 9

ஆசிரியர்களின் நலனுக்காக தேசிய நல நிதி என்று ஒன்றிருக்கிறது. அது தற்போது மாநில அளவில் இயங்குகிற காரணத்தால், உண்மையில் உதவி தேவைப்படுகிற ஆசிரியர்களுக்கு அதனால் எந்த உதவியும் கிடைப்பதில்லை. இதற்காக மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்ட அளவிலேயே நிதியைப் பகிர்ந்து கொடுத்து, தேவையான ஆசிரியர்களுக்கு விரைந்து உதவி செய்திட வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு முறையைப் பொறுத்தவரையில், இப்போது 10, 12 ஆம் வகுப்புகளுக்கு அரசுத் தேர்வு நடத்தப்பட்டு வருகின்றது. இதில் "Internal Assessment" என்று ஒரு குறிப்பிட்ட சதவிதத்தை ஒதுக்க வேண்டும். பள்ளிகளில் உள் தேர்வு மூலமாக மதிப்பீடு செய்யும் முறையைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒரு விரிவான விவாதம் இங்கு நடைபெற இருப்பதால், அதைப்பற்றிய கருத்துக்களை அப்போது கூறிக்கொள்ளலாம் என்று தற்போது விடுகிறேன். என்றாலும் மேல்நிலைக் கல்வியைப் பற்றிப் பேசும்போது, அனைவரும் இந்தத் திட்டத்தை வரவேற்கிறார்கள். தொழிற் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று எப்போதும் நாம் பேசுகிறோம். ஆனால் மேல்நிலைக் கல்வியைப் பொறுத்த வரையில், அங்கே தொழிற் கல்விக்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் ஆகியவைகளை வாங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட

(பிற்பகல் 6-10)

விரும்புகிறேன். அப்படி நிதி ஒதுக்கீடு செய்யாவிட்டால் தொழிற் கல்வித் திட்டமே தோற்றுப் போய்விடும். ஆகவே தொழிற் கல்வித் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்றால், இதற்காக கணிசமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே குறிப்பிட விரும்புகிறேன். மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து யாரும் ஏமாந்து போய்விடக் கூடாது. தமிழகத்திலே அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள் என்று சொல்லுவதன் மூலமாக மட்டும் திருப்தி அடைய முடியாது. ஆகவே தேவையான சாதனங்களை, உபகரணங்களை, பல்வேறு வசதிகளை அதிகரித்து, பயிற்சி பெற வருகிற மாணவர்களை ஈர்க்கக்கூடிய வகையிலே வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 9] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தமிழகத்திலே உள்ள பல்கலைக் கழகங்களின் பட்டியல் ஒன்று தரப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு பல்கலைக் கழகத்தைச் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். காந்தி கிராம பல்கலைக் கழகத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. தமிழகத்திலே இயங்குகின்ற பல்கலைக் கழகங்களுள் மிகச் சிறப்பான முறையில் கிராமியக் கல்வியைக் கற்றுத் தருகிற பல்கலைக் கழகத்தினுடைய பெயர் விடப்பட்டிருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும், தமிழக அரசின் மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி வீட்டு வாடகைப்படி இன்று வரையில் தரப்படவில்லை. விதிமுறையின்படி வீட்டு வாடகைப் படி தரப்படுவதற்கான தகுதியுள்ள இடங்களில் அவர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்கு வீட்டு வாடகைப்படி தரப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி தருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்திலே அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே மருத்துவக் கல்வியைத் துவங்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாகவே இருக்கிறது. அரசு அதற்காக நிதியுதவி அளித்து, அடுத்த ஆண்டிலிருந்தாவது மருத்துவக் கல்வியைத் துவங்க அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் இருக்கின்ற பல அரசுக் கல்லூரிகளில் எந்தக் கல்லூரியிலும் எம்.எஸ்ஸி. பாடம் போதிப்பதில்லை. எம்.எஸ்ஸி. படிக்கக்கூடிய வாய்ப்பு அங்கே கிடையாது. ஆகவே தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் எம்.எஸ்ஸி. வகுப்புகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, பொதுவான சில யோசனைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பல்கலைக் கழகங்களுக்கென்று மானியக் குழு இருக்கிறது. அதைப் போலவே பள்ளிகளுடைய தேவையைக் கவனிக்க, பள்ளி ஆசிரியர்களுடைய தேவையைக் கவனிக்க பள்ளி மானியக் குழு "School Grants Commission" (ஸ்கூல் கிராண்ட்ஸ் கமிஷன்) அமைக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் சங்கங்கள் பல நாட்களாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றன. ஆகவே பள்ளி மானியக் குழுவை தமிழகத்திலே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி அமைச்சருடைய கவனத்திற்குத் தனிப்பட்ட முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்-மாணவர்கள் விகிதத்தை 1 : 29 என்ற முறையில் கடைப்பிடித்து முதல் வகுப்பு, ஆறாம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு ஆகிய 3 கட்டங்களில் ஆசிரியர்களை நியமித்தால், கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். அனைத்து வகுப்புகளிலும் இந்த விகிதாச்சார முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றாலும், இதை இப்பொழுதைக்கு மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தினால் அதிக நிதிச்சுமையும் ஏற்படாது. இப்படிச் செய்வதன் மூலம் கல்வித் தரமும் உயரும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மீண்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நீண்ட காலமாக நம்முடைய தமிழகத்திலே ஒரு கோரிக்கை இருக்கிறது. ஒரு வயதிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு என்று நர்சரி, கிண்டர்-கார்டன், மாண்டிசோரி போன்ற பள்ளிகளை அரசு துவக்கவேண்டுமென்ற கோரிக்கை பொது மக்களிடையே இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்கிற வகையிலே எந்த ஒரு நல்ல திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 1 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பள்ளிகளை ஏற்படுத்தவேண்டியது மிக முக்கியமான தேவை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்வி குறித்த கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் பங்கு கொண்டு என்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நான் முன்பே சொன்னது போல ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை ஒரு பட்டியல் போட்டு மாதத்திற்கு ஒரு பிரச்சினை என்று தீர்த்தால், பல்வேறு பிரச்சினைகள் தீரும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மேலவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், சகல விவரங்களையும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். இந்த சபையில் உள்ள ஆறு ஆசிரியர்களும் கல்வியமைச்சரிடம் அதிகமான வேலையை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கல்வியமைச்சர் அவர்களை ஒரு நாளைக்கு 50 தடவையாவது எழுந்து உட்காரும்படி செய்து கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஒரு காலத்திலே கல்வியமைச்சர் அவர்கள் ஆசிரியராக இருந்தபோது பையன்கள் எழுந்து எழுந்து உட்காரும்படி சொல்லி சிரமம் கொடுத்திருப்பார்கள் போலும். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் அன்புக்குரிய உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

பொதுவாக எனக்குத் தெரிந்த பள்ளிக்கூடங்களைப் பற்றி மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களுக்குப் பொதுவாக வசதிகள் ரொம்ப குறைவு. ஆகவே இன்னும் அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். பல இடங்களில் பள்ளிகளுக்குச் சரியான கட்டிடங்கள் கிடையாது. நூற்றுக்கு அறுபது பள்ளிக்கூடங்கள் மரத்தடியில்தான் நடந்து கொண்டிருக்கின்றன. இது ரொம்பவும் கவனிக்கவேண்டிய விஷயம். மொத்தம் 900 கோடி ரூபாய் வருமானம் உள்ளதில், கிட்டத்தட்ட 209 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவு செய்கிறார்கள். கிராமங்களில் சுதந்திரம் கிடைத்த பின்னால்தான் பள்ளிகள் வந்தன. இராமநாதபுரம்-தேவகோட்டைக்கு இடையில் உள்ள 50 மைல் தூரத்தில் ஒரு எட்டாம் வகுப்புப் பள்ளிக்கூடம் கூட முன்பு கிடையாது. முனிசிபல் நகரமாக இருக்கக்கூடிய தேவகோட்டையிலேகூட எட்டாம் வகுப்புப் பள்ளி கிடையாது. அந்த தாலுக்காவிலேயே கிடையாது. ஒரு பத்து மைல் தூரத்தில் ஐந்தாம் வகுப்புப் பள்ளிக்கூடம்தான் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு வேண்டிய பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. காலேஜ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் கட்டிட வசதி அங்கே சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எட்டாம் வகுப்புப் பள்ளிக்கூடம் அந்தத் தாலுக்காவிலேயே இல்லையென்று சொல்லுகிறார்கள். எந்த அடிப்படையிலே அப்படிச் சொல்லுகிறார்கள் என்று விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : முன்பு இராமநாதபுரம்—தேவகோட்டைக்கு இடையில் உள்ள 50 மைல் தூரத்தில் ஒரு ஆஸ்பத்திரி கூட கிடையாது. எட்டாம் வகுப்புப் பள்ளிக்கூடம்கூட கிடையாது. ஹையர் எலிமென்டரி ஸ்கூல்கூட கிடையாது. சுதந்திரத்திற்குப் பிறகுதான் இதெல்லாம் ஏற்பட்டன.

VICE-CHAIRMAN (Thirumathi:) Mandakini Krishnamurthi). There is an announcement to the House. The House will meet both in the morning and in the evening on Wednesday, the 11th April 1979 to consider the Policy Note on Education. In the morning it will meet from 10 a.m. to 1 p.m. and in the evening it will meet at the usual time, from 4 p.m. to 7 p.m.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அமைச்சர் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லி நான் முடித்துக்கொள்ளுகிறேன். அங்கே ஆஸ்பத்திரி கூட கிடையாது. எட்டாம் வகுப்பு பள்ளி கூட கிடையாது. சருகணி பாதிரிமார்

(பிற்பகல் 6.20)

கள்தான் சருகணியில் முதன்முதலில் ஒரு எட்டாம் வகுப்புப் பள்ளியை ஏற்படுத்தினார்கள். அந்த ஊரிலே விழா கூட நடத்தினார்கள். அதற்கு நான் தலைமை வகித்தேன். எனக்கு வரவேற்புகூடக் கொடுத்தார்கள். அந்த விழாவில் கலந்துகொண்டபோது எடுத்த படங்களை கண்ணாடி போட்டு வைத்திருக்கிறேன். திருவாடானை தாலூக்காவில் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகள் கிடையாது. 300 பேர்கள் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பப் பள்ளி, 10 ஆரம்பப் பள்ளிக்கு ஒரு ஹையர் எலிமெண்டரி பள்ளி, 10 ஹையர் எலிமெண்டரி பள்ளிக்கு ஒரு ஹைஸ்கூல் என்றெல்லாம் இருக்கிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : இப்போது பள்ளிகள் இல்லை என்கின்றார்களா?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : பள்ளிகள் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட பொய்யைச் சொன்னால், என்னைக் கடற்கரையில் கட்டித் தொங்கவிடுங்கள். பார்க்கின்றவர்கள் கேட்பார்கள். இவர்தான் பொய் சொன்னவர் என்பார்கள். நாட்டில் இப்போது ஏராளமான பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் அவைகளுக்கு வேண்டிய பள்ளிக் கட்டிடங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங் களை எல்லாம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சில ஊர்களில் ஆசிரியர்கள் பள்ளிக்குக் குறித்த நேரத்தில் வருவதற்கே கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கிராமப் பகுதிகளில் வருவதற்குக் கடின மாக இருக்கிறது. ஆசிரியர்களுக்கு என்று சில ஊர்களில் வீட்டு வசதிகூட செய்து கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதியில்லாத பாக்கி இடங்களில் இருக்கிற ஆசிரியர்கள், குறிப்பிட்ட காலத்திற்கு பள்ளிக்கு வரமுடியாத நிலையில் இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் கலப்பை எடுத்துக்கொண்டு உழவு செய்யப் போகின்றவர்கள் எல்லாம் இதையெல்லாம் பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள். ஆசிரியர்களுக்கு வேண்டிய வீட்டு வசதி இல்லாததால் கஷ்டப்படுகிறார்கள். வீட்டு வசதி இல்லாத ஊர்களில் வேலைக்கு வருபவர்களுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய யோக்கியதையும் சரியாக இல்லை. அவர்களில் உத்தமமானவர்கள், சத்திய சந்தர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் நன்றாக இல்லை என்று கூட சொல்லலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : ஆசிரியர்கள் நன்றாக இல்லை என்று சொல்வதை விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அங்கத்தினர் அவர்கள் விளக்கம் கேட்கிறார்கள். சிலர் குடிக்கப் போகிறார்கள், பையன்களிடம் கள் வாங்கி வரச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்கிறார்கள் என்று சொல்லச் சொல்லி அங்கத்தினர் அவர்கள் கேட்க விரும்புகிறார்கள். அப்படியெல்லாம் ஆசிரியர்கள் தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆறு பேர்கள் இங்கே ஆசிரியர்கள் பிரதிநிதிகளாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதற்கு அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொள் கிறேன். ஆசிரியர்களுக்கு என்று ஒரு கூட்டம் போட்டு அதில் இதைப் பற்றிப் பேச வேண்டும். ஆசிரியர்களாகிய அவர்களை எல்லாம் "ஏன் ஒழுங்கீனமாக நடந்துகொள்கிறீர்கள்?" என்று கேட்கலாம். ஏன் சரியாக நடக்கவில்லை என்று கேட்டு அவர்களையெல்லாம் திருத்தக் கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆசிரியர்களைப்பற்றிப் பொதுவாகவே ஒரு தவறான கருத்தைச் சொல்வது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்ற என் கருத்தை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். தவறுகள் நடப்பது என்பது எல்லாப் பகுதியினரிடமும்தான் இருக்கிறது. அவைகள் எல்லாம் சமூகத்தில் இருக்கின்ற குறைகள்தான். ஒருவேளை ஆசிரியர்களில் ஒரு சிலர் அப்படி இருக்கலாம். அப்படித் தவறு செய்வதன் காரணமாக, அதைப்பற்றி வேதனையோடு மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அப்படிக் கூறுகிறார்கள் என்றுதான் அந்தக் கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லா ஆசிரியர் களும் அல்லது பெரும்பான்மையான ஆசிரியர்கள் அப்படித் தவறு செய்கிறார்கள் என்ற ஒரு தவறான அபிப்பிராயத்தை நாம் சொல்வோமானால், பொது மக்களுக்கு ஆசிரியர்கள் மீது இருக்கின்ற நம்பிக்கை போய்விடும். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : ஆசிரியர்களில் ஒரு சிலர்தான் அப்படியிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். அவர்களில் உத்தமர்களும் இருக்கிறார்கள், சத்திய சந்தர்களும் இருக்கிறார்கள், நேர்மையுடையவர்

களும் இருக்கிறார்கள் என்று சொன்னேன். இருந்தாலும் ஆசிரியர்களில் ஒருசிலர் தவறு செய்பவர்களாக இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களை இந்த ஆசிரியப் பிரதிநிதிகள் திருத்தக்கூடாதா என்றுதான் சொல்கிறேன். நான் எல்லா ஆசிரியர்களையும் சேர்த்துச் சொல்லவில்லை.

கிராமங்களிலே நல்ல தரமான முறையிலே கல்வி நிர்வாகம் நடப்பதாக பலரும் சொல்ல நான் கேள்விப்பட்டேன். கல்வி நிர்வாகம் ரொம்ப நன்றாக நடக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நான் ஆட்சேபிப்பதற்குத் தயாராக இல்லை. நேர்மையாகவே நடக்கிறது என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது அரசின் நிர்வாகம் நன்றாக இருக்கிறது. எதைக் கேட்டாலும் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். செய்வோம், செய்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அதைச் செய்வதில் கால தாமதம் இருக்கிறது. செய்வதிலே சில குறைபாடுகளும் இருக்கின்றன. இதற்காக நான் யாரையும் குறை சொல்வதற்கில்லை.

நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் போய்விட்டார்கள் போல் இருக்கிறது! குடிநீர் வாரியத்தைப் பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அவர்கள் போய்விட்டிருக்கிறார்கள். பைப்புகள் கொண்டு வந்து ஊர்களில் போட்டிருக்கிறார்கள். அந்த பைப்புகள் நிரம்பிப் போய் வண்டிகள் போகக்கூட வழியில்லாமல் அடைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன. மற்ற ஜில்லாக்களிலும் அப்படிக் கிடக்கின்றன என்று கருதுகிறேன். எங்கள் பஞ்சாயத்து யூனியனிலே சருகணி சாலைக் கிராமம் ரோட்டிலிருந்து ஒரு ரோடு போடுகிறார்கள். அங்கே ஒரு சிமெண்ட் குழாய், 3 அடி குழாய் போட்டிருந்தார்கள். புயல் வந்தபோது, அந்த குழாயைக் காற்று அடித்துக்கொண்டு போய்விட்டது என்று சொல்கிறார்கள். புயலில், குழாயைக் காற்று தூக்கிக்கொண்டு போய் விட்டது என்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் ஒரு கமிட்டிக் கூட்டம்கூட போட்டார்கள். குழாயைக் காற்றுத்தான் தூக்கிப்போனதா, மனிதன் தூக்கிக்கொண்டு போனானா என்று கண்டறிவதற்காக ஒரு கூட்டம் போட்டுப் பேசினார்கள். புயல் காற்றுத்தான் தூக்கிக்கொண்டு போனது, அது உண்மைதான் என்று எழுதிக்கொண்டு வந்தார்கள். காற்று தூக்கிக்கொண்டு போய்விட்டது என்பதை ஒரு அய்யப்பாட்டுடன் தான் சொல்கிறார்கள். இப்படி நிறைய போய்க்கொண்டிருக்கலாம்.

பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றன. அஸ்திவார மட்டத்திலேயே பல கட்டிடங்கள் நிற்கின்றன. ஓடு வைக்கப் படாமல் கூட பல வருடங்களாக கட்டிடங்கள் நிற்கின்றன. இவைகளை

யெல்லாம் பார்த்து கல்வி நிர்வாகம் ரொம்ப சீக்கிரத்தில் நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

21 ஆசிரியர்கள் உண்ணா விரதம் இருக்கிறார்கள். அவர்களைக் கோட்டைக்குள்ளே வரவிடவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்கூட இங்கே வருத்தப்பட்டுக்கொண்டு போய் விட்டார்கள். நான்கூட அமைச்சர் அவர்களிடம் போய் மறுமுறை சொல்லுங்கள் என்று சொன்னேன். கோபப்பட்டுக்கொண்டு போய்விட்டார்கள். கோபப்பட்டுக்கொண்டு போய்விடுவதால், நம் காரியம்தான் கெடும். உண்மையிலேயே செய்யப்பட வேண்டிய காரியமாக இருந்தால், அரசில் இருப்பவர்களும் மனிதத்தன்மை உள்ளவர்கள்தானே, அவர்களே அவைகளைச் செய்வார்கள். அவர்களை நாம் ஏன் வேறு ரூபமாக நினைக்க வேண்டும்? எடுத்ததற்கெல்லாம் உண்ணா விரதம் என்று சொல்வது தேவையில்லை. அரசும் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதும், நிராகரிக்கப்படுகிறது என்று சொல்வதைக் கொஞ்ச நேரம் பொறுத்திருந்து சொல்லலாம். இங்கே விதண்டா வாதத்தைக் கிளப்பிக்கொண்டே போக வேண்டாம் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேவகோட்டையில் St. மேரிஸ் ஹையர் செகண்டரி ஸ்கூல் என்று ஒரு ஸ்கூல் இருக்கிறது. ஒரு வெள்ளைக்கார அம்மாள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு ஹையர் செகண்டரியும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆரம்பித்த போது நான் தலைமை வகித்தேன். 4½ மணிக்கெல்லாம் நான் திரும்பிவிட வேண்டும் என்பதற்காக அவசரப்பட்டேன். அந்த அம்மையார் 'டான்ஸ்' நடக்க இருக்கிறது. பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் * * என்று சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன். * *

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, பெரியார் அவர்கள் தமாஷாக * * என்ற பொருள்பட சொல்கிறார்கள். அதை பத்திரிகைகளில், குறிப்பில் போடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: உண்மையைச் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது?

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

VICE-CHAIRMAN (THIRUMATHI *Mandakini* Krishna-Murthi): As this concerns the other House, the particular sentence may be deleted.

(பிற்பகல் 6.30.)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: எல்லோரும் ஒத்து வந்தால்தான் நல்லது. கல்வித் துறை என்பது அதிக அனுபவமுடைய நிர்வாகத்தினர் இருக்கக்கூடிய துறை என்பது எனக்குத் தெரியும். எல்லா அமைச்சர்களின் துறைகளிலும் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. என்ன செய்வது? எல்லாவற்றையும் பார்த்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு தரம், இரண்டு தரம், நான்கு தரம் சொல்லித்தான், காரியங்களைச் செய்தாக வேண்டும். சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலுள்ள பள்ளிகள் குறித்த விவரங்களை எடுத்துச் சொல்ல ஆட்கள் இருப்பார்கள். ஆனால் கிராமங்களுக்கு எப்போதாவது போகும்போது, சர்க்கார்பள்ளி இருப்பதைப் பாருங்களென்று காண்பிப்பார்கள். என்றைக்காவது ஒருநாள் தான் அங்கே போவோம். எனவே இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டும். கல்வித் துறையின் மூலம் இவற்றுக்கெல்லாம் தக்க பரிகாரம் காண வேண்டும். நல்ல பள்ளிக்கூடங்களைக் கட்ட வேண்டும். ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளி என்று ஏற்படுத்திவிட்டு, அதை அரசு மரத்தடியில் வைத்தால், அரசுக்கும் கேவலம், ஊர்க்காரர்களுக்கும் கேவலம். அரசு துவக்கிய காரியத்தை நிறைவேற்றும் சக்தி அந்த ஊருக்கு இல்லை என்பதுதான் அந்த ஊருக்குக் கேவலம். இதையெல்லாம் கல்வித் துறை கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். தமிழக அரசு கல்விக்கென்று இந்த ஆண்டு 209 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதிலே ஆரம்பக் கல்வி, பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி போன்ற பல்வேறு கல்வியை இணைத்துப் பார்க்கும்போது, ஏறக்குறைய 250 கோடி ரூபாய் அளவிற்கு மிகப் பெரிய தொகையை நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கல்விக்காக ஒதுக்கி, செலவு செய்கிறோம். நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்த அரசாங்கம் எடுத்திருக்கிற நல்ல திட்டங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர் வரிசையிலே வந்துவிட்ட காரணத்தாலேயே, நல்ல கொள்கைகளை வரவேற்பது தவறு என்று

கருதுபவன் நானல்ல. மனச்சாட்சிக்கு நியாயம் என்று பட்டதை எடுத்துச் சொல்ல நான் தயங்கியது கிடையாது. நல்ல காரியங்களை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் துணிந்து செய்திருக்கிறார்கள். "Appreciation is the best form of Civilization" என்று சொல்வார்கள் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாகவே பல்வேறு தரப்பினரும் விரும்பிய 'ஏ' விங், 'பி' விங் இரண்டையும் ஒன்றாக இணைத்து, அவைகளை இன்றைக்கு அரசுப் பள்ளிகள் என்று கொண்டு வந்துள்ளதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். அதிலே பல இடையூறுகள் இருக்கலாம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, அதாவது ஒரு திட்டத்தாலே இன்னொரு திட்டம் மாறும்போது, இடையிலே "அட்மினிஸ்டிரேடிவ் டிஃபிகல்டீஸ்" வரலாம். சில பேர்கள் பாதிக்கப்படலாம். சில பேர்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வுகளிலே தடங்கல் ஏற்படலாம். ஆனால் நீண்ட காலத்திற்குப் பின்னாலே கிடைக்கும் நல்ல பயனை எண்ணிப் பார்த்து, இது போன்றதொரு இணைப்பை ஏற்படுத்தியதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

அதைப்போலவே, எஸ்.எஸ்.எல்.சி.யில் பகுதித் தேர்வு முறை கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்மூலம் பின் தங்கிய பிற்பட்ட பகுதிகளிலே படிக்கும் மாணவர்களும் அந்தத் தகுதியைப் பெற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். 8ஆம் வகுப்பு படித்தவர்கள், 18 வயதைத் தாண்டிவிட்டால், நேரடியாகவே பள்ளியிறுதித் தேர்வு எழுதலாமென்ற அறிவிப்பு வந்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது கல்வித் துறையானது பல பேர்களைக் கை தூக்கிவிடும் பணியிலே ஈடுபடுகிறதென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் கல்விக்கு மிக அதிகமாக ஒதுக்கீடு செய்து செலவு செய்கிறோம். ஆண்டுதோறும் நிதி ஆதாரங்கள் பெருகுகின்றன. ஆண்டுதோறும் மக்கள் தொகையின் வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணம் அதிகமான தொகையை நாம் நிதிநிலை அறிக்கையிலே காண்கிறோம். சென்ற ஆண்டைவிட 800 கோடி சொச்ச ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டு வளர்ந்திருக்கிறது. அந்த அளவிற்கு கல்விக்காக ஒதுக்கிடும் தொகையும் கூடியிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் தொகை கூடும்போது, கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையும் அந்த அளவிற்குக் கூடுகிறது. இந்த நேரத்திலே ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். செலவழிக்கப்படும் தொகைக்கு ஏற்றவாறு தரமான கல்வியை உருவாக்கித் தர முடிகிறதா என்பதை அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்று சொன்னார்கள். வெற்றிலை போடுகிற பெரியவர்கள், அந்த வெற்றிலை போடுவதால் ஏற்படும் சுவையையும், பயனையும் பெற வேண்டுமென்றால், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவை அளவோடு இருக்க வேண்டும், அளவோடு இருந்தால்தான் போடுகிறவர்களுக்குச் சுவையும் கிடைக்கும், பயனும் கிடைக்கும் என்று சொன்னார்கள். கல்வித் திட்டங்களை நிறைவேற்றும்போது, ஆசிரியர்கள், பொது மக்கள், அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவினரும் இணைந்து செயல்பட்டால்தான், அரசின் திட்டங்கள் வெற்றிகரமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம் திட்டங்களை நிறைவேற்றும்போது, ஆசிரியப் பெருமக்களுடைய பிரச்சினைகளை அணுகிப் பார்த்து, ஆவன செய்ய வேண்டும். இன்றையதினம் உள்ள கல்வி அமைச்சரவர்கள் காட்டும் பொறுமையால், பல பிரச்சினைகளாலே கல்வி பாதிக்கப்படும் சூழ்நிலையைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்றைய கல்வி அமைச்சரவர்கள், முன்னாலே சட்ட மன்ற உறுப்பினராக இருந்தபோது, வாதாடியிருக்கிறார்கள். அதையெல்லாம் தான் படித்துப் பார்த்தேன். அவர்கள் 'கான்கிரீட் ப்ரபோசல்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் விதி முறைகளாகக் கொண்டுவர வேண்டும். நிதிநிலை அரசுக்கு இடைஞ்சலாக இருக்கலாம் என்பதால், அவற்றைத் தள்ளிப் போடலாம். இருந்தாலும் நடைமுறையிலே ஆசிரியர்களின் வளர்ச்சிக்கு பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்துவது மட்டும் அவர்கள் நிலைமையை உயர்த்துவதாகாது. அவர்கள் தரத்தையும் உயர்த்த வேண்டும். இன்றைக்கு மேல்நிலைப் பள்ளிகளில் தரமான கல்வி கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் ஆசிரியர்கள் மனதிலே நிம்மதியும், தொழிலில் அமைதியும் ஏற்பட்டாக வேண்டும். பேச்சு வார்த்தையின்மூலம் பல்வேறு காரியங்களைச் செய்ய அரசு தயாராக இருக்க வேண்டும். ஆசிரியர் தொகுதியைச் சேர்ந்த பல்வேறு பிரதிநிதிகள் இந்த அவையிலே அங்கம் வகிக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவையிலே அங்கம் வகிக்காத பல பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள். பிரச்சினைகள் வரும்போது, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, பிரச்சினைகளைத் தீர்த்தால், அந்தத் துறையில் சிக்கல்கள் இல்லாமல் இருக்கும். அந்த முறையில் கல்வி அமைச்சரவர்கள் ஈடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தரமான கல்வி என்று குறிப்பிடும்போது, இன்றையதினம் மேல்நிலைப் பள்ளி வகுப்பிற்காக அமைத்திருக்கிற பாடத் திட்டங்கள் மிக அதிகமாக இருக்கின்றன என்று சொல்லாவிட்டாலும், வளர்ந்தோங்கி இருக்கின்றன

என்று சொல்ல விரும்புகிறேன். புதிய விஞ்ஞான வளர்ச்சி, கணித வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி போன்றவற்றுக்கு ஒத்த வண்ணம் நம்முடைய மாணவர்களின் அறிவு வளர்ச்சி விஸ்தரிக்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த நிலையில் மாணவர்களுக்கு அறிவைப் புகட்டக்கூடிய தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சி நிச்சயமாக வளர்ந்தாக வேண்டும். அவர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும். ஏற்கெனவே பட்டப் படிப்பு படித்தவர்கள்—என்னையும், கல்வி அமைச்சரவர்களையும் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம்—படித்த சிலபஸ் வேறு. இன்றைக்கு பி.ஏ. பட்டப் படிப்பிற்கு சிலபஸ் முற்றிலும் வேறு. இன்றைக்குள்ள ஆசிரியப் பெருமக்கள் மாணவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு, அந்தக் கோணத்தில் தங்களை 'எக்யிப்' செய்துகொள்ளும் அளவிற்கு கல்வியின் தரத்தை ஆசிரியர்களுக்கு உருவாக்கித் தர வேண்டும். மறு பயிற்சி என்று இப்போது அளிக்கிறோம். இன்றைக்கு அது நடைமுறையில் இருக்கிறது. அரசாங்கத்திடம் மறு பயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது. அதை விரிவாகச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பல்கலைக் கழகத்தோடும், கல்லூரியோடும் இணைந்து, குற்றாலம், கொடைக்கானல் போன்ற இடங்களிலே மறு பயிற்சியை அளிக்க வேண்டும். அவர்களுடைய சுகாதார நலனையும் பேணிக் காத்து, அவர்களுக்கு ஒரு ஈடுபாட்டையும் உண்டாக்கி, தரமான கல்வியைக் கொடுக்க 'ரெப்ரஷர் கோர்ஸ்' நடத்த வேண்டும். அதற்கான சிலபஸ் எக்ஸ்டென்சிவ்வாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு எவ்வளவு செலவிட்டாலும், கல்விக்காகச் செலவு செய்வதாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொகையை ஒரு

(பிற்பகல் 6.40)

முதலீடாகக் கருதி உடனடியாக அதிலிருந்து பயன் கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. அதுமாதிரி நாட்டிலுள்ள ஒவ்வொரு திட்டத்திலிருந்தும் உடனடியாக வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது. கல்விக்கு எவ்வளவு தொகை ஒதுக்குகிறோம், அதனால் என்ன பயன் கிடைக்கும் என்று கணக்குப் பார்க்கக்கூடிய மனப்பான்மை கண்டிப்பாக மாற வேண்டும். கல்விக்கு ஒதுக்குகிற தொகை எந்த நோக்கத்தோடு ஒதுக்கப்படுகிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். கல்வியைப் பொறுத்த வரையில், லாப நஷ்டக் கணக்கைப் பார்க்கக்கூடாது.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 ஏப்ரல் 9

அடுத்தபடியாக, மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, நானும் பல ஆண்டுகள் ஆசிரியராகவும் ஒரு ஆண்டு தலைமை ஆசிரியராகவும் இருந்தவன் என்கிற முறையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளிகளை இன்றையதினம் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறோம். சமுதாயத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களுக்கும் அந்தக் கல்வி வசதியை நாம் தந்தாக வேண்டும். 912 உயர்நிலைப் பள்ளிகள் மட்டும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இது போதாது. குறைந்தது ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிகளில் இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சில இடங்களில் இது விடுபட்டுப் போயிருக்கிறது. இப்படிப்பட்ட கல்வி முறையை நாம் அமுலுக்குக் கொண்டு வரும்போது, "குவாலிட்டி எஜுகேஷன்"ஐ உருவாக்க வேண்டும். குவான்டிட்டியை விட குவாலிட்டிக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் எல்லாம் மேல்நிலைக் கல்விக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்கிற இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைக்கேற்ப, இனிமேல் புகுமுக வகுப்புகள் இல்லை என்கிற நிலையில், அதற்கேற்ப கிராமங்களில் எல்லா இடங்களிலும் மேல்நிலைக் கல்வியைப் பரவலாகக் கொடுக்க வேண்டும். மறுபடியும் கல்லூரிக்குச் செல்வது போன்ற நிலைமை இல்லாமல், 5 மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள எல்லா இடங்களிலும் அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். தனியார் பள்ளிகளில் சில வசதிகள் இருப்பதால், அந்த வசதி அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி ஆசிரியர்களும் அங்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு அதனால் அந்த வசதி கிடைத்திருக்கிறது. கிராமப்புறங்களில் எந்தப்பகுதியிலும் 5 மைலுக்கு அப்பால் சென்று படிக்கக்கூடிய நிலை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே 5 மைல் சுற்று வட்டாரத்திற்குள்ளேயே மேல்நிலைப் பள்ளி வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கி விடுகிறோம். ஆனால் அதற்குக்கூட வசதி போதுமான அளவில் இல்லை. குறிப்பாக உயர்நிலைப் பள்ளிகள் போதுமான கட்டட வசதி இல்லாமல் இருந்தன. அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, போதுமான விஞ்ஞான உபகரண வசதிகள் இல்லாமல் இருந்தன. இன்றையதினம் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கப் போகிற மாணவர்கள் காலேஜ் 'அட்மோஸ்பியர்'ரில் படிக்கப் போகிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்த நியூ சிலபஸை, புதிய பாடத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும்போது உபகரணங்கள், விஞ்ஞானக் கூடங்கள், மைதானங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, மாணவர்கள் தயக்கமில்லாமல் ஆர்வத்துடன் படிக்க வாக்கூடிய நிலைமையை

1979 ஏப்ரல் 9] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

ஏற்படுத்த, நாம் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அதிகத் தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரை, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித் துறைச் செயலர் அவர்களும் சில காரியங்களை சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் பல அதிகாரிகளைப் பொறுத்தவரையும், அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். "டைனமிக் ஸ்டெப்" என்கிற முறையில், புதிய முறையில் அவர்கள் சிறப்பாக சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனாலும் எனக்கு ஒரு மனக்குறை நீண்டகாலமாக இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படுகிற கல்லூரிகளில் கல்வியின் தரம் சரியாக இல்லை என்கிற நிலை பரவி வருகிறது. உதாரணத்திற்கு ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். மதுரையில் பெண்களுக்கென 3 கல்லூரிகள் இருக்கின்றன. அதில் பாத்திமா கல்லூரிதான் முதலிடம் வகிக்கிறது. லேடி டோக் கல்லூரி இரண்டாவது இடம் வகிக்கிறது. மூன்றாவது மீனாட்சிக் கல்லூரி வருகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை முதலாவது பாத்திமா கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்று துடிக்கிறார்கள். இரண்டாவது சாய்சாக லேடி டோக் கல்லூரியில் சேர்க்கத் துடிக்கிறார்கள். கடைசியில் தான் மீனாட்சிக் கல்லூரிக்கு வருகிறார்கள். ஆக முதல் ரேங்க் பாத்திமா கல்லூரிக்கும், இரண்டாவது ரேங்க் லேடி டோக் கல்லூரிக்கும் மூன்றாவது ரேங்க் மீனாட்சி அரசுக் கல்லூரிக்கும் வருகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அரசுக் கல்லூரிகளுக்கு அனுப்பத் தயங்குகிறார்கள். மீனாட்சிக் கல்லூரியில் காலாண்டு, அரையாண்டு தேர்வு நடைபெற்றது. பி.யு.சி. மாணவிகளுக்கான கேள்வித் தாள்களை அவர்களே டிக்டேட் செய்திருக்கிறார்கள். மேலும் அந்தக் கல்லூரியில் ஒரு சைக்ளோஸ்டைல் மிஷின் கூட இல்லை. அந்தக் கல்லூரியிலே பி.யு.சி. மாணவிகளுக்கான கேள்வித் தாள்களைத் தயாரிக்கிறபோது, மாணவிகளை வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்ட பேராசிரியரும் உதவிப் பேராசிரியரும் டிக்டேட் செய்வது, அதற்குப் பிறகு ஆன்சர் பேப்பரைத் தயாரிப்பது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. கோடிக்கணக்கான பணத்தை அரசுக் கல்லூரிகளுக்காக நம்முடைய அரசு செலவு செய்தும் கூட, பெற்றோர்கள் பாத்திமா கல்லூரியின் சிறப்பை அரசுக் கல்லூரியின் சிறப்புடன் 'கம்பேர்' பண்ணித்தான் பிள்ளைகளை அனுப்புகின்ற நிலை இருக்கிறது. சைக்ளோஸ்டைல் மெஷின் ரிப்பேர் ஆகிவிட்டது என்றால், உடனே கல்லூரியில் அதற்குப் பொறுப்பானவர்கள் அதைச் சரி செய்திருக்க வேண்டும். அதைக்கூட சரி செய்யாத நிலை இருக்கிறது. மேலும் அரசாங்கக் கல்லூரிகளில் பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களை அடிக்கடி மாற்றுகின்ற நிலை இருக்கிறது என்று

சொல்லுகிறார்கள். அவர்கள் அரசாங்கக் கல்லூரிகளில் பணியாற்ற முன் வராத நிலையும் இருக்கிறது. இவையெல்லாம் அரசாங்கக் கல்லூரிகளில் கல்வியின் தரம் குறைவதற்கான காரணங்கள். இந்த நிலைமைகளை யெல்லாம் இந்த அரசு மாற்றியமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எனக்குக் கிடைத்த ஒரு தகவலை நான் சொல்ல விரும்புகிறேன். குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேச வேண்டும். விரைவில் சுருக்கமாகப் பேசி அமர வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கல்வி இயக்குநர் அவர்கள் பச்சையப்பா டிரஸ்டில் நடைபெற்ற தேர்தலை முன்னிட்டு தனிப்பட்ட ஒருவருக்கு ஓட்டு அளிக்க வேண்டுமென்று சொல்லியதால், அதுபற்றி கவர்னரிடம் கூட சொல்ல வேண்டிய நிலை வந்திருக்கிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட நிலைமை களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு ஆதரிப்பதில்லை. குறிப்பிட்டு புகார்கள் வருமானால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். ஆதாரம் இல்லாத நிலையில் அதைப்பற்றி ஒன்றும் செய்ய முடியாது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அடுத்தபடியாக, பொது நூலகங்களைப் பொறுத்தவரை, நாடு பூராவும் ஏராளமான பொது நூலகங்களை உண்டாக்கி யிருக்கிறோம். நூலகங்களில் பணிபுரிகின்ற நூலகர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் அவர்களுடைய பிரச்சினைபற்றி இந்த அவையிலே வினாக்கள் எழுப்பப் படுகின்றன. பலதடவை சொல்லியிருக்கிறோம். 250 கோடி ரூபாய் கல்வித் துறைக்கு என்று ஒதுக்கீடு செய்யும்போது, நூலகங்களுக்கென்று தனியாக பட்ஜெட்டில் இத்தனை கோடி ரூபாய் என்று ஒதுக்கினால், மிகவும் நல்லது என்பது என்னுடைய கருத்து. ஒன்றியங்கள் போன்றவைகளிலிருந்து வரக் கூடிய பணத்தை முன்கூட்டி செலவிட்டு, பிறகு நகராட்சிகளின் தலைப்பின் கீழ் அதைக் கட்டாயமாக வசூலிக்கலாம். நாடு பூராவும் உள்ள நூலகங்களில் பணியாற்றுகின்ற நூலகர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லாத நிலை

இருக்கிறது. மற்ற துறைகளில் இருக்கின்றவர்களுக்கு அரசாங்கத்தினுடைய எல்லாச் சலுகைகளும், பென்ஷன், கிராஜுவிட்டி போன்ற சலுகைகளும் கிடைக்கின்றன. ஆனால் நூலகங்களில் பணிபுரிபவர்களுக்கு மட்டும் அந்தச் சலுகைகள் கிடைப்பதில்லை. ஆகவே நூலகர்களுக்கும் அரசாங்கத்தின் எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டும். இதை அரசு கனிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநிலம் பூராவும் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கில் பணியாற்றுகிறார்கள். ஹையர் கிரேடு ஆசிரியராக 10 ஆண்டு காலம் பணி புரிந்தவர்களுக்கு செகண்டரி கிரேடு பணியிடங்களை உருவாக்கித் தர வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக் கிறார்கள். அதையும் அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜீவாதாரப் பிரச்சினையாக இருப்பது மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை விற்பதில் ஏற்படுகின்ற தவறுகள் ஆகும். தென் மாவட்டங்களில் குறிப்பாக மதுரையில் சிறு உற்பத்தியாளர்களுக்கு பேப்பர்கள் சரியாகக் கிடைப்பதில்லை. பேப்பர் வழங்குவதைப் பொறுத்த வரை, ஒரு திட்டவட்டமான முறையை அரசு வகுத்து, அதைப் பின் பற்றலாம். மத்திய அரசு பேப்பரை ஒதுக்குகிறது. பெரிய பெரிய உற்பத்தி யாளர்கள், அசோசியேஷன் வைத்திருப்பவர்கள் எல்லாம் 400 டன், 500 டன் பேப்பர் வாங்குகிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறிய தொழில்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்று அறிவித்திருக் கிறார்கள். ஆனால் சிறிய உற்பத்தியாளர்களுக்குத் தேவையான 5 டன், 10 டன் பேப்பர்கள் கூட சரியாகக் கிடைப்பதில்லை. பெரிய உற்பத்தி யாளர்கள் அவற்றைக் கேரளாவுக்குக் கடத்திக்கொண்டு போய்விடுகிறார்கள். இதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குப் போகிறவர்களுக்கு, கட்டணத்தைப் பொறுத்தவரை, கல்வியைப் பொறுத்தவரை, நூற்றுக்கு 75 பேருக்கு நம்முடைய அரசு கன்செஷன் கொடுக்கிறது. 10ஆம் வகுப்பு வரை கேரளாவில் கன்செஷன் என்று அறிவித்து விட்டார்கள். அதை இந்த அரசும் செய்தால் "பார்வார்ட் கம்யூனிட்டீஸ்"ம் சேர்ந்து அந்த நன்மையை அனுபவிக்க முடியும். அதை அவசியம் அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 6-50)

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: HON. Deputy Chairman, I am indeed very happy to speak on the Policy Note on Education. Before I proceed, I would like to congratulate the Hon. the Education Minister and the previous speaker who mentioned about dynamism in planning. We are indeed very happy that in the Revenue Account, 25 per cent has been set aside for Education.

While going through the Report, I found that the same problem was there in the matter of enrolment of girls at the levels of the primary school and the high school. Some years back, there was a National Commitee on Women's Education at the all-India level appointed by the Government of India. I am not sure whether the same committee is in existence now. At the State level there was a Education Committee with the Education Minister as the Chairman and the Director of School Education as the Secretary. A number of women-educationists servel on that Committee. But, for some time, we have not heard about such a Committee being in existence. If that Committee is not functioning, I feel that it is very necessary that we should revive the Committee on Education at the State level because we find that the enrolment of girls is still 50 per cent behind the enrolment of boys. If the Committee is there, we can have seminars and we can press on the Department and the Government to pay more attention to women's education and the enrolment of girls. Therefore, I hope that this Committee will be revived.

Regarding the maintenance grant to the elementary schools, it was previously given at 12 per cent and when the salaries were increased, it was fixed at 6 per cent. But this year, we have not heard at what percentage the maintenance grant would be given to the elementary schools. I would be happy if the maintenance grant is increased because we would like to see an improvement in the standard of these aided institutions.

I went through the Report on Higher Secondary Education. It has been a very encouraging Report since the Education Minister of the Government of India himself has paid compliments to the system of Higher Secondary education in Tamil Nadu. I have just to make a suggestion in this regard. With

the introduction of Higher Secondary Schools, we need a number of qualified teachers. Especially, we find that Science teachers are not easily available. When we want to send them for further studies with a view to upgrading their standards, we find that there are hardly two or three colleges in Madras City which hold evening classes in science subjects and that the seats available are very limited. With the abolition of P.U.C., I hope that a number of college teachers would be available to coach up these school teachers. I would, therefore, suggest that more colleges should be brought under the evening college system and that facilities should be made available for the coaching of these school teachers in science subjects.

Both the Hon. the Education Minister and the Hon. the Labour Minister are here and I would like to mention about a G.O. that has been passed in October 1978. That G.O. relating to permanent employment of teachers who have passed before 1973 is most welcome because there are teachers who are without jobs for 10 or 15 or 20 years. But, so far as temporary vacancies are concerned, this G.O. has caused a great handicap. By the time we get the list from the Employment Exchange to fill up a leave vacancy and call candidates for interview, the leave vacancy ceases to exist. In that case, we are unable to help the teachers who have passed before 1973 and those who are without employment. As a result, nobody would be benefited and the children also would suffer. Therefore, I would like a relaxation of this G.O. in its applicability to temporary vacancies so that we would be able to have a continuity in coaching in the schools and thus prevent any sufferings to the children.

In the vocational stream, I know, the opinion of our Hon. Education Minister is—when even some time back there was a mention—that there is overload in Higher Secondary Classes. I would like to make a suggestion regarding the vocational stream. We find that these students who have taken the vocational stream have to do their first, second and third parts and they have also to get a lot of practical experience and especially those who take subjects like nursing have a lot of hospital work to do. The workload for these students is too much and if there is a little relaxation in the syllabus, they would be able to get more practical experience and in a better way and there would not be overloading.

I would like to plead on behalf of the teaching community that the teachers who are in Government service have the facility of getting loans for housing. It would be well if the aided institutions are given loans so that they may either build houses for their teachers or the teachers may be able to find some area or plots where they would like to build their own houses. This facility could be extended and I think the Managements could be held responsible for its collection and repayment.

I would like to mention about orphanages—since the orphanages appear to come within the Education Department—and I am sorry to say that the amount that has been allotted for the year 1979-80 has increased only by a few thousands. We have seen in the report itself that there are 375 orphanages looking after 60,000 children. I would like to plead on behalf of these orphanages that a little increase in the grant would be most welcome. I know there is financial stringency but the prices are going up and it is very difficult for these orphanages to run their homes. In the interests of the children and in the International Year of the Child, I would like to make an appeal that some little concession might be shown to these orphanages. With these words, I convey my thanks to the Deputy Chairman for the opportunity given and I hope that we will be able to achieve very much educationally in this year when the Budget has been very liberal.

MR. DEPUTY CHAIRMAN : The House will now **adjourn and meet again at 10 a.m. on 11th April 1979.**

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-07)

8. அவை முன் வைக்கப்பட்டஏடுகள்.

A. Statutory Rules and Orders.

122. Fourth Annual Report of the Poompuhar Shipping Corporation Limited for the year 1978. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

123. Sixth Annual Report and Accounts of the Anna Transport Corporation Limited for the year 1978. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

124. Seventh Annual Report of the Cholan Roadways Corporation Limited for the year 1978. (Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

125. Seventh Annual Report of the Pandiyan Roadways Corporation Limited for the year 1978. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

126. Notification issued in G.O. Ms. No. 70, Commercial Taxes and Religious Endowments, dated the 25th January 1979 in regard to the inclusion of the branches of the Bank of Cochin Limited, situated within the State of Tamil Nadu, as approved banks for the purposes of the Tamil Nadu Chit Funds Act, 1961. [Laid on the table of the House under section 63 (4) of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961).]

127. Notification issued in Memorandum No. 67275-II (2)/78-2, Commercial Taxes and Religious Endowments, dated the 19th February 1979 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II (1)/CTRE/105/78, dated the 26th July 1978, published at page 104 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th September 1978. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

128. Notification issued in G.O. Ms. No. 164, Rural Development and Local Administration, dated the 31st January 1979 in regard to an amendment to the Conduct of Election of Madurai Corporation Councillors Rules, 1972. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

129. Notification issued in G.O. Ms. No. 1539, Industries, dated the 29th November 1978 in regard to the framing of the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1978. [Laid on the table of the House under section 3 (6) of the Essential Commodities Act, 1955 (Central Act 10 of 1955).]

B. Reports, Notifications and other Papers.

* 74. Policy Note on Education (Tamil and English).

* 75. Booklet on Higher Secondary Education in Tamil Nadu, March 1979 (Tamil and English).

* 76. Performance Budgets on School Education, Collegiate Education and Technical Education for 1979–80. (English).

& 77. Demand No. 6—Policy Note on Registration Department. (Tamil and English).

& 78. Policy Note on Urban Development, 1979–80. (Tamil and English).

& 79. A Review on the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year 1978–79. (Tamil and English).

& 80. A Review on the Tamil Nadu State Farms Corporation Limited for the year 1978–79 (Tamil and English).

& 81. Eighth Report of the Committee on Estimates, 1977–79 on the action taken by the Government on the recommendations contained in the Report of the Committee on Estimates on Hospital and Dispensaries. (Tamil).

& 82. Sixth Report of the Committee on Public Undertakings on the paragraphs relating to Veeranam Project for supply of water to Madras City and other water supply schemes of the

* Sent by post to all M.L.Cs. on 31-3-1979.

Tamil Nadu Water Supply and Drainage Board in the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1973–74. (Tamil).

& 83. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board, for the year 1979–80 (Tamil and English).

& 84. Sixth Report of the Committee on Public Accounts on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1973–74 (Tamil).

& 85. Policy Note on Handlooms and Textiles for 1979–80. (Tamil and English).

& 86. Performance Budget on Handlooms and Textiles for 1979–80. (Tamil and English).

& 87. Demand No. 32—Policy Note on Backward Classes Department, 1979–80, (Tamil and English).

& 88. Demand No. 32 — Annexure to Policy Note on Backward Classes Department, 1979–80. (Tamil and English).

& 89. Performance Budget on Backward Classes Department, 1979–80. (English).

& 90. Policy Note on Cinchona Department, 1979–80. (Tamil and English).

& 91. Performance Budget on Cinchona Department, 1979–80. (English).

& 92. Commercial Budget on Cinchona Department, 1979–80 (English).

& 93. A Review of the activities of the Tamil Nadu Poultry Development Corporation Limited for the year 1978–79. (Tamil and English).

& 94. Policy Note on Information, Tourism and Film Technology 1979–80. (Tamil and English).

& 95. Policy Note on Harijan and Tribal Welfare Department, 1979–80. (Tamil and English).

& 96. Annexures to Policy Note on Harijan and Tribal Welfare Department, 1979–80. (Tamil and English).

& 97. Performance Budget on Harijan and Tribal Welfare Department, 1979–80. (English).

& 98. Policy Note on Leprosy Beggers Rehabilitation Programme, 1979–80. (Tamil and English).

& 99. Performance Budget on Irrigation and Ground Water, 1979–80. (Tamil and English).

& 100. Fourth Report of the Committee on Delegated Legislation. (English).

& 101. Policy Note on Department of Correctional Administration 1979–80. (Tamil and English).

& 102. Eighth Report of the Committee on Public Undertakings on the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1973–74. (Tamil).

& 103. Seventh Report of the Committee on Public Undertaking on the Report (Commercial) of the Comptroller and Auditor-General of India for the year 1973-74. (Tamil).

& 104. Policy Note on Animal Husbandry, 1979–80. (Tamil and English).

& 105. Performance Budget on Animal Husbandry Department, 1979–80. (Tamil and English).

& 106. Supplement to Demand No. 19—Sewerage and Water Supply, 1979–80. (Tamil and English).

& 107. Demand No. 4 — General Sales Tax and Other Taxes and Duties. (Tamil and English).

& 108. A Review of the activities of Home (Prohibition and Excise Department during 1978–79. (Tamil and English).

& 109. Ninth Report of the Committee on Public Undertakings on the points pertaining to the Tamil Nadu Electricity Board in the Report (Commercial) of the Comptroller and Auditor-General of India for 1972-73. (Tamil).

& 110. Policy Note on Forest Department, 1979-80. (Tamil and English).

& 111. Performance Budget on Forests, 1979–80. (English).

& Circulated to all M.L.Cs. on 7–4–1979.

[1979 ஏப்ரல் 9

இணைப்பு I.

[44 ஆம் பக்கத்தில் இனம் 6 (1) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் தனியாரால் நடத்தப்பட்டு வரும் அன்னா நடுநிலைப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இரண்டாண்டுகளுக்கு முன்பு இருந்தே தகராறுகள் இருந்து வந்துள்ளன. பள்ளி நிர்வாகத்தின் மீது, பல ஊழல் புகார்கள், ஆசிரியர்கள் கூறியதன் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இறுதி யாக ஆணைகள் முதன்மைக் கல்வி அலுவலரால் வெளியிடப்படவிருக்கின்றன. 7—2—1979 அன்று பள்ளித் துணை ஆய்வாளர் அப்பள்ளிக்குச் சென்று புகார்கள் குறித்து விசாரித்துக் கொண்டிருக்கும்போது அப்பள்ளியின் நிர்வாகியின் மனைவியும், அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களில் ஒருவருமான திருமதி ராஜம்மாள் என்பவர் அப்பள்ளியின் மற்றொரு ஆசிரியரான திரு. மரியஞாயிசை கத்தியால் குத்த முயன்றதாகவும், ஆனால் அருகிலிருந்த பள்ளி நிர்வாகியின் தம்பி அல்போன்ஸ் என்பவரும், நிர்வாகியின் மகன் துரைராஜ் என்பவரும் அவரைத் தடுத்து நிறுத்தினர் என்றும் கூறப்படுகிறது. திருவாளர் அல்போன்ஸ் என்பவரும், துரைராஜ் என்பவரும் இப்பள்ளியில் ஆசிரியர்களாக பணியாற்றி வருபவர்கள். 12—2—1979 அன்று இரவு குருஸ்மணி என்ற ஆசிரியர் டவுன் பஸ்ஸிலிருந்து இறங்கி செல்லும் பொழுது அல்போன்ஸ் ஜேம்ஸ், துரைராஜ் ஆகிய இருவரும் குருஸ்மணியின் கை, வாயை மடக்கி பிடித்தும், கழுத்தை நெறித்துக் கொண்டிருந்தார்களென்றும், அப்பொழுது அடையாளம் தெரியாத இருவர் வந்து ஒருவர் குருஸ்மணியை தடியால் தாக்கியதாகவும், மற்றொருவர் அரிவாளால் வெட்டியும் கொலை செய்ய முயற்சித்தனர் என்றும் புகார் கொடுத்ததின் பேரில் திரு. அல்போன்ஸ், திரு. துரைராஜ் என்பவர்களை கைது செய்து, பின்னர் நிபந்தனைகளுடன் ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டார்கள். இது குறித்து தென்காசி ஜுடிசியல் சப் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டுள்ளது. இது குறித்து ஆலங்குளம் இன்ஸ் பெக்டர் விசாரித்து வருகிறார். இதுபற்றி செய்தித் தாள்களில் செய்திகள் வெளி வந்துள்ளன. அவ்வாறிருக்க திரு. அல்போன்ஸ் அவர்களுக்கு 13—2—1979, 14—2—1979, 15—2—1979-ல் பள்ளியில் சிறுவிடுப்பு அளித்து உள்ளதாகத் தெரிய வருகிறது. இப்பள்ளியில் கைத்தொழில் ஆசிரியராகப் பணியாற்றும் திருவாளர் துரைராஜ் அவர்களது 6, 7, 8-ம் வகுப்புச் சான்றிதழ்கள் உண்மையானதல்லவென 13—9—1978 முதல் பள்ளிக் கல்வி இயக்குநரால் ஓராண்டு காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது மேற்சொன்ன சூழ்நிலைகளின் காரணமாக, பயம் கொண்டு 19 ஆசிரியர்களில்,

1979 ஏப்ரல் 9]

16 ஆசிரியர்களும் சுமார் 150 மாணவர்களும் பள்ளிக்குச் செல்வதில்லை என்று அறிந்து நடுநெல்லை மாவட்டக் கல்வி அதிகாரியை அப்பள்ளிக்குச் சென்று பார்வையிடும்படி முதன்மைக் கல்வி அதிகாரியால் கேட்டுக்கொள்ளப் பட்டது. அவ்வாறு மாவட்டக் கல்வி அதிகாரி 21—2—1979 அன்று பார்வையிட சென்றபோது அங்கு வகுப்பில் தலைமை ஆசிரியர் இல்லை. பள்ளியில் நான்கு வகுப்புகளில், பல வகுப்புகளைச் சார்ந்த சுமார் 214 மாணவர்கள் இருந்தனர். இவ்வகுப்புகளை, திரு. அல்போன்ஸ் ஜேம்ஸ் மற்றும் துரைராஜ் என்ற ஆசிரியர்களும், திருமதி டெய்ஸி ராஜம்மாள் என்ற ஆசிரியையும் கவனித்துக் கொண்டிருந்தனர். இப்பள்ளி 7—2—1979 முதல் சரியாக இயங்கவில்லை. இப்பள்ளியில் மாணவ மாணவிகளின் பதிவு எண் 606-ம் 7—2—1979-க்கு முன்னர் மகணவ மாணவிகளின் வருகை 407 ஆகவும் இருந்துள்ளது. இந்த பள்ளியில் பணி புரியும் ஆசிரிய ஆசிரியைகள் சுமார் 14 பேர் பள்ளிக்குச் செல்லாமல் அருகாமையிலுள்ள கோயிலில் 22—2—1979 அன்று செல்வதாக இருந்தபோது, பள்ளி நிர்வாகியின் செல்லுகையில் இருந்தனர். அந்தந்த ஆசிரியர்களின் நிலைமை குறித்து வாக்குமூலங்களைக் கேட்டதற்கு இணங்க, அவர்கள் தந்துள்ளனர். மாவட்டக் கல்வி அதிகாரி ஆய்வாளருடன் பல தடவை பள்ளியைப் பார்வை யிட்டு நிர்வாகியும் தலைமை ஆசிரியருமான திரு. அன்னாசாமியையும், ஆசிரியர்களையும், ஊர்ப்பொது மக்களையும் சந்தித்து சுமுகமான சூழ் நிலையை உண்டாக்கி, ஊர்மக்கள் செய்த முயற்சியால் ஆசிரியர்கள் பள்ளிக்கு 21—2—1979 அன்று மாவட்டக் கல்வி அதிகாரி, அப்பள்ளிக்கு விசாரிக்கச் மனைவி, புளியங்குடி ஆசிரியர் கூட்டணியில் குறிப்பாக ஆசிரியைகளின் மனம் புண்படும்படி பேசியதன் விளைவாக, ஆசிரியர்களின் உயிருக்குப் பாது காப்பு இருக்காது எனக்கூறி பள்ளிக்கு ஆசிரியர்கள் செல்ல மறுக்கின்றனர். தற்போது இப்பள்ளிக்கு காவல்துறையினரால் பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளது. மேலும் பள்ளி நிர்வாகி, ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்து பணி யாற்ற இசைவு தெரிவித்துள்ளார். ஆனால் ஆசிரியர்கள் இப்பள்ளியின் அங்கிகாரத்தை திரும்பப் பெற வேண்டும் என்றும், இப்பள்ளியை ஊராட்சி ஒன்றியம் எடுத்து நடத்த வேண்டும் என கோரியுள்ளார்கள். தமிழ்நாடு அங்கிகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் வரன்முறைப்படுத்தும் சட்டம் 1973, மற்றும் விதிகள் 1974-ல் முறைகேடாக நடக்கும் பள்ளிகளின் அங்கிகாரத்தைத் திரும்பப் பெறவும் பள்ளிகளை அரசே எடுத்து நடத்த வழிவகை செய்யப் பட்டுள்ளது. ஆனால் தற்பொழுதுள்ள சூழ்நிலையில் பள்ளியின் அங்கி காரதை ரத்து செய்வதற்கு போதிய காரணங்களில்லை. பள்ளி நிர்வாகி சிறுபான்மையினரின் பள்ளியென இப்பள்ளியை அறிவிக்கக் கோரி நீதி மன்றத்தில் முறையிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்பள்ளியில் 15 ஆசிரியர்கள் இந்நிர்வாகத்தின் கீழ் பணி புரிய மறுப்பதாலும், மேலும் மேற்

[1979 எப்ரல் 9

சொன்ன காரணங்களினாலும், மாணவர்கள் வருகை குறைவு ஏற்பட்டு உள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள 15 ஆசிரியர்களை வேறு பள்ளிக்கு அவர்களின் பணியிடங்களுடன் மாற்றி விடும்படி நடுநெல்லை மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தக்க அறிவுரைகள் திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது.

இணைப்பு II

(48-ம் பக்கத்தில் இனம் 7-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தோற்றுவாய்.

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்.

நிதி நிலை அறிக்கையில் கல்விக்கான நிதி ஒதுக்கம் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. கல்விக்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 209 கோடி ("மானியக் கோரிக்கை 17-கல்வி"-யின் கீழ்) நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை 1979-80-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 849 கோடியில் 25 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின்கீழ் 1975-76-ல் ரூபாய் 123 கோடியும், 1976-77-ல் ரூபாய் 143 கோடியும், 1977-78-ல் ரூபாய் 163 கோடியும், செலவாயின. 1979-80-க்கான திருத்த மதிப்பீடு ரூபாய் 191 கோடியாகும். கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்துகொண்டே வருவதை இது காட்டும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1979-80 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் பின்வருமாறு:—

1979—80 வரவு—செலவு மதிப்பீடு.

	திட்டமல்லாத செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு.	50	..	50

1979 எப்ரல் 9]

1979—80 வரவு—செலவு மதிப்பீடு.

	திட்டமல்லாத செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
277. கல்வி—			
1 தொடக்கக் கல்வி.	100,89	73	101,62
2 உயர்நிலைப் பள்ளிக் கல்வி.	57,37	53	57.90
3 மேல்நிலைப் பள்ளிக் கல்வி.	6,80	8,37	15,17
4 கல்லூரிக் கல்வி ..	19,62	88	20,50
5 சிறப்புக் கல்வி ..	59	55	1,14
6 தேசிய மாணவர் படை, விளையாட்டு முதலியவை,	1,56	40	1,96
7 பிற இனங்கள் ..	1	..	1
8 தொழில் நுட்பக் கல்வி.	5,99	97	6,96
மொத்தம்—277. கல்வி..	1,92,83	12,43	2,05,26
278. கலை, பண்பாடு.	25	16	41
தொல்பொருள் ஆராய்ச்சி.	10	6	16
ஆவணக் காப்பகமும் அரும் பொருட்காட்சி சாலைகளும்.	30	1	31
பொது நூலகங்கள் ..	1,33	2	1,35
	1,98	25	2,23

1979–80 வரவு-செலவு மதிப்பீடு

	திட்டமல்லாத செலவினம்.	திட்ட செலவினம்.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
288. சமூகப் பாதுகாப்பும் நலனும் (ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன).	51	1	52
பலவகை	2	..	2
மொத்தம் மானியக் கோரிக்கை 17—கல்வி.	1,95,84	12,69	2.08,53

3. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1979-80-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு:—

	திட்டத்தின் கீழ் வராத செலவு.	திட்டச் செலவு.	மொத்தம்.
பொதுக் கல்வி.			
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(அ) வருவாய்க் கணக்கில் செலவு—			
314: சமுதாய வளர்ச்சிப் பணிகள் — ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள்.	..	100	100
சமூகக் கல்வி ..	..	8	8
மானியக் கோரிக்கை 37—			
பொதுப் பணி—			
அரசுப் பள்ளிக் கட்டிடங்கள்.	4	10	14
266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.	657	..	657

பொதுக் கல்வி.—தொடர்ச்சி.

(1)	திட்டத்தின் கீழ் வராத செலவு. (2)	திட்டச் செலவு. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு—			
459. மூலதனச் செலவு—அலுவலகக் கட்டடங்கள்.	..	1	1
477. மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள்.	..	4,70	4,70
483. வீட்டு வசதிக்கான மூலதனச் செலவு.	..	2	2
767. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்.	1	..	1
677. தேசீய கடன், படிப்புதவி தொகைகள்.	40	..	40
மொத்தம்— பொதுக் கல்வி.	7,02	5,91	12,93

தொழில் நுட்பக் கல்வி.

477. அரசுத் தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு.	4	20	24
677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள்.	9	..	9
தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன்	..	6	6
மொத்தம்—தொழிற் கல்வி.	13	26	39
மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும்.	7,15	6,17	13,32

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கிற் கொண்டால் 1979-80-ல் கல்விக்காக செலவிடப்படும் தொகை ரூபாய் 222 கோடியாகும்.

4. (i) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், தாழ்த்தப்பட்டோர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூபாய் 30 கோடியாகும்.

(ii) மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் தனித்தனியாக ஒதுக்கியுள்ள நிதி மொத்தம் சுமார் ரூபாய் 12 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கு ஆகும் செலவையும் (ரூபாய் 30 கோடியும், ரூபாய் 12 கோடியும்) கணக்கில் கொண்டால், 1979-80-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூபாய் 264 கோடியாக இருக்கும்.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277—கல்வி; 477—கல்வி மூலதனச் செலவு; 677—கடன் முதலியன) கல்விக்காக 1979-80 ஆம் ஆண்டில் செய்யப்பட இருக்கும் திட்டப் பணிகளின் செலவு விவரம் வருமாறு: (கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்).

	1979—80—ல் பொறுப் பேற்ற செலவினம்.	புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செல வினங்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்).		
பொதுக் கல்வி—			
1 பள்ளிக் கல்வி ..	64 +14	1,31	1,95 +14
2 மேல் நிலைப் பள்ளிக் கல்வி.	7,21	4,35	11,56
3 கல்லூரிக் கல்வி ..	83 +1,04	36	1,19 +1,04
4 கட்டட வகையில் பொதுப்பணித் துறைச் செலவு.	65		65
	9,33 +118	6,02	15.35 +118

தொழில் நுட்பக் கல்வி..	54 +33	38	92 +33
சத்துணவு — நண்பகல் உணவு.	..	10	10
கலைப் பணிகள் ..	21 +3	14	35 +3
பெரு மொத்தம் ..	10,08 +154	6,64	16,72 +154

மாநிலக் கல்வி ஆலோசனைக் குழு.

6. 1958-66 ஆம் ஆண்டுகளில் கல்வி பற்றி அரசுக்கு ஆலோசனை கூற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று செயல்பட்டு வந்தது. அக்குழுவைப் புதுப்பிக்க முடிவு செய்து அரசு அண்மையில் "மாநில கல்வி ஆலோசனைக் குழு"-வை மீண்டும் அமைத்துள்ளது. அக்குழுவின் தலைவர் கல்வி அமைச்சர், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 15 பேர்களும் மேலவை உறுப்பினர்கள் 9 பேர்களும் ஆக 24 பேர்கள் உறுப்பினர்களாவர். குழுவின் முதல் கூட்டம் விரைவில் கூட்டப்படும். கல்விக் கொள்கைபற்றிய அனைத்து விஷயங்கள் பற்றியும் அக்குழு அரசுக்கு ஆலோசனை கூறும்.

II. பள்ளிக் கல்வி.

(i) பொது.

1. கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1979-80 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 209 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகை சுமார் ரூபாய் 160 கோடியாகும். 1—8—1978 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் மொத்தம் 36,238 பள்ளிகள் இருந்தன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 27,425; உயர் தொடக்கப் பள்ளிகள் 5,705; உயர் நிலைப் பள்ளிகள் 3,108 (912 மேல்நிலைப் பள்ளிகள் உட்பட). அனைத்துப் பள்ளிகளிலும் பணி செய்து வந்த ஆசிரியர்கள் எண்ணிக்கை 2½ இலட்சம். பயின்று வந்த மாணவர்கள் எண்ணிக்கை 85.43 இலட்சம் (மேல்நிலைப் பள்ளி முதல் வகுப்பில் பயின்றுவந்த 1.14 இலட்சம் மாணவர்கள் உட்பட). இந்த 36,238 பள்ளிகள் மற்றும் வேறு சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றின் நிருவாக வாரி விவரங்கள், ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றை இணைப்பில் காணலாம்.

2. 1978-79-ல் 6—11, 11—14, 14—17 வயதுத் தொகுதியினருள் முறையே 94 சதவிதம், 58 சதவிதம், 30 சதவிதம் சிறுவர் சிறுமியர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இருந்தனர். விரிவான விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

3. 1979-80 ஆம் ஆண்டில் (6—11, மற்றும் 11—14 வயதுத் தொகுதிகளுக்காக) 1,000 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், (உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர் நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து) 200 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகளும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி தரப் பதவிகளும் ஏற்படுத்தப்படும். உயர் தொடக்கப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படும். (மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஏற்படுத்தப்படும் கூடுதல் பதவிகளின் விவரம் பின் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது).

4. ஆசிரியர்களோடு கல்வித்துறை நல்ல தொடர்பு வைத்திருக்க வகை செய்து "தமிழ் நாட்டில் கல்வி" என்னும் பெயரில் காலாண்டு இதழ் ஒன்றை வெளியிட அரசு ஏற்பளித்துள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் தலைமையில் உள்ள ஆசிரியர் குழு ஒன்று அதை வெளியிடும். அதன் முதல் இதழ் விரைவில் வெளிவரும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

5. பள்ளிகளில் உள்ள வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்கள் முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் (1978 செப்டம்பர் முடிய) பள்ளி சீரமைப்பு மாநாடுகள் 578 நடந்துள்ளன. பொதுமக்களிடமிருந்து ரூபாய் 14.32 கோடி மதிப்புள்ள பொருட்கள் பெறப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது அறிவியல்—நூல் நிலைய மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு 1978 செப்டம்பர் வரை ரூபாய் 3.03 கோடி செலவில் 41.22 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் துறை நிருவாகம்.

6. தற்பொழுது தலைமைக் கல்வி அலுவலர்கள் 12; மாவட்டக் கல்வி அலுவலர்கள் 48 ஆகியோர் உள்ளனர். பள்ளித் துணை ஆய்வாளர்கள் சரகங்கள் 396 உள்ளன. கல்வித் துறை நிருவாகத்தை மேம்படுத்தும்

நோக்கத்துடன் 1979-80 ஆம் ஆண்டில் மேலும் ஒரு தலைமைக் கல்வி அலுவலர் பதவி (தருமபுரி மாவட்டத்துக்கு); மேலும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி (சென்னைக்கு); மேலும் 15 பள்ளித் துணை ஆய்வாளர் பதவிகள் ஆகியவை புதியதாக ஏற்படுத்தப்படும்.

12/1984

(ii) தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்க்கை.

1. 6—11 வயதுத் தொகுதிச் சிறுவர்களில் 94 விழுக்காட்டினரும், 11—14 வயது தொகுதிச் சிறுவரில் 58 விழுக்காட்டினரும், இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விரு வயதுத் தொகுதிகளின் கீழ் 197[illegible] ஆம் ஆண்டில் 3.21 இலட்சம் மாணவ மாணவியரும், 1978-79-ல் 1.93 இலட்சம் பேரும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். 1978-79 ஆம் ஆண்டில் இருந்த 33,130 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 67.46 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,81,087 ஆகும். ஆசிரியர், மாணவர் விகிதம் 1:37 ஆகும்.

2. தொடக்கப் பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் தொடர்ந்து படிக்காமல் இடையிலேயே பெரும் எண்ணிக்கையில் பள்ளியிலிருந்து நின்றுவிடும் நிலையை மாற்றப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1972-73 முதல் 1976-77 முடியவுள்ள ஆண்டுகளின் புள்ளி விவரங்களிலிருந்து, முதல் வகுப்பில் சேரும் மாணவர்களுள் 58 விழுக்காட்டினரே 5 ஆம் வகுப்புவரை தொடர்ந்து படிக்கின்றனர் என்றும் மீதி 42 விழுக்காட்டினரும் இடையிலேயே பள்ளியை விட்டு நின்றுவிடுகின்றனர் என்றும் தெரிகிறது. தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாகப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் திட்டம் போன்றவை மாணவ மாணவியர் பள்ளியை விட்டு இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டுமென்பதையும் நோக்கமாகக் கொண்டவை. இவற்றோடு 1977-78 முதல் மாநிலத்தில் 1—3 வகுப்புகளில் மாணவர்கள் அனைவரையும் மேல் வகுப்பிற்கனுப்பும் முறை செயல்படுத்தப்படுகின்றது.

V911,32 N79

நண்பகல் உணவுத் திட்டம்.

3. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில்

N83-960

ஒரு பங்காகிய மிகவும் ஏழைக் குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்கப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 20.25 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசனநல/பிற்பட்டோர் நலத் துறைகள் நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.65 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1979-80 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ரூ. 5.37 கோடி செலவிடப்படும். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. 'கேர்' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவைத் தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது.

4. மைய சமையற்கூடத் திட்டம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அங்கு நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்ற உணவு சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் எடுத்துச் சென்று வழங்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற்கூடங்களும் 'கேர்' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை, பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற்கூடங்களிலிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 உந்து வண்டிகளையும் கேர் நிறுவனம் வழங்கியது. இந்த பெட்ரோல் வண்டிகள் பயன்படாத வகையில் பழுதாகும்போது புதிதாக வாங்கும் வண்டிகளை டீசல் வண்டிகளாக வாங்கினால் செலவு குறையும். ஆகையால் அவ்வாறே படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் அவ்வாறு 33 டீசல் வண்டிகள் வாங்கப்பட்டன. இவ்வண்டிகளையும், சமையல் சாதனங்களையும் பழுது பார்க்க 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டம் விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது.

5. மைய சமையற்கூடத் திட்டத்தைப் படிப்படியாகப் பிற மாவட்டங்களுக்கும் விரிவாக்குவது நல்லதென்று கருதப்படுகிறது. மைய அரசு ஒப்புதலளித்தால் இதற்கான தொடராச் செலவில் 45 விழுக்காட்டை 'கேர்' நிறுவனம் ஏற்றுக்கொள்ளும். 1979-80-ல், முதல் கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் (90,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 16 சமையற்கூடங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் (176,000 மாணவர்களுக்குப் பயனளிக்கத்தக்க) 32 சமையற்கூடங்களும் ஏற்படுத்த முடிவுசெய்து, அதற்காக 'கேர்' உதவியைப் பெற மைய அரசிடம் ஒப்புதல் கோரி அவ்வரசின் சமுதாய நலத் துறைக்கு எழுதப்பட்டுள்ளது. இந்த 48 சமையற்கூடங்களையும் அமைக்க மொத்தம் ரூ. 144 இலட்சம் ஆகும். அதில் ரூ. 65 இலட்சத்தை 'கேர்' நிறுவனமும் ரூ. 79 இலட்சத்தை மாநில அரசும் ஏற்க வேண்டி இருக்கும்.

6. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து அவ்வப்பொழுது வழங்கிட 'கேர்' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவில் வட்டாரக் கிடங்குகள் ஒன்பதும் அடையாற்றில் மையக் கிடங்கு ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. 'கேர்' உதவியுடன் மேலும் 3 கிடங்குகளை கட்ட மைய அரசின் ஒப்புதலை இவ்வரசு கோரியுள்ளது.

இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

7. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 1972-73 ஆம் ஆண்டிலிருந்து பாடநூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக அந் நிறுவனம் ஆண்டுதோறும் ரூ. 25 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சுமார் ரூ. 5 இலட்சம் செலவிடுகிறது.

8. தொடக்கப் பள்ளிகளில், அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர்-தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 3,980 உயர்-தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1979-80-ல் மேலும் 200 உயர்-தொடக்கப் பள்ளிகள் பயனடையும். கோயம்புத்தூரிலுள்ள அவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரி மூலம் செயல்படுத்தி வரும் ஒரு முன்னோடித் திட்டத்தின் கீழ், கடந்த சில

ஆண்டுகளில் கோயம்புத்தூர், நிலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 5,700 பேருக்கு சத்துணவு மற்றும் உடல் நலம் பற்றிப் புத்துணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்.

9. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974-75-லிருந்து தொடக்கப் பள்ளி கட்டிட மானியம் ரூ. 10,000/17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிருவாகத்தினர் தர வேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000/8,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80-ல் நகராட்சி மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் தர ரூ. 4 இலட்சமும் அரசுத் தொடக்கப்பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 17 இலட்சமும் (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த கட்டட வேலைகளை முடித்திட ரூ. 7 இலட்சமும், புதிய வேலைகளுக்கு ரூ. 10 இல்ட்சமும்) ஒதுக்கப்பட்டுள்ளன. 1979-80-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி கட்டிடங்களுக்காக ரூ. 1 கோடி சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்.

10. தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 33,000 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 29,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அந்த 29,000 பள்ளிகளில், 23,000 பள்ளிகளை (சுமார் 19,900 தொடக்கப் பள்ளிகளும், 3,100 உயர்-தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தி வருகின்றன. தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியமும், ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்குச் செல்கின்றது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்கின்றன.

11. சுமார் 1,450 பள்ளிகளை (சுமார் 1,060 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 390 உயர்-தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகளும் சென்னை, மதுரை மாநகராட்சிகளும் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டிக்கு ஈடான

தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

(iii) உயர் நிலைப் பள்ளிக் கல்வி.

1. 1978-79-ல் தமிழ்நாட்டில் 14—17 வயதுத் தொகுதியினர் 24.12 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 30 விழுக்காடாகிய, 7.27 இலட்சம் பேர் (மேல் நிலைப்பள்ளி முதலாண்டு வகுப்பில் பயின்று வந்த 1.14 இலட்சம் பேர் உட்பட) பள்ளிகளில் பயின்று வந்தனர். 1978-79-ல் இம் மாநிலத்தில் இருந்த 3,108 உயர்நிலைப்பள்ளிகளில் 65,379 ஆசிரியர்களும், 16.83 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். (3,108 உயர்நிலைப் பள்ளிகளில் 912-ல் மேல் நிலைப்பள்ளி முதல் ஆண்டு வகுப்பும் இருந்தன. அந்த 912 பள்ளிகளின் 1-10 வகுப்புகளுக்கான விவரங்களும் இப்பள்ளி விவரங்களில் அடங்கியுள்ளன.) 1978-79 ஆம் ஆண்டில் 41 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன (அரசுப் பள்ளிகள் 33-ம், தனியார் பள்ளிகள் 8-ம்). இவற்றோடு "ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட" 9-வது பிரிவின்கீழ் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் இவ்வாண்டு 17 உயர்நிலைப்பள்ளிகளைத் திறந்துள்ளன.

அறிவியல் கல்வி

2. புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஆறாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாகப் பயிலப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப்பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது (ஆய்வுக்கூடக் கட்டிடத்திற்காக ரூ. 37,000-ம் கருவிகளுக்காக ரூ. 18,000-ம்), தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வி இயக்குநரே வாங்கி வழங்குகிறார். எஞ்சிய ரூ. 22,200. ஆய்வுக்கூடக் கட்டிடத்திற்காகும் கட்டிடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 22,200 இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக்கூடக் கட்டிட மானியம் வழங்கப்படுகிறது. 1978-79 முடிய 968 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக்கூட நிதியுதவி பெற்றிருந்தன. (கடந்த இரண்டு ஆண்டுகளில் பயன் பெற்ற 75 பள்ளிகள் உட்பட). 1979-80-ல் மேலும் 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் அமைக்கப்படும்.

3. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப் புற உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 48 கல்வி மாவட்டங்களில் 42-ல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது. (இவற்றில் 6 வண்டிகள் 1977-78-ல் வாங்கியவை).

4. 1978 நவம்பரில் மதுரையில் மாநில அறிவியல் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. 98 உயர்நிலைப் பள்ளிகள் அதில் பங்கேற்றன. மாவட்ட நகரங்களிலும் அத்தகைய அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை வளர்ப்பதே இந்த அறிவியல் கண்காட்சிகளின் நோக்கமாகும்.

5. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 7 இலட்சம் இதற்குச் செலவிடப்பட்டது. 1979-80-ல் இப்பணிக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒலி-ஒளிக் கல்வி.

6. அநேகமாக அனைத்துப் பள்ளிகளுமே சுய முயற்சியின் மூலம் அல்லது வட்டார மக்களின் முயற்சியின் மூலம் வானொலிப் பெட்டிகளைப் பெற்றுள்ளதனால் அவை வானொலியின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன் பெறுகின்றன. 700 உயர்நிலைப் பள்ளிகளில் 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவிகளும், 1,250 பள்ளிகளில் துண்டுப்படம் காட்டும் கருவிகளும் உள்ளன. அந்தந்தப் பள்ளிகள் ஒலி-ஒளிக் கல்விக்கென மாணவர்களிடம் வசூலிக்கும் சிறப்புக் கட்டணத் தொகையைக் கொண்டு, ஒலி-ஒளிக் கருவிகள் வாங்கலாம். விலையுயர்ந்தனவும் மிகப் பயனுள்ளவையுமான திரைப்படங்களை அத்தொகையிலிருந்து வாங்க இயலாதாகையால் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தில் உள்ள "மாநிலத் திரைப்படச் சுருள் சேமிப்பகம்" பள்ளிகளுக்கு திரைப்படங்களையும் துண்டுப்படங்களையும் கடனாக வழங்கி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்த சேமிப்பு நிலையத்தை வலுப்படுத்த கல்வித் திரைப்படங்களும் துண்டுப்படங்களும் ரூ. 1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன. 1979-80-ல் இவ்வகையில் மேலும் ரூ. 25,000 செலவிடப்படும்.

7. தொலைக்காட்சி கல்விப்பணிக்கு மிகவும் பயன்படும் ஒரு நவீனக் கருவியாகும். சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒளிபரப்பின் மூலம் பயனடைகின்றன. பள்ளிக் கல்வி இயக்குனரகத்தில் உள்ள "தொழில் நுட்ப வளர்ச்சியைக் கல்விப் பணிக்குப் பயன்படுத்துவதற்கான அமைப்பு" பள்ளிகள் தொலைக்காட்சி கல்வி ஒளிபரப்பின் மூலம் நற்பயனை அடைய உதவி வருகிறது. சென்னை நிலைய ஒளிபரப்புப் பகுதியில் உள்ள பள்ளிகள் தம் மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆண்டுக்கு ரூ. 2 வசூலித்து தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிப் பராமரிக்க பயன்படுத்த அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகள் 15-க்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை அரசே வாங்கி அளிக்க 1979-80-ல் ரூ. 75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிகள் வசூலிக்கும் தொலைக்காட்சிக் கட்டணத் தொகையைக் கொண்டு அப் பெட்டிகளின் விலை தவணை முறையில் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படும்.

பள்ளி இணையங்கள்.

8. சுமார் 2,178 உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் சுற்று வட்டாரத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளோடும் உயர் தொடக்கப் பள்ளிகளோடும் ஒத்துழைப்புப் பணியாற்றி அனைத்தின் கல்வி வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்.

9. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிட மானியம் தர 1979-80-ல் ரூ. 9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடப் பணிகளுக்காக 1979-80-ல் ரூ. 37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (முன் ஆண்டுகளில் ஏற்பளித்த பணிகளுக்கு 1979-80-ல் ஆகும் செலவுக்காக ரூ. 20 இலட்சமும், புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 17 இலட்சமும்.)

படிப்பு உதவித் தொகைகள்.

10. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாகும். கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்களும் கல்வியில் சிறந்து விளங்குகிறவர்களுமான மாணவர்களுக்கு, 1971-72 முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 374 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் புதியதாக நான்கு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை

வழங்கப்படுகிறது. ஒரு முறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகளில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படிக்கின்ற மாணவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும். இவ்வுதவித் தொகை பெறும் மாணவர்களுள் தம் விருப்பப்படி சாதாரண பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 மட்டும் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை 1979-80-ல் (புதியதாகப் பெறுவோர் உட்பட) சுமார் 3,000 ஆக இருக்கும். (1978-79-லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப் படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது—அதாவது 2-லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது).

11. இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமாகக் கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருத்துவ வண்டிகள்.

12. சென்னை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் உயர் நிலைப்பள்ளி மாணவர்களின் மருத்துவ சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன.

மெட்ரிக்குலேசன் பள்ளிகள்.

13. தமிழ்நாட்டில் 31 மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 31,000 மாணவர்கள். ஆசிரியர்கள் எண்ணிக்கை 1,100 ஆகும். இவை மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கின்றன. பாட மொழி ஆங்கில மாகும். இவை அரசு மானியம் பெறுவதில்லை. இவை முன்னர் சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருந்தன. 1976-ம் ஆண்டு டிசம்பரிலிருந்து இவை பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டன. மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்காகத் தனி ஆயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பள்ளிகளுக்குத் தனி ஆய்வாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்.

14. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79-ம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. அம் மாணவர்களுடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் இச் சலுகை உண்டு. (அப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்தியரல்லாத பிற மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்.) இச் சலுகையால் ஆங்கிலோ-இந்தியப் பள்ளி நிருவாகங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மானியம் தரப்படுகிறது.

15. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உணவு மானியம் வழங்குவதிலும் ஒரு சலுகை தரப்பட்டுள்ளது. அதாவது பள்ளிப் படிப்புக் காலமாகிய 7 வகுப்புகளில் மொத்தம் 2 தடவை வரை தோல்வியுறுபவர்கள் உணவு மானியம் தொடர்ந்து பெறலாம் என்று இருந்தது மாற்றப்பட்டு 4 தடவை வரை தோல்வியுறுபவர்களுக்கும் அம் மானியத்தைத் தொடர்ந்து தரலாம் என தாராளமாக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒரே வகுப்பில் மூன்றாவது ஆண்டாகப் பயில்பவர்களுக்கு இம்மானியம் கிடையாது.

(iv) பள்ளிப் பாடங்கள், பாடத் திட்டம், பள்ளிப் பாடநூல்கள்

பாடத் திட்டத் திருத்தம்.

1972-73 ஆம் ஆண்டிலிருந்து 1976-77-க்குள் படிப்படியாக 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கல்வி வல்லுநர்களைக் கலந்து பல்வேறு பாடங்களில் அப் புதிய பாடத் திட்டத்தின்கீழ் உள்ள அதிகப்படி சுமையை 1978-79 முதல் அனைத்து வகுப்புகளிலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணிதத்தைப் பொறுத்தவரை 1978-79 முதல் அதிகப்படி சுமை குறைக்கப்பட்டதோடுகூட, கணிதப் பாடத்துக்கு 1—10 வகுப்புகளுக்கு முற்றிலும் திருத்திய பாடத் திட்டம் ஒன்றை அப் பாட வல்லுநர் குழு தயாரித்துத் தந்தது. அத் திருத்திய கணிதப் பாடத் திட்டத்தை

ஏற்று பின்வரும் கால அட்டவணைப்படி பள்ளிகளில் செயல்படுத்த ஆணை யிடப்பட்டுள்ளது :—

ஆண்டு.		வகுப்புகள்.
1979–80	.. ..	1-2 (இவ் வகுப்புகளில் கணிதத்துக்குப் பாடநூல்கள் கிடையாது)
1980–81	.. ..	3, 6
1981–82	.. ..	4, 7, 9
1982–83	.. ..	5, 8, 10

பள்ளிப்பாட நூல்கள்.

2. பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு 1970-ல் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடைய தாகும். 1979-80-ல் அந் நிறுவனம் ரூ. 4.60 கோடி விலையுள்ள சுமார் மூன்று கோடி எண்ணிக்கை பாடநூல் படிகளை அச்சிட்டு வழங்க இருக்கிறது.

3. இந் நிறுவன புத்தகங்கள், 50 மொத்த விற்பனையாளர் (கூட்டுறவுச் சங்கங்கள்) மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 2,200 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந் நிறுவனம் வகை செய்துள்ளது.

V ஆசிரியர் பயிற்சி.

இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திட, இம்மாநிலத்தில் தற்போது 80 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன (இளஞ் சிறார் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நான்கு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று, லேடி வில்லிங்டன் மற்றும் புனித கிறிஸ்டோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்றாக உள்ள செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் இரண்டு (ஆகியவை உட்பட). கடந்த பல ஆண்டுகளாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் நிலவி வருவதால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு

ஆண்டு விட்டு மறு ஆண்டுதான் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதுவும், குறைந்த எண்ணிக்கை மாணவர்களே சேர்க்கப்படுகின்றனர்.

2. தற்போது இம்மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழி கற்பிப்பதில் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் ஒன்பது செயல்பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று இடங்களில் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 1,350 பேருக்கு (30 தொகுதியினர்; மூன்று வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன. கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், மேலூர் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள மையங்கள் ஆண்டுதோறும் உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 2,700 பேருக்கு (60 தொகுதியினர்; நான்கு வாரப் பயிற்சி) ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் மறு பயிற்சி அளிக்கின்றன.

3. பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்துக்கு ஆண்டுதோறும் உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்களுள் 50 பேர் 4 மாதப் பயிற்சி வகுப்புகள் இரண்டுக்கு அனுப்பப்படுகின்றனர்.

4. ஆங்கிலப் பயிற்சி நிலைய ஆசிரியர்களும், வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் தொடக்கப் பள்ளிகளில் 3-5 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் 3 நாள் மறு பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றனர். ஆண்டுதோறும் சுமார் 3,000 ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

5. ஆங்கிலப் பயிற்சி நிலைய ஆசிரியர்கள் அவ்வப்பொழுது பள்ளிகளில் ஆங்கிலம் கற்றுத் தரப்படும் முறையைப் பார்வையிட்டும், விளக்க வகுப்புகள் நடத்தியும், கலந்துரையாடியும் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுவிக்கப்படும் தரம் உயர உதவுகின்றனர். அந்நிலையங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளிகளை ஆண்டுதோறும் மாவட்டக் கல்வி அலுவலர் ஆய்வு செய்யப்போகும்பொழுது உடன் சென்று உதவுகின்றனர்.

(vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

தமிழ் நாடு கல்வி நிறுவனம், தமிழ் நாடு அறிவியல் கல்வி நிறுவனம், மாணவர் கல்வித்தர மதிப்பீட்டிற்கான மாநிலப் பிரிவு, ஆகிய மூன்றையும் இணைத்து 1975-ல் தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் உருவாக்கப்

பட்டது. அது பள்ளிக் கல்வி நிலையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றைக் கவனித்து வருகிறது. இது பல ஆய்வுக் கருத்தரங்குகளையும் பயிற்சி வகுப்புகளையும், பணிப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது. 28—8—1978-லிருந்து இந் நிறுவனம் அரசுத் தேர்வு இயக்குநர் பொறுப்பிலிருந்து பள்ளிக் கல்வி இயக்குநர் பொறுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

2. யுனிசெப் உதவியுடன், இக்குழு சோதனைத் திட்டங்கள் இரண்டை நடத்தி வருகின்றது. ஒன்று "தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பிக்கும் திட்டம்". இதன் கீழ் புதிய பாடத் திட்டம் ஒன்று சில பள்ளிகளில் செயல்படுகிறது. மற்றொன்று "சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி". இதன்கீழ் பள்ளிக் கல்வி இளஞ்சிறார் கல்வி, பள்ளி சாராக் கல்வி ஆகிய மூன்றும் இணைந்த கல்வி முப்பது தொடக்கப்பள்ளிகளில் வழங்கப்படுகிறது.

3. பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் 50 ஊர்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளின் மூலம் "கல்வி மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்" ஒன்றை மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். மாணவர்களின் பெற்றோர்களும், பள்ளியை விட்டு நின்றுவிட்ட சிறுவர்களும் சுயமாக வேலை செய்து ஓரளவு சம்பாதிக்க வகை செய்யும் திறமைகளை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு அந்த ஆசிரியர்கள் உதவுகிறார்கள்.

4. தருமபுரி, வட ஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச் சாதியினரைச் சார்ந்த மாணவர்களுக்கு என்ன வேலை வாய்ப்புக்கள் உள்ளன என்பது குறித்த ஆய்வு ஒன்றை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதற்காக அம்மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதிய பின் மேற்கொண்டு என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, ஆய்வுக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

5. பிரிட்டிஷ் கவுன்சிலின் உடனுழைப்புடனும், உதவியுடனும் இக்குழு சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் நிலையங்களை நிறுவியுள்ளது. கல்விப் பிரச்சினைகள் குறித்து இந்நிலையங்களில் ஆசிரியர்கள் ஒன்றாகக் கூடி விவாதித்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர்.

6. மேற்கண்ட திட்டங்கள் தவிர, இந்நிறுவனம் இதுவரை சுமார் 40 திட்டங்களையும் பல்வேறு வகை ஆராய்ச்சிகளையும் நிறைவேற்றியுள்ளது. அவற்றுள் நீண்ட காலப் பணிகள் சிலவும் குறுகிய காலப்பணிகள் சிலவும் ஆகும். 1979-80-ல் இந்நிறுவனம் ரூ. 2.20 லட்சம் செலவில் ஆசிரியர்களுக்குப் பல்வேறு பணியிருப்புப் பயிற்சிகளை நடத்தும்.

7. இந்நிறுவனத்தின் "தேர்வு முறை சீர்திருத்தப் பிரிவு" பள்ளித் தேர்வுகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி ஆய்வு செய்து வருகிறது.

8. சென்னை, மதுரை, காரைக்குடி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்களுக்கான "தொடர் கல்வி மையங்களைத்" தொடங்க அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றை நடத்தும் செலவில் பாதியை தேசிய கல்வியாராய்ச்சி, பயிற்சி நிறுவனம் ஏற்கும். அனைத்துவகை ஆசிரியர்களுக்கும் பல பாடங்களிலும் இம்மையங்கள் பயிற்சி அளிக்கும். கல்வி முறைகளில் ஏற்படும் வளர்ச்சியை ஆசிரியர்களிடையே பரப்பிட விரிவுரைகளையும், செயல்முறை வகுப்புகளையும் நடத்தும். பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் ஆலோசனை தரும் நிலையங்களாக இவை செயல்படுவதோடு அவர்கள் தங்கள் பாடங்களை நன்முறையில் கற்றுத்தர ஆயத்தம் செய்து கொள்வதற்கான வசதிகளையும் இம்மையங்கள் தரும். இத்தகைய தொடர் கல்வி மையங்கள் மேலும் சிலவற்றைத் தொடங்குவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

(vii) பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்.

1. தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் பணியாற்றி வரும் இரண்டரை இலட்சம் ஆசிரியர்களின் நலனில் அரசு இடைவிடாத நாட்டம் செலுத்தி வருகிறது.

2. தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துப்பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970-71-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்தது. 1979-80-ல் சுமார் ரூ. 150 கோடியாக உயரும்.

3. மூன்றாவது சம்பளக் குழு சம்பள விகிதங்கள் அரசுப் பள்ளியல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகும். பணியாளர்கள் பதவி உயர்வு இல்லாமல் நெடுநாள் இருப்பதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அக்குழு பரிந்துரைத்துள்ள புதிய நடைமுறையும் அவர்களுக்குப் பொருந்தும். அம்முறையின்படி நடுத்தர அல்லது கீழ்நிலைப் பதவிகள் பலவற்றில் பணி

செய்பவர்கள் பத்தாண்டு பணி முடித்ததும் உயர் பதவிக்கோ அல்லது உயர்ந்த சம்பள விகிதம் கொண்ட தேர்வுநிலை அல்லது சிறப்பு நிலைத் தரப் பதவிக்கோ உயர்வு பெறலாம்.

4. இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியருக்கான தகுதி இருந்தும் தொடக்கநிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்களாகத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு படிப்படியாக இடைநிலைப் பதவிகள் அளிக்கப்படுகின்றன. 1967-68 முதல் 1978-79 முடிய இவ்வாறு 42,950 தொடக்கநிலைப் பதவிகள் இடைநிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டன— கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்த்திய 3,000 பதவிகள் உட்பட.

5. அரசுப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழாசிரியர் ஆகிய பதவிகளுக்கு முறையான நேரடி நியமனம் தமிழ்நாட்டு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு மூலமாகவே செய்ய வேண்டியுள்ளது. அப்பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள், முதனிலைத் தமிழாசிரியர் ஆகியோருக்காகவென்றே தனியாக ஒரு தேர்வை அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு நடத்த இருக்கிறது. அவ்வாசிரியர்களுள் 31—3—1977 அன்றைய நிலவரப்படி ஓராண்டு தற்காலிகப்பணி (தொடர்ந்து அல்லது விட்டு விட்டு) முடித்திருந்து அந்நாளில் பணியிலிருந்தவர்களும் அந்நாளில் பணியில் இல்லாமலிருந்தால், அவ்வாறு ஓராண்டு பணி முடித்துவிட்டு 1—4—1974 அன்று அல்லது அதற்குப் பின் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களும் அத்தேர்வில் கலந்து கொள்ளலாம். அத்தேர்வு முடிந்ததும் இவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ. பி. பிரிவுகள் இணைப்பு.

6. ஊராட்சி ஒன்றியங்களை அமைத்தபின் 1960-61-ல் மாவட்டக் கழகங்கள் மறைந்தன. மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள் 1963-ல் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டன. முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970 வரை நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் (அரசினால் 1—4—1970 வரை அரசு கழக உயர்நிலை பள்ளிகளாகத் தொடங்கி நடத்தப்பட்டு வந்த பள்ளிகள் உட்பட) பிற பணியாளர்களும் 1—4—1970 முதல் அரசுப் பணியாளர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டனர். ஆனால், அவர்கள் தமிழ் நாடு கல்வித் துறை சார்புப்பணியில் 'பி' பிரிவு என்னும் ஒரு தனிப் பிரிவாக வைக்கப்பட்டனர். அரசு உயர்நிலைப்பள்ளி அலுவலர்கள், பள்ளி ஆய்வுப் பணி அலுவலர்கள், 'பி' பிரிவு பள்ளிகளில் 1—4—1970 அன்று அல்லது அதற்குப்பின் நியமிக்கப்பட்டவர்கள் ஆகிய அனைவரும் 'ஏ' பிரிவைச் சார்ந்தவர்களாவர்.

7. மேற்சொன்ன 'ஏ', 'பி' இரண்டு பிரிவுகளையும் பின்வரும் முறைப்படி இணைத்து 2—11—1978 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது :

இதுவரை 'ஏ' பிரிவிலுள்ள அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள், அரசிதழ் பதிவு பெறாத தலைமையாசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், முதனிலை மொழி ஆசிரியர்கள், உடற். பயிற்சி இயக்குநர் ஆகியோருக்கு மாநில அளவில் பணி மூப்பு பட்டியல்கள் வைக்கப்பட்டு வந்தன. இனி அவை போன்ற மாநில அளவிலான பணி மூப்பு பட்டியல்களை 'பி' பிரிவினருக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் தயாரித்து வைத்து வரவேண்டும்.

(ii) 'பி' பிரிவைச் சேர்ந்த ஒருவர் 31—3—1970 அன்று எந்த பதவியில் இருந்தாரோ அந்தப் பதவியில் அவர் முறையான நியமனம் பெற்ற நாள் அடிப்படையில் அந்த "மாநில பணி மூப்புப் பட்டியல்கள்" 'பி' பிரிவுக்கு தயாரிக்கப்படும்.

(iii) 2—11—1978 அன்று காலியாக இருந்த பதவிகளையும் அதற்குப் பின் காலியாகும் பதவிகளையும் நிரப்பும்பொழுது இரண்டு பிரிவுகளிடையே பல்வேறு பதவிகளை பின்வரும் விகிதங்களின்படி பகிர்ந்தளிக்க வேண்டும் ;

2:3 விகிதத்தில் ஏ., பி. பிரிவுகளிடையே பகிர்ந்தளிக்க வேண்டிய பதவிகள்.

(1) அரசிதழ்ப் பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களை அரசிதழ்ப் பதிவு பெற்ற தலைமை ஆசிரியராக பதவி உயர்த்தும்பொழுது ;

(2) பி.டி. ஆசிரியர்களை அரசிதழ்ப் பதிவு பெறாத தலைமையாசிரியராக பதவி உயர்த்தும்பொழுது ;

(3) செகண்டரி கிரேடு மற்றும் சிறப்பு ஆசிரியர்களை பி.டி. ஆசிரியராக பதவி உயர்த்தும்பொழுது ;

5:3 விகிதத்தில் ஏ., பி. பிரிவுகளிடையே பகிர்ந்தளிக்க வேண்டிய பதவிகள்.

(1) இள நிலை உதவியாளரை உதவியாளராகப் பதவி உயர்த்தும் பொழுது ;

(2) உதவியாளர்களை கண்காணிப்பாளர்களாக பதவி உயர்த்தும் பொழுது ;

(3) அமைச்சுப் பணியாளர்களை அவர்களுக்குரிய வேறு பதவிகளுக்குப் பதவி உயர்த்தும்பொழுது.

தனியார் பள்ளிகள்.

8. 1973 ஆம் ஆண்டு இயற்றிய தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டமும், அச்சட்டத்தின்கீழ் வகுத்த விதிகளும் 1—12—1974 முதல் அமுலுக்கு வந்தன. அந்த சட்டத்தையும் விதிகளையும் எதிர்த்து சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் பல உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தொடுத்தன. அச்சட்டத்தின் பல பிரிவுகளும் விதிகளில் பலவும் சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்குப் பொருந்தமாட்டா என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே சிறுபான்மையினர் கல்வி நிலையங்களுக்கு அங்கிகாரம் வழங்குதல் போன்றவற்றிற்காக தனி விதிகள் 14—9—1977 அன்று வெளியிடப்பட்டன.

9. தனியார் பள்ளி நிருவாகங்களில் சிலவற்றால் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை மேல்முறையீட்டில் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள், திரும்பவும் பணியில் சேர்க்க வேண்டும் என்று ஆணையிடும்பொழுது அந்நிருவாகங்கள் அவ்வாணையை செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருக்கிறது. அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரின் இன்னலைக் களைவதற்காக அரசு பின்வருமாறு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) விதிகள், 1974-இன் 18-வது விதியின்கீழ் மேல் முறையீட்டு அதிகாரிகளாக தலைமைக் கல்வி அலுவலர்களும், இணைபள்ளிக் கல்வி இயக்குநரும் உள்ளனர். ஆசிரியர்களையோ பிறரையோ மீண்டும் பணியில் சேர்க்கும்படி அவ்வதிகாரிகள் பள்ளி நிருவாகத்திற்கு ஆணையிட்டு அவ்வாணையை செயல்படுத்த அந்நிருவாகம் மறுத்தால் பள்ளிக் கல்வித் துறையே அந்நிருவாகத்தின் கீழ் உள்ள பணியாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது. மேலும் அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து, கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு (தனியார், அரசு, அல்லது உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்) அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் அரசு தலைமைக் கல்வி அலுவலர்களுக்கும், மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அதிகாரம் தந்துள்ளது. தனியார் உயர்நிலைப்பள்ளிகளிலும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் பாதிக்கப்படுபவர்களுக்கு, தலைமைக் கல்வி அலுவலரும், தனியார் நடத்தும் இளந் சிறார் பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி, சிறப்புப் பள்ளி ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலரும் இவ்வாறு நிவாரணம் வழங்கலாம். பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேறு தனியார் பள்ளிகளுக்கு மாற்ற இயலாவிட்டால்,

அவர்களை (நியமன அதிகாரம் உடையவர்களைக் கலந்து) உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகளிலும் (தேவையானால் வயது விதி முதலியவற்றை தளர்த்தி) நியமனம் செய்யலாம்.

10. சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

11. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வூதிய விதிகள், தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணியாற்றி 1—6—1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1—4—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்கள் ஓய்வூதியம் பணிக்கொடை முதலியவற்றை அரசுப் பணியாளர்களையொப்ப பெறுகின்றனர். ஓய்வுபெற்ற பிறகு ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுவதில் ஏற்படும் காலத் தாழ்வினால் அல்லலுறாமலிருக்க தற்காலிக ஓய்வூதியமும் பணிக் கொடையும் பெறவும் (அரசு ஊழியர்களைப் போலவே இவர்களுக்கும்) வழி செய்யப்பட்டுள்ளது.

12. பணியிலிருக்கும்போது ஒருவர் இறந்து விட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குவதற்கான "குழு ஈட்டுறுதித் திட்டம்" தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவதாகும்.

13. தனியார் பள்ளி ஆசிரியர்களும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் விடுப்பு நலன்கள் அனைத்தையும் பெறத் தகுதியுடையவர்களாவர்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி.

14. ஆசிரியர் நாளன்று 1977-78-ல் கொடிகள் விற்பதன் மூலம் வசூல் ஆன தொகை ரூ. 5.25 இலட்சம் ஆகும். இப்பொழுது கையிருப்பில் உள்ள தொகை ரூ. 44.90 இலட்சம் ஆகும். 1—4—1978 முதல் 20—1—1979 முடிய ஆசிரியர் நல தேசிய நிதிப் பணத்திலிருந்து உதவி பெறத் தக்க 1,797 ஆசிரியர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2.36 இலட்சம் வழங்கப்பட்டது.

15. 1977-78-லிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு தொழில் படிப்பு படிக்க படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. பணியிலுள்ள, ஓய்வு பெற்ற, மற்றும் இறந்துவிட்ட ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இப்படிப்புதவித் தொகைகள் கிட்டும். பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளுக்கு மொத்தம் ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் புதிதாக அளிக்கப்படுகின்றன. இப்படிப்புதவித் தொகை ஆண்டுக்கு ரூ. 500 ஆகும். இதனைப் பெறும் மாணவர்களின் தாய், தந்தையரின் மொத்த வருமானம் ஆண்டுக்கு ரூ. 8,000-க்கு (வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்றவற்றை கணக்கிலெடுக்காமல்) மேல் போகக்கூடாது.

16. ஆசிரியர் நல தேசிய நிதிப் பணத்திலிருந்து சென்னையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

17. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் உள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெள்ளிப் பதக்கமும் ஒரு சான்றிதழும், ரொக்கப் பணம் ரூ. 200-ம் அளிக்கப்படுகின்றன.

(viii) அரசுத் தேர்வுகள்.

பொதுத் தேர்வுகளின் முக்கியத்துவத்தையும் அவற்றை நடத்துவதில் உள்ள நுணுக்கங்களையும் கருத்தில் கொண்டு 1975 பிப்ரவரியில் அரசுத் தேர்வுத் துறை ஒரு தனித் துறையாக அமைக்கப்பட்டது. (28—8—1978 முதல் அரசுத் தேர்வு இயக்குநரே பள்ளி சாராக் கல்வியையும் கவனித்து வருகிறார்) 1978 ஆம் ஆண்டில் அரசுத் தேர்வு இயக்குநர் 36 தேர்வுகள் நடத்தினார். அவற்றை எழுதியவர்கள் 6 இலட்சம் பேர்; அவருக்கு உதவி செய்ய ஒரு இணை இயக்குநர் (இப்பதவி 1978-79-ல் புதிதாக ஏற்படுத்தியது), ஒரு துணை இயக்குநர், செயலர், 3 கூடுதல் செயலர்கள், ஒரு நேர்முக உதவியாளர், ஒரு முதுநிலை கணக்கு அலுவலர் ஆகியோர் உள்ளனர். முக்கியமான தேர்வுகளாகிய உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.), ஆங்கிலோ இந்தியப் பள்ளி இறுதித் தேர்வு (ஏ.ஐ.எஸ்.எல்.சி.) ஆசிரியர் பயிற்சி தேர்வு (டி.எஸ்.எல்.சி.) போன்றவை ஆண்டுக்கு இருமுறை நடைபெறுகின்றன.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு.

2. புதிய பத்தாண்டு பள்ளிப் படிப்பு முறை அமுலுக்கு வந்ததன் காரணமாக 1978 மார்ச்சிலும் அக்டோபரிலும் மூன்று வகை மாணவர்களுக்கு

தனித்தனியே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகள் நடத்தப்பட்டன. விவரங்கள் வருமாறு :—

ஆண்டும் மாதமும்.	தேர்வு எழுதிய மாணவர் எண்ணிக்கை.	தேறியவர் எண்ணிக்கை.	தேறியோர் விழுக்காடு.
(1)	(2)	(3)	(4)
1978 மார்ச், ஏப்ரல்—			
1. 11-வது வகுப்பு 2. 1969 ஆம் ஆண்டு பாடத்திட்ட 11-ம் வகுப்பு.	2,17,564	1,07,540	59.3 சதவீதம் (பள்ளி மாணவர்) 17.2 சதவீதம் (தனியாக எழுதியவர்கள்).
3. 10-வது வகுப்பு ..	2,30,836	1,15,696	50.1 சதவீதம்.
1978 நவம்பர்—			
1. 1969 திட்டம் ..	27,114	பாடம் பாடமாக தேர்ச்சி பெறும் முறை அமுலுக்கு வந்து விட்டபடியால் தேறியவர் எண்ணிக்கை தரப்படவில்லை.	
2. 11-வது வகுப்பு ..	22,613		
3, 10-வது வகுப்பு ..	41,901		

மார்ச்/ஏப்ரல் தேர்வு, 1,100 மையங்களிலும், நவம்பர் தேர்வு 453 மையங்களிலும் நடந்தது. 1978 ஏப்ரல், மே மாதங்களில் எஸ்.எஸ்.எல்.சி. விடைத்தாள்கள் 51 விடை திருத்தும் மையங்களில் 1,219 தலைமைத் தேர்வாளர்களையும், 13,538 உதவித் தேர்வாளர்களையும் கொண்டு திருத்தி முடிக்கப்பட்டன.

3. 18 வயது அடைந்தவர்களும், இம்மாநிலத்தின் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுமான அனைவரும், தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத அனுமதிக்கும் சலுகை தொடருகிறது.

பகுதி முறைத் தேர்வு.

4. மேல் வகுப்பில் சேருவதற்குத் தகுதி பெற வேண்டுமாயின் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரே தடவையில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்னர் இருந்தது. இப்பொழுது அதை மாற்றி எஸ்.எஸ்.எல்.சி., ஏ.ஐ.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி. (ஓரியண்டல் பள்ளியிறுதித் தேர்வு), மெட்ரிகுலேஷன் ஆகிய அனைத்திலும் பகுதி முறைத் தேர்வு முறையை அரசு அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இம்முறையில் ஒரு மாணவன் தான் தவறியுள்ள பாடங்களை மட்டும் மீண்டும் எழுதி அதில் தேறினால் போதும். இது இந்த அரசு கல்வித் துறையில் கொணர்ந்துள்ள ஒரு முதன்மை வாய்ந்த சீர்திருத்தமாகும்.

5. 1976-ல் இருந்து ஏ.ஐ.எஸ்.எல்.சி. தேர்வையும் இந்தத் துறையே நடத்தி வருகிறது. 1979 மார்ச்சிலிருந்து மெட்ரிகுலேஷன் தேர்வையும் இத்துறையே நடத்தும்.

6. அரசுத் தேர்வு இயக்குநர் நடத்தும் பிற தேர்வுகள், ஆசிரியர் பயிற்சி தேர்வுகளும், டீச்சர் வேலை, நெசவு, வேளாண்மை போன்ற தொழில்களில் கைத்தொழில் ஆசிரியர் சான்றிதழ் தேர்வுகளும், பிறவும் ஆகும்.

மேல்நிலைப் பள்ளித் தேர்வு.

7. 1980 மார்ச்சிலிருந்து மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வையும் அரசுத் தேர்வு இயக்குநரே நடத்துவார். இத்தேர்வுக்கான ஏற்பாடுகளை செய்து அதனை நடத்த அரசுத் தேர்வு இயக்குநர் தலைமையின் கீழ் ஒரு தனி வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. 1980 மார்ச்சில் மேல்நிலைப்பள்ளி இறுதித் தேர்வை செவ்வனே நடத்துவதற்கான தொடக்கநிலை வேலை இப்பொழுதே தொடங்கிவிட்டது.

ஈ.எஸ்.எல்.சி. தேர்வு.

8. எட்டாவது வகுப்பு நிலையில் நடைபெறும் தொடக்கப் பள்ளி இறுதி பொதுத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி.) 1979 டிசம்பர் முதல் மீண்டும் நடைபெறும். முறையாக பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்கள் நன்மைக்காக அது நடத்தப்படுகிறது. தேர்வு நடக்கும் மாதத்தின் முதல் தேதியன்று 14 வயது முடிந்திருந்தவர்கள் இத்தேர்வை எழுதலாம். அவ்வாறு 14 வயது முடிந்தவர்கள் முறையான பள்ளிகளில் கீழ்வகுப்புகள் எதிலாவது படித்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் விரும்பினால், அவர்களும் இத்தேர்வை எழுதலாம். சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பள்ளிசாராக் கல்வி வசதிகளின் முழுப் பயன் எய்த இத்தேர்வு உதவும்.

III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி தமிழ் நாட்டில் 1978-79 முதல் தொடங்கப்பட்டுள்ளது. 10+2+3 ஆண்டு முறைக் கல்வியின் +2 நிலையாகிய மேல்நிலைப் பள்ளிக் கல்வி இரண்டாண்டுகள் கொண்டது. அதன் முதலாண்டு வகுப்பு 1—7—1978 முதல் தொடங்கியுள்ளது.

2. மேல்நிலைப் பள்ளிக் கல்வியை பள்ளிகளில் மட்டுமே தொடங்கிட அரசு முடிவு செய்தது. பெரும்பாலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு மேல்நிலைப் பள்ளியாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் மேல்நிலைக் கல்வி வசதியளிப்பதற்கான பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. தொழில் சார்ந்த கல்விக்கு முதன்மையளிக்கும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி வசதி கிராமப்புற மக்களுக்கெல்லாம் எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் கிராமப்புறப் பகுதிகளின் தேவைக்கு முதன்மை தந்து அப்பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டன. 1978-79 பட்ஜெட் உரையில் மேல் நிலைப் பள்ளிக் கல்வி சுமார் 400 பள்ளிகளில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பொதுமக்கள் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு 912 பள்ளிகளில் (எஸ்.எஸ்.எல்.சி. பள்ளிகள் 869; ஓ.எஸ்.எல்.சி. பள்ளி 1; ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் 24; மெட்ரிகுலேஷன் பள்ளிகள் 18) மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. அந்த 912 பள்ளிகளுக்கான நிருவாக வாரி விவரங்கள் வருமாறு:—

	ஆண்.	பெண்.	மொத்தம்.
அரசு (அரிசன நல, பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள் 5 உட்பட).	379	34	413
நகராட்சி/மாநகராட்சிப் பள்ளிகள்.	36	15	51
தனியார் (எஸ்.எஸ்.எல்.சி.) ..	295	111	406
தனியார் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள்.	..	..	24
தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்.	..	..	1
மொத்தம் ..			912

பெண்களுக்குத் தனியே மேல்நிலைப் பள்ளிகள் இல்லாத இடங்களில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் பெண்களும் அனுமதிக்கப்படுகின்றனர். மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் பயிற்றுமொழி பற்றிய விவரங்கள் வருமாறு:—

	தமிழும் சிறுபான்மை மொழிகளும்.	ஆங்கிலம்.	மொத்தம்.
பொதுக் கல்வி ..	65,300	24,300	89,600
தொழில் கல்வி ..	22,200	2,200	24,400
மொத்தம்..	87,500	26,500	1,14,000

418 மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலப் பாட மொழி வகுப்புகள் உள்ளன. அவ்வகுப்புகளின் எண்ணிக்கை 584 ஆகும். சிறுபான்மை மொழிகளைப் பயிற்று மொழிகளாகக் கொண்டு பயில்பவர்கள் எண்ணிக்கை சுமார் 800 ஆகும்.

3. 1978 மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய 1,08,000 மாணவர்களில் 78,000 பேர் மட்டுமே கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 1978-79-ல் சேர்ந்தார்கள். ஆனால் 1978 மார்ச்சில் நடந்த 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேறிய 1,16,000 மாணவர்களுள் 1,14,000 பேர்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பில் 1978-79-ல் சேர்ந்தனர். உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கு மேலான தரத்திலுள்ள கல்வி வசதியானது மேல்நிலைப் பள்ளிக் கல்வி முறை அமுலுக்கு வந்ததன் காரணமாக சமுதாயத்தின் பல பிரிவினருக்கும் மிகப் பரவலாக கிடைத்திருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும். மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 1,14,000 பேர்களுள் 24,400 பேர் தொழில் படிப்பு படிக்கின்றனர் என்பது மேலும் மனநிறைவு அளிப்பதாகும்.

பாடங்கள், பாடத்திட்டம், பாட நூல்கள்—

4. மேல்நிலைப் பள்ளிகளில் என்னென்ன பாடங்கள் கற்றுத்தரவேண்டுமென்பதும், அப்பாடங்களுக்கான பாடத்திட்டமும் 1977 நவம்பரிலேயே ஏற்பளிக்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்திற்கும் பட்டப் படிப்புப் பாடத் திட்டத்திற்கும் இசைந்ததாகவும், இரண்டுக்கும் நல்ல இணைப்பு தருவதாகவும் மேல்நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

5. மேல்நிலைப் பள்ளிகளில் பாட வேளைகளில் 25 சதவிகிதம் நேரம் முதல் பகுதி மொழியும் இரண்டாவது பகுதி மொழியும் ஆகிய இரண்டு மொழிகளைப் பயில பயன்படுத்தப்படுகிறது. மூன்றாம் பகுதியாக, வேறு பாடங்களைப் பயில்வதற்காக மீதி 75 சதவிகித நேரம் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் முதல் பகுதியின் கீழ் தமிழை (அல்லது வேறு 12 மொழிகளுள் யாதானுமொன்றை) படிக்க வேண்டும். இரண்டாம் பகுதியின் கீழ் ஆங்கிலம் பயிலவேண்டும். மூன்றாம் பகுதியின் கீழ் பொதுக் கல்வி பயில்பவர்கள் அறிவியல் பாடங்கள் அல்லது கலைப் பாடங்களில் ஏதாவது நான்கை எடுத்துப் பயில வேண்டும். பகுதி மூன்றின் கீழ் தொழில் கல்வி பயில்பவர்கள் தொழில் பாடம் ஒன்றைப் பயில்வதோடு அத்தொழிலோடு தொடர்புடையதாக அறிவியல் அல்லது கலைப் பாடங்களில் இருந்து ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுத்துப் பயில வேண்டும்.

6. மேல்நிலைப் பள்ளி முதலாண்டு வகுப்புக்கான பாடங்களில் பெரும்பாலானவற்றுக்கான பாட நூல்களை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டது. வல்லுநர் குழுக்களால் தயாரிக்கப்பட்ட அப்புத்தகங்கள் குறித்த காலத்தில் வெளிவந்தன. அப்பாடங்களில் 1979-80-ல் மேல்நிலைப் பள்ளி இரண்டாவதாண்டுக்குத் தேவையான பாட நூல்களையும் அந்நிறுவனமே வெளியிடும். பிற பாடங்களுக்கு புத்தகங்களின் படிகள் குறைவான எண்ணிக்கையிலேயே தேவைப்பட்டன. ஆகையால் அப்பாடங்களுக்கு தனியார் வெளியீட்டாளர்கள் வெளியிட்டிருந்த புத்தகங்களில் தகுதியானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பயன்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநர் 1978-79-ல் அனுமதித்தார். அப்பாடங்களைப் பொறுத்தவரை 1979-80-லும் இரண்டாவதாண்டு வகுப்புக்கும் அதே முறை பின்பற்றப்படும்.

7. தொழில் பாடங்களுக்கு புத்தகங்கள் தயாரித்து வெளியிட மிகுந்த செலவாகும். அவற்றுக்கு நல்ல புத்தகங்களை தயாரிக்க காலமும் அதிகமாகும். எனவே தொழில் பாடங்கள் ஒரு நிலையான தன்மைக்கு வரும் வரை அவற்றுக்கு பாட நூல்கள் தயாரித்து வெளியிட வேண்டாமென கருதப்பட்டது. ஆயினும், அப்பாடங்களுக்கும் வழிகாட்டி நூல்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. கற்றுத்தர வேண்டிய முக்கியமான அம்சங்கள், செயல் முறையில் விளக்க வேண்டிய சோதனைகள் முதலியவற்றை அவ்வழிகாட்டி நூல்கள் விளக்குகின்றன. தொழிற் பாடங்களைக் கற்றுத்தரும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அந்நூல்கள் இலவசமாகத் தரப்பட்டுள்ளன. தொழிற் பாட ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்நூல்களைத் தொழிற் பாட மாணவர்களும் விரும்பினால் பயன்படுத்தலாம்,

கற்பிப்புக் கட்டணம், படிப்புதவித் தொகைகள் முதலியவை—

8. மேல் நிலைப்பள்ளிகளில் தமிழையோ சிறுபான்மை மொழிகளையோ பாட மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் எதுவும் தரவேண்டியதில்லை. அப்படி சிறுபான்மை மொழியில் பயில மேல் நிலைப் பள்ளிகளில் வசதி செய்து தரப்படவில்லை என்ற காரணத்தால் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கொண்டு பயில்பவர்களும் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

9. மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடங்களைப் பயில்பவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் பயிலும் தொழிலோடு இணைந்ததான கலை, அறிவியல் பாடம் ஒன்றைப் பயிலவேண்டும் என்பது மேலே சொல்லப்பட்டது. அந்த கலை/அறிவியல் பாடம் எந்த மொழியில் பயிலப்படுகிறது என்ற அடிப்படையிலேயே தொழிற் பாட மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவது குறித்து முடிவு செய்யப்படுகிறது. அதாவது அந்த கலை/அறிவியல் பாடத்தை தமிழில் அல்லது சிறுபான்மை மொழியில் பயிலும் மாணவர் (தொழிற் பாடத்தை எந்த மொழியின் மூலமாக பயின்றாலும்) கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

10. சாதாரண மேல் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டு பயில்பவர்கள் மாதம் ரூ. 20 விதம் ஆண்டுக்கு 10 மாதம் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும். தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வழக்கமாகவுள்ள கட்டணச் சலுகைகள் இங்கும் உண்டு.

11. மேல் நிலைப் பள்ளிகளில் எந்த மொழியைப் பாட மொழியாகக் கொண்டு பயின்றாலும் பின்வருமாறு ஆண்டுதோறும் சிறப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்:—

	ரூ.
சிறப்புக் கட்டணம்	15
வசதிக் கட்டணம்	10
ஆய்வகக் கட்டணம்	20

12. கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைகள் ஆண்டுதோறும் ஒவ்வொரு வட்டார ஒன்றியத்திலும் 4 மாணவர்களுக்கு புதியதாக வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகைகளைப் பெறுபவர்கள் தமது மேல்நிலைப் பள்ளிப் படிப்பு முடியும்வரை அத் தொகைகளைப் பெறலாம். தாங்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பள்ளியிலேயே மேல்நிலைப்பள்ளி வகுப்பைப் படித்தாலும் சரி, வேறு பள்ளிகளில் படித்தாலும் சரி, அவர்களுக்கு இச்சலுகை உண்டு.

ஆசிரியர்கள் தகுதி, சம்பள விகிதம் முதலியன—

13. மேல் நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் தரம் உயர்த்தப்பட்டதாகும். எனவே ஆசிரியர்களுக்கு பட்டமேற்படிப்புத் தகுதி தேவைப்படுகிறது. அப்பள்ளிகளில் கல்லூரிகளிலுள்ள விரிவுரையாற்றும் முறைப்படியல்லாமல் பள்ளிகளில் உள்ளதுபோல் கற்றுத்தரும் முறையே கடைபிடிக்கப்படுவதால் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சித் தகுதியும் இன்றியமையாததாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு மேல் நிலைப் பள்ளிகளில் கலை, அறிவியல் பாடங்களைக் கற்றுத்தரும் ஆசிரியர்களுக்குப் பின்வரும் தகுதிகளை அரசு நிர்ணயித்துள்ளது:—

பதவி.	பொதுப் படிப்பு.	பயிற்சித் தகுதி.	ஆசிரியராக அனுபவம்.
(1)	(2)	(3)	(4)
1. தலைமையாசிரியர்	பட்டமேற்படிப்பு (எம்.ஏ./எம்.எஸ்.சி./எம்.காம்.)	பி.எட்/பி.டி.	பத்தாண்டு அனுபவம். (இந்தப் பத்தாண்டுகளில் பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் ஆக இரண்டாண்டுகள் இருந்திருக்கவேண்டும்.
2. கலை, அறிவியல் பாட ஆசிரியர்கள்.	மேல் நிலைப் பள்ளியில் கற்றுத் தர வேண்டிய பாடத்தில் பட்ட மேற்படிப்புத் தகுதி.	பி.எட்./பி.டி.	..

14. மேற்சொன்ன முழுத்தகுதி பெற்ற ஆசிரியர்களுக்கான மூன்றாவது ஊதியக் குழு சம்பள விகிதங்கள் வருமாறு:

பதவி.	சம்பள விகிதம்.	
	சாதாரண நிலை.	10 ஆண்டு பணி முடித்த பின் கிடைக்கும் தேர்வுத் தர நிலை.
(1)	(2) ரூ.	(3) ரூ.
முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள்—		
1. தலைமையாசிரியர்	750— 50— 1,350	850— 50— 1,200— 60— 1,500.
2. கலை, அறிவியல் பாட ஆசிரியர் ..	675— 35— 885— 45— 1,200.	750— 50— 1,350.

15. 1978–79 முதல் பதினோராவது வகுப்பி நீங்கிவிட்டபடியால் ஓரளவு பி.டி. ஆசிரியர்கள் ''உபரி''யானார்கள். அவர்கள் வேலை இழக்காமல் பார்த்துக் கொள்வதற்கும், மேலும், பட்ட மேற்படிப்புத் தகுதியும் ஆசிரியர் பயிற்சியும் பெற்று உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளுக்குச் செல்ல வழி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும், அவ்வாறு தகுதி பெற்றவர்களை மேல் நிலைப் பள்ளிகளில் நியமிக்க அரசு அனுமதித்தது. அவ்வாறு முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் உயர் நிலைப் பள்ளிகளில் இல்லாத காரணத்தால், உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களில் (பட்ட மேற்படிப்புத் தகுதி இல்லாமல்) பி. டி. மட்டும் உடைய ஆசிரியர்களும் அவர்கள் எந்தப் பாடத்தில் பட்டம் (பி. ஏ./பி. எஸ். சி./பி. காம்.) பெற்றுள்ளனரோ அந்தப் பாடத்தை மேல் நிலைப் பள்ளிகளில் கற்றுத் தர அரசு அனுமதித்துள்ளது. மேற்சொன்ன முழுத்தகுதிகளையும் பெறாத மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும், அவரவர்களுக்கு உயர் நிலைப் பள்ளியில் என்ன சம்பள விகிதம் உண்டோ அதே சம்பள விகிதத்தில் தான் மேல் நிலைப்பள்ளியில் சம்பளம் தரப்படும். ஆனால் சிறப்பூதியமாக தலைமையாசிரியருக்கு மாதம் ரூ. 50-ம் ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 25-ம் தரப்படும். இவர்கள் முழுத் தகுதி பெற்ற பின் மேல் நிலைப் பள்ளிக்குரிய சம்பள விகிதத்தைப் பெறலாம். மேல்நிலைப் பள்ளிக்கு கலை, அறிவியல பாடங்களை கற்றுந் தருவதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை (முழுத் தகுதி பெற்றவர்களும். பெறாதவர்களும்) மேல் நிலைப் பள்ளிகளில் நியமித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

16. மேற்கொண்டு தேவையாயிருந்த கலை, அறிவியல் பாட ஆசிரியர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய 1978-79-ல் மேல் நிலைப் பள்ளிகளுக்கு 1,300 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்பளிக்கப்பட்டன. 1979-80-ல் அப்பள்ளி களுக்கு 1,740 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும். இவ்வாசிரியர்கள் 870 சாதாரண மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளிக்கு இருவர் வீதம் முதல் பகுதி, இரண்டாம் பகுதி மொழிகளைக் (தேவையானால் மூன்றாம் பகுதியில் பயிலும் மொழிகளையும்) கற்றுத்தரப் பயன்படுத்தப்படுவார்கள்.

17. தற்பொழுது மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வியை அந்தந்தப் பள்ளியிலுள்ள உயர் நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியரோ அல்லது சாதாரண நிலை உடற்பயிற்சி இயக்குநரோ தாம் கவனித்து வருகிறார். அவர் களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகள் தரவேண்டும் என்ற அடிப்படையில் மேல் நிலைப்பள்ளிகளில் உள்ள அத்தகைய பதவிகளில் 400 பதவிகள் 1979-80 முதல் ரூ. 600—30—750—35—890—40—1,050 (தேர்வு நிலை ரூ. 675—35—885—45—1,200) சம்பள விகிதத்தில் உடற்பயிற்சி இயக்குநர் பதவி களாக உயர்த்தப்படும்.

18. மேல் நிலைப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கு ஆய்வுக் கூடங்களில் உதவி செய்ய வகை செய்ய வேண்டியுள்ளது. இதற்காக அறிவியல் "மானிட்டர்"களை ஏற்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற்பாடங்கள்.

19. மேல் நிலைப்பள்ளி மாணவர்களில் 25 விழுக்காட்டினர் தொழிற் பாடங்களைப் பயில முன் வந்திருப்பது இத்தொழிற் பாடங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு அறிகுறியாகும். 709 மேல்நிலைப் பள்ளி களில் ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது மேற்பட்ட தொழிற்பாட வகுப்புக்கள் உள்ளன. மொத்தம் உள்ள வகுப்புக்கள் 1,153 ஆகும்.

20. தொழிற்பாடம் பயில்வோர்கள் மொத்தம் 24,400 பேராவர். அவர்கள் பயிலும் தொழிற் பாடங்கள் 37 ஆகும். அவை 6 பெருந்துறைகளைச் சார்ந்தவையாகும். மிகப் பெரும் எண்ணிக்கையினர் (10,000-க்கு மேல்), பயில்வது வாணிகத்துறையைச் சார்ந்த தொழிற்பாடங்கள் ஆகும். பொறி யியல், தொழில் நுட்பவியல் துறைகளைச் சார்ந்த தொழிற் பாடங்களை 6,700 மாணவர்களும், வேளாண்மைத் தொழிற் பாடங்களை 2,500 மாணவர் களும், மனையியல், மருத்துவம், இசை ஆகியத் துறைகளைச் சார்ந்த தொழிற் பாடங்களை மீதி தொழிற் பாட மாணவர்களும் பயில்கின்றனர்.

21. தொழிற் பாட வகுப்புக்கள் 1,153-ல் 491-க்கான ஆசிரியர் தேவை உயர்நிலைப் பள்ளிகளில் முன்னர் இருமுனைப் பாடங்களைக் கற்பித்துவந்த ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மற்றப் பாடங்களைக் கற்றுத்தர மாதம் ரூ. 150 ஊதியத்தில் பகுதி நேர ஆசிரியர்களை அரசு நியமித்துள்ளது. இவர்கள் பல்வேறு துறைகளில் ஏற்கனவே பணி செய்பவர்கள் ஆவார்கள். எனவே அவர்கள் பணி செய்யும் இடங்களிலேயே மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சியும் அவர்களைக் கொண்டே அளிக்கலாம். அந்தந்தப் பள்ளிகளில் உள்ள நிலைமைகளுக்கேற்ப தொழிற் பாடங்களுக்கான பள்ளி நேரம், பள்ளி நாட்கள் ஆகியவற்றை அமைத்துக்கொள்ள பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

22. 1979-80-ல் மேல் நிலைப் பள்ளிகளில் இரண்டாண்டு வகுப்புகளிலும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருவதற்குத் தேவையான அளவுக்குக் கூடுதலாகப் பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

23. முதன் முதலாக 1978-79-ல் மாணவர்களிடையே "படிக்கும்போழ்தே பணம் ஈட்ட வகை செய்தல்" என்ற கொள்கை அடிப்படையில், மாணவர்களிடையே பொறுப்பு உணர்ச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தொழிற் பாட வகுப்புகளில் ஆசிரியர்களுக்கு உதவ "தொழிற்பாட மானிட்டர்கள்" நியமிக்க வகை செய்யப்பட்டது. இந்த மானிட்டர்களுக்கு மாதம் ரூ. 20 விதம் ஆண்டுக்கு 10 மாதங்களுக்கு ஊதியம் தரப்படும். ஒவ்வொரு தொழிற் பாடத்துக்கும் ஒரு மானிட்டர் உண்டு. அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தொழிற் பாட ஆசிரியர்களைக் கலந்து தகுதியுள்ள மாணவரை மானிட்டராக நியமிப்பார். இரண்டாவதாண்டு மேல் நிலைப் பள்ளி வகுப்பு தொடங்கியதும் ஒவ்வொரு தொழிற் பாடத்திற்கும், முதலாவதாண்டுக்கு ஒருவர், இரண்டாவதாண்டுக்கு ஒருவர் ஆக இரண்டு மானிட்டர்கள் இருப்பார்.

கட்டடங்களும், தளவாடங்களும்.

24. 1978-79-ல் தற்காலிக நடவடிக்கையாக மேல்நிலைப் பள்ளிகள் தேவையான அளவுக்கு ஷிப்டு முறையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. அந்தந்தப் பள்ளியில் வசதிக்கேற்ப ஷிப்டுகளின் வேலை நேரத்தை அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. அதே நோக்கில் அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதி செய்ய பெருந் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 413 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் ஆதிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத்துறைப் பள்ளிகள் 5. மீதி 408 பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்தவை. அந்த 408 பள்ளிகளில் பூந்தமல்லியிலுள்ள பார்வையற்றோர் பள்ளிக்குக் கூடுதல் இட வசதி தேவையில்லை. மீதி 407 பள்ளிகளுக்கும் பள்ளிக்கு சுமார் ரூ. 1.57 லட்சம் செலவில் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் இணைந்த கட்டடம் கட்டித் தர ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 133 பள்ளிகளுக்கான இக்கட்டட வேலைக்கு போன ஆண்டில் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சுமார் 80 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றை பள்ளிகள் பயன்படுத்துகின்றன. 274 அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கான கட்டட வேலைகளுக்கு அண்மையில் ஏற்பளிக்கப்பட்டது. அனைத்துக் கட்டட வேலைகளும் 1979 ஜூனுக்கு முன் முடிவடையும். இரண்டாவதாண்டு மேல்நிலைப்பள்ளி வகுப்புகள் தொடங்கும்பொழுது வகுப்பறை மற்றும் ஆய்வுக்கூட வசதி இவ்வாறு அப்பள்ளிகளில் ஆயத்தமாக இருக்கும்.

25. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளும் கட்டடம் மற்றும் ஆய்வுக்கூட வசதி செய்ய அரசு மானியம் கோரி வந்துள்ளன. அவர்கள் மேல் நிலைப் பள்ளி வகுப்பு தொடங்க அனுமதிக்கும்பொழுதே அவ்வசதிகளை அவர்களே செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அனுமதி தரப்பட்டது. இருந்தபோதிலும் அவர்கள் கோரிக்கையை அரசு பரிவுடன் ஆய்வு செய்து அவர்கள் கட்டடம் மற்றும் ஆய்வுக்கூட வகையில் செய்யும் செலவில் 40 விழுக்காட்டை, பள்ளிக்கு ரூ. 1 லட்சம் என்ற உச்ச வரம்புக்குட்பட்டு, அரசு மானியமாகத் தர அரசு கருதியுள்ளது. இதற்காக 1979-80 வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 1.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி நிர்வாகங்கள் தங்கள் பணத்திலிருந்து செய்யவேண்டிய 60 சதவிகிதம் செலவை ஈடுகட்ட பள்ளிப் பொது நிதியில் உள்ள உபரிப் பணத்தை அனுமதிக்கத்தக்க அளவுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

26. அரசு மேல் நிலைப் பள்ளிகளில் முதலாண்டு வகுப்புக்கான ஆய்வுக்கூடக் கருவிகளை வாங்க ரூ. 2 கோடி செலவுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80-ல் அரசு மேல் நிலைப் பள்ளிகளில் இரண்டாவதாண்டு வகுப்புக்காக மேலும் ஆய்வுக்கூடக் கருவிகளை வாங்க வகை செய்யப்படும்.

நூலக வசதிகள்.

27. பள்ளிக்கு ரூ. 6,000 செலவில் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1979-80-ல் நூலகப் புத்தகங்கள் வாங்கப்படும். தனியார் மற்றும் நகராட்சி மேல் நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகம் வாங்க ஆகும் செலவில் 40 விழுக்காடு, பள்ளிக்கு ரூ. 2,400 என்னும் உச்ச வரம்புக்குட்பட்டு அரசு மானியமாக வழங்கப்படும். மேல் நிலைப் பள்ளிகளுக்கும் இவ்வாறு நூலகப் புத்தகங்கள் தரும் பணிக்காக 1979-80-ல் ரூ. 37 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பணியாளர்கள்.

28. மாவட்டக் கல்வி அலுவலர் 48 பேர், மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் 7 பேர், ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆய்வாளர், மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆய்வாளர் ஆகியோர் அலுவலகங்களில் மேல் நிலைப் பள்ளித் திட்டத்தால் ஏற்பட்டுள்ள கூடுதல் நிருவாக வேலையை கவனிக்க அலுவலகத்திற்கு ஒரு இளநிலை உதவியாளர் வீதம் கூடுதலாக 1979-80-ல் நியமனம் செய்யப்படும்.

IV. பள்ளிச்சாராக் கல்வியும் முதியோர் கல்வியும்.

1. 1971-ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கின்படி தமிழ்நாட்டில் 39.56 விழுக்காட்டினர் (ஆண்களில் 51.68 விழுக்காட்டினரும், பெண்களில் 26.83 விழுக்காட்டினரும்) எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர். அக் கணக்கின்படி அனைத்திந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் விழுக்காடு 29.34 ஆகும் (ஆண்கள் 39.51 விழுக்காடு, பெண்கள் 18.44 விழுக்காடு) தமிழ்நாட்டில் 1971-ம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி இருந்த 4.12 கோடி மக்களுள் 1.63 கோடி பேரே எழுதப் படிக்கத் தெரிந்து இருந்தனர்.

2. மொத்த மக்கள் தொகையிலிருந்து 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் எண்ணிக்கையை நீக்கிவிட்டு திருத்திய எழுத்தறிவு விகிதம் கணக்கிடப்படுகிறது. அப்படிக் கணக்கிட்டால், 1971 மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு 45.40 சதவிகிதம் (ஆண்களில் 59.54 சதவிகிதம்; பெண்களில் 30.92 சதவிகிதம்), அனைத்திந்தியாவிலும் 34.45 சதவிகிதம் (ஆண்களில் 45.95 சதவிகிதம்); (பெண்களில் 21.97 சதவிகிதம்) ஆகும்.

3. பதினொன்கு வயதுக்குக் குறைந்த அனைத்துச் சிறுவர் சிறுமியரையும் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும் என்னும் முயற்சிகளில் ஈடுபடும் அதே நேரத்தில், பள்ளிக்கு வராதவர்கள், வந்து நின்றுவிட்டவர்கள், வயது வந்தவர்கள் ஆகியோருக்கும் பள்ளி சாராக் கல்வி, மற்றும் முதியோர் கல்வி வசதிகள் அளித்து அவர்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வழி செய்ய வேண்டும் என்பதில் மைய அரசும், மாநில அரசும் மிகவும் அக்கறை கொண்டுள்ளன.

பள்ளி சாராக் கல்வி.

4. 6—14 வயதுச் சிறுவர் சிறுமியருள் பள்ளியிலேயே சேராதவர்களும், சேர்ந்து ஓரிரு ஆண்டு படித்துவிட்டு நின்றுவிட்டவர்களும் சமுதாயத்தில் மிகுந்த வறுமையால் வாடும் பிரிவினரைச் சார்ந்தவர்களாவார்கள். அவர்கள்

முறையான பள்ளிகளில் உள்ள வசதிகளை நன்கு பயன்படுத்த இயலாது எனவே 11—14 வயதினர் அனைவரையும் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமாயின் அவர்களுக்கு இசைந்த மாற்றங்களைக்கொண்ட முறை தேவை. அதாவது பாடத் திட்டம், பயிற்றுமுறை, படிக்க வேண்டிய மொத்த கால வரம்பு, நாள்தோறும் பயிற்றுவிக்கும் நேரம் ஆகிய அனைத்திலும் மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. பள்ளி சாராக் கல்வி மையங்கள் அவர்களுக்கு இவ்வசதிகளைச் செய்கின்றன. அம்மையங்களை பள்ளி சாராக் கல்வித்துறை 1976-77-ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்றுவீதம் முதலில் தொடங்கியது. இம்மையங்களின் எண்ணிக்கை 1977-78-ல் 2 ஆகவும், 1978-79-ல் 4 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1,496 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும். 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும், ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும். இம்மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேராவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. ' பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் நாள்தோறும் சுமார் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 50 மதிப்பூதியம் பெறுகின்றனர்.

5. மேற்சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன. இவற்றில் சுமார் 25,000 பேர் பயில்கின்றனர். மேலும் இம்மையங்களை அடுத்த ஆண்டு தொடங்க விரும்பும் வசதி படைத்த ஊராட்சி ஒன்றியங்கள் இவ்வாறு தொடங்க ஊக்குவிக்கப்படும்.

6. பள்ளி சாராக் கல்வியில் ஒரு மத்திய அரசுப் பண உதவித் திட்டம் 1978-79-ல் செயல்பட்டது. இத் திட்டத்தின் கீழ் 15—25 வயதுத் தொகுதியினருக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோயமுத்தூர், தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 இடங்களில் இத்திட்டம் செயல்பட்டது. பாதி மாவட்டங்களில் செலவை மைய அரசும், பாதியில் மாநில அரசும் ஏற்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் செலவானது. மொத்தம் சுமார் 24,000 மாணவர்கள் பயனடைந்தனர்.

7. ஏழ்மைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களும், எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டவர்களுமான இளைஞர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தரத்தில் கல்வி கற்பிக்க மைலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வென்டில் 1975-78 ஆண்டுகளில் மாலை நேரங்களில் பள்ளி சாராக் கல்வி வகுப்புகள் நடத்தப் பட்டன.

முதியோர் கல்வி.

8. இந்நாடு முழுவதிலும், வரும் ஐந்து ஆண்டுகளில் 15—35 வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுள் எழுதப் படிக்கத் தெரியாமலிருக்கும் சுமார் 10 கோடி பேர்களுக்கு, குறைந்த அளவு எழுதப் · படிக்கவாவது கற்றுக் கொடுக்க வேண்டும் என்பது மைய அரசின் நோக்கமாகும். அவர்களுக்கு அளிக்கப்படும் முதியோர் கல்வியின் மூலம் அவர்கள் மேற்கொண்டு தாமாகவே படிப்பறிவை வளர்த்துக் கொள்ளும் திறனைப் பெற்று, தமது வளர்ச்சிக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாய வளர்ச்சிக்கும், தன்னம்பிக்கையுடன் தீவிர மாகப் பாடுபட இயலும். இக்குறிக்கோளைத் தமிழ்நாட்டில் நிறைவேற்ற வேண்டுமாயின் வரும் 5 ஆண்டுகளில் 15—35 வயதினருள் எழுத்தறிவற்ற வர்கள் 65 லட்சம் பேருக்கு (ஆண்கள் 21 லட்சம் பேரும், பெண்கள் 44 லட்சம் பேரும்) எழுத்தறிவிக்க வேண்டும். அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதியோர் கல்வித் திட்டங்களைக் கவனிக்க கூடுதல் நிருவாகப் பணியாளர்களை நியமிப்பது குறித்து ஆய்வு செய்யப் பட்டு வருகிறது.

9. முதியோர் கல்வி அளித்திட நபருக்கு ரூ. 75 செலவு ஆகும் . என்ற மைய அரசின் குறைந்த பட்ச மதிப்பீட்டின் அடிப்படையின் கணக்கிட் டாலும் 65 லட்சம் பேருக்கு எழுத்தறிவிக்க பெருந் தொகையான ரூ. 50 கோடி அளவில் தேவைப்படும். 65 லட்சம் பேருக்கு எழுத்தறிவிக்கும் இப் பணியில் கால் பகுதிக்கு மைய அரசு (கல்லூரி மாணவர்களைக் கொண்ட தேசிய பணிப் பிரிவு, நேரு இளைஞர் மன்றங்கள், தனியார் முயற்சிகள் ஆகியவை மூலமாக) நிதி உதவி செய்யக்கூடுமெனத் தெரிய வருகிறது. ஆயினும் மீதி முக்கால் பகுதி பணியையும் மாநில அரசே செய்ய வேண்டி யிருக்கும். இதற்கு தனியான மைய அரசுப் பண உதவி உண்டா என்பது பற்றி இதுவரை மைய அரசிடமிருந்து தெளிவான விளக்கம் எதுவும் இல்லை. நிதி வசதிக் குறைந்த மாநில அரசு இந்த முக்கியமான தேசியப் பணியைச் செயல்படுத்த மைய அரசு (மாநில அரசுத் திட்டப் பணிகளுக்குத் தரும் பண உதவிக்கு மேலாக) தனி நிதி உதவி தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

10. கிராமப்புறங்களில் எழுத்தறிவிப்பு மையங்கள் 2,600-ஐ 12 மாவட் டங்களில் பரவலாக 1979-80-ல் தொடங்கி நடத்துவதற்கு மட்டும் மைய அரசுப் பண உதவி கிடைக்கும் என்று உறுதியாகத் தெரிய வருகிறது. ஒவ் வொரு மையத்திலும் 30 முதியவர்களுக்கு எழுத்தறிவிக்க 10 மாத வகுப்புகள் நடைபெறும் ஆண்டுதோறும் மொத்தம் 84,000 பேர் இம்மையங்களின் மூலம் பயனடைவர்.

11. வயது வந்தவர்கள் தேவைக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற பாடத் திட்டங்களையும் பாடங்களையும் நன் முறையில் எழுதுவதற்கான எழுத் தாளர் முகாம்கள் ஏழு நடத்த ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மைய அரசு ரூ. 2 லட்சம் பண உதவி தந்தது.

தனியார் அமைப்புகள்.

12. இதுவரை நம் மாநிலத்தில் சுமார் 20 தனியார் அமைப்புகள் முதியோர் கல்விப் பணியைச் செயல்படுத்த மைய அரசு ஏற்பளித்துள்ளது. அவை சுமார் 1,300 மையங்களை நடத்தி சுமார் 40,000 பேருக்கு எழுத்தறி விக்கும் பணியைச் செய்யும். எழுத்தறிவிப்புப் பணிக்காகும் செலவு முழு வதும், இவ்வமைப்புகளின் நிருவாகச் செலவில் 75 விழுக்காடும், என்று தாராளமாக இவ்வமைப்புகளுக்கு மானியம் தர மைய அரசு முன்வந் துள்ளது. இவ்வமைப்புக்களின் பணியை பள்ளி சாராக் கல்வித் துறை கண்காணிக்கிறது. மைய அரசு மானியம் கோரிவரும் தனியார் அமைப்புக் களின் மனுக்களை பள்ளி சாராக் கல்வித் துறை ஆய்வு செய்து மாநில அரசு மூலமாக மைய அரசுக்கு அனுப்பி வைக்கிறது. இதுவரை சுமார் 500 அமைப்புக்கள் மனுச் செய்து, மனுக்கள் ஆய்விலுள்ளது. இனி இவ்வமைப்பு களுக்கு (நேரடியாக இல்லாமல்) மாநில அரசின் மூலமாக மானிய உதவி தர மைய அரசு கொள்கை அளவில் இசைந்துள்ளது.

13. தமிழ்நாடு தொடர் கல்வி வாரியம், முதியோர் கல்விப் பணியில் ஈடு பட்டுள்ள ஒரு தனிப்பட்ட அமைப்பாகும். அது 1977-78-ல் 'எழுத்தறி விப்புப் பணிக்கான மாநில மையம்' ஒன்றைத் தொடங்கியுள்ளது. முதியோர் கல்விப் பணியாளர்களைப் பயிற்றுவித்தல், முதியோருக்கு பயிற்றுவிப்ப தற்கும் அவர்கள் பயில்வதற்கும் ஆன பாடங்களைத் தயாரித்தல், ஆய்வு செய்தல், எழுத்தறிவிப்புப் பணியின் திறனை மதிப்பிடுதல் ஆகிய பணிகளில் அம்மையம் ஈடுபடும். இம்மையத்தின் செலவில் 75 விழுக்காட்டை மைய அரசும், 15 விழுக்காட்டை மாநில அரசும், 10 விழுக்காட்டை அத்தனியார் அமைப்பும் ஏற்கின்றன.

தேசியப் பணிப் பிரிவைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள்.

14. தேசியப் பணிப் பிரிவின் நடவடிக்கைகளில் ஒரு பங்காக ஒவ்வொரு கல்லூரியும் முதியோர் கல்வி மையங்கள் 5-லிருந்து 10 வரை தொடங்குமென் எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிக்கான நிதி உதவியை பல்கலைக் கழக மானியக் குழு நேரடியாகக் கல்லூரிகளுக்குத் தரும். எந்தெந்த வட்டாரத்தில் எவ்விடங்களில் முதியோர் கல்வி மையம் தொடங்க தேவையுள்ளது என்ற ஆய்வை கல்லூரிகள் பலவும் தொடங்கியுள்ளன. பல்கலைக் கழக மானியக் குழுப் பண உதவி வந்ததும் இம்மையங்கள் செயல்படத் துவங்கும். தேசியப் பணிப் பிரிவின் நிதி வசதியைப் பயன்படுத்தி மேலும் பல எழுத்தறிவிப்பு மையங்கள் தொடங்க வாய்ப்பு இருக்கிறது.

நேரு இளைஞர் நிலையங்கள்.

15. நேரு இளைஞர் நிலையங்கள் ஏழு, கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், கோயமுத்தூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் 6 நிலையங்கள் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கான அமைப்பாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். இவை குறிப்பாக, பள்ளிசாராக் கல்வித் துறையில் பயனுள்ள பணிகளைச் செய்கின்றன. பள்ளி சாராக் கல்வி எல்லா இளைஞர்களுக்கும் கிட்டச் செய்வதும், இளைஞர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதும் பாடல்கள், நாடகங்கள் மூலமாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு வசதி செய்வதும், போட்டி விளையாட்டுக்கள், உடற் பயிற்சிக் கல்வி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்வதும் இந்நிலையங்களின் பணிகளாகும். இதுவரை இந்நிலையங்கள் முதியோர் கல்வி மையங்கள் 525-ஐ தொடங்கி சுமார் 16,000 பேருக்கு எழுத்தறிவித்து வருகின்றன.

V.. கல்லூரிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1947 ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1978-79 ஆம் ஆண்டில் 188 ஆக உயர்ந்துள்ளது. 1947 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது; இது 1978-79 ஆம் ஆண்டில் 2 லட்சம் ஆக உயர்ந்துள்ளது. இக் கல்லூரிகளில் படித்து வந்த மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் எண்ணிக்கை ஆகியவை இணைப்பில் தரப்பட்டுள்ளன.

புதிய பல்கலைக் கழகங்கள்.

2. தற்போது தமிழ்நாட்டில் சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களே உள்ளன—(வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்

கலைக் கழகம், சென்னை ஆகியவை நீங்கலாக) மொத்தமுள்ள 188 கலை, அறிவியல் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 77 மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துடனும், ஒன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்தவை. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைக்கப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கஜேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே இம்மாநிலத்தில் மேலும் குறைந்தது இரண்டு புதிய பல்கலைக் கழகங்களையாவது நிறுவுவது இன்றியமையாதது என்பது தெளிவாகும். திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக (கல்லூரிகளுக்கு இணைப்பு அளிக்கும் வகையைச் சார்ந்த) இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவது குறித்து மைய அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டு இதற்கு மைய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளது.

தன்னுரிமையுள்ள கல்லூரிகள்.

3. கல்லூரிகளுக்கு சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடுதான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 6 கல்லூரிகளும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அக்கல்லூரிகள் கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட வகை செய்யப்பட்டுள்ளது. தன்னுரிமை தர வகை செய்து சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகச் சட்டங்கள் 1977 டிசம்பரில் திருத்தப்பட்டன. சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள், தாமே பாடத் திட்டங்களை வகுக்கவும் தேர்வு நடத்தவும் உரிமை பெற்றவை. எனினும் பட்டங்களை அந்தந்தப் பல்கலைக் கழகங்களே வழங்கும். இதுவரை தன்னுரிமை பெற்றுள்ள கல்லூரிகள் செயல்படும் முறையை சில ஆண்டுகள் கவனித்துப் பார்த்து, அதன்பின் இத்திட்டத்தை மாநிலத்திலுள்ள பிற கல்லூரிகளுக்கு விரிவாக்குவதைப்பற்றி யோசிக்கப்படும்.

தொடர் கல்வி.

4. பகல் நேர வகுப்புகளைத் தவிர 30 கல்லூரிகளில் மாலை நேர வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாலை நேர வகுப்புகளில் பயில்வோர்கள் சுமார் 9,000 பேராவர். மாலை நேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுட்பட பல்வகைப் படிப்புகளும் கற்றுத்தரப் படுகின்றன. பட்ட மேற்படிப்பு வகுப்புகளுள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் 1978-79-ல் எம்.எஸ்சி. செயல்முறை வகுப்புகளை மாலையில் நடத்த வசதி செய்யப்பட்டது. இவ்வசதியைப் பயன்படுத்தி உயர்நிலைப் பள்ளி

ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத தகுதி பெற்றுக்கொள்ளலாம்.

5. மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., எம்.ஏ. வகுப்புகளுக்கு அஞ்சல் வழிப்பாட முறை மூலம் பாடம் நடத்தி வருகிறது. இந்த அஞ்சல் முறை வகுப்புகளைப் பலரும் விரும்பிப் படிக்கின்றனர். 1978-79-ல் 43,000-க்கு மேற்பட்டவர்கள் இவற்றில் படித்து வந்தனர்.

6. கடந்த ஆண்டு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் "அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக வகுப்புகளை" தொடங்கியது. இந்தியக் குடிமக்களுள் தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் வசிப்பவர்களுள் 21 வயதுக்கு மேற்பட்டவர் எவர் வேண்டுமானாலும் இந்த வகுப்பில் சேரலாம். இவ்வகுப்பில் தொடக்க நிலைக்கு முற்பட்ட பிரிவில் 1,190 பேரும், தொடக்க நிலைப் பிரிவில் 520 பேரும் பயின்றுவந்தனர்.

7. இம்மாநிலத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளின் தேவைக்கு இப்பொழுது உள்ள 188 கல்லூரிகள் போதுமானவையாகும். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன்வருகின்றனர். ஆனால், கிராமப்புறப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்பொழுது பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. 1978-79-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 16,773 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி 11,857, தமிழ்ப்பாட மொழி 4,916) பட்ட வகுப்புகளில் 9,491 இடங்களும் (ஆங்கிலப் பாட மொழி—6,432; தமிழ்ப் பாட மொழி—3,059) காலியாக இருந்தன. எனவே, மிகச் சிறப்பான காரணங்கள் இருந்தாலொழிய புதிய கல்லூரிகளைத் தொடங்க அனுமதிப்பதைவிட தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் பயன்படுத்த வகை செய்வதே விரும்பத்தக்கதாகும்.

கல்வித்தர மேம்பாடு.

8. கடந்த சில ஆண்டுகளாக அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக எட்டு புதிய படிப்புகளைத் தொடங்க 1977-78-லும், 18 படிப்புகளைத் தொடங்க 1978-79-லும் ஏற்பளிக்கப்பட்டது. 1979-80-ல் புதிய பட்ட வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும், புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவக்க ரூ. 3 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியை ஒரு பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதிகள் பெருக்கப்படுகின்றன. இதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 5 லட்சமும் 1978-79-ல் ரூ. 6 லட்சமும் ஒதுக்கப்பட்டன. அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் பயன்படுத்திட பாடப் புத்தகங்களைக் கொண்ட புத்தக நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

10. கல்லூரி மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச் சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவை படிப்படியாக அமைக்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இவ்வகையில் அரசுக் கல்லூரிகளுக்கு ரூ. 10 லட்சமும், தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 5 லட்சமும் செலவிட ஏற்பளிக்கப்பட்டது. அரசுக் கல்லூரிகளில் இவ்வசதிகளுக்காக 1979-80-ல் ரூ. ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் விளையாட்டுக் கருவிகள் வாங்கவும் 1979-80-ல் ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. அரசுக் கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்காக 1978-79-ல் ரூ. 18 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது (புதிய வேலைகளுக்காக ரூ. 8 லட்சமும், முன் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டு முடிவு பெறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1979-80-ல் ஆகும் செலவுக்காக ரூ. 10 லட்சமும்), தனியார் கல்லூரிகளுக்குக் கட்டட மானியம் தர ரூ. 12 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் ஆசிரியைகளுக்கு குடியிருப்புகள் கட்டித்தர ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

12. கல்லூரிகளில் வசதிகளைப் பெருக்கிட ஆகும் செலவில் ஒரு பகுதியை கல்லூரி நிருவாகம் ஏற்குமானால் மற்றப் பகுதியை ஈடுகட்ட நிதி உதவி செய்யப் பல்கலைக்கழக மானிய குழு முன்வந்துள்ளது. கட்டடச் செலவானால் 50 விழுக்காட்டை நிருவாகம் ஏற்க வேண்டும். புத்தகம், தளவாடம், விளையாட்டுத்திடல் மேம்பாடு ஆகிய இனங்களானால் 25 விழுக்காட்டை நிருவாகம் ஏற்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் கட்டடம், ஆய்வுக்கூட மேம்பாடு, நூலகம், விளையாட்டுத் திடல் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து 43 அரசுக் கல்லூரிகள் பண உதவி பெற வகை செய்து அதற்கான மாநில அரசுப் பங்குத் தொகைக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

13. கல்லூரி ஆசிரியர் கல்வித்தர உயர்வுக்கான பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்திற்கு இவ்வரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிப் படிப்புக்குச் செல்லும் ஆசிரியர்களின் சம்பளச் செலவை மாநில அரசும், அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படுபவர்களுடைய சம்பளச் செலவை பல்கலைக்கழக மானியக் குழுவும் ஏற்கின்றன.

14. பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்.டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் முகாமையில் அனுப்பப்பட்டு வருகின்றனர். 1973-74 முதல் இத்திட்டத்தின் கீழ் 22 பேர் டாக்டர் நிலை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். 1979-80-ல் புதிதாக 6 பேராசிரியர்கள் டாக்டர் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள். கருத்தரங்குகளிலும் மறு பயிற்சி வகுப்புகளிலும் கலந்துகொள்ள ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப் பணமும்.

15. புகுமுக வகுப்புகளில் கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. இலவச புகுமுக வகுப்புக் கல்வித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூபாய் 2 கோடியாகும். தமிழ்ப் பயிற்றுமொழிக்குரிய பயிற்சி உதவிப் பணத்திற்கான விவரங்கள் பின்னர் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்டவற்றுடன் வேறு பல படிப்புதவித் தொகைத் திட்டங்களும் பயிற்சி உதவிப் பணத் திட்டங்களும் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை வருமாறு:

திட்டம்.	1978–79 ஆம் ஆண்டில் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை.	1978–79 ஆம் ஆண்டில் (புதியவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை) மொத்த எண்ணிக்கை.	1979–80 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள பணம்.
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் லட்சங்களில்)
தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்.	990	5,352	32
பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய தேசிய படிப்புதவித் தொகை.	70	284	3
தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம்.	1.444	5,142	40

16. 1974-75-ஆம் ஆண்டிலிருந்து தேசியப் படிப்புதவித் தொகை, பள்ளி ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்படும் தேசிய படிப்புதவித் தொகை ஆகிய இரண்டுக்கும் ஆகும் செலவை மாநில அரசே ஏற்று வருகின்றது. உடல் ஊனமுற்றவர்கள், பாதுகாப்புப் பணியாளரது குழந்தைகள், விடுதலைப் போர் வீரர்களின் குழந்தைகள், மற்றும் பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் போன்றவர்களுக்கான படிப்புதவித் தொகை திட்டங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட இனங்கள், பழங்குடிகள் மற்றும் பின் தங்கிய வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

17. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத்தேர்வில் 60 சதவிதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ஆண்டுதோறும் உதவிப்பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினரைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும் இவ்வுதவிப் பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப்பணம் உண்டு. உதவிப் பணம் ஆளுக்கு ரூபாய் 300 வழங்கப்படுகின்றது. அவர்கள் தாம் விரும்பும் மேற்படிப்பை மேற்கொள்ள இது அவர்களுக்கு உதவும். தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்றெல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூபாய் 300 உதவி கிட்டும். இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு ரூபாய் 5 லட்சமாகும்.

18. 1977-78 ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர் மலைச்சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச்சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூபாய் 2.500 என்பது நீக்கப்பட்டு விட்டது.

19. கல்லூரிகளில் பட்டப் படிப்பு முதலாண்டு வகுப்பில் சேர்ந்துவிட்ட மாணவர்கள் பின் பொறியியல், மருத்துவம் முதலிய கல்லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கலைக் கல்லூரியை விட்டு முதல் பருவம்/முதல் ஆறு மாதம் முடிவதற்குள் விலகிச் சென்றால் அவர்கள் கலைக் கல்லூரியில் கட்டிய கட்டணத்தில் முதல் பருவ/முதல் ஆறு மாதக் கட்டணம் தவிர மீதியை அவர்களுக்குத் திருப்பித் தந்துவிடவேண்டுமென கல்லூரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி.

20. 1966-67 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் தமிழும் பயிற்று மொழியாக ஆனது. 1967-68 ஆம் ஆண்டிலிருந்து பி.ஏ. பட்ட வகுப்பிலும், 1968-69 ஆம் ஆண்டிலிருந்து புகுமுக வகுப்பில் அறிவியல் பாடங்களிலும், 1969-70 ஆம் ஆண்டிலிருந்து பி.எஸ்.சி. பாட வகுப்பிலும் தமிழ் பாட மொழியானது. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பி.ஏ., பி.எஸ்.சி., வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணம் புத்தகப் படியாக ஆண்டுக்கு ரூபாய் 180-ம் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் 50-ம் வழங்கப்படுகின்றன. 1975-76 ஆம் ஆண்டு முதல் 1977-78 முடிய இந்த உதவிப்பணம் பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுதுபொருட்கள் ஆகியவைகளாகவே தரப்பட்டு வந்தது. 1978-79 முதல் இதை மாற்றி மீண்டும் பணமாகவே தரப்படுகிறது. 1978-79-ல் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு பயின்று வந்தவர்கள் புகுமுக வகுப்பில் 18,218 பேரும் பட்ட வகுப்பில் 12,699 பேரும் ஆவார்கள்.

21. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரை 861 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. சிறப்புச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களைக் கொண்ட 13 தொகுப்புகளையும் அது வெளியிட்டுள்ளது. 861 பாட நூல்களில், 172 மொழி பெயர்ப்பு நூல்களும், 689 மூல நூல்களும் ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி செலவாகியுள்ளது. 1979-80-ம் ஆண்டில் இந்நிறுவனம் அரசியல், தத்துவம், பொருளியல் ஆகிய பாடங்களில் பட்டமேற்படிப்புக்கான தமிழ் நூல்களை வெளியிட இருக்கிறது. வரலாற்றில் பட்ட மேற்படிப்புக்கான தமிழ் பாட நூல்களை இந்நிறுவனம் ஏற்கெனவே வெளியிட்டுள்ளது.

கல்லூரி மாணவர் நலனுக்கான குழுக்கள்.

22. ஒவ்வொரு கல்லூரியிலும், மாணவர் நலனுக்கான குழு ஒன்றை அமைக்க வேண்டுமென அரசு ஏற்கெனவே ஆணையிட்டு உள்ளது. ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர், கல்லூரி நிருவாகம், ஆகியோரின் பிரதிநிதிகளையும் வருவாய்த்துறை, காவல்துறை அதிகாரிகளையும் கொண்ட குழு அடிக்கடி கூடி மாணவர் குறைகளையும் பிரச்சினைகளையும் சுமுகமாக உடனுக்குடன் தீர்த்தும், மாணவர்கள் நலனைப் பேணியும் கல்லூரி செவ்வனே நடைபெற உதவ வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. பல கல்லூரிகளில் இக்குழுக்கள் அமைக்கப்படாமல் இருப்பது தெரிய வந்து அவற்றிலும் உடனடியாக இக்குழுக்களை அமைக்குமாறு அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கல்லூரி ஆசிரியர்கள் நலன்.

23. பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதங்கள் பின்வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு அதாவது :

அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள் ; சட்டக் கல்லூரிகள் ; பொறியியல் கல்லூரிகளும், பல்தொழில் பயிலகங்களும் மற்றும் சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் 1—4—1974 முதல் அமுலாக்கப்பட்டது. பணப்பயன் 1—1—1977 முதல் தரப்பட்டது. சமுதாயப்பணிப் பள்ளிகள், கீழ்த்திசைப் படிப்புக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுக்கும் இச்சம்பள விகிதங்களை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது. இச்சம்பள விகிதங்களை அமுல்படுத்தி 1—1—1967 முதல், சம்பள நிலுவைத் தொகைகளை ஆசிரியர்களுக்கு வழங்க எவ்வளவு தொகை தேவை என தனியார் கல்லூரிகள் தெரிவித்தனவோ அத்தொகைகள் அவற்றுக்கு மானியமாகத் தரப்பட்டுவிட்டன. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பலருக்கு பணிப் புத்தகங்கள், சம்பளம் பெற்றதற்கான ரசீதுப் புத்தகங்கள் போன்றவை ஒழுங்காக இல்லை என்பதால் 1—1—1974 முதல் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் 8,000 பேருக்கு புதிய சம்பள விகிதத்தில் சேரவேண்டிய சம்பள நிலுவைத் தொகைகளைக் கணக்கிட்டுத் தருவது மிகக் கடினமாக இருந்தபோதிலும் பாராட்டத்தக்க விரைவுடன் இப்பணி செய்யப்பட்டுள்ளது. தேவையான விவரங்களைத் தந்த தனியார் கல்லூரிகள் அனைத்தின் ஆசிரியர்கள் அனைவருக்கும் பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. நிலுவைச் சம்பளம் கொடுக்கவும் மானியம் வழங்கப்பட்டு விட்டது. மீதி இருக்கும் ஒரு சிலரைப் பொறுத்த வரையிலும் இவ்வேலையை விரைவில் செய்து முடிக்க தனி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

24. இப்புதிய சம்பள விகிதத்தை அமுல்படுத்தியதுடன் கல்லூரி ஆசிரியர் நலனுக்கான வேறுபல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. 1—12—1977 அன்று மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள் (டெமான்ஸ்ரேட்டர்), பயிற்றுநர்கள் (டியூட்டர்) ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.காம்., போன்றவை) தகுதி பெற்றிருந்தவர்களுக்கெல்லாம் 1—12—1977 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்தத் தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்பு தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்து வரும்.

தனியார் கல்லூரிகள்.

25. தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத் தாழ்வின்றியும் சம்பளம் பெற்றுவர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் புதிய முறையை 1—6—1977 முதல் அரசு செயல் படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப் பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது. இதற் கான அரசு மானியம் ஆண்டுக்கு 8-க்கு மேற்பட்ட தவணைகளில் தரப்பட்டு வருகிறது. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் கர்நாடக மாநிலத்தில் உள்ள முறையை பின்பற்றி ஒரு புதிய நடைமுறையை உருவாக்க கருதப்பட்டுள்ளது.

26. தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு காலப் பலன் களை (ஓய்வூதியம் போன்றவை) 1—4—1962 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1976 முதல் மேற்கண்ட பலன்கள் அக்கல்லூரிகளில் உள்ள ஆசிரிய ரல்லாத பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டு உள்ளன. பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்துக்கு ரூபாய் 10,000 தர வகை செய்யும் குழு ஈட்டுறுதி திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப் படும். தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப் பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

27. 1976-ஆம் ஆண்டு இயற்றிய தனியார் கல்லூரிகள் முறைப்படுத்துதல் சட்டத்தில் என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதை விரிவாக ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், ஆசிரிய ரல்லாத பணியாளர், நிருவாகங்கள் ஆகிய முத்தரப்பினர் சங்கங்களின் பிரதி நிதிகளும் அக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

28. அந்தந்த வட்டாரத்திலுள்ள கல்லூரி நிருவாகத்தினரைச் சந்தித்து கல்லூரிக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான சரியான சூழ்நிலையை உரு வாக்குவதன் தேவை அவர்களிடம் வலியுறுத்தப்படும்.

பணிப் பாதுகாப்பு.

29. கல்லூரிகளில் 31—3—1977 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியரா யினும் சரி அல்லது ஆசிரியரல்லாத பணியாளராயினும் சரி, பின்வரும் காரணங் களினால் அதாவது :—

1. 1979-80-ம் ஆண்டு முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால் அல்லது

2. கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைவதால் பதவியிழக்க நேராதபடி பாதுகாப்பளிப்பதாக அரசு ஏற்கெனவே அறிவித்து இருந்தது. இதனை மேலும் விரிவாக்கி, பாட வகுப்பு கள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமல்படுத்துவதாலும் ஏற்படக்கூடிய வேலை நீக்கத்துக்கும் பாதுகாப்பு உண்டு என அறிவிக்கப்பட் டுள்ளது. 31—3—1977 முதல் 26—2—1979 வரையுள்ள காலத்தில், கல்லூரி களில் நிரந்தரமான பணியிடங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் இப்பாது காப்பு விரிவாக்கப் பட்டுள்ளது. இப்பாதுகாப்பைச் செயல்படுத்த பல்கலைக் கழகங்களுடன் கலந்து புதிய பாட வகுப்புகள் தொடங்குவது, சிறப்புப் பயிற்றுவிப்பு, 'வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைப்பு கல்லூரி மையத் திட்டம், மேல் படிப்புக்கு கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல் முதலிய பல வழி முறைகளிலும் அரசு நடவடிக்கை எடுக்கும். கல்லூரி ஆசிரியர்களைப் பள்ளிகளில் பயன்படுத்தும் நோக்கம் அறவே கிடையாது.

சட்டக் கல்வி.

30. சென்னை சட்டக் கல்லூரி மாணவர் தொகை 1968-69-ல் 1,045 ஆக இருந்தது. 1978-79-ல் 2,395 ஆக (முழு வேளை பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,534, மாலை நேரப் பட்டப்படிப்பு வகுப்புகளில் 783 எம்.எல். வகுப்புகளில் 78) உயர்ந்துள்ளது. குற்றவியல் சட்டம், ஒப்பந்தச் சட்டம், சொத்துரிமைச் சட்டம் ஆகிய பாடங்களில் எம்.எல். வகுப்புகள் நடைபெறுகின்றன. இக் கல்லூரியில் முழுநேரப் பட்டப்படிப்பின் மூன்றாண்டு வகுப்புகளிலும் ஒவ் வொரு பிரிவில் தமிழே பயிற்று மொழியாக உள்ளது.

31. 1974-75-ம் ஆண்டில் மதுரையிலும் ஒரு சட்டக் கல்லூரி திறக்கப்பட் டது. அக்கல்லூரியில் 1978-79-ம் ஆண்டில் முழு நேர வகுப்புகளில் 842 மாணவர்கள் படித்து வந்தனர். 1977-78-ம் ஆண்டிலிருந்து அக்கல்லூரியிலும் மாலை வகுப்பு துவக்கப்பட்டது. 1978-79-ல் மாலை நேர வகுப்பில் முதலாண்டு மாணவர்கள் 60 பேரும், இரண்டாமாண்டு வகுப்பில் 75 பேரும் பயின்று வந்தனர். 1979-80-ல் இக்கல்லூரியில் சொத்துரிமைச் சட்டத்தில் எம்.எல். வகுப்பும் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

32. சட்டக் கல்விக்கான வசதிகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1979-80-ம் ஆண்டில் கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

VI தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1979-80-ல் சுமார் ரூபாய் 7.66 கோடி (கட்டடச் செலவு போன்றவை உட்பட) ஒதுக்கப்பட்டு உள்ளது. இத்துறையின்கீழ் 6 பொறியியல் கல்லூரிகளும், 39 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் [மகளிர் பயிலகங்கள் மூன்றும், தனித்தொழில் பட்டய (டிப்ளமா) கல்வியகங்கள் ஒன்பதும் உட்பட], 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இத்தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளை தொழில் பாடங்களைப் பயிற்றுவிக்கும் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. தற்போது ஆண்டுதோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக 1,500 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பிற்காக 6,150 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

2. மேற்சொன்ன ஆறு பொறியியல் கல்லூரிகள் தவிர கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரி, அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், கிண்டி, கட்டடவியல் மற்றும் நகரமைப்புப் பள்ளி, குரோம்பேட்டையில் உள்ள சென்னை தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் தொழில் நுட்பவியல் கல்லூரி, வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன. அவை பல்கலைக் கழகங்களைச் சார்ந்தவை அல்லது தன்னாட்சி உரிமை பெற்றவை ஆகும்.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்.

3. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 4—9—1978 அன்று நிறுவப்பட்டது. அது ஒற்றை வகையை சார்ந்தது. கிண்டி பொறியியற் கல்லூரி இப்பல்கலைக் கழகத்தின் தலைமையிடமாகும். குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்ப கல்வியகமும், அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியிலுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்துறைகளான வேதியியல், தொழில் நுட்பவியல், தோல் தொழில் நுட்பவியல், நெசவுத் தொழில் நுட்பவியல், கட்டடவியலும் நகரமைப்பும் ஆகிய நான்கு துறைகளும் இப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகும்.

கல்வித் தர உயர்வு.

4. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே தொழில்நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலுமே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்

களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும் பிரிவுகளிலும் எந்தெந்த பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்த பயிற்சிகளை அளிக்கவும், தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல் கல்லூரிகளில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 39 பட்ட மேற்படிப்பு முறைகளும் பட்ட மேற்படிப்பு நிலை பட்டய முறைகளும் உள்ளன. பல்தொழில் நுட்ப பயிலகங்களில் 75 பட்டய முறைகளும், பட்டய மேற்படிப்பு முறைகளும், சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

புதிய திட்டங்கள்.

5. 1979-80-ல், ஆவடியிலுள்ள எம்.சி.எம். பாலிடெக்னிக்கில், மின்னணுவியல் சாண்ட்விச் பட்டயப் படிப்பும், கோயம்புத்தூரிலுள்ள பி.எஸ்.ஜி. பாலிடெக்னிக்கில் வடிவமைப்பு—வரைப்பட தொழில் நுட்பவியல் பட்டயப் படிப்பும், சென்னையிலுள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் படகு கட்டுதல் விருப்பப் பாடமும் தொடங்கப்பட இருக்கின்றன.

6. கோயம்புத்தூர் அரசு தொழில் நுட்பக் கல்லூரியிலுள்ள "கன்ட்ரோல் சிஸ்டம்ஸ்" ஆய்வுக்கூடமும், சேலம் அரசுப் பொறியியல் கல்லூரியிலுள்ள இயந்திரப் பொறியியல் ஆய்வுக் கூடமும் மேம்படுத்தப்படும். பின்வரும் கட்டட வேலைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. சேலம் பொறியியல் கல்லூரிக்கும், மதுரை, தமிழ்நாடு பாலிடெக்னிக்குக்கும் மாணவர் இல்லக் கட்டடங்களும் நாகர்கோயிலிலுள்ள அரசு பாலிடெக்னிக்குக்கு வகுப்பு அறைகளும் கட்டப்படும். கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலுமுள்ள அரசு பாலிடெக்னிக்குகளுக்கு மின்னணுவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படும். சென்னை வேதியியல் தொழில் நுட்பவியல் நிலையத்தில் பிளாஸ்டிக் தொழில் நுட்பவியல் பாடத்துக்கான கட்டட வசதி செய்யப்படும்.

7. தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது பாலிடெக்னிக் ஏதும் இல்லை. அம்மாவட்டத்தில் 1979-80-ல் புதிதாக ஒரு பாலிடெக்னிக் நிறுவப்படும்.

தன்னுரிமை.

8. நன்கு வளர்ந்த பல் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு தாமே புதுக் கல்வித் திட்டங்களை வகுக்கவும், இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல் புரியவும், தாங்கள்

விரும்பியவாறு பயிற்சி அளிக்கவும், கற்பிக்கவும் உரிமை வழங்கப்படுகிறது இதுவரை தன்னுரிமை வழங்கப்பட்டுள்ள பாட முறைகளின் விவரம் வருமாறு :—

1	பி. எஸ். ஜி. பாலிடெக்னிக், கோயமுத்தூர்.	அனைத்துப் பாடங்களும்.
2	தியாகராசர் பாலிடெக்னிக், சேலம் மற்றும் பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக், இராஜபாளையம்.	நெசவுத் தொழில் பட்டயப் படிப்பு.
3	சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.	நகரமைப்பு-ஊரமைப்பு பட்டய மேற்படிப்பு.
	நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்ளாச்சி மற்றும் தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை.	உந்து வண்டிப் பொறியியல் பட்டய மேற்படிப்பு.

பயிற்று துறை வளர்ச்சி.

9. பொறியியல் கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற இந்தியத் தொழியியல் கல்வியகங்கள், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வியகம் போன்றவற்றுக்கு அனுப்பப்படுகின்றனர். இதுவரை 56 ஆசிரியர்கள் இவ்வாறு டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். மேலும் 38 ஆசிரியர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். 1979-80-ல் மேலும் ஐந்து பேர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர்.

10. பல்தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்கள் சென்னையிலுள்ள "தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையத்திற்கு" உயர் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். இதுவரை 259 ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். 37 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 1979-80-ம் ஆண்டில் மேலும் 30 ஆசிரியர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

11. ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுப் பணிகள் வளர வேண்டும் என்பது நன்கு உணரப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் நிலை ஆராய்ச்சி எந்த அளவுக்கு நன்கு நடைபெறுகிறதோ அந்த அளவுக்கு இப்பணி சிறக்கும். பொறியியல் கல்லூரிகளில் டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் பதிவு செய்து கொள்வது கடந்த சில ஆண்டுகளாக ஊக்குவிக்கப்படுகிறது. பொறியியற் கல்லூரிகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க, அரசு ரூபாய் 1 லட்சம் ஏற்பளித்துள்ளது.

தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்.

12. இம்மாநிலத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் பல் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் வழங்கப்படும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1979-80-ம் ஆண்டில் ரூபாய் 2 கோடி மானியத் தொகையாக அளிக்கப்படும்.

13. கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி, மதுரை, தியாகராசர் பொறியியற் கல்லூரி ஆகியவற்றில் மாணவியர் இல்லக் கட்டடங்கள் கட்டவும் நாகப்பட்டினம், வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக், விருதுநகர் வி.எஸ்.வி. நாடார் பாலிடெக்னிக் ஆகியவற்றில் மாணவர் இல்லம் கட்டவும் 1979-80-ல் கடன் உதவி அளிக்கப்படும்.

விரிவுப் பணிகள்.

14. தொழில் கல்வி நிலையங்களில் தொடர் கல்வி வசதிகள் அளிக்கப்படுகின்றன. பரிசோதனை மற்றும் அறிவுரை கூறும் பணிகள் நடைபெறுகின்றன. கிராமப்புறக் கைவினைஞர்கள் புதிய கருவிகளைக் கையாளவும், புதிய தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களின் பயனை அடையவும் உதவியளிக்கப்படுகிறது. பணியாற்றும் பொறியியலறிஞர்களுக்கு மறுபார்வை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவரவர் துறையில் அவ்வப்போது நிகழும் வளர்ச்சிகளைப் பற்றி, அவர்கள் இவற்றின் மூலம் அறிந்து கொள்ள இயலுகிறது. பெரும்பாலும் இவ்வகுப்புகளை நடத்த ஆகும் செலவு வசூலிக்கும் கட்டணத் தொகைக்கு மேல் போவதில்லை. தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் தனியார் தொழிற்சாலைகள் முதலியன விரும்பும் பரிசோதனைகள் செய்து தரப்படுவதுடன் அவர்கள் கோரும் பிரச்சினைகள் பற்றி அறிவுரை கூறும்பணியும் நடைபெறுகிறது. இவற்றுக்கு குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

வணிகவியல் பாடங்களில் தேர்வு.

15. தொழில் நுட்ப இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வரவு செலவுக் கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் போன்றவற்றிற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்கு தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார்.

கணித அறிவியல் நிறுவனம்.

16. அடையாற்றில் உள்ள கணித அறிவியல் நிறுவனம் மாநில அரசு, மைய அரசு ஆகியவற்றின் உதவியோடு செயல்படுகிற தன்னுரிமை பெற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்திற்கு மாநில அரசு ஆண்டுக்கு ரூபாய் 3.5 இலட்சம் மானியமாக அளிக்கின்றது. தற்போது, அடிப்படைக் கணிதம் மற்றும் கணிதம் சார்ந்த இயல்பியல் நிறைகளில் உயர்தர ஆராய்ச்சி நடத்தி வரும் இந் நிறுவனம் அனைத்திந்தியப் பெருமையை அடைந்துள்ளது.

வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

17. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி 1964-65-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்போது அக்கல்லூரியில் ஆண்டுதோறும் 200 மாணவர்கள் பொறியியல் பட்டப் படிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். கல்லூரியிலுள்ள இடங் களில் பாதி இம்மாநில மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாண வர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. அக்கல்லூரிக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வரு கின்றன. செலவில் மாநில அரசு ஏற்கும் பங்கு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 20 இலட்சம் ஆகும். அக்கல்லூரியில் நடக்கும் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் அனைத்துக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் தன்னுரிமை வழங்கியுள்ளது.

மாநில கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிலையம், திருச்சிராப்பள்ளி.

18. "மாநிலக் கூட்டுறவு முறைத் தொழில் கல்வி நிறுவனம்" புகுமுக வகுப்பு தேறிய மாணவர்களுக்கு தொழில் கல்வி பயிற்றுவிப்பதற்காக 1975-76 ஆம் ஆண்டு முதல் திருச்சிராப்பள்ளியில் துவங்கப்பட்டது. அது தன்னு ரிமை உள்ளது. கல்வி அமைச்சர் இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவிற்குத் தலைவராவார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அதன் துணைத் தலைவராவர். அது 42 மாதங்கள் கொண்ட (27 மாதங்கள் நிலையப் பயிற்சியும், 15 மாதங்கள் வேலை அனுபவமும் உடைய) கல்வித் திட்டங்களை நடத்தி வருகிறது. (1) கட்டடக் கலையும் உள் அமைப்பும், (2) மின் கருவி களும், முறைகளும், (3) நெசவும் நவீன அழகு வேலைப்பாடும் என்ற மூன்று பாடத் திட்டங்கள் அங்கு உள்ளன. ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். மாநில அரசு இந்நிறுவனத் திற்கு ஆண்டுதோறும் ரூ. 2½ இலட்சம் மானியம் அளிக்கின்றது.

விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

"277. கல்வி—ஜி. விளையாட்டும் இளைஞர் நலனும்" என்ற தலைப்பின் கீழ் 1979-80-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 196 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. அதில் தேசிய மாணவர் படைக்கு ரூ. 123 இலட்சமும், தேசியப் பணிப் பிரிவுக்கு ரூ. 40 இலட்சமும், சாரண சாரணியருக்கு ரூ 4 லட்சமும், விளையாட்டுக்கு ரூ. 29 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் கவனத்திற் கொள்ள வேண்டியது பின்வருவதாகும். அதாவது: (i) கல்வி நிலையங் களில் உடற்பயிற்சி ஆசிரியர்கள், உடற்பயிற்சி இயக்குநர்கள் ஆகியோர் சம்பள வகையிலும், ( ) கல்வி நிறுவனங்கள் தங்கள் பணத்திலிருந்தோ அல்லது மாணவர்களிடமிருந்து வசூலிக்கும் விளையாட்டுக் கட்டணத்திலிருந்தோ விளையாட்டு உடற்பயிற்சிக்கு ஆகும் செலவு வகையிலும் கணிசமான தொகை கள் செலவு ஆகின்றன. அத்தொகைகள் பட்ஜெட்டில் தனியாகக் காட்டப் படாமல் "பணியாளர் சம்பளம்" முதலிய பொதுத் தலைப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டு விடுகின்றனவாகையால் அவை மேற்சொன்ன ரூ. 196 இலட் சத்தில் அடங்கியவை அல்ல.

2. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். எந்தெந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ள னரோ அந்தந்த உயர் தொடக்கப் பள்ளிகளில் 6—8 வகுப்புகளிலும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் 6—9 வகுப்புகளிலும் உடற்பயிற்சிக் கல்வி தேர்வுக்கான பாடங்களில் ஒன்றாகும். இந்தப் பள்ளிகள் அனைத் திலும் 6—9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சிக் கல்வியில் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்பிற்கு அனுப்புவதற்கான கொள்கை களை வகுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3. 1978-79-ம் ஆண்டிலிருந்து உயர்நிலைப்பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டுதோறும் சீருடைப் படியாக ரூ. 50 வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

4. தற்பொழுது பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் உடற் பயிற்சி வேலை களை ஆய்வு செய்ய சென்னையில் ஒருவரும், மதுரையில் ஒருவருமாக வட்டார உடற்பயிற்சிக் கல்வி ஆய்வாளர் (பெண்) இருவரே உள்ளனர். 1979-80 முதல் கோயம்புத்தூரில் ஒருவரும், திருச்சிராப்பள்ளியில் ஒருவரு மாக மேலும் இரண்டு வட்டார உடற்பயிற்சி ஆய்வாளர் (பெண்)கள் நியமிக்கப் படுவார்கள்.

மாநில விளையாட்டுக் குழு.

5. மாநில விளையாட்டுக் குழுவும் மாவட்ட விளையாட்டுக் குழுக்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி பொதுமக்கள் இடையேயும் விளையாட்டுப் போட்டிகளையும் விளையாட்டுகளையும் நன்கு பரப்பிடப் பணி செய்து வருகின்றன. 1977-78 முதல் இக்குழுவுக்கான மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. கூடுதல் மானியத்தைக் கொண்டு கிராமங்களிலுள்ள மாணவர்கள் அல்லாத இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளையும், உடற்பயிற்சியையும் தீவிரமாகப் பரப்ப மாவட்ட விளையாட்டுக் குழுக்கள் நடவடிக்கை எடுக்கும்.

6. மாணவர்களுக்கு உடற் பயிற்சி அளிப்பதற்கு என உடற்பயிற்சிக் களரிகளை சுமார் 15 பள்ளிகளில் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்.

7. தமிழ்நாட்டைச் சார்ந்த தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோருள் முதுமைக் காலத்தில் வறுமையால் வாடுபவர்களுக்கும், அப்படிப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களை வறுமையில் வாட விட்டு மறைந்திருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் உதவிப்பணமாக ஓய்வூதியம் தரும் திட்டம் ஒன்றுக்கு 1—4—1978 முதல் அரசு ஏற்பளித்துள்ளது. இந்த உதவிப் பணம் பெறத் தகுதி பெற வேண்டுமாயின் ஒருவர்—

(அ) விளையாட்டு வளர்ச்சிக்குச் செய்த பணி மிகச் சிறந்ததாக இருக்கவேண்டும்.

(ஆ) 60 வயதை அடைந்திருக்க வேண்டும்.

(இ) அவர் சொந்த வருமானம் மாதம் ரூ. 150-க்கு மேற்போகாமல் இருக்கவேண்டும். இந்த உதவிப் பணம் பெறத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அவர்கள் ஆயுட்காலம் முடிய மாதம் ரூ. 75 ஓய்வூதியம் தரப்படும். முதலில் 3 ஆண்டுகளுக்கு இவ்வுதவிப் பணம் வழங்கப்பட்டுப் பின்னர் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படும்.

சாரண சாரணியர் இயக்கம்.

8. தமிழ்நாடு சாரணர் கழகம் 1978-79-ல் மொத்தம் 1,30,000 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டிருந்தது.

9. பாரத் சாரண சாரணியர் அமைப்பின் எட்டாவது தேசிய சம்போரியை சென்னையை அடுத்த மறைமலை நகரில் 1979 சனவரியில் கொண்டாட தமிழக அரசு வசதிகள் செய்து தந்தது. அதனை இந்தியப் பிரதமர் தொடங்கி

வைத்தார். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகள் சிலவற்றிலிருந்தும் சுமார் இருபதாயிரம் சாரண சாரணியர் அவ்விழாவில் கலந்து கொண்டனர். இந்தத் தேசிய விழா முதன் முதலாக தமிழ்நாட்டில் நடைபெற்றது. அது நல்ல முறையில் நடைபெற இவ்வரசு விரிவான நடவடிக்கைகள் எடுத்திருந்தது அனைவராலும் பாராட்டப் பெற்றது. இந்த எட்டாவது சம்போரியின் குறிக்கோள் "சமுதாய வளர்ச்சிக்காக" என்பதாகும். சாரண சாரணியர் சமுதாய வளர்ச்சிப் பணியில் பங்கேற்க வேண்டுவதை அது வலியுறுத்தியது.

தேசிய மாணவர் படை.

10. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் தற்பொழுது 14,000 மாணவர் மாணவியர்களைக் கொண்ட 48 முதுநிலைப் பிரிவுகளும், 67,000 மாணவ-மாணவியர்களைக் கொண்ட 702 இளநிலைப் பிரிவுகளும் உள்ளன. இவற்றில் 3,000 மாணவியரைக் கொண்ட முதுநிலைப் பிரிவுகள் 5-ம், 5,300 மாணவியரைக் கொண்ட இளநிலைப் பிரிவுகள் 54-ம் அடங்கும். தேசிய மாணவர் படைக்கு இவ்வரசு 1979-80-ம் ஆண்டில் செலவிடவிருக்கும் தொகை ரூ. 123 இலட்சமாகும். இத்துறையின்கீழ் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள் அமைச்சுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியோர் எண்ணிக்கை 1,100 ஆகும்.

11. ஆண்டுதோறும் டில்லியில் குடியரசு நாளில் வழங்கப்படும் தேசிய மாணவர் படை அனைத்திந்திய விருதை அது ஏற்படுத்தப்பட்ட 1962-ம் ஆண்டிலிருந்து இதுவரை எட்டுத் தடவை தமிழ்நாட்டு தேசிய மாணவர் படைப் பிரிவே பெற்று வந்துள்ளது. 1979-ல் குடியரசு தின விழாவில் தமிழ்நாட்டு தேசிய மாணவர் படை முதுநிலையைச் சார்ந்த மாணவியே சிறந்த அனைத்திந்திய மாணவர் படை மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேசிய பணித் திட்டம்.

12. தேசியப் பணிப் பிரிவானது கல்லூரி மாணவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை நாட்டுப் பணியில், குறிப்பாக கல்விப் பணியில் ஈடுபடுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த பல்கலைக்கழகங்கள் மாணவர் ஒருவருக்கு ரூ. 60 என்ற கணக்கில் மானியம் பெறுகின்றன. மேற்கண்ட தொகையில் ரூ. 35-ஐ இந்திய அரசும், ரூ. 25-ஐ மாநில அரசும் அளிக்கின்றன. இத்திட்டத்தில் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருள் விருப்பமுள்ளோர் பங்கு கொள்கின்றனர்.

இத்திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர் எண்ணிக்கை 1976-77-ல் 20,000 ஆக இருந்தது. 1978-79-ல் 40,000 ஆக உயர்ந்தது. ஆண்டுதோறும் இத் திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களில் பாதி பேர் விடுமுறைக் காலங்களில் சுமார் 10 நாள் அளவுக்கு கிராமங்களில் சிறப்பு முகாம் நடத்தி கிராமப்புற வளர்ச்சிப் பணிகளை (குறிப்பாக எழுத்தறிவிக்கும் பணியை) செய்கின்றனர். இத்திட்டத்திற்கு 1979-80-ம் ஆண்டில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

VIII. கலைப் பணிகள்.

(1) இசை, நடனம், நாடகம், ஓவியம் முதலியவை.

இயல், இசை, நாடக மன்றம் :

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கி வரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு நிறுவனமாகும். இம்மன்றம் நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளை வளர்க்கும் அரும் பணியைச் செய்து வருகின்றது. இது வெளி நாடுகளிலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வரும் கலைக் குழுக்களுக்கு வரவேற்பளிக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கலைக் குழுக்கள் செல்ல ஆதரவளித்தும் வருகின்றது.

2. திறம் மிக்க சிறந்த கலைஞர்களை ஊக்குவிப்பது இம்மன்றத்தின் தலையாய பணியாகும். ஆண்டுதோறும் இம்மன்றம் வாய்ப்பாட்டு, வயலின் இசை, மிருதங்கம், நாதஸ்வரம், புல்லாங்குழல், ஹரிகதா காலட்சேபம் ஆகியவற்றில் திறம்மிகு கலைஞர்களைத் தேர்வு செய்து அவர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் அக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் மானியம் அளிக்கிறது. 1963 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 600-க்கு மேற்பட்ட கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

3. 1960 ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் சிறந்த கலைஞர்களுக்கு "கலைமாமணி" என்ற பட்டமளித்து சிறப்பிக்கின்றது. கடந்த 18 ஆண்டுகளில் இம்மன்றம் இசை, நடனம், நாடகம், திரைப்படம், கிராமியக்கலைகள் ஆகியவற்றில் ஏறத்தாழ 425 கலைஞர்களுக்கு பட்டமளித்து சிறப்பித்துள்ளது. 1975 ஆம் ஆண்டு முதல் "கலைமாமணி" பட்டம் பெற்றவர்கள் 10 கலைஞர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரொக்கப் பரிசாக (பொற்கிழி) ரூ. 1,000 கொடுத்து வருகிறது. இதற்கென முதலமைச்சர் தனி நிதியிலிருந்து கொடுத்த ரூபாய் ஒரு லட்சத்தின் வட்டியிலிருந்து இப்பரிசு அளிக்கப்படுகிறது.

4. 1978-79-ம் ஆண்டில் தொடங்கிய ஒரு புதிய திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் தொல் மரபுக் கேற்பத் தமிழில் புதிய இசைப்பாடல்களை எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5,000 ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப்பண்பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுகளைப் புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசு ஒன்று வழங்கப்படும். 1979-ல் இம்மன்றம் தன் வெள்ளி விழாவைக் கொண்டாடும். அச்சமயம் கலை வளர்ச்சிக்கான பல சிறப்புத் திட்டங்களைத் தொடங்க மன்றம் கருதியுள்ளது.

நாடகப் பள்ளி—

5. இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப்பயிற்சி அளிக்கவும் அதனுடன், பொதுக்கல்வி கற்பிக்கவும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க நாடகப்பள்ளி ஒன்று தொடங்கப்பட இருக்கிறது. இதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற குழு ஒன்று அமைக்கப்படும். வல்லுநர்களைக் கலந்து தக்க பாடதிட்டம் உருவாக்கப்படும்.

"அரசுக் கலைஞர்கள்"

6. 1979-ம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் எட்டு பேருக்கு "அரசுக் கலைஞர்" என்ற விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்பெறும்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்—

7. வறுமையால் வாடும் ஏறத்தாழ 700 கலைஞர்கள் மாதந்தோறும் இத்திட்டத்தின் கீழ் ரூ. 75 ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் வறுமை நிலையிலேயே தொடர்ந்தால், மீண்டும் மூன்று ஆண்டு, மூன்று ஆண்டாக புதுப்பிக்கப்படுகிறது. அவ்வாறு ஓய்வூதியம் பெறும் கலைஞர் இறந்துவிட்டால் அவரது மனைவிக்கும் அவர் நிதி நிலையை பொறுத்து இறக்கும் வரை மூன்றாண்டுகளுக்கொருமுறை புதுப்பித்து இந்த ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இப்பணிக்கு ஆண்டுதோறும் ரூ. 7 லட்சம் செலவாகிறது. 1979-80-ல் மேலும் 175 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓவியம் நுண்கலைக் குழு—

8. ஓவியம் முதலிய நுண்கலைகளைப் பேணி வளர்க்கும் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு தன்னாட்சியுரிமையுள்ள மற்றொரு நிறுவனமாகும். அது கல்வி அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. அது ஆண்டு தோறும் ரூ. $1\frac{1}{2}$ லட்சம் மானியம் பெறுகிறது. இக்குழு ஆண்டுதோறும் கலைக் கண்காட்சிகள் நடத்தி சிறந்த ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் ரொக்கப் பரிசு அளிக்கிறது. ஆண்டுதோறும் ஓவியர் முகாம்களையும் அது நடத்துகிறது. திறம் மிக்க இளம் கலைஞர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 150 விதம் உதவித்தொகை அளித்து அவர்கள் ஓவியக் கலையில் பயிற்சி பெற உதவுகிறது. சிறந்த ஓவியக் கலைஞர்களுக்கு ரொக்கப் பரிசுகள் தந்து பாராட்டவும் அது கருதியுள்ளது.

9. திருச்சிராப்பள்ளி, வேலூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டத் தலை நகரங்களில் உள்ளூர் மக்களுக்கு ஓவியப்பயிற்சி அளிப்பதற்கான மையங்கள் தொடங்க நுண்கலைக்குழு பண உதவி செய்துள்ளது. பள்ளிகளில் ஓவிய ஆசிரியர்களாகப் பணி செய்பவர்களுக்கு ஓவியத்தில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தவும் இக்குழு கருதியுள்ளது.

10. நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்தருகே நஞ்சநாடு அருகே "ஓவியர் சிற்றூர்" ஒன்றை நிறுவுவது ஆலோசனையிலுள்ளது.

11. டெல்லியிலுள்ள லலித கலை அகாடெமியும் இவ்வரசும் சேர்ந்து, அந்த அகாடெமியின் வட்டாரமையம் ஒன்றை 1978 அக்டோபரில் சென்னையில் தொடங்கியுள்ளன. அந்த மையத்துடன் இணைந்து நுண்கலைக் குழு கண்காட்சிகளையும் வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

ஜவகர்லால் நேரு பால பவன்—

12. ஜவகர்லால் நேரு பால பவன் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கலை, இசை, நடனம் முதலியவற்றின் இளஞ்சிறார்களிடம் மறைந்துள்ள திறமைகளை வளர்த்துக்கொள்ள வசதி அளிக்கும்படி, கல்வி மற்றும் மனமகிழ் மன்றமாக அது இருக்கும். 1978 டிசம்பரில் இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பவனத்தின் **பணிகளை** தொடங்குவதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள்—

13. சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் 1978-79-ல் 287 பேர் பயின்றனர். அதில் முழுநேர ஆசிரியர்கள் 23 பேரும் பகுதிநேர ஆசிரியர்கள் 13 பேரும் உள்ளனர். இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை, பரதநாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வேறு வேலை செய்பவர்களுள் இசையார்வமுள்ளோரை ஊக்குவிக்கும் வகையில் சென்னை நகரில் நான்கு மையங்களில் மாலை நேரங்களில் இசை வகுப்புகள் (வாய்ப்பாட்டு, வயலின், வீணை) நடத்தப்படுகின்றன.

14. 1979 ஜனவரியில் மதுரையில் ஒரு இசைக் கல்லூரி தொடங்கப் பட்டுள்ளது.

(2) ஆவணக்காப்பகமும் அருங்காட்சியகங்களும்.

1. தென் ஆசியாவில் வளமான அரசு ஆவணத் தொகுப்பைப் பெற்றுள்ளது, தமிழ்நாடு அரசு ஆவணக்காப்பகமாகும். அது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு ஆவணக்காப்பகமாகவும் செயல் படுகிறது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல ஆவணங்கள் அதில் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளுக்கு முந்திய ஆவணங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்குத் தரப்படுகின்றன. ஆராய்ச்சியாளர் கூடத்தில் ஆராய்ச்சியாளர் களுக்கு சிறந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2. ஆவணங்களை அறிவியல் முறையில் பாதுகாத்துப் பேணிவைக்க நவீன கருவிகள் வாங்கித்தரப் பெற்றுள்ளன. 1978-79-ல் நுண் நிழற்படக் கருவி ஒன்று வாங்க ஏற்பளிக்கப்பட்டது. 1979-80-ல் புகைப்பட முறையில் படிபெருக்கும் கருவி ஒன்று வாங்கப்படும்.

3. 1973-ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு தென்னிந்தியாவில் பல்வேறு வாழ்க்கை அம்சங்கள் குறித்து தரமான ஆராய்ச்சியுரைகளை எழுதும் திறனும் ஆற்றலுமுடையவர்களை ஊக்கு விக்கின்றது. அவர்களுக்கு ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளையும் சூழலையும் அளிப்பதுடன் ஆண்டுதோறும் நான்கு ஆராய்ச்சி மாணவப் பணியிடங்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆராய்ச்சி மாணவருக்கும் ரூ. 5,000 சில்லரைச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் அளிக்கப்படு கின்றது.

4. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தைச் சேர்ந்தவையான (17-18-வது நூற்றாண்டுகளைச் சார்ந்த) முக்கியமான ஆவணங்களின் படிகள் அல்லது சுருக்கங்கள் அச்சிடப்பட்டு வரலாற்றாராய்ச்சியாளருக்குப்

பெரிதும் பயன்படும் புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளோர் அவற்றை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தும் வகையில் மிகக் குறைந்த விலையில் ஆவணக்காப்பகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

5. மாவட்ட விவரச் சுவடிகளை திருத்தியமைத்து மீண்டும் எழுதுவதற்கான மாவட்ட விவரச் சுவடிகள் பிரிவும் ஆவணக் காப்பக மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் தான் செயல்படுகின்றது.

அருங்காட்சியகங்கள்—

6. சென்னையிலும், புதுக்கோட்டையிலும் அரசு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்கள் சிறந்த சிற்பங்கள், மரச் செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இவை தவிர, தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருட்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும் பயனடைந்து வருகின்றனர். இவ்வருங்காட்சியகங்கள் பொது மக்களுக்கான அறிவியல் விரிவுரைகளையும் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன.

7. மாவட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அருங்காட்சியகம் நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள வசதிகளும் மேம்படுத்தப்படும். அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாகிய 1979-ஐ ஒட்டி சென்னையில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க 1979-80-ல் ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) பொது நூலகங்கள்.

1. கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தில் மைய நூலகமாகும். அதில் 3 லட்சம் புத்தகங்கள் உள்ளன. உறுப்பினர்கள் 12,000 பேராவர். புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் விதம் தற்போது 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,446 கிளை நூலகங்களும் உள்ளன. ஏறக்குறைய 3,000 பேர் இந்நூலகங்களில் பணிபுரிகின்றனர். இந்நூல் நிலையங்கள் அனைத்திலும் உள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 65 லட்சம். இவையனைத்தின் உறுப்பினர்களும் மொத்தம் 7 லட்சம் பேர்கள். உறுப்பினர்களல்லாதவர்களும் நூல் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் பயன்

2. நூலக நிதியில் பெரும் பகுதி, ரூபாய்க்கு 5 பைசா விதம் வீட்டுவரி, சொத்து வரி ஆகியவற்றின் மீது வசூலிக்கப்படும் நூலக மேல் வரியைக் கொண்டதாகும். 1977-78-ல் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 127 லட்சம் பெற்றன (சென்னை மாவட்டக்குழு பெற்ற ரூ. 57 லட்சம் உள்பட). சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமாக இணை மானியத்தையும் அரசிடமிருந்து பெறுகின்றன. 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு 1978-79-ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் கொடுத்த புத்தகங்கள் 1,300 மொத்தம் கொடுத்த படிகள் 3,40,000 ; செலவு ரூ. 21 லட்சம். 1979-80 ஆம் ஆண்டு பொது நூலகங்களுக்காக ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 135 லட்சமாக இருக்கும்.

3. 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொது நூலகங்களுக்காக தனி இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1977 ஜனவரியிலிருந்து மாவட்ட நூலக ஆணைக்குழு ஒவ்வொன்றுக்கும் முழுநேர மாவட்ட நூலக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அரசு அலுவலர்கள் பெற்றுவரும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால சலுகைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக்குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனைக் கூற சிறப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக் குழுவின் அறிக்கை வந்து ஆய்வு செய்த பின் இது குறித்து அரசாணைகள் விரைவில் வெளியாகும்.

4. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூல் நிலையம் மதிப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளைக் கொண்ட முதன்மையான நூல் நிலையம். அதில் 30,377 சமஸ்கிருத கையெழுத்துப் பிரதிகளும், 2,081 தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளும், 2,910 மராத்தி கையெழுத்துப் பிரதிகளும், 778 தெலுங்கு கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவை தவிர இம்மொழிகளில் புத்தகங்களும் அந்நூல் நிலையத்தில் உள்ளன. அதன் முக்கிய அலுவல், அருங்கையெழுத்துப் பிரதிகளையும் புத்தகங்களையும் பாதுகாப்பதும், அவற்றை அட்டவணையிடுவதும், நன்முறையில் கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வெளியிடுவதும் ஆகும். அந்நூல் நிலையத்தின் வளர்ச்சிப் பணிக்காக நிதித் தேவைகளை மதிப்பிட்டபின் அந்நூலகத்திற்கு மைய அரசு ரூ. 2 லட்சம் மானியம் தந்துள்ளது.

(4) தொல் பொருளியல்.

1. தொல் பொருள் ஆராய்ச்சித்துறை தன் பிற பணிகளுடன் இம்மாநிலத்தின் முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பேணி பாதுகாத்து வருகிறது. அவற்றுள் முக்கியமானவை மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சையிலுள்ள நாயக்கர் அரண்மனை, பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டைச் சின்னங்கள், இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாஸ் கட்டிடம், தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டை ஆகியவை ஆகும். இவ்விடங்களில் சிலவற்றில் நிலையான அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும், மதிப்பு மிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80-ம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்து தருமபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. இத்துறை ஊர் ஊராகச் சென்று கல்வெட்டுக்களைப் பார்வையிட்டு அக்கல்வெட்டுகளுக்குப் படியெடுத்து அவற்றின் பொருளைத் தெளிவுபடுத்தி இன்றைய எழுத்துக்களில் அவற்றை வெளியிடுகின்றது. இத்துறை கன்னியாகுமரி, வடஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் இப்பணியை முடித்துள்ளது. கி.பி. 500 ஆம் ஆண்டு முதல் இன்றுவரையுள்ள காலப்பகுதியைச் சார்ந்தவையும் நடுகற்களில் உள்ளவையுமான 500 கல்வெட்டுக்களை இத்துறை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

4. இத்துறை தொன்மை வாய்ந்த இடங்களில் அகழ்ந்து பார்க்கும் பணியையும் செய்து வருகிறது. பாண்டியர்களின் பழந்துறைமுகமான கொற்கை, சேரர்களின் தொன்மையான தலைநகரமான கரூர், பாலாற்று முகப்புப் பகுதியில் ரோமானியர்கள் குடியேறி வாழ்ந்த வாசவ சமுத்திரம் போன்ற இடங்களில் இத்துறை அகழ்வாராய்ச்சி செய்து உள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் அகழ்வாராய்ச்சிப் பிரிவுக்குக் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

5. இத்துறைக்குச் சொந்தமான அச்சகம் ஒன்றும் உள்ளது. அதனுடைய வெளியீடுகள் யாவையும் அந்த அச்சகத்திலேயே அச்சிடப்படுகின்றன. இது வரை ஆங்கிலத்திலும், தமிழிலும் 50-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளி வந்துள்ளன.

6. இத்துறை தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, தொல் பொருளியல், இந்தியக் கலைகள், யாதேனுமொன்றில் எம்.ஏ., பட்டம் பெற்ற மாணவர்களுக்கு கலை, மற்றும் கட்டிடக் கலை வரலாற்றைப் போதிப்பதுடன் கல்வெட்டுக்களைப் படி எடுத்தல், அவற்றை ஆராய்தல் முதலிய தொழில் நுட்பப் பயிற்சியும், அளிக்கின்றது. இதற்கு ஆண்டுதோறும் 8 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆளுக்கு மாதம் ரூ. 125 உதவிப் பணம் தரப்படுகிறது.

7. தொல் பொருள்களையும் விலை மதிப்பற்ற கலைக் கருவூலங்களையும் சட்ட விரோதமாக விற்று விடுவதைத் தடுக்க "தொல் பொருள்கள் மற்றும் கலைக் கருவூலங்கள் சட்டம்" என்ற சட்டம் ஒன்றினை மைய அரசு 1972-ல் இயற்றியது. 1976 ஆம் ஆண்டு ஏப்ரலிருந்து இச் சட்டம் இந்தியா முழுவதும் அமுலுக்கு வந்தது. இத் திட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்கள் எழுவர் பல்வேறு மாவட்டத் தலைமையிடங்களில் பணிபுரிகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்பதிவுத் திட்டத்தின் செலவை 1—4—1976 முதல் மூன்றாண்டுகளுக்கு மைய அரசு ஏற்கும்.

IX. தமிழ் வளர்ச்சி.

1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 70 இலட்சமாகும். இத்தொகையில் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கான புத்தகப்படி வழங்கிட ரூ. 28 இலட்சம் செலவிடப்படும். கல்லூரிப் பாடப் புத்தகங்களைத் தமிழில் கொணர்வதற்காக ரூ. 23 இலட்சம் செலவிடப்படும். தமிழ் வளர்ச்சித்துறைக்கும் அதன் பணிகளுக்கும் ரூ. 9 இலட்சம் செலவிடப் படும். வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 10 இலட்சம் செலவிடப் படும்.

தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

2. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் திட்டத்தினை முழு முனைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதில் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. சட்டங்கள், விதித்தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றுள் பல, தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப் பட்டுள்ளன. அரசுத் துறைகள் பயன்படுத்திட ஆட்சிச் சொல்லகராதிகளும், சிறப்புச் சொல்லகராதிகளும் தொகுக்கப்பட்டு அவ்வப்போது வெளியிடப் பட்டு வருகின்றன. மாவட்ட மட்டத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் பணியில் ஏற்படும் வளர்ச்சி தனி ஆய்வுப் பணியாளர்களைக்

கொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தலைமைச் செயலகத் துறை ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும், துறைத் தலைவர்கள் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அதிகாரியும் தமிழ் வளர்ச்சி இயக்குநருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழை ஆட்சி மொழியாக்கும் திட்டம் முழு வெற்றி அடையப் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

3. 1867-ம் ஆண்டு முதல் வெளியிடப் பெற்றுள்ள தமிழ் நூல்களின் விவர அட்டவணை ஒன்று தொகுக்கப்பட்டு வருகிறது. 1867 முதல் 1925ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 13 தொகுதிகள் ஏற்கெனவே வெளியிடப் பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளுக்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தமிழில் மூல நூல்களை ஆக்கி வெளியிடும் ஆசிரியர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் தமிழ் வளர்ச்சித்துறை செயல்படுத்தி வருகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு வேண்டிய உதவிகளையும் அரசு செய்யும்.

தமிழ் நாட்டு வரலாறு.

4. தமிழ்நாட்டு வரலாற்றை ஆதாரபூர்வமாக எழுதுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றில் இரண்டு தொகுதிகள் எழுதி முடிக்கப் பெற்றுள்ளன. தொல் பழங் காலத்தைப் பற்றிய முதல் தொகுதி ஏற்கெனவே வெளியிடப்பட்டு விட்டது. சங்க காலம் பற்றிய இரண்டாவது தொகுதி விரைவில் வெளியிடப்படும்.

பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வியையும் தமிழாராய்ச்சியையும் ஊக்குவித்தல்.

5. மற்ற மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களும், பிற நிறுவனங்களும் தமிழ்ப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்தவும், தமிழில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும், தமிழில் பகுதி நேரப் பட்டயப்படிப்பு வகுப்புகளை நடத்தவும் இவ்வரசு தாராளமாக நிதி உதவி செய்து வருகிறது. தமிழில் பகுதி நேரப் பட்டயப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்காக 1978-79-ல் பிற மாநிலப் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் ஆகியவைகள் 15-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15 ஆயிரம் வீதம் இவ்வரசு மானியம் வழங்கியுள்ளது.

6. திருவனந்தபுரத்திலுள்ள "திராவிட மொழிகளின் மொழியியல். ஆராய்ச்சிக்கான பன்னாட்டுப் பள்ளி" பின்வரும் பணிகளை மேற்கொள்ள இருக்கிறது.—

1. தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் தமிழ் பெற்றிருந்த செல்வாக்குப்பற்றிய ஆராய்ச்சி.

2. தமிழை அடிப்படையாகக் கொண்டு மின் கணிப்புப் பொறியின் உதவியுடன் மொழி பெயர்ப்புக் கொள்கை பற்றிய ஆராய்ச்சி.

3. தூர கிழக்கு நாடுகளில் தென்னிந்திய மொழி, கலை, வரலாறு ஆகியவற்றைப் பற்றிய படிப்பு வசதிகளைப் பற்றிய ஆய்வு.

4. அப்பள்ளிக்கான அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டுதலும், தமிழ் இலக்கண நூலாசிரியரான தொல்காப்பியர் பெயரில் ஒரு அரங்கம் கட்டுதலும்.

இப்பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ. 1,36,000 வீதம் 1978-79 முதல் 5 ஆண்டுகளுக்கு இவ்வரசு மானியம் தர ஏற்பளித்துள்ளது. கட்டிட வேலைக்காக ரூ. 4,51,000 மானியம் தர இசைந்து, முதல் தவணையாக ரூ. 1 இலட்சம் ஏற்கெனவே தரப்பட்டுவிட்டது.

மொழி பெயர்ப்புப் பணி.

7. பிற மொழி நூல்களில் சிறந்தவற்றை தமிழில் வெளியிடுவதற்கும், அரிய தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் வெளியிடுவதற்கும் ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக நடுவர் திரு. எஸ் மகராசன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதல் நடவடிக்கையாக அக்குழு, இதுவரை பிற மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள தமிழ் நூல்களின் விவரப் பட்டியல் ஒன்றையும், தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ள பிற மொழி நூல்களின் விவரப்பட்டியல் ஒன்றையும் தொகுத்துள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, பெர்சியன், ரஷிய மொழி, சீன மொழி ஆகிய மொழிகளில் உள்ள சிறந்த நூல்களுள் தமிழில் மொழி பெயர்க்கத்தக்க நூல்களின் பட்டியலையும், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் மொழி பெயர்க்கத்தக்க தமிழ் இலக்கியங்களின் பட்டியலையும் இக்குழு தயாரித்துள்ளது. மேலும் நோபல் பரிசு பெற்றுள்ள இலக்கியங்களை தமிழாக்கம் செய்து வெளியிடவும் இக்குழு கருதியுள்ளது. தற்பொழுது டாக்டர் ஆனந்த குமாரசாமி எழுதியுள்ள "சிவன் நடனம்" என்னும் நூல், பிரான்சிஸ் தாம்சன் உடைய கவிதைகள் ஆகியவற்றை தமிழாக்கம் செய்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

[1979 ஏப்ரல் 9

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

8. பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் நூற்றாண்டு விழாவை ஒட்டி தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தங்கள் சிலவற்றை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. உயிர் எழுத்துக்கள் 2-க்கும் உயிர்மெய் எழுத்துக்கள் 13-க்கும் புதிய வடிவங்கள் ஏற்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அச்சு வேலையிலும், தட்டச்சுப் பணியிலும் சிக்கனமும் எளிமையும் ஏற்படும். மாநில அரசு அலுவலகங்கள் அனைத்தும் மற்றும் உள்ளாட்சி மன்றங்களும், அரசு நிறுவனங்களும், கல்வி நிலையங்களும், இவ்வெழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைப்பிடிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பொதுவாக அனைவரும் இச்சீர் திருத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்சீர்திருத்தத்தைப்பற்றி பல்வேறு இடங்களிலிருந்தும் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்து இது குறித்து மேலும் அரசுக்கு அறிவுரை வழங்க தமிழறிஞர்களைக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

தமிழ்க் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பாராட்டு.

9. இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உமறுப் புலவர் பெயரில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு அறக்கட்டளைத் தொகையாக ரூ. 2 இலட்சம் வழங்கியுள்ளது.

10. பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரூ. 25 ஆயிரம் அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்.

11. பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு, அவருக்கு பதக்கம் ஒன்றும் ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது.

12. தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி. சு. அவினாசிலிங்கம், ஞா. தேவநேயப் பாவாணர், ம. ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 1979 திருவள்ளுவர் நாளன்று "செந்தமிழ்ச் செல்வர்" என்னும் விருது வழங்கப்பட்டது.

1979 ஏப்ரல் 9]

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம்.

13. வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1978 சனவரியில் தொடங்கப்பட்டது. மாத வருமானம் ரூ. 150-க்கு மேல் இல்லாமல் இருக்கிற தமிழறிஞர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிட்டும். இதுவரை 33 அறிஞர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகையை மாதம் ரூ. 100-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் அரும் பணியாற்றியுள்ள அறிஞர்களுக்கும், அத்தகையோர் தங்கள் குடும்பங்களை வறுமை நிலையில் விட்டு விட்டு மாண்டு போய் இருந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் தரப்படும். ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்தவர்களை வல்லுநர்க் குழு ஒன்று தேர்ந்தெடுக்கிறது. ஓய்வூதியம் முதலில் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. மூன்றாண்டு, மூன்றாண்டாகப் புதுப்பித்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி.

14. தமிழிலும், திராவிட மொழிகளிலும் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநராவார். இந்த அகரமுதலியைத் தொகுக்கும் பணியில் அவர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார். அவ்வகர முதலி முழு விரிவு வாய்ந்ததாகவும் திட்டவட்டமானதாகவும் அமையும். அது 13 தொகுதிகளாக வெளிவரும். முதல் தொகுதியின் முதல் பகுதி விரைவில் வெளியிடப்படும். இரண்டாவது பகுதியின் மீது இப்போது வேலை நடைபெற்று வருகிறது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

15. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன் தமிழ்த் துறையிலும், தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972-ம் ஆண்டிலிருந்து இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின் உதவியுடன், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளிநாட்டு மாணவர்களுக்கு இந்நிலையம் சிறப்பான முறையில்

தமிழ் கற்றுத் தருகிறது. இதுவரை இந்நிறுவனம் 12 நூல்களை வெளியிட்டுள்ளது. அது "பண்டைத் தமிழரின் சமுதாய வரலாறு", "தமிழ் இலக்கியத் துறை நூல்", "தமிழ் எழுத்தாளர் விவர நூல்" ஆகிய நூல்களை வெளியிட கருதியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளை இந்நிறுவனம் மாதந்தோறும் நடத்தி வருகிறது. அது 'நாட்டுப்புற இயல்' 'தமிழரின் பண்பாட்டு மரபுச் செல்வம்' மற்றும் 'தமிழரின் இலக்கிய மரபுச் செல்வம்' பற்றிய கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. இந்நிறுவனம் ஆண்டுதோறும் இவ்வரசிடமிருந்து ரூ. 3 லட்சம் மானியம் பெறுகிறது. தற்போது இந்நிறுவனம் அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந்நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழ் பண்பாட்டு மைய இயக்குநரகம்.

16. உலக நாகரிகத்திற்கு தமிழர் நாகரிகம் முன்னோடியாய் இருந்தது என்பதை மொழியியல், அகழ்வாராய்ச்சியியல், மானிட இயல், தொல்பொருளியல் போன்ற அறிவியல் துறைகள் சான்றுகள் காட்டி உறுதிப்படுத்தியுள்ளன. மேற்கண்ட துறைகளில் ஆராய்ச்சி செய்ய பல அமைப்புகளும் நிறுவனங்களும் இருந்தபோதிலும் தமிழரின் பண்பாட்டுக்கூறுகளை நல்ல முறையில் தமிழர்களுக்கும் உலக மாந்தருக்கும் எடுத்துக்காட்ட தனி அமைப்பு ஒன்று இல்லை. இக்குறையை ஈடு செய்ய, 1978-79 நிதி நிலை அறிக்கை உரையில் கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய் விளங்குமென அறிவிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இம்மையத்தின் தொடக்க விழா விரைவில் நடைபெறும்.

17. முதலில் இந்த மையம் பல்லாண்டுகளாக தமிழர்களோடு இணைந்துள்ள கலைகளையும் பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கத்துடன் நல்ல நூலக, படிப்பக வசதிகள் செய்வதிலும் பட அரங்கம், காட்சிப் பொருளுக்கான இடம் ஆகியவற்றை அமைப்பதிலும் ஈடுபடும். தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய ஒரே சிந்தனையை மையமாகக் கொண்டு செய்திகளையும், பொருட்களையும் ஒருங்கே ஓரிடத்தில் திரட்டிக் காத்து உலகனைத்தும் அதனை அறியும்படி பணி செய்வதே இம்மையத்தின் குறிக்கோளாகும்.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு.

18. ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு—கருத்தரங்கு 1980 சனவரியில் மதுரை மாநகரில் நடைபெறும். 1968-ல், இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல, இந்த 5-வது மாநாட்டுக்கும் இவ்வரசு அனைத்து உதவிகளையும் செய்யும். மாநாட்டின் தொடக்க நிலை வேலைகளுக்காக முதல் தவணையாக இவ்வரசு ரூ. 50 ஆயிரம் மானியமாக அளித்துள்ளது.

இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்.

(1)	1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2)	1973–74 (நான்காவது திட்ட முடிவு). (3)	1976–77 (4)	1977–78 (5)	1978–79 (6)
	(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)				
அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—					
வயதுத் தொகுதி 6—					
சிறுவர் ..	25.85	30.45	31.93	32.39	32.84
சிறுமியர் ..	25.64	29.79	31.23	31.68	32.11
மொத்தம் ..	51.49	60.24	63.16	64.07	64.95
வயதுத் தொகுதி 11—14—					
சிறுவர்	11·31	13.71	14.37	14.58	14·78
சிறுமியர்	11.23	13.40	14.05	14.25	14.45
மொத்தம் ..	22.54	27.11	28.42	28.83	29.23
வயதுத் தொகுதி 14—17—					
சிறுவர்	9.33	11.31	11.86	12.03	12.19
சிறுமியர்	9.26	11.07	11.60	11.77	11·93
மொத்தம் ..	18.59	22.38	23.46	23,80	24.12
ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—					
வயதுத் தொகுதி 6—11—					
சிறுவர்	26.37	30.64	32.02	33.11	33.83
சிறுமியர்	18.74	23.74	25.50	26.74	27.38
மொத்தம் ..	45.11	54.38	57.52	59.85	61.21

இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்

(1)	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு). (2)	1973-74 (நான்காவது திட்ட முடிவு). (3)	1976-77 (4)	1977-78 (5)	1978-79 (6)
வயதுத் தொகுதி 11—14—					
சிறுவர்	7.21	9.10	9.74	10.26	10.68
சிறுமியர்	3.46	5.09	5.76	6.12.	6.27
மொத்தம் ..	10.66	14.19	15.50	16.38	16.95
வயதுத் தொகுதி 14—17—					
சிறுவர்	3.86	4.97	5.34	5.24	4.85
சிறுமியர்	1.65	2.42	2.68	2.69	2.42
மொத்தம் ..	5.51	7.39	8.02	7.93	7.27*
இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர்					
சதவீதம்—					
6—11 தொகுதி—					
சிறுவர் ..	102.03	100.00	100.3	102.2	103.21
சிறுமியர்	73.08	79. 6	81.7	84.4	85.27
மொத்தம்	87.61	90. 2	91.7	93.4	94.24
11—14 தொகுதி—					
சிறுவர்	63.78	66. 3	67,7	70.3	72.26
சிறுமியர்	30.72	37. 9	41·0	42.9	43.39
மொத்தம்	47,31	52. 3	54.4	56.8	57.99
14 முதல் 17 தொகுதி—					
சிறுவர்	41.38	43.0	44.9	43.7	39.8
சிறுமியர்	17.83	21. 8	23.1	22.9	20.1
மொத்தம்	29.65	33. 0	34.1	33.4	30.1

* மேல் நிலைப்பள்ளி முதலாண்டு வகுப்பு உட்பட.

இணைப்பு 1—தொடர்ச்சி

பள்ளிக் கல்வி பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி

(1)	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2)	1973-74 (நான்காவது திட்ட முடிவு.) (3)	1976-77 (4)	1977-78 (5)	1978-79 (6)
அ. பள்ளிகளின் எண்ணிக்கை—					
தொடக்கப் பள்ளிகள் ..	24,641	26,726	27,306	27,395	27,425
உயர்தொடக்கப் பள்ளிகள்.	6,065	5,773	5,730	5,709	5,705
உயர் நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட)	2,234	2,823	3,030	3,058	3,108*
மொத்தம்	32,940	35,322	36,066	36,162	36,238
உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—					
தொடக்கப் பள்ளிகள் ..	88,173	1,06,332	1,11,033	1,11,184	1,11,808
உயர் தொடக்கப் பள்ளிகள்	59,943	66,843	67,846	68,794	69,279
உயர் நிலைப் பள்ளிகள் ..	48,574	65,959	72,838	73,039	65,379**
மொத்தம்	1,96,690	2,39,134	2,51,717	2,53,017	2,46,466
ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—					
(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—					
தொடக்கப்பள்ளிகள்	27	35	36	37	38
உயர் தொடக்கப்பள்ளிகள்	35	33	33	33	36
உயர் நிலைப் பள்ளிகள்	31	24	24	24	24
(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—					
தொடக்கப்பள்ளி வகுப்புத் தொகுதி ..	37	37	36	37	39
உயர் தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி ..	32	33	33	33	33
உயர் நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி ..	32	29	30	27	26

* அவற்றுள் 912-ல் மேல் நிலைப்பள்ளி வகுப்பு இருந்தது.

**மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நீங்கலாக

இணைப்பு I—தொடர்ச்சி.

1978–79-ல் (1—8—1978-ல் இருந்தவாறு) பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய பள்ளி விவரங்கள்.

பள்ளிக்கூடங்கள். (1)	எண்ணிக்கை. (2)	மாணவர்கள். (3)	ஆசிரியர்கள். (4)
தொடக்கப்பள்ளிகள்—			
அரசு	1,444		
நகராட்சி	1,058		
ஊராட்சி ஒன்றியம்	19,916		
தனியார்	5,007		
	27,425	42.53 லட்சம்	1,11,808
உயர் தொடக்கப்பள்ளிகள்—			
அரசு	218		
நகராட்சி	389		
ஊராட்சி ஒன்றியம்	3,134		
தனியார்	1,964		
	5,705	24.93 லட்சம்	69,279
உயர்நிலைப்பள்ளிகள்—			
சாதாரணப்பள்ளிகள்—			
அரசு	1,978		
நகராட்சி	106		
தனியார்	868		

பள்ளிக்கூடங்கள். (1)		எண்ணிக்கை. (2)	மாணவர்கள். (3)	ஆசிரியர்கள். (4)
		2,952	15.65 லட்சம்	60,879
ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள்—மெட்ரிகுலேஷன் பள்ளிகள்—CBSE பள்ளிகள் முதலியவை—				
ரயில்வே மைய அரசு	17			
தனியார்	139			
		156	1.18 லட்சம்	4,500
உயர்நிலைப் பள்ளிகள்		3,108	16.83 லட்சம்	65,379
பள்ளிகள் மொத்தம்		36,238	84.29 லட்சம்	2,46.466

பள்ளிக்கூடங்கள். (1)	எண்ணிக்கை. (2)	மாணவர்கள். (3)	ஆசிரியர்கள். (4)
	மாணவர்	48.65 லட்சம்	
	மாணவியர்	35.64 லட்சம்	

3,108 உயர்நிலைப் பள்ளிகளில் 912 பள்ளிகளில் முதலாண்டு மேல் நிலைப் பள்ளி வகுப்பும் இருந்தது. அவ்வகுப்புக்கான விவரங்கள் வருமாறு :—

		1.14 லட்சம்	
கலைப் பாட ஆசிரியர்			7,941
தொழில் பாட ஆசிரியர்			1,816
			9,757
பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் சேர்த்து	36,238	85.43	2,56.223

பள்ளிக்கூடங்கள். (1)	எண்ணிக்கை. (2)		மாணவர்கள். (3)	ஆசிரியர்கள். (4)
ஏனைய நிறுவனங்கள்—				
இளஞ்சிறார் பள்ளிகள்	40		4,800	131
கீழ்த்திசைப் பள்ளிகள்	18		3,900	167
ஊனமுற்றவருக்கான பள்ளிகள் ..	45	(பார்வையற்றவருக்கு 17, காதுகேளாதவருக்கு 18, மற்றவருக்கு 10.)	4,000	422
ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள்	80		2,450	317
கைத்தொழில் பயிற்சி மையங்கள் ..	7		500	40

பள்ளிகளில் 1978-79-ல் பணி செய்து வரும் ஆசிரியர்கள் நிருவாக வாரியான விவரம்,

ஆண்கள், பெண்கள் விவரம் தனித்தனியே.

பள்ளிகள்.	அரசு.	ஊராட்சி. ஒன்றியம்	நகராட்சி.	தனியார்.	மொத்தம்,	ஆண்.	பெண்.
(1)	(2)	(3)	(4).	(5)	(6)	(7)	(8)
தொடக்கப் பள்ளி ..	7,814	67,150	8,918	27,926	1,11,808	70,274	41,534
உயர்.தொடக்கப்பள்ளி	4,297	29,805	6,699	28,478	69,279	37,058	32,221
உயர்நிலைப் பள்ளி ..	35,147	..	3,518	26,714	65,379	43,937	21,442
மொத்தம் ..	47,258	96,955	19,135	83,118	2,46,466	1,51,269	95,197

இணைப்பு II

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

விவரங்கள்.	1965–66 மூன்றாவது திட்ட முடிவு.	1973–74 நான்காவது திட்ட முடிவு.	1976–77	1977–78	1978–79
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. மொத்த மாணவர் எண்ணிக்கை—					
(1) புதுமுக வகுப்பு ..	39,507	72,646	84,257	89,423	77,802
(2) பி. ஏ.	11,349	51,698	44,697	43,077	42,871
(3) பி. எஸ். சி.	22,381	49,057	48,110	48,948	51,622
(4) பி. காம்.	3,050	14.859	19,195	20,451	20,725
(5) பட்ட மேற்படிப்பு ..	2,607	6,993	7,043	7,012	7,509
மொத்தம் ..	78,894	1,95,253	2,03,302	2,08,911	2,00,529

விவரங்கள் திட்ட முடிவு. (1)	1965-66 மூன்றாவது திட்ட முடிவு. (2)	1973–74 நான்காவது திட்ட முடிவு. (3)	1976–77 (4)	1977-78 (5)	1978-79 (6)
2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—					
(1) அரசுக் கல்லூரிகள் ..	..	2,969	3,733	3,812	3,813
(2) தனியார் கல்லூரிகள் ..	..	7,090	7,883	8,394	8,329
	4,932	10,059	11,616	12,206	12,142
3. கல்லூரிகள் எண்ணிக்கை—					
(1) அரசு	21	51	51	51	51
(2) தனியார்	71	127	138	137	137
	92	178	189	188	188

இணைப்பு III.

1978-79—ல் தொழில் நுட்பக் கல்வி பற்றிய விவரங்கள்:

(1)		கல்வி நிலையங்கள். எண்ணிக்கை. (2)	ஆசிரியர் எண்ணிக்கை. (3)	மொத்த மாணவர் எண்ணிக்கை. (4)
பொறியியற் கல்லூரிகள்—				
(1) அரசு	3			
(2) தனியார்	3	13	950	9,252
(3) தன்னுரிமையுள்ளவை ..	7			
பாலிடெக்னிக்குகளும் சிறப்பு பட்டயப்படிப்பு நிலையங்களும்—				
(1) அரசு	19			
(2) தனியார்	19	39	1,353	16,982
(3) தன்னுரிமையுள்ளவை ..	1			
தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்—				
(1) அரசு	11			
(2) தனியார்	3	14	103	2,011
மொத்தம் ..		66	2,406	28,245

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

புதன்கிழமை, 1979 ஏப்ரல் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்:

Military Assistance to Tamil Nadu Government.

* 280-*A*. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of times the State Government sought Military assistance, between 1st July 1977 and 1st August 1978; and

(*b*) the expenditure, the State Government incurred on the account, on each time?

தமிழ்நாடு அரசுக்கு இராணுவ உதவி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் 1—7—1977 முதல் 1—8—1978 வரை, எத்தனை முறை இராணுவத்தின் உதவியை மாநில அரசு கோரிப் பெற்றது?

(இ) இதன் விளைவாக ஒவ்வொரு முறையும் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) இரண்டு முறை.

(இ) (1) இதில் 1977-ம் ஆண்டு தமிழகம் புயலால் தாக்கப்பட்டபோது, இராணுவ உதவி கோரப்பட்டது. இராணுவத்தினருக்கான உணவுக்காக ரூ. 1,502.47 செலவிடப்பட்டது. (2) 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக இராணுவ உதவி கோரப்பட்டது. அதில் அவர்களின் உணவுக்காக ரூ. 580 செலவிடப்பட்டது.

[1979 ஏப்ரல் 11

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, விவசாயிகளின் போராட்டத்தின்போது இராணுவ உதவி கோரப்பட்டபோது, எந்த அடிப்படையில் அவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது? அதாவது, எத்தகைய சூழ்நிலை ஏற்பட்டாலும், இராணுவத்தினரே அதைச் சமாளித்துக் கொள்வது என்ற அடிப்படையில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதா, அல்லது சங்கடமான சூழ்நிலை ஏற்படுகிறபோது அங்கேயிருக்கிற மாநில அரசின் அதிகாரிகளோடு அல்லது அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இராணுவத்தினரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இராணுவ உதவி இரு வகையில் கோரப்படுகிறது. ஒன்று சட்டம் ஒழுங்கு, மாநில அரசின் காவல் துறையினுடைய சக்திக்கு மீறிச் செல்கிறபோது, மத்திய அரசினுடைய அனுமதி பெற்று அதற்குப் பிறகு முன்னெச்சரிக்கையாக அல்லது பின்னால் நடக்கவிருக்கும் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இராணுவ உதவியைக் கோரிப் பெறுவது. இரண்டாவது, மத்திய அரசின் அனுமதியைப் பெறாமலேயே இங்கே இருக்கிற இராணுவத்தின் மேஜர்-ஜெனரலிடம் கலந்து பேசி, சூழ்நிலைக்குத் தக்க உதவி பெறுவது. விவசாயிகள் போராட்டத்தின் போது அப்படி இராணுவத் தலைமையோடு பேசி இங்கேயே அவர்களுடைய உதவி கோரப்பட்டது. அந்த உதவி பெறப்பட்டது. அது காவல் துறையினருக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டதே தவிர, முழுமையாக இராணுவத்தின் கன்ட்ரோலில் விடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இராணுவ உதவி கோரப்பட்ட பகுதிகளில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அத்தகைய துப்பாக்கிச் சூடு காவல் துறையோடு தொடர்புகொண்டு நடந்ததா, அல்லது அந்தப் பகுதிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட நிலையில்—அங்கேயிருக்கும் சூழ்நிலையை இராணுவம் சரியாக உணராத நிலையில்—துப்பாக்கிச் சூடு நடத்துவதில் அவர்கள் ஈடுபட்டார்களா? மக்களுடைய போராட்டம் என்று வருகிறபோது, இனி இதுபோன்ற நிலைமைகள் உருவாகாமலிருக்க, இராணுவத்தை அழைப்பது என்ற முறையை அரசு தவிர்க்க முன்வருமா? அரசின் தவறான நடைமுறையின் காரணமாகத்தான் சாவுகள் ஏற்பட்டன என்பதை அரசு உணர்ந்து இத்தகைய நிலைமைகள் இனி எதிர்காலத்தில் உருவாகாமலிருக்க உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஜனநாயக நெறியில் நிறுவப் பட்ட ஒரு அரசுக்கு எதிராக வன்முறையின் மூலமாகவும், பலாத்காரத்தின் மூலமாகவும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்று ஒரு கும்பல் தீர்மானிக்கிற

1979 ஏப்ரல் 11]

போது, நாட்டினுடைய அரசாட்சியையும் ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமையாகும். இராணுவம் என்பது ஏதோ வெளிநாட்டு அபாயத்தை மட்டுமே தடுப்பதற்காக இருக்கிற அமைப்பல்ல. உள்நாட்டில் ஆபத்து வரும்போது, அதையும் தடுத்து நிறுத்துகிற பணியில் இராணுவத்தைப் பயன்படுத்துவது இன்றியமையாததாக இருக்கிறது. எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தும், அவர்கள் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் நாம் இராணுவத்தின் உதவியைக் கோருகிறோம். எனவே சூழ்நிலைக்கு ஏற்றபடிதான் இராணுவத்தின் உதவியைக் கோர வேண்டியிருக்கிறதே தவிர, கொள்கை ரீதியாக அரசு இதில் கருத்துத் தெரிவிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இராணுவத்தினருக்கு உணவு அளித்த வகையில் ஏற்பட்ட செலவுக் கணக்கை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இராணுவத்தினரின் போக்குவரத்துச் செலவை மாநில அரசு ஏற்கிறதா, அல்லது மத்திய அரசு ஏற்கிறதா? இராணுவத்தை அழைக்க வேண்டிய அளவுக்கு உள்நாட்டில் இருக்கிற காவல் துறையில் பலம் போதவில்லை என்று அரசு கருதுகிறதா? அப்படியானால் உள்நாட்டில் இருக்கிற எ.ஆர்., ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ், ரிசர்வு போலீஸ் ஆகியவற்றின் எண்ணிக்கையும் விவசாயிகள் போராட்டத்தின்போது போதிய அளவுக்கு இல்லை என்று அரசு கருதியதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : காவல் துறையின் எண்ணிக்கையை வைத்து இதை முடிவு செய்வதில்லை. ஒரு போராட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் மேற்கொள்கிற திட்டங்கள், அவர்கள் எந்த நோக்கத்தோடு நடத்துகிறார்கள், எந்த எண்ணத்தில் செயல்பட இருக்கிறார்கள், எந்தெந்த வழிமுறைகளைப் பின்பற்ற இருக்கிறார்கள் என்பதன் அடிப்படையில்தான் முடிவுகள் மேற்கொள்ளப்படுகிறதே தவிர, எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல.

திரு. வே. தங்கப்பாண்டியன் : என்னுடைய கேள்வியின் ஒரு பகுதி, இராணுவத்தினரின் உணவுக்காக மாநில அரசின் செலவுக் கணக்கை அளித்ததைப்போல் இராணுவத்தினரின் போக்குவரத்துச் செலவை யார் மேற்கொள்ளுகிறார்கள் என்பதாகும். மாநில அரசு மேற்கொள்கிறதா அல்லது மத்திய அரசு மேற்கொள்கிறதா என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அந்தச் செலவை மத்திய அரசில் ஏற்றுக்கொள்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சூழ்நிலை காரணமாக இராணுவம் அழைக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில நேரங்களில் வேண்டு மென்றே ஒரு சூழ்நிலை இருப்பதாக பொய்யான வதந்தி பரப்பப்படுவதன் காரணமாகவும் இராணுவம் அழைக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. உதாரணமாக விவசாயிகளின் போராட்டம் நடைபெற்றபோது, ஒரு பேருந்தில் வந்த பெண்கள் அனைவருமே கற்பழிக்கப்பட்டார்கள் என்ற தவறான தகவல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளவுக்கு வந்து, அதற்குப் பிறகு தலைமைச் செயலாளரே அதை மறுக்கக்கூடிய அளவுக்கு வதந்திகள் உலவ விடப்பட்டன. முதலில் கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில் இராணுவம் அழைக்கப்படுவது நியாயம் என்று தோன்றி னாலும், பிறகு உண்மையைச் சரியாக அறியாமல் அவசரப்பட்டுவிட்டோமே என்று வருத்தப்படுகிற நிலைமையும் உருவாகிறது. எனவே இந்த வகையில் திட்டமிட்ட ஒரு கும்பல் செயல்பட்டுவருகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அப்படிப்பட்ட நிலைமைகளில் அரசு இராணுவத்தை அழைப்பது என்று இல்லாமல் உரிய வகையில் அரசு செயல் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : யார் போராட்டத்தை அறிவிக்கிறார்கள், எந்த வழியில் எந்த நோக்கத்தோடு போராட நினைக்கிறார்கள் என்பதன் அடிப்படையிலேயே, அரசாங்கத்தைப் பொறுத்த வரை, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அறவழியில் தங்களுடைய எண்ணத்தை வெளியிடும் உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால் ஜனநாயக முறைப்படி அமைந்த ஒரு அரசுக்கு எதிராக பலாத்காரமான முறையில், வன்முறையில் ஈடுபட்டு தங்களுடைய கோரிக்கைகளை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று செயல்பட்டால், அரசு நிச்சயமாக அதை அனுமதிக்காது. எனவே அந்த அடிப்படையில் சூழ்நிலைக்குத் தக்கவாறு அரசாங்கம் முடிவெடுக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அரசாங்கத்திற்குக் கொடுக்கப் படுகிற தகவல் சரியான தகவல்தானா என்பதை அறிந்து செயல்படும் வகையில் அரசு எச்சரிக்கையாக இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெடுகிறபோது, இறுதியாக மத்திய அரசின் உதவியுடன் இங்கே இருக்கிற இராணுவத்தை அழைத்துப் பேசி, அவர்களை ஈடுபடுத்துவது என்பது மரபாக இருந்து வருகிறது. விவசாயிகள் போராட்டத்தின்போது, மாநில அரசின் கை கடந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்பு போய்விட்டது என்ற எண்ணத்தில்தான், இராணுவத்தின் உதவி கோரப்பட்டதா ? அப்படி கடைசியாகப் பயன்படுத்த வேண்டிய ஆயுதத்தை முதலிலேயே அரசு பயன்படுத்தியதற்கு என்ன

காரணம் ? அரசின் மதிப்பீட்டில் ஏதேனும் தவறு நிகழ்ந்துவிட்டதா ? எனவே இனி எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இல்லாத வகையில் மதிப்பீடு செய்வதை அரசு உரிய முறையில் செய்யுமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : போராட்டங்களில் பல்வேறு வகைகள் இருக்கின்றன என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணர்வார்கள். குறிப்பாக விவசாயிகள் போராட்டம் 1978 ஆம் ஆண்டிலே நடந்தபோது, அவர்கள் அந்தப் போராட்டத்தைத் திடீரென்று நடத்தினார்கள் என்று சொல்ல முடியாது. ஆறு மாத காலமாக இரகசியமாகக் கூட்டங்களை நடத்தி, வன்முறைக்குத் தயாராக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை கொடுக்கப்பட்டு, பயிற்சி கொடுக்கப்பட்டது என்று பல்வேறு புகார்கள் அரசுக்குக் கிடைத்த பிறகுதான், முன்னெச்சரிக்கையாக அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது. இன்றைக்கும் பல்வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள் கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள், போராட்டம் நடத்துகிறார்கள். அப்படிப் போராட்டம் நடத்துகிறவர்கள் மீதெல்லாம் இராணுவத்தைப் பயன்படுத்துவதில்லை. இந்த நோக்கம் அரசுக்கு இல்லை. விவசாயிகளைப் பொறுத்த வரையில், சற்று வித்தியாசமாக போராட்டத்தை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்குச் சான்றுகள் இருந்தன என்ற செய்தி அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் அரசு முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கையை எடுத்தது.

Rape Cases.

* 280-*B*. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Chief Minister be pleased to state the number of Policemen and Police Officers against whom action was taken for the offence of rape, between 15th September 1978 and 3rd October 1978?

கற்பழிப்புக் குற்றங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

15—9—1978, 3—10—1978 ஆகிய நாட்களுக்கிடையில் கற்பழிப்புக் குற்றத்திற்காக காவலர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளில் எத்தனை பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : மூன்று காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு தலைமைக் காவலர்,

இரண்டு காவலர்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கற்பழிப்புச் சம்பவங்கள் காவல் நிலையத்திற்குள்ளே அல்லது அதன் எல்லைக்குள்ளே நடைபெற்றதா அல்லது வெளிப்புறத்திலே நடைபெற்றதா ? கற்பழிப்புக்கு ஆளானவர்கள் ஐ.பி.சி. குற்றவாளிகளா அல்லது மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் குற்றவாளிகளா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 'அக்யூஸ்ட்' பற்றிக் கேட்கிறார்களா ?

திரு. க. இராமமூர்த்தி : கற்பழிப்புக்கு ஆளானவர்கள் போலீசாரோடு தொடர்பு ஏற்படுத்துகிற அவசியம் எப்படி ஏற்பட்டது ? அவர்கள் ஐ.பி.சி. கேசின் கீழ் வந்தபோதா அல்லது மதுவிலக்குக் குற்றங்களுக்காக வந்தபோதா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அதிலே இரண்டு சம்பவங்கள் இருக்கின்றன. அதிலே குற்றம் சாட்டப்பட்ட ஒருவரிடம் தவறான வழிகளிலே நடந்தார் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது சம்பவம், சம்பந்தப்பட்டவர் விசாரணைக்கு வந்தபோது நடந்தது. சம்பவங்கள் அவர்களுடைய எல்லைக்குள்ளேதான் நடந்திருக்கின்றன என்று இங்குள்ள குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சம்பவங்கள் நடந்ததற்குப் பிறகு, அதிகாரிகள் மீது விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாவது சம்பவத்தில், பாதிப்புக்குள்ளான பெண், தவறான வழியில் தொடர்ந்து நடந்து வரக்கூடியவர். அவர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, காவலரைப் பழி வாங்க வேண்டுமென்று இந்தப் புகாரைக் கொடுத்தார் என்று தகவல் வந்தது. இருந்தாலும்கூட காவலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : 3—10—1978-க்குப் பிறகும் காவலர்கள் சிலர் இதுபோன்ற கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆகவே கற்பழிப்புச் சம்பவங்களிலே காவல் துறையினர் ஈடுபடுகிறபோது, அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கையை எடுத்தாலன்றி இதைப் போக்க முடியாது. காவலர்களைப் பகைத்துக்

1979 ஏப்ரல் 11]

கொள்ளக் கூடாது என்ற நிலையில் அரசு போய்க் கொண்டிருக்குமானால், இது போன்ற சமுதாய விரோதக் குற்றங்களைத் தடுக்க முடியாமல் போய் விடுகிற நிலை ஏற்பட்டு, இது போன்ற குற்றங்கள் வளர்ந்து, மக்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதை அரசு உணர்கிறதா ? அந்த அடிப்படையிலே அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு உறுப்பினர் சிறந்த வழக்கறிஞர் என்ற முறையிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட காவலர்கள் மீது ஐ.பி.சி. 363, 354, 376 ஆகிய பிரிவுகளின்கீழ் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். காவலர்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அரசு கடுமையாகத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறது. முன்பிருந்ததைப் போல் நிலைமை இப்போது அதிகமாக இல்லையென்று தகவல் வந்திருக்கிறது. அவர்களே பார்த்துத் திருந்துவார்கள் என்றும் அரசு எதிர்பார்க்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய முடிவு என்ன ? காவலர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்படுகிறபோது, அவர்கள் சாட்சியங்களை அழிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட காவலர்களை உடனே வேலையிலிருந்து நீக்கி, அந்த வட்டாரத்திற்குள்ளேயே அவர்கள் இருக்க முடியாத நிலையை ஏற்படுத்தி, அதற்குப் பிறகு அவர்கள் மீது விசாரணை நடத்தலாமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இந்த வழக்கில் குற்றவாளி பிறர் மனைவியுடன் தொடர்பு கொண்டதற்கான போதிய சாட்சியங்கள் இருப்பதால், கிரிமினல் வழக்குப் போட நியாயம் இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறிய பின்னர், அதைப் பரிசீலனை செய்ததின் அடிப்படையிலே, வழக்குப் போட்டுத்தான் ஆக வேண்டுமென்று அரசு ஏற்றுக்கொண்டு வழக்கு போடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து சாட்சியங்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்று தெரிகிறது.

Cinema Shows.

* 281. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state whether the Government have fixed any ceiling on the number of shows, that the theatres can exhibit in a day?

[1979 ஏப்ரல் 11

திரைப்படக் காட்சிகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

திரையரங்குகள் ஒரு நாளில் நடத்தும் காட்சிகளின் எண்ணிக்கை குறித்து உச்சவரம்பு ஏதேனும் அரசு நிர்ணயித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : திரையரங்குகள் இத்தனை காட்சிகள்தான் ஒரு நாளில் நடத்த வேண்டும் என்று உச்சவரம்பு எதுவும் அரசால் விதிக்கப்படவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இத்தனை காட்சிகள்தான் நடத்த வேண்டுமென்று உச்சவரம்பு இல்லாத காரணத்தால், சில தியேட்டர்களில் ஒரு படக் காட்சி முடிந்த பிறகு மற்றொரு காட்சி ஆரம்பிக்க இடைவெளிகூட இல்லாமல், சுத்தம் செய்வது போன்ற துப்புரவு வசதிகளைச் செய்யாமல், தொடர்ந்து ஒரு நாளைக்கு அய்ந்தாறு காட்சிகள் என்று நடத்தி பொது மக்களுக்குப் பெரிய அவதியை ஏற்படுத்துகிறார்கள். இதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இப்போதுள்ள விதிகளின்படி, ஒரு நாளில் காலை 9 மணி முதல் நள்ளிரவு ஒன்றரை மணி வரை உள்ள காலத்திற்குள் ஒவ்வொரு காட்சியிலும், ஒரு முழு நீள திரைப்படம், மத்திய மாநில செய்திப் படங்கள், விளம்பரப் படங்கள் இவைகளுக்குள்ள காலத்தைக் கணக்கிட்டு அதற்கேற்ப காட்சிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அரசின் பரிசீலனைக்கும் வந்திருக்கிறது. சில அரங்குகளில் இடைவெளியே இல்லாமல் அய்ந்தாறு காட்சிகள் நடத்தப் படுகின்றன என்ற குறிப்பு அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றது. அதைப் பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுத்து அவைகளை எப்படித் தடுப்பது, சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருகிற அளவுக்கு இடைவெளி நேரம் கொடுப்பது எப்படி, அதற்காக சட்ட விதிகளை எப்படித் திருத்துவது என்பது பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : எங்களுடைய பகுதியில் பல ஊர்களில் அரசு Causeway கட்டுகிறபோது; அதற்காகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். கார்களை, வண்டிகளையெல்லாம் நிறுத்தி ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். நகரங்களில் தியேட்டர்கள் உள்ள இடங்களில் இது போன்ற சுரங்கப் பாதைகளைக் கட்டுகிறார்கள். தியேட்டர்கள் தொடர்ந்து

1979 ஏப்ரல் 11]

படக் காட்சிகளை நடத்துவதாலும், நிறைய தியேட்டர்கள் அமைந்திருக்கிற காரணத்தாலும் இதற்கான அவசியம் ஏற்படுகிறது. அதற்கான கட்டணத்தை இந்தத் தியேட்டர் உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நகரங்களில் causewa போன்றவைகள் அமைப்பது என்பது பொது உபயோகத்திற்காக. அதற்காக தனிப்பட்ட அரங்கு உரிமையாளர்களிடம் மாத்திரம் வசூலிப்பது என்பது சட்டத்திற்குட்பட்டு வராது. அது சட்ட உரிமையை மீறுகிற காரியமாக அமையும். காட்சிகளை நெருக்கமாக நடத்துகிற அந்த முறையை எப்படித் தவிர்ப்பது என்பதுபற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இயங்கும் நாட்களில் மாணவர்கள் திரைப்படக் காட்சிகளுக்குச் சென்று பாழடைவதால், அதைத் தடுக்கும் முறையில், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் இயங்கும் நேரத்தில் திரைப்படக் காட்சிகளை நடத்தக் கூடாது என்று ஏதேனும் ஒரு நிபந்தனையை விதிக்க அரசு பரிசிலித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை கொஞ்சம் அபாயகரமான யோசனை. இந்த யோசனையை ஏற்றால், 'கல்லூரிகள், பள்ளிகள் நடக்கிற நாட்களில் பேருந்துகளில் கலவரம் விளைவிக்கிறார்கள், பேருந்துகளைத் தாக்குகிறார்கள் என்பதற்காக கல்லூரிகளும், பள்ளிகளும் நடக்கிற காலத்தில் பேருந்துகளையும் விட வேண்டுமா' என்ற கேள்வி எழலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசிலிக்கக் கூடிய அளவுக்கு உரியதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கிராமப்புறங்களில் இருக்கிற நிரந்தரத் திரையரங்குகளில் ஒட்டுமொத்த வரி விதிப்பின் காரணமாக சலுகை அளிக்கப் படுகிறது. ஆனால் மின்சாரத் தடையின் காரணமாக இரண்டு காட்சிகள் நடத்தப்படுவது நிறுத்தப்பட்டால், கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது வருவாய்த் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி என்றாலும், இது எனக்கும் தொடர்புடையது என்பதால் விளக்கம் அளிக்கிறேன். தொடர்ந்து காட்சிகள் தடைபடுகின்றன என்றால், அவர்களுக்கு விலக்குக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இந்த

ஓட்டுமொத்தக் கேளிக்கை வரி விதிப்பின் காரணமாக எத்தனை காட்சிகளை வேண்டுமானாலும் தொடர்ந்து நடத்தி மக்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அப்படிப்பட்ட முயற்சியால் பணம் சம்பாதிக்கிற நேரத்தில், மின் தடை காரணமாகவோ, இயந்திரக் கோளாறு காரணமாகவோ காட்சிகள் தடைப்பட்டால், அதனால் பெரிய இழப்பு ஒன்றும் வந்துவிடாது; மாறாக பெருத்த இலாபத்தில் கொஞ்சம் குறையலாம். ஆகவே அது பற்றி அரசு பரிசீலிக்காது. நீண்ட நாட்களாகத் தொடர்ந்து காட்சிகள் ரத்து செய்யப்படுகிற நிலை ஏற்பட்டால், தக்க சான்றிதழ்களுடன் அதை அறிவித்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். நானும் வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே அதுபற்றித் தெரிவிப்பேன்.

(முற்பகல் 10-20)

டாக்டர் இரா. சனார்த்தனம்: திரையரங்குகளுக்கு கம்பௌண்டிங் முறையில் வரி விதிக்கின்ற முறையை அரசு நகர மன்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்குமா? அங்குள்ளவர்களும் விற்பனை வரி அதிகாரிகளால் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இந்தக் கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. விற்பனை வரி அதிகாரிகள் தொல்லைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தங்களையும் விடுவிக்கவேண்டும் என்று நகராட்சி மன்றங்களிலிருந்து சென்னை மாநகராட்சி வரை இருப்பவர்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதிலே அரசு கொஞ்சம் நிதானம் காட்ட வேண்டியதாக இருக்கிறது. முதல்படியாக 'ஏ' கிரேட் நகரசபைகளைப் பொறுத்துப் பரிசீலிக்கலாம். ஏறத்தாழ 80, 90 திரையரங்குகளைப் பொறுத்து, இதைக் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். இது குறித்து வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும், நிதி அமைச்சர் அவர்களிடமும் கருத்து கேட்டிருக்கிறோம். விரைவிலே அதைப்பற்றி அறிவிக்கப்படலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி தன்னுடைய இருக்கையில் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலும் சப்ளிமெண்டரி கேட்க எழுந்திருக்கிறீர்கள். துணைக் கேள்விகள் கேட்பதற்கு என்று ஒரு வாய்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கேள்விக்கே கிட்டத்தட்ட அரைமணி நேரம் எடுத்துக்கொண்டாகிவிட்டது.

திரு. க. இராமமூர்த்தி: நான் கேட்க விரும்புவது சப்ளிமெண்டரி கேள்வி அல்ல. On a point of suggestion ஒன்று சொல்ல விரும்புகிறேன். அடுத்து வருகின்ற கேள்விகளுக்கான பதில்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அடுத்து வருகின்ற இரண்டு மூன்று கேள்விகளுக்கு ஸ்டேட்மெண்ட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஸ்டேட்மெண்டுகளை உடனடியாகப் படித்துவிட்டு துணைக் கேள்விகள் போட முடியாத அளவுக்கு, சில விடைகளில் பட்டியல்கள், விவரங்கள் என்று அதிகமான குறிப்புகள் இருக்கின்றன. முதல் நாளே இந்த பதில்களை அனுப்பி வைப்பதற்கு வழி செய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் அந்த முறை கையாளப்படுகிறது. இப்போதே முடியாது என்றால், பின்பாவது இதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் பற்றிப் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

Tourist Homes.

* 282. *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) the places where toutrist ihomes and Guest Houses have been built so far by the Tamil Nadu Tourism Development Corporation and the number thereof; and

(*b*) the boarding and lodging capacity of each?

சுற்றுலா மாளிகைகள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இதுவரையில் எந்தெந்த இடங்களில் சுற்றுலா மாளிகைகளும் விருந்தினர் மாளிகைகளும் கட்டப்பட்டுள்ளன? அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) ஒவ்வொன்றிலும் எத்தனை பேருக்கு உணவு-உறையுள் வசதிகள் உள்ளன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) மற்றும் (இ) தமிழ்நாடு சுற்றுலா கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் உணவு விடுதி வசதிகளுடன் கூடிய 18 சுற்றுலா மாளிகைகளும் ஒரு சாலை ஓர விடுதியும் இயங்கி வருகின்றன. அவைகளில் மொத்தம் 944 படுக்கைகள் உள்ளன.

[1979 ஏப்ரல் 11

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சுற்றுலாக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சுற்றுலா மாளிகைகளில், பயணியர் விடுதிகளிலும், ஆய்வு மாளிகைகளிலும் உள்ளது போல் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அங்கு தங்கும்போது 50 சதவிகிதம் கட்டணச் சலுகைகள் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது பற்றி முன்னாலேயே பல முறைகள் கேட்கப்பட்டு விடையும் தரப்பட்டிருக்கிறது. சுற்றுலாக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் பயணிகள் விடுதிகள் நடத்துவது லாபநோக்கத்தோடு நடத்தப்படுகின்ற ஒன்று அல்ல. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக நடுத்தர மக்களாக, ஏழை எளிய மக்களாக இருக்கின்றவர்களுக்கு ஏற்ற வகையில் கட்டணங்கள் நிர்ணயித்திருக்கிறோம். அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப் படுகின்றது. அந்த ஏழை எளியவர்கள் பட்டியலிலே அங்கத்தினர்களையும் இணைத்துக் கொண்டு கட்டணச் சலுகைகளைத் தருவது பலனுள்ளதாக இருக்காது. இதற்காக ரூ. 2 கோடிக்கு மூலதனம் செய்யப்பட்டு, கடந்த 5, 6 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. கடந்த ஆண்டில் கொஞ்சம் இழுத்துப்பிடித்து, நஷ்டம் என்ற நிலையை மாற்றி, லாபம் என்று இல்லை என்றாலும், லாபநஷ்டமில்லாத ஒரு நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே இதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சுற்றுலா வாரியத்தைப் பொறுத்தவரைக்கும், சுற்றுலா மாளிகையில் ஏற்படுகின்ற நஷ்டத்தை மாற்றி, அமைச்சர் அவர்களுடைய முயற்சியால் லாபநஷ்டமற்ற ஒரு அமைப்பாக அதை மாற்றியிருக்கிறார்கள். நஷ்டத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நடைபெற்று வருவதைப்பற்றி என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இதிலே நிர்வாகம் செய்கின்றவர்கள், அவர்களுடைய பயிற்சியின்மை காரணமாக சில இடங்களில் ஒரு indifference . கு நிர்வாகம் செய்துகொண்டிருப்பதால், ஒரு சமுகமான நிலை இல்லை. இது சுற்றுலா வளர்ச்சியை மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லாத நிலைமையை உண்டாக்கும். பல பேர்கள் இந்த நிர்வாக வேலைக்கு நேரடியாகவே வந்திருக்கின்றவர்கள். பொது மக்களோடு தொடர்பு கொள்கின்ற பயிற்சியை அவர்களுக்கு அளிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ? குறிப்பிட்ட சில இடங்களில் சுற்றுலாப் பயணிகள் தங்குகின்ற விடுதிகளில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன. வெளியே விற்கின்ற விலைக்கும் அதிகமான விலைக்கு விற்கின்றார்கள். கன்னியாகுமரி

1979 ஏப்ரல் 11]

மாவட்டத்தில் நல்ல அரிசி வாங்கமுடியாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந் தார்கள். இதுபோன்ற சாதாரணமான சங்கடங்கள் இல்லாமல் இருக்க வேண்டும். விலைகள் ஏற்றி விற்கப்படுவதைத் தடுக்க வேண்டும். அவைகளைத் தடுத்து, சுற்றுலாத் துறை வளர்ச்சி அடையச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இப்போது இந்த சுற்றுலாக் கழகத்தின் சார்பில் இயங்குகின்ற சுற்றுலா மாளிகைகளில் நிர்வாகிகளாக நியமிக்கப்படுபவர்கள், Catering Institute -ல் பயிற்சிபெற்ற Diploma holders, தான். அவர்களுக்குக் கீழே வருகின்ற சமையல் காரர்களைப் பொறுத்தவரை, சில இடங்களில் அதில் பயிற்சி பெற்றவர் களையும் சில இடங்களில் அனுபவம் பெற்றவர்களையும் நியமிக்கிறோம். அடுத்து, ஆபிஸ் பாய்ஸ், சர்வர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் பயிற்சி பெற்று வருவதில்லை. அவர்கள் வந்து வேலையில் சேர்ந்த பிறகு, அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுப்பதைப்போல, பணியைப்பற்றிச் சொல்லிக்கொடுக் கிறார்கள். அங்கு வருகின்ற பயணிகளிடம் அன்பாகவும் கனிவாகவும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். வீட்டிலே மனைவியிடத்திலே கூட பெறமுடியாத அன்பையும், கனிவையும் இப்படிப்பட்ட விடுதிகளிலே கிடைக்கிற அளவுக்கு செயல்பட வேண்டும் என்பதுதான் அரசின் கருத்து.

அடுத்து, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல், பொருள்கள் வாங்குவதில் குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைக் களைந்து அடக்க விலைக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்கான ஒரு திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மேலும் அதற்காக முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்ட மாளிகைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ? அப்படி இல்லை என்றால், அவைகளைக் கட்டுவதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : முந்தைய சேலம் மாவட்டத்தில், ஹோகேனக்கலில் ஒரு சுற்றுலா மாளிகை இருக்கிறது. தற்போது அது தர்மபுரி மாவட்டத்தில் வந்துவிட்டது. சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் 26 படுக்கைகள் கொண்ட ஒரு சுற்றுலா மாளிகை இருக்கிறது. வியாபாரிகளும் பொதுமக்களும் வருகின்ற ஏற்காட்டிலுள்ள அந்தச் சுற்றுலா மாளிகை நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏனென்றால், அந்தப் பகுதியில் தனியார் நடத்துகின்ற சுற்றுலா மாளிகையும் ஓட்டலும் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தின் சுற்றுலா வளர்ச்சியைப் பொறுத்து, அடிக்கடி

மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களுக்கு நானும் சென்று பார்த்திருக்கிறேன். சேலம் மாவட்டத்தை நல்ல, மிகப்பெரிய சுற்றுலாப் பகுதியாக மாற்றுகின்ற முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Financial Aid to Municipalities.

* 283. *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the amount of financial aid received by each Municipality in Tamil Nadu, for Cyclone–Flood Relief Works?

நகர்மன்றங்களுக்கு நிதி உதவி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

புயல் வெள்ள நிவாரண சீரமைப்புப் பணிகள் என்கிற வகையில் தமிழகத்தில் உள்ள நகர் மன்றங்கள் தனித்தனியே பெற்றுள்ள நிதியுதவித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அறிக்கை* ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: பல லட்சக்கணக்கான ரூபாய் தனித்தனியாக நகராட்சி மன்றங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. 150 லட்சம் ரூபாய் மொத்தத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தந்த நகராட்சி மன்றங்களுக்கு இவ்வளவு தொகை தேவை என்கின்ற முடிவினை எடுத்தது யார்? அரசு தன்னிச்சையாகக் கொடுத்ததா? கமிஷனர்கள், மற்றவர்கள் சொல்லியதன் அடிப்படையிலே கொடுக்கப்பட்டதா? யார் யாருக்கு எவ்வளவு தேவை என்று நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றவர் யார்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நகராட்சி ஆய்வாளர்கள் பரிந்துரையின் அடிப்படையிலேதான் அது கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: நகராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் ஆய்வாளர்கள் சிபாரிசு செய்ததன் பேரில் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். அங்கே செலவிடுகின்ற பொறுப்பிலே இருந்தவர்கள்,

* 380–383 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சாலைகள் போன்றவற்றைச் சரிப்படுத்துவதற்கென்று செலவழிக்காமல் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப செலவிட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? கடலூர் போன்ற இடங்களில் ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசு அறியுமா? இதையெல்லாம் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது அரசினுடைய கடமை. இது குறித்துப் புகார்கள் வந்தால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அரசின் கடமையாகும்.

(முற்பகல் 10-30)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வெள்ளத்தாலே பாதிக்கப்படுகிறபோது, அரசு உதவி செய்ய வேண்டியது கடமையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலே வெள்ள நிவாரணத்திற்காக முன்பணம் எல்லாப் பகுதிகளிலும் வழங்கப்பட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி அறிவித்திருந்தும்கூட, கத்திவாக்கம் நகரியத்திலே ஆசிரியர்களுக்கு முன்பணம் வழங்கப்படவில்லை என்பதை அரசு உணருமா? அதைப் போலவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ADADA தொகை அனைத்து ஆசிரியர்களுக்கும், வெள்ளத்தின் காரணமாகத் திருப்பி அளிக்க வேண்டுமென்று இந்த அவையிலே 20—2—1979 அன்று அமைச்சரவர்கள் உறுதிமொழி அளித்திருந்தும், அதுகுறித்து ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்பதையும் அரசு உணருமா? இது குறித்து அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. ம. சங்கரலிங்கம்: அமைச்சரவர்கள் தந்திருக்கிற பட்டியலில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த குளித்துறை நகரம் சேர்க்கப்பட்டு, 25,000 ரூபாய் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்க வருகிறபோது நாகர்கோவிலுக்கும் வந்திருந்தார்கள். நாகர்கோவில் நகருக்கு வருகிற பாதையே பாழ்பட்டிருந்தது. அமைச்சரவர்களே நாகர்கோவில் நகர எல்லைக்குள் வர முடியாதிருந்த நிலையைப் பார்த்தார்கள். அது குறித்து எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் இல்லை. கடற்கரைக்குப் பக்கத்திலுள்ள

குளச்சலிலும் பாதிப்பு ஏற்பட்டது. அங்கேயிருந்தும் வேண்டுகோள்கள் வந்தன, எனவே இது குறித்தும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விவர அறிக்கையின் இறுதி பக்கத்திலே, கொளச்சலுக்கு 2,69,000 ரூபாய் 1979-ல் வழங்கப்பட்டிருக்கிறது என்பது சொல்லப்பட்டிருக்கிறது. நாகர்கோவில் நிதி வசதி உள்ள நகரம்.

திரு. க. இராமமூர்த்தி : அவல நிலை ஏற்படும்போது உதவுவது அரசின் கடமை என்றாலும், யார் அதற்குப் பொறுப்பு ஏற்றுச் செய்கிறார்களோ அவர்கள் பொறுப்பானவர்களாக இல்லாத காரணத்தால், திண்டிவனம் நகராட்சி மன்றத்திலே புயல், வெள்ள நிவாரண வேலைகள் என்ற அடிப்படையிலே பணிகளைச் செய்யும்போது, குடிசைப் பகுதிகளுக்குச் செலவே செய்யவில்லை. கமிஷனர் அவரது இஷ்டப்படி செலவு செய்கிறார். யாருடைய தொடர்பு இருக்கிறதோ அந்தப் பகுதியிலேயும், கடைகள் உள்ள பகுதியிலும், சௌகரியமாக உள்ளவர்கள் வசிக்கும் பகுதியிலும் செலவு செய்துவிட்டு, ஏழைகள், அரிசனங்கள் உள்ள பகுதிகளுக்குச் செலவு செய்யாத முறை இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, இனிமேல் இப்படி நடப்பதைத் தவிர்க்க முன்வருமா ? வேலை செய்ய வேண்டிய இடங்களில் உதவிகளைச் செய்யாமலிருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : எந்தெந்த வகையிலே பயன்படுத்தப் பட்டிருக்கிறது, இதனால் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன என்பது பற்றிய அறிக்கையை அனுப்புமாறு நகராட்சி ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார். அவரோடு கலந்தாலோசித்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன தவறுகள் ஏற்படாமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நீலகிரி மலையை, மலைகளின் அழகு ராணி என்று சொல்லுவார்கள். அங்கே நிலச்சரிவு ஏற்பட்டதால், அழகு ராணி, அலங்கோல ராணியாகிவிட்டது. எனவே நீலகிரிக்கு அதிகமான தொகை ஒதுக்கி, சீர்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதை அழகு ராணியாக மாற்று வதற்குத்தான், உதகமண்டலத்திற்கு 8,62,000 ரூபாயும், குன்னூருக்கு 18,69,000 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இராமநாத புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அந்த மாவட்ட நகராட்சி மன்றங்களுக்கு அதிகமான தொகை ஒதுக்கவில்லை என்பதைத்

(இ) ஆம் எனில், அத்தகைய உதவி எந்த நிபந்தனைகளின்படி வழங்கப் படுகிறது ?

(உ) மேற்சொன்ன உதவியை பயன்படுத்துவதற்காக அரசின் பரிசிலனையில் செயற்குறிப்புகள் எவையேனும் இருந்தால், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளைப் பொறுத்தவரை, பல இடங்களில் அவர்கள் செய்கின்ற சிறப்பான பணிகள் ஒரு பக்கம் இருந்தாலும், அவை ஜன நெருக்கம் உள்ள அல்லது விவசாயி களுக்குப் பல்வேறு சங்கடங்களை ஏற்படுத்துகின்ற இடங்களில் ஏற்கெனவே அமைந்து விட்டன, இந்த உதவியைப் பயன்படுத்தி விழுப்புரம் போன்ற இடங்களிலுள்ள விற்பனைக் கூடங்களை வேறு இடங்களுக்கு, விவசாயி களுக்குப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவசாயிகளுக்குத் தேவையுள்ள இடத்தில், அதே நேரத்தில் வசதியுள்ள இடத்தில் தான் தற்போது மாற்றப் பட்ட புதிய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் தமிழ் நாடு பூராவும் கட்டப்பட்டு வருகின்றன. அதோடு கூட அங்கே விவசாயிகள் தங்குவதற்குக் கூட அறைகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய குறிப்பான கேள்வி இதுதான். விழுப்புரத்தில் மார்க்கெட் கமிட்டி ஒரு நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. விவசாயிகளுக்குப் பாதுகாப்பற்ற நிலை அங்கே இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், விவசாயிகளுக்கு இரண்டு விதத்தில் பாதுகாப்பான முறையில் விற்பனைக் கூடங்களைக் கட்டிக் கொடுத்தாக வேண்டும். முதலாவதாக அவர்கள் கொண்டு செல்கின்ற விளைபொருள்கள் 10 மூட்டை என்றால், அவர்கள் அதை விற்கும்போதும் 10 மூட்டையாக விற்கக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். அங்கு பரிமாறுகிற முறையினால் அது 8 மூட்டைகளாகக் குறையக் கூடாது. இரண்டாவதாக, அவர்கள் விற்கின்ற பின் கிடைக்கின்ற பணத்தைப் பாதுகாப்பாக வீட்டுக்கு

@ 383, 384 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 ஏப்ரல் 11

எடுத்துச்செல்கின்ற ஒரு நல்ல நிலை வேண்டும். பக்கத்தில் வேறு வேறு நிலை உருவாகக் கூடிய சூழ்நிலையும், அவர்களிடம் இருக்கிற பணத்தை அடித்துப் பிடுங்கிப் போகின்ற நிலையும் இருக்கிறது. போலீஸ் கூட அங்கு போக முடியாத நிலை இருக்கிறது. மூட்டையை அறுத்துவிட்டு, வேர்க்கடலையை கீழே சிந்திவிட்டு வாருவது போன்ற நிலைமைகள் கூட இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா? விழுப்புரத்தில் ஏற்கெனவே அமைந்துவிட்டது. இந்த அரசின் மீது நான் குற்றம் சுமத்தத் தயாராக இல்லை, ஆனால் நான் கேட்பதெல்லாம் பாதுகாப்பற்ற இடங்களை எல்லாம் மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதுதான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் விழுப்புரம் மார்க்கெட் கமிட்டி அலுவலகம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் இருக்கிறது. இப்பொழுது புதிய முறைகளின்படி ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம், குறிப்பாக மாவட்டங்களில் இப்படிப் பட்ட அலுவல்கங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம், வங்கியினுடைய கிளைகளை ஆரம்பிக்க இருக்கின்றோம். அதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் கொண்டு செல்கின்ற விளைபொருள்களை அடமானம் வைத்து அவசரச் செலவு காலத்தில் அவர்களுடைய தேவைக்கேற்ப 40 சதவிகித அளவிற்குப் பணம் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் அவர்கள் இரவு நேரங்களில் வெளியே செல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல், அவர்களுடைய பணம் திருட்டுப் போகக்கூடாது, அவர்களுடைய பணத்தை மற்றவர்கள் பிடுங்கிக் கொண்டு போகக்கூடாது என்கின்ற காரணத்திற்காக அவர்களுக்கு அங்கே அறைகள் கட்டியிருக்கின்றோம். அந்த வசதியும் அவர்களுக்குத் தேவையில்லாவிட்டால், அவர்களுடைய பணத்தை வங்கியிலே டெப்பாசிட் செய்யலாம். இது போன்ற வசதிகளைப் புதிய விற்பனைக் கூடங்களை விரிவு படுத்துகின்ற நிலைமையில் செய்துகொண்டுதான் வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Small Farmers Development Agency

* 288. *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the amount allotted for the South Arcot District, under the Small Farmers Development Agency, every year from its inception;

1979 ஏப்ரல் 11]

(*b*) the amount returned unutilised, every year during that period;

(*c*) the total number of Small Farmers covered by this Scheme, and

(*d*) the number of Small Farmers who have availed themselves of the benefits of this Scheme, so far?

சிறு உழவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பு.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சிறுஉழவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பு தொடங்கப்பட்டதி லிருந்து இதன்கீழ் ஆண்டுதோறும் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(இ) அக்கால அளவில் ஆண்டுதோறும் பயன்படுத்தப்படாமல் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) இத்திட்டத்தின்கீழ் வருகின்ற சிறு உழவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(எ) இத்திட்டத்தின் பயன்களை இதுவரை பயன்படுத்திக் கொண்டுள்ள சிறு உழவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவையின் முன்னாலே அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் திட்டத்தின் கீழ் சிறிய விவசாயிகள் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் 55 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் 51 ஆயிரம் பேர் மட்டும் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்திருக் கிறார்கள். சிறிய விவசாயிகளுக்கு அடுத்தபடியாக குறு நில விவசாயிகள் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 85 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் 55 ஆயிரம் பேர் மட்டும் பயனடைந்திருக் கிறார்கள். முப்பது ஆயிரம் பேர் இன்னும் பயன் பெறக்கூடிய வாய்ப்பைப் பெறாமலிருப்பதற்கான காரணத்தை அரசு ஆராய்ந்ததா? போதுமான அளவிலே விவசாயிகள் மத்தியிலே திட்டத்தின் நன்மைகளை எடுத்துரைக்காத நிலை இருப்பதும், அதிகாரிகளுடைய அணுகுமுறையிலுள்ள கோளாறுகளும்

@ ..4-385 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தான் அதற்குக் காரணம் என்பதை அரசு அறியுமா? அதேபோல் 21 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் அரசின் கணக்கின்படி எங்கள் மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்களில் 1,595 பேர் மட்டும்தான் இதுவரை பயனடைந்திருக்கிறார்கள். இதுபோன்ற திட்டங்களைப்பற்றி விவரமாக அவர்கள் தெரிந்துகொள்ளாத நிலையில், பயனைப் புரிந்துகொள்ளாத நிலையில் அதிகாரிகளால் அவர்கள் தடுக்கப்படுகிறார்கள். பயனைப் பெற வைக்க வேண்டிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளும், மாவட்டத்தில் பொறுப்பிலே இருக்கக் கூடியவர்களும் அவர்கள் திட்டங்களைப்பற்றி விவரமாகத் தெரிந்து கொள்வதற்கும், பயனைப் புரிந்துகொள்வதற்கும் ஏற்ற வகையில் செயல்பட்டிருக்க வேண்டும். அதிகாரிகளுடைய பொறுப்பற்ற போக்கினால் தமிழ் நாடு முழுமையிலும் இது போன்ற நிலை ஏற்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அரசு உணருமா? அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனாலும், இந்த அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, மீண்டும் ஓராண்டு காலத்திற்கு மத்திய அரசினால் அந்தத் திட்டம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த காலங்களில், இது ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் அதாவது 1976 ஆம் ஆண்டு வரையிலும் இவர்களுக்கு என்று குறிப்பிடப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் கொடுக்கப்பட்ட தொகைகள் சரியாக விநியோகிக்கப்படவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறுநில விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளலாம். அரசு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு, ஒதுக்கப்பட்ட தொகைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான் பாடுபட்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல் இப்பொழுது நடைபெற்று வருகிற முறைகள் ஓரளவுக்கு மன நிறைவை அளிக்கின்றன என்றாலும்கூட, நான் ஏற்கெனவே சொன்னது போல், சங்கடங்களும் இருக்கத்தான் செய்கின்றன. எந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பதுபற்றிப் பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்க பல இடங்களில் பிரதிநிதிகள் இல்லாத நிலையிலே இந்தத் திட்டத்தைச் சரியாக அமுலுக்குக் கொண்டுவர முடியாமல் இருந்தது. விவசாயிகள் நிறைய பேர் இருந்த இடங்களில் கூட இந்த வாய்ப்பு அவர்

களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. மீண்டும் அரசு பரிசீலனை செய்து சில இடங்களை இந்தத் திட்டத்தின்கீழ் புதிதாகச் சேர்க்க முன்வருமா? அந்த வகையில் சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, 34 வட்டாரங்கள் இருக்கக்கூடிய அந்த மாவட்டத்தில் கடந்த 1970-71 ஆம் ஆண்டிலிருந்தே 19 வட்டாரங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் 15 வட்டாரங்களில் மட்டும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற சலுகைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு மேலும் 11 வட்டாரங்களில் இந்தச் சலுகை விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைப்பதற்காக இத்திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு யோசித்து வருகிறது. Integrated Rural Development Programme அதாவது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்கிற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் மூலம் தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கிற சிறிய விவசாயிகள், குறுநில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகிய இவர்களுக்கெல்லாம் ஒதுக்கப்படுகின்ற தொகையின் மூலம் செய்யப்படும்.

(முற்பகல் 10-50)

திரு. க. இராமமூர்த்தி: தென்னாற்காடு மாவட்டத்தில் வறட்சி மிகுந்த பகுதிகளில் சிறிய விவசாயிகள் ஏராளமாக இருக்கிறார்கள். செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம், திருக்கோயிலூர் போன்ற பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகள் எல்லாம் இத்திட்டத்தினுடைய பலனைப் பெற முடியாத அளவுக்குத் திட்டம் வகுக்கப்பட்டது. இனிமேல், போடுகின்ற திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, நகராட்சியிலே உள்ள சிறிய விவசாயிகளும், குறிப்பாக பண்ருட்டி, நெல்லிக்குப்பம் போன்ற பகுதிகளிலே இருப்பவர்களும் பலனடையும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம் போன்ற பகுதிகள் இன்னும் சேர்க்கப்படவில்லை. பண்ருட்டி சேர்க்கப்பட்டிருக்கிறது. பண்ருட்டி சேர்க்கப்பட்ட வருஷம் 1971-72. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.

Public Health Centres.

* 289. *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Health, be pleased to state—

(*a*) the number of Public Health Centres in the State which are functioning without Doctors continuously for more than three months; and

(*b*) whether the Government have taken any steps to appoint Doctors in those Centres within a short period?

பொது சுகாதார நிலையங்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் மூன்று திங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து மருத்துவர்களின்றிச் செயல்பட்டு வருகின்ற பொது சுகாதார நிலையங்கள் எத்தனை ?

(இ) அந்த நிலையங்களில் மருத்துவர்களை குறுகிய காலத்திற்குள் நியமிக்க அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) தமிழ்நாட்டில் உள்ள சுகாதார நிலையங்களில் மூன்று மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். எந்த சுகாதார நிலையத்திலும் அனைத்து டாக்டர்களும் இல்லை என்ற நிலை இல்லை. சில இடங்களில் அப்படி எதிர்பாராதவிதமாக ஏற்பட்டுவிட்டாலுங் கூட பக்கத்தில் இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து ஒரு மருத்துவரை அனுப்பப்பட்டு வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : சில ஆரம்பப் பொது சுகாதார நிலையங்களில் பெண் டாக்டர் ஒருவர், மற்றும் ஆண் டாக்டர் ஒருவரோ, இருவரோ பணியாற்றுகிறார்கள். அந்தப் பெண் டாக்டர் லீவு எடுத்துவிட்டால், அவருக்குப் பதிலாக பெண் டாக்டர் அங்கு போவதில்லை. டாக்டரைப் போட்டாலும், அவர்கள் அங்கு வந்து பணியில் சேராமலேயே பல மாதங்கள் அந்தப் பதவி காலியாக இருக்கின்றது. கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஆரம்பப் பொது சுகாதார நிலையத்திற்கு ஒரு மருத்துவரை நியமித்து அவா வந்துசேரவில்லையென்றால், உடனடியாக வேறு ஒருவரை நியமிக்கலாம். ஆகவே, இந்த மாதிரி சூழ்நிலைகள் ஏற்படாமல் இருப்பதற்காக, இதுபற்றிய

புள்ளி விவரம் ஒன்றை அரசு தயார் செய்து அவைக்குத் தரவேண்டும். கிராமப்புறங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகளிலே எந்தெந்த மருத்துவ மனைகள் மருத்துவர் இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைத்தான் நான் கேட்டேன். ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் பொதுவாகப் பதில் சொன்னார்கள். ஆகவே, அந்தமாதிரி நிலைமைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு, இந்தப் புள்ளிவிவரம் அவைக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : புள்ளி விவரம் மிகவும் நீண்ட பட்டியலாக இருப்பதால் அதைத் தயாரித்து அவை முன் வைக்க வழிவகை செய்யப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு தமிழகத் தேர்வாணைக்குழு மூலம் மருத்துவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு அனுப்பப்படும்போது, அவர்கள் அந்த மருத்துவமனைகளுக்குப் போய் பணியில் சேராமல் விடுப்பு எடுக்கிறார்கள். எனவே, அந்த இடங்களில் தற்காலிக மருத்துவர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தேர்வாணைக்குழு மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டு அனுப்பியவர்களில் பல பேர் வேலையில் சேரவில்லை. சேர்ந்தாலும் விடுப்பு எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். பல ஆண்டு களுக்குக் கூட சேர்த்து விடுப்பு எடுக்கிறார்கள். தற்போது உள்ள முறைப்படி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. தற்காலிக மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்ற எண்ணமும், மருத்துவர் வேலை கிடைத்தால் போதும் என்று இருப்பவர் களையும் கிராமப்புறங்களுக்குச் செல்பவர்களையும்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற யோசனையும் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : கிராமப்புறங்களிலே மருத்துவராக வந்து பணிபுரிகின்றவர்களுக்கு, அவர்கள் ஊக்கம் பெறுகிற விதத்தில், அவர்களை ஈர்க்கிற விதத்தில் சிறப்பூதியம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ? இல்லை யென்றால் அவர்களுக்கு கிராமப்புறங்களில் வீட்டுவசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சிறப்பூதியம் கொடுப்பது என்பதைப்பற்றி இப்போது அரசு யோசிப்பதற்கு வழியில்லை. அவர் களுக்குத் தேவையான வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற டாக்டர்கள் அங்கேயே தங்கி பணியாற்றுகின்ற அளவிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ? எப்போது வேண்டுமானாலும் கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் வருகின்ற போது, மருத்துவ வசதி கிடைக்கின்ற வகையிலே மருத்துவர்கள் அங்கு நிரந்தரமாகத் தங்க வேண்டும் என்று அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தற்போது கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடும்ப நலப்பிரிவுக் கட்டிடங்கள் கட்டப்பட்டு, அந்த சுகாதார நிலையங்களிலேயே பெண் மருத்துவர்கள் தங்க விடுதிகள் இருக்கின்றன. அவ்வாறு இல்லாத சில இடங்களிலும் அவர்கள் தங்குவதற்கான தக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லோரையும் அங்கேயே தங்கவைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் விடுகள் கட்டப்படவேண்டும் என்று திட்டம் போட்டு படிப்படியாக செயற்படுத்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

14th World Congress of International Orthopaedic Surgeons.

* 290. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Health, be pleased to state—

(*a*) the number of representatives from Tamil Nadu who participated on behalf of the Government in the 14th World Congress of International Orthopaedic Surgeons held in Japan, during October 1978;

(*b*) the details thereof; and

(*c*) the expenditure incurred by the Government thereon?

14-வது சர்வதேச முடவியல் அறுவை மருத்துவர்களின் உலக மாநாடு.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஜப்பான் நாட்டில் 1978 அக்டோபரில் நடைபெற்ற 14-வது சர்வதேச முடவியல் அறுவை மருத்துவர்களின் உலக மாநாட்டில் 14th World Congress of International Orthopaedic Surgeons தமிழ்நாட்டிலிருந்து அரசின் சார்பாக எத்தனை பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் ?

(இ) அதன் விவரங்கள் யாவை ?

(உ) அரசின் சார்பாக ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) அரசின் சார்பாக யாரும் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் இரு மருத்துவ அலுவலர்கள் அவர்களது சொந்தச் செலவில் அந்த உலக மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப் பட்டது.

(இ) மற்றும் (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : 14-வது சர்வதேச முடவியல் அறுவை மருத்துவர்களின் உலக மாநாட்டில் இரண்டு பேர் கலந்துகொண்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்த இரண்டு பேரும் எந்த மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டார்கள் ? யார் யார் அனுப்பப்பட வேண்டும் என்று நிபந்தனை இருக்கிறதா ? எல்லோரும் கலந்துகொள்ளலாம் என்று இருந்தால், எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சென்னை மருத்துவக் கல்லூரியின் முடவியல் துறையின் பேராசிரியரும், அந்தத் துறையின் தலைவருமான டாக்டர் தி. கே. சன்முகசுந்தரம் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளவும் அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவும் அழைக்கப்பட்டார். மேலும் அவர் அக்டோபர் 20-ம் தேதி நடைபெற்ற 14-வது உலக ' சிக்காட் ' மாநாட்டின் அவைத்தலைவராக இருக்கவும் அழைக்கப்பட்டார். டாக்டர் சன்முகசுந்தரம் அவர்கள் அவரது சொந்தச் செலவில் இவ்விரு மாநாடு களிலும் கலந்துகொள்ள அரசு ஆணை எண் 1142, சுகாதாரம், நாள் 7—10—1978-ல் அனுமதி வழங்கப்பட்டது. அவர் சென்னையிலிருந்து 10—10—1978-ம் நாள் புறப்பட்டு மாநாட்டில் பங்கு கொண்டபின் 26—10—1978-ம் நாளன்று மீண்டும் பணியில் சேர்ந்திருக்கிறார். தவிர, மதுரை மருத்துவக் கல்லூரியின் முடவியல் துறையின் உதவிப் பேராசிரியரான டாக்டர் எ. தேவதாஸ் என்பவரும் அவரது சொந்தச் செலவில் ஜப்பானிலுள்ள டயோட்டா என்னுமிடத்தில் நடைபெற்ற உலக ' சிக்காட் ' மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றார்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளிநாடுகளிலே நடக்கிற மருத்துவ மாநாடுகளைப் போலவே, தமிழ் நாட்டிலே சித்த வைத்தியம் பற்றி ஒரு மாநாடு நடத்தி, வெளிநாட்டிலே இருக்கும் நிபுணர்களை அழைத்து, சித்த வைத்தியத்திலே அதிக ஆர்வம் கொண்டுள்ள அவர்கள் நம்முடைய திறமையைப் பாராட்டக் கூடிய வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சித்த மருத்துவத்தை மேம்படுத்தி, அதிலே பொதிந்து கிடக்கின்ற பல்வேறு நல்ல மருத்துவ விவரங்களைப் பெற வேண்டும் என்பதற்காக இந்த அரசு தீவிரமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. விரைவிலே ஒரு சித்த வைத்திய மாநாட்டை நல்லமுறையில் நடத்த வேண்டும் என்று இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அப்படி நடத்தும்போது பல்வேறு நாடுகளிலே இருக்கும் சித்த மருத்துவத்தின் மீது அக்கறை கொண்டவர்களை அழைத்து இந்த அரசு நல்ல முடிவை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

மறைந்த திரு. ஆசைத்தம்பி அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்தச் சென்ற மேலவைத் தலைவர் அவர்களுடைய கார் தடுக்கப்பட்டது குறித்து.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், முக்கியமான ஒரு விஷயத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வாலிபப் பெரியார் என்று அழைக்கப்பட்ட, பெரியாருடைய கொள்கைகளை சிரிய முறையிலே கடைப்பிடித்து அனைவரின் மதிப்பையும் மரியாதையையும் பெற்ற திரு. ஆசைத்தம்பி அவர்கள் மரணமடைந்ததும் அவரைக் காண்பதற்காக பலரும் சென்றார்கள். நானும் செல்ல விரும்பியிருந்தேன். காரணம், நமது பெருமதிப்பிற்குரிய, இலங்கைத் தமிழ் மக்களின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் அண்மையில் இங்கு வந்திருந்தபோது, நானும் நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்களும் விமான நிலையம் வரை ஒன்றாகச் சென்று அவரை வழியனுப்பிவைத்தோம். அப்பேர்ப்பட்டவர் மறைந்தபோது என்ன நடந்ததென்றால், நம்முடைய மேலவைத் தலைவர் அவர்கள் கூட அவரைச் சென்று பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தங்களுக்காகச் சொல்கிறார்களா அல்லது தலைவருக்காகச் சொல்கிறார்களா ?

டாக்டர் இரா. சனார்த்தனம் : அங்கு ஏற்பட்ட நிகழ்ச்சியைக் குறித்து, நாட்டினுடைய எந்த நிலையில் அது ஏற்பட்டிருக்கிறது என்பது குறித்து தயவு செய்து கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ குற்றாலத்திலே

இடியிடித்து கோவையிலே மழை பெய்வதுபோல் அல்ல. ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த சங்கட நிலைமை என்பது மேலவைத் தலைவருக்கா அல்லது பேரவைத் தலைவருக்கா ?

டாக்டர் இரா. சனார்த்தனம் : ஒரு தமிழர், தமிழுக்கு இலக்கணமாகத் திகழ்ந்து பண்பின் வடிவமாக இருக்கும் சிலம்புச்செல்வர் அவர்கள், ஒரு நிகழ்ச்சிக்கு வருகிறார் என்றால், பெருமையோடு மனமுவந்து வரவேற்கும் இந்த நாட்டிலே, அவருக்கே இப்பேர்ப்பட்ட நிலை என்றால், இந்த நாட்டிலே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது பற்றி நான் வேதனையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான அராஜகங்களுக்கு தமிழகம் என்னதான் முடிவு கட்டப்போகிறது என்பதைத்தான் நான் வேதனையோடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தலைவர் அவர்கள் அங்கு சென்றபோது அவருடைய காரை, அரசாங்கக் காரை, அதிலிருந்த கொடியை * * அடித்து உடைத்து நொறுக்கியிருக்கிறார்கள். ஆகவே, அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : போதும்.

(முற்பகல் 11-00)

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல் அங்கே என்ன அப்படி நடந்து விட்டது ? மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அவருக்கு எங்காவது, எந்த இடத்திலாவது ஒரு சிறு அபகீர்த்தி, அல்லது குறைபாடு ஏற்பட்டாலும், அதை இந்த அவைக்கு ஏற்பட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். இதை நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை, வேதனையோடு தான் சொல்லுகிறேன், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் நடைபெற்ற நிகழ்ச்சியை வைத்து அரசியலாக்கப் பார்க்கிறார். அது நியாயம்தானா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் இதில் ஏதேனும் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறாரா ?

தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 11

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் குற்றம்சாட்டுவது, ஏதோ ஒரு கட்சியின் தலைவர் இந்த நிகழ்ச்சிக்காக மறுப்புத் தெரிவிக்க வில்லை என்பது போல் இருக்கிறது. அது சரியல்ல. அதைப் போலவே நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி விரும்பத்தகாத நிகழ்ச்சி என்பதிலும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * எந்த வகையில் நியாயம் என்றுதான் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இதை அரசியலாக்கப் பார்க்கிறார் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிக்காக நான் உள்ளபடியே வருந்துகிறேன்.

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலையில் மறைந்த சுயமரியாதைச் சுடர், வாலிபப் பெரியார் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களின் மறைவை யொட்டி தங்களுடைய இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொள்ளுகிற வகையில் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் மற்ற பிற அமைச்சர்களும் சென்றபோது விரும்பத் தகாத சில நிகழ்ச்சிகள் நடந்துவிட்டதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் அவையிலே சில கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அரசியலாக்க வேண்டும் என்று கொஞ்சம்கூட அரசுக்கு எண்ணமில்லை. அப்படி நினைத்திருந்தால், எவ்வளவோ நடவடிக்கைகளைக்கூட எடுத்திருக்க முடியும். ஆனால் நம்முடைய நாட்டினுடைய பாரம்பரியம் மிக்க மரபுக்கும், நாகரிகத்திற்கும் களங்கம் ஏற்படுகிற வகையில் சில சம்பவங்கள் நேற்றைய தினம் நடைபெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக தமிழின் வடிவமாக இருக்கிற மாண்புமிகு மேலவைத் தலைவரான தங்களைப்போன்ற ஒரு பெருந்தலைவருக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன என்பதை நினைக்கிறபோது, தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்தும் இதற்காக வருத்தமடைகிறது என்பதோடு தன்னுடைய ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1979 ஏப்ரல் 11] [திரு. கா. இராசா முகமது]

நம்முடைய நாட்டுப் பண்பாடே, திருமணத்திற்கு அழைக்காவிட்டால், அவர் எவ்வளவு பெரிய உறவினராக இருந்தாலும், அதற்குச் செல்லமாட்டோம். ஆனால் இப்படி ஒரு துக்ககரமான சம்பவம் ஒரு குடும்பத்தில் நடந்து விட்டால், அவர் இன்னார் என்று பாராமல், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று பாராமல், அவர் எந்த அரசியலைச் சார்ந்தவர் என்று பாராமல் தங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வது என்பது மரபாக இருந்து வருகிறது. இது நமது பண்பாடாகவும் இருந்து வருகிறது.

இந்த அடிப்படையில் நேற்றையதினம் சென்றவர்களில் சிலருக்குச் சில சங்கடங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. நல்ல வேளையாக, இயற்கையின் அருளால் பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடாமல் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு திரும்பியிருக்கிறார்கள். இதை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது என்பதை மிகுந்த கவலையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் என்பவை நாகரிகம் மிக்க சமுதாயத்தில் நடைபெற வேண்டுமென்று எந்த உறுப்பினரும் விரும்ப மாட்டார். அவ்வாறு நடைபெறுவதையும் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்த வகையில் அரசுக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் சில வன்முறையாளர்கள் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது யாருடைய வழியுமல்ல என்பதை நாம் அறிவோம். மறைந்த தந்தை பெரியார் அவர்களின் வழியுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியுமல்ல, அண்ணல் காந்தியடிகளின் வழியுமல்ல. பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் வழியுமல்ல. இது ஒரு புதிய வழியாகத் தெரிகிறது. இதற்கு யார் வழி காட்டுகிறார்கள் என்ற உள்நோக்கத்தோடு பேசுவதே தேவையற்றது என்று நான் உணர்கிறேன்.

இந்த அவையைப் பொறுத்தவரையில், நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சிக்காக கவலையையும் கண்டனத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலவைத் தலைவர் பொறுப்பு என்பது எவ்வளவு புனிதமானது, உன்னதமானது, கட்சிக்கு அப்பாற்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அப்படிப்பட்ட தலைவர் அவர்களுக்கு இத்தகைய நிகழ்ச்சி நடை பெற்றுவிட்டது என்பதற்காக நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். அதைப் போலவே இந்த அவையின் முன்னாள் உறுப்பினரான திரு. மதுரை முத்து அவர்களுக்கும் துன்பம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. அவரும் அதைப் பற்றிக் காவல் துறையினருக்குப் புகார் கொடுத்திருக்கிறார். எனவே இதை மிகப் பெரிய அளவில் எடுத்துக்கொண்டு ஒரு குழப்பமான சூழ்நிலைக்குக்

கொண்டுபோய்விடக்கூடாது என்றுதான் இந்த அரசு மிகப் பொறுமையோடு, கொடுக்கப்பட்ட சில புகார்களின் அடிப்படையில் மட்டும் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

இந்த அவையைப் பொறுத்தவரையில், நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சியை நாம் அனைவருமே கண்டித்தாக வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்கள் நம் எல்லோருக்குமே பொதுவானது. பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, தங்களுடைய கொள்கையில் நெறி பிறழாமல் நடந்த தியாகி, மரணமடைந்தபோது அவருக்கு மரியாதை செய்ய அனைத்துத் தரப்பில் இருப்பவர்களுக்கும் உரிமை இருக்கிறது என்பது நமது பண்பாட்டு வழியாகும். அந்த அடிப்படையில் மறைந்தவருக்கு மரியாதை செய்யப் போனவர்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டு, அதன் காரணமாக வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. வன்முறையில் சம்பந்தப்பட்ட ஒரு கூட்டம் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற அளவில் இந்த நிகழ்ச்சியை நாம் அனைவரும் கண்டிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். மற்றபடி இதை மேலும் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று இந்த அரசின் சார்பாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த உணர்வில் யாருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. கட்சிக் கூட்டங்களானாலும் சரி, தமிழகத்திலுள்ள பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மரியாதை செலுத்துவதானாலும் சரி, அமைதியான முறையில் செயல்பட வேண்டு மென்பதில் எல்லோருக்கும் பொறுப்பிருக்கிறது. அந்த உணர்வில்தான் எல்லோரும் செயல்பட்டு வருகிறார்கள். நேற்றையதினம் நமது மேலவையின் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த அவையின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கும் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக இங்கே குறிப்பிடப்பட்டது. ஒரு பெருங் கூட்டத்தில் வன்முறை உணர்வைக் கொண்ட சிலர், அல்லது வேறு விதமான உணர்ச்சியைக் கொண்ட ஒரு சிலர் ஏதாவது தவறு செய்தால், அதை ஒரு சாரார்மீது ஏற்றிச் சொல்வது என்பது முறையாக இருக்காது. ஆனால் இங்கே பேசிய டாக்டர் சனார்த்தனம் அவர்கள் * * என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு அவர் குறிப்பிட்டது, இன்னொரு சம்பவத்தோடு

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இதைத் தொடர்புபடுத்திப் பேசியது முறையாகாது. எனவே இந்தப் பகுதி அவையின் குறிப்பில் இருக்க வேண்டுமா என்பதைத் தலைவர் அவர்கள் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இங்கே அவையில் சொல்லப்பட்ட கருத்துக்களில் நானும் எனது கட்சியும் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் பேசிய * * என்ற பகுதியை நீக்கிவிடுவதில் ஆட்சேபணை யில்லை. மற்றபடி அனைத்தும் இருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் இடத்தைச் சொல்லவில்லை என்றாலும் அந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இந்தப் பிரச்சினையின் பேரில் ஒரு தீர்மானத்தையே கொடுத்திருந்தார்கள். நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சியை அவ்வளவு பெரிதுபடுத்த வேண்டாம் என்று நானே அவரை அழைத்து இதைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டேன். தகவல் கொடுப்பது என்பதன்பேரில் அவர் மீண்டும் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பி யிருக்கிறார். அதன்பேரில் அவையின் முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் கருத்தைத் தெரிவித்தார்கள். நானும் இதில் சம்பந்தப்பட்டவன் என்ற முறையில் கண்டன உணர்வில் கலந்து கொள்கிறேன். இது ஓரளவுக்கு எனக்கு ஆறுதல் அளிக்கிறது என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் "அப்படி என்ன நடந்துவிட்டது" என்று கேட்டது எனக்கு மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது.

மானம் உள்ளவனுக்கு எது நடக்கக்கூடாதோ அது நடந்துவிட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் * * தான் நான் அவ்வாறு குறிப்பிட்டேனே ஒழிய வேறல்ல. தலைவர் அவர்களுக்கு ஏற்படுகிற சிறு துன்பத்தைக்கூட எங்கள் நெஞ்சத்திற்கு ஏற்படுகிற துன்பமாகத்தான் நாங்கள் கருதுகிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 ஏப்ரல் 11

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒருவருக்கு காயத்தை உண்டாக்குவது என்பது துன்பத்தை உண்டாக்கும். ஆனால் மானம் உள்ளவனுக்கு காயமில்லாமலே கூட ஏற்படுவது துன்பம்தான். 15 நிமிடங்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என் வாழ்நாளில் அறியாத ஒன்று. அதை நான் இங்கே பெரிதுபடுத்த விரும்பவில்லை. அவர்களும் தமிழர்கள்தான். எல்லோரும் இளைஞர்கள். ஏதோ ஒரு உணர்ச்சியில் அவ்வாறு நடந்து கொண்டார்கள். நாள்தோறும் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படி ஒரு நேரம் வருகிறபோது அது வெடித்துவிடுகிறது.

எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் மறைந்த நண்பர் திரு. ஆசைத்தம்பி அவர்கள் எனக்கு நெடுநாளைய நண்பர். பலவகையிலும் என்னோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். அவருடைய மறைவுக்காக இறுதி அஞ்சலி தெரிவித்துக் கொள்ள மாலை கொண்டு போனபோது, அஞ்சலி தெரிவித்துக் கொள்ளுவது தடைப்பட்டுப் போய்விட்டது. ஈடு செய்ய முடியாத ஒன்று அது. எனினும் இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிடவேண்டுமென்று டாக்டர் சனார்த்தனம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

ஊட்டி அருகில் 3 கிராமங்களில் மலை சாதியினருக்கும் அரிசனங்களுக்கும் நடந்த கலவரத்தில் சுமார் 500 வீடுகள் கொளுத்தப்பட்டதும், 11 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதும் குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"ஜனவரி முதல் வாரத்தில் ஊட்டி அருகே 3 கிராமங்களில் மலை சாதியினருக்கும், அரிசனங்களுக்கும் நடந்த கலவரத்தில் சுமார் 500 வீடுகள் கொளுத்தப்பட்டதும், 11 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதும் குறித்த"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 385-387 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 11]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டபடி, 3-ஆம் தேதி இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அந்தச் சம்பவம் சற்றுக் கடுமையாக நடைபெற்றிருப்பதால், அதனையொட்டி காவல் துறையால் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் தொடர்பாக 4 ஆம் தேதியும் 5 ஆம் தேதியும் பரவலாக மோதல் ஏற்பட்டிருக்கிறது.

3 ஆம் தேதி நடைபெற்ற சம்பவங்களின் அடிப்படையில் காவல் துறையினர் மிகுந்த விழிப்புணர்ச்சியோடு இருந்திருந்தால், தொடர்ந்து 4, 5 தேதிகளில் சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்திருக்க முடியும். காவல் துறையின் விழிப்புணர்ச்சி போதிய அளவுக்கு இல்லை என்பதை அரசு கவனத்தில் கொண்டு, இனிமேல் காவல் துறையினர் காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறைக்கு ஆணையிட அரசு முன்வருமா ?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, 3 ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தையொட்டி சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியபோது, "நாங்கள் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட மாட்டோம்" என்று ஒப்புக்கொண்டு அவர்கள் சமாதானம் ஆகிவிட்ட பிறகு, சில வன்முறையாளர்கள் எதிர்பாராத விதமாக சில நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். மூன்றாம் தேதி அன்றே அழைத்துப் பேசி அமைதி காக்குமாறு இருதரப்பையும் கேட்டுக்கொண்டதற்கு அவர்கள் சம்மதித்துச் சென்றிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் சம்மதித்துவிட்டு வெளியே சென்ற பிறகு, ஒரு வகுப்புக் கலவரமாக உருவாக்கப்பட்டு சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அதைத் தொடர்ந்து காவல் துறையினர் உடனடியாக போதிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டார்கள் என்பதற்காக காவல் துறையினர் கவனக் குறைவாக இருந்திருக்கிறார்கள் என்று அரசு சொல்லுவது சரியல்ல. விழுப்புரத்திலே மோதல் ஏற்பட்ட பிறகு, இரு வேறுபட்ட செய்திகள் வந்தன. ஆகவே முன்னால் நிகழ்ச்சிகள்

நடந்திருப்பதை மனதிலே கொண்டு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் அதைத் தொடர்ந்து எதுவும் ஏற்படலாம் என்பதைக் கருத்திற் கொண்டு, காவல் துறையினர் விழிப்பாக இருக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : காவல் துறை இதுவரை விழிப்புணர்ச்சியோடுதான் செயல்பட்டு வருகிறது. இனிமேலும் அப்படித்தான் செயல்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இது போன்ற நிகழ்ச்சிகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிதியுதவி அளித்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியிலும் 3 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கும் நிதி உதவியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ளும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப்படுகிறது.

4. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் துவங்குவதற்குமுன் அவைக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வேறு எந்தத் துறையின் கொள்கைக் குறிப்புக்கும் இல்லாத அளவிற்கு கல்வி பற்றிய . கொள்கைக் குறிப்பின் மீது விவாதிக்க, ஆசிரியர் பிரதிநிதிகள் ஆறு பேர்கள் இருப்பதால் அவர்களுக்கு அதிக மதிப்பு அளித்து —இரண்டு நாட்களை ஒதுக்கியிருக்கிறோம். இப்போது இரண்டாவது நாள் முற்பகலிலும் விவாதம் நடைபெறுகிறது. ஆகவே ஆசிரியர் பிரதிநிதிகள் உட்பட ஒவ்வொருவரும் 15 நிமிடங்களுக்கு மேற்படாமல் பேசினால்தான் இன்றைக்கு மாலைக்குள்ளே இந்த விவாதத்தை முடிக்க முடியும். கல்வியில் நேரடித் தொடர்புடையவர்கள் அதிகம் பேச வேண்டுமென்று ஆர்வப்படுவது அவசியம். மற்றவர்களுக்கெல்லாம் அக்கறை இருந்தாலும், தயவு செய்து அவரவர்கள் 15 நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி என்பது மிகப் பெரிய துறை. நம்முடைய கல்விக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிற மாதிரி, கிட்டத்தட்ட 25 சதவீதம் அளவில் மாநிலத்திலுடைய நிதி ஒதுக்கீடு கல்விக்காக செலவு செய்யப்படுகிறது. இது பெரிய துறையாக இருப்பதால், அதைப்பற்றிப் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் மேலவையிலே உள்ள ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும், பட்டதாரிகளின் சார்பாக உள்ள பிரதிநிதிகளுக்கும் இருப்பது மிகுந்த பாராட்டிற்குரியது. என்றாலும் தாங்கள் 15 நிமிடங்கள் என்று ஒதுக்கிவிட்டதால் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : துணைத் தலைவர் அவர்களும் அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்கள் என்பது எனக்குத் தெரியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் தங்களுக்குப் பிறகு அங்கு வந்து அமரும் போது, மற்றவர்களுக்கும் 15 நிமிடங்கள் கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருப்பதால், பேச வேண்டிய விஷயங்கள் அதிகமாக இருந்தாலும், தந்தி பாஷை என்பதைப் போல குறிப்புகளை வரிசையாகச் சொல்ல விரும்புகிறேன். மிகப் பெரிய துறையாக இருக்கக் கூடிய கல்வித் துறையில் நம்முடைய அரசும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் எந்த அளவுக்குத் தங்களால் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்தச் சமயத்திலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்றாலும் மிகப் பெரிய துறையாக இருப்பதால், பிரச்சினைகள் மிக அதிகமாக இருக்கின்றன. இந்தத் துறையிலே உள்ள பல விஷயங்களை அரசுக்கு எடுத்துச் சொல்ல என்னைப் போன்ற பிரதிநிதிகள் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

கல்வித் துறையில் மிக முக்கியமான பிரச்சினை, எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிற பிரச்சினை, பள்ளிகளில் இருந்து நின்றுவிடுகிற மாணவர்கள் பிரச்சினைதான். பேரவையிலே கூட இந்தப் பிரச்சினையைக் குறித்து பேசப்பட்டிருப்பதாக பத்திரிகை வாயிலாக நான் படித்தறிந்தேன். 42 சதவீதம் பேர் பள்ளியிலிருந்து நின்றுவிடுகிறார்கள், அவர்கள் மீண்டும் படிக்கவேயில்லை என்ற கருத்து அங்கே சொல்லப் பட்டிருக்கிறது. கடந்த நான்கைந்து ஆண்டுகளின் கல்வித் துறைக் கொள்கைக் குறிப்புகளைப் பார்க்கிறபோது, இந்த 42 சதவீதம் அநேகமாக இருந்து கொண்டே வந்திருக்கிறது. குறைந்ததாகத் தெரியவில்லை. ஆண்டுக்காண்டு அதிகம் பேர் பள்ளியிலே சேர வேண்டிய காரணத்தால், அதிகமான பேர்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1979 ஏப்ரல் 11

பள்ளியில் படிக்க முடியாத நிலை இருப்பதை நாம் பார்க்கிறோம். கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, எவ்வளவு பேர் கல்வி இல்லாமல் இருக்கிறார்கள், படிப்பறிவே இல்லாமல் இருக்கிறார்கள், எவ்வளவு பேர் பட்டப் படிப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கிறபோது, அவர்களுடைய தொகை, வேலையில்லாமல் இருப்பவர்களுடைய தொகையைப் போல் ஆண்டுக்காண்டு அதிகமாகி வருகிறது. இது எவ்வளவு பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அதைத் தவிர்ப்பதற்கு என்ன முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறது என்று பார்க்கிறபோது, கடந்த பல வருடங்களாகச் சொல்லப்பட்ட கருத்துக்களே திருப்பித் திருப்பிச் சொல்லப்படுவதையும் பார்க்கிறோம். ஆகவே இதைத் தீர்ப்பதில் முனைப்பாகச் செயல்பட வேண்டும். ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக எடுத்து வைக்கப்பட்ட பிரச்சினைகளைப் போக்கக் கூடிய வகையில் தீவிரமான வழிமுறைகளைக் காண வேண்டும்.

பள்ளியைப் பொறுத்த வரையில், பள்ளிக்கு ஒரு ஆசிரியர் என்று திட்டம் போட்டு, அதே பள்ளியில் உள்ள ஒரு ஆசிரியரை நியமித்து, அந்த ஆசிரியர் மாலை நேரங்களில் அந்தப் பள்ளியிலிருந்து நின்றுவிட்ட மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லக் கூடிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லப்பட்ட அந்தக் கருத்து நடவடிக்கையிலே இருக்கிறதா என்பது தெரியவில்லை. அந்தக் கருத்தின் அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

கிராமப்புறங்களில் மாணவர்கள் வேளாண்மைக் காலத்தில் பள்ளிக்கு வருவதில்லை. மற்ற காலங்களில் அவர்கள் பள்ளிக்கு வருவதற்கு ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே படித்துவிட்டு பள்ளியை விட்டுப் போன மாணவர்களுக்கு வேளாண்மையற்ற காலங்களில் கல்வி கற்றுக் கொடுக்கும் வசதியை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

தொலைக்காட்சியின் மூலமாக வெளிநாடுகளில் சிறந்த முறையில் பள்ளி மாணவர்களுக்குக் கல்வியைக் கற்பிக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பார்க்கிறபோது, எவ்வளவு பள்ளிகளை ஆரம்பித்தாலும், அந்தப் பள்ளிகளின் மூலமாக மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே நம்மைப் போன்ற பெரிய நாடுகளில் தொலைக்காட்சி எவ்வளவுக்

1979 ஏப்ரல் 11] [திரு. ஜி. சுவாமிநாதன்]

கெவ்வளவு விஸ்தரிக்கப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கல்வி வசதியை கிராமப்புறங்களில் பரப்பக்கூடிய பெரிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே நம்முடைய அரசு மத்திய அரசை அணுகி, தொலைக் காட்சி நிலையத்தை இன்னும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்க வேண்டும். கோடைக்கானலில் ஒரு சாதனத்தை ஏற்படுத்தி, அதிலிருந்து தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும், கிராமங்களிலும் தொலைக்காட்சி தெரியும் சாதனையை நிகழ்த்த இருப்பதாக அண்மையிலே பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அது போல ஒரு நல்ல திட்டம் ஏற்படுமானால், கல்வி வளர்ச்சிக்கு தொலைக்காட்சி பெரிதும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

முதியோர் கல்வியைப் பொறுத்த வரையிலே நாம் போட்டிருக்கிற திட்டம் நலமாக இருந்தாலும், இதனால் எத்தனை பேர் பயனடைந்தார்கள் என்பது தெரியவில்லை. இத்திட்டத்தைப் பரவலான முறையிலே இன்னும் சிறப்பாக அமைக்க வேண்டும்.

புதிய பல்கலைக் கழகத்தைப்பற்றிக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது குறித்து இங்கே பிரச்சினைகள் கிளப்பப்பட்டபோது, அது சம்பந்தமான பிரச்சினை மத்திய அரசிடத்திலே இருப்பதாகவும், மாநில அரசு அதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அரசுத் தரப்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இது சம்பந்தமான விண்ணப்பங்கள், நம்முடைய அரசின் கடிதங்கள் எல்லாம் மத்திய அரசுக்குச் சென்றுவிட்டன என்பதையும், அவை மத்திய அரசின் ஆய்வில் உள்ளன என்பதையும் அமைச்சர் அவர்கள் கூர்ந்து பார்ப்பது நல்லது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். நாம் இந்தக் கடிதங்களையும், விண்ணப்பங்களையும் மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டோம் என்று வாளா இருந்துவிட்டால், சில சந்தர்ப்பங்களில் மத்திய அரசுக்கு அவைகள் வராமல் இருந்து அவர்கள் ஆய்வு செய்யாமல் இருந்தாலும் இருக்கக் கூடும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே அது சம்பந்தமாக எனக்கு சந்தேகங்கள் எழுந்துள்ளன. நம்முடைய பிரதிநிதிகள் டில்லியிலே இருக்கிறார்கள். அவர்கள் மூலமாகவோ, கல்வி அமைச்சர் அவர்களே டில்லிக்குச் சென்று, இந்த நிலைமைகள் சரிதானா என்பதை ஆராய்ந்தோ குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக பல்கலைக் கழகங்கள் வருவதற்கு ஆவன செய்ய வேண்டும். நாம் இரண்டு பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னாலுங்கூட, ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிற நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கிறபோது, இதற்கான ஒதுக்கீடுகள்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1979 ஏப்ரல் 11

எதுவும் செய்யப்படாத நிலையில்தான் எனக்கு இந்தச் சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-20)

அடுத்து, classical language என்று, மத்திய அரசைப் பொறுத்த வரையில், சமஸ்கிருத மொழியை புராதனமான ஒரு மொழியாகத் தேர்ந்தெடுத்து, பல ஆண்டுகளாக அந்த மொழிக்காக, அதன் வளர்ச்சிக்காக பல கோடி ரூபாய்களைச் செலவு செய்துகொண்டு வருகிறார்கள். எனக்கு இருக்கின்ற கவலையெல்லாம், வட மொழிகளில் புராதன மொழியாக சமஸ்கிருதத்தை எடுத்துக்கொண்டதுபோல, தமிழ் மொழியையும் மத்திய அரசு ஒரு Classical Longuage -ஆக எடுத்துக் கொள்ள வேண்டும். வட மொழிகளுக்குச் செலவழிப்பதைப் போல ஏன் இந்த மொழிக்கும் நிதி ஒதுக்கீடு செய்வதில்லை, அதற்காக மாநில அரசு இதுவரை ஏன் முயற்சி எடுக்கவில்லை, அப்படி எடுக்காமல் தவறியதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, சமஸ்கிருதத்திற்கு எப்படி புராதன மொழி என்ற அடிப்படையில் அதனுடைய வளர்ச்சியைப் பெருக்க மத்திய அரசு செலவு செய்கிறதோ, அதுபோல தமிழ் மொழிக்கும் செய்யுமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்ணா டெக்னிக்கல் யூனிவர்சிடி என்ற பெயரால் பல்கலைக் கழகம் ஆரம்பித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே உள்ள அத்தனை பொறியியல் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளும் அந்தப் பல்கலைக் கழகத்திலே இணைந்திருந்தால்தான் மாநில அளவிலுள்ள பல்கலைக் கழகமாக அது இருக்க முடியும். இப்போது இருப்பதுபோல் இருந்தால், அண்ணா டெக்னிகல் யூனிவர்சிடி என்பது ஒரு குறிப்பிட்ட பகுதிக்குரிய ஒன்றாக ஆகிவிடுகிறது. நமது மாநிலம் தழுவிய ஒரு பல்கலைக் கழகமாக இருந்தால்தான், அது நல்ல முறையிலே செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கம்ப்யூட்டர் செக்ஷன் என்ற அளவிலே இண்டியிலே தனியாக ஒரு நிலையத்தை நம்முடைய அரசு உருவாக்கியிருக்கிறது. இந்த கணக்கீட்டுப் பொறியியல் நிலையம் சென்னையில் மட்டும்தான் இருக்கிறது. அவற்றை மதுரை, திருச்சி, கோவை, ஆகிய இடங்களிலும் ஏற்படுத்துவதற்கும் சென்னையில் உள்ளதை விரிவுபடுத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறையாக இருந்தாலும், வியாபாரத துறையாக இருந்தாலும், அரசு ஆட்சித் துறையாக இருந்தாலும், இந்த கம்ப்யூட்டர் இப்போது நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிறது. அது அவர்களுடைய வளர்ச்சிக்கு வழிவகை செய்வதாக இருக்கிறது. ஆகவே இண்டியிலே இருக்கின்ற நிலையத்தை விரிவு படுத்துவதோடு, மற்ற இடங்களிலேயும் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு இந்த அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 11] [திரு. ஜி. சுவாமிநாதன்]

கடல் பொறியியல் அறிவியல் மையம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட இருப்பதாக முன்பு சொல்லப்பட்டது. அதுபற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே ஒன்றும் காணவில்லை. அதைப்பற்றி அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்வார்கள் என்று கருதுகிறேன்.

தமிழ் நாட்டில் நிர்வாகப் பயிற்சிக் கழகம் என்று ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஹைதராபாத்தில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்டாஃப் காலேஜ் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே சென்னையிலேயும் அது மாதிரி ஒரு நிர்வாகப் பயிற்சிக் கழகம் அல்லது கல்லூரி அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த அளவில், ஆண்டுக்காண்டு அதிகச் செலவு செய்கிறோம் என்று பெருமைப்படுகிறார்கள். சென்ற ஐந்து ஆண்டுகளில் கல்விக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை எப்படி ஆகியிருக்கிறது என்று பார்த்தேன். Plan expenditure எவ்வளவு, Non-Plan expenditure எவ்வளவு என்ற முறையில் நான் அதை ஆராய்ந்து பார்த்தேன். ஐந்து ஆண்டுக் காலத்திற்கு கிட்டத்தட்ட 75, 80 கோடி ரூபாய் அளவுக்குத்தான் கல்விக்கு Plan expenditure என்ற செலவு செய்திருக்கிறோம். பாக்கித் தொகையெல்லாம், Non-Plan expenditure என்ற அடிப்படையிலே, ஆசிரியர்களுக்கு ஊதியம், மற்ற செலவுகள் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. கல்வி மேம்பாட்டிற்கு என்ற அளவில் அந்தச் செலவுகள் இல்லை. அந்தக் கருத்து முன்பு வலியுறுத்திச் சொல்லப் பட்டிருக்கிறது. எவ்வளவு வருமானம் வருகிறது, கல்விக்காக எவ்வளவு செலவு செய்கிறோம், அந்தச் செலவிலே எவ்வளவு சிக்கனம் செய்ய வேண்டும், குறைத்துச் செலவு செய்யமுடியுமா என்று பார்க்க வேண்டும். கல்வி வசதி நிர்வாக ஆணைக் குழு என்று ஒரு குழு அமைத்து அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, குறைந்த செலவில் கல்வி மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். அந்த ஆராய்ச்சியின் முடிவின் அடிப்படையில் கல்வித் தேவைகளைப் பொறுத்துச் செலவு செய்வது நல்லதாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில், கல்வி சார்பான அலுவலகங்கள் பெரிய அளவில் சென்னையிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக பல சிக்கல்கள் எழுந்துள்ளன. கல்வியினுடைய தரம் உயர வேண்டுமென்றால், கல்வி அலுவலகங்கள் அனைத்தும் பரவலான முறையிலே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தந்த மாவட்டத்தில் எழும் பிரச்சினைகளை அங்கங்கேயே முடிவு செய்ய வேண்டும். மாவட்ட அளவிலேயே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் அளவுக்கு இருக்க வேண்டும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சென்னைக்கு வராத நிலைமை இருந்தால்தான், நல்ல முறையிலே கல்வித் துறை இயங்க முடியும். கல்வித் துறையிலே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், சென்னைக்கு வர வேண்டிய அளவில் எல்லா நிறுவனங்களையும் வைத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான பணியாளர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் அந்தத் துறையிலே இருக்கிறார்கள். கல்வித் துறையிலே நிர்வாகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்று நிர்வாக முறையில் பயிற்சி பெற்றவர்களை வைத்திருக்க வேண்டும். நிர்வாகத் துறையிலே டிப்ளமோ அல்லது டிகிரி பெற்ற நல்ல அனுபவம் பெற்றவர்களை அந்தத் துறையை நிர்வகிப்பதற்கு நியமிக்க வேண்டும். இது சம்பந்தமாக 3 ஆண்டுகளுக்கு முன்னால், சென்ற ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியன் அவர்கள், ஹைதராபாத்திலே இருக்கக்கூடிய அட்மினிஸ்ட்ரேடிவ் ஸ்டாஃப் காலேஜிலிருந்து திறமையானவர்களையெல்லாம் வரவழைத்து, எந்த முறையிலே பயிற்சி கொடுத்து, இந்த அமைப்பை ஏற்படுத்தலாம் என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியினுடைய முடிவை எங்களுக்கெல்லாம் தெரிவிக்கவில்லை. பல குழப்பங்கள் இருப்பதாகச் சொல்லப்படுவதைச் சீர்திருத்த, கல்வி அமைச்சர் அவர்கள் தக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி பற்றிய நிர்வாக ஆணைகள், விதிமுறைகள் ஆகியவற்றையெல்லாம் மாற்றியமைக்கவேண்டியிருக்கின்றது. இதுபற்றிப் பல தடவைகள் இந்த சட்டமன்றத்திலேயும், வெளியிலேயும் சொல்லப்பட்டது. கடந்த 4, 5 ஆண்டுக் காலமாக கல்வித் துறை விதிகளைப் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன் வந்த விதிகளாக அவைகள் இருக்கின்றன. பல புத்தகங்கள் புதுப்பிக்கப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. சென்னை மாநில உதவி விதித் தொகுப்பு, சென்னை கல்வி விதிகள், சென்னை தொடக்கக் கல்விச் சட்டம், சென்னை கல்வி ஆய்வு விதிகள், சென்னை பல்கலைக் கழகச் சட்டம் போன்ற புத்தகங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டியனவாக இருக்கின்றன. பல ஆண்டுகளாக

அவைகளில் திருத்தங்கள் வந்திருக்கின்றன. அதனால், யாருக்கும் எந்தச் சட்டத்திலே, என்னென்ன விதிகள் இருக்கின்றன என்றுகூடத் தெரியாத நிலைமைகள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் சரியான முறையிலே புதுப்பித்து அமைக்கவேண்டும். அரசு அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவிலே ஆசிரியப் பெருமக்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது, அவைகளை அங்கங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தீர்க்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அவர்களுடைய குறைபாடுகள் மாவட்ட அளவில் தீர்க்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகப் பெரிய அளவில், எவ்வளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அமைச்சர் அவர்களும், நமது கல்வி இயக்குநர் அவர்களும் நல்ல சிறப்பான முறையிலே பணி செய்துகொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, Vocational Course-களுக்கு வேண்டிய பாடப் புத்தகங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்தப் புத்தகங்கள் இல்லாமல் ஆசிரியர்கள் எப்படிச் சொல்லிக் கொடுப்பார்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் சொல்லிக்கொடுப்பதற்கு, புத்தகங்கள் இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. அதற்குரிய புத்தகங்களைச் சீக்கிரமாக வெளியிட வேண்டும். ஹையர் செகண்டரி கோர்ஸில் என்.சி.சி.-யையும் விரிவுபடுத்த வேண்டும். மாணவர்கள் ஒழுங்கான முறையில் வளர்வதற்கு, என்.சி.சி. பயிற்சியும் அதில் வரவேண்டும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, போஸ்ட் கிராஜுவேட்கள் பற்றிச் சொல்கிறேன். முதுகலைப் பட்டம் பெற்றவர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு ஓரியண்டேஷன் கோர்ஸ் என்று ஒரு பாடத் திட்டம் வைத்து, அதில் அவர்கள் எப்படி மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது என்பதற்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. 15 நாட்கள், 20 நாட்கள் என்று கால அளவு வைத்துச் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களுக்குக் கொடுத்த ஓரியண்டேஷன் கோர்ஸ் போதுமானதாக இல்லை என்ற கருத்து இருக்கிறது. எவ்வளவு பேருக்குத் தேவையோ அவ்வளவு பேருக்கும் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள்

இந்த மே மாதத்திலாவது எவ்வளவு அதிகமான பேர்களுக்கு அந்த ஓரியண்டேஷன் கோர்ஸ் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்த ஆண்டு, மேல்நிலைப் பள்ளிகளுக்கான இறுதித் தேர்வுகள் வைக்கப்பட இருக்கின்றன. அந்தத் தேர்விலே என்னென்ன முறைகளிலே கேள்விகள் கேட்பார்கள் என்பது தெரியாது. கேள்வியைப் பொறுத்துத்தான் தேர்வு எழுத முடியும். எப்படிக் கேள்விகள் வரும் என்பது தெரிந்தால்தான், அதற்கேற்ப ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்க முடியும். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திலாவது, மேல்நிலைக் கல்வி இறுதித் தேர்விற்கான வினாக்கள் எப்படி வருமென்பதற்கான மாடல் வினாத் தாளைக் கொடுத்தால், அந்த ஓராண்டுக் காலத்தில் அதற்கேற்ப நல்ல முறையில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக்கொடுத்து மாணவர்களும் நல்ல முறையில் தேர்வு எழுத வாய்ப்பு இருக்குமென்று சொல்லப்படுகிறது. எனவே அது குறித்து அமைச்சரவர்கள் ஆராய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

முதுகலைப் பட்டதாரிகள், பத்தாண்டுகள் பணியிலே இருப்பவர்கள், பி.டி. ஆசிரியர்களைவிடக் குறைந்த சம்பளம் வாங்குவதாகச் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் F.R. 22B என்ற விதியின்கீழ் சம்பளம் Fix செய்வதை, இவர்களைப் பொறுத்தவரையிலும் அமுல்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழாசிரியர்களைப் பற்றி, நாமும் தமிழாசிரியர் பிரதிநிதிகளும் அமைச்சரவர்களிடம் எடுத்துச் சொன்னோம். தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆகியவற்றிலே தமிழ் படித்தவர்கள் மட்டுமே தமிழைச் சொல்லிக் கொடுக்க நியமிக்கப்பட வேண்டுமென்றும், பல உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல் இருக்கும் நிலைமையைப் பற்றியும், மேல்நிலைப் பள்ளிகளிலே புலவர் பட்டம் படித்து பணிமூப்பு உடையவர்களுக்கு, 15, 20 ஆண்டுகளாகப் பணியில் இருக்கக்கூடியவர்கள் மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்களாக நியமனம் செய்யப்பட வேண்டு மென்றும், அமைச்சரவர்களிடத்திலும், இயக்குநர் அவர்களிடத்திலும் சொல்லப்பட்டது. அதற்கான ஆணைகளை இதுவரை வெளியிடவில்லை. அதையும் அமைச்சரவர்கள் கவனிப்பார்களென்று நினைக்கிறேன்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், Tamil Assistants என்று தங்கள் பதவிப் பெயரை மாற்றலாமென்று சொல்லுகிறார்கள். இதிலே அரசுக்குப் பணச் செலவில்லை. பெயர் மாற்றம்தானே தவிர, வேறு எந்தவிதமான பாதகமும் வந்துவிடாது. அவ்வாறு மாற்றுவதால் சங்கடங்கள் வருமென்று நான் கருதவில்லை. எனவே அமைச்சரவர்கள் அதுபற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பெயரை மாற்றச் சொல்கிறார்களா அல்லது அந்தஸ்தையே மாற்றச் சொல்லுகிறார்களா?

திரு. ஜி. சுவாமிநாதன்: தமிழ்ப் பண்டிதர் என்பதை தமிழ் உதவி ஆசிரியர் என்று வைத்துக்கொள்ளலாமென்று சொல்லுகிறார்கள். அதன் தொடர்பாக பலன் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

அடுத்து, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பி.டி. படித்து விட்டு, அதற்கான வேலை இல்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு பி.டி. சம்பளம் வழங்காததால், 2,000 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இந்தப் பிரச்சினை முன்னாலேயே என்னால் பேசப்பட்டது. அப்போதிருந்த கல்வி அமைச்சர், திரு. நெடுஞ்செழியன் அவர்கள், அதுமாதிரிச் செய்ய முடியாதென்று சொன்னார்கள். பி.டி. ஆசிரியர்களாகத் தகுதி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் 450 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதால் பணச் செலவு இதனால் அதிகமாக இருக்காதென நான் சொன்னபோது, இதை அனுமதித்தால், இன்னும் பல பேர்கள் படித்துவிட்டு வந்து, பணம் கேட்டால் என்ன செய்வதென்று அவர்கள் கேட்டார்கள். ஆந்திர மாநிலத்தில் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1978-79-லே நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு 470 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கப்பட்டு, மூன்றாவது ஊதியக் குழு அவர்களுக்கு 450 ரூபாய் என்று சொல்லி, 20 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் முறையிடுகிறார்கள். அவர்களுக்கு Protection of salary இல்லாமல் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்தின்போது கிட்டத்தட்ட 3,000 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் பள்ளி வராத நாட்களை Extraordinary Leave என்ற அடிப்படையிலே கருத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—4—1970 முதல் 3—3—1973 வரையிலே, not

yet regularised என்ற அளவிலே 700 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய அளவிலே நியாயம் வழங்கப்படுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுகாறும் அதற்கான உத்தரவு வரவில்லை என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, விரைவிலே அதுகுறித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போராட்ட காலத்திலே ஆசிரியர்களின் சர்வீஸ் ரெஜிஸ்டரில் தவறான முறையில் எழுதி வைத்துள்ள குறிப்புகளையும் நீக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இங்கே என்னாலும், ஆசிரியர்களின் பிரதிநிதிகளாலும் எழுப்பப்பட்டது. அப்படிப் பட்ட குறிப்புகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.டி. ஆசிரியர்களுக்கும், மேல்நிலைப் பள்ளியில் இருக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் முறையே 25 ரூபாய், 50 ரூபாய் கொடுக்கப்படுகிறதென்று சொல்லுகிறார்கள். அதை 50 ரூபாய், 100 ரூபாய் என்று மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை விடுவித்திருக்கிறார்கள். அதையும் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், உயர் கல்வித் தகுதி படைத்தவர்களாக இருந்தால், 750 ரூபாய் கொடுக்கப் படுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இரண்டு ஆண்டுக்காலம் அவர்களுக்கு அனுபவம் இருந்தால்தான், 750 ரூபாய் கொடுக்கப்படுமென்று சொல்லுகிறார்கள். மேல்நிலைப் பள்ளிகள் இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு ஆண்டுக்காலம் அதிலே இருந்தபிறகுதான் 750 ரூபாய் சம்பளம் வழங்கப்படுமென்ற நியதிக்கு அவர்களை உட்படுத்துவது சரியானதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

. . முடிவாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஓரியன்டல் காலேஜ் போன்ற புலவர் கல்லூரிகளை 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பல்கலைக் கழகம் அங்கீகாரம் செய்துவிட்டது. மாநில அரசின் அங்கீகாரத்திற்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து, பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்கு அமைச்சரவர்கள், அரசின் அங்கீகாரம் விரைவில் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். பதிலளித்து பத்து நாட்களாகியும், முடிவு வரவில்லை. அரசின் அங்கீகாரத்தை விரைவிலே அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு அவர்களுக்கு யு.ஜி.சி. சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலக் கல்வி ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அந்தக் குழுவை அமைச்சரவர்கள் அமைத்திருக்கிறார்கள். அது எவ்வளவு முறை கூடிற்று,

அங்கே என்ன பேசினார்கள் என்பதை நான் அறியேன். நான் அதில் உறுப்பினராக இல்லை. அந்தக் குழு இதுவரை கூடாவிட்டால், மிக விரைவில் கூடுமென்று எதிர்பார்க்கிறேன். கூடியிருந்தால், சிறந்த கருத்துக்களை . . .

திரு. ப. மாணிக்கம் : அந்தக் குழு இன்னும் கூடவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : உறுப்பினராக இல்லை என்பதற்காக அப்படிச் சொல்லவில்லை. கூட்டம் நடந்ததா, இல்லையா என்பது தெரியாது என்பதால்தான் அப்படிச் சொன்னேன். அந்தக் குழு நல்ல முறையிலே ஆலோசனைகளை வழங்குமென்று எதிர்பார்த்து, அதற்குப் பாராட்டு தெரிவித்து, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, கல்வித் துறை கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். துணைத் தலைவரவர்கள் கூறியதுபோல, நம்முடைய மாநில பட்ஜெட்டிலே 25 சதவிகிதம்வரையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மொத்தம் கல்விக்காக ஒதுக்கப்பட்ட 209 கோடி ரூபாயிலே, 160 கோடி ரூபாய் பள்ளிப் படிப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிப் படிப்பு சம்பந்தப்பட்டவரையிலும், அதன் அடிப்படையைப் பலமாக்குவதற்கு அரசின் முன்னால் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதாவது, எட்டாம் வகுப்புவரை கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள், எட்டாம் வகுப்புவரை கட்டாயக் கல்வி ஆக்கினால், அதிகமான பள்ளிக்கூடங்கள், அதிகமான ஆசிரியர்கள் காரணமாக அதற்கான செலவுகள் 209 கோடி ரூபாய்க்கு மேல் போகுமே, பட்ஜெட்டுக்குள் எப்படி முடியுமென்று கேட்பார்கள். அது எனக்குத் தெரியும். நிதியில் கால்பாகத்தை கல்விக்காகச் செலவிடுகிறபோது, கல்வியிலே எதற்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பது, எந்தக் குறிக்கோளை முன்னாலே வைத்துக்கொள்வது என்ற பிரச்சினை வரும்போது, நான் அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். எட்டாம் வகுப்புவரையிலும் கட்டாயக் கல்வியாக்கி, நம்முடைய கல்வியின் அடிப்படையை பலமாக்க வேண்டுமென்பதுதான் நான் வற்புறுத்த விரும்புவதாகும். கல்விக் கொள்கைக் குறிப்பிலே 1977-78 ஆம் ஆண்டிலே, 6-11 வயது மற்றும் 11-14 வயது மாணவர்களிலே 3.21 இலட்சம் பேர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டனர் என்றும், 1978-79-ல் 1.93 இலட்சம் பேர்கள்தான் சேர்க்கப்பட்டனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1½ இலட்சம் விடுபட்டிருக்கிறது.

என்ன காரணம் என்பது சொல்லப்படவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்திருப்பார்களென்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், அந்த நிலைமைக்கு ஒரு காரணம் இருப்பதாகக் கருதுகிறேன். கல்வித் துறையிலே மாணவர்களும் சரி, பெற்றோர்களும் சரி, போதுமான கவனம் செலுத்த முடியாததற்குக் காரணம் வறுமைதான் என்பது என்னுடைய அடிப்படையான எண்ணம். ஐந்தாம் வகுப்புக்குமேல் 58 சதவிகிதம்தான் தொடர்ந்து படிக்கின்றனர் என்றும், 42 சதவிகிதம் டிராப்-அவுட் ஆகிறதென்றும் (விடுபட்டுப் போகிறதென்றும்) அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எட்டாம் வகுப்பிற்குப் போகும்போது, மேலும் 28 சதவிகிதம் டிராப்-அவுட் ஆகிறார்கள். கடைசியில் ஒன்பதாம் வகுப்பிற்கு 30 சதவிகிதம்தான் வருகிறார்கள். பி.யு.சி. வரை இலவசமாகப் படிப்பு கொடுக்கிறோமென்று சொல்லுகின்றபோதே, 9 ஆம் வகுப்பிற்கு வரும்போது 30 சதவிகிதத்தினர் வந்து 70 சதவிகிதத்தினர் டிராப்-அவுட் ஆகிறார்கள் என்றால் இதைத் தடுக்க வேண்டாமா? அதற்குப் பரிகாரமாக எட்டாம் வகுப்புவரை கட்டாயக் கல்வியாக்கினால், அதற்கான அடிப்படையை ஏற்படுத்தலாமென்று சொல்ல விரும்புகிறேன். அப்படிச் சொல்லும்போது, அதற்கு என்ன ஏற்பாடு செய்ய

(முற்பகல் 11-40)

வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எட்டாவது வகுப்பு வரை இப்பொழுது நண்பகல் உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதே போல், 1-வது வகுப்பு முதல் 3-வது வகுப்பு வரை சீருடைகளும் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரை, மொத்த துவக்கக் கல்வி மாணவர்களில் 30 சதவிகிதம்தான் வருகிறது. மொத்தம் 67 இலட்சம் குழந்தைகளில் 20 இலட்சம் குழந்தைகளுக்குத்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது மூன்றில் ஒரு பங்குக்குக் குறைவாகத்தான் வருகிறது. இலவசச் சீருடை, இலவசப் புத்தகங்கள், 20 சதவிகித மாணவர்களுக்குத்தான் தரப்படுகிறது. நண்பகல் உணவுத் திட்டம், சீருடை மற்றும் புத்தகம் இலவசமாக வழங்குதல் போன்ற திட்டங்களை எல்லோருக்கும் செயல்படுத்தவேண்டுமென்றும் 8-வது வகுப்பு வரை கட்டாயக் கல்வியை சட்டபூர்வமாக அமுலாக்க வேண்டுமென்றும் நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே திரு. காமராஜ் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கல்வியில் ஒரு முன்னேற்ற அடியை எடுத்து வைத்தார்கள். இந்த ஆட்சி அனைவருக்கும் நண்பகல் உணவுத் திட்டம், இலவசமாக சீருடை மற்றும் புத்தகங்களை வழங்குதல், எட்டாவது வகுப்பு வரை கட்டாயமாகக் கல்வியைக் கொண்டுவந்து சட்டமாக்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றி, அதன் மூலம் கல்வியில் இரண்டாவது அடியை எடுத்து வைத்து, எதிர்

காலத்தில் இந்த ஆட்சியைப்பற்றி, கல்வியில் செய்துள்ள சீர்திருத்தம்பற்றி அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது கொஞ்சம் சிரமமான காரியம்தான். துணிந்து செய்தால் வருங்காலத்தில் இந்த ஆட்சியைப்பற்றிப் புகழ்ந்து எழுதுவதற்கு ஒரு மிக முக்கியமான அடிப்படையாக அமையும். இதை அரசு தார்மீகமான முறையில் செய்ய முன்வர வேண்டும். அடிப்படைக் கல்வி சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் பரவலாகக் கிடைப்பதற்காக, எட்டாவது வகுப்பு வரை கட்டாயக் கல்வியைச் சட்டபூர்வமாக உடனடியாக ஆக்க வேண்டுமென்று நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் 40 ஆயிரம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்பொழுதுள்ள நிலைமையில் ஒரு ஆசிரியருக்கு 37 மாணவர்கள் என்கிற விகிதம் இருக்கிறது. இந்த விகிதத்தை 30 என்று குறைப்பதன் மூலம் வேலையில்லாமல் இருக்கின்ற 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும். மேலே உயர் வகுப்புகளுக்குப் போகப் போக மாணவர்கள் பாடங்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. ஆனால் கீழ் வகுப்புகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு தனிப்பட்ட கவனிப்பு அவசியம் தேவை. கீழ் வகுப்புகளிலேதான் ஆசிரியர்-பிள்ளைகள் விகிதாசாரம் குறைவாக இருக்க வேண்டுமென்று கல்வி நிபுணர்களே கூறியிருக்கிறார்கள். இந்த 40 ஆயிரம் பேருக்கும் வேலை கொடுத்தால் கூட, ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 1 : 37-ல் இருந்து 1 : 30 என்கிற எண்ணிக்கையில்தான் வருகிறது. கீழ் வகுப்புகளில் தனிப்பட்ட முறையில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டியிருப்பதால், ஆசிரியர்-மாணவர் விகிதத்தை 1 : 30 ஆகக் குறைப்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்றையும் நான் வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். எட்டாவது வகுப்பு வரை கட்டாயக் கல்வித் திட்டத்தை அரசு சட்டபூர்வமாகக் கொண்டு வந்து அமுல்படுத்துகின்ற நிலைமையில், எலிமெண்டரி ஸ்கூல் கட்டம் வரை கல்வியை தேசியமயமாகப் பண்ண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கின்ற 33 ஆயிரம் எலிமெண்டரி பள்ளிகளில் 26 ஆயிரம் பள்ளிகள் அரசாங்கப் பள்ளிகள். ஆறு ஆயிரம் அல்லது 7 ஆயிரம் பள்ளிகள் தான் தனியார் பள்ளிகள். இந்த 6 ஆயிரம் பள்ளிகளின் சார்பில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீனாட்சிசுந்தரமும், திரு. முத்துசாமி அவர்களும் தங்களுடைய முழு நேரத்தில் பெரும்பகுதியை பேசிச் செலவிடுவதை நாம் பார்க்கிறோம். இந்த 6 ஆயிரம் பள்ளிகளையும் அரசே எடுத்துக்கொண்டால், அவர்கள் அதைப்பற்றித் தனியாக எடுத்துப் பேச

வேண்டிய நிலை வராது. எல்லாம் ஒரே அமைப்பின் கீழ் வந்து விடும். ஆகவே குறைந்தபட்சமாக எலிமென்டரி ஸ்கூல்களையாவது தேசியமயமாக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிக முக்கியமான ஒரு விஷயம் மைனாரிட்டி உரிமைப் பிரச்சினையாகும். மைனாரிட்டி நிர்வாகங்களின் உரிமைப் பிரச்சினையில் அரசினுடைய முயற்சியைப் பொறுத்தவரை, ஹைக்கோர்ட் முடிவின்படி தலையில் இடி விழுந்தது போல் இருக்கிறது. ஹைக்கோர்ட்டின் முடிவை வேண்டுமென்று நான் தாக்க விரும்பவில்லை. இதுமாதிரி பிரச்சினை ஆந்திராவில் ஏற்பட்டது. ஆந்திரா ஹைக்கோர்ட் போன ஆண்டு மே மாதம், ஆசிரியர்களுடைய சர்வீஸ் கண்டிஷன் சம்பந்தமாகச் சட்டமியற்ற அரசுக்கும் சட்டமன்றங்களுக்கும் உரிமை உண்டு என்று தீர்ப்பு அளித்திருக்கிறது. ஆனால், நம்முடைய ஹைக்கோர்ட்டில் வேறுபட்ட முறையில் மாறான கருத்து தீர்ப்பின் மூலம் கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்புகளில் எந்தத் தீர்ப்பு இறுதியான தீர்ப்பு என்பது சுப்ரீம் கோர்ட் போய்வந்தால்தான் தெரிய முடியும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே பள்ளிக் கூடங்களைப் பொறுத்தவரை, 1974 ஆம் ஆண்டு சட்டத்திலுள்ள சில ஷரத்துக்களை சென்னை உயர் நீதிமன்றம் அடித்து வீழ்த்திவிட்டது. சுப்ரீம் கோர்ட்டில் இது குறித்து வாதாட நம்முடைய மாநில அரசுக்கு அது அனுமதியும் கொடுத்திருக்கிறது. கல்லூரிச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும், நாம் அப்பீல் செய்ய வேண்டியதுதான். ஆனால், அதே நேரத்தில் நான் இந்த அரசுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த சுப்ரீம் கோர்ட் அப்பீலை மட்டும் நம்பியிராமல் லீகல் டிப்பார்ட்மெண்டுடன் கொஞ்சம் கலந்தாலோசனை செய்ய வேண்டும் என்பதுதான். ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் சாவதானமாக உட்கார்ந்து இதைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்க முடியாது. அவர்களுடைய பிழைப்பு சம்பந்தமான பிரச்சினை இது. அரசைப் பொறுத்தவரை, இது குறித்துத் தீவிரமாகக் கலந்தாலோசனை செய்து முடிவெடுக்க வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கத்தினுடைய வாக்குறுதிகளை ஆணை வடிவில் வெளியிட்டுச் செயல்படுத்தும்போது, ஹைக்கோர்ட் இடையில் அதற்கு வேட்டு வைக்கின்றது. இப்படிப்பட்ட நிலையில் அரசு காரியங்களை எப்படி நிறைவேற்றப் போகிறது என்பதுதான் என்னுடைய கேள்வியெல்லாம். அப்பீல் செய்து விட்டு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வரும்வரை காத்திருந்தால், மைனாரிட்டி உரிமை என்கிற பெயரில் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் தனியார் நிர்வாகங்களால் ஆசிரியர்கள் மீது அராஜகம் தாண்டவமாடும். பட்டதாரி ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் இப்படி

பல்வேறு தரப்பினருக்கும் பெரிய நெருக்கடி ஏற்பட்டு அவர்கள் நேரடி நடவடிக்கையிலும், கிளர்ச்சியிலும் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஹைக்கோர்ட்டினுடைய தீர்ப்பு நேற்றையதினம் இந்தியன் எக்ஸ்பிரசில் வந்திருக்கிறது. அதற்குப் பிறகு ஆசிரிய நண்பர்களை நான் சந்தித்தேன். அவர்களுடைய உணர்வுகளும் அப்படித்தான் இருந்தன. இந்தத் தீர்ப்பின் மூலம் மேலும் துணிந்து தீவிரமாகச் செயல்படக் கூடிய தைரியம் நிர்வாகங்களில் இருப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பு வரும் வரை காத்திராமல் ஆசிரியப் பெருமக்களுக்கு சட்டப்படி என்னென்ன நன்மைகளைச் செய்யலாம் என்பதைப்பற்றி நம்முடைய மாநில அரசும், சட்டத் துறையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். மைனாரிட்டி உரிமை என்றால் என்ன ? மைனாரிட்டி உரிமை என்பதுபற்றி இப்பொழுது கருத்தரங்குகள் கூட நடைபெறுகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் அதுபற்றிக் கருத்தரங்குகள் நடத்துகிறார்கள். மைனாரிட்டி என்பதற்கு இப்பொழுது என்ன விளக்கம் சொல்லப்படுகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த ஒரு தனி நபர் மானேஜராக அல்லது நிர்வாகியாக இருந்து ஒரு பள்ளிக்கூடத்தைத் துவக்கினால், அது மைனாரிட்டி பள்ளிக்கூடம் என்ற அளவுக்கு இப்பொழுது வியாக்கியானம் செய்யப்படுகிறது. சட்டப்படி ஆசிரியர்களுக்காக அரசு போடுகிற எந்த ஆணையும் எங்களைக் கட்டுப்படுத்தாது, எங்களுக்குப் பொருந்தாது என்று அவர்கள் வாதம் புரிவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழ் நாட்டில் தனியார் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை, தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரை இருந்துகொண்டிருக்கிறது. அரசினுடைய ஆக்ட் மற்றும் விதிகள் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லி "லிங்கியுஸ்டிக் ரிலிஜியஸ் மைனாரிட்டி" என்கிற ஒரு பாதுகாப்பினுள் அவர்கள் புகுந்து தப்பித்துக்கொள்வது நல்லதுதானா ? தனி நபர் ஒருவரைப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகியாகப் போட்டு, அவர் நிர்வாகியாக இருக்கின்ற காரணத்தினாலேயே, அது மைனாரிட்டி பள்ளிக் கூடம் என்று அதற்குப் பெயரிடுவது நல்லதுதானா ? அப்படியே பெயரிட்டாலும், ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய விதத்தில் அரசு போடுகின்ற எந்த ஆணையும் தங்களுக்குப் பொருந்தாது என்று அவர்கள் சொல்லக்கூடிய சாத்தியக் கூறுகளை நாட்டில் வளர விடுவது நல்லதுதானா ? திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரகேரளம்புதூர் பள்ளிக் கூடத்தைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கூறும் போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் கிறிஸ்தவர்கள், நிர்வாகியும் கிறிஸ்தவர். அங்கே பள்ளிக்கூட ரெக்கார்ட் படி, 600 பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று இருக்கிறது.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 11

இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்படி 400 பேர் படிப்பதாக இருக்கிறது. ஆனால், இன்ஸ்பெக்டர் போனபோது, 215 பிள்ளைகள் தான் வந்திருந்தார்கள். பாக்கி பேர் வரவே இல்லை. நிர்வாகியினுடைய அடக்குமுறை அந்தப் பள்ளிக் கூடத்தில் அதிகமாகிவிட்டது என்று அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். நிர்வாகியினுடைய மனைவி ஒரு ஆசிரியரை இன்ஸ்பெக்டர் முன்னாலேயே கத்தியை எடுத்துக் காட்டி குத்தப் போனதாகவும், பிறகு அவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். குழந்தைகள் பள்ளிக்கு வர பயப்படுகிறார்கள். ஆசிரியர்கள் பயந்து பள்ளிக் கூடத்துக்குப் போகவில்லை. நிர்வாகிகளால் இந்த அளவுக்குக் காரியங்கள் நடைபெற்ற பிறகு, அந்தப் பள்ளிக்கூடத்தை அரசு மேற்கொள்ள வேண்டுமென்கிற பிரச்சினை வந்த பிறகு, அந்த நிர்வாகி மைனாரிட்டி உரிமை என்கிற அடிப்படையில் ஹைக்கோர்ட்டுக்குப் போவதாக இப்பொழுது தகவல் வந்திருக்கிறது. மைனாரிட்டி உரிமை என்கிற பெயரில் அவர்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலை இருக்கிறது. மைனாரிட்டி என்றால் அதற்கு அர்த்தம் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மைனாரிட்டி உரிமை எதற்காகத் தரப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். மக்களுடைய கல்விக்காக அரசாங்கம் முழுப் பொறுப்பேற்காத காலத்தில், அரசாங்கம் முழுத் தொகையையும் கல்விக்காக ஒதுக்க முடியாத நிலை இருந்த காரணத்தால், தனியார் யாராவது முயற்சி எடுத்து நடத்தினால், கல்விக் கூடங்களை நடத்தட்டும் என்கிற முறையில் சமூகங்கள் அல்லது ரிலிஜியஸ் மைனாரிட்டீஸ் அல்லது மொழி மைனாரிட்டீஸ் போன்றவர்கள் மக்களின் கல்விப் பாதுகாப்புக்காக இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை நடத்த அரசாங்கம் ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து அந்த அடிப்படையில் தான் அவை அமைக்கப்பட்டன. இப்படிப்பட்ட கல்வி நிலையங்கள் வெள்ளைக்காரன் காலத்தில், அல்லது 1951 ஆம் ஆண்டு கான்ஸ்டிட்யூஷன் உருவாக்கப்பட்ட காலத்திலே ஒருவேளை தேவைப்பட்டிருக்கலாம். இன்றைக்கு அது தேவை தானா ? இன்றையதினம் இந்த மைனாரிட்டி உரிமை

(முற்பகல் 11-50)

என்பது விபரீதமான ரீதியில், கல்வியைப் பொறுத்தவரையில், பயன்படுத்தப்படும்போது. அந்தக் கல்வியைச் சொல்லிக்கொடுக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு அந்த மைனாரிட்டி உரிமையை வைத்து வேட்டு வைக்கும்போது, அந்த மைனாரிட்டி உரிமை இருக்க வேண்டுமா என்று சட்ட நிபுணர்களின் யோசனை கேட்டு மத்திய அரசுக்கு இதுகுறித்து நாம் தெரிவிக்க வேண்டும். மைனாரிட்டி சம்பந்தப்பட்ட உரிமைகளும், பாதுகாப்புகளும் தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் அரசாங்கத்திடமும், சட்டமன்றங்களிடமும் இருக்க

1979 ஏப்ரல் 11] [திரு. ஆ. நல்லசிவன்]

வேண்டும். மைனாரிட்டி இன்ஸ்டிட்யூஷன்களில் இருக்கும் ஆசிரியர்களின் சர்வீஸ் கண்டிஷன், பணிப் பாதுகாப்பு போன்றவைகள் பாதிக்காத வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். இல்லாவிடில் இந்த மைனாரிட்டி உரிமை என்பது கல்வி விஷயத்தில் அத்தியாவசியமான ஒன்றுதானா என்பதையே மறுபரிசீலனை செய்யவேண்டும். தயாரித்துக் கொடுக்கும் டெக்ஸ்ட்-புக் அடிப்படையிலேதான் அங்கேயும் பாடங்கள் நடத்தப்படுகின்றன. அங்கே எந்தவிதமான பிரத்தியேகப் பாடத்திற்கும் இடமில்லை. லிங்விஸ்டிக் மைனாரிட்டி என்று பிரச்சினையில் வந்து, மற்ற மொழிகளையும் கற்றுக் கொடுக்கும் நிலை வந்தபிறகு, மாநிலத்தின் எல்லையிலே இருக்கின்ற பள்ளிக் கூடங்களிலும், மெட்ராஸ் சிட்டியிலே உள்ள பள்ளிக்கூடங்களிலும் மைனாரிட்டி மொழிகளை சொல்லிக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் நிலை இன்றையதினம் வந்தாகிவிட்டது. இன்று புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கிறோம். எட்டாவது வகுப்பு வரையில் கட்டாயக் கல்வி என்று இன்றையதினம் நாம் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிறோம். கல்வி அளிக்கும் முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. நிலைமைகள் அப்படி இருக்கும்போது, இந்த மைனாரிட்டி கல்வி இன்ஸ்டிட்யூஷன்கள் ஏன் வேண்டும் என்ற இந்த அடிப்படைப் பிரச்சினையை நாம் பார்க்க வேண்டும். அவ்வாறு தனியாக இருப்பது இன்றையதினம் தேவை தானா ? கல்விக்காக அரசாங்கம் ஏராளமான பணம் ஒதுக்கிச் செலவழிக்கின்ற இந்தக் காலத்தில், ரூ. 100 கோடிக்கு மேற்பட்ட பணம் ஒதுக்கிச் செலவழிக்கின்ற காலத்தில், மைனாரிட்டி நிறுவனங்கள் பிரச்சினைகளை உருவாக்கி, கல்வித் துறையிலே தலையிடும் அளவுக்கு ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை வளர்த்து இந்தப் பிரச்சினைகள் நிமித்தம் கோர்ட்டுக்குப் போகும் நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. நமது அரசின் கடமை சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதோடு தீர்ந்துவிடுகிறது என்று கருதக்கூடாது. இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு நமது கல்விக் கூடங்களைப் பொறுத்தவரையில், ஒரு பாதகமான விளைவை உண்டாக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, தமிழ்நாடு அரசு இந்த விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் ஐந்தாறு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். மாலையிலும் ஐந்தாறு உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே, சீக்கிரமாக முடிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1979 ஏப்ரல் 11

திரு. ஆ. நல்லசிவன் : ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக 'ஹாஸ்பிட்டல் அண்ட் எட்யூகேஷனல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் பில்' என்று ஒரு பில்லை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அந்த பில்லை மனதில் கொண்டு இங்கே தமிழ்நாட்டுக்கென்று அம்மாதிரி பில் ஒன்றை நாம் கொண்டு வரலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்போது, "மத்திய அரசு கொண்டு வந்த அந்த பில்லையே ஆசிரியர்களும் மற்றவர்களும் எதிர்க்கிறார்கள்; ஆகவே மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கும் அந்த பில்லை ஒரு மாடல் பில்லாக நாம் கொள்ள வேண்டாம்" என்று நான் தெளிவாகச் சொன்னேன். அகில இந்திய அளவிலே இன்றையதினம் உழைக்கும் மக்கள் மாநாடு என்று ஒரு மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. கல்லூரிப் பேராசிரியர்களிலிருந்து ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் வரையிலும், ஹாஸ்பிட்டலைப் பொறுத்தவரையில் அங்குள்ள நர்ஸ்கள் அனைவரும் அந்த மாநாட்டிலே பங்கெடுத்திருக்கிறார்கள். அந்த மாநாட்டில் மத்திய அரசின் அந்த பில்லை கடுமையாகத் தாக்கி விமர்சித்திருக்கிறார்கள். சமீபத்தில் அதாவது பிப்ரவரி 1978-லே 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்' கல்வி நிறுவனங்களுக்கும், ஹாஸ்பிட்டல்களுக்கும் பொருந்தும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், பள்ளிக்கூடங்களிலே இருக்கும் ஆசிரியர்களுக்கும், ஹாஸ்பிட்டல்களிலே இருக்கும் நர்ஸ்களுக்கும் இந்த 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்' பொருந்தும் என்றும் அந்தச் சட்டப்படி உள்ள அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், சம்பளம் முதலியவைகளை வாதாடிப்பெற உரிமையுண்டு எனவும், வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்றும், அந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட்'-லே உள்ள இந்த உரிமைகளை ஆசிரியர்களுக்கும், நர்ஸ்களுக்கும் மற்றவர்களுக்கும் தரக்கூடாதென்றும், அவர்களுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை தரக்கூடாது என்றும் தான் இந்த பில் பார்லிமெண்ட்லே கொண்டுவரப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற அந்த பில்லால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. இன்றையதினம் நாடு பூராவும் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்களிலிருந்து ஹாஸ்பிட்டல்களில் பணியாற்றக்கூடிய சகல ஊழியர்கள் வரையில் அந்த பில்லை எதிர்க்கிறார்கள். ஆகவே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கும் ஆசிரியர்களுக்காக ஒரு பில்லைக் கொண்டு வரும்போது, மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த பில்லை தயவு செய்து மனதில் கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இதைச் செய்துவிடுவோம் என்ற எண்ணம் இருக்குமானால், நாட்டில் தற்போது நடக்கும் கிளர்ச்சிகளை

1979 ஏப்ரல் 11] [திரு. ஆ. நல்லசிவன்]

யாவது மனதில் கொண்டு அந்த முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பள்ளிக் கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பல்வேறுவிதமான கோரிக்கைகளை முன்வைத்து கிளர்ச்சிகளிலும், போராட்டங்களிலும் ஈடுபடுகிறார்கள். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளின் மீது அவர்களுக்கு நீதி வழங்கப்பட்டதா? இப்போது இருக்கும் நிலைமைப்படி அவர்கள் கோரிக்கைகளை முன் வைக்கலாம், போராட்டத்தில் ஈடுபடலாம், வேலை நிறுத்தம் செய்யலாம், மனு கொடுக்கலாம் என்றெல்லாம் இருக்கிறது. இப்படியெல்லாம் செய்யலாம் என்று வழிவகை இருக்கும் இந்த நேரத்திலே கூட அவர்களுக்கு இன்னும் எந்தவிதமான உத்தரவாத பலனும் ஏற்படவில்லை என்றால், மத்திய அரசால் கொண்டுவரப்பட்டிருக்கும் பில்லை அடிப்படையாகக் கொண்டு இங்கும் ஒரு பில்லைக் கொண்டு வந்தால், அவர்களுடைய நிலைமை என்னவாகும் என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசால் கொண்டு வரப்பட்டிருக்கும் அந்த பில் நம்மால் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல, நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு சில நல்ல அம்சங்களைக் கொண்ட ஒரு பில்லை அவர்களுக்கு என கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.'

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விளக்கமாகப் போகாமல் கோரிக்கைகளை மட்டும் சொன்னால் சீக்கிரமாக முடிக்கலாம். ஏற்கனவே 20 நிமிடங்கள் ஆகிவிட்டது. பட்டதாரி ஆசிரியர்கள் பிரதிநிதிகள் பேச விருக்கிறார்கள். மாலையிலும் ஐந்து ஆறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். ஆகவே, விளக்கமாகப் போகாமல் பிரச்சினைகளை, கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடிக்கவேண்டும் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து மாதாமாதம் கல்வித் துறை அதிகாரிகளும், ஆசிரியர் பிரதிநிதிகளும் அமைச்சரும் கலந்து பேசினார்கள். பல பிரச்சினைகள் அங்கே விவாதிக்கப்படுகின்றன. அப்படி ஒரு பழக்கம் இருந்தது வரவேற்கத் தக்கது. தற்போது அந்தப் பழக்கம் கைவிடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து மீண்டும் அந்தப் பழக்கத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அண்மைக்காலத்தில் ஆசிரியர்கள் போராட்டங்களிலே ஈடுபட்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். அரசும் அவைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதாக உறுதிமொழியளித்திருக்கிறது. ஆகவே,

இவ்வாறு மாதாமாதம் சந்தித்துப் பேசுவதன் மூலமாக அரசால் அளிக்கப்பட்டிருக்கின்ற அந்த உறுதிமொழிகள், எந்த அளவுக்கு அமுல்படுத்தப்படுகின்றன என்பதுபற்றி விவாதிப்பதற்கு வசதியாக இந்த 'பைலேட்டரல் டாக்ஸ்' மாதாமாதம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் 'டைரக்ட் பேமெண்ட்' தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அளிக்கலாம் என்று உறுதிமொழியளித்திருக்கிறார்கள். அதற்காக கர்நாடக மாநிலத்திலேயிருந்து அங்கு அவர்கள் எப்படி இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகிறார்கள் என்பதற்கு ஒரு மாதிரி ஒப்பந்தம் வாங்கியிருக்கிறார்கள். அதைச் செயற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக எழுதிக் கேட்டிருக்கிறார்கள். அது சரியில்லை. அந்த ஷரத்தை நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பிரச்சினைகளுக்காக மனுப்போட்டு, கோரிக்கைகள் வைத்து, கேள்விகள் கேட்ட பிறகும் ஒன்றும் நடக்கவில்லையென்றால், போராட்டம்தான் ஒரே வழி. ஆகவே, ஆசிரியர்களிடமிருந்து எழுதி வாங்குகிற மனுவிலே வேலைநிறுத்தத்தைக் கைவிட வேண்டுமென்று இருக்கும் ஷரத்தை எடுத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி இன்ஸ்ட்டிட்யூஷனைப் பொறுத்தவரையிலே, மதுரை யுனிவர்சிட்டியிலேயே சௌராஷ்ட்டிரா கல்லூரி ஒன்று தான் இருக்கிறது. மதுரையிலே இருக்கும் பாத்திமா கல்லூரி கூட அதன்கீழ் வரவில்லை. அங்கே மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறைவாக இருக்கிற ஒரே காரணத்தினால், அவர்கள் ரெஜிஸ்ட்டிரேஷனே பண்ணவில்லை என்று நான் அறிகிறேன். ஆனால் வெளியிலே தாங்கள் மைனாரிட்டி நிறுவனம் என்று கூறி அதிகாரிகளை மிரட்டுகிறார்கள், ஏமாற்றுகிறார்கள். மதுரையிலே பாத்திமா கல்லூரி மற்றும் பெரியகுளத்திலே இருக்கும் அன்னபாக்கியம் கல்லூரி ஆசிரியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாஞ்சோலை 3,000 அடிக்கு மேலே இருக்கிற ஒரு இடம். அங்கே பாம்பே-பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற அமைப்பில் வேலை செய்யும் 27 இளநிலை-இடைநிலை ஆசிரியர்களுக்கு இன்னும் ஹில் அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அது குறித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களிடம் குடும்பநலத் திட்டத்திற்காக என்று பிடித்தம் செய்யப்பட்ட 172 ரூபாய் இன்னும் பிராவிடண்ட் நிதி கணக்குக்குக் கொண்டு வரப்படாத நிலை இருக்கிறது. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையிலிருந்து வெளியிடப்படும் அரசாணைகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே வெளியிடப்பட வேண்டுமென்று ஆசிரியர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அரசாங்கம் இதையும் கவனத்தில் கொண்டு இனி வெளியிடப்படும் அரசாணைகள் அனைத்தும் தமிழ் மொழியில் வெளிவரும் வண்ணம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையின் மிக முக்கியமான கொள்கைக் குறிப்பின்மீது இன்றையதினம் தாங்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களும் மிகச் சிறப்பான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்வித் துறை வளர்ச்சியில் மேல்நிலைக் கல்வி என்பது மிகச் சிறப்பான இடத்தை வகிக்கிறது என்று எடுத்துச் சொல்லி தாங்கள் இந்த அரசாங்கத்தை பாராட்டியிருக்கிறீர்கள். அதைப் போலவே இந்த அவையில் எதிர்க்கட்சிகளின் மிக முக்கியமான தலைவர்களில் ஒருவராக இருக்கும் திரு. சந்தோஷம் அவர்களும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய நல்ல பண்புகளை எடுத்துச் சொல்லி, பாராட்டி, அவர்களுக்குத் தம் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் அந்தக் கருத்துக்களோடு ஒன்றுபட்டு கல்வியமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியமைச்சர் அவர்களை மட்டுமல்ல, கல்வித் துறையின் நெறியாளர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இதற்கு முன்பெல்லாம் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பாங்கினைக் காட்டிலும் இப்போது மிக விரைவாக ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. கல்வித் துறையில் பல நல்ல காரியங்கள் விரைந்து நடைபெறுகின்றன என்ற வகையில் நான் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் துறையில், மேல்நிலைக் கல்வி என்பது இன்றையதினம் மிகப் பெரிய விவாதத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. ஒரு பக்கத்தில், இந்தத் திட்டம் மிகமிக வேகமாக, அவசரமாகக் கொண்டு வரப்பட்டதோ என்ற

எண்ணம் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலே இங்கே அவையில் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, மிக நீண்ட காலமாகவே இந்தத் திட்டம் யோசனை செய்யப்பட்டு பிறகு அமுல் படுத்தப்பட்ட ஒரு திட்டமாக இருந்தாலும்கூட, கல்வித் துறையால் அது நிறைவேற்றப்படுகிறபோது, இந்த அளவுக்குத்தான் இருக்குமோ என்ற சந்தேகமும் எழுகிறது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், மேல்நிலைக் கல்வி நம்முடைய கிராமப்புற சமுதாயத்தில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையை இந்தக் கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். அதிலும் 11-வது வகுப்பில் இன்றையதினம் சேர்ந்து படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்காட்டி, அதாவது 1,14,000 மாணவர்கள் இந்த வகுப்பிலே சேர்ந்து படிக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்லி, மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வியும் இணைக்கப்பட்டிருக்கிறது என்றும் அதில் சுமார் 24,000 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்ற கணக்கினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் பழைய எஸ்.எஸ்.எல்.சி.—11-வது வகுப்பு இருந்திருக்குமானால், பழைய கணக்கின்படி அதில் தற்போது எவ்வளவு பேர் படித்துக் கொண்டிருப்பார்கள் என்று பார்த்தால், 2,42,000 மாணவர்கள் படித்திருப்பார்கள். இன்றையதினம் புதிய 11-வது வகுப்பில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையோ 1,14,000 தான். ஆக, இடையிலே 1 லட்சம் பேருக்கு மேலாகக் காணாமல் போயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் 10-வது தேர்வு நடைபெற்று அந்தத் தேர்வில் அவர்கள் வெற்றி அடையாமல் தோல்வி யுள்ளவர்கள் என்று நமக்கு நாமே ஆறுதல் சொல்லிக்கொள்ளலாம். இந்தக் கணக்கு சரியான கணக்கல்ல என்பதுதான் என்னுடைய எண்ணமாகும். நம் தமிழ்நாட்டில் மொத்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை சற்றேறக் குறைய 3,000 ஆகும். ஆனால் இன்றையதினம் தொள்ளாயிரம் என்று சொல்லக்கூடிய ஒன்பது நூறு இடங்களில் மட்டும்தான் மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டிருப்பதால், தங்கள் தங்கள் ஊரிலேயே மேல்நிலைப் பள்ளிகள் வராத காரணத்தால், பல்லாயிரக் கணக்கான ஏழை எளிய மாணவர்கள் 10-வது வகுப்பில் வெற்றி பெற்றிருந்தும்கூட, தொடர்ந்து மேல்நிலைக் கல்வியைக் கற்கும் வாய்ப்பை இழந்திருக்கிறார்கள் என்ற உண்மையைப் பார்க்க வேண்டும். இந்தக் கேள்விதான் இன்றையதினம் சமூகத்தில் மிக வேகமாகக் கேட்கப்படுகிற கேள்வியாகும் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் மேல்நிலைக் கல்வியைக் கொண்டு வருவது என்பது முடியாத காரியம் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் அப்படிப்பட்ட வாய்ப்பு நம்முடைய நாட்டின் கல்வித் துறைக்குக் கண்டிப்பாக இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிந்த ஒன்றாகும்.

மேல்நிலைக் கல்வியின் மிகப் பெரிய சிறப்பே அதோடு தொழிற் கல்வியையும் இணைத்து, மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு வேலைவாய்ப்புக் கல்வி என்றே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி வேலைவாய்ப்புக் கல்விக்கு முன்னுதாரணமாக அவ்வை இல்லத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகிற செவிலியர் பயிற்சியை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதைப்பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பில் படிக்கின்றபோது, அவ்வை இல்லத்தில் நடத்துகிற பெருமக்களை நாம் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். செவிலியரைப்பற்றி குறிப்பிட்ட கொள்கைக் குறிப்பில் அதை 'நர்சஸ் கோர்ஸ்' என்று தொடங்கி, துணைச் செவிலியர் என்ற பெயரும் அளிக்கப்பட்டு, பிறகு அவர்களெல்லாம் 'மெட்டர்னிடி அசிஸ்டெண்ட்'-களோ என்று எண்ணும் வகையிலும்,' ஒரு வேளை அவர்களெல்லாம் ஆயாக்கள் பதவிகளுக்கு நியமிக்கப்படுவார்களோ என்ற சந்தேகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அவ்வை இல்லத்தில் கொடுக்கப்படுகிற பயிற்சி உயர்ந்த பயிற்சி என்றால், எதிர்காலத்தில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு எந்த அளவுக்கு இருக்கும் என்பது சந்தேகமாக இருக்கிறது. அடையாறில் உள்ள புற்றுநோய்ப் பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரையில், அங்கேயும் செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்படி அந்த அந்த நிலையத்தில் படிக்கிற மாணவர்களில் பெரும்பான்மையோருக்கு அங்கேயே செவிலியர் பணி தந்து அதற்குரிய ஊதியமும் அளிக்கப்பட்டால், எதிர்காலச் சமுதாயம் செவிலியர் பயிற்சியை மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டு வந்ததற்காக தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கும். அதைப்போலவே அவ்வை இல்லத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கும்.

வேலைவாய்ப்புக் கல்வி என்று சொல்லப்படுகிற தொழிற் கல்வி பற்றிக் குறிப்பிடும்போது, நம்முடைய சமுதாயத்தில் எப்படி ஒரு 'காண்ட்ரடிக்ஷன்', முரண்பாடு இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பி.காம். பட்டப்படிப்பு படித்துத் தேறிய அனைவரையும் வங்கிகளிலே வேலைக்கு எடுத்துக்கொள்வதில்லை, அங்கே பி.எஸ்ஸி. (கெமிஸ்ட்ரி) படித்திருந்தாலும், வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள், மற்ற வேறு பொருள்பற்றி படித்துப்

பட்டம் பெற்றவர்களையும் வேலையில் அமர்த்திக் கொள்கிறார்கள். அதைப் போலவே எம்.ஏ. (சோஷியாலஜி) படித்தவர்களை 'சோஷியல் ஒர்க்' என்னும் சமுதாயப் பணிக்கு எடுத்துக்கொள்வதில்லை. எம்.ஏ. (பிலாசபி) படித்தவர்களையும் மற்ற பாடங்களைப் படித்துத் தேறியவர்களையும் அந்தப் பணியில் சேர்த்துக் கொள்கிறார்கள். எம்.ஏ. (ஆர்க்கியாலஜி) படித்தவர்களை சுற்றுலாத்துறையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் வேறு துறைகளில் கற்றுத் தேர்ந்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கிற காட்சியை நாம் இன்றைக்குக் காண்கிறோம். ஆக நம்முடைய நாட்டில் ஒருவன் படித்த கல்விக்கும் அவனுக்குக் கொடுக்கப்படும் பணிக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. படித்ததற்கு ஏற்ப வேலைவாய்ப்புக் கொடுக்கிற முறை, நம் நாட்டைப் பொறுத்தவரையில், இன்னும் வரவில்லை. இதை நமது கல்வியமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்த அவல நிலையைப் போக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது நாட்டில் மேல்நிலைக் கல்வி என்பது வெற்றி பெற வேண்டுமென்று நமது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விரும்புவார்களானால், நமது சமுதாயத்தில் எந்தத் துறைக்கு யார் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கு அந்தத் துறைகளிலேயே வேலைவாய்ப்புக்கு இடமளிக்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க வேண்டும்.

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒருவர் மட்டும் அத்தகைய ஆணையைப் பிறப்பித்தால் போதாது. அவருக்கு அருகில் அமர்ந்திருக்கிற சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இப்படிப் பயிற்சிபெறும் செவிலியர்களை தமது துறையில் பணியிலமர்த்திக் கொள்வதற்கான ஆணையையும் பிறப்பிக்க வேண்டும். அதைப் போலவே அவையில் இருக்கிற இந்த அவையின் முன்னவரும் சிறுதொழில்களின் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்கள் தம்முடைய அதிகாரத்திற்குட்பட்ட சிறு தொழில்களில் மேல்நிலைப் பள்ளிகளில் படித்து தொழிற் பயிற்சி பெற்ற மாணவர்களை, தொழிற் கல்வி பெற்ற மாணவர்களை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் ஆணை பிறப்பிக்க வேண்டும். எங்கள் துறைக்கு பாலிடெக்னிக்கில் படித்துப் பயிற்சி பெற்றவர்கள்தான் வேண்டும். ஐ.ஐ.டி. படித்துப் பயிற்சி பெற்றவர்கள்தாம் வேண்டும் என்று சொல்லாமல், மேல்நிலைக் கல்வியில் தொழிற் பயிற்சி பெற்றவர்களை எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்பட்டால்தான், எதிர்காலத்தில் இந்த மேல்நிலைக் கல்வியின்மீது சமுதாயத்திற்கு நல்ல எண்ணம் உருவாகும் . . .

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில் இருப்பதை அடிப்படையிலேயே மாற்ற வேண்டும், 'ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன்' வேண்டும் என்ற அளவில் பேசுகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. அதை அவர்கள் விளக்குவார்களா ?

திரு. க. அறிவழகன் : இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கையை வலியுறுத்தும் வகையில்தான் நான் பேசுகிறேன். வேலைவாய்ப்புக்கான கல்வி என்று சொல்லுகிற கல்வி, மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் தருகிற முறையில் அமைந்தால்தான், எதிர்காலத்தில் இந்தக் கல்வியின்மீது மக்களுக்கு மதிப்பு ஏற்படும். அப்போதுதான் கல்வித் துறை விரும்புகிற வெற்றி மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். தற்போது மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வி வெற்றி என்று சொல்லப்படுகிறது. அது உண்மையான வெற்றியாக வேண்டும். என்றுதான் இதைச் சொல்கிறேன். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை மேலும் வலுப்படுத்தும் வகையில்தான் நான் இதைச் சொல்கிறேன்.

கல்விக் கொள்கைக்குறிப்பில் மேல்நிலைக் கல்வியைப்பற்றி மத்திய கல்வியமைச்சர் டாக்டர் சுந்தர் அவர்கள் பாராட்டியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"தமிழகம் இன்று மேற்கொண்டுள்ள இக்கல்விப் பணியை மற்றைய மாநிலங்களும் வருங்காலத்தில் பின்பற்ற வேண்டியிருக்கும்" என்று இக் கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட்ட முறையைப்பற்றி மத்திய கல்வியமைச்சர் டாக்டர் பி. சி. சுந்தர் அவர்கள் வியந்து பாராட்டியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1964-65-ல் கோத்தாரி கமிஷன் அறிக்கைக்குப் பின்னால் 10 ஆண்டுகள் கழித்து இக் கல்வித்திட்டத்தை கேரளத்தில் கொண்டு வந்தார்கள். இந்தக் கல்வித் திட்டத்தைக் கடைசியாகக் கொண்டு வந்த மாநிலங்களில் நம்முடைய தமிழகமும் ஒன்று. இந்த மாநிலத்தைப் பார்த்து மற்ற மாநிலங்கள் செய்யக்

(பிற்பகல் 12-10)

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் தலைமை)

கூடிய நிலைமை இன்று இல்லை. காரணம், பல மாநிலங்கள் இதைக் கைவிட்டுவிட்டன. நம்முடைய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் கூட, இந்தக் கல்வித் திட்டம் தோற்றுப் போய்விட்டது என்று ஓரிடத்திலே பேசியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் இக்கல்வித் திட்டம் வெற்றி

[திரு. க. அறிவழகன்] [1979 ஏப்ரல் 11

பெற்றால்தான், இந்தச் சமுதாயத்தில் இக்கல்விக்கு ஒரு பெருமதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்தக் கல்வித் திட்டம் வெற்றி பெற மேல்நிலைப் பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலாவதாக, ஆசிரியர் பிரதிநிதிகள் பலர் எடுத்துச் சொன்னதைப் போல ஃஎப்.ஆர். 22-பி-யின்படி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பாடம் கற்பிக்க முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களே போதிய தகுதி உடையவர்கள் என்று அரசு ஆணையிட்டிருந்தும் கூட, பல பள்ளிகளில் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களின் மதிப்பெண் சரியல்ல என்று சொல்லி, அவர்களுக்கு ஊதியம் கொடுக்காத விகற்பமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றியமைக்க வேண்டும்.

மேல்நிலை வகுப்புகளை நடத்துவதற்காக துணைத் தலைமை ஆசிரியர்களை மிக வேகமாக நியமிக்க வேண்டும். ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளி வகுப்பை நடத்துவதே மிகச் சிரமமாயிருக்கிறது. மேலும் மேல்நிலைக் கல்வியும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே சிரமமில்லாமல் நடத்த வேண்டுமென்றால், ஒவ்வொரு பள்ளிக்கும் துணைத் தலைமையாசிரியர்களை நியமிக்க வேண்டும். எப்போதும் போல் மேல்நிலைக் கல்வியாசிரியர்கள் 18 மணி நேரம் பணிபுரிய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கல்லூரிகளில் 10 மணி நேரம் பணிபுரிகிறார்கள். அவர்களுக்குப் பயிற்றுநர்களும் துணையாக இருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளிகளில் நாம் 18 மணி நேரம் என்று வைத்தால், கல்வியைச் சொல்லிக் கொடுப்பவர்களுடைய திறமை குறையும். ஆகவே அவர்களுடைய பணி நேரத்தை 12 மணி நேரமாகக் குறைக்க வேண்டும்.

கல்லூரிகளில் சோதனை செய்யும் பாடங்களைக் கற்பிக்க ட்யூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர், உதவி ஆசிரியர்கள் என்று பல நிலையில் ஆசிரியர்கள் இருப்பதைப் போல, மேல்நிலைப் பள்ளிகளிலும் அப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமித்தால்தான், மேல்நிலைக் கல்வி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஏனென்றால் ஒவ்வொரு பாடத் துறையில் இருக்கும் பாடங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. எனக்குத் தெரிந்த மிகப் பெரும் கெமிஸ்ட்ரி பேராசிரியர் ஒருவர், மேல்நிலை வகுப்பு கெமிஸ்ட்ரி பாடத் திட்டத்தில் இவ்வளவு பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதே என்று கருதி, தானே உட்கார்ந்து தன்னுடைய பிள்ளைகளுக்கு அந்தப் பாடங்களைக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார். இந்த நிலைமையிலே ஒவ்வொரு பாடத் துறைக்கும்

1979 ஏப்ரல் 11] [திரு. க. அறிவழகன்]

தலைமைப் பாட ஆசிரியர் ஒருவர், அவருக்குக் கீழே துணை ஆசிரியர் என்று நியமிக்க வேண்டும். மாணவர்களுக்கு இக்கல்வி நல்ல முறையில் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்லுகிறேன். ஆசிரியர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல.

அடுத்து, கல்வியாண்டு முடியும் தருவாயில் இருக்கிறது. பல தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பு ஒழுங்கு முறை விதிகள் இன்னும் அமுலுக்கு வரவில்லை. தனியார் பள்ளிகளில், நிர்வாகங்கள் மேல்நிலைக் கல்வியில் தங்கள் இஷ்டம்போல் செய்யக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே தனியார் பள்ளிகளில் ஒழுங்குமுறை விதி எப்படி இருக்க வேண்டுமென்பதை மிக வேகமாக நாம் அறிவித்தாக வேண்டும்.

முன்னால் மாவட்டக் கழகப் பள்ளிகளை அரசுப் பள்ளியாக ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்ததைப் போல, உள்ளாட்சி, நகராட்சி ஆகியவைகளின் கீழ் உள்ள பள்ளிகளையும் அரசு தன்னுடைய நேரிடைப் பொறுப்பிலே எடுத்துக்கொள்ள வேண்டும். நகராட்சியிடம் பள்ளிகள் இருக்கின்றன. நகராட்சியில் ஸ்பெஷல் ஆபீசர்தான் இருக்கிறார். இதனால் ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கு ஆளாகிறார்கள். திருவள்ளூர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் உள்ள தலைமை ஆசிரியை வாலாஜாபாத்திலுள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். வாலாஜாபாத்தில் உள்ள தலைமை ஆசிரியர் பெண்கள் பள்ளிக்கு மாற்றப்பட்டிருக்கிறார். ஆகவே இரண்டு பேரும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டும். நகராட்சிப் பள்ளிகளுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டும். நகராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள் அத்தனையையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றையதினம் இருக்கிற நகராட்சிகள் இப்படிப்பட்ட மேல்நிலைக் கல்வியை நடத்துவதற்கான தகுதியையும், வசதியையும் பெற்றிருக்கவில்லை. அதைப் போலவே சென்னை நகரத்திலே உள்ள நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளைக் கூட சொல்ல முடியும். அங்கே ஒரு ஸ்பெஷல் ஆபீசர் இருக்கிறார். அவருக்கு இருக்கிற ஏராளமான வேலையிற்கிடையில் இந்தப் பள்ளியைப் பற்றிக் கவனிப்பது என்பது இயலாத காரியம். ஆகவே நகராட்சிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டால், மேல்நிலைக் கல்வி நகராட்சிப் பள்ளிகளிலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

ஆசிரியர்கள் மேல்நிலைக் கல்வி போதிப்பதற்கு வந்த பிறகு அவர்களுக்கு என்னென்ன பதவி உயர்வுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதற்கான விளக்கம் தரப்படவில்லை. முதுகலைப் பட்டம் பெற்ற பிறகு அவர்கள் பணியாற்ற

கிறார்கள். நம்முடைய நாட்டில் ஆசிரியர்கள் தங்களுடைய தகுதிகளை வளர்த்துக்கொண்டே போகிறார்கள். ஆசிரியர்களுக்கு எம்.ஃபில் தகுதியுள்ளவர்களாகத் தங்களை ஆக்கிக்கொள்ளலாமா என்ற நினைப்பு வந்திருக்கிறது. ஆகவே எம்.ஃபில் படிக்க விருப்பம் இருந்தால், அதற்கு அவர்களுக்கு முழுத் தகுதியும் இருந்தால், அவர்களை அந்தப் படிப்புக்கு அனுப்புவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று ஆசிரியர்கள் அறிய விரும்புகிறார்கள்.

மேல்நிலைக் கல்வி என்பது கிராமப்புறத்து மக்களை வளர்க்கிற கல்வி. ஆகவே கிராமப்புறத்தில் வேலை பார்க்கிற அளவுக்கு முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ஈடுபாடு வரச் செய்வதற்காக அவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்துதர அரசு முயற்சிக்க வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளித்தால் தான், கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கு ஆசிரியர்கள் முன்வருவார்கள். சட்டக் கல்லூரியில் கூட 10எ(1) ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும்போது, சட்டக் கல்லூரி ஆசிரியர்களுடைய பணி கூட உறுதி செய்யப்படுமென்று சொன்னார்கள். கல்லூரிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கும் பணி உறுதி செய்யப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'பி' பிரிவு ஆசிரியர்கள் இன்னும் 10எ(1) நிலைமையில்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 1—4—1970-க்குப்பின் நியமிக்கப்பட்ட 'பி' பிரிவு ஆசிரியர்களுடைய நிலைமை அப்படித்தான் இருக்கிறது. ஆகவே எல்லோருக்கும் சேர்த்து ஒரு சிறப்பு ஆணையை (ஸ்பெஷல் ஆர்டரை) அரசு வெளியிடலாம். இதற்கு முன்பு அது மாதிரி பொதுப் பணித் துறையில் வெளியிட்டிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி ஒரு ஸ்பெஷல் ஆர்டரின் மூலமாக அத்தனை பேருடைய பதவியையும் உறுதிப் படுத்துகிற முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும்.

பொறியியல் கல்லூரிக்கு நான் போயிருந்தேன். மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். அங்கே 10எ(1) ஆசிரியர்கள் ஐந்தாண்டு, பத்தாண்டு என்று பணியாற்றியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அவர்களுடைய பணி உறுதி செய்யப்படாமலேதான் பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அதைப் போன்றே பாலிடெக்னிக்கிலும் பல ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணி உறுதி செய்யப்பட வேண்டும். அந்தத் துறையிலே இருக்கிற தொழில் நுட்ப நெறியாளர் அவர்கள் கடந்த காலத்திலே ஏற்பட்ட ஆசிரியர்கள் பிரச்சினையை விரைந்து

தீர்த்திருக்கிறார்கள் என்று ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அவர் களுடைய பணியை உறுதிப்படுத்தும் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்று கருதி அதைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், பாலிடெக்னிக்கில் உள்ள ஆசிரியர்கள் 'இன்ஸ்ட்ரக்டர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். மற்ற எல்லா இடங்களிலும் பேராசிரியர்கள் என்றும், விரிவுரையாளர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். ஒரு காலத்தில் அவர்களும் மற்ற விரிவுரை யாளர்களைப் போல உயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். முதலாவது ஊதியக் குழு வந்தபோது, பொறியியல் கல்லூரியில் உள்ள விரிவுரையாளர்களைப் போலவே, கலைக் கல்லூரியில் உள்ள இன்ஸ்ட்ரக்டர் களைப் போலவே சமமாக ரூ. 350—650 என்ற ஊதிய விதத்தைப் பெற்று வந்தார்கள். பிறகு, "இன்ஸ்ட்ரக்டர்" என்ற வார்த்தை இருப்பதால், அவர் களுடைய சம்பள விதம் ரூ. 700—1,300 என்றும் பொறியியல் கல்லூரியில் அவர்கள் நிலைமையிலேயே உள்ள விரிவுரையாளர்களுக்கு 1,100—1,600 என்ற சம்பள விகிதமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய கல்வி யமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரியிலே, "பொறியியல் கல்லூரியில் செலவழிக்கப்படுகிற தொகை திரும்பச் சமுதாயத்திற்குக் கிடைக்கக் கூடிய வகையில் இங்குதான் நல்ல பணி நடைபெறுகிறது" என்று சொன்னார்கள். ஆகவே அந்த ஆசிரியர்களுடைய இந்தக் குறைபாட்டை மிக விரைந்து போக்கினால், அங்கே நிரந்தரமான அமைதி நிலவும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

நம்முடைய அரசு பல்வேறு நேரங்களில் பல்வேறான ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். பப்ளிக் ஒர்க்ஸ், ஹைவேஸ் அண்டு ரூரல் டிப்பார்ட்மெண்டில் நீண்டகாலத்திற்கு முன்னால், அதாவது 1976 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன், ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அத்துறையில் பணிபுரிகிறவர்கள், முழுச் சம்பளத்தோடு மேல்படிப்பு படிக்கச் செல்லலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சலுகை பாலிடெக்னிக்கில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்குத் தரப்படவில்லை. இதை அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழாசிரியர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.லிட். பட்டம் தேர்வு எழுதலாம் என்று சொன்னார்கள். புலவர் பட்டம் இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆகவே பி.லிட் பட்டத்திற்குப் பதிலாக புலவர் பட்டத்தையே பல்கலைக் கழகம் தர வேண்டும். இப்படிச் சொல்லும் போது, பல்கலைக் கழகம் செய்யவேண்டியதை இங்கே பேசலாமா என்று

கேள்வி எழக்கூடும். சென்னைப் பல்கலைக் கழகம் செய்ய வேண்டியதை சட்டமன்றங்களில் சொன்னால்தான், அவர்கள் செய்யக் கூடிய அளவுக்கு இன்றையதினம் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

இந்த நாட்டிலே ஒரு நெருக்கடி இருந்த நேரத்தில் சமஸ்கிருத மொழி படித்தவர்களுக்கும், இரண்டாம் நிலையாக இருந்த காலத்தையும் சேர்த்துக் கொண்டு செலக்ஷன் தரலாம் என்று அன்றையதினம் முடிவு செய்தார்கள்.

(பிற்பகல் 12-20)

அப்போது தமிழ் மொழியை விட்டுவிட்டார்கள். தமிழாசிரியர்களை விட்டு விட்டார்கள். அப்போது பெரிய அநீதி வழங்கப்பட்டுவிட்டது. அதை எதிர்த்துக் கேட்கக்கூட யாரும் இல்லை. இன்றையதினம் இருக்கக்கூடிய அரசு அவர்களுக்கு அவர்களின் பயிற்சிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் தரவேண்டிய செலக்ஷன் கிரேடைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தில் புலவர் பட்டயம் பெற்ற தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள். 26—7—1978-ல் எம்.ஏ. தேர்வு பெற்ற எண்மர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, வேறு துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்களை, நம்முடைய அரசு ஆணைக்கு மாறாக அங்கே நியமித்திருக் கிறார்கள். அதை மாற்ற வேண்டும். அங்கு உரியவர்கள் அந்தப் பதவியைப் பெறுகின்ற முறையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கல்வித் துறையில் மேல்நிலைக் கல்வி புகுத்தப்பட்டிருக் கின்றது. அது ஒரு சிறப்பான திட்டம்தான். இந்த மேல்நிலைக் கல்வியின் காரணமாக சில மாணவர்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் பெறவேண்டிய வாய்ப்பு வசதிகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் என்ன வசதிகளைப் பெற வேண்டுமோ அவைகளைப் பெற முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவைகளை அவர்கள் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

நல்ல நூல்நிலையங்கள் நம்முடைய கல்லூரிகளிலே இருக்கின்றன. அங்கே நல்ல பல புத்தகங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அந்தப் புத்தகங்களைப் பராமரித்து மாணவர்களுக்குப் படிக்க தரக்கூடிய நிலைமைகள் இல்லை. அங்கு நூலகங்கள் இருக்கின்றன, நூல்கள் இருக்கின்றன. ஆனால்,

நூலகர்கள் இல்லை. அங்கு நூலகர்களை நியமிக்க வேண்டும். அந்த நூலகர்களை நியமிப்பதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நூலகர்களை அந்த மேல்நிலைப் பள்ளிகளிலே நியமிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே உடல் பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், மேல் நிலைப் பள்ளிக் கல்வியால் ஏற்படக்கூடிய நல்ல பலன்கள் நமது சமுதாயத்திற்கும் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு, இந்த அளவில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது நான் பேசத் தொடங்குகின்றபோதே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளதை நடைமுறையில் நிறைவேற்ற நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வித் துறை செயலாளர் அவர்களும், இயக்குநர் அவர்களும் எந்த அளவுக்கு ஆர்வத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி விரிவாகச் சொல்லி, அதற்காக அவர்களை நான் பாராட்டிப் பேசிவிட்டு, அதற்குப் பின்னால் என்னுடைய சில கோரிக்கைகளையும் வைக்க வேண்டுமென்று கருதினேன். அதற்காகவே நான் கடந்த இரண்டு நாட்களாகவே சற்று அதிக நேரம் பேச வேண்டும், அதற்கு வாய்ப்புத் தாருங்கள் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், பாராட்டவே வேண்டாம், கோரிக்கைகளை மட்டும் வைத்தால் போதும் என்பது போல் பேசுகின்ற நேரத்தைக் குறைத் திருக்கிறார்கள். மாண்புமிகு முன்னவர் அவர்கள்கூட இரண்டு நாட்கள் ஒதுக்கியிருப்பதால், கல்வி மான்யத்தில் பேசுவதற்கு ஆசிரியப் பிரதிநிதி களுக்கு சற்று நேரம் அதிகமாகக் கிடைக்கும் என்ற கருத்தைக்கூட சொல்லி யிருந்தார்கள். இருந்தும் சற்று அதிக நேரம் பேசுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

கல்விக்காக என்று நிதி ஆதாரத்தில் 25 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. கல்வித் துறையில் ஒரு ஆணை போட்டிருக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நேரடியாக எழுத முடியும் என்று போட்டிருக்கிறார்கள். மேல்நிலைக் கல்வி கிராமப்புற மக்களுக்குக் கிடைக்க வாய்ப்பு வசதிகள் செய்திருக் கிறார்கள். ஈ.எஸ்.எல்.சி., எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகள் நேரடியாக எழுது வதற்கு வாய்ப்பு அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்கள் நல்ல பயன் பெற

முடியும். அதே போல் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையினர் பள்ளிகளைக் கட்டுப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பல திட்டங்களுக்காக நமது அரசும் அமைச்சர் அவர்களும் நல்ல முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகப் பாராட்டுகிறேன்.

அங்கத்தினர் ஒருவர் இங்கே ஆசிரியர்களைப்பற்றிக் குறைகள் சொல்லிப் பேசிய நேரத்தில், நமது அமைச்சர் அவர்கள் குறிக்கிட்டுப் பேசினார்கள். அவர்கள் ஏற்கெனவே ஆசிரியராக இருந்தவர் என்ற காரணத்தினாலே, அவர் சொன்ன கருத்துக்களை எதிர்த்து தம்முடைய உணர்வை எடுத்துக் காட்டி தம்முடைய கருத்துக்களைச் சொல்லி ஆசிரியர்களுடைய வாழ்விலே அமைச்சர் அவர்கள் எவ்வளவு அக்கறை செலுத்துகின்றார்கள் என்பதைக் காண்பித்தார்கள். அந்த அளவுக்கு அவர்கள் அக்கறை காட்டுவதை நாங்கள் பாராட்டுகிறோம். கல்வி விஷயங்களைப் பொறுத்த வரையில், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள், கல்விச் செயலாளர் அவர்கள், கல்வி இயக்குநர் அவர்கள் எல்லாம் கல்விக்காகச் செய்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன்.

ஆசிரியர்களாகிய நாங்களும் ஆசிரியர்கள் தாப்பிலே எங்கள் ஒத்துழைப்பைத் தந்துகொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆசிரியர் தேசிய நல நிதி என்று அமைத்து அதன் மூலம் நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறோம். பள்ளிகள் சீரமைப்பு மகாநாடு என்று நடத்தினோம். அந்தப் பள்ளிகள் சீரமைப்பு மகாநாடு மூலம் ரூ. 14.32 கோடி நிதி திரட்டித் தந்திருக்கிறோம் என்பதை அரசே அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் ஒத்துழைப்பைப்பற்றி அங்கத்தினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இவைகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் கல்வித் துறையில் வைத்திருக்கின்ற கொள்கையில் சிலவற்றில் சற்று வேறுபட்டு இருக்கிறோம். மூன்றாவது வகுப்பு வரையில் தேர்வே இல்லை என்ற நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அடித்தளத்திலே இருப்பவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற கருத்தில்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த எண்ணம் அமைச்சர் அவர்கள் உள்ளத்தில் இருந்தாலும்கூட, முதல் ஆண்டு, விஜயதசமி வரையில் செப்டம்பர் வரையில் பள்ளியில் வந்து சேர்கின்றார்கள் என்றாலும் கூட, மறு ஆண்டே அவர்களுக்குப் புரமோஷன் கொடுப்பது என்ற நிலைமை வருகிறது. அப்படியெல்லாம் தேர்வு கொடுத்தால், அவர்களுடைய கல்வியின் தரம் எப்படி நன்றாக இருக்க முடியும்? இப்படியே மூன்றாம் வகுப்பு வரையில் தரம்

இல்லாது படிப்புச் சொல்லிக்கொடுத்து, அதிலே வடிகட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமலே செய்துவிடுகிறோம் என்று சொன்னால், அவர்களின் கல்வித் தரம் எப்படி உயர முடியும்? ஓரளவுக்காவது தேர்வு இருப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இதனால்தான் நான் அந்தக் கொள்கையில் சற்று மாறுபட்ட கருத்து உடையவனாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஈ.எஸ்.எல்.சி., எஸ்.எஸ்.எல்.சி, நேரடியாகத் தேர்வு எழுதலாம் என்று வைத்திருக்கிறார்கள். இதில் பள்ளிகளிலே படிக்காமல், தங்கள் இஷ்டத்திற்குப் படித்து அவர்கள் நேரடியாகத் தேர்வு எழுதலாம் என்பது திட்டம். இதனால் ஆசிரியர்களுடைய வேலைவாய்ப்புக்கள் குறைகின்றன. அரசு அங்கீகாரம் இல்லாத பள்ளிகளிலேயும் அவர்கள் சேர்ந்து படித்து, தேர்வு எழுதலாம் என்ற நிலையிருந்தால், அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் மதிப்புக்குக் குறைவு ஏற்படாதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசு ஒரு நல்ல எண்ணத்திலேதான், எல்லோரும் எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதே நேரத்தில் வேலையில்லாமல் படித்துவிட்டு, ஆசிரியர்கள் பயிற்சி சர்டிபிகேட் பெற்றிருந்தாலும், வேலை வாய்ப்பு இல்லாத நிலை ஏற்படும். பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடம் அவர்கள் படித்து, அந்த ஆசிரியர்களிடம் ஒரு சர்டிபிகேட் பெற்றிருந்தால், பரீட்சை எழுதலாம் என்ற ஒரு விதிமுறையைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், வேலை இல்லாமல், வேலை பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல இருப்பவர்களுக்கு அது நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த எண்ணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுடைய பரிசீலனைக்கு இதை நான் வைக்கிறேன்.

இங்கே இன்னொரு விஷயம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதுதான் மையச் சமையல் கூடம். இதை எல்லா மாவட்டத்திற்கும் உடனே விரிவுபடுத்த வேண்டும். இந்த மையச் சமையல் கூடம் சரியான முறையில், வெற்றிகரமான முறையில் செயல்படுத்தப்படுகிறதா என்பதைப் பற்றி சர்வே செய்து பார்க்க வேண்டும். காலை முதல் மாலை 5 மணி வரையில் ரூரல் ஏரியாவிலே 'சப்ளை' செய்கிறார்கள். சரியான நேரத்தில் சாப்பாடு வருவதில்லை. குறிப்பிட்ட காலத்திலே வர வசதியில்லை. அவர்கள் கொண்டு வந்து கொடுப்பதற்கு வேண்டிய டிரான்ஸ்போர்ட் பெசிலிட்டிகள் இல்லை. பாதை சரியாக இல்லை. மாணவர்கள் சாப்பாடு எப்போது வரும், எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். பிற்பகல் 2 மணி முதல், 5 மணி

வகையில் காத்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலைகள்தான் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு வேறு என்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். சில நேரங்களில் ஓட்டுநர்கள் கூட சமையல்காரர்களாகப் பயன்படுத்தப் படுகிறார்கள். இதைப்பற்றி விரிவான முறையில் ஒரு சர்வே செய்ய வேண்டும். இதை வெற்றிகரமாக நடத்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, வானொலித் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். வானொலித் திட்டத்திற்கு மின் கட்டணத்தை யார் செலுத்துவது என்ற பிரச்சினை இருக்கிறது. அதன் பராமரிப்புச் செலவை எப்படிச் செய்வது? இந்தப் பிரச்சினை எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றது. இந்த மின் கட்டணத்தை ஒன்றியப் பள்ளிகளில் ஒன்றிய நிதியிலிருந்தும் உயர்நிலைப் பள்ளிகளில் அபிவிருத்தி பண்டிலிருந்தும் செலுத்த வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்ததாக, ஆசிரியர் மாணவர் விகிதம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1 : 20 என்று ஆசிரியர் மாணவர்கள் விகிதம் இருக்க வேண்டும். தற்போது தொடக்கப் பள்ளியிலே 1 : 37 என்ற விகிதத்தில் இருக்கிறது. இவ் விவரம் அரசு அறிக்கையிலே உள்ளது. தொடக்கப் பள்ளியிலேதான் மாணவர்கள் குறும்புகள் அதிகம். பாடம் நடத்துகொண்டிருக்கும்போது, ஒருவன் 'ஐயா இங்கே இவன் குத்துகிறான், கிள்ளுகிறான்' என்பது போன்ற புகார்கள் தொடக்கப் பள்ளிகளிலே இருக்கும். இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கும் போது, மேலும் மேலும் ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதம் அதிகமாக இருந்தால், மாணவர்களுக்கு எப்படி இன்டிவிஜுவல் அட்டென்ஷன் செலுத்த முடியும்? தொடக்கப் பள்ளியில் கற்றுக்கொடுக்கும்போது, ஒவ்வொரு மாணவனையும் கையைப் பிடித்து எழுதச் சொல்லி கற்றுக் கொடுக்கும் நிலைமைகள் இருக்கின்றன. 1 : 37 என்ற விகிதத்தில் இருந்தால், ஆசிரியர்கள் அவர்களுக்கு எப்படிச் சீராகக் கற்றுக்கொடுக்க முடியும்? 1 : 20 என்ற விகிதத்திற்கு மேல் இல்லாதபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

பொதுவாக நாடு முன்னேறும் வகையில் நாம் நம் கல்வித் திட்டத்தை வகுத்திருக்கலாம். நம் நாட்டு மக்கள் பல்வேறு வகையிலே முன்னேற வேண்டும் என்றால், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி என் கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுக் கல்வியாக, கட்டாயக் கல்வியாக எஸ்.எஸ்.எல்.சி. வரை இருக்கலாம். அதற்குமேல் அவர்களுடைய

அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். எட்டாம் வகுப்பு படிப்பதற்குள் உரிய சோதனை செய்து அவர்களைத் தரம்பிரித்து எடுத்து, ஒவ்வொருவருக்கும் எந்தெந்தத் துறையில் ஆற்றல் இருக்கிறதோ அந்தத் துறையில் படிக்க ஊக்குவிக்க வேண்டும். மொழித் துறை, கணக்குத் துறை, பௌதிகத் துறை, பொறியியல் துறை, கலைத் துறை, அரசியல் துறை என்று இப்படிப் பிரித்து தகுதியுள்ளவர்களைத் தேர்ந்து அந்தந்தத் துறையில் படிக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்றவாறு திட்டங்களை உருவாக்க வேண்டும். அப்போது தான் பல்வேறு துறைகளிலும் நமக்கு வல்லவர்கள் கிடைப்பார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் காலத்திலாவது இதை நிறைவேற்றி வைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இப்படி நான் பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று இருந்தாலும், நேரமில்லை. மாண்புமிகு அவைத் தலைவர்களே நான் சொல்ல வேண்டியதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறார்கள். அதையெல்லாம் அப்படியே வழி மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆசிரியர்கள் சார்பாகப் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மாலையிலே கல்வி அமைச்சரவர்கள் ஏதேனும் அறிவிப்பார்களென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எங்களிடத்திலே பற்றும், பாசமும் உள்ளவர் கல்வி அமைச்சர். இன்னும் சொல்லப்போனால் எங்கள் இனத்தவர். எங்களுடைய வர்க்கத்தைச் சேர்ந்தவர். எங்களுடைய நிலையை நன்றாகப் புரிந்து கொண்டுள்ளவர். அதனால்தான் அவர்களே எங்களை அழைத்துச் சொன்னார்கள், என்.ஜி.ஓ.-வினருக்கும், உங்களுக்கும் பொதுப்படையான சில கோரிக்கைகளை வைத்திருக்கிறீர்கள், அதை அவர்களுக்காகவும் பரிசீலனை செய்ய வேண்டும், எனவே அதை விட்டுவிட்டு மற்ற பிரச்சினைகளிலே முடிவு சொல்ல இருக்கிறேன் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய அழைப்பின் பேரில் நாங்கள் பள்ளிக் கல்வி இயக்குநருடனும் செயலாளருடனும் பேசி யிருக்கிறோம். பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள், நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே எங்களுடைய பிரதிநிதியாக இருந்து, எங்களுக்குத் தெரியாத பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லி, விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அவர்களும் சொல்லியிருப்பார்களென்று நினைக்கிறேன். எனவே கல்வி அமைச்சரவர்கள் நிச்சயமாகச் செய்வார்களென்ற நம்பிக்கை இருக்கிறது என்றாலும், சில கோரிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 ஏப்ரல் 11

பட்டிருக்கிறேன். கல்வி அமைச்சரவர்கள் அதிலே சில கோரிக்கைகளையாவது நிறைவேற்றித்தர வேண்டும். மாலையிலே காதைத் தீட்டிக்கொண்டு, அவையிலே உட்கார்ந்திருப்போம். நாங்கள் என்ன பேசி என்ன பயன்? நாங்கள் பேசுவது அமைச்சரவர்களுக்குத் தெரியாததல்ல. அமைச்சரவர்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள், செய்வார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அவர் சொல்வதைக் கேட்க 2½ இலட்சம் ஆசிரியப் பெருமக்கள் வானொலியின்கீழ் இன்று மாலை காத்திருப்பார்களென்பதைப் பணிவோடு தெரிவித்து, நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக மாற்ற வேண்டும். இது அரசுக்கு நன்றாகத் தெரியும். 5,000 ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களாகப் பாஸ் செய்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களை உடனே இடைநிலை ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். மீதமுள்ள 68,000 இளநிலை ஆசிரியர்களை மூன்று ஆண்டுகளில் இடைநிலை ஆசிரியர்களாக மாற்றும் திட்டத்தைப்பற்றிப் பேசியிருக்கிறேன். பயிற்சிப் பள்ளிகளில் அல்லது பிராந்தியக் கல்லூரிகளில் 'கரெஸ்பான்டன்ஸ்-கம்-கான்டாக்ட் கோர்ஸ்' ஏற்படுத்தி, எஸ்.சி.ஈ.ஆர்.டி. செலவிலோ, வேறு வகையிலோ ஈடு செய்து, அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சியைக் கொடுத்து, இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக மாற்றி, 65,000 குடும்பங்களை வாழ வைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அரசுக்குச் செலவு இல்லாத திட்டமிது. இதனால் அரசுக்கு மானிடரி லாஸ் இல்லை. அட்மிஷனுக்கு என்று 5 ரூபாயும், எக்சாமினேஷன் பீஸ் என்று 10 ரூபாயும் பெற்றுக்கொள்ளலாம். இதையெல்லாம் சிந்தித்து, கல்வி அமைச்சரவர்கள் அறிவிப்பார்களென்று நம்புகிறேன்.

அடுத்து, தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதியம் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. இதனாலே செலவேயில்லை. தேர்வு நிலை ஆசிரியர்களாகத்தான் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேர்வு நிலை ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் ஊதியத்தை தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியரின் ஊதியமாகவும் வரையறுத்துவிட்டால், நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவியை தமிழாசிரியர்களுக்கும், பி.டி. ஆசிரியர்களுக்கும் தந்துவிடுகிறார்களே; எங்களுக்கு இல்லாமல் போய் விடுகிறதே என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லாமல் போய்விடுமென்று சொல்லி, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 11] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ஓராசிரியர், ஈராசிரியர் பள்ளிகளில் பணிப்படி இல்லை. ஓராசிரியர் பள்ளியில் அவ்வாசிரியர் அஷ்டாவதானம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று முதல் 5 வகுப்புகளைப் பார்க்க வேண்டும். நான்காம் வகுப்புக்குத் தமிழ், மூன்றாம் வகுப்புக்குப் பாடம் படிக்கச் சொல்லல், 5 ஆம் வகுப்புக்குக் கணக்கு, 1 ஆம், 2 ஆம் வகுப்பை காப்பி எழுதச் சொல்லல் என்று எல்லா வகுப்புக்களையும் கவனிக்க வேண்டும். மதிய உணவு சமையலையும் அவரே செய்ய வேண்டும். இவ்வாறே அஷ்டாவதானம் செய்கிற அவர்களுக்குப் பணிப் படியில்லை; ஆனால் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ஆசிரியர் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அந்தப் படி உண்டு. எனவே இதையும் கவனிக்க வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கும் பட்டதாரித் தலைமை ஆசிரியர்களுக்குப் பணிப் படி இல்லை. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பணியாற்றினால் சிறப்பு ஊதியம் உண்டு. நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் பட்டதாரிகளுக்கு அந்த 15 ரூபாய் சிறப்பூதியம் கிடையாது. இந்நிலை அதிகமாகப் படித்ததற்கு பனிஷ்மென்ட் போல் இருக்கிறது. எனவே அவர்களுக்கும் அந்தப் படியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியரின் ஊதிய விகிதத்தை அவர்கள் பெறுகிறார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. பணிப் படியை அவர்களுக்குத் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்குக் கடன்கள் தரப்படுகின்றன. அவைகளையெல்லாம் ஆசிரியர்களுக்கும் தர வேண்டும். கடன்தான் தருகிறார்கள். திரும்ப வாங்கப் போகிறார்கள். ஆசிரியர்களுக்கும் அதைக் கொடுத்தால் குடி முழுகியா போய் விடும்? அதையும் நிச்சயமாகத் தர வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கொஞ்சம் பரிந்துரை செய்ய வேண்டும். இங்கே உட்கார்ந்து கொண்டு கல்வி அமைச்சருக்குக் குறிப்பு எழுதிக் கொடுக்கிறார்கள். வீடு கட்டக் கடன், ஸ்கூட்டர் வாங்கக் கடன், சைக்கிள் வாங்கக் கடன் இதுபோன்ற அனைத்துக் கடன்களையும் ஆசிரியர்களுக்கும் தர வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு 1976-க்கு முன் செய்து கொண்ட அரசு ஊழியர்கட்குத் தரப்படும் ஊக்க ஊதியம், ஆசிரியர்களுக்குக் கிடையாது. சுகாதார அமைச்சரவர்கள் உறுதிமொழி கொடுத்த அந்த ஊக்க ஊதியம் ஆசிரியர்களுக்குத் தரப்படுமென்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறை விடுமுறை கால இலாகா என்று இருக்கக் கூடாது. நீதி மன்றத்தில் உள்ளதைப்போல் மாற்ற வேண்டும். நீதி மன்றத்தில் இருக்கின்ற ஊழியர்களை இரண்டு பிரிவாகப் பிரித்து, விடுமுறையில் அவர்கள் வேலை செய்ய வேண்டுமென்றும், அவர்களுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு என்றும் வைத்திருக்கிறார்கள், அந்த முறையைக் கல்வித் துறையில் ஏற்படுத்த

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 ஏப்ரல் 11

வேண்டும். அவர்களும் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து, பணத்தை போனசாகப் பெற்று போனஸ் பெற்றோம் என்று வாயார உங்களைப் புகழ வாய்ப்பு இருக்கும். இப்போது அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 2-10/11 நாட்கள் தான் ஈட்டிய விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. அப்படி மற்றவர்களுக்கு இல்லை. அத்தோடு 15 நாட்களையாவது சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி எல்லா மட்டத்திலும் தேவை என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. சுகாதாரத் துறை அமைச்சரவர்கள், எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பில் குறிப்பிட்ட விழுக்காடு, டாக்டர்களுடைய குழந்தைகளுக்கு உண்டென்று அறிவித்ததாக ஏடுகளில் பார்த்தேன். அவர்கள் கல்வி அமைச்சரவர்களுக்கு அதைச் சொல்ல வேண்டும். 25 சதவிகிதம் இடத்தை ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு (in all Training Institutes) எல்லா மட்டத்திலும் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு நிலை 20 ஆண்டுகளில் தர வேண்டுமென்று நாம் ஆணை போட்டிருக்கிறோம். கல்வித் துறைச் செயலாளர், பள்ளிக் கல்வி இயக்குநர், அமைச்சரவர்கள் ஆகியோர் இதைக் குறித்து ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். இருபது ஆண்டுக்காலம் பணித் தொடக்கத்திலிருந்து கணக்கிட்டு, 20 ஆண்டுகள் ஆனவுடன் அவர்களுக்குச் சிறப்பு நிலை கொடுக்க வேண்டும். அதேபோல 10 ஆண்டுகள் எப்போது முடிகிறதோ அவ்வப்போது தேர்வு நிலை கொடுக்க வேண்டும். இது பெரிய விஷயமல்ல. நினைத்தால் செய்யக்கூடிய விஷயம். இதைச் செய்ய வேண்டும். 1—1—1971 முதல் தேர்வுநிலை விழுக்காடு அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. 1—4—1973 முதல் 10 ஆண்டு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. 1—4—1974-ல் இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1—4—1975-ல் உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை வழங்கப்பட்டது. இன்னும் சில ஆசிரியர்களுக்கு—பொறியியல் ஆசிரியர்கட்கு—தேர்வுநிலை வழங்கப்படவேயில்லை. டிஸ்பாரன்ஸ் இன்னும் இருக்கிறது. ஒரே துறையில், பல்வேறு ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேர்வுநிலை பல்வேறு நாட்களிலே வழங்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரி 1—1—1971 முதல் 10 ஆண்டு பணிக்கால அடிப்படையில் தேர்வுநிலை கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் தரும்போது, எல்லாத் துறையினருக்கும் தருவதுபோல, பணவிடை மூலம் அனுப்ப வேண்டும். வயதான நிலையில் தாத்தாவாக இருப்பவர்கள் அவர்கள், எல்லோருக்கும் ஆசான்களாக

1979 ஏப்ரல் 11] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

இருந்தவர்கள். அமைச்சர்களையெல்லாம் உருவாக்குகிற ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அவர்கள். அவர்கள் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு, காக்காய் எச்சம் அவர்கள்மேல் விழ, அவர்களைக் கூப்பிடுகின்றவரை காத்து இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் பள்ளியில் ஆஜர் எடுத்ததுபோக, அவர்களை அலுவலகத்தில் ஆஜர் எடுக்கும் நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுடைய ஓய்வூதியத்தைப் பணவிடை மூலமாகவே அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.ஜி. அலுவலகத்தில் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்தைக் காலாகாலத்தில் கொடுப்பதில்லை. இதற்கான புதிய திட்டத்தைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். பள்ளிக் கல்வி இயக்குநரிடமும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். முதன்மைக் கல்வி அதிகாரி அல்லது மாவட்டக் கல்வி அதிகாரி மட்டத்திலே பென்ஷன் கொடுக்கும் பொறுப்பை ஒப்படைத்து, ஆவன செய்ய வேண்டும். ஏ.ஜி. அலுவலகத்திற்கு அனுப்பினால், என்.ஜி.ஓ.-வினருக்குச் சீக்கிரம் கிடைக்கும், ஆசிரியர்களுக்குச் சீக்கிரம் கிடைக்காது. ஆசிரியர்களைப் பாராட்டுகிறோம், ஆனால் மதிப்பதில்லை. எங்கும் இதே நிலைதான். எனவே, ஏ.ஜி. அலுவலகத்தில் இல்லாமல், கல்வி அலுவலகத்திலேயே—சி.ஈ.ஓ. அல்லது டி.ஈ.ஓ. மட்டத்திலேயே அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களிடமிருந்து நிர்வாகிகள் குடும்ப நல நிதிக்காக ஒரு ரூபாய் பிடிக்கிறார்கள். அந்தப் பணத்தோடு பிராவிடன்ட் பண்ட் தொகையும் பிடிக்கிறார்கள். அந்தப் பணம் அவர்கள் கையிலே இருக்கக்கூடாது. நிர்வாகத்தின் கையிலே அந்தப் பணத்தை வைத்திருக்கக்கூடாது. ஆனால், பலர் அந்தப் பணத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, கட்டாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதையெல்லாம்கூட அரசே ஊதியத்திலிருந்து பில்லிலேயே பிடித்தம் செய்து, பின்னால் கணக்கில் சேர்க்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் தனியார் பள்ளிகளில் நிலவும் ஊழல் குறையும்.

இருபது ஆண்டுக்காலப் பணிக்குப் பிறகு, விருப்ப ஓய்வு பெற அரசு அனுமதி அளித்திருக்கிறது. வேலைவாய்ப்பு இல்லாத நிலையைக் குறைக்க இது பயன்படும். இருபது ஆண்டுக்காலப் பணிக்குப் பிறகு யார் ஓய்வு பெற விரும்புகிறார்களோ, அவர்களின் வாரிசுகளுக்கு உடனடியாக வேலை கொடுக்கப்படுமென்ற நிலையை ஏற்படுத்தினால், பல நண்பர்கள் 20 ஆண்டு பணிக்குப் பிறகு ரிட்டையர் ஆவார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 20 நிமிடங்கள் ஆகிவிட்டன என்பதை உறுப்பினரவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

[1979 எப்ரல் 11

(பிற்பகல் 12-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் கருணை காட்ட வேண்டும். கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீதான விவாதமாக இருப்பதால் நான் ஒருசில கருத்துக்களைத் தெரிவித்து தான் ஆக வேண்டியிருக்கிறது. தயவுசெய்து இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். பல பிரச்சினைகள்பற்றி நான் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் அருள்கூர்ந்து வாய்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "குறை நீர்க்கும் நாள்" என்று ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைப் பொறுத்தவரை வைத்திருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் அதுமாதிரி குறை நீர்க்கும் நாள் என்று ஒரு நாள் ஒதுக்குவதில்லை. அதனால் அரசுக்குப் பணச் செலவு ஒன்றுமில்லை. மூன்று மாதத்திற்கு ஒரு நாள் குறை நீர்க்கும் நாள் என்று ஒதுக்கினால், அதிகாரி களுடன் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வசதியாக இருக்கும். அப்படி பிரச்சினைகளை கீழ் மட்டத்திலேயே பேசி முடித்துவிட்டால், மேல் மட்டத்தில் வேலை குறைந்துவிடும். இப்பொழுது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் குறை நீர்க்கும் நாள் என்கின்ற இந்தத் திட்டத்தை அரசுப் பள்ளி ஆசிரியர்களும், தனியார் பள்ளி ஆசிரியர் களும் பயனடையும் வகையில் அரசுப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் மாவட்டக் கல்வி அதிகாரி மட்டத்தில் செயல்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களில் புலவர், பி.ஏ., எம்.ஏ. போன்ற தகுதிகளைப் பெற்றவர்களுக்கு அவர் களுடைய கல்வித் தகுதிக்கு மேல் தகுதி பெறும் ஒவ்வொரு தகுதிக்கும் இன்சென்டிவ் என்கிற முறையில் ஒரு ஸ்டெப் ஊக்க ஊதியம் அளிக்க வேண்டு மென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் 40 ஆயிரம் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஆசிரியைகள் மக பேறு விடுப்பு எடுக்கிறார்கள். ஆசிரியர்கள் பல்வேறு விடுப்புகளில் செல் றார்கள். அவர்கள் அவ்வாறு விடுப்பு எடுக்கும்போது, உடனடியாக அந்த பணியிடத்தில் வேறு ஒரு ஆசிரியரை நியமிப்பதில்லை. அப்படியே நியமி தாலும், மாவட்ட வேலை வாய்ப்பகத்தின் மூலம் நியமிக்கின்ற நிலை இரு கிறது. ஆகவே, மெட்டர்னிட்டி விடுப்பில் ஆசிரியைகள் சென்றாலும், வே விடுப்புகளில் ஆசிரியர்கள் சென்றாலும் விடுப்பு இடங்களில், அது தனியா

9 எப்ரல் 11] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ளிக்கூடங்களானாலும் சரி அல்லது உள்ளாட்சித் துறைப் பள்ளிகளா லும் சரி, வேலைவாய்ப்பு அலுவலகத்தைக் கேட்காமலேயே உடனடியாக சிரியர்களை நியமிக்கின்ற ஒரு ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், ன்றையதினம் வேலையில்லாமல் இருக்கின்ற பல ஆசிரியர்களுக்கும் வேலை ாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட் ருக்கிறேன்.

அடுத்தபடியாக, மகப்பேறு விடுப்பைப் பொறுத்தவரை, ஆசிரியர் ளுக்கும் அரசு ஊழியர்களுக்கும் 3 மாதம் வழங்க வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கு இப்பொழுது 3 மாதம் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது. த்திய அரசு ஊழியர்களுக்கு மட்டும் அந்தச் சலுகை இருக்கிறது. மத்திய அரசில் பணியாற்றுபவர்களுக்கும் 10 மாதத்தில்தான் குழந்தை பிறக்கிறது. தமிழக அரசில் பணியாற்றுபவர்களுக்கும் 10 மாதத்தில்தான் குழந்தை பிறக்கிறது. ஆகவே, இதில் பாகுபாடு வேண்டாம். இந்தச் சலுகை தமிழ கத்திலும் கொடுக்கப்பட்டாக வேண்டும். தயவுசெய்து மாண்புமிகு அமைச்ச ரவர்கள் இதைப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொடக்கப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், உயர் நிலைப் பள்ளிகட்குள்ள எந்தவித வசதியும் தொடக்கப் பள்ளிகட்கு இல்லை. தலைமையாசிரியர், மொழியாசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர், எழுத்தர், அட்டெண்டர், பியூன், வாட்சுமேன், ஸ்வீப்பர், தோட்ட ஆசிரியர் இப்படி பலதரப்பட்ட பிரிவினரைக் கொண்ட வசதிகள் உயர்நிலைப் பள்ளிகட்கு உள்ளன. தொடக்கப் பள்ளிகளுக்கு இத்தனை வசதிகள் இல்லை. அங்கு பணியாற்றிக்கொண்டிருக்கிற ஆசிரியரேதான் எழுத்தர் வேலையையும், அட்டெண்டர் வேலையையும், பியூன் வேலையையும், இன்னும் அத்தனை வேலைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருப்பதால்தான், கல்வியின் தரம் உயரவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உயர்நிலைப் பள்ளிகட்குள்ள அத்தனை வசதி வாய்ப்புகளையும் தொடக்கப் பள்ளிகட்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பட்டதாரி ஆசிரியர்களுடைய பணியை எப்படி கன்பர்மேஷன் பண்ணி னார்களோ அதுமாதிரி 1—4—1970 அன்றும் அதற்குப் பின்னேயும் பணியி லமர்ந்த அத்தனை இடைநிலை ஆசிரியர்களையும், சிறப்பு ஆசிரியர்களையும், தமிழ் ஆசிரியர்களையும் கன்பர்மேஷன் பண்ண வேண்டும். பி.டி. படித்த நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஒரு 50 ரூபாயாவது வழங்க

லாம் அல்லது ஏனையோருக்குள்ள அந்த 15 ரூபாயாவது வழங்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்றே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, தனியாக பி.டி. படித்த ஆசிரியர்களுக்கு வழங்குவதுபோல், ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—4—1970-ல் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 702. அதற்குப் பிறகு 3—3—1973-க்குப்பின் 10(ஏ)(1) விதியின் கீழும், அரை மில்லியன் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய பணியை இதுவரை 'ரெகுலரைஸ்' செய்யவில்லை. அவர்களுடைய பணியை உடனடியாக 'ரெகுலரைஸ்' செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நடுநிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்... தமிழாசிரியர்களுக்கு அப்படிப் பட்ட வாய்ப்பு இப்பொழுது நடுநிலைப் பள்ளிகளில் தரப்பட்டிருக்கிறது. ஆனாலும் தலைமையாசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் செத்தால்தான் அல்லது புதிய பள்ளி தொடங்கினால்தான் அவர்களுக்கு அப்பொறுப்பு கிடைக்கும். மேலும், தமிழாசிரியர்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவும் வர வாய்ப்பளிக்க வேண்டும். அவர்களின் இரண்டாம் நிலை பணிக்காலத்தையும் முதல் நிலையோடு சேர்த்துக் கணக்கிட்டு தேர்வு நிலை வழங்க வேண்டும். அதேபோல இளநிலை பணிக்காலத்தையும் இடைநிலையோடு சேர்த்து இடைநிலை ஆசிரியர்கட்குத் தேர்வுநிலை வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக, சரவணன் என்கிற ஒரு தமிழ் ஆசிரியரை அவசர காலத்தில் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். முதல்வர் அவர்களிடம் நான் பொறுப்பேற்ற உடன் இந்த விஷயத்தைப்பற்றிச் சொன்னேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் கூட சொன்னேன். இதுநாள் வரை அந்தத் தமிழ் ஆசிரியருக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உடற் கல்வி ஆசிரியர்களை எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் நியமிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு 1—4—1975 முதல் தேர்வு நிலை வழங்குவது சரியல்ல. மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற தேதியிலிருந்து இவர்களுக்கும் வழங்க வேண்டும். இளநிலை ஆசிரியர்களுக்கும் முதுநிலை ஆசிரியர்களுக்கும் ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. அது நியாயமில்லை. கிரேடுக்குத் தகுந்த ஊதியம் தரக்கூடாதா? அப்படியே தர முடியாவிட்டாலும் கூட, ஒரு 50 ரூபாய் மாதந்தோறும் சிறப்பூதியமாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு (டிரஸ் அலவன்ஸ்) உடைப்படி அரசே தரவேண்டும்,

மார்க்கர்களை கடைநிலை ஊழியர்களாக்கி கடைநிலை ஊழியர்களுக்கு வழங்கப்படுவது மாதிரி ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஒரே தகுதியுடன், ஒரே வேலை பார்க்கும் இருநிலைப்பட்ட மண்டல உடற் கல்வி ஆய்வாளர்களை ஏன் ஒரே நிலையாக்கக் கூடாது என்பதுபற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாசிரியர்கள் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான ஊதியம் வழங்க வேண்டும். கிராப்ட் டீச்சர்களுக்குப் புதிய கிளாரிபிகேஷன் தந்து பி.வி.ஐ.க்கும் பொருந்தும் என விளக்கம் தந்து அவர்கட்கும் ஊதியக் குழு பரிந்துரையின்படி புது ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொறியியல் ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு 25 ரூபாய் சிறப்பூதியம் வழங்குவதுபோல் இவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தகுதியை உயர்த்திக் கொண்டவர்களுக்கு கட்டாயம் இன்செண்டிவ் வழங்க வேண்டும். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் அப்படியே வழிமொழிகிறேன். மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப தலைமையாசிரியர்களுக்குத் தனி ஊதியம் வழங்க வேண்டும். மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற அனைத்துத் தலைமையாசிரியர்களுமே கோடை விடுமுறையில் போவதில்லை. ஆகவே விடுமுறையில் போகாத தலைமையாசிரியர்களுடைய விடுப்பு நாட்களை ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பி.லிட். பட்டப் படிப்பு படித்த ஆசிரியர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். பி.லிட். படிப்பை அரசு அங்கீகரிக்க வேண்டும். பல்கலைக் கழகம் அங்கீகரித்துள்ளது. ஏனைய கல்லூரிகளில் பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி, ஊதியம் வழங்குவது போல் பி.லிட். பட்டப் படிப்புக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் யு.ஜி.சி. ஊதியம் வழங்க வேண்டும். மற்ற பிரிவினருக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 ஏப்ரல் 11

அடுத்தபடியாக, கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் போராட்டம் நடத்தியபோது, சில கோரிக்கைகளை வைத்திருந்தார்கள். உடன்பாடு ஏற்பட்டபோது, அரசு ஓராண்டு, ஈராண்டு 10(ஏ)(1)-ன் கீழ் பணியாற்றிக் கொண்டிருந்த 102 ஆசிரியர்களைப் பொறுத்தவரை, பணிப் பாதுகாப்புக்கு உறுதிமொழி கொடுத்தது. அந்த உறுதிமொழியை இதுவரை நிறைவேற்றவில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி ஆணை வெளியிட வேண்டுகிறேன். 1 ஆண்டு, 2 ஆண்டு அரசுக் கல்லூரிகளில் லீவ் வேக்கன்சிகளில் பணியாற்றிய 10(ஏ)(1)-ன் கீழ் பணி யாற்றிய அவர்களுக்கு புதிய அரசாணை வாழ்வளிக்கவில்லை. பி.எச்டி. படிக்கச் சென்றவர்களுடைய 110 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களில் இந்த 102 ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து அந்த இடங்கள் காலியாகத்தான் இருக்கும். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப் பளிக்கலாம். அரசு ஒப்புக்கொண்டவாறு அனைத்து அரசாணைகளும் உடனடியாக வெளியிடப்பட வேண்டும். தனியார் கல்லூரிகளில் பாடப்பிரிவு மூடப்படுவதாலோ, மாணவர் வருகைக் குறைவாலோ, புதிய கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதாலோ வேலைப் பாதுகாப்பு பாதிக்கப்பட மாட் டாது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 3—3—1979 அன்று சட்ட மன்றப் பேரவையிலும் பின்னர் இவ்வவையிலும் தந்த உறுதிமொழி இதுவரை அரசாணை வடிவில் வெளியிடப்பட்டு பாதுகாக்கப்படவில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் சினியர் மெக்கானிக் ஆசிரியர்களுக்கு தொழில் கல்வி தகுதிக்கேற்ற ஊதியம் தர வேண்டும். வேலையில்லாத ஆசிரியர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். இன்றையதினம் நர்சரி பள்ளிகளை வியாபார நோக்கில், பிஸினஸ் ரீதியாக நடத்துகிறார்கள். அவர்களுக்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. தொடக்கத்தில் கூரை போட்ட கட்டடத்தில் ஆரம்பிக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று வருடங்களில் மாடிக் கட்டடத்தில் நடத்துகிறார்கள். நர்சரி பள்ளிகளை அரசின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து பயிற்சி பெற்று வேலையில்லாமலிருக்கின்ற ஆசிரி யர்களை அந்தப் பள்ளிகளில் நியமிக்க வேண்டும். அரசுப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு உள்ள ஊதியத்தை நர்சரி பள்ளிகளில் பணிபுரிய முன் வரும் ஆசிரியர்களுக்கும் அளித்தால், நிச்சயமாக இப்பொழுது வேலையில் லாமல் இருக்கின்ற அனைவருக்கும் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டாகும். ஆசிரியர் மாணவர் விகிதத்தைக் குறைக்க வேண்டும். பயிற்சிப் பள்ளிகளை இன்னும் கொஞ்சம் குறைத்தால், மூடினால் கூட நல்லது. இப்பொழுது 30 வருடம் பணி புரிந்தால் விருப்ப ஓய்வில் செல்லலாம். அதை 15 வருடங்கள் என்று ஆக்கினால் பலர் விருப்ப ஓய்வில் செல்வார்கள். அப்படி அவர்கள் வீட்டுக்குப் போய்விடுவதனால் ஏற்படும் காலியிடங்களில் வேலையில்லாம லிருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும். 15 ஆண்டுகளில் விருப்ப ஓய்வில் செல்பவர்களுக்கு எல்லாச் சலுகைகளையும் அளித்து கையில் ரூபாய் 5,000-ம் அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் இன்றைக்குப் பணியில் இருப்பவர்களில் பாதிப் பேர் வீட்டுக்குப் போய்விடுவார்கள். இதையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 11] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அடுத்தபடியாக, 10 பிளஸ் 1-ன் படி 10 ஆசிரியர்கள் இருந்தால், எக்ஸ்டி ராவாக 1 ஆசிரியர் கூட பணியாற்ற வாய்ப்பு கொடுத்திருந்தார்கள். இப்போது அந்தத் திட்டம் இல்லை. அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன் .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒரு உறுப்பினர் பேசுவதற்காவது உறுப்பினர் அவர்கள் காலம் கொடுக்க வேண்டும். சுருக்கமாகப் பேசி விரைவில் முடிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அடுத்தபடியாக, தனியார் கல்லூரி கன்டின் ஜென்ட் ஊழியர்கட்கு அரசின் கடைநிலை ஊழியர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படும் என்று 29—3—1979 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளார்கள். அரசாங் கத்தில் கடைநிலை ஊழியர்கள் பெறுகின்ற ஊதியம், விடுப்பு, நலநிதி, ஓய் வூதியச் சலுகைகள் இன்னும் அனைத்துச் சலுகைகளும் தனியார் தொடக்கப் பள்ளி உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் கன்டின்ஜென்ட் ஊழியர் களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் இன்னும் பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் விரைவில் பேசி முடிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி, என்னுடைய உரையை முடித்து விடுகிறேன்.

அரசாங்கம் எவ்வளவுதான் உத்தரவிட்டாலும், அதைக் கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் சரியாகச் செயல்படுத்துவதில்லை. இன்றைக்கு இருக்கின்ற கல்வித் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, செயலாளராக இருந்தாலும் சரி, இயக்குநராக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டுமென்று துடிப்பாக இருக்கிறார்கள். ஆசிரியர்களை மதிக்க வேண்டு

மென்று கருதுகிறார்கள். புதிதாக கல்வித் துறைக்கு வந்திருக்கக்கூடிய செயலாளர் அவர்கள் கூட விரைந்து முடிவுகளை எடுக்ககூடியவர். ஆனால் கீழ்மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார்" என்கிற நிலைமையில் நடந்துகொள்கிறார்கள். அடாவடித்தனமாக, மிகக் கேவலமான முறையில் ஆசிரியர்களை நடத்துகிறார்கள். மாயூரத்தில் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருக்கிறார். அவர் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார். ஆசிரியரை பார்த்து, "உன் மகன் என்ன செய்கிறான்?" என்று கேட்கிறார். ஆசிரியர் பி.எ. படிப்பதாகச் சொல்கிறார். உடனே அவர் "உனக்கு உன்னுடைய மகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவே நேரம் சரியாக இருக்கும்" என்று சொல்கிறார். அதுமாதிரி யாராவது ஆசிரியருடைய மகன் சரியாகப் படிக்கவில்லையென்று சொன்னால், உடனே அவர் "உன் பிள்ளையே சரியாகப் படிக்கவில்லை, ஊர்ப் பிள்ளையை எங்கே சரியாகப் படிக்க வைக்கப் போகிறாய்?" என்று கேட்கிறார். இதுபோல் ஆசிரியர்களை வேண்டுமென்றே கேவலமாகப் பேசக்கூடிய பல அதிகாரிகள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கத்தின் மேல் மட்டத்திலிருந்து போடுகின்ற ஆணைகளைச் சரிவர நிறைவேற்றாத பல அதிகாரிகள் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் வேதனையுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு இன்றையதினம் பணிப் பளு மிகுதியாக இருக்கிறது. அவர்களுக்கும் பிரதிநிதி நான்தான். அவர்களுக்காகவும் சில சொல்லி முடிக்கிறேன். மாவட்டக் கல்வி அலுவலகங்களில் இருக்கும் பணியாளர்கள் (ஸ்டாஃப்) பழைய அளவிலேயே, முன்பு எவ்வளவு பேர் இருந்தார்களோ அவ்வளவு பேர்கள்தான் இப்போதும் இருக்கிறார்கள். ஆகவே, தற்போது அங்கே வேலை ஒன்றும் நடைபெறுவதில்லை. அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் சர்வீஸ் புத்தகத்தைச் சரி பார்த்தல், சம்பள பில் தயார் செய்தல் மற்றும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளும் முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து மாவட்டக் கல்வி அலுவலருக்கு இன்றையதினம் மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு உள்ள ஊதியம்தான் அவருக்கு வழங்கப்படுகிறது. அவருக்கு தற்போது இருக்கும் ஊதியத்தோடு ஒரு 50 ரூபாய் சிறப்பூதியம் சேர்த்து அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் இப்படிப்பட்ட பல்வேறுவிதமான கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். எந்தவிதமான பலனும் இன்னும் ஏற்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைகள் மீது நல்ல முடிவை

எடுக்க வேண்டும். நான் ஆசிரியர்களிடத்திலே உறுதிமொழி அளித்திருக்கிறேன், எப்படியும் வாதாடி வெற்றி பெறுவோம் என்று. நான் என் உறுதிமொழியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். நான் ரொம்ப ப்ளெயினாக நடந்துகொள்பவன். ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்காக வேறு வழியின்றி நான் வெளிநடப்புச் செய்யும்போது நீங்கள் கோபப்பட்டுப் பயனில்லை, அவைகளை நிறைவேற்றித் தரவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவரும் காப்பாற்ற வேண்டும், நானும் காப்பாற்ற வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இந்த அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கு நிறைவாகச் செய்தார்கள் என்று நாங்கள் சொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் காலாகாலத்திற்கும் அவர்தான் இந்த நாட்டின் கல்வியமைச்சர். அந்த வகையிலே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவற்றைச் செய்து, இன்று மாலை 8 மணிக்குள்ளே பரிசீலித்து நல்ல அறிவிப்பைச் செய்து, நாங்கள் போராட்டம் பற்றி இன்று கூட்டியுள்ள எங்கள் செயற்குழுவிலே நன்றித் தீர்மானம் போடவேண்டிய அளவிலே கோரிக்கைகளை நிறைவேற்றித் தாருங்கள் என்று 2½ லட்சம் ஆசிரியர்கள் சார்பிலே கேட்டு அமைகிறேன்.

*THIRU D. V. D'MONTE: Hon. Deputy Chairman, Sir, the old proverb "All work and no play makes Jack a dull boy" is very pertinent in the educational system today. I do not intend to expatiate on the thousands of dull boys to whom education means boredom, long hours of home-work and dreary strait-jacket routine. Neither do I intend to cover the problems of all the dull Jacks and Jills who are the drop-outs, who are unemployed, who are unemployable and who become a drag on society. Nor do I intend to refer to all the dull students who find themselves ill-equipped and unwanted because of the rigidity of our educational system. Suffice it to say, Sir, there is a greater need for attention to the quality of education that has to be given to our students today in our State. It is beautifully summed up by our Vice-President who pertinently stated that it is through education that the quality of individual human life can be refined and improved.

My main pturpose in referring ta this proverb is to focus attention on the greater need for physical educotion. I have had occasion in the past to stress the need for improving physical education in the State and the great benefits derived. I make only a passing reference now to a few points which have not been

[Thiru D. V. D' Monte] *[1979 ஏப்ரல் 11*

covered. Physical education lays the very foundation for healthy living. In a country like ours, there is need for taking care of the body, and need for building up resistance against disease.

Sir, physical education helps the young to achieve the common objectives of maintaining health, fitness, respect and service. It also develops a sense of loyalty and promotes a feeling of team spirit. In the mtatter of securing jobs, it is the sportsman, like a good hockey-player or football-player, who has an edge over his counterparts in obtainintg a job. Many employers prefer sportsmen for employment. After all, for a sportsman, the policy of give-and-take, enthusiasm, determination and many other sportsmanlike qualities stand him in very good stead for jobs. Good physical education and sports keep our young people away from mischief. This is another very important aspect of physical education.

Sir, what I have mentioned already would lead me on to a more important aspect of sports and games. There is no doubt that sports and games have come down the drain in our country and for that matter the State of Tamil Nadu must also share responsibility for the gloomy situation. A paltry sum of Rs. 29 lakhs is provided for sports and games. While this sum represents an improvement on what was obtainable in the past years, I feel that little or nothing can be achieved with this amount. At one time, we could boast of a galaxy of athletes, hockey-players and football-players. What is the position today? If we take our national game of hockey, a few years ago we used to have four or five boys of Tamil Nadu in the national team. Today, we can boast of only one solitary player. This is generally the gloomy picture so far as sports and games are concerned and I would like to pinpoint the responsibility of the State. Unless more playing-fields and more amenities are provided, we are going to fare even worse in the years to come. If our schools and colleges do no produce athletes and sportsmen, how can a poor country like tours replace the ageing athletes and sportsmen? It is this indifferent attitude towards sports and games which would reflect in the calibre of sportsmen we get to represent the country.

1979 ஏப்ரல் 11] [Thiru D.V. D' Monte]

Sir, I have had occasion in the past to speak about the poor quality of the playing-fields. You have to see the playing-fields to believe the situation. Many playing-fields in important places are clogged with grass and the cricket-pitches are ntever rolled. There are little or no opportunities for hockey, our national game. Even in our City of Madras, we have just one stadium to cater to hockey all the year round. This is the gloomy picture so far as playing-fields are concerned. I would like further to say that so far as sports goods are concerned, generally they have been sub-standard and inadequate. Therefore, I would like to make the point that the time is now ripe for us to have a separate Ministry for Sports and Games. I think that this is the opportune time because of the serious situation that has developed in the State which is going to fare even worse in future. I am aware that many of our Hon. Ministers are themselves sportsmen and are keenly interested in games. I happen to be interested in the national game of hockey and I have rarely missed the Hon. the Minister for Labour who is invariably thtere at every hockey-match. I am sure that he is there for other sports and games as well. I am happy to find that our Hon. Ministers have been able to make sizable contributions besides giving technical advice for the development of sports and games.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும் வரை இந்த அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

THIRU D. V. D'MONTE: So, I would like to take this occasion to plead for a special Ministry for Sports and Games to be established. I would like to see that the provision of Rs. 29 lakhs that has been atllotted is at least trebled when we consider this subject next year.

(பிற்பகல் 4-00)

I would like to make a passing reference to the Consultative Committee on education. I welcome the formation of the Committee which, I am sure, will relieve the Hon. Minister from a lot of drudgery and day-to-day issues which have been cropping up in the past and which, I think, will be adequately dealt with by the Committee. I have a suggestion to make, so far as Anglo-Indian Schools are concerned. I do not know whether any repre-

sentative of the Anglo-Indian community is on this Committee. I would request the Hon. Minister to ensure that at least one of the two Anglo-Indian members of the Legislature is made a member of the Committee.

In passing I would like to make a reference to the new programme of open class-room which is now adopted in some of our Cities, particularly in Bombay. There is a feeling that the conventional method of education is at a dead end. A new method of teaching, a revamping of the out-tdated courses, the training of teachers have progressed slowly and because of the bureaucratic hurdles, many of the progammes are implemented after a whole batch of students have graduated. Many of the students find themselves ill-equipped and unwanted, facing a stringent job market, armed with certificates which are of paper value only. To improve the system and to bridge the gap between what we have to learn and what we would like to learn, the Sofia College of Bombay have launched a programme called Open Class-room. There are subjects like Creative Theatre, Comparative Education in Indian Cinema, Folk Music, Short Stories, etc., and these subjects are taught by a battery of lecturers who are proficient in their field These open class-rooms make the students have in-depth study and the students are in small batches in order to facilitate personalised attention. The atmosphere is congenial, the students studying only the subject they like and only if they are genuinely interested. Tris is by no means a revolutionary method of teaching but it is widely prevalent and I make this suggestion for what it is worth. It is popular in Bombay and I think it will provide enough encouragement to other educational institutions particularly in Tamil Nadu, to create similar courses.

On the subject of moral instruction, I have a point to make. I feel that there is need for incorporating instruction in the curriculum which will help the students in a big way. The present syllabi in our educational institutions have become so heavy that the finishing of portions has become the supreme goal and this proceeds from two factors. In the first place, we want to make our students Einsteins and Darwins overnight, before teaching them how to become good model and useful citizens. Secondly education today is one of the major industries in our

country resulting in vested interests and with the consequent creation of ever-expanding market, without any relation to social or moral needs. Moral instruction need not take the form of sermonizing. The teacher can devote a few minutes of his time to separate periods for this purpose. A great thought can be the starting point and a lively discussion can be initiated. These are aspects of moral instruction that could be covered and which would be of great use of our youngsters.

Sir, I have one more point to make. I would like to underline the point that was made a few days ago by the hon. Member Thirumathi Mandakini Krishnamoorthi about education amongst girls which continues to be backward. I feel that steps must be taken to bridge the gap that exists between the education of boys and that of girls. It is a recognised fact that there is some sort of disparity between boys and girls in the matter of education. This is largely due to proverty. Parents do not like to send their girls to school. Even in middle-class families, the same attention as employed in sending the boys to school is not equally extended to the girls. In order to establish a climate for eliminating illiteracy among women and bringing them at least on a par with men, greater incentives should be offered to girls to attend schools. I feel that justice can be done to girls' education by even establishing a separate Directoarte for Girls' education. The number of secondary schools for girls must be increased. There is need for greater hostel accommodation and this will certainly give a fillip to highter education among girls. I also plead for an increase in the number of scholarships. Men teachers should not be posted in Girls' High Schools. Sir, these are some of the pionts that come to my mind in the matter of promoting girls' education in our State.

Thank you.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-05)

(பிற்பகல் 4-00)

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீதான விவாதம். திரு. சி. இராமலிங்கம்.

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து தகவல் கோரல்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருந்தேன். அது என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஒரு நாளைக்கு ஒரு முறைதான் எடுத்துக்கொள்ளப்படும். ஏற்கெனவே காலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன. ஆகவே மற்றவைபற்றி திங்கட்கிழமையன்று ஆராயப்படும்.

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பேசுகிற உறுப்பினர்கள் 15 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு கல்விக்காக புரட்சித் தலைவருடைய அரசு அதிக அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை வகுத்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். மொழி வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சிறு வயது முதற்கொண்டே பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை வரவேற்றிருக்கிறோம். அதை மேலும் நல்ல முறையிலே அமுல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து, அதில் பெரும்பாலான தொகையை ஆசிரியர்களின் ஊதியமாகக் கொடுத்து, அவர்களை அரசு போஷித்து வருகிறது. ஏழைகள், நிலமற்ற விவசாயிகளின் பிள்ளைகள், காலையிலும் மாலையிலும் கழனிக்குச் சென்று தந்தைக்குக்

கஞ்சி கொடுத்துவிட்டு வருகிறார்கள். அதைப்போலவே நெசவாளர்களின் பிள்ளைகள் நாள் முழுவதும் நூல் சுற்றுவது, தறி நெய்வது போன்ற வேலைகளில் ஈடுபடுகிறார்கள். ஆகவே இவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் எப்படி உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்து நல்ல மார்க்குகளை வாங்க முடியும்? மாலை நேரங்களிலும் அவர்களால் டியூஷன் வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே அவர்களுடைய கல்வித் தரம் உயர்ந்த நிலைக்கு வர முடியாது. அவர்கள் உயர்ந்த மதிப்பெண் வாங்காமல் குறைந்த மதிப்பெண் வாங்கி பாஸ் செய்கிறார்கள். குறைந்த மதிப்பெண் வாங்குவதால் அவர்களுக்குக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை. உயர்ந்த மதிப்பெண் உள்ளவர்களுக்குத்தான் கல்லூரிகளில் இடம் கொடுக்கப்படுகிறது. அந்த முறையைச் சற்றுத் தளர்த்தி, நிலமற்ற விவசாயிகளின் பிள்ளைகளும், உழைப்பாளர்களின் பிள்ளைகளும், கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளும், வாய்ப்பற்ற பெற்றோர்களின் பிள்ளைகளும் அதிக மதிப்பெண் வாங்க முடியாத காரணத்தால், அவர்கள் பாஸ் மார்க் வாங்கினாலே போதும் என்ற அளவுக்கு ஒரு சலுகையைக் கொடுத்து அவர்களையும் கல்லூரிகளிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மொழி வளர்ச்சிபற்றிப் பேச விரும்புகிறேன். இதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்கூட பேசினார்கள். சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காக நிறையப் பணம் செலவு செய்து, ஆங்காங்கே பிரச்சார சாதனங்களை வைத்து, அதை அபிவிருத்தி செய்வதும், கல்லூரிப் பண்டிதர்களுக்குச் சலுகை கொடுப்பதுமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். தமிழை மட்டும் ஏன் அப்படி எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அவரே கேட்டிருந்தார்கள். ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால், சிரமமாக இருக்கிறது. குறிப்பாக நெல்லூரில் ஐம்பதாயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். திருப்பதியில் ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள்; விஜயவாடாவில் தமிழர்கள் இருக்கிறார்கள்; விஜயநகரத்திலேயும் தமிழர்கள் இருக்கிறார்கள்; கடப்பா, கர்நூல் ஆகிய இடங்களிலும் தமிழர்கள் இருக்கிறார்கள்; அவர்களெல்லாம் தமிழ் படிக்க வேண்டுமென்றால், அதற்கு எந்தவித வசதியும் இல்லை; வாய்ப்புமில்லை. தனியாக அவர்கள் பள்ளிகளை வைத்துக்கொண்டாலும், ஆசிரியர்கள் பஞ்சம் இருக்கிறது. நம் மாநிலத்து எல்லையோரத்தில் இருக்கக்கூடிய சித்தூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு தமிழ் வகுப்பு இருக்கிறது. ஆனால் தமிழ் வகுப்பை நடத்துவதற்குத் தேவையான ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. ஆகவே அதைக் குறித்து தமிழக அரசும், ஆந்திர அரசும் கலந்து பேசி பரிவர்த்தனை செய்து கொள்ளலாம்.

வெளிநாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்கள் கூட குறைபடுகிறார்கள். தங்களுக்குத் தமிழைக் கற்றுக் கொடுக்கத் தேவையான தமிழாசிரியர்கள் கிடைக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். இதற்கு முன்னால் இருந்த தமிழக சர்க்காருக்கு இது குறித்து எழுதியிருக்கிறார்கள். ஆனால் இங்கிருந்து ஆசிரியர்களை அனுப்ப வழியில்லாமல் இருக்கிறது. இங்கிருந்து அனுப்புகிறார்களா, இல்லையா என்ற தகுந்த பதில் கூட வரவேயில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொள்ளுகிறார்கள். ஆகவே அந்தக் குறையைப் போக்க வேண்டும். மொரிஷியஸ் நாட்டிலேயும் தமிழர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு சென்றபோது, தமிழாசிரியர்கள் அங்கு வந்து போதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது. ஆகவே கூடுதலாக தொகையை ஒதுக்கி, இந்தி பிரச்சார சபாவை உலகம் முழுவதும் நடத்துவதைப் போல, நாமும் தமிழை உலகம் முழுவதிலும் பரப்ப வேண்டும். அப்படி உலகம் முழுவதும் தமிழை வளர்த்து, உலகம் முழுவதற்கும் தமிழுக்கு இத்தனை பிரிவுகள் இருக்கின்றன என்று தெரிந்தால், தமிழையும் மத்திய அரசும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளுகிற நல்லெண்ணம் வரும்.

தமிழைக் கற்றுணர்ந்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தமிழ் படித்த வித்துவான்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தலைமையாசிரியர் பொறுப்பு இதுவரையில் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் தலைமையாசிரியர் பொறுப்பு கொடுக்கப்படுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எம்.ஏ. (ஆங்கிலம்) படித்தவர்களுக்குக் கொடுப்பதைப்போல, தமிழ் கற்ற வித்துவான்களுக்கும் தலைமையாசிரியர் பொறுப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு, கடந்த ஆண்டுகளைவிட நிறைய நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதை முறையாகச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், நிறைய பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் இல்லை. பள்ளிக் கட்டிடங்களைக் கட்டும் வேலைக்காக டெண்டர் விட்டால், டெண்டரில் எடுத்துக் கட்டுபவர்கள் சரியாகக் கட்டுகிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. கட்டிடங்கள் ஐந்தாண்டு, பத்தாண்டுக்குக் கூட இருக்குமா அல்லது இடிந்து விழுந்து விடுமா என்ற அளவுக்கு இருக்கின்றன. பள்ளிக் கட்டிடங்களின் மேல் கூரைகளுக்கு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளைப் போடுகிறார்கள். அது அனலாக இருக்கிறது. அதன் கீழே உட்கார்ந்து படிக்கிற பிள்ளைகளுக்குக் கட்டி, சிரங்கு போன்றவைகள் வருகின்றன. அதற்குப் பதிலாக வைக்கோலைப் போடலாம். மேலும் Zcin

ஷீட்டுகளையும், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளையும் போடக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அது இல்லாமல் நல்ல கட்டிடங்களாகக் கட்டுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். இந்தக் கட்டிடங்கள் கட்டுவதை பி.டபிள்யு.டி. இலாகாவின் பொறுப்பில் விடவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களிடமும் கொடுப்பதைவிட அந்தத் துறைக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கலாம். பி.டபிள்யு.டி. இலாகாவே அந்தக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இங்கு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக என் நன்றி கலந்த வணக்கத்தை அவைத் தலைவர் அவர்களுக்குக் கூறி என் உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை அளித்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பில் எப்போதும்போல வழக்கம்போல, சில புள்ளி விவரங்களைக் கொடுத்து, புதுமையான அம்சங்கள் இல்லாமல், ஆசிரியர்கள் எதிர்பார்த்தவைகள் இல்லாமல், இது நடைமுறையில் வழக்கமாகச் செய்யப்படுகின்ற காரியத்தைப்போல தயாரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் புதிதாகச் சொல்லப்படுவது மேல்நிலைக் கல்வி என்பதாகும். இந்தப் பிரச்சினையைப்பற்றி நாம் இரண்டு ஆண்டுக் காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கல்விக் கொள்கைக் குறிப்பில் உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைக் கல்வி என்று ஏன் கொண்டு வந்திருக்கிறோம் என்பதுபற்றித் தெளிவான ஆதாரங்களைத் தந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அறிக்கையை இந்த அளவுக்குத் தெளிவாக, திறமையாகக் கொடுக்கக்கூடிய கல்வித் துறையை நாம் இங்கே பெற்றிருக்கிறோம். பல அறிக்கைகளையெல்லாம் ஆராய்ந்து, சிபாரிசுகளைச் செய்திருக்கின்ற கல்வித் துறையை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இதைப்பற்றியும் சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். இதில் சில குறைகள் இருந்தாலும், நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் கிராமப்புற மக்களுக்குப் பயன்படுகின்ற அளவில் இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, அதை நான் பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன். பல்வேறு அறிக்கைகள் தமிழ்நாட்டில் கல்வித் துறைக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய நாட்டில், கல்வியைப் பொறுத்த அளவில், நல்ல ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். பெரிய அயல் நாட்டு நிபுணர்கள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிபுணர்களுடைய கருத்துக்களையும் பெற்று கோத்தாரி கல்விக் கமிஷனுடைய

அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற சிபாரிசுகளை மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஒரு குறிப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. கோத்தாரி கல்விக் குழுவினுடைய பரிந்துரைகளில் இருக்கின்ற அம்சங்களை நிறைவேற்றினால், தொடக்கப் பள்ளிக் கல்வி செழிப்பாக இருக்கும். ஒரு நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக, அந்த நாட்டின் ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். ஆரம்பக் கல்வியில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என்று மூன்று பிரிவினர்கள் இருக்கிறார்கள். இளநிலை ஆசிரியர்களுக்கு ஒரு குறுகிய காலப் பயிற்சி கொடுத்து, அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக இந்திய நாடு எங்கும் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமான சிபாரிசு இருக்கிறது. இந்தச் சிபாரிசுகளை இரண்டாவது ஊதியக் குழுவும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இளநிலை ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி கொடுத்து, அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக மாற்றப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. தமிழ் நாடு அரசு நியமித்த ஊதிய ஆணைக் குழுகூட அதைப் பரிந்துரைத்திருக்கிறது. அந்த ஊதியக் குழு பரிந்துரைத்த அந்த உத்தாவைக்கூட, கல்வித் துறை அமுலாக்கத் தவறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு அந்தப் பரிந்துரைகள் பரிசீலிக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தருவதற்குக் கூட இந்த அரசு பின் வாங்கியிருக்கிறது என்பதைக் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நாட்டில் கல்வியின் தரம் உயர வேண்டுமென்றால், கல்வித் துறை அந்தச் சிபாரிசுகளையெல்லாம் அமுல்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'கோத்தாரி கமிஷன் சிபாரிசுகளை அரசு அமுல்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது. ஆரம்ப நிலை ஆசிரியர்களின் நிலை வளர்ச்சியடையாமல், கல்வி வளர்ச்சிக்கு என்று மேலும் மேலும் பல கோடி ரூபாய்களைச் செலவழித்தாலும், இந்த நாட்டில் கல்வி வளர்ச்சி சரியான அளவிலே இருக்க முடியுமா என்பதைப்பற்றிக் கல்வி அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த அமைச்சரவை கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்காகத் திட்டம் தீட்டுகின்றது. தேர்தல் காலத்திலேயும் மக்களுக்கு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். கிராமங்களில் சாதாரணமாகப் படித்திருக்கக்கூடிய, அங்கே சொல்லித்தரக்கூடிய அளவுக்கு இளநிலை ஆசிரியர்கள் இல்லையென்று சொல்வது தர்மமல்ல.

கல்வி அமைச்சர் அவர்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்பு பேசும்போது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் ஒரு கோரிக்கையை வைத்தது. இப்போது இருக்கக்கூடிய மேல்நிலைக் கல்வித் திட்டத்தில், பி.டி. ஆசிரியர்களை, பி.ஏ., பி.டி., பி.எஸ்சி., பி.டி. அக

இருக்கக்கூடியவர்களையும் மேல்படிப்பு, அதாவது எம்.ஏ. போன்ற கல்வித் தரம் இல்லாதவர்களையும் தற்போது போட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நாங்களும் சிபாரிசு செய்தோம். இந்த நிலையில் கல்வி அமைச்சர் அவர்களும் ஒரு பதில் அளித்தார்கள். இங்கே இருக்கக்கூடிய பி.ஏ., பி.டி. படித்தவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்து, அவர்களை முதுகலைப் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக ஆக்குவது குறித்து அரசு பரிசிலிக்கும் என்று இந்த அவையிலே சொன்னார்கள். இது ஏற்கெனவே ஆணைக் குழுவால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இங்கே பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று சொல்லியது நிறைவேற்றப்பட வேண்டும். தமிழகத்திலே 64,000 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும், செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் சுமார் 40 ஆயிரம் பேர்களுக்கு மேலேயும் இருந்துகொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் மேல் நிலைக் கல்வித் திட்டம் வர இருக்கிறது என்று சொல்கிறார்கள். 10, 15 ஆண்டுகள் ஹையர் கிரேட், செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் கவலைப்படுத்தக்கூடிய முறையிலேதான் சம்பள விகிதமும் இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்களுடைய தேர்வுநிலை சம்பளமும் தலைமையாசிரியர்களுடைய சம்பளமும் மாறியிருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுடைய சம்பளம், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுடைய சம்பளம் இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. ரூபாய் 25 குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நிமிர்ந்து நடக்க முடியவில்லை. வாழ்க்கையில் அடித்தளத்தில் இருப்பவர்களைக் கொஞ்சம் மேலே தூக்கிவிட வேண்டும். அரசு தன் பார்வையை இவர்கள் பக்கம் திருப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இளநிலை ஆசிரியர்களைப் பொறுத்து, கல்வித் துறையின் கொள்கை என்ன என்பதைப்பற்றி நமது கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்குத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி 'ஒன்றுமில்லை' என்றால்கூட, அதைச் சொல்லிவிடட்டும். நாங்களாவது அதை விட்டுவிடுகிறோம். இங்கே அதற்கு ஒரு பதில் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. நம் நாடு சுதந்திரம் அடைந்து 31 ஆண்டுகள் ஆகின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக வந்த பின்னர்தான், தனியார் பள்ளிகளுக்கு அரசுப் பள்ளிகளுக்குச் சலுகைகளை வழங்குவதுபோல் வழங்கலாம் என்று சொல்லியிருந்தார்கள்.

ஆனால் இந்தக் கொள்கையை ஏற்று கல்வித் துறையிலே இருப்பவர்கள் நீதி வழங்கவில்லை. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கண்ணாடி போட்டுக் கொள்வதற்கு சலுகையில்லை. அவர்களுக்குக் கண்ணாடி வாங்கிக்கொள்ள கடன் சலுகைகூட இல்லை. ஆனால் அரசுப் பள்ளியில் உள்ளவர்களுக்கு அந்தச் சலுகை உண்டு. தனியார் பள்ளி ஆசிரியர்களின் மக்கள் கல்லூரிகளில் படிக்க கடன் சலுகை இல்லை. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் கடன் கொடுப்பது என்றால், அது என்ன நீதி என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலுள்ள ஆசிரியப் பெருமக்கள் பற்றியெல்லாம் புள்ளிவிவரங்கள் தந்திருக்கிறார்கள். 35 ஆயிரம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் 29 ஆயிரம் பேர் ஊராட்சி மன்றத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். இந்த 29 ஆயிரம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லாமல் இருப்பது என்ன தர்மம்? நிதித் துறையில் இதைப் பரிசீலிப்பதாகச் சொல்கிறார்கள். இந்த அமைச்சரவை, இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நானும் மந்திரிசபை கூடி இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்றுதான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இல்லாவிட்டாலும், கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவில், நியாயம் என்று ஒத்துக்கொண்ட பின்பும், நிதித் துறைதான் மேற்கொண்டு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டா இல்லையா? இந்த மந்திரிசபைக்கு ஒன்றுபட்ட நோக்கமில்லையா? இந்த மந்திரிசபை ஒன்றுபட்டு அளித்த பட்ஜெட்தானே இது, இந்த மந்திரி சபை வைத்துள்ள கல்விக் கொள்கைக் குறிப்புத்தானே இது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் பேசுகிறார்கள். நாமும் பேசுகிறோம். பேச்சுவார்த்தைகளிலும் சொல்கின்றார்கள். முடிவுகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு அமைச்சர் ஏற்றுக்கொள்கிறார். இன்னொரு அமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு காபினெட்டில் இப்படியெல்லாம் இருக்கலாமா என்பது போலப் பேசுவது சரியல்ல. அந்த மாதிரிப் பேசுகின்றதை மறுக்கின்ற நிலைமைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

திரு. செ. முத்துசாமி: அவைத் தலைவரவர்களே, அப்படி கல்வி அமைச்சரவர்களுக்குச் சங்கடமான நிலை உருவாகுமென்றால், அப்படிப்பட்ட சங்கடத்தை உருவாக்க நான் விரும்பவில்லை. எங்களுடைய

கோரிக்கை, எங்களுக்கு இருக்கும் சங்கடத்தை நீக்க வழி செய்யுங்கள் என்பதுதான். அதைக் கல்வி அமைச்சரவர்களிடம்தான் கேட்க முடியும். கல்வி அமைச்சரவர்களை வேண்டுகிறேன், நிதி அமைச்சரவர்களை வேண்டுகிறேன், முதல்வரவர்களை வேண்டுகிறேன், அமைச்சரவையை வேண்டுகிறேன். ஆசிரியப் பெருமக்களுக்கு அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதைப்பற்றிய அறிவிப்பை கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக எதிர்பார்த்தோம். சட்டமன்றப் பேரவையிலே ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. தினமணியில் 'பெரிய சலுகைகள்' என்ற தலைப்பில் செய்தி போட்டார்கள். மற்ற பத்திரிகைகளிலும் செய்திகள் போட்டார்கள். தினமணிப் பத்திரிகை சொல்லும் அளவிற்கு நாங்கள் உணர முடியாவிட்டாலும், இன்றைக்கும் நாங்கள் எதிர் பார்க்கிறோம். அதற்கான அரசாணைகள் வரவில்லை. அதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அரசு ஊழியர்களுக்குள்ள சலுகைகளை, தனியார் பள்ளி, நகராட்சிப் பள்ளி, பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரும் கொள்கை அரசிடம் இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அடுத்தாற்போல், ஆசிரியர்களுக்கு 20 ஆண்டுக்கால பணிக்குப் பிறகு சிறப்பு நிலை வேண்டுகிறோம். அதிலே எந்தவிதமான தவறுமில்லை. ஏற்கெனவே 10 ஆண்டுகளில் தேர்வு நிலையை அமுலாக்காமல் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. நகராட்சிப் பள்ளிகளில் அமுலாக்கவில்லை என்று சொன்னால், அமைச்சரவர்கள் அமுலாக்கப்பட்டதென்று சொல்கிறார்கள். எங்களுக்கு, அமுலாக்கப்படவில்லை என்று தாக்கீது வருகிறது. அதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றேன். கல்வித் துறைக்கு ஒரு ஆணை, உள்ளாட்சித் துறைக்கு ஒரு ஆணை என்று இருக்கிறது, இரண்டு அமைச்சர்களும் சேர்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தோம். இருந்தும், அந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜிநாமா செய்தாலோ, வேறு காரணத்தாலோ ஒரு நிர்வாகத்திலிருந்து, இன்னொரு நிர்வாகத்திற்கு வந்தால், பழைய ஊழியக் காலத்தையும் சேர்த்துக்கொண்டு, தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கல்வித் துறையில் சிறப்பாக ஆணை போடப்பட்டிருக்கிறது. கல்வித் துறையிலே பல்வேறு சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. நாங்கள் பின்னடைந்து இருந்த நேரத்திலே எங்களை முன் நோக்கிவிட்டார்கள். இன்றைக்குப் பின் நோக்கிச் செல்லும் காலம் வந்தபோது, பின் நோக்கி அனுப்ப வேண்டாமென்று அரசிடம் சொல்லுகிறோம். எனவே கல்வித் துறை உடனடியாக அவசர உணர்வோடு இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினரவர்கள் கடந்த 15 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மிக விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : விரும்பிய தேதியில் புதிய சம்பள விகிதத்திற்குச் செல்லும்போது 5 சதவிகித உயர்வு தர வேண்டுமென்று மூன்றாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி விரும்பிய தேதியில் சென்றால், 5 சதவிகித உயர்வு கிடையாதென்று சொல்லுகிறார்கள். இது என்ன தர்மம் இதைப்பற்றி விவாதித்துவிட்டோம். முடியாதென்று சொல்லுகிறார்கள். ஆனால் செயலகத்திலுள்ள பல்வேறு ஊழியர்களுக்கு 'இல்லஸ்டிரேஷன்' மூலம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நிதி அமைச்சரவர்கள் அப்போது கூறுகிறார்கள். நீங்கள் கேட்டுக்கொண்டே இருங்கள், நாங்கள் செய்துகொண்டே இருப்போமென்று சொல்லுகிறார்கள். நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆனால் அரசு ஒன்றும் செய்யவில்லை. இந்த நிலையிலே, காலம் கடக்கக் கடக்க, எங்களுடைய எண்ணங்கள்தான் அதிகமாகும். கேட்டுக்கொண்டே இருந்தால் எப்படி ? ஏதாவது தந்தால்தானே திருப்தி ஏற்பட முடியும். இன்றைக்கு 47 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றிக்கூட எழுப்ப வாய்ப்பை எதிர்பார்த்தேன். அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திலேயே, அதைப்பற்றி கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தீர்வு காண, கல்வி அமைச்சரவர்கள், எங்களை மாதம் ஒரு முறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது ஆண்டுக்கு ஒரு. முறை கூப்பிட்டுப் பேச வேண்டும். இந்த வருடத்திற்கு இவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது, இதிலே என்னென்ன பிரச்சினைகளைத் தீர்க்கலாம், எதை முதன்மைப்படுத்தி எதிர்பார்க்கிறீர்கள் என்பதைப்பற்றி எங்களைக் கூப்பிட்டு டிஸ்கஸ் செய்யுங்கள் என்றுதான் வேண்டுகிறேன். அதிகாரிகளைக் கூப்பிட்டு 'டிஸ்கஸ்' செய்கிறது அரசு. அவர்கள் திறமையானவர்கள்தான். அவர்கள் திறமையில் சந்தேகமில்லை. நாங்கள் திறமை குறைந்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஆசிரியர்கள் சார்பில் சங்கம் வைத்துள்ள எங்களைக் கூப்பிட்டுக் கேட்டால், எங்களுக்கும் திருப்தி ஏற்படும். அந்த அளவிற்குச் சங்கங்களைக் கூப்பிட்டுப் பேசக்கூடாதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் மேலவை உறுப்பினராக ஆனதற்குப் பிறகு, எத்தனை

தடவைகள் என்னைச் சந்தித்துப் பேசியிருப்பார்களென்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்து, அவைகளை மறுக்காமல் பேச வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. பேசாமல் எப்படி முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்? தவறான செய்திகளை ஆசிரியர்கள் மத்தியில் பரப்புவதால், அதன் மூலம் என்ன எதிர்பார்க்கிறார்கள்?

திரு. செ. முத்துசாமி : அமைச்சரவர்கள் வேகப்படுகிறார்கள். நான் வேதனைப்பட்டுத்தான் சொல்கிறேன். சங்க ரீதியாக இன்ன தேதிக்கு வாருங்களென்று அழைத்து, பிரச்சினைகளை 'டிஸ்கஸ்' செய்வோமென்று சொல்லக்கூடிய அளவிற்கு தகுதியில்லையா என்றுதான் கேட்கிறேன். சந்தர்ப்பம் வரும்போது, கல்வி அமைச்சரவர்களிடம் ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் செல்கிறோம், ஓராண்டுக்குரிய திட்டம் குறித்த முடிவுகளை எடுக்க எங்களுக்குத் தகுதி இல்லையா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்காகத்தான் 'கன்சல்டேடிவ் கமிட்டி' போட்டிருக்கிறோம். தாராளமாக, விரிவாக அங்கே பேசலாம். அதற்கான வாய்ப்புகளை நிறையத் தருகிறோம். வருடத்திற்கு ஒரு முறை கூடுவது என்பதை மேலும் அதிகமான முறைகள் ஆக்கலாமா என்பதுபற்றி அரசு யோசிக்கிறது.

திரு. செ. முத்துசாமி : கன்சல்டேடிவ் கமிட்டியில் எங்களைப் போன்றவர்களைப் போட்டதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதில் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் இல்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. அப்படிப்பட்ட பிரதிநிதித்துவத்தை சங்கங்களுக்குத் தர வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, பி.டி. ஆசிரியர்களாகவும், தமிழாசிரியர்களாகவும் தங்களைப் பதவி உயர்த்திக் கொண்டிருக்கிறவர்களை, நடுநிலைப் பள்ளித் தமிழாசிரியர்களாகப் போடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். எத்தனை நூறு அல்லது ஆயிரம் போஸ்டுகள் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் கேள்விக்குறி. இன்றைக்குள்ள எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் அதிகமான போஸ்டுகளை உருவாக்கினால்தான், பிரச்சினையைத் தீர்க்க முடியும். எனவே அதிகமான இடங்களை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கையை நான் வரவேற்கிறேன். தமிழாசிரியர்களை, நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் போடுவதைப் பாராட்டுகிறேன். ஆனால் நீண்டகாலமாக

[திரு. செ. முத்துசாமி] [1979 ஏப்ரல் 11

ஒரு கோரிக்கை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகத் தமிழாசிரியர்களைப் போட வேண்டுமென்று கோரி வருகிறார்கள். அந்தக் கோரிக்கையின் தன்மை என்ன ? அது குறித்து அரசின் கொள்கை என்ன ? அதை ஏற்றுக்கொள்கிறதா, இல்லையா ? தமிழாசிரியர்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாவதற்குத் தகுதியுடையவர்கள் என்று இந்த அரசு கருதுகிறதா, இல்லையா? தமிழுக்குச் சேவை செய்வதைக் கொள்கையாக அறிவித்துள்ள அரசு, நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை தலைமை ஆசிரியர்களாகப் போட அறிவிப்பு தந்த அரசு, உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களென்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்கள் அத்தனை பேருக்கும் எந்தவிதமான தனிச் சம்பளமும் இல்லை, அலவன்சும் இல்லை. இரண்டு ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளிலும் இல்லை. எங்களுடைய மாநாட்டிலே சொன்னேன். கல்வி அமைச்சரவர்கள் படித்த பள்ளியில் 45 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அந்தப் பள்ளி கோவையில், செல்வபுரம் தொடக்கப் பள்ளி என்று இருக்கிறது. அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியருக்குத் தனிச் சம்பளம் இல்லை, ஆனால் மூன்று ஆசிரியர்கள் உள்ள இடைநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு உயர்ந்த சம்பளம் இருக்கிறது, இந்தப் பாகுபாட்டைப் போக்க வேண்டுமென்று சொன்னேன். வினயமாக வேண்டுகோள் விடுத்து, கேட்டிருந்தோம். அதுபற்றி எந்தவிதப் பரிசீலனையும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றி அரசின் முடிவு என்ன என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 21 லட்சம் ரூபாய்தான் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் 17 லட்சம் ரூபாய் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும், 4 லட்சம் ரூபாய் தனியார் பள்ளிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதுமானதுதானா? மொத்தம் எவ்வளவு பள்ளிகள்? 33,000 தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றுக்குக் கட்டிடம் கட்ட 21 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறதென்றால், மரத்தடியிலும், மற்ற இடங்களிலும்தான் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கும் நிலை இருக்கும். அந்தப் பள்ளிகளுக்கு என்றைக்கு கட்டிடங்கள் வரப்போகின்றன? மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பத்து உறுப்பினர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆளுக்குப் 15 நிமிடங்கள் பேசினால், 2½ மணி நேரமாகும். அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் பேச வேண்டும். எனவே விரைவாக முடித்துக்கொள்ள வேண்டும். இன்னும் 5 நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

1979 ஏப்ரல் 11]

திரு. செ. முத்துசாமி : கல்வித் துறையை நான் பணிவோடு வேண்டுகிறேன். தமிழிலே அரசாணைகள் போடுவதற்கு அந்தத் துறையிலே அறிவாளிகள் இருக்கிறார்களா, இல்லையா? டாக்டர் பட்டம் பெற்ற இயக்குநர் பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சித் துறை தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. செயலகத்தில் பணி புரிபவர்களின் தாய்மொழி தமிழ்தான். தமிழிலே அரசாணை வெளியிட, இந்த அரசுக்கு என்ன தயக்கம், என்ன இடையூறு? சென்ற முறை கல்வி அமைச்சரவர்கள், அக்கவுன்டன்ட் ஜெனரல் அலுவலகத்தில் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு எங்களுடைய கோரிக்கைக்கு, தமிழுக்கு ஆதரவு தெரிவிக்கும் அளவிற்கு, அக்கவுன்டன்ட் ஜெனரல் அலுவலகம் எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையைத் தமிழில் கொடுத்திருக்கிறார்களென்று பேராசிரியர். அறிவழகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எனவே கல்வித் துறையிலே, தமிழிலே அரசாணை போடுவதில் என்ன சங்கடம்? அக்கவுன்டன்ட் ஜெனரல் அலுவலகத்திற்கு ஆங்கிலத்தில் அச்சடித்துக் கொடுங்கள், ஆட்சேபனை இல்லை. தமிழ் நாட்டிலே உள்ள தமிழ் மக்கள் படிக்க, தமிழிலே அரசாணை பிறப்பிக்காமல், தமிழுக்கு என்ன செய்கிறோம்? தமிழை ஆட்சி மொழி ஆக்கினோம். தமிழ் அறிஞர்களுக்குப் பட்டயங்கள் தந்திருக்கிறோம். இன்றைக்கு அவர்களுக்குப் பல்வேறு உதவித் தொகைகளைத் தருகிறோம். ஆனால் தமிழில் அரசாணை வரவில்லை. இது கேவலம் இல்லையா? இத்தனை ஆண்டுகளாக இப்படி இருப்பது தருமம்தானா ? கருணை உள்ளத்தோடு இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த முறை கல்வித் துறையிலிருந்து ஒரு அரசாணை பிறப்பித்தால், அது தமிழில்தான் வர வேண்டுமென்று கிட்டட்டமாக உத்தரவு இடுங்கள். அது மீறப்பட்டால், நாங்கள் துணை இருக்கிறோம். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஆசிரியர் சங்க மையம்

(பிற்பகல் 4-30)

பற்றிப் போடும் ஓர் உத்தரவு தமிழில் போடக்கூடாதா ? தமிழில் அரசாணைகள் போட்டால், அதில் சட்ட சிக்கல் வந்து விடுமா ? தமிழில் அரசாங்க உத்தரவுகளைப் போடாமலிருப்பது எந்த வகையில் நியாயம் ? எந்த உத்தரவையும் கல்வித் துறையிலிருந்து ஆங்கிலத்தில்தான் போடுகிறார்கள். ஆங்கில மோகம் உள்ளவர்களுக்கு வேண்டுமானால், உத்தரவை ஆங்கிலத்தில் கொடுங்கள். என்னைப் போன்று தமிழைப் படித்து வந்திருக்கக்கூடிய தமிழ் பற்றுள்ளவர்களுக்கு தயவுசெய்து உத்தரவுகளைத் தமிழில் கொடுங்கள். தமிழைப் பேசி, தமிழிலே கற்றுக் கொடுத்து அதன் மூலம் இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். தமிழிலே அரசாணைகளைப் போடுவதில் அரசாங்கத்திற்கு என்ன சட்டச் சிக்கல் இருக்கிறது? இவ்வளவு நீண்ட

காலமாக கல்வித் துறையிலிருந்து இப்படி உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்தி லேயே வந்துகொண்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. இது சம்பந்தமாக அரசின் முடிவு என்ன என்பதைத் திட்ட வட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டும். தமிழில் அரசாணைகளைப் போடுங்கள் என்று சொல்லி, அதற்காகத் தனியாக ஒரு போராட்டம் நடத்த வேண்டிய அளவுக்கு இதைப் பெரிய பிரச்சினை ஆக்காமல், இதில் தீவிரமாக கவனம் செலுத்தி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தமிழில் அரசா ணைகள் வெளிவர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 1-4-1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சம்பந்தமாக, தெளிவாக அரசாணைகள் போடப்பட்டு அவர்களுடைய நிலைமைகள் தெளிவாக்கப்படவில்லை. இதைப்பற்றிக் கேட்கும்போதெல்லாம் பரிசீலிப்பதாகச் சொல்கிறார்கள். செய்வோம் என்கிறார்கள். இதோ வந்து விடும், இதோ வந்துவிடும் என்கி றார்கள். ஆய்வில் இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இதுவரை அந்த உத்தரவு வெளியிடப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இடைநிலை ஆசிரியர்கள் மட்டும் இடையிலே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று தனி யாகவும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு என்று தனியாகவும் ஆசிரியர் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று மட்டும் சங்கம் கிடையாது. அவர்கள் மட்டும் உயர்நிலைப் பள்ளியில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உத்தியோகத்திற்கு வந்த நாளி லிருந்து அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படுவது பற்றிப் பரிசீ லிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்களே, அதை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரி யர்கள் எங்களைப் போன்ற ஆசிரியர் பிரதிநிதிகளுக்கு அவர்களுடைய பிரச் சினைகளை கார்டுகளில் எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ சிறு சிறு சலுகைகளை 1 இலட்சம் ஆசிரியர்களுக்கு அளிப்பதால், அரசுக்குச் சங்கடம் ஏதும் வந்து விடாது. ஒருசில இலட்சம் செலவு ஏற்படக்கூடிய சிறு சிறு சலுகைகளைக் கூடவா ஆசிரியர்களுக்காகச் செய்யக்கூடாது? ஹையர் கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்கி செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைக் கொடுப்பதால், ஒரு சில இலட்சம் ரூபாய் தான் செலவு ஏற்படும். ஆனால் அரசுத் தரப்பி லிருந்து அதைச் செயல்படுத்தினால், 7 கோடி ரூபாய் செலவாகும் என்று புள்ளிவிவரம் தந்தார்கள். நிச்சயமாக, திட்டவட்டமாக நான் சொல்கிறேன்,

7 கோடி ரூபாய் செலவு ஆகாது, அப்படிச் சொல்லப்படுகின்ற புள்ளிவிவரம் தவறான புள்ளிவிவரம். 50 சதவிகிதம் அல்லது 60 சதவிகிதம் பேர் ஏற் கெனவே செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைபற்றி எங்களையும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளையும் உட்கார வைத்துப் பேசுங்கள். நான் ஆதாரத் துடன் 7 கோடி ரூபாய் செலவு ஆகாது என்பதை நிரூபிக்கத் தயாராக இருக் கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பேச ஆரம்பித்து 25 நிமிடம் ஆகிவிட்டது. சுருக்கமாக விரைவில் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகி றேன். எங்களையும் அதிகாரிகளுடன் உட்கார வைத்து, ஒரு 6 மாதத் திற்கு ஒரு முறை அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு முறை ஆசிரியர்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று கேளுங்கள். அரசு ஊழியர் களுக்கு உள்ள அனைத்துச் சலுகைகளும் ஆசிரியர்களுக்கும் எப்.ஆர்.ன்படி உண்டா இல்லையா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிடுங்கள். இன் றைக்கு புதிதாக கல்வித் துறைக்கு வந்திருக்கக்கூடிய செயலாளர் அவர் களும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களும் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். கல்விச் செயலாளர் அவர்கள் பிரச்சினைகளை நல்ல முறையில் அணுகு கிறார். பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரே நாளில் நாங்கள் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்டபோது, ஒரு விதியை வகுத்துத் தந்திருக்கிறார். இப்படியெல்லாம் திறமையுள்ளவர்கள் இருந்தும் கூட, என் தடை ஏற்படு கிறது? இங்கே தான் தடையும் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாமல் இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கும் எப்.ஆர்.ன்படி எல்லாச் சலுகைகளும் உண்டு என்று உத்தரவிட வேண்டு மென்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, திருப்பூர் உயர்நிலைப் பள்ளியில் போதுமான மாணவர்கள் இருந்தும் கூட, இதுவரை தமிழ் ஆசிரியர்கள் போடப்பட வில்லை. திருப்பூர் நகரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் மட்டுமல்ல, திருப்பூர் நகராட்சிப் பள்ளியிலும் சரி, ஜவாபாய் உயர்நிலைப் பள்ளியிலும் சரி, வெள்ளையம்மாள் உயர்நிலைப் பள்ளியிலும் சரி, கே.எஸ்.சி. உயர்நிலைப் பள்ளியிலும் சரி, நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளியிலும் சரி, உரிய முறையில தமிழ் ஆசிரியர்கள் இதுவரை போடப்படவில்லை. அங்கு 4 அல்லது 5 ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக, பி.எப். கடன் கொடுக்கிறார்கள். தலைமை ஆசிரியரிடமிருந்து மறுபடியும் இன்னொரு ஆபீசுக்குச் சென்று அது அங்குள்ள எழுத்தரிடம் போய் சுலபத்தில் வருவதில்லை. ஆசிரியர்கள் எழுத்தரிடம் போய் நிற்கின்ற நிலை இருக்கிறது. பே டிராயிங் ஆபீசராக தலைமையாசிரியரைப் போட்ட பிறகு, பி.எப். கடன் ஒப்பளிப்பு செய்து வழங்குவதைப் பொறுத்தவரை மட்டும், அவருக்கு அந்த அதிகாரம் வழங்காமலிருப்பது நல்லதல்ல. அவர் பி.எப். கடன் வழங்குவதால், தவறு ஒன்றும் நடந்து விடாது. இன்றைக்கு டி.இ.ஓ. தலைமை ஆசிரியர் இருவருக்கும் ஒரே சம்பள விகிதம் தான். டி.இ.ஓ. அட்மினிஸ்ட்டிரேஷனைப் பார்ப்பதால், அவருக்கு அதற்காக ஏதோ தனியாக மாதந்தோறும் ஒரு 50 ரூபாயாவது கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்கிறேன். கொடுத்தால் வரவேற்பேன். டி.இ.ஓ.-வுக்கு வழங்கப்பட்டுள்ள அந்த அதிகாரத்தை தலைமை ஆசிரியருக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட ஒரு காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் தான். தலைமை ஆசிரியர் பதவி எவ்வளவு தூரம் பொறுப்பு வாய்ந்தது என்பதைப்பற்றி நன்றாக தெரிந்தவர் அவர்.

அடுத்தபடியாக, கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, எல்லா வழக்குகளும் வாபஸ் பெறப்படும் என்று சொன்னார்கள். பச்சையப்பன் கல்லூரி பெண்கள் கல்லூரி. அந்தக் கல்லூரியில் இருக்கக்கூடிய ஆசிரியைகள் ஏற்கெனவே சிறைப்பட்டு பிறகு பெயிலில் வந்தவர்கள். வழக்குகள் வித்டிரா செய்யப்பட்டன என்று சொன்னார்கள். ஆனால் எஸ்.பி. அவர்கள் அரசின் உத்தரவுப்படி வழக்குகளை வாபஸ் பெற முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசு போட்ட வழக்குகளை அரசே வாபஸ் வாங்கும். வேறு யாராவது தனிப்பட்ட முறையில் தப்பு தவறு செய்ததாக வழக்குப் போட்டிருந்தால், வழக்கைப் போட்டவர்கள் தான் வாபஸ் வாங்க வேண்டும். கோவையிலுள்ள பி.எஸ்.ஜி. கல்லூரியில் கூட, தனிப்பட்ட முறையில் அதுமாதிரிக் தவறு செய்தவர்கள் மீது கல்லூரியினுடைய முதல்வர் வழக்குப் போட்டார். பிறகு முதல்வருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில், அவர் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரைவேட் வழக்கு என்றால் வழக்கைப் போட்டவர்கள் தான் வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : எனக்குத் தெரிந்தவரை, இது அரசு போட்ட வழக்கு தான். இது அரசு போட்ட வழக்காயிருந்தால், அரசு கொடுத்துள்ள உறுதிமொழியின் அடிப்படையில் வாபஸ் வாங்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

கடைசியாக, 'சி' பிரிவையும் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஒரே ஒரு வார்த்தையைக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகையை வழங்குவதைப் பொறுத்தவரை, வருமான வரம்பை கொஞ்சம் நீக்க வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு விஷயம் நன்றாகத் தெரியும். பத்தாயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள் கூட 2 ஆயிரம் ரூபாய் வருமானம் என்று சான்றிதழ் வாங்கிக் கொண்டு சலுகைகளைப் பெற முயற்சிக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுடைய ஊதியச் சான்றிதழில் அவர்கள் வாங்குகின்ற அனைத்து ஊதியங்களும் சேர்க்கப்பட்டு விடுகின்றன. இதனால் உண்மையாக கல்வி சலுகை கிடைக்க வேண்டிய ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு அது கிடைப்பதில்லை. பேக்வார்ட் கம்யூனிட்டி, ஷெட்யூல்ட் கிளாஸ் போன்ற வகுப்பினருக்குக் கூட கிடைக்க வேண்டிய சலுகைகள் இதன் காரணமாகக் கிடைக்கவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருமான வரம்பை உயர்த்தி ஆணை பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்து விடுகிறேன். நான் அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவராவிட்டால், நன்றாக இராது. அந்த முறையில் தெரிவிக்க ஆசைப் படுகிறேன். முந்தாநாள் நடந்த ஒரு நிகழ்ச்சி உண்மையிலேயே என் மனத்துக்கு வருத்தத்தை அளிக்கிறது என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முந்தாநாள் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய அறைக்கு அவரைப் பார்க்க நான் சென்றிருந்தேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றிப் பிறகு பார்க்கலாம். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால், இப்போதே சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் சொல்லப்போகும் விஷயம் பொதுப் பிரச்சினை பற்றி அல்ல. தனிப்பட்ட விஷயம். அதைப் பற்றிப் பின்னால் பேசலாம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் அதைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன். உறுப்பினர்கள் அமைச்சர்களிடத்தில் வந்து பொதுப் பிரச்சினைகள்பற்றிப் பேச இனிமேல் வாய்ப்பு கிடைக்க வழி இல்லையென்றால், யாரிடம் போய் உறுப்பினர்கள் கேட்பது ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இந்த விஷயம் பொதுப் பிரச்சினை அல்ல. தனிப்பட்ட பிரச்சினை. ஆகவே பிறகு பார்த்துக் கொள்ளலாம். உறுப்பினர் உட்காரலாம்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அறையில் இந்தக் குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்றதால், தயவு செய்து நான் இங்கே தெரிவிக்க அனுமதிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்கள் அறையில் நான் நுழைந்தேன். நான் நுழைந்தபோது, அங்கே துணைத் தலைவர் அவர்களுடைய அறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் கையில் ஒரு பைல் வைத்திருந் தார்கள். ஏதோ 'டிஸ்கஷன்' நடப்பதாக எண்ணி நான் சற்று பின்வாங்கினேன். அப்போது கல்வி அமைச்சர் அவர்கள் என்னைத் திரும்பிப் பார்த்தார். உடனே நான் அவரை wish பண்ணினேன். "நான் இங்கே பேசிக்கொண்டிருக்கிறேன். வெளியே இருங்கள்" என்று சொன்னார்கள். எனக்கு அதைப்பற்றி வருத்தமில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உறுப்பினருடைய இது போன்ற பேச்சுக்களால் எங்களுடைய நிலைமைகளுக்கு ஏதும் பாதகம் செய்து விட முடியாது. உறுப்பினரிடம் "கொஞ்சம் வெளியே இருங்கள்" என்று தான் சொன்னேன். தமிழ் ஆசிரியர்கள் என்னைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று சொல்லியிருந்த காரணத்தால், உறுப்பினர் அவர்களும் அவர்களுடைய பிரச்சினை சம்பந்தமாகப் பேசுவதற்குத் தான் வந்திருப்பதாக நினைத்துக் கொண்டு தான் அப்படி வெளியே இருக்கச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களிடத்திலும் அப்படித் தான் சொன்னேன். அவர்கள் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை.

(பிற்பகல் 4-40)

திரு. செ. முத்துசாமி : என்னைப் பொறுத்தவரையில், நான் உட்காரவில்லை. உங்களிடத்தில் சொல்லத் திரும்பும்போதுதான், அந்தச் சங்கத்தின் செயலாளர், 'நீங்கள் இருங்கள்' என்று சொன்னார். "நான் இப்போது கல்வி அமைச்சருடன் பேசுகிறேன், நீங்கள் உட்காருங்கள்" என்று சொன்னார். ஒருவர் அழைக்காமல் வரும் பழக்கம் எனக்குக்

கிடையாது. எங்களுக்கு கௌரவம் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் கௌரவம் இருக்கிறது. நான் நோக்கம் வைத்து 'எக்ஸ்போஸ்' பண்ணுகிறேன் என்று அவர் நினைத்தால் அது தவறு. நான் வந்தது டெப்யூட்டி சேர்மன் அவர்களைப் பார்க்க.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தாங்கள் விவரத்தைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, மறுமுறையும் அதைச் சொல்ல வேண்டாம்.

திரு. செ. முத்துசாமி : அப்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது நியாயம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்கள் சொன்னதையே வலியுறுத்திச் சொன்னால், எனக்குச் சொல்வதற்கு உரிமையுண்டு. நான் தெளிவாகச் சொல்கிறேன், மாண்புமிகு டெப்யூட்டி சேர்மன் அவர்கள் ரூமில் நான் வந்து பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு. தமிழாசிரியர்கள் கழகத்தின் சார்பில் பேசச் செல்கிறேன். அந்தமாதிரி வார்த்தைகளால் என் மனம் புண்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய பொறுப்பு வகிக்கிறார்கள். நான் சாதாரணப் பொறுப்பு வகிக்கிறேன். ஆசிரியர்களுக்குப் பணியாற்றும் பெரிய பொறுப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள். இம்மாதிரி நடந்து கொள்ளும்போது, சங்கடம் ஏற்படுகிறது. ஒரு தந்தையிடத்திலே குறைகளைச் சொல்வதைப்போலத்தான் நாங்கள் சொல்கிறோம். நாங்கள் ஒரு கட்சியல்ல. நாங்கள் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கின்ற எங்களுடைய உணர்வுகளை வெளியிடுவது தவறு என்று கருதினால், இதுதான் என்னுடைய தலைவிதியாக இருக்குமானால், நான் அப்படியே நினைத்துக்கொண்டு வேதனையோடு அமர்ந்துகொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் அவர்களிடத்திலே சொன்னது "கொஞ்சம் வெளியில் இருங்கள்" என்பது. எந்த அளவுக்கு நான் அமைதியாகச் சொன்னேன் என்பதைக் கவனிக்க வேண்டும். இப்போது அவர் பேசிய பேச்சிலே எத்தகைய கருத்து இருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலில் நான் 'டெப்யூட்டி சேர்மனை'-ப் பார்க்க வந்தேன் என்றார். இரண்டாவது பேசுகின்றபோது, தமிழாசிரியர் கழகப் பொதுச் செயலாளர் கூப்பிட்டார். பேச்சுவார்த்தைக்கு வந்தேன் என்றார். இத்தகைய முரண்பாடான பேச்சுக்களைப் பேசுவதன் மூலமாக அவருடைய நோக்கம் என்னவென்பதை அவரே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப்

பொறுத்தவரையில், எம்.எல்.ஏ.-யாக மட்டுமல்ல, சாதாரண ஆசிரியர்கள் என்னிடத்திலே வந்தால்கூட, எந்த அளவுக்கு மரியாதையோடு அவர்களிடத்திலே பழகுகிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: என்னை முன்கூட்டியே பொதுச் செயலாளர் கூப்பிடவில்லை. கல்வி அமைச்சருக்கு முன்னாலே 'நீங்கள் இருங்கள்' என்று சொன்னாரே தவிர, வேறில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாலே தான் அவர்கள் சொன்னார்கள்.

THIRU A. R. DAMODARAN: Hon. Deputy Chairman, Sir, I realise that there are a number of hon. Members who want to participate in this debate and I shall be as brief as you will permit me to be. I would first like to compliment the Hon. the Minister for Education and the officials of the Education Department on the remarkable advance that has been made in the year 1978-79, which we anticipated to be a very difficult year for the Education Department. Sir, I do not have time to go in detail into the matter but I think it is only far to he administration to give thtem credit where it is due. The Hon. Minister, is handling an extremely delicate and sensitive portfolio involving tens of thousands of teachers and students and about his sincerity and dedication in the portfolio of education none of us have any doubt whatsoever. I would first like to congratulate the Department on upgrading 912 High Schools into Higher Secondary Schools. I would also like to congratulate the Hon. Minister on fulfilling what was one of his most important objectives, of locating these schools in the rural and backward areas of our State so that boys coming from those regions could have an opportunity for higher education. The second step taken by him is to carry out an assurance which he gave us last year, of ensuring job security for the Graduate teachers employed in the High Schools who were having very pronounced fears last year as to whether they would lose their jobs because of the introduction of the plus 2 system. I think that even my hon. Friends, the representatives of the teachers, who seemed to express their displeasure on such problems today and whom I have followed, would agree that in this very important measure the teachers owe a deep debt of gratitude to the Education Department for fulfilling that very essential assurance. It is possible, as some hon.

Members have pointed out, that there may be a few stray cases, which have been referred to the Public Service Commission, etc., in respect of which a solution has not yet been found. But I think the Education Department is tackling this issue and I wish it all success in its efforts to see that even those teachers recruited in 1970-73 who have not yet been given permanent positions are absorbed after the Public Service Commission finishes its selections.

Sir, I would also like to thank the Hon. Minister for the assurance he has given to the College Teachers who were deeply concerned that with the withdrawal of the Pre-University classes, nearly 2,000 of them or the 1,600 teachers that he had mentioned would be found redundant in colleges. His assurance that none of them, occupying permanent positions and also selected under certain temporary provisions, would be displaced from employment has brought a certain amount of cheer to their homes.

Sir, the other point which I wish to mention about the Hon. Minister is that he has achieved something which we have been trying to persuade Education Ministers in the past to achieve. This, I consider to be ris most significant achievement in that the has been able to announce a scheme of integration of the 'A' and 'B' wings, which has defied solution from 1966. I remember this because I entered this Council in 1966. It was Thiru Bhaktavatsalam's Government which then announced the integration of the District Board schools into the Government wing. Ever since that time, for 8 or 9 years, I still remember the pleas of my distinguished Friend, the late Thiru Rajah Iyer who pleaded so eloquently on behalf of the teachers and also of all the other Members who have been pleading for years that this issue should be solved. I agree that the 'A' wing teachers may have some misgivings on this issue but nonetheless when once Government had decided in 1966 that the former District Board schools would constitute a separate wing, it was the bounden duty of the administration to solve the problems of these teachers. I may also mention here that if this G.O. had been passed ten years earlier, the benefits to the teachers in the 'B' wing would have been even more substantial than what they are today. Nonetheless, 12 years have elapsed and ever since he took office, the Hon. the Minister for Education has been vigorously tackling this problem. I am grateful to him because this was one of the issues that was a

permanent bone of contention among the teachers and which was also stated to be one major grievance in the many agitations that they had started in the past. Therefore, I would like to express my gratitude on behalf of the teaching communitty in the 'B' wing schools. I know that the 'A' wing teachers have certain reservations and they have also gone to Court. I hope that it will be possible for the Hon. Minister to solve this problem amicably so that there will not be this friction between 'A' and 'B' wings because, after all, they are teachers teaching in the same type of High Schools although their methods of recruitment may be slightly different.

I am also grateful to the Hon. Minister for the in-service facilities that he has given for training teachers in the Higher Secondary institutions stated under the plus 2 scheme. As I said last year, we have started these institutions as an experiment. We have followed this pattern because the Central Board of Education and the Ministry of Education wanted an all-India pattern. It was suggested by the Kothari Commission and, as has been pointed out in the Policy Note, very many expert committees have suggested a 12 year schooling pattern. We have adopted this in Tamil Nadu after two or three years of thought and effort. Although there are some problems connected with the plus 2 courses, nonetheless, it is a very significant achievement and one which deserves the encouragement and support of parents, educationists and also Members of this House.

(பிற்பகல் 4-50)

Sir, after having mentioned the achievements of the Department of Education, I may be permitted to point out certain difficulties that are being experienced in the field of Education. It is not intended to be made as a criticism but I wish to point out that these deficiencies, if not corrected, would lead to certain difficulties which may involve the Department, as well as the vast number of teachers in this field in even greater difficulties in the future.

I wish to make only a passing reference to certain matters, in view of the lack of time. The field of education is so vast, elementary, secondary, University and technological education, that I do not have the time to mention all the points. I would only point out that we are spending a large amount of the Budget

Rs. 102 crores out of Rs. 205 crores—on elementary education. As has been mentioned by an hon. Member, we have over 33,000 elementary schools and a vast majority of these schools are being managed by the Panchayat Union Councils. I have always felt in my visit to these elementary schools that a certain amount of inspection and direction is lacking in the administration of these schools. It is a difficult job, because these schools are located in remote villages, in far away places and those places are not of easy accessibility in these days for inspecting officers. Particularly now-a-days when petrol is practically rationed to many officers of the Education Department, many of these schools cannot be reached even by the inspecting officers. These schools are located in very remote areas and these schools are intended to benefit the most backward sections of the population in the rural areas. Many of these schools lack proper direction. Although I may be misunderstood by some Members of the teaching profession, I would like to say as a parent and as one interested in the rural areas that we must see to it that these elementary schools are run with proper timings and that the teachers who are posted to these schools attend these schools to teach the students. I realise that this is a very difficult problem; and unless we have the co-operation of the teachers themselves, this problem is incapable of solution. But nothing has saddened me more than to realise that after having spent 50 per cent of our Education budget on elementary schools, many of these schools do not function in the afternoons because the teachers are not there and the boys are playing outside the schools under the shade of the trees. I may even point out that the drop-out is a direct consequence of the lack of individualised attention, especially to boys and girls coming from the poor and backward areas of our State. I hope that the Inspectorate Wing of the Elementary Schools in the Education Department will be strengthened. I am not pleading for disciplinary action against teachers or anything like that. It is a difficult task and we must see to it that the money we spend on these institutions is usefully spent and the benefit flows to the sectors for which it is intended.

I would also make a request—and this I have been making previously also—though I realise that the finding of resources is a serious problem. I have seen personally, having visited many of these schools, the enormous benefits that have flowed to such

[Thiru A. R. Damodaran] [1979 ஏப்ரல் 11

institutions from the adoption of mid-day meals programme. It is heart-breaking when those students tell us that they have started from their homes at 8 A.M. after taking some Kanji, trekked two or three miles to reach these institutions and have a glass of water for their lunch. We expect these boys to imbibe the benefits of formal education in these institutions. We must realise that the problem of drop-outs will not be cured unless we adopt the welfare measure of feeding of children in primary schools at least in the rural areas and the backward areas that want to have the Midday Meal Campaign. The CARE kitchens which have been started in some of the districts are doing an excellent job and many of the children are very happy to attend these schools. There may be people who would say that the object of a school is not to feed the children. But this is a wrong approach because these children are desparately in need of food and any Welfare State which has the interests of the rural population at heart must provide them food. Therefore, I would make a plea to the Hon. Minister to see that progressively we increase the percentage of children who are fed. I realise that we cannot increase it from 30 per cent to 100 per cent. But I hope that over a period of 3 to 5 years, every year the percentage of poor children fed will increase by at least 50 per cent. Sir, I have been pleading in the past that we are adopting wrong priorities in the Education Department. I have been criticised by many for pleading that the plus 2 course should not be a free course at all. The reason for my pleading so was not that it is not desirable to extend free education. But I felt that it was more important for us to feed children between the age of 6 and 11 in the rural and backward areas than to spend Rs. 200 crores or Rs. 300 crores in affording plus 2 education to boys of the age of 17 and 19. It is only a question of priority. If the State has Rs. 100 crores more, I would say even that free education may be given up to the University level. But, a responsible Government and a democratic Government must choose a list of priorities. In that list of priorities, I would plead that there should be a 100 per cent coverage for the Midday Meals Scheme. The Hon. Minister has about 3½ years more to go as Education Minister. I hope that before his five-year period comes to an end—not that he may not come again—he will see to it that 100 per cent coverage is afforded to the Midday Meals Scheme.

1979 ஏப்ரல் 11] [Thiru A. R. Damodaran]

Sir, turning now to secondary education, I would plead that in the teaching of English in our schools we must lay due emphasis on this language being taught properly by those who know English. This is no reflection on the teachers who are at present teaching English but I would plead with the Hon. Minister that at least from Standard V onwards, in Standards VI, VII, VIII, IX and X, we must have, as in the case of Tamil Pandits, Branch XII Graduates teaching English. I am only advocating the teaching of English properly as a foreign language. We have Tamil as the medium in most of our schools. But if we wish our boys to know English—not that they should be very proficient—at least as a speaking and understanding language, I would request the Hon. Minister to consider whether B.A. (English-Branch XII) candidates could not be chosen for this purpose. It would be a very progressive reform and we would be doing a great service to the rural boys who are at present absolutely out of touch with this language. The teachers' training institutions have to be discontinued now because there are so many unemployed teachers. I would request the Hon. Minister to find out whether these teachers' training institutions could not be utilised for training pre-school and nursery teachers for whom there is a great demand at present. The teachers' training institutions could be utilised to train teachers in the pre-school and nursery methods of teaching because I think even the Hon. Minister has mentioned that it is the proposal of the Government of Tamil Nadu to open a number of pre-schools attached to our primary schools. If that is to be so, we require a lot of trained pre-school teachers and we would be providing employment to a number of S.S.L.C passed people who could be given this training.

Mr. DEPUTY CHAIRMAN: The hon. Member is requested to finish in another five minutes.

Thiru A. R. DAMODARAN: Sir, I will now pass on to a most important measure relating to Matriculation Schools which have been taken over by the Government of Tamil Nadu. I hope that the Government would be liberal in affiliating new Matriculation Schools wherever they are wanted. The only way to cut out blackmarketing in English-medium education is for the Government to start or permit the starting of Matriculation Schools in the private sector so that the fee-levying institutions may not

impose any burden on the Government. I hope that it will be possible to adopt a liberal attitude in the starting of Matriculation Schools.

I will now turn to the most important point relating to the plus 2 course. My information is that in the academic stream there is no difficulty at all as far as the plus 2 course is concerned. It is run well and we can improve the quality of education in the plus 2 schools and bring it up to the very high standard which the Hon. Minister desires. But there is one difficulty. I have seen announcements in the newspapers that the all-India plus 2 course has now been amended and that the boys are now asked to read only one language and four subjects under the all-India pattern for the plus 2 course. Now we have adopted this plus 2 course only to fall in line with the all-India pattern of education. If the all-India pattern of education, as announced by Dr. Chunder, stipulates the study of one language and four subjects in the academic stream. I do not know why our boys should have to study two languages and four subjects in the academic stream. This is something about which the Government will have to think. I think what they have done in Delhi is that they have shifted one of the languages to the academic stream so that the boy reads three subjects plus a language in the academic stream. Perhaps, this is one way of lightening the syllabus. Anyhow, this is a matter on which I would like the Hon. Minister to consult his colleagues in other States as well as in the Central Board of Education. This matter may be thrashed out during discussions because we are anxious to have an all-India pattern of education.

(பிற்பகல் 5-00)

As far as the choice of subjects in 1978-79 is concerned, I was intrigued by the fact that in almost all the 20 schools which I visited, where arts subjects had been selected, History and Advanced Tamil had been made almost compulsory for the Arts Section. I am not against these subjects. If the 700 schools teach one section of 50 students History and Advanced Tamil and two other arts subjects, every year we will be manufacturing plus two candidates to the extent of 30,000 who will be studying only History and Advanced Tamil. The difficulty has arisen because we wanted to give job security to the teachers; and one section in all the 700 or 800 schools

will be studying only Advanced Tamil and History and every year we will be manufacturing 30,000 students who have studied History and Advanced Tamil and two other subjects. Over a period of 20 to 25 years, we will be having 6 to 7 lakhs of such boys. I would only request the Government to consider whether it would be desirable to have this type of education in the Academic Stream, because job opportunities are extremely limited for the boys who study these two subjects. They are going to take M.A. History or M.A. Tamil and they have no bright job opportunities. If our intention in having a new pattern of education is to widen the spectrum of job opportunities that are available to the students, then a greater degree of care would be essential in choosing the subjects in the respective schools so that the boys who get higher education will have more job opportunities either in the Government sector or in the non-Government sector. This is one practical difficulty. I know it is a difficult problem because the teachers have to be provided jobs. I hope that in 1979-80 and subsequent years it would be possible for the Government to make a better choice of the subjects in the academic stream. In 1979-80, I request the Government not to put a bar on the expansion of High Schools with plus two classes, wherever it is geographically necessary, and the Government may be liberal in their attitude. I would also request the Hon. the Education Minister, not to insist in 1979-80, on the vocational stream also being started in every school which is to start the academic stream of plus two course. The Government have o pened the vocational streams in a number of schools and they should first see that those vocational streams are stabilised in the existing schools and permit the other High Schools which may require plus two course to start the academic stream because there may be a demand for such higher secondary education in many areas where the Government have not sanctioned higher secondary schools at present.

One significant fact which had also been mentioned by the Hon. Deputy Chairman is that although one year has passed, the Government have not yet brought out question banks for students who are studying in the plus Two course. Last year when textbooks were not published in time, I made a plea in April 1978 that text-books should be sent at least to teachers who would be put in charge of plus Two classes so that they might acquaint

themselves with the syllabus. This year the students and the teachers do no know what type of questions are going to be asked. I am not asking for a model Question Paper. I want to know what type of examination they are going to have in the Plus Two Course. In the place of the essay-type questions asked in the old type of examinations, perhaps the Department is now introducing the objective type of questions where the student's knowledge will be tested and not merely his memory. If that is going to be done, we want question banks on each subject containing 1200 questions, 1500 questions or whatever be the limit prescribed by experts. I would like question banks to be brought out in all the subjects in the academic stream and, if possible, also in the vocational stream and distributed to the teachers and the students before the 30th July 1979 so that when revision starts in the third term, the boys and the teachers will have a fair chance.

Sir, as far as the vocational course is concerned, the note of the Education Department is one of gushing enthusiasm. I do not know whom they were trying to convince, probably they were trying to convince themselves. But, while I agree that vocationalisation in education is important, let us also realise that we have tried vocational education in the past. The Industrial Training Institutes, the Polytechnics, the Engineering Colleges and the Medical colleges are all vocational training institutions. But there is still the problem of unemployment. This problem cannot be laid at the doors of the Education Minister. This is a national problem and probably something has gone wrong with our concept of planning man-power planning and other types of economic planning resulting in unemployment. Therefore, I would like to dispel the illusion that seems to exist that this type of vocational education is immediately going to find jobs for the boys who are studying in such courses. While the vocational course is a very desirable course, due to lack of proper inputs and resources, it has become, in my view—I hope the Hon. Minister will pardon the expression—very much of a vacational course in 1978-79. It has become a vacational course because in all the schools that I visited, there were no text-books, the teachers were inadequate and there were no technical equipments available except certain things like typewriters for the course in Commercial Practice, etc. As far as the engineering sections

are concerned, I do not think many schools even have the simplest of engineering apparatus. This is very unfortunate because if the Government are really anxious to make this a success, they have to put the necessary inputs and resources into it. I am glad that, as has been mentioned in the Policy Note, our distinguished Education Minister of the Government of India, Dr. P. C. Chunder has complimented Tamil Nadu on having enrolled 24,000 boys in the vocational courses as against 3,000 or 4,000 in many other States. But, the point really is this. If the Hon. the Minister for Education at the Centre is so pleased with the Tamil Nadu experiment, may I request him kindly to give Rs. 8 crores or Rs. 9 crores from the Government of India to our Hon. Minister to see that these vocational courses are made a success? While I mention this in fair criticism, I am not against vocationalisation. I want the Tamil Nadu Government to go ahead with the experiment. I am not sure of its success but I would like the Hon. Minister to devote his maximum attention to seeing that it is properly done. Therefore, I make a special plea that, in consultation with the Directorate of Technical Education, the Hon. Minister may see to it that proper inputs, machines, equipments, teachers, etc., are provided in the vocational courses so that the experiment may develop into a success. It is not as if all the 24,000 boys who have been admitted to the vocational courses have chosen them willingly. Almost 16,000 to 17,000 of them are XI Standard failed candidates. We have told them that these are the only courses available to them and have asked them to join these courses. The remaining 6,000 or 7,000 of the boys who have been selected are boys who have secured below 340 marks and who have been shoved into the vocational courses. In other words, the vocational course is a second-class citizen as far as education is concerned. It is unfortunate but this is the fact that we have to face. Therefore, I plead that if the Government are going to spend Rs. 2 crores in the academic stream, they may spend Rs. 4 crores on the vocational stream and try to make it a success because having taken up this experiment, we cannot afford to let it fail.

Sir, I have made a plea in my speech on the Budget and I would like to make that plea again to the Hon. the Education Minister because this is something that is directly connected with

his portfolio. We have the finest engineering colleges in our State and our graduates are respected throughout the world. But it is strange that we still do not have a Directorate of Marine Engineering Technology. The only one of its kind has been established in Bombay and they conduct an Engineering Degree course. It is a four-year course, after Intermediate or plus 2 course. The boys who are admitted to this course in Marine Engineering Technology in Bombay and in Calcutta have excellent employment opportunities. I know that 99 per cent of the boys, after getting through the four year course and a two-year training period, have been absorbed in the mercantile marine sector on a salary of Rs. 2,500 a month to start with and extending up to Rs. 6,000 a month in foreign-going liners. We would be opening a wonderful avenue of employment opportunities for boys in Tamil Nadu and neighbouring areas if we could start a Directorate of Marine Engineering Technology in Tamil Nadu and institute this four-year engineering course. The two derelict, ramshackle ships belonging to the Poompuhar Shipping Corporation on which we have spent Rs. 1,44,00,000 could conveniently be handed over to the Education Department for being used as training-ships for hundreds of boys. Let not the Government of Tamil Nadu sink Rs. 9 crores in trying to bring out this Poompuhar Shipping Corporation because that amount of Rs. 9 crores will also be sunk. Therefore, the two steamers may be handed over to the Hon. the Minister for Education who will find a much better use for them besides providing 100 boys with employment opportunities.

(பிற்பகல் 5-10)

I would also make one more plea to the Government. In view of the fact that we are running short of energy resources and a great deal of research has to be made in the Engineering Colleges in our State, Solar Energy may also be offered for Doctorate Study because utilisation of solar energy is going to be one of the principal sources of energy in our State at least in future.

One word more and I have done, Sir. That is with reference to the teachers' problems. I do not have to refer to them in detail, after they have been mentioned by some of the hon. Members almost like teleprinter fasion. I would like to point out that the Hon. the Education Minister is employing $2\frac{1}{2}$ lakhs of teachers in various types of institutions—Government, Harijan

Welfare institutions, Municipal institutions, Panchayat Unions, Private, Aided institutions, etc., etc. It is a tremendous labour-relations problem. Any Management Expert will tell you that it is impossible to run a department and keep these people satisfied, with the amount of grievances they have. I would like the Government to constitute some sort of advisory councils at a very high stage—I am not referring to the Consultative Councils; I would request the Hon. Minister to take Expert Management advice on the way in which these institutions can be run. We started 20 or 25 years ago with a few thousands of teachers. Now we have $2\frac{1}{2}$ lakhs of teachers. I would request the Hon. Minister to have high-level Council and to thrash out all these individual and group grievances of teachers because, unfortunately, a lot of energy, a lot of time and a lot of money are being spent on these and also tempers have become frayed at times, just as we witnessed in the House when Thiru Muthuswamy spoke. The confronatation of teachers with the Government and the public is not a desirable trend in education. We are all interested, as parents, in the education of our children and we do not want the teachers to have a feeling of discontentment. The Hon. Minister is spending hours on these problems and still there are 1001 outstanding problems to be solved. I would, therefore, make a strong plea that he should create a body which will be able to thrash out the problems of teachers so that we may be able to devote more attention to educational problems. Thank you very much.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறிய அதையே நானும் கூறிக்கொள்கிறேன். ஒரு வார்த்தையில் நானும் அவருடைய கருத்துக்களைத்தான் பிரதிபலிக்க விரும்புகிறேன். அரசு வழங்கியிருக்கின்ற கல்விக் கொள்கைக் குறிப்பின் மீது நான் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பில் மான்யங்கள் ஒதுக்கீடு, ஆசிரியர்கள் பிரச்சினை போன்ற பிரச்சினைகளை எல்லாம் கடந்து, இந்த அரசினுடைய கொள்கையின் முக்கியமான அம்சமாக அது கிராமங்களை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது அல்லது கிராமப்புற மக்களின் கல்வி வளர்ச்சிக்காகச் செயல்படுகிறது. இந்த நிலைமைகளை உருவாக்கியிருப்பதற்காக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 11

மாண்புமிகு மத்திய கல்வி அமைச்சர் திரு. சந்தர்சுந்தர் அவர்கள் தமிழகம் என்ன செய்கிறதோ அதைப் பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, மாமியார் மெச்சிய மருமகளாக நமது கல்வி அமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள் என்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழாசிரியர்களுக்கும் தலைமையாசிரியர்கள் அளவுக்கு பதவி உயர்வு தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இந்த அரசு இருக்கிறது. அவர்களை முன்னேற்றுவதில் முதல் அடியை இந்த அரசு எடுத்து வைத்திருக்கிறது என்று சொல்லி, அதைப் பெருமையோடு நான் பாராட்டுகிறேன். நமது தமிழக அரசு கல்விக்காக ரூ. 209 கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கிறது. நமது நிதி நிலைமையிலே நான்கில் ஒரு பங்கு ஒதுக்கி யிருக்கிறது என்று சொல்லும்போது, கல்வி வளர்ச்சியில் இந்த அரசு எவ்வளவு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது. அரசின் கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தவேண்டியவர்கள் யார்? அவர்கள் ஆசிரியர்கள் தான். ஆசிரியர்கள் அவர்களுடைய பணிகளை, முறையான காரியங்களைச் செய்வதனாலேயேதான் கல்வி அமைச்சர் அவர் களுடைய நல்லெண்ணங்களையும், அரசினுடைய எண்ணங்களையும் பிரதிபலித்து நடைமுறையாக்க முடியும் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கதை சொல்வார்கள். ஒரு அரசாங்க அலுவலகத்தில் ஒரு திருடன் நுழைந்து அங்கு இருந்த பணத்தையெல்லாம் திருடிக்கொண்டு போனானாம். அப்போது அங்கிருந்த கணக்காளர் எல்லாவற்றையும்தான் எடுத்துக்கொண்டு போகிறாய், போகும்போது இந்த கணக்குப்புத்தகத்தையும் தான் எடுத்துக்கொண்டு போய்விடேன் என்று சொன்னாராம். முப்பது ஆண்டுக்காலமாக இதிலேயுள்ள குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் நான் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னாராம். அதுபோல அரசின் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ஆசிரியர்கள், ஒத்துழைக்க வேண்டிய ஆசிரியர் இருந்தும், கணக்காளரின் நிலை போல, நமது கல்வி அமைச்சர் அவர்களுக்கு வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுடைய குறைகளையும் அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பி.டி. ஆசிரியர்களின் சம்பளம் அடிப்படையில் ரூ. 450 என்று இருக்கிறது. அப்படி குறைவாக இருப்பதால், அவர்கள் குடும்பத்தை நடத்துவதற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். புலவர் பட்டம் பெற்ற தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக ஆக்குவதற்கு வழிவகை செய்தது அவர்களுக்கு மன மகிழ்ச்சியைத் தருகின்ற விஷயமாகும். அவர் களுக்குக் கொடுக்கின்ற ஈட்டிய விடுப்பைக் கூடுதலாக்க வேண்டும். இதனால் கிட்டத்தட்ட 2½ லட்சம் ஆசிரியர்கள் பயனடைவார்கள் என்பதைத்

1979 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

தெரிவித்துக்கொள்கிறேன். பெண் ஆசிரியர்களுக்கு 3 மாதம் மகப்பேறு விடுமுறை கொடுத்திருக்கிறார்கள். இதனால் அந்தப் பெண் ஆசிரியர்களும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்க வேண்டும். அதனால் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு கிராமங்களில் கல்வி வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருக்கும். பட்டதாரி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்களின் சங்கடத்தை நீக்கினால், அவர்கள் ஆர்வத்தோடு பணியாற்றுவார்கள், அரசுக்கும் நேரடித் துணையாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டதாரி ஆசிரியர்கள் 1973-ல் போராட்டம் நடத்தி சலுகைகளைப் பெற்றார்கள். அவைகளை இந்த அரசு திரும்பப் பெற்றுக் கொண்டதாக இருக்கக்கூடாது. வேலையில்லாத புலவர்கள், பட்டம் பெற்ற பி.டி. பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை ஏற்படுத்தித் தரவேண்டும். ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி செய்து தரவேண்டும். மருத்துவ வசதி தருவதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன, ஒன்று, பணமாகக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்கிறார்கள். மருத்துவ வசதியை நேரடியாகச் செய்ய வேண்டும் என்றும் சொல்கிறார்கள். எதைச் செய்தாலும், அது சரியாக இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்குப் பலன் தரவேண்டும். அதற்குத் தக்கவாறு ஒரு கொள்கையை வகுத்து, உள்ளபடியே நோய்வாய்ப்பட்டிருக்கும் ஆசிரியர் களுக்கு உதவ வேண்டும். இதை ஒரு சில அதிகாரிகளிடம் ஒப்படைப்பது உரியபடி செயல்படுவதில்லை.

மேல்நிலைக் கல்வி ஆசிரியர்களாவதற்கு 3 ஆண்டுகள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்று, பயிற்சி பெறுவதற்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். அவர்கள் எல்லோரும் பயிற்சி பெறுவதற்கு வசதியாக கோடைக்காலத்தில் பயிற்சி அளிக்கலாம். அவர்களுக்கு டிப்ளமோகூட கொடுத்துவிடலாம். அந்த ஆசிரியர்களுடைய குறைகள் தீர அரசு ஏதேனும் ஒரு நல்ல முறையைக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அது அந்த ஆசிரியப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அது ஆசிரியர்கள் எல்லோருக்கும் மன அமைதியைத் தரும், நமது கல்விக் கொள்கைகளும் வெற்றியடைய வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசுஏ ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

விளையாட்டுப் பயிற்சிகள் நன்கு வளர்ச்சியடைவதற்கு கோள அரசு பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. விளையாட்டுக்களில் ஈடுபட்டு முன்னேறுபவர்கள் தேர்வு எழுதுவதில் விலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 11

அவர்கள் நல்ல வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பல சலுகைகள் தருவதால், அவர்கள் விளையாட்டுக்களில் வீரர்களாகப் பெயர் பெறுகிறார்கள். அதனால் உலக நாடுகளின் பட்டியலில் இடம் பெற்று நம் தமிழக அரசுக்கும் பெருமை தேடித்தருவார்கள்.

கல்வி வளர்ச்சிக்காக நம் அரசு எடுத்திருக்கின்ற காரியங்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வி வளர்ச்சிக்காக, கல்விக் கருத்தரங்குகள் நடத்துவதற்கு என்று வாய்ப்பு வசதிகள் **எல்லாம்** ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்புக்கு என் ஆதரவைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. ஆர். தாமஸ்: துணைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 209 கோடி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது பெரு மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. நமது மாநிலத்தின் மொத்த வருவாய் ரூ. 840 கோடியாக இருக்கிறது. சென்ற ஆண்டு கல்விக்காக ஒதுக்கியதைவிட இந்த ஆண்டு ஒரு விழுக்காடு அதிகமாக இருக்கிறது. பொதுவாக கல்வி நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்த அளவில், அதிகமான தொகை ஒதுக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் கடந்த ஆண்டு ரூ. 100 கோடி ஆசிரியர்களுக்கு ஊதியமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 150 கோடிக்கு ஆசிரியர்களுக்கு ஊதியம் என்று செலவாகிறது. ஆனால், திட்டச் செலவில், வளர்ச்சிச் செலவில் அதிகமாகச் செலவாகவில்லை என்று நம்முடைய மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் கூட அவர்கள் பேசும்போது வருந்தினார்கள். எந்த அளவுக்கு நிதி கல்விக்காக ஒதுக்கப்படுகிறதோ, செலவு செய்யப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் நம் மாநிலத்தின் வருங்காலம், எதிர்காலம் இருக்கும், மறுமலர்ச்சியான காலமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யும் தொகையை வைத்து, இந்த ஆண்டு முடிவிலேயே பலனைக் காண முடியும் என்று சொன்னால், அது முடியாது. குறைந்தது 10 அல்லது 15 ஆண்டுகளாவது ஆன பின்னர்தான் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்த தொகையினுடைய பலனை நாம் காண முடியும். இந்த 10 ஆண்டுகாலத்திற்குள் அரசாங்கத்தினுடைய தேவை என்ன, இந்த நாட்டினுடைய வளர்ச்சி என்ன, தொழில் நுட்ப வளர்ச்சி என்ன என்று பார்க்க வேண்டும். நல்ல திட்டங்களை உருவாக்கி அதற்குச் செலவு செய்வதில்தான் நாட்டின் வளர்ச்சி இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறே

ஏப்ரல் 11] [திரு. பி. ஆர். தாமஸ்]

Whatever is spent on Education is to be considered only as an investment, as an asset and not as a liability.

(பிற்பகல் 5-20)

பொதுவாக இது ஒரு மூலதனம் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில், ஓரளவிற்குத் திருப்திகரமாக ஒதுக்கீடு செய்தாலும், அண்டையில் உள்ள கேரள மாநிலத்தில் 30 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கீடு செய்யும் நிலைமை இருக்கிறது. கல்விக்காக நம்முடைய மாநிலத்திலே 209 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், கட்டிடங்கள், கடன்கள் வகையிலே 13.32 கோடி ரூபாய் என்றும், தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்கள், பழங்குடியினர் பிள்ளைகளுக்குப் படிப்பு உதவிகள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவைகளுக்கு 30 கோடி ரூபாய்; மருத்துவம், வேளாண்மை, கால்நடைக் கல்வி ஆகியவற்றுக்காக 12 கோடி ரூபாய்—ஆக மொத்தம் 264 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ மாநில வருவாயில் 31 சதவிகிதம் அளவுக்கு இருப்பது மன மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால், பொதுவாக மாநிலத்திலே உள்ள பள்ளி ஆசிரியர்கள்—கல்லூரி ஆசிரியர்கள், துவக்கப் பள்ளி ஆசிரியர்கள்—பல குறைகளை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், என்ன கருதுகிறோமென்றால், ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் அவ்வப்போது நீக்கப்படாத காரணத்தாலே, காலம்காலமாக, பல ஆண்டுகளாகக் குவிந்துவந்த பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலைமையிலே, போதுமான அளவிற்கு நிதி ஒதுக்கீடு கல்வித் துறைக்கு அளிக்க வேண்டும் என்பதுதான். அவ்வாறு நிதி அளிக்கப்படாவிட்டால், பல போராட்டங்கள் ஏற்படும். ஆசிரியர்கள் தெருக்களுக்கு வரும் சூழ்நிலை உருவாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், பல பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தும் பயிற்சி பெற்ற 42,000 ஆசிரியர்கள் பணி இல்லாமல் இருக்கிறார்கள். ஆயிரம் இடைநிலை ஆசிரியர் பதவிகளும், 200 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகளும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தரப் பதவிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தொழில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளில் 200 முழு நேரப் பதவிகளாக உயர்த்தப்படுமென்று கூறியிருப்பது பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது. கைத்தொழில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பல்வேறு பள்ளிகளில், பல்வேறு ஊதியம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் 30 ரூபாய்; சில இடங்களில் 45 ரூபாய், 60 ரூபாய், 75 ரூபாய்,

90 ரூபாய், 120 ரூபாய், 150 ரூபாய் என்று பல விகிதங்களில் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது பெரிதும் வேதனைக்குரிய ஒன்று. ஒரே தகுதியுடைய ஆசிரியர்கள், ஒரே பணியை ஆற்றும்போது, வெவ்வேறு ஊதியம் வழங்குவது அநீதியாக இருக்கிறது. அதே நோத்தில் உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் கைத்தொழில் ஆசிரியர்கள் 250 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்குகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய கைத்தொழில் ஆசிரியர்கள் 350 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்குகிறார்கள். இந்த முரண்பாடு களையப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை.)

'தமிழ்நாட்டில் கல்வி' என்ற காலாண்டு இதழ் வர இருப்பது மகிழ்ச்சிக்குரியது. சென்ற ஆண்டுகூட, கல்வி விளக்கக் குறிப்பிலே காலாண்டு இதழ் வெளியிடப்படுமென்று சொல்லப்பட்டது. ஆனால், வெளியிடப்படவில்லை. இந்த ஆண்டு, 'தமிழ்நாட்டில் கல்வி' என்ற காலாண்டு இதழைக் கண்டிப்பாக வெளியிட வேண்டும். அதன்மூலம் ஆசிரியர்களும், கல்விக் கூடங்களும் பயனடைய முடியும். ஆணைகளுக்கான விளக்கங்கள், முரண்பாடுகளுக்கான விளக்கங்கள் ஆகியவற்றை அந்த இதழின் மூலம் பெறும் வாய்ப்பு ஏற்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளுக்காக இந்த ஆண்டிலே 101 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 50 விழுக்காடாக இருக்கிறது. தொடக்கப் பள்ளிகள் திறம்பட நடைபெறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அகில இந்திய அடிப்படையிலே ஆய்வு செய்து, அறிக்கை தந்திருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையிலே 100 குழந்தைகள் என்று எடுத்துக்கொண்டால், 20 குழந்தைகள் பள்ளிக்கு வருவதேயில்லை. மீதமுள்ள 80 குழந்தைகளில் 40 குழந்தைகள் ஐந்தாம் வகுப்புவரை வந்து, நின்றுவிடுகிறார்கள். மீதமுள்ளவர்களில் 20 குழந்தைகள்தான் உயர்நிலைப் பள்ளிக்குப் போகிறார்கள். அவர்களிலே 7 குழந்தைகள் பள்ளி இறுதி வகுப்பைத் தாண்டுகிறார்கள். மூன்று குழந்தைகள்தான் மேல் படிப்பிற்குப் போகிறார்கள். ஏன் இவ்வாறு ஏற்படுகிறது என்பதைச் சிந்தித்தால், காரணங்களை நன்றாக அறிந்துகொள்ள முடியும். இன்று கல்வித் துறையிலே அதிகமாக எதைப் பார்க்கிறோமென்றால் 'என்ரோல்மென்ட் டார்கெட் ஓரியண்டட் ப்ரோக்ராம்' என்பதைத்தான் பார்க்கிறோம். அதிகமாக மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற குறிக்கோளை வைத்து, ஒரு புள்ளி விவரம் கொடுக்கப்படுகிறது. ஆனால், அந்தப் புள்ளிவிவரம் எந்த அளவிற்கு உண்மையானது

என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. இரண்டாவதாக, பின்தங்கிய குழந்தைகள் பள்ளிகளுக்கு வந்தவுடன் அவர்களிடம் அதிகமான முன்னேற்றத்தை எதிர்பார்க்கிற நிலைமை இருக்கிறது. இதனால் குழந்தைகள் மத்தியில் அச்சம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டு, பள்ளியை விட்டுப் போகும் நிலை இருக்கிறது. முதல் மூன்று வகுப்புகளில் அதிகமான பாடத் திட்டங்கள் இருக்கின்றன. சிங்கிள் டீச்சர் ஸ்கூல்—ஓராசிரியர் பள்ளிகளில் ஒருவரே 5 வகுப்புகள், 3 வகுப்புகள் பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் தான் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமான அளவிற்கு நின்று விடுகிறார்கள். தொடர்ந்து அவர்களால் கல்வியைத் தொடர முடியவில்லை. இந்திய அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின்படி, அரசியல் சட்டம் அமுலான 10 ஆண்டுகளிலே கட்டாய இலவசக் கல்வியை அமுலாக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தும், 30 ஆண்டுகள் கழித்தும் இன்றைக்கு அதை அமுலாக்க முடியாத நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், நாட்டிலுள்ள பெற்றோர்களுக்கு கல்வியில் முதலிலே நம்பிக்கை இல்லை. வாழ்க்கையிலே ஊதியம் ஈட்டலாமென்ற நிலை இருக்கிறது. அதற்கு மேலே பள்ளிகளிலே கவர்ச்சி இல்லாத நிலை. தமிழகத்தைப் பொறுத்த வரையில், 33,130 ஆரம்பப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. இதில் 24,450 தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் ஏராளமான நிதி வசதி இருக்கிறது. உள்ளூர் வரி, நிலவரி செஸ், மற்றும் அரசு அளிக்கும் நிதி உதவி, இவ்வளவு இருந்தும் அங்கே தொடக்கப் பள்ளிகள் சீராக, செம்மையாக நடைபெறவில்லை. அவை செம்மையாக நடைபெற ஒரே ஒரு வழி என்னவென்றால், மாநிலத்திலுள்ள கல்வித் துறையானது தொடக்கப் பள்ளிகள் அனைத்தையும்—ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்கப் பள்ளிகள் அனைத்தையும் தேசிய மயமாக்க வேண்டும். அந்தப் பள்ளிகளை கல்வித் துறையின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்துவிட்டால், நிச்சயமாக தொடக்கக் கல்வி சிறப்பாக அமையு மென்ற கருத்தையும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்தாலே ஏறத்தாழ 20, 25 லட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள். ஆனால், இந்த ஆண்டில் என்ன பார்க்கிறோமென்றால், மையச் சமையற்கூடமென்ற அமைப்பை இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்கு விரிவாக்கியிருக்கிறார்கள். மாநில அரசு இதற்காக 55 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்கிறது. 'கேர்' நிறுவனம் 45 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்கிறது. இந்த அடிப்படையிலே ஏன் ஏனைய 10 மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை அமுலாக்கக்கூடாதென்று கேட்க விரும்புகிறேன். ஒரு சில மாவட்டங்களிலே ஆசிரியர்கள் அந்தப் பணியைச் செய்வதால், அவர்

களுடைய கல்விப் பணி பாதிக்கப்படுகிறது. மாணவர்கள்கூட ஆகாரம் தயார் செய்யும் அவல நிலைக்கு உந்தப்பட்டிருக்கிறார்கள். எனவே, அனைத்து மாவட்டங்களிலும் மையச் சமையற் கூடங்களை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடமாடும் ஆய்வுக்கூடங்கள் நம்முடைய கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் அறிவியல் பாட போதனையைக் கற்றுக்கொடுக்க, பயன்படுகின்றன. 46 கல்வி மாவட்டங்களில் 42 கல்வி மாவட்டங்களில் நடமாடும் ஆய்வுக் கூடங்கள் இருக்கின்றன. ஆனால் அவை நடமாடமுடியாத நிலைமையில் இருக்கின்றன. அவற்றுக்குப் போதுமான பெட்ரோல் வசதியில்லை, டீசல் வசதியில்லை. இரசாயனப் பொருள்கள் போதுமான அளவிற்கு இல்லை. இருப்பதைக் கொண்டு 3 மாதங்கள், 5 மாதங்கள் பணியாற்றிவிட்டு, இன்றைக்கு நடமாடும் ஆய்வுக் கூடங்கள் இருந்த இடத்திலேயே இருக்கும் நிலைமையில் இருக்கின்றன. எனவே அவற்றுக்குப் போதுமான நிதி வசதியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாட நூல் நிறுவனம் ஏராளமான புத்தகங்களை வெளியிடுகிறது. அதனால் லாபம் ஈட்டுகிறது. பாடநூல் நிறுவனத்தை ஒரு கூட்டுறவு அமைப்பாக மாற்ற வேண்டும். அதில் ஆசிரியர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். அதிலே ஆசிரியர்களுக்குப் பணி வாய்ப்பும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். மாநிலத்திற்குத் தேவையான பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதோடுகூட, ஒவ்வொரு ஆண்டும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கும் அரிசன மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களை இலவசமாக

(பிற்பகல் 5-30)

அளித்து வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் கொடுத்த அந்தப் பாடப் புத்தகங்களை மறு ஆண்டு பயன்படுத்துகிறோம். புத்தக வங்கிகளில் அவற்றைச் சேர்த்து வைத்து பின்தங்கிய மக்களுக்கும், அரிசன மக்களுக்கும் கொடுக்கலாம். உதவித் தொகை வழங்குவதற்குப் பதிலாக நோட்டுப் புத்தகங்களாக வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கணிதபாடத்தைப் பொறுத்தவரை, 1979-80 ஆம் ஆண்டிலிருந்து கணிதத்தின் பளுவைக் குறைக்க நடவடிக்கை எடுத்து அதற்குரிய திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. 1982 ஆம் ஆண்டில் 10-வது வகுப்புக்கு வரக்கூடிய மாணவர்களுக்கு இதன் மூலம் பாடப் பளு நீக்கப்படுகிறது.

ஏ பிரிவு, பி பிரிவு ஆகியவற்றை இணைக்கின்ற ஒரு நல்ல முயற்சி எடுத்திருப்பதற்காக நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. அதிக மதிப்பெண்கள் பெற்று பள்ளி இறுதித் தேர்வில் தேறிய மாணவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. அதே போல் உடல் பயிற்சியில் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றிருக்கக்கூடிய மாணவர்களுக்கும் பதக்கங்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, இன்றைக்கு 912 பள்ளிகள் மாநிலம் பூராவும் துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் 24,400 மாணவர்கள் தொழில் கல்வி படிப்பார்கள் என்பது மிகவும் பாராட்டத்தக்க அம்சமாகும். நம்முடைய தமிழக அரசையும், குறிப்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் இதற்காக மத்திய அரசு பாராட்டியிருக்கிறது. சில குறைகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைகள் இருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது. எடுத்துக்காட்டாக தொழில் கல்வியைப் பொறுத்தவரை, தொழில் கல்வி புகட்டக் கூடிய சாதனங்கள், அறிவியல் சாதனங்கள் போன்றவற்றை மாநில அரசு உடனடியாக வழங்க வேண்டும். நாற்பது விழுக்காடு அல்லது 60 விழுக்காடு என்று மானியம் அளிக்கும் நிலையை மாற்றி, தொழில் சாதனங்களைப் பொறுத்தவரை, ஆய்வுக் கூடச் சாதனங்களைப் பொறுத்தவரை, அரசே முழுத் தொகையையும் கொடுக்க வேண்டும்.

தொழில் கல்வியைப் படித்து முடித்து விட்ட பிறகு, தொடர் கல்வியைப் படிக்க விரும்புகிறவர்களுக்கு அரசு எப்படி தொடர் கல்வியை அளிக்கப் போகிறது? தொழில் கல்வியை முடித்த பிறகு தொடர் கல்வி பெற அப்படிப் பட்டவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அப்படி தொடர் கல்வி பெற வாய்ப்பில்லாத மாணவர்களுக்கு அல்லது வசதியில்லாத மாணவர்களுக்கு அவர்கள் தாங்களாகவே ஏதாவது தொழில் செய்துகொள்ள அரசு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதா? அப்படி வாய்ப்பு இல்லாவிட்டால், அரசு அத்தகைய வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழக அரசு இத்தகைய வாய்ப்புகளை உருவாக்கி மாணவர்கள் அவர்களாகவே தொழிலை நடத்தக் கூடிய வாய்ப்பு வசதி அளிப்பதற்கு ஏற்பாடு செய்தால் தான், உதவி செய்தால் தான், தொழில் கல்வியில் அவர்களுக்கு நம்பிக்கையே ஏற்படும். தொழில் கல்வியைப் பொறுத்தவரை, வழி காட்டி நூல் என்றொரு நூல் இருக்கிறது. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரை, தொழில் கல்விக்கு அவை தேவையில்லை, அதிகமான பணம்

தேவை என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நான் அந்தக் கருத்திலிருந்து வேறுபடுகிறேன். காரணம் முன்பு இரு கூறு ஆக்கப்பட்ட கல்வி முறை அமுலுக்கு வந்தபோது, பாடப்புத்தகங்கள் இதுமாதிரி கொடுக்கப்படவில்லை. நகர்ப்புறத்து மாணவர்களைப் பொறுத்தவரை, தொழில் கல்வி படிக்கிற பாலிடெக்னிக் அல்லது பொறியியல் போன்ற கல்லூரிகளுக்குச் சென்று அங்குள்ள புத்தகங்களைப் படித்து அல்லது ஆசிரியர்களைக் கேட்டு, அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஆனால் கிராமப் புறங்களில் அப்படிப்பட்ட வாய்ப்பு இருக்காது. நமது மாநிலத்தில் பல வல்லுநர்கள், அனுபவமிக்கவர்கள் இருப்பதால், வரும் ஆண்டுகளில் அப்படிப்பட்ட புத்தகங்களை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் கல்வியைப் போதிக்க பகுதிநேர ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அடுத்த ஆண்டு இப்பொழுது சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்கள் 40 பாடங்கள் போதிக்க வேண்டியிருக்கும். ஆகவே அடுத்த ஆண்டு முழு நேர ஆசிரியர்கள் அவசியம் தேவைப்படுகிறார்கள். ஆகவே தொழில் கல்வியைப் போதிப்பதற்கு முழு நேர ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளுக்குக் கட்டடங்களைப் பொறுத்தவரை, ஆய்வுக் கூடங்களைப் பொறுத்தவரை, ஈட்டு மானியம் அரசால் வழங்கப் படுவது வரவேற்கத்தக்கது. தனியார் பள்ளிகளுக்கு மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1¾ கோடி ரூபாய்தான் கட்டடங்களுக்கும் ஆய்வுக் கூடங்களுக்கும் ஒதுக்கப் படுகிறது. 450 மேல்நிலைப் பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுபவை என்கின்ற நிலையில் பள்ளிக்கூடம் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டுப் பார்த்தால் கூட, 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் அவர்களுக்குத் தேவைப் படுகிறது. குறைந்த அளவு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தனியார் பள்ளிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தொழில் கல்வியின் 'மெஷினிஸ்ட் கோர்ஸ்' என்கிற ஒரு கோர்ஸ் பொறியியல் துறையில் இருக்கிறது. மோட்டார் ரிவைண்டிங் என்கிற ஒரு கோர்ஸ் இருக்கிறது. இது தொடர்பாகப் படிப்பவர்கள் அறிவியல் பாடத்தைக் கட்டாயம் எடுத்துப் படிக்க வேண்டும். பிசிக்ஸ் அல்லது கணிதம் எடுத்துப் படிக்கலாம். இந்தத் தொழில் பிரிவில் படிக்கும் மாணவர்கள் கணிதத்தை அல்லது பிசிக்ஸை எடுத்துப் படித்திருந்தால் தான், பொறியியல் கல்லூரிக்கு வர முடியும். இப்படிப்பட்ட குறைபாடு அவர்களுக்கு இருக்கிறது. 1980 ஆம் ஆண்டிலே ஒருவேளை அவர்களுக்கு மெஷினிஸ்ட் கோர்ஸ் அல்லது மோட்டார் ரிவைண்டிங் கோர்ஸ்-க்கு இடம் கிடைக்க அவர்கள் படித்தால், பொறியியல் கல்லூரியில் சேரும்போது, கணிதம் அல்லது பிசிக்ஸ் இல்லையென்ற

காரணத்திற்காக, அவர்களுடைய சேர்க்கை தவிர்க்கப்படும் நிலை இருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்து இந்த இரண்டு பாடங்களையும் தொழில் கல்வி படிப்பவர்களுக்கும் புகட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளைப்பற்றிப் பத்திரிகையில் படித்தேன். மருத்துவத் துறைக்குப் போக வேண்டுமென்றால் கூட, கணிதத்தைப் படித்திருக்க வேண்டும். இந்தப் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய பி.டி. ஆசிரியர்களைப்பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறேன். இங்கே ஏற்கெனவே பி.எ., பி.எஸ்ஸி. படித்த ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். 1961-62 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் 8 மாத குறுகிய காலப் பயிற்சி கொடுத்து ஆசிரியர்கள் பணியாற்ற வாய்ப்பளித்தார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருக்கக்கூடிய அந்த அனுபவமிக்க ஆசிரியர்களுக்கு அதேபோல் குறுகிய கால பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களையும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் கலந்தாலோசித்து ஆசிரியர்களுடைய விடுமுறை நாட்களிலேயே இத்தகைய குறுகிய காலப் பயிற்சியை அவர்களுக்கு அளித்து, பாடத் திட்டங்களின் அடிப்படையில் தேர்வு நடத்தி அவர்களுக்கு பி.டி. ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தை வழங்கி, அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஜூலை மாதத்தில் மேல்நிலை வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் மார்ச் மாதத்தில் அநேக இடங்களில் பள்ளிகளை மூடிவிட்டார்கள். ஆங்கிலப் பயிற்றுமொழி உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மாதந்தோறும் 20 ரூபாய் கட்டணம் கட்டிப் படிக்கிறார்கள். ஒன்பது மாதங்கள் வகுப்புகளை நடத்தி விட்டு, 10 மாதங்களுக்குரிய கட்டணத்தை வாங்குவது எப்படி நியாயமாகும்? ஆகவே இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட ஆணை ஒன்றினைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒருசில கருத்துக்களை கூறி முடித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு ஆசிரியர் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாக் கருத்துக்களைப் பற்றியும் வலியுறுத்திப் பேசியிருக் கிறார்கள். இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நானும் தெரிவிக்க விரும்புகிறேன். தேர்வு நிலையைப் பொறுத்தவரை, 20 ஆண்டுகள் பணியாற்றிய பணிக்காலத்தைக் கணக்கிலெடுத்து அப்படிப்பட்டவர்களுக் கெல்லாம் சிறப்புத் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களுடைய ஊதியத்தைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கிறது. 1970 ஆம்

ஆண்டிலும் அவர்களுக்குச் சரியாக நிதி வழங்கப்படவில்லை. பிறகு 1971 ஆம் ஆண்டிலே அவர்களுக்கு அது வழங்கப்பட்டது. இப்போது மறுபடியும் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்தவரை, 1—1—1971 அன்று இருந்த ஊதியத்தைக் கணக்கிட்டு, தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும், ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடங்களில் எல்லா இடங்களிலும் கன்டின்ஜென்ட் எஸ்டாப்ளிஷ்மென்ட் என்கிற முறையில் கடைநிலை ஊழியர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 18 ரூபாய் பல ஆண்டுகாலமாக அடிப்படை ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. மற்றவர்களுக்குரிய எந்த விதச் சலுகைகளும் இவர்களுக்குக் கிடையாது. ஓய்வூதியம் கூட கிடையாது. கல்லூரிகளில் பணியாற்றுகிற இப்படிப்பட்டவர்களைப் பொறுத்த மட்டில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததாக நாங்கள் பத்திரிகையில் பார்த்தோம். கல்லூரிகளில் பணியாற்றுகிற கன்டின்ஜென்ட் ஸ்டாபை 'ரெகுலரைஸ்' செய்திருக்கிறார்கள். பள்ளிகளில் பணியாற்றக்கூடிய கன்டின்ஜென்ட் ஊழியர்களையும் 'ரெகுலரைஸ்' செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பி.டி. பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து பி.டி. ஆசிரியர்களுக்குரிய ஊதிய விகிதத்தை வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெகு அமைதியான நல்ல முறையில் பெருமனம் கொண்டு உறுதிமொழி கொடுத்து முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் கொடுத்திருக்கிற உறுதிமொழியை விரைவிலே அமுலாக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும். அவர்களுக்கு ஒருசில குறைபாடுகள்

(பிற்பகல் 5-40)

தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. அனைத்து மக்கள் நலனும் பாதுகாக்கப்படவேண்டும். சில நேரங்களிலே இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை. அந்தமாதிரி நிலைமைகள் ஏற்படாமல் தயவு செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். அளித்த வாக்குறுதிகள் விரைவிலே ஆணையாக வரவேண்டும், அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, கல்விக்கான கொள்கைக் குறிப்பைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்தினுடைய செலவினத்தில் மிகப்பெரிய ஒரு பகுதிச் செலவுக்குக் காரணமாக இருக்கின்ற கல்வித் துறை இன்றைக்கு நல்ல முறையிலே நடைபெறவில்லை, நடைமுறையிலே சில புதிய முறைகளை வகுத்திருந்தாலும் கூட, கல்விகுறித்து பொதுவான கொள்கையைப் பொறுத்தவரை, கல்வி பற்றிய நம்முடைய அணுகு முறைகள் காரணமாக, எதிர்காலம் மிகவும் குழப்பமுடையதாகத்தான் அமைந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்வி முன்னேற்றம் இந்த அளவுக்கு இருக்கிறது, இப்படியே சென்றால் நாம் வகுத்திருக்கின்ற திட்டத்தின்படி இவ்வளவு முன்னேற்றத்தை அடையலாம் என்கின்ற நிலை இல்லாமல், தூங்குகின்ற நிலையிலேயே நம்முடைய கல்வித் துறை இருக்கிறது. கல்வியைப் பொறுத்தமட்டில், 1978-79 ஆம் ஆண்டில் 6 முதல் 11 வயதுவரையில் இருக்கின்றவர்கள், 11 முதல் 14 வயது வரையில் இருக்கின்றவர்கள், 14 முதல் 17 வயது வரையில் இருக்கின்றவர்கள் என்ற தொகுப்பினை எடுத்து, அரசே கொடுத்திருக்கின்ற அறிக்கையின்படி பார்த்தால், 6 வயது முதல் 11 வயது வரை 94 சதவிதமும், 11 வயது முதல் 14 வயது வரை 58 சதவிதமும், 14 வயது முதல் 17 வயது வரை 30 சதவிதமும் தான் தற்போது படித்துக் கொண்டிருக்கிறார்கள். முதல் வகுப்பில் சேரும் மாணவர்களின் சதவிதம் 94. ஆனால் தொடர்ந்து 5-வது வகுப்பு வரையிலும் படிக்கும் மாணவர்களின் சதவிதம் 58. அய்ந்தாவது வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை எடுத்துக் கொண்டால், இடையிலே நின்றுவிட்டவர்களின் சதவிதம் 36. இது அரசாங்கம் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரம். ஆனால் இதற்கு அதிகமாக இன்றையதினம் கிராமப்புறங்களிலே மாணவர்கள் படிக்காமல் இருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்ல, 5-வது வகுப்புக்கு மேலே இந்தப் புள்ளிவிவரங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுக்கு அதிகமாக மாணவர்கள் பள்ளிக்குப் போகாமல் இருக்கிறார்கள். அவர்களைப் படிக்க வைக்க வேண்டும் என்று பெற்றோர்களுக்கும் ஆர்வம் இல்லை. அய்ந்தாவது வகுப்புக்கு மேல் அனைவரையும் பள்ளிகளில் படிக்க வைக்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்க அரசாலேயும் இயலவில்லை. ஒரு பக்கம் கல்விக்காக இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், இன்னொரு பக்கம் ஒரு தற்குறி சமுதாயத்தையும் நாம் உருவாக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு என்பதல்ல பிரச்சினை. இந்த நிலைமைகளைக் களைவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று பார்க்க வேண்டும். இந்த அவல நிலைமைகளை அரசு கருத்தில்கொண்டு திட்டங்களை வகுக்க வேண்டும். இன்னொரு வேதனையான விஷயம். இந்த 'ட்ராப் அவுட்ஸ்' (drop-outs)

எங்கே அதிகமாக இருக்கிறது, எங்கே இந்தப் பிள்ளைகள் பள்ளிப் படிப்பைத் தொடராமல் இருக்கிறார்கள் என்று பார்த்தால், மிகவும் பின்தங்கிய மக்கள், வறுமையிலே உழல்கின்ற பிரிவினர், அரிசன மக்கள் எங்கே இருக்கின்றார்களோ அங்கிருந்து வருகின்ற பிள்ளைகள்தான் இவ்வாறு படிப்பைத் தொடர முடியாமல் இடையிலேயே நின்றுவிடும் நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது, பின்தங்கிய சமுதாயத்திற்கு நாம் கொடுத்துவருகின்ற சலுகைகள் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு கொடுக்க வேண்டுமோ என்று எண்ணுகின்ற அளவுக்கு நிலைமைகள் சீரழிந்து இருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னொரு சங்கடம், பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், தொடக்க காலத்தில், பள்ளிகளை நாம் ஆரம்பித்த காலத்தில் இருந்த கட்டிடங்கள்தான் இப்போதும் கிராமங்களில் இருக்கின்றன. இடையிலே ஒரு சுவர் கூட கிடையாது. ஒரு 10, 20 பிள்ளைகளை வைத்துச் சொல்லிக்கொடுத்த அதே இடத்தில், 5 அல்லது 6 வகுப்புகளை வைத்துச் சொல்லிக் கொடுக்கும் நிலைமை தற்போது இருக்கிறது. வகுப்புகளுக்கு இடையில் ஒரு சுவர் கூட இல்லை. ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும் இடையே தடுப்பு கூட இல்லை. மேலும் மூன்று ஆசிரியர்கள் இருந்துகொண்டு அய்ந்து வகுப்புகளை நடத்துகிறார்கள். எப்படியென்றால், இரண்டு வகுப்பில் உள்ள பிள்ளைகளை வெளியே ஓட விட்டுவிட்டு, அப்புறம் அவர்களை வீட்டுக்கு அனுப்பும் நிலைமைதான் இருக்கிறது. பள்ளிக்கூடங்களைத் தொடங்கிய காலத்தில் இருந்த அந்த நிலை திறந்த வெளியிலே சொல்லிக்கொடுப்பது, மரத்தடியிலே விளையாட விடுவது போன்ற நிலைமைகள், இவ்வளவு பணம் ஒதுக்கி கல்விக்காகச் செலவழிக்கும் இன்றையதினம்கூட கிராமப்புறங்களிலே இருக்கும் பள்ளிக் கூடங்களிலே தொடர்வது வேதனைக்குரிய விஷயமாகும். கிராமப் புறங்களிலே இருக்கும் பள்ளிக்கூடக் கட்டிடங்களை மாற்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக நாம் இவ்வளவு பணம் செலவழிக்கிறோம் என்பதல்ல, எப்படி எங்கே செலவழிக்கிறோம் என்பது தான் பிரச்சினை. ஆரம்பப் பள்ளிகளில், துவக்கப் பள்ளிகளில் குழந்தைகள் ஆட்டு மந்தைகள் அடைக்கப்படுவதுபோல் அடைக்கப்பட்டு மாலையிலே அனுப்பப்படும் நிலைதான் இருக்கிறது. வேலைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையையும், பல்வேறு போட்டிப் பரிட்சைகளிலே கலந்து கொண்டு தேர்வு பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் பார்க்கின்றபோது, கிராமப்புறங்களின் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். முன்பெல்லாம் கிராமப்புறங்களிலேயிருந்து வந்தவர்கள் எல்லாம்

போட்டித் தேர்வுகளிலே வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தது. இன்றைக்கு அந்த நிலைமை மாறியிருக்கிறது. டாக்டர் படிப்புக்கு, என்ஜினியர் படிப்புக்கு செல்பவர்களின் எண்ணிக்கையை நாம் பார்த்தால், கடந்தகால கண்ணோட்டத்தோடு பார்ப்போமேயானால், கிராமப்புறங்களிலிருந்து வந்து படிப்பவர்களின் விகிதாச்சாரம் வெகுவாகக் குறைந்துகொண்டே வருகிறது.

அடுத்தபடியாக, கல்வித் துறையினுடைய நிலையைப் பொறுத்தவரை, மொழிக் கொள்கை தீர்மானிக்கப்படவில்லை. மொழிக் கொள்கை தெளிவாக்கப் படவில்லை என்பதோடு மட்டுமல்ல, நான் மிகுந்த வேதனையோடும், உரிமையோடும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், எந்தக் கொள்கையை நாம் சொல்லுகிறோமோ அந்தக் கொள்கைக்கு நாமே உண்மையாக இல்லை. நாம் முழுமையாக தாய்மொழியிலேதான் கல்வி என்று சொல்கிறோம். தாய்மொழியிலே பயின்றாக வேண்டும் என்ற அளவிலே பள்ளிக்கூடங்களிலே, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் நாம் வாய்ப்பு அளிக்கிறோம். ஆனால் அதையும் தாண்டி பல பேர்கள் ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்கின்ற வாய்ப்பையும் நாம் குறைக்காமல் வைத்திருக்கிறோம். ஆங்கிலக் கல்வி, ஆங்கில மொழி கூடாது என்ற நிலைமைக்கு நாம் முழுமையாக இன்னும் வரவில்லை. வசதி இருந்தால், வாய்ப்பு இருந்தால், ஆங்கிலக் கல்வியை விரும்பிப் படிக்கிறார்கள். ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்களுக்கு இருக்கும் பல்வேறு பதவி வாய்ப்புகள் மற்ற வாய்ப்புக்கள் இவற்றோடு போட்டிபோட முடியாத அளவுக்கு தமிழ் மொழி மூலம் படித்தவர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒன்று எல்லோருக்கும் சம உரிமைகளை, வசதிகளை, வாய்ப்புக்களை உருவாக்குங்கள். இல்லை, ஒரு சாராருக்கு மட்டும்தான், பணம் படைத்தவர்களுக்கு மட்டும்தான், ஆங்கிலம் படித்தவர்களுக்கு மட்டும்தான் அந்த வாய்ப்பு என்று சொல்லுங்கள். தம்முடைய பிள்ளைகளை ஆங்கில பயிற்சி மொழி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவிட்டு, வாய்ப்பும் வசதியும் தமிழில் படித்தவர்களுக்குத்தான் என்று சொன்னால், மொழிக் கொள்கைக்கு மட்டுமல்ல, நம்முடைய மனச்சாட்சிக்கும் நாம் ஊறு விளைவித்துவருகிறோம் என்றுதான் நான் கருதுகிறேன். 31 ஆயிரம் மாணவர்கள் தற்போது மெட்ரிக்குலேஷன் படிக்கிறார்கள். 31 பள்ளிகளிலே அவர்கள் படிக்கிறார்கள். 1,100 ஆசிரியர்கள் ஆங்கிலத்திலே அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள். இப்போது 10+2+3 என்று வரையறுத்துத் தந்திருக்கிறார்கள். 10+2+3 படிப்பை முடித்துவிட்டு மாணவர்கள் படிக்கப்போவதும் கல்லூரியிலே, மெட்ரிக்குலேஷன் முடித்த மாணவர்கள் படிக்கப்போவதும் கல்லூரியிலே, அவர்கள் மருத்துவப் படிப்புக்கு, என்ஜினியரிங் படிப்புக்குப் போகும்போது யாருக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கும்? இந்த வேறுபாட்டை அகற்ற நாம் முயற்சிக்கிறோமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

[திரு. க. இராமமூர்த்தி] [1979 ஏப்ரல் 11

இன்றைக்கு இந்தி மொழி வேண்டுமா வேண்டாமா என்ற நிலை இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இந்தி மொழி அறிவு இல்லையென்றால், வேலையில்லை என்ற நிலை மத்திய அரசு அலுவலகங்களிலே இருக்கிறது. இந்தி மத்திய அரசு அலுவலகங்களிலே மிகவும் திட்டமிட்டுச் செயல்படுத்தப் படுகிறது. நாம் கண்மூடிக்கொண்டிருப்பதிலே பயனில்லை. அந்த அளவுக்கு மத்திய அரசிலே இருந்து உத்தரவு வந்திருக்கிறது. வங்கிகளுக்கு, தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளுக்கு, இந்தியன் பாங்கிக்குக்கூட தாக்கீது வந்திருக்கிறது. அவர்கள் இந்தியைக் கையாளவேண்டும் என்று மத்திய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. இந்தி மொழி தெரியாதவர்கள் இனி

(பிற்பகல் 5-50)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வங்கிகளில் வேலைக்குத் தகுதியற்றவர்கள் என்பதுதான் இதனால் ஏற்படுகிற நிலையாகும். இப்படி ஒரு நிலை வந்துவிட்டதன் காரணமாக, நம்முடைய மொழிக் கொள்கையின் காரணமாக, பலரை அந்த வேலைகளுக்குப் போக விடாமல் நாம் தடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் இதன் பொருளாகும். நம்முடைய மொழிக் கொள்கையை மத்திய அரசிடம் சரியாக எடுத்துச் சொல்லி அவர்களை அதை ஏற்றுக்கொள்ளச் செய்யாததன் காரணமாக தமிழகத்தில் நாம் மிகப் பெரிய சிக்கலை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலிருந்து தமிழகத்தை மட்டும் தனிமைப் படுத்திக் கொண்டிருக்கிறோம், தனியாகப் பிரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் உணர வேண்டும். உண்மையிலேயே இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால், வேகமுள்ளவர்களாக இருந்தால், இந்தி பேசாத மாநிலங்கள் அத்தனைக்கும் தனியான பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்ற முயற்சியை நாம் மேற்கொண்டிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் இந்தி தெரிந்தவர்கள்தான் மத்திய அரசின் பதவிகளில் இருக்க முடியும் என்ற நிலையை உருவாக்கிவிட்டு, நம்முடைய மாணவர்களுக்கு இந்தி தெரியாத காரணத்தால், அங்கே போக விடாமல் அவர்களைத் தடுப்பது என்பது நம்முடைய மாநில மக்களுக்கு எதிராக மிகப் பெரிய தீங்கை நாம் விளைவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மிகுந்த கடமை உணர்வோடு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் ஒரு சில நடவடிக்கைகளை மிகுந்த நம்பிக்கையோடு எடுத்தார்கள். எனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், நான் ஒன்றைக் குறிப்பிட

1979 ஏப்ரல் 11] [திரு. க. இராமமூர்த்தி]

விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்கள் உண்மையான தகவல்களாகத் தான் இருக்கும் என்று எண்ணி, நான் இதை இங்கே குறிப்பிடுகிறேன். தொடக்கத்தில் மேல்நிலைப் பள்ளிகளை 10+2+3 என்ற அடிப்படையில் புதிதாகத் துவங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோது, மொத்தம் 400 பள்ளிகளில் மட்டும் துவங்குவது என்றுதான் திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது. அதற்குப் பிறகு அது 600 என்ற அளவுக்கு உயர்ந்து, அதற்குப் பிறகு 900 என்ற நிலைக்கு அது உயர்ந்தது. இங்கே கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரப்படி, அரசுத் துறையில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 413. நகராட்சி/ மாநகராட்சி மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களால் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 51. தனியார் துறையில் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 448. ஆக மொத்தம் 912 மேல்நிலைப் பள்ளிகள் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டிருக்கின்றன. இதில்கூட, எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்—அது உண்மையாக இருக்குமென்று நம்புகிறேன்—150 மேல்நிலைப் பள்ளிகள் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அமைந்திருக்கின்றன. இது உண்மையாக இருக்குமானால், இது ஒரு நல்ல வளர்ச்சியைக் காட்டாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது எப்படி இருக்கிறது என்றால், உடலில் ஒரு பகுதிமட்டும் வீங்கிக் கொண்டிருக்கும்போது, வேறு பகுதிகள் மெலிந்து கொண்டிருப்பதைப்போல் இருக்கிறது. இதனால் முழுமையான கல்வி வளர்ச்சியை நாம் தமிழ்நாட்டில் காண முடியாது என்பது மட்டுமல்ல, ஒரு பகுதிக்கு மட்டும் இத்தனை பள்ளிகளைத் துவக்கிவிட்டு மற்ற பகுதிகளுக்கு இல்லாத நிலையை உருவாக்குவது மிக்க வேதனைக்குரியது ஆகும். இத்திட்டத்தில் எங்கேயோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதை உடனடியாகக் கல்வித் துறை ஆராய்ந்து களைய வேண்டும். சில மாவட்டங்களுக்கு மட்டும்தான் மேல்நிலைக் கல்விக்கான வாய்ப்பு அதிகமுண்டு. பல மாவட்டங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்ற நிலைமை வளருமானால், பொருளாதாரத் துறையில் தற்போது பின்தங்கிய மாவட்டங்கள் என்று இருப்பதைப்போல் கல்வித் துறையிலும் பின்தங்கிய மாவட்டங்கள் உருவாகும் பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாகப் பின்தங்கிய மக்கள், பின்தங்கிய பகுதிகள் என்றில்லாமல், பின்தங்கிய மாவட்டங்களே கல்வித் துறையில் உருவாகும் நிலை ஏற்படும் என்பதை உணர வேண்டும். எனவே இந்த அடிப்படையில் ஏற்பட இருக்கிற பயங்கரமான சூழ்நிலையை மாற்ற அரசுக்கு நான் உரிமையோடு ஒரு ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு செயற்குறிப்பின் அடிப்படையில் அரசாங்கம் ஒரு திட்டத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை துவக்கப் பள்ளிகள் தேவை, எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் தேவை, எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் தேவை, அந்த மாவட்டத்தில் இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கெடுத்து அந்த அடிப்படையில் அவர்களுடைய விகிதாசாரத்திற்குத் (ratio) தகுந்தாற்போல், அந்த மாவட்டத்தில் பள்ளிகள் அமைந்திருக்கின்றனவா என்றும், கல்வியளிக்கும் வாய்ப்பு உருவாகி இருக்கிறதா என்றும் பார்த்துச் செயல்பட வேண்டும். ஒருவேளை ஒரு மாவட்டம் உரிய வகையில் வளராமலிருந்தால், அந்த மாவட்டத்திற்கு அதிகமான நிதி வசதியையும், கல்விச் சலுகையையும் அளித்து, கல்வித் துறையில் அந்த மாவட்டம் மற்ற மாவட்டங்களுக்கு இணையாக வரும் வகையில் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் வளர்ந்து, மற்ற மாவட்டம் வளராத நிலை ஏற்படுவது சரியல்ல. ஒரு மாவட்டம் மட்டும் கல்வியின் பயனை அனுபவிப்பதும், மற்றொரு மாவட்டம் கல்வி என்றால் என்னவென்றே அறியாத நிலையில் இருப்பதும் சரியல்ல. நாங்களெல்லாம் பெருந்தலைவர் காமராஜரின் காலத்திற்குப் பிறகுதான் படிக்க ஆரம்பித்திருக்கிறோம் என்று சொன்ன பின்தங்கிய பகுதிகள் மேலும் பின்தங்கிய பகுதிகளாகவே நிரந்தரமாக இருக்கின்ற நிலைமையை உருவாக்குவது என்பதை கல்வியமைச்சர் அவர்கள் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று இல்லாத நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் திரு. தாமஸ் அவர்களும் பல விஷயங்களைப்பற்றிப் பேசியிருப்பதால், அவற்றைப்பற்றி நான் இங்கே அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆயினும் தொழிற்கல்வியைப் பொறுத்தவரை, கல்வித் துறை என்ன ‘சிலபஸ்’ வைத்திருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. பள்ளிகளில் தொழிற்கல்வி சொல்லித் தரப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற்கல்வியைச் சொல்லிக் கொடுப்பவர்களுக்கு என்ன தகுதி வைக்கப் பட்டிருக்கிறது என்பது புரியவில்லை. அதைப் போலவே தொழிற்கல்வியை மாணவர்களுக்கு அளிக்கும்போது, நாம் எந்த நிலையில் இருந்து அதை அளிக்கப் போகிறோம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பள்ளிகளில் கார்ப்பெண்ட்டரி அல்லது வீவிங் பற்றிச் சொல்லிக் கொடுக்கப்படும் என்றால்,

இன்றைக்கு அந்தத் துறை எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அதற்கு ஏற்ற முறையில் நாம் கல்வியை போதிக்க வேண்டும். ஒரு தச்சுத் தொழிலாளியைக் கொண்டு வந்து சென்னை போன்ற பகுதிகளில் ஒரு நாற்காலியையோ அல்லது மேசையையோ செய்து கொடுக்கும்படி சொல்லி, அதை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லிவிட முடியாது. இன்றையதினம் அந்தத் தொழில் மிகுந்த நுணுக்கத்தோடு, மிகுந்த கலை உணர்வோடு வளர்ந்திருக்கிறது. ஒரு நல்ல நாற்காலியோ அல்லது மேசையோ செய்ய வேண்டுமென்றால், அதற்குரிய கருவிகள் வேண்டும். அந்தக் கருவிகளில் நல்ல பழக்கம் இல்லை என்றால் செய்வதில் ஒரு ‘பெர்ஃபெக்ஷன்’ இருக்க முடியாது. அந்த அளவுக்குத் திறமையாக அது செய்யப்படவில்லை என்றால், பிறகு அதற்கு விற்பனை இருக்காது. இன்றைக்கு தொழிற்கல்வி படித்த மாணவன் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தத் தொழிலில் இறங்கிப் பயன் அடைவது என்பது எளிதான ஒன்றாக இருக்காது. ஆக, தொழிற்கல்வி என்ற பெயரில் எதையாவது நாம் சொல்லித் தந்து அந்தக் கல்வி அந்த மாணவனுக்கு எந்தக் காலத்திலும் பயன்படாத கல்வியாக இருந்து, அவனை வீதியில் நிற்கச் செய்யும் நிலையை நாம் உருவாக்கக் கூடாது. இன்றையதினம் அளிக்கப்படும் தொழிற்கல்வி என்றைக்கும் அவனுக்குப் பயன் உள்ளதாக இருக்குமா என்று எண்ணிப்பார்த்து, அதற்கான ‘சிலபஸ்’ தயாரிக்கப்பட வேண்டும். அந்தத் தொழிலுக்குத் தேவைப்படுகிற நவீன கருவிகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அதையெல்லாம் செய்யாமல் பெயருக்குத் தொழிற்கல்வி அளிக்கிறோம் என்பது எந்த வகையிலும் சரியல்ல.

இன்றைக்கு இரும்பை வெல்டிங் செய்வதென்றால், மின்சாரத்தின் உதவியால் புதிய கருவிகளின் உதவியால் வெல்டிங் செய்யப்படுகிறது. அதைக் கற்றுத் தராமல் பழைய முறையில் இரும்பைக் காய வைத்து, அது பழுக்கக் காய்ந்த பிறகு சம்மட்டியால் அடித்து ஒட்டிச் சேர்க்க வேண்டும் என்று கற்பிக்கின்ற நிலை நன்றாக இருக்காது என்பது மட்டுமல்ல அத்தகைய கல்வித் திட்டத்தால் மாணவர்கள் எந்தப் பயனையும் அடைய முடியாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். எனவே இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: நேரமில்லை என்ற காரணத்தால், இதை நான் விரிவாகப் பேசவில்லை என்றாலும், அரசாங்கம் இதைப்பற்றி நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் கல்வித் திட்டம் பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முதியோர் கல்வித் திட்டத்திற்கு மத்திய அரசுதானே பணம் தருகிறது என்று இப்போது அரசாங்கம் அதை எப்படியெல்லாமோ செலவழித்துக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி எனக்கும் ஆட்சேபனை இல்லை. மத்திய அரசு தருகிற பணத்தைப் பொறுத்தவரையில், எப்படி வேண்டுமானாலும், இந்த அரசு செலவு செய்யட்டும். ஆனால் இந்த ஆட்சி வசூலிக்கும் வரிப் பணத்திலிருந்து ஒரு பைசாவைக்கூட இந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கக் கூடாது என்பதை மட்டும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முதியோர் கல்வித் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டபோது, நாட்டில் எத்தனை பேர் கல்வியறிவில்லாமல் இருந்தார்கள்? அப்போது குழந்தைகளாக இருந்தவர்கள்தான் இன்றைக்குப் பெரியவர்களாக மாறியிருக்கிறார்கள். அப்போது என்ன எண்ணத்தில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்றால், இருக்கிற முதியவர்களுக்கு மட்டும் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால் போதும், இப்போது இருக்கிற குழந்தைகள் எப்படியும் கல்வி அறிவு பெற்றுவிடுவார்கள், எனவே தற்போதைய முதியவர்களுக்கு மட்டும் இந்தத் திட்டம் தேவைப்படும், எதிர் காலத்தில் தேவைப்படாது என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் செயலாக்கப் பட்டது. ஆனால் இன்றையதினம் நாட்டில் எத்தகைய நிலையைப் பார்க்கிறோம் என்றால், நிரந்தரமாகவே முதியோர் கல்வித் திட்டம் செயல் படுவது என்றாகிவிட்டது. நிரந்தரமாகவே முதியோர் கல்வித் திட்டம் இருக்கும் என்றால், என்ன அர்த்தம்? இந்த நாட்டில் நம்முடைய கல்வித் திட்டம் தோற்றுப் போய்விட்டது என்று நாம் ஒப்புக்கொள்கிறோம் என்று தான் பொருள். அது மட்டுமல்ல, இந்தத் திட்டம் ஒரு மிகப் பெரிய ஏமாற்று வேலை என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம் என்று பொருள். முதியோர் கல்வித் திட்டத்தில் யார் படிக்கிறார்கள்? யார் சொல்லித் தருகிறார்கள்? கணக்குப் புத்தகத்தில்தான் படிப்பவர்களும் சொல்லிக்கொடுப்பவர்களும் இருக்கிறார்களே தவிர, எங்கே ஒழுங்காக இந்தத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது? எனவேதான் சொல்லுகிறேன், இந்த முதியோர் கல்வித் திட்டம் என்பது ஒரு வேண்டாத திட்டம். செலவு அதிகமாகிற திட்டம். மத்திய அரசு பணம் கொடுத்து அதை இப்படித்தான் வீணாக்க வேண்டுமென்றால், தாராளமாக வீணடியுங்கள். ஆனால் தயவுசெய்து நம்முடைய அரசின் வரிப்பணத்தை இதற்காக வீணாக்காதீர்கள் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, கல்லூரிகளைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவையின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு செனட் உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு அங்கே போன

பிறகுதான், எவ்வளவு பயனற்ற வேலைக்காக நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. இப்போதிருக்கிற செனட்டுக்கு அங்குள்ள சட்டதிட்டப்படி ஒரு அதிகாரமும் கிடையாது என்பது மட்டுமல்ல,

(பிற்பகல் 6-00)

அங்கே ஒரு வேலையும் நடைபெறுவதில்லை. ஆக யார் சொல்லுகிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்பதற்கு நாதியில்லை. அங்கு நடப்பதையெல்லாம் பார்க்கும்போது, ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு அதன் மூலமாவது பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகச் சீர்கேட்டைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் உள்ள சீர்கேட்டைப் போல வேறு எங்கும் இருக்க முடியாது. பல்கலைக் கழகத்தினுடைய செனட் உறுப்பினர்கள் சொல்லுகிற கருத்துக்களை, அவர்கள் கண்டுபிடிக்கிற தவறுகளை நிர்வாகத்தினரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பது மட்டு மல்ல, அவர்களால் அதைத் திருத்திக்கொள்ளக் கூட முடியவில்லை. தங்களைத் திருத்திக்கொள்ளக் கூடிய அளவுக்கு அவர்களுக்குப் பெருந் தன்மை இல்லை. அவர்கள் தங்களை அந்த அளவுக்கு sophisticated (உயர்ந்தவர்கள்) என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சில நாட்களுக்கு முன்பு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட ஒரு தகவல் வந்திருக்கிறது. பி.ஏ. ஆங்கிலப் பாடப் புத்தகத்திலே தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திற்குள்ள மரியாதைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். இன்றைக்கு அதன் தரம் எந்த அளவுக்குக் குறைந்து போயிருந்தால், ஆங்கிலப் பாடப் புத்தகங்களில் தவறுகள் வந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். டாக்டர் ஜி. கிருஷ்ணன் என்பவர் எழுதுகிறார்.

"The following sentences which look like howlers from Public Service Commission examinations, are found in the book 'Modern Prose Selections' prescribed by the Madras University for its B.A. students:

The Second World War was between the United Nations and the Axis Powers.'

அதிலே இன்னொன்றையும் சொல்லுகிறார்.

'Bradman was an adept in cricket and hence was given the title of Don'.

இதெல்லாம் நம்முடைய ஆங்கில அறிவையும், நூற்றாண்டு விழா கொண்டாடிய சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய திறனையும் காட்டுகின்றன. இப்படிப்பட்ட திறனை வைத்துக்கொண்டு, நாம் நம்முடைய நாட்டில் கல்வியை வளர்ப்பது என்றால், இது எங்கே சென்று முடியும். மாணவர்களுடைய நிலை எங்கே சென்று முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பல்கலைக் கழகங்கள் அதிகமாக இருந்தாக வேண்டும். வட மாநிலத்தில் அதிகமான பல்கலைக் கழகங்களை வைத்துக்கொண்டு பல சலுகைகளை மத்திய அரசிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளை வைத்துக்கொண்டிருக்கிற சென்னைப் பல்கலைக் கழகம், 77 கல்லூரிகளை வைத்துக் கொண்டிருக்கிற மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், ஒரே ஒரு கல்லூரியை வைத்துக் கொண்டிருக்கிற அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஆகிய இந்த மூன்று பல்கலைக் கழகங்களுக்குமிடையே ஒரு ஈடுபாடு இல்லை, சிரமைப்பு இல்லை. இவைகளைச் சீரமைத்து மேலும் புதிய பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பல்கலைக் கழகமாவது இருக்க வேண்டும்.

கல்விக்காக மிக அதிகமான தொகையைச் செலவிடுகிறார்கள் என்று பெருமைப்படுகிற அதே நேரத்தில், இதில் பெரும் பகுதித் தொகை மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரையின் காரணமாக ஏற்படுகிற ஊதிய உயர்வுக்காகத்தான் செலவழிக்கப்படுகிறதே தவிர, சராசரி கல்வியின் வளர்ச்சித் திட்டங்களுக்காக எதையும் செய்யவில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதனால் கல்விக்குப் போதுமான அளவுக்கு நாம் கவனம் செலுத்தவில்லையென்று நான் சொல்லமாட்டேன். கல்விக்காக ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க முடியாமல் நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதிகமான நிதி ஒதுக்கியிருக்கிற நேரத்தில், இந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்க முன்வர வேண்டும்.

கடைசியாக, கல்வித் துறை அதிகாரிகளைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் மற்றத் துறை அதிகாரிகளில் இருந்து மாறுபடுகிறார்கள். முன்பு சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொன்னேன். இப்போது கல்வித் துறையின் ஆரம்பத்தில் உள்ள டெபுடி இன்ஸ்பெக்டர், சி.ஈ.ஓ. அதிகாரிகளைப்பற்றிச் சொல்லுகிறேன். இந்த அதிகாரிகளைச் சுற்றி எப்போது பார்த்தாலும், பத்துப் பதினைந்து ஆசிரியர்கள் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். ஆசிரியர்களைப் பார்த்து அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போவதே இல்லையா

என்று இவர்கள் கேட்பதில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு தங்களுடைய சொந்த வேலைகளுக்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துகிற நிலையை பல இடங்களிலே பார்த்திருக்கிறேன். டெபுடி இன்ஸ்பெக்டர்களால் தொடக்கக் கல்வியே பாழாகிறது. சி.ஈ.ஓ.-க்களைப் பொறுத்த வரையில், என்னுடைய மாவட்டத்திலேயே தானே மூன்றாண்டுகளுக்கு அனுபவித்தேன். அந்த சி.ஈ.ஓ.-வை வைத்துக் கொண்டிருப்பதால், அந்த மாவட்டத்தில் கல்வித் துறையே சீர்கேடு அடைகிறது. ஆனால் அவரை அங்கிருந்து மாற்ற யாரும் முன்வரவில்லை ; அவரைத் திருத்த முன்வரவில்லை. அந்த அளவுக்குக் கல்வித் துறை படிப்படியாக சீர்கேடு அடைந்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் உடனடியாக நிவாரணம் காண வேண்டும். இந்தச் சீர்கேடான நிலையிலிருந்து கல்வித் துறை விடுபட்டாக வேண்டும். கல்வித் துறை வளர்வதற்காக எவ்வளவு நிதி வேண்டுமானாலும் கேளுங்கள் ; ஆனால் கல்வியை முறையாக வளர்க்க வேண்டும். எத்த அளவுக்கு நிதி கேட்டாலும் பரவாயில்லை. ஆனால் மொழிக் கொள்கையை ஒழுங்காக வரையறுத்து மனச்சாட்சியோடு அதைச் செயல்படுத்த முன்வர வேண்டும். " பணக்காரர்களுக்கு மெட்ரிகுலேஷன் கல்வி இருக்கும், இந்த அரசாங்கத்தின் சலுகை, பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கும் ; அப்படிப்பட்ட தனி இனம் இருந்துகொண்டுதான் இருக்கும் ; மற்றவர்கள் எல்லாம் மற்ற இடங்களில் படித்து எப்படியாவது பாழாய்ப் போங்கள் " என்ற கனவிலிருந்து விடுபட்டு நினைவுக்கு வாருங்கள் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் காணப்படுகிற பசுமையான வயல்வெளிகளைக் காட்டிலும், மாபெரும் தொழிற்சாலைகளைக் காட்டிலும், பளபளப்பான பாதைகளை உருவாக்குவதைக் காட்டிலும், ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு கல்விக் கூடங்களைப் பரவலாக வளர்க்கிற முயற்சிதான் பயனளிக்கும் என்பதை உலகத்திற்கெல்லாம் எடுத்துக்காட்டுகிற வகையிலே இந்த அரசு மிகத் தீவிரமாக இதில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக 209 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து கல்வித் துறையினுடைய உயர்வுக்குப் பாடுபடுவதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இருக்கிற நேரம் குறைவாக இருப்பதால் அதிலே நான் ஒரு சிலவற்றை மட்டுமே சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இருக்கிற நேரம் 'மிகக்' குறைவாக இருப்பதால் என்று சொல்ல வேண்டும்.

புலவர் புலமைப்பித்தன் : இருக்கிற நேரம் 'மிகக்' குறைவாக இருப்பதால், ஒரு சில குறிப்புகளை மட்டுமே சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

புலவர் வகுப்பு இப்போது பி.லிட் வகுப்பாக மாறியிருக்கிறது. ஆனால் பி.லிட். படித்து முடிப்பவர்களுக்கு இளம் புலவர் என்ற பட்டத்தைக் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே புலவருக்குப் படித்துவிட்ட பின்னாலே பி.லிட். படிப்பவர்களுக்கு இளம் புலவர் என்று பட்டம் வழங்குவது எப்படி இருக்கிறதென்றால், ஏற்கெனவே நான் பேசியதாக நினைவு, நான்கைந்து குழந்தைகளைப் பெற்ற தாயானவருக்கு பூப்பு நீராட்டுவதைப் போல இருக்கிறது. ஆகவே இதை மாற்றிவிட்டு முதுபெரும் புலவர் என்றோ, பெரும் புலவர் என்றோ பட்டம் அளித்து அரசு அவர்களைச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான்கைந்து குழந்தைகள் பெற்ற தாய்க்கு அறுபதுக்கு அறுபது கல்யாணம் செய்வதைப் போலவா ?

புலவர் புலமைப்பித்தன் : அறுபதுக்கு அறுபது கல்யாணம் என்றால் சரி. நான்கைந்து குழந்தைகளைப் பெற்ற தாய்க்கு பூப்பு நீராட்டுவதைப் போலத் தான் இது இருக்கிறது.

ஏற்கெனவே ஒரு முறை பேசுகிறபோது, பி.லிட். பட்டம் பெற்றவர்களை தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிலே இடம் பெறச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். அந்த முயற்சியை அரசு மேற்கொண்டு செயல் படுத்தும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன்.

அது மாத்திரமல்ல, தமிழாசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு திருக்குறள் பிரச்சார போர்டை அமைக்கலாம். மேலும் தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்தில் எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்காக தமிழாசிரியர்களை நியமித்தால், வேலையில்லாமல் வாடிக்கொண்டிருக்கிற புலவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். குறைந்தது நானூறு பேருக்காவது வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதை நம்பகமான வட்டாரத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறேன். அந்தச் செய்தியை இந்த மன்றத்திலே தெரிவிப்பதன் வாயிலாக நானூறு புலவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழாசிரியர்கள் ஒரு காலத்திலே புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள் என்பது உண்மையானாலும், தமிழ் நாட்டிலே கூட தமிழாசிரியர்கள் புறக்கணிக்கப் பட்டிருந்த நிலை தொடர்ச்சியாக இருந்ததை மாற்றி நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக ஆக்குகிற பொற்காலத்தை

உருவாக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு இதே மன்றத்திலே பேசுகிறபோது கேட்டுக்கொண்டேன். அது ஓரளவுக்கு 22 காரட் அளவுக்கு இல்லாவிட்டாலும், 16 காரட் அளவுக்காவது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழாசிரியர்கள், நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியர்களாக வரும் வாய்ப்பு இந்த ஆட்சியிலேதான் உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை எண்ணுகிறபோது, நானும் தமிழாசிரியர் என்ற அடிப்படையிலே, மெய்யாகவே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-10)

அடுத்து இதையே தொடக்க நிலையாக வைத்துக்கொண்டு, அதற்கு அடுத்து உயர்நிலைப் பள்ளிகளிலேயும், மேல்நிலைப் பள்ளிகளிலேயும் தமிழாசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக ஆக்குகின்ற வாய்ப்புகளை மிக அண்மையிலே, விரைவிலே ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுக் குறிப்புகளை மிகத் தெளிவாக இந்த நாட்டுக்கு அறிவிக்க வேண்டும். ஒரு நாட்டினுடைய வரலாறு தெளிவாக இருக்க வேண்டும் என்று நான் ஒரு செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1961 ஆம் ஆண்டு நான் கல்லூரியிலே படித்துக்கொண்டிருக்கும்போது, திரு. சுந்தரேச வாண்டையார் என்பவர் ஒரு விஷயத்தை எனக்குச் சொன்னார்கள். பழம்பெரும் கல்வெட்டுக்கள், பிரதிகள் எல்லாம் மறைபட்டுக்கிடக்கின்றன. இந்தக் கல்வெட்டுக்கள், பிரதிகள் எல்லாம் வெளிவருமானால், தமிழ்நாட்டினுடைய வரலாறு துல்லியமாகத் தெளிவாக்கப்படும் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்றைய நிலைமையில், தமிழகத்தின் வரலாற்றை முறைமையாக வெளியிடுவதற்கு, நம்முடைய பழைய மரபுகள் தெளிவாகத் தெரிவதற்கு, சங்ககாலம் அல்லது அதற்கு முந்திய கால வரலாற்று ஆராய்ச்சிகளிலும் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடும்போது, தமிழகத்தில் உள்ள தமிழ் வல்லுநர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் இவர்களையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலேயே இருப்பவர்களான தேவநேயப் பாவாணர், பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் போன்றவர்களையெல்லாம் இந்தப் பணிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களையெல்லாம் நன்கு பயன்படுத்திக்கொண்டால், எதிர் காலத்தில் நல்ல வரலாற்று நூல் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[புலவர் புலமைப்பித்தன்] [1979 ஏப்ரல் 11

பாவேந்தர் அவர்க்ள் நினைவாக ஒரு அறக்கட்டளையை உருவாக்கி அதன் வருமானத்திலிருந்து சொற்பொழிவுகள் நடத்துவதற்கும், உரைகள் நிகழ்த்து வதற்கும் அரசு வழி வகைகள் செய்திருப்பதற்கு பவேந்தர் அவர்கள் பரம்பரையில் வந்தவன் என்ற அடிப்படையிலே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, புலவர்களுக்கு விருது வழங்குகின்றார்கள். அந்த விருது வழங்குவது மட்டுமல்லாமல், ரூ. 10,000 பரிசும் தரப்படுகிறது. இது தமிழை வளர்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு, உருவாக்கிக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல அத்தாட்சியாக இருக்கிறது. நான் அதை மனமாரப் பாராட்டுகிறேன். எனக்கும் அப்படிப்பட்ட விருது பின்னாலே வரும் என்ற நம்பிக்கையிலும், ஆசையினாலும் அந்தத் திட்டத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். பெரும்பாலும் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற புலவர்களுக்கு இந்தப் பணம் மிக்க உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழாசிரியர்களைப் பொறுத்து, கடந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்தார்கள். தமிழ்நாட்டிலே தமிழ் படித்தவர்கள், வறுமையினாலே வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைவிட வெட்கக்கேடான வேதனை இருக்க முடியாது என்று தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல. அவர்களுடைய வேதனையை மாற்ற ரூ. 100 என்று இருந்த உதவிப் பணத்தை, ரூ. 250 ஆக உயர்த்தியது அவர்களுடைய உள்ளத்திற்குப் பெருத்த ஆதரவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழி பெயர்ப்பு செய்வதில் நம் அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக் கிறது. கவிதைகளை மொழிபெயர்ப்பு செய்வதில் அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அதிலே என் கருத்துக்களையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் மதிப்பிற்குரிய பழம்பெரும் கவிஞர் என்று பாராட்டப் பெறும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய கவிதைகளை மொழி பெயர்க்க வேண்டும். முதல் படியாக 'அழகின் சிரிப்பு' என்ற கவிதைகளை முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவோமானால், உலகத்திலே உள்ள எந்தக் கவிதைகளுக்கும் பாரதிதாசன் கவிதைகள் குறைந்தவை அல்ல என்பதைக் காட்ட முடியும். அதையும் இந்த அரசு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 11] [புலவர் புலமைப்பித்தன்]

எனக்குக் கொஞ்சகாலமாக ஒரு விஷயம் சங்கடத்தை, வருத்தத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. மதிப்பிற்குரிய தேவநேயப் பாவாணர் அவர்களை வைத்து அகர முதலி ஒன்றை வெளியிடுவதற்கு அரசில் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் கிட்டத்தட்ட 13 பகுதிகளை வெளியிட இருப்பது பாராட்டத்தக்க ஒரு காரியமாகும். இதற்கு முன்னாலே கழகம் என்று இருந்ததை உலகத் தமிழ ஆராய்ச்சி 'நிறுவனம்' என்று எந்தக் காரணத்தாலேயோ மாற்றியிருக்கிறார்கள். ஒரு ஆண்டு அந்த 'கழகம்' என்ற பெயரேகூட நாட்டிலே தீவினையைப் பரப்பிக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. ஒரு கழகம் என்று இருந்தால், அது பல குழுக்களின் கருத்துக்களை, அரிய சிந்தனைகளை எடுத்துச் சொல்லும். கண்ணுதல் பெறும் கடவுள் என்று சொல்வார்கள். கழகம் என்பது ஒரு நல்ல சொல். அதை எப்படியோ உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்கின்ற முறையிலே இடையிலே மாற்றியிருக்கிறார்கள். புத்தகப் பதிப்பாகத்தான் அது இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறதே தவிர, அது முழு அளவில் நல்ல தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அதற்கு வாய்ப்புகள் உருவாகவில்லையா அல்லது அது அவைகளைச் செய்யவில்லையா என்பதுபற்றி எனக்குத் தெரியவில்லை. இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம், தமிழ் ஆராய்ச்சிகளை செவ்விய முறையிலே நடத்தவேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து வழக்குலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய அரசு கல்வித் துறையிலே எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம், இன்று கல்விக்காக அரசு அதிகமாக நிதி ஒதுக்கியிருப்பதுதான். இது கல்வியின் வளர்ச்சியில் மிக அக்கறை உள்ளவர்கள்தான் ஆட்சியிலே இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும். அரசு ஆசிரியர்களின் துணையுடன் செயல்பட வேண்டும், எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அதே போல் ஆசிரியர்களின் இன்ப துன்பங்களையும் புரிந்து செயல்பட வேண்டும். அவர்கள் துணையுடன் கல்வித் துறையை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டுமென்று சிந்தனை செய்து கொண்டிருக்கிறோமோ, அந்த அளவுக்கு நமது கல்வி அமைச்சர் அவர்கள் அதைச் செயல்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் துணையுடன் மேல்நிலைக் கல்வித் திட்டத்தை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்நிலைப் பள்ளிகள் மாற்றப்பட்டிருக்கின்றதன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நோக்கம் எந்த அளவுக்கு உருவாக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்குத் துல்லியமாக நிறைவேற்றும் வகையிலே செயல்பட வேண்டும். அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாட்டுப்புற மக்கள் கல்வித் துறையின் மூலம் நல்ல பல தொழில்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நன்கு புரிந்துகொள்கின்ற அடிப்படையில் கல்வி முறை அமைய வேண்டும். நாட்டிலே நல்ல கல்வி வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தக் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. நாம் இந்தக் கல்வியினுடைய சீரிய நோக்கத்தை மிகச் சிறப்பான முறையிலே நிறைவேற்றுகின்ற முயற்சியில் எதை எதைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய வேண்டும். அந்த முயற்சியில் கல்வி அமைச்சர் அவர்களும் அரசும் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக இந்த அரசு ஆக்க வேண்டும். தமிழ் மொழி பயிற்று மொழித் திட்டம் நிரந்தரமானதாக இருக்க வேண்டும். அந்தத் திட்டத்தைச் சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும். அதன் வாயிலாகப் பயின்றவர்கள், இந்த நாட்டினுடைய நல் முயற்சிகளுக்குத் துணையாக இருக்க வேண்டும். தொழிற் கல்வியிலும் மற்றும் எல்லா வகையிலும் முன்னேற முயற்சிக்கின்ற இந்த அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன். வணக்கம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது அவையில் கல்வி அமைச்சர் அவர்களால் தரப்பட்ட கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டு வரவு செலவுத் தொகையில் கால் பங்கு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்த மாநிலத்தின் வருவாயில் ஏறக்குறைய நாலில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவிடுவது என்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அமைப்பு என்று சொல்லிக்கொள்கிறேன். நமது மொத்த வருவாயில் நாலில் ஒரு பங்கை கல்விக்கு மாத்திரம் செலவு செய்கிறோம் என்பது வருங்காலத்திலே நம் நாடு நல்ல முறையில் உருவாக வேண்டும் என்பதில் நாம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தான் காட்டுகிறது. நமது அரசு மட்டுமல்ல, கல்வி வளர்ச்சிக்காக பொதுமக்களும் பெருமளவில் ஒரு பங்கு தந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செலுத்துகின்ற நிலவரியில் ரூபாய் ஒன்றுக்கு 45 பைசா அளவிற்கு 'எஜுகேஷன் செஸ்' என்று கொடுக்கிறார்கள். பொதுமக்கள் எந்த அளவுக்குத் துணையாக நிற்கிறார்கள் என்பதற்கு அது சான்றாக இருக்கிறது. நிலங்களை விற்பனை செய்கின்றபோதுகூட 'எஜுகேஷன் செஸ்' வருகிறது. அரசு ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்றால், அந்த ஊரிலுள்ள பெருமக்கள், ரூ. 25 ஆயிரம் நன்கொடையாகக் கொடுக்கிறார்கள். அந்தத் தொகையைக் கொடுத்து எங்கள்

பகுதியிலே மேல்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசு ஒரு தொடக்கப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், "நாங்கள் இடம் தருகிறோம், கட்டிடம் தருகிறோம்" என்று பொதுமக்கள் முன்வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதாக இருந்தால், கட்டடம் தருகிறோம், மனை தருகிறோம் என்றும் சொல்கிறார்கள். அரசு என்ன செய்கிறதோ அந்த அளவுக்கு பொதுமக்களும் கல்வி வளர்ச்சிக்காக தங்களுடைய பங்கைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-20)

அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு வருஷமும் பல பகுதிகளிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெறும். அதற்கு ஆசிரியர்கள், அதிகாரிகளின் முன்னூக்கம் இருந்தாலும்கூட, பொதுமக்கள் தாராளமாகக் கல்வி வளர்ச்சிக்கென்று நல்ல கருவிகளையும், நிதி உதவியையும், பள்ளிக்குத் தேவையான பொருள்களையும் பெரிய அளவில் தந்து உதவுகிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும்போது, இந்தச் சமுதாயம்—தமிழ் மக்கள், பெருமளவிற்கு கல்வித் துறையிலே, கல்வி வளர்ச்சியிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையில்லை, நியாயமான உணர்வும்கூட.

வளர்கிற தங்களுடைய குழந்தைகள், தாங்கள் ஈட்டுகிற செல்வத்தைச் சீராகப் பயன்படுத்த வேண்டுமென்றால், அவர்கள் சீரான கல்வி, நிலையான பண்பு, அறிவு பெற்றிருக்க வேண்டுமென்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து; அந்தப் பணியிலே சமூகம் மொத்தமாக ஈடுபடுகிறது. சமூகம் அளிக்கும் பணத்தை, இந்த நாட்டு மக்கள் அளிக்கும் பணத்தை நிர்வகித்து, சிறப்பான முறையில் அந்தப் பணியைச் செய்யும் பொறுப்பைக் கல்வித் துறை ஏற்றிருக்கிறது. எனவே கல்வித் துறை எவ்வளவு சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதை உணர்த்துவதற்காகத்தான் இதைச் சொன்னேன். கல்வித் துறை சிறப்பாகச் செயல்படுகிற இடங்களில், அதைப் பாராட்டுகிறோம். கல்வி அமைச்சரவர்கள், ஆசிரியராக இருந்து, தலைமை ஆசிரியராக இருந்து அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் இன்றும், தன்னை ஆசிரியர் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை அவரிடம் பல நேரங்களில் பார்க்கிறபோது, நான் மகிழ்ச்சியடைவது உண்டு. அந்த உணர்வோடு, அவர் கல்வித் துறையை நிர்வகிக்கும் பான்மையைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்த நாடும், சமுதாயமும் எதிர்பார்க்கிற அளவிற்கு கல்வித் துறை தன்னுடைய பணியை ஆற்ற முடிந்திருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று, கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கிற ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் கல்வி பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

நம் நாட்டிலே 33,000 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் எப்படி இருக்கின்றன? அதில் கட்டிடம் இல்லாத பள்ளிகள் எத்தனை? அரசுக்கு, பஞ்சாயத்து யூனியனுக்குச் சொந்தமில்லாத கட்டிடங்களில்—வாடகைக் கட்டிடங்களில்—இருக்கும் பள்ளிகள் எத்தனை? சொந்தமான கட்டிடமுள்ள பள்ளிகளிலே கூரையில்லாத பள்ளிகள் எத்தனை? மாணவர்கள் தங்கியிருந்து படிக்க வசதியில்லாத பள்ளிகள் எத்தனை? இவைகளையெல்லாம் சீரமைக்க, தனியாகத் திட்டம் போட வேண்டியது இன்றியமையாதது. வரவிலே 25 சதவிகிதம் செலவு செய்த பிறகும், கடந்த பல வருடங்களாக அப்படிச் செலவு செய்த பிறகும், சமுதாயத்திலுள்ள மக்கள் இயன்ற அளவிற்கு உதவி செய்தும், உயர முடியவில்லை என்பதை உணர்ந்து, கல்வித் துறையில் உயர்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய வேண்டும். கல்வியைப் பொறுத்த அளவில், கல்வி பயில்கிற அமைப்பு முறை, கல்வி பயிலும் மாணவர்கள், கல்வியைப் பயிற்றுவிக்கிற ஆசிரியர்கள்—இந்த மூன்று பிரிவினரும் ஒன்றுபோல இயங்கினால்தான், கல்வித் துறை முன்னேற முடியும். மாணவர்கள் கல்விக் கூடங்களுக்கு விரும்பி வருகின்ற நிலையை உருவாக்க வேண்டும். மாணவர்களைக் கவரும் இடமாக பள்ளிகளை மாற்ற வேண்டும். விளையாட்டு மூலம் கல்வி கற்பிக்கும் அமைப்பு முறை இல்லாமல்,. ஆடுகள் மாடுகளை அடைக்கும் சந்து போன்ற இடங்களில், தரையிலே உட்கார வைத்து, கம்பால்தான் மாணவர்களை ஆசிரியர்கள் கவர்ந்து வைத்துக்கொள்ள முடியு மென்ற சூழ்நிலையை மாற்றும் நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோமா என்பதை நாம் ஆராய வேண்டும். நம்முடைய கல்வித் துறைக்குள்ளே, தனியாக ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. வேண்டாத மாவட்டக் கல்வி அதிகாரி இருந்தால், அவரை அங்கே போடுவது வழக்கம். அவர் ஆராய்ச்சி நன்றாகப் பண்ணட்டும் என்று (சிரிப்பு) நினைக்கிறார்களோ என்னவோ. அவர்கள் நல்ல முறையில் ஆராய்ச்சி பண்ண வேண்டும். மாவட்ட வாரியாக, சொந்தக் கட்டிடம் இல்லாத ஆரம்பப் பள்ளிகள் எத்தனை என்று கணக்கு எடுக்க வேண்டும். அதற்கு ஒரு ஸ்டான்டர்ட் வைத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பப் பள்ளி என்றால் இப்படி இருக்க வேண்டுமென்று ஒரு ஸ்டான்டர்ட் வைத்துக்கொள்ள வேண்டும். மாவட்டத்திற்கு ஒரு மாடல் ஆரம்பப் பள்ளி அல்லது யூனியனுக்கு ஒரு மாடல் பள்ளி என்று வைக்க வேண்டும். தொகுத்து அறிக்கை வர வேண்டும். அதை நாம் போய்ப் பார்க்க வேண்டும். இப்போது மாடல் பள்ளிகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கும்போது, அவை அவல நிலையில் இருக்கின்றன என்று சொன்னால் தவறில்லை என்று கருதுகிறேன். நான் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வருகிறவன். எனக்கு நன்றாகத் தெரியும். முழுக்க முழுக்க ஆரம்பக் கல்வியை, அந்த மாவட்டத்தில், தேசிய உடைமையாக்கி, அரசு ஏற்றுக்கொண்டது.

1956-க்கு முன்னால். அந்த மாவட்டம் திருவிதாங்கூர் அரசாங்கத்தின்கீழ் இருந்தபோது, சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் திவானாக இருந்தார்கள். அவர், தனியார் பள்ளிகள் அனைத்தையும் அரசுப் பள்ளிகளாக்கச் சட்டம் கொண்டு வந்தார். அதை எதிர்த்த கிருத்துவ மிஷனரியைச் சேர்ந்த கோட்டயம் ஆர்ச் பிஷப் அவர்களும், அழகப்பாபுரம் பிஷப் அவர்களும் சிறையில் அடைக்கப் பட்டார்கள். அவ்வளவு அதிகாரத்தோடு பள்ளிகளை தேசியமயமாக்கினார்கள். இப்போது அந்த நிலைமை இருந்தால், உயர்நீதி மன்றம் அல்லது உச்ச நீதி மன்றத்திற்குப் போய் ஸ்டே வாங்கி, பரிகாசம் பண்ணுவார்கள். நம்முடைய அதிகாரிகளும் ஸ்டே வாங்கும் முறையைச் சொல்லிக் கொடுப்பார்கள். (சிரிப்பு) அந்த அளவிற்கு இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் மிக அண்மையிலே, நாகர்கோவிலிலுள்ள எஸ்.எல்.பி. உயர்நிலைப் பள்ளிக்கு வந்திருந்தார்கள். தமிழ் நாட்டில் அந்த அளவிற்குக் கல்லூரிகள் கிடையாது. சிறப்பான கட்டிட அமைப்பு முறைகள் உடைய அரசு உயர்நிலைப் பள்ளியாக அந்தப் பள்ளி இருக்கிறது. நாகர்கோவில் நகர்மன்றத் தலைவர் பதவி காலியானதால், அந்தப் பொறுப்பை துணைத் தலைவர் ஏற்க வேண்டும். அவரும் இல்லையென்றால் ஆர்.டி.ஓ. அவர்கள் ஏற்க வேண்டும். ஆனால் நாகர்கோவிலில், நகர் மன்றத் தலைவர் பதவி காலியானால், எஸ்.எல்.பி. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் நகர்மன்றத் தலைவராகப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று சொல்லி, கல்விக்கு அவ்வளவு சிறப்பு தந்திருந்தார்கள். கல்வித் துறையில் ஈடுபட்டவர்களுக்கு அந்த அளவிற்கு மதிப்பு இருந்தது. 1956-க்கு முன்னால் நாகர்கோவில் நகர்மன்றத் தலைவர் பதவி காலியானால், உடனடியாக நகர்மன்றத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும், தலைவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும்வரை அவர்கள் இருந்துகொண்டிருப்பார்கள். ஆசிரியர்களுக்கு அந்த அளவிற்கு மதிப்பு இருந்தது. பள்ளிகள் எப்படி மதிக்கப்பட்டன, எந்த நிலையில் பள்ளிகள் இருந்தன என்பதைச் சுட்டிக் காட்டத்தான் இதைச் சொல்கிறேன். அப்படிப்பட்ட பள்ளிகளின் கட்டிடங்களை நல்லமுறையில் அமைக்கவும், மாணவர்கள் சீருடை அணிந்து, பல்வேறு கருவிகளோடு விளையாடுவதற்கு விளையாட்டு அரங்குகளை ஏற்படுத்தவும், தனியாகத் திட்டமிட வேண்டும். இருக்கின்ற நிதியிலிருந்து செய்ய முடியாவிட்டாலும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களும், நிதி யமைச்சரவர்களும் கூடிப்பேசி, இரண்டு ஆண்டுகளுக்கு லாட்டரிச் சீட்டு மூலம் வருகிற நிதியை பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைக்க—குறிப்பாக ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களைச் சீர்திருத்த ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு, கல்வியை கன்கரன்ட் லிஸ்டில் வைத்திருக்கிறது. ஸ்டேட் லிஸ்டில் வைத்து, நம்மிடமே தள்ளாமல், அவர்களும் அதில் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்று, 30 ஆண்டு

களுக்குப் பிறகு, அவர்களைக் கேட்டால் என்ன சொல்வார்களென்றால், இந்தியாவில் நீங்கள்தான் நன்றாக இருக்கிறீர்கள் என்பார்கள். எனவே நம்முடைய கல்விக் கூடங்களின் அமைப்பு முறையை மாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 11 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளில் 42 சதவிகிதத்தினர் பள்ளிகளில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளி விவரம் மிகக் குறைவு. கல்வித் துறையில் மாத்திரம் இப்படிப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. எல்லாத் துறைகளிலிருந்தும் வரும் புள்ளிவிவரங்களிலும் பெரும் முரண்பாடு இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, புள்ளிவிவர இலாக்கா அமைச்சர் என்ற முறையில் சொல்கிறேன். (சிரிப்பு) வேடிக்கைக்காக ஒன்று சொல்லுவார்கள்.

"Statistics like lipstick is not that much true".

என்று தமாஷுக்குச் சொல்லுவார்கள். புள்ளி விவர இலாக்கா சிறப்பாக நல்ல புள்ளி விவரங்களைத் தருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : ஆங்கிலத்தில் சொன்னதை தமிழில் அமைச்சரவர்கள் சொல்லுவார்களா ?

திரு. ம. சங்கரலிங்கம் : புள்ளி விவர இலாக்கா முறையாக, தவறு இல்லாமல் புள்ளி விவரங்களைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அப்படித் தருவதாக அமைச்சரவர்கள் நினைத்துக்கொண்டு, ஏமாந்துவிடக் கூடாது. நாங்கள் சொல்வதையும் அமைச்சரவர்கள் கேட்க வேண்டும். புள்ளிவிவரங்கள் எப்படி இருக்கின்றன என்றால், திருவிதாங்கூர் பற்றிச் சொல்கிறேன், என்னைப் பாதிக்காத நிலையில் சொல்கிறேன்,

(பிற்பகல் 6-30)

திருவிதாங்கூர் சமஸ்தான சட்டமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. தோவாளைத் தாலுக்காவில் பூதப்பாண்டி என்ற ஒரு நகர் இருக்கிறது. அந்த நகருக்கு அருகிலே தாடகாமலை என்ற ஒரு மலை இருக்கிறது. அந்தப் பகுதியில் குரங்குகள் அதிகமாகத் தொல்லை கொடுத்து வந்தன. தாடகமலை வட்டாரத்தில் எவ்வளவு குரங்குகள் இருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கேள்வி கேட்டார். "அசெம்பிளி அர்ஜென்ட்" என்று போடப்பட்ட கடிதம் கலெக்டருக்கு வந்தது. கலெக்டரிடமிருந்து தாசில்தாருக்குப் போனது. தாசில்தார் உடனே வன இலாகாவிற்கு அதை

அனுப்பினார். வன இலாகா அவர்களுக்கே உரிய முறையில் பதில் சொன்னார்கள். முயற்சி எடுத்து மரங்களில் எல்லாம் ஏறி கணக்கெடுக்க ரொம்ப நாள் ஆகும், அர்ஜென்ட்டாகப் பதில் சொல்ல முடியாது என்று வன இலாகாவினர் சொல்லிவிட்டார்கள். இந்த பதிலை அப்படியே தாசில்தார் கலெக்டரிடம் சொன்னால், அவருக்கு வேலை பறிபோய் விடும் என்பதால், அவர் அந்த பதிலை அப்படியே கலெக்டருக்கு அனுப்பாமல் கிராம முன்சிப்பை அணுகினார். கிராம முன்சிப்பிடம் அந்த மலையில் எத்தனை குரங்குகள் இருக்கின்றன என்று சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். இவ்வளவு தானா, இதற்குப் போய் மலையில் எத்தனை குரங்குகள் இருக்கின்றன என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டுமா, நான் சொல்லுகிறேன் 7 ஆயிரம் என்று குறித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். பல நேரங்களில் குரங்குகள் ஒரே இடங்களில் இருப்பதில்லை, வேறு மலைகளுக்குப் போய் வந்து கொண்டிருக்கும் என்பதையும் அவர் சொன்னார்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் புள்ளிவிவரத்தைப் பற்றி ஒரு விவரத்தைச் சொன்ன காரணத்தால், நானும் புள்ளிவிவரத்தைப் பற்றி ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆறு முதல் 11 வயதுத் தொகுதி சிறுவர்கள் 25 இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்று கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பில் ஓரிடத்திலும், 6 முதல் 11 வயதுத் தொகுதி சிறுவர்கள் 26 இலட்சம் பேர் படிக்கிறார்கள் என்று 90 ஆவது பக்கத்திலும் புள்ளிவிவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரம் சரியான புள்ளிவிவரம்தானா ? ஒருவேளை அச்சுப் பிழையாகக் கூட இருக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் சொல்லக் கூடிய புள்ளிவிவரம் அதிகாரிகளால் சேகரித்துக் கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரம். அச்சுப்பிழையால் ஏற்படுகின்ற வித்தியாசப்படுகின்ற புள்ளிவிவரத்தைப்பற்றி நான் சொல்லவில்லை. அச்சுப்பிழை ஏற்படுவது சகஜம். ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிப்பார்ட்மென்டில் உள்ள அதிகாரிகள் புள்ளிவிவரங்களைச் சரியான முறையில் தான் வெளியிடுகிறார்கள். உதாரணத்திற்கு பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால், அதிகமாக ஊதியம் வாங்கக் கூடிய மாநிலம் தமிழகம் என்றும் மேற்கு வங்காளத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குத் தான் குறைந்த அளவு ஊதியம் வழங்கப்படுகிறது என்றும் அவர்கள் தந்த புள்ளிவிவரத்தை நான் படித்து ஆச்சரியப்பட்டு மறுபடியும் அதை நன்றாகப் பரிசீலித்து புள்ளிவிவரம் சேகரிக்கும்படி சொல்லியிருக்கிறேன். காரணம் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய மாநாடுகள் கூட நடந்துகொண்டிருக் கின்றன. புள்ளிவிவரம் தவறாக இருந்து ஏதாவது சிக்கல் வந்துவிடக்கூடாது

அல்லவா, அதனால்தான்; புள்ளிவிவரத் துறை மிகுந்த அக்கறையோடு வேலை செய்கிறது என்பதை நான் அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது அச்சுப்பிழையாகக்கூட இருக்கலாம். This is normally what we call 'printer's devil'.

திரு. ம. சங்கரலிங்கம்: மீண்டும் கல்வித் துறைக்கு வர விரும்புகிறேன். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத் துறைக்கும் அமைச்சராக இருக்கிற காரணத்தால், தன்னுடைய இலாகாவைப் பற்றிச் சிறப்பாகச் சொல்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட பாங்கினை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சுவையான செய்தியைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொல்லிக்கொண்டிருந்த அந்தச் சுவையான செய்தி என்ன ஆனது?

திரு. ம. சங்கரலிங்கம்: சட்டசபைக்கு குரங்குகளின் தொகை பற்றிய புள்ளிவிவரம் போனது. அதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, அது தவறான தகவல் என்று தோவாளைப் பகுதியிலிருந்து அங்கு உறுப்பினராக இருந்த திரு. சிவதாணு என்பவர் கூறியவுடன், அது எவ்வாறு தவறான புள்ளிவிவரம் என்கிற முழு விவரங்களையும் விளக்கிச் சொன்னார். அந்தப் புள்ளிவிவரக் கதையை மனதில் வைத்துக்கொண்டு தான் இதை நான் சொல்கிறேன். ஆனால் அவர்கள் சொன்னதை நான் நேரில் பார்த்தது கிடையாது. 'ஸ்டேட்டிஸ்டிக்ஸ் ஈஸ் தி டெவில் ஆப் தி கன்ட்ரி' என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்தப் புள்ளிவிவரக் கணக்குகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விஷயம் நீண்ட காலத்திற்கு முன்பு திருவாங்கூர் மன்னராட்சிக் காலத்தில் நடைபெற்றது. இப்போது அது எல்லோருக்கும் மறந்து போன ஒன்று. நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே முக்கியமான ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி முடித்து விடுகிறேன். 11 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள 42 சதவிகித மாணவர்கள் பள்ளிகளில் சேர முன்வரவில்லை என்று புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரம் கூட மிக மிகக் குறைவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதை விடக் கூடுதலாக மாணவர்கள் இன்னும் இருப்பார்கள். அவர்களையும் பள்ளிகளுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் மட்டும் முயன்றால் போதாது. வறுமையும் பொருளாதார நிலையும் தான் இதற்குக் காரணம். அய்ந்து அல்லது ஆறு வயது ஆன உடனேயே டென்னிஸ் ஆடுகின்ற இடங்களில் பந்து எடுத்துக் கொடுக்க அந்தச் சிறுவர்கள் வறுமையின் காரணமாகப் போய்விடுகிறார்கள். பிள்ளையைப் பெற்றவன் பிள்ளைக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று தான் ஆசைப்படுகிறான். ஆனால் படிக்க வைப்பதற்கு அவனிடம் வசதியும் வாய்ப்பும் இல்லை. ஆகவே பிள்ளைகள் இடையிலே படிக்காமல் நின்று விடுகின்ற நிலை இருக்கிறது. பள்ளி சாராக் கல்வி என்கின்ற ஒரு கல்வி முறையை நாம் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். பள்ளியில் சேர்ந்து படிக்க வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கின்ற பிள்ளைகளை மட்டும் அதில் சேர்த்து, பள்ளி சாரா மையங்களை அமைக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் சமுகத்தில் ஏற்படுவதற்குக் காரணம் வறுமை தான். படித்துக்கொண்டிருக்கும்போது, குடும்பம் வறுமையால் வாடுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் ஏதாவது ஒரு தொகையைச் சம்பளமாக யாராவது தர முன் வந்தால், உடனே படிப்பை விட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். ஆகவே பள்ளி சாரா மையங்களில் அப்படிப்பட்டவர்களைச் சேர்த்து, சிறு வேலை ஏதாவது அவர்களுக்குக் கொடுத்து அதன் மூலம் ஏதோ ஒரு 20 ரூபாய் அல்லது 30 ரூபாய் அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கொடுத்து, கல்வியை அனைத்துப் பிரிவினருக்கும் புகட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் இப்பொழுது வொக்கேஷன் சி.இ.ஓ. என்று போட்டிருக்கிறோம். பொதுவாக இப்பொழுது எப்படி இலாகாக்கள் செயல்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மந்திரியைப் பார்த்து மாதம் மும்மாரி பொழிந்ததா என்று பழைய கால மகாராஜா கேட்பதாகச் சொல்லுவார்கள். அதே மாதிரி கல்வி இலாகா இயக்குநர் வருவார். சி.இ.ஓ. மற்றும் கல்வித் துறை அதிகாரிகள் எல்லாம் அங்கே வருவார்கள். எல்லாப் பள்ளிகளும் நன்றாக நடக்கின்றனவா என்று கேட்பார். உடனே அவர் எல்லாப் பள்ளிக் கூடங்களும் நன்றாக நடைபெறுகின்றன என்று சொல்லுவார். அந்த மாதிரி இனிமேல் நடைபெறக் கூடாது. உண்மையில் அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்து கண்டறிந்து காரியங்களைச் செய்ய வேண்டும். சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கின்ற இப்படிப்பட்ட குறைகளைக் களைய வேண்டும். உண்மையிலே என்ன நடைபெறுகிறது என்பதைக் கண்டறிந்து செயல்பட வேண்டும். முறைசாராக் கல்வியில் இன்னும் அதிகமான தீவிரமான கவனம் செலுத்தி அதிகப்படியான மாணவர்களை சேர்த்து, 11 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்து மாணவர்களையும் பள்ளிக்குக் கொண்டு வந்தாக வேண்டும். முதலில் அவர்கள் பள்ளிக்கு வராமலிருப்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த அடிப்படைக் காரணத்தைக் கண்டுபிடித்து, அதை நிவர்த்திக்க வேண்டும். சமூகத்திலுள்ள பொருளாதார

நிலையின் காரணமாக, வறுமையின் காரணமாக அல்லல்படுகின்ற பெற்றோர்களுக்கு மாதந்தோறும் 20 ரூபாய் அல்லது 30 ரூபாய் கொடுத்து அவர்களுடைய பிள்ளைகளுக்கு அரசாங்கம் கல்வியைப் புகட்டக் கூடிய முறையில் ஒரு கல்வி முறையை உருவாக்க முடியுமா என்பதைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தரமான கல்வியை இன்றையதினம் மாணவர்களுக்கு நாம் தருகிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்நிலைக் கல்வி வரை எந்த அளவுக்குக் கல்வி ஸ்டான்டர்ட் இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஒவ்வொரு வருஷமும் தவறாமல் கல்வித் துறையிலிருந்து ஒரு சர்க்குலர் வருவதுண்டு. இந்த வருஷமும் ஒரு சர்க்குலர் வந்திருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளுக்கு அந்த சர்க்குலர் வந்திருக்கிறது. இந்த வருடம் ஒருவரையும் பெயில் ஆக்கக் கூடாது என்று சர்க்குலரில் சொல்லப்பட்டிருக்கிறது. காரணம் ஒருவருக்குமே சரியாகப் பாடங்களைச் சொல்லிக்கொடுக்கவில்லை. எல்லோரையும் கூண்டோடு கைலாசம் அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் மாணவர்களுக்கு எப்படி தரமான கல்வி கிடைக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பள்ளிகளில் கல்வியின் தரம் எங்கு போய்க்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சுருக்கமாகச் சொன்னேன்.

அடுத்தபடியாக, பள்ளிகளில் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுடைய பணி மிக முக்கியமான பணி. நேர்மையான முறையில், அவர்களுக்குக் குறை எதுவும் இல்லாத முறையில் கடமை உணர்வுள்ள ஆசிரியர்களாக அவர்கள் திகழ வேண்டும். அவர்களுக்குக் குறை ஏதும் இருக்க முடியுமா என்பதில் பலருக்கு ஐயம் இருக்கிறது. தாங்கள் ஆசிரியர் பிரதிநிதிகள் நான்கு ஐந்து பேர் மாறி மாறி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி அடிக்கடி கேட்பதால், ஆசிரியர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் இல்லாவிட்டாலும், இவர்கள் ஏதாவது சொல்லிக்கொண்டு தான் இருப்பார்கள் என்று தப்பாக எண்ணுகின்ற மனோபாவம் வளர்ந்துகொண்டிருக்கிறது. இது நல்லதல்ல. மற்ற இலாகாக்களில் இருப்பவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருந்தாலோ அல்லது வர வேண்டிய ஒரு இன்கிரிமென்ட் கிடைக்காமல் இருந்தாலோ, இதைத் தவிர வேறு வழிகளில் வாங்கலாம் என்கின்ற ஒரு வசதி இருக்கிறது. இரண்டு ரூபாய் அல்லது 3 ரூபாய் இன்கிரிமென்ட் போன்ற விஷயங்களில் என்ன தகராறு வேண்டியிருக்கிறது, 30 ரூபாய் அல்லது 40 ரூபாய் வாங்கக் கூடிய வசதியிருக்கிறதே என்கின்ற எண்ணத்தில் இதைப் பிரச்சினை ஆக்காமல் விட்டு விடுகிறார்கள். ஆசிரியர்களுக்கு அதுமாதிரி வாய்ப்புகள்

கிடையாது. ஆசிரியர்கள் தவறான வழியில் போகாமல் அரசு பிறப்பித்த அரசாணையின்படி தங்களுக்கு நேர்மையான வழியில் வர வேண்டிய சலுகைகள் வர வேண்டுமென்று நினைக்கிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். அப்படி அவர்கள் நினைப்பதில் அல்லது எதிர்பார்ப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? அரசாங்கம் போடுகின்ற உத்தரவை நிறைவேற்றுவதில் ஒரு சி.இ.ஓ.-வுக்கும் அவருக்குக் கீழே இருக்கக் கூடிய டி.இ.ஓ.-வுக்குமே இன்டர்பிரட்டேஷனில் கருத்து வேறுபாடு இருக்கிறது. அதிகாரிகளுக்குள்ளேயே முரண்பட்ட கருத்து இருக்கிறது. ஒரே ஜி.ஓ.-வை எப்படியெல்லாம் இன்டர்பிரட் செய்ய வேண்டுமோ அப்படி எல்லாம் அதிகாரிகள் இன்டர்பிரட் செய்கிறார்கள். ஒரு இடத்தில் அரசு ஆணையின்படி சலுகையை ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்றால், இன்னொரு இடத்தில் அதே சலுகையை அதே பிரிவைச் சார்ந்த ஆசிரியர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். அதிகாரிகளுக்குள்ளே ஒரு கோவார்டினேஷன் இருக்க வேண்டாமா? அதிகாரிகளுடைய கான்பெரன்ஸ் எல்லாம் நடைபெறுகிறது. மகாராஜா மந்திரியைப் பார்த்து மாதம் மும்மாரி பொழிந்ததா என்று கேட்டது மாதிரி, கல்வித் துறையிலும் இன்றையதினம் நடைமுறையில் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட ஒரு காலத்தில் தலைமை ஆசிரியாக இருந்தவர். தலைமை ஆசிரியர் பதவியைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர். இங்கு இருக்கக்கூடிய ஆசிரியர் பிரதிநிதிகளும் ஆசிரியர்களாக இருந்தவர்கள்தான். தலைமை ஆசிரியர் ஒரு வகுப்புக்கு வருகிறார். வகுப்பு எப்படி நடைபெறுகிறது என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்கிறார். புதிய சிலபஸ், புதிய பாடத்திட்டப்படி பாடங்களை மாணவன் ஒரு மாதம் இரண்டு மாதம் படித்து வருகிறான். புதிய பாடத்தை எந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக்கிறான் என்பதை அறிய முன்வருகிறார். அப்படிப்பட்ட முயற்சி நல்லது தான். அதுபோல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சி.இ.ஓ.-வைக் கூப்பிட்டு இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால், அந்த சி.இ.ஓ. உடனே அந்தக் கேள்விக்கான பதிலை செக்ஷன் கிளார்க்கைக் கேட்டுத் தான் சொல்லுவாரே தவிர, அவராகச் சொல்லுகின்ற நிலை இல்லை. ஒரு முக்கியமான பிரச்சினையில் சிக்கல் இருக்கிறது என்றால், அவர்களே அதில் நேரடியாக ஈடுபட்டு, அரசின் கொள்கையை விரைந்து செயல்படுத்த பிரச்சினைகளை நன்றாகப் புரிந்து வைத்து, நாட்டின் எதிர்கால நிலையை நன்றாகப் புரிந்து, அதற்கு விளக்கத்தைத் தந்து அதற்கேற்ற வகையில் செயல்பட வேண்டும். ஆனால் ஒரு சிக்கல் வரும்போது, அதைத் தீர்க்கத் தெரியாமல் அவர்கள் தவிக்கிறார்கள். சி.இ.ஓ.-ஆக இருப்பவர்கள் இன்னும் இரண்டு மாதத்தில் டிரான்ஸ்பர் ஆகிவிடப் போகிறோம் என்கின்ற எண்ணத்திலேயே பணிபுரிகிறார்கள்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 எப்ரல் 11

(பிற்பகல் 6-40)

நான் இன்னும் சொல்லுவதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. இருந்தாலும் முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் இதைப்பற்றிச் சொன்னால் தவறு இல்லை என்பதற்காக ஆதாரமாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல முற்படுகிறேன். உதாரணமாக, 1970-க்குப் பிறகு, இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு முதல்நிலைத் தமிழாசிரியர்களாக அரசுப் பள்ளிகளில் பதவி உயர்வு கொடுத்தார்கள். இவ்வாறு இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருந்து முதல்நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு அடைந்தவர்களையெல்லாம் அவர்கள் வேலையில் சேர்ந்த நாள் முதல் அவர்களது பணியை வரன்முறைப்படுத்த வேண்டும் என்று நம்முடைய அரசு 1973-லே முடிவெடுத்தார்கள். அதன்படி 'வேலையில் சேர்ந்த நாள் முதல் அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டது. ஆனால் 1977-லே இன்னொரு ஆணை பிறப்பித்து, அவர்களைப் பணி வரன்முறை செய்தது தவறு என்று அரசு கருதுகிறது என்று அனுப்புகிறார்கள். அந்த ஆணை தவறு என்று அனுப்பும் இந்த ஆணை ஏன் தவறாக இருக்கக்கூடாது? முன்னால் 1973-ல் ஆணையைப் பிறப்பித்தபோது, அப்போது இருந்த டைரக்டர், இணை டைரக்டர்கள் எல்லாம் 'ரெக்கமன்ட்' பண்ணித் தான் பிறப்பிக்கப்பட்டது.

"The Education Department seriously considered the matter and examined it elaboratetly" என்று சொல்லி அதற்குப் பிறகு இந்த ஆராய்ச்சிகளைக் கொண்டுவரும் நிலைமை வந்திருக்கிறது. 1973-லே எல்லாமே ஆராய்ந்து பரிசீலித்து வெளியிடப்பட்ட ஆணை 1977-லே பெரிய தவறு என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். 1973-லே வெளியிடப்பட்ட அந்த ஆணை தவறு என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகவே, 21—3—1974-லேயிருந்து அவர்களது பணிகளை வரன்முறைப்படுத்த வேண்டாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். கல்வி சார்பு விதிகளின்படி தான் அரசுப் பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கவர்ன்மென்ட் ரூல்ஸ்படி தான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், 1970-க்குப் பிறகு கழகப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக மாறினால் கூட, அந்தப் பள்ளிகளை நிர்வகித்துக்கொண்டிருந்த முதன்மைக் கல்வி அதிகாரிகள் அந்த ஆசிரியர்களைக் கழகப் பள்ளி விதிகளின்படி நியமித்துவிட்டார்கள். அவர்களை 30 வயதுக்கு மேலும் நியமித்துவிட்டார்கள். கல்வி சார்பு விதிகளின்படி பார்த்தால், 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்படக்கூடாது. ஆகவே, அவர்களைப் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்ய வேண்டும் என்று பிறப்பித்த அந்த ஆணையை ரத்து செய்துவிட்டு, அவர்களை 1974 முதல் ரெகுலரைஸ்

1979 ஏப்ரல் 11] [திரு. ம. சங்கரலிங்கம்]

செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், ஜோசியம் பார்ப்பது போல் இருக்கிறது. ஜோசியக்காரர்களிடத்தில் சென்றால் 'இந்த நாள் நல்ல நாள் இல்லை, ஆகாது, இந்த நாளில் போகக்கூடாது' என்று சொல்வான். நாம், 'இல்லை இல்லை, இந்த நாளை விட்டால் வேறு நாட்கள் எனக்கு வசதியாக இருக்காது, இந்த நாளிலே தான் போக வேண்டும், எப்போது போகலாம்" என்று கேட்டால், அப்புறம் சொல்வான் "அப்படியானால் சொல்கிறேன்" என்று சொல்வான். அதுபோலத்தான் கல்வித் துறையிலேயும் இந்த ஜோஸ்ய வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இது நமது கல்வித் துறையிலே ஏற்பட்ட மிகப் பெரிய தவறு. நம்முடைய நாட்டிலே நெருக்கடி காலம் இருந்தபோது அப்போது இருந்த அட்வைசர் அவர்களிடத்திலே யாரோ சொல்லிவிட்டார்கள். இந்த கழகப் பள்ளி விதிகளின்படி அப்போது இருந்த அரசு அவர்களுக்கு வேண்டியவர்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லி இம்மாதிரி ஆணைகளைப் பிறப்பித்தார்கள். சட்டமன்றப் பேரவையிலேயும், மேலவையிலேயும் நாங்கள் பலர் எங்களுடைய பேச்சிலே இந்தப் பிரச்சினைகளைக் குறித்து அடிக்கடி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். அதற்குப் பிறகு 2—3—1978-லே நானே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு விடையாக அமைச்சர் அவர்கள் விளக்கமாக அறிக்கை ஒன்றை இந்த அவைக்கு அளித்தார்கள். அந்த அறிக்கை இதோ என்னிடத்தில் இருக்கிறது. அந்த அறிக்கையை முழுவதும் படித்தால் அதிக நேரம் ஆகும். ஆகவே, குறிப்பாக ஒன்றை மட்டும் படித்துக்காட்டுகிறேன்:

"ஆகையால் அரசு குறிப்பாணை எண் 89091/பி2/77-2, கல்வி, நாள் 27—9—1977-ன்படி—இந்த கல்விப் பிரச்சினை, ஆசிரியர்களின் பிரச்சினை பற்றிப் பேசும்போது சலிப்புத் தட்டுவதற்குக் காரணமே நிறைய ஜி.ஓ.-க்களைச் சொல்லியாக வேண்டும். இந்த ஜி.ஓ.-க்களே மனதைக் குழப்பி விடும்—கல்வி, நாள் 27—9—1977-ன்படி வயது வரம்பு மீறியவர்களுக்கு ஏற்கனவே பணிவரன்முறைசெய்து பிறப்பித்த ஆணையை ரத்து செய்தும், அவர்கட்கு வழங்கப்பட்ட அதிக உயர்வுத் தொகையைப் பிடித்தம் செய்யும்படி ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென்றும் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண் 196976/பி-1/72, நாள் 6—12—1972-ல் கண்டுள்ள உத்தரவின்படி 40 வயது வரை வயது வரம்பு விதியினைத் தளர்த்துவது ஆரம்பப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் பி.டி. பட்டதாரிகளானாலும் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் பதவிக்குத் தகுதி பெற்றிருந்தாலும், ஐந்து ஆண்டுகள் ஆசிரியர் பணி புரிந்திருந்தால், அவர்கள் மற்ற வகைகளில் அப்பதவிக்குத் தகுதியுடையவ

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 11

ரைத் தேர்வாணைக் குழுவினால் கருதப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும் தமிழாசிரியர்களை பொதுப் பணி தேர்வாணைக் குழுவினால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர, முதல்நிலைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற இவ்விதி பொருந்தாது.''

முன்னாலே ஒரு விதி அதாவது 1972-லே இருந்தது. முப்பது வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் அவர் அதற்கு முன்னால் அய்ந்து ஆண்டுகள் வேலை பார்த்திருந்தாலோ அல்லது தொடர்ந்து வேலையில் இருந்தாலோ, அவரை 40 வயது வரை பணியில் நியமிக்கலாம் என்று இருந்தது. அதை மனதில் வைத்துத்தான், அதையொட்டித் தான் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன். ஆனால் இப்போது இப்படி ஒரு அரசாணை போடப்பட்டிருக்கிறதே என்று கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "தேர்வாணைக் குழுவால் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், புதிதாக நியமிக்கப்படுபவர்களுக்குத்தான் இந்த 40 வயது என்று தளர்த்தப் பட்டிருக்கிறது; இது பதவி உயர்வு செய்யப்பட்டவர்களுக்கு இல்லை, பொருந்தாது'' என்று சொன்னார்கள். நான் இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு 30 வயதுக்கு முன்னாலேயே நியமிக்கப்பட்டு அந்தப் பதவியில் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, பிறகு முதல்நிலைத் தமிழாசிரியர் பதவிக்கு உயர்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று விளக்கமாக எடுத்துச்சொன்ன பிறகு, அமைச்சர் அவர்கள் "உறுப்பினர் கருத்து பரிசீலனை செய்யப்படும்'' என்று உறுதிமொழியளித்தார்கள். இது 2—3—1978-லே நடந்தது. பின்பு இதே விஷயத்தை 12—9—1978-லேயும் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்தேன். அதற்கு முந்தைய நாள் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இதுபற்றிக் கேட்டதற்கும் அமைச்சர் அவர்கள் இதே விளக்கம் தான் அளித்தார்கள். இரண்டாவதாக நான் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, "இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியில் நியமனம் செய்யப்பட்டபோது 30 வயதுக்கு மேற்பட்டு இருந்து பின்னர் முதனிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்டவர்களுக்கு 21—3—1974 முதல் கொண்டு தான் பணியை வரன்முறைப்படுத்த வேண்டும் என்று அரசு குறிப்பாணை எண் 89091/பி-2/77-2, கல்வி, நாள் 27—9—1977-ல் ஆணையிடப்பட்டது. எனவே, 1—4—1979-க்குப் பின் 30 வயதுக்கு மேற்பட்டும், அரசுப் பணியில் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு தமிழ் நாடு கல்வி சார்பு பணி விதிகளின்படி கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பினைத் தளர்த்தி ஆணையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால்,

1979 ஏப்ரல் 11] [திரு. ம. சங்கரலிங்கம்]

அவர்கள் முதனிலைத் தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்க அதே நாளிலிருந்து அவர்களது பணியை வரன்முறைப்படுத்தும் நிலை ஏற்படவில்லை. இந்நிலை எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும் என்ற இந்த அறிவிப்போடு, இந்த அறிக்கையோடு நேற்றைய தினம் நான் இது தொடர்பாகத் தந்த உறுதியின்படி இதைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று இந்த அவையிலே உறுதிமொழி அளித்தார்கள். இரண்டாவது தடவையாக உறுதிமொழி அளித்தது 12—9—1978-லே. ஆனால், நாம் இப்போது இருப்பது 11—4—1979-லே. இன்றுவரை இதுசம்பந்தமாக எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப் படவில்லை. இப்படி, நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காத போது போராட்டம் ஒன்று தானே வழி! ஆகவே தான் இன்றையதினம் ஆசிரியர்கள் போராடுகிறார்கள். ஆசிரியர்கள் இன்றைய தினம் போராடுகிறார்கள் என்று நாம் சொல்கிறபோது, அவர்கள் முன்கூட்டியே குறைகளைப் பற்றி முறையீடு செய்து அதன்பின்தான் போராடுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்திலே 9 ஆசிரியர்களும், மற்ற மாவட்டங்களிலே இருந்து 100-க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் தங்களது பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என்று அரசுக்கு மனு தந்திருக்கிறார்கள். இங்கே சட்டமன்றத்திலே, மேலவையிலே நாங்கள் பேசுகிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானமாக இந்தப் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைகள் பற்றிப் பரிசீலனை செய்கிறோம் என்று உறுதிமொழி அளித்த பிறகு, அந்த உறுதி மொழியைச் செயல்படுத்தவேண்டிய இலாகா இன்றையதினம் இயங்குகிறதா? இல்லையா? தெரியவில்லை. இந்த உறுதி மொழிகளைச் செயல்படுத்தி ரிப்போர்ட் தருகிறதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு ஆசிரியரிடமிருந்தும் பிடித்தம் செய்கிறார்கள். ஆளுக்கு 3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் என்று பிடித்தம் செய்கிறார்கள். இந்த விவரங்களையெல்லாம் நானே எழுதி அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். தற்காலிகமாக பிடித்ததை நிறுத்துங்கள் என்று சொல்கிறோம். இந்த மேலவையிலே இவ்வளவு தூரம் வற்புறுத்திய பிறகு நிலைமை இப்படி இருக்கிறது என்று சொன்னால், இந்த இலாகாவே சரியாக இயங்கவில்லை என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் எனக்குப் புரியவில்லை. இந்த இலாகா இயங்கவேயில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. பாதிக்கப்பட்ட ஆசிரியர் எழுதியனுப்பிய கடிதம் என்னிடத்திலே இருக்கிறது. அவர் தீக்குளிக்கப் போகிறேன் என்று எழுதியிருக்கிறார். இவ்வாறு பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை குறைவு. அவர்களுக்கு நான் உறுதிமொழி அளித்திருக்கிறேன். அமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றி எடுத்துச் சொல்லி, சட்டமன்றத்திலே வாதாடி நிவர்த்தி காண்பேன் என்று அவர்

களுக்கு நான் உறுதியளித்திருக்கிறேன். தேர்வாணைக்குழு ஏற்பட்டது பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க. அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கவில்லை. அவர்கள் தமிழாசிரியர்களை நியமிக்கவில்லை. பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும்போது தேர்வாணைக் குழு "Your probation will be declared within three years" என்று சொல்கிறது. அவர்கள் இன்ஸ்பெக்டர் டெஸ்ட், அக்கவுண்ட் டெஸ்ட் எல்லாம் பாஸ் பண்ணினால் தான் அவர்களது ப்ரொபேஷனை 'டிக்ளேர்' செய்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் பதவி உயர்வு பெற்று தலைமை யாசிரியர்களாக, முதன்மைக் கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற்று டைரக்டர்களாகக்கூட வரலாம். செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அப்படியல்ல. தமிழாசிரியர்கள் அப்படியல்ல. அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமிக்கப்படவில்லை. அப்படி இருக்கும்போது, தேர்வாணைக்குழுவால் 8 ஆண்டுகளுக்குள் பாஸ் செய்ய வேண்டும் என்று சொல்லி அந்தத் தேர்வுகளிலே பாஸ் பண்ணாதவர்கள் 7, 8, 10 ஆண்டுகளாகி அவர்களுக்கு டிஸ்சார்ஜ் செய்து கொடுத்து, அதற்குப் பிறகு என்றைக்கு அவர்கள் வேலைக்குச் சேர்ந்தார்களோ அந்த நாள் முதலே அவர்கள் பணி ரெகுலரைஸ் செய்யப்படுகிறது. அப்படி தேர்வாணைக் குழுவே கூட நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறு சலுகைகள் அளிக்கும்போது, இந்தப் பிரச்சினையில் இம்மாதிரிச் சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணம், ஏதோ எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வேலைக்கு வந்திருக்கின்ற ஒரு செக்ஷன் கிளார்க் எழுதி வைத்த நோட் அப்படியே அதிகாரிகளால் சரியாகப் பார்க்கப்படாமல் கையெழுத்துப் போடப்பட்டு, துணை இயக்குநர் அளவிலேயும், இணை இயக்குநர், இயக்குநர் அளவிலேயும் எஸ், எஸ், என்று கையெழுத்துப் போடப்பட்டு மேலே வரைக்கும் வந்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறல்ல. கல்வி அமைச்சர் அவர்கள் வந்து, அலுவலர்களையும் அழைத்து வந்து, என்னையும் அழைத்து வைத்து சேர்ந்து பரிசீலித்தால் தவறு எங்கே நடந்திருக்கிறது என்று நான் சொல்ல முடியும். அரசு பல நன்மைகள் செய்ய நினைத்தாலும் அதைச் செயல்படுத்துகின்ற இயந்திரம் சரியாக இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு அரசாணையை வைத்து இன்சென்டிவ் இன்கிரிமென்ட் ஒரு சி.இ.ஓ. வழங்குகிறார். அதே அரசாணையைக் காட்டி இதன்படி உனக்கு இன்சென்டிவ் இன்கிரிமென்ட் கிடையாது என்று இன்னொரு சி.இ.ஓ. சொல்கிறார். நான் சட்ட மன்றத்திலே கூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பல விளக்கங்களும் அளித்திருக்கிறார்கள். இந்தக் குறைகளையெல்லாம் களையத்தக்க விதத்தில், கல்வி இலாக்காவை இந்த நாடும் மக்களும் சமுதாயமும் போற்றத்

(பிற்பகல் 6-50)

தக்க அளவுக்கு வேகமாக இயங்குகின்ற ஒரு இலாக்காவாக மாற்றவேண்டும். என்னுடைய நண்பர்கள், குறிப்பாக ஆசிரியப் பிரதிநிதிகள் இங்கே அவையில் பேசும்போது 'இன்னொரு நெறியாளர் பதவி உருவாக்க வேண்டும்' என்று கோருவதைக் கேட்டிருக்கிறேன். அப்படிப் புதிதாக நெறியாளர் பதவி உருவாக்கப்படுமானால், மீண்டும் 'மும்மாரி மழை பெய்கிறதா' என்று கேட்கிற மாநாடுதான் நடக்குமே தவிர, வேலை எதுவும் நடக்காது. ஆக, கல்வித் துறையில் இயக்குநர் பதவிகளை எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டே போவதை நான் ஆதரிக்கவில்லை. அப்படி அதிகரிப்பதன் மூலம் அதிகாரிகளின் சுற்றுப்பயணத்திற்குத்தான் அது பயன்படுமே தவிர வேறொன்றும் நடக்காது. எனவே இயக்குநர் பதவி அதிகரிப்பது கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

துணைத் தலைவர் அவர்களே, நேரமாகிவிட்டது, மன்னித்துக் கொள்ளுங்கள். நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தாங்கள் ஊருக்குப் போக வேண்டுமென்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அடுத்து, நீண்ட நாட்களாக இருந்து வந்த 'ஏ' விங், 'பி' விங்குகளை இணைத்ததற்காக நான் இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் அது இன்றைக்குச் சரியாகச் செயல்பட முடியாத வகையில், நீதி மன்றத்தில் தடையுத்தரவு பெற்று வந்திருக்கிறார்கள். அது வேறு விஷயம். 1972 ஆம் ஆண்டு நான் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியில் அடங்கிய திருநெல்வேலி மாவட்டத்தில் பி விங் ஆசிரியர்கள் அதிகம். அதைப் போலவே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே அனைத்துப் பள்ளிகளுமே ஏ-விங்கைச் சேர்ந்தவைகள். ஏ-விங்கை ஆதரித்தால் பி-விங் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களுக்குக் கோபம் வரும், அதனால் என்னை ஆதரிக்க மாட்டார்கள். அதைப் போலவே பி-விங் ஆசிரியர்களை ஆதரித்தால், ஏ-விங்கைச் சார்ந்த ஆசிரியர்கள் ஓட்டுப் போட மாட்டார்கள் என்ற நிலை. என்றாலும் 1972 மார்ச்சில் நான் பேசி அது பத்திரிகையில் வந்தது. இரண்டு பேருக்கும் நான் பயப்படவில்லை. என்னுடைய பேச்சின் காரணமாக நான் பாதிக்கப்படுவதாக இருந்தாலும், அதைக் குறித்து நான் கவலைப்படவில்லை.

இரண்டு விங்குகளைப் பொறுத்தவரையிலும், இணைப்புத் தேவை என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. அனைவரும் ஒன்றாக இணைந்துதான் ஆக வேண்டும். அரசாங்கப் பணியாளர்கள் என்று சொல்லிக்கொண்டு, அவர்களை இரண்டு பிரிவினராக வைத்துக்கொண்டு, அவர்களை அவமானப்படுத்திக் கொண்டிருப்பது தவறாகும். இதுபற்றி 1978 ஆம் ஆண்டில் நான் பேசுகிறபோதும், அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். இந்த இணைப்புக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு என்று அப்போதே தெரிவித்தேன். இரண்டு விங்குக்குமாக ஒரு சீனியாரிட்டி நிர்ணயிக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 20 வருஷ காலம் பணியாற்றிய பிறகும் தலைமையாசிரியர் பதவி உயர்வு பெறாத பி-விங் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஏ-விங்கில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் குறைந்த சர்வீஸ் ஆகியிருந்தும் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுவார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் 8 வருஷம் பணி செய்த பி-விங் ஆசிரியர் தலைமையாசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருப்பார். இப்படி மாவட்டங்கள்தோறும் நிலைமைகள் மாறுபட்டிருக்கின்றன. எனவே இந்தச் சூழ்நிலையில் யாரையும் பதவி இறக்கம் செய்யக் கூடாது. அவர்களுடைய பதவிக்கும் ஊதியத்திற்கும் நாம் ஒரு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இரண்டு விங்கிலும் பணியாற்றும் ஆசிரியர்களுடைய சீனியாரிட்டியை மாநில அளவில் இன்டகிரேட் செய்து அவர்களுக்கு அது பற்றிய அறிவிப்பு கொடுத்து, அதில் அந்த ஆசிரியர்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அதற்கு என்று ஒரு காலவரையறை கொடுத்துவிட்டு, இனி வரும் பதவிகளுக்கு இந்த சீனியாரிட்டி அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 20 வருஷம் பணியாற்றிய ஆசிரியர் கீழே இருப்பார். ஆனால் 8 வருஷம் மட்டும் பணியாற்றிய ஆசிரியர் வட ஆற்காடு மாவட்டத்தில் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்றிருப்பார். 'சீனியாரிட்டி ஃபிக்ஸ் பண்ணும்போது 20 வருஷம் சர்வீஸ் செய்தவர் மேலேயும் 8 வருஷம் பணியாற்றி தலைமையாசிரியராக இருப்பவர் கீழேயும் இருப்பார். அப்படி இருந்தாலும், அவர் வகிக்கிற பதவிக்கு தற்போது புரொடெக்ஷன் கொடுத்து புதிதாகப் புரமோஷன் கொடுப்பது என்று வருகிறபோது, இந்த சீனியாரிட்டி அடிப்படையில் கொடுக்க வேண்டும் இந்த சீனியாரிட்டிபடிதான் தலைமை ஆசிரியர் பதவி உயர்வானாலும் சரி, மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் பதவி உயர்வானாலும் சரி, மற்றும் டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ., பதவிகளுக்கான பதவி உயர்வானாலும் சரி, கொடுக்கப்பட வேண்டும். அதற்காக தற்போது அவர்கள் வகிக்கும் பதவியிலிருந்து பதவி இறக்கமோ சம்பளக் குறைவோ ஏற்படுத்தக் கூடாது. இப்படி ஆசிரியர்களுக்கு ஒரு ஆப்ஷன் கொடுக்கலாம். இந்த

ஆப்ஷன் கொடுப்பதற்கு 30 நாட்கள் அவகாசம் கொடுத்து அதற்குப் பிறகு இணைப்பைச் செய்திருந்தால், சட்ட இலாக்காவின் துணையோடு இதைச் செய்திருந்தால், இன்றையதினம் உயர்நீதிமன்றமும், சுப்ரீம் கோர்ட்டும் இதில் ஒரு தடையுத்தரவை வழங்கியிருக்காது என்பதுதான் என்னுடைய எண்ணம்.

கல்வித் துறையினர் சட்டத் துறையோடு கலந்து பேசி இரண்டு சாராரையும் பாதிக்காத வகையில் நீதியின் அடிப்படையில் இந்த இணைப்பை முறையாகச் செம்மைப்படுத்த வேண்டும். அரசு இது குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பி-விங் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றும் போது, அவர்களுக்குத் தலைமையாசிரியர்களுக்கான ஊதியம் அளிக்கப்படாமல் 'ஸ்பெஷல் பே' என்று மட்டும் வழங்கப்பட்டது. இதற்கு மாறாக ஏ-விங் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றியபோது, அவர்களுக்கு அந்தப் பதவிக்குரிய சம்பளம் வழங்கப்பட்டது. இரண்டாவது ஊதியக் குழு அறிக்கை வந்தபோது, ஏ-விங்கைச் சார்ந்த தலைமையாசிரியர்கள் உயர்ந்த சம்பள விகிதத்திற்குப் போய்விட்டார்கள். ஆனால் பி-விங்கைச் சார்ந்த தலைமையாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய ஊதியத்தில் இந்த 'ஸ்பெஷல் பே' 'மெர்ஜ்' செய்யப்படவில்லை. இதன் காரணமாக பணி மூப்பு அதிகமாக உள்ள பி-விங் தலைமையாசிரியர்களைவிட குறைந்த அனுபவம் உள்ள ஏ-விங் தலைமை ஆசிரியர்கள் நிறைய சம்பளம் பெறும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலை போக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. 1970 ஆம் ஆண்டு ஊதியக் குழு அறிக்கை வந்த நாள்முதல் அவர்கள் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது இன்றுவரை புறக்கணிக்கப்பட்டுக்கொண்டே வந்திருக்கிறது. இந்தக் குறைபாடு போக்கப்பட வேண்டும்.

ஃஎப்.ஆர். 22 (பி) படி குறைந்த அனுபவம் உடைய ஒருவர் கூடுதல் அனுபவம் உடைய ஒருவரைவிட அதிகமான சம்பளம் வாங்கக்கூடாது. அப்படி அவர் வாங்கினால், கூடுதல் சர்வீஸ் செய்த அவருக்குக் குறைந்த அனுபவம் உள்ளவரைவிட ஒரு இன்க்கிரிமென்ட் அதிகமாகக் கொடுத்து சம்பளத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்று விதியிருக்கிறது. இந்த விதியை அரசாங்கம் மேற்சொன்ன தலைமையாசிரியர்கள் விஷயத்தில் அமுல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இது சாதாரண விஷயமாகத் தோன்றலாம். ஆனால் ஆசிரியர்களுக்கு இது ஒரு பெரிய விஷயம். அவர்களுக்கு ஒரு இன்கிரிமென்ட், அல்லது சீனியாரிட்டி கிடைக்கிறது என்றால், அது அவர்களுக்கு ஒரு பெரிய விஷயமாகும், அவ்வளவு சிறிய உலகத்திற்குள்

அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களை அந்த உலகத்திலிருந்து விடுவித்து வேறு உலகத்திற்குள் நுழைக்கிற முயற்சியில் ஈடுபடக்கூடாது என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் சம்பாதிக்கத் தெரிந்த ஆசிரியர்களுக்கு இதெல்லாம் சாதாரண விஷயமாகும். அவர்கள் இந்த இன்க்கிரிமெண்டுக்காகக் காத்துக் கொண்டிருக்காமல், தனியாக வியாபாரம் செய்து, சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மனப்பான்மையை ஆசிரியர்கள் மனதில் அரசாங்கம் எந்தக் காரணத்தைக் கொண்டும் வளர்க்கக் கூடாது. எப்படியாவது அரசாங்கத்திலிருந்து ஒரு இன்க்கிரிமெண்ட் வாங்குவதற்காகப் போராடுகிற ஆசிரியர்தான் உண்மையான ஆசிரியராகும். ஆசிரியர்கள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-யைப் பார்த்துக் காரியத்தை முடித்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களுடைய உண்மையான குறைகளைத் தீர்க்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பில் கல்வித் துறையைச் சீரமைக்கும் வகையில் எந்தெந்தப் பதவிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன் என்றாலும், அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களுடைய வேலைப் பளுவை விஞ்ஞான ரீதியில் மதிப்பீடு செய்ய வேண்டும். கல்வித் துறையில் இன்றையதினம் எத்தனையோ முறையீடுகள் வருகின்றன, எத்தனையோ விண்ணப்பங்கள் வருகின்றன. இவைகளையெல்லாம் சரிவர ஆராய்ந்து இவைகளில் எத்தனை தீர்க்கப்பட்டன, மற்றவைகளை தீர்ப்பதற்கு என்ன வழிவகை என்று கண்டறிந்து அதற்குரிய வழியில் பதவிகளை உயர்த்த வேண்டும். சாதாரணமாக கல்வித் துறைக்கு எதிராக பல்வேறு அப்பீல்கள் உயர்நீதி மன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அவைகளில் பெரும்பாலானவற்றில் கல்வித் துறை தோல்வியைக் கண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். கல்வித் துறை சட்ட ரீதியாகச் செயல்படவில்லை என்பதுதான் இதனுடைய பொருளாகும். இதற்குக் காரணம் என்ன என்று கண்டறிந்து அதைக் களைய வேண்டும். இந்தக் கல்வித்துறை திறமையாகச் செயலாற்ற வேண்டுமென்றால், இத்தகைய குறைபாடுகள் களையப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் பள்ளிகளே இல்லை. அத்தனை ஆரம்பப் பள்ளிகளும் அரசின் மேற்பார்வையில்தான் செயல்படுகின்றன. அங்கே இருக்கிற துணைக் கல்வி அதிகாரி—டெபுடி இன்ஸ்பெக்டர்தான்—அந்தப் பள்ளிகளுக்குப் பொறுப்பேற்றிருக்கிறார். மற்ற மாவட்டங்களில் என்ன நிலைமை என்றால், பஞ்சாயத்து யூனியன்களின்கீழ் அனைத்து ஆரம்பப் பள்ளிகளும் இருப்பதால், அங்கே உள்ள கமிஷனர் அல்லது வேறு அதிகாரிதான் அந்த ஆசிரியர்களுக்கு இன்கிரிமெண்ட் மற்றும் லீவ் சாங்ஷன் செய்து எல்லாம் அந்த அதிகாரிகளே பார்த்துக்கொள்கிறார்கள். இந்த மாவட்டங்களில் உள்ள துணைக் கல்வி அதிகாரிகள் பள்ளிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் போய் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். அவ்வளவுதான். ஊராட்சி ஒன்றியக் கமிஷனர், எக்ஸ்டென்ஷன் ஆபீசர் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களே ஆசிரியர்களுக்குத் தேவையானதைச் செய்து வருகிறார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அத்தனை ஆரம்பப் பள்ளிகளுக்கும் இந்தத் துணைக் கல்வி அதிகாரிகள்தான் மானேஜர்கள், அவர்கள்தான் இன்க்கிரிமெண்ட் சாங்க்ஷன் செய்ய வேண்டும். புரமோஷன், மெடிகல் லீவ் என்று எது கொடுப்பதானாலும், துணைக் கல்வி அதிகாரிகள்தான் செய்ய வேண்டும். அவருக்கு அளிக்கப்பட்டிருப்பது ஒரே ஒரு அசிஸ்டெண்ட்தான். இதன் காரணமாக அங்கே வேலைகள் மிகவும் தேங்கிக் கிடக்கின்றன. இப்படி எங்கெங்கே வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்பதை கல்வித் துறை ஒழுங்காக மதிப்பீடு செய்ய வேண்டும். இந்த வகையில் மதிப்பீடு செய்யாமல் என்.சி.ஆர்.டி. என்று தேசிய ஆராய்ச்சிக் குழு வைத்துக்கொண்டு, அதில் வேண்டாத ஒரு டி.ஈ.ஓ.-வை போடுவதில் பயன் ஏதுமில்லை. ஊக்கமிக்க டி.ஈ.ஓ.-வை இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

(பிற்பகல் 7-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் நடவடிக்கை 7 மணிக்கு மேலும் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, நான் மேல்நிலைக் கல்வி பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. காரணம், வருகிற 24 ஆம் தேதியோ, 25 ஆம் தேதியோ தனியார் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் படும்போது, நான் கொடுத்துள்ள மேல்நிலைப் பள்ளி பற்றிய தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ளப் போவதாக அறிந்தேன். ஆகவே அப்போது அதைப்பற்றி விரிவாகப் பேச விருப்பதால், இப்போது ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களைப்பற்றி முதலில் ஒரு அரசாணை வந்தது. அந்த ஆணையில் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக நியமிக்க எம்.ஏ., பி.டி. படித்திருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது, அதன்படியே ஆசிரியர்களை நியமித்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்த ஆசிரியர்கள் மூன்றாவது வகுப்பில் தேறியிருக்கிறார்கள் என்றும், பிற பல்கலைக் கழகத்திலிருந்து பட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்றும்

காரணம் காட்டி, அவர்களுடைய சான்றிதழ்களை எவால்யுவேஷனுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று கூறி, கடந்த 11 மாதங்களாக மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலைப் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அரசாணை எண் 1091-ல், முதல் வகுப்பிலோ, அல்லது இரண்டாவது வகுப்பிலோ தேறியிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மாறாக முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு கல்வித் தகுதியைக் கூட்டியிருக்கிறார்கள். ஒரு அரசாணையை வெளியிடும்போது, அந்த அரசாணை எந்தத் தேதியிலிருந்து வெளியிடப்படுகிறதோ அந்தத் தேதியில் நியமிக்கப்பட்டவர்களுக்குத்தான் அது பொருந்தும். அதற்கு முன் நியமிக்கப்பட்டவர்களை அது பாதிக்கக் கூடாது. ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் (Retrospective effect) கொடுக்கக் கூடாது. ஆகவே அந்த அரசாணையின் காரணமாக ஆசிரியர்களுக்கு ஊதியம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படாமல் இருக்கவும், வருடக் கடைசியில் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படாமல் பாதுகாப்பு அளிக்கவும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியாக பி.டி. ஆசிரியர்களையும் நியமிக்கிறார்கள். அவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி மட்டும் கொடுப்பது போதாது. செகண்டரி கிரேட் ஆசிரியர்களைத் தலைமையாசிரியர்களாக நியமித்தால், அவர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போலவே பி.டி. ஆசிரியர்களுக்கும் சிறப்புப் படியைக் கொடுக்க வேண்டும். அதையும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

ஒவ்வொரு நடுநிலைப் பள்ளியிலும் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். தேசீய விளையாட்டுப் பயிற்சியில் நாம் எந்த அளவுக்குப் பின்னடைந்திருக்கிறோம் என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. வி. டிமாண்டி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே விளையாட்டுப் பயிற்சியில் சிறக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு நடுநிலைப் பள்ளிக்கும் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

பட்டம் பெற்றவர்கள் கூட தவறாக எழுதுகிறார்கள். தவறாக எழுதினால்கூட, மார்க் போட வேண்டுமென்று ஒரு 'வால்யுவேஷன் சிஸ்டத்தைக்' கொண்டு வந்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல திருத்தமாக இருக்கலாம். ஒருவேளை ஜனநாயகத் திருத்தமாக இருக்கலாம். அந்த முறையில் ஓரளவுக்குப் பக்கத்திலே வந்தாலே, மார்க் போடலாம் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே தவறு இல்லாமல் தமிழ் மொழியைக் கற்பிக்க ஒரு தமிழாசிரியரைக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமென்றால், ஆங்கில மொழி ஆசிரியர் வேண்டும். ஆகவே இதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டில் இப்போது 158 கல்லூரிகள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு புகுமுக வகுப்பு எடுக்கப்படுவதால், பெருமளவு அதனுடைய எண்ணிக்கை குறைய இருக்கிறது. சில கல்லூரிகளில் 2,500 மாணவர்கள் இருக்கிறார்கள். எந்தக் கல்லூரியிலும் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற நிலையை கல்லூரிக் கல்வி இயக்ககம் ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் அதிகமாக இருந்தால், வேறு ஒரு கல்லூரியைத் துவக்க வேண்டும். சில குறிப்பிட்ட கல்லூரிகளில் இதுமாதிரி இருக்கின்றது. பல கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருக்கின்றன. ஒரு கல்லூரியில் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருந்தால், அது ஒரு கல்லூரியாக இருக்காது, ஏதோ ஒரு மாநாடு போல இருக்கும். அங்கேதான் ஒருவர் வருவார், மற்றொருவர் போவார். சிலர் பேசிக் கொண்டிருப்பார்கள். அதைப்போல கல்லூரிகள் இயங்குவது சரியல்ல. கல்லூரிகள் சரியாக இயங்காததற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை மனதிலே கொண்டு, மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். மாணவர்களின் எண்ணிக்கை குறைகிற போது, கூடுதல் வகுப்புகளை ஆரம்பிக்கிறோம், அதனால் ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சிலர் கேட்கிறார்கள். 1,500 மாணவர்களுக்கு மேல் இருந்தால், எந்த வகுப்பையும் ஆரம்பிக்க கல்லூரிகளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது. இது குறித்து ஒரு திடமான கொள்கையை வகுக்க வேண்டும். மாணவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றால், ஒரு வகுப்பிலே தமிழ் படிக்க 80 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், அதை 40 மாணவர்களாகக் குறைக்கலாம். மொழிப் பாடங்களில் முப்பது பேர், இருபது பேர் என்று இருக்கலாம். கல்லூரி ஆசிரியர், மாணவர் எண்ணிக்கை விதத்தைக் குறைத்து எல்லா ஆசிரியர்களுக்கும் வேலை கிடைக்கிற நிலையை உருவாக்க வேண்டும். இதற்காக பதில் வகுப்புகளை கல்லூரி நிர்வாகங்கள் கேட்கும். அப்படிக் கேட்டால்தான் சிறப்புப் பாடங்களின் எண்ணிக்கை அதிகமாகும். அதன் மூலம் ஸ்பெஷல் பீஸ் அதிகமாக வரும். ஸ்பெஷல் பீஸில்தானே அவர்களுடைய வாழ்வே இருக்கிறது. ஆகவே அந்த நிலை இல்லாமல் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் எந்தக் கல்லூரியிலும் இருக்கக் கூடாது என்று விதி அமைத்து, திறமையான, தரமான கல்வியை வகுக்க வேண்டும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 ஏப்ரல் 11

ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் நாற்பது, முப்பது கல்லூரிகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று கொள்கைக் குறிப்பிலே அறிவித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிக்க முயற்சி எடுப்பதாகச் சொன்னார்கள். திருநெல்வேலியிலும் கூட ஒரு பல்கலைக் கழகம் வேண்டும். திருநெல்வேலியிலும் ஒரு யூனிவர்சிட்டி சென்டர் இருக்கிறது. மதுரையிலே, திருச்சியிலே, கோயம்புத்தூரிலே ஒரு யூனிவர்சிட்டி சென்டர் இருக்கின்றது. எங்கெங்கே யூனிவர்சிட்டி சென்டர் இருக்கின்றதோ அங்கெல்லாம் ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டும். 30 கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக் கழகம், ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு கல்லூரி, தரமான ஆசிரியர்கள், அவர்களுக்குத் தரமான பயிற்சி, மாணவர்களுக்குத் தரமான கல்வி என்ற முறையில் அமைக்க வேண்டும். பெற்றோர்கள் என்னிடமே சொல்லுகிறார்கள், "பையனுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை, அதனால்தான் கல்லூரிக்குப் போகிறான்" என்று. "அப்பா சொல்லுகிறார், அதனால்தான் நானும் கல்லூரிக்குப் போகிறேன்" என்று பையனும் சொல்லுகிறான். சிலர் ஸ்காலர்ஷிப்புக்காக வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், விருப்பம் உடையவர்கள், தகுதியுடையவர்கள் படிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி தரமான கல்வியைப் போதிக்க வழிவகையைச் செய்ய வேண்டும்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே, கவனிக்க வேண்டிய முக்கியமான ஒன்று, கிராமப்புறங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படித் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்பது. ஏனென்றால் இந்த அரசு கிராமப்புற வளர்ச்சியிலே அதிக அக்கறை காட்டுவதாகச் சொல்லுவது உண்மையாக இருக்குமானால், கிராமப்புறங்களில் இருக்கிற அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வாடகை வசதியை அளிக்க வேண்டும். மற்ற இடங்களில் 8 சதவீதம் என்றால், அங்கே 5 சதவீதம் என்று ஆரம்பிக்கலாம். ஆகவே கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப்படி அளிக்கும் திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

முன்பேகூட சொன்னேன். என்னுடைய கல்லூரி நாகர்கோயிலில் இருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அங்குள்ள ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படியைக் கொடுத்தேன். இப்போதாவது அரசாங்கமே மாதந்தோறும் நேரிடையாகச் சம்பளம் வழங்குகிறது. இரண்டு மாதத்திற்கு ஒருதரம் நேரிடையாகச் சம்பளம் கொடுக்கிற நிலை வந்துவிட்டதற்கு எல்லோரும் பாராட்ட வேண்டும். ஆனால் மூன்றாண்டுகளுக்கு முன்னாலே நிர்வாகத்தினர் 80 சதவீதம் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, பிறகு 'அக்விடென்ஸ்' காட்டி அரசிடமிருந்து தொகை பெறுகிற காலத்திலேயே

1979 ஏப்ரல் 11] [திரு. ம. சங்கரலிங்கம்]

என்னுடைய கல்லூரியில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுத்து, அவர்களை கல்லூரி இருக்கக்கூடிய ஆரல்வாய்மொழியிலேயே தங்கச் செய்து கல்லூரியை நடத்தினேன். பிறகு ஆடிட்டில், அதை ஆட்சேபித்து அதே ஆசிரியர்கள் நாகர்கோவிலிலிருந்து வந்தால்தான் உண்டு என்றார்கள். நானும் ஆசிரியர்களிடம் அதைச் சொன்னேன். அவர்களும் இப்போது நாகர்கோயிலுக்குப் போய்விட்டார்கள். இப்போது 140 ரூபாய் பெறுகிறார்கள். நாகர்கோயிலிலிருந்து ஆரல்வாய்மொழிக்கு பஸ் வந்தால்தான் கல்லூரி நடக்கும். பஸ் நிறுத்தப்பட்டுவிட்டால், கல்லூரி நடக்காது. கல்லூரிக்குப் பக்கத்திலேயே ஆசிரியர்கள் தங்கியிருந்தால், அவர்கள் பொழுது போக்காக மாலை நேரங்களில்கூட கல்வியைப் போதிக்க முடியும். ஆகவே, அந்த முறையை அரசு பின்பற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

ஆரம்பப் பள்ளியிலே ஒரு நிலையான ஊக்கம் வருவதற்கு ஹையர் கிரேட் ஆசிரியர்களை, செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக மாற்ற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள்கூட செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றால், ஹையர் கிரேட் பதவிகளில் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்களை பல கட்டங்களில் உயர்த்திக்கொண்டு வருகிறோம். இதனுடைய எண்ணிக்கையை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அது போதுமானதல்ல. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே எஸ்.எஸ்.எல்.சி. முடித்து பயிற்சி பெற்றவரும் செகண்டரி கிரேட்தான், எட்டாவது படித்து பயிற்சி முடித்தவரும் செகண்டரி கிரேட்தான். சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்துபோன திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள மலபார் பகுதியில் இருக்கக்கூடிய ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேடாக ஆக்கியாகிவிட்டது. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கேரளத்தோடு தொடர்பு கொண்டு, அது உண்மையாக இருக்கிறது என்று தெரிந்தால், இங்கேயிருக்கக் கூடிய அத்தனை ஹையர் கிரேட் ஆசிரியர்களையும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்க வேண்டும். ஹையர் கிரேட் பயிற்சியை நிறுத்தி பத்தாண்டுகள் ஆகிவிட்டன. ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இப்போதே 390 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். செகண்டரி கிரேடாக அவர்களை மாற்றும் போது, 350, 360 ரூபாயில்தான் ஆரம்பிக்கும். அதற்காக 7 கோடி ரூபாய் ஆகுமென்று அரசு புள்ளி விவரம் தந்திருக்கிறது. அரசு அதை மறு பரிசீலனை செய்து, இரண்டு மூன்று கட்டத்திலாவது ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக ஆக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். வேண்டுமானால் அவர்களுக்குக் கோடைக் காலத்தில் 3

மாதங்களுக்கு பயிற்சி கொடுத்து ஒரேவிதமான சம்பள விகிதத்தை அவர்களுக்கும் உருவாக்கித்தர வேண்டுமென்று அரசை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்ற அரசுத் துறையிலே இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மணி ஆர்டர் மூலமாக ஓய்வூதியம் அனுப்பப்படுகிறது. ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு இன்னும் அந்த முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவர்கள் தங்களுடைய தள்ளாத வயதில் ஓய்வூதியத்தைப் பெற கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மற்ற அரசு ஊழியர்களுக்கு உள்ள வசதிகளைப் போல ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 7-10)

கட்டாய ஓய்வு பெற்றவர்களில், நெருக்கடி காலத்தில் ஓய்வு பெற்றவர்களைப் பற்றி மாத்திரமாவது மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால் கட்டாய் ஓய்வு கொடுக்க ஒரு விதி வைத்திருக்கிறோம். நெருக்கடி காலத்தில் எப்படி இருந்தது? மத்திய அரசினர் மாநில அரசில் அங்கங்கே இருந்த அட்வைசர்கள் கொடுத்த குறிப்புகளின்பேரில் அதிகாரிகளுக்கு ஓய்வு கொடுத்தார்கள். காவல் துறையில் இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் என்று இருக்கிறார்கள். அவர்கள் கீழ் அதிகாரிகளுக்கு மதுவிலக்குத் திட்டத்தின் கீழ் இத்தனை கேஸ்கள் என்று கோட்டா வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல் ஆசிரியர்களுக்கும் கோட்டா வைத்துக் கொண்டிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் இத்தனை பேர்கள் கொண்டு வாருங்கள் என்று கோட்டா வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று சொல்லும் நிலைமைகள் இருக்கின்றன. இப்படி இலாகாக்களிலிருந்து வெளியே ஓய்வில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். உண்மைகளை அறிந்து வெளியே அனுப்பியவர்களைச் சேர்த்துக்கொள்ளும் நிலை வரும் போது, எற்கெனவே வெளியில் தள்ளிவிட்டவரை, திரும்ப எடுத்துக் கொள்வதை அவமானமாக நினைக்கிறார்கள். இப்போதும் மற்றவர்கள் செய்த தவறுகளையே தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் அந்தத் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியே சரிக்கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எற்கெனவே நெருக்கடி காலத்தில் கட்டாய ஓய்வில் சென்றவர்களை மீண்டும் எடுக்கவேண்டும் என்று மனுக் கொடுத்தால், அதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட அரசிடமாவது வந்து முறையிட ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு அப்படியே விசாரிக்காமல் வேலை கொடுக்க வேண்டும் என்ற நான் சொல்லவில்லை. அவர்களுக்குக் கொடுத்த கட்டாய ஓய்வு தவறு, சரியல்ல என்று தெரிந்தால், அவர்

களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கும் மனுவைப் புறக்கணிக்க முடியாது. அதிகாரிகள் எப்படிச் செயல்படுகிறார்கள்? இருக்கின்ற அரசாங்கம் என்ன சொல்கின்றதோ அதைத்தான் கேட்கிறார்கள். அவ்வப்போது இருக்கின்ற அரசுக்கு ஏற்ப அதிகாரிகள் சட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். நெருக்கடி காலத்தில், அலுவலர்கள் கட்டாய ஓய்வில் சென்றிருந்தால், அவர்கள் அரசுக்கு மனு தந்தால், அவர்களைத் தனியாக அழைத்து, அவர்களை விசாரித்து விவரங்களை அறிய வேண்டும். அதற்கு வாய்ப்புக்களை உண்டாக்கித் தர வேண்டும். அதிலே நீதி இருக்குமானால், அவர்களுக்கு அந்த வேலையைத் திரும்பத் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கருத்துக்களை சொன்ன உணர்வோடு நான் அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையின் சார்பில் வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பின் மேல் மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவை, முழுவதற்கும் பதில் சொல்வதற்கு எனக்கு நேரமில்லை. இருந்தாலும் பொதுவான சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஆசிரியர்களைப்பற்றி இங்கே குறிப்பிடுகின்ற போது, ஆசிரியராக நான் இருந்த காரணத்தினாலே, ஆசிரியர்கள் சார்பாக நான் நடந்துகொள்வது வரவேற்கத்தக்கதுதான் என்ற அடிப்படையிலே இங்கே சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அந்த அடிப்படையிலே நான் 'ஏ' விங், 'பி' விங் இரண்டையும் இணைத்து உத்தரவு போட்டபோது, அமைச்சர் அவர்கள் 'பி' விங் ஆசிரியராக இருந்தவர் என்ற காரணத்தினாலே தான் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்காக 'ஏ' விங் ஆசிரியர்கள் தங்களுடைய மனக் குறையையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நான் செயல்படுவதாகத் தோன்றினாலும், சில உண்மையான அடிப்படைக் காரணங்களுக்காகத்தான் அதைச் செய்தேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் ஆசிரியர்கள் மீது சில குறைபாடுகளை எடுத்துச் சொன்ன நேரத்தில், அதை நான் மறுத்துப் பேசினேன். நான் ஆசிரியராக இருந்த காரணத்தினாலேதான் அப்படிச் சொன்னேன் என்ற கருத்தையும் சொன்னார்கள். நாம் சமூகத்தில் பலதரப்பட்ட மக்களைப் பார்க்கிறோம். பல துறைகளில் மக்கள் இருக்கிறார்கள், யார் யார் என்ன என்ன தவறுகள் செய்கிறார்கள் என்பதையும்

நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, மாணவர்கள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, தொழிலாளர்கள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, பொது வாழ்வில் இருப்பவர்கள் என்று எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தப் பகுதியிலிருந்து எடுத்து வைத்துப் பார்த்தாலும், அந்தப் பகுதியில் இருப்பவர்களில் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் உண்மைக்குப் புறம்பாக நடக்கக்கூடாது, அவர்கள் ஒழுங்காக இருக்க வேண்டும், அவர்கள் நல்ல முறையிலே இருக்க வேண்டும், பிறர் பார்த்து அவர்களைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கும் இருக்கிறது, ஆசிரியர்கள் மத்தியிலும் இருந்துகொண்டிருக்கிறது. இதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பார்த்திருக்கிறோம். இதனாலேயே தவறு செய்யக்கூடாத சமுதாயமாக இன்றைக்கு ஆசிரியர்கள் சமுதாயம் இருக்கிறது என்ற நிலைமை இருக்கின்றது. அதனால்தான் யாராவது ஒருவர் தவறு செய்துவிட்டாலும்கூட, பார்க்கின்றவர்களுக்கு அது மிகப் பெரிய தவறாகத் தெரிகிறது. ஆசிரியர்கள் நல்ல ஒழுக்கசீலராக, பிறர் பார்த்துப் பாராட்டக்கூடியவர்களாக, மாணவர்கள் அவர்களைப் பார்த்துப் பின்பற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அந்த ஒரு நியாயமான உணர்வின்பால்பட்டதாகும் இந்தக் கருத்து. அப்படி இந்தச் சமுதாயம் எதிர்பார்ப்பதன் அடையாளமாகத்தான், நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நாகர்கோவிலில் நகரசபைத் தலைவர் பதவி காலியானபோது, ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போடுவதற்குப் பதில் அங்கு இருக்கும் தலைமை ஆசிரியரைப் போட்டார்கள் என்றார்கள். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் சமுதாயம் மரியாதைக்குரியதாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதனாலேதான் இன்றைக்கு அலுவலர்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அல்லது உறுப்பினர்கள் பின்னாலே ஆசிரியர்கள் ஏதாவது காரியத்திற்காகச் செல்வதைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நமக்கு மன வருத்தம் ஏற்படுகிறது. கல்வித் துறையில் அப்படிப்பட்ட நிலைமையில் ஆசிரியர்கள் இருக்கக்கூடாது, அந்த நிலைமைக்கு வரக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏதாவது ஒரு காரியத்திற்காக, சிபாரிசுக்காக ஆசிரியர்கள் அவர்கள் பின்னால் போகின்ற அளவுக்கு கல்வித் துறை செயல்படக்கூடாது. அதிகாரிகள் அவர்களுடைய காரியங்களை ஒழுங்காகச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் யாரிடமும் போய் தலை குனிந்து நிற்கக்கூடிய அவல நிலைமை ஏற்படக்கூடாது என்று நான் இந்தப் பொறுப்பு ஏற்ற பிறகு, பல சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்கிறேன். இங்கே ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், இங்கே ஆசிரியர்கள் ஆசிரியர்களாக இல்லை என்பதையும் சொல்கிறார்கள். காரணம் ஆசிரியர்களாக இருப்பவர்கள் கொஞ்சம் நிதானம் காட்ட வேண்டும். நல்ல முறையிலே பிரச்சினைகளை அணுக வேண்டும், எடுத்த

பிரச்சினைகளிலே ஆசிரியர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். அவர்களே தனிப் பிரிவாக இருந்து இந்த ஆசிரியர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். பல்வேறு வகையிலே இந்தச் சமுதாயத்தினருக்கு நல்ல மரியாதை இருந்துகொண்டிருக்கிறது. இந்த மரியாதை அவர்களுக்கு இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவர்களை நம்பி நாம் நம்முடைய குழந்தைகளை அனுப்புகிறோம். அவர்களை நம்பித்தான் நம்முடைய மாணவ மாணவியர்கள் படிக்கிறார்கள். ஆக இந்த அடிப்படையிலேதான் நாம் பிரச்சினைகளை அணுக விரும்புகிறோம்.

(பிற்பகல் 7.20)

இன்றைக்கு ரூ. 209 கோடிக்கு கல்வித் துறைக்கு மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரும் தொகை செலவு செய்யும்போது, அது முழுமையான பலனை இந்த நாட்டுக்குத் தரவேண்டுமானால், நாம் நம்பியிருப்பது இந்த ஆசிரியர்கள் சமுதாயத்தைத்தான். நல்ல கல்வியை நாம் மக்களுக்குத் தரவேண்டும். அதற்காகத்தான் இத்தனை கோடி ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம். அது ஆரம்பப் பள்ளியாக இருந்தாலும், கல்லூரியாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும், நாம் மேலே இருந்துகொண்டு உத்தரவுகளைப் போடலாமே தவிர, நாம் மேலே இருந்துகொண்டு அதிகாரத்தினைச் செலுத்திக்கொண்டிருக்கலாமே தவிர, அந்த நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்கள்தான் அந்த ஆணைகளைச் செயல்படுத்த முடியும். நாம் செலவு செய்கின்ற பணம் அங்கு படிக்கின்ற மாணவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு, கல்வி வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும். அதைச் செய்கின்றவர்கள் அந்தப் பள்ளிகளிலே இருக்கின்ற ஆசிரியர்கள்தான். அதை அரசும் புரிந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் ஆசிரியர்கள் பிரச்சினையில் நல்ல தீர்வு காண வேண்டும், அவர்களுக்கு மன நிம்மதியைத் தருவதன் மூலம்தான் நாம் செலவழிக்கின்ற இந்தப் பணம் மாநிலம் முழுவதும் மாணவர்கள் சமுதாயத்திற்கு, நாட்டிற்குப் பயன் அளிக்கும் நிலையை உண்டாக்க வேண்டும் என்று கருதுகிறோம். அந்த அடிப்படையிலேதான் நாம் ஆசிரியர்கள் விஷயத்தில் அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால், இதற்கு முன்னால் இருந்த நிலைமைகளுக்கு மாறாக நாம் இப்போது அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கல்வி என்றால், கல்வி வளர்ச்சி என்றால், கல்வியினுடைய முன்னேற்றம் என்றால், அது ஆசிரியர்களின் நிலைமையைப் பொறுத்தது என்ற அளவுக்குத்தான் நாம் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம். அவர்களை நம்புகிறோம். அந்த அடிப்படையிலேயே நாம் பிரச்சினைகளை அணுகுகிறோம். அப்படிப் பார்க்கும்போதும், நாம் போராட்டங்களைச் சந்திக்கின்றோம். போராட்டங்கள் எந்தத் துறையிலும் இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன்

அவர்கள் தெளிவாகவே எடுத்துப் பேசினார்கள். அந்த அளவுக்கு அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து இந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார்கள். அதற்கு அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களுக்கு ஸ்ட்ரைக் செய்கின்ற உரிமை வரவேண்டும், கர்நாடக மாநிலத்திலே இருப்பது போல் அந்த உரிமை மறுக்கப்படும் நிலைமைகள் இந்த நாட்டிலே வரக் கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதை நாம் எடுத்துக் கொள்கிறோமா என்பது அல்ல பிரச்சினை. அதைப்பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஸ்ட்ரைக் என்பது, வேலை நிறுத்தம் என்பது பள்ளிகளிலே, கல்லூரிகளிலே நடைபெறுமானால், நாம் எந்த அளவுக்கு நல்ல பயனை ஏற்படுத்திவிட முடியும் என்பதை நாம் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையிலே சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக் கூடங்கள் யாருடைய இஷ்டப்படியும் நடத்துவது அல்ல. பார்மல் எஜுகேஷன் என்ற முறையையும் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு ஒரு பாடத் திட்டம் வைத்திருக்கிறோம். இன்னின்ன நாட்கள் வேலை நாட்கள் என்று முன்பே சொல்லிவிடுகிறோம். மற்ற நாட்கள் விடுமுறை நாட்களென்று அறிவிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே கல்வி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையிலே ஏதாவது இரண்டு அல்லது மூன்று பள்ளிகளிலே வேலை நிறுத்தம் ஏற்படுமானால், மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வேலைநிறுத்தத்தினால் அவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை அவர்கள் மறுபடியும் திரும்பப் பெறக்கூடிய வாய்ப்பு கல்வித் துறையில் நிச்சயமாக இல்லை என்பதை உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தக் கல்வி நிறுவனமாக இருந்தாலும், 6 மாதங்களில் படிப்பதை ஒரு மாதத்தில் சொல்லிக் கொடுப்போம் என்றால், 6 மாதங்கள் படிக்க திட்டம் போட்டு நடத்திக் கொண்டிருப்பது தவறாக இருக்க வேண்டும் அல்லது ஒரு மாதத்தில் சொல்லிக் கொடுப்போமென்று சொல்வது தவறாக இருக்க வேண்டும். அந்த அளவிற்குத் திட்டமிட்டு கல்வி நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இது ஆலையல்ல, நிறுத்திவிட்டு, பிறகு வேலை செய்யலாமென்பதற்கு. தொழிற்சாலைபோல் கல்வி நிலையங்கள் இல்லை. கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள், நிறுவனம் தவிர மூன்றாவது நபர் இருக்கிறார். அவர்தான் மாணவர். அந்த மாணவர்களுடைய கல்வியை, வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய காரியத்தைச் செய்யக்கூடிய உரிமை யாருக்கு இருக்கிறதென்பதை நாம் திட்டவட்டமாக உணர்ந்தாக வேண்டும். நாங்கள் பள்ளிகளுக்குப் போக மாட்டோமென்று சொல்லுவதற்கு ஆசிரியர்களுக்கு உரிமைகள் இருக்கலாம். அதை அரசு மறுக்காமல் கூட இருக்கலாம். நான் இன்று அமைச்சராக இருக்கலாம். அமைச்சர் பதவி போய்விட்டால், ஆசிரியர் சங்கத்திற்கு நான் தலைவனாக வரலாம். நானே இதைச் செய்யக்கூடிய நிலைமையில் இருக்க

லாம். அதையெல்லாம் மறந்துவிட்டுப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், அதன்மூலம் வளர்கின்ற சமுதாயம் பாதிக்கப்படுகிறதென்றால், அந்தக் காரியத்தைச் செய்வதற்கு இந்தச் சமுதாயத்திலே யாருக்கு உரிமை இருக்கிறது? அந்த உரிமையை நாம் பெற்றுத்தான் ஆக வேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், கர்நாடக மாநிலத்தில், நாங்கள் ஸ்டிரைக் செய்ய மாட்டோமென்று ஆசிரியர்கள் கையெழுத்துப் போட்டு, அக்ரிமெண்டாகத் தந்திருக்கிறார்கள். அரசால் அந்த உரிமை பிடுங்கப்படவில்லை. அந்த ஆசிரியர்களே விட்டுக் கொடுத்து, தாங்கள் மிகச் சிறந்த ஆசிரியர்கள் என்று காட்டியிருக்கிறார்களே தவிர, வேறொன்றுமில்லை. அவர்கள் கோழைகள் என்பதல்ல; அரசுக்குப் பயந்தவர்கள் என்பதல்ல; மற்றவர்களுக்குத் தெரிந்த விவரம் அவர்களுக்குத் தெரியாது என்பதல்ல இதற்குக் காரணம். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், தங்கள் கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஊர்வலம் நடத்துகிறார்கள், மாநாடு கூட்டுகிறார்கள். வேறு ஏதேதோ செய்கிறார்கள். மாணவர்களுடைய கல்வியைப் பாதிக்காமல், தங்களுடைய கோரிக்கைகளைச் சொல்ல ஆசிரியர்கள் பழகிக்கொள்ள வேண்டும். மாணவர்களின் அறிவு வளர்ச்சியைப் பாதிக்கின்ற காரியத்தைச் செய்கின்ற உரிமை, எவ்வளவு பெரிய ஆசிரியராக இருந்தாலும் இல்லை. அந்தச் சமுதாய உணர்வு ஆசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டாக வேண்டும். ஆசிரியர்களுக்கு எவ்வளவு பெரிய மரியாதையை இந்தச் சமுதாயம் தருகிறது, தர விரும்புகிறது என்பதைச் சுட்டிக் காட்டும் நேரத்தில், அதற்கு ஆசிரியர்கள் தகுதி படைத்தவர்கள்தான் என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு இருக்கிறதென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், அந்த உரிமையை எந்தக் கட்டத்திலும் மறுக்கின்ற நிலைமைக்கு வர மாட்டேன். நாங்கள் அந்த உரிமையைப் பயன்படுத்த மாட்டோம், அப்படிப்பட்ட உரிமை தேவையில்லை என்று ஆசிரியப் பெருமக்கள் சொன்னால்தான், சமுதாயத்தால் பாராட்டப்படக்கூடியவர்களாக ஆசிரியர்கள் இருப்பார்கள்.

இன்றைக்கு கல்வித் துறையில் உள்ள பிரச்சினைகள் என்ன? இன்று இந்த அவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கவனித்தால், ஆரம்பப் பள்ளிகள் சரியாக நடைபெறவில்லை என்று சொன்னது விளங்கும். ஆரம்பப் பள்ளிகளில் சரியான முறையில் கல்வி போதிக்கப்படவில்லை, என்ன காரணம்? ஆசிரியர்கள் சரியாகப் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். கல்லூரிகளும் சரியாக இயங்குவதில்லை. அது பரம இரகசியமில்லை. மாணவர்,

களும், ஆசிரியர்களும் கல்லூரிகளுக்குப் போகாமல் இருக்கிறார்கள். ஓரளவுக்கு விவரம் தெரிந்த மாணவர்கள், அதே நேரத்தில் பெற்றோர்களுடைய தொடர்பு இருக்கின்ற இடைப்பட்ட கல்வி நிலையங்கள் ஓரளவிற்கு நடைபெறுகின்றனவே தவிர, கீழேயும், மேலேயும் சரியாக நடைபெறவில்லை. கீழே, பெற்றோர்கள் போகாமல் இருப்பதாலும், மாணவர்கள் குழந்தைகளாக இருப்பதாலும், கல்வி சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு எங்கும் சொல்லப்படுகிறது. என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைப்போல மேலே வருகின்ற மாணவர்கள் சொன்னால் கேட்பதில்லை என்ற நிலைமைக்கு வந்துவிட்டதால், அங்கேயும் கல்வி சரியாக இல்லை. இதற்கான நல்ல ஆதாரம் சொல்ல வேண்டுமென்றால், கல்லூரிகளைத் தேடி வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பதுதான். பி.யூ.சி. வகுப்பை எடுப்பதனால் எண்ணிக்கை குறைந்துவிடவில்லை. பி.யூ.சி. வகுப்பு இருக்கும் இந்த நேரத்திலேயே, கல்லூரிக் கல்வியைத் தேடி வரும் மாணவர்கள் குறைந்து வருகிறார்கள். அதை இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், பையன் பி.யூ.சி. படிக்க வேண்டுமென்ற எண்ணம் பெற்றோர்கள் மத்தியில் குறைந்துவிட்டது. பையன் கல்லூரிக் கல்வி படிக்க வேண்டுமென்று நினைக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. பி.யூ.சி. வகுப்பில் 10,000 இடங்கள் காலியாக உள்ளன. பட்டப் படிப்பிற்கான இடங்கள்—பி.ஏ., பி.எஸ்சி., பி.காம். உட்பட—10,000 காலியாக உள்ளன. எனவே இந்த நாட்டிலே கல்லூரிப் படிப்பின் மீது அக்கறையின்மை அல்லது கவர்ச்சியின்மைக்கு என்ன காரணம்? கல்லூரிகள் சரியாக இயங்கவில்லை என்பதால், மாணவர்களை அனுப்புகின்ற பெற்றோர்களை அது பயமுறுத்துகிறது. இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கும்போது, நம்முடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகள் அல்லது செய்கின்ற காரியங்கள் கல்லூரிகளுடைய வளர்ச்சிக்கு உதவவில்லை என்ற நிலைமைக்குப் போகுமானால், நிச்சயமாக இந்தச் சமுதாயத்திலுள்ள விவரம் தெரிந்தவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிலைமைகள் வராமலிருக்க வேண்டுமானால், ஆசிரியப் பெருமக்கள் இத்தகைய உணர்வுகள் உடையவர்கள்தான் என்பதை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமான அளவிற்குக் காட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே ஸ்டிரைக் செய்யக்கூடிய உரிமையை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரித்தாலும் அல்லது நானேகூட ஆதரித்தாலும், ஆசிரியர்கள் அதைப்பற்றி சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் நிர்வாகம் தவிர மூன்றாவதாக இருக்கிற மாணவர் சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்கும் நிலையில், 'ஸ்டிரைக்' செய்வது என்ற ஆயுதத்தை பயன்படுத்துவது சரிதானா என்று ஆசிரியப் பெருமக்கள் தங்களுக்குள்ளே

ஆராய்ந்து, முடிவு எடுக்க வேண்டுமே தவிர, நாம் அதைப் பெரிய உரிமையாக, கடைபிடிக்கக் கருவி என்று பேசுவதன் மூலமாக, அப்படிப்பட்ட உணர்வுகளுக்கு ஆக்கம் தர வேண்டியதில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'ஏ' விங், 'பி' விங் இணைப்பைப்பற்றிப் பாராட்டிப் பேசினார்கள். இரண்டு நாட்களாக, அதைப்பற்றிப் பாராட்டி எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் இங்கும் பேசினார்கள், பேரவையிலும் பேசினார்கள். நான் எந்தக் கட்சியிலே இருக்கும்போது, அப்போதும் பேசப்பட்டது. ஆனால் 10, 15 ஆண்டுகளாக ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் பேசப்பட்டது. எல்லோராலும் பேசப்பட்டது. ஏகமனதாகப் பேசப்பட்ட கருத்து அது. ஆனால் நடைமுறைப்படுத்த முடியாமல், உருக்கொடுக்க முடியாமல் இருந்தபோது, நானும் இந்தப் பொறுப்புக்கு வந்தேன். நான் பொறுப்புக்கு வந்தவுடன், இப்படிப்பட்ட ஒரு கருத்து செயல்பட முடியாமல் இருக்கக்கூடாது, எல்லோரும் ஆதரவு தருகிறார்கள், எல்லோரும் வேண்டுமென்று சொல்லுகிறார்கள், இப்படிப்பட்ட ஒரு நிலைமை சாதி பாகுபாடுபோல இருக்கிறது, 'ஏ' விங் உயர்ந்த சாதி, 'பி' விங் தாழ்ந்த சாதி என்ற சாதி உணர்வை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், சாதியை ஒழிப்பது முன்னணியில் இருக்கும் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கிறது, அதன் அடிப்படையில் கோடைக் கானலில் இரண்டு ஆசிரியர்கள் அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது, எனவே இதற்குமேல் விட்டால் இன்னும் மோசமாகுமென்று வேகம் காட்டி, உத்தரவு போட்டேன். 'பி' விங் ஆசிரியராக நான் இருந்ததால், அதைச் செய்தேன் என்று என்மேல் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. அது எந்த அளவிற்குத் தவறு என்பதைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பங்கு எல்லாம் இணைப்பிலேதானே தவிர, வேறு ஒன்றிலுமில்லை. லிஸ்ட் போடுவது, யாருக்கு எவ்வளவு பங்கு என்பதிலே எல்லாம் எனக்கு எந்தவிதமான பங்குமில்லை. அவ்வளவு வேலைகளையும் 'ஏ' விங்கைச் சேர்ந்த அதிகாரிகள் செய்தார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதியோர் கல்வியைப் பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், அதிலே செலவு செய்யப்படும் பணம் வீணாகிறதென்ற கருத்தைச் சொன்னார்கள். முதியோர் கல்வி என்பதை அப்படிப் பார்ப்பதில்லை. ஒரு நாட்டில் திட்டம் போட்டு, முன்னேற்றம் செய்ய வேண்டுமென்று உண்மையாகவே விரும்பி, செயல்பட விரும்பினால், முதலிலே அறியாமையை நாம் ஓட்டியாக வேண்டும். குறைந்த அளவு எழுத்தறிவு பெற்றவர்களாக மக்களை மாற்ற வேண்டும். இல்லையென்றால், யாருக்காகத் திட்டங்களைப் போடுகிறோமோ, யாருக்காக கோடானுகோடி ரூபாயைச்

செலவு செய்கிறோமோ, அந்த மக்கள், எழுத்தறிவில்லாதவர்கள், அந்தத் திட்டங்களுக்குத் தடையாக வர முடியும். ஆகவே எந்த முற்போக்கு நாடாக இருந்தாலும், எந்த முற்போக்குக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்,

(பிற்பகல் 7-30)

அவர்கள் முதலிலே செய்யும் காரியம் முதியோர் கல்விதான். இந்தியாவில் அதை முதல் காரியமாக எடுக்காமல், தீவிர தன்மையை இதற்கு முன்னால் காட்டாமல் இருந்த குற்றத்தை நாம் சுமத்திக் கொள்ளலாமே தவிர, ஏதோ இவ்வளவு நாள் கழித்தாவது சொல்கிறார்களே என்கிற அடிப்படையில் இதைச் செய்துதான் தீரவேண்டும். இல்லாவிட்டால் நாம் போடுகின்ற பொருளாதாரத் திட்டங்கள் அல்லது வேறு எந்தத் திட்டங்களாக இருந்தாலும், அவை நிச்சயமாக முழுமையாக நமக்கு வெற்றியைத் தராது. முதியோர் கல்வித் திட்டம் தேவை என்பது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் முன்னணியில் நின்று இந்தக் காரியத்திலே ஈடுபட வேண்டும். அவர்களுடைய பகுதியிலே இருக்கின்ற படிக்காத பெரியவர்களிடத்திலேகூட இதைப்பற்றிச் சொல்லி இதை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென்று இங்கே அமர்ந்திருக்கின்ற அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: முதியோர் கல்வித் திட்டம் இப்போது செயல்படுத்தப்படுகின்ற முறையின் மூலம் உண்மையிலே அவர்களால் உண்மையான கல்வியைப் பெற முடியவில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்லப் போனால், பேப்பர் அளவிலே தான் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் வேகம் இருக்கிறதா இல்லையா என்பது அல்ல பிரச்சினை. உண்மையிலே அவர்களுக்கு முதியோர் கல்வி நல்லமாதிரியாகக் கிடைக்கவில்லை. கடந்த பல ஆண்டுகளாக நாட்டிலே அப்படிப்பட்டதொரு நிலை இருக்கிறது. இன்னமும் சொல்லப்போனால், கல்வியறியாத முதியோர்களுடைய தொகை அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை நிலை; தவிர, அங்கு கல்வி பயில்பவர்களுக்காகச் செலவிடப்படுகின்ற பணம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்கிற நிலையை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: முதியோர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துகின்றபோது, அதில் இருக்கின்ற சில குறைபாடுகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். குறைபாடுகளைத் தீர்க்க எல்லோரும் சேர்ந்து வேண்டிய முயற்சிகளை எடுப்போம். குறைகள் இருக்கின்றன என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. முதியோர் கல்வி என்பது ஆரம்பக் கல்வியைப் போன்ற ஒரு கல்வி அல்ல. ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை, குழந்தைக்குக் கல்வி புகட்டுவதோடு

கடமை முடிந்துவிடுகிறது. ஆசிரியர்களுக்குள்ள கடமை அவர்களுக்குக் கல்வி சொல்லித் தருவது மட்டும்தான். குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்குக் கூட்டி வருகிற பணியைப் பெற்றோர்களே செய்து விடுவார்கள். ஆனால் முதியோர் கல்வியைப் பொறுத்தவரை, கல்வியைச் சொல்லித் தருவது மட்டுமல்ல ஆசிரியர்களுடைய பணி. பெரியோர்களாகவே பார்த்து வகுப்புகளுக்கு வர வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருவது மட்டுமல்ல. அவர்களே வகுப்புகளுக்கு வருவார்கள் என்று நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அவர்களாக வருவார்கள் என்று நம்பியிருக்கின்றவரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி நிலைமைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தத் தடவை இந்த அரசு இதற்குத் தீர்வு காண சமூக சேவா ஸ்தாபனங்களைப் பயன்படுத்துகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தாங்களாகவே சேவை செய்யப் போகிறோம் என்று சொல்லுபவர்களை, தாங்களாக முன் வருபவர்களை இதற்குப் பயன்படுத்தி, பெரியவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து பாடம் சொல்லிக் கொடுக்கின்ற வகையில், அதிகமான அக்கறையோடு அவர்கள் வாங்குகின்ற சம்பள அளவுக்கு மேலாகக் காரியங்களைச் செய்ய வேண்டிய அளவிற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 'மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள்கூட இதில் ஈடுபட்டால் நிச்சயம் நன்மை கிடைக்கும். எந்த அளவுக்கு இதில் ஈடுபட்டாலும், லாபம் கிடைக்குமே தவிர நஷ்டமல்ல.

மேல்நிலைப் பள்ளிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் கூறுகின்றபோது, ஒரு கணக்கை எடுத்துக் காட்டினார்கள். 6 வயது முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்கள் 25.55 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆறு வயதிலிருந்து 11 வயது வரையுள்ள படிக்கின்றவர்கள் 26.37 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவ்வாறு குறிப்பில் இருக்கின்ற சிறுவர்களை விட படிக்கின்ற சிறுவர்கள் 1 இலட்சம் பேர் அதிகமாக இருப்பது வினோதமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இது அச்சுப் பிழையால் ஏற்பட்ட தவறான புள்ளிவிவரமாக இருக்கலாமென்று சொன்னார்கள். 6 வயது முதல் 11 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுடைய கணக்கின் அடிப்படையில்தான் இருக்கின்றவர்களுடைய புள்ளிவிவரத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் வகுப்புகளில் படிப்பவர்கள் என்ற வகையில் கணக்கைப் பார்க்கின்றபோது, பெயில் ஆனவர்கள் கூட 5 ஆம் வகுப்பில் இருப்பார்கள். ஒரு இலட்சம் பேர் எப்படி கூடுதல் ஏற்பட்டது என்றால்; 6 வயது முதல் 11-வது வயது என்று சொல்கிறபோது, 5 ஆம் வகுப்பில் பெயிலான அதிக வயதுடையவர்கள் கூட அந்தக் கணக்கில் வருவார்கள். 5-வது வகுப்பில் 11 வயதுக்கு அதிகமானவர்கள் இருப்பார்கள். அப்படி இருப்ப

வர்கள்தான் இந்த ஒரு இலட்சம் பேர் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 300 மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பித் திருப்பதாகச் சொன்னார்கள். 300 என்பது சரியல்ல என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : 300 என்றுதான் நான் சொன்னேன். ஆனால் இப்பொழுது எனக்கு 82 என்கிற தகவல் வந்திருக்கிறது. கன்னியாகுமரி யையும் சேர்த்து 150 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக மாவட்ட வாரியாக அந்த விவரங்களைச் சொல்லிவிடுகிறேன்.

சென்னை	72
செங்கற்பட்டு	49
தென்னாற்காடு	52
வடாற்காடு	79
தஞ்சாவூர்	68
திருச்சிராப்பள்ளி	67
புதுக்கோட்டை	15
மதுரை	81
இராமநாதபுரம்	64
திருநெல்வேலி	82
கன்னியாகுமரி	47
சேலம்	67
தர்மபுரி	30
கோயம்புத்தூர்	80
நீலகிரி	17
மொத்தம்	870

மொத்தம் 870 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 24 ஆங்கிலோ இந்தியன் பள்ளி களுக்கும், 18 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கும் இந்த வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. ஆக மொத்த எண்ணிக்கை 912. இன்னின்ன பகுதிக்குத்தான் இந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்ற அடிப்படையில் இதைச் செய்து தரவில்லை. நாங்களாக இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்

என்று வாய்ப்பினைத் தந்த நேரத்தில் வேண்டாமென்று சொன்ன பள்ளிகளும் இருக்கின்றன. நாங்கள் சொன்ன நேரத்தில் ஆரம்பிக்க முடியாது என்று சொன்ன பள்ளிகளும் கூட இருக்கின்றன. அவ்வாறு வேண்டாமென்கின்ற அந்த ஒரு நிலை, எதிர்ப்பு என்கின்ற ஒரு நிலை ஏற்பட்ட நேரத்தில், கேட்ட வர்களுக்கெல்லாம் அவர்களுக்கு இருநத வசதி வாய்பபுக்களை பார்த்தும் கூடுமானவரை சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்கள் யார் யார் வேண்டுமென்று சொன்னார்களோ அப்படிப்பட்டவர்களுடைய எண்ணத் தைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அந்த எண்ணத்தையும் பூர்த்தி செய்து, ஆக மொத்தம் 912 மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். கல்வித் துறையில் இதுவரை கட்டிடம் கட்டுவது என்றால்கூட, நம்முடைய தொகுதியா இல்லை வேறு தொகுதியா என்று வித்தியாசம் பார்க்கக்கூடிய பழக்கம் இருந்து வந்தது. இந்தத் தடவை முதல் தடவையாக மேல்நிலைப் பள்ளிகள் எந்தத் தொகுதியில் இருந்தாலும், அதை யார் திறந்து வைக்க முயற்சி செய்தாலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளிக்கும் 1½ இலட்சம் ரூபாய்க்கு கட்டிடம் கட்டலாம் என்கின்ற சிரிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். இது நல்ல முறையில் செயல்படுத்தப் படவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமெல்லாம். தனியார் பள்ளி களுக்கு மேல்நிலைப் பள்ளி வசதியை அதிகமாகத் தந்திருக்கிறோம். சிறப் பாக அங்கு வசதிகள் இருக்கின்றன. அங்கு ஆய்வுக்கூடங்கள் நல்ல முறையில் இருக்கின்றன. தனியார் பள்ளி, அரசுப் பள்ளி என்கின்ற வித்தி யாசத்தைப் பார்த்து, அந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் காரியங் களைச் செய்து திட்டங்களை செயல்படுத்த முயற்சி செய்து, பள்ளிக்கூடங் களில் அதை அமுல்படுத்தினால், அதன்படி செயல்படுகிற பள்ளிகளுக்கு நாம் அந்த வசதியைத் தந்தால், அதன் மூலம் இந்தத் திட்டத்திற்குத் தோல்வி வரக்கூடாது என்ற அடிப்படையில்தான் தனியார் பள்ளிகளுக்கு அதிகமாக இதைச் செய்திருக்கிறோம். அவை இன்றையதினம் நல்ல முறையில் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேல்நிலைப் பள்ளிகள் பற்றி பொதுவாக ஒருசில கருத்துக்கள் பேசப் பட்டன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒரு குறிப் பிட்ட விஷயத்தைப் பற்றிப் பாராட்டினார்கள். ஆளும் கட்சி உறுப்பின ரான திரு. அறிவழகன் போன்றவர்கள் கொஞ்சம் கடுமையான கருத்துக் களைச் சொன்னார்கள். ஆனால் இதில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினை பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் சந்தர் அவர்கள் பாராட்டினார்கள் என்று சொல்கிற போது, அந்தப் பாராட்டினால் அவருக்கு எதிர்ப்பு கூட சில மாநிலங்கள்

தெரிவித்ததாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். எதிர்க் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலத்தில் நடைபெற்ற ஒரு காரியத்தை எப்படி நீங்கள் பாராட்டிப் பேசலாம் என்று அவரைக் கேட்டதாகக் கூடச் சொன்னார்கள். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, அவரும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் உள்ள நிலைமைகளை அவர்கள் சொன்னார்கள். மேல்நிலைப் பள்ளிகளை எந்த நோக்கத்திற்காக அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அந்தக் குழுவில் இருக்கிறவர்கள் சொன்னார்களோ, அந்த நோக்கத்தின் அடிப்படையில், அதை அப்படியே ஏற்றுக்கொண்டு, நாம் செய்தோமே தவிர, அதில் நாம் ஒன்றும் மாற்றங்களைச் செய்யவில்லை. ஆனால் மற்ற மாநிலங்களில் அங்குள்ள வசதிகளை, வாய்ப்புக்களைப் பொறுத்து சில மாற்றங்களைச் செய்தார்கள். நம் மாநிலத்தில் அவர்கள் சொன்னதை அப்படியே செயல்படுத்தினோம். அந்தக் குழு சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டோம். அந்த அடிப்படையில் தான் அவர்கள் தமிழக அரசைப் பாராட்டுகிறார்கள். அகில இந்திய கல்வித் திட்டமாக அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கல்வி முறையை அப்படியே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். உயர்நிலைப் பள்ளியில்தான் அது இருக்க வேண்டுமென்ற கருத்தை நாம் வற்புறுத்திச் சொன்னோம். அந்த வயதுக்கு உட்பட்டவர்கள் பள்ளிகளில் தான் படிக்க வேண்டுமென்ற கருத்தை நாம் சொன்னோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வேறு வேலை இல்லை என்றால், கல்லூரிக் காவது சென்று படிக்கலாம் என்கிற நிலையில் இருப்பவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஹையர் செகன்டரி படிப்பை முடிக்கும்போது, அவர்களுக்கு 18 வயது ஆகிவிடும். அதற்குப் பிறகு கல்லூரிப் படிப்பைப் படிப்பதற்கு விருப்பம் உள்ளவர்கள்தான் கல்லூரிக்குப் படிக்க வருவார்கள். கல்லூரியில் சேர்ந்து தொடர்ந்து படிப்பதா இல்லை வேறு வேலை தேடிக் கொள்வதா என்பதுபற்றி ஒரு நல்ல முடிவை மாணவன் அந்த வயதில் எடுக்க முடியும். ஆகவே 16 அல்லது 17 வயதில் முடிவெடுப்பதற்கும் 18 வயதுக்குப் பிறகு முடிவெடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் சிந்தித்துப் பார்க்க

(பிற்பகல் 7.40)

வேண்டும். 17 வயது அல்லது 16 வயது என்கிறபோது, அவன் படிக்க முடியாது, வேலைக்கும் போக முடியாத ஒரு வயதில் அவன் இருக்கிறான். ஆனால் 18 வயது என்கின்றபோது அவன் படித்துத்தான் ஆகவேண்டும். அப்போது கல்லூரிக்கு வருவானே தவிர, சும்மா இருக்க மாட்டான். கல்லூரிக்கு வரவில்லையென்றால் கூட, வேலைக்குப் போய்விடுவான். இனி இந்த ஹையர் செகன்டரி படிப்பு வந்ததற்குப் பிறகு, கல்லூரியிலே வந்து சேர்ந்து படிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள்தான், பெரும்பாலோர் தாங்கள்

படிக்க வேண்டும் என்ற உணர்வால் வருவார்களே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குற்றச் சாட்டுக்கான வாய்ப்பு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்போது குறைக்கப் படும். இங்கே நாம் 'வொக்கேஷனல் சிஸ்டம்' என்று சொல்லி பல்வேறு தொழில் கல்வி தரவேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறபோது, நாம் அனைவருக்கும் வேலை தரமுடியுமா என்கிற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் கேட்டார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், இப்போது இருக்கிற ஜனநாயக அமைப்பில் யார் அமைச்சராக வந்தாலும், எந்தக் கட்சி ஆளும் பொறுப்பை ஏற்றாலும், இந்தத் திட்டம் இல்லை; வேறு எந்தத் திட்டம் போட்டாலும், படிக்கின்ற அத்தனை பேருக்கும் வேலை தர முடியும் என்ற கருத்து யாருக்கும் இல்லை. படிக்கின்ற அத்தனை பேருக்கும் நிச்சயமாக வேலை தரமுடியாது. எப்படி அத்தனை பேருக்கும் வேலை தர முடியும்? அந்த அடிப்படையிலே இதை நாம் பார்த்தால், மிகப் பெரிய தவறை நாம் செய்கிறோம். நாம் படிக்காமல் இருந்தால் நிலைமை என்ன ? இப்படிப்பட்ட கல்வி இல்லையென்றால், என்ன நிலைமை ஏற்படும்? அதைத்தான் இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அவர் சொல்லி வருகின்ற அந்தக் கருத்து நம்முடைய கருத்துக்கு மாறான கருத்து அல்ல. ஒரு பையன் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து, உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படித்து நிற்கின்றான். அவன் படிக்காமலேயே இருந்தால், அவனுடைய நிலைமை என்ன? இப்போது இருக்கின்ற நிலையில் இந்த ஹையர் செகண்டரி, தொழில் கல்வி இல்லையென்றால், ஒரு பையன் படிக்காமலேயே இருந்தால், அவன் ஏதாவது ஒரு கூலி வேலைக்குப் போய் தன்னுடைய வயிற்றைக் கழுவிக் கொள்வான். அவனுடைய குடும்பத்திற்கும் பாரம் இல்லாமல் இருப்பான். அவன் படிக்கின்ற காரணத்தினாலே எந்த வேலைக்கும் அவன் தயாராக இல்லை. அவன் அவனுடைய குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் பாரமாக இருக்கிறான். ஆனால், இந்தக் கல்வி ஒரு பையனை, ஒரு குழந்தையை, ஒரு மாணவனை என்ன செய்கிறது என்ற கேள்வியைத்தான் இந்த நாட்டின் பிரதமர் அவர்கள் கேட்டார்கள். அவர்களுடைய அந்தக் கருத்தை, கேள்வியைப் பார்த்தால், அது நூற்றுக்கு நூறு சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. கல்வித் துறை சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்று. அந்த அடிப்படையிலே நாம் பார்க்கின்றபோது, இதற்கு முன்னாலே இருந்த திட்டத்தைவிட, நாம் இப்போது சில மாறுதல்களைச் செய்து கொண்டு வந்திருக்கும் இந்தத் திட்டம் ஒரு பாயின்டாவது அதிகமாக நன்மை பயக்கக்கூடிய திட்டம்தான். எந்தவிதத்திலும் இதற்கு முன்னாலே இருந்த திட்டத்தைவிட இது மோசமான திட்டமல்ல என்பதை என்னால் உறுதியாகச் சொல்லிக்கொள்ள முடியும். சாதாரணமாக நம்முடைய நோக்கம் வேலை தர முடியுமா என்பதல்ல. சமுதாயத்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 ஏப்ரல் 11

-திற்கு பாரமாக இருக்கக்கூடிய அந்த இளைஞனைச் சமுதாயத்திற்குப் பயனுள்ளவனாக மாற்ற முடியுமா, 'ப்ரொடக்டிவ்' ஆக, 'சோசியலி யூஸ்ஃபுல்' ஆகச் செய்ய முடியுமா என்பதுதான் நோக்கம். இந்தச் சமுதாயத்திற்குப் பயனுள்ளவனாக அவனை ஆக்க முடியுமா, அல்லது ஒரு கட்டத்திலே அவன் தனக்கு வேலை கிடைக்கவில்லை என்று நினைக்கின்ற நேரத்தில் 'ஒரு வேலையும் எனக்குத் தெரியாது, ஆகவே, வேலை எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை' என்று அவன் விரக்தியடைவதற்கு மாறாக, என்னால் ஏதாவது செய்து பிழைக்க முடியும் என்று சொல்லத்தக்க அளவுக்குத்தான் இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு நல்ல கல்வியை, பயனுள்ள கல்வியைத் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இன்றைக்கு இந்தக் கல்வியை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்றைக்கு இருக்கும் சப்ஜெக்டைப்பற்றிச் சொல்கிறபோது, 4 சப்ஜெக்ட்கள் இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டு, அதைக் குறைக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். இப்போது இருக்கின்ற பிரச்சினை, இருமொழிக் கொள்கை என்ற அடிப்படையிலே ஆங்கிலமும் தேவை, தமிழும் தேவை. அதற்குமேல் 4 சப்ஜெக்ட்கள். இந்த நான்கு பாடங்களையும் குறைக்க வேண்டும் என்ற நிலைமை வருவதற்குப் பதிலாக, இது இருப்பதுதான் நல்லது என்று தோன்றுகிறது. காரணம் இந்த நான்கு பாடங்களும் அறிவு வளர்ச்சி சம்பந்தப்பட்ட பாடங்கள். நமக்கு இருக்கிற மிகவும் மோசமான ஒரு நிலைமை என்னவென்றால், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், நம்முடைய நாட்டுக்கும் மற்ற நாடுகளுக்கும் அறிவுத் துறையில் தர வித்தியாசம் இருக்கிறது. இங்கே பி.எஸ்சி. படித்த மாணவன் ஐரோப்பிய நாடுகளிலே எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவனுக்கு ஒப்பவே இருக்கிறான். இந்தக் கருத்துக்களை, இந்தக் குறைபாடுகளை நாம் எத்தனை ஆண்டுக் காலமாகப் பார்த்து வருகிறோம். ஆகவே, அறிவியல் துறையில் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தர வித்தியாசம் அல்லது இந்த வேறுபாடு களையப்படாதவரைக்கும் நாம் பெற்ற சுதந்திரம் உண்மையான சுதந்திரமாக இருக்க வாய்ப்பில்லை. நாம் யாரையும் நம்பாமல், நாமும் வாழ முடியும். நம் சொந்தக் காலிலே நாம் நிற்க முடியும் என்பதை நிலைநாட்ட விரும்பினால், அறிவுத் துறையில் மற்ற நாடுகளைப்போல நாம் வளர்கிறோம் என்பது மட்டுமல்ல, அவர்களையும் மீறி நாம் வளர்கிறோம் என்ற நிலை வர வேண்டும். நம்முடைய இளைஞர்கள் நம் நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கும் பயன்படுகிறார்கள் என்ற நிலை வளர வேண்டும். ஆகவே, அந்த நிலை ஏற்படுவதற்கு எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு நாம் அறிவுத் துறையில் தேர்ச்சிபெற வேண்டும். ஆனால் நம்முடைய பயிற்சி மொழியில்தான் தகராறு.

1979 ஏப்ரல் 11]

THIRU A. R. DAMODARAN: Sir, I have not said that we should reduce the number of subjects. I have only said this. We have followed implicitly the scheme of education adopted by the Central Government when they suggested the plus 2 course with six subjects. Now I believe even the Central Government are thinking on defferent lines. I think that in Delhi they have already dropped out one subject and are having only five subjects. How does our system fit into the All-India pattern of education? I would request the Hon. the Education Minister to discuss this with the Central authorities and see that we have a truly all-India system of education. I will be glad if our students study, not six subjects, but eight subjects. I have studied seven subjects in Senior Cambridge and it is very useful. But whether it is in consonance witht the all-India pattern of education is all that I wanted the Hon. the Education Minister to consider.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த தேசியக் கொள்கைபற்றிப் பாராளுமன்றத்திலே விவாதிக்கப் போகிறார்கள். ஏற்கெனவே நாம் கொண்டு வந்திருக்கின்ற முறையைத்தான் அவர்களும் கொண்டு வரவிருக்கிறார்கள். மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே விவாதித்த அளவிலே அப்படித்தான் ஒரு நிலை உருவாகியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கின்ற அளவுக்கு பெரிய வித்தியாசம் இருக்க நியாயமில்லை. புகுமுக வகுப்பிலே மூன்று சப்ஜெக்ட்கள்தான் இருந்தன. இதிலே ஏன் நான்கு என்று சொல்லுகின்றவர்கள் இருக்கிறார்கள்? ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை, இப்போது இருக்கும் பாடங்களுக்கு மேல் எல்லோரும் கணக்கும் படிக்க வேண்டும் என்று இருக்கிறது. மெடிக்கல் காலேஜிலே சேர வேண்டுமானால் கணக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்ற முடிவை இன்றைக்கு பல்கலைக் கழக மானியக் குழு அல்லது அந்தப் பொறுப்பை வகிக்கின்ற நிபுணர்கள் குழுக்கள் சேர்ந்து முடிவெடுத்திருக்கிறார்கள். கணக்கு இல்லாமல் வேறு எந்த சப்ஜெக்ட் படித்தாலும், அதை மட்டும் வைத்துக்கொண்டு அறிவுத் துறையில் முன்னேற்றமடைய முடியாத நிலை இருக்கிறது. நிறைய படிக்க வேண்டும் என்ற நிலையில் நாம் இன்றைக்கு 4 சப்ஜெக்ட்கள் தேவை என்று சொல்கிறபோது, இது பாரம் என்று சொல்லுகின்ற கருத்து நாம் படிப்பது எல்லாம் நமது அறிவு வளர்ச்சியை பெருக்கிக்கொள்ளத்தான் என்று எண்ணும் மனப்பாங்கு இல்லாததால்தான் வருகிறது. அப்படிப்பட்ட மனப்பான்மை இருந்தால், அறிவு வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தோடு பார்க்கின்றபோது, அறிவு வளர வளர படிப்பு பாரமாக இருக்காது, இன்பமாக இருக்கும். அறிவை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள, வளர்த்துக்

கொள்ள நமக்கு அது நிச்சயமாக இன்பமாகத்தான் இருக்கும். கண்டிப்பாகப் பாரமாக இருக்காது. அறிவை வளர்த்துக்கொள்ளாமல் வேறு ஏதோ காரியத்தை நாம் செய்துகொண்டிருக்கும்போதுதான், புத்தகத்தைப் பார்க்கின்ற போதுதான், அது நமக்குப் பாரமாக இருக்கிறது. தாய்மொழியில் படித்தால், நிச்சயமாக அறிவு வளர்ச்சி உண்டாகும். இந்த ஒரு கருத்து உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு உலகத்திலே முன்னேறிய நாடுகளை நாம் கண்ணாரப் பார்க்கிறோம். சோவியத் யூனியன், ஜப்பான், சைனா போன்ற நாடுகள் முன்னேற்றம் அடைகின்றன. அதை நாம் கண்ணாலேயே பார்க்கிறோம். அங்குள்ள மக்களுக்கு ஆங்கிலம் தெரியாது. தாய்மொழியிலேதான் படித்து முன்னேறியிருக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞான ரீதியாக வேகமாக முன்னேறியிருக்கிறார்கள். உலகத்திலே இருக்கின்ற அறிஞர்கள், விஞ்ஞானிகள், தாய்மொழி மூலம் படித்துத்தான் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், நாம் இன்னும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. ஆனால் நாம் பின்தங்கியிருப்பதற்குக் காரணம் இதுதான் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தாய்மொழி மூலம் கல்வி பெறுவது என்பதைப் பொறுத்து, நம்முடைய நாட்டிலிருக்கிற மோசமான நிலைமை காரணமாகத்தான் நாம் 2,500 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்காகச் செலவு செய்ததாக ஒரு கணக்குத் தரும்போது, அதிலே மொழிகளைப் படிப்பதற்காக மட்டும் 1,500 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யும் நிலைமை இருக்கிறது. நம்முடைய நாட்டில் ஒரு மாணவன் படிப்பதைப் போல வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மொழிகளை எந்த மாணவனும்

(பிற்பகல் 7-50)

படிப்பதில்லை. நமது நாட்டு மாணவன் மொழியை இத்தனை ஆண்டுக் காலம் படிப்பதைப்போல் உலகில் வேறு எந்த நாட்டிலும் படிப்பதில்லை. நமது நாட்டில் ஒரு மாணவன் வேற்று மொழியில் அறிவைப் பெறுவதைப் போல் வேறு எந்த நாட்டிலும் பெறுவதில்லை. இந்த நிலைமைகளை வைத்துப் பார்க்கிறபோது, 1,500 கோடி ரூபாய் எந்த அளவுக்கு இன்றைய தினம் வீணாகிக் கொண்டிருக்கிறது? இந்த நாட்டின் வளத்திற்குப் பயன்பட வேண்டிய பணம், இந்த நாட்டுக்குப் பாரமாகக் கருதப்படுகிற மனித சக்தியைப் பயன்படுத்தி வளர்ந்து நாட்டுக்கு மிகப் பெரிய சொத்தாக மாற்ற வேண்டிய துறைகளில் செலவிடப்பட வேண்டிய பணம் எப்படி வீணாகிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தப் புள்ளிவிவரமே சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தாய்மொழியான தமிழ் மூலம் அறிவை நாம் வளர்ப்போமானால், நமது நாட்டு மாணவர்கள் எதையும் கண்டு அஞ்ச மாட்டார்கள். உண்மையான அறிவு வளர்ச்சி ஏற்படுகிறபோது, நாளுக்கு நாள் அவர்களெல்லாம் தெளிவாக இருப்பார்கள். எந்த நேரத்திலும் எதைக் கேட்டாலும் சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். பரீட்சையன்று மட்டும் தெரியும், அதற்கு அடுத்த நாள் தெரியாது என்ற நிலைமை இந்த நாட்டில் இருக்காது.

அந்த அடிப்படையில் பார்க்கிறபோது தமிழ் பயிற்சி மொழி என்பது மிகச் சிறந்த திட்டமாக அமையும். இதைத்தான் நாம் அரசின் கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். இல்லை இல்லை நாங்கள் ஆங்கிலத்தில்தான் படிக்க விரும்புகிறோம் என்றால், 20 ரூபாய் கட்டிவிட்டுப் படியுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இதைச் சொல்லும்போது, வசதி படைத்த மாணவர்கள் ஆங்கிலத்தில் படித்துப் பயனடைகிறார்கள், வசதியற்ற ஏழை எளிய மாணவர்கள் தமிழில் படித்துப் பட்டம் பெறுவதால் பயனடைய முடியாமல் இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுகிறார்கள். இதனையொட்டி நான் ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். தாய்மொழி மூலமாகப் படித்தால்தான் அறிவு வளரும் என்பது உண்மையாக இருக்குமானால் உலகத்திலே இருக்கிற கல்வி நிபுணர்களும் அறிஞர்களும் சொல்லுகிற அந்தக் கருத்துதான் உண்மையாக இருக்குமானால்—ஒரு மாணவன் ஆங்கிலத்தில் படித்து வாங்குகிற மதிப்பெண்களைவிட ஒருவன் தமிழ் மொழியில் தாய்மொழியில் படித்து வாங்குகிற மதிப்பெண்கள்—மார்க்குகள்—10, 15 அதிகமாகத்தான் இருக்கும். இன்றையதினம் ஆங்கிலத்தில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை விட தமிழ் மொழியில் படிக்கிற மாணவர்கள்தான் அதிகமான மார்க்குகளை வாங்குகிறார்கள். நகரங்களில் வாழ்ந்து கொண்டு ஆங்கிலப் பயிற்று மொழியில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களைவிட கிராமப்புறங்களில் இருக்கிற ஏழையெளிய மாணவர்கள் தாய்மொழியில் படித்து அதிகமான மார்க்குகளை வாங்குகிறார்கள். இதில் யாருக்கும் சந்தேகமில்லை. வேறு காரணங்களால் தாய்மொழியில் படிப்பவர்களின் மார்க் குறையலாமே தவிர, பயிற்றுமொழி தாய்மொழியாக இருப்பதால் அல்ல.

திரு. க. இராமமூர்த்தி : வேலை வாய்ப்புகளைப் பொறுத்தவரை, (Employment opportunities) எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்குனிட்டிஸைப் பொறுத்தவரையில், தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர்களைத் தான் வேலைக்கு எடுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்காகத்தான் சொல்லுகிறேன். தமிழ் நாட்டில் இருக்கிறவர்களுக்குத்தான் தமிழ் நாட்டில் வேலை தர வேண்டும், பஞ்சாபில் இருப்பவர்களுக்குத்தான் பஞ்சாபில் வேலை தர

வேண்டும். வங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வங்காளத்தில் வேலை தர வேண்டும் என்று இவ்வாறு அனைத்து மாநிலங்களைச் சார்ந்தவர்களும் தங்கள் தங்கள் மாநிலத்தவருக்கே வேலைவாய்ப்புத் தர வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். இன்றையதினம் அப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கு ஆதரவு இருக்கிறது என்பதையும் யாரும் மறுப்பதற் கில்லை. எனவே நாம் ஆங்கிலத்தில் படித்தால், பம்பாய்க்குப் போய் வேலை பார்க்கலாம் என்று கருதுவது சரியல்ல என்பதை உணர வேண்டும். பம்பாய்க்குப் போய் வேலை பார்ப்பதற்கு இன்றையதினம் எவ்வளவு பெரிய தடைகள் இருக்கின்றன என்பதையும் நாம் மறக்கத் தேவையில்லை. இங்கே படிக்கிற மாணவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போய் வேலை பெற்று அங்கே இருக்கிற இளைஞர்களுடைய வேலைவாய்ப்புக்கு எதிராக இருக்க வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. இந்த உணர்வு ஒரு அரசுக்கே நல்லதல்ல என்றுதான் நான் நினைக்கிறேன்.

நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் இங்கே கிடைக்காத அல்லது இல்லாத ஒன்றைப் பெறுவதற்கு வெளி மாநிலங்களுக்குப் போகட்டும், அதன் மூலம் இங்கே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்றாலும், அதற்கும் தாய்மொழி கற்பதைத் தவிர வேறு வழியில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும்கூட ஆங்கிலத்தில் பயின்றவர்களுக்குத்தான் வேலைவாய்ப்புகளில் சலுகை கிடைக் கிறது. ஆங்கிலத்தில் பயின்றவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து வேலையில் சேர்த்துக்கொள்கிறார்கள். அதையும் அரசு உணர வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படியே பார்த்தாலும், நாம் ஆங்கிலத்தைத் தடுத்துவிடவில்லை. 3-வது வகுப்பு முதற்கொண்டு ஆங்கி லத்தை நாம் கட்டாயப் பாடமாக வைத்திருக்கிறோம். அப்படி 3-வது வகுப்பு முதற்கொண்டே ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக வைத்திருக்கிற ஒரே மாநிலம் தமிழ் மாநிலம்தான். இன்னும் சொல்லப்போனால், ஒருவர் தமிழ் படிக்காமலேயேகூட இங்கே பட்டதாரியாக வரலாம். ஆனால் ஆங்கிலம் படிக்காத யாரும் பட்டதாரியாக வர முடியாது. ஆங்கில மொழி யைச் சரியாக வகுப்புகளில் சொல்லித் தரவில்லை என்பதால் ஆங்கில மொழியில் அறிவு குறைவாக இருக்கலாம். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ஆங்கில மொழியறிவைத் தடுக்கவில்லை. மாறாக நாம் ஊக்குவிக்கிறோம். ஆங்கிலத்தை நல்ல முறையில் படிக்க வேண்டுமென்பதற் காகத்தான் 11-வது, 12-வது வகுப்புகளில் ஆங்கிலத்தைக் கட்டாயமாக வைத்திருக்கிறோம். வேறு காரணங்களால் இதில் குறைபாடு இருக்கலாமே தவிர, மொழி அறிவு பெறுவது என்ற வகையில் நாம் ஆங்கிலத்தைத் தடுத்து

விடவில்லை. ஆனால் நான் கேட்க விரும்புவதெல்லாம் அப்படி ஒரு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்ற காரணத்திற்காக உண்மையான அறிவு வளர்ச்சிக்குத் தடையான காரியத்தைச் செய்யத்தான் வேண்டுமா?

இப்போது பி.யூ.சி. படித்தவர்கள் எஞ்சினியரிங், மெடிகல் ஆகிய படிப்பு களுக்குப் போகிறார்கள். இனிமேல் புதிய 12-வது வகுப்பில் படித்தவர்கள் மார்க்குகள் வாங்கியதன் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பி.யூ.சி. படிக்கும் வாய்ப்பு பெற்றவர்கள் நகரத்தில் இருப்பவர்கள். அதன் காரணமாகத்தான் அந்தப் பயனைப் பெற்ற நகரத்து மாணவர்கள் இந்த வகுப்புகளில் அதிகமான அளவுக்குச் சேர்ந்திட முடிந்தது என்ற கருத்து இருந்தது. இனி, அப்படிப்பட்ட கருத்துக்கு இடமில்லை. இன்னும் சொல்லப் போனால், பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று பேசுகிற நேரத்தில்கூட, பிற்பட்டவர்களிலும், தாழ்த்தப்பட்டவர்களிலும் முன்னேறிய வர்கள்தான் அந்தப் பலனை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற குறைபாடு, குற்றச்சாட்டு சமுதாயத்தில் இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு நாம் எடுக்கிற நடவடிக்கைகளில் இந்த முறையும் ஒன்றாகும். பயிற்சி மொழியாகத் தமிழைக் கொண்டு வருவதன் மூலம் 12-வது வகுப்பில் படிக்கிற ஏழை எளிய மாணவன் இனி அதிகமான மார்க்குகள் வாங்குவான். இதுவரை இருந்துவந்த நிலைமைகளுக்கு மாறாக, நகரத்தில் படிக்கிற மாணவர்களைவிட கிராமங்களில் வாழ்கிற ஏழை எளிய மாணவர்கள் அதிகமான மார்க்குகளைப் பெறுவார்கள். இது ஏழை எளிய மாணவர்களுக்கு உண்மையில் நல்ல பயனைத் தரும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : கல்வியமைச்சர் நல்ல கொள்கையைச் சொன் னார்கள். தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருவதன் மூலம் மாணவர்களுக்குக் கிடைக்க இருக்கிற அறிவு வளர்ச்சி பற்றிக் குறிப் பிட்டார்கள். அதைத் தொடர்ந்து சொல்லுகிறபோது, தமிழ்நாட்டில் தமிழைப் படிக்காமலேயேகூட ஒருவர் பட்டதாரியாக முடியும், ஆனால் ஆங்கிலம் படிக்காமல் பட்டதாரியாக முடியாது என்ற கருத்தைச் சொன் னார்கள். இது கடந்த கால நடைமுறைக்கு உகந்ததாக இருக்கலாம். இதை மாற்றி ஒருவர் ஆங்கிலம் படிக்காமலேயேகூட தமிழ் நாட்டில் பட்டதாரியாக முடியும், ஆனால் தமிழ் படிக்காமல் பட்டதாரியாக முடியாது என்ற நிலையை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புலவர்கள் அவ்வாறு பட்டம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. தமிழ் படிக்காம லேயே பட்டம் பெறுகிற நிலைமை இருக்கிறது என்று நான் சொல்லும் போது, மைனாரிட்டி மொழியினரைக் குறிப்பிடுகிறேன். தெலுங்கு,

கன்னடம் ஆகியவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ் நாட்டில் தங்கள் தாய்மொழியில் கல்வி கற்கும்போது, தமிழ் கற்காமல் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்று, பட்டம் பெறும் நிலைமை இருக்கிறது. இப்போதே அவர்களும் தமிழ் நாட்டில் தமிழ் மொழியைப் படிக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறோமே, எங்களுக்கும் மாநில மொழியான தமிழைக் கற்றுத் தாருங்கள் என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுகிற காரணத்தால், அவர்களுக்கு அதைச் செய்து தர முடியாமல் இருக்கிறோம்.

திரு. செ. முத்துசாமி : நான் அதை வரவேற்கிறேன். ஆனால், ஆங்கிலத்தைப் படிக்காவிட்டால், தமிழ் நாட்டில் பட்டதாரியாக முடியாது என்ற நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமையை மாற்றி ஆங்கிலம் படிக்காவிட்டாலும், பரவாயில்லை, தமிழ் மொழியைப் படிக்காவிட்டால், தமிழ் நாட்டில் பட்டதாரியாக முடியாது, அவர்களுக்குப் பட்டம் அளிக்கக்கூடாது என்று சொல்லும் வகையில் தமிழ் படித்தவர்களுக்கு மட்டும் பட்டம் கொடுக்கும் வகையில் தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்கள் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது இன்னும் தலைகீழாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆங்கிலத்தைப் படிப்பது என்பது வேறு மொழி படிக்க வேண்டும் என்ற ஆசைக்காக யாராலும் படிக்கப்படுவதில்லை. உலக நாடுகளோடு தொடர்பு கொள்ளத் தேவையான மொழியறிவு வளர்ச்சிக்குத் தேவையான மொழி என்ற காரணத்தால், படிக்கப்படுகிறது. உலகத்தில் அதிகமான மக்கள் புரிந்து கொண்டிருக்கிற மொழியாக அது கருதப்படுகிற காரணத்தால், எல்லாக் கட்டத்திலும் ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டும் என்று சொல்லுவது ஒரு தவறான கருத்து என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால் அரசாங்கத்தின் சில முடிவுகளை மட்டும் இங்கே நான் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 8.00)

கூடுதல் ஆசிரியர் பதவிகள்.—1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் கூடுதல் ஆசிரியர் பதவிகள் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட இருக்கின்றன:—

1—8 வகுப்புகளுக்கு 1,000 செகண்டரி கிரேடு (இடைநிலை) ஆசிரியர் பதவிகள்.

உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 100 உடற் பயிற்சி ஆசிரியர் பதவிகள்.

உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தலைமையாசிரியர் பதவிகள்.

தற்பொழுது உயர் தொடக்கப் பள்ளிகளிலுள்ள பகுதி நேர கைத் தொழில் ஆசிரியர்களுக்குப் பதிலாக 200 முழு நேர கைத் தொழில் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்துதல்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 பி.டி. தர ஆசிரியர் பதவிகள் மேல் நிலைப் பள்ளிகளுக்கு 1,740 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகள்.

மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களாகப் பணி செய்பவர்களுடைய பதவிகளை உயர்த்தி 400 உடற் பயிற்சி இயக்குநர் பதவிகள் ஆகியவை புதிதாக ஏற்படுத்த இருக்கும் பதவிகளாகும்.

கல்வித் துறை நிருவாகம்.—கல்வித் துறை நிருவாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1979-80 ஆம் ஆண்டில் புதியதாக தருமபுரி மாவட்டத்திற்கு ஒரு முதன்மைக் கல்வி அலுவலர் பதவி, சென்னை மாவட்டத்திற்கு மேலும் ஒரு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி மற்றும் 15 பள்ளித் துணை ஆய்வாளர் பதவிகள் ஆகியவையும் ஏற்படுத்தப்படும்.

இளநிலை ஆசிரியர்களை உயர்நிலைப்படுத்துதல்.—இளநிலை ஆசிரியர்களுள் இடைநிலைத் தகுதி பெற்று எல்லாப் பள்ளிகளிலும் பணிபுரியும் அனைவருக்கும் இடைநிலைப் பதவி உயர்வு அளிக்கப்படும். இது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் இடைநிலை ஆசிரியர் ஊதியம் அளித்துப் பயன் பெறும் வகையில் கல்வி இலாகா ஆணை வழங்கும். படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் நிறைவேற்றப்பட்ட இத்திட்டம் இவ்வாண்டும் இடைநிலைத் தகுதி பெற்ற எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமைகிறது. இதேபோல் ஒவ்வொரு ஆண்டும் இடைநிலைத் தகுதி பெற்றவர் யாவரும் இளநிலையிலிருந்து இடைநிலைப் பதவி உயர்வு செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அமுல்படுத்தப்படும்.

இளநிலை ஆசிரியர் இடைநிலைப் பயிற்சி பெறவும் அவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்யவும் தமிழக எஸ்.சி.ஈ.ஆர்.டி. நிறுவனம் பயிற்சிக்கு வகை செய்யும். மிகப் பெரிய ஒரு குறைபாடாக கருதப்பட்டு கோரிக்கை வைத்துக் கேட்டிருந்தார்கள். அதற்கான ஒரு முடிவாக இதை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவித் தலைமை ஆசிரியர்.—உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளிக்கு 750-ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் அனைத்திலும் அந்தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களில் பி.டி. சம்பளம் பெறும் ஆசிரியர்களுள் பணி மூப்பு மிகுதியாக உடையவர் உதவித் தலைமையாசிரியர் என அறிவிக்கப்பட்டு அவருக்கு மாதம் ரூ. 25 சிறப்பு ஊதியம் வழங்கப்படும். ஒரு பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியராகப் பணி செய்யும் காரணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு உதவித் தலைமையாசிரியர் எவரும் தலைமையாசிரியராக நியமனம் பெற உரிமை கொண்டாட இயலாது.

ஆகவே, ஒவ்வொரு பள்ளியிலும் பணிபுரிகிற ஆசிரியர்களின் பணி மூப்பு அடிப்படையிலே உதவித் தலைமையாசிரியர்களை நியமிக்கிறோம். இவ்வாறு செய்வதால் பி.டி. ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், அந்த சம்பளத்தைப் பெறுகிற தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோரும் இடம் பெறுவார்கள்.

ஆசிரியர் சங்க கூட்ட நாட்களை பள்ளி வேலை நாட்களாகக் கருதுதல்.—ஆண்டுதோறும் பள்ளிகளில் வேலை செய்ய வேண்டிய மொத்த வேலை நாட்களைக் கணக்கிடும்போது தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களையும், பள்ளி வேலை நாட்களாகக் கருத வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

இதையும் ஒரு கோரிக்கையாக அவர்கள் வைத்திருந்தார்கள்.

1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் நியமன நாள் முதல் பணி வரன்முறை.—அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் முழுத் தகுதி பெற்றவர்கள் அவரவர் நியமன நாள் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகளும் வழங்கப்படும்.

ஊக்க ஊதிய உயர்வு.—பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்க ஊதிய உயர்வுத் திட்டத்தின் கீழ் பட்ட மேற்படிப்புத் தகுதி (எம்.ஏ. போன்ற பட்டங்கள்) மூன்றாவது வகுப்பில் பெற்றுள்ளவர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு ஆணையும் வெளியிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு உடனடியாக ஓய்வு ஊதியம்.—ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதில் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்ப்பதற்காக நடைமுறைகள் திருத்தி அமைக்கப்படும். ஓய்வூதியம் அனுமதிப்ப

தோடு அதைப் பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்டக் கல்வி அலுவலர்களே வழங்க வகை செய்யப்படும். அவ்வாணைகள் மாநில கணக்காயரால் பின் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்படும்.

முன்பு ஏ.ஜி. அவர்கள் முதலிலே ஆய்வு செய்யப்பட வேண்டுமென்ற முறை இருந்ததால், ஓய்வு பெற்றவர்களுக்கு ஓராண்டு, இரண்டாண்டு காலம் ஓய்வூதியத்தைப் பெறாமல் ஆசிரியர்கள் கஷ்டப்படுகிற நிலைமை இருந்தது. இப்போது அதை மாற்றி மாவட்டக் கல்வி அதிகாரிகளே ஓய்வூதிய ஆணையை வெளியிடலாம் என்றும், அதை ஏ.ஜி. பின் ஆய்வு செய்யலாம் என்றும் முடிவெடுத்திருக்கிறோம்.

பணிப் பதிவேட்டின் மறு பிரதியை ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளும் ஏற்பாடு.—சர்வீஸ் ரிஜிஸ்டர்களை, அடமானம் வைப்பதைப்போல, பயன்படுத்தி ஆசிரியர்களை ஒரு இக்கட்டான நிலைமைக்கு சில நிர்வாகங்கள் ஆளாக்கியிருக்கிறார்கள். சர்வீஸ் ரிஜிஸ்டர்களை தங்களிடம் வைத்துக் கொண்டு அதன் அடிப்படையிலே ஆசிரியர்களை மிரட்டுகிற, துன்புறுத்துகிற நிலைமைகள் இருந்தன. அதைத் தவிர்க்க, அரசு ஊழியர்களைப் போல இனி ஆசிரியர்களும் பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள பிற அலுவலர்களும் தங்களுடைய பணிப் 'பதிவேட்டின் மறு பிரதி ஒன்றை தாங்களே வைத்துவர அனுமதிக்கப்படுவார்கள். அதிகாரபூர்வமான பணிப் பதிவேட்டில் பதிவுகள் செய்யும் அதிகாரியே பணிப் பதிவேட்டின் மறு பிரதியிலும் பல்வேறு பதிவுகளுக்குக் கையொப்பம் இட்டுத் தருவார். எந்தக் காரணத்தினாலாவது மூல பணிப் பதிவேடு காணாமல் போய்விட்டால் பணிப் பதிவேட்டின் மறு பிரதியின் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும். இரண்டு பணி பதிவேட்டுகளிலும் ஒரே முறையில் பதிவுகள் செய்யப்பட்டிருக்கும். பல்வேறு பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களின் முன் பணிக் காலங்கள் பற்றி சரியான தகவல்கள் இல்லாமல் இருக்கின்றன. இதனால், பல ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறை வந்தால் நிச்சயமாக அவர்கள் தங்களிடமுள்ள மறு பணிப் பதிவேட்டைக் காட்டி உரிய சம்பளத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மேல்நிலைப் பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம்.—உடற் பயிற்சி இயக்குநர் இல்லாத மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 25 சிறப்பூதியம் அளிக்கப்படும்.

மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுள் ஆசிரியர் பயிற்சி இல்லாமல் பட்ட மேற்படிப்பு தகுதி மட்டும் உள்ளவர்களுக்குக் கூடுதல் சம்பளம்.—மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுள் ஆசிரியர் பயிற்சித் தகுதி இல்லாமல் பட்ட மேற்

படிப்புத் தகுதி மட்டும் உள்ளவர்களுக்கு இப்போது பி.டி. ஆசிரியர் சம்பள விகிதத்தின் தொடக்க நிலையாகிய ரூ. 450 மட்டுமே மாதச் சம்பளமாக தரப்படுகிறது. இனி, அவர்களுக்கு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் சம்பள விகிதத்தின் தொடக்க நிலை ஆகிய ரூ. 675 மாத சம்பளமாக தரப்படும். அவர்கள் ஆசிரிய பயிற்சி தகுதி பெறும் வரை அந்த ரூ. 675 ஊதியத்தை **பெற்று வருவார்கள்.**

பதினாறு வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதி.—எஸ்.எஸ்.எல்.சி. நடக்கும் மாதத்தில் முதல் தேதி அன்று 16 வயது முடிந்திருந்தவர்கள் அனைவரும் அவர்கள் எட்டாவது தேறி இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட முறையில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. எழுதலாமென அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதிலே ஒரு பிரச்சினை இருந்தது. தனிப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத 18 வயது என்று வைத்திருக்கிறோம். எட்டாவது தேர்வு எழுத 14 வயது என்று வைத்திருக்கிறோம். ஆகவே, ஈ.எஸ்.எல்.சி. (எட்டாவது) தேர்வு எழுதியவர்கள், அதில் பாஸ் ஆன பிறகு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத வேண்டுமானால் 4 ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே எட்டாவது தேர்வு எழுதியதற்குப் பிறகு, மற்ற மாணவர்களைப் போல் அவர்களும், இரண்டாண்டுகள் கழித்து 16 ஆவது வயதில் எஸ்.எஸ்.எல்.சி.-யை நேரிடையாக எழுதலாம் என்ற வாய்ப்புத் தந்திருக்கிறோம்.

தனியார் கல்லூரிகளுக்கும் குழு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவாக்குதல்.—பணியிலிருக்கும்போது ஒருவர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் தர வகை செய்யும் "குழு ஈட்டுறுதித் திட்டத்தை" தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள விகிதங்கள்.—பி.லிட். வகுப்பு நடத்தும் ஓரியண்டல் கல்லூரிகள், உடற் பயிற்சிக் கல்லூரிகள், சமுதாயப் பணியில் எம்.ஏ. வகுப்பு நடத்தும் சமுதாயப் பணி கல்வி நிறுவனங்கள், ஆகிய சிறப்புக் கல்லூரிகளில் பணி செய்யும் ஆசிரியர்களில் பல்கலைக் கழக மானியக் குழு விதித்துள்ள தகுதிகளை உடைய ஆசிரியர்கள் அனைவருக்கும் பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள விகிதங்கள் அளிப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் நுட்பக் கல்வி.—திருச்சியில் மைய அரசு உதவியுடன் 1979 ஜூலையிலிருந்து உணவுத் தொழில் கைவினைஞர்களை பயிற்றுவிப்பதற்கான

கல்வி நிலையம் ஒன்று (ஃபுட் கிராப்ட் இன்ஸ்டிடியூட்) தொடங்கப்பட இருக்கிறது. இதை மத்திய அரசு முழு மானிய உதவியுடன் நடத்தவிருக்கிறோம்.

சமுதாயப் பணியில் பல்தொழில் பயிலகங்கள்.—பல்தொழில் நுட்ப பயிலகங்கள் மூன்று வரும் 1979-80 ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற விரிவுப் பணியை தொடங்க இருக்கின்றன. செட்டிநாடு பாலிடெக்னிக், பெரிய நாயக்கன்பாளையம் பாலிடெக்னிக், காஞ்சிபுரம் பாலிடெக்னிக் என்று மூன்று பாலிடெக்னிக்குகள் ரூரல் கம்யூனிட்டி பாலிடெக்னிக் என்ற பெயரோடு வரவிருக்கின்றன.

(பிற்பகல் 8-10)

விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வு ஊதியம். அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களும், வறுமையில் வாடுபவர்களுமான விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதற்கான திட்டத்தை இவ்வரசு முதன்முதலாக ஏற்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின்கீழ் மாதம் ரூ. 75 வீதம் 1—4—1979 முதல் ஓய்வு ஊதியம் பெறுவதற்குரிய 25 விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இசை வளர்ச்சி. சென்னையிலுள்ள அரசு இசைக் கல்லூரி தமிழ் இசைக்கு முதன்மை அளிப்பது இல்லை என்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. இக்கருத்துக்கு ஆதாரம் இல்லை. இசையைப் பற்றிய விவரங்களைக் கற்பிக்கும்போது பழந்தமிழ் இசை, தமிழர் இசைக் கருவிகள், தமிழ்ப் பண்களின் வகைகள், ஆகியவைபற்றி மாணவ மாணவியருக்கு கற்பிக்கப் படுகிறது. தேவாரம், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ், திருவாசகம் ஆகியவற்றிலுள்ள பாடல்களும், அண்மைக்கால இசைப்பாடல் ஆசிரியர்கள் இயற்றிய தேசியப் பாடல்களும் இசைப் பாடல்களாகக் கற்பிக்கப்படுகின்றன.

இந்திய இசையின் வரலாற்றுக்கு அடிப்படையாகத் திகழும் பண்டைத் தமிழ் பண் ஆராய்ச்சி நூல்களும், இடைக்காலக் கவிஞர்களாகிய அருணகிரிநார், முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதி, ஞானம் கிருஷ்ணய்யர் போன்றவர்களுடைய பாடல்களும், மற்றும் அண்மைக் கால கவிஞர்களாகிய பெரியசாமித்தூரன், பாபநாசம் சிவன், பாரதிதாசன் போன்றவர்களுடைய பாடல்களும் கற்பிக்கப்படுகின்றன.

இரண்டாண்டு காலப்படிப்பாகிய சங்கீத வித்வான் படிப்பில் பயில வேண்டிய பாடல்களின் எண்ணிக்கை 60-லிருந்து 70 வரை ஆகும். அப்பாடல்களில் மூன்றில் ஒரு பங்கு தமிழ்ப் பாடல்களே ஆகும். பயிலும்

பாடல்களில் பாதிக்கு மேற்பட்டவை சிறந்த தமிழ்க் கவிஞர்களுடைய பாடல்களேயாகும். தமிழ் கவிஞர்களுக்கும், தமிழ் இசைக்கும் முதன்மை தந்து இசை பயிற்றுவிக்க அரசு இசைக் கல்லூரி அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டுள்ளது.

தமிழ் அறிஞர்களுக்கு ஓய்வு ஊதியம் அதிகரிப்பு. வறுமையில் வாடும் தமிழ் அறிஞர்களுக்கான ஓய்வு ஊதியத் தொகை மாதம் ரூ. 100-லிருந்து மாதம் ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆகிய இந்தச் சிறப்பான முடிவுகளை கல்வித் துறையின் சார்பாக நாம் அறிவித்திருக்கிறோம். இது ஓரளவுக்கு பல்வேறு துறையினருக்கும் மன நிறைவைத் தரும் என்ற நம்பிக்கையோடு, இந்த கல்வித் துறையினுடைய கொள்கைக் குறிப்பினை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கத்தினர்கள் எல்லாம் நிகழ்த்திய பல்வேறு கருத்துக்களுக்கும், உரைகளுக்கும் ஒரு பதிலாக இந்த உரை அமைந்திருக்கின்றது. அது மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு ஒரு நல்ல மன நிறைவைத் தரும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இளநிலை ஆசிரியர்களை முதுநிலை ஆசிரியர்களாக ஆக்குகின்ற திட்டத்தில், தம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எஸ்.சி.ஈ.ஆர்.டி. மூலம் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதிலே கிட்டத்தட்ட 68 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எத்தனை ஆண்டுக் காலத்திற்குள் பயிற்சி கொடுப்பார்கள் ? அத்தனை பேர்களையும் ஏற்றுக்கொண்டதாக இப்போது அறிவிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டில் இடைநிலை ஆசிரியர்களாக இருக்கின்ற 5 ஆயிரம் பேர்களுக்குப் பயிற்சி தருவதாக அறிவித்தார்கள். 1—4—1970-க்குப் பிறகு பணி வரன்முறைப் படுத்திய இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் என்று பல்வேறு பிரிவினர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கும் இந்தப் பயிற்சி கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன். பி.லிட். ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இந்த ஆசிரியர்களின் நிலையைப் பற்றி அவர்கள் பிரச்சினையைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பெற்ற ஆசிரியர்கள் பற்றி, அவர்கள் முழுத் தகுதி பற்றிய விவரங்கள்தான் இங்கே தரப்பட்டிருக்கின்றன. மற்ற விவரங்கள் இல்லாத தனாலேதான் அதைப்பற்றிச் சொல்ல முடியவில்லை. பி.லிட். ஆசிரியர்களைப் பொறுத்த மட்டும், அவர்கள் தகுதி பெற்றிருந்தால், அந்தச் சம்பள விகிதம் தரப்படும். இளநிலை ஆசிரியர்கள் இன்றைக்குக்கூட, எஸ்.எஸ்.எல்.சி.

படித்திருந்தால், தனிப்பட்ட முறையில் ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதலாம் என்று நான் கருதுகிறேன். அவர்களுக்குப் போதுமான பயிற்சி கிடைக்க வசதியில்லை என்ற காரணத்தினால், அந்தக் குறைபாட்டைப் போக்க எஸ்.சி.ஈ.ஆர்.டி. மூலம் உதவி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக்குவதன் முக்கியத்துவத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படித் தமிழ் நாட்டில் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு, தமிழக அரசுப் பணிகளிலே முன் உரிமை கொடுக்கப்படும் என்று அரசு முடிவு செய்யுமா ? 1—4—1970-க்குப் பிறகு அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே நியமிக்கப்பட்டு நிரந்தரப்படுத்தப் படாமல் இருக்கின்ற சுமார் 700 பட்டதாரி ஆசிரியர்களும் இந்த 5 லட்சம் பேருக்கான பணித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் நிரந்தரப்படுத்தப்படுவார்களா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் விளக்கம் மட்டும் கேட்கலாம். திரும்பவும் பேசி அதற்கும் அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவதாக இருந்தால், இன்னும் காலம் வளரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இடைநிலை ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட 5 லட்சம் பேருக்கான பணித் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களையும், இதர ஆசிரியர்களையும் பணிவரன்முறை செய்யவேண்டும் என்ற கோரிக்கையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. அதைப் பற்றியும் விளக்கவேண்டும். இந்த ஆசிரியர்களுக்கு விடுப்பு வசதிகள் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்[illegible] அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, பத்து நாட்களுக்குள்ளேயே அந்த ஆணையை நிறுத்திவைக்கும் வகையில் மற்றொரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த விடுப்பு வசதிகள் இந்த ஆசிரியர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றி விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தமிழைப் பாட மொழியாக எடுத்துப் படித்தவர் களுக்கு முன்னுரிமை தரப்படுமா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும்போது,

தமிழிலே படித்தவர்கள் அவர்களாகவே முன் உரிமை பெற்றுவிடுகிறார்கள். அவர்கள் அதிகமான மார்க்குகள் வாங்குவதால் என்றுதான் சொல்லி யிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து அங்கத்தினர் கேட்க இருக்கின்றதற்கும் அமைச்சர் அவர்களிடம் விவரம் இருக்குமா என்று தெரியவில்லை.

திரு. செ. முத்துசாமி : நான் அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையில் உள்ளதற்குத்தான் விளக்கம் கேட்க விரும்புகிறேன். அதில் இல்லாத விஷயம் குறித்து விளக்கம் கேட்கவில்லை. அவர் அறிவிப்பில் சொன்னது புரிய வில்லை. அதைப்பற்றித்தான் விளக்கம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக 'ஆக்கக்கூடிய திட்டத்தை வரவேற்கிறார்கள். இத்திட்டம் அந்த ஆசிரியர்களுக்கு நல்ல வாய்ப்பைத் தரும் என்று அறிவித்திருக்கிறார்கள். கோத்தாரி கமிஷன் ரிப்போர்ட்டைப் பொறுத்த வரையில், குறுகிய காலப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று அதில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சிபாரிசின்படி அவர்களுக்குப் பயிற்சி குறுகிய காலத்தில் கொடுக்கப்படுமா ?

அடுத்து சங்கக் கூட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாட்களை வேலை நாளாக கருதுவதாக அறிவிப்பு இருக்கிறது. பள்ளி இல்லாத நாட்களாக இருந்தால், அதையும் அரசாணைப்படி வேலை நாளாகக் கருதி அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேலை நாளாகக் கருதப்படும் என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே அந்த அடிப்படையிலே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற்று பரீட்சை எழுதுவது பற்றிக் கேட்டார்கள். இடைநிலை ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்தால், அவர்கள் நேரடியாகவே தேர்வு எழுதலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. அதற்குத் தேவையான பயிற்சியோ, வேறு நிலைமைகளோ இல்லாத காரணத்தினாலே, பலர் தேர்வு எழுதாமல் இருக்கிறார்கள். அதற்கு வழிவகை செய்கின்ற வகையில், எஸ்.சி.ஈ.ஆர்.டி. மூலம் பயிற்சி பெற்றுக்கொண்டு நேரடியாகத் தேர்வு எழுதலாம் என்றும் இருக்கிறது. அவர்களுக்கு அந்தத் திட்டம் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 16—4—1979, திங்கட்கிழமை அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 8-18)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

130 Notification issued in G.O. Ms. No. 2902, Revenue, dated the 15th December 1978 in regard to an amendment to the Revenue Department Notification LI-1 No. 3987 (*b*) of 1971, dated the 7th September 1971, published at page 2 of Part-II —Section I of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. (Tamil and English) [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

131. Notification issued in G.O. Ms. No. 163, Rural Development and Local Administration, dated the 31st January 1979 in regard to an amendment to the Conduct of Election of Madras Corporation Councillors Rules, 1962. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]

132. Notification issued in G.O. Ms. No. 158, Home, dated the 17th January 1979 in regard of an amendment to the Tamil Nadu Distillery Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

B. Reports, Notifications and Other Papers.

* 112. Pamphlets relating to Co-operation.

* 113. Policy Note on Land Revenue. (Tamil and English).

* 114. Performance Budget on Revenue Department, 1979-80. (Tamil and English).

* 115. Demand No. 5—Policy Note on Stamps Administration. (Tamil and English).

* 116. Demand for Irrigation Grants, 1979-80. (Tamil and English).

* 117. Statement on the Follow-up action on the Suggestions and Observations made by the Members of the Legislature during the discussion on the Demand on Irrigation for 1978-79. (Tamil and English).

* 118. Policy Note on Agriculture, 1979-80 (Tamil and English).

* 119. Performance Budget on Agriculture Department 1979-80. (Tamil and English).

* 120. Booklets on certain Agricultural Programmes—New variety of crops (Tamil).

இணைப்பு I.

192ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 283-க்கான விடையைக் காண்க.] புயல் வெள்ள நிவாரண சீரமைப்புப் பணிகள் என்கிற வகையில் தமிழகத்தில் உள்ள நகர்மன்றங்கள் தனித்தனியே பெற்ற நிதி உதவித் தொகை.

வரிசை எண்.	நகர்மன்றம்/நகரியக்குழு.	1978-லே வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை.
(1)	(2)	(3)
		ரூ.
1.	வாலாஜாபேட்டை	50,000
2.	அறந்தாங்கி	1,00,000
3.	மணப்பாறை	5,00,000
4.	கொடைக்கானல் நகரியக்குழு	1,00,000
5.	பழனி	2,00,000
6.	மாதவரம் நகரியக்குழு	50,000
7.	காஞ்சிபுரம்	2,00,000
8.	ஆம்பூர்	50,000

* Circulated to all M.L.Cs. on 9th April 1979.

வரிசை எண்.	நகர்மன்றம்/நகரியக்குழு.	1978-லே வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை.
(1)	(2)	(3)
		ரூ.
9.	சிதம்பரம்	3,00,000
10.	தேவகோட்டை	1,00,000
11.	ஆலந்தூர்	10,00,000
12.	திருவள்ளூர்	2,00,000
13.	உதகமண்டலம்	3,50,000
14.	ஸ்ரீரங்கம்	5,00,000
15.	பெரியகுளம்	1,00,000
16.	புளியங்குடி	25,000
17.	சத்தியமங்கலம்	25,000
18.	ஆரணி	50,000
19.	திருவொத்தியூர்	3,00,000
20.	நெல்லிக்குப்பம்	50,000
21.	மன்னார்குடி	2,00,000
22.	திண்டுக்கல்	5,00,000
23.	வாணியம்பாடி	1,00,000
24.	நாகப்பட்டிணம்	16,00,000
25.	விருத்தாசலம்	50,000
26.	மேட்டுப்பாளையம்	1,00,000
27.	தாராபுரம்	50,000
28.	உடுமலைபேட்டை	50,000
29.	ஆவடி நகரியக்குழு	5,00,000
30.	குழித்துறை	25,000
31.	சங்கரன்கோவில்	50,000
32.	சிவகாசி	1,00,000
33.	நாமக்கல்	50,000
34.	பத்மநாபபுரம்	25,000
35.	செங்கல்பட்டு	1,00,000
36.	திண்டிவனம்	50,000
37.	ராணிப்பேட்டை	25,000
38.	திருவண்ணாமலை	1,50,000
39.	விருதுநகர்	2,00,000
40.	துறையூர்	50,000

[1979 ஏப்ரல் 11

வரிசை எண். (1)	நகர்மன்றம்/நகரியக்குழு. (2)	1978-லே வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை. (3)
		ரூ.
41.	பொள்ளாச்சி	1,00,000
42.	அம்பத்தூர் நகரியக்குழு	25,000
43.	கோயம்புத்தூர்	4,00,000
44.	திருப்பூர்	1,00,000
45.	வேலூர்	1,00,000
46.	திருநெல்வேலி	1,00,000
47.	தூத்துக்குடி	1,00,000
48.	சேலம்	3,00,000
49.	கும்பகோணம்	3,00,000
50.	தஞ்சாவூர்	1,00,000
51.	திருச்சிராப்பள்ளி	20,00,000
52.	பொன்மலை	2,00,000
53.	இராமநாதபுரம்	1,00,000
54.	கத்திவாக்கம் நகரியக்குழு	50,000
55.	தாம்பரம்	1,00,000
56.	பல்லவபுரம்	4,00,000
57.	தர்மபுரி	25,000
58.	கிருஷ்ணகிரி	25,000
59.	குடியாத்தம்	1,00,000
60.	ஆற்காடு	50,000
61.	அரக்கோணம்	25,000
62.	மாயூரம்	50,000
63.	பட்டுக்கோட்டை	50,000
64.	திருவாரூர்	50,000
65.	சீர்காழி	1,00,000
66.	கடலூர்	2,00,000
67.	பண்ருட்டி	25,000
68.	சிங்கநல்லூர்	5,00,000
69.	குன்னூர்	2,00,000
70.	சூரமங்கலம்	50,000
71.	காரைக்குடி	1,00,000
72.	புதுக்கோட்டை	2,00,000

ப்ரல் 11]

நகர் மன்றம்/நகரியக்குழு. (2)	1978-லே வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை. (3)
	ரூ.
கரூர்	2,00,000
கொளச்சல்	25,000
இராஜபாளையம்	50,000
அருப்புக்கோட்டை	1,00,000
பாளையங்கோட்டை	50,000
கடையநல்லூர்	25,000
மேலபாளையம்	1,00,000
மொத்தம்	1,50,00,000

நகர்மன்றம். (2)	1979-லே வழங்கப்பட்ட நிதியுதவித் தொகை. (3)
	ரூ.
உதகமண்டலம்	8,62,000
குன்னூர்	18,69,000
கொளச்சல்	2,69,000
மொத்தம்	30,00,000

இணைப்பு II

ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 287-க்கான விடையைக் காண்க.]

) ஆம்.

) (1) முதல் நிலை விற்பனைக் கூடங்களுக்குச் சொந்தமாக ஒரு
ஏர் நிலமாவது இருக்க வேண்டும்.

2) மத்திய அரசினால் கொடுக்கப்படும் உதவித் தொகை, ஒவ்வொரு
முறை விற்பனைக் கூடத்திற்கும் ரூ. 1.5 இலட்சம்.

(3) இந்த ரூ. 1.5 இலட்சத்தை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படைத் தேவைகளான அலுவலகம், கிடங்கு, ஏலக் கொட்டகை, தண்ணீர் மற்றும் கழிவிடங்கள் அமைப்பதற்கு மட்டுமே உபயோகித்தல் வேண்டும்.

(4) மத்திய உதவித் தொகை இரண்டு தவணைகளில் அளிக்கப்படும்.

(உ) மேற்படி விதிமுறைகளுக்கு ஒப்ப முதலில் ஏழு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ. 10.5 இலட்சம் உதவித் தொகை பெறுவதற்காக பிரேரணைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பின்பு பதினெட்டு (18) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களுக்கு ரூ. 27.00 இலட்சம் உதவித் தொகை பெறுவதற்கான பிரேரணைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேற்கண்ட பிரேரணைகள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. நீர்த்தேக்க பாசனப் பகுதியின் கீழ் வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும், பணப்பயிர் பயிரிடப்படும் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் மத்திய அரசு ஒவ்வொரு விற்பனைக் கூடத்திற்கும் ரூ. 4.00 இலட்சம் உதவித் தொகை அளிக்க முன்வந்துள்ளது.

அந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு பிரேரணைகள் அனுப்பத் தேவையான புள்ளிவிவரங்களை விரைவில் சேகரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

இணைப்பு III

[203 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 288-க்கான விடையைக் காண்க.]

(அ) தென்னாற்காடு மாவட்டத்திற்கு வருடம் வாரியாக சிறுவிவசாயிகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தொகைப் பற்றிய விவரம் கீழே உள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்)
1971-72	12.40
1972-73	27.14
1973-74	29.00
1974-75	25.00
1975-76	24.00
முதல் திட்ட காலத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தொகை.	117.54

1976-77	26.00
1977-78	34.85
1978-79 (31—1—1979 முடிய)	13.84 (முதல் தவணையாக)
இரண்டாவது திட்ட காலத்திற்கு வழங்கப்பட்ட மொத்த தொகை.	74.69

(இ) ஒவ்வொரு வருடமும் செலவழிக்கப்படாது திருப்பப்பட்ட தொகை ஒன்றுமில்லை.

(உ) இத்திட்டத்தின்கீழ் அடங்கப்பட்ட சிறு விவசாயிகள் பற்றி விவரம்:

சிறு விவசாயிகள்	55,048
குறுநில விவசாயிகள்	85,797
வேளாண்மை தொழிலாளர்கள்	21,361
மொத்தம்	1,63,106

(ஊ) இத்திட்டத்தினால் பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:

சிறு விவசாயிகள்	51,361
குறுநில விவசாயிகள்	55,129
வேளாண்மைத் தொழிலாளர்கள்	1,595
மொத்தம்	1,08,085

இணைப்பு IV

[16 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

3—1—1979 அன்று மாலை சுமார் அய்ந்து மணியளவில் ஊட்டியிலிருந்து வந்துகொண்டிருந்த பேருந்து இதளார் கிராமத்தில் நின்ற பொழுது தங்கப்பன் என்பவர் பேருந்தில் ஏறிக்கொண்டு பயணிகளை பேருந்தில் ஏறவிடாமலும் இறங்க விடாமலும் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. படுகர் இனத்தைச் சேர்ந்த மாத்தன் என்பவர் தங்கப்பனின் நடவடிக்கையைக் கண்டித்ததாகத் தெரிகின்றது. இதனால் இருவருக்கும் இடையே தகராறு மூண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர்.

இந்தச் சமயத்தில் படுகர் இனத்தைச் சேர்ந்த சிலர் தங்கப்பனை தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது. தங்கப்பன் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார். அங்கிருந்து படுகரல்லாதார் தங்கப்பனுக்கு தண்ணீர் கொடுக்க முனைந்தபோது படுகர்கள் தடுத்திருப்பதாகத் தெரிகின்றது. இதன் தொடர்பாக இரு சாராருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுள்ளது. தங்கப்பன் தாக்கப்பட்டது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அமைதிகாக்குமாறு இருதரப்பினரையும் வேண்டியபொழுது அதற்கு சம்மதித்தனர். குற்றவாளிகள் தலைமறைவாகிவிட்டனர்.

4—1—1979 அன்று காலையில் (சுமார் 7.45 மணி) படுகர் இனத்தைச் சார்ந்த சிலர் மற்ற ஜாதியினரை வீடுகளையும் கடைகளையும் காலிசெய்துவிட்டு வெளியேறும்படி மிரட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

4—1—1979 அன்று காலையில் படுகரல்லாத மற்ற ஜாதியைச் சேர்ந்த சுமார் 150 பேர்கள் இதளார் காவல் நிலையத்தில் கூடி குற்றவாளிகளை உடனே கைது செய்யவேண்டும் என்று வற்புறுத்தி உள்ளனர். தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிகூறி துணை ஆய்வாளர் அவர்களை அமைதிப்படுத்தினார். அதே நேரத்தில் படுகர்களுக்குச் சொந்தமான குடியிருப்புகளில் வசிக்கும் மற்ற ஜாதியினர் ஒன்றுகூடி சுமார் 9.45 மணியளவில் படுகர்களின் வீடுகளுக்கும், ஜன்னல், கண்ணாடிகள் முதலியவைகளுக்கும் சேதமேற்படுத்த முனைந்துள்ளனர். இதனையறிந்த காவல் துறையினர் உடனே அங்கு விரைந்து வன்முறையில் ஈடுபட்ட கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அதற்குள்ளாக சுமார் 170 வீடுகளுக்கு, சுமார் ரூ. 7,000 அளவுக்கு, சேதம் விளைவிக்கப்பட்டுவிட்டது. காயமடைந்த எட்டு பேர்கள் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம் சம்பந்தமாக இரண்டு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. செய்தியறிந்து, டி.எஸ்.பி., அங்கு சென்ற பொழுது சுமார் 400 பேர் சாலையில் அமர்ந்து கொண்டு தங்கப்பனைத் தாக்கியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். டி.எஸ்.பி., தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி அமைதி காக்குமாறு வேண்டி, அவர்களை சமாதானம் செய்து அனுப்பிவைத்தார். போலீஸ் ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டது. உடனே இதுபற்றிப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவும் டி.எஸ்.பி.-யால் ஏற்படுத்தப்பட்டது.

4—1—1979 அன்று பின்னிரவில் நஞ்சநாடு கிராமத்தைச் சேர்ந்த படுகர்கள் மேல்கோளிக்கரையில் உள்ள அரிசன குடியிருப்பைத் தாக்கியுள்ளதாகத் தெரிகின்றது. இதனையறிந்தவுடன், காவல்துறையினர் அங்கு

விரைந்து பார்க்கையில் குற்றவாளிகள் யாரும் அங்கு இல்லை. காயம் அடைந்ததாகப் புகார் கூறிய 15 பேர்கள் மருத்துமனைக்கு அனுப்பப்பட்டனர். இச்சம்பவம்பற்றி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

5—1—1979 அன்று காலை சுமார் 11 மணியளவில் இதளாரைச் சேர்ந்த படுகர்கள் பெருந்திரளாகக் கூட முற்பட்டனர். லாரிகளிலும் வந்து அங்கு கூடினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு அதிகாரிகள் கேட்டுக் கொண்ட பொழுது அவர்கள் மறுத்திருப்பதாகத் தெரிகின்றது. சுமார் 12.30 மணியளவில் கோத்தகண்டி மட்டம் என்னுமிடத்தில் படுகரல்லாதார் ஆயுதங்களுடன் திரண்டுள்ளதாகச் செய்தி கிடைத்தவுடன் ஆயுத காவல் படையினருடன் டி.எஸ்.பி., அங்கு விரைந்து அவர்களை விரட்டிவிட்டு திரும்புகையில் ஆயுதங்களுடன் படுகர்கள் கோத்தண்டிமட்டம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அபாயகரமான சூழ்நிலை உருவாக இருந்ததால் அதனைத் தடுக்க குறைந்த அளவு பலப்பிரயோகம் செய்து அவர்கள் விரட்டப்பட்டனர். ஆயினும் மலைச்சரிவுகளில் சிலர் சென்று படுகரல்லாதோரின் வீடுகளுக்கு தீ வைக்க, வீடுகளைப் பாதுகாக்க படுகரல்லாதார் விரைந்தனர். இருதரப்பாருக்கும் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று பேர் இறந்துள்ளனர். இச்சம்பவங்கள் சம்பந்தமாக நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. டி.எஸ்.பி. யும், காவலர்களும் இதளாரில் இருந்தபொழுது படுகர்கள் சிலர் மேலகோளகரை, கீழகோளகரை நரிக்கோளயடா முதலிய இடங்களில் உள்ள அரிசனங்களின் குடியிருப்புகளுக்கு தீ வைத்துள்ளதாகத் தெரிகின்றது. இதனால் 145 குடிசைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சேதத்தின் அளவு சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. அதிக அளவில் போலீசார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும் அசம்பாவிதங்கள் நிகழாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. டி.ஐ.ஜி.யும், மாவட்ட ஆட்சித்தலைவரும் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டனர்.

9—1—1979, 10—1—1979 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அமைதிக்குழு ஒன்றினைக் கூட்டி அமைதிகாக்குமாறும், போலீசாருக்கு உதவியாக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அமைதி காக்க முழு ஒத்துழைப்புத் தருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களின் தொடர்பாக 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 175 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்குகளைப் புலனாய்வு செய்ய தனி போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாகவே உள்ளது. எனவே இதுபற்றி சட்டமன்ற மேலவையில் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல் 16

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. எ. பொன்னப்ப நாயுடு அவர்கள் இயற்கை எய்தியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எ. பொன்னப்ப நாயுடு அவர்கள் திண்டிவனத்தில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் 1966 முதல் 1972 வரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்க்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Appointment of Teachers in Middle Schools.

*291 *Q.*—THIRU K. S. MANI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to appoint one Tamil Pandit and one Physical Education Teacher in every Middle School; and

(*b*) if so, the date from which it will be implemented?

[1979 ஏப்ரல் 16

நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமனம்

* திரு. கோ. சி. மணி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நடுநிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் தமிழாசிரியர் ஒருவரையும், உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரையும் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமுல் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) 1978-79-ம் ஆண்டு தமிழ் நாட்டில் இருந்த 5,705 நடுநிலைப் பள்ளிகளில் சுமார் 700 பள்ளிகளில் தனியே தமிழாசிரியர்களும், சுமார் 700 பள்ளிகளில் தனியே உடற்பயிற்சி ஆசிரியர்களும் இருந்தனர். அந்த 700 தமிழாசிரியர் பதவிகளில் 400 பதவி களும், 700 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளில் 200 பதவிகளும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்படுத்தியவையாகும். 1979-80-ம் ஆண்டு உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு சுமார் 100 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்படும். இனிவரும் ஆண்டுகளிலும் அரசு நிதி நிலை இடம் தருவதற்கேற்ப படிப்படியாக பிற நடுநிலை பள்ளிகளுக்கும் தனியே தமிழாசிரியர் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்துவது பற்றி கருதப்படும்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, 5700 நடுநிலைப் பள்ளிகளில் 700 தமிழாசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டது பற்றியும், அதில் 400 தமிழாசிரியர்கள் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்களென்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நடுநிலைப் பள்ளிகள் எல்லாவற்றிலும் அல்லது பெரும்பாலான பள்ளிகளில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களையும், தமிழாசிரியர்களையும்—இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களையும் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதிநிலை இடம் தருவதற்கேற்ப படிப்படியாக இந்த வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

1979 ஏப்ரல் 16]

Graduate Teachers.

* 292 *Q*.—Thiru C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that delay caused in implementing the Government Order regularising the services of the Graduate Teachers of Government Schools who were appointed after 1st April 1970 and who had completed one year of service as on 31st March 1977, through a Special Test of the Tamil Nadu Public Service Commission; and

(*b*) whether the Government would take steps to make their services permanent?

பட்டதாரி ஆசிரியர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு 31—3—1977 நாளன்று ஓராண்டு பணிமுடிந்த பட்டதாரி ஆசிரியர்களின் பணியை, அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் சிறப்புத் தேர்வின் மூலமாக நிரந்தரப் படுத்துவதற்கான அரசு ஆணையை செயல்படுத்துவதில் காலந்தாழ்த்தப்படுவது உண்மையா ?

(இ) அவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்தும் வேலையை விரைவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) &(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குழு, விரைவில் நடத்த இருக்கும் சிறப்பு நியமனத் தேர்விற்கு, தேவைப்படும் எல்லா விபரங்களையும் மற்றும் உரிய படிவங்களையும் தேர் வாணைக்குழுவிற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் ஏற்கனவே அனுப்பி வைத் துள்ளார். சிறப்பு நியமனத் தேர்விற்கான சில தெளிவுரையே தேர்வாணைக் குழு அரசிடம் கேட்டிருந்தது. இவ்விபரமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிறப்பு நியமனத் தேர்வை தேர்வாணைக் குழு விரைவில் நடத்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சிறப்பு நியமனம் மூலமாக ஆசிரியர் களின் பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்ற ஆணை 1977 டிசம்பரில் வெளியிடப்பட்டது. இருந்தாலும் இதை அமுல் படுத்த இவ்வளவு கால தாமதமாகியிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அரசின் கொள்கை

யான 'ஏ' பிரிவு 'பி' பிரிவு இணைப்பைத் தீவிரமாக ஆதரிக்கிறார்கள். அவர்களுடைய பணியை வரன் முறை செய்வது தாமதப்படுத்தப்படுகிறது. அவர்களைப் பிடிக்காதவர்கள் அவ்வாறு கால தாமதம் செய்கிறார்களென்று சொல்லப்படுகிறது. எனவே இது குறித்து அமைச்சரவர்கள் விளக்கம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட செய்திகளுக்கு, எந்தவிதமான ஆதாரமும் என்னிடத்தில் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சிறப்பு நியமனத் தேர்விற்கு சர்விஸ் கமிஷனுக்குச் செல்லும் ஆசிரியர்கள் மூன்று பிரிவினராக இருக்கிறார்கள். 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமிக்கப்பட்டு, இன்றுவரை தேர்ந்தெடுக்கப்படாமல் உள்ள 700 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அடுத்து, 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட 300 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகமொத்தம் 1,000 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களைப் பணியிலிருந்து நீக்க முடியாது. இவர்களைத் தவிர 10 (ஏ) (1) விதியின்கீழ் நியமிக்கப்பட்ட 400 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகமொத்தம் 1,400 ஆசிரியர்களை சர்விஸ் கமிஷனுக்கு அனுப்பும்போது முன்னுக்குப்பின் முரணாகக்கூட தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமைகள் உருவாகும். குறைந்த பணி அனுபவம் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தும், அதிகமான காலத்திற்குப் பணி செய்தவர்களைத் தேர்ந்தெடுக்காத நிலையும் ஏற்பட்டு, வருந்தத்தக்க நிலைமைகள் ஏற்படும். இந்தக் குறைபாட்டை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தாற்காலிகமாகப் பணியாற்றுகிற ஆசிரியர்களை வரன்முறைப்படுத்துவதற்காகத்தான் சிறப்பு நியமனத் தேர்வை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே தேர்வாணைக்குழு அந்தத் தேர்வை நடத்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்றுக்கருத்து ஒன்றைச் சொன்னோம். மிக முக்கியமான, இக்கட்டான நிலைமை வரும்போது, தேர்வாணைக் குழுவைக் கலக்காமல் மாநில ஆளுநர் அவர்களே, தற்காலிக அரசு ஊழியர்களின் பணியை நிரந்தரம் செய்யலாமென்று இந்திய அரசியல் சட்டத்தின் 320-வது பிரிவில் ஒரு அம்சம் இருக்கிறது. அந்த உரிமையை அரசியல் சட்டத்தில் கொடுத்திருக்கும்போது,

அதைப் பயன்படுத்தி—தமிழக அரசினுடைய மற்ற துறைகளிலே அப்படிச் செய்திருக்கிறார்கள்—கல்வித் துறையிலே பணிப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ள ஆயிரம் ஆசிரியர்களின் பணியை, சிறப்பு ஆணையின் மூலமாக நிரந்தரம் செய்ய அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட போக்கு, தேர்வாணைக் குழுவே தேவையில்லை என்ற நிலைமையை உருவாக்கும்.

* 293 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government are aware of the fact that the leave facilities other than Casual Leave are denied to the Graduate Teachers of Government Schools appointed after 1st April 1970 and not selected by the Tamil Nadu Public Service Commission;

(b) the reasons for denying leave facilities to the teachers though they had put in more than two years of continuous service; and

(c) whether the Government would take appropriate action to set right the defect?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறு விடுப்பைத் தவிர மற்ற விடுப்பு வசதிகள் மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இரண்டாண்டுக்குமேல் அந்த ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பணி புரிந்து இருந்தும் அவ்வாறு மறுக்கப்படுவதின் காரணம் என்ன ?

(இ) இந்தக் குறையை நீக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1—4—1970 முதல் 3—3—1973 வரையுள்ள காலத்தில் முதன்மைக் கல்வி அலுவலர்களால் தற்காலிகமாகப் பணியில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் நேரடித் தேர்வில்

தேர்ந்தெடுக்கப்படாதவர்கள், தற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களாகவே கருதப்படுவர். ஆகையினால் இவர்களுக்குத் தற்காலிக அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படும் விடுப்புகள் மட்டும் வழங்கப்படுகின்றன.

(இ) அரசினர் பள்ளிகளில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் இருப்பதால், தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே அவர்களது பணி வரன்முறை செய்யப்பட்டு, ஏனைய நிரந்தர அரசு ஊழியர்கட்கு அனுமதிக்கப்படும் விடுப்பு வசதிகள் வழங்க முடியும்.

(ஈ) மேற்கூறப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப்படுத்த தனியாக ஒரு சிறப்பு நியமனத் தேர்வு நடத்துமாறு கோரி அரசு தனது ஆணை (நிலை) எண். 2683, கல்வி, நாள் 30—12—1977 இல் ஆணை வெளியிட்டுள்ளது. சிறப்புத் தேர்வு நடத்துவதற்குரிய தேவையான நடவடிக்கைகளை தேர்வாணைக் குழு எடுத்து வருகிறது.

(பிற்பகல் 4-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதுகுறித்து அண்மையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, தற்காலிக அரசு ஊழியர்களுக்கு உள்ள விடுப்பு வசதி இவர்களுக்கும் பொருந்தும் என்று சொல்லி, அந்த வாக்குறுதியின் அடிப்படையில் கல்வித் துறை ஒரு ஆணையை வெளியிட்டது. ஆணை வெளியிட்ட பின் ஒரு வாரத்திற்குள் அதை அமுல்படுத்தாமல் நிறுத்தி வைக்குமாறு இன்னொரு ஆணை வெளியிடப்பட்டது. கொடுத்த வாக்குறுதி மீறப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லிய வாக்குறுதி காப்பாற்றப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்ட பிறகு, உடனடியாக 10 நாட்களுக்குள் அவர் கொடுத்த வாக்குறுதி மீறப்படும் வகையில், இன்னொரு ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றால், இது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? அந்த ஆசிரியர்களுடைய நிலை என்ன? உடனடியாக இதுகுறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

Graduate Teachers.

*294 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any condition to the effect that the annual increment should be sanctioned to Graduate Teachers of Government Schools who were appointed after 1st April 1970 and selected by the Tamil Nadu Public Service Commission, only from the date on which they pass the Account Test and the Deputy Inspector of Schools Test; and

(*b*) if so, whether the Government would comeforward to remove this condition?

பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்டு, அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு, கணக்குத் தேர்வு (Account Test) பள்ளித் பள்ளி துணை ஆய்வாளர் தேர்வு (Deputy Inspector of Schools Test) ஆகியவைகளில் தேர்ச்சி பெற்ற தேதியிலிருந்துதான், ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை ஏதும் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், இந்த நிபந்தனையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டபின் பணியில் நியமனம் செய்யப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு விதிகளின்படி முதல் ஆண்டு ஊதிய உயர்வு, கணக்குத் தேர்வு மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கான துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமலேயே அளிக்கப்படலாம். ஆனால் இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் 'அடுத்து வரும் ஊதிய உயர்வுகள்' மேற்சொன்ன தேர்வுகளில் தேர்வு பெற்று, அவர்கள் தங்களது தகுதி காண் பருவத்தை முடித்த பின்னரே அளிக்கப்படும்.

(இ) தமிழ்நாடு கல்விச் சார்புப்பணிகளின் தனி விதிகளில் விதி 11 இன் படி பட்டதாரி ஆசிரியர்களின் தகுதிகாண் பருவம் நிறைவு பெற்று ஆணை வெளியிட வேண்டுமானால் சார்பு நிலைப் பணியாளர்களுக்கான கணக்குத்

தேர்வு பாகம்-1 மற்றும் பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கான துறைத் தேர்வுகளில் தேர்வு பெற வேண்டும். அவர்களது பணிக்கு இத்தேர்வுகள் மிக அவசியமாதலால் இத் தேர்வுகளில் அவர்கள் கட்டாயமாக தேர்ச்சி பெற வேண்டும். எனவே, விதிகளை நீக்கும் அவசியம் எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இங்கே ஒரு சிக்கலை கல்வித்துறை உருவாக்கியிருக்கிறது. நிதித் துறை அரசாணை எண் 41, நாள் 11—1—1977-ன் படி (Probation) முடிவதற்கு முன்பு கூட ஆண்டு ஊதிய உயர்வு வழங்கலாம் என்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அக்கவுண்டன்ட்-ஜெனரல் இதுசம்பந்தமாக இன்னொரு துறைக்கு விளக்கம் அளிக்கும்போது 'Passing the Test is not a condition for sanctioning subsequent increments' என்று மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். இதைப் பற்றியும் நாங்கள் கல்வித் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த விஷயத்தில் ஏற்கெனவே முட்டுக்கட்டை ஏற்படுவதற்கான நிலை ஏதாவது இருந்தால், அதை மாற்றியமைக்கும் வகையிலும், ஆசிரியர்கள் அந்தப் பயனைப் பெறும் வகையிலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Kannamangalam–Reddippalayam Link Road

* 295 Q.—THIRU S. ARUMUGAM (on behalf of THIRU A. DRAVIDAMANI): Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answers given to Council Question Nos. 258 and 259 on 6th April 1978—

(*a*) the stage at which (i) the provision of Concrete Pipe at the site of drain crossing and (ii) the forming of a side ditch to a distance of about 100 links between 2/0 and 3/0 Km. in the link road leading to Reddippalayam village from Kannamangalam, in Arni taluk of North Arcot district, now stands;

(*b*) whether the Government are aware that the link road leading to Reddippalayam village from Kannamangalam, which had been cut open unlawfully, was made partially road-worthy by the villagers; and

(*c*) if so, the steps taken by the Government to repair the road and make it completely road-worthy?

கண்ணமங்கலம்—ரெட்டிப்பாளயம் இணைப்புச் சாலை

திரு. சொ. ஆறுமுகம் (திரு. ஆ. திராவிடமணி சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 1978 ஏப்ரல் 6 ஆம் நாள் 258, 259 ஆம் எண் சட்டமன்ற மேலவை வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆரணி வட்டத்தில், கண்ணமங்கலத்தி லிருந்து ரெட்டிப்பாளையம் கிராமத்திற்குச் செல்லும் இணைப்புச் சாலையில் (i) வடிகால் கடந்து செல்லும் இடத்தில் "கான்கிரிட் குழாய்கள்" அமைத்தல் (ii) 2/0–3/0 கிலோமீட்டருக்கு இடையில் சுமார் 100 சங்கிலி தூரத்திற்கு பக்கக் குழி அமைத்தல் ஆகியவை தொடர்பான வேலைகளின் தற்போதைய நிலை என்ன ?

(இ) சட்டத்திற்குப் புறம்பாகத் தோண்டிப் போடப்பட்ட, கண்ண மங்கலம்-ரெட்டிப்பாளயம் சாலையை, கிராமத்தார் ஓரளவுக்குப் போக்குவரத்துக்கு ஏற்றதாக்கியுள்ளனர் என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அச்சாலையினைப் பழுதுபார்த்து முற்றிலும் போக்குவரத்துக்கு ஏற்றதாக ஆக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) விரைவில் முடிவுறும்.

(இ) மற்றும் (உ): பாதிக்கப்பட்ட சாலையை ஒன்றியம் செப்பனிட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 295 ஆம் என்னுடைய இந்த வினா 1978 ஏப்ரல் 6 ஆம் தேதி கேட்கப்பட்டது. இதே அவையிலே மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் திரு. கணபதி அவர்கள் சார்பாகக் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றி பதில் அளிக்கும்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பாலம் சம்பந்தப்பட்ட பணி 1978-79 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். 1978-79 ஆம் ஆண்டு வந்த பிறகும், அவர் கொடுத்த வாக்குறுதி, உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை, இதுவரை அதுசம்பந்தப்பட்ட வேலை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த அவை யிலே மாண்புமிகு அமைச்சர்களால் கொடுக்கப்படும் உறுதிமொழிகள் நிறை வேற்றப்படாமலிருக்கின்ற நிலை இருக்கிறது. இனிமேலாவது இதுமாதிரி

இல்லாமல் கொடுக்கப்படும் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுமா? இந்த விஷயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள உறுதிமொழி நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு விரைவில் முடிவுறும் கட்டத்தில் இருக்கிறது.

Building Tax

* 296. Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether any representation to withdraw the steps being taken to enhance building taxes by appointing Officers for rationalisation of taxation structure in Panchayats and Town Panchayats of Kanyakumari District was received by the Government; and

(b) if so, the action taken thereon?

கட்டிட வரி

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி, பேரூராட்சிகளின் கட்டிட வரியைக் கூட்டும் பொருட்டு, வரி புனரமைப்பு அதிகாரிகளை நியமித்து எடுக்கப்பட்டுவரும் முயற்சியை கைவிடக்கோரி, முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்ததுண்டா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) பேரூராட்சிகளில் வரி சீராய்வு சீரான முறையில் பாகுபாடின்றி செய்யப்பட்டுள்ளதால் அரசு தலையிடவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : ஊராட்சி மன்றத் தலைவர்களே கூட இந்த வரி விதிப்பு முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கூட்டம் கூட்டி முடிவு செய்து அந்தத் தீர்மானத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் தலைவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட

பிரதிநிதிகள் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை வரி புனரமைப்பு கூடாது என்று கேட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுடைய கோரிக்கையை ஏன் அரசு பரிசீலிக்கவில்லை என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படிப் புகார் வந்தால், மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்களே கூட 2 ஆண்டுக்குத் தள்ளி வைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படித் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்திருக்கிறார்.

Cashew Based Industries.

* 297 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) the number of Industries in the State based on Cashew cultivation; and

(b) the total number of workers employed in them?

முந்திரி சார்ந்த தொழிற்சாலைகள்

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் முந்திரிச் சாகுபடியைச் சார்ந்திருக்கும் தொழிற்சாலைகள் எத்தனை ?

(இ) அவைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : (அ) தமிழ்நாட்டில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 139.

(இ) மேற்படி தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை—55,000.

திரு. க. இராமமூர்த்தி : 55 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிற இந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களும் குழந்தைகளும், அவர்களுக்குரிய குறைந்தபட்ச ஊதிய

நிர்ணயம் இன்னும் அதுபோன்ற வாய்ப்புகள் எல்லாம் முறையாகச் செயல் படுத்தப்படுகின்றனவா? பல தொழிற்சாலைகளில் முந்திரி இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் அல்லது குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்படுவதால், செம்மையாகப் பணிகள் நடைபெறவில்லை. அவை பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. பாதிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மாற்று வேலை தர அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்ட முதலாவது கேள்வியைப் பொறுத்த வரை, இதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு தொழிற் சட்டப்படி தரப்படக்கூடிய ஊதியங்கள் முறையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது கேள்வி மிகவும் முக்கியமான கேள்வி. தமிழகத்தில் இன்றைக்கு முந்திரியைப் பதப்படுத்தக் கூடிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவு முந்திரி கிடைக்காத காரணத்தினால், தமிழ் நாட்டிலே இயங்க வேண்டிய பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே கச்சா முந்திரியை அதிகமாகப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகி றோம். ஒரு ஆண்டுக்கு 1,24,000 டன் கச்சா முந்திரி தேவைப்படுகிறது. தமிழகத்தில் உற்பத்தி ஆகக்கூடிய முந்திரி 10 ஆயிரம் டன் தான். வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாக கேரளாவிலிருந்து அனுப்பப்பட்டு வந்த முந்திரி ஒரு தடை மூலம் வராத நிலை ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்த மாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால், இப்பொழுது அதைப்பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் கூடுதல் முந்திரியைப் பெற்று இந்தத் தொழிற்சாலைகளை மீண்டும் நடத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி: மத்திய அரசினுடைய முந்திரி பற்றிய கொள் கையின் விளைவாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கக்கூடிய பெருமளவு முந்திரித் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, மேலும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன. தமிழக அரசு நேரடியாக முந்திரியை இறக்குமதி செய்யும் வகையில் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அவர்கள் அனு மதியைப் பெற்று, முந்திரியை இறக்குமதி செய்து, மூடப்படக்கூடிய நிலையி லுள்ள தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத் தப்படுமா? இந்தத் தொழிற்சாலைகளை நடத்துபவர்களின் தவறான கொள்கையின் விளைவாக ஏற்படுகின்ற நட்டத்தின் காரணமாக, முந்திரித் தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற நிலை இருக்கிறது. ஸ்டேட் டிரேடிங்

கார்ப்பரேஷன் மூலம் முந்திரியினுடைய விற்பனையை செய்து ஒழுங்கு ஆக்காததால், இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன்காரணமாக தமிழ் நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்கிற நிலையில் இதைப்பற்றி மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு எழுதி, வலியுறுத்தி தொழிலாளர்களைக் காப்பாற்ற முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மத்திய அரசினுடைய கொள்கை காரணமாகத்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை 1975 ஆம் ஆண்டி லிருந்தே இருந்து வருகிற பிரச்சினையாதலால், அப்பொழுது ஆட்சியிலிருந்த மத்திய அரசும் இதில் சம்பந்தப்பட வேண்டி வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: எந்த மத்திய அரசாக இருந்தாலும், அது தான் காரணம் என்பதைத் தான் நானும் குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. கேரளாவிலிருந்து முன்பெல்லாம் அதிகமான கச்சா முந்திரியைப் பெற்று வந்தோம். கேரளாவிலிருந்து எந்த அடிப்படையில் அதை அனுப்பி னார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். கேரளாவில் அதைப் பதப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அங்கே தொழிலாளர்களுக்கு அதிக மாகக் கூலி கொடுக்க வேண்டியிருந்தது. கேரளாவில் அதைப் பதப்படுத்த ஆகின்ற செலவை விட தமிழகத்தில் அல்லது கர்நாடகத்தில் அதைப் பதப் படுத்த ஆகின்ற செலவு குறைவு என்பதால், கேரளாவில் உள்ளவர்கள் இந்தத் தொழிற்சாலைகளை தமிழகத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆரம்பித்தார்கள். மொத்தத் தொழிற்சாலைகள் 139 என்று சொன்னாலும் கூட, இந்த 139 தொழிற்சாலைகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 124 இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் அதிகமாக இல்லை. அடுத்து, தென்னாற்காடு மாவட்டத்தில் 8 தொழிற்சாலைகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல் வேலி மாவட்டத்தில் ஐந்தும் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் 8, 1, 1, 5 என்று இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் பிரச்சினை இல்லை. கன்னியா குமரி மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை மட்டும் தான், பிரச்சினை இருக்கிறது. காரணம் முன்பு கேரளாவிலிருந்து அனுப்பப் பட்டு வந்த கச்சா முந்திரி இப்பொழுது அறவே அனுப்பப்படவில்லை. இப் பொழுது இங்கு தொழிலாளர் பிரச்சினை வேறு இருக்கிறது. இங்கே

தொழிலாளர்களுக்குக் கூலி குறைவாக இருக்கிறது, முந்திரியைப் பதப்படுத்துவதற்கு கேரளாவில் ஆகின்ற செலவை விட இங்கு குறைவாக ஆகும் என்கிற அடிப்படையில்தான் அவர்கள் ஆரம்பத்தில் தொழிற்சாலைகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பித்தார்கள். 1972 ஆம் ஆண்டிலே கச்சா முந்திரியை அனுப்பக்கூடாது என்று தடை போட்டார்கள். இப்போது சில தொழிற்சாலை அதிபர்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் விட்டார்கள். இங்கே உற்பத்தியாகும் கச்சா முந்திரியின் அளவு தேவைப்படும் அளவில் 1/3 பங்கு கூட இல்லை. நாம் 95 ஆயிரம் டன்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்தோம். ஆனால், இப்போது 50 ஆயிரம் டன்கள் தான் நமக்கு வருகிறது. 1975-க்கு முன்பு அந்த ஆலைகள் எப்படி இயங்கி வந்ததோ அந்த அடிப்படையிலே அவைகளுக்கு கச்சாப்பொருள்கள் அளித்து அவைகளை இயக்க வைக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

(பிற்பகல் 4-20)

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, கன்னியாகுமரி மாவட்டத்தில் 124 தொழிற்சாலைகள் தற்போது இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் 100 தொழிற்சாலைகளுக்கு மேல் கேரளாவில் உள்ள தொழிலதிபர்கள் இங்கு வந்து நடத்துகிறார்கள். கேரளாவில் அவர்கள் தொழிற்சாலைகள் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்குள்ள தொழிலாளர்கள் கூலி உயர்வு மற்ற கோரிக்கைகளை வைத்து போராட்டத்தில் ஈடுபடுவதால், அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆப்பிரிக்கா நாட்டிலிருந்து வரக்கூடிய முந்திரி கச்சாப்பொருளில் கேரளத்துக்கு என்று ஒரு கோட்டா ஒதுக்குகிறார்கள். கேரளாவிலிருந்து கச்சா முந்திரியை வெளியே கொண்டு போகக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். எனவே, நம்முடைய தமிழ் நாட்டில் எவ்வளவு முந்திரித் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவைகளில் எவ்வளவு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்று பார்த்து அதற்கு ஏற்ப, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய கச்சா முந்திரியில் நமக்குரிய கோட்டாவை முறையாக வாங்க தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தப் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து பலமுறை இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். குறைந்த பட்சம் 50 ஆயிரம் டன்கள் கச்சா முந்திரி தமிழ் நாட்டுக்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படித் தந்தால் தான் இந்தத் தொழிற்சாலை

களை நடத்த முடியும் என்று சொல்லியிருக்கிறோம். கேரளத்தில் கூட இது போன்ற பிரச்சினை இன்றைக்கு தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. மத்திய அரசு அவர்களுக்காக ஒதுக்கும் கச்சா முந்திரி மற்றும் கேரளத்திலேயே உற்பத்தியாகும் முந்திரியையும் சேர்த்துப் பயன்படுத்தியும்கூட அங்குள்ள தொழிற்சாலைகளில் வருஷத்திற்கு 100 அல்லது 110 நாட்கள் தான் வேலை கொடுக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தமிழகத்தையும் கேரளத்தையும் வெகுவாகப் பாதித்திருக்கிறது. எப்படியும் 50 ஆயிரம் டன்கள் கச்சா முந்திரி தமிழகத்திற்கு வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். இந்த முயற்சியிலே நிச்சயமாக வெற்றிபெற முடியும் என்று இந்த அரசு நம்புகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: முந்திரிக்கொட்டை மாதிரி முந்தி நிற்பது என்று சொல்வார்களே அதுமாதிரி இந்த முந்திரிக் கொட்டைப் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் தீர்வு காண தமிழ் நாட்டிலே தரிசாகக் கிடக்கின்ற பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலே முந்திரி சாகுபடி செய்வதற்கு, தக்க திட்டம் வகுத்து, அரசு ஊக்கம் அளிக்குமா? அந்த முயற்சியில் படித்து வேலையின்றி இருக்கும் பட்டதாரி மாணவர்கள் ஈடுபட்டால், அவர்களுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தமிழகத்திலே முந்திரிச் சாகுபடி கொஞ்சம் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடத்தில் கேட்டிருக்கிறோம். அவர்கள் இதற்காக உதவிகளைச் செய்ய முடியும். அது ஒரு வழி. மேலும், நம்முடைய வேளாண்மைத் துறையும், வனத் துறையும் அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். தமிழகத்திலே முந்திரி பயிரிடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எங்கெங்கே அதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்கின்றனவோ அங்கங்கே இந்த முந்திரியை அதிகமான அளவுக்குப் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்க முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

திரு. ஆ. நல்லசிவன்: இப்போது இருக்கிற 139 முந்திரி ஆலைகளுக்கு போதுமான கச்சா முந்திரி கிடைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிலைமை இப்படி இருக்க, மேலும் மேலும் புதிய தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுத்து வருவதாகவும் தகவல்கள் இருக்கின்றன. இந்த நிலைமை உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மொத்த ஆலைகள் 139 என்றாலும்கூட, பிரச்சினை இருப்பது கன்னியாகுமரி மாவட்டத்திலேதான். கன்னியாகுமரி மாவட்டத்தில் அவ்வளவு தொழிற்சாலைகள் வந்ததற்குக் காரணமே, கேரளாவில் வைத்தால் அங்குள்ள தொழிலாளிகளுக்கு அதிகக் கூலி கொடுக்க வேண்டும் என்பது தான். ஆகையால், இங்கே அந்தத் தொழிற்சாலைகளை நடத்தினால்தான் அதிக லாபம் சம்பாதிக்க முடியும் என்று தொழிற்சாலை அதிபர்கள் முடிவு செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரம்ப தொழிற்சாலைகளைத் தொடங்கிவிட்டார்கள். இப்போது மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளைத் திரும்பவும் முன்போலவே நடத்த, வேண்டிய நடவடிக்கைகளை நாம் இப்போது எடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிமங்கள் வழங்கப்படுகின்றனவா என்று கேட்டார்கள். அது சம்பந்தமாகத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : தமிழ்நாட்டில் முந்திரி அதிகமாகச் சாகுபடி செய்ய அரசு முயற்சி செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே, தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தியாகிய நெய்வேலி பகுதியிலே, அங்குள்ள முந்திரித் தோப்புப் பகுதிகளை லிக்னைட் எடுக்கிறோம் என்று சொல்லி அழித்துக்கொண்டு வருவதை இந்த அரசு அறியுமா ? அப்படி முந்திரிக் காடுகளை அழிக்கக்கூடாது என்று தடுக்கும் அதிகாரம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஏதாவது ஒரு பகுதியிலே தொழிற்சாலைகள் வளர்வதற்கு நில ஆர்ஜிதம் செய்யும்போது, ஒருசில பகுதிகள் பாதிக்கப்படுவதை வைத்து ஒட்டுமொத்தமாக முந்திரி மரங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. முந்திரி மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுவதற்கு, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, அதுதான் கொள்கையாக இருக்கிறது. நிச்சயமாக அதிக அளவில் பாதிப்பு எதுவும் இல்லை. அப்படி பாதிப்பு அதிக அளவில் இருந்தால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : முந்திரிப் பழத்திலேயிருந்து சாராயம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளையும் மூடிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அது, உண்மையிலேயே சாராயம் அல்ல, மருந்துப் பொருளாக, வயிற்று வலிக்குச் சிறந்த மருந்தாக. . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வயிற்று வலி நிற்கிறதா ?

திரு. க. இராமமூர்த்தி : அது பயன்படுகிறது, இரண்டு மூன்று நாட்ளுக்கு முன்னதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு ரிமம் இருந்தும்கூட, அங்கே முந்திரிப் பழத்திலிருந்து எடுக்கப்படும் ராராயம் உற்பத்தியாகவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது. அது ற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தனிக் கேள்வி போடும்படி கட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : தமிழ்நாட்டில் முந்திரித் தொழிற்சாலைகளில் ணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின் அடிப்டையில் சம்பளம் திருத்தியமைக்கப்படவில்லை, தொழிலாளர்களுக்கு ளிக்கப்படும் கூலி கேரளாவில் இருப்பதைவிட குறைவாக இருந்தால்தான், ங்கே முதலாளிகள் வந்து இந்தத் தொழிலை நடத்துவார்கள் என்று இந்த ரசு சம்பள விகிதத்தைத் திருத்தியமைக்காமல் இருக்கிறதா என்று அறிய ரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : முந்திரித் தொழிற்சாலைகளில் வலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்வதற்காக நான்கு ாநிலங்களைச் சேர்ந்த ஒரு குழுவை மத்திய அரசு அமைத்திருப்பது ாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும், இப்போது இருக்கிற பிரச்சினை ச்சா முந்திரி கிடைக்கவில்லை என்பதுதான். கச்சா முந்திரி கிடைக்காத ால், அந்தத் தொழிற்சாலைகளை இயக்க முடியவில்லை என்பதுதான் ிரச்சினையே தவிர, ஊதியப் பிரச்சினை இப்போது இல்லை. இருந் ாலும், அந்தக் குழு தனது அறிக்கையைத் தந்தவுடன், அந்த அறிக்கையின் டிப்படையில் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

Chank Based Industries.

* 298 Q.—THIRU ARCOT N. VEERSAMI: (on behalf of HIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister or Rural Industries be pleased to state:

(a) whether there is any proposal under the consideration f the Government to establish Chank based Industries in coastal reas in Ramanathapuram District: and

(b) if so, in which part of the District this scheme will be mplemented?

சங்கு தொடர்பான தொழில்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரைப் பகுதியில் சங்கு தொடர்பான (Chank based Industries) சிறு தொழில்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில் எந்தப் பகுதியில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: (அ) இல்லை.

ஆனால் தூத்துக்குடி மீன்துறை துணை இயக்குநருடன் கலந்து, கடலாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தயாரித்துள்ள, சங்கு தொடர்பான உற்பத்தி மேலும் பயிற்சித் திட்டம் ஒன்று இராமநாதபுரம் தொழில் மையத்தின் மேலாளரிடம் பரிசீலனையில் உள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: சங்குப் பொருட்கள் இராமநாதபுரம் கடற்கரையில் மிகுதியாகக் கிடைக்கின்றன. சங்குப் பொருட்களை அங்கிருந்து வாங்கிச் சென்று, பிற தீர்த்தயாத்திரை ஸ்தலங்களிலே கொண்டுபோய், அவற்றை அழகுபடுத்தி அங்கு விற்பனை செய்கிறார்கள். ஆகவே, சங்குப் பொருட்கள் கிடைக்கின்ற அந்தப் பகுதியிலேயே அவற்றை அழகுப் பொருட்களாகச் செய்து, நல்ல உற்பத்திப் பொருட்களாக ஆக்கி விற்பனை செய்வதற்கு உரிய முயற்சிகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வியை அரசு ஏற்கெனவே நன்குணர்ந்து மூன்று விதமான நடவடிக்கைகளை இப்போது மேற்கொண்டிருக்கிறது. (1) மீன்துறை காலதாமதமின்றி சங்குகளைத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், (2) பயிற்சிக்குப் பின் புதிய முறையிலான வடிவமைப்பை உற்பத்தி செய்து தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள கைத்திறன் தொழில் மேம்பாட்டு நிறுவனங்கள் மூலமாக விற்பனை செய்ய வேண்டும், (3) பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடங்கள், தமிழ்நாடு கைத்திறன் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட வேண்டும் என்று அரசு

முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற காரணத்தினாலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி இப்போது செயலாக்கத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தமிழ்நாட்டில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு சங்கு தற்போது கிடைக்கிறது? வெளிநாடுகளில் இந்தச் சங்குகளுக்கு அதிகமான மதிப்பும் விலையும் கிடைக்கும் காரணத்தால், கடற்கரையோரத்தில் கிடைக்கிற இச்சங்குகளை எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் எதையேனும் அரசாங்கம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கேட்ட விவரத்தை அளிக்க தனிக் கேள்வி கேட்குமாறு அவரைக் கேட்டுக்கொள்கிறேன். வினாவின் இரண்டாவது பகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்கெனவே அளித்த பதிலையே மீண்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மேற்கு வங்கக் கைத்திறன் தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகவும், தமிழ்நாடு கைத்திறன் தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகவும்தான் இதை விற்பனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தற்போது தமிழ் நாட்டு கைத்திறன் தொழில் மேம்பாட்டுக் கழகம் பல பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. அதனடிப்படையில் அரசு இதிலும் கவனம் செலுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆவன செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sewing Machines for Widows.

* 299. Q.—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(a) whether the scheme of supplying sewing machines to the poor widows, is now being implemented; and

(b) if so, the number of widows who were given sewing machines and the number of sewing machines given from 1st July 1977 to 1st July 1978?

[1979 ஏப்ரல் 16

கைம்பெண்களுக்கு தையல் இயந்திரங்கள்

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வசதியற்ற கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரம் கொடுத்து உதவும் திட்டம், தற்பொழுது செயல்படுத்தப்பட்டுவருகிறதா ?

(இ) ஆமெனில், 1—7—1977 முதல் 1—7—1978 வரை எத்தனை கைம்பெண்களுக்கு எத்தனை தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : (அ) ஆம்.

(இ) 1977-78 ஆம் நிதியாண்டில் 268 தையல் இயந்திரங்கள் கைம்பெண்களுக்கு வழங்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டில் 1,000 தையல் இயந்திரங்கள் வசதியற்ற கைம்பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள், பின்தங்கிய ஆதரவற்ற பெண்கள், மற்றும் தையல்கலை பயிற்சி நடத்தும் நிலையங்களுக்கும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரம் கொடுத்து உதவுவதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியொரு சமூக நிறுவனமான 'பஞ்சாபி அசோசியேஷன்' என்ற அமைப்பு இத்தகைய கைம்பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல், அனாதைகளான பெண்களுக்கும் வாணியன்சாவடி போன்ற இடங்களில் ஆறு மாத காலத்திற்கு அச்சு வேலை, தையல் வேலை, புத்தக பைண்டிங் வேலை போன்ற பல்வேறு பணிகளில் பயிற்சியும் அளித்து, அந்தப் பயிற்சிக் காலத்திற்குப் பிறகு, அத்தகைய வேலைகளுக்குத் தேவையான இயந்திரங்களையும் இலவசமாக வழங்கி உதவி செய்கிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறை இது நடைபெறுகிறது. ஒரு சமூக நிறுவனம் செய்கிற காரியத்தைவிட அதிகமான அளவில் அரசு செய்ய முடியும் என்ற அடிப்படையில் அத்தகைய உதவிகளைச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : 'பஞ்சாபி அசோசியேஷன்' என்று அழைக்கப்படும் அந்தத் தனியார் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு சமூக நல இலாக்காதான் உதவி செய்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு சமூகநல நிறுவனங்களுக்கு அரசு உதவி தருவதன் மூலமாக சமூக நல இலாகா மிகச் சிறப்பான பணியையாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 16]

டாக்டர் இரா. சனார்த்தனம் : கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரம் கொடுத்துதவுவதுபோல, கைம்மகன்களுக்கும்—அதாவது மனைவியை இழந்து, குழந்தைகளை வைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையிலிருக்கும் கணவன்மார்களுக்கும் அரசு இத்தகைய உதவிகளைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : கைம்பெண்கள் என்று சொல்கிறபோது, அவர்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நான் கேட்பது மனைவியை இழந்த கணவன்மார்களைப்பற்றியது. அமைச்சர் அவர்கள் அவர்களுக்கும் உதவி செய்வார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : நான் பொறுப்பு வகிக்கும் இலாக்கா "மகளிர் நல இலாக்கா"-வாகும். இத்துறையின் மூலம் மனைவிமார்களைப் பற்றித் தான் அரசு கவலைப்பட முடியுமே தவிர, கணவன்மார்களைப்பற்றிக் கவலைப்பட முடியாது.

திரு. ம. சங்கரலிங்கம் : கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு முன்னால், அவர்களுக்குத் தையல் தொழிலில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டிருக்கிறதா ? எங்களுக்குக் கிடைக்கும் புள்ளிவிவரங்களின்படி கைம்பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்போது, அவர்களுக்கு உரிய பயிற்சியில்லாத காரணத்தால், அந்தத் தையல் இயந்திரங்களை மற்றவர்களுக்கு விற்றுவிடுகிற நிலையும் அல்லது பிறருக்கு வாடகைக்கு விட்டுவிடுகிற நிலைமையும் இருக்கிறது. எனவே கைம்பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன்பாக உரிய தையல் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டு, பிறகு உதவி செய்ய முன்வருமா ? அது மட்டுமல்லாமல், தையல் இயந்திரங்களைக் கொடுத்துவிடுவது மட்டும் போதாது. அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை விற்பனை செய்வதற்கு உரிய வசதி வாய்ப்புகளையும் அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : கைப்பெண்களுக்கு உதவி செய்யும்போது, அவர்கள் தையல் கலையில் பயிற்சி பெற்றிருந்தால்மட்டுமே, தையல் இயந்திரங்களை வழங்குவது என்றமுறைதான் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும், மகளிர் நல இலாகாவின் மூலமாக உதவி பெறும் மகளிர் மன்றங்கள் இத்தகைய சகோதரிகளுக்குத் தையல் கலையில் பயிற்சியளித்து வருகிறார்கள். ஒவ்வொரு சகோதரிக்கும் தையல்

[1979 ஏப்ரல் 16

இயந்திரம் வழங்குவதற்கு முன்பாக மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திலிருந்து அந்தச் சகோதரி உண்மையில் ஏழ்மையான நிலையில் இருக்கிறார் என்பதையும் அவருக்குத் தையல் கலையில் பயிற்சி உண்டு என்பதையும் நன்கு அறிந்து, அதற்குப் பிறகுதான் அந்த இயந்திரம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : வாணியன்சாவடியில் செயல்படும் பஞ்சாபி அசோசியேஷன் என்ற நிறுவனத்திற்கும் தமிழ் நாட்டு அரசின் சமூக நல இலாகாதான் நிதி உதவி செய்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனத்தின் பெயரே 'பஞ்சாபி அசோசியேஷன்'. அந்த நிறுவனத்திற்கு மத்திய அரசிலிருந்தும் நிதி உதவி அளிக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன். அந்த நிறுவனத்திற்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து நிதி உதவி அளிக்கின்றனவா அல்லது மாநில அரசு மட்டுமே நிதியுதவி அளிக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : மத்திய அரசு அதிகமான நிதியுதவி அளிக்கிறது. மாநில அரசு இணைந்து நிதியுதவி அளிக்கிறது.

Hosur Cattle Farm

* 300. Q.—THIRU KU. MA. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state.—

(a) whether any "Jersi" buffaloes, imported from Australia, are reared in Hosur Cattle Farm;

(b) whether this scheme was started in collaboration with the Government of Australia; and

(c) the provision made for this scheme by the Government of Tamil Nadu?

ஓசூர் கால்நடைப் பண்ணை

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) ஓசூர் கால்நடைப் பண்ணையில் ஆஸ்திரேலியாவிலிருந்து 'ஜெர்சி இன' எருமைகள் கொண்டுவரப்பட்டு வளர்க்கப்படுகின்றனவா ?

1979 ஏப்ரல் 16]

(இ) இந்தத் திட்டம் ஆஸ்திரேலியா அரசாங்கத்தின் கூட்டு முயற்சியோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இந்தத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசாங்கம் எவ்வளவு தொகை ஒதுக்கி உள்ளது ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : (அ) ஜெர்சி இனம் என்பது பசுக்களையும் காளைகளையுமே குறிக்கும். ஓசூர் கால்நடைப் பண்ணையில் ஆஸ்திரேலியாவிலிருந்து ஜெர்சி இனப் பசுக்கள் ஏதும் கொண்டு வரப்பட்டு வளர்க்கப்படவில்லை.

(இ) & (உ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளிநாடுகளிலிருந்து உயரினப் பசுக்கள் வரவழைக்கப்படுகின்றனவே தவிர, அவற்றை எப்படி வளர்ப்பது என்பது பற்றிய முறை இங்கே இருப்பவர்களுக்குத் தெரியாமல் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு வெளிநாடுகளுக்குச் சென்று உயரினப் பசு வளர்ப்பு முறையைப்பற்றி அறிந்து வர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : ஒவ்வொரு மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் வெளிநாடுகளிலிருந்து வருகிற பசுக்களை அல்லது கால்நடைகளை வைத்து, தற்போதே பராமரித்து வருகிறோம். அதுமட்டுமல்ல, அண்மையில் உள்ள வடஆற்காடு மாவட்டத்திலுள்ள அரிகிரி என்னுமிடத்தில் ஒரு தனியார் கால்நடைப் பண்ணையில் ஆஸ்திரேலியாவிலிருந்து 50 பசுக்கள் வரவழைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளைப் பராமரிப்பதில் அவர்களுக்குப் பயிற்சி இருக்கிறது. எனவே அமைச்சர் மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கி வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம் : ஆஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்படும் ஜெர்சி பசு ஒன்றின் விலை என்ன ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : ஜெர்சி இளப்பசு ஒன்றின் விலை ஏறத்தாழ ரூ. 15,000 ஆகிறது.

திரு. க. அறிவழகன் : இது எருமைகளைப்பற்றிய கேள்வியாகும். வெளிநாடுகளிலிருந்து நல்ல உயரின எருமைகள் வரவழைக்கப்பட்டு அதிகமான அளவில் அவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : ஜெர்சி என்பது கால்நடையைக் குறிக்கும். எருமைகளைக் குறிப்பிடாது. எருமை இனத்தைப் பொறுத்தவரையில், 'முர்ரா' என்ற எருமை இனத்தை அதிகமான அளவில் தமிழ்நாடு கால்நடைத் துறை மூலமாக பல்வேறு இடங்களில் வளர்த்து அபிவிருத்தி செய்து வருகிறோம்.

திரு. கோ. சி. மணி : எருமை இனம், கால்நடையின்கீழ் வராதா ? அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 'ஜெர்சி' என்பது கால்நடையைக் குறிக்கும், எருமையைக் குறிக்காது என்று குறிப்பிட்டார்கள். எருமைபற்றி அல்ல என்றால், கால்நடையின் கீழ் வராதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : பசுக்களையும், காளைகளையும் தான் நான் குறிப்பிட்டேன். 'ஜெர்சி' என்று சொல்லும்போது, அதில் எருமைகள் அடங்காது என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. க. இராமமூர்த்தி : 'ஜெர்சி' இனக் கன்றுகள் பெரும்பாலும் இங்கேயுள்ள சீதோஷ்ண நிலை காரணமாக வளர முடியாமல், சிறுவயதிலேயே அதாவது இளமையிலேயே இறந்துவிடுகின்றன. இதன் காரணமாக அவற்றைப்பல இடங்களில் பாதுகாப்பாக வளர்க்க முடியாத நிலைமை உருவாகிறது. ஆகவே 'ஜெர்சி' இனக் கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கு, அவைகளை வளர்ப்பது பற்றிய செயல்முறையை, கருத்துரையை அரசு வழங்குவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : ஜெர்சி இனத்தைப் பொறுத்தவரையில், இங்குள்ள சாதாரண சீதோஷ்ண நிலையிலேயே அவை நன்கு வளர முடியும் என்ற காரணத்தால்தான், நாம் ஆஸ்திரேலியாவிலிருந்து அவைகளை இறக்குமதி செய்கிறோம். சென்ற ஆண்டில் முதலில் 50 பசுக்களும் இரண்டு காளைகளும் தமிழ்நாட்டிற்கு வந்தன என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். அவைகள் 22 கன்றுகளை ஈன்று அவைகள் ஈச்சங்கோட்டையில் நன்கு வளர்க்கப்பட்டு வருகின்றன. அடுத்து 100 பசுக்களும் அண்மையில் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருக்கின்றன. அவைகள் நல்லபடியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியன் ஃபிரிசியன்களைப் பொறுத்தவையில், அவைகளை ஊட்டியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவந்தாலே நாளொன்றுக்கு 10 லிட்டர் பால் குறைந்துவிடும். கோவைக்குக் கொண்டு வந்தால்கூட, அவற்றின் நிலைமை மாறிவிடுகிறது. ஆனால் ஜெர்சி இனத்தைப் பொறுத்தவரையில், எந்தத் தகராறும் இருப்பதில்லை. எந்தச் சீதோஷ்ண நிலையோடும் அவை ஒத்துப் போகின்றன. தீவனமும் அதிகமாகத் தேவையில்லை என்ற நிலையில் இருக்கின்றன.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : இதைக் கொண்டுவருவதற்கு ஆகும் விமானச் செலவைத் தவிர்த்து ஒவ்வொன்றின் விலை ரூ. 15,000 ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பசு ஒரு நாளைக்கு எவ்வளவு பால் கறக்கும் ? அதனால் நமக்கு என்ன லாபம் கிடைக்கும் ? எதற்காக ரூ. 15,000 செலவழித்து ஒரு மாட்டை வாங்கி வளர்த்து தீவனம் போடுவது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : ஜெர்சி இனப் பசு நாள் ஒன்றுக்கு 12 முதல் 15 லிட்டர் பால் கொடுக்கும். இதற்குத் தீவனமும் அதிகமாகப் போட வேண்டியதில்லை. மற்ற உயர் இனக் கால்நடைகளைவிட இது மிகக் குறைவான தீவனத்தையே உட்கொள்ளுகிறது. ஒரு நாளைக்கு 12 முதல் 15 லிட்டர் பால் கறக்கும்போது, வீட்டுத் தேவைக்கு 2 லிட்டர் எடுத்துக் கொண்டாலும், மீதி இருப்பதை விற்று விவசாயி தனது வறுமையைப் போக்கிக் கொள்ளலாம். இதன் மூலம் ஏழைகளை நாம் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். கால்நடைப் பண்ணைகளில் இவைகளை நன்கு பராமரித்துக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 4-40)

திரு. க. இராமமூர்த்தி : ஜெர்சி இனக் கன்றுகளின் உற்பத்தியைப் பொறுத்த அளவில், அரசாங்கப் பண்ணைகளில் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தனியார் எந்த அளவுக்கு செயற்கைக் கருத்தரிப்பு (ஆர்டிபிஃஷியல் இன்செமினேஷன்) மூலம் ஜெர்சி இனக் கன்றுகளை உற்பத்தி செய்கிறார்கள் ? அவற்றில் எத்தனை உயிரோடிருக்கின்றன, எத்தனை மடிந்து விட்டன என்ற தகவல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரசுவதி : தனிக்கேள்வி போடும்படி வேண்டுகிறேன்

[1979 ஏப்ரல் 16

Leprosy Prevention Measures.

*1. Q.—Dr. T. R. JANARDHANAM: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) the steps taken by this Government for the prevention of Leprosy; and

(b) the number of Leprosy Hospitals functioning as on 20th March 1979;

(c) whether the Central Government is giving any subsidy to the Tamil Nadu Government for the prevention of Leprosy disease;

(d) if so, the amount so given;

(e) whether it is a fact that the subsidy is to be stopped by the Central Government with the end of the Fifth Plan period; and

(f) if so, whether this Government will insist on the Central Government that the subsidy should be continued on account of the importance of the Scheme?

தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழுநோய் தடுப்பு சம்பந்தமாக இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(இ) 20—3—1979 ஆம் நாள் வரை எத்தனை தொழுநோய் மருத்துவ மனைகள் செயல்பட்டு வருகின்றன?

(உ) தமிழக அரசின் தொழுநோய் தடுப்புப் பணிக்காக, மத்திய அரசு உதவித்தொகை ஏதேனும் அளிக்கிறதா?

(எ) ஆம் எனில், எவ்வளவு தொகை அளித்துள்ளது?

(அய்) அய்ந்தாவது திட்ட ஆண்டோடு, மத்திய அரசு தரும் உதவித் தொகை நிறுத்தப்பட இருப்பது உண்மையா?

(ஒ) ஆம் எனில், இது முக்கியமானதிட்டம் ஆனதால் தொடர்ந்து மத்திய அரசு உதவித்தொகை அளிக்க வேண்டுமென்று இவ்வரசு உடனே வலியுறுத்துமா?

1979 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) எல்லா அரசு மருத்துவ மனைகளிலும், எல்லா தொழுநோய் கட்டுப்பாடு நிலையத்திலும் ஒரே சீராக சிகிச்சை அளிக்கப்படுகிறது. புறநகர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்நோய்க்கு முக்கிய மருந்தான டி.டி.எஸ். மாத்திரைகள் தற்சமயம் தமிழ்நாட்டின் போதிய அளவு கைவசம் இருப்பதுடன் எல்லா அரசு நிலையங்களுக்குத் தேவையான அளவு விநியோகிக்கப்படுகிறது. பள்ளி செல்லும் பதினொரு வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு ஆரம்ப கால தொழுநோய் அறிகுறிகளை கண்டறிந்து அவர்களுக்கு உடனே சிகிச்சை அளிப்பதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

(இ) 59 அரசு தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(உ) ஆம்.

(எ) சென்னை கணக்காய்வாளரின் கணக்குப்படி—

வருடம்.	(ரூபாய் லட்சத்தில்.)
1974—75	4.16
1975—76	24.69
1976—77	40.83
1977—78	71.30
1978—79	61.00

(1979 சனவரி மாதம் முடிய)

(அய்) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் இத்திட்டத்தினால் ஏற்படும் செலவினங்களை மாநில அரசே ஏற்கும்படி மத்திய அரசு யோசனை கூறியுள்ளது.

(ஒ) இவ்வரசு இத்திட்டத்தை நல்லமுறையில் அமுலாக்கி இருப்பதால் வரும் ஆறாவது திட்ட காலத்திலும் ஐந்தாவது ஆண்டு செலவினத்தை மத்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தொழுநோய் ஏற்பட்டால் கை எலும்புகள் வளைந்துவிடுகின்றன. வளைந்துவிடக் கூடிய இந்த எலும்புகளை நிமிர்த்த வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மிகவும் முற்றிய நிலையில் அப்படி வளைந்த பகுதிகளை நிமிர்த்த வழிவகையில்லை. ஆனால் ஆரம்ப நிலையில் இருக்குமானால், அறுவைச் சிகிச்சையின் மூலமாக நிமிர்த்தப் படுகின்றன.

[1979 ஏப்ரல் 16

திரு. க. இராமமூர்த்தி : தொழுநோய் ஒழிப்புக்காக இவ்வளவு பெரிய அளவிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தும் கூட, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் கூட்டம் கூட்டமாக இரயில்வே நிலையம் மற்றும் பொதுமக்கள் புழங்குகிற இடங்களில் எல்லாம் உலா வந்து அந்நோயைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசு என்ன திட்டவட்டமான நடவடிக்கையை எடுக்கவிருக்கிறது ?

குறிப்பாக தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான தொழு நோய்க்கு ஆளானவர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அங்கு தான் இந்தச் சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : கூடிய அளவுக்குத் தொழு நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு மருந்துகள் தரப்பட்டு வருகின்றன. மருத்துவமனையில் சேர்க்கப்படும் சில பேர் மருத்துவமனை யில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் வெளியே சென்றுவிடுகிறார்கள். அப்படிச் செல்லுகிறவர்களைக் கூட தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து, மருந்து களைத் தருகிறோம். வெளியே நடமாடுகிற அத்தனை பேரும் தொற்று நோயால் பிடிக்கப்பட்டவர்கள் அல்ல. ஒரு சிலர்தான் தொற்றுநோய் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தன்மையுள்ளவர்களுக்கு முறையான சிகிச்சை அளித்தால், அந்நோய் மறைகிறது. இன்றைக்குப் பெருமள விற்குத் தொற்றுநோய் அற்ற தொழுநோயால் பிடிக்கப்பட்டவர்கள்தான் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 150 இலட்சத் திற்கு மேல் தொழுநோய் தடுப்பிற்கு மத்திய அரசு தந்திருக்கிறது. மாநில அரசின் நிதியிலிருந்தும் பெருமளவுக்குச் செலவு செய்திருக்கிறோம். இது எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கிறது என்று ஆராய்ந்து மதிப்பீடு செய்யப்பட்டதா ? ஐந்தாண்டு தொடங்குவதற்கு முன்னால் எவ்வளவு நோயாளிகள் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் இருந்தார்கள், இப்போது எவ் வளவு இருக்கிறார்கள், எண்ணிக்கை குறைந்திருக்கிறதா, அல்லது கூடியிருக் கிறதா அல்லது ஒரே நிலையில் இருக்கிறதா என்று பரிசீலனை செய்யப் பட்டதா ? குறிப்பாக பிற மாவட்டங்களை விட தென்னார்க்காடு மாவட்டத்தில் தான் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் என்று சொல்லப்படு கிறதே, அந்தப் பகுதியிலாவது பரிசீலனை செய்யப்பட்டதா ? இல்லையென் றால், இனிமேலாவது அப்படிப்பட்ட ஆய்வைச் செய்ய அரசு முன்வருமா ?

1979 ஏப்ரல் 16].

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தென்னார்க்காடு மாவட்டத்தில் அவர்களுடைய எண்ணிக்கை பற்றிய தகவல் இல்லை. தமிழகத்திலே இருக்கிற தொழு நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 7.5 இலட்சம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 6,32,240. மருந்து உட்கொள்ளுபவர்களின் எண்ணிக்கை 4,89,942. நோயின் அறிகுறிகள் மறைந்தவர்களின் எண்ணிக்கை 90,654.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் என்ற அளவிலே தொழுநோயைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டிருக்கிற செயல்களுக்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் கும்பகோணத்திலே உள்ள இருதய ஆண்டவர் தொழுநோய்க் கழகத்திலே தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை 1—5—1979 முதல் மூடப்போவ தாக அறிவிப்பு தந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை மீண்டும் திறக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இது குறித்து அரசின் கவனத் திற்குக் கொண்டுவரப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

3. தகவல் கோரல்.

ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இன்று வரையிலும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பரிசீலனையில் இருக்கிறது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அன்றைக்கு ஒரு நாள் சொன்னீர்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று. நான் தீர்மானம் கொடுத்து 7 நாட்கள் ஆகிவிட்டன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாட்கள் ஆகிவிட்டன என்றால், இடையிலே விடுமுறை நாட்கள் வந்துவிட்டன. பதில் சேகரித்த பின்னர்தான் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பிரச்சினை பற்றியும், தொழுநோய்க் கழகப் பணியாளர்கள் பற்றியும் நான் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அதுபற்றி எந்தவித அறிவிப்பும் செய்யவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் தீர்மானம் பற்றிய முடிவு குறித்த தகவல் கடிதம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சொ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நானும் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அது குறித்து என் அறையில் வந்து கேட்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எனக்குத் தகவல் அறிவிக்கப்பட்டதாக தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் பிரச்சினை பற்றியும், தொழுநோய்க் கழக ஊழியர்கள் பற்றியும் நான் கொடுத்துள்ள தீர்மானங்கள் குறித்த எந்தத் தகவலும் எனக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்னும் சில மணி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும்.

4. கவன ஈர்ப்பு.

(1) உப கச்சாப் பொருளான பாணி சரிவர வழங்கப்படாததால், உணவு சம்பந்தப்படாத எண்ணெய் உற்பத்தித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"தமிழக அரசின் புதிய மதுவிலக்குச் சட்டப்படி, உணவு சம்பந்தப்படாத எண்ணெய் வகைகள் தயாரிப்பதற்குத் தேவையான உப கச்சாப் பொருளான பாணி சரிவர வழங்கப்படாததால், உணவு சம்பந்தப்படாத எண்ணெய் உற்பத்தித் தொழில் நாடு முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து".

***மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(2) தமிழ் நாட்டில் தோல் பதனிடும் தொழில் பாதிப்பு குறித்து.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"சென்னையிலிருந்து ஏற்றுமதியாகும் வேலைப்பாடு தீர்ந்த தோல் சுகாதார சர்ட்டிபிகேட் தேவை என்கிற பெயராலே இத்தாலியிலும், இதர இடங்களிலும் தேங்கிக் கிடப்பதால், தமிழ்நாட்டில் தோல் பதனிடும் தொழில் பாதித்து தொழிற்சாலைகள் மூடும் நிலையிலிருப்பது பற்றி".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @@ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

***திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இத்தாலியில் தேங்கியுள்ள தோல்களுக்கான சுகாதாரச் சான்றிதழை வழங்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு நாட்களுக்குள் அந்தச் சான்றிதழ் கிடைக்கும் என்ற தகவல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஏற்கெனவே ஏற்றுமதி செய்யப்பட்டு இத்தாலிய விமான நிலையத்தில் இருக்கின்ற பதனிடப்பட்ட தோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் ஏற்பாடு செய்யுமாறு 'ஏர்

@ 498-499 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 500 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்தியா' நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பொழுது இத்தாலி நாட்டுக்குரிய பதனிடப்பட்ட தோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் இணைக்கப்படுகின்றன.

* **திரு. ஆ. நல்லசிவன் :** ஏற்கெனவே ஏற்பட்ட தாமதத்தால் உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளதா? அதனால் தொழிற்சாலைகளில் ஷிப்ட்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : சமீப மாதங்களில் தோல் ஏற்றுமதியில் ஏற்பட்ட தாமதத்திற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று, 'ஏர் இந்தியா' நிறுவனத்தில் சரக்குகள் தேங்கியிருத்தல் என்பது. மற்றொன்று சுங்க இலாக்காவினர் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தமாகியுள்ள ஒவ்வொரு சரக்குக்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் சான்றிதழ்கள் கேட்பது. இந்தச் சான்றிதழ்கள் ஏற்றுமதி செய்ய இருக்கின்ற பொருள்கள் பதனிடப்பட்ட தோல்களா, இல்லையா என்பதைக் காட்டும். மேற்படி நிறுவனத்தின் குழு நாள்தோறும்கூட ஏற்றுமதிக்குரிய சரக்குகள் பதனிடப்பட்டவையா, இல்லையா என்று முடிவெடுப்பதால், பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதியில் இப்பொழுது தாமதமில்லை. எனவே தொழிற்சாலையில் பிரச்சினை ஒன்றுமில்லை.

(பிற்பகல் 4-50)

5. அரசின் தீர்மானம்.

வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள 'வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு' @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள 'வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு' பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

@ 501-558-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இன்றையதினம் வேளாண்மை குறித்த கொள்கைக் குறிப்பின்மீது விவாதிக்க இருக்கிறோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இன்றையதினம் வர இயலாவிட்டாலும், இதைப் பற்றி நேற்றையதினமே தலைவர் அவர்களிடம் சொல்லி இதை வேறு தேதிக்கு மாற்றிவிட்டு, வேறு அலுவல்களை இன்று வைத்துக்கொண்டிருக்கலாம். ஒரு கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடத்தும்போது, குறிப்பிட்ட அமைச்சர் இல்லை என்றால், உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதற்குரிய பதிலை எப்படிப் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விமானத்தில் வந்துகொண்டிருக்கிறார்கள். விரைவில் வந்துவிடுவார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : சாதாரணமாக கொள்கைக் குறிப்புகளைப் பொறுத்த வரையில், அநேகமாக பல கோரிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு இங்கே வந்திருக்கின்றன. விவாதத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் தருகின்றபோது, கொள்கைக் குறிப்பில், விளக்கக் குறிப்பில் இல்லாத புதிய அறிவிப்புகளைச் செய்து உறுதி மொழிகளையெல்லாம் தந்திருக்கிறார்கள். இங்கே அவைகளையும் சேர்த்துத் தகவல் தரப்பட்டால், மேற்கொண்டு விவாதிக்கவும், அந்த விவாதம் முழுமை பெறுகின்ற வாய்ப்பும் இருக்கும். குறிப்புகளைப் பொறுத்த வரையில், சட்ட மன்றப் பேரவையிலே தரப்பட்டதற்கும் மேலாக உறுதி மொழிகளாக வேறு சில தகவல்களும் தரப்பட்டிருக்கின்றன. இனிமேல் இந்தக் கொள்கைக் குறிப்புகள் வருகின்றபோது, அந்தக் தகவல்களையும் குறிப்பில் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு முயலுமா, முன்னவர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : தலைவர் அவர்களே, பேரவையால் மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு விளக்கக் குறிப்புகளை இங்கே வைப்பதற்குள் இடைவெளிக் காலம் குறைவாக இருப்பதனால், புதிய குறிப்புகளை, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல, சேர்க்க முடிவதில்லை. ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குப் பிறகு அவைகளை இங்கே எடுத்துக்கொள்ளக்கூடிய அளவில் இருந்தால், அதிலே நிச்சயமாகச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. சில கொள்கைக் குறிப்புகளையாவது இந்த மன்றத்திலே . அப்படி வைக்கலாம். நடைமுறை சம்பிரதாயப்படி இப்போது வைத்திருக்கிறோம். மாண்புமிகு அங்கத்தினர் சொல்வதுபோல

செய்வதற்கு, தேவையான இடைவெளிக் காலம் இல்லை. அப்படிச் செய்வதிலே அரசுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பேரவையிலே நிறைவேற்றப்பட்டு இப்போது இங்கே வந்திருக்கிறது. அதிலே இப்போது என்ன மாறுதலைச் செய்யப்போகிறார்கள் என்பதுபற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை. அங்கே நிறைவேற்றிவிட்ட பிறகு இங்கே இது வரைக்கும் வேறு என்ன மாற்றம் செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் அவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு எடுத்து சொல்லலாம். புரிய வைக்கலாம். அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லலாம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : பேசியது ஒன்றும் காணோமே என்றுதான் சொல்கிறேன். பட்ஜெட்டிலேகூட நான் எடுத்துச் சொன்னேன். நான் சொன்ன நான்கு சப்ஜெக்ட்டுகளையும் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். இதிலே நிவாரணம் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றும் செய்ததாகக் காணோம். வழக்கமாக பட்ஜெட் போடுகிறார்கள். அது வழக்கம்போல அசெம்பிளியிலே வருகிறது, பேசப்படுகிறது. சம்பிரதாயத்திற்குத்தான் பேசுகிறார்கள். அசெம்பிளியிலே நன்றாகப் பேசினார்கள் என்று பத்திரிகையிலேகூட வருகிறது. அப்படி என்ன பண்ணியிருக்கிறோம் என்று எனக்குத் தெரியவில்லை.

இன்று விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள், ஏராளமானவர்கள் கடன் தான் பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்க்குமேல் கடன்பட்டிருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். நாலரை கோடி மக்களில் மூன்று கோடி பேர்களிடமிருந்து இந்தப் பணம் வரவேண்டியதாக இருக்கிறது. அவர்களிடம் 200 கோடி ரூபாய் கடனாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த 200 கோடி ரூபாயை இந்த மூன்று கோடி பேர்களுக்குத் தள்ளுபடி செய்வதனால் இந்த சாம்ராஜ்யம் ஒன்றும் விழுந்துவிடப்போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 200 கோடி ரூபாய்க்காக எவ்வளவு போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன? சண்டைகள்,

போராட்டங்கள், கடனுக்காக ஜப்தி வாரண்டுகள் இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த 200 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து விட்டோம் என்று அரசு சொல்லிவிட்டால், ரொம்ப சந்தோஷமாக இருக்கும்.

விவசாயம் பண்ணுவதில் ஜில்லாவுக்கு ஜில்லா, தாலுக்காவிற்கு தாலுக்கா செலவுகள் வித்தியாசமாக இருக்கின்றன. நிலங்களின் விலைகள் மாறுபடுகின்றன. ஒவ்வொரு விதமான சீதோஷ்ண நிலைமைகள் இருக்கின்றன. நிலங்களின் விலைகள் வேறுபட்டிருக்கின்றன. ஒரு சில பகுதிகளில் ஒரு ஏக்கர் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்கூட விலை போகிறது. சில பகுதிகளில் ஒரு ஏக்கர் 50,000 ரூபாய் விற்கிறது. சில இடங்களில் ரூபாய் 20,000 என்று விற்கிறது இன்னும் சில ஊர்களிலே இன்னும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.. என்னுடைய நிலங்களை உச்சவரம்பிற்குக் கொடுத்ததற்கு இந்த சர்க்காரிலே எனக்குக் கொடுத்த விலை ஏக்கருக்கு ரூபாய் 70 தான். இப்படி நிலங்களின் விலை வேறுபட்டிருக்கிறது. ஆகவே அந்தந்த நிலங்களின் தரத்தையும், அந்தப் பகுதி சீதோஷ்ண நிலைமைகளையும் வைத்துத்தான் வரி விகிதத்தை நிர்ணயிக்க வேண்டும். அப்படி இல்லாமல் எல்லா இடத்திற்கும் ஒரேவிதமான தீர்வைதான் போடுகிறார்கள். அதிலே எந்தப் பாகுபாடையும் நான் பார்க்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதனால் மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமைதான் ஏற்படும். எங்கெங்கே என்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து, ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆராய்ச்சியாளர்கள் பூமியிலே இருக்கக்கூடிய தண்ணீரையெல்லாம் எப்படி எடுத்துப் பயன்படுத்திக்கொள்வது என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 1985-90 ஆம் வருடங்களில் ஒரு ஆளுக்கு 1/2 லிட்டர் தண்ணீர் கூட இந்த தேசத்திலே கிடைக்காது என்று சொல்கின்றார்கள். அப்படி பத்திரிகைகளிலேயும் போடுகிறார்கள். பூமியைத் தோண்டி அவர்கள் இஷ்டம்போல தண்ணீர் சப்ளை செய்ய திட்டமிடுகிறார்கள். அந்த அளவுக்குத்தான் இன்றைய நிர்வாகம் இருக்கிறது. எங்கே குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது என்று அங்கே போய்ப் பார்ப்பதில்லை. அந்தக் காலத்திலே மந்திரிகள் எல்லாம் சுற்றிப் பார்த்து, எந்த எந்த இடத்தில் தண்ணீர் இல்லை என்பதைப்பற்றி அரசுக்கு எடுத்துச் சொல்வார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட வருகிறார்கள், போகிறார்கள். எந்த இடம் லாயக்கில்லாத பகுதி என்று பார்க்க வேண்டும். அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுக்கின்ற ரிப்போர்ட்டைப் படித்துப் பார்த்து, அதன்படி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், " திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்ன நான்கு திட்டங்

களையும் உடனடியாக நிறைவேற்றுகிறோம்" என்று சொன்னார்கள், கைத்தறி அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். நானும் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சொன்னதைப்போல் சொன்னேன். அந்தத் திட்டங்கள் ஒன்றையும்பற்றி இந்தக் குறிப்பில் காணவில்லை. நாங்கள் சொன்ன எந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது என்று கேட்டார்கள். எதையெதைச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றும் செய்யவில்லை. பின்பு எதற்காகப் பணம் ஒதுக்குகிறார்கள்? அப்படி எதற்காகச் செய்ய வேண்டும்? ஏதோ நாடகம் பார்க்கிற மாதிரி நாங்கள் இங்கே வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கிறோம். அங்கத்தினர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா? முரட்டுத்தனமாக பதில் சொல்கிறார்கள். நானும் பேசுவது என்றால், எனக்கும் வாயிலே வரக்கூடாத வார்த்தைகள் வரும். இங்கே தனித்த முறையிலே கருத்துக்களைச் சொல்வது நல்லதாக இருக்கும். எந்த ஊரிலே எதை நிறைவேற்ற வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும். சீர்கேடாக இருக்கின்ற ஊரிலேயிருந்து நாம் ஆரம்பித்துச் செயலாற்ற வேண்டும். வடஆற்காடு, தஞ்சை, செங்கற்பட்டு என்று எடுத்துக்கொண்டு பார்க்க வேண்டும். செங்கற்பட்டிலே எங்கெங்கு நிலைமை சீர்கெட்டுப் போயிருக்கிறது என்று பார்க்க வேண்டும். தென் ஆற்காடு மானாவாரிப் பிரதேசமாக இருக்கிறது. தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அதைப் போக்க என்ன வழி செய்ய வேண்டுமென்று பார்க்க வேண்டும். எல்லா ஜில்லாக்களும் அரசுக்கு ஒன்றுதான். எல்லா ஜில்லாக்களுக்கும் தீர்வைகளையும் ஒன்றாகப் போட்டு வந்தால், நாங்கள் என்ன செய்வது? ஏற்கெனவே மக்கள் நலிந்துபோய் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னது மாதிரிதான் நடப்போம் என்றால், என்ன பயன்? அவர்கள் ஒவ்வொரு தாலுக்காவும் சீராக இருக்கிறது என்றுதான் சொல்

(மாற்றுத் தலைவர் திருமதி பத்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 5-00)

வார்கள். விவசாயிகளுக்கு வீடுகள் கட்ட 5,000 ரூபாய் தருகிறோமென்று சொல்லி, அதற்கு 10, 12 சர்டிபிகேட்டுகள் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். டாக்டர் சர்டிபிகேட் கூட வாங்க வேண்டும் வீடு கட்ட. இந்த மாதிரி சிக்கலான சமாசாரங்களையெல்லாம் தாராளமாகச் சொல்லி விடுகிறார்கள். எல்லாவற்றுக்கும் புள்ளிவிவரம் தருகிறார்கள். பத்து புள்ளி நாலு சைபர், பத்து புள்ளி இரண்டு சைபர் என்று புள்ளி விவரம் வருகிறது.

நடைமுறையில் அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். வறட்சிப் பிரதேசமான தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் அரசு என்ன செய்திருக்கிறது?

மண் வளப் பாதுகாப்பு என்று சொல்லுகிறார்கள். ஊரை விட்டே ஓட வேண்டும் அதனாலே. உழுவதற்கு மாடு இல்லை, விதைக்க விதை இல்லை. தண்ணீர் இல்லை. எதற்காக இதைச் செய்கிறார்கள்? மழை பெய்தால் நிற்பதற்காக இதைச் செய்கிறார்கள். எப்போதாவது ஒரு நாள் மழை பெய்யும். அதிலா விளைந்துவிடும்? மண் வளப் பாதுகாப்பிற்காக சித்தினி என்ற கிராமத்தில் ஒரே நாளில் 27,000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். சர்க்காரிலிருந்து லோன் கொடுத்தால் அதற்கு முதலில் நான் மனுப் போடுவேன். திருப்பிக் கட்டுவதுபற்றி யோசனை இருக்காது. திருப்பிக் கட்ட மனதில்லை. அதற்குக் காரணங்களைப் பின்னால் சொல்வேன். கட்டுவதற்கு வழியில்லை, தள்ளிப் போட வேண்டுமென்று கேட்பேன். பணத்தை அளந்து பார்த்துப் போட வேண்டும். அரசால் அளந்து பார்த்துப் போட முடியாது. பணம் திரும்ப வருமா, வராதா என்பதைக்கூட பார்ப்பதில்லை. ரூபாய் 1,000 வாங்க வேண்டுமென்றால், அதில் கால்வாசிப் பணத்தைச் செலவழித்துத்தான் விவசாயி வாங்குகிறான். ரூபாய் 700 கிடைத்தால், பெரிய காரியம்தான். அந்தப் பணத்தை வாங்குவதற்கு பூசை, புனஸ்காரம் இல்லாமல் செய்தால்தான், அது வந்து சேரும். இந்த நிலைமையில் விவசாயிகளுக்கு நன்மைகளைப் பண்ணுகிறோம், சிறு விவசாயிகளை உயர்த்தியிருக்கிறோம், முன்னுக்குக் கொண்டு வருகிறோம் என்று அரசு சொல்லுகிறது. சில பேர்கள், யோக்கியதை உள்ளவர்கள், வாங்குகிற கடனைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று எண்ணமுடையவர்கள், உடனடியாக அதைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நினைக்கிறவர்கள், அந்தப் பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, லாபத்தை உண்டு பண்ணி, பணத்தைத் திருப்பிக் கட்டுவார்கள். அரசு கொடுப்பது 1,000 ரூபாய் என்றால், கிடைப்பது 700 ரூபாய்தான். 300 ரூபாயை நீங்களே வாங்கிக் கொள்கிறீர்கள். நம்மைப் பார்த்துத்தான் பேசுகிறான், நாம்தான் வாங்குவதாக அர்த்தம் என்று நினைக்க வேண்டாம். 1,000 ரூபாய்க்கு மனுப் போட்டால், 700 ரூபாய்தான் கையில் கிடைக்கும். அது அரசில் உள்ளவர்களுக்கும் தெரியும். அமைச்சர்கள் வெளி நாட்டிலிருந்து வரவில்லை. கிராமங்களிலிருந்துதான் வந்திருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கும் தெரியும். 200 கோடி ரூபாய் 4½ கோடி மக்களிடம்தான் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். நாலரை கோடி என்பது இப்போது ஐந்து அல்லது ஆறு கோடி ஆகியிருக்கும். அவர்களிடம்தான் அந்தப் பணம் இருக்கிறது. ஒருசில பேர்கள் ஆயிரம் கோடி ரூபாய் வைத்திருக்கிறார்கள். சர்க்காரிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறார்கள். அதை வசூல் செய்யவே

(திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்) [1979 ஏப்ரல் 16

இந்தப் பணம் காணாது. எனவே 200 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து, 'நீங்கள் நன்றாக இருங்கள்' என்று விவசாயிகளைப் பார்த்துச் சொன்னால், அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். வருஷா வருஷம் கேணியைத் தூர் எடுப்பதுபோல, இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால்—ஒரு வருஷக் கடன், மூன்று வருஷக் கடன், ஐந்து வருஷக் கடன் என்று சொல்லிக்கொண்டிருந்தால், அவன் ஊரைவிட்டே ஓடிப் போய்விடுவான். ஊரிலே வலு உள்ளவர்கள் அந்த நிலங்களை எடுத்துக்கொள்வார்கள். அரசா மாடுகளை வைத்து அந்த நிலங்களை உழப் போகிறது? எனவே இந்தப் பிரச்சினை குறித்து அரசு நல்லெண்ணத்தோடு முடிவெடுக்க வேண்டும். இதைப்பற்றி சபையிலே பேசுகிறோம். தனியாகக் கமிட்டி வைத்து அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள், அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும், இவரைப் பார்க்க வேண்டும், அவரைப் பார்க்க வேண்டும், மத்திய விவசாய மந்திரியைப் பார்க்க வேண்டும், மாநில விவசாய மந்திரியைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால், சும்மாவா கிடக்குது? இந்த அவையிலே உறுப்பினராக இருக்கிற என்னாலேயே அமைச்சர்களைப் பார்க்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் நன்றாகச் சொல்லலாம். படித்தவர், விவரம் தெரிந்தவர். ஆளோடு ஆளாக அவரும் சேர்ந்து சிரித்துவிட்டு, எழுந்து போகிறார். (சிரிப்பு). நிறைய படித்திருக்கிறார், என்ன பிரயோசனம்? மக்களுக்காக உயிர் கொடுக்கத் தயார் என்று வெளியிலே சொல்கிறார்கள். ஆனால் * * * (சிரிப்பு) மத்திய அரசினர், வடஇந்திய சிநேகோஷ்ண நிலையை வைத்து, திட்டங்களைப் போடுகிறார்கள். அதை நம்முடைய அரசினர் 'பிராபகாண்டா' செய்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து இது இது வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். 15,000 ரூபாய்க்குப் பசு வாங்கினால், 10 லிட்டர் பால் கறக்குமென்று சொல்லுகிறார்கள். பாலைக் குடித்துவிட்டுச் சாவதா? வாழ்க்கைக்கு வேறு வழி வேண்டாமா? எனவே இதைப்பற்றியெல்லாம் அரசு தீவிரமாக ஆலோசித்து முடிவிற்கு வர வேண்டும்.

எல்லாக் காரியங்களையும் ஒரே சகட்டாக எடுத்துக்கொண்டு, ஸ்டேட் பூரா ஒரே மாதிரிதான் அரசுக்கு என்று சொல்லுவது சரியானதல்ல. ஆங்காங்கே, தாலுக்காவாரியாக வித்தியாசங்கள் இருக்கின்றன. மாநிலத்தில் எத்தனையோ ஜில்லாக்கள், எத்தனையோ தாலுக்காக்கள் இருக்கின்றன. அவைகளிலே வித்தியாசங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் பார்த்து, செய்யத்தான் அரசு இருக்கிறது. எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாகத்தான் செய்வோமென்று சொன்னால் எப்படி? ஒரு தாலுக்காவில் 10,000 ஏக்கர்கள் இருக்கின்றன. அவற்றில் 5,000 ஏக்கர்கள் நன்றாக விளையும்,

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

1979 ஏப்ரல் 16] (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்)

5,000 ஏக்கர்களில் விளையாது. இந்த நிலைமையில் எல்லா நிலங்களுக்கும் ஒரேமாதிரியான வரி போட்டால், எப்படி? யாராவது இதில் குறுக்கிட்டுச் சொல்லும்போது, தப்பாக நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். சொன்னால், கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறார்கள். நாங்கள் சொல்ல வேண்டும், அரசு அதைக் கேட்க வேண்டும். அதற்குத் தகுந்த பரிகாரம் செய்யத்தான் அரசு இருக்கிறது. நாங்கள் சொன்னால் கேட்க மாட்டார்கள் என்று 'பிராபகாண்டா' பண்ணுகிறார்கள். எப்படியாவது விவசாயிகள் விஷயத்திலே தாராள மனத்தோடு செய்ய வேண்டும். பட்ஜெட் கூட்டத்திலே சொன்னவற்றை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றாமல் இருந்தால், ஆட்சியில் யார் இருந்தால் என்ன? ஆட்சியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் இருக்க வேண்டுமென்று என்ன இருக்கிறது? யார் இருந்தாலும் ஒன்றுதான். எதற்காக ஆட்சியில் உட்கார்ந்திருக்கிறீர்கள்? நல்ல காரியங்களைச் செய்வதற்காகத்தான் இருக்கிறீர்கள். பத்து நாட்களுக்கு முன்னால் நிறைவேற்றுகிறோமென்று நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அடுத்து ஒரு மந்திரிகூட நிதியமைச்சர் அவர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள், சாதகம் பண்ணப் போகிறார்களென்று சொன்னார்கள். ஆனால் எந்தவிதமான சாதகத்தையும் காணோம். எனவே அரசு நல்லபடியாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கான வரியைக்கூட கூடுதலாக்கியிருக்கிறார்களென்று சொன்னார்கள். என்னால் சரியாகப் படித்துப் பார்க்க முடியவில்லை. எமர்ஜென்சி பீரியட்டிலே ஒரு ரூபாய்க்கு மேலே ஒரு தம்பிடிகூட உயர்த்த முடியாதென்று சொல்லி, ஐந்து, ஆறு ஆண்டுகள் அப்படியே வைத்திருந்தோம். இப்போது, ஒருவரையும் கேட்காமல் மூன்று ரூபாயாக்கிவிட்டார்கள். இருபது, ஐம்பது காசுகள் உயர்த்த, கமிஷனரும், அதிகாரிகளும் வேண்டியது சொல்லுவார்கள். ஒரு ரூபாய் உயர்த்தினால், சர்க்கார் இரண்டு ரூபாய் கொடுக்குமென்று சொல்லுவார்கள். உயர்த்திவிட்டு, ஊருக்கு எப்படிப் போவது? வரியை உயர்த்தியது யார், வரச் சொல்லு பார்ப்போமென்று ஊரிலே இருப்பவர்கள் சொல்லுவார்கள். எனவே எல்லோரும் சவுகரியமாக இருக்க வேண்டும். தொந்தரவு கொடுக்காமல் இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம். பட்ஜெட்டைத் தாக்கல் செய்ய நிதி அமைச்சரவர்கள் அவைக்கு வர வேண்டாமா? அவர், அன்று ஒப்புக்கொண்டு, செய்வதாகச் சொன்னார்கள். நாங்கள் பேசும் முன்னவர் அவர்கள்தான் அவருக்குச் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 5-10)

போது அது சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்கள் அவையில் இல்லாவிட்டாலும் கூட்டுப் பொறுப்பு என்கின்ற முறையில் அவையில் இருக்கின்ற

(திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்) [1979 ஏப்ரல் 16

அமைச்சர்கள் குறிப்பினை எடுத்து உரிய அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டு வந்த பிறகும்கூட, சம்பந்தப் பட்ட அமைச்சர்கள் அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், நாங்கள் யாரிடம் போய் கேட்பது? நான் முன்பு சொல்லியிருந்த கோரிக்கைகள் பற்றி இந்த வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் நாங்கள் யாரிடம் தான் போய் முறையிட முடியும்? நாங்கள் சொல்லுகின்ற குறைகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் இந்த அவையிலேதான் பதில் சொல்ல வேண்டும். அப்படி நாங்கள் சொல்லுகின்ற குறைகளில் எதாவது ஒன்றை அமைச்சர் விட்டுவிட்டால், நிலைமை என்ன ஆகும்? ஒவ்வொரு தாலுகாவில் இருக்கக் கூடிய நிலைமையைப் பார்த்து, வளர்வுடைய பிரதேசத்தின் நிலைக்கேற்ப வரி போட வேண்டும். எல்லா இடத்திற்கும் ஒரே விகிதத்தில் வரி போடுவது தர்மமும் இல்லை, நியாயமும் இல்லை. நான் சொல்லிய பிரச்சினைகளுக் கான தீர்வுகள் சப்ளிமெண்டரி பட்ஜெட்டில்கூட வரவில்லை. அமைச்சர் களைக் கேட்காமல் நாங்கள் வேறு யாரிடம்தான் போய் கேட்பது? நான் நான்கு காரியங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரிடம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அவை முன்னவரிடம் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அந்தக் காரியங்களை உடனடியாக நிறை வேற்ற வேண்டும். இல்லாவிட்டால் அது நல்லதில்லை. விவசாய மந்திரி என்ன செய்வார்கள்? அவர்கள் பாவம். அதிகாரிகள் எழுதிக் கொடுத்த கணக்கை அப்படியே இங்கே படிக்கிறார்கள். எல்லாவற்றையும் நல்லபடி யாகச் செய்ய வேண்டுமென்றுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றும் உள்ள அமைச்சர்களும் நினைக்கிறார்கள். எந்த அமைச்சர்தான் கெடுதல் நினைக்கிறார்? ஒருவரும் கெடுதல் நினைக்க வில்லை. எல்லோரும் நல்லது செய்ய வேண்டுமென்றுதான் நினைக் கிறார்கள்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி மணியடித்தார்.)

மாற்றுத் தலைவர் அவர்கள் மணி அடித்து விட்டார்கள். இன்னொருவர் பேசி என்ன சாதிக்கப் போகிறார்? ஒன்றும் சாதிக்கப் போவதில்லை. என்னுடைய நேரம் முடிவடைந்து விட்டது என்று நினைவு படுத்துகிறார்கள். ஏதோ அடுத்துப் பேசக்கூடியதை அப்படியே மாண்புமிகு அமைச்சர்கள் செய்வது மாதிரியும் நான் அதற்குக் குறுக்கே நிற்கிறது மாதிரியும் இருக்கிறது. அடுத்துப் பேசக்கூடிய உறுப்பினர் கூறுகின்ற குறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதாக இருந்தால், இத்துடன் முடித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

1979 ஏப்ரல் 16] (திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்)

என்னுடைய ஏரியா ஒரு மானாவாரி பிரதேசம், கடலோரப் பிரதேசம். மக்கள் மிகவும் நலிவுற்றிருக்கிறார்கள். அரசாங்கத்தை எதிர்த்தால் இம்சை தான் வரும். இம்சைப்பட்டு செத்தால்கூட பரவாயில்லை என்றுதான் சிலர் எண்ணுகிறார்கள். அவ்வளவு தூரம் அந்த மக்கள் நலிவுற்றிருக்கிறார்கள். முரட்டு சுபாவத்தை அரசாங்கம் உபயோகப்படுத்திக் கொள்ளத்தக்க அளவுக்கு அவர்களை கவனிக்காமல் விட்டு விடுவது தர்மமில்லை, நியாயமில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் சொல்லியிருந்த பிரச்சினைகள்பற்றி சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் வரும், சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். இன்னும் அது வரவில்லை. நிதியமைச்சர் அவர்கள் அதைக் குறித்து வைத்திருக்கிறார்கள், அவசியம் செய்வார்கள் என்று ஒரு மாண்புமிகு அமைச்சர் அன்றையதினம் குறிப்பிட்டார். உண்மைக்கு மாறா னதைச் சொல்கிறார்கள் அல்லது அவர்களால் செய்ய முடியவில்லை என்பது அல்ல பிரச்சினை. சில காரியங்களைப் பொறுத்தமட்டில், அவை செய்ய முடியாமல் இருக்கலாம். அது எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாது. மாண்புமிகு அமைச்சர்களுக்குத்தான் அதைப்பற்றித் தெரியும். விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை, அவர்களுக்காக 200 கோடி ரூபாய் செல விடுகிறோம் என்று சொல்லுவதைவிட அவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் கணக்குப் போட்டு, காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ வந்து போய்க் கொண்டிருக்கிற மாதிரி கணக்கைப் போடக் கூடாது. இதில் முரட்டுப் பிடிவாதமாக அரசாங்கம் நடந்து கொள்வது நல்லதல்ல. எல்லா கட்சிகளிலும் விவசாயிகள் இருக்கிறார்கள். எங்கள் ஏரியாவைப்பற்றி மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த ஏரியாவுக்கு ஏற்கெனவே வந்து பார்த்திருக்கிறார்கள். எல்லா இடங்களிலும், எல்லோ ருக்கும், விளைச்சல் ஒரே மாதிரியாக இருக்கிறது என்கிற நினைப்பில் வரி போடுவது தவறு. ஒரு நிலத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் நல்லபடியாக விளை கிறது என்றால், இன்னொரு ஏரியாவில் 10 ஆயிரம் ஏக்கரில் நல்லபடியாக விளைச்சல் இருக்காது. அந்தந்த ஏரியாவுக்குத் தக்கபடி, மண் வளத் துக்குத் தக்கபடி, நன்றாக ஆராய்ந்து பார்த்து, வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் இதைச் செய்யும் என்று நம்புகிறேன். இதை 15 நாட்களுக்குள்ளாக அல்லது உடனடியாக நிறைவேற்ற வேண்டு மென்று மாண்புமிகு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் வதுடன், மற்ற அமைச்சர்களும் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இதற்கு உறுதுணை புரிய வேண்டுமென்று சொல்லி நான் சொல்லிய எல்லாக் காரியங் களையும் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமை கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசுகின்றபோது * * * என்ற ஒரு பொதுவான வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்றும், பத்திரிகையில் அது வர வேண்டாமென்றும் தயவுசெய்து மாற்றுத் தலைவர் அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi): This sentence may be deletted from the speech of the hon. Member Thiru Ramakrishna Thevar.

திரு. க. அறிவழகன்: மாற்றுத் தலைவரவர்களே, விவசாயத் துறையில் விழுமிய வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை படிப்பதற்குச் சுவையாகவும் செயல்முறைக்கு ஏற்றதாகவும் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் கடந்த பல மாதங்களில் இந்தத் துறை மிக நன்றாகச் செயல்படக் கூடிய அளவுக்கு விளக்கங்களை எடுத்து வைத்து துரிதமாக நடவடிக்கை எடுத்து வந்திருப்பது நமக்கெல்லாம் மன நிறைவைத் தருகிறது. இந்தத் துறையிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை சரியாகப் புரிந்துகொண்டு அதற்கான நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் இந்தத் துறை தன்னுடைய தலையாய பணியைச் செய்திருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத் துறையிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொல்லி, எவ்வளவுதான் படித்திருந்தாலும், அந்தப் படிப்பின் பயன் விவசாயத்துறையில் இல்லை என்பதை எடுத்துக் காட்டினார்கள். விவசாயத் துறையில் மிகச் சிறப்புக்குரிய இடமாக விளங்குவது தஞ்சை மாவட்டம். அந்தத் தஞ்சை மாவட்டம்தான் இன்றையதினம் விவசாயத் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்று சொல்லத்தக்க ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பல காரணங்களால் அப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகியிருக்கிறது. ஒன்றாவது அங்கு வருகின்ற காவிரி நீருடைய பிரச்சினை. இரண்டாவது அங்கே பெய்கின்ற பருவ மழையினுடைய காலம் தவறிய செயல். மூன்றாவது அங்கு உற்பத்தியாகின்ற விளை பொருள்களுக்குச் சரியான விற்பனை விலை கிடைக்கவில்லை. நான்காவது அங்குள்ள நிலச் சீர்திருத்த பிரச்சினையிலுள்ள கோளாறு. ஐந்தாவது அங்குள்ள பெரும் பகுதி மக்கள் வசதி குறைந்தவர்களாக இருக்கிற காரணத்தால், இருக்கிற

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

நிலங்களை உழுது பயன்படுத்தக்கூடிய அளவுக்கு வசதியில்லாத நிலை. இந்த நிலைகளைச் சரி செய்வதற்கு சாதகமான வழிமுறைகளை அரசு வகுக்க வேண்டியிருக்கிறது. முதலாவதாக அந்தப் பகுதியிலே நிலத் துறையிலே இருக்கின்ற மிக முக்கியமான சிக்கலான பிரச்சினை குத்தகைப் பிரச்சினை. அரசு பெரிய மாற்றங்களை இதில் செய்ய வேண்டும். அங்கு குத்தகைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பல பேர்கள் தங்களுக்கு இருக்கிற வறுமையின் காரணமாக தாங்கள் பெற்றிருக்கக்கூடிய நிலங்களைக்கூட முழு அளவில் உழுது உற்பத்தி செய்யமுடியாத அளவுக்கு வசதி குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்குப் பல்வேறு துறைகளின் மூலம் செய்கின்ற வசதிகள், வாய்ப்புகள் அவர்களுக்குச் சரியாய்ப் போய்ச் சேராத காரணத்தால், அவர்கள் மூன்று போகம் உற்பத்தி செய்கின்ற நிலை மாறி, இரு போக உற்பத்தி கூட செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். காவிரியிலிருந்து போகின்ற வாய்க்கால்கள், வடிகால்கள் வெட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்ற காரணத்தால், பல பகுதிகளிலே சரியாக நீர் பாய்வது கிடையாது. அதனால் விவசாயிகளிடையே தகராறுகளும் சிக்கல்களும் தோன்றியிருக்கின்றன. இன்னும் கூட அப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டு தான் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரை, மாயூரம் பகுதி, கும்பகோணம் பகுதி இன்னும் சொல்லப் போனால் தஞ்சை மாவட்டத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் காவிரி நீர் பயன்படுத்தப்படுகிறது. அந்த நீர் முழுமையாகப் பயன்படுத்தப்படக் கூடியவாறு சரியான முறையில் எல்லா நிலங்களுக்கும் போய்ச் சேர்கின்ற சூழ்நிலை இருக்கிறதா என்பதை ஆராய்ந்தறிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கின்ற குளங்கள், குட்டைகள், சிறு ஏரிகள் எல்லாம் சில தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்றன அல்லது இரண்டு அல்லது மூன்று தனி பிரமுகர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. அல்லது பஞ்சாயத்து மன்றங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இந்தக் குளம் குட்டைகளைப் பொறுத்தவரை, பல ஆண்டுகளாக தூர் வாராத காரணத்தால், நீர் தேங்கத் தகுதியற்றவைகளாக அவைகள் இருக்கின்றன. அந்தத் தண்ணீர் மீன்கள் கூட வளர முடியாத வகையில் தகுதியற்ற நீராக இருக்கிறது. அந்த நீர் விவசாயிகள் கூட பயன்படுத்தத் தகுதியற்ற நீராக இருக்கிறது. ஆகவே தஞ்சை மாவட்டத்திலுள்ள குளங்களையும், குட்டைகளையும் சரி செய்வதற்கும், சீர் செய்வதற்கும் தனியாக ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும். என்னுடைய ஊர் ஒரு சிறு கிராமம். ஒரு பர்லாங் சுற்றுவட்டாரத்திற்குள் 15 குளங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. எலந்தங்குடி கிராமம்

என்கிற அந்தப் பகுதியிலே இருக்கிற குளங்கள் கூட பல ஆண்டுகளாக தனியாருக்குச் சொந்தமானவைகளாக இருக்கின்றன. தூர் வாரப்படாத நிலையில் மழைக் காலங்களில் அங்கே மழை நீர் தேங்கக் கூட

(பிற்பகல் 5-20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

வாய்ப்பில்லை. மற்ற மாவட்டங்களிலே பெரிய பெரிய ஏரிகள் இருக்கின்றன. வசதியான பல்வேறு பெரிய திட்டங்கள் கூட அங்கே அமைந்திருக்கின்றன என்று நான் சொல்லிக்கொள்வேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கிற கால்நடைகள் தான் தமிழ் நாட்டிலே இருக்கிற கால்நடைகளில் வலிவிழந்த கால்நடைகளாக இருக்கின்றன. அங்கே, கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலங்களே இல்லை. தஞ்சை மாவட்டத்திலே கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் நிலங்கள் இல்லாத காரணத்தினால், வளர்க்கப்படுகின்ற மாடுகளை எங்கே கட்டுவது என்று தெரியாமல், அவைகளை மேய்க்கின்றவர்கள் வயல்களிலேயும், வரப்புகளிலேயும், சாலை ஓரங்களிலேயும் அவைகளை மேய்த்து, அதன் நிமித்தம் பலவிதமான வழக்குகளுக்கும் வல்லடிகளுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்கள் இருக்கின்றன. எதிர்காலத்திலே பல்வேறு திட்டங்களை நாம் நாட்டுக்கு அறிவித்திருக்கிறோம். கையகப்படுத்தப்பட இருக்கும் நிலங்களிலே கால்நடைகளுக்கு வேண்டிய புல்லை வளர்த்துக் கொடுக்கக் கூடிய அளவிலே, லட்சக்கணக்கான கால்நடைகள் பயனடையும் விதத்தில் அவைகளுக்கு வேண்டிய புல்வெளிகளை அமைக்க தக்க திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தனியார்களோ, அங்கே இருக்கின்ற மிராசுதாரர்களோ, நிலச்சுவான்தார்களோ இந்தக் காரியத்தைச் செய்வார்கள் என்று அரசு எதிர்பார்க்கக்கூடாது. அப்படி எதிர்பார்த்து அரசு செயல்படாமலிருந்தால், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கும் கால்நடைகள் வெட்டுவதற்கும், மற்றும் அதுபோன்ற காரியங்களுக்கும் தான் பயன்படுமே தவிர, மக்கள் சுபிட்சமாக வாழ்ந்து செழிப்படையும் வகையில் தேவையான பாலை அதிகமாகத் தருவதற்காக அந்தக் கால்நடைகள் பயன்படுகின்றன என்று நாம் சொல்ல முடியாது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய முறையில், நவீன முறையில் விவசாயம் செய்வதற்காக டிராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த டிராக்டர்களை ரிப்பேர் செய்வதற்கோ, சரியான முறையில்

பயன்படுத்துவதற்கோ, அவைகளிலே தொல்லைகள் வருகின்ற நேரத்திலே சரிசெய்வதற்கோ தேவைப்படும் நிலையங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. மாயூரத்திலே, விவசாயக் கருவிகளைச் சரி செய்வதற்கும், விவசாயத்திற்குத் தேவைப்படும் டிராக்டர்களை வழங்குவதற்குமான இணையம் ஒன்று இருக்கிறது. ஆனால், அங்கே சர்விஸ் செய்யப்படுகின்ற முறைகள் சரியாக இல்லை. அதன் காரணமாக, அந்த டிராக்டர்களின் முழுப் பலனையும் அடைய அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அவைகளை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். காவிரி-மேட்டூர் ப்ராஜெக்ட் என்று அழைக்கப்படுகின்ற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வருகின்ற மன்னார்குடி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் சென்ற ஆண்டு முறையாகத் தண்ணீர் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் மிகவும் குறைபட்டார்கள். பருவம் தவறி மழை பெய்த காரணத்தினாலும், பருவம் தவறி தண்ணீர் விடப்பட்ட காரணத்தினாலும், தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்ற, அங்குள்ள விவசாயிகள் சீரான முறையில் நீர் வசதிகளைப் பெறுவதற்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாட்டில் விவசாய வளர்ச்சி என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்பது நீண்ட காலமாக நிபுணர்கள் ஒத்துக்கொண்டிருக்கின்ற கருத்தாகும். எனினும் நம்முடைய நாட்டில், விவசாயத்தில் நாம் ஒரு பெரிய வளர்ச்சியை அடைந்து அதன் காரணமாக நெல் உற்பத்தி அதிகமாகி, விலை குறைந்துவிட்டது என்பது போன்ற ஒரு எண்ணம் இப்போது தோன்றிக்கத் தொடங்கிவிட்டது. ஆனால், நம்முடைய நாட்டில் இருக்கும் மக்களுடைய எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு, அவர்கள் உண்கிற உணவின் அளவை எடுத்துக் கொண்டு எல்லா மக்களுக்கும் மூன்று வேளை உணவு கிடைக்கிறதா என்று பார்த்தால், 'இல்லை' என்று தான் நான் சொல்லிக்கொள்ள முடியும். உற்பத்தி செய்கின்ற உணவை வாங்கக் கூடிய சக்தி இல்லாத நிலைதான் இன்றையதினம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்வேன். உற்பத்தியாகின்ற உணவுப் பொருட்களையோ நம்முடைய நாட்டு மக்களால் வாங்க முடியவில்லை. ஆனால் அதே சமயத்தில் உற்பத்தி செய்வதற்கான செலவுகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இந்தச் சூழ்நிலைகளை நிச்சயமாக நாம் மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டமானாலும் அல்லது மற்ற எந்த மாவட்டமானாலும், உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லுக்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத்

துறை அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்களிலேயும், சட்ட மன்றங்களிலேயும் பேசும்போது, அதற்காக பெரிய போராட்டம் கூட நடத்துவோம் என்று உறுதியளித்திருக்கிறார்கள். உண்ணாவிரதப் போராட்டம் கூட செய்வோம் என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் போராட்டங்களிலே நானும் கலந்து கொண்டு—ஒருவேளை அது சிறைக்குப் போகின்ற போராட்டமானாலும்—இந்த நாட்டு விவசாயிகளுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சி உருவாக்கத்தக்க முயற்சிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பை இந்த அவையிலே வைத்துள்ளார்கள். நம்முடைய மாநிலத்தில் விவசாயிகளுக்கு மிக மிக அவசியமானது பாசன வசதி. பாசன வசதிக்குத் தேவைப்படும் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் எல்லாம் தூரெடுக்கப்பட வேண்டும் என்று நான் இதற்கு முன்னால் பலமுறை பேசியிருக்கிறேன். என்னுடைய பகுதியில் செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. என்னுடைய 50 ஆண்டு அனுபவத்தை வைத்துப் பார்த்தால், அந்த ஏரியில் இருக்கும் தண்ணீரை விட அதிகமான அளவு தண்ணீர் அடையாற்றில் இருந்தும் ஆற்று வழியே கடலில் சென்று கலக்கின்றது. சுதந்திரம் அடைவதற்கு முன்பு, வெள்ளைக்காரன் காலத்திலே, 1864 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன், விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று ஒரு நல்ல எண்ணத்திலே அவர்கள் சைதாப்பேட்டையிலே விவசாயப் பண்ணையை ஏற்படுத்தி, அதில் அரிய பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள். பின்பு, விவசாய இலாகா என்று தனியாக ஒரு இலாகாவையே ஏற்படுத்தி வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து அது பணியாற்றி வருகிறது. அந்த இலாகா இந்த நாட்டுக்கு வெள்ளைக்காரன் போன பிறகு, இதுவரையில் ஏதாவது நன்மை செய்திருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் நான் சொல்வேன். அந்தக் காலத்திலே வெள்ளைக்காரன் வைத்த திட்டங்களை இப்போதும் வைத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். குளங்களில் ஏரிகளில் தூர் வாரும் பணிகளைக் கூட அவர்கள் செய்யவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படி ஒரு இலாகா இருக்கிறது. இந்த இலாகாவுக்கு நாம் அரசு நிதியிலேயிருந்து அதிக அளவில் பணம் ஒதுக்கியிருக்கிறோம். நான் செம்பரம்பாக்கம் ஏரியை உதாரணமாகச் சொல்கிறேன், அந்த ஏரியிலே வருகின்ற தண்ணீரில் ஒரு சொட்டு தண்ணீர் கூட கடலிலே சென்று கலக்கக் கூடாது என்ற விதத்தில் இன்றையதினம் வரையில் அந்த இலாகா

எந்தவிதமான திட்டமும் வகுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். வெள்ளம் வருகிறது. வீடுகள், கன்று காலிகள் அடித்துச் செல்லப்படுகின்றன. இந்த நிலைமைதான் இன்றையதினம் கூட இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு நாட்டுக் கால்வாய் இருக்கிறது. சர்வே செய்து, எங்களுடைய கிராம அடங்கலிலே கூட அந்த நாட்டுக் கால்வாய்க்கான குறிப்புக்கள் இருக்கின்றன. அந்த நாட்டுக் கால்வாயைப் பெரிதுபடுத்தி, அதில் தண்ணீர் போகும் வசதி ஏற்படுத்தினால், அது விவசாயத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இன்றையதினம் வீராணம் திட்டம் என்றெல்லாம் நாம் கொண்டு வருகிறோம். செம்பரம்பாக்கம் ஏரியை தூர்வாரி சீர்படுத்தினால், இதிலுள்ள தண்ணீரைக் கொண்டு குடிநீர்த் திட்டங்கள் கூட நாம் வகுக்கலாம். அந்த நாட்டுக்கால்வாயைப் பெரிதுபடுத்தி,—அதிலிருந்து கிட்டத்தட்ட 4, 5 மைல்களுக்கு அப்பால் பள்ளிக்கரணை என்ற இடத்தில் உப்பங்கழி இருக்கிறது—அங்கு இந்தத் தண்ணீரைத் தேக்கி வைக்கலாம். கடல் தண்ணீர் கலக்காமலிருப்பதற்காக அங்கிருக்கும் பக்கிங்ஹாம் கால்வாய் சுவர்களை உயர்த்தி அமைக்கலாம். இவ்வாறு செய்தால் அந்தத் தண்ணீரை குடிநீருக்குப் பயன்படுத்தலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்து இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையிலும் இந்த அதிகாரிகள் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களுக்கு நான் சென்றிருந்தபோது, அங்குள்ள விவசாய மக்கள் என்னிடம் ஒரு குறையைக் குறிப்பிட்டார்கள். அங்குள்ள விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கு 1970 ஆம் ஆண்டு கடன் கொடுத்திருக்கிறார்கள். கடன் பெற்று கிணறு வெட்டிப் பார்த்தபோது, அடியிலே தண்ணீர் இல்லை, பாறைதான் தென்பட்டது. கிணறு வெட்டவில்லையென்றால், வாங்கிய பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டும். அவர்கள் நில நீர் ஆய்வகத்திற்கும், மண்வள ஆய்வகத்திற்கும், விவசாய இலாகாவுக்கும் முறையீடு செய்தார்கள். "நீங்கள் வந்து தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்தால், நாங்கள் மேற்கொண்டு தோண்டுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, வந்து பார்த்துச் சொல்ல வேண்டும்" என்று சொன்னார்கள். ஆனால் யாரும் வரவில்லை. ஆறு, ஏழு வருஷங்களாக அவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல், விவசாய வங்கியிலே கடன் பட்டுவிட்டு திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலைமையைப் போக்க, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயிகளுக்கு பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. விவசாயிகளுடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைக் காண வேண்டுமென்ற அடிப்படையில் பல நல்ல திட்டங்களைத் தீட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் நன்கு பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். சாத்தனூர் அணையிலிருந்து நேற்றையதினம் திருவண்ணாமலைப் பகுதிக்கு நான் சென்றிருந்தேன். அங்கே ஒரு கால்வாய்க்குப் பெயர் 11 ஆம் நெம்பர் கால்வாய் என்று சொல்லப்படுகிறது. அதில் தண்ணீரே விடப்படுவதில்லை என்று அங்கே உள்ள விவசாயப் பெருமக்கள் குறைபட்டுக் கொண்டார்கள். இப்போதுதான் தண்ணீர் விடுகிறார்கள். ஒரு நாளைக்கு விட்டுவிட்டு, பிறகு நிறுத்திவிடுவார்கள் என்று வருத்தப்பட்டார்கள். அங்கே முறுக்கம்பாறை, மணலூர்ப்பேட்டை, அத்தியந்தல் போன்ற பகுதிகளுக்கு நான் நேற்று சென்றிருந்தேன். எல்லாப் பகுதிகளிலும் இந்தக் குறைபாட்டைத்தான் சொன்னார்கள். அங்கே இருக்கிற லஸ்கர் அல்லது எஞ்சினீயருக்குப் பணம் கொடுத்தால், தண்ணீர்க் கால்வாயைத் திறந்து விடுகிறார்கள் என்றும் சொன்னார்கள். நமது ஆட்சியில் இத்தகைய நிலைமைகள் இருக்கக்கூடாது என்று இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, நந்தன் கால்வாய் திட்டம் என்று நீண்ட நெடுநாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. நான் பிறக்காத காலத்திலிருந்து இந்த நந்தன் கால்வாய்த் திட்டத்தைப் பற்றிச் சொல்லி வருகிறார்கள். அது என்ன கால்வாய்த் திட்டம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் பனமலை ஏரிக்கு நீர்வரத்து வரும். அதன் காரணமாகப் பல கிராமங்கள் பயனடையும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

விவசாய இலாக்காவில் ஐந்து, ஆறு பிரிவுகளை வைத்திருக்கிறார்கள். எதற்காக இத்தனை பிரிவுகளை வைத்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், தமிழ்நாடு கூட்டுறவு பொறியியல் இலாகா, பொறியியல் பிரிவு என்று பல பிரிவுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்கான அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. கிராமங்களுக்குப் போய் இங்கே அரசாங்க விவசாய இலாகா அதிகாரிகள் வந்து விவசாயிகளுக்கு ஆலோசனை ஏதேனும் வழங்குகிறார்

களா என்று கேட்டால், யாரோ ஒருவர் 'அக்ரி' என்ற பெயரில் வருகிறார் என்கிறார்கள். பூச்சி மருந்து போட வேண்டும், உரம் போட வேண்டுமென்று சொல்லுவார், அருகிலிருந்து எதையும் செய்து கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். விவசாய இன்ஸ்பெக்டர் என்று ஒரு அதிகாரி வருகிறார். அவர் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை தருகிறாரே யொழிய, விவசாயக் காரியங்களில் உடனிருந்து ஊக்குவிப்பதில்லை என்று விவசாயப் பெருங்குடி மக்கள் என்னிடத்தில் குறைபட்டுக் கொண்டார்கள். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் ஒரு கோரிக்கைவிட விரும்புகிறேன். விவசாய இலாக்காவில் இருக்கும் அத்தனை பிரிவுகளையும் ஒன்றாக ஆக்கிவிட வேண்டும். நில ஆய்வுக் கழகம், கருவிகள் வாடகைக்கு விடுவது, சேவை நிலையம், விவசாயப் பொறியியல் நிலையம், மண்வளப் பாதுகாப்பு என்று பல்வேறு பிரிவுகளை இன்றைக்கு வைத்துக் கொண்டிருப்பதற்கு மாறாக இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்படும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு விவசாய அலுவலரை அனுப்ப வேண்டும். அவருடைய பொறுப்பில் சுமார் 5,000 ஏக்கர் வரை ஒப்படைத்து அந்த நிலங்களை அருகில் இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற முறையை உருவாக்க வேண்டும். பல அதிகாரிகள் மாதத்திற்கு ஒரு நாளைக்கு அல்லது இரண்டு நாளைக்குத்தான் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். மற்ற நாட்களில் செல்வதேயில்லை. இந்த நிலைமையை மாற்றி 5,000 அல்லது 10,000 ஏக்கர்களை கவனித்துக் கொள்வதற்கு ஒரு விவசாய இன்ஸ்பெக்டர் என்று நியமித்து, விவசாயத் துறையில் கண்காணிப்பை மேற்கொண்டால், நாட்டில் விவசாயம் மிக நல்ல முறையில் முன்னேறும். இன்றைய தினம் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் எட்டு விவசாய அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில், படித்த இளைஞர்களை இந்தத் துறையில் அதிகமாக ஈடுபடுத்துவதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கணிசமாகக் குறைக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விவசாய அதிகாரிகளிடத்தில், "நீங்கள் 1,000 ஹெக்டேர் நிலங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு உற்பத்தியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்" என்று சொல்லும் வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால், நமது ஆட்சியில் விவசாயிகளுக்கு நல்ல ஊக்கமும் ஆக்கமும் கிடைக்கும். அதோடு நிறைய சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கும்.

பல விவசாயிகளின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் கஷ்டப்

படுகிறோம் என்று சொல்கிறார்கள். "உங்களுடைய வருமானம் அதிகரித்திருக்கிறதே, கடந்த ஆண்டைவிட, கடந்த 10 ஆண்டுகளில் கிடைத்த வருமானத்தைவிட இப்போது அதிகமாகத்தானே வருவாய் பெறுகிறீர்கள், அப்படி இருக்கும்போது ஏன் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை என்கிறீர்கள்?" என்று கேட்டால், "எங்களுடைய வருவாய் செலவுக்குச் சரியாகப் போய்விடுகிறது, நல்லபடியாகச் சாப்பிடுகிறோம், நல்லபடி துணி உடுத்துகிறோம், எங்கள் பிள்ளைகளை கான்வெண்ட்டில் படிக்க வைக்கிறோம். இருந்தாலும் எங்களால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அதற்கு முக்கியமான காரணம் நெல்விலை குறைவாக விற்பதுதான்" என்கிறார்கள். "நெல் விலையை ஏற்ற வேண்டும் என்று அமைச்சர் அவர்களே பேசியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். எப்போது நெல் விலையை ஏற்றப் போகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். நெல் விலையை ஏற்ற வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் மறியல் செய்வதாகவும், சத்தியாகிரகம் செய்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் ஒத்துழைத்தால், நிச்சயமாக மத்திய அரசோடு போராடி, நெல்லுக்கு உயர்ந்த விலை வாங்கித் தருவார்கள் என்று நான்கூட அவர்களுக்கு உறுதி அளித்துவிட்டு வந்திருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் விவசாயத் துறையில் செயலாற்றுகிற அதிகாரிகளுக்கு நல்ல ஊக்கம் கொடுக்க வேண்டும். கூடுமானவரை அவர்கள் மாதத்திற்கு 15 நாட்களுக்காவது கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற முறையை உறுதி செய்ய வேண்டும். அவர்களெல்லாம் விவசாயிகளோடு இருந்து பழகி, அவர்களுக்கு என்ன தேவை என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு உதவி செய்யும்படி செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்த ஒருவர் ஆறு வருஷமாக 20 இடங்களில் கிணறு வெட்டி தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார். ஆராய்ச்சி செய்து இங்கே தண்ணீர் இருக்கிறது, இங்கே வெட்டுங்கள் என்று சொன்னால்தான், வெட்ட வேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இப்படி ஆலோசனைகளை வழங்க விவசாய அதிகாரிகள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஒருமுறை பேசியதாக அறிந்தேன். எட்டு ஆண்டுக் காலத்திற்குள் மண் வாரி இயந்திரங்களை வாங்கி தமிழகம் முழுவதுமுள்ள ஏரி குளங்களையெல்லாம் ஆழப்படுத்தப் போகிறோம் என்று பேசியிருக்கிறார்கள். அது பத்திரிகைக் குறிப்பில் வந்திருக்கிறது. எட்டு ஆண்டுக் காலத்திற்குள் இந்தப் பணியை முடிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதேகூட மாவட்டத்திற்கு இரண்டு மண்வாரி இயந்திரங்களை வாங்கி, ஆங்காங்கே படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்

களைப் பயன்படுத்தி அல்லது கிராமங்களில் உள்ள இளைஞர்களைப் பயன்படுத்தி, ஏரி குளங்களில் மண் வாரும் வேலையை மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே நாளொன்றுக்கு மூன்று ரூபாயும் அரிசியும் கொடுக்கிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏரி குளங்களில் மண் வாரும் வேலையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், எந்தக் காலத்திலும் நீர்நிலையங்களில் தண்ணீர் இருக்கும். இதன் மூலம் கடலில் சென்று வீணாகும் நீரைத் தடுத்து தமிழ் நாட்டுப் பாசனத்திற்கு உதவலாம். இதனால் நமது ஆட்சிக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பிற மாநிலங்களுக்குச் சென்று தண்ணீர் கேட்க வேண்டிய அவசியமே இனி ஏற்படாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமங்களில் துளைபோட்டு கிணறு தோண்டி தண்ணீர் எடுக்கும் திட்டம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு 20 ஆயிரம் துளைக் கிணறுகள் போட இருக்கிறோம். அடுத்த ஆண்டு 20,000 போட இருக்கிறோம் என்று சொல்லுகிறோம். ஆனால் அப்படிப் போடும்போது, சென்ற ஆண்டு போடப்பட்ட துளைக் கிணறுகள் என்ன ஆயிற்று என்ற கணக்கு அரசாங்கத்திற்கு வருவதேயில்லை. ஆண்டுதோறும் அதற்காகச் செலவு செய்கிறோம். இப்படிச் செய்வதால் பயன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவைகளை நாம் ஒரு ஒழுங்குக்குள் கொண்டுவர வேண்டும்.

தற்போது துளை போடுகிற இயந்திரம் வேண்டுமென்றால் 500 ரூபாய் முன்பணம் தர வேண்டும், நாளொன்றுக்கு 25 ரூபாய் வாடகை தர வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படியே வாடகையைத் தந்து கொண்டு வந்தால், அந்த இயந்திரம் ஒழுங்காக வேலை செய்வதில்லை. எப்படியாவது நான்கு நாளில் துளை போட்டுவிடலாம், பிறகு தண்ணீர் வந்துவிடும் என்று பார்த்தால், அந்த இயந்திரம் வேலை செய்வதேயில்லை. கேட்டால் ரிப்பேர் என்கிறார்கள். அதன் ரிப்பேரைச் சரி செய்வதற்கு சென்னைக்குப் போக வேண்டும் அல்லது திருச்சிக்குப் போக வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக் கூடாது. குடிநீர் வடிகால் வாரியத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, நினைத்த மாத்திரத்திலேயே துளைக் கிணறுகளைப் போட்டு, கிராமங்களுக்குக் குடிதண்ணீர் அளிக்கிறார்கள். அந்த வாரியத்தில் உள்ளதைப்போல், விவசாயத் துறையிலும் நிலைமைகளை உருவாக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரம், மற்றும் பூச்சி மருந்துபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இவைகளின் விலை தற்போது குறைந்துவிட்டதாகவும் கன்ட்ரோல் விலைக்கும் குறைவாகவே அவைகள் விற்கப்படுவதாகவும் சொன்னார்கள். கிராமங்களில்

(திரு. சி. இராமலிங்கம்) [1979 ஏப்ரல் 16

உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களுக்குப் பசுந்தாள் உரம் போட வேண்டுமென்று விரும்புகிறார்கள். முன்பெல்லாம் கிராமங்களில் இலுப்பைத் தோப்பு, நெல்லித்தோப்பு, பூந்தோட்டம் என்று வைத்திருந்தார்கள். அதோடு அங்கெல்லாம் வாதநாராயண மரம், பூவரச மரம் என்றெல்லாம் வைத்து வளர்ப்பார்கள். இவைகளையெல்லாம் வெட்டி நிலத்திற்குப் பசுந்தாள் உரமாகப் போட்டு வந்தார்கள். ஆனால் இப்போது எந்த ஊரிலும் எந்த மரமும் இல்லை. நான் சிறுவனாக இருந்தபோது, எங்கள் ஊரில் நிறைய இலுப்பை மரம் இருக்கும். அதிலிருந்து கிடைக்கும் நெய் மிக அருமையாக இருக்கும். நான் சின்ன வயதில் நிறைய ஊற்றிக் கொண்டு சாப்பிட்டிருக்கிறேன். இலுப்பை எண்ணெயை விளக்கெரிக்க உபயோகிப்பார்கள். சில குடும்பங்களில் சமையலுக்குத் தாளிக்க இலுப்பை எண்ணெயை உபயோகிப்பார்கள். அப்படி அதிகமான அளவில் இலுப்பை மரமும் வாத நாராயண மரமும் பூவரச மரமும் இருந்த நிலை இன்றைக்கு மாறிவிட்டது. இவைகளை மீண்டும் வைக்க வேண்டுமென்று கிராமங்களில் சொன்னால் போதும். அங்கேயிருக்கிற தோப்புப் புறம்போக்கு, மந்தைப் புறம்போக்கு, களத்துப் புறம்போக்கு, நீர்ப்பிடிப்புப் புறம்போக்கு என்றிருக்கிற இடங்களில் இவைகளை வைக்க முடியும். சில ஊர்களில் வேல மரத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் குடிசை போட்டுக்கொள்ளப் போகிறார்கள் என்று பயந்து வேல மரத்தை வைக்கிறார்கள். அதைக் கொண்டு ஏர்க் கலப்பை செய்ய உதவியாக இருக்கும். அதைப் போல் கிராமங்களில் மரங்களை வைத்து பசுந்தாள் உரத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அரசாங்கம் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகள் கிராமங்களுக்கு டியூட்டிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, வீட்டிலேயே உட்கார்ந்துகொள்ளாமல் கிராமங்களுக்கு அடிக்கடி போய், விவசாயிகளைச் சந்தித்து, அவர்களுக்கு உறுதுணையாக இருந்தால், விவசாயம் மிக நல்ல முறையில் முன்னேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பல நல்ல திட்டங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வதென்றால், நிறைய நேரம் ஆகும் என்ற காரணத்தால், அவைகளைத் தனித் தனியாக எடுத்துச் சொல்லவில்லை. விவசாய இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

1979 ஏப்ரல் 16]

* THIRU D. V. D' MONTE: Hon. Deputy Chairman, Sir, I have just three brief points to make on the Policy Note on Agriculture.

In our State, there is ample scope for the culturing of air-breathing fish in paddy fields. This could be done on a massive scale throughout the State. I am not referring to fish-farms or prawn-farm but the culturing of air-breathing fish in the paddy fields. Much development has been done in the neighbouring State of Kerala in this particular direction and the farmers of Tamil Nadu have lagged behind only because they are not aware of the benefits of such development. It has numerous advantages, the most important of them being that the fingerlings and other varieties of fish would yield a fairly good amount of money to the farmers in addition to the income from the harvest of paddy.

In the Policy Note, I find no reference to the rat menace. Not enough steps have been taken for rodent control. Apart from the war on foodgrains, rodents are a great health menace. According to studies that have been made, rats are sixteen times more voracious than men and six rats consume as much as one man. There are something like 550 species of rodents and most of them live in fields and forests. The rat population in India is staggering. Estimated at over 80 crores in 1922. The population has now gone up to 1,000 crores, according to figures available with the National Institute of Communicable Diseases, Delhi. Therefore, it is high time for rodent research to be carried out in our State. Only a sustained, long-term campaign at the national and State levels can make a deep dent in the rat menace. It may not be possible to eradicate rats but their population explosion can certainly be checked.

Sir, the last point I wish to make is with regard to the food value of potatoes. Today, India is one of the leading producers of potato in the world, according to Dr. Swaminathan, Chief of the ICAR. But our consumption of this nutritious tuber is particularly low. In Poland, over 300 lb. per person are produced annually and the average consumption per person is about 500 lb. per year. The balance if 2,500 lb. is used as livestock-feed and as starch for alcohol industries. The Irish and the Germans are equally passionate consumers of potatoes.

The American consumption also is not less than 1000 lb. per person per year. Compared to these, an Indian eats only 8 lb. of potatoes per year. According to experts, potato is an ideal diet for invalids and infants and its protein value is more than 10 per cent. This explains why population have thrived without adverse effects of a potato rich diet. In the U.K. and the U.S.A., potato contributes more Vitamin 'C' content than other major foods. In Europe also, where the consumption is almost 4 or 5 times that of America, Vitamin 'C' is largely met by potatoes. Therefore, the plea that I make today is that potato should enter into the daily diet of our people because it has much more food value than rice and wheat and more Vitamin 'C' content than most fruits.

Thank you.

(பிற்பகல் 5-40)

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை கொள்கை விளக்க விவாதத்தின்போது சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாட்டினுடைய முதுகெலும்பாகத் திகழ்கிற விவசாயிகளுக்குப் பயன் அளிக்கிற வகையிலே பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பல்வேறு கட்டங்களிலே பல்வேறு தலைவர்கள் கடந்த காலத்திலே பேசிக்கொண்டுதான் வந்திருக்கிறார்களேயொழிய, அதை நடைமுறைப்படுத்த எந்தவொரு திட்டமும் இன்றுவரை தயாரிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும். தமிழ் நாட்டில் இயற்கைச் சீற்றத்திற்கு ஆளாகித் தவிக்கிற விவசாயிகளுக்கு, பருவ மழையை நம்பிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக அவர்களுக்கு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படுவதிலிருந்து நிவாரணம் ஏற்படும் என்பதை இந்தச் சமயத்திலே அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே பயிர் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான ஒரு திட்டம் மிக விரைவாகத் தயாரிக்கப்பட வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தற்போது கிராமப்புறங்களில் விவசாயிகள் வேளாண்மைப் பணிகளில் நம்பிக்கையை இழந்துகொண்டிருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். தங்களுடைய பிள்ளைகளை விவசாயத்தில் ஈடுபடுத்தக் கூடாதென்றும், அதற்குப் பதிலாக நகர்ப்புறங்களில் அலுவலகப் பணிகளுக்கு அனுப்புவது நல்லது

என்றும், தாங்கள் கஷ்டப்படுவதைப் போல தங்களுடைய பிள்ளைகளும் விவசாயத்தில் கஷ்டப்படக்கூடாது என்றும் எண்ணுகிற மனப்பான்மை விவசாயிகளிடத்திலே வளர்ந்து வருகிறது என்பது கண்கூடு. இந்தமாதிரியான மனப்பான்மையை வளரவிட்டால், எதிர்காலத்திலே என்ன தீமை வரும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய பயிர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.

உற்பத்திப் பெருக்கத்தைப் பொறுத்த வரையிலே, தற்போது அரசு எடுத்து வருகிற நடவடிக்கைகளை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். உற்பத்தி சீரான முறையிலே உயர்ந்து வருவது குறித்து உள்ளபடியே பூரிப்படைகிறேன். மகிழ்ச்சியடைகிறேன். அண்மையில் ஒரு கட்டுரைப் படித்தேன். ஜப்பானில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிற விவசாய மாணவர்கள் ஒன்று சேர்ந்து, நெல் உற்பத்தியை முப்பது மடங்கு அதிகமாக உயர்த்துவது எப்படியென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். முப்பது மடங்கு நெல் உற்பத்தியை எப்படி அதிகரிப்பது என்பதை அவர்கள் செயல்பூர்வமாகக் காட்டியிருக்கிறார்கள் என்ற கட்டுரையைப் படித்தேன். அது உண்மையாக இருக்குமானால், ஜப்பானிய பல்கலைக் கழகத்துடன் நம்முடைய அரசு தொடர்பு கொண்டு அப்படிப்பட்ட முறைகளை நாமும் ஏன் கையாளக்கூடாது என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேங்காய் விலை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வருகிறது. ஆகவே தென்னை மரச் சாகுபடித் திட்டத்தை மிகத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் மூலமாக தேங்காய் உற்பத்தியை அதிகரித்து, தேங்காய் விலையைக் குறைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக சாலையோரங்களில் வேறு பல்வகையான மரங்களை வளர்ப்பதை விட்டுவிட்டு, தென்னை மரங்களை அதிகமாகச் சாகுபடி செய்ய வேண்டும். வயல் வரப்புகளிலும் தென்னை மரங்களைச் சாகுபடி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தென்னாற்காடு, வட ஆற்காடு ஆகிய இரண்டு மாவட்டங்களும் விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்டுள்ள மாவட்டங்கள். அங்கே வேறு தொழில்கள் மிகக் குறைவு. அங்குள்ள மக்களில் 90 சதவிதத்திற்கு மேற்பட்டவர்கள் விவசாயத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் மையமான பகுதியிலே ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்க வேண்டுமென்று நீண்ட காலமாகவே அந்தப் பகுதி மக்கள் கோரி வருகிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் இப்படிப்பட்ட கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இரண்டு மாவட்டங்களுக்கும் மையப் பகுதியாக திருக்கோவிலூர் பகுதி அமைந்திருக்கிறது. திருக்கோவிலூரில்

ஆயிரம் ஏக்கருக்கு மேலாக, தமிழக வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க 400 ஏக்கர் நிலம் இருந்தாலே போதும். அங்கே ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குமேல் இருப்பதால், அதைப் பயன்படுத்தி இரண்டு மாவட்ட மக்களுக்கும் பயன்படுகிற வகையிலே அங்கே ஒரு விவசாயக் கல்லூரியைத் துவங்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் அவர்கள் சொன்னதைப்போல, தற்போது இருக்கின்ற ஏரிகள், குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்தி அதன் கரைகளையும் அதிகப்படுத்தி, நீர் தேக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஏரிகள் மிக அதிகமாக இருக்கின்றன. அவற்றை ஏரிகள் மாவட்டம் என்றுகூட சொல்லுவார்கள். அந்த ஏரிகளின் ஆழத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியை அதிகமாக ஆழப்படுத்தி, அகலப்படுத்தி அதிலிருந்து எடுக்கக் கூடிய மண்ணை அதையொட்டியிருக்கக்கூடிய மிக நீண்ட, 12 மைல் அளவுக்கு உள்ள சாலையை சீரமைப்பதற்குப் பயன்படுத்தலாம் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(பிற்பகல் 5.50)

அதுபோலவே வெள்ளக் காலங்களிலே நீரைத் தேக்கி வைத்துக்கொள்வதற்காக சிறிய அணைக் கட்டுகளைக் கட்ட வேண்டும். அது காட்டாறாக இருந்தாலும்கூட, அங்கேயும் ஒரு சிறிய அணையைக் கட்டுவதன் மூலமாக அங்கு வருகின்ற தண்ணீரைப் பாழாக்காமல் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் கெடிலம் ஆறு, வெள்ளாறு, பெண்ணாறு இந்த மூன்று ஆறுகளிலுமே ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்திலே அதிகமான வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. அந்த வெள்ளத் தண்ணீர் பாழாவது மட்டுமல்லாமல், சுற்றுப்புறங்களில் பெருத்த சேதத்தையும் ஏற்படுத்துகிறது. ஆகவே இந்த மூன்று ஆறுகளிலுமே சிறிய அணைகளைக் கட்டி, அந்த வெள்ளத் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்கு ஏற்ற ஒரு திட்டத்தை அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி-தஞ்சை சாலையோரத்தின் பக்கத்தில் செம்மண்ணை எடுக்கத் தோண்டியதன் காரணமாக அங்கங்கே ஆழமான பள்ளங்கள் அமைந்து

விட்டன. அந்தப் பள்ளங்களிலே தண்ணீரைத் தேக்கலாம். வேறு எதற்கும் அந்தப் பள்ளங்களைப் பயன்படுத்த முடியாது. அங்கே வருகின்ற காவிரித் தண்ணீரை அந்தப் பள்ளங்களில் நிரப்பி நீர்ப்பாசனத்திற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்தப் பள்ளங்கள் திருச்சி-தஞ்சை சாலையின் ஓரத்தில் அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாட்டில் நீர்ப் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதே நேரத்தில் பருவ மழை தவறுகிறது. இதைப் பார்க்கும் போது நாம் இரண்டு திட்டங்களைத்தான் நம்பியிருக்க வேண்டும். கங்கை காவிரியை இணைக்கின்ற திட்டத்தை எவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்த முயல வேண்டும். இதற்காக நாம் மத்திய அரசை எந்த அளவுக்குத் தூண்ட முடியுமோ அந்த அளவுக்கு நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 1,500 கோடிக்கு மேல் செலவாகும் என்று நமது பிரதமர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ரூபாய் 1,500 கோடி செலவாகும் என்றாலும்கூட, மாநில அரசுகளுடைய, நாட்டு மக்களுடைய நலன்களை நாம் எண்ணிப் பார்க்கும் போது, இந்தத் தொகை மிகப் பெரிய தொகை என்று சொல்லிவிட முடியாது. இந்தத் திட்டத்தை எந்த அளவுக்கு விரைவில் மாநில அரசுகள் எல்லாம் சேர்ந்து மத்திய அரசைத் தூண்டி செயல்படுத்துகின்றனவோ அந்த அளவுக்கு நல்ல பலன் இருக்கும். இந்தத் திட்டத்தை விரைவு படுத்த நமது அரசும் மத்திய அரசைத் தூண்டிவிட வேண்டும், மத்திய அரசுக்கு வேண்டிய உதவியையும் செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்காலத்திலே வளமான நீர்ப்பாசன வசதிகளை தமிழ் நாட்டிலும் இதர மாநிலங்களிலும் உருவாக்கும் சூழ்நிலைகள் ஏற்படும். எப்போதுமே பருவ மழையையே நம்பி நாம் காத்துக்கொண்டிருக்கக் கூடாது. அது எப்போதும் சாதகமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடல் நீரை பாசன நீராக—நல்ல நீராக மாற்றுகிற திட்டம். இது மிகப் பெரிய திட்டம்தான். மேல் நாடுகளில் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களுக்கு வேறு வகையில் தண்ணீர் வசதிகள் இருக்கின்றன. அவர்கள் இத்தகைய ஆராய்ச்சியில் ஈடுபட மாட்டார்கள். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற சூழ்நிலையில் நாம் அதைப்பற்றிய ஆராய்ச்சிகளிலே ஈடுபடவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த நேரத்தில் அதற்கு வேண்டிய தொடக்கப் பணிகளையாவது நாம் செய்து பார்த்தால்தான், எதிர்காலத்திலே நல்ல நீர்ப்பாசன வசதிக்கு வழிவகுத்த பெருமைக்கு

உரியவர்களாவோம். இது மிகப் பெரிய திட்டமாக இருந்தாலும், மிக அதிகமான செலவு ஆகின்ற திட்டமாக இருந்தாலும்கூட, அதைத தொடங்குவதற்கான முன்னோடித் திட்டங்களையாவது நாம் இப்போது செயல்படுத்த முயல வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தக் கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகிறேன் வணக்கம்.

*THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Hon. Deputy Chairman, Sir, I am very happy to speak on this very important subject—Agricultural Growth—in our State. The housewife, whether she is a working woman or not, is facing a great problem, namely, the rising prices of vegetables. It is very difficult to meet the budget and I feel the time has come when we have to start a campaign, in a campaign fashion, of compulsorily calling upon all the people who have at least some space in their houses to have kitchen gardens. I would like to appeal to the Hon. Minister to revive the Kitchen Garden Campaign Committee which was functioning in the City of Madras and also some of the District Centres. This Campaign Committee was doing very wonderful work and we found that most of the houses in the City had kitchen gardens. We also distributed prizes for the best garden and that gave an impetus to grow more vegetables. The time has now come when we have to think of doing the campaign in a very big way and we should call upon individuals to see that vegetables are grown because we do not get them in sufficient quantities at reasonable prices and the vegetables are nutritious diet for our young children.

I would also request the Hon. Minister to make it compulsory to grow some plants or vegetables in all our slum areas and in the huts there. All of us are aware—and I am not stating anything new—that in huts vegetables like sweet gourd, white gourd,—Pudalangai, Peerkangai, Avaraikai—will be grown on the roofs of the huts. In such cases, the huts will not also be facing the risk of fire. We will be helping most of these people in huts with vegetables and, at the same time, it will be a kind of preservation for their huts from fire accidents. There are many huts with pools around. We should see that some plants or fruit-bearing trees are grown there. We have been hearing a lot about Garden Canal Scheme every year when there are

floods in the City and the residents of Kotturpuram area are affected. I am a resident of Adyar and we are all the time faced with a great gush of water and we feel sorry that all this water goes into the drain—I am not meaning that in the literal sense—because it goes into the sea and it is of no use in times of scarcity. Why not we think of having a Garden Canal Scheme by which we can store the water and prevent the water from flowing into the sea? This water can be used for growing more avenue trees. It is a rare thing to see avenue trees nowadays. We have to think of having a campaign of having avenue trees on our roadsides. If there is water, avenue trees could be grown. With the scarcity of gas and kerosene, poor people and slum people cut the branches of the trees even on the sides of the main roads and then the trees wither away. We should again start a campaign of 'grow more trees' and it will help us meet drought conditions as trees are water banks and will provide shade for pathways. Farming is one of the subjects in the vocational stream of the plus 2 course which we are now having, I feel that the services of the young men and women who study this subject in the plus 2 course could be utilised for giving instruction to the general public in the methods of growing more food. Those who are unemployed can be given some useful employment by utilising their services in the Land Army.

With these words, I once again thank you for permitting me to speak on this occasion. I am sure that in the interests of the people and especially in the interests of the housewives, the Hon. the Agriculture Minister will think of reviving the Committees about which I mentioned earlier.

Thank you.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்கள் எடுத்துக் கொண்டால்கூட 60 நிமிடங்கள், ஒரு மணி நேரம் ஆகிவிடும். இனி பேசுகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்குள்ளாக அவர்களுடைய உரையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேளாண்மையைப் பொறுத்தவரையில், ஒன்றும் பிரதிவாதங்கள், எதிர்க் கட்சிகள் குறுக்கீடுகள் என்ற பிரச்சினைகள் இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடத்திற்குள்ளாகவே முடிப்பார்கள் என்று

கருதுகிறேன். திரு. நல்லசிவன் அவர்களுக்கு மட்டும் சொன்னதாகக் கொள்ள வேண்டாம். எல்லா உறுப்பினர்களுக்கும்தான் இதைச் சொல்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

* திரு. ஆ. நல்லசிவன் : துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலிலே விவசாய விளைபொருள்களின் விலைவாசி சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சரவர்கள், நெல்லுக்கு. ஒரு குவிண்டாலுக்கு 129 ரூபாய் தர வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி எழுதியிருப்பதாகவும், அதற்காகப் போராடத் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். ரூபாய் 129 கொடுப்பதைப் பொறுத்து எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அதற்காக அமைச்சரவர்கள் என்ன போராட்டம் நடத்தினாலும், அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைவிட, கையிலே வெண்ணையை வைத்துக்கொண்டு, நெய்க்கு அலைய வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே குவிண்டால் நெல்லுக்கு 85 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயம் செய்தது. அறுவடையின் போது அந்த 85 ரூபாய்கூட சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காரணம், அறுவடை செய்த நெல்லை சிறு விவசாயிகள் கையில் வைத்துக்கொள்ள முடியாததால், குறைந்த விலைக்கு விற்க வேண்டி நேரிட்டது. மார்க்கெட்டில் வியாபாரிகள் மத்திய அரசு நிர்ணயித்த 85 ரூபாய்க்கும் குறைவாக நெல்லை வாங்கியதால், அதாவது மத்திய அரசு நிர்ணயித்த விலையான குவிண்டால் 85 ரூபாய் என்பதற்குக் கீழே போனபோது. அது சிறு விவசாயிகளைப் பாதித்தது. எனவே மாநில அரசு மத்திய அரசு நிர்ணயித்த 85 ரூபாய்க்கு, ஒரு குவிண்டால் நெல் விதம் கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, மாநில அரசு அப்படிச் செய்யவில்லை. அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொள்முதல் செய்வது என்ற கொள்கையை அரசு கைவிட்டு விட்டதா என்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசு குவிண்டால் நெல்லுக்கு 129 ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டுமென்றும் இப்போது சொல்லும் அரசு, 85 ரூபாய் கொடுக்கும் சாத்தியக்கூறு இருந்தபோது, அதற்கான உத்தரவாதம் கொடுக்கும் நிலை இருந்தபோது, அதைச் செய்யவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ரூபாய் 85 ரேட்டில் கொள்முதல் செய்திருந்தால், ரிசர்வ் பாங்க் அதற்காக எவ்வளவோ பணம் கொடுத்திருக்கும். அப்போது கொள்முதல் செய்வதில் எந்தவிதமான பிரச்சினையுமில்லை. அப்போது அரசு 85 ரூபாய்க்கு குவிண்டால் நெல்லைக் கொள்முதல் செய்

திருக்கலாமே! அதற்குக் குறைவாக, அறுவடைக் காலத்தில் 60 ரூபாய், 70 ரூபாய் ஒரு குவிண்டால் என்று நெல் விற்றது உண்மையா, இல்லையா? சிறு விவசாயிகளைப் பாதுகாக்க அரசு முன்வரவில்லை என்பது உண்மையா, இல்லையா? அதிலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டாமா? அறுவடைக் காலத்தில் சிறு விவசாயிகளால், விளைபொருள்களை வீடுகளில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. அந்த நேரத்தில் கொள்முதல் கொள்கை வேண்டாமென்று அரசு இருப்பது சரிதானா? அரசின் கையிலே உள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு, 85 ரூபாய்க்கு அன்றைக்கு ஏன் கொள்முதல் செய்யவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.. அடுத்த அறுவடையிலாவது குவிண்டால் நெல்லை 100 ரூபாய்க்குக் கொள்முதல் செய்ய முடிவெடுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 129 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்குச் செய்யும் சிபாரிசு ஒருபுறமிருக்கட்டும். அடுத்த அறுவடையின்போது, ஒரு குவிண்டால் நெல்லை 100 ரூபாய்க்குக் கொள்முதல் செய்வதன் மூலம், சிறு விவசாயிகளைப் பாதுகாக்க அரசு முன்வரவில்லை என்றால், வியாபாரிகளிடத்தில் சிறு விவசாயிகளை ஒப்படைத்ததாகிவிடும். வியாபாரிகளிடம் சிறு விவசாயிகளை ஒப்படைத்துவிட்டு, மத்திய அரசைக் கை காட்டுவதில் பிரயோசனமில்லை. இந்த நிலைமையில் தமிழக அரசு மூன்று லட்சம் டன் அரிசி இருப்பு இருக்கிறது என்று சொல்கிறது. இன்னும் ஒரு லட்சம் டன் நெல்லை வாங்கி, அரிசியாக்கி விற்பனை செய்ய ஏற்பாடு பண்ணினால், இன்டரஸ்ட் உள்பட 'எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜ்' கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாயாகிறது என்று சொல்லுகிறது. மூன்று லட்சம் டன் அரிசி கையிலே இருப்பு இருக்கும் போது, மேற்கொண்டு கொள்முதல் எப்படிச் செய்வது என்று அரசு சொல்லுகிறது. கொள்முதல் முழுவதையும் ஏகபோகமாக தமிழக அரசு மேற்கொண்டால், சில்லரை வியாபாரிகள் அரசிடம்தான் வாங்குவார்கள். அரசு கொள்முதல் செய்யாமல், வியாபாரிகள் கொள்முதல் செய்ய விட்டுவிட்டது. அவர்கள் கொள்முதல் செய்து, விற்கிறார்கள். அதனால் அரசிடம் அரிசி தேங்கிவிட்டது. வாங்க ஆளில்லை. ஒரு லட்சம் டன் அரிசி விற்பனை செய்ய இரண்டு கோடி ரூபாய், இன்டரஸ்ட் உள்பட 'எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜ்' கொடுக்க வேண்டுமென்று ஏன் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும்? கொள்முதல் முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது ரீடெயில் வியாபாரம் பண்ணுபவர்கள் அரசிடம்தான் வாங்குவார்கள். அப்போது கையிலே ஸ்டாக் இருக்கிறது, நிரவில்லை என்று சொல்லத் தேவையில்லை. எனவே கொள்முதல் செய்யும் பிரச்சினையை விட்டுவிட்டு, வேறு இடத்தில் கை காட்டினால் பிரயோசனமில்லை. கொள்முதல் செய்ய

அதிகாரம் இருக்கிறது. அதிகாரம் இருக்கும்போது, அதை அரசு செய்ய வேண்டும். 85 ரூபாய் வீதத்தில் கொள்முதல் செய்தால், ரிசர்வ் பாங்க் அதற்கான பணத்தைக் கொடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உணவு வழங்கு துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பு இன்னும் சில நாட்களில் வெளிருக்கிறது. அப்போது கொள்முதல்பற்றிய கருத்துக்களை உறுப்பினரவர்கள் தெளிவுபடச் சொன்னால் நல்லது.

திரு. ஆ. நல்லசிவன்: அமைச்சரவர்கள், மத்திய அரசு 129 ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டுமென்று எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் .....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கால அவகாசமில்லை என்பதால்தான் சொல்கிறேன். விவசாயத்தைப்பற்றிச் சொன்னால், விவசாய அமைச்சரவர்கள் நல்ல முறையில் அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்றால், அவர்கள் எப்படி விவசாயம் பண்ணுவார்கள்? விவசாயிகளைப் பாதுகாக்க அரசு எப்போது வரப்போகிறது?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இந்தக் கேள்வியை உணவு அமைச்சரவர்களிடம் கேட்டால், விவசாய அமைச்சரவர்களும் அதை மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள்.

திரு. ஆ. நல்லசிவன்: மந்திரி சபை என்பது கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி உள்ளதுதான். எனவே விவசாய அமைச்சரவர்கள் பதில் சொல்லுவார்களென்பது என்னுடைய அபிப்பிராயம். கொள்முதல் என்று வரும்போது, கோதுமைக்கு மத்திய அரசு 300 கோடி ரூபாய் சப்சிடியாகக் கொடுக்கிறது. அவர்கள் நிர்மானிக்கும் விலைக்குக் கொள்முதல் பண்ணி, ரிடெயில் ஷாப்ஸ் மூலமாக மக்களுக்குக் கொடுக்க, 300 கோடி ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள். ஆனால், அரிசிக்குக் கொடுக்கவில்லை. அரிசிப் பிரதேச அரசுகள் தகராறு செய்த பிறகு, 40 கோடி ரூபாய் மானியம் தரப்படுமென்று மத்திய அரசு இப்போது அறிவித்திருக்கிறது. அதுவும் காணாது. ஆகவே, அரிசிப் பிரதேசத்திலும் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கொடுக்க வேண்டுமென்றும், கன்ஸ்யூமர்சுக்குக் கட்டுப்படியாகும் விலைக்குக் கொடுக்க மானியத்தை மத்திய அரசு தர வேண்டுமென்றும் சொல்லி, மாநில அரசு போராட முன்வர வேண்டும். மந்திரிகள் அதற்காக உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். இது குறித்து மக்களிடையே பிரச்சாரம் செய்தால் போதும்.

மக்கள் மூலமாக இதை மத்திய அரசுக்குச் சொல்லலாம். அரிசிப் பிரதேசத்திற்கு தரும் 40 கோடி ரூபாய் மானியம் போதாது, அதிகமாக வேண்டுமென்று கேட்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இன்னொரு பிரச்சினை பருத்தியைப் பற்றியது. பருத்தியிலே நீண்ட இழைப் பருத்தி முக்கியமான, மதிப்புமிக்க பொருளாகும். ஒரு கிலோ 6 ரூபாய் என்றால், 3 கிலோ பருத்தியை வாங்கி, அதிலிருந்து ஒரு கிலோ பஞ்சு எடுப்பார்கள். இரண்டு கிலோ பருத்தி விதை இருக்கும். ஒரு கிலோ பஞ்சிலிருந்து மூன்று மீட்டர் துணி நெய்கிறார்கள். அது, மீட்டர் 20 ரூபாயிலிருந்து 40 ரூபாய்வரை விற்கிறது. குறைந்த விலையில் கணக்கிட்டால்கூட மூன்று மீட்டர் துணி 60 ரூபாயாகிறது. ஆனால், பருத்திக்கு 18 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இரண்டு கிலோ பருத்திக் கொட்டையின் விலையும் வானளாவி இருக்கிறது. பருத்தி விவசாயம் பண்ணும் விவசாயிகள், பருத்தி வியாபாரிகளாலும், பஞ்சாலை முதலாளிகளாலும் இவ்விதம் கொள்ளை அடிக்கப்படுகிறார்கள். எனவே, பருத்தி விவசாயிக்கு நியாய விலை கிடைக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். திருப்பூரிலே இருக்கக்கூடிய கோவாபரேடிவ் காட்டன் மார்க்கெடிங் பெடரேஷன் இருக்கிறதே, அதற்கு ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கட்டிடத்தை பருத்தி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தரகர்களுக்கு வாடகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். பருத்தி விவசாயம் செய்யும் சிறு விவசாயிகள் கூட்டுறவு முறையிலே சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, மகசூல் காலத்திலே பருத்தியை அங்கே சேமித்து வைத்து, அட்வான்சை மட்டும் வாங்கிக் கொண்டு, நல்ல விலை வரும்போது விற்கலாமென்றும் அதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பணம் வாங்கிக்கொள்ளலாமென்றும், அந்தப் பணத்தைக் கொண்டு விவசாயிகளுக்கு அட்வான்ஸ் கொடுக்கலாமென்றும் எண்ணி, பருத்தியைச் சேமித்து வைக்க அந்தக் கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால், பெரிய வியாபாரிகளுக்கு அந்தக் கட்டிடம் இப்போது வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. கொள்ளை அடிக்கும் தரகர்களுக்கு அந்தக் கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிக்காகக் கட்டப்பட்டு, சிறு விவசாயிகளின் பருத்தியை சீசனிலே கொண்டு வந்து அங்கே வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது விற்கவும் உபயோகிப்பதற்காகக் கட்டப்பட்ட கட்டிடம் அப்படி உபயோகப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கோடி ரூபாய் திருப்பூர் காட்டன் மார்க்கெட்டிங் பெடரேஷனிடம் இருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு, கட்டிடம் கட்டி, அதையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். தேவை

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 19

லைஸ்டு பாங்குகள் மூலமாகக் கடன் பெற்று, அதைக் கொண்டு பருத்திக்கு அட்வான்ஸ் கொடுக்கச் செய்து, நல்ல விலை வரும்போது அதை விற்று, விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கி

(பிற்பகல் 6-10)

றேன். சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை அவர்கள் உற்பத்தி செய்வது பெரும்பாலும் குடும்பச் சாப்பாட்டுக்குத்தான். விற்பனைக்காக அவர்கள் விளைபொருள்களை உற்பத்தி செய்வதில்லை. ஆனால், பெரும் நிலச்சுவாந்தார்கள் விளை பொருள்களை விற்பனை செய்வதற்காகவே உற்பத்தி செய்கிறார்கள். அதன்படி விற்கவும் செய்கிறார்கள். ஐந்து ஏக்கர்களுக்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவைகளை 50 பெர்சென்ட் கன்செஷனில் விற்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால் இன்றைக்கு அரசு கிராம மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களுக்கெல்லாம் நிறைய பணம் கொடுக்கிறது. அந்த வகையில் மாடு வாங்க பணம் கொடுக்கிறார்கள். ஆனால், மாடு வாங்க வேண்டுமென்றால், சொத்து உள்ளவர்கள் ஜாமீன் கொடுத்தாக வேண்டும். சொத்துள்ளவர்கள் ஜாமீன் கொடுத்தால்தான் மாடு கிடைக்கும். அப்படி சொத்து உள்ளவர்கள் ஜாமீன் கொடுத்த பிறகு, அந்த மாடு ஜாமீன் கொடுத்தவர்களுடைய வீட்டுக்குத்தான் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. மறுபடியும் மாட்டுக்குரியவன், ஜாமீன் கொடுத்தவனுக்குப் பணம் கொடுத்துத்தான் மாட்டைப் பிடித்துக் கொண்டு போகின்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தால் யார் பயன் பெற முடியும்? மாடு வாங்க பணம் கொடுப்பதாக இருந்தால், தயவுசெய்து சொந்த ஜாமீனிலேயே கொடுங்கள். நம்பிக் கொடுங்கள். அப்படிக் கொடுக்காவிட்டால் என்ன மேம்பாடு இருக்கிறது? ஏழை விவசாயிகள், விவசாயக் கூலிகள் இவர்களுக்கெல்லாம் யார் பணம் கொடுக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்களுக்கு சொத்து இருப்பவர்களைக் கொண்டு ஜாமீன் கொடுக்கச் சொல்லுகிறார்கள். யாருக்கு உண்மையிலேயே கடனுக்கு மாடு தேவையோ அவர்களுக்கு அது கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கம் இந்த ஏழையெளிய விவசாயிகளை நம்பி கடன் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கிராமப் பஞ்சாயத்துக்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 16] [திரு. ஆ. நல்லசிவன்]

அடுத்தபடியாக, காவிரி நீர் பிரச்சினை பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1924 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டில் முடிந்து விட்டது, காலாவதியாகிவிட்டது. 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் முடிவதற்கு முன்பு தமிழ்நாட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைத்ததோ அதே அளவு தண்ணீர் இப்பொழுது கிடைக்கிறதா என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்ததா? இதைப் பற்றிய உண்மை நிலை என்ன என்பதை அரசாங்கம் தெளிவாகச் சொல்ல வேண்டும். கருநாடக அரசு 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்னால் எவ்வளவு தண்ணீர் கொடுத்தது. இப்பொழுது எவ்வளவு தண்ணீர் கொடுக்கிறது? இதைப் பற்றிய விவரம் அரசிடம் இருக்கிறதா? 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவதற்கு முன்னால் கருநாடக அரசு எவ்வளவு தண்ணீர் கொடுத்ததோ அதை அப்படியே கொடுக்க வேண்டும் என்பதற்காக சுப்ரீம் கோர்ட்டை அணுகி இதற்குப் பரிகாரம் காண வேண்டும். பேச்சு வார்த்தை முடியும் வரை 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவதற்கு முன்பு கொடுக்கப்பட்ட அதே அளவு தண்ணீரைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு சுப்ரீம் கோர்ட்டுக்கு தமிழக அரசு முறையீடு செய்ய வேண்டும். இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டில்கூட இப்படித்தான் இருக்கிறது. ஒரு ஒப்பந்தம் காலாவதி ஆகிறது என்றால், இன்னொரு ஒப்பந்தம் வருகிற வரை முன்பு இருந்த பழைய ஒப்பந்தம் நீடிக்கும். இடைக்கால ஏற்பாட்டிற்காக பழைய ஒப்பந்தம் நீடிக்க வேண்டுமென்ற ஷரத்து அந்த ஆக்டில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1974 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் காலாவதியாகி விட்ட பிறகு, அதன் அடிப்படையில் 5 வருடங்களாகப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்பு கருநாடக அரசு கொடுத்து வந்த தண்ணீரைக் கொடுக்கத் தயாராக இல்லையென்றால், அதுபற்றித் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டை அணுகி நீதியைப் பெற முன்வர வேண்டும்.

பம்புசெட்டுகளைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டிலே 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட பம்புசெட்டுகள் இருக்கின்றன. இன்றைக்கு டீசல் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை விவசாயிகளுக்கு இருக்கிறது. டீசல் கோடைப் பயிருக்கு மிக மிகத் தேவை. மின்சாரம் இல்லாத நிலையில் டீசல் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. கண்ட்ரோல் விலை ஒரு லிட்டருக்கு 1 ரூபாய் 20 காசுதான். ஆனால், இந்த விலைக்கு ஒழுங்காக டீசல் கிடைக்கவில்லை. மார்க்கெட்டில் 3 ரூபாய்க்குத் தான் அது கிடைக்கிறது. ஒரு ஆயில் எஞ்சினுக்கு தினசரி 10 லிட்டர் டீசல்

தேவை. ஒரு பம்ப்செட்டுக்கு 10 லிட்டர் டீசல் விதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு, தமிழக அரசு மத்திய அரசை அணுகி பெற்று, பம்புசெட் வைத்துள்ள விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால் ஒரு விவசாயிக்கு ஒரு நாளைக்கு 18 ரூபாய் மிச்சம் ஆகும். இன்றையதினம் அவர்கள் 3 ரூபாய் கொடுத்து வெளி மார்க்கெட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. கடைசியாக ஒரே ஒரு வார்த்தையைக் கூறி முடித்து விடுகிறேன்.

(மாண்புமிகு துணைத் தலைவர் மணியடித்தார்.)

பாசனத்திற்குரிய மின்சாரத்தைப் பொறுத்தவரை, அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே இருக்கக்கூடிய தகராறை வெகு சுலபமாகத் தீர்க்க ஒரே ஒரு வழி இருக்கிறது. அதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். 3 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருக்கும் சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை, பவர் சார்ஜ், மற்றும் மீட்டர் வாடகை இரண்டையும் சேர்த்து தற்போது 5¾ ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதில் ¾ ரூபாய் குறைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே, இப்பொழுது 5¾ ரூபாய் என்று இருப்பதை 5 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல 5 ஹார்ஸ் பவர் மோட்டார்களை உபயோகிப்பவர்களுக்கு இப்பொழுது 7 ரூபாய் என்று இருக்கிறது. அதை 5 ரூபாயாகக் குறைக்க வேண்டும். 5 ஹார்ஸ் பவருக்கு அதிகமாக உபயோகிப் பவர்களுக்கு இப்பொழுது 9 ரூபாய் என்று இருக்கிறது. அதை 7 ரூபாயாகக் குறைக்க வேண்டும். இப்படிச் செய்தால், நிச்சயமாக விவசாயிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மிகுந்த திருப்தி ஏற்படும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

அடுத்தபடியாக, கிணற்றடி லைட்களுக்கு 120 வோல்ட் என்ற அடிப் படையில் யூனிட் ஒன்றுக்கு 35 காசு வசூலிக்கப்படுகிறது. ஆனால், அதே மின்சாரத்தை தண்ணீர் ஓட்ட பயன்படுத்தினால், யூனிட் ஒன்றுக்கு 12 காசு தான் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு ஒரே இடத்தில் இரண்டு விதமாக கட்டணம் வசூலிப்பது நியாயமில்லை. அது அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியிருக்கிறது. கிணற்றடி லைட்டுக்குப் பயன்படுத்துகிற மின்சாரத் திற்கும் யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்ற விதத்தில் வசூலிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள்.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பில் போட வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை பில் போட்டால், அவர்கள் சுலபமாகக் கட்ட முடியும். அவர்களுக் குரிய பில்லை மூன்று மாதத்திற்கு ஒரு முறை அபராதமின்றி கட்டும்படி ஏற்பாட்டினைச் செய்யலாம்.

ஏரி குளங்களைத் தூர் எடுப்பதைப் பொறுத்தவரை, மத்திய அரசு "Food for work" என்கின்ற ஒரு புரோகிராமை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் குளங் களையும் தூர் எடுக்க வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தினை ஓரளவு தீர்க்க வேண்டும். தூர் எடுப்பதற்கு ஏழையெளிய மக்களை, விவசாயக் கூலிகளைப் பயன்படுத்தி "புட் பார் ஒர்க்" என்கின்ற இந்த புரோகிராமை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் 5 முதல் 6 இலட்சம் ஏக்கர் வரை பயிர் தண்ணீரில் மூழ்குகிறது. மகசூல் காலத்திலும் மூழ்குகிறது, மகசூல் அல்லாத காலத்திலும் மூழ்குகிறது. அரசிடம் வடிகால் திட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது சிதம்பர இரகசியமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் வெளி யிடப்பட வேண்டும். அதைச் சரியாக அமுல்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையினை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நான் சொன்ன அனைத்துக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. ப. மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வேளாண்மை பற்றிய கொள்கைக் குறிப்பு தீர்மானிக்கப்பட்ட கொள்கை தான் என்றாலும், இந்தக் கொள்கையில் ஒரு மாறுதல் அவசியம் தேவை. என்ன தான் சொன்னாலும், அரசு அதைச் செய்யாது என்பதை நான் உணர்கிறேன். இருப்பினும் வரக்கூடிய காலத்திலாவது இந்த மாறுதலை அரசு செய்ய வேண்டும், பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் விவசாயத் துறையில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய முன்னேற்றம் பற்றி கொள்கைக் குறிப்பில் தெரிவித்திருந்தாலும், நம்முடைய விவசாயப் பொருளாதாரம் கடந்த 15 ஆண்டுகளாக நன்றாக இல்லை. குறிப்பாக உணவுப் பொருள் உற்பத்தியில், நெல் உற்பத்தியில் அல்லது புஞ்சை தானியங்கள் உற்பத்தியில், அவற்றை உற்பத்தி செய்ய ஆகக் கூடிய செலவு மற்றும் விற்கும்போது அதற்குள்ள விலை போன்றவைகளில் உள்ள முரண்பாடுகளின் காரணமாக விவசாயிகள் மிகுந்த கடன் சுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதன் காரணமாக விவசாய உற்பத்தியில் குறிப் பாக உணவு உற்பத்தியில் உற்சாகமும் ஊக்கமும் குறைந்து வருகிறது. அரிசி உற்பத்தி 64 இலட்சம் டன்னிலிருந்து 65 இலட்சம் டன்னிற்கு அதிகரிக்கப்படும் என்றும், 1 இலட்சம் டன் உற்பத்தித் திறனை அதிகப்

(திரு. ப. மாணிக்கம்) [1979 ஏப்ரல் 16

படுத்தும் அதே சமயம் தற்பொழுது நெல் சாகுபடியாகும் 27 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலிருந்து 26.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்கு அதன் அளவு குறைக்கப்பட்டு அதன் மூலம் உபரியாகும் 50,000 ஹெக்டேர் பரப்பு, வேர்க்கடலை, பருத்தி போன்றவைகளின் சாகுபடிக்கு ஒதுக்கப்படும் என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய சிறு விவசாயிகளிடையே, குறிப்பாக நெல் உற்பத்தி செய்யக் கூடியவர்களிடையே, அதுவும் தஞ்சை, நெல்லை, மதுரை போன்ற மாவட்டங் களில் பாசன வசதியுள்ள இடங்களில் அல்லது கிணற்றடி நீர் போன்ற பாசன வசதியுள்ள இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளிடையே நெல் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அக்கறை குறைந்துகொண்டே வருகிறது. **இதன்** விளைவாக எதிர்காலத்தில் நிச்சயம் தமிழ் நாட்டினுடைய **உணவு** நிலைமை பெருமளவுக்கு பாதிக்கப்படும். அக்ரிகல்சுரல் இன்புட்ஸ், அதாவது உற்பத்திக்குத் தேவைப்படுகின்ற உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உட்பட அனைத்துச் செலவுகளையும் கணக்கிட்டுப் பார்த்து, உற்பத்திச் செலவையும் உற்பத்திப் பொருள்களை விற்பதன் மூலம் வருகின்ற வருமானத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால், இன்றையதினம் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அரசு அவசியம் விவசாயப் பொருளாதாரம் பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டும். சாதாரண விவசாயி களைப் பொறுத்தவரை, அதாவது உதாரணத்திற்கு ½ ஏக்கர் ஒரு விவசாயி நிலம் வைத்திருக்கிறார் என்றால், அவர் செய்த உற்பத்திச் செலவையும் அதனால் அவருக்கு வந்த வருமானத்தையும் சொல்லிய நேரத்திலேயே உட னடியாகக் கணக்கிட்டுச் சொல்லுவார். விலையைப் பொறுத்தவரை, அகில இந்திய ரீதியில்தான் விலை நிர்மாணிக்கப்படுகிறது. ஒரு மாண்புமிகு அமைச்சர் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். உண்ணாவிரதம் இருந்தாலும் சரி அல்லது சிறைக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, அமைச்சர் உண்ணாவிரதம் இருப்பதாகச் சொல்வதும் அல்லது சிறைக்குச் செல்வதாகச் சொல்வதும் அதுவும் பொறுப்பிலிருந்துகொண்டே சொல்வதும் சரிதானா? விசேஷச் சூழ்நிலைகளில்தான் அது சாத்தியமாகலாம் என்பது என்னுடைய கருத்து.

(பிற்பகல் 6-20)

இதிலிருந்து நிலைமை எவ்வளவு நெருக்கடியாக இருக்கிறது என்று நமக்குப் புரிகிறது. நெல்லுக்கு விலை கூடுதல் என்று வரும்போது, நம்முடைய மாநிலப் பொருளாதாரத்தை அது பெரிய அளவுக்கு பாதிக்காது. **உணவு** உற்பத்தியையும் அது பாதிக்காது. கூடுதல் விலை வழங்குவதற்கு நம்மு

1979 ஏப்ரல் 16] [திரு. ப. மாணிக்கம்]

டைய மாநிலத்திலே விவசாய விளை பொருள்களுக்கு என்று தனியாக ஒரு கமிஷன் போட்டு நிர்ணயிக்கலாம், அல்லது விவசாயப் பல்கலைக் கழகம் அந்தப் பொறுப்பை ஏற்கலாம், அல்லது மாநிலத் திட்டக் கமிஷன்கூட அந்தப் பொறுப்பை ஏற்கலாம் என்று ஒரு செய்தியை நான் பார்த்தேன். உற்பத்திச் செலவுக்கும், விற்பனை விலைக்கும் இடையில் உள்ள அந்தப் பெரிய ஏற்றத் தாழ்வு, முரண்பாடு நம்முடைய விவசாயத்தைப் பெரிதும் பாதித்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் நான் இதைச் சொல்கிறேன். நான் இதைச் சொல்லும்போது, கட்சி உணர்வின் அடிப்படையில் சொல்வதாக யாரும் கருதக்கூடாது. நெல்லுக்குத் தக்க விலை கிடைக்காமையால், திருச்சி மாவட்டத்திலே நெல் உற்பத்திக்குப் பதிலாக வாழைக்குச் செல்லக்கூடிய ஒரு மனோபாவம் இன்றைய தினம் இருக்கிறது. நெல்லை மாவட்டத்திலே கூட இந்த மனோபாவம் இன்றைக்கு வளர ஆரம்பித்துவிட்டது. நெல்லிலிருந்து வாழைக்குப் போவது என்று சொன்னால், அதிலே ஆதாயம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏற் படுவது நம்முடைய மாநிலத்திற்கு நல்லதல்ல. வருங்காலத்தில் உணவு உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை இதனால் உருவாகும். ஆகவே, இந்தப் பிரச்சினையை அரசு ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே நெற்பயிர் முதல் பயிர், இரண் டாவது பயிர் பருத்தி. விவசாயத்திலே நாம் இன்றையதினம் நவீன முறை யைக் கொண்டு வருவது உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்றாலும், நம்மு டைய விவசாயக் கொள்கையிலே நாம் மாற்றம் செய்ய வேண்டும். ஆகவே, நெல்லுக்கு அதிக விலை கொடுக்க தக்க நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு வேண்டிய இன்புட்ஸ்—இடுபொருட்கள் இருக் கிறதே அவைகளுக்கு ஆகும் செலவு, மற்ற பெஸ்ட்டிசைட்ஸ் தேவைகள் எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக்கொண்டு உற்பத்திச் செலவுக்குத் தக்கபடி நெல்லுக்கு விலை கொடுக்க தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் நாம் மத்திய அரசுடன் போராட வேண்டும். இது சம்பந்தமாக மத்திய அரசுடன் நடத்தும் போராட்டம் நாட்டின் ஒற்று மைக்கு ஊறு விளைவிக்காது. தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகள் காப் பாற்றப்பட வேண்டும். நெல்லுக்கு என்று மட்டுமல்ல, பருத்திக்கும் மற்றும் கரும்புக்கும் அதிக விலை வேண்டும் என்று இன்றையதினம் போராட்டம் நடத்துகிறார்கள். தமிழ்நாடு மட்டுமல்ல, மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம் என்று வித்தியாசம் இல்லாமல் இன்றையதினம் விவசாயிகள் போராடுகிறார்கள். எனவே, இது நாடு தழுவிய ஒரு பொதுப் பிரச்சினை யாகிவிட்டது. நம்முடைய மாநில அரசு இந்தப் பிரச்சினைக்காகப்

போராட வேண்டும். இதில் சட்டமன்ற மேலவையும், பேரவையும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத் திட்டக் கமிஷன், மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் இரண்டும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் தக்க முடிவெடுக்க வேண்டும்.

மானாவாரி பயிர்பற்றிய திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மழை நீர் இல்லாமல் இருந்தாலும், பனியைக் கொண்டு பயிர் செய்யக்கூடிய பல்விதமான பயிர்கள் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன. 'ப்ளாக்ஸ்' என்ற ஒரு வகை பயிர் இருக்கிறது. அதனுடைய தமிழ் பெயர் எனக்குத் தெரியாது. ஐரோப்பிய நாடுகளிலே இந்த வகைப் பயிர் அதிகமாக இருக்கிறது. அது பல்வகையாக உபயோகப்படுத்தப்படுகிறது. குறிப்பாக 'க்ரீஸ்'-க்கு இது உபயோகப்படுகிறது மற்றொன்று, பெயின்ட்டுக்குத் தேவையான எண்ணெய்க்குக் கூட இதைப் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய மாநிலத்திலேயும், மேற்குப் பகுதிகளிலே குறிப்பாக தர்மபுரி சேலம், கோவை போன்ற பனி மிகுந்த சில பகுதிகளிலே இப்படிப்பட்ட பயிர்களை நாம் உற்பத்தி செய்தால், நமக்கு வருமானம் நிறைய கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இதற்குக் குறைந்த நீர்தான் தேவைப்படுகிறது. இதனுடைய உபயோகம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதனுடைய தேவையைக் கணக்கில் எடுத்து இந்த விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ் நாட்டில் உள்ள மக்களின் பழக்க வழக்கங்களைப் பார்த்தால், பயறு வகைகளை நீண்டகாலமாக அதிக அளவில் பயன்படுத்தும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆனால், இன்றையதினம் பற்றாக்குறை காரணமாக அந்தப் பழக்கம் குறைந்திருக்கிறது. ஆகவே, பயறு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு நம்மிடம் உள்ள கொள்கைகளையும் திட்டங்களையும் இன்னும் தேவைக்கேற்ப தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் புரதச் சத்துக்கள் பயறு வகைகளிலேதான் நிறைய இருக்கின்றன. தமிழ் நாட்டிலே கடந்த காலத்திலே, மக்கள் தொகை குறைவாக இருந்த காலத்திலே சாதாரண ஏழைக் குடும்பத்திலும் கூட உளுந்து, கடலை, துவரை எல்லாம் பயன்படுத்திய நிலைமை இருந்தது. அதன் காரணமாக சிறிய பிள்ளைகளுக்குப் புரதச் சத்து அதிகமாகக் கிடைத்தது. ஆனால் இன்றைய நிலைமை அப்படி இல்லை. இப்போது புரதச் சத்துக் குறைவினால் தமிழ்நாட்டு மக்களில் இந்தத் தலைமுறையினர் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறையில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இதிலே சில நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட, வளரும் தமிழகத்தினுடைய மக்கள்

தொகைக்கேற்ப போதுமானதாக அந்தத் திட்டங்கள் அமையவில்லை. ஆகவே, வேண்டிய கவனம் செலுத்தி பயறு வகைகளை அதிகமாகப் பழக்கத்திற்குக் கொண்டு வரத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று, ஏற்கெனவே நாம் கையாண்டு வரும் வேளாண்மைக் கொள்கை காரணமாக விவசாயிகள் இன்றைக்குக் கடனாளியாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் இன்றையதினம் ஊக்கம் பெற வேண்டுமென்றால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் கடன் தொல்லையில் மாறுதல் ஏற்பட வேண்டும். விவசாயிகளுக்கு இருக்கும் கடன் சுமையை நாம் குறைக்க வேண்டும், அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயக் குறிப்புகளைப் பற்றி நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கின்ற சில அறிவிப்புகள் சம்பந்தமாக நான் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு அதிகமான விலை, நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்பதிலே எல்லாத் தரப்பினருக்கும் ஒரே கருத்து இருக்கிறது. அது நியாயமான கருத்துங்கூட. மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம் என்று தான் இப்போது உள்ள குறிப்பிலேயும் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய கஷ்டத்தை நாங்கள் நேரடியாகப் பார்க்கிறபோது, சாதாரணமாக 28 ஆயிரம் ரூபாய் என்று இருந்த டிராக்டர் இப்போது 60 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துவிட்டது. 3,000 ரூபாய்க்கு வாங்கிய பம்புசெட்டின் விலை இப்போது 6 ஆயிரம் ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது. ஒரு மீட்டர் பைப் 45 ரூபாய் என்று இருந்தது 120 ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது. ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிய மாடு இன்றையதினம் 3 ஆயிரம் ரூபாய்க்குக்கூட கிடைக்கவில்லை. விவசாயத்திற்குத் தேவைப்படும் இந்த அடிப்படைச் செலவினங்களைப் பார்க்கும்போது வரப்பு வெட்டுதல், விதைத்தல், உழுதல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல் இவைகளுக்கு அதிகச் செலவாகிறது. இவ்வாறு அதிகச் செலவு ஆகிவிடுவதால் விவசாயிகளுக்கு உற்சாகம் இல்லாமல் இருக்கக்கூடாதே என்பதற்காகத்தான், அவர்களுடைய உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது—மத்திய அரசு உயர்த்திக் கொடுக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருந்த போதுகூட—நாங்கள் வண்டிக்கூலி என்ற பெயரில் 15 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு அதிகமாகக் கொடுத்தோம், உற்பத்தியாகும் நெல்லைக் கொள்முதல்

செய்யும் பொறுப்பை அரசாங்கமே அன்றையதினம் ஏற்றது. அப்படி விவசாயிகளை கண்ணும் கருத்துமாகக் கவனித்து, நெல்லுக்கு அவர்களுக்குத் தேவையான விலையுயர்வை அளித்து வந்தோம். அந்த வகையில் நடவடிக்கை எடுத்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்றும், சிறிய விவசாயிகளுக்கு 12 காசு என்றும் ஒரு பிரிவு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 10 காசு என்று மின்சாரக் கட்டணம் போட்ட நேரத்திலே, பெரிய விவசாயிகளுக்கு 1 காசு உயர்ந்து விட்டது என்று ஒரு பிரச்சினை வந்தபோது, அப்படி விவசாயிகளை அழைத்து அன்றைய முதலமைச்சர் என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து, கிணறுகளின் ஆழத்தைப் பொறுத்து கட்டணங்களை வசூலிக்கலாம் என்று முடிவெடுத்தார்கள். ஆழமான கிணறுகளாக இருந்தால், அவைகளுக்குக் கொஞ்சம் சலுகைகளும், தண்ணீர் மேல் நிலையிலேயே இருக்கின்ற கிணறு களுக்கு ஒரு முறையும் என்ற வகையில் இரு சாராருக்கும் பாதகம் இல்லாத

(பிற்பகல் 6-30)

வகையில் ஒரு சுமுகமான முடிவெடுத்தார்கள். பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பிரித்து, அவர்கள் 12 பைசாவும் 14 பைசாவும் கட்டணம் செலுத்த வேண்டும் என்று சொல்வதற்குப் பதில் விவசாயிகள் பயன் படுத்தும் கிணறுகளின் ஆழத்தைப் பொறுத்து, அவர்கள் எவ்வளவு கஷ்டப் பட்டு தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள் என்பதைப் பொறுத்து, கட்டணம் விதிக்கும் முறையை மேற்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய கருத் தாகும்.

தமிழகத்தில் 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலமிருக்கிறது என்று கணக் கெடுத்து அதைச் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற திட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொண்டது. அதன் அடிப்படையில் நெய்வேலி, வெள்ளாளவிடுதி, திருப்பிடங்கி, தியாகராஜபுரம், சக்கரமங்கலம், காளூர்குடி, முசரவாக்கம், [illegible]நாராயணநல்லூர், செல்லூர் ஆகிய பகுதி களில் ஏறத்தாழ 2,183 ஹெக்டேர் நிலங்களைத் தேர்ந்தெடுத்து 1,403 ஹெக் டேர் நிலத்தைப் பண்படுத்தி, 1,100 ஹெக்டேர் நிலத்தை பயிர் விளைச்சலின் கீழ் கொண்டு வந்து, 80 குழாய்க் கிணறுகளைத் தோண்டி, அதில் 71 குழாய்க் கிணறுகளுக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டு, விவசாய உற்பத்தியை அதிகரித்ததைப்போல், மீதியிருக்கிற நிலங்களையும் திட்டமிட்டு சாகுபடிக்குக் கொண்டு வந்தால், அதன் மூலமாக நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம்

கொடுப்பது மட்டுமல்ல, உணவு உற்பத்தியையும் அதிகரிக்க முடியும், தமிழ கத்தில் எங்கே பார்த்தாலும் பசுமையைக் காண முடியும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

கம்பம்—கூடலூர் பகுதியில் 500 விவசாயிகள் காட்டு வெள்ளாமை என்று பயிர் செய்து, கடலை போன்ற தானியங்களைச் சாகுபடி செய்து வந்தார் கள். தமிழ்நாட்டில் அவசரகால நிலைமை இருந்தபோது, அவர்களிடமிருந்து அந்த நிலங்கள் பறிக்கப்பட்டன. அந்தக் காடுகள் தற்போது தரிசாகப் போடப்பட்டு, அவைகளில் பயிர் செய்து கொண்டிருந்த விவசாயிகள் கஷ்டப் படுகிற நிலைமை இருந்து வருகிறது. எனவே கம்பம்—கூடலூர் பகுதியில் அந்த விவசாயிகள் உழுது பயிரிட்டு வந்த நிலங்களை மீண்டும் அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதன் மூலமாக, பிழைப்பில்லாமல் இருக்கிற அந்த விவசாயிகளுக்கு ஒரு நல்ல வழி காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில் சில அணைத் திட்டங் களைப்பற்றிய விவரங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. ஒருவேளை நிதி நிலை காரணமாக விடுபட்டுப் போயிருக்கலாமென்று கருதுகிறேன். என்றாலும் அவைகளை மீண்டும் பரிசீலனை செய்து, அத்திட்டங்களை நிறை வேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் அவைகளைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இவை களைச் செயல்படுத்த முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் களக்காடு பகுதியில் பச்சையாறு திட்டம்பற்றிக் குறிப்பிடும்போது, அது பரிசீலனையில் இருக் கிறது என்று எனக்குக் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதைப்பற்றி நான் பேசியதற்கு இந்த விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஓராண்டு காலத்திற்குப் பிறகும் இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்ற நிலையில் தான் இருக்கிறது. பாசனத் திட்டங்களில் பச்சையாறு திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும், ஆனால் கொள்கைக் குறிப்பில் அதுபற்றிய குறிப்பு எதுவுமில்லை.

அதைப் போலவே மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தின் நிலைமை பெரிய பாலைவனத்தைப்போல் இராஜஸ்தானைப்போல் இருக்கிறது. இராம நாதபுரம் என்றாலே, அது பஞ்சப் பிரதேசம் என்றுதான் எல்லோரும் கருது கிறார்கள். அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் அழகர் அணைத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று நான் கோரி வந்தேன். அது ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர, அந்தத் திட்டமும் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

[திரு. ஆ. திராவிடமணி] [1979 ஏப்ரல் 16

தருமபுரி மாவட்டத்தில் இரண்டு அணைத் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் தொட்டஹள்ளி அணை என்ற ஒரு அணை மிக அத்தியாவசியமான அணை, மிகத் தேவையான அணை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அங்கே சுமார் 5,000 ஏக்கருக்கு இந்தத் திட்டத்தின் மூலம் சாகுபடிக்கான வாய்ப்புக் கிடைக்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. 2,000 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும் அளவுக்கு உதவி செய்யக்கூடிய திட்டம் அந்தத் திட்டம். ஏற்கெனவே தண்ணீர் 3, 4 அடியில் கிடைக்கிறது. சுற்றிலும் மலைப் பகுதி. மழை பெய்தால் அங்கே நீருற்று நிரம்பி அந்தத் தண்ணீர் கடலில் வீணாகப் போய் கலந்துகொண்டிருக்கிறது. ஆகவே அணை கட்டி அதை முறைப்படி தேக்கி, விவசாயிகளுக்கு உதவி செய்திடவேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கோரப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தின் கடைக்கோடியில் இருக்கும் அஞ்செட்டி என்ற இடத்தில் அந்த அணையைக் கட்ட வேண்டும் என்று அந்த வட்டார மக்கள் கோரி வருகிறார்கள். அந்தத் திட்டத்தையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு செயல்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு அணைத் திட்டம் என்று ஒன்று உள்ளது. இதைப்பற்றி நான் சென்ற ஆண்டே கேட்டிருந்தேன். அது பரிசீலிக்கப்பட்டு வருவதாக இந்த ஆண்டு எனக்கு அரசாங்கத்திலிருந்து பதில் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு கொடுமுடி ஆறு அணைத் திட்டத்திற்காக வந்திருந்த சாமான்கள் அனைத்தும் அகற்றப்பட்டதாக அங்கேயிருக்கிற மக்கள் தெரிவிக்கிறார்கள். அங்கே அணை கட்டப்போவதில்லை என்று சொல்லப்பட்டதாக அந்த வட்டார மக்கள் பெரிதும் கவலையுற்று இருக்கிறார்கள். ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில் கொடுமுடியாறு அணைத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு அது ஒருவகையில் ஆறுதல் அளித்தாலும், அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு உடனடியாக அனுமதி கொடுத்து நம்பிக்கை இழந்திருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே செங்கோட்டை வட்டத்தில் அழகியநயினார் அணைத் திட்டம் பற்றி நான் முன்பே பேசியிருக்கிறேன். நீண்ட காலமாகக் கோரப்பட்டு வருகிற திட்டமாகும் அது. பேரறிஞர் அண்ணா அவர்கள் செங்கோட்டை வட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது எலத்தூர் என்ற இடத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, இலாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல்

1979 ஏப்ரல் 16] [திரு. ஆ. திராவிடமணி]

அரசாங்கம் இதனை நிறைவேற்றித் தரும் என்ற உறுதியை 1968 ஆம் ஆண்டில் அளித்தார்கள். அந்த வட்டார மக்களுக்குப் பெரிதும் தேவையான இந்த அழகியநயினார் அணைத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஆணை செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்குள் தங்கள் பேச்சினை முடித்துக் கொள்ள வேண்டுமென்று முன்பே கேட்டுக் கொண்டிருக்கிறேன். உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் கையில் வைத்திருக்கிற குறிப்புகளைப் பார்த்தால், இன்னும் ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்வார்போல் இருக்கிறது. அவர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : குறிப்புகள் பல இருந்தாலும் சிலவற்றைப்பற்றி மட்டுமே நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

அருப்புக்கோட்டைப் பகுதியில் குடிதண்ணீர் பிரச்சினைக்காக விவசாயிகள் பாதிக்கப்படும்படியான நிலைமை உருவாக்கியிருக்கிறார்கள். குடிதண்ணீர் வழங்குவதற்காகத் திட்டமிட்டு, அதற்காக ராட்சதக் குழாய்களைப் பதித்து, ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டி தண்ணீர் எடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதைச் செயல்படுத்தும் விதத்தில்தான் நான் மாறுபடுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, திருநெல்வேலியிலிருந்து கோவில்பட்டிக்கு சிவலப்பேரி வழியாக 32 மைல் தொலைவிற்குக் குழாய்கள் அமைத்து குடிதண்ணீர் வழங்கியிருக்கிறோம். கோவில்பட்டிக்குத் தண்ணீர் உப்பு என்ற காரணத்தால், அங்கிருந்து எட்டையபுரத்திற்கும், அங்கிருந்து புதூருக்கும் தண்ணீர் வழங்கினோம். அதைப்போலவே வல்லநாடு பகுதியில் தாமிரபரணி நதியிலிருந்து தண்ணீர் எடுத்து சாத்தான்குளத்துக்குக் குடி தண்ணீர் வழங்கப்பட்டது. அதைப் போலவே வைகை நதியிலிருந்து தண்ணீர் எடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு அரசாங்கம் வழங்கி இருக்கலாம். பாசனத்திற்குத் தேவைப்படும் தண்ணீரில் கை வைக்காமல் இதைச் செய்திருக்க முடியும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவில்பட்டிக்கு வழங்கிய தண்ணீர் தற்போது போதவில்லை என்ற காரணத்தால், மேலும் ஒரு பெரிய

திட்டம் உருவாக்கப்பட்டு, அதற்கான பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி திட்டமிட்ட போது, கோவில்பட்டியில் 10 தொழிற்சாலைகள்தான் செயல்பட்டு வந்தன. இப்போது 40 தொழிற்சாலைகளாகப் பெருகியிருக்கின்றன. அந்த அளவுக்கு அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அவர்களின் தண்ணீர்த் தேவையும் பெருகியிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தொழிற்சாலைகள் பெருகியிருக்கின்றனவா ? தொழிலாளர்கள் பெருகியிருக்கிறார்களா ?

திரு. ஆ. திராவிடமணி : தொழிற்சாலைகள் பெருகி, அதில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும்போது, அவர்களின் தண்ணீர்த் தேவையும் அதிகமாவது ஒரு சாதாரண விஷயமாகும்.

அடுத்து, புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 100

(பிற்பகல் 6-40)

ரூபாய் உதவித் தொகை என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நூறு ரூபாய் என்பது மிகக் குறைவு. அமைச்சர் அவர்கள் அதை 250 ரூபாயாக உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மணல் மேடிட்ட நிலங்களைச் சரி செய்ய விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவேதான் அவர்களுக்கு அதிகமான தொகை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மணல் மேடிட்ட நிலங்களைச் சீர் செய்ய 100 ரூபாய் மட்டும் கொடுக்கப்படுவதில்லை. ஆயிரம் ரூபாய் வரையில் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. திராவிடமணி : வாழை, கரும்பு போன்ற பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக சிறு விவசாயிகளுக்கு ஊக்க உதவித் தொகை என்ற வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 100 மானியத் தொகை வழங்கப்படுகிறது. ஆகவே அந்த மானியத் தொகையை ரூபாய் 250 ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டு, விட்டுப்போனவைகளையெல்லாம், நான் எடுத்துக்காட்டியிருப்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பை வரவேற்று, அதிலே அவர் ஆர்வம் காட்டுகிற முறையையும், தொடர்ந்து இந்தத் துறையை பயனுள்ளதாக ஆக்குவதற்கு அவர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சியையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அந்தத் துறை கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைத் தனியாகக் கவனித்து கொள்கையளவிலே மாற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறதென்பதை உணர்வார்கள் என்று கருதுகிறேன். இந்தக் குறிப்புகளிலே எனக்குப் பெருத்த மகிழ்ச்சியை அளித்த குறிப்பு வேளாண்மைப் பண்ணைக் கழகத்தைப் பற்றியதாகும். அரசே ஏற்று நடத்துகிற விவசாயப் பண்ணை துவக்க நாள் முதல் இன்று வரையில் இலாபத்திலே நடைபெறவில்லை, பல இலட்ச ரூபாய் நட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பயிரிடுவதற்காக பல நூறு ஏக்கர்களை வைத்துக்கொண்டு அதை நவீன முறையிலே மாற்றியமைத்து பயிரிடுகிற அரசுக்கு அந்தப் பண்ணையின் மூலமாக ஏற்பட்டிருக்கிற நட்டம் 1974 ஆம் ஆண்டிலிருந்து 31—3—1976 முடிய ரூபாய் 9,60,000 ; 1—4—1976 முதல் 30—6—1977 வரை ரூபாய் 25,12,000 ; 1977-78 ஆம் ஆண்டில் 31—12—1978 வரையில் ரூபாய் 39 இலட்சம். சாதாரண விவசாயிகளைப் போல அவர்களுக்கு எந்தவிதத் தட்டுப்பாடும் கிடையாது. உரங்களைக் கள்ள மார்க்கட்டிலே வாங்க வேண்டிய அவசியமும் இல்லை. தண்ணீர் பிரச்சினையும் இல்லை, ஏனென்றால் பரிசோதனை செய்து தண்ணீர் கிடைக்குமென்ற நிலை இருந்துதான் விவசாயத்தைத் துவங்கியிருப்பார்கள். சகல வசதிகளும் இருக்கின்றன. பூச்சி மருந்தைப் பயன்படுத்துவது எப்படி என்று சொல்லுவதற்கு அரசாங்க அதிகாரிகளும், துறை நிபுணர்களும் இருக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு, அரசு நடத்துகிற விவசாயப் பண்ணையிலே இத்தனை இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகிறதென்றால், தமிழகத்திலே இந்த வசதிகளெல்லாம் இல்லாமல் விவசாயிகள் எந்த அளவுக்கு நட்டத்திலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த நாடும் உணர வேண்டும். அப்படி உணர்கிற வகையிலேதான் இந்தக் குறிப்பு வந்திருக்கிறது என்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். நட்டம் ஏற்பட்டதற்கான காரணங்கள் என்னவென்றும் சொல்லியிருக்கிறார்கள். துறையைப் பொறுத்த வரையில், நட்டத்திற்கான காரணத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது என்ற அளவில் காரணத்தைச் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை. இயற்கை சக்திகளின் நிலைமையின்மையின் காரணமாக பயிர் செலவுகள் அதிகமாகியிருக்கின்றன, வேலையை வாங்குவதைப் பொறுத்த வரையில்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 ஏப்ரல் 16

இலங்கை அகதி என்றோ, தமிழகத் தொழிலாளி என்றோ பெரிய அளவில் வேறுபாடு இருக்க முடியாது. வேலையை வாங்குவதும், கொடுப்பதும் அவ்வளவு சிரமமானதல்ல. அதிலே அதிகச் சங்கடங்கள் இருக்க முடியாது. அதிலும் அரசுத் துறையைப் பொறுத்த அளவில் நவீனமுறையில் பயிரிடுகிறார்கள் (மாடர்ன் ஃபார்மிங்). ஆகவே இதுவல்ல காரணம். உண்மையான காரணம், விவசாயம் என்பது நட்டத்திலே நடைபெறுகிற தொழிலாக மாறிவிட்டது. அரசே ஏற்றுக் கொண்டிருப்பதால், இப்படி ஒரு காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் விவசாயிகளின் உண்மையான நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இப்படிப் படம் பிடித்துக் காட்டியதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே இவைகளையெல்லாம் மனதிலே கொண்டு விவசாயிகளின் நலனைக் காக்க அரசு முன்வர வேண்டும். உண்மையான குறைகளைப் பரிசீலிக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, டிராக்டர்களைப் பற்றித் தகவல்கள் கொடுத்திருக்கிறார்கள். 2,696 டிராக்டர்களை விவசாயிகளுக்கு இது வரையில் விற்பனை செய்திருக்கிறார்கள் என்றும் அதற்காக ரூபாய் 550 இலட்சம் பணம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள் என்றும், 350 டிராக்டர்களைத் தவணை முறையில் கொடுத்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட மூவாயிரம் டிராக்டர்கள் விவசாயிகளுக்காக விற்பனையாகியிருக்கின்றன. இன்றைக்கு மூவாயிரம் டிராக்டர்கள் விவசாயிகளிடம் இருக்கிறதா, அவற்றை விவசாயிகளால் பயன்படுத்த முடிகிறதா என்று பார்த்தால், இல்லை. விவசாயச் செலவுகளுக்காகக் கட்டுபடியாகாது என்ற நிலையில் பல விவசாயிகள் டிராக்டர்களை விற்றுவிட்டார்கள். பலர் அதை விற்று கடனைக் கொடுத்து விட்டார்கள். டிராக்டரை வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய முடியாது என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒரு பக்கத்திலே வேகவேகமாக இயந்திரங்களைக் கொண்டு, மேல்நாட்டில் இருப்பதைப் போல நாமும் நவீன முறையில் விவசாயம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இன்னொரு பக்கம் இப்படி நவீன சாதனங்களை இழந்து ஓட்டாண்டிகளாகி சாதாரண விவசாயத் தொழிலாளியாக மாறிக் கொண்டிருக்கிற நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

பூச்சி மருந்துகளைப்பற்றியும் குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். புதிய இரக பூச்சி மருந்துகள் பற்றியும் இதற்காக விரிவாகச் செய்துள்ள ஏற்பாடுகளைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், இன்றைக்கு பூச்சி மருந்தை நாற்று விடுவதற்கு முன்பு இருந்து

1979 ஏப்ரல் 16] [திரு. க. இராமமூர்த்தி]

நெல்லை அறுவடை செய்யும் சில நாட்களுக்கு முன்பு வரை உபயோகப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறார்கள். வீரிய வித்துக்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த வித்துக்கள் கொடுத்திருக்கிற பலன்களைக் காட்டிலும் விவசாயிகளுக்குச் சிரமங்கள்தான் அதிகமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். புதிய விதைகளுக்கு பத்துப் பன்னிரெண்டு முறை பூச்சி மருந்துகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுவதால், சற்று ஏமாந்தால் அந்தப் பூச்சிகள் பயிரையே அழித்துவிடுகின்ற நிலை உருவாகிறது. புதிய வகை விதைகளை இரண்டு தாம் சாகுபடி செய்துவிட்ட பிறகு மூன்றாம் முறை சாகுபடி செய்தால், முதல் இரண்டு சாகுபடியில் இருந்த கண்டுமுதலைவிட மூன்றாம் சாகுபடியில் கண்டுமுதல் மிகவும் குறைந்துவிடுகிறது. இதைப்பற்றிக் கேட்டால், அந்தத் துறையிலே அதிகாரபூர்வமான பதில் இல்லை. நடைமுறையிலே நண்பர்கள் என்ற முறையில் அந்த அதிகாரிகளை அணுகிக் கேட்கும்போது, "புதிய விதைகளெல்லாம் இரண்டு முறை, மூன்று முறை போட்டால், அதன் பலன் குறைந்துதான் போகும். வேண்டுமானால் நீங்கள் பயிரிட்டதைக் கொடுத்துவிட்டு விதைப் பண்ணைகளிலிருந்து மீண்டும் புதிய விதைகளை வாங்கிப் பயிரிடுங்கள்" என்று சொல்லுகிறார்கள். ஆகவே பூச்சி மருந்துகளைப் பயன்படுத்துகிற முறைகளைப் பற்றி நாம் ஆராய்ச்சி நடத்தியாக வேண்டும். இன்னும் சுலபமான முறையிலே பூச்சி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்தும் வழிவகைகளைக் கண்டு பிடித்து அவர்களுக்குச் சொல்லியாக வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-50)

இரண்டாவதாக, விவசாயிகளைப் பொறுத்த வரையில், விவசாயிகளுடைய நிலையை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு நமக்குத் துணை செய்வது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களே ஆகும். இந்த விற்பனைக் கூடங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றனவா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு எப்படி இருக்கிறது என்றால், எந்த அளவுக்கு விவசாயிகள் தனி முதலாளிகளை, தனி வியாபாரிகளை, கமிஷன் ஏஜெண்டுகளை அல்லது இடைத் தரகர்களை நம்பி ஓடாமல் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களை நம்பி வருகிறார்கள் என்பதைப் பொறுத்துதான், விவசாயிகளுடைய வெற்றியும் அடங்கியிருக்கிறது என்று சொல்வேன். ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்

களைப் பொறுத்த வரையிலே நான் பெருமையோடு சொல்வேன். கடந்த காலத்தில் நம்பிக்கையோடு, தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை மண்டித் தாகர்களிடம், தனியார்களிடம், இடைத் தரகர்களிடம் கொண்டு போகாமல் இந்த விற்பனைக் கூடங்களை நோக்கிக் கொண்டு வந்தார்கள். இந்த விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கிறது. நல்ல ஆதாயம் கிடைக்கிறது என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இன்றைக்கு விற்பனைக் கூடங்களில் நடைபெறுகின்ற முறைகள் தனிப்பட்ட வியாபாரிகளுக்குச் சாதகமாக இருக்கிறது. மொத்தத்தில் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு அதிகமான வியாபாரமும், ஓரளவுக்கு சரி சமமான அளவுக்காவது தனியாரிடம் விற்பனையும் இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் சூப்பர்வைசர்களே விவசாயிகளிடம் ஓடோடிப் போய்ச் சொல்ல வேண்டும். தனியார் துறை யுடன் போட்டி போட வேண்டும். அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். விற்பனைக் கூடங்கள் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்குத்தான் இருக்கின்றன என்பதை உணரும்படி அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். இடைத் தரகர்களிடம் போய் ஏமாந்து போக வேண்டாமென்று சொல்ல வேண்டும். அந்த இடைத் தரகர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி அவர்கள் விவசாயிகளுக்கு முன்பணம் கொடுப்பதுதான். அவர்கள் முன்பணம் கொடுப்பதால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள் அவர்களிடம் வந்து சேர வேண்டுமென்று சொல்லி வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். எப்படித்தான் இடைத்தரகர்கள் இந்த விற்பனைக் கூடங் களுடன் போட்டி போடுகின்றார்கள். இன்றைக்கு விற்பனைக் கூடங்கள் செயல்படுவதிலேயே கோளாறு இருக்கிறது என்பது மட்டுமல்ல, இன்று விவசாயிகளுக்கு விற்பனைக் கூடங்கள், சொந்தமானது, தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக இருக்கின்ற நிறுவனம் என்று எண்ணுகின்ற மனம் வரவில்லை. அந்த எண்ணத்தை அவர்களிடம் வளர்க்க வேண்டும். விவசாயிகளிடம் அக்கறை உள்ளவர்கள் அந்த நிர்வாகத்துக்கு வர வேண்டும். வெறும் அதிகாரிகள் மூலம், நியமனத்தின் மூலம் அந்த நிர்வாகத்திற்கு வருபவர்களாக இருக்கக்கூடாது. சில நேரங்களில் விவசாயத்திற்குச் சம்பந்தம் இல்லாதவர்களும்கூட, அந்தப் பகுதிகளில் செல்வாக்கு படைத்தவர்கள் மூலம் சிபார்சு பெற்று வருகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் அங்கு இருந்தால், விற்பனைக் கூடங்கள் மேலும் செழிப்பாக வளர வாய்ப்பற்றுப் போகும் என்பதையும், விவசாயிகளுக்கு நல்ல துணை இல்லாமல் போகும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. வி. ஆர். பெரியண்ணன் தலைமை.)

அடுத்ததாக, கரும்பாலைகளைப் பொறுத்தவரையில், கரும்பு ஆலை களுடைய நிதியிலிருந்து, அதாவது Sugarcane Cess Fund லிருந்து ஒதுக்கி விவசாயிகளுடைய நன்மைகளுக்கு வழி செய்கிறோம். அந்த விவசாயிகளுடைய பொருள்களை மார்க்கெட்டுகளுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற பாதை வசதிகள் செய்யவும், அவர்களுக்கு என்று பல நல்ல திட்டங்களை வகுக்கவும் இந்த நிதியை வைத்திருக்கிறார்கள். இந்தச் சிறப்பு நிதி விவசாயிகளுக்குப் பயன்படுகிறதா, இந்தப் பணம் எந்த அளவுக்கு விவசாயிகளுடைய நலனுக்குப் போகிறது என்று பார்த்தால், இந்தத் தொகை மற்ற துறைகளுக்குப் போகின்றது என்று தெரிகிறது. அது மட்டுமல்ல ; முழுமையாக விவசாயிகளுக்குப் பயன்படுத்தாமல், ஏதோ ஒரு சிறு சதவிகிதம்தான் விவசாயிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அந்தப் பகுதிகளிலே நல்ல வளர்ச்சி வாய்ப்புகளை உண்டாக்காத அளவுக்குத்தான் விவசாயத்துறை சிறப்பு நிதியைக் கையாளுகின்ற நிலைமைகள் இருந்து வருகின்றன. வழக்கம் போல, வேண்டியவர்கள், வேண்டாதவர்கள்,- ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள், அவருக்குச் சலுகைகள் என்பது போன்றவை களும் இருக்கும். இன்று முழுமையாக விவசாயிகளின் நன்மைகள் புறக் கணிக்கப்படுகின்றன. விவசாயத் திட்டங்களை கருத்திலே கொண்டு செயல்படவில்லை. கரும்பலகைகளுக்கு என்று பணம் செலவழிக்க பெரு மளவுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் இதற்காக என்ற (Reserve Fund) காப்பு நிதி வைத்திருக்கிறார்கள். விவசாயிகள் வளர்ச்சிக்காக சுகர்கேன் செஸ் பண்ட் என்று வைத்து, அந்தப் பணத்திலிருந்து கரும்பு ரிசர்ச்க்காக என்று பணம் ஒதுக்குவது நியாயமா, முறையா என்ற கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி இல்லை. அந்தப் பணத்தை யார் வேண்டுமானாலும் கையாளுவார்கள் என்ற முறையிலேதான் இந்த விஷயத்தில் அணுகுமுறை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, விவசாயப் பல்கலைக்கழகம் பற்றி நான் அதிகமாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அந்தப் பல்கலைக்கழகம் இன்றைக்கு ஓரள வுக்கு வளர்ந்திருக்கிறது என்ற அளவில் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பல்கலைக்கழகம் மேலும் வளர்ச்சி அடைந்து தமிழகத்திற்கு உதவுகின்ற வகையிலே சில நல்ல திட்டங்களைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலுள்ள திண்டிவனம் விதைப் பண்ணையைப் பொறுத்துச் சொல்லாமலிருக்க முடியாது. முக்கியமாக தமிழகத்திலே உள்ள சிறப்பான எண்ணெய் விதைப் பண்ணைகளிலே, இந்தப் பண்ணையும்

ஒன்று என்று நான் உரிமையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பண்ணையில் உற்பத்தியாகும் விதைகளைப் பரவலாக விவசாயிகளுக்குக் கொடுத்தாக வேண்டும். இதை நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்தத் தரமான விதைகளை சிறு விவசாயிகளுக்குப் பல பகுதிகளிலே கொடுப்பதில்லை. தரமான விதைகள் உற்பத்தியாகின்றன. உற்பத்தியாகின்ற விதைகளைக் கணக்கிட்டு அவற்றை எல்லா விவசாயிகளுக்கும் நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். புள்ளிவிவரங்கள் தாலுக்கா மட்டத்தில், ஜில்லா மட்டத்தில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே தரமான அந்த விதைகளை சாதாரண சிறு விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற வகையிலே திட்டங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அலுவலகத்திலேயே உட்கார்ந்துகொண்டு யார் மேலாவது பில் போட்டாக வேண்டும் என்ற நிலைமைகள் அதிகாரிகளிடையே இருக்கின்றன. இதை மாற்ற வேண்டும். சில அதிகாரிகளாவது கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயத்தினை உருவாக்குவதன் மூலம், புள்ளிவிவரம் போடுவதோடு மட்டுமல்லாமல், அந்த விதைகளை சிறு விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். இதுபற்றி அப்போதைக்கப்போது கிராமத்திலிருந்து ரிப்போர்ட்டுகள் வந்தாக வேண்டும் என்ற நிலைமைகள் இருக்க வேண்டும். இந்த விதைப் பண்ணைகள் உற்பத்தி செய்யும் தரமான விதைகள் பெரிய விவசாயிகளுக்குத் தான் பயன் படமுடியும் என்பதை நிரந்தரமாக்கிக்கொண்டிருப்பது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பற்றி ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது வாய்க்கால்கள் எல்லாம் கான்கிரிட்டிலே அல்லது சிமெண்ட்டிலே கட்டி நீர் சிந்தாமல் சிதராமல் பாசனத்திற்குக் கொண்டுபோய் விடுவது என்ற அளவிலே செய்துகொண்டிருக்கிறார்கள். இதிலேயும் ஒரு அபாயம் இருக்கிறது. கரை கட்டுவது மட்டுமல்லாமல் சில நேரங்களில் அடி மண்ணிலேயே சிமெண்ட் தரை போட்டுக் கொண்டு போவது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமைகள் வருகின்றபோது, அந்தப் பக்கத்திலே உள்ள கிணறுகளில் ஊற்று அடங்கிப் போகின்ற வாய்ப்பு இருக்கிறது. முழுக்க முழுக்க கான்கிரிட் சானலிலே, சிமெண்ட் சானலிலே தண்ணீரைக் கொண்டு போவதன் மூலம் பக்கத்தில் உள்ள கிணறுகளில் நீர் ஊறாத நிலைமைகள் ஏற்படும். அந்த முறை நீரைப் பாழாக்குவது இல்லை என்றாலும், அடுத்த பக்கத்திலே உள்ள கிணறுகளில் நீர் ஊற்று ஊறுவதைத் தடுக்கின்ற நிலைமைகள் வந்து விடும் என்பதையும் நாம நம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த அபாயம் நிரந்தரமாகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாசனத்தைப் பொறுத்த வரையில், தர்மபுரியில் வாணி ஆறு நீர்த்தேக்கத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது போன்ற திட்டங்கள் இன்னும் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. நூறு ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டுகள அடங்கிய ஆறுகளை, நீர்த் தேக்கங்களைப் பொதுப் பணித் துறை மேற்கொள்ளும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்பிக்கை, பொதுப் பணித் துறையும், விவசாயத் துறையும் அவர்களிடம் இருக்கின்ற காரணத்தினாலேயே, அதிலே தவறுகள் நடக்காது என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பதால்தான் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பொதுப் பணித் துறை எடுத்துக்கொண்டிருக்கின்ற வேலைகள் சரியாக நடப்பதில்லை. பொதுப் பணித் துறை எடுத்துக் கொண்டிருக்கின்ற ஏரிகளைப் பாருங்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. வி. ஆர். பெரியண்ணன்) : விவாதம் முடியும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : காண்ட்ராக்டர்களுக்கு விடுகின்ற மொத்தப் பணத்திற்கும், உண்மையிலேயே செய்யப்படுகின்ற வேலைகளுக்கும் சம்பந்தமே இருக்காது. ஏரிகளில் கான்ட்ராக்ட் எடுப்பவர்கள் ஏமாற்றுவதற்கு வசதி இருக்கிறது. அது மிகமிகச் சுலபம். கொஞ்சம் வேலை நடந்து கொண்டிருக்கும்போது, திடீரென்று மழை வந்துவிடும். அவர்கள் செய்து கொடுத்த வேலையெல்லாம் அத்தோடு போய்விடும். அதிகாரிகளும் அவர்களுக்காக அனுதாபப்பட்டு பணத்தைக் கொடுத்து விடுகிறார்கள். பல ஏரிகளில் இதுபோன்று வேலை நடக்காமலேயே மழை வரும் என்று காத்திருப்பார்கள். வந்தபிறகு வேலை முடிந்துவிட்டது என்று சொல்வார்கள். அதிகாரிகளும் ஒப்புக்கொண்டு பணத்தைக் கொடுத்து விட்டு அதில் பங்கு வாங்கிக்கொண்டு விடுகின்ற நிலைகளும் எனக்குத் தெரியும். வெள்ளம், புயல் நிவாரண வேலைகள் நடக்கும்போது, இந்த மாதிரியெல்லாம் நடந்திருக்கிறது. இங்கே இந்த அவையில் கூட அதைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

நான் நேரடியாகவே பார்த்திருக்கிறேன். ஒரு இடத்தில் காண்ட்ராக்டர் வேலை எற்றுக்கொண்டிருக்கிறார். ஏரியிலே நீர் நிறைந்துவிட்டது. அதிகாரிக்கும் அவருக்கும் தகராறு ஏற்பட்டுவிட்டது. இரண்டு ஆண்டு காலச் சங்கடத்திற்குப் பிறகு அந்த அதிகாரி அந்த வேலையை செய்யச்

சொல்லி உத்தரவிட்டிருக்கிறார். மழை நீர் இருக்கும்போதே வேலை செய்யச் சொல்லியிருக்கிறார். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். அந்த வேலையை முடிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எதையாவது செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பிறகு அவரும் இவரும் சேர்ந்து வேலை முடிந்துவிட்டதாகக் கணக்கெழுதிவிட்டு பணத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் அங்கே நீர்த்தேக்கங்கள், ஏரிகள் எல்லாம் பழுது பார்க்கப்படுகின்றன. இந்த வேலைகள் எல்லாம் பொதுப் பணித் துறையிலே விடப்பட்டு காண்ட்ராக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பணம் செலவழிக்கப்படுகிறது. ஒரு நூறு ஏக்கர் நிலம் உள்ள, ஆயக்கட்டுக்கள் உள்ள பகுதியில் உள்ள விவசாயிகள் இதையெல்லாம் எப்படி பார்த்துக்கொண்டிருக்க முடியும்? அதற்காகச் செலவிட்டுக்கொண்டு எப்படி நன்றாகக் கண்காணிக்க முடியும் என்

(பிற்பகல் 7-00)

பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை எச்சரிக்கையோடு அமுல்படுத்த வேண்டும். இந்த நிலைமையை அரசு பரிசீலித்தாக வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வெள்ள நிவாரணம் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். வெள்ள நிவாரணத்திற்குக் கொடுத்த மானியத் தொகையை உயர்த்த வேண்டுமென்றும், கடன் தொகையையும் உயர்த்த வேண்டுமென்றும் சொன்னார்கள். நான், அமைச்சர்களிடம் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நாம் பூரணமாக ஏற்றுக்கொண்ட காரணத்தாலேதான் மானியம் கொடுக்கிறோம். நஷ்டத்தை முழுமையாக அவர்களால் தாங்க முடியாதென்பதால்தான் மானியத்தோடு கடனும் கொடுக்கிறோம். அது தெளிவாகத் தெரிகிறது. மீண்டும் நிலத்தை ரெக்ளமேஷன் செய்ய செலவு செய்ய வேண்டுமென்று தெரிகிறது. அரசின் உதவியோடு, விவசாயியின் உழைப்பையும், முதலீட்டையும் சேர்த்தால், எந்த அளவிற்கு வருமென்பதை எண்ணிப் பார்க்கமுடியும். அதை மனத்திலே கொண்டு செயல்படும்போது, விவசாயி ஏற்றுக்கொண்டிருக்கும் கடனை எந்த அளவிற்கு அவனால் தீர்க்க முடியுமென்பதையும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு விவசாயிகள், அவர்களுடைய கடன் பிரச்சினையை பெரும் பிரச்சினையாக எழுப்பியிருப்பதை உணர முடிகிறது. இதை மனத்திலே கொள்ள வேண்டுமென்பது மட்டுமல்ல, விவசாயிகள் விளை பொருள்களுக்கு, குறிப்பாக நெல்லுக்கு இன்றைக்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள்

இது குறித்து மிகத் தெளிவாக அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அவர்களாலே எந்த அளவிற்கு உதவ முடியுமென்பதல்ல பிரச்சினை. இருக்கின்ற நிலையை உணர்ந்திருக்கிறார்கள். உணர்ந்து அதைக் கொஞ்சம்கூட மறைக்காமல் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. கிடைக்கும் மின்சாரம் எப்போது நிற்கும் என்று எந்த விவசாயிக்கும் தெரியாது. இந்த நிலையிலே, கதிர் வந்துள்ள பயிர்களுக்கு, இரண்டு நாட்களுக்குத் தண்ணீர் இல்லையென்றால், மீண்டும் அதற்குத் தண்ணீர் பாய்ச்சி, ஒழுங்குபடுத்துவது எவ்வளவு சிரமமான காரியமென்பது எல்லோருக்கும் தெரியும். வசதியுள்ள சிலருக்கு டீசலும் கிடைக்கவில்லை. அதன் விலையும் உயர்ந்துவிட்டது. அதையும் கள்ளச் சந்தையிலேதான் வாங்க வேண்டும். மேலும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகையின்மீதான தண்ட வட்டியின் விளைவாக அவர்கள் மிகப் பெரிய சிரமத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்! மார்வாடிகளே பரவாயில்லை. விவசாயிகளின் குரல்வளையை நெறிக்கும் அளவிற்கு தண்ட வட்டி இருக்கிறது. வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுப்பது அவசியம், அது கட்டாயம். ஆனால் தமிழக விவசாயிகளைப் பொறுத்தவரையில், இந்திய விவசாயிகளைப் பொறுத்தவரையில், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும், செத்தாலும் கடன்காரனாகச் சாகக்கூடாதென்ற கண்டிப்பில்தான் இருக்கிறார்கள். ஆனால் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுவதில் கொஞ்சம் மெத்தனமாக இருக்கிறார்கள். அதற்குக் காரணம், அவர்களுக்கு மற்ற பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. இவைகளையெல்லாம் சேர்த்து எண்ணும்போது, இன்றைக்கு நடைபெறும் விவசாயிகள் போராட்டம், விவசாயிகள் எழுச்சி எந்த அளவிற்கு நியாயமானது என்பதை உணர வேண்டும். அது எழுச்சியாக, போராட்டமாக வந்திருக்கிற காரணத்தால், அவர்களெல்லாம் நம்முடைய விரோதிகள் என்றோ, அரசின் விரோதிகள் என்றோ, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் விரோதிகள் என்றோ மனத்திலே கொள்ளக்கூடாது. உணர்வுகளை வெளிப்படுத்த வேறு வாய்ப்புகள் ஜனநாயகத்திலே கிடையாது என்பதால், கோஷங்களையிடுகிறார்கள், கூட்டமாக வருகிறார்கள். அது போராட்டமாகிவிடுகிறது. விவசாய அமைச்சராக இன்றைக்கு மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் இருப்பதால், அவரைப் பார்த்துக் கத்துகிறார்கள். கொஞ்சம் தெரிந்தவர்கள், முறையாகக் கோஷமிடுகிறார்கள். விவரம் தெரியாதவர்கள், விவசாயிகள், படிக்காதவர்கள், பண்படாத நிலையிலே இருப்பவர்கள்

ஆகியோரிடமிருந்து கொஞ்சம் வேகமாக வார்த்தைகள் வருகின்றன. அப்படி வார்த்தைகள் வருவதால், அவர்களெல்லாம் விரோதிகளென்று எண்ணும் நிலையை, அமைச்சர்களும், அரசும் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய குறைகளை உணர்ந்திருக்கிறோம் எதிர்க் கட்சித் தரப்பு என்பதல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதல்ல, காங்கிரஸ் கட்சி என்பதல்ல, கம்யூனிஸ்ட் கட்சி என்பதல்ல. ஆள்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அவர்களுடைய குறைகளை மறுக்க முடிய வில்லை. அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே அந்தக் குறைகளுக்காகப் போராடுபவர்களை விரோதிகளாக நினைக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை அரசின் விரோதிகளென்று நினைத்தால், எங்களுடைய நண்பர்கள் என்று எதிர்க் கட்சிகள் அவர்களை அதிகமாக அரவணைத்துப் போகிற நிலைமைகள் ஏற்படும். அப்படி அவர்களை நடத்த விரும்புகிறீர்களோ, இல்லையோ, தெரியாது. அவர்களை விரோதிகள் என்று சொல்வதால், அரசால் பயன் இல்லையோ என்று நினைத்து, எங்களை அழைக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்களை அவர்கள் 'அழைப்பதால், அவர்கள் கைக் குண்டுகள், வெடி குண்டுகளைச் செய்வார்களென்ற குற்றம் சாட்டுகின்றீர்கள். அடிப்படையிலே, அணுகு. முறையிலே கோளாறு இருக்கிறதென்று நான் எண்ணுகிறேன். இந்தப் பிரச்சினையை முறையாகத் தீர்க்க வேண்டுமென்றால், முதலில் விவசாயிகளின் கடன் சுமையைத் தீர்த்தாக வேண்டும். அதைக் குறைத்தாக வேண்டும் அல்லது பூரணமாக ரைட்-ஆஃப்'' (Write off) செய்தாக வேண்டும். மூன்று, நான்கு நாட்களுக்கு முன்னதாக, கோதுமை விலை போதவில்லை என்பதால், மீண்டும் அதன் விலையை மத்திய அரசு உயர்த்தியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அந்த அளவிற்கு, ஒரு பகுதியில் இருக்கும் விவசாயிகளின் நலனைக் காக்க மத்திய அரசு . எந்த அளவிற்கு ஆர்வம் கொண்டிருக்கிறதென்பதை எண்ணும்போது, தமிழகத்திலுள்ள விவசாயிகளின் அல்லலை நீக்க முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அமைச்சரவர்கள் மத்திய அரசோடு போராடுவது என்பது மட்டுமல்ல, சொந்த அமைச்சரவையிலேயே போராடி வெற்றி பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வெற்றிக்கான வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்து, பிரச்சினைகள் எல்லாம் முறையாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செம்பாம்பாக்கம் ஏரியைச் சீர்படுத்தும் வேலையை எடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். செம்பரம்பாக்கம் ஏரியை நல்லமுறையில் சீர்படுத்த வேண்டும். நான் முன்னால் சொன்ன முறையில் வேலைகள் நடை

பெறாமல், குறைபாடுகள் இல்லாமல், சீராக வேலைகள் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீர்வு என்பது எங்களிடம் இல்லை. எப்படி அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதை அமைச்சரவர்கள் தான் அறிந்திருக்க முடியும். எப்படியாவது பிரச்சினைய்யைத் தீர்த்தாக வேண்டும். அதை வளர விட்டுக்கொண்டே போகக்கூடாது. பலமுள்ள ஆட்சி இப்போது இருக்கலாம், பிறகு பலமற்ற ஆட்சி வரலாம். வாய்ப்பு இப்போது இருக்கலாம், பின்னால் வாய்ப்பு இல்லாமல் போகலாம். கர்நாடக முதலமைச்சரவர்களைப் பொறுத்த வரையில், அவர் தமிழக அரசினுடைய நண்பர், எங்கள் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர். காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வாய்ப்புகள் இருப்பதாக ஆட்சியினரே பல முறை கூறியிருக்கிறார்கள். இப்போது அதை முடிக்கவில்லை என்றால், இந்த ஆட்சி அலட்சியம் காட்டியதோ என்ற சந்தேகம் சில ஆண்டுகளுக்குப் பிறகு வந்துவிடும். அந்தப் பழி பாவத்திற்கு ஆளாகக்கூடாது. வாய்ப்பு இருக்கும்போது, பிரச்சினையைத் தீர்த்துவிடுங்கள். நம்முடைய விவசாய அமைச்சரவர்களே அதை முடித்தால், இன்னும் பாராட்டுதலுக்குரியவராக ஆக முடியுமென்று சொல்லிக்கொள்கிறேன். இளம் வயதிலேயே பெரிய துறையை எடுத்து, செயல்படுத்தும் அமைச்சரவர்கள் இதிலே வெற்றி பெற வேண்டும். விவசாயிகள் போராட்டத்தைத் தீர்ப்பதற்காகவும், காவிரி நீர்ப் பிரச்சினை குறித்தும் அவர் எடுத்திருக்கும் நடவடிக்கைகளையும், மற்ற நடவடிக்கைகளையும் பாராட்டி, அவற்றிலே வெற்றி காண வேண்டுமென்று வாழ்த்தி, அமைகிறேன்.

திரு. இரத்தின பாலகுருசாமி: மாற்றுத் தலைவரவர்களே, இன்றைய தினம் விவசாயக் கொள்கைக் குறிப்பின்மீது பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். நான் காலத்தைக் கடத்திக் கொண்டு போக விரும்பவில்லை என்றாலும், இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்ள இருக்கிறேன்.

(பிற்பகல் 7-10)

மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் ஓர் விவசாயக் கல்லூரியை அவசியம் ஏற்படுத்தித் தர வேண்டும். நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதிமக்களால் கேட்டுக்கொண்டு வரப்பட்டுள்ள கோரிக்கை அது. இன்றுவரை அதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆகவே தென்னாற்காடு மாவட்டத்திலாவது அல்லது வட

(இரத்தின பால குருசாமி) [1979 ஏப்ரல் 16

ஆற்காடு மாவட்டத்திலாவது ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் கோவையில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. அடுத்தபடியாக, சிதம்பரத்தில் இருப்பது தனியார் விவசாயக் கல்லூரி. நான் கேட்பதெல்லாம் தென்னாற்காடு மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு விவசாயக் கல்லூரி பற்றியதாகும். அங்கே மையமான பகுதியில் ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்து அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது வீராணத்தை மையமாக வைத்து தூர் வார வேண்டும், ரோட்டை அகலப்படுத்த வேண்டும் என்றெல்லாம் கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் 33 வாய்க்கால்களுக்கும் 5 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாட்டுத் திட்டம் என்று தொகையை ஒதுக்கி உடனடியாக அதை நடைமுறைப்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்றும் தூர் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். லால்பேட்டை, வெள்ளியக்குடி ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் சிமெண்ட் பிளாக் போட்டு செப்பனிட வேண்டுமென்று கேட்டிருந்தும், அங்குள்ளவர்கள் அதைச் செய்யாமல் ரூபாயைத் திரும்ப அனுப்பியிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏரிகளைத் தூர்வாருவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும். வீராணம் ஏரியை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே 10 மைல் விஸ்தீரணத்திற்கு 33 வாய்க்கால்கள் அங்கே இருக்கின்றன. 33 வாய்க்கால்களுக்கும் வடிகால் வசதியை செய்து கொடுத்து பாசன வசதியை அதிகமாகச் செய்து கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகமாகும், விளைச்சல் அதிகமாகும், தஞ்சைப் பகுதிக்கு ஒத்த பகுதியாக அந்தப் பகுதி அமையும். மேலும் அந்தப் பகுதியில் 60, 70, 80 வரை விவசாயிகள் கண்டுமுதல் செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும் ஈட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலமாகவும் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கால அவகாசம் இல்லாத நிலையிலும் குறுகிய அளவிலே 2 அல்லது 3 நிமிடங்களாவது மாற்றுத் தலைவர் அவர்கள் எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்தார்களே என்று எண்ணி என்னுடைய திருப்தியைத் தெரிவித்து, அவை முன் வைக்கப்பட்டுள்ள வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலுள்ள எல்லா விஷயங்களையும் வரவேற்று, பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

1979 ஏப்ரல் 16]

திரு. கோ. சி. மணி: மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு நம்முடைய அவையிலும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆன உடன் சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கப்படுகின்ற அத்தனை பொருள்களைப் பற்றியும் மேலவையிலும் விவாதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் அங்கே கொஞ்சம் சூடாக இருந்தாலும், இங்கே கொஞ்சம் ஆறி அரிய யோசனைகள் பலவற்றைத் தெரிவிக்கலாம் என்ற அடிப்படையில் அந்த வாய்ப்பினை நமக்கெல்லாம் தந்தார்கள். அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஒரு உதாரணம் கூட சொன்னார்கள். சட்டமன்றப் பேரவை கோப்பை என்றால் மேலவை அதற்கு சாசராக இருக்கலாம் என்று சொன்னார்கள். கோப்பையில் கொஞ்சம் சூடாகக் குடிப்பதுபோல் சட்டமன்றப்பேரவையில் பிரச்சினைகள் பற்றி சூடாக விவாதங்கள் எழுப்பப்பட்டாலும், அந்த சூடு பதப்படுத்தப்படும் வகையில் மேலவையில் நல்ல கருத்துக்களை உருவாக்கலாம் என்ற வகையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைக் குறிப்பு விவாதம் என்கிற பெயரால் விவாதிக்கின்ற ஒரு பெரும் பேற்றினை நமக்கெல்லாம் தந்தார்கள். அவர்கள் அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்ததற்குப் பிறகு கொள்கை விளக்கக் குறிப்பைப் பற்றி ஆண்டுதோறும் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றவன் என்பதோடு, தொடர்ந்து இந்த அவையில் உறுப்பினராகவும் இருந்து வருகிறேன்.

சென்ற ஆண்டு நான் பேசும்போது இந்த அவையில் ஒரு கருத்தினைச் சொன்னேன். வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஏனோ தானோ என்று ஒரே நாளைக்குள் விவாதத்தை முடிப்பதும், உறுப்பினர்களுக்கு 5 நிமிடம் அல்லது 10 நிமிடம் என்று ஒதுக்கும்போது அவர்களுடைய குரலில் கை வைக்கின்ற நிலையும் நல்லதல்ல என்று தெரிவித்திருந்தேன். வேளாண்மைப் பிரச்சினையைப் பொறுத்தவரை, ஆளும் கட்சி அல்லது எதிர்க் கட்சி என்கின்ற பிரச்சினை எழவில்லை. இது நாட்டுக்கு மிக மிக முக்கியமான பொதுப் பிரச்சினை. அருள்கூர்ந்து கால அவகாசம் அதிகமாக இதற்குக் கொடுங்கள் என்று அன்றையதினம் கேட்டேன். சென்ற ஆண்டும் சரி, இந்த ஆண்டும் சரி, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம் நடத்த ஒருநாள்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். மாண்புமிகு தலைவர் அவர்களிடம் கூட நான் இதைப்பற்றிச் சொன்னேன். சென்ற ஆண்டு பேசும்

போது கூட இதைப்பற்றி வற்புறுத்தினேனே என்று கேட்டேன். ஒதுக்கப்பட்டுள்ள கால அவகாசத்தைப் பொறுத்து, அதற்குள் பேச வேண்டுமென்று மாண்புமிகு தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள்.

1979-80 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பை ஆரம்பத்தில் படிக்கிறபோது "வேளாண்மை எனும் **தொழில், தமிழகத்தில்** தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது" **என்று** குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மை ஒரு "தொழில்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்துடன் இதை ஒரு நல்ல தொழில் என்று அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. தொழில் என்று வரும்போது, அதில் இலாப நஷ்டக் கணக்கைப் பார்க்காமல் இருக்க முடியாது. வேளாண்மை எனும் தொழில் என்கின்ற வாதத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு விட்ட பிறகு, அதில் இலாப நஷ்டக் கணக்கைப் பார்ப்பது மிக மிக இன்றியமையாதது. இங்கே ஏற்கெனவே பல மாண்புமிகு உறுப்பினர்கள் வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பற்றிப் பேசிவிட்டார்கள். பேசிய அத்தனை பேரும் வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பற்றிப் பேசவில்லை. அவர்கள் பேசும்போது, விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும், சங்கடங்கள் பற்றியும், தொல்லைகள் பற்றியும்தான் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை பேசினார்களே தவிர, உண்மையான கொள்கை விளக்கக் குறிப்பு சம்பந்தமாகப் பேசவில்லை. இதை நான் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன். அதற்கான காரணத்தை அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்வார்கள். கொள்கை பற்றி அதிகமாக விவாதிக்கத் தேவையில்லை அல்லது தேவை உண்டு, தேவை இருக்கிறது அல்லது தேவை இல்லை, சரி அல்லது தவறு என்பது பற்றிய பிரச்சினையில் இறங்க முடியவில்லை. காரணம் இன்றையதினம் விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங்கள், தொல்லைகள், சிக்கல்கள் எல்லாம் கொள்கையை விட முதலிடம் பெற்று விட்டன. கொள்கையைப்பற்றி விவாதிப்பதை விட விவசாயத் தொழிலை நடத்துகிறவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்கள், தொல்லைகள் அதிகம். எனவேதான் கொள்கையைப்பற்றிப் பேசாமல் தொழிலை நடத்துகிறவர்களைப்பற்றிப் பேசுகிறோம். எத்தனை அதிகாரிகள் திட்டமிட்டுக் கொடுத்தாலும், அது சரியா அல்லது சரி இல்லையா என்பதைப்பற்றி விவாதிக்க முடியவில்லை. எங்கள் கட்சியின் சார்பாக இதை நான் மிக மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நான் பேசும்போது இன்னொரு கருத்தையும் வலியுறுத்திச் சொன்னேன். வேளாண்மைத் துறை அமைச்சராக இருப்பவர் நீர்ப்பாசனத் துறையையும் சேர்த்து கவனிப்பது மிக மிக நல்லது என்கின்ற கருத்தினைத்

தெரிவித்திருந்தேன். எங்கள் கட்சி ஆளும் கட்சியாக இருந்த நேரத்திலும் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டேன். இந்த அரசு அதைச் செய்திருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே நீர்ப்பாசனத் துறை அமைச்சராகவும் இப்பொழுது இருக்கிறார். இத்தகைய வாய்ப்பினை அவர் பெற்றிருப்பது மிக மிகத் தேவையான ஒன்று. அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினை சட்டமன்றத்தில் வைக்க உருவாக்கித் தந்த அதிகாரிகளை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. ரொம்ப நாசுக்காக தங்களால் அதைப்பற்றி முடிவு செய்யப்பட்ட பிறகு, அரசால் பரிகாரம் காண முடியவில்லை என்ற அடிப்படையில், அதற்கான செலவைக் குறைக்க ஈடுபட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கொள்கை வெற்றி பெறுமா என்றால், அவர்களுக்கே அதில் நம்பிக்கையில்லாமல் அப்படி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விளை பொருள்களுக்கு விலை குறைவு, உற்பத்திச் செலவு அதிகரிப்பு—இது உண்மை நிலை. இதைச் சொல்ல முடியாமல், தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்ல முடியாமல், அரசாங்கத்திற்கு அடங்கி, இன்னும் சொல்கிறேன் பயந்து அச்சப்பட்டு, இதை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "உற்பத்தியை அதிகப்படுத்தவல்ல குறைந்த விலையுள்ள புதிய இடு பொருட்கள் ஆகியவற்றை கையாளுவதின் மூலம் இதனைச் சாதிக்க முடியும். இப்புதிய தொழில் நுட்பம் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறாக்கள். விவசாயி உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு விலை போதவில்லை என்று சொல்ல வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு துணிச்சல் இல்லை, அதிகாரம் இல்லை. "இவ்வளவு உற்பத்தி செய்திருக்கிறார்கள். இவ்வளவு தான் உற்பத்தி செய்ய முடியும். உற்பத்தி செய்த பொருள்களுக்கு சாகுபடிச் செலவிற்கேற்ப விற்பனை விலை கிடைக்கவில்லை. உற்பத்திக்கும் உற்பத்திச் செலவுக்கும் இடையே தொய்வு ஏற்பட்டிருக்கிறது." இந்த எண்ணம் அதிகாரிகளுக்கு வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் அதைத் துணிவுடன், துணிச்சலுடன் சொல்லுகின்ற நிலை இல்லை. அவர்களும் அரசாங்கத்துடன் சேர்ந்து அரசாங்கம் ஒப்புக்கொள்கிற ஒரு தவறான கருத்தைப் பரப்பியிருக்கிறார்கள். இதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாகுபடிச் செலவு அதிகம், உற்பத்தி குறைவு, விலையும் குறைவு என்று தைரியமாகச் சொல்லுவதை விட்டு விட்டு நாங்கள் உற்பத்திச் செலவைக் குறைக்கிறோம் என்று சொல்லி, 6 கட்டளைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 10 கட்டளைக்கு பதிலாக இவர்கள் 6 கட்டளை

களைத் தந்திருக்கிறார்கள். ஒன்றாவது வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல். இரண்டாவது "பாய்" நாற்றங்காலை உபயோகப்படுத்துதல். மூன்றாவது "நீல பச்சை பாசி" யைக் கொண்டு உரமிடுதல். நான்காவது சிங்க் சல்பேட் இடுதல். ஐந்தாவது உரங்களைப் பயிருக்கு அருகாமையில் இடுதல். ஆறாவது பூச்சி மருந்து குருணைகளை பயிருக்கு அருகாமையில் இடுதல். இந்த ஆறு கட்டளைகளும் ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வரும் முறை என்பது இத்தனை நாட்களாக இவர்களுக்கு ஒருவேளை தெரியாமல்

(பிற்பகல் 7-20)

போயிருக்கும். பயிர்களுக்கு உரத்தை பக்கத்தில் இட வேண்டும், பயிர்களுக்கு அருகாமையில் இடவேண்டும் என்று இவ்வளவு நாட்களாக அவர்களுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்? என்னால் நம்ப முடியவில்லை. அவர்களுக்குத் தெரிந்திருக்கும். நிலத்துக்கா உரம்? பயிருக்குத் தானே உரம். அது கூடவா அவர்களுக்குத் தெரிந்திருக்காது? இப்பொழுது ஏதாவது ஒன்று சொல்ல வேண்டும். ஏதாவது ஒன்று சொல்லி இந்த அரசாங்கத்தைக் காப்பாற்ற வேண்டும். அதற்காகவே வரிந்து கட்டிக்கொண்டு அதிகாரிகள் இப்படியெல்லாம் சொல்கிறார்கள். தெரியாமல் தான் சொன்னார்கள் என்று நான் எண்ணவில்லை. தெரிந்தே சொல்கிறார்கள். வீரிய நாற்றுக்களை விதைப் பண்ணையிலே உற்பத்தி செய்கிறார்கள். இந்த வருஷத்திலே 8,160 டன் நெல்லை விநியோகம் செய்வதை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். 25 லட்சம் ஹெக்டேர் நிலத்தையும் சரிக்கட்ட இது போதுமானதுதானா? அந்த நிலத்திற்குப் போதுமான விதையா இது? இந்த மாநிலம் பூராவும் இருக்கும் விவசாயிகளுக்குக் கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா? வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்வதில் இருக்கிற சங்கடம் நாம் அறியாததா? அடுத்து 'பாய்' நாற்றங்கால் என்பது இருக்கிறது. அது ஒரு பழைய பஞ்சாங்கம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பரிசீலிக்கப்பட்டு கொண்டுவர முடியாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அது கொண்டு வரப்பட்டு, இதை வைத்துக்கொண்டு இரண்டு வருஷம் ஊரெல்லாம் சுற்றி, சினிமாப் படம் போட்டுக் காட்டி, செயல் விளக்கங்கள் எல்லாம் செய்து காட்டி, மேடையிலே காட்டி, உருப்படாமல் கடைசியிலே சுருட்டி மூலையிலே போட்ட திட்டம் இந்த 'பாய்' நாற்றங்கால் திட்டம். பாயோடு அந்த நாற்றையும் சேர்த்துச் சுருட்டி மூலையிலே போடப்பட்ட திட்டம் அந்தத் திட்டம். அது இன்றைய தினம் உருவெடுத்து வருகிறதென்றால், அதற்கு என்ன பொருள்? இது என்ன அதிசயம்? தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம்

தோல்விக்கு மேல் தோல்வி கண்ட திட்டம். அத்தனை பேரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் திரும்பவும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் வெற்றி பெறுமா? 25 நாட்களில் பறித்து நடமுடியும் என்று சொல்கிறார்கள். 40 நாட்களுக்குப் பிறகு பறித்தால்கூட, அது நன்றாக வராது. இவ்வளவும் தெரிந்த எங்களையே நம்பச் சொன்னால், எப்படி நாங்கள் நம்ப முடியும்? பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது, எங்கே வேண்டுமானாலும் இதைப் போடலாம், அப்படியே சுருட்டி எடுக்கலாம், மாடியிலே போடலாம். தனியாக நாற்றங்கால் போடத் தேவையில்லை. 12 சென்ட் நிலம் மிச்சம். இது அழகாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திச் செலவும் குறையும் என்றும் சொல்கிறார்கள். இது சும்மா ஏட்டிலே சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, நாட்டு நடைமுறைக்கு நிச்சயமாக இது ஒத்துவராது.

அடுத்தபடியாக, "நீலப்பச்சை பாசி" யைக்கொண்டு உரமிடுதல் பற்றி இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். விவசாய இலாக்காவிலே ஏராளமான பிரிவுகள் இருக்கின்றன. நிறைய அதிகாரிகள் இருக்கிறார்கள். அது அவ்வாறு இருக்க வேண்டும் என்றுதான், என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்வேன். அவ்வாறு இருப்பது ரொம்பத் தேவைதான். விவசாய இலாக்கா மிகவும் இன்றியமையாத ஒன்று. இந்த நாட்டிற்கு விவசாயம் முதுகெலும்பாக இருக்கிறது. அந்தத் துறைக்குச் செலவழிக்கும் தொகை தவறாகத்தான் செலவழிக்கப்படுகிறது என்று நான் கருதவில்லை. தேவை என்று தான் நான் கருதுகிறேன். செயல்படுத்தும் திட்டங்களிலே தவறு இருக்கிறதா, அவற்றிலே கோளாறு இருக்கிறதா என்று இவைகளைப்பற்றி வேண்டுமானால் நாம் பரிசீலிக்கலாமே தவிர, பிரிவுகள் இன்னும் கூட தேவை என்றுதான் நான் சொல்வேன். இந்த அரசின் கொள்கை விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கின்ற ஆறு கட்டளைகளில் ஒன்று 'நீல பச்சை பாசி'யைக் கொண்டு உரமிடுதல். இது ரொம்பவும் விலை குறைவாக இருக்கிறது முன்பு ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்றது என்று கேள்விப்பட்டேன். இன்றைக்கு மூன்று ரூபாய்க்கும் குறைவாகத்தான் விற்கப்படுகிறது. இப்போது நிறைந்த மனத்தோடு விவசாயிகள் அதை வாங்குகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 1976-77-ல் 500 கிலோ தேவைப்பட்டது என்றும் சென்ற ஆண்டு 9 டன் விற்கப்பட்டிருக்கிறது என்றும் தகவல் இருக்கிறது. இந்த ஆண்டு 15 டன் தேவைப்படும் என்று எதிர்பார்ப்பதாகக் குறிப்பு இருக்கிறது. இவ்வாறு தேவைப்படும் இந்த உரத்தை உற்பத்தி செய்வதற்கு எந்தவிதமான இலக்கும் போடவில்லை. அதற்குத் தனி அதிகாரி இல்லை. தனி அதிகாரி மட்டுமல்ல, தனி இலாகாவே அதற்குப்

[திரு. கோ. சி. மணி] [1979 ஏப்ரல் 16

போடலாம். பயிர் நோய் பாதுகாப்புக்கு ஒரு அதிகாரி இருக்கிறார், அவரே இந்த உரத்தைத் தயாரிக்கிற இலாக்காவிற்கும் பொறுப்பேற்றிருக்கிறார். இப்படியே இருந்தால், இரண்டும் உருப்படப் போவதில்லை. இப்படியே செய்தால், இந்த முயற்சியில் நாம் பாதிக் கிணறு தாண்டியதாகத்தான் வருமே தவிர முழுக் கிணறு தாண்டியதாக வராது. இப்படிப்பட்ட விளக்கங்களை நான் தெரிந்துதான் சொல்கிறேன். அனுபவத்திலிருந்து சொல்கிறேன். இந்த அரசைக் காப்பாற்றுவதற்காக, இந்த அரசைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்தத் திட்டம் தரப்பட்டிருக்கிறதே தவிர, இது உண்மையான நிலையைப் பிரதிபலிக்கும் விவரம் அல்ல. இந்த ஆறு கட்டளைகளும் தேவையற்ற கட்டளைகள் தான். இந்தக் கட்டளைகளை நம்பி விவசாய உற்பத்திச் செலவு குறைந்துவிடும் என்று விவசாயி எவனாவது எண்ணுவானானால், நிச்சயமாக அவன் ஏமாந்து போவான் என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்னொன்று 62 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது என்று புள்ளி விவரம் இருக்கிறது. ஆனால், நடைமுறைப் பொருளாதார ஆராய்ச்சி தேசியக் கவுன்சில் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. ஒரு 20 நாட்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்தது. அவர்கள் அதிலே 62 லட்சம் டன் நெல் உற்பத்தியாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். அது நெல் தானா? இல்லை அரிசி தானா? 62 லட்சம் டன் அரிசி என்று அரசு அறிவித்திருக்கின்ற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் இருக்கிறது. ஆகவே, தேசியக் கவுன்சில் குறிப்பிட்டிருக்கும் அது தவறா, இல்லை இந்தக் கொள்கைக் குறிப்பிலே இருக்கும் இந்த விவரம் தவறா என்று எனக்குப் புரியவில்லை. கவுன்சிலுடைய அறிவிப்பு தவறாக இருக்குமானால், அதை நான் வரவேற்கிறேன். அந்த அறிவிப்புதான் தவறாக இருக்குமே தவிர, இந்த அறிக்கை தவறாக இருக்கக் கூடாது. காரணம். . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாற்றுத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கப் புத்தகத்திலே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அரிசி தான் உண்மையான தகவல்.

திரு. கோ. சி. மணி : அரிசியாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்தேன். உற்பத்தி குறைந்து போக வேண்டும் என்ற எண்ணத்திலே நான் இல்லை. இவ்வளவு உற்பத்தி செய்வதிலே உற்பத்திச் செலவு அதிகரித்துக்கொண்டு போவதற்கான பல காரணங்களைச் சொல்லி பல நாட்கள் ஆயிற்று. அதை அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது

1979 ஏப்ரல் 16] [திரு. கோ. சி. மணி]

விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சிக்கல், இந்தப் பிரச்சினை, இந்தச் சங்கடம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பிரச்சினைகள் ராஜராஜ சோழன் காலத்திலேயிருந்து கூட உருவாகியிருக்கலாம். ஆனால் அது யார் யார் காலத்தில் எப்படியெப்படி இருந்தது, யாருக்கு எந்த எந்த பிரச்சினைகள் இருந்தன என்பதைப்பற்றி உட்கார்ந்து பேசுகின்ற நிலையில் தான் நாம் இருக்கிறோம். அன்றைக்கும் பிரச்சினைகள் இருந்தன. இன்றைக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்த போதும் பிரச்சினைகள் இருந்தன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தபோது பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் அந்தப் பிரச்சினைகளில் சில மாறுதல்கள் இருக்கின்றன. அன்றைக்கு யார் யாருக்குப் பிரச்சினைகள் இருந்தன? குறிப்பாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தை எடுத்துக்கொண்டால், நிலச்சுவான்தாரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் பிரச்சினை இருந்தது. சாகுபடியாளர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் பிரச்சினைகள் இருந்தன. சாகுபடியாளர்களுக்கும் தினக்கூலிகளுக்கும் பிரச்சினைகள் இருந்தன. அதற்குப் பிறகு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் ஒரு முயற்சி எடுத்து, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போது எங்களுக்கு ஏன் தனிச் சட்டம் இல்லை, குத்தகைதாரர்களுக்கு ஏன் பாதுகாப்பில்லை, எங்களை அதிகாரபூர்வமாக ஏன் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஒரு சங்கடம் தான் அன்றையதினம் இருந்தது. தனி நிலச்சுவான்தாரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் பிரச்சினைகள் இருந்ததே தவிர, அரசாங்கத்திற்கு அந்தப் பிரச்சினைகளில் எந்தவிதமான ஈடுபாடோ பங்கோ கிடையாது. அப்படியிருந்தபோதும், அரசாங்கம் அந்தப் பிரச்சினையிலே தலையிட்டு அதைத் தீர்த்து வைத்தது. குத்தகைதாரர்களுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் 40—60 என்ற முறையிலே பங்கு இருந்ததை மாற்றி, மறைந்த காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 60-40 என்று சட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால், தொழிலாளர்களுக்குத் தினக்கூலிச் சட்டத்தை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கூட கொண்டு வரவில்லை. அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதற்காக கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு, அதன் அறிக்கையின் அடிப்படையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலி கொடுப்பதற்காக ஒரு தனிச் சட்டம் கொண்டு வந்தது. அவ்வாறு ஒரு தனிச் சட்டம் கொண்டு வந்து அதுவரையில் தீர்க்கப்படாமலிருந்த அந்தப் பிரச்சினைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு முடிவு கண்டது. மூன்று தாப்பினரை

யும் கூட்டி வைத்து முத்தரப்பு மாநாடு நடத்தி, அந்தப் பிரச்சினை தீர்க்கப் பட்டது. பின்பு திருச்சியிலேயும் இதுபோன்ற ஒரு பிரச்சினை ஏற்பட்டது. எங்களுடைய தலைவர், இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தவர் வாதாடி, இந்தச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் சட்டமன்றத்திலே கொண்டு வந்தார். திருச்சி மாவட்டத்திற்கு இந்தப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் பொருந்தாது என்று சட்டமன்றத்திலே வாதாடி திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதுபோல இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை போன்ற பகுதிகளில் இந்தப் பிரச்சினை மிராசுதாரர்களுக்கும் சம்சாரிகளுக்கும் என்ற

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 7-30)

பெயரில் இருந்தது. மிராசுகள்—சம்சாரிகள் என்ற பெயரோடு முகவை மாவட்டத்திலே இந்தப் பிரச்சினை ஒரு பெரிய சங்கடமாகவே இருந்துவந்தது. இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலேயே அதற்கும் ஒரு தீர்வு காண காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முடிவு செய்தார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இனாம்கள் என்ற பெயரில் தொல்லைகள் வந்தன. பல பெரிய சங்கடங்கள் அப்போது வந்தன. மேஜர் இனாம், மைனர் இனாம், மோகினி இனாம் என்று பல்வேறு இனாம் களின் பெயரால் தொல்லைகள் ஏற்பட்டன. இந்தத் தொல்லைகளை, இந்த வேறுபாடுகளை நீக்க வேண்டும், உழைப்பவனுக்கு நிலம் அளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 'மைனர் இனாம் அபாலிஷன் அண்டு கன்வர்ஷன் இன்டு ரயத்வாரி ஆக்ட்' என்ற சட்டம் கொண்டுவந்து, இந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டது. இதன் காரணமாக, மைனர் இனாம், மேஜர் இனாம், சர்வீஸ் இனாம், மோகினி இனாம் ஆகிய அனைத்தையும் கட்டுப் படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு முறை வகுக்கப்பட்டு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை மேற் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் புதியதொரு பிரச்சினை உருவாகியிருக் கிறது. அது நிலச் சொந்தக்காரர்களுக்கும் குத்தகைதாரர்களுக்குமிடையே அல்ல. நிலச் சொந்தக்காரர்களுக்கும் வாரதாரர்களுக்குமிடையே அல்ல. அங்கேயிருக்கிற பண்ணையாருக்கும், தினக்கூலியாட்களுக்குமிடையே அல்ல. இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினை அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கு மிடையே உண்டாகியிருக்கிறது. இதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. விவசாயிகளைப் பொறுத்தவரையில், இந்த நாட்டில் அரசாங்கம் விரும்புகிற வகையிலே உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் தீவிர சாகுபடித் திட்டம் கொண்டுவந்து அமுல்படுத்த வேண்டு மென்று நினைத்தால், அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். அத்தகைய திட்டங்களில் முழுவதுமாக விவசாயிகள் பங்கு கொண்டு உற்பத்தியை அதிகரித்துக் கொடுக்கிறார்கள். யாரும் இதை மறுக்க முடியாது. தமிழ்நாட்டில் இன்றையதினம் 62 இலட்சம் டன் அளவுக்கு அரிசி உற்பத்தி யாகியிருக்கிறது என்றால், அது ஏதோ இந்த அரசாங்கத்தின் சாமர்த்தியத் தால் விளைந்ததல்ல. இந்த நாட்டு விவசாயி அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக்கொண்டு, நிலத்தில் பாடுபட்ட காரணத்தால்தான் இந்த அளவுக்கு அரிசியை உற்பத்தி செய்ய முடிந்ததே தவிர, வேறொன்றுமில்லை. இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்கு யார் வந்தாலும், உணவு உற்பத்தியை நாட்டில் அதிகரிக்க வேண்டுமென்றால், அதைச் செய்யக்கூடியவர்கள் விவசாயி களே தவிர அரசாங்கமல்ல. அதிகரித்துள்ள உணவு உற்பத்திக்குப் பொறுப் பானவர்கள் உழைக்கும் விவசாயிகளே தவிர, வேறு யாருமில்லை. அப்படிப் பட்ட விவசாயிகள் இன்றையதினம் தங்களுக்குக் கொடுக்கப்படும் நெல்லுக் கான விலை கட்டுப்படியாகவில்லை என்று சொல்லுகிறார்கள். அதை இந்த அரசாங்கம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாக நான் பத்திரிகையில் படித்தேன். 'நெல்லுக்கு நியாயமான விலை தற்போது கொடுக்கப்படவில்லை எங்கள் தலைவரே ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 117 கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறார். அந்த விலை கொடுக்கப்படவில்லை என்றால் நான் இராஜினாமா செய்வேன். அல்லது உண்ணா விரதம் இருக்கப் போகிறேன்' என்றெல்லாம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் படித்தேன். அதற்கு நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்களுடைய உணர்வை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதனால் என்ன பலன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. அமைச்சர் அவர்கள் இராஜிநாமா செய்துவிட்டால், பிறகு யார் நெல்லுக்கு விலை ரூ. 117 என்று கொடுக்கப் போகிறார்கள்? இது வரை கொடுக்கப்படவில்லை என்றால், இனிமேலும் கொடுக்க மாட்டார்கள் என்றுதானே அர்த்தம். அமைச்சர் அவர்களால் சொல்ல முடிந்ததெல்லாம் இவ்வளவுதான் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதற்கு மேல் என்னிடத்தில் ஒன்றுமில்லை என்பதைச் சொல்லிவிட்டார். பகிரங்கமாக இதைச் சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்களை அந்த வகையில் நான் மெச்சுகிறேன். அவரால் என்ன சொல்ல முடியுமோ அதைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். எதிர்க் கட்சிக்காரன் என்ற முறையில் நான் அதை மறுக்கவில்லை, மறைக்கவில்லை. அமைச்சர் அவர்களே ஒரு விவசாயி.

விவசாயியான அவர் இந்த வேளாண் துறையை ஏற்றுக்கொண்டிருக்கிறார். நெல்லுக்குக் குறைவான விலை தருவது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிகிறது. ஒப்புக்கொள்கிறார். ஆனால் அதே காரணத்தை எதிர் வரிசையிலிருக்கிற நாங்கள் சொல்லும்போது, விவசாயிகளை இவர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்கிறார்களே, அது என்ன நியாயம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். ஆளுகிற பொறுப்பில் இருக்கிற அமைச்சர் அவர்களும் சொல்லுகிறார், நாங்களும் சொல்லுகிறோம், நெல்லுக்குக் கிடைக்கும் விலை மிகக் குறைவு என்று. ஆனால் நாங்கள் சொல்லும்போது அரசியல் நோக்கம் கற்பித்து, விவசாயிகளை இவர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று சொல்லுவது எப்படி நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். விவசாயிக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு உற்பத்திச் செலவு ரூ. 117 ஆகிறது என்று ஆளுகிற பொறுப்பில் இருக்கிறவர்களும் சொல்லுகிறார்கள், நாங்களும் சொல்லுகிறோம். நாங்கள் சொல்லும்போது, அதை 'தூண்டிவிடுதல்' என்றால், அதற்கு என்ன பொருள்? அது என்ன சாதாரணமாக எரிந்து கொண்டிருக்கிற விளக்கா தூண்டிவிட? அது இன்றையதினம் பற்றி எரிகிற ஒரு பெரும் சுவாலையாக உருவாகியிருக்கிறது. அதை யாரும் தூண்டிவிட வேண்டியதில்லை. எரிகிற சுவாலைக்குப் பின்னாலே இன்றைய தினம் அனைத்து அரசியல் கட்சிக்காரர்களும் ஓடவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. அப்படி ஓடவில்லை என்றால் பிறகு என்ன ஆகுமோ என்று அச்சப்பட்டு அவர்கள் அந்த எரிகிற சுவாலையின் பின்னாலே ஓட வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது. இதைப்போய் எப்படி தூண்டிவிடுதல் என்று சொல்ல முடியும்? இது என்ன நியாயம் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், அதை ஏழைகளின் தொழிலாக இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தின் பொருளாதாரத்தையே நிர்ணயிக்கிற தொழிலாக விவசாயம் இருக்கிறது. அந்த அளவுக்கு முக்கியமான முதலிடத்தை விவசாயம் பெறுகிறது. இந்தத் துறையில் [illegible] பிரச்சினை [illegible] பதில் இன்றைய தினம் [illegible] அளவுக்கு விட்டதற்கு யார் காரணம்? [illegible] பிரச்சினை இன்றையதினம் [illegible] போயிருக்கிறது. [illegible] அந்த அளவுக்கு அரசாங்கம் இந்தப் பிரச்சினை [illegible] இந்தப் [illegible] கொண்டிருக்கிறது. அரசாங்கம் [illegible] அவர்கள் [illegible] என்று

சொன்னார். அந்த வார்த்தையைச் சொன்னதற்காக நான் நன்றி பாராட்டுகிறேன். காரணம் அமைச்சரின் உணர்வை நான் மதிக்கிறேன். ஆனால் பிரச்சினையை நன்கு அறிந்த அரசாங்கம் எதிர்க் கட்சியில் இருக்கிற நாங்கள் விவசாயிகளின் பிரச்சினையை எடுத்துப் பேசும்போது, மாற்றுக் கருத்துக்களைச் சொல்லும்போது, திசை திருப்பாமல் இருந்திருக்குமானால், கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டு எதிர்க் கட்சிக்காரர்களை வசை பாடாமல் இருந்திருக்குமானால், மிக நன்றாக இருந்திருக்கும். சும்மாக் கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்று சொல்வதைப் போல், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பதிலாக இந்தப் பிரச்சினையையே திசை திருப்பிவிட்டது. அதன் காரணமாக இந்தப் பிரச்சினை காட்டுத் தீப் போல வளர்ந்துவிட்டது. இன்றையதினம் யாராலும் அதை அடக்க முடியாத நிலைமைக்குப் போய்விட்டது. இந்த ஆட்சி வந்த பிறகு, எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை அதிகமான அளவில் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்தாலே, இது புரியுமே? ஏறத்தாழ 14 விவசாயிகளை இந்த ஆட்சி வந்த பிறகு இரண்டாண்டுக் காலத்திலே சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். ஒரே சமுதாயத்தில் 14 பிணங்கள் விழுந்திருக்கின்றன. இரண்டு பெரிய துப்பாக்கிச் சூட்டிலே அவர்கள் செத்து மடிந்திருக்கிறார்கள். இது நியாயம்தானா? இதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தின் அணுகுமுறையில் உள்ள கோளாறே தவிர, வேறென்ன? அவர்களை அழைத்து வைத்துப் பேசி பிரச்சினையைத் தீர்த்திருக்கக்கூடாதா?

விவசாயிக்கு நெல் உற்பத்திச் செலவு குவிண்டாலுக்கு 117 ரூபாய் ஆகிறது என்று இந்த நாட்டு முதலமைச்சரே சொல்லுகிறார். ஆனால் அதே நேரத்தில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 85 ரூபாய்தான் அரசாங்கத்திலே தருவோம் என்றால், அது என்ன நியாயம்? இப்படிப்பட்ட நிலையில் எவன் இந்தத் தொழிலைச் செய்ய முன்வருவான்? இப்படித் தொழில் செய்தால், மக்கள் அவனை மிகவும் கெட்டிக்காரன் என்றா பாராட்டுவார்கள்? யாராவது 117 ரூபாய்க்கு ஒரு பொருளை வாங்கி 85 ரூபாய்க்கு விற்பதற்கு முன்வருவார்களா? யாருக்கு மனசு வரும்? அப்படி ஒருவன் செய்தால், அவனுக்குப் [illegible] தொழிலாளியா? விவசாயத் தொழில் என்பதனாலே அதில் [illegible] பார்க்கக் கூடாதா? இது எப்படி நியாயமாகும்? இதைக் கேட்டால் [illegible] இந்த நிலையில் விவசாயியின் நிலை [illegible] ஆகும்? இதற்காக அமைச்சர் [illegible] என்று [illegible] கொண்டிருக்க முடியுமா? [illegible] இருப்பார் என்று [illegible] கொண்டிருக்க முடியுமா? விவசாயிகள் [illegible] [illegible]?

உண்ணாவிரதம் வருமா? விவசாயிகளுக்கு நஷ்டம் வந்த பிறகுதான், இவையெல்லாம் வருமா? அமைச்சருடைய இராஜிநாமாவோ உண்ணாவிரதமோ விவசாயிகளின் நஷ்டத்தைத் தீர்த்திடுமா? கடன் சுமையைக் குறைத்திடுமா? இதற்கான முடிவை, ஒரு பரிகாரத்தை அரசு உடனடியாகச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதுதானே இதற்கு அர்த்தம்? இதில் அரசாங்கம் காலம் தாழ்த்திவிட்டது. இனிமேல் அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்த்திட வேண்டுமென்ற நல்லெண்ணம் இருந்தாலும், தீர்க்க முடியாது. நகத்தில் கிள்ளி எறிகிற அளவுக்கு இருந்ததை இவ்வளவு பெரிய அளவுக்கு வளர்த்துவிட்டு இன்றைக்கு கோடாரி கொண்டு வீழ்த்த நினைக்கிறீர்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

திரு. கோ. சி. மணி: அமைச்சர் அவர்களின் பதிலை நாளைக்கு வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். நான் நிறைய கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. என்றாலும் விரைவில் முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் இப்போதுதான் பேசிக் கொண்டிருந்தேன். இது பெரிய பிரச்சினை. அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கண்டிப்பாகப் படித்து பதில் சொல்ல வேண்டும். அதற்கு நேரம் ஆகும். ஆகவே நாளைக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக வைத்துக்கொள்ளலாம். நாளைக்குக் கஷ்டமாக இருக்கும் என்றால், கேள்வி நேரத்தை வேண்டுமானால் தள்ளி வைக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் எப்போது முடிப்பார் என்று தெரிவித்தால், அதற்குத் தகுந்தாற்போல் ஏற்பாடு செய்யலாம்.

திரு. கோ. சி. மணி: இன்னும் 15 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். எப்போது முடிக்கச் சொன்னாலும், முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் எப்போது முடித்துக் கொள்வார் என்று தெரிந்துகொள்வது நல்லது.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறைத்துக்கொள்ளச் சொன்னால், 10 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-40)

அமைச்சரிடமிருந்து அதிகமான பதிலை நாங்கள் எதிர்பார்க்கிறோம். அவர்களுடைய பதில் என்பது உத்தரவாதமாகும். ஆகவே அவருடைய பதில் என்னவாக இருந்தாலும், இந்தக் கொள்கைக் குறிப்பை அனுசரிக்காமல் பேசுவது நல்லதல்ல. ஆகவேதான் இவைகளையெல்லாம் நான் எடுத்துச்சொல்லுகிறேன். வாரப் பிரச்சினை, கூலிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், 75 : 25 என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அது சட்டமாக வரப்போகிறது. ஏழரை ரூபாய் கூலியென்றும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் எந்தப் பகுதியில் இருந்தாலும், எந்தப் பொறுப்பில் இருந்தாலும், முதலமைச்சர் அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். விரைவாக அது குறித்து சட்டம் வருமென்றும் எதிர்பார்க்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த வரையில், எந்த ஒரு தரப்பினரையாவது சரிக்கட்ட முடிந்ததா? விவசாயிகளுக்கு 75 சதவிதம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இதைத் தாண்டி உற்பத்திச் செலவு அதிகரித்துப் போகிறது. நிலத்தின் பரப்பைக் குறைத்து உற்பத்தித் திறனை அதிகரிப்பது என்பது முடியுமா? முடியாது. ஒரு கிலோ தூக்குபவனை ஒன்றரை கிலோ தூக்கு என்றால், தூக்கலாம். அவனை ஒரு மூட்டையைத் தூக்கு என்றால், முடியுமா? ஆகவே செலவு அதிகமாகாமல் உற்பத்தியை அதிகரிக்க முடியுமா? எந்த அரசாங்கம் வந்தாலும் எந்த அதிகாரி வந்தாலும் நிச்சயமாக முடியாது என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டும். ஆகவே உற்பத்திச் செலவு அதிகரித்து, நாட்டிற்காக உற்பத்தியைப் பெருக்குகிறபோது, உற்பத்தியான பொருளுக்கு விலை கட்டுப்படியாக வேண்டும். இதுதான் நியாயம். குவிண்டால் ஒன்றுக்கு அடக்க ரூபாய் 117 என்று அவர்களே சொல்லுகிறார்கள். இது குறித்து அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் கட்டுகிற ஒருவரிடத்திலிருந்து ஒரு கணக்கை வாங்கி வந்திருக்கிறேன். அதை இந்த நேரத்திலே சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

டிராக்டர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூட தெளிவாகச் சொன்னார். என்னிடம் தனியாகக் கூட, "விற்றுவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்; கட்டுப்படியாகவில்லை" என்று சொன்னார். டிராக்டர்களை விவசாயத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டுமென்று நம்பினால் நட்டம்தான் வரும். அதிலே சந்தேகமேயில்லை. பெரிய ஓட்டல்களில், "இனிப்புப் பலகாரங்கள் அசல் நெய்யால் செய்யப்

பட்டவை" என்று பெரிய எழுத்தில் எழுதி அதற்குப் பக்கத்திலே "அல்ல" என்ற வார்த்தையை சிறிய எழுத்தில் எழுதி வைத்திருப்பார்கள். அதைப் படிப்பவர்கள் 'அசல் நெய்யால் செய்யப்பட்டவை' என்று படிப்பார்கள். அதைப் போலவே "விவசாயத்திற்கு மட்டும்" என்று எழுதி வைத்திருப்பது சரியல்ல.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, டிராக்டர்களை விவசாயத்திற்கு மட்டும் என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி சொல்லுகிறார்கள். இது எப்போதிலிருந்து எழுதி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே சொல்லிவிட்டால், இன்னும் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுடைய பேச்சோடு இன்றைய அலுவல் முடியும். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் நாளை தம்முடைய பதிலை அளிப்பார்கள். நாளைக்கு மருத்துவத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதமும் இருப்பதால், நாளைக்கு கேள்வி நேரம் ஒத்தி வைக்கப்பட்டு, முதலிலேயே விவசாய அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலுரையை நிகழ்த்துவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கேட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் எட்டு மணிக்குள் முடித்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கோ. சி. மணி: அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறேன், வேளாண்மைக்கு டிராக்டர் தேவையென்று கருதி அதை அரசாங்கத்தின் மூலம் மானியம் பெற்றும், கூட்டுறவுத் துறையின் மூலமும் வாங்கலாம் என்று வந்ததோ அன்றைய தேதியிலிருந்தே இருக்கிறது. அதைப்பற்றி அச்சப்பட வேண்டாம். அதை நம்பி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் வாங்கியதால், இன்றைக்கு நஷ்டம் அதிகமாக இருக்கிறது என்று அவர் சொன்னார். அதிலே இன்னுமொரு தரப்பிலே நஷ்டம் வருகிறது. அந்தக் கணக்கையும் பார்க்க வேண்டும்.

1976ஆம் ஆண்டில் 3984/3920 என்ற உபப்பொருளின் விலை 125 ரூபாய், 1979ஆம் ஆண்டில் சனவரி மாதத்தில் ரூபாய் 142-50. இது சனவரியில்

கேட்ட விலை, அதற்குப் பிறகு என்னவென்று தெரியவில்லை. 125 ரூபாய்க்கு உபப் பொருள் விற்றபோது, குவிண்டால் நெல்லின் விலை 92 ரூபாய் போனஸ் வண்டிச் சத்தம். எல்லாம் சேர்த்து. ஆனால் உபப் பொருள் ரூபாய் 142-50 என்று உயர்ந்துள்ள போது, ஒரு குவிண்டால் நெல்லின் விலை 85 ரூபாய்தான். இது எப்படி நியாயமாக இருக்கும்? உபப் பொருவில் விலை 17 ரூபாய் உயர்ந்திருக்கும் போது நெல்லின் விலை 7 ரூபாய் குறைந்திருக்கிறது.

இன்னொன்று, 32,211 என்ற பேரிங் 1976ஆம் ஆண்டிலே 58 ரூபாய். அப்போது ஒரு குவிண்டால் நெல்லின் விலை 92 ரூபாய். இன்றைக்கு அந்த பேரிங்கின் விலை 158 ரூபாய். நூறு ரூபாய் விலை கூடியிருக்கிறது. ஆனால் நெல்லின் விலையில் 7 ரூபாய் குறைந்திருக்கிறது.

அடுத்து, 1976ஆம் ஆண்டிலே ஒரு லிட்டர் டீசலின் விலை ரூபாய் 1.07. 1979 ஆம் ஆண்டிலே ஒரு லிட்டர் டீசலின் விலை ரூபாய் 1.57. இது அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிற விலை. ரூபாய் 1.57 க்கு டீசல் எங்கும் நிச்சயமாகக் கிடைக்கவில்லை. ஆனால் நான் சட்டப்படி தான் பேச வேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு அவர்களுக்கு ஆகும் செலவுகளுக்கேற்ப பலன் கிடைக்கவில்லை.

ஏழரை ரூபாய் கூலியென்று சொல்லியிருக்கிறார்கள். மகசூல் காலத்திலே பணமாகத் தரப்போவதில்லை. நெல்லாகத்தான் கொடுக்கப்போகிறோம். இத்தக் கூலிக்கு நியாயம் உண்டா? இரண்டு மரக்கால் நெல்லை அரைத்தால்தான், முக்கால் மரக்கால் அரிசியாகும். அதைப் போட்டுச் சோறு ஆக்க வேண்டுமென்றால், குறைந்தது ஒன்றரை ரூபாய் விறகையாவது பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் கிட்டத்தட்ட மூன்று நான்கு ரூபாய் அரிசி சோறாகும். மேலும் குழம்புக்கு ஆகும் செலவு உங்களுக்குத் தெரியும். சோற்றை உருவாக்குவதற்கு ஆகும் செலவைவிட குழம்புக்குச் செலவு அதிகமாகும். குழம்பு வைப்பதற்கு தேவைப்படும் பணத்திற்காக விவசாயி எங்கே போவான்? அவன் வேறு எந்தத் தொழில் செய்து பணம் சம்பாதிக்கப் போகிறான்? அவன் நெல்லை விற்றுத்தான் பணம் சம்பாதிக்க வேண்டும். இல்லையென்றால் பண்ட மாற்று முறையிலா செய்யப் போகிறான்? முடியாது. தன்னிடம் உள்ள நெல்லை விற்றுவிட்டுத்தான் மற்ற பொருள்களை அவன் வாங்க வேண்டும். ஆகவே அவனுக்குக் கொடுக்கக்கூடிய கூலிக்கு நியாயம் காண அரசு முன்வர வேண்டும். நெல்லுக்கு அதிகமான விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

(திரு. கோ. சி. மணி) [1979 ஏப்ரல் 16

ஒரு ஏக்கர் நிலத்திலே நெல்லைப் பயிரிட்டால், எவ்வளவு விளைந்தால் வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றும், அதற்குப் பதிலாக ஒரு ஏக்கரில் முசுக்கொட்டையை வளர்த்து பட்டுப் பூச்சியை உருவாக்கினால் எவ்வளவு **வருமானம்** வரும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படிச் சொல்லுவதால் நெல் உற்பத்தி பண்ண வேண்டாமென்று சொல்லுகிறார்களா? அதுதானே அர்த்தம்? இதனால் கடைசியில் என்னவாகும்? ஒருவன் வயிற்று வலிக்கு மருந்து கேட்டால், அவனுக்குச் சோடா கொடுப்பதைப் போலத்தான் இருக்கிறது. அவனுக்கு மருந்து கொடுக்க வேண்டுமே தவிர, சோடா கொடுக்கக் கூடாது. நெல் வளர்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்களைத் திசை திருப்பிவிடுகிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் பட்டுப் பூச்சி உற்பத்தி செய்ய வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. எல்லோரும் அங்குள்ள 15 இலட்சம் ஏக்கரிலும் பட்டுப் பூச்சியை உற்பத்தி செய்ய முற்பட்டால், அடுத்த வருடம் மூட்டை நெல் 200 ரூபாய்க்கு விற்கும், பிறகு குவிண்டால் 500 ரூபாய்க்கும் விற்கும். இப்படித்தானே நிலைமை வரும்?

அடுத்து, 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நெல் சாகுபடியிலிருந்து மாற்றி வேர்க்கடலை சாகுபடியின் கீழ் கொண்டு வந்திருக்கிறோம் என்று பெருந்தன்மையோடு அறிவித்திருக்கிறார்கள். இதை அரசாங்கமா செய்தது? இல்லை. விவசாயிகளே தங்களது தேவைக்கேற்ப நெல் உற்பத்தியைப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு வேர்க்கடலையைப் போடலாம் என்று போட்டிருக்கிறார்கள். அவர்களாகவே போட்டதைக் கணக்கில் எடுத்து அரசாங்கமே செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இது எப்படி உண்மையாக இருக்கும்? விவசாய இலாகா ஒத்துக்கொண்டதால், ஒரு இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி குறைந்து போய்விட்டது.

மாண்புமிகு திரு.[1] ப. குழந்தைவேலு : துணைத்தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே நெல்லை மட்டும் உற்பத்தி செய்யுமிடத்திலே மாற்றுப் பயிர்களையும் கொண்டு வரவேண்டுமென்ற அடிப்படையிலே பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பருத்தி சாகுபடி செய்தார்கள். இந்த ஆண்டும் அதிகமான நிலப்பரப்பிலே பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பருத்தி சாகுபடி செய்யும் திட்டத்தை விவசாயத் துறையின் மூலமாக ஊக்கப்படுத்த வேண்டியதில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா?

(பிற்பகல் 7-50)

1979 ஏப்ரல் 16] (திரு. கோ. சி. மணி)

திரு. கோ. சி. மணி : அரசு ஊக்கப்படுத்தியிருந்தால் அதை நான் வரவேற்கிறேன். அதை நான் பாராட்டுகிறேன். ஒரு ஏக்கர் நெல் பயிரிட்டால், இவ்வளவுதான் விவசாயிக்குக் கிட்டும். ஒரு ஏக்கர் இந்தப் பயிரைச் செய்தால் இவ்வளவு பலன் கிடைக்கும் என்பதை அறிவிக்கின்றபோது, சம்பந்தப்பட்ட விவசாயிகள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு என்ன தோன்றும்? நெல்லை நம்பிப் பயன் இல்லை என்றுதானே தோன்றும். இன்றையதினம் அரசுக்கு அரிசி தேவையில்லை. தேவைக்கு அதிகமான இருப்பு இருக்கின்றது. அதையெல்லாம் விற்றுவிட்ட பிறகு, தீர்ந்துவிட்ட பிறகு, அப்படிச் சொல்ல முடியுமா?

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், 8 வது நாளில் ஒரு அறிவிப்பு செய்தார்கள். வெளி மாநிலங்களுக்கு உணவு அளிக்கின்ற அளவுக்கு நாம் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், தஞ்சைத் தரணியில் உள்ள மக்கள் அவர்கள் நிலங்களில் ஒரு போக சாகுபடி செய்வதைவிட, இரு போக சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதே மாதிரி சாகுபடி அதிகமாகச் செய்தார்கள். அந்த அளவுக்கு அப்போது ஊக்குவித்தார்கள். அவர் பெயராலே ஆட்சி இன்று நடத்துகிறீர்கள். அ.தி.மு.க. இன்று ஆட்சிக்கு வந்த பிறகு, ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்வது குறைந்துவிட்டது. அரசின் அணுகு முறை தவறாலே இப்படிக் குறைந்துவிட்டது என்று சொல்லிக்கொள்கிறேன். பொருள்கள் வாங்க முடியவில்லை, பயிர் செய்ய முடியவில்லை, பயிர் செய்துவிட்டு நஷ்டப்படுவதைவிட பயிர் செய்யாமல் இருந்துவிடுவோம் என்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று நான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்பான் வரையிலும் கூட போய் வந்திருக்கிறார்கள். அங்கே என்ன பார்த்திருக்கிறார்கள்? விவசாயத் துறையில் அங்கே என்ன நடக்கிறது? ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. அவர்கள் கூடிப்பேசி உற்பத்திச் செலவு இவ்வளவு ஆகிறது என்பதைக் கருத்தில் கொண்டு விலையை நிர்ணயிக்கின்றார்கள். அப்படி நிர்ணயித்து அறிவித்த பிறகு, கூட்டுறவுத் துறை மூலம் அரசாங்கம் அந்த நெல்லை, விவசாய பொருள்களைக் கொள்முதல் செய்கிறது. அங்கே அவர்கள் தனியாரை நம்புவதேயில்லை. அறிவித்திருக்கின்ற விலைக்கு கூட்டுறவுத் துறை மூலம் வாங்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையிலேதான் முதலில் வாங்கப்படுகிறது. பிறகு அதைக் கூட்டுறவுத் துறை அரசாங்கத்திலே ஒப்படைத்து விடுகிறது. இந்தக் கொள்கையால் அங்கே விவசாயிகள் பிரச்சினையில்லை. அங்கே

யாரையும் யாரும் தூண்டவும் இல்லை. அவர்களாகவே நடத்திக் கொள்கிறார்கள். ஆனால் இங்கே உள்ள விவசாயிகள் பிரச்சினைக்கு யார் காரணம்? விவசாயிகளின் நிலைமைகளை நாம் தெரிந்துகொண்டு நடக்க வேண்டும். அதைப் புரிந்துகொண்டுதானே நடக்க வேண்டும். இன்று இந்தப் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் என்று ஒன்று கொண்டுவந்தோம். அதிலே இந்த அரசு என்ன செய்தது? 2 வருடம் 3 மாதத்திலே திருத்தங்கள்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒன்றரை ஆண்டுகாலத்து ஆட்சியில் அந்தச் சட்டத்திற்கு மூன்று திருத்தங்கள் வந்திருக்கின்றன. அந்த ஒரு சட்டத்தில் 3 முறைகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. எவ்வளவு காலத்திற்கு அவகாசம் இருந்திருக்கிறது? ஏன் அதில் ஒரு நிரந்தரப் பரிகாரம் தேடக்கூடாது? மூன்று முறைகள் திருத்தம் வந்திருக்கின்றது. ஒரு முறை செப்டம்பரிலே வந்தது. ஒரு முறை ஜனவரியிலே வந்தது. அதற்குப் பிறகு ஜூனில் ஒன்று வந்திருக்கிறது. இந்த ஜூலையில் அவர்கள் கட்டவேண்டியதாக இருக்கிறது. அவர்கள் இந்த குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து வெளியே வரமுடியாமல் இருக்கிறார்கள். குத்தகையைத் தர முடியாமல், செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். வெள்ளம் காரணத்தினாலும், புயல் காரணத்தினாலும் அவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து 2, 3 வருடங்களாக அவர்களால் குத்தகை பாக்கியைச் செலுத்த முடியவில்லை. அதன் காரணமாக இந்தத் தவணைகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஜனவரி 15ஆம் தேதி வரை கொடுத்திருந்தார்கள். அதை ஜூலை 15ஆம் தேதி வரை நீடித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஜனவரியிலே செலுத்த முடியாதவர்கள், ஜூலை 15க்கு மேலே செலுத்த முடியுமா? தஞ்சை ஜில்லாவிலே, ஜனவரியில் வயலிலே கொஞ்சமாவது இருக்கும், அறுவடை செய்திருந்தால் கொஞ்சம் நெல்லாவது இருக்கும், களத்திலே ஏதாவது இருக்கும். ஜூலை மாதம் 15ஆம் தேதியிலே என்ன இருக்கும்? ஜூலையிலே தஞ்சையிலே, வெறும் தரைதான் இருக்கும். வேறு எதுவும் அவர்களிடம் இருக்காது. ஜூலை மாதம் 15 ஆம் தேதி வந்த பிறகு 16ஆம் தேதியன்று பாக்கியைக் கட்டவேண்டும் என்பதுதானே அதன் பொருள். அந்த 15ஆம் தேதி கட்ட முடியவில்லை என்றால், இன்னொரு தவணைக்கு மாற்றப்போகிறார்கள். இது என்ன கொள்கை? இது யாரைப் பாதுகாக்கிறது? ஆக மொத்தத்தில் இங்கே இருக்கின்றவர்கள் ஒருவருக்கொருவர் சுமுகமாக இருக்கின்ற சூழ்நிலையைக் கூட

கெடுக்கிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டும். அவர்கள் ஜூன் மாதம் அந்த பாக்கித் தொகையை எப்படி கட்டப்போகிறார்கள்? 1976-77-ல் வறட்சி, 1977-78-ல் வெள்ளம், புயல் இப்படி 3, 4 ஆண்டுகளாக தொடர்ந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பார்களே, அது போல அவர்கள் நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலைமையில் அவர்கள் அந்த பாக்கித் தொகைகளை எப்படி செலுத்த முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஜூலை மாதம் 16 ஆம் தேதி அந்த குத்தகை பாக்கியை எப்படிச் செலுத்தப்போகிறார்கள்? அவர்கள் செலுத்துவதற்கு வாய்ப்பு என்ன இருக்கிறது? சாத்தியக்கூறு என்ன இருக்கிறது? அதைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? ஜூலை 15 வரை என்றால், ஜூலை 15 ஆம் தேதி குத்தகை பாக்கியை அவர்கள் செலுத்தியாக வேண்டும். இந்த நிலைமையில் சட்டத் திருத்தம் தான் காலத்தை நீடிக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விவசாயிகள், சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டம் எப்போது வந்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவித்தால், இன்னும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு அதைப் பற்றிச் சொல்ல வாய்ப்புத் தந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மறந்துவிட்டதை நினைவூட்டுகின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் இந்த விவசாயக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. இந்த மாதிரி வரவில்லை. வைத்தியம் பண்ணுவதற்கு மருந்து கொடுத்தார்கள் எங்களுடைய தலைவர் அவர்கள். வயிற்று வலிக்காரனுக்கு மருந்தையே கொடுத்தார்கள். என்ன மருந்து கொடுத்தார்கள்? இந்தப் பசலியினுடைய குத்தகையைக் கொடுத்துவிட்டால், இதற்கு முன் இருந்த அத்தனை பாக்கிகளையும் ரத்து செய்கிறோம் என்றுதான் சட்டம் போட்டார்கள். அந்தச் சட்டத்தைத்தான் போட்டிருக்கிறார்கள். இப்போது போல மூன்று முறை ஒத்தி வைக்கவில்லை. ஒரே முறைதான் செய்திருக்கிறார்கள். இன்றும்கூட சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பிரச்சினை குறித்து தஞ்சை மாவட்டத்திற்கு அவர் வந்தபோது, இதைப்பற்றி எடுத்துக்கூறி வாதாடியவன் நான். நான் இன்னும் சாகவில்லை. அப்படிப்பட்ட பிரச்சினையில் நான் கோரியதை எடுத்துக் கொண்டு செய்தார்கள். இந்தச் சட்டத்தை எங்கள் தலைவர் திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார்கள். உங்களைப் போல மூன்று முறை ஒத்திவைக்க விரும்பவில்லை. இப்போது 1 1/2 வருட காலமாக ஒத்தி வைத்துக்கொண்டே வருகிறார்கள். இன்றைய பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணுவது? ஜூலை மாதம் 15-ம் தேதி எப்படி அவர்கள் பணத்தைக் கட்டப்போகிறார்கள்? அவர்களுக்குக் கால அவகாசம் தான் கொடுக்கிறார்கள். இன்னும் மூன்று மாதங்கள்தான் இருக்கின்றன. இப்படிப் பட்ட பிரச்சினையிலே அரசு அருள்கூர்ந்து தக்க பரிகாரம் காண வேண்டும். இந்தப் பிரச்சினையில் அரசின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சொல்பவர்கள் எந்தக் கட்சியிலே இருந்து கொண்டு சொல்கின்றார்கள் என்று பார்க்க வேண்டாம். உள்ளபடியே இதயம் உள்ளவர்களாக இருந்தால், அதைப் பற்றி நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையிலே தீர்வு காணுவதற்கு நிரந்தரமான பரிகாரம் பெறுவதற்கு, அந்தப் பக்கம் கொஞ்சம் கண் திறந்து பாருங்கள். கூக்குரல் வருகின்ற பக்கம் கொஞ்சம் காதை வைத்துக்கேளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணுங்கள் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 8-00)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

121. Return of Assets of Hon. Thirumathi Subbulakshmi Jagadeesan, M.L.A. (Minister for Handlooms & Textiles) and Thiru M. Sivaperumal, M.L.A., placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on the 27th August 1969.

* 122. A Review of the Activities of the Tamil Nadu Dairy Development Corporation Limited during the year 1978–79 (Tamil and English).

* 123. Policy Note on Dairy Development Department and Milk Supply Schemes, 1979–80. (Tamil and English).

* 124. Seventh Report of the Committee on Public Accounts on the Supplementary Report of the Comptrollsr and Auditor-General of India for the year 1973–74. (Civil). (Tamil).

* Circulated to all M.L.Cs. on 11th April 1979.

இணைப்பு I

[419 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

உரங்கள், உணவுக்கு உபயோகிக்கப்படாத எண்ணெய்கள் ஆகியவை தயாரிப்பதற்கு சர்க்கரைக் கழிவுப்பாகை (Molasses) என்பது பற்றி அரசு ஏற்கனவே ஆய்வு செய்து தேவையில்லை என்று முடிவெடுத்துள்ளது.

2. சர்க்கரைக் கழிவுப்பாகு வடிப்பதங்களுக்கும், கால்நடை உணவு தயாரிப்பதற்கும், எள் அரைப்பதற்கும், தோல் பதனிடும் தொழிலுக்கும் ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் வேளாண்மைத்துறை இயக்குநர், முன்னாள் தொழில் வணிகத்துறை இணை இயக்குநர், எண்ணெய் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆகியோர் உணவுக்கு உபயோகப்படாத எண்ணெய் தயாரிப்பதற்கும், உரம் தயாரிப்பதற்கும் சர்க்கரைக் கழிவுப்பாகு தேவையில்லையென்று கருதுகின்றனர். ஆந்திராவின் வருவாய் வாரியமும் இதுகாறும் உணவுக்கு உபயோகப்படாத எண்ணெய் தயாரிப்பதற்கு சர்க்கரைக் கழிவுப் பாகு ஒதுக்கப்படவில்லையென்று தெரிவித்துள்ளது. ஆனால் தமிழக அரசு தொழில் வணிகத்துறை இணை இயக்குநர் (இரசாயனம்) சர்க்கரைப் பாகுக்கழிவை உபயோகிப்பதால் நல்லெண்ணெய் தயாரிக்கும்பொழுது அதற்கு மணம் ஏற்படுகிறதென்றும் பிண்ணாக்கை கட்டுப்படுத்துவதற்கு உதவுகிறது என்றும், எண்ணெயின் அளவு அதிகமாகிறதென்றும், அதேபோல உணவுக்குப் பயன்படாத எண்ணெய் தயாரிப்பில் சர்க்கரைப்பாகுக் கழிவைப் பயன்படுத்தினால் இதேமாதிரி அனுகூலங்கள் உண்டாகிறதென்றும் கருதுகிறார். உரம் தயாரிப்பதிலும், சர்க்கரைப் பாகுக் கழிவைப் பயன்படுத்தலாமென்று கருதுகிறார். தொழில் நுட்பக் கருத்துக்கள் முரண்பாடாக இருந்தமையால் வேளாண்மை இயக்குநர் அவர்கள், உணவுக்குப் பயன்படாத எண்ணெய் தயாரிப்பதற்கும் உரங்கள் தயாரிப்பதற்கும் சர்க்கரைப் பாகுக் கழிவுடனோ அல்லது இல்லாமலோ சோதனை நடத்தி சர்க்கரைப்பாகுக் கழிவு அத்தியாவசியமா என்று திட்டவட்டமான அறிக்கை தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். வேண்டிய இயந்திரங்கள் இல்லாமையால் சோதனையை நடத்த முடியவில்லையென்றும், காதி, கிராமத்தொழில் வாரியத்தை கலந்தறியலாம் எனவும் யோசனை தெரிவித்தார். காதி கிராமத் தொழில் வாரியம் உணவுக்குப் பயன்படாத எண்ணெய் தயாரிப்பதில் சர்க்கரைப்பாகுக் கழிவு வேண்டுமென்றும் அது இருந்தால்தான் எண்ணெய்க்கு மணம் இருக்குமென்றும், இது ஏற்கனவே வழக்கத்தில் இருப்பதால் தனிச்சோதனை ஒன்றும் வேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளது. இருப்பினும், வேளாண்மைத் தொழில் கழகம் (Agro Industries Corporation) உணவுக்குப் பயன்படாத எண்ணெய்கள் மற்றும் உரங்கள் தயாரிப்பதற்கு சர்க்கரைப்பாகுக் கழிவு அத்தியாவசியமில்லை என்று கருத்து தெரிவித்துள்ளது.

மேலே கூறிய கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து, உணவுக்குப் பயன்படாத எண்ணெய், உரம் தயாரிப்பதற்கு சர்க்கரைப்பாகுக் கழிவு ஒதுக்க தேவையில்லை என அரசு முடிவு எடுத்தது.

3. இதனடிப்படையில் அரசு 26—7—1978 தேதியிட்ட 759 எண்ணில் ஆணை பிறப்பித்துத்துள்ளது.

இணைப்பு II

419 ஆம் பக்கத்தில் இனம் 4(2)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதனிடப்பட்ட தோல்களுக்கு சுகாதாரச் சான்றிதழ்களைக் காட்டுமாறு இத்தாலி நாட்டு விமான நிலையச் சுங்க அதிகாரிகள் வற்புறுத்துகிறார்களென தோல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவிற்கு தகவல் வந்துள்ளது. சான்றிதழ்களின் தேவையால் ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டு இத்தாலிய விமான நிலையத்தில் எடுப்பதற்காக உள்ள இந்தச் சரக்குகள் பதனிடப்பட்ட தோல் சரக்குகளைச் சார்ந்ததாகும். கால்நடைகளின் எவ்வித நோயின்றி அறவே நீக்கப்பட்டு, முழுவதும் பதனிடப்பட்ட தோல்களாகையால் சரக்குகளுடன் சான்றிதழ்களை இணைக்கவில்லை. இத்தாலிய அதிகாரிகள், இதுபோன்ற சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் இல்லாமல் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று அவர்கள் சுகாதாரச் சான்றிதழ்கள் கேட்க ஆரம்பித்துள்ளனர். இச்சான்றிதழ்கள் முன்பு பச்சைத் தோல்கள் ஏற்றுமதிக்கு அனுமதி செய்யப்பட்டபொழுது அனுப்பப்பட்டு வந்தன. ஓரளவு பதனிடப்பட்ட தோல்களுக்கும் இச்சான்றிதழ்கள் அவசியமாயிருந்தன. ஆனால் முழுவதும் பதனிடப்பட்ட தோல்களுக்கு இத்தாலிய அதிகாரிகள் சான்றிதழ்கள் கேட்பது சரியல்ல. தோல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு, இந்திய அரசின் வணிக அமைச்சகத்தின் கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்றுள்ளது. ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டு இத்தாலிய விமான நிலையத்தில் இருக்கின்ற பதனிடப்பட்டதோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் ஏற்பாடு செய்யுமாறு 'ஏர் இந்தியா' நிறுவனத்தைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பொழுது இத்தாலி நாட்டுக்குரிய பதனிடப்பட்ட தோல் சரக்குகளுக்கு சுகாதாரச் சான்றிதழ்கள் இணைக்கப்படுகின்றன.

2. சமீப மாதங்களில் தோல் ஏற்றுமதியிலுள்ள தாமதத்திற்குரிய காரணங்கள் (1) 'ஏர் இந்தியா' நிறுவனத்தில் சரக்குகள் தேங்கி இருந்தல் மற்றும் (2) சுங்க இலாகாவினர் ஏற்றுமதி செய்ய ஒப்பந்தமாகியுள்ள ஒவ்வொரு சரக்குக்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Central Leather Research Institute) சான்றிதழ்கள் கேட்பது.

3. இச்சான்றிதழ்கள் ஏற்றுமதி செய்ய இருக்கின்ற பொருள்கள் பதனிடப்பட்ட தோல்களா அல்லது இல்லையா என்பதைக் காட்டும். தற்பொழுது மேற்படி நிறுவனத்தின் குழு நாள்தோறும் கூடி ஏற்றுமதிக்குரிய சரக்குகள் பதனிடப்பட்டதா அல்லது இல்லையா என்று முடிவெடுப்பதால், பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதியில் இப்பொழுது தாமதமில்லை என்று தெரிகின்றது.

இணைப்பு III

420 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

1979-80 ஆம் ஆண்டு வேளாண்மை குறித்த கொள்கை விளக்கம்.

வேளாண்மைத் துறையின் பங்கு.—வேளாண்மை எனும் தொழில், தமிழகத்தில் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. மாநில வருவாயின் ஏற்ற இறக்கம் மேற்படி தொழிலின் உற்பத்தியைத்தான் பெரிதும் நம்பி இருக்கிறது. அந்த வகையில் இத்துறையின் பணி மகத்தானது. நடைமுறைச் சிக்கல்களைச் சரியாகப் புரிந்து கொண்டு, அதற்கான விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் இத்துறை தன் தலையாய பணியைச் செய்திருக்கிறது. உழவுத் தொழிலுக்கு கொண்டு வரக்கூடிய புதிய நிலங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டு தரிசு நிலங்களின் பரப்பளவு குறைக்கப்பட்டு வருகின்றது. எனவே இருக்கும் நிலங்களில், எப்படி அதிக மகசூல் கொண்டுவருவது என்பதே, இப்போதைய பரிகாரமாய் இருக்கிறது. அந்த வகையில் உயர் விளைச்சல் தரும் இரகங்களைப் பயிரிடுதல், தரமான விதைகள், உரம், பூச்சி மருந்துகள் இவற்றைச் சரியாகப் பயன்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளத்தக்கன. இதைத் தவிர மாநிலத்தின் பல்வேறு வேளாண் பருவ பகுதிகளுக்கு ஏற்ப, இருக்கும் நிலம், நீர் ஆகியவற்றை சிக்கனமாகவும், இலாபகரமாகவும் பயன்படுத்த, கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை வழி வகுப்பதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளின் பயன்களை உழவர் பெருமக்களுக்கு உரிய முறையில் எடுத்துச் சொல்லி ஏற்றுக்கொள்ள வைக்கும் பணியையும் இத்துறை செய்து வருகிறது. அதோடு ஆங்காங்கே உள்ள ஆராய்ச்சி நிலையங்கள், அனுசரணை ஆராய்ச்சி முடிவுகள் இவற்றின் உதவி கொண்டு, பலதரப்பட்ட வேளாண்மை பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மகத்தான சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் மிகையாகாது. வேளாண்மையில் மானாவாரி சாகுபடி அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. மழை நீரை சேகரித்தல், நிலத்திருத்தம், நிலவளத்தை அபிவிருத்தி செய்தல், கலப்பு மற்றும் பலபயிர் சாகுபடி, கசிவுநீர் குட்டைகள் மற்றும் சமுதாயக் கிணறுகள் அமைத்தல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட விவசாயி மற்றும் வேளாண் சமுதாயத்தை எதிர்நோக்கி உள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிகிறது.

[1979 ஏப்ரல் 16

1978-79 ஆம் ஆண்டின் சாதனை.

பருவ நிலை.—தென்மேற்குப் பருவ மழையின் அளவு வழக்கமான அளவைக் கொண்டிருந்தாலும், பெரிய நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் நீங்கலான மற்ற பகுதிகளில் கடந்த இரு ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டிலும் மிகவும் தாமதித்துப் பெய்துள்ளது. காலத்தே மழையின்மை காரணமாக இப்பருவ மழையைக் கொண்டு பயிரிடப்படும் பெரும் பரப்புகள் பாதிக்கப்பட்டன. செப்டம்பர் மாதத்தில் மட்டும்தான் அதிக அளவு மழை பெய்தது. இதன் விளைவாக நெல், மானாவாரி சிறுதானியம், பயறு வகைகள், பருத்தி, வேர்க்கடலை பயிரிடும் பரப்பு பெருமளவு குறைந்தது. 0.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல்லும், 1.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரி சிறுதானியமும், 0.17 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயறு வகைகளும், 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தியும், 0.55 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வேர்க்கடலையும் சாகுபடிக்குக் கொண்டுவர இயலாமற் போயிற்று. இதனையடுத்து வடகிழக்குப் பருவமழை இம்மாநிலத்தில் பெருமளவு மழையையும் வெள்ளத்தையும் கொண்டு வந்தது எனினும் சென்ற ஆண்டினைப்போல் அவ்வளவு கடுமையாக இல்லை.

1977-78 ஆம் ஆண்டில் வந்த புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவை கவனத்தில் கொண்டு, இந்த ஆண்டின் வடகிழக்குப் பருவ மழையின் நிலைமை தொடர்ந்து கண்காணித்து வரப்பட்டது. புயல் மற்றும் வெள்ளம் ஏற்படின், அதற்கென உடன் நடவடிக்கை எடுக்க முன்கூட்டியே திட்டமும் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவக் காற்றால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அதிக மழை பெய்தது. அதன் விளைவாக நெல், வாழை, வெற்றிலை, உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகள் ஆகியவற்றுக்கு சேதம் ஏற்பட்டது. இம்மாநிலத்தில் 1978 ஆம் ஆண்டில் நவம்பர், டிசம்பர் திங்களில் மூன்று தடவை அதிக மழை பெய்ததன் விளைவாக பெருமளவு வெள்ளம் ஏற்பட்டது. எனினும், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடன் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப்பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. முந்திய ஆண்டில் மேற்கொண்டதுபோல கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகளை அரசு அறிவித்தது. மேலும், இந்த இழப்பினை மட்டுப்படுத்துவதற்கு இயல்பான ஒவ்வொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொண்டது.

1. தாளடி, சம்பா பயிர் செய்வதற்காக சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாக நெல் விதை வழங்குதல்.

1979 ஏப்ரல் 16]

2. தாளடி பயிருக்கான உரங்களுக்காகும் செலவிலும், சம்பா பயிர் பேணுவதற்கான தழைச்சத்து உரங்களுக்காகும் செலவிலும் 25 சதவிகித உதவித் தொகை சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் வழங்குதல்.

3 வாழை, கரும்பு ஆகியவற்றை மீண்டும் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஊக்க உதவித் தொகை என்ற வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 மானியத் தொகையை வழங்குதல்.

4. வெற்றிலைக் கொடிக்காலை மீண்டும் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும், ஊக்க உதவித் தொகை என்ற வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகையை வழங்குதல்.

5. பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய தென்னங் கன்றுகள் வளர்ப்பதற்காக சிறு விவசாயிகளுக்கு இலவசமாக தென்னங் கன்றுகளை வழங்குதல்.

6 ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250, தனி நபர் ஒருவருக்கு ரூ. 1,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு உருளைக்கிழங்கு விதைகள் 25 சதவிகித மானிய விலையில் வழங்குதல்.

7. காய்கறி விதைகளை இலவசமாக வழங்குதல்.

8. மண்மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய செலவில் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பிற்கு உட்பட்டு வேளாண் துறை மூலம் சீர்திருத்தம் செய்து தருதல்.

முதல் பருவத்தில் ஏற்பட்ட உற்பத்திக் குறைவு மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட உற்பத்தி இழப்புகளை ஈடு செய்ய ஏரிகளிலும், கிணறுகளிலும் உள்ள நீர் வசதிகளைக் கொண்டு கடந்த ஆண்டைப் போலவே கோடையில் பயிரிடுவதற்கான பெரிய அளவில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் குறிப்பிடத்தக்க முயற்சியின் வாயிலாக உற்பத்தித் திறன் அதிகம் பெறத் தக்க நவரைப் பருவத்தில் குறைந்த வயதுடைய நெல் மற்றும் அதிக நீர் தேவையில்லாத பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் 1978-79 ஆம் ஆண்டின் உற்பத்தியின் அளவை பெருமளவிற்கு உயர்த்த முடியும். 1977-78 ஆம் ஆண்டில் 0.60 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல் பயிரையும் 0.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சிறுதானியமும், 1.20 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் வேர்க்கடலையும் பயிரிட திட்டமிடப்பட்டது. எனினும் 1.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல்லும், 0.41 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் சிறுதானியமும், 1.55 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் வேர்க்கடலையும் பயிரிடப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் உற்பத்தியை எய்த

0.40 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் நெல்லும் 0.32 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் சிறுதானியமும் 0.10 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் பயறு வகைகளும், 0.35 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் வேர்க்கடலையும், 0.05 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் எள்ளும், 0.42 இலட்சம் ஹெக்டேர் கூடுதலான பரப்பில் பருத்தியும் சாகுபடிக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டது :—

அரிசி	64·00	இலட்சம் டன்கள்
சிறு தானியங்கள்	20·00	,,
பயறு வகைகள்	3·25	,,
எண்ணெய் வித்துக்கள் ..	14·07	,,
கரும்பு (வெல்லம்)	18·50	,,
பருத்தி	3·75	இலட்சம் பேல்கள்

மேலும், கீழ் பவானி நீர்த் தேக்கத்திலுள்ள சாதகமான நீர் வசதியைப் பயன்படுத்தி, கோபி, ஈரோடு கோட்டங்களில் 32,000 ஹெக்டேர் பரப்பளவில் எள் சாகுபடிக்கான ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் சாதாரணமாக இப் பருவத்தில் தரிசாக இருந்த நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது

1978-79 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி திட்டமிட்ட அளவான 15.70 இலட்சம் டன்னிற்கு எதிராக 14.07 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பருவ ஆரம்ப காலத்தில் மழையின்மையாலும் மற்றும் தென்மேற்குப் பருவமழை தாமதித்து பெய்ததினாலும் மானாவாரிப் பட்டத்தில் சாகுபடிப் பரப்பு குறைந்ததுடன் உற்பத்திக் குறைவும் ஏற்பட்டது. அம்மாதிரியே பருத்தியின் உற்பத்தி திட்டமிட்ட அளவான 4.25 இலட்சம் பேல்களுக்கு எதிராக 3.75 இலட்சம் பேல்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பொய்த்ததின் காரணமாக சாகுபடி பரப்பு குறைந்ததுடன் புயல் மற்றும் மழையினால் பருத்தியின் பின் பருவத்தில் பூக்கள் உதிர்ந்து சேதமடைந்ததினால் ஏற்பட்ட குறைவான உற்பத்தியே இதற்குக் காரணமாகும்.

1979-80 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்களும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களும்.

கடந்த ஆண்டுகளின் செயல்முறை, சாதனைகளைக் கருத்திற்கொண்டும் தற்போதுள்ள நிலையினையும் வருங்காலத் தேவையினையும் கருத்திற்

கொண்டும், 1979-80 ஆம் ஆண்டில் உணவுதானியங்கள் உற்பத்தி 88.73 இலட்சம் டன் என்ற அளவிலும், வர்த்தகப் பயிர்கள் உற்பத்தி 36.45 இலட்சம் டன் என்ற அளவிலும் கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப் பட்டுள்ளது :—

		குறியீடு.
அரிசி	65·00	இலட்சம் டன்கள்.
சிறு தானியங்கள்	20·15	,,
பயறுவகைகள்	3·58	,,
எண்ணெய் வித்துக்கள் ..	16·03	,,
கரும்பு (வெல்லம்)	19·67	,,
பருத்தி	4·40	இலட்சம் பேல்கள்.

கடந்த சில ஆண்டுகளில் அரிசி, சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதில் பெருமளவு முன்னேற்றத்தை நாம் எய்துள்ளோம். சாதகமற்ற பருவ நிலையைக் கொண்டிருந்த ஆண்டுகளிலும் அரிசி மற்றும் சிறுதானியத்தில் தன்னிறைவு அடைந்துள்ளோம். குறிப்பிட்ட பரப்பில் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலம் மிகுதிப் பரப்பை தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்கக்கூடிய பிற பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏற்ப திட்டமிடப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில், அரிசி உற்பத்தி 64.00 இலட்சம் டன்னில் இருந்து 65.00 இலட்சம் டன்னிற்கு அதிகரிக்கப்படும். இது உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் அடையப் பெறும். அதே சமயம் தற்பொழுது நெல் சாகுபடியாகும் 27.00 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் இருந்து 26.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பிற்குக் குறைக்கப்பட்டு அதன் மூலம் உபரியாகும் 50,000 ஹெக்டேர் பரப்பு, வேர்க்கடலை, பருத்தி சாகுபடிக்கு ஒதுக்கப்படும். இதன் மூலம் தேவைக்கும் உற்பத்திக்கும் உள்ள இடைவெளி குறைக்கப் படும்.

நெல் மற்றும் சிறு தானியங்கள்.—புதிய அமோக விளைச்சல் இரகங்களையும் வீரிய ஒட்டு இரகங்களையும் புகுத்துவதின் மூலமும், அவற்றைப் புதிய பரப்புகளில் பயிரிடுவதின் மூலமும், அரிசியில் கடந்த ஆண்டின் உற்பத்தி அளவைவிட ஒரு இலட்சம் டன் உயர்த்தவும், சிறு தானியத்தில் 0.15 இலட்சம் டன் கூடுதலான உற்பத்தியைப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1978-79-ல் 22.40 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டிருந்த அமோக விளைச்சல் தரும் நெல் இரகங்களின் பரப்பு 22.80 இலட்சம் ஹெக்டேர் பரப்புக்கு அதிகரிக்கப்படும். அதில் ஓரளவு புஞ்சைப் பகுதிகள் அடங்குகின்றன. அதுபோலவே சிறு தானியத்தில் 1978-79 ஆம் ஆண்டில்

5.60 இலட்சம் ஹெக்டேராக இருந்த பரப்பு, 1979-80 ஆம் ஆண்டில் 6.25 இலட்சம் ஹெக்டேர் அளவு சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 21.87 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் நெல்லும், 4.46 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சிறு தானியமும் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது. நடப்பு ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள மீதமுள்ள பரப்பும் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேற்கொண்ட ஆராய்ச்சி அடிப்படையில், நெல் பயிர் சாகுபடி செலவைக் குறைத்து அதன் உற்பத்தித் திறனைப் பெருக்க குறைந்த செலவுள்ள அதிக திறன் வாய்ந்த தொழில் நுட்பத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இடுபொருட்களின் அளவைக் குறைத்தல், அவற்றின் திறனை அதிகப்படுத்தல், உற்பத்தியை அதிகப்படுத்தவல்ல குறைந்த விலையுள்ள புதிய இடுபொருட்கள் ஆகியவற்றை கையாளுவதின் மூலம் இதனைச் சாதிக்க முடியும். இப்புதிய தொழில் நுட்பம் பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது :—

1. வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல்.
2. "பாய்" நாற்றங்காலை உபயோகப்படுத்துதல்.
3. "நீல பச்சை பாசி"-யைக் கொண்டு உரமிடுதல்.
4. சிங்க் சல்பேட் இடுதல்.
5. உரங்களை பயிருக்கு அருகாமையில் இடுதல்.
6. பூச்சி மருந்து குறுணைகளை பயிருக்கு அருகாமையில் இடுதல்.

இத்திட்டம், வரும் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

நெற்பயிரில் வேருக்கு அருகாமையில் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை இடுவதற்கான உற்பத்திச் செலவை குறைக்கவல்ல "கிராவிடர் அப்ளிகேட்டர்" என்ற கருவியை நடப்பு ஆண்டில் இத்துறை உருவாக்கியுள்ளது. இதனால் சிக்கனமாகவும் அதே சமயம் திறனைக் குறைக்காமலும் உரங்களையும், பூச்சி மருந்துகளையும் பயன்படுத்த முடியும். இக்கருவியின் விலை சுமார் ரூ. 50 ஆகும். ஒரு ஏக்கரில் செய்ய வேண்டிய பணிகளை 5 மணி நேரத்தில் இது முடித்திடும். 1979-80 ஆம் ஆண்டில் இக்கருவிகளை அதிக அளவில் தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அமோக விளைச்சல் திட்டத்தை மேம்படுத்த தரமுள்ள வித்துக்களை விநியோகம் செய்வதை இத்துறை மேற்கொண்டுள்ளது. ஜனவரி 1979 வரையில் 8,160 டன் நெல், 217 டன் சிறு தானியம் மற்றும் 426 டன் வீரிய ஒட்டு ரக சிறு தானிய விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. திட்டமிட்ட அளவினை எய்த இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது

1979-80 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு இத்துறை கீழ்க்கண்ட அளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது :—

	டன்கள்.
நெல்	9,500
கம்பு	275
சோளம்	480
மக்காச்சோளம்	160
கேழ்வரகு	175
மொத்தம்	10,590

மக்காச் சோளத்தின் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் இதன் பரப்பை அதிகமாக்கும் சாத்தியக்கூறு குறைவாக இருக்கிறது. எனவே இதர வீரிய ஒட்டு ரக சிறு தானியங்கள், குறிப்பாக வீரிய ஒட்டு ரக கம்பின் பரப்பை அதிகமாக்கி அதன் உற்பத்தியை அதிகமாக்குவதன் மூலம் சிறு தானிய உற்பத்திக் குறியீட்டை அடைவதில் இத்துறை முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் திட்டமிட்ட 20,000 ஹெக்டேர் பரப்பிற்கு எதிராக வரும் ஆண்டில் 11,000 ஹெக்டேர் பரப்பிற்கு மக்காச் சோள விதைகளை விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஈடு செய்யும் வகையில் 1979-80 ஆம் ஆண்டில் கூடுதலாக 50,000 ஹெக்டேர் சாகுபடி செய்வதற்கு ஏற்ப 125 டன் வீரிய ஒட்டு ரக கம்பு விதைகள் கூடுதலாக விநியோகம் செய்யப்படும்.

பயறு வகைகள்.—11.00 இலட்சம் ஹெக்டேரில் தற்பொழுது பயிரிடப்படும் பயறு வகைகளின் பரப்பளவு 1979-80 ஆம் ஆண்டில் 11.60 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு உயர்த்தப்படும். பயறு வகைகளை தனிப் பயிராகவும் கலப்புப் பயிராகவும் மற்றும் நெல் தரிசுகளில் பயிரிடுவதன் மூலமும் இக் கூடுதல் பரப்பளவிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான விதைகள், சமச்சீர் உரங்கள், நுண்ணுயிர் கலவை இடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் போன்ற மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழில் நுட்பங்களை, 1,000 எண்ணிக்கை கொண்ட ஒரு ஏக்கர் செயல் விளக்க திடல்களில் பின்பற்றப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 446 எண்ணிக்கை கொண்ட ஒரு ஏக்கர் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு, புதிதாக

வெளியிடப்பட்ட இரகங்கள் பெருமளவில் சாகுபடி செய்வதற்கு ஏற்ப வழி வகைகள் மேற்கொள்ளப்படும். 10,000 ஹெக்டேரில் டை அமோனியம் பாஸ்பேட் தெளிக்கும் பணியும், 40,000 ஹெக்டேரில் ஒட்டுமொத்த மருந்து தூவும் பணியையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான செலவிற்கான மானியம் ஹெக்டேர் ஒன்றுக்கு முறையே ரூ. 10-ம், ரூ. 7.50-ம் வழங்கப்படும். 85,000 ஹெக்டேருக்குத் தேவையான நுண்ணுயிர் கலவையை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 41,610 ஹெக்டேருக்கு நுண்ணுயிர் கலவை விநியோகம் செய்யப் பட்டுள்ளது. 5,000 ஹெக்டேர்களில் தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உரங்களை அடியுரமாக இடுவதற்கு ஊக்கப்படுத்தப்படும். 10 சதவிகித பரப்பிற்கு தரமான பயறு வகை விதைகள் விவசாயிகளுக்குக் கிடைக்க வகை செய்யப்படும். சுமார் 2,400 டன் பயறு விதைகள் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் திட்டத்தின் கீழ் ஹெக்டேர் ஒன்றுக்கு இடுபொருட்களுக்காக ரூ. 275 மானியத்தில் 1,500 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 வரையில் 709 ஹெக்டேரில் பெருவிளக்கத் தளைகள் அமைக்கப்பட்டு உள்ளன. பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 13,333 ஹெக்டேருக்கு 25 சதவிகித மானிய விலையில் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 15-க்கு மேற்படாமல் வழங்கப்படும். 100 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் 50 சதவிகித மானிய விலையில் அதிகபட்சம் ரூ. 500-க்கு மேற்படாமல் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஜனவரி 1979 வரையில் 67 மருந்து தெளிப்பான்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்துக்கள்.—உணவுக்குப் பயன்படும் எண்ணெயின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதைப் பூர்த்தி செய்யும் வகையில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 14.07 இலட்சம் டன்னிலிருந்து 16.03 இலட்சம் டன்னிற்கு உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பையும், 13.37 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 14.57 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகரிக்கப்படும். இக் கூடுதல் பரப்பு, அதிக அளவு உற்பத்தித் திறன் பெறும் வகையில் இறவையாக பயிரிடுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் ஜிப்சம் இடுதல் போன்ற புதிய தொழில் நுட்பத் திறன்களை தீவிரப்படுத்தி உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும். இந்த ஆண்டில் பல்வேறு தரங்களில் 1,000 டன்கள் நுண்ணூட்டச் சத்துக்களும் 12,000 டன்கள் ஜிப்சமும் விநியோகம்

செய்யப்படும். பெருமளவில் சாகுபடி செய்வதற்கேற்ப வேர்க்கடலையில் டி.எம்.வி. 7, டி.எம்.வி 9, மற்றும் டி.எம் வி 10, எள்ளில் டி எம் வி 3, மற்றும் டி.எம்.வி. 4, சூரியகாந்தியில் கே. 2 போன்ற திருந்திய விதை இரகங்கள் வழங்க வழிவகைள் மேற்கொள்ளப்படும். திருந்திய விதை இரகங்கள் விநியோகம் செய்யும் திட்டத்தின்கீழ் 3,915 டன் வேர்க்கடலை விதைகள், 34 டன் எள் விதைகள், 13 டன் ஆமணக்கு விதைகள், மற்றும் 416 டன் சூரியகாந்தி விதைகள் ஜனவரி 1979 முடிய விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள்ளாக திட்டப்படி மீதமுள்ள விதைகளும் விநியோகம் செய்யப்படும். 1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் அளவுள்ள மேம்படுத்தப்பட்ட விதைகளும் இத் துறையின் மூலம் விநியோகம் செய்யப்படும் :—

வேர்க்கடலை	4,510 டன்கள்.
எள்	50 டன்கள்
ஆமணக்கு	22.5 டன்கள்.
சூரியகாந்தி	900 டன்கள்.

தென்னை பயிரிடப்படும் பரப்பு மற்றும் அதன் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் பணியும் தீவிரப்படுத்தப்படும். இந்த ஆண்டில் மொத்தம் 116 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யும் வகையில் கூடுதலாக 6,000 ஹெக்டேர் பரப்பளவு தென்னை வளர்ப்பின்கீழ்க் கொண்டு வரப்படும். ஒவ்வொரு ஆண்டும், இத் துறை 12 இலட்சம் தென்னங்கன்றுகளை விநியோகம் செய்து வருகிறது. ஜனவரி 1979 முடிய 12.44 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இதனை 13 இலட்சம் கன்றுகளாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத் துறையால் ஆண்டொன்றுக்கு 30,000 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. நெட்டை குட்டை, ஒட்டு ரக தென்னங்கன்றுகளின் பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டைப் பகுதியில் ஒரு இலட்சம் நெட்டை குட்டை, ஒட்டு ரக தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று 1978-79 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 10,000 கன்றுகளும் பின்வரும் ஆண்டுகளில் ஒரு இலட்சம் கன்றுகளும் இத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி பாசன வசதிகள் மற்றும் இதர சாதன வசதிகளை அளித்ததின் மூலம் மண்டலப் பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றங்கால்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி தீவிர தென்னை அபிவிருத்தி திட்டம் கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மேலும் ஒரு மையம் வறட்சி சார்புப் பகுதித் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது.

பருத்தி.—நடப்பு ஆண்டில் பருத்தி பயிரிடும் பரப்பு 2.90 இலட்சம் ஹெக்டேராகவும், அதன் உற்பத்தி 3.75 இலட்சம் பேல்களாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் 3.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் 4.40 இலட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்சொன்ன இலக்கை அடைய (i) தரமான விதைகள் உபயோகித்தல், (ii) சமச்சீர் உரமிடல், (iii) பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் (iv) மேம்படுத்தப்பட்ட உழவியல் முறைகளை அனுசரித்தல் ஆகியவற்றை பருத்தி பயிரிடப்படும் முழுப் பரப்பிலும் மேற்கொள்ளப்படும்.

உற்பத்தியை அதிகரிக்க குறைந்த செலவுள்ள அதிக திறன்வாய்ந்த தொழில் நுட்பங்களைக் குறிப்பாக ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பெருமளவில் பரப்பப்படும். பாசனப் பகுதியில் 50 சதவிகிதம் மற்றும் மானாவாரியில் 30 சதவிகிதம் பரப்புள்ள பருத்திக்கு இத் துறை மூலம் தரமுள்ள விதைகள் விநியோகம் செய்யப்படும்.

தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பருத்தி பயிரிடப்படும் பரப்பு 1.74 இலட்சம் ஹெக்டேரில் இருந்து 1.75 இலட்சம் ஹெக்டேர் பரப்புக்கு அதிகரிக்கப்படும். 1.75 இலட்சம் ஹெக்டேர் திட்ட இலக்கிற்கு எதிராக நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய, 1.27 இலட்சம் ஹெக்டேர் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாக இத்திட்டத்திற்கான இலக்கு முழுவதும் நிறைவு செய்யப்படும். இத்திட்டம் செயல்படும் ஏழு மையங்களில், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மானாவாரிப் பகுதிகளில் 80,000 ஹெக்டேரிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பாசனப் பகுதிகளில் 95,000 ஹெக்டேரிலும் ஆக மொத்தம் 1,75,000 ஹெக்டேரில் 1979-80 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

24,500 ஹெக்டேரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். பருத்தி சாகுபடியாளர்களுக்கு 25 சதவிகித மானிய விலையில் 350 விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும். 1977-78 ஆம் ஆண்டில், கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் பருத்தி சாகுபடியாகும்

நிலங்களில், "புரோடீனியா" புழு தாக்குதலினால் ஏற்பட்டிருந்த அச்ச நிலை, இத் துறையால் மேற்கொள்ளப்பட்ட முறையான பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வகை முயற்சிகளை இத்துறை மேற்கொண்டதன் பயனால் நடப்பு ஆண்டில் ஒரு சில இடங்களில் மட்டுமே பூச்சி தாக்குதல் காணப்பட்டது.

2,850 ஹெக்டேரில் 100 சதவிகித மானியத்துடன் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.

சேலம், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1,05,200 ஹெக்டேர் பரப்பில் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய பின்வரும் திட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் திட்ட இலக்கான 1.05 இலட்சம் ஹெக்டேருக்கு எதிராக, 0.825 இலட்சம் ஹெக்டேரில் திருந்திய விதைகள், 0.755 இலட்சம் ஹெக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு முறைகள், 0 783 இலட்சம் ஹெக்டேரில் உரமிடல் மற்றும் 0.783 இலட்சம் ஹெக்டேரில் உழவியல் முறைகளும் மேற்கொள்ளப்பட்டன. திட்டப்படி இவ்வாண்டு இறுதிக்குள் மீதமுள்ள பரப்பிலும் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ், பருத்தி சாகுபடியாளர்களுக்கு 25 சதவிகித மானிய விலையில் 175 விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படும். விவசாயிகளின் நிலங்களில் 800 ஹெக்டேரில் 100 சதவிகித மானியத்துடன் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படும். 10,500 ஹெக்டேரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படும்.

திருப்பூர், மணப்பாறை மற்றும் கோவில்பட்டி பகுதிகளில் 7,250 ஹெக்டேரில் விதைப் பண்ணைகள் அமைத்து, 1979-80 ஆம் ஆண்டில் 23,500 குவிண்டால் விதைகள் உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. 1978-79-ல் 23,000 குவிண்டால் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் 150 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாயிகளின் நிலங்களில் விதைப் பண்ணைகள் அமைத்து, 250 குவிண்டால் சான்றிதழ் பெற்ற வரலட்சுமி பருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்படவிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நீர் வசதியையும், பருத்தி பயிரிடுவதற்குள்ள வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் கோடை பருவத்தில் 20,000 ஹெக்டேர் பரப்பில் பருத்தி பயிரிடுவதற்கென ஒரு தனி கோடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

கரும்பு.—1978-79 ஆம் ஆண்டில் வெல்லத்திற்கான உற்பத்தி இலக்கு 14.30 இலட்சம் டன் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நடப்பு ஆண்டில், அமோக விளைச்சல் இரகங்களை உபயோகித்தல், மேம்படுத்தப்பட்ட பயிர் உற்பத்தி நுணுக்கங்களைப் பின்பற்றுதல், மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரித்தல் ஆகியவற்றின் மூலம் 19.50 இலட்சம் டன் அளவு வெல்லம் உற்பத்தியாகும் என தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. சாகுபடியாகும் பரப்பை அதிகப்படுத்தாமல் உற்பத்தித் திறனை உயர்த்துவதின் மூலம் இந்தத் திட்ட இலக்கு அடையப் பெறும்.

1979-80 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி 1.45 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நிலைப்படுத்தப்பட்டு, வெல்ல உற்பத்தி 19.67 இலட்சம் டன்களுக்கு உயர்த்தப்படும். தரமான விதைக் கரணைகளை அபிவிருத்தி செய்து விநியோகம் செய்வதின் மூலமும் மற்றும் திருந்திய பயிர் உற்பத்திக்கான தொழில் நுட்பங்களை பின்பற்றுவதின் மூலமும் கரும்பு சாகுபடியாகும் பரப்பு அனைத்தையும் அமோக விளைச்சல் இரகங்களின் கீழ் கொண்டு வருவதன் மூலம் இக்குறியீட்டை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக் கலை.—தோட்டக் கலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி பழம் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக் கலைத் துறை ஒன்று தனியே அமைக்கப்படும்.

பலதரப்பட்ட பழவகைகளான மா, நார்த்தை, சப்போட்டா, அன்னாசி மற்றும் பலா போன்றவைகளை உற்பத்தி செய்து, மலைவாழ் பகுதி மக்களுக்கு புதிய வருவாய் மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், சின்னக் கல்ராயன் மலைப் பகுதிகளில் சுமார் ரூ. 52.56 இலட்சம் மதிப்பில் 419.67 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு பெரிய பழத் தோட்டத்தை நடப்பு ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தரிசு நிலங்கள் மற்றும் விறகிற்காக உள்ள காட்டுப் பகுதிகளை மாற்றி, மேம்படுத்தப்பட்ட உற்பத்தி நுணுக்கங்களை விளக்கிக் காட்டுவதற்கும், தரமுள்ள கன்றுகளை வழங்குவதற்கேற்றதுமான ஒரு மாதிரிப் பழப் பண்ணையை அமைப்பதே இதன் குறிக்கோளாகும். புதுக்கோட்டை மாவட்டம் வள்ளத்தராயன் கோட்டையில் ஏற்கனவே தொடங்கப்பட்ட பெரிய பழத் தோட்டத்தில் 404.08 ஹெக்டேரில் பழக் கன்றுகள் நடுதல் பணி நடப்பு ஆண்டில் முடிவு பெறும். இவ்விரு பழத் தோட்டங்கள் மூலம் ஆண்டு முழுவதும் 600 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். 1977 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் 'நவ்லாக்'

என்னுமிடத்திலும், திருச்சி மாவட்டம் புதலைப் பட்டியிலும் ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு வாழைத் தோட்டங்கள் 1978-79 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். இத்தோட்டங்கள் மூலம் நோய் தாக்காத ரோபஸ்டா வாழைக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மாநிலத்தில் பல்வேறு மலைப் பகுதிகளில் தற்போது செயல்படுத்தப் பட்டு வரும் மலைவாழ் மக்களுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தை மாற்றி அமைத்து, ஒரு குடும்ப அடிப்படையில், அதாவது அருகாமையில் உள்ள கிராமங்களை இணைத்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் 1,000 குடும்பங்களை ஒரு தொகுதியாக அமைத்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயல்படுத்துவதால் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைவதோடு அதிக வேலை வாய்ப்பிற்கும் ஏதுவாகிறது.

மேற்கு மலைத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வாழையில் தோன்றும் "முடிக்கொத்து" நோயை அழித்தல், மந்தாரின் ஆரஞ்சுப் பழ வகையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சீரான வெப்ப நிலைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் பயிராகும் பழ வகைகள் மற்றும் நறுமணப் பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

வாழையில் தோன்றும் "முடிக்கொத்து" நோயைக் கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் 50 சதவிகித விலையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 90-க்கு மேற்படாமல் வழங்குவதோடல்லாமல் பாதிக்கப்பட்ட கன்றுகளை அகற்றுவதற்கு கன்று ஒன்றுக்கு 50 காசுகள் வீதம் உயர்ந்த பட்சம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 மானியமாக சாகுபடியாளர்களுக்கு வழங்கும் திட்டத்தை ஒரு புது முயற்சியாக 1978-79 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டம் மற்றும் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சீரான வெப்ப நிலைக்குக் குறைவாக உள்ள பகுதிகளில் செயல்படுத்தப்படும் பழ வகைகள் மற்றும் நறுமணப் பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் செடிகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் போன்ற இடுபொருள்களை 50 சதவிகித மானிய விலையில் தொடர்ந்து அளிக்கப்படும். இவ்விரண்டு திட்டங்களின் கீழ் முறையே 2,000 ஹெக்டேர் பரப்பிற்கும் 800 ஹெக்டேர் பரப்பிற்கும் மானியம் அளிக்கப்படும்.

புகையிலை.—மாநிலத்தில் 10,000 ஹெக்டேர் பரப்பில் புகையிலை பயிராகிறது. கோவை, மதுரை, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெருமளவு பரப்பில் புகையிலை சாகுபடி செய்யப்படுகிறது. தருமபுரி

மாவட்டத்தில் "வர்ஜீனியா" புகையிலையின் சாகுபடிப் பரப்பை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறினை கருத்தில் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 1978-79-ஆம் ஆண்டு மத்திய அரசு உதவியுடன் "வர்ஜீனியா" புகையிலை அபிவிருத்தித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடுபொருட்கள் வழங்குதல்.—விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளை காலத்தே தேவையான அளவிற்கு வழங்குவதற்குத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தரமுள்ள இடுபொருட்களை வழங்குவதற்காக தரக் கட்டுப்பாடு முறைகளும் தீவிரப்படுத்தப்பட்டன.

விதையும் விதைப் பொருட்களும்.—சாகுபடியாகும் நெல் மற்றும் சோளம் பயிரிடும் பரப்பில் 7 சதவிகிதத்திற்கும், கேழ்வரகு பயிரிடும் பரப்பில் 15 சதவிகிதத்திற்கும் மற்றும் வீரிய ஒட்டு ரக சிறு தானியங்களான சோளம், கம்பு, மக்காச்சோளம் பயிரிடும் பரப்பில் 30 சதவிகிதத்திற்கும் சான்றிதழ் பெற்ற விதைகளை 48 அரசு விதைப் பண்ணைகளிலும் 6 விதை உற்பத்தி மையங்களிலும் உற்பத்தி செய்து வழங்க இத்துறை திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு 500 டன் நெல் விதைகள், 175 டன் கேழ்வரகு விதைகள், 350 டன் வீரிய ஒட்டு ரக சோள விதைகள், 130 டன் ரக சோள விதைகள், 275 டன் வீரிய ஒட்டு ரக கம்பு விதைகள் மற்றும் 160 டன் வீரிய ஒட்டு ரக மக்காச் சோள விதைகள் இத்துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய இரகங்களைப் பெருக்கம் செய்து பெரும் பரப்பில் சாகுபடி செய்வதற்கு ஏற்ப வழங்கப்படும்.

1978-79 ஆம் ஆண்டில் 1,700 டன் பயறு வகை விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பயறு வகை விதைகளின் அதிகப்படியான தேவையை பூர்த்தி செய்ய பயறு வகை விதை மையங்கள் ஐந்து 1978-79 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. இந்நிலையங்கள் 1979-80 ஆம் ஆண்டு வழங்குவதற்காக 2,400 டன் பயறு வகை விதைகளை உற்பத்தி செய்யும். 1979-80 ஆம் ஆண்டில் 5,482 டன் எண்ணெய் வித்து விதைகளை அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி மையங்கள் மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

இத்துறையால், பராமரிக்கப்பட்டு வரும் 10 மாதிரிப் பழ தோட்டங்களிலும், 23 தென்னை நாற்றங்கால்களிலும், 1978-79 ஆம் ஆண்டில் 8 இலட்சம் பழமரக்கன்றுகளும், 12 இலட்சம் தென்னங்கன்றுகளும்

உற்பத்தி செய்யப்பட்டன. 1979-80 ஆம் ஆண்டில் 10 இலட்சம் பழமரக் கன்றுகளும் மற்றும் 13 இலட்சம் தென்னங்கன்றுகளும் உற்பத்தி செய்யப்படும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டப்படி வேளாண்மை இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் தனியே இயங்கும் விதைச் சான்றிதழ் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டது. அதனை முற்றிலும் தனித்தன்மை பெற்ற ஒரு அமைப்பாக ஆக்கி, விதை உற்பத்திச் சான்றளிப்புத் துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. 1978-79-ல் விதைச் சான்றிதழின் கீழ் கொண்டு வரப்பட்ட 12,000 ஹெக்டேர் பரப்புக்கு எதிராக 1979-80-ல் 12,800 ஹெக்டேர் பரப்பில் கொண்டு வரப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய 8,126 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டிற்குள்ளாக மீதமுள்ள பரப்பிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். விதைகளைச் சேமித்து வைக்க இத்துறையால் எட்டு மத்திய விதைக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இரண்டு விதைக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் 1979 ஆம் ஆண்டின் மத்தியில் கட்டி முடிக்கப் பெறும்.

இயற்கை மற்றும் இரசாயன உரங்கள்.—அரசு மற்றும் தனியார் துறை மூலம் உர விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். 1977-78 ஆம் ஆண்டில் உர விநியோகத்திற்கென 12,000 சில்லறை விற்பனை நிலையங்கள் செயல்பட்டன. கூடுதலாக 500 விற்பனை நிலையங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உர விநியோகம் செய்வதற்கென 12,500 தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த விற்பனை நிலையங்கள் தொடர்ந்து பராமரிக்கப்படும்.

1977-78 ஆம் ஆண்டில் உர விநியோகம் எப்போதுமே கண்டிராத அளவிற்கு அதிகரித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 3.00 இலட்சம் டன் தழைச்சத்து, 0.80 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.80 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள இரசாயன உரங்கள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஜனவரி 1979 வரை 2.53 இலட்சம் டன் தழைச்சத்து, 0.74 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.84 லட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள்ளாக இத்திட்டத்திற்கான குறியீடு முழுவதும் எய்தப்பெறும். 1979-80 ஆம் ஆண்டில் இவ்வுர விநியோகம் 3.40 இலட்சம் டன் தழைச்சத்து, 0.90 இலட்சம் டன் மணிச்சத்து மற்றும் 0.90 இலட்சம் டன் சாம்பல் சத்துள்ள உரங்களை விநியோகிக்கும் அளவிற்கு உர விநியோகத்தை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் 1,000 டன் பசுந்தாள் உர விதைகளை விநியோகம் செய்வதன் மூலம் இயற்கை உரத்தின் உபயோகம் அதிகரிக்கப்படும். நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய இத்திட்டத்தின் கீழ் 963 டன் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. வெளி மண்டலத்திலுள்ள தழைச்சத்தை பயனுள்ள வகையில் நிலைநிறுத்தக்கூடிய பசுந்தாள் உரம் மற்றும் பயறு வகை பயிர்களின் விதைகளுடன் கலந்து விதைப்பதற்கேற்ற 3.5 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்படும். பெரிய நகராட்சிகளால் உள்ளூர் உரம் மற்றும் கழிவு உரம் உற்பத்தி செய்வதற்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும். நீலப் பச்சைப் பாசியைத் தயாரித்து உபயோகிப்பது மற்றும் நுண் ஊட்டச் சத்துக்களை இடுதல் போன்ற பணிகள் 1979-80 ஆம் ஆண்டில் தீவிரப்படுத்தப்படும்.

பயிர் பாதுகாப்பு.—மத்திய அரசு உதவியுடன் 1978-79 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட பகுதிகளில் நெல்லில் தோன்றும் தண்டுப்புழுவைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 40,000 ஹெக்டேர் பரப்பளவில் ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறையின் மூலம் மருந்து தெளிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, பூச்சி மருந்தின் கிரயம் மற்றும் தெளிப்பதற்கான செலவுகளில் மத்திய அரசு அளிக்கும் மானியம் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7.50 போக மீதமுள்ள தொகையை நில வரியுடன் சேர்த்து வசூலிக்கப்படும். நெற்பயிரில் தோன்றும் புகையானை கட்டுப்படுத்த மத்திய அரசு 20,000 ஹெக்டேர்களில் இத்திட்டத்தினை மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது. பூச்சி மருந்தின் விலையில் 50 சதவிகிதமும், மருந்து தெளிப்பதற்கான செலவில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7.50 வீதமும் மத்திய அரசின் மானியமாகவும், பூச்சி மருந்தின் விலையில் 16 2/3 சதவிகிதம் மாநில அரசின் மானியமாகவும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. ஜனவரி 1979 முடிய 17,300 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாக மீதமுள்ள பரப்புகளில் இத்திட்டம் மேற்கொள்ளப் படும்.

1979-80 ஆம் ஆண்டிலும் மத்திய அரசின் உதவியுடன் 40,000 ஹெக்டேர் பரப்பளவில் நெல்லுக்கு ஒட்டுமொத்த மருந்து தெளிப்பும், 20,000 ஹெக்டேர் பரப்பளவில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் பணியும் செயல்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு போதுமான பயிர் பாதுகாப்புக் கருவிகள் இத்துறையிடம் உள்ளன. பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளைப் பழுதுபார்த்து நல்ல நிலையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் வகையில் பழுது பார்க்கும் ஏழு நடமாடும் பழுதுபார்க்கும் நிலையங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பயிர்ப் பாதுகாப்புப் படையும் தொடர்ந்து செயல்படும். தற்போதுள்ள கருவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பழுதுபார்க்க முடியாத நிலையிலுள்ள தெளிப்பான்களுக்குப் பதிலாக புதியனவற்றைப் பயன்படுத்தவும் 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 1,000 விதைத் தெளிப்பான்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிப் பணிகள்.—நல்ல பயிர் இரகங்கள் மற்றும் பயிர் பராமரிப்பு நுணுக்கங்களை உருவாக்கும் வகையில் வேளாண்மைத் துறை மற்றும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் பல ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட 16 புதிய இரகங்களைப் பெருக்கி அவற்றின் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய வழிவகைகள் செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் இத்துறையின் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஆறு புதிய நெல் இரகங்கள், மூன்று சிறு தானிய இரகங்கள், இரண்டு பயறு வகைகளின் இரகங்கள் மற்றும் ஒரு எண்ணெய் வித்து இரகம் வெளியிடப்பட்டுள்ளன. இந்த இரகங்களின் சிறப்புக் குணங்கள் பின்வருமாறு :—

1. **ஆடுதுறை 33 (ஏ டி டீ 33).**—இது உயரமான மற்றும் அதிக அளவு வைக்கோல் தரவல்லது பாக்டீரியல் இலைக் கருகல் நோயை ஓரளவு தாங்கக் கூடியது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு எப்ரல்—ஜூன் விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. வயது 110 நாட்கள்.

2. **ஆடுதுறை 34 (ஏ டி டீ 34).**—தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு மே—ஜூனை விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. ஓரளவு குட்டையானதும், இலைப்புழு, புகையான், தத்துப்பூச்சிகள் மற்றும் பாக்டீரியல் இலைக் கருகல் நோயை ஓரளவு தாங்கக் கூடியதுமானது. வயது 107 நாட்கள்.

3. **ஆடுதுறை 35 (ஏ டி டீ 35).**—இது ஓரளவு உயரமான இரகம்; 130 முதல் 135 நாட்கள் வரை வயதுடையது. தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஜூன்—ஜூலை மற்றும் அக்டோபர்—நவம்பர் திங்களில் விதைப்பிற்கு ஏற்றது. இலைப்புழு, இலை மற்றும் தொண்டைப்

பகுதியை தாக்கும் குலை நோய், இலைக் கருகல் நோய் மற்றும் கருஞ் சிவப்பு புள்ளி நோய்களை ஓரளவு தாங்கக்கூடியது. உவர்த் தன்மையைத் தாங்கக் கூடியது. நீண்ட சன்னமான அரிசியுடையது. சமையலுக்கு ஏற்ற தரமுடையது. இது அய்.ஆர். 20-ஐக் காட்டிலும் அதிக அளவு வைக்கோல் தரக்கூடியதுமாகும்.

4. அய் ஆர். 34.—தமிழ்நாட்டில் செப்டம்பர்—அக்டோபர் திங்களில் விதைப்பிற்கு ஏற்றது. அய். ஆர். 20-அய்க் காட்டிலும் ஓரளவு உயரமானதும், பெரும்பான்மையான பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கக் கூடியதும் ஆகும். வயது 130 முதல் 135 நாட்கள்.

5. என். எல். ஆர். 9672.—இது ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்த இரகமாகும். ஒரு போக சம்பா நிலங்களுக்கு ஆகஸ்டு மாத விதைப்பிற்கு ஏற்றது. மகசூல் மற்றும் தரத்தில் கோ. 25 இரகத்தைவிடச் சிறந்ததாகும். இதன வயது 160 முதல் 170 நாட்கள்.

6. அம்பாசமுத்திரம்-15 (ஏ.எஸ்.டி. 15).—ஓரளவு குட்டையானதும், நேரானதும், 120 நாட்கள் வரை வயதுடையதுமாகும். செப்டம்பர்—அக்டோபர் மற்றும் ஏப்ரல்—ஜூலை காலங்களில் விதைப்பிற்கு ஏற்றது. அதிக விளைச்சல் தரக்கூடியதும், அய். ஆர். 20, பொன்னி, மற்றும் ஜி. இ. பி. 24-அய்க் காட்டிலும் மிகவும் சன்னமானதும், பெரும்பான்மையான நோய்களைத் தாங்கக் கூடியதுமாகும்.

7. கோவில்பட்டி-7 (கே. 7) கேழ்வரகு.—100 நாட்கள் வயதுடையதும், கோ. 7 மற்றும் கோ. 10 இரகங்களைக் காட்டிலும் அதிக மகசூல் தரவல்லதும் ஆகும். மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது. மானாவாரியில் 25 சதம் அதிக மகசூலைத் தந்துள்ளது. சூரிய வெளிச்சத்தால் பாதிக்கப்படாதது. வருடம் பூராவும் விதைப்பதற்கு ஏற்ற இரகம்.

8. கோவில்பட்டி-1 (கே. 1) சாமை.—85 முதல் 90 நாட்கள் வயதுடையது. பெரும்பான்மையான பூச்சிகள், நோய்கள் மற்றும் வறட்சி நிலையைத் தாங்கக் கூடியது. சேமித்து வைக்கவும் மற்றும் சமையலுக்கு ஏற்றதும் நல்ல சுவையுடையதுமாகும்.

9. கோவில்பட்டி-1 (கே. 1) வரகு.—கோ. 2 இரகத்தை விட 81 சதம் அதிக மகசூல் தரவல்லது. இதன் வயது 100 நாட்கள். பொதுவாக பூச்சி நோய்களைத் தாங்கும் தன்மையுடையது.

10. திண்டிவனம்-1 (டி. எம். வி. 1) உளுந்து.—தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளுக்கும் ஏற்றது. அமோக விளைச்சல் தரக்கூடியதும், ஒரே நேரத்தில் அறுவடைக்கு வரக்கூடியதும், மஞ்சள் இலை நோயைத் தாங்கக் கூடியதுமாகும்.

11. ஆடுதுறை-2 (ஏ. டி. டீ. 2) உளுந்து.—நெல் அறுவடை செய்யப்பட்ட தரிசு நிலங்களில் பயிரிட ஏற்றது. ஏ. டி. டீ. 31-அய்க் காட்டிலும் அதிகளவு புரத சத்துக் கொண்டது. அளவில் பெருத்து இருக்கும். வைரஸ், மூடிச்சி நோய் மற்றும் சாம்பல் நோய்களை ஓரளவு தாங்கக் கூடியது.

12. திண்டிவனம்-6 (டி. எம். வி. 6) எள்.—இது தனிவழித் தேர்வில் தெரிந்தெடுக்கப்பட்ட இரகமாகும். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு கோடை கால விதைப்பிற்கு மிகவும் ஏற்றது. எண்ணெய் சத்து 54.2 சதவீதம் உடையது. வயது 85 நாட்கள்.

உகந்த பயிர் மற்றும் சாகுபடி முறை, மண்ணின் வளம் பற்றிய பராமரிப்பு, மானாவாரி சாகுபடி முறை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை உருவாக்குதல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

பல்வேறு பயிர்களுக்கு நுண்ணூட்டச் சத்துக்களைத் தரவல்ல இடுபொருட்கள் இத்துறையால் முறைப்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் ஆண்டுக்கு 1,200 டன் நுண்ணூட்டக் கலவைகளைத் தரவல்ல இடுபொருட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எல்லா விவசாயிகளும் தங்களுடைய நிலத்திலேயே தழைச்சத்தை அளிக்கும் நீலப் பச்சை பாசியைப் பெருமளவில் உற்பத்தி செய்து கொள்ளும் அளவிற்கு எளிதான முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. நீலப் பச்சைப் பாசியை இடுவதின் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்தை மிச்சப்படுத்தலாம். இதன் உற்பத்தி மற்றும் உபயோகம் 1979-80-ல் விரிவுபடுத்தப்படும்.

வெளி மண்டலத்திலுள்ள தழைச் சத்தை கிரகித்து அதன் மூலம் மண்ணை வளப்படுத்தவல்ல "அசோலா" என்ற தண்ணீரில் காணப்படும் பாசியை உபயோகிக்கும் முறை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்முறை அதிக நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கு திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஆய்வுக்கூடமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் பணிக்கு ஒரு ஆய்வுக்கூடமாக இரண்டு ஆய்வுக்கூடங்கள் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் செங்கல்பட்டு மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் காணப்படும் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் ஆய்வுப் பணிக்கென மற்றுமொரு ஆய்வுக்கூடத்தைக் காஞ்சிபுரத்தில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் பல பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பருத்தி, சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறிகள் பற்றிய பல்வேறு ஆய்வுப் பணிகளை தீவிரப்படுத்த தருமபுரி மாவட்டம் ஹோசூரில் பல பயிர் செயல்விளக்க மையம் ஒன்றும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பலதரப்பட்ட மண்வகைகளை வகைப்படுத்தி, அந்த மண் வகைகள் காணப்படும் இடங்களைக் காட்டும் நிலப்படம் தயாரிக்கும் பொருட்டு அவற்றை ஆய்வு செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இப்பணியினை விரைவுபடுத்த வேலூர் மற்றும் பாளையங்கோட்டையில் கூடுதலான இரண்டு மண்வள ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் மேலும் ஒரு உரப் பரிசோதனை நிலையம் நடப்பு ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டம்.—நடப்பு ஆண்டில் உதகமண்டலம், இராமநாதபுரம், சேலம் ஆகிய இடங்களில் மேலும் மூன்று உழவர் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன் ஒரு மாவட்டத்திற்கு ஒரு உழவர் பயிற்சி நிலையம் அமைப்பது என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் சுமார் 30,000 விவசாயிகளுக்கு இந்த நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும். மாநிலத்தில் தற்போதுள்ள 13 விவசாயப் பள்ளிகளில் ஆண்டொன்றுக்கு 390 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணி தொடர்ந்து நடைபெறும்.

கடந்த ஆண்டில் திட்டமிட்டபடி விவசாயப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி நடைபெறுகிறது.

மானாவாரி சாகுபடி.—பொருளாதாரத்தில் பின்தங்கிய பெரும்பான்மையான கிராம மக்களின் வளர்ச்சிக்கு மானாவாரி சாகுபடியில் கவனம் செலுத்துவது அவசியமாகும். நவீன தொழில் நுட்பங்களின்

உதவியுடன் பல்வேறு மானாவாரி சாகுபடி முறைகளைப் பரப்புவதன் மூலம் தீவிர சாகுபடியை அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இப்பகுதிகளில் போதுமான அளவு விரிவாக்க முயற்சிகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் அதற்குத் தேவையான அடிப்படைச் சாதனங்களை உருவாக்குவதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்தின் குறிக்கோளை விரைந்து சாதிக்க முடியும். இவைகளைக் கருத்தில் கொண்டு, இப்பகுதிகளை மேம்பாடு செய்யப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பலநோக்கு கருவி ஒன்று இப்பகுதிகளில் உபயோகப்படுத்த இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. உழவிற்குப் பயன்படுத்தப்படும் மாடுகளை பொறுத்து நாளொன்றுக்கு 4 முதல் 5 ஏக்கர் வரை உழவு வேலைகள் செய்யக்கூடிய இக்கருவியை ஏழை மக்களின் டிராக்டர் எனச் சொல்லலாம். விதைப்பதற்கும் உரத்தைப் பயிர்களுக்கு அருகாமையில் இடுவதற்கும் பயிர் இடைச் சாகுபடி செய்யவும் இக்கருவியை உபயோகிக்கலாம். இக்கருவியின் விலை சுமார் ரூ. 500 ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் பெருமளவில் இக்கருவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மானாவாரிப் பகுதிகளில் நீர்ப் பிடிப்புப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றில் ஒவ்வொன்றும் 400 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டில் மாவட்டத்திற்கு ஒன்று முதல் இரண்டு செயல்விளக்கப் பாத்திகள் இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு மானாவாரி சாகுபடி முறைகளைப் பரப்பும் வகையில் இவ்வகைச் செயல்விளக்கப் பாத்திகளை அதிக அளவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மழைத் தண்ணீரை பண்ணைக் குட்டைகளில் தேக்கி வைத்து மீண்டும் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பகுதி மேம்பாடு.—பின்தங்கிய பகுதிகள் மற்றும் மலைவாழ் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறும். ஜெர்மானியக் குடியரசிடம் இருந்து கிடைக்கப் பெற்ற உதவிப் பொருட்களை விற்பனை செய்ததின் மூலம் கூடுதலாக கிடைக்கப் பெற்ற ஒரு கோடி ரூபாய் மாநில நிதியில் சேர்க்கப்பட்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்கள், சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்கென புதிய திட்டங்கள் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

வேளாண்மைப் பொறியியல்.—இத்துறையின் பொறியியல் பிரிவு நில மேம்பாடு, சிறுபாசனம், மண் மற்றும் நீர்ப் பராமரிப்பு ஆகிய பணிகள் போன்றவற்றை மேற்கொள்கிறது. இத்துறையிடம் 177 டிராக்டர்களும், 152 புல்டோசர்களும் மற்றும் 815 பலதரப்பட்ட துளைக் கருவிகளும் உள்ளன.

நில அபிவிருத்தி.—1979-80 ஆம் ஆண்டில் டிராக்டர்களையும், புல்டோசர்களையும் கொண்டு 2,50,000 மணி நேரம் வேலை செய்து 7,000 ஹெக்டேர் பரப்பளவில் நிலத்தைச் சமன்படுத்தவும், 22,500 ஹெக்டேர் பரப்பளவை உழுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஜனவரி 1979 முடிய நிலத்தை சமன்படுத்தும் பணி 1.280 இலட்சம் மணி நேரங்களில் செயல்பட்டு 5,043 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 0.605 இலட்சம் மணி நேரங்களில் நிலத்தை உழும் பணி 15,090 ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள இவைகளுக்கான குறியீடு முழுவதும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப் படும்.

சிறு பாசனம்.—குழாய்க் கிணறுகள், மணற்பாங்கான பகுதியில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தும் கிணற்றில் துளையிடுதல், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதலின் மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணர்வது சிறு பாசனத் திட்டத்தின் முக்கிய பணியாகும். நிலத்தடி நீர் மற்றும் மேல் ஓடும் நீரின் தற்போதைய திறனை அதிகப்படுத்தும் பொருட்டு ஆய்வுகள் மேற்கொள்ள ஒரு திட்டத்தையும் இத்துறை செயல்படுத்தவிருக்கிறது. இதற்காகவே நடப்பாண்டில் இப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் 4,200 குழாய்க் கிணறுகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஜனவரி 1979 முடிய 3,715 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2,300 கிணறுகள் ஆழப்படுத்த திட்டமிடப்பட்டு 2,245 கிணறுகள் ஜனவரி 1979 வரை ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2,000 கிணறுகளில் துளையிடும் பணியைச் செய்யத் திட்டமிடப்பட்டு ஜனவரி 1979 முடிய 2,196 கிணறுகளில் துளையிடும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. பாசனத்திற்கு கூடுதலான பரப்பைக் கொணர்வதற்கும் மற்றும் பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கும் 1979-80 ஆம் ஆண்டில் 4,300 குழாய்க் கிணறுகள், 2,500 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதுடன் தற்போதுள்ள 2,700 கிணறுகளை ஆழப்படுத்தவும்

திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1979-80 ஆம் ஆண்டில் தற்போதைய நீர்த் திறனை அதிகப்படுத்த 2,200 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சமுதாய கிணறுகளைத் தோண்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில், 150 சமுதாயக் கிணறுகளைத் தோண்டத் திட்டமிடப்பட்டு, ஜனவரி 1979 வரை 59 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டம் பெருமளவில் செயல்படுத்தப்படும்.

மண்வளப் பாதுகாப்பு.—மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1978-79-ல் கொண்டுவரப்பட்ட மொத்தப் பரப்பான 56,820 ஹெக்டேரிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் 60,000 ஹெக்டேராக அதிகரிக்கப்படும். 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முடிய 40,491 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள்ளாக திட்டப்படி மீதமுள்ள பரப்பளவுகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

1977-78 ஆம் ஆண்டில், ஒன்பது மாவட்டங்களில் 5,700 ஹெக்டேர் பரப்பளவில், விவசாய நிலங்கள் மண்மேடிட்டதனால், பெருமளவில் பாதிக்கப்பட்டது. இத்துறையில் உள்ள ஆட்கள் மற்றும் இயந்திரப் பலங்களை ஒன்று திரட்டி சீர்திருத்தப் பணிகள் போர்க்கால நடவடிக்கை போன்று தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு எப்போதும் கண்டிராத அளவில் குறைந்த காலத்தில் முடிக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் வரை ரூ. 94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நடப்பு ஆண்டிலும் இம்மாதிரியே ஒன்பது மாவட்டங்களில் 2,500 ஹெக்டேர் பரப்பு பாதிக்கப்பட்டன. சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதிவேகத்துடன் நடைபெறுகிறது. 1979 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் இப்பரப்பு முழுவதிலும் நிலச் சீர்திருத்தப் பணிகள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி வரை ரூ. 21.00 இலட்சம் செலவில் 1,720 ஹெக்டேர் பரப்பளவில் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 50 சத மானியத்துடன் ஏக்கர் ஒன்றுக்கு அதிக அளவு ரூ. 1,000-க்கு மேற்படாமல் சீர்திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆயக் கட்டுப் பகுதி மேம்பாடும் நீர்ப் பிடிப்புப் பராமரிப்பும்.—ஆண்டொன்றுக்கு 4,000 ஹெக்டேர் என்ற அளவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்ப் பராமரிப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறே சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டப் பகுதியில் ஆண்டொன்றுக்கு 400 ஹெக்டேர் என்ற அளவில் இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய தஞ்சாவூர் மாவட்டத்தில் 3,891 ஹெக்டேர் பரப்பும் மற்றும் சாத்தனூர் திட்டப் பகுதியில் 401 ஹெக்டேர் பரப்பும் இத்திட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வட ஆற்காடு மாவட்டத்தில் மண் அரிப்பினால் எற்பட்ட பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 200 ஹெக்டேர் என்ற அளவில் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய 102 ஹெக்டேர் பரப்பளவில் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென் ஆற்காடு மாவட்டத்தில் எற்பட்டுள்ள இதுபோன்ற பள்ளத்தாக்குப் பகுதிகளைச் சீர்திருத்தம் செய்யும் பொருட்டு 1979-80 ஆம் ஆண்டில் கூடுதலான ஒரு பிரிவு அமைக்கப்படவிருக்கிறது.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் மணல் காற்று விசுவதால் பாதிக்கப்படும் பகுதிகளில் மணல்காற்று தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய 86 கிலோமீட்டர் தூரத்திற்கு மணல் காற்றுத் தடுப்புக்கான வேலி மரங்களை நடும்பணி மேற்கொள்ளப் பட்டதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் 1,692 ஹெக்டேர் பரப்பும் மதுரை மாவட்டத்தில் 4,079 ஹெக்டேர் பரப்பும் பயனடைந்துள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இவ்விரண்டு இடங்களிலும் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

1979-80 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்.—நடப்பு ஆண்டில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களுடன், 1979-80 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

விதைப் பெருக்கமும் விதைச் சான்றிதழும்.—விதை உற்பத்தியில் தரக் கட்டுப்பாட்டினை தீவிரமாக அமுல்படுத்தி விவசாயிகளுக்குத் தரமான விதைகள் விநியோகம் செய்வதற்கேற்ப, 1979-80 ஆம் ஆண்டில் தனியே ஒரு விதைச் சான்றிதழ் இயக்கம் நிறுவப்படும்.

திருவாரூரிலும், கள்ளக்குறிச்சியிலும் உள்ள விதைச் சுத்திகரிக்கும் நிலையங்களில் பணி புரியும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும், மதுரை மாவட்டம் சோழவந்தானில் உள்ள விதைச் சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு கிடங்கு கட்டுவதற்கும் திட்டமிடப் பட்டுள்ளது.

மாவட்டங்களில் உள்ள மத்திய விதைக் கிடங்குகளைக் கவனித்துக் கொள்ள 10 உதவியாளர்கள் அமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு வகை அபிவிருத்தி.—புரதச் சத்தினை முக்கியமாக அளிக்கவல்ல பயறு வகைகள் நம் மாநிலத்தின் தேவைக்குக் குறைவாக உற்பத்தியாவதால், வட மாநிலங்களிலிருந்து பெருமளவிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்கவும், மாநிலத்தின் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், பயறு வகைகளின் தற்போதைய பரப்பான 11.00 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 1979-80 ஆம் ஆண்டில் 11.60 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு உயர்த்தப்பட்டு, 3.58 இலட்சம் டன் அளவு உற்பத்தி அடையப் பெறும்.' இத்திட்டத்திற்கு ஆதாரவாக பெரும் பரப்பளவில் பயறு வகைகளின் உற்பத்திக்கான தன்மைகளை விளக்கவும், பூச்சி மருந்துகள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு சாதனங்களை மானிய விலையில் வழங்கவும் இரண்டு பயறு வகைப் பயிர்கள் முன்னோடி செயல்விளக்கத் திட்டங்களை சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப் படும். மேற்கூறிய இரண்டு திட்டங்களை செயல்படுத்துவதின் மூலம் பயறு வகைகளில் 2,836 டன்கள் கூடுதல் உற்பத்தி பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வணிகப் பயிர்கள்.—கோயம்புத்தூர் மாவட்டம் வடகரையில் உள்ள மண்டலப் பண்ணையிலும் செங்கல்பட்டு மாவட்டம் புட்லூரில் உள்ள கரு விதை உற்பத்திக்கான விதைப் பண்ணையிலும் அப்பண்ணைகளின் திறனை அபிவிருத்தி செய்ய நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்த நீர் தெளிக்கும் கருவிகள் நிறுவப்படும். வட ஆற்காடு மாவட்டம் "நவ்லாக்கில்" உள்ள தென்னை விதைப் பண்ணையில் ஒரு கிடங்கும், தென்னை நாற்றங்கால்களில் அலுவலர்கள் குடியிருக்க வீடுகளும் கட்டப்படும். அலுவலர்கள் குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டப்படும். இந்த ஆண்டில் இரண்டு இடங்களில் அதாவது தென் ஆற்காடு மாவட்டம் காருப்பத்திலும், செங்கல்பட்டு மாவட்டம் மாதவரத்திலும் அமைந்துள்ள தென்னை நாற்றங்கால்களில் அலுவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

வேளாண்மைக் கல்வி.—5 விவசாயப் பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டிடங்களும், 4 விவசாயப் பள்ளிகளுக்கு கூடுதல் இட வசதியும் செய்து தரப்படும்.

விவசாய ஆராய்ச்சி.—பயிர்களை ஆய்வு செய்யவும், பயிர்கட்குச் சேதம் விளைவிக்கும் உயிரினங்களுக்கு எதிரிகளைக் கண்டுபிடிக்கவும், அந்த ஆய்வுகளையும் கண்டுபிடிப்புகளையும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்துவதோடு, ஒட்டுயிர்கள் மற்றும் உயிரினக் கொல்லிகளுக்கான மூல நுண்மத் தொகுதிகளைப் பராமரிக்கும் வகையில் கிருஷ்ணகிரியில் ஒரு உயிரியல் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் (Biological Control Laboratory) அமைக்கப்படும்.

வேளாண் பருவ நிலைக்கு ஏற்றவாறு அமோக விளைச்சல் இரகங்களையும் அதற்கேற்ற சாகுபடி முறைகளையும் உருவாக்கும் குறிக்கோளுடன் தர்மபுரியில் ஒரு அனுசரணை செயல்விளக்க மையம் அமைக்கப்படும்.

நூற்புழுவினால் தாக்கப்பட்ட பகுதிகளை அறியவும், அவற்றினால் பாதிக்கப்படும் பகுதிகளைக் கண்டு வரையறுக்கவும் மற்றும் தடுப்பு முறைகளைக் கையாண்டு இழப்பினைக் குறைக்கவும் விவசாயிகளுக்குத் தேவையான உதவி அளிக்கும் வகையில் வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் பயிர்களைத் தாக்கும் நூற்புழு பற்றிய ஆய்வு செய்யும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

பயிர்கள், பூச்சி, பூஞ்சாள நோய்களால் தாக்கப்படுவதை விவசாயிகளுக்கு முன்கூட்டியே அறிவித்து அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையிலும், மற்றும் பகுதி வாரியாகவும், பயிர் வாரியாகவும், பயிர்ப் பாதுகாப்பை அனுசரிக்கும் முறைகளை உருவாக்கவும், பயிர்ப் பாதுகாப்பு ஆராய்ச்சியையும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இணைந்து செயல்படுத்தும் ஓர் திட்டம் மேற்கொள்ளப்படும்.

விரிவாக்கப் பணிக்குத் தேவையான அடிப்படை ஆராய்ச்சிக்கும் இரகங்களை ஆராயவும், ஆராய்ச்சி முடிவுகளை சோதனை செய்வதற்கும் ஏற்ற வசதிகளைப் பெருக்குவதற்கு, கோவில்பட்டியிலுள்ள பருத்தி மற்றும் சிறு தானிய ஆராய்ச்சி நிலையத்திற்கு கூடுதலான சாதனங்கள் வழங்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் அலுவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

பகுதி மேம்பாடு.—விவசாயிகளுடன் இருக்கும் தொடர்பினைத் தீவிரமாக்கவும் மேலும் பயனளிக்கத் தக்க வகையில் விவசாயத் திட்டங்களைச் செயல்படுத்தவும் தற்போது பெரிய அளவில் உள்ள விவசாயக் கோட்டங்களைப் பிரித்து, சேலம் மாவட்டத்தில் சங்ககிரியிலும், மேட்டூரிலும், தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேவகோட்டையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலும் 5 புதிய விவசாயக் கோட்டங்கள் அமைக்கப்படும்.

விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துவதற்கு நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வல்லுநர்களைப் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மண்டலங்களுக்கு அமர்த்தப்படுவதோடு தகவல் பிரிவும் மேம்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் உள்ள வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகமாக்கவும் அப்பகுதி கிராம மக்களின் வருவாயைக் கூட்டுவதுடன் மிகச் சிறு விவசாயிகளுக்கும், நிலமில்லாத தொழிலாளர்களுக்குப் வேலைவாய்ப்பினைத் தரும் பொருட்டும் ஒரு பகுதி அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளுவது எனக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல்.—இயந்திரங்களின் உபயோகத்தை அதிகப்படுத்தி, வேளாண்மைக்கு அதிக அளவு பயன்படும் வகையில் டிராக்டர்களுக்கு இயந்திரக் கலப்பையும், இணைப்புச் சாதனங்களும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுபாசனம்.—நிலத்தடி நீரைக் குறிப்பாக வண்டல்மண் பகுதிகளில் இருந்து வெளிக் கொணர்வதற்கு சுழல்வகைத் துளையிடும் கருவிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். சுமார் ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு புதிய சுழல்வகைத் துளையிடும் கருவியை வாங்குவதைவிட ரூ. 2.5 இலட்சம் செலவில் தற்போதுள்ள "பர்குஷன்" துளையிடு கருவியை மாற்றி சுழல்வகைத் துளையிடும் கருவியாக்குவதால் ரூ. 7. இலட்சம் மீதப்படுவதுடன் இயந்திரங்களை நல்ல முறையில் பயன்படுத்தவு முடியும்.

இயந்திரங்களை நல்ல நிலையில் பாதுகாக்கும் வகையில் மூடிய கொட்டகைகள் படிப்படியாகக் கட்டப்படும். இதற்காக நடப்பு ஆண்டில் விழுப்புரத்தில் ஒன்றும், மன்னார்குடியில் ஒன்றுமாக இரண்டு மூடிய கொட்டகைகள் கட்டப்படும்.

மண்வளப் பாதுகாப்பு.—தென் ஆற்காடு மாவட்டத்தில் மண் அரிப்பினால் ஏற்பட்டுள்ள பள்ளத்தாக்குப் பகுதிகளில் உற்பத்திக்கேற்ற நிலம் குறைவதைத் தடுக்கும் பொருட்டு இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்திருத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

நிர்வாகம்.—மாவட்ட விவசாய அலுவலகங்களில் 15 கூடுதல் கண்காணிப்பாளர்களை அமர்த்துவதன் மூலம் அலுவலகங்களில் நிர்வாக அமைப்பு மேம்படுத்தப்படும். அம்மாதிரியே தணிக்கைக் கோப்புகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை அலுவலகங்களில் 25 உதவியாளர்கள் அமர்த்தப்படுவார்கள்.

1979-80 ஆம் ஆண்டுக்கான பெரிய அளவிலான திட்டங்களும் வேளாண்மைத் துறையின் எதிர்கால நடவடிக்கைகளும்.

தோட்டக் கலை இயக்ககம்.—தோட்டக் கலையை அபிவிருத்திச் செய்ய பெருமளவு வாய்ப்புகள் உள்ளன. அவை பெரிய பழத் தோட்டங்களை அமைப்பதோடல்லாமல் தற்போதுள்ள சாகுபடி முறைகளை திருத்தி அமைப்பதற்கான விரிவாக்கப் பணிகளைக் குறிப்பாக சேலம், தருமபுரி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மேற்கொள்ளுதலும் ஆகும். புதிய இரகங்களைப் புகுத்துவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. வரும் ஆண்டுகளில் தோட்டக் கலைப் பிரிவிற்கு அதிகக் கவனம் மற்றும் முக்கியத்துவத்தைத் தருவதற்கும் மேற்கூறிய பணியினைச் சீரான முறையில் செயல்படுத்தவும் நன்கு பயிற்சி பெற்றுள்ள அலுவலர்கள் மற்றும் இதர சாதனங்களைக் கொண்டு தோட்டக் கலை இயக்ககம் ஒன்று அமைக்கப்படும்.

விதைச் சான்றிதழ் இயக்கம்.—வேளாண்மையில் எந்த அமோக விளைச்சல் இரகங்களுக்கும் முதன்மையானது தரமுள்ள வித்துக்களே என்று ஏற்கனவே உணர்ந்திருப்பதற்கு ஏற்றவாறு, தரமுள்ள வித்துக்களை உற்பத்தி செய்வதில் விரிவாக்கத் திட்டங்களையும் உற்பத்தித் திறனின் உயர்வையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போதுள்ள விதைச் சான்றிதழ் நிறுவனத்தை விரிவு படுத்துவதோடல்லாமல், தரமுள்ள வித்துக்களை உற்பத்தி செய்வதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் துறையின் நடவடிக்கைகள் மற்றும் அக்கச் சார்பான திறனாய்வுகளை மேற்கொள்ளவும் விதைச் சான்றிதழ் நிறுவனத்திற்கு ஒரு தனித்தன்மையை

வழங்குவதென்பது சில காலமாகப் பரிசிலனையில் இருந்து வந்துள்ளது. ஆகவே தனியே அலுவலர்களைக் கொண்ட தனி விதைச் சான்றிதழ் இயக்ககம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பயறுவகைத் திட்டம்.—கிராமப்பகுதிகளுக்கு அதிக அளவு செலவு செய்யும் வகையிலும் பின்தங்கிய மக்கள் பெருமளவிற்குப் பயன் பெறவும் வேலைவாய்ப்பு வசதிகளை அதிகப்படுத்தவும், பயறு வகை உற்பத்தித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் 2,836 டன் அளவிற்குப் பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க முடியும். இத்திட்டம் சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பெரும் பரப்பில் பயறு வகைகளின் உற்பத்திக்கான தன்மைகளை விளக்கும் வகையில் அமையும். ஒவ்வொரு விவசாயியையும் சந்திப்பது, இடு பொருட்களைத் தேவையான நேரத்தில் வழங்குவது, தொழில் நுணுக்கங்களைப் பரப்புவது, காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளை அனுசரிப்பது, அறுவடை நுணுக்கங்களைப் பின்பற்றுவது மற்றும் நல்ல முறையில் விற்பனைக்கு வழிவகை செய்வது ஆகிய முறைகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

650 ஹெக்டேர் பரப்பில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்தல், 10,000 ஹெக்டேர் பரப்பிற்கு 25 சதவிகித மானிய விலையில் பூச்சி மருந்துகளை விநியோகம் செய்தல், 50 சதவிகித மானிய விலையில் 150 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை விநியோகித்தல் மற்றும் தேவையான அளவு உரம், பூச்சி மருந்து ஆகியவற்றை விநியோகித்தல் ஆகியவை இத்திட்டத்தின் செயல்முறைகளாகும். சுமார் 11,600 விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல்விளக்க மையம்.—பல ஆண்டு காலமாக ஆராய்ச்சி முடிவுகளை விவசாயிகளிடையே பரப்புவதற்கான அனுசரணை ஆராய்ச்சித் தளைகளை அமைப்பதை இத்துறை செயல்படுத்தி வருகிறது. வரும் ஆண்டுகளில் உழவியல் முறைகளில் பாசனத்தையும் நெருங்கிய தொடர்புடையதாக்கிச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் மேல் ஓடும் நீரைப் பயன்படுத்துவதில் முழுமை நிலையை அடைந்துள்ளோம். வரும் ஆண்டுகளில் வறட்சி சார்பு மாவட்டங்களில் மட்டுமே மேல் ஓடும் நீரின் வாய்ப்பை பயன்படுத்த வசதிகள் உள்ளன. இதைக் கருதி தருமபுரி மாவட்டத்திற்குச் சமீபத்தில் பம்பார், சின்னாறு, கேசர்குழி, வரட்டப்பள்ளி மற்றும் தும்பலஹள்ளி ஆகிய இடங்களில் அணைகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் மேற்கூறிய அணைகளால் பயன்பெறும் பகுதிகளுக்கு வரும் ஆண்டில்

முன்கூட்டியே திட்டமிடுவதற்கும், அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்கத்திற்குக் கவனமும், கூடுதல் முயற்சியும் தேவை. இதனைக் கருத்தில் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் சுமார் ரூ. 1,76 இலட்சம் மதிப்பீட்டில் அனுசரணை ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்கத்திற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது. இவ்வகை செயல்விளக்கம் மற்றும் விரிவாக்கப் பயிற்சிகள் மூலம் எடுக்கப்படும் முன் நடவடிக்கை காரணமாக இம்மாநிலத்தில் அரிதாகவும், மிகுந்த செலவிலும் கிடைக்கும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தவும் வரும் ஆண்டுகளில் விவசாயிகள் பயன் பெறவும் வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

குறைந்த செலவில் அதிகத் திறன் வாய்ந்த தொழில் நுட்பங்கள்.—சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு சாகுபடிச் செலவை அதிகப்படுத்தாமல் உற்பத்தித் திறனை உயர்த்தவல்ல குறைந்த செலவுள்ள உற்பத்தி நுணுக்கங்கள் உள்ள நவீன சாகுபடி முறைகளை விரிவாக்கக் கல்வி மூலம் அளிப்பதற்கேற்ற வகையில் உற்பத்தி செலவைக் குறைக்கும் கருவிகளாக தஞ்சைக்கு "கிராவிடர் அப்ளிகேட்டர்" மற்றும் மானவாரி சாகுபடிக்குப் பல நோக்குக் கருவிகளை அதிக அளவில் பிரபலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருவிகளை 25 சதவிகிதம் மற்றும் 33 சதவிகிதம் மானியத்தில் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் மற்றும் வறட்சி சார்பு பகுதித் திட்டத்தின் கீழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீலப்பச்சைப் பாசியை அதிக அளவில் பயன்படுத்தி, வெளி மண்டலத்தில் உள்ள நைட்ரஜன் தழைச்சத்தைக் கிரகிக்கும் வகையில் கூடுதல் திட்டங்களும் இத்துறையின் எதிர்கால நடவடிக்கைகளாக இருக்கும்.

"கிராவிடர் அப்ளிகேட்டரை" சரியான முறைப்படி பயன்படுத்தி, இடுபொருட்களை நெற்பயிரின் வேருக்கு அருகாமையில் முறைப்படி இடுவதால் உரத்தில் 50 சதமும் பூச்சி மருந்தில் 75 சதமும் மிச்சமாகிறது. வரும் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு இது ஒரு அரிய வாய்ப்பாகும். மானாவாரி சாகுபடிக்கான பலநோக்கு கருவியால் உழுவது, பாத்திகள் அமைப்பது இடைஉழவு மற்றும் விதைக்கும் பணிகளை எளிதாக்குவதல்லாமல், பழைய கருவியைக் காட்டிலும் அதிக பரப்பில் பணிகளைச் செய்யக்கூடியதாகவும், பல ஜோடி உழவு மாடுகள் செய்யும் பணியை ஒரு ஜோடி உழவு மாடுகளைக் கொண்டே செய்யக்கூடியதாகவும், நல்ல முறையில் விதைகள் விதைப்பது மற்றும் உரமிடல் போன்ற பணிகளைக் காலத்தே செய்வதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கக் கூடியதாகவும் விளங்குகிறது.

நீர்ப்பிடிப்புப் பகுதிப் பராமரிப்பு.—மாநிலத்தில் பெரும்பகுதி மானாவாரிப் புஞ்சை நிலங்களாக இருக்கின்றன. அவற்றைச் சார்ந்துள்ள விவசாயிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். இவ்வாறாக எல்லா மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்ப் பராமரிப்பு முறைகளும், நீர்ப் பிடிப்புப் பராமரிப்பு மற்றும் 400 ஹெக்டேர் ஒருங்கிணைந்த திட்டங்களும் மட்டுமின்றி, ஆராய்ச்சி நிலையங்களில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்ட புதிய முறையான அகலமுள்ள பாத்தி மற்றும் வாய்க்கால் முறையை (வயல் பரப்பு கொண்ட 'இக்ரிசாட்' முறைக்குத் திருத்திய முறை) இராமநாதபுரம்—திருநெல்வேலி பகுதிகளில் உள்ள தேரியார் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் படிப்படியாகப் பெருமளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண் விளை பொருட்கள் விற்பனை.

தமிழகத்தில் புதிதாக 14—10—1977-ல் தொடங்கப்பட்ட வேளாண்மை விளை பொருள் விற்பனைத் துறை ஏற்பட்டதன் நோக்கம், விற்பனைக் குழுக்களின் பணியில் விரைவும், விழிப்பும், ஏற்படுத்துவதோடு விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு நிலையான விலை கிடைக்கச் செய்து பொருளாதார ரீதியில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்காகவும் ஆகும். கடந்த ஓராண்டு காலத்திலே அதன் பணியினை ஆராய்கின்ற பொழுது விவசாயிகளின் பெரும்பாலான தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது என்பது அதனுடைய முன்னேற்றத்தில் இருந்து தெரிய வந்துள்ளது.

தமிழகத்தில் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புள்ள 15 மாவட்ட விற்பனைக் குழுக்களில், 1977 ஆம் ஆண்டிற்கு முன்பு 11 மாவட்டங்களில்தான் மாவட்ட விற்பனைக் குழுக்கள் இயங்கி வந்தன. வேளாண்மை விற்பனைத் துறை ஏற்பட்டதன் பின்பு, செயலற்று இருந்த சேலம் விற்பனைக் குழு விழிப்புணர்ச்சி பெற்று 16 இடங்களில் ஒழுங்குமுறைக் கூடங்கள் திறக்கவும் விளைபொருட்களை அறிவிக்கவும் தொடங்கியுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பல ஒழுங்குமுறைக் கூடங்களைத் திறக்கவும் அதன் வாயிலாக அம்மாவட்ட உழவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் 14—2—1979 அன்று அம்மாவட்டத்தில் மற்றுமொரு விற்பனைக் குழு ஏற்படுத்தப் பட்டுள்ளது."

[1979 ஏப்ரல் 16

நீலகிரி, சென்னை மாவட்டங்களில் விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தவும், சென்னை மாநகரத்தில் காய்கறிகளுக்கும், கனி வகைகளுக்கும் தனியாக இறுதி முனை (Terminal) விற்பனைக் கூடம் திறக்கும் திட்டமும் அரசின் ஆய்வில் உள்ளது.

மாவட்ட விற்பனைக் குழுக்களின் முன்னாள் தலைவர்களும், உறுப்பினர்களும் முறையாகச் செயல்படாததாலும் உழவர்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றாததாலும் அவர்களை அவசர ஆணை மூலம் பதவியில் இருந்து நீக்கி, அந்த இடத்தில் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாகத்திலும், திட்டங்களிலும் எதிர்பார்த்த முன்னேற்றம் காண வாய்ப்பளிக்கப்பட்டது. அந்த அவசர ஆணையும் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக அமுலாக்கப்பட்டுள்ளது.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள்.—1977 ஆம் ஆண்டிற்கு முன் 11 மாவட்ட விற்பனைக் குழுக்களின் நிர்வாகத்தில் 140 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்கி வந்தன. இப்பொழுது கோயம்புத்தூர், மதுரை, தருமபுரி, செங்கல்பட்டு, வட ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் மேலும் 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. வருகின்ற 1979-80 ஆம் ஆண்டிலேயே கூடுதலாக 25 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை, சேலம், புதுக்கோட்டை, செங்கல்பட்டு மாவட்டங்களில் திறக்கவும், 16 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒரு ஒழுங்குமுறைக் கூடம் அமைய வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படியும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவே விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை எளிதாக விற்கச் செய்யும் ஏற்பாடாகும். விவசாயிகளின் தேவையை அறிந்து எங்கெல்லாம் துணை விற்பனைக் கூடங்கள் திறக்க முடியுமோ அங்கெல்லாம் துணை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வகையில் 1978-79-ல் மட்டும் 22 துணை விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

எதிர்கால முன்னேற்றத்திற்கு வேண்டிய திட்டங்களும் அதில் அடங்கியுள்ள விற்பனைக்கான வசதிகளும்.

நிலங்கள்.—ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்தியதன் நோக்கமே சொந்தக் கட்டிடங்களில் பணியாற்ற வேண்டும் என்பதாகும். கடந்த 1977 ஆம் ஆண்டு வரையிலும், 52 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களே சொந்த இடங்களைப் பெற்று கட்டிட வசதிகளோடு நன்முறையில் பணியாற்றி வந்தன.

1979 ஏப்ரல் 16]

1977-78 ஆம் ஆண்டில் மட்டும் 38 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு சொந்த இடங்கள் வாங்கப்பட்டு கட்டுமானப் பணிகளான வலம் நடத்துவதற்கான கொட்டகையும், உலர்த்துவதற்கான களமும், உழவர் ஓய்வுக் குடிலும், பணப்பட்டுவாடா இடமும், குடிநீரும் பெரும்பாலான இடங்களில் முடிந்துள்ளன.

இந்த ஆண்டு குறைந்தது 30 இடங்களிலாவது 4 ஹெக்டேருக்குக் குறையாமல் நிலம் வாங்கிச் செயல்படத் தீவிர நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் உதவி.—இந்தத் துறை ஏற்பட்டதற்குப் பிறகு எடுத்துக் கொண்ட மிகவும் முக்கியமான நிர்வாகப் பணியாதெனில் தமிழகத்தில் 220 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டுமானப் பணிகளுக்கான உலக வங்கியின் கடனுதவி நாடி ரூ. 70.20 கோடிக்குச் சிறந்த திட்டம் தீட்டியுள்ளதாகும்.

பின்வரும் வசதிகளைச் செய்ய வேண்டி இத்திட்டத்தில் கீழ்க் கண்ட இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன :—

1. விளைபொருட்களை விரைவாக விற்பனை நிலையங்களுக்கு கொண்டுவரப் பெறும் சரக்கு வண்டிகள் வாங்குவது.

2. அருகிலுள்ள விற்பனைக் கூடங்களுக்கு விரைவாக விளைபொருளை எடுத்துச் செல்ல செப்பனிடப்பட்ட இணைப்புச் சாலைகளை அமைத்தல்.

3. விவசாயிகள், வியாபாரிகளின் விளைபொருட்களை, சேமிப்புக் கிடங்குகள் மூலம் சேமிக்க கட்டிடப் பணிகள் மேற்கொள்வது. இதனால் விவசாயி குறைந்த விலைக்கு அவசரப்பட்டு விற்காமல் இருப்பில் வைத்து விலை உயர்ந்த காலத்தில் அதிக விலைக்கு விற்பது.

4. வங்கி வசதிகள் செய்வதால் விவசாயிகள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளவும், அதிகமான பணத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்வதில் அபாயம் நீங்குவதும், வியாபாரிகள் வேண்டிய பணத்தை எளிதாகப் பெறுவதும் அடங்கும்.

5. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தங்கள் கிளைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் திறப்பதால் விளைபொருட்களை விற்குமுன் அடகு வைத்து அதிக பட்சமாக 4 சதவிகிதம் முன் பணம் உடனடியாகப் பெற வசதி வாய்ப்பு அளிப்பது.

6. தொலை பேசித் தொடர்பும், அஞ்சலகமும், ஏற்படுத்துவதால விளை பொருள் விற்பனை நிலவரம் அறிந்து உயர்ந்த விலை கோரும் வாய்ப்பும், வியாபாரிகள் குறைந்த காலத்தில் தொடர்பு கொண்டு, **வேண்டிய பணம் பெறுதலும்.**

7. உழவர்கள் தங்க ஓய்விடம்.

8. குடிநீர் வசதிகள்.

9. விளைபொருட்களைச் செய்முறைப்படுத்தும் பிரிவு.

10. தங்கும் அறைகள்.

11. கால்நடைகளுக்குக் கொட்டகையும் நீர்த்தொட்டியும் கட்டுதல்.

12. மின்னொளி வசதியும், விற்பனைக் கூட சாலையும்.

எதிர்காலத் திட்டங்கள்.—சென்னை மாநகராட்சிப் பகுதியில் இறுதி முனை விற்பனைக் கூடம் ஏற்படுத்தி, விற்க வரும் உழவர்களுக்கு உயர்ந்த விலையும், வியாபாரத்தைப் பெருக்கி நல்ல லாபம் அடையவும், நுகர்வோர் தரமான பண்டங்களை அடையும் வாய்ப்பினை ஏற்படுத்தும் செயற்குறிப்புகள் ஏற்கனவே உள்ளன. இதே போன்று தமிழகத்தில் கோவை, திருச்சி, மதுரை, காஞ்சிபுரம், வேலூர் போன்ற பெரிய நகரங்களில் காய்கறி விற்பனைக் கூடங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக வேளாண் தொழில் கழகம், தனது வேளாண்மை மூலப் பொருள்களைக் கொண்டு தொழில் தொடங்க வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எல்லாம் வேளாண்மைத் தொழில் மனைத் தொகுதி (Agro Complex) தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருளுக்கு உயர்ந்த விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

சிறப்புச் சாதனைகள்.—தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தஞ்சை, வட ஆர்க்காடு மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் குறுவை நெல்லைக் கொள்முதல் செய்தது. இதனால் விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்காமல் விழிப்புற்றனர். அதுபோல் தஞ்சை மாவட்டம் நஞ்சைக் காம்புகளில் விளைந்த கோடைப் பருத்தி அனைத்தும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்கப்பட்டது. அதே போன்று வருகின்ற ஆண்டிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் விளையும் கச்சாப் பருத்தி முழுவதையும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மூலம் விற்று விவசாயிகள் நல்ல விலைபெறுவதோடு, ஏற்றக் குறைவான கொள்முதலில்

வியாபாரிகளின் இரக்கமற்ற பிடியினின்றும் காப்பாற்றப்படுவார்கள். 1978-79 ஆம் ஆண்டில் உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தமிழக வேளாண் தொழிற் கழகம் ஒரு வேளாண் தொழில் மனைத் தொகுதியை நிறுவியுள்ளது.

அக்மார்க் தரம் பிரித்தல்.—இத்திட்டத்தின் கீழ் தாவர எண்ணெய், வெண்ணெய், நெய், தேன், உணவுத் தானியங்கள் தரம் பிரிக்கப்படுகின்றன. நுகர்வோரை அடையும் முன்பே தரம் பிரிக்கப்படுவதால் நல்ல தூய்மைத் தன்மையும், தரமும் உறுதியாக்கப்படுகிறது. அக்மார்க் முத்திரையிடப்பட்ட பொருள்கள் விற்பதில் வியாபாரிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டிற்கு முன்பு 13 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் இருந்தன. இவற்றில் தரத்திற்கும், தூய்மைக்கும் பொருட்களை ஆய்வு செய்து அவை நுகர்வோருக்கு அனுப்பப்படுகின்றன. 1977 ஆம் ஆண்டில் திருச்சியிலும், பண்ருட்டியிலும் சேர்த்து இரண்டு அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு 45 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒன்று வீதம் தமிழகத்தில் 60 அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றில் முதற்படியாக இவ்வாண்டு 5 இடங்களில் ஆய்வுக் கூடங்கள் ரூ. 5 இலட்சம் முதலீட்டில் திறக்கப்படும்.

அதிக அளவில் வியாபாரிகள் அக்மார்க் முத்திரையிடப்பட்ட விளை பொருட்களை விற்க விரும்புவதால் மதுரை, ஈரோடு நகரங்களில் உள்ள அக்மார்க் நிலையங்களால் அனைவருக்கும் தரம் பிரித்துக் கொடுக்க முடியவில்லை. ஆகையால் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் அவைகளில் கூடுதல் பணியாளரையும், சாதனங்களையும் ஏற்படுத்தி வலுப்படுத்தவும், 1979-80 ஆம் ஆண்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இயங்கும் அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் வாடகை இடங்களில் உள்ளன. இவைகளில் போதிய வசதியும் இல்லை. இவற்றின் வருமானத்தில் பெரும் பகுதி வாடகைக்கே செலவிட வேண்டியுள்ளது. ஆகையால் மதுரை, ஈரோடு ஆய்வுக் கூடங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. ஏனையவை படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

வாணிப முறை தரம் பிரித்தல்.—இதனுடைய நோக்கம், உற்பத்தி செய்யும் ஒவ்வொரு விவசாயியும் தன் பொருளின் தரம் அறிந்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அதிக விலைக்கு விற்பதற்காகும். விவசாயிகள் **முன்கூட்டியே தரம்** அறிவதால் அதிக விலை கிடைக்க ஆர்வம் **கொள்கிறார்கள்.**

இப்பொழுது தமிழகமெங்கும் 50 ஒழுங்குமுறைக் கூடங்களில் பயிற்சி பெற்ற தரம் பிரிப்பாளரும், அதற்கான சாதனங்களும் உள்ளன. வருகின்ற ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவில் 35 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வாணிப முறையில் தரம் பிரிக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. ஏனைய எல்லா ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் வாணிப முறையில் தரம் பிரிக்கும் வாய்ப்புகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். வேர்க்கடலையும் எள்ளும் இங்கு தரம் பிரிக்கப்படுகின்றன.

பருத்தி தரம் பிரித்தல்.—இத் திட்டத்தின் நோக்கம், பருத்தி விற்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், உற்பத்தியாகும் இடங்களிலும் தரம் பிரித்துக் காண்பித்து விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கச் செய்வதோடு, போட்டி விலைக்குத் தங்கள் பொருளை அங்காடியில் விற்கும் எண்ணமும் செயலும் தோற்றுவிக்கப்படுகின்றன.

இப்பொழுது தமிழகத்தில் 9 இடங்களில் பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள் உள்ளன. இவற்றில் 6 நிலையங்கள் மட்டும், ஒவ்வொன்றும் மத்திய அரசின் ஆண்டு மானியமாக ரூ. 50,000 பெற்று இயங்குகின்றன.

மத்திய அரசுச் சார்புத் திட்டத்தின்கீழ், மற்றுமொரு பருத்தி தரம் பிரிக்கும் நிலையம் ரூ. 50,000 மதிப்பில் சத்தியமங்கலத்தில் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில், இந்திய பருத்திக் கழகம் அதற்கு வேண்டிய பருத்தியை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் கொள்முதல் செய்ய முற்பட்டுள்ளதால், அதிகப்படியான பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்கள் ஏற்படுத்துவது பற்றி ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டம்.

சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கரும்பை உடனடியாக ஆலைக்கு எடுத்துச் செல்லும் பொருட்டு பழைய சாலைகளைச் செப்பனிடவும் புதிய சாலைகள் அமைக்கவும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்

கிறது. மேற்படி திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஆண்டு.	செலவு (ரூ. இலட்சத்தில்).	புதிய சாலை அமைத்தல். (கி. மீ).	சரளைக் கல் பரப்புதல். (கி. மீ.)	தார்போடுதல். (கி. மீ.)	சிறு மதகுகள். (எண்ணிக்கை)	பாலங்கள். (எண்ணிக்கை)	தரைப் பாலங்கள். (எண்ணிக்கை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1976—77	75.00	31.51	72.28	58.64	85	16	5
1977—78	104.58	41.27	51.20	52.83	56	13	3
1978—79 .. .. (Up to December 1978.)	52.50	60.87	39.49	24.58	97	8	5

மேற்படி திட்டத்துக்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சங்கள் ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பழைய சாலைகளைப் பராமரிப்பதற்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை புதிய சாலைகள் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்காகவும், எஞ்சிய பணிகளை மேற்கொள்வதற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மத்திய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்கள், சிறு குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புற **கைவினைஞர்கள் மற்றும் அரிசனங்கள், பழங்குடியினர் அடங்கிய நாட்டுப்**

நலிந்த நிலையிலுள்ள ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளைக் கொடுக்கவும், அவர்கள் வாழ்விலே போதிய முன்னேற்றம் பெறவும் குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் 161 வட்டாரங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த இந்திய அரசு முன்வந்துள்ளது. இந்த 161 வட்டாரங்களில். 30 வட்டாரங்கள் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயல்படும் இடங்களிலும், 100 வட்டாரங்கள் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களிலும், எஞ்சிய 31 வட்டாரங்கள் மேற்கூறிய தனித்திட்டங்கள் செயல்படாத இடங்களிலும் அமைந்தவையாகும்.

உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ரூ. 5 இலட்சம் விதமும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ரூ. 4 இலட்சம் விதமும் எஞ்சிய தனித்திட்டங்கள் செயல்படாத இடங்களில் 31 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்துக்கும் ரூ. 2 இலட்சம் விதமும் மானியமாக மத்திய அரசு வழங்கும். வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயல்படும் இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 வளர்ச்சி வட்டாரங்களுக்கு மட்டும் ரூ. 1 இலட்சம் விதம் மாநில அரசு வழங்கும். ஏனைய வளர்ச்சி வட்டாரங்களுக்கு மாநில அரசு மானியம் எதும் வழங்காது. தலைமைச் செயலகத்திலுள்ள வேளாண்மைத்துறை இந்தத் திட்டத்தினைச் செயல் படுத்த நேரடிப் பொறுப்பேற்றுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்கள் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களின் உதவியுடன் இத்திட்டத்திற்குப் பொறுப்பு வகிப்பர். வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலரும் அவரது பணியாளர்களும் இத்திட்டத்தினைச் செயல் படுத்தப் பொறுப்பை ஏற்பர்.

இந்திய அரசு கருத்துத் தெரிவித்ததை ஒட்டி மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சம்பந்தப்பட்ட வளர்ச்சித் துறைகள், வட்டாரத் திட்டங்களை, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வளர்ச்சி வட்டார அளவிலும் உருவாக்குவதற்கும், செயலாக்குவதற்குமான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்.

சிறு உழவர் மேம்பாட்டு அமைப்பு.

சிறு உழவர்கள், குறைந்த அளவு நிலம் உள்ள உழவர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இந்த அமைப்புகளின் நோக்கமாகும். உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதல், திருந்திய சாகுபடி முறைகளைக் கையாளுதல், தகுந்த உரமிடுதல், பல பயிர் சாகுபடி ஆகிய முறைகளைச் சிறு விவசாயிகள் கடைப் பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், கூடுமான இடங்களில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்கும் இம்முயற்சிகள் வகை செய்கின்றன. கடன் உதவித் தொகை மூலம் இடு பொருட்கள், விவசாயக் கருவிகள் வழங்குவதற்குத் தேவையான உதவிகளுக்கு வகை செய்யப்படுகிறது. கால்நடைகள் வாங்க அவற்றை முறையாக வளர்க்க, அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, மருத்துவ வசதி அளிக்க, பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுப்பதின் மூலம் பாற்பண்ணை போன்ற உபதொழில்கள் அமைக்க இத்திட்டத்தில் வகை செய்யப்படுகிறது. சென்னை, இராமநாதபுரம், மற்றும் தருமபுரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில், இந்த அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் மத்திய அரசின் முழு உதவி பெறும் மத்தியத் துறைத் திட்டமாகும். கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் கடன்களைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான விரிவாக்கப் பணியாளர்களுக்கு மாநில அரசு வகை செய்கிறது. 1978-79 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மத்திய அரசினரால் ஒதுக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும். செலவழிக்கப்பட்ட தொகை பற்றிய விபரங்கள் கீழ் வருமாறு :—

மாவட்டம்.	மத்திய அரசினரால் 1978—79—க்கு ஒதுக்கப் பட்ட தொகை.	மத்திய அரசினால் வழங்கப் பட்டது. (சென்ற ஆண்டு மிகுதி உட்பட).	1978—79—ல் செலவழிக்கப் பட்ட (31—12-1978 முடிய).

(ரூபாய் இலட்சத்தில்).

[1979 ஏப்ரல் 16

	(1)		(2)	(3)	(4)
1	மதுரை ..	..	34.60	19.12	15.68
2	திருநெல்வேலி	..	30.70	23.80	15.25
3	தென் ஆற்காடு	..	34.37	18.54	18.49
4	வட ஆற்காடு	..	43.78	26.07	25.60
5	சேலம் ..	..	38.18	20.43	18.43
6	செங்கல்பட்டு	..	37.00	19.83	15.15
7	தஞ்சாவூர்	..	50.00	27·34	26.83
8	திருச்சிராப்பள்ளி	..	40.00	19.50	12.44
9	புதுக்கோட்டை	..	40.03	20.26	12.65
10	கோயம்புத்தூர்		36.25	22.85	22.34
11	நீலகிரி ..	..	31.25	16.96	16.57
12	கன்னியாகுமரி	..	24.82	12.99	12·65
	மொத்தம்	..	440.95	247·69	212.08

இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டம்.

இத்திட்டம் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், வெகுகாலமாக வறட்சிக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், பொது மக்களில் முக்கியமாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வறட்சித் தாக்குதலினால் இவர்களுக்கு ஏற்படும் நலிவை ஓரளவு குறைப் பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இது மத்திய துறைத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும். ஐந்தாவது திட்ட கால முழுவதற்கும் இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங் களுக்கு மத்திய அரசு தனது பங்காக ரூ. 692.625 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. ஆகவே, ஐந்தாவது திட்ட காலமாகிய 1974-75 முதல் 1978-79 வரை மாநில அரசின் பங்கையும் சேர்த்து மொத்தத் திட்ட செலவின் அளவு ரூ. 1,385.250 இலட்சம் ஆகும். 1978-79 ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 122.865 இலட்சமும் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 209.20 இலட்சமும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 16]

மேலும், ரூ. 10.75 இலட்சத்திற்கு தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 1979-80 ஆம் ஆண்டிலும் தொடரப்படுகிறது. மத்திய அரசின் கட்டளைக்கேற்ப இராம நாதபுரம், தருமபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்கு 1979-80 ஆம் ஆண்டிற்கு ரூ. 464 இலட்சத்திற்கு வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் ரூ. 175 இலட்சம் செலவில் ஒரு பால் பவுடர் தொழிற் சாலையை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் இத்திட்டத்துக்குப் பெறப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டங்கள்.

பம்பாயிலுள்ள வேளாண்மை மறு நிதி மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியால் அரசு சில வேளாண்மைத் திட்டங்களைச் செயலாற்றி வருகிறது.

இத்திட்டத்தின் நிதித் தேவையில் 75 விழுக்காட்டை இக் கழகமும், 25 விழுக்காட்டை மத்திய, மாநில அரசுகளும் சமமாக ஏற்கும். மத்திய அர சின் பங்கைத் துவக்கத்தில் நிலவள வங்கி அளித்துவிட்டு அதை முறையான இடைவெளிக் காலத்தில் மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறுகிறது. எல்லாத் திட்டங்களும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியின் மூலம் கூட் டுறவுப் பதிவாளரால் செயற்படுத்தப்படுகின்றன.

1978-79 ஆம் ஆண்டில் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவிபெறும் கீழ்க்கண்ட திட்டங்கள் அரசினால் ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளது :—

திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூர், சாத்தான் குளம், உடன் குடி ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 15.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 202.35 ஹெக்டேர் நிலப் பரப்பில் செயல்படுத்த, தென்னை வளர்ப்புத் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தில் ரூபாய் 7.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 101.17 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயற்படுத்த தென்னை வளர்ப்புத் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், திருப்பத்தூர், சிவகங்கை மற்றும் திருவில்லிபுத்தூர் வட்டங்களில் ரூபாய் 27.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 364.23 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயற்படுத்த தென்னை வளர்ப்புத் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில், ரூபாய், 36.12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பாலாறு, பொறநதலாறு, மருதநதி, குடகனாறு பாசனத்திட்டம் பகுதிகளிலுள்ள 2,023.50 ஹெக்டேர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்வதறகான திட்டப் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், பர்கூர் பிர்க்காவில், ரூபாய் 15.84 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 202.35 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னந்தோப்பு உருவாக்கத் திட்டப்பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, பேராவூரணி, மதுக்கூர், வேதாரண்யம், முத்துப்பேட்டை, ஆவுடையார் கோயில் வட்டாரங்களில் ரூ. 21.01 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 364.23 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னந்தோப்பு உருவாக்கும் திட்டப் பணி ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 1,242.62 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் 36 சிறு பாசனம் அல்லாத திட்டங்களான தென்னை அபிவிருத்தி, ரப்பர் பயிரிடுதல், கோகோ பயிரிடுதல், திராட்சை பயிரிடுதல், தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல், இலவங்கம், காப்பி முதலியவற்றைப் பயிர் செய்தல் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ. 765.22 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பல நிலைகளில் திட்ட உருவாக்கத்திலுள்ள 34 சிறு பாசனத் திட்டம் அல்லாத திட்டங்கள் 1979-80-ல் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும்.

1979-80-ல் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் சிறுபாசனம் அல்லாத திட்டங்களின் கீழ் நீண்ட காலக் கடன் வழங்குவதற்காக ரூபாய் 5 கோடி செலவில் திட்டம் வகுக்கலாம் என்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

கழிவு நீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகளிலும் மற்றும் பேரூராட்சிகளிலும் உள்ள கழிவு நீரை உரத்திற்காகப் பயன்படுத்துவது நகர கம்போஸ்ட் உரத் திட்டத்தின் ஓர் பகுதியாகும். இத்திட்டத்தில் வடிகால் முறையை மாற்றியமைத்தல் அல்லது வடிகால்கள் கட்டுதல், கழிவு நீரைச் சேகரித்துக் கழிவுநீர்ப் பண்ணையில் பாசனத்திற்கு உபயோகப்படுத்துதல் ஆகியவை அடங்கும். தற்போது 22 உள்ளாட்சி மன்றங்கள் கழிவுநீர்ப் பண்ணைகளை நடத்தி வருகின்றன.

1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய "கழிவு நீர் உபயோகத் திட்டத்தை 10 உள்ளாட்சி மன்றங்களில் ரூபாய் 1,32,18,950 செலவில் செயல்படுத்த மாநில அரசு நிர்வாக அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் மைய அரசு மானியமாக ரூ. 43,62,253.50 (மூலதனச் செலவில் 33 சதவிகிதம்) அளித்துள்ளது. மானியத்தில் முதல் பகுதியாக ரூ. 14,54,081-ஐ உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிப்பதற்காக மைய அரசு வழங்கியுள்ளது. மேற்கண்ட மானியத்தை 10 உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் (1978-79) மேற்சொன்ன திட்டத்தின் கீழ் மத்திய அரசு கீழ்க்கண்டவாறு மானியம் வழங்கியுள்ளது.

2-வது தவணை	ரூ.	7,88,000. 00
3-வது தவணை	ரூ.	2,91,744.47
4 வது தவணை	ரூ.	7,79,465.61
5-வது தவணை	ரூ.	8,09,664.24
மொத்தம் ..	ரூ.	26,68,874.32

மத்திய அரசு வழங்கிய மேற்கூறிய மொத்த மானியத் தொகை பத்து உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பின்வரும் அறிக்கையில், உள்ளாட்சி மன்றங்கள் நிர்வகிக்கும் கழிவு நீர்ப் பண்ணைகளின் மொத்தப்பரப்பளவு, பயன் பெறும் மொத்தப்பரப்பளவு, உற்பத்தியான தீவனப் பயிரின் மொத்த அளவு (டன்னில்) : நகராட்சிகள் பெறும் வருவாய் முதலியவை குறிப்பிடப்பட்டுள்ளன :—

1.	உள்ளாட்சி மன்றங்கள் நிர்வகிக்கும் கழிவு நீர் பண்ணைகளின் மொத்தப் பரப்பளவு:	1,265,09	ஹெக்டேர்
2.	பயன்பெறும் மொத்தப் பரப்பளவு.	603.2	ஹெக்டேர்
3.	பயிராகும் தீவனப் பயிரின் மொத்த அளவு.	1976–77	79,451 டன்கள்
		1977–78	84,337 டன்கள்
4.	நகராட்சிகள் பெறும்வருவாய்	1976–77	ரூ. 29,93,248
		1977–78	ரூ, 34,29,925
5.	நகராட்சிகளின் ஆய்வாளர் கட்டுப்பாட்டிலுள்ள நகராட்சிகளிலும் நகரியங்களும் மொத்தம் உற்பத்தி செய்த கலவை எருவின் அளவு.	1976–77	3.38 இலட்சம் டன்கள
		1977–78	3.58 இலட்சம் டன்கள்.

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம்.

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. **இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்.**

1. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

2. உணவுப் பண்டங்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம்; இதுவரை ரூ. 330 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு, அதற்குரிய தொகை மத்திய மாநில அரசினரால் சம அளவில் செலுத்தப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டு வரை இக்கழகம் வருமானவரி கணக்கிடுவதற்கு **முன் ரூ. 73.11 இலட்சம் லாபம் அடைந்துள்ளது. இக்கழகத்தின் மொத்த** வணிகத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது. அது 1976-77-ல் ரூ. 109.77 இலட்சமாகவும் 1977-78-ல் ரூ. 215.95 இலட்சமாகவும் இருந்தது. **முதல் முதலில் தவணைக் கொள்முதல் திட்டம் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விடும் பணிகளையும் கொண்டதாகத் துவங்கப்பட்ட இக்கழகம்**

தற்போது குறிப்பிடத்தக்க வேறுபல துறைகளிலும் தனது பணியைப் பலதிறப் படுத்தியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டுக்கான குறிப்பிடத் தக்க விபரங்கள் :—

போச்சம்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் ஆலைத்தொகுதி ஆரம்பம்.

இத்திட்டத்தின் மொத்த மூலதனம் ரூ. 56 இலட்சம். இவ்வாலை நாள் ஒன்றுக்கு 50 டன் எண்ணெய் வித்துக்களைப் பிழிந்தெடுக்கும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்புப் பகுதி நாள் ஒன்றுக்கு 20 டன்கள் உற்பத்தி திறனும், கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலை நாள் ஒன்றுக்கு 50 டன்கள் உற்பத்தித் திறனும் கொண்டவைகளாகும்.

சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் (சனோலா) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய் (கடோலா) விற்பனையும் எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு ஏற்றுமதியும்.—எண்ணெய் விற்பனையில் பெருமளவில் இக்கழகம் இறங்குவதற்கு முன்னோடியாகவும் சூரியகாந்தி எண்ணெயை மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு ஒரு வித்திடும் திட்டமாகவும் இக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயை சனோலா என்ற விற்பனைப் பெயரில் விற்பனை செய்யத் தொடங்கியது. சனோலா என்ற விற்பனைப் பெயர் அங்காடியில் மிக நல்ல இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 18 மாத காலத்தில், நாடு முழுவதற்குமான சூரியகாந்தி எண்ணெய் விற்பனையின் மதிப்பீடான 16,000 டன்களில் 2,000 டன்களுக்கும் அதிகமாக சனோலா விற்பனையாகியுள்ளது.

இக்கழகம் சுத்திகரிக்கப்பட்ட கடலை எண்ணெய்யை 'கடோலா' என்ற விற்பனைப் பெயரில் விற்பனை செய்து வருகிறது. இந்த விற்பனைப் பெயர் அங்காடியில் மிக நல்ல இடத்தைப் பிடித்துள்ளது.

இதில் கிடைக்கும் கடலைப் பிண்ணாக்கு இக்கழகத்தின் கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலையில் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாலையில் உற்பத்தி **செய்யப்பட்ட 800 டன்கள் கடலைப் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.**

சூரியகாந்திக்கு ஆதரவு விலை.—இம்மாநிலத்தில் சூரியகாந்தி பயிரிடும் பரப்பளவை அதிகரிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் சூரியகாந்தி விதையைக் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.25 ஆக அளிக்க இக்கழகம் முன்வந்துள்ளது.

பூச்சிக் கொல்லி மருந்துத் திட்டம்.—1972-ல் முதல் முதலில் இக்கழகம் விவசாயிகளின் போதரவு பெற்ற பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரித்தலை மேற்கொண்டது. தனிப்பட்ட உற்பத்தியாளர் பிரிவுகளில் உதவியைப் பயன் படுத்தி அவைகள் தயாரிக்கப்பட்டன. ரூ. 9.79 இலட்ச மூலதனச் செலவில் இக்கழகம் தனக்குச் சொந்தமாக ஒரு தொழிற்சாலையை அம்பத்தூரில் ஏற் படுத்தியுள்ளது. இத்தொழிற்சாலை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கியது. பெருகி வரும் தேவைக்காக 1978 ஆம் ஆண்டில் ரூ. 4 இலட்சம் செலவில் மற்றுமொரு ஆலை நிறுவப்பட்டுள்ளது. இக்கழகத்தால் தயாரிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள், இக்கழகத்தின் மண்டல விற்பனைக் கூடங்கள் மற்றும் வியாபாரிகள் மூலமாக அல்லது வேளாண்மைத் துறைக்கு விற்கப்பட்டு அத்துறையினரின் விற்பனைக் கூடங்கள் வழியாக விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் கீழ்க்காணும் அளவு மருந்துகளை விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது :—

	1978—79.	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.)	1979–80.	மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்.)
1. பி. எச். சி. தூள் 10 சதவிகிதம.	7,270 டன்.	59.59	10,000 டன்.	82.00
2. மாலதியான் ஈசி 50 சதவிகிதம்.	2,550 லிட்டர்.	0.66	2,000 லிட்டர்.	0.52
3. டி.டி.டி. 5 சதவிகிதம் தூள்.	210 டன்.	2.53	1,000 டன்.	12.00

1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 26.82 இலட்சம் மற்றும் 35.82 இலட்சம் அளவிற்கு இந்துஸ்தான் பூச்சிக் கொல்லி நிறுவனத்தின் தயாரிப்புக்களான என்டோசல்பான், பி.எச்.சி. 50 சதவிகிதம் டி. டி. டி. 50 சதவிகிதம் மற்றும் டி. டி. டி. 25 சதவிகிதம் மருந்துகளையும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டு முயற்சியில் பூச்சிக்கொல்லி மருந்துக்குத் தேவையான மூலப் பொருள் தயாரித்தல்.—இக்கழகம் தென் மண்டலத்திலுள்ள பிற மாநில வேளாண் தொழிற் கழகங்களுடனும். டில்லியிலுள்ள இந்துஸ்தான் இன்செக் டிசைட்ஸ் என்கிற மத்திய அரசு நிறுவனத்துடனும் கூட்டு முயற்சியாக "பி.எச்.சி." மூலப்பொருள், "கார்பரைல்" மூலப்பொருள் போன்ற

வற்றைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறது. இம்முயற்சியின் பயனாக இக் கழகத்தின் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் பணிகளுக்கு அதிக அளவு கச்சாப்பொருட்கள் கிடைக்கும்.

மீன்பிடி வலைத் திட்டம்.—ரூ. 30 இலட்சம் முதலீட்டில் நைலானிலிருந் தும், பாலிதீனிலிருந்தும் மீன்பிடி வலை தயாரிக்க நிறுவப்பட்ட ஆலை, ஆகஸ்டு 1976-ல் வணிக ரீதியாக உற்பத்தியைத் துவக்கியது. தேவையைக் கருதி மெல்லிழை நைலான் மீன்பிடி வலைகளைத் தயாரிப்பதற்காக ரூ. 10 லட்சம் செலவில் மற்றுமொரு இயந்திரம் இறக்குமதி செய்யப்பட்டு 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் பிரிவின் தயாரிப்புத் திறனை விரிவுப் படுத்தும் வகையில் கூடுதல் இயந்திரங்களை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஒரு பிரிவும் 1979-80 ஆம் ஆண்டில் மற்றுமொரு பிரிவும் இறக்குமதி செய்யப்படும்.

இந்த ஆலை 1978-79, 1979-80 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 20.95 இலட்சம், மற்றும் ரூ. 29.64 இலட்சம் மதிப்புள்ள 14 டன்கள் மற்றும் 20 டன்கள் வலைகளைத் தயாரிக்கும்.

வேளாண் தொழில்களுக்காக மாவட்டத்தைத் தெரிந்தெடுத்தல்.—அரசின் விருப்பத்திற்கிணங்க இக்கழகத்திற்குள்ளேயே உள்ள மனித சக்தி ஆதாரங் களைக் கொண்டு அமைக்கப்படுகிற செய்தி மற்றும் ஆலோசனைப் பிரிவின் மூலம் மாவட்டத் தொழில் மையங்களுடன் செயல்முறை உறவு கொள்ளும் திட்டமொன்றைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கழகம், இந்திய முதலீடு மையும், ஒரு தேசியமாக்கப்பட்ட வங்கி, மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து தெரிந்தெடுக் கப்பட்ட ஒரு மாவட்டத்தில் உள்ள வேளாண்தொழில்கள் வளங்களைப் பற்றி ஆய்வு நடத்தவும் கருதப்பட்டுள்ளது. அதன் முடிவாக ஏறத்தாழ 70 வேளாண் திட்டங்களுக்கு திட்ட அறிக்கைகள் தயாரித்துத் திறமையுள்ள தொழில் முனைவர்களுக்குக் Entrepreneurs கொடுக்கப்படும். மேலும், இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவிகள் செய்யப்படும்.

வேளாண் தொழில் மனைத் தொகுதி, உடுமலைப்பேட்டை.— உடுமலைப்பேட்டையில் உள்ள வேளாண்தொழில் மனைத் தொகுதி புதிய கருத்தில் அமைப் பெற்றதாகும். இந்தத் தொழில் மனைத் தொகுதியில் விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைப் பொருட்களை உடனடி விற்பனை

செய்வதற்கு உதவி செய்வதற்காக, ஒழுங்கு படுத்தப்பட்ட விற்பனைக் கூடத்திற்குத் துணையாக வேளாண்மை சம்பந்தப்பட்ட செய்முறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகள் இடைத் தரகர்களை நீக்கி விவசாயி களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் (என் கோபட்) 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் நாள் ஒரு மாநில கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் நாள் துவக்கப்பட்டது ஆகும். இவ்விணையத்தின் முதன்மையான நோக்கங் களாவன :—

1. மாவட்ட மற்றும் வட்டார அளவில் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்கள் மையங்களில் பல்வேறு தரப்பட்ட விவசாயப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்பாடுசெய்வதும், இச்சங்கங்களின் பணிகளை மேற்பார்வை செய்தலும்.

2. இந்நிறுவனத்தின்கீழ், மேற்கண்ட சங்கங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைக் கூறுதல், இதற்கான தொழில் நுட்ப ஆலோசனைக் குழு நிறு வுதல், மற்றும் இச்சங்கங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு போதிய பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தல்.

3. மேற்கூறப்பட்ட வேளாண்மைப் பணி மையங்கள் மூலமாக விவசாயி களுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து முதலிய பொருட்களை விநியோ கம் செய்யும் பொருட்டு, அரசு கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் மூகவராகச் செயல்படுவதும் ஆகும்.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதைனம் ரூபாய் ஒரு கோடி ஆகும். இன்று வரை 325 உறுப்பினர்கள் எடுத்துள்ள பங்கு மூலதனம் ரூபாய் 28.31 இலட்சம் ஆகும்.

என்கோபட் என்று அழைக்கப்படும் மாநில அளவிலான இந்த இணையத் தைச் சார்ந்த வட்டார வேளாண்மைப் பொறியல் மற்றும் சேவை கூட்டுறவு மையங்கள் வேலையின்றி இருக்கும் தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கு நல்ல தோரு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்தோடு நிறுவப்பட்டவை ஆகும். மேலும், விவசாயிகள் இயந்திர மயமான விவசாயப் பணிகளை மேற்கொள் வதும் இம்மையங்கள் நிறுவப்பட்டதன் மற்றொரு நோக்கம் ஆகும். இத்திட்டத் துவக்கத்தில் சுமார் 300 வட்டார அளவிலான சங்கங்கள் நிறுவப்

படவேண்டும் என்று இருந்தபோதிலும், இச்சங்கங்கள் செயல்பட சில இடங் களில் போதிய வளமையின்மை காரணமாக அரசு 220 வட்டார அளவிலான மையங்களை மட்டுமே அங்கீகரித்தது. பின்னர் இந்த அமைப்பு ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டு, இதன் விளைவாக ஒவ்வொரு மையத்திற்கும் அதன் பணிகளைச் செவ்வனே செய்வ தற்கு ஏதுவாக ரூபாய் ஐம்பதாயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டது. இவை யின்றி மாநிலத்தில் 12 மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் நிறுவப் பட்டுள்ளன. இம்மாவட்ட அளவிலான சங்கங்களின் முக்கிய நோக்கம் விவ சாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளை வாடகைக்கு விடுகிற பணிகளை மேற்கொள்வதுடன், விவசாயிகள் மற்றும் நிறுவனங் களுக்குச் சொந்தமான டிராக்டர், விவசாய இயந்திரக் கருவிகள் முதலான வற்றை நன்முறையில் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்வதுமாகும். இவ்வாறாக இந்நிறுவனத்தின் மும்முறை அமைப்பு கீழ்க்கண்டவாறு ஆகும்:—

1. மாநில அளவில் "என்கோபெட்"

2. மாவட்ட அளவில் 12 கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள்.

3. வட்டார அளவில் 220 வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்கள்.

ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிறுவப் பட்டுள்ள மேற்கூறிய 220 வட்டார அளவிலான சங்கங்களில், 781 தொழில் நுட்பப் பட்டதாரிகள் மற்றும் கல்வி அறிவு பெற்றவர்களுக்கு டிசம்பர் 1978 முடிய வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களின் 3 முதன்மையான நோக்கங்கள் கீழ்க்கண்டவை யாகும் :—

1. டிராக்டர்கள் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளை விவசாயி களுக்கு வாடகைக்கு விடுதல்

2. விவசாயத் தேவைகளான உரம், பூச்சி மருந்து, விதை போன்ற பொருட்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.

3. விவசாயிகளின் நலன் பொருட்டு சிறிய விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்தல்.

மேற்கூறிய வட்டார அளவிலான மையங்களுக்கு டிராக்டர் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட ஏதுவாகவும், மற்றும் பழுது பார்த்தல் பணியை மேற்கொள்ளவும், பாரத ஸ்டேட் பாங்கு ஒவ்வொரு மையத்திற்கும் இரண்டு இலட்சம் ரூபாய் வரை, ஆக மொத்தம் எல்லா மையங்களுக்கும் ரூபாய் ஆறு கோடி உச்சக் கட்ட கடனுதவியாக அளிக்க அரசு உத்திரவாதத்துடன் முன் வந்தது. இத்திட்டத்தின்படி, 186 வட்டார அளவிலான மையங்கள் சுமார் 207 லட்ச ரூபாய் வரை கடனுதவியாக பாரத ஸ்டேட் பாங்கிலிருந்து பெற்றுள்ளன. இந்த நிதியுதவியுடன் இந்த மையங்கள் 225 டிராக்டர்கள், 195 டிரெய்லர்கள், 149 ஆயில் என்ஜின்கள், 314 விசைத் தெளிப்பான்கள், 11 பாறை துளைக்கும் கருவிகள் (ராக் பிளாஸ்ட் யூனிட்கள்), 1 பவர் டில்லர் ஆகியவற்றைப் பெற்றுள்ளன. இவ்வியந்திரங்களின் மூலமாக இந்த மையங்கள் விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு, இயந்திர உழவுத் தொழிலைப் பொறுத்த மட்டில் தரமான பணிகளை ஆற்றி வருகின்றன. இயந்திர உழவுத் தொழிலின் மூலமாகக் கிடைக்கப்பட்ட வருவாய் 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 51,39,143 லிருந்து 1976-77-ல் ரூ. 49,83,018 என்று குறைந்தபோதிலும், 1977-78 ஆம் ஆண்டு ரூ. 54,74,760 ஆக உயர்ந்துள்ளது. சராசரியாக ஒரு ஆண்டிற்கு இந்நிறுவனத்தின் ஒவ்வொரு டிராக்டரும் 1,000 மணிநேர அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த அளவு மாநிலத்தில் வேறு எந்தப் பொது நிறுவனத்தைக் காட்டிலும் அதிகமானதாகும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட நிறுவனங்கள், மற்றும் கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களின் உதவியுடன் இந்த இயந்திர உழவுத் தொழிலை 1979—80 ஆம் ஆண்டில் அதிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை நடவடிக்கைகள் :

டிராக்டர்கள் மற்றும் விவசாய இயந்திரக் கருவிகளின் விலையில் நிலவும் உயர்வு கண்டதாலும், வங்கி நிதி உதவியின் மீது சுமத்தப்படும் அதிக வட்டியின் காரணமாகவும், இந்த மையங்களின் வாடகைப் பணியின் மூலமாகக் கிடைக்கும் ஆதாயம் குறைவலாயிற்று. மையங்களின் இழப்பு மேன்மேலும் அதிகரித்து வந்தது. இப்போக்கைத் தடுக்கும் வண்ணம் விவசாயத் தேவைகளான பூச்சி மருந்து, உரம், விதைகள், டீசல் எண்ணெய் வகைகள், இயந்திர உதிரிப் பொருட்கள் ஆகியவற்றின் விநியோகத்தை இம்மையங்களின் மூலம் விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நீரேற்றுப் பாசனக் கிணறுகள் தோண்டவும், பூச்சி மருந்து தெளிப்பு, தானியப் பாதுகாப்பு உலோகக் குதிர்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்தல், சாண எரிவாயுக் கலன்கள் (கோபார் கேஸ் பிளாண்ட்) நிறுவனம் செய்தல் போன்ற பணிகளை

இம்மையங்களின் மூலம் மேற்கொள்ளுவதற்கு அரசும் உதவி செய்துள்ளது. இம்மையங்களின் பணி முறைகளை ஒழுங்குபடுத்தவும், விவசாயிகளின் நலன் கருதி மையங்களின் பணிகளை விரிவு படுத்தத் தகுந்த ஆலோசனைகள் கூறவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ், தொடர்புள்ள அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அமைத்துள்ளது. இவ்வாறாக அரசுத் தரப்பிலிருந்தும் மாநில அளவிலான "என்கோ பெட்" உதவியுடனும் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாக மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள்/மையங்கள் மூலமாக விநியோக நடவடிக்கைகளின் அளவு ஒரு புதிய குறியீட்டை எட்டியுள்ளது. விநியோகம் செய்யப்பட்ட விவசாயத் தேவைகளின் மதிப்பு 1975-76-ல் ரூ. 1,07,32,769 ; 1976-77-ல் ரூ. 2,72,76,315 ஆகும். இது மேலும் 1977-78-ல் ரூ. 6,80,50,728 ஆக உயர்ந்துள்ளது. இது சாதாரண முன்னேற்றம் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறான முயற்சிகளின் விளைவாகப் பெருமிழப்பில் செயல்பட்டு வந்த பெருவாரியான மையங்கள் முன்பிருந்த நிதிநிலை நெருக்கடியிலிருந்து விடுபடும் நிலையில் இருக்கின்றன. செயல்படுத்தப்பட்ட 187 மையங்களில், சராசரியாக 90 மையங்கள் 1978-79 ஆம் ஆண்டில் ஆதாயத்தில் இயங்கி வந்துள்ளன. 12 மாவட்ட அளவிலான சங்கங்களில் சராசரியாக 9 சங்கங்கள் இதே காலத்தில் ஆதாயத்தில் இயங்கி வந்துள்ளன. இதன் காரணமாக 1979-80 ஆம் ஆண்டில் விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் பூச்சி மருந்து, விவசாய இயந்திரக் கருவிகள், உதிரிப் பொருட்கள், எண்ணெய் வகைகள் மற்றும் இன்றியமையாத பொருட்களின் விநியோகத்தை மேலும் பெருமளவில் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் மையங்கள் மூலமாக விவசாயத் தேவைகளின் விநியோக மதிப்பு 1970—80 ஆம் ஆண்டில் ரூ. 15 கோடி இலக்கைத் தாண்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மையங்களின் முன்னிருக்கும் முதன்மை நோக்கங்களைப் பூர்த்தி செய்ய ஏதுவாக அரசு இம்மையங்களுக்கு ஊழியர்களின் சம்பள மானியமாக ரூ. 7,992 இலட்சம் 1977-78 ஆம் ஆண்டுக்கு வழங்கியுள்ளது. இம்மையங்களின் நிதி நிலையில் அபிவிருத்தி அடைய ஏதுவாக அடுத்த ஆண்டுகளுக்கும் இதுபோன்ற ஊழியர் சம்பள மானிய உதவியை வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தானிய சேமிப்பு உலோகக் குதிர்கள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல், விவசாயிகளுக்கு மின்சார மோட்டார், பம்பு செட்டுகள் ஆகியவற்றை வழங்குவதற்கு ஒருமுகப் படுத்துதல் போன்ற திட்டங்களை அரசு இந்த இணையத்தின் மூலமாகச்

செயல்படுத்தி வருகிறது. தானிய சேமிப்பு திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு மலிவாகவும், விஞ்ஞான ரீதியிலுமான கண்டுபிடிக்கப்பட்டுள்ள தானிய சேமிப்பு உலோகக் குதிர்களை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் பணியை இந்த இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்ட நிறுவனங்கள், சிறு விவசாயிகள் இந்த உலோக குதிர்களை வாங்குவதற்கு உதவியாக அங்கீகரிக்கப்பட்ட மானிய உதவி அளித்து வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் தானிய சேமிப்பு உலோகக் குதிர்கள் வாங்க விரும்பும் விவசாயிகளுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது. இந்த இணையம் தம்மைச் சார்ந்துள்ள மாவட்ட அளவிலான வேளாண்மைப் பொறியியல் பணிச் சங்கங்களின் மூலமாக 1976-77 ஆம் ஆண்டில் 2,295 குதிர்களையும், 1977-78 ஆம் ஆண்டில் 2,406 குதிர்களையும் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் சனவரித் திங்கள் முடிய 2,000 உலோகக் குதிர்களை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இவ்விணையம் ஆண்டுக்கு இரண்டாயிரம் குதிர்கள் என்ற மத்திய அரசுக் குறியீட்டைத் தாண்டிவிட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு மாநில அரசின் மூலமாக 1976-77 மற்றும் 1977-78-ல் முறையே ரூ. 8 இலட்சம், ரூ. 4 இலட்சம் வட்டியில்லாக் கடனாக நிதி உதவி வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டுக்கு (1978-79) இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த ரூ. 12 இலட்சம் வட்டியில்லாக் கடனாக நிதி உதவி வழங்கும். இத்திட்டம் நன்முறையில் செயல்படும் விதத்தைக் கண்டு உலக வங்கி தமிழ்நாட்டில் இத் திட்டத்தை மேலும், விரிவுபடுத்தக் குறிப்பாக சிறு விவசாயிகளின் நலன் கருதி அடுத்த சில ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டம் அமுலாக்கப்பெறின், இம்மாநிலம் முழுவதும் உள்ள எண்ணற்ற விவசாயிகள் பலன் அடைவார்கள்.

ஒருமுகப்படுத்தும் திட்டத்தின் கீழ் இவ்விணையத்திடம் டீசல் என்ஜின், மற்றும் மின்சார மோட்டார், பம்பு செட்டுகள், அதன் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு விலை நிர்ணயம் செய்தலும், மற்றும் தரமான என்ஜின்களை நிலவள வங்கிக் கடன்தாரர்களுக்கு வழங்குவதற்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டன. கடந்த 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் முறையே 2,262, 4,020 பம்பு செட்டுகள் வழங்குவதற்கான அனுப்புகை உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விரு ஆண்டுகளில் முறையே 213, 1,057 மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாண்டில், இந்த பம்பு செட்டுகள் வாங்குவது ஓரளவு குறைந்திருப்பினும், ஒரு குறிப்பிடத் தகுந்த அளவு பம்பு செட்டுகள் இவ்விணையத்தின் மூலம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த, மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் தரமுள்ள பம்பு

செட்டுகள் கிடைக்கப்பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ், இவ்விணையத்தைச் சார்ந்த வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவை சங்களின் மூலம் இந்தப் பம்பு செட்டுகளுக்கு விற்பனை பின் பராமரிப்பை நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்விணையம் மேலும் ரூ. 3,77,626 மதிப்பிற்குக் குழாய்கள் அதன் உபகரணங்கள், மின் இயக்கிகள், ஸ்விட்சுகள், மற்றும் ரூ. 3,48,126 மதிப்பிற்குத் தஞ்சை மாவட்டத்தில் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டத்தின் கீழ் ஆழ்கிணறுகள், மற்றும் வடிநீர்க் குழாய்கள் அமைப்பதற்குக் குழாய்கள் விநியோகம் செய்துள்ளது. மீதமுள்ள இவ்வாண்டில் மேற்கொண்டு ரூ. 2 லட்சம் மதிப்புள்ள குழாய்களும் அதன் உபகரணங்களும், மற்றும் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனத் திட்டத்தின்கீழ் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புக்குக் குழாய்களும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் ஆறு இலட்சம் மதிப்பிற்கு இவ்வுபகரணங்கள் நிலவள வங்கிக் கடன்தாரர்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ரூ. 60 ஆயிரம் வருமானம் இவ்விணையத்திற்குக் கிடைக்கும். இதே ஆண்டில் 17 ஆயிரம் மீட்டர் அளவிற்கு 6 அங்குலம் (150 மில்லி மீட்டர்) குழாய்கள் தஞ்சை மாவட்டத்தில் சுகாதார கிணறுகள் அமைப்பதற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 17 இலட்சம் வருமானம் கிடைக்க ஏதுவாகும். கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட குழாய்களின் அளவு 18 ஆயிரம் மீட்டர்கள் ஆகும்.

இவையன்றி, மேலும் இவ்விணையம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தை சார்ந்த விவசாயிகளுக்கும் மற்றும் அரசு துறை நிறுவனங்களுக்கும் தரமுள்ள விசைத் தெளிப்பான்களை நியாய விலையில் வழங்கி வருகிறது. இவ்வாண்டில் ஏறக்குறைய நான்காயிரம் விசைத்தெளிப்பான்கள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் சுமார் ஐயாயிரம் விசைத் தெளிப்பான்கள் விவசாயிகளின் மேம்பாட்டுக்காக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகளின் மூலமாக இவ்விணையம் அதிக உணவு உற்பத்திக்கு நல்ல பல வழிவகைகள் செய்வதுடன் வேலையில்லா தொழில் நுட்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம்.

தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகம் 1974 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், 1956 ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கம் மாநிலத்தில் சாகுபடி செய்யாமல் தரிசாகக்

கிடக்கும் நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவது ஆகும். மேலும் இலங்கை அகதிகளின் மறுவாழ்வுத் தொடர்பான திட்டங்களும் பின்னர் இக் கழகத்துடன் இணைக்கப்பட்டன.

முசரவாக்கம், நெய்வேலி, தியாகராஜபுரம், சக்கரமங்கலம், வெள்ளாள விடுதி, கிராப்பிடுங்கி, செல்லூர் ஆகிய இடங்களில் இக்கழகம் சாகுபடிப் பணிகளை மேற்கொண்டு பண்ணைகளை அமைத்துள்ளது. அதன் விபரம் வருமாறு:—

		பரப்பு (ஹெக்டேரில்).
1	நெய்வேலி திட்டம் I	568.94
2	நெய்வேலி திட்டம் II.	276.92
3	நெய்வேலி திட்டம் III	89.69
4	வெள்ளாள விடுதி	123.43
5	கிராப்பிடுங்கி	39.52
6	தியாகராஜபுரம்	76.57
7	சக்கரமங்கலம்	38.06
8	கலூர் பிரிவு	43.85
9.	முசரவாக்கம்	59.21
10	ரூபநாராயணநல்லூர்	8.09
11	செல்லூர்	109.97
	மொத்தம்	1,444.09

1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை, 1,444.09 ஹெக்டேர் நிலங்கள் இக்கழகத்தால் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன் மூலம் ரூ. 38.99 இலட்சம் வருவாய் கிடைத்தது. ரூ. 35,096 இலட்சம் மதிப்புள்ள நிலை பயிர்களும் உள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் 1971-ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் ஏற்படுத்தப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி விலங்கு சார்ந்த அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி ஆகிய பிரிவுகள்

இந்தப் பல்கலைக் கழகத்தின் முக்கியப் பிரிவுகளாக, 1976-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டன, 1977-78 கல்வி ஆண்டிலிருந்து மீனளக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது.

நமது மாநிலத்தின் பண்ணைத் துறையில் முன்னேற்றம் காணுவதற்கான தொழில் நுட்ப உத்திகளை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் தொடர்ந்து இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சியில் ஆராய்ச்சி, கற்பித்தல், வளர்ச்சிக் கல்விப் பணிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புப் பலநோக்கு அணுகு முறையில் வலுப் படுத்தப்படும்.

கல்வி.—கோயம்புத்தூரில் வேளாண்மைப் பிரிவில் 1978-79 ஆம் ஆண்டில் விதைத் தொழில் நுட்பவியலிலும், வேளாண்மை வளர்ச்சியிலும் அடிப்படை அறிவியல் பயிர்க் கூறியியலிலும் மற்றும் கலைப் பிரிவிலும் புதிய பி.எச்டி. பட்டத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இவை தவிர, உடற்கூறு இயல், கால்நடைப் பிறப்பு மரபு, வளர்ப்புக் கால்நடைச் சத்துணவு, பாற்பண்ணை அறிவியல் ஆகிய நான்கும் கால்நடைப் பிரிவில் தொடங்கப்பட்டுள்ளன. இதுடன், புல்லின ஆராய்ச்சி, நுண்ணியிரியல் ஆகிய பாடங்களில் புதிதாக பட்ட மேற்படிப்புகளும் கோயம்புத்தூரில் தொடங்கப்பட்டன.

1979-80-ம் ஆண்டில், கால்நடை மருத்துவ அறிவியலில், பி.எச்டி. பட்டம் பெறக்கூடிய இரண்டு புதிய படிப்புகளைத் தொடங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலும், புதிதாக வேளாண்மைத் தொழில் நிர்வாகத்தில் பட்ட மேற் படிப்பும் (எம்.எஸ்சி.), தோட்டக் கலையில் நாற்றங்கால் வளர்ப்பு முறையில் குறுகியகாலப் படிப்பும் தொடங்கப்படும். தற்போது தூத்துக் குடியில் கற்பிக்கப்படுகின்ற இளநிலை அறிவியல் (மீனளம்) படிப்புக்குப் போதிய கல்வி ஆதரவு வழங்குவதற்காக புதிதாக ஐந்து துறைகள் அதாவது, மீன் உயிரியல், மீன் வளர்ப்பு, மீனளத் தொழில் நுட்பவியல், மீனளச் சூழல், மீனள வாயில்களும் பொருளாதாரமும் ஆகிய ஐந்து துறைகளை மீனளக் கல்வித் துறையில் ஏற்படுத்தப்படும்.

ஆராய்ச்சி.—1978-79 ஆம் ஆண்டில், வேளாண்மை, கால்நடை அறிவியல்களின் பல்வேறு பிரிவுகளின் கீழ் 1,162 ஆராய்ச்சி திட்டங்கள் நடைபெற்று வந்தன. விஞ்ஞானிகளின் இடைவிடா முயற்சிகளின் பலனாகப் புதிதாக 13 இனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் பலனாக நமது மாநிலத்தில் கிலியூட்டிவந்த ஒரு கொடிய நோயான ஃபெல்கோரிட் நோய் தாக்காத ஒருவகை நெல்லைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்த முடிந்தது,

1979-80-ம் ஆண்டில், பல்கலைக் கழகம் சுமார் 1,200 ஆராய்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தக் கருதியுள்ளது. உழவர்கள், வளர்ச்சிப் பணியாளர்கள், இத்தொழிலை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஆகியோரைக் கலந்தாலோசித்து இந்த ஆராய்ச்சித் திட்டங்கள் தெரிந்தெடுக்கப்படும்.

வேளாண்மை.—புன்செய் சாகுபடியில் உள்ள பிரச்சினைகளையும், பாலாறு ஆற்றுப் படுகையின் சிறப்புத் தேவைகளையும் சமாளிப்பதற்காக, இராமநாதபுரம், வட ஆற்காடு மாவட்டங்களில் வட்டார ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில், திட்ட நோக்கிலான புன்செய் ஆராய்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படும். விதைப் பொருட்களை உற்பத்தி செய்ய தீவிர முயற்சி எடுக்கப்படும். சாகுபடிச் செலவைக் குறைப்பதற்காக, ஒரு தொழில் நுட்ப அணுகு முறையில், குறைந்த செலவில் அதிக உற்பத்தி கிடைக்கக்கூடிய உத்திகளைக் கண்டு பிடிப்பதில் போதிய நாட்டம் செலுத்தப்படும். பயிர்ப் பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்தப் புதிய எதிர் நுண்ம முறைகளைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இலை நோய் அறிதல் ஆய்வுக்கூடம் ஒன்று அமைக்கப்படும்.

உயிர்த் தாதுக்கள் அடங்கிய இரசாயன உரமும், பாசித் தாவரங்களும்.—பாசித் தாவரங்கள், உயிர்த் தாதுக்கள் அடங்கிய இராசாயன உரங்கள் பற்றிய ஆய்வுகள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அண்மையில், முதலமைச்சர் வெளிநாட்டுப் பயணம் சென்று திரும்பிய பின்னர் அவர் தெரிவித்த கருத்திற்கிணங்க, பின்வரும் வகைகளில் ஆய்வுகள் தீவிரமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

(அ) இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவை போன்ற வேளாண்மை இடுபொருட்களின் செலவைக் குறைப்பதன் மூலம், சாகுபடிச் செலவைக் குறைப்பது.

(ஆ) 'அசோல்லா' (நீர்ப்பாசிகள்), ஸ்பைரில்லம் (Spirillum) ஆகிய நீர்ப்பாசி வகைகள் போன்ற பல்வகையான நுண்ணுயிர்த் தாவரங்களைப் பயன்படுத்தி, நெற்பயிருக்கு நைட்ரஜன் உரச் சத்து இடுவதன் அளவை மிச்சப்படுத்தும் வகையில், அதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராய்வது.

மேலும் பெரும்பாலான தானிய வகைகள், வணிகப் பயிர்கள் முதலியவற்றிற்கு இரசாயன உரமிடுவதை மிச்சப்படுத்தவும், அதனால் தமிழக விவசாயிகளுக்கு மிகுந்த பலன் ஏற்படுத்தவும் "பேசில்ஸ் போலிமிக்சா" Bacillus Polymyxa "அசோஸ்பிரில்லம்" (Azosprillum) டெரிக்சியா (Derixia) போன்ற உயிரணுச் சத்துக்கள் கலந்த புதிய வகையான உரங்களைக் கண்டுபிடிக்க வேண்டி அடிப்படையான செய்முறை ஆராய்ச்சிகள் நடத்துவது.

(இ) பயிர்களை அழிக்கும் பூச்சிகளுக்கு முள்ளால் முள்ளை எடுப்பது போல அப்பயிர் அழிப்பு பூச்சிகளுக்கு எதிரான பூச்சிகளை உற்பத்தி செய்து, அப்பயிர் அழிப்பு பூச்சிகளின்மீது ஏவுவதால் பயிர்கள் வளர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நுண்ணுயிர் வளர்ப்பு முறையின்மூலம் ஓர் ஆய்வுத் திட்டம் தயாரிக்கப்படுவது. உதாரணமாக பருத்தி/நிலக்கடலைப் பயிர்களில் பருத்தி உருண்டைப் புழு, " புரோடீனியா " பூச்சியினால் ஏற்படும் நோயைக் கட்டுப்படுத்த ஒட்டுயிருண்ணிகள், உயிர்க்கொல்லிகள், பயிர் நோயை உண்டுபண்ணும் கிருமிகள் இவற்றைக்கொண்டு ஆய்வுகள் நடத்துவது.

(ஈ) மிகவும் மலிவான செலவில் பெருமளவில் ஏரிகளிலும், குளங்களிலும் பயிரிடக்கூடிய "ஆல்கா வகைப்பாசி" யிலிருந்து மிகவும் மலிவான புரதச் சத்துணவைத் தாராளமாகத் தயாரிப்பதற்கு "குளோரல்லா வல்காரிஸ்" என்னும் பச்சைப் பாசிகளைப் பயன்படுத்துவது குறித்தும் ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடத்துவது.

இதனை உணவு வகைகளில் கலந்து நாம் உட்கொள்ளத்தக்க வகையில் ஏற்றதாகச் செய்வதற்கும் ஆய்வுகள் நடத்துவது.

இந்தப் பாசியைக் கோழித் தீனிகளோடு தரமுள்ள விதாச்சாரத்தில் கலந்து பயன்படுத்துவதன் மூலம், இதுகாறும் பயன்படுத்தப்பட்டு வரும் கடலைப் பிண்ணாக்கின் அளவில் 50 சதவீதம் மிச்சப்படும் என்றும் நிருப்பிக்கப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவம்.—தலத்துக்குச் சென்று சிகிச்சை அளிக்கும் திட்டங்களை மேற்கொள்ளுதல், தல நிலைமைகளில் உறை விந்து குறித்து ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக செயற்கைமுறைக் கருத்தரிப்பு இயல் ஊர்திப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், கால்நடைச் சத்துணவில் ஓரகத் தனிப் பிரிவை அமைத்தல், அபூர்வ கனிவள தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

வளர்ச்சிப் பணி.—வளர்ச்சிப் பணி விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு குழுவைக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்தரங்குகள் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. ஏனைய பிரச்சாரத் திட்டங்கள் தீவிரப்படுத்தப்படும்.

1979-80 ஆம் ஆண்டில், வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளத்துக்காக கீழ்க்கண்ட தொகை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் செலவழிக்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது:—

(1)	திட்டப் பணிகல். (2)	திட்டம் சாராதாவை. (4)	மொத்தம் (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. வேளாண்மை ..	70.47	206.00	275.47
2. கால்நடை மருத்துவம்	92.25	100.00	19[illegible].25
3. மீனாளயம் ..	28.00	..	28.00

இதைத் தவிர, இந்தப் பல்கலைக் கழகம், தன்னுடைய ஆராய்ச்சித் திட்டங்களுக்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்தும், ஏனைய இதுபோன்ற நிறுவன அமைப்புகளிடமிருந்தும் நிதி உதவியைப் பெற்று வருகிறது.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1979 ஏப்ரல் 17.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. கேள்வி நேரத்தைக் கைவிடல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மேலவைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 22ன் கீழ் இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை:

"மேலவை விதி 22ன்கீழ் இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

(1) சேலம் மாவட்டத்தில் விவசாயக் கடன்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்களும், திரு. வி. ஆர். பெரியண்ணன் அவர்களும், சேலம் மாவட்டத்தில் விவசாயக் கடன்கள் திடீரென்று நிறுத்தி வைக்கப் பட்டிருப்பது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு அந்த விதிகளின்கீழ் வருகிறதென் பதைச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மேலவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் கடந்த 29—1—1979 முதல் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாகக் கொடுக்கப்பட்டு வந்த கடன்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத் தால், விவசாயிகள் இன்றைக்கு கூட்டுறவு நாணயச் சங்கங்களின் வாயிலாகக் கடன் பெற முடியாமல் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தமிழக அரசு கொண்டு வந்துள்ள கடன் மசோதா சட்டத்தாலே, இன்றைக்கு விவசாயிகள் தனியார்களிடம் கடன் பெற முடியவில்லை. அதோடு மட்டுமல்லாமல், அந்த அறிவிப்பை அடுத்து, கூட்டுறவு சங்கங்களில் இன்று

கடன் பெற முடியவில்லை. கரும்பு மகசூல் செய்யும் விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் வாயிலாகக் கடன் பெறுகிறார்கள். ஆனால் அந்த விவசாயி பருத்திக்காக வாங்கிய மகசூல் கடனை உரிய காலத்தில் திருப்பிக் கட்டாததால், ஜப்தி நடவடிக்கை மேற்கொள்கிறோமென்று குறிப்பு எழுதிவிடுவதால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும் விவசாயிகள் கடன் பெற முடியவில்லை. அதே நேரத்தில், மாநிலக் கூட்டுறவு வங்கி, சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கிக்குக் கொடுக்கும் நிதியை நிறுத்திவிட்டதால், இன்றைக்கு அவர்களால் கடன் கொடுக்க முடியவில்லை. ஆனால் அதே நேரத்தில், இன்றைக்கு விவசாயிகளிடமிருந்து எந்தத் தொகையும் வசூலாக வில்லை என்று சொல்லிவிட முடியாது. விவசாயிகளிடத்தில், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டுங்கள், மீண்டும் உங்களுக்குக் கடன் தருகிறோ மென்று கூறியதால், சென்ற பிப்ரவரி மாதத்தில் சேலம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு ரூ. 1.25 கோடி வசூலாகியிருக்கிறது. மார்ச் மாதத்தில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. அப்படி வசூலாகியிருந்தும் இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் பட்டுவாடா செய்யப்படவில்லை. அதற்கு ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்கள். பருத்தி உற்பத்தி செய்வதற்கு கடன் வாங்கியிருக்கிறார்கள். பின்னால் தணிக்கை செய்தபோது, வயல் களிலே பருத்தி மகசூல் செய்யப்படவில்லை என்பதைக் கண்டறிந்து, வாங்கிய கடனை உடனடியாகத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாங்கள் சொல்லுவது, பருத்தியைப் போடுகிறார்கள். ஆனால் இயற்கைக் கோளாறுகளால் அதிக மழை பெய்து பருத்தி அழிந்து போகிறது. உடனே அந்த இடத்தில் நெல் மகசூல் செய்கிறார்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தீர்மானத்தை இன்னும் விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இன்றைக்கு பருத்தி மகசூலுக்கு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தால்தான், கடன் கொடுக்க முடியுமென்று சொல்லுவது, பெருத்த பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாங்கள் சொல்லுவது, அரசு மகசூல் கடனைக் கொடுக்க வேண்டியதில்லை. சொத்துக்கள் அடிப்படையிலே கடன் தர வேண்டுமென்பதுதான். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கிருக்கிறவர்கள் மழையை நம்பி வாழ்பவர்கள், கிணற்றை நம்பி வாழ்பவர்கள். எனவே அவர்களுடைய சொத்துக்களின் மதிப்பை வைத்து, அதிலே 1/4 பங்கு அல்லது 1/3 பங்கு கடனாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குக் கடன் கொடுக்காததால், விவசாயிகள் பெருத்த அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க, அவையின் இதர நிகழ்ச்சி களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சொல்ல வேண்டிய விவரங்களை உறுப்பினரே சொல்லிவிட்டார்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, பயிர்க் கடன்கள் கொடுப்பது இன்றைக்கு சேலம் மாவட்டத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பயிருக்காகக் கடன் வாங்கப்பட்டதோ, அந்தப் பயிர் வைக்கப்படவில்லை என்று, ஒருசில சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பார்வையிட்டபோது கண்டுபிடிக்கப் பட்டு, அதன் காரணமாகக் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து கடன் கொடுக் காமல் இருக்கிறார்கள். ஜனவரி மாதத்தில்தான் அறுவடை செய்து, அடுத்த பயிர் செய்ய வேண்டிய காலம். அந்த நேரத்தில்தான் அதிகமாகக் கடன் கொடுக்க வேண்டியிருக்கும். அடுத்து, கூட்டுறவு நாணயச் சங்கமாக இருந்தாலும், மத்திய வங்கியாக இருந்தாலும், ஜூன் மாதத்தில் டிமான்ட் வசூல் செய்தால்தான், 'ஏ' வகுப்பில் தொடர்ந்து இருக்கும். சேலம் மாவட்டக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில், அது தொடர்ந்து 'ஏ' வகுப்பிலேயே இருக்கும் நிலைமையில் இருக்கிறது. ஆனால் இப்போது கடன் கொடுப்பதை ஒத்தி வைத்துள்ளதால், 'ஏ' வகுப்பை விட்டுக் குறைந்து போய் விடுமோ என்ற நிலை இருக்கிறது. எனவே இப்போது நிறுத்தி வைத்திருக்கும் கடன்களை உடனடியாகக் கொடுக்க வேண்டும். அமைச்சர வர்கள் உத்தரவிட்டிருப்பார்கள். அவர்கள் பதில் சொல்லும்போது, அதைக் கூறுவார்களென்று எண்ணுகிறேன். அப்படிப்பட்ட உத்தரவு வர வேண்டு மென்று எதிர்பார்க்கிறேன். இருந்தாலும் பிரச்சினை மிக முக்கியமானதாக இருப்பதால், அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள விவசாய சேவா கூட்டுறவு சங்கங்களின் மூலம் விவசாயக் கடன்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. டிசம்பர் 1978 முடிய 9 மாதக் காலத்தில் குறுகிய காலப் பயிர்க் கடன்களாக 10.31 கோடி ரூபாயும், கறவை மாடுகள் வாங்குவது போன்ற மத்திய காலக் கடனாக 1.26 கோடி ரூபாயும் வழங்கப்பட்டன. 1979 சனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களில் குறுகிய காலக் கடன்களாக 152 லட்சத்து 77 ஆயிரம் ரூபாயும், மத்தியக் காலக் கடன்களாக சனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய 3 திங்கள்களில் 147 லட்சத்து 88 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 ஏப்ரல் 17

1978 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கொடுக்கப்பட்ட பயிர்க் கடன்கள் உபயோகப்படுத்தப்பட்டதைப்பற்றி மாநில வங்கி அலுவலர்கள் அண்மையில் சில சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்தனர். அப்போது பருத்தி, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கென்று வாங்கப்பட்ட கடன்கள் நெல்லும், ராகியும் பயிரிட உபயோகப்படுத்தப்பட்டது தெரிய வந்தது. பருத்தி, நிலக்கடலை, நெல், ராகி ஆகிய பயிர்களுக்காக ஏக்கர் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு கடன் அளிக்கப்படுகிறது. பருத்தி, சாதா ரகம் ஆயிரம் ரூபாய் நிலகடலை (பாசனம்) 650 ரூபாய்; நிலக் கடலை, மானாவரி 350 ரூபாய்; நெல் உயர் ரகம் 850 ரூபாய்; ராகி, பாசனம் 400 ரூபாய்; ராகி மானாவரி 225 ரூபாய். அதிக அளவு கடன் தேவைப்படும் பயிர் செய்யப் போவதாகக் கூறிக் கடன் பெற்று, குறைந்த அளவு கடன் தேவைப்படும் பயிர்களை பயிர் செய்துள்ளார்கள். இம்மாதிரி தவறாகப் பயன்படுத்தப்பட்ட கடன்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து பெறும் பணத்திற்கு ஈடாக காட்ட முடியாதென்றும், இம்மாதிரி கடன்களை அளித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் மாநில வங்கி மத்திய வங்கிக்கு அறிவுரை வழங்கியது. இதன் அடிப்படையில் மத்திய வங்கி 9 பணியாளர் களை தற்காலிக வேலை நீக்கம் செய்து, ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. நவம்பர் 1978-ல் அதிக மழையின் காரணமாக, விதைக்கப்பட்ட பருத்தி தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டு, பிறகு நெல்லோ, ராகியோ பயிர் செய்யப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக விவசாயிகள் எடுத்துச் சொல்லிய காரணத்தையும் சேலம் மத்திய வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கிக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

மாறுதலான பயிர் உற்பத்தி செய்ய நேரிடும்போது, அந்தத் தகவலை உடனடியாக கிராமக் கூட்டுறவு சங்கத்திற்குத் தெரியப்படுத்துவதுடன் வாங்கிய கடன் கூடுதலாக இருந்தால் கூடுதல் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும் அல்லது குறைவாக இருந்தால் கூடுதலான தொகை பெற வேண்டும். சங்கங்களின் உறுப்பினர்கள் இவ்வாறு செய்யத் தவறி விட்டனர்

விவசாயிகளுக்கு மேற்கொண்டு கடன் கொடுப்பதில் தடங்கல் இல்லாமல் இருப்பதற்காக மேற்சொன்ன கடன்களை பயிர் செய்யப்பட்டு இருக்கும் பயிரைப் பொறுத்து நேர் செய்தால் அப்படி நேர் செய்யப்பட்ட கடன்கள் ரிசர்வ் வங்கியிலிருந்து பெறும் கடனுக்கு ஈடாக எடுத்துக் கொள்ளப்படு மென்றும் மேற்கொண்டு மாநில வங்கியிலிருந்து பணம் பெற்று கடன்

1979 ஏப்ரல் 17] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

வழங்கலாமென்றும் மாநில வங்கி சேலம் மத்திய வங்கிக்கு 12—4—1979 அன்று தெரிவித்துள்ளது. ஆகையால் சேலம் மாவட்டக் கிராமக் கூட்டுறவு சங்கங்கள் ஜனவரி முதல் மார்ச் வரை வழங்கியுள்ள பயிர்க் கடன்களைவிட அதிக அளவில் மேற்கொண்டு பயிர்க் கடன்களை வழங்க முடியும். அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிவித்து, இதன் காரணமாக சபையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று உங்களுடைய மேலான கவனத் திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

(பிற்பகல் 4-10.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(2) வட ஆற்காடு மாவட்டத்தில் கலசபாக்கம் அருகில் பஸ் மோதி 13 பேர் மரணமடைந்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி மணி அவர்களும், திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் கலசபாக்கம் அருகில் பஸ் மோதி 13 பேர் மரணமடைந்தது குறித்து, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் அறிவிப்பு கொடுத்திருக் கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறதென்று சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட் டத்தில் கலசபாக்கம் என்ற ஊருக்குப் பக்கத்திலே இரண்டு நாட்களுக்கு முன்பு பஸ் ஒன்று புளிய மரத்தில் மோதி, பெட்ரோல் டாங்கில் தீ பிடித்ததன் விளைவாக, பஸ் பூராவும் எரிந்து 13 நபர்கள் தீயில் எரிந்து செத்தார்கள். 18 பேர் படுகாயமடைந்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து மேலவை விதி 43ன்படி, விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 15—4—1979 அன்று காலை 11.30 மணியளவில் வேலூர் திருவண்ணாமலை சாலையில் கலசபாக்கத்துக்கு அருகே தனியார் பேருந்து என் 4438 சாலைக்கு அருகிலுள்ள ஒரு புளிய மரத்தில் மோதியது. இப்பேருந்தில் பயணம் செய்தவர்களில் சிலர் தங்களுடன் மண்ணெண்ணெய் டின்களை எடுத்துச் சென்றிருந்த காரணத்தால், விபத்து ஏற்பட்ட உடன் பேருந்து முழுவதும் தீ

பற்றி எரிந்து விட்டது. பேருந்தில் மொத்தம் 33 பேர் பயணம் செய்தார்கள். 9 பயணிகள் ஸ்தலத்திலேயே கருகி உயிரிழந்தனர். மூவர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையிலும் ஒருவர் வேலூர் மருத்துவமனையிலும் இறந்தனர். 10 பேர் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையிலும் மூன்று பேர் போளூர் மருத்துவமனையிலும் உள்ளிருப்பு நோயாளிகளாக இன்பேசியன்ட்ஸ் ஆக இருக்கிறார்கள். 2 பேர் அவுட்பேசியன்ட்ஸ் ஆக சிகிச்சை பெற்றார்கள். பேருந்தில் இருந்த இதர பயணிகள் பேருந்திலிருந்து விரைவில் வெளியே தப்பி வர முயன்றும் வெளியேறும் வழி ஒன்றே ஒன்று இருந்ததனால், பேருந்தில் இருந்தவர்கள் தீ விபத்தில் கருகி பலியானதையொட்டி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முடிவுப்படி நகர்புறப் பேருந்துகளில் இருப்பதுபோல் பயணிகளின் நலனையும், வசதியையும் கருதி தமிழகத்திலுள்ள பேருந்துகள் அனைத்திலும் கட்டாயமாக இரண்டு ஏறி இறங்கும் வழிகள் அமைக்க உத்தரவிட்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் தீ விபத்தினால் இறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரது வாரிசுக்கு தலா 2,500 ரூபாயும் தீயில் காயமுற்றோருக்கு அதற்கேற்றவாறு பண உதவியும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனே அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவிடப் பட்டிருக்கிறது. அத்துடன் அந்தத் தனியார் பேருந்து உரிமையாளர் இறந்த ஒவ்வொருவரின் குடும்ப வாரிசுக்கும் 2,500 ரூபாய் ஆரம்பக் கட்டமாக செலவுக்காக உடனடியாக வழங்க வேண்டுமென்றும் மேலும் மேற்கொண்டும் ஏதாவது நஷ்ட ஈடு போன்றவற்றை சட்டப்படி பெற்றுத் தருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு டிரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே இதை விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சமூக நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பினை 19 ஆம் தேதிக்கு பதிலாக 21 ஆம் தேதி உணவு-பொருள் வழங்கல் கொள்கைக் குறிப்புடன் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாமென இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டது. மற்ற நிகழ்ச்சிகளில் மாற்றம் இல்லை.

4. கவன ஈர்ப்பு.

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாக பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைந்ததன் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு, துயர் குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெருமழையின், காரணமாக பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு விளைச்சல் சாதாரண காலங்களில் விளைவதைவிட 50 சதவீதம் குறைவாக விளைந்ததின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு, துயர் இவைகளின் நிமித்தம் எழுந்துள்ள அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பொதுப் பிரச்சினை குறித்து".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு பற்றி விளக்கமான விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, விவர அறிக்கையின்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 50 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது என்றாலும் 12,825 ஏக்கர் தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கைப்படி ¼ பங்கு விவசாயிகள் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நில வரியை பூரா ரத்து செய்வது பற்றியும் அதன் காரணமாக வருகின்ற மேல் வரி போன்றவற்றை ரத்து செய்வது பற்றியும் அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டு நவம்பரில் பெருமழை பெய்தது. அதுபோல் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும் கூட பெரு மழை பெய்தது. 1837 ஆம் பசலியினுடைய நில வரியை 1838 ஆம் பசலியில் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். 1838 ஆம் பசலியிலும் பெருமழை ஏற்பட்டு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1837 மற்றும் 1838 ஆகிய இரண்டு பசலிகளிலுமுள்ள நில வரியை ரத்து செய்வதற்கும் மற்றும் உள்ள வரிகளை ரத்து செய்வதற்கும் அரசு முன் வருமா? அதேபோல் கூட்டுறவுக் கடன்கள் அத்தனையையும் 3 ஆண்டு களுக்குத் தள்ளி வைக்க அரசு முன்வருமா? அதுமட்டுமல்ல, நிவாரணப்

@ 662-664 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பணி இந்த ஆண்டு அங்கு ஒன்றும் சரியாக நடைபெறவில்லை என்பதையும் நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அதுபற்றியும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஒத்தி வைப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. அதை அரசு செய்யும் என்பதை உறுதியளிக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நிவாரணப் பணி ஒன்றும் சரியாக நடக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நிவாரணப் பணி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் சரியாக நிவாரணப் பணிகள் நடக்கவில்லையென்றால், அதுபற்றியும் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: 1,500 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களில் மண் மேடிட்டது என்று அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக 200 பேருக்கு உள்ளாகத்தான் அது கொடுக்கப் பட்டிருக்கிறது. அடுத்து பயிரிடக் கூடிய காலம் வந்து விட்டது. விதையைப் பொறுத்தவரை, 25 சதவிகிதம் விலை குறைவாக விவசாயிகளுக்குக் கொடுப் பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் உள்ள எல்லாப் பகுதிகளையும் சேர்த்து அறிக்கையில் விவரம் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: சிறு விவசாயிகளுடைய நிலங்கள் வெள்ளத்தால் மண் மேடிட்டால், அதைச் சரி செய்ய ஆகும் மொத்தச் செலவையும் அரசு ஏற்றுக்கொள்ளும். பெரிய விவசாயிகளின் நிலங்களாக இருந்தால் 50 சதவிதம் செலவினை அரசு ஏற்றுக்கொள்ளும். இச்சலுகைக்கான உச்சவரம்பு மண் மேடிட்ட நிலமாக இருப்பின், ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 வரை மட்டும் வழங்கலாமென்பதும், மண் மேடிட்ட கிணறாக இருப்பின் கிணறு ஒன்றுக்கு ரூபாய் 1,000 வரை வழங்கலா மென்பதுமாகும். மண் மேடிட்ட பகுதிகள் எல்லாவற்றையும் அரசு அப்புறப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. கடன் தொகையை 30 மாதங்களில் கட்ட வேண்டுமென்ற ஏற்பாட்டினை அரசு செய்து கொண்டிருக்கிறது. இந்தச் சலுகையைப் பெறுவதில் கால தாமதம் ஏதாவது இருந்தால் அரசு அதைப் போக்க கவனித்து ஏற்பாடு செய்யும்.

(2) தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூர், தென்கனிகோட்டை, சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மொழிவாரி சிறுபான்மை ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவது நிறுத்தப்பட்டது குறித்து.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, கீழ்க்கண்ட பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

" தர்மபுரி மாவட்டத்தில் ஹோசூர், தென்கனிகோட்டை, சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மொழிவாரி சிறுபான்மை மாணவர்களைப் (தெலுங்கு, கன்னடம், உருது மொழி பேசும் மாணவர்கள்) பொறுத்தமட்டில் 1 முதல் 3 ஆம் வகுப்புகள் வரை படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவது நிறுத்தப்பட்டதன் விளைவாக ஏழை மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்து ".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, விவர அறிக்கை * அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துசாமி: அறிக்கையில் ஒரு விஷயம் சொல்லப்பட்டி ருக்கிறது. 1974-75 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தப் புத்தகங்களை இலவசமாகப் பெற்றுத் தர விண்ணப்பம் எதுவும் அனுப்பப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 1974-75 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஊராட்சி ஒன்றியங்களில் தணிக்கை நடத்தப்பட்டு தான் வருகிறது. நான் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த உடன் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்ற டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள். இன்றுவரை இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழில் படிக்கக்கூடியவர்களுக்கு மட்டும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கிவிட்டு தெலுங்கு போன்ற மொழியில் படிக்கின்ற சிறுபான்மை யினருக்கு வழங்காமல் வித்தியாசம் காட்டப்படுகிறது. தமிழில் படிக்கின்ற மாணவர்களை முதல்தர மாணவர்களாகவும் தெலுங்கில் படிக்கின்ற மாணவர் களை இரண்டாம்தர மாணவர்களாகவும் கருதுகின்ற நிலை இருக்கிறது. இந்த வித்தியாசம் காட்டப்படுகின்ற ஒரு நிலை அவர்களிடையே வேகத்தை

ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில், ஹோசூர், தென்கனிக்கோட்டை, சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மொழிவாரி சிறுபான்மை ஏழை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்குவது நிறுத்தப்பட்டது குறித்து

உண்டாக்கியிருக்கிறது. அதிகாரிகளால் தான் இது வழங்கப்படாமல் இருந்தது என்று கருதி கடமையிலிருந்து அவர்கள் தவறியதற்கு அவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கக் கருதியிருக்கிறது?

(பிற்பகல் 4.20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்படி ஆணையர்கள் கேட்காமல் இருக்கின்ற நிலைமையில், கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் கேட்க வேண்டிய நிலைமையில் இருந்து கேட்காமல் இருந்தால், அந்த நிலைமைகள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அந்தப் புத்தகங்களுக்கான தொகையைத் தர போதிய ஏற்பாடுகளைக் கல்வித் துறை செய்யும்.

திரு. செ. முத்துசாமி : ஓசூர் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களின் உணர்வுகள் நமக்கு நன்றாகத் தெரியும். பொதுவாகவே அவர்கள் தமிழைச் சொல்லித் தருவதற்காக ஆசிரியர்களை நியமிப்பதிலும் பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுவதிலும் தமிழக அரசு அக்கறை காட்டுவதுபோல் தங்களுடைய மொழிப் பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்குவதில் அக்கறை காட்டவில்லை என்று கருதுகிறார்கள். அந்த நூல்களை ஆந்திர அரசிடமிருந்து வாங்குகின்ற காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் சரியான முறையில், தக்க நடவடிக்கைகள் எடுத்து அவைகளை வழங்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே, தமிழ்ப் பாடநூல்கள் எப்படி வழங்கப்படுகின்றனவோ அதுபோலவே, அங்குள்ள சிறுபான்மை மக்களுக்கும் அவர்களுடைய பாட நூல்களை விரைவாக வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆணையரே அந்தப் புத்தகங்களை அந்தச் சிறுபான்மைப் பிள்ளைகளுக்கு வாங்கித் தந்துவிட்டு, அதற்கான தொகையை மாவட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து பெற ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்கள் அப்படிக் கேட்கவில்லை. ஆகவே தான் தரவில்லை. வாங்கித் தந்துவிட்டுக் கேட்க வேண்டும். வாங்கித் தராமலிருந்தால், கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்ததுபோல் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும்.

5. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"**தமிழ்நாடு** சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த **156-வது விதியின்படி 1979-80-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்**களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்குமூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1979-80 ஆம் நிதியாண்டிற்கான உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன்.

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும் ..	19-4-1979 மாலை 5 மணி
வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும் ..	19-4-1979 மாலை 6 மணி
வேட்பு மனுக்களைத் திரும்பிப் பெறுவதற்கான நாளும், நேரமும் ..	20-4-1979 மாலை 5 மணி

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப்பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1979-80 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2(1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1979-80 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன்.

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும்	..	19-4-1979 மாலை 5 மணி
வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும்	..	19-4-1971 மாலை 6 மணி
வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்	..	20-4-1979 மாலை 5. மணி

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(3) வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது மேலவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றையதினம் 12 பேர் தங்களுடைய மேலான கருத்துக்களை, ஆலோசனைகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நல்ல கருத்துக்களை வழங்கியவர்களும், ஆலோசனைகளை வழங்கியவர்களும் எல்லோருமே ஒருமனதாகப் பாராட்டுகின்ற அளவிலே இந்தத் துறையினுடைய சாதனைகளைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள். பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துரைக்கப்பட்டாலும், ஒருசில எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும், அந்த விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் எத்தனையோ நல்ல கருத்துக்களையும், நல்ல யோசனைகளையும் சொல்லியிருந்தாலும், அத்தனை நல்ல கருத்துக்களுக்கும், நல்ல யோசனைகளுக்கும் நான் பதில் சொல்லாவிட்டாலும்கூட அந்தக் கருத்துக்களையெல்லாம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம் ' என்ற உறுதியை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்திலே கலந்துகொண்ட நம்முடைய பெரியவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றி ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்தில், கருத்துக்களைச் சொல்லுகின்ற நேரத்தில் அவர்களுடைய உள்ளத்திலே இருந்த எண்ணங்களையெல்லாம் வெளிப்படுத்தினார்கள். உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன். 'எத்தனையோ திட்டங்களை நான் சொல்லியிருக்கிறேன், அந்தத் திட்டங்களிலே ஒன்றையுமே காணோம்' என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்னென்ன திட்டங்களை அவர்கள் சொன்னார்கள்; அவைகளிலே எந்தெந்த திட்டங்களை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சேர்க்கவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், நடவடிக்கை எடுப்பதற்கும், அதுபோன்ற திட்டங்களை வகுத்துக் கொடுப்பதற்கும் உதவியாக அமைந்திருக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் எப்படிப்பட்ட நிலைமைகள் தாண்டவமாடுகின்றன என்பதைப்பற்றிச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இன்று வைகையில் கிடைக்கக்கூடிய உபரி நீரைக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் 'கிருதமால்' ஆற்று நதித்

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 17

திட்டத்தின் மூலமாக 27 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியான மாவட்டம். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மானாவாரி பயிர்கள், புஞ்சைப் பயிர்கள் சாகுபடி அதிக மாக நடைபெறுகிறது. இந்த ஆண்டு, 1979-லே மானாவாரி பயிர் திட்டத்தைத் தீவிரப்படுத்துகின்ற நோக்கோடு, இராமநாதபுரம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற பகுதிகளிலும், மேலும் தமிழகத்திலே எந்தெந்த இடங்கள் வறட்சியாக இருக்கின்றனவோ, வளமில்லாது இருக்கின் றனவோ, வானம் பார்த்த பூமியாக இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு, அவைகளுக்காக தனித் திட்டங்கள் போடப்பட்டு, அதன் மூலமாக, புஞ்சை விவசாயப் பெருமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந்த அரசு பாடுபட்டு வருகிறது, அதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். இந்த அடிப்படையிலேதான், வேளாண்மை தொழிலியல் கழகத்தின் மூலமாக இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். வறட்சிப் பகுதிகளில் சூரியகாந்தி பயிரிடும் திட்டத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். சூரிய காந்தி பயிரிடுவ தற்காக ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் கடனாகக் கொடுக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறோம். அதன் மூலமாக, எங்கெங்கு வறட்சி பூமி இருக்கின் றதோ, எங்கெங்கு விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுதியாக அவதிக்கு உள் ளாகியிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் இந்தத் திட்டத்தின் மூலமாக பலனடைய முடியும். அவர்கள் உற்பத்தி செய்யும் சூரியகாந்தி விதைகளை என்ன விலைக்கு வாங்குவீர்கள் என்று வேளாண்மை தொழிலியல் கழகத் தைக் கேட்டிருக்கிறோம். ஒரு கிலோ 2.25 ரூபாய்க்கு வாங்கலாம் என்று அவர்கள் அறிவித்து, அதன் அடிப்படையில் இன்றைய தினம் விவசாயி களுக்குக் கடனும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கரில் ஏறத்தாழ 400 கிலோ சிறந்த விதை கிடைக்கும். ஒரு கிலோ ரூ. 2.25 என்று சொன்னால் ஒரு ஏக்கரிலிருந்து ஏறத்தாழ 900 ரூபாய் கிடைக்கும். பயிர் சாகுபடி செய்ய தேவைப்படும் நாட்கள் 90. 90 நாட்களில் 900 ரூபாய் வருமானம் வரக்கூடிய திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு ஏக்கர் பயிர் செய்ய ஆகும் செலவு 400 ரூபாய் என்று சொன்னால், வருமானம் 900 ரூபாய் வருகிறது. மூன்று மாதத்தில் ஒரு ஏக்கரிலே ஏறத் தாழ 500 ரூபாய் லாபமாகப் பெறுகின்ற இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17]

(பிற்பகல் 4-30)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் நேற்று சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்வதாக இங்கே குறிப் பிட்டார்கள். நான் நேற்று பேசும்போது இந்த அமைச்சரவையோ அரசோ எதையும் செய்யவில்லை என்று சொல்லவில்லை. 'பாத்திரமறிந்து பிச்சை போடவில்லை' என்றுதான் குறிப்பிட்டேன். எங்கே முதலில் எதைச் செய்ய வேண்டுமோ அதை முதலில் செய்ய வேண்டும் என்றுதான் குறிப்பிட்டேன். சூரியகாந்தி விதை போடுவதையோ, கரும்பு, தென்னை, தினையா கொடுப்பதையோ நான் குறை சொல்லவில்லை. இந்த அரசாங்கம் எதையும் செய்யாமல் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. குடிக்கத் தண்ணீர் இல்லை என்று அல்லல்படுகிறபோது . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரமாக உறுப்பினர் முடித்துக் கொள்ள வேண்டும். விளக்கம்தானே கேட்க வேண்டும். அதற்கு இவ்வளவு விரிவாகப் பேச வேண்டியதில்லையே.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லை என்றால், அங்கே ஒரு ஏரியாவை எடுத்துக் கொண்டு விட்டோம். அதை முடித்துவிட்டு பிறகு உங்களுக்குத் தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்வது சரியல்ல என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். அப்போது எது அத்தியாவசியமானது என்று தோன்றுகிறதோ அதை முதலில் செய்ய வேண்டுமென்றுதான் சொல்லு கிறேன்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விரைவில் முடிக்க வேண்டும். இதற்கு மேல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமே.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று சொல்லும்போது, அரசாங்கம் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கு வதற்கான திட்டத்தை மேற்கொள்ளும்போது, எங்கள் பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போனால், எங்கள் பகுதி வறண்டுவிடும் என்று சொல்லுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட அத்தியாவசியமான திட்டங்களை நிறைவேற்றுகிறபோது, நமது பெரியவர் மாண்புமிகு திரு. இராமகிருஷ்ணத் தேவர் போன்றவர்கள் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு தந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இருந்ததை நான் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவருடைய 'சப்ஜெக்டை' நான் எடுத்திருக்கமாட்டேன். மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்களைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருந்தேன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் 'சங்கதி' ஒன்று அங்கே நடந்து கொண்டிருக்கிறது. நான் அதைப் பற்றி இங்கே குறிப்பிடவில்லை. விவசாயத் துறையில் அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. சூரியகாந்தி விதை போடுவதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும். குறுக்கிட்டுப் பேசும்போது, விளக்கம்தான் கோரலாம். பேசிக்கொண்டேயிருக்க முடியாது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : நாங்கள் சூரியகாந்தி விதையைப் போட்டால், அதற்குத் தண்ணீர் எங்கேயிருந்து கொண்டு வருவது? மதுரையிலிருந்தா தண்ணீர் கொண்டுவர முடியும்? அதற்குத் தண்ணீர் வேண்டாமா? 3 மாதத்திற்குள் 400 ரூபாய் லாபம் கிடைக்கும் என்றால், முதலில் பயிருக்கு தண்ணீருக்கு எங்கே போவது என்றுதான் நான் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லுவது 'பிச்சைக்காரன் வைரக் கடை வைப்பதுபோல இருக்கிறது'. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நான் குறை சொல்லவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அவர்களால் முடிந்தவரை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு இடத்தில் குடிதண்ணீர் வேண்டுமென்கிறார்கள். இன்னொரு இடத்தில் குளிக்கத் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றால், இதில் குடிதண்ணீர் கேட்கிறவர்களுக்கு முதலிடம் கொடுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். குளிக்கத் தண்ணீர் கேட்பவர்களுக்குப் பிறகு கொடுங்கள் என்றுதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னதைப் போல், 'பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும்' என்ற எண்ணத்தில்தான் எந்தெந்தப் பகுதிகள் வளமில்லாமல் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளையெல்லாம் தேர்ந்தெடுத்து இதுபோன்ற திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இரண்டு போகம்கூட பயிர் செய்ய முடியாத நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் செய்யும் பெருங்குடி மக்களுக்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டத்தில் உள்ள நிலத்தடி நீரை நாம் விவசாயத்திற்காக இதுவரை எடுக்காமலிருக்கிறோம். அந்த நிலத்தடி நீரை வெளிக் கொணர்வதன் மூலமாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்போதும் காவிரி நீரையே நம்பிக் கொண்டிருப்பதும், எப்போது காவிரியில் நீர் வரும், விவசாயத்தைத் தொடங்க வேண்டும் என்றிருப்பதும் சரியல்ல. தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தும் முறையைக் கைக்கொள்வதன் மூலமாக இன்னும் மிகச் சிறப்பாக விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஏரி, குளங்கள் ஆகியவைகளில் தூர் வாரப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் குளங்களையும் தூர் வார வேண்டும் என்ற அடிப்படையில்தான் உலக வங்கியிடம் நாம் ஏறத்தாழ 190 கோடி ரூபாய் கடனாகக் கேட்டிருக்கிறோம். அந்தக் கடன் தொகை கிடைத்தால், 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி செய்ய அது உதவியாக இருக்கும். 500 ஏரிகளைப் பொறுக்கி தூர் வார திட்டமிட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த ஆண்டு ஒரு முன்னோடித் திட்டமாக—பைலட் திட்டமாக—மூன்று குளங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக பல்வேறு இடங்களில் . . . .

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் குறிப்பிட்டது தஞ்சை மாவட்டத்தில் உள்ள குளங்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் தூர் வார வேண்டும் என்பதாகும். தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு நீர்ப்பாசன வசதியுள்ள குளங்கள் எத்தனை இருக்கின்றன? அவைகளில் எத்தனை குளங்களை தூர் வாருவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. அறிவழகன் கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் விளக்கம் கேட்டால் எப்படி? இந்த மாதிரி ஒவ்வொருவரும் விளக்கம் கேட்பது என்று ஆரம்பித்தால் எப்படி முடியும்? உறுப்பினர்கள் ஏதாவது விளக்கம் கேட்பது என்றால், அமைச்சர் அவர்களின் பேச்சு முடிந்த பிறகு கேட்டால், நான் அனுமதிக்கிறேன். இடையிடையே குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்தகைய திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் செம்பரம்பாக்கம் ஏரி பற்றிக் குறிப்பிட்டார்கள். செம்பரம்பாக்கம் ஏரி சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை, புயல், வெள்ளம் காரணமாக பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சீர் செய்ய ஏறத்தாழ ரூ. 50 லட்சம் செலவு செய்ய இருக்கிறோம். புதிய 'ஷட்டர்களைப்' போட இருக்கிறோம். அதோடு ஏரியின் கரைகளை வலுப்படுத்த இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். எதற்காக இத்தனை இலாக்காக்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். விவசாய இலாகா ஒன்றுதான் இருக்கிறது. ஆனால் அதில் பல கழகங்கள்—கார்ப்பரேஷன்கள்—இருக்கின்றன. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், பண்ணைக் கழகம், அதைப் போலவே சர்வீஸ் கோவாப்ரேட்டிவ் போன்ற பல கழகங்கள் இருக்கின்றன. விவசாயத் துறையில் பல இலாக்காக்கள் இல்லை என்பதை நான் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அவர் பேசும்போது விவசாயத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைத் தொடர்ந்தும் தொட்டும் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] அவர்கள் எலிகளை ஒழிக்கிற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்தத் திட்டத்தை ஏற்கெனவே விவசாயத்

துறையில் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை இந்த ஆண்டு இன்னும் தீவிரமான முறையில் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசு பாடுபடும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது முக்கியமானதொரு கோரிக்கையை எழுப்பினார்கள். அதாவது பயிர் காப்புறுதித் திட்டம்—கிராப் இன்சூரன்ஸ் திட்டம்—ஏன் இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்று கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை, தேர்தல் காலத்தில் மக்களிடம் வாக்குகளைக் கேட்கிறபோது, இந்தத் திட்டத்தைப் பற்றி விவசாயப் பெருங்குடி மக்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பயிர் காப்புறுதித் திட்டத்தை அமுல் செய்வோம்" என்று சொன்னோம் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. அந்த எண்ணத்தில்தான் நாம் ஆட்சிக்கு வந்தபிறகு, இந்தத் திட்டத்தை மைய அரசுக்கு அனுப்பி வைத்தோம். காரணம் மத்திய அரசின் அனுமதியோடுதான்—அவர்களின் ஒத்துழைப்போடுதான் இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் இந்த இன்சூரன்ஸ் திட்டத்திற்கு மைய அரசு தனது இசைவைத் தரவில்லை. என்றாலும் இந்தத் திட்டத்தை, இந்த அரசைப் பொறுத்தவரையில், கைவிடுவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்க் காப்புறுதித் திட்டத்திற்கு முன்னோடியாக—ஒரு பைலட் ஸ்கீமாக—தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு பகுதியில் இந்த திட்டத்தை இந்த ஆண்டு அரசு செயல்படுத்த இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மத்திய அரசுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

அடுத்து, அவர் கேட்டது தென்னை அபிவிருத்தியைப்பற்றி. கொள்கை விளக்கப் புத்தகத்திலேயே தென்னை அபிவிருத்திக்காக பல்வேறு திட்டங்களைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அவைகளைப் படித்துப் பார்த்தால், எந்தெந்த மாவட்டங்களில் தென்னை அபிவிருத்திக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பது தெரியும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களும் ஒரு முக்கியமான கோரிக்கையை இங்கே வைத்தார்கள். அதாவது விவசாயக் கல்லூரியை வட ஆர்க்காடு மாவட்டத்திலோ, தென்னார்க்காடு மாவட்டத்திலோ ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் எழுப்பினார்கள். அவர்கள் எழுப்பிய கோரிக்கைக்கு ஆதாரமாக எடுத்துச் சொன்னது, தென்னார்க்காடு மாவட்டமும், வட ஆர்க்காடு மாவட்டமும் விவசாயத் துறைக்கு முன்னோடியாக இருக்கின்றன என்பது. குறிப்பாக தமிழகத்திலே உற்பத்தியாகின்ற நெல்லில் நான்கில் ஒரு பங்கு வட ஆற்காடு மாவட்டத்தில்தான் உற்பத்தியாகிறது என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலே, புதிய கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமிருந்தாலும்கூட, இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் புதிய கல்லூரிகளை ஏற்படுத்த முடியாமைக்கு வருந்துகிறேன். அதே நேரத்தில் விவசாயக் கல்லூரியொன்று இல்லையென்றாலும், விவசாயத் தொழில் நுட்பப் பள்ளியை ஏற்படுத்துகிற ஆலோசனை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதை வட ஆர்க்காடு மாவட்டத்திலே வைத்துக் கொள்ளலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கனவே தென்னார்க்காடு மாவட்டத்தில், சிதம்பரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. அங்கே நூறு பேர் படிக்கக் கூடிய வசதியிருக்கிறது. அந்த வசதியும், வாய்ப்பும் வட ஆர்க்காடு மாவட்டத்திலே இல்லையென்ற காரணத்தாலே அங்கு ஒரு விவசாயத் தொழில் நுட்பப் பள்ளியை (அக்ரி கல்சரல் பாலிடெக்னிக்கை), முடிந்தால் இந்த ஆண்டிலேயே ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு கண்டிப்பாக எடுக்கும் என்பதை அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் வீராணம் ஏரியைப் பற்றியும் திரு. வெட்சுமிகாந்தன் அவர்கள் தெரிவித்தார்கள். வீராணம் ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்றும், அகலப்படுத்த வேண்டுமென்றும், அதனுடைய கரைகளை வலுப்படுத்த வேண்டுமென்றும், அருகில் உள்ள சாலைகளை ஒழுங்குப்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். வீராணம் ஏரியை ஆழப்படுத்தினால், அகலப்படுத்தினால், அதனால் ஏரிக்குப் பக்கத்திலே இருக்கின்ற நிலங்கள் தண்ணீரில் மூழ்கும். இதை ஆழப்படுத்துவதன் மூலமாக அங்கேயிருக்கிற நிலங்கள் பாசன வசதி

யற்றுப்போகும் என்ற உண்மை நிலைமையையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும் அரசு மீண்டும் அதைப் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெளிவாக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முக்கியமாக கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றியும் சொன்னார்கள். கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்ளுவதைவிட, காவிரி நீர்ப் பிரச்சினையிலே தீர்வு காண வேண்டுமென்றுதான் நாம் முயன்று கொண்டிருக்கிறோம். கங்கை-காவிரி இணைப்புக்காக இந்தியப் பிரதமர் திரு. தேசாய் அவர்கள் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தம்மாலான ஒத்துழைப்பை நல்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கிச்சன் கார்டனை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏன் அந்தத் திட்டத்தை விட்டுவிட்டார்கள் என்று கேட்டு, இந்த அரசு அதைச் செயல்படுத்தக் கூடாதா என்றும் கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையிலே, ஆடிப் பட்டத்திலே நமக்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தியாக்குகிற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆடிப் பட்டத்திலே விழாக்களை ஏற்படுத்தி, மக்களுக்கு எளிய முறையிலே நல்ல விதைகளைக் கொடுத்து, அந்தத் திட்டத்தை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கிச்சன் கார்டன் காம்பெயின் கமிட்டியை ஏற்படுத்தவிருக்கிறோம். அதன் மூலமாக மக்கள் தங்களுடைய வீடுகளில் காய்கறிகளைப் பயிர் செய்து கொண்டு தங்களுடைய சுயதேவையைப் பூர்த்திச் செய்துகொள்ளுவதோடு மிஞ்சியதை விற்கக் கூடிய அளவுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த பாடுபடுவோம். இதற்குள் இந்த ஆண்டிலிருந்து கூட தோட்டக் கலைக்கென்று தனியாக ஓர் இயக்குநரகத்தை ஏற்படுத்தவிருக்கிறோம். அந்தத் தோட்டக் கலை நிபுணர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். விலைவாசிப் பற்றியும் கொள்முதல் விலையைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். இவ்விரண்டும் இந்தத் துறையைப் பொறுத்ததல்ல. விலைவாசியும், கொள்முதல் விலையும் பற்றிய விவரங்கள் உணவுத் துறையிலே இருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் ஏரியையும், குளங்களையும்

ஆர் எடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். இதற்கான பதிலை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உலக வங்கி உதவித் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு முதல் முன்னோடித் திட்டமாக 8 குளங்கள் எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமக்கு உயிர் நாடியான காவிரி நீர் ஒப்பந்தம் பற்றியும் அவர் எடுத்துச் சொன்னார். 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு வரை நீடித்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் இருந்ததற்குப் பின்னால் எப்படி அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்ற கேள்வியை அவர் எழுப்பினார். இந்த அரசைப் பொறுத்தவரையில், காவிரி நீர் பிரச்சினை நல்ல முறையில் முடிவதற்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கருதுகிறது. அதன் மூலமாகத் தமிழக மக்களுக்கு, குறிப்பாக தஞ்சை, திருச்சி விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் காவிரி நீர் ஒப்பந்தம் குறித்து மூன்று முறை பேச்சு வார்த்தைகள் நடந்தன. முதலமைச்சர் மட்டத்திலேயும் மூன்று முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, அது இன்னும் முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் 'ஏன் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகக்கூடாது?' என்று கேட்டார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் வழக்குப் பதிவு செய்து, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப் பேற்றிருந்த நேரத்தில் வாபஸ் செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சருடைய பேச்சு முடிந்த பிறகுதான் விளக்கங்கள் கேட்க வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இடையிடையே விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரமாகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் முடித்த பிறகு உறுப்பினர் விளக்கத்தைக் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்போது இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மத்திய அரசின் பொறுப்பிலே இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கே பொறுப்பிலே இருந்தது. ஆனால் கர்நாடகா மாநிலத்தில் மக்கள் அரசு இல்லாத காரணத்தால், இந்த வழக்கை மீண்டும் வலியுறுத்த வேண்டாம். திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று யோசனை

கூறியதன் பேரில், திரும்பப் பெற்றிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில், அண்டை மாநிலங்களான கேரளாவுடனும், கர்நாடகாவுடனும் நல்ல உறவை வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் காவிரி நீர் ஒப்பந்தத்திற்கு ஒரு வழி கண்டுபிடிக்க முடியுமென்று எதிர் பார்க்கிறோம்.

15—4—1979 அன்று கர்நாடகா முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். வருணா கால்வாய்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். உண்மையிலேயே இதுவும் காவிரி நீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைதான். சுமுகமான சூழ்நிலையில் முடிவு ஏற்படும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில் இதுபோன்ற புதிய திட்டங்களை அண்டை மாநிலமான கர்நாடகாவில் இருக்கிறவர்கள் கொண்டு வரக்கூடாது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருணா கால்வாய்த் திட்டத்தைக் கொண்டு வரக்கூடாது, அதற்கு ஆட்சேபணை இருக்கிறது என்று கடந்த 17—10—1977-லேயே தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தியப் பிரதமர் தேசாய் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்காக 1—11—1977 அன்று ஒரு பதில் கடிதத்தை பிரதமர் அவர்கள் அனுப்பினார்கள். நம்முடைய உள்ள உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, அதை கர்நாடகா மாநிலத்திற்குச் சொல்வேன் என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். 1—11—1977க்குப் பிறகு இது வரையில் அவரிடமிருந்து வேறு எந்தக் கடிதமும் வரவில்லை. இன்று மீண்டும் வருணா கால்வாய்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டதால், மீண்டும் திரு. தேசாய் அவர்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறது என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974-க்கு முன்பே, காவிரி நீர் ஒப்பந்தம் தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் இருந்த நேரத்திலேயே, ஹேமாவதி, கபினி போன்ற அணைக்கட்டுத் திட்டங்களைக் கட்ட முடிவு செய்தபோது, அவைகளைக் கட்டக்கூடாதென்று ஆட்சேபணையை நாம் தெரிவித்திருக்கிறோம். பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நேரத்தில் மேலும் இப்படிப்பட்ட திட்டங்களைப் போடக் கூடாது. அப்படிப் போடுவதன் மூலமாக பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்க்க வழி காண முடியாது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 17

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் இடுபொருள்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். உரமும், பூச்சி மருந்தும், விதைகளும்தான் நமக்கு இடுபொருள்களாக இருக்கின்றன. இந்த இடுபொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் நம்மிடத்திலே இல்லை. அந்த அதிகாரங்கள் மத்திய அரசிடத்திலே இருக்கின்றன. ஆனாலும் பூச்சி மருந்தின் விலையையும் உரத்தின் விலையையும் குறைக்க வேண்டுமென்று ஏற்கெனவே நாம் மைய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இடுபொருள்களின் விலையைக் குறைத்தால்தான், உற்பத்திச் செலவு குறையும். அப்படி உற்பத்திச் செலவைக் குறைத்தால்தான் கட்டுப்படியாகக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை ஏற்கெனவே மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். இடுபொருள்களின் விலையை இன்னும் குறைக்க வேண்டுமென்றும், அப்படிக் குறைத்தால்தான் விவசாயப் பெருங்குடிமக்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை, தலைவர் அவர்களே; உங்கள் மூலமாக, மைய அரசுக்குத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு அங்கத்தினர் திரு. மாணிக்கம் அவர்கள் மானாவாரி பயிரைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே நான் சொன்னதுபோல, மானாவாரி பயிருக்கு இன்று ஒரு மாற்றுப் பயிர்த் திட்டம் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தின் மூலம் புஞ்சை பூமிகளில் எங்கெங்கு மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியுமோ அந்த இடங்களில் தண்ணீரைத் தேக்கி வைத்து, அதன் மூலம் அந்த மாற்றுப் பயிர்த் திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்; அதைச் செயல்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்துப் பேசிய நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிட மணி அவர்கள் இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஏன் பல்வேறு அணைக்கட்டுக்கள் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கூறிய பல்வேறு திட்டங்களில் தொட்டஹல்லா ரிசர்வாயர் ஸ்கீம் பற்றி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஸ்கீம் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது இந்த அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல அடவிநாயினார் அணைத் திட்டம்

1979 ஏப்ரல் 17] [திரு. ப. குழந்தைவேலு]

திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற திட்டம். அதுவும் இந்த அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அழகர் அணைத் திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. அதுவும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பச்சையாறு திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, பச்சையாறுத் திட்டத்திற்கு பச்சைக் கொடி காட்டுகின்ற அளவுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்கள் பேசும் போது, இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இன்று மின் கட்டணம் 12 பைசா, 14 பைசா ஒரு யூனிட்டுக்கு என்று வசூல் செய்கிறார்கள். அதை மாற்றி கிணற்றினுடைய ஆழத்தை மட்டும் கணக்கில் வைத்துக்கொண்டு அந்தக் கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடாதா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட பிரச்சினை. இந்தப் பிரச்சினை குறித்து விவசாய சங்கப் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு நம் முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 2 நாட்கள் உட்கார்ந்து பேசி இந்தப் பிரச்சினையில் தீர்வு கண்டிருக்கிறார்கள். மீண்டும் அந்தக் கிணற்றுக்குள்ளே போகவேண்டாம் என்று நான் மாண்புமிகு அங்கத்தினர் திரு. திராவிடமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவருடைய பாராட்டுதல்களையும் விவசாயத் துறைக்கு அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விதைப் பண்ணைக் கழகம் இன்று எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இன்று அந்த விதைப் பண்ணைக் கழகம் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறதா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு அதைப்பற்றித் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1974-லிருந்து 1976 வரையிலும் இங்கே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அந்த அட்டவணையிலே 273 ஹெக்டேருக்கு நாம் சாகுபடிக்காக எடுத்துக் கொண்டதன் மூலம் ரூ. 9,69,000 நஷ்டம். அதற்குப் பின்னால் 1976-77-ல்

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 17

481 ஹெக்டேருக்கு ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் 25,12,000. அதற்குப் பின்னால் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பார்த்திருந்தால், எவ்வளவு ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை அவர் நேற்றே தெரிந்திருப்பார்கள். நேற்றே அவர் அந்தப் புள்ளிவிவரத்தைப் புரிந்து கொண்டிருப்பார்கள். 1444.09 ஹெக்டேர் நிலம் எடுக்கப்பட்டது. அதற்கு ஏற்பட்ட நஷ்டத் தொகை ரூபாய் 39 லட்சம். 273 ஹெக்டேர் நிலம் எடுக்கப்பட்டதற்கு ரூபாய் 9,69,000 என்று சொன்னால், 1444 ஹெக்டேருக்கு பண்படுத்தியதற்கு ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் 39 லட்சம்தான் ஆகியிருக்கிறது. அந்தக் கணக்குப்படி நாம் கணக்கிட்டுப் பார்த்தால், ரூபாய் 75 லட்சம் நஷ்டம் என்று வந்திருக்க வேண்டும். ஆனால் நாம் அந்த நஷ்டத்தைக் குறைத்து, ரூபாய் 39 லட்சம் தான் நஷ்டம் என்று அதிலேயே நிறுத்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நஷ்டம்கூட ஆனதற்குக் காரணம் என்னவென்றால், நாம் வர்ஜின் லேண்ட்ஸ்-ஐ, கன்னி நிலங்களைப் பண்படுத்துகின்றதற்காக, செம்மைப்படுத்துவதற்காகச் செலவழித்திருக்கிறோம். ஒரு முதல் போட்ட பின்னாலேதான் முதல் கிடைக்கும், லாபம் கிடைக்கும். முதல் போடாமலேயே முதல் கிடைக்கும், லாபம் கிடைக்கும் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? இப்போது நஷ்டமாக இருந்தாலும்கூட, கண்டிப்பாக இந்த முதல் திரும்ப வரும் என்கின்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அந்த விவசாயப் பண்ணைக் கழகம் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பல்வேறு பகுதிகளிலே ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக தனியாக இயக்குநர் அக்டோபர்? பத்தாவது மாதம் 1977 ஆம் வருடத்தில் தொடங்கப்பட்டது. இந்த விற்பனைக் கூடங்கள் 1933-லே ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்டன. இந்த 45 வருட காலத்தில் என்ன ஒழுங்கு முறைகளைக் கொண்டு வரவில்லையோ அதையெல்லாம் இந்த அரசு இந்த 21 மாத காலத்தில் செய்திருக்கிறது. அந்த 45 வருட கால சாதனையை இந்த அரசு முறியடித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இன்னும் விவரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஒழுங்கற்ற முறையில் இதற்கு முன்பு இருந்த அரசு காலங்களில் இருந்திருக்கின்றன. அந்த நிலைமைகளையெல்லாம் நாங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தரவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இன்று ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் நடக்கின்றன.

1979 ஏப்ரல் 17] [திரு. ப. குழந்தைவேலு]

அதற்குப் பின்னர், 220 இடங்களில் விற்பனைக் கூடங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. உலக வங்கியிலிருந்து ரூபாய் 70 கோடி கடன் பெற்று எல்லா ஊர்களிலும் விற்பனைக் கூடங்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த இருக்கிறோம். விற்பனைக் கூடங்களிலே விவசாயிகளுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் நாம் நடத்துகிறோம். கொண்டுவரப்பட்ட விளைபொருட்களுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திலே சரியான விலை கிடைக்கவில்லை என்றால், அந்தக் கூடத்தில் உள்ள கிடங்கிலேயே அந்தப் பொருள்களை 'ஐபோதிகேட்' செய்து, அதன் விலையில், 40 சதவிகிதப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த விளைபொருளுக்கு என்று தகுந்த விலை, நியாயமான விலை கிடைக்கிறதோ, அன்று அந்த விலைக்கு விற்றுவிடலாம். அவர்கள் பெற்றுக்கொண்ட 40 சதவிகித முன்பணத்தைத் திருப்பிச் செலுத்திவிட்டு, மீதிப் பணத்தைக் கொண்டு செல்லலாம். அவர்கள் பணம் பெற்றுக்கொண்டு போகின்ற நேரம் மாலை நேரம் அல்லது இரவு நேரமாக இருந்தால், அவர்கள் அங்கேயே தங்கியிருக்க போர்டிங் பெசிலிட்டியைக் கூட அங்கே செய்து கொடுத்திருக்கிறோம். அவர்கள் வண்டி மாடுகளுடன் வருகிறார்கள் என்றால், அங்கேயே ஒரு cattle shed கூட போட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறோம். இதுபோன்ற நிலைமைகள் எல்லாம் அங்கே இருக்கின்றன. மற்ற மாநிலங்களிலிருந்தும் அரசிலிருந்தும் பலர் இங்கே வந்து நம்முடைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைப் பார்த்துவிட்டுச் செல்கின்ற நிலைமைகள், பாராட்டுகின்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இன்னொரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். சுகர்கேன் செஸ் பண்ட் என்று ஒன்று இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த சுகர்கேன் செஸ் பண்ட் இன்று ஆராய்ச்சிப் பணிக்காகச் செலவிடப்படுகிறது என்று சொன்னார்கள். அந்த பண்டு மூலம் வேறு என்ன நன்மைகளைச் செய்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். சுகர் கேன் பண்ட் என்பது விவசாயிகளுடைய நன்மைக்காக பல்வேறு இடங்களிலே செலவழிக்கப்படுகிறது. எங்கெங்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றனவோ அங்கங்கு கரும்பு அதிகமாக வளரும்படி செயல்பட்டு வருகிறது. அந்தந்த இடங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வசதியாக நல்ல சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக சுகர்கேன் செஸ் பண்ட் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த பண்ட் ஆராய்ச்சிப் பணிக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது

விவசாயிகளுக்கு வேண்டிய நல்ல கரும்பை வளர்ப்பதற்கு நாம் ஆராய்ச்சி மூலமாகக் கண்டுபிடித்துத்தர வேண்டும் என்பதற்காக அந்த ஆராய்ச்சிப் பணிக்காகச் செலவிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுகர்கேன் செஸ் பண்டுக்கு ஒரு டன்னுக்கு முதலிலே 5 பைசாவாக இருந்தது. ஆனால் அதுவே 5 பைசாவாக இருந்தது 5 ரூபாயாக ஆகியிருக்கிறது. இந்த 5 பைசா 5 ரூபாயாக 1962-லேதான் ஆகியது. காங்கிரஸ் ஆட்சி இருந்த நேரத்திலேதான் டன் ஒன்றுக்கு ரூபாய் 5 என்று சுகர்கேன் செஸ் பண்டுக்கு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்

(பிற்பகல் 5.00.)

கிறேன். ஆகவே அன்றிலிருந்து இன்று வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் இப்படிச் செய்கிறது என்பதல்ல. 1962லும் இதே தொகை அங்கே இருக்கக்கூடிய ஆராய்ச்சிப் பணிக்காக உபயோகப்பட்டது. அதற்கு முன்னாலே, 1950-லும் இதே நிலைமைதான். இது ஏதோ புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட யோசனை என்றோ, புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணமென்றோ நினைத்துவிட வேண்டாம். சுகர்கேன் செஸ் பண்டைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டுகூட ஏறத்தாழ 150 லட்சம் ரூபாய் சாலைகளை விஸ்தரிப்பதற்காக நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆராய்ச்சிப் பணிகளுக்கு 45 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகள் இன்று பேசுவதையெல்லாம் எடுத்துச் சொல்லி, ஏதோ பேசுகிறார்கள், அதை தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாதென்று சொன்னார்கள். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இன்று பல்வேறு அரசியல் கட்சிகள், பல்வேறு கருத்துக்களை, எண்ணங்களை, கொள்கைகளை அடிப்படையாக வைத்து, தமிழகத்திலே கட்சிகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு கட்சி மட்டும், ஒரு இயக்கம் மட்டும், தமிழகத்திலே வரி கொடுக்கக்கூடாதென்ற எண்ணத்தின் அடிப்படையிலே ஒரு கொள்கையை தாங்களே உற்பத்தி செய்துகொண்டு. அதன் அடிப்படையில் இயக்கத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்றால், அதை நாம் ஏற்றுக்கொள்ள

வேண்டுமா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு 15 நாட்களுக்கு முன்பு, மதுரை மாவட்டத்தில், 10 இடங்களில் கிளைக் கழகத்தின் கொடிகளை அகற்றியிருக்கிறார்கள். கிளைக் கழகக் கொடிகளை அகற்றிவிட்டதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய கொடியான பச்சையும், வெள்ளையும் கலந்த கொடியை ஏற்றி வைத்திருக்கிறார்கள். தயவுசெய்து இதை அரசியல் கட்சித் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்ட பின்னால், அரசியல் கட்சிகள் தமிழகத்தில் கூடாதென்று ஒரு இயக்கம் ஏற்பட்ட பின்னால், அந்த இயக்கத்தை இங்கே இருக்கக்கூடிய எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆதரிக்கப் போகிறார்களா என்ற கேள்வியைத்தான் நான் இந்த அவையில் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை வேண்டுமானால் நல்ல பிரச்சினையாக இருக்கலாம். இந்த அரசுக்குத் தெரியாத பிரச்சினையை அவர்கள் எழுப்பவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்போது சுதந்திரம் ஏற்பட்டதோ, அப்போதிருந்து, அந்த நாளிலிருந்து இந்தப் பிரச்சினை இருக்கிறது. It is as old as Independence 1947-லே

இருந்து ஏற்பட்ட பிரச்சினை இது. கடந்த 30 ஆண்டுக்காலமாக கவனிப்பாரற்று, கேட்பாரற்று, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இருந்த அரசுகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னாலே, கடந்த 25—12—1977-லே ஓர் உயர் மட்டக் குழுவை இதற்காக ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த உயர் மட்டக் குழுவில், இன்று சங்கம் வைத்து நடத்துகிறார்களே, அந்த விவசாயச் சங்கத்தின் தலைவர் உறுப்பினராக இருந்தார் என்பதை மறந்துவிட வேண்டாம். உயர் மட்டக் குழுவை ஏற்படுத்தி, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டு வரும்போது, அவர்கள் தனியாக இயக்கத்தை நடத்துகிறார்கள். அதுவும் உயர் மட்டக் குழுவிலிருந்து தனித்து வெளியே போய், இயக்கத்தை ஆரம்பித்து, நடத்திக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, உறுப்பினர்கள் யோசனைகளைக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுடைய பிரச்சினை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எழவில்லையா? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, இதே சங்கத்தினுடைய தலைவர் அன்று போராட்டம் நடத்தவில்லையா? அன்று போராட்டம் நடந்த நேரத்தில், துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதை மறந்துவிட முடியுமா என்று நான்

கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் உடனே தீர்வு காணவில்லை என்ற கேள்வியை நான் எழுப்பினால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். மணி அவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள் என்பது எனக்குப் புரிகிறது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், "எங்களைப் பார்த்து வினா எழுப்புகிறீர்கள், கேள்விக் கணைகளைத் தொடுக்கிறீர்கள். அதை வேண்டாமென்று சொல்லவில்லை. நியாயமான, சரியான கேள்வியாக இருந்தால், அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்ன செய்தீர்கள் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டாமா?" 10 பைசா என்று உயர்த்திய நேரத்தில், அதை 9 பைசாவாகக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பிய போது, ஒரு பைசா தானே என்று விட்டுக்கொடுக்கும் எண்ணம் எழுந்திருக்க வேண்டாமா? ஆனால் நான் அப்படிக் கேட்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை தெரிந்த ஒன்றுதான். ஆனால் இன்றைக்கு அவர்களுக்குப் புதுத் தெம்பை ஊட்டும் எண்ணத்தோடு அல்லது புது உறுதியைக் கொடுக்கும் எண்ணத்தோடு யார் பாடுபட்டாலும் அவர்களுக்குப் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டிலே எப்படி வன்முறை ஏற்பட்டாலும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டாலும், இந்த அரசு அதைத் தடுத்தாக வேண்டும். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளில் நேர்மையாக நடந்தாக வேண்டுமென்பதை மீண்டும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமென்று, உயர் மட்டக் குழுவின் பரிந்துரையை, அறிக்கையை, ஆலோசனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அது கிடைத்தவுடன், அதற்கான முடிவை அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் விவசாயக் கல்லூரி பற்றிச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி இல்லாவிட்டாலும், விவசாயத் தொழில் நுட்பப் பள்ளி—அக்ரிகல்சுரல் பாலிடெக்னிக்—ஏற்படுத்த ஆலோசனை இருக்கிறதென்று எடுத்துச் சொல்லி விட்டு

அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பல்வேறு எண்ணங்களை, கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசிய தோரணையைப் பார்க்கும்போது, ஒரு விவசாயி எப்படி நல்ல கருத்துக்களை, ஆலோசனைகளை எடுத்துச் சொல்ல முடியுமோ, அந்த அளவிற்கு இருந்தது. அதற்காகப் பாராட்டுதல்களையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பேசிய நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். இன்று விவசாயத் துறையிலே என்ன கொள்கை தன்னை வைத்துக்கொண்டு பாடுபடுகிறீர்கள் என்று கேட்டார்கள். உண்மையிலேயே இன்று பத்திரிகையிலே, State Agricultural Policy is a miserable failure. என்று செய்தி போட்டிருக்கிறார்கள். அந்த அளவிலே அவர்கள் பேசினார்கள். உள்ளபடியே மனதைத் தொட்டுக் கேட்கிறேன், "இங்கே இருக்கக்கூடிய அரசு பொறுப்பேற்ற பின்னாலே, உணவு உற்பத்தி அதிகமாகவில்லையா? இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே விலைவாசி கட்டுப்படவில்லையா? இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே எல்லா அத்தியாவசியப் பொருள்களும் எல்லோருக்கும் கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டதா, இல்லையா?" என்ற கேள்வியை அவர்கள் முன்னால் எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, காவிரித் தண்ணீர் தடையில்லாமல் ஓடிக்கொண்டிருப்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்த தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி போன்றவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். கும்பகோணத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கி இருக்கிறது. அதைச் சிறந்த முறையாக ஏற்படுத்திக் காட்ட வேண்டுமென்பதற்காக, நீங்கள் முனைப்போடு உங்கள் கவனத்தைச் செலுத்தி, சிரத்தையோடு பாடுபட்டது நன்றாகத் தெரியும். நல்ல நடவடிக்கைகளை நீங்கள் எடுத்து * * *

திரு. கோ. சி. மணி: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிற்கு விளக்கம் சொல்கிறார்களா அல்லது விவசாயத் துறை கொள்கைக் குறிப்பு குறித்த விளக்கம் சொல்லுகிறார்களா? ஏற்கெனவே இருந்த ஆட்சி பற்றி விமர்சிக்கிறார்களா அல்லது இப்போதிருக்கும் ஆட்சி பற்றி விளக்கம் அளிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எனக்கும் தக்க நேரம் அளித்தால், பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் விவசாயப் பிரச்சினை குறித்து அதிக நேரத்தை எடுத்துக் கொண்டு பேசினார்கள். காலம் போதாதென்று நேற்று சொன்னார்கள். அதனால் 8 மணி வரை காலம் தந்தீர்கள். இன்று பதில் சொல்லுமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளீர்கள். அதன் காரணமாகப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கடந்த காலம் பற்றிப் பேசாமல், நிகழ்காலம் பற்றிப் பேசினார்கள். அவர்கள் எடுத்துக் காட்டிய தெல்லாம், விவசாயிகளைக் கொன்று குவித்திருக்கிறீர்களே, 9 பேர்களை முதலிலே கொன்றீர்கள்; பின்னால் 5 பேர்களைக் கொன்றிருக்கிறீர்கள் என்பதுதான். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், 1971-72 ஆம் ஆண்டை யாரும் மறந்துவிடவில்லை. 20 உயிர்கள் பலியாக்கப்பட்டனவே, அந்த எண்ணங்களை மறந்துவிட்டார்களா? அவைகள் புதைபோடிவிட்டன. இன்று தமிழகத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்த்துக்

(பிற்பகல் 5-10)

காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக பெருமாநல்லூர் என்ற இடத்தில் ஏற்கெனவே நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு விட்டன. 9 பேரும், 5 பேரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 5 பேர் இறந்தார்களே, அவர்கள் கூட விவசாயப் பிரச்சினையின் காரணமாகத்தான் இறந்தார்களா? வாகைகுளத்தில் நிகழ்ந்த சம்பவம் விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற சம்பவமா, இல்லை வேறு சம்பவமா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். குடிநீரைக் குழாய் மூலம் கடலாடிக் குக் கொண்டு போக வேண்டுமென்று முடிவு செய்து குழாய் போட்டதனால், ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து, அதனால் நடைபெற்ற சம்பவமே தவிர, விவசாயிகள் பிரச்சினையால் ஏற்பட்ட சம்பவமல்ல.

திரு. சோ. ஆறுமுகம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகின்றபோது, உறுப் பினர்களைப் பார்த்து அடிக்கடி கேள்விகளைத் தொடுக்கிறார்கள். அத்தோடு மட்டுமல்லாமல், முன்னாலே இருந்த அரசு எதுவும் செய்யவில்லை என்று சொல்லி, அதற்கும் கேள்வியைத் தொடுக்கிறார்கள். குற்றம் சொல்லலாம், தவறில்லை. அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள், அதை நாங்கள் ஒரு

இருக்கிறோம் என்று சொல்லலாம். கேள்விகளைக் கேட்டுக்கொண்டேயிருக் கிறார்கள். எவ்வளவு நேரம்தான் நாங்கள் பொறுமையோடு அமர்ந்துகொண்டு கேட்டுக்கொண்டிருப்பது என்பதையும் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்ற முறையை மாற்றிக் கொள்வது நல்லது என்பதை மாண்புமிகு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் வினாக்குறிக்குப் பதிலாக வியப்புக்குறி போட்டால் நல்லது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இனிமேல் வியப்பாக வினாக்களை எழுப்புகிறேன். அப்படியே நான் கேள்விகளை எழுப்பினாலும் தலைவர் அவர்கள் மூலமாகத்தான் எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை அத்துடன் விட்டுவிடலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : அமைச்சர்கள் பேசுவதற்கும் உறுப்பினர்கள் பேசுவதற்கும் எப்பொழுதுமே ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும்போது, உறுப்பினர்கள் கூறியுள்ள பிரச்சி னைகளுக்கு விளக்கம் தந்து பதில் தருகின்ற முறையில் பேச வேண்டும். அமைச்சர் அவர்கள் பேசும்போது அதற்குரிய முறையில் வழி வகுத்துப் பேச வேண்டுமென்று, தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவசாயப் பிரச்சினையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் "அரசு காலம் தாழ்த்தி விட்டது" என்று சொன்னார்கள். மாண்புமிகு தலைவ ரவர்கள் மூலமாக அவருக்கு நான் ஒன்றைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். காலம் தாழ்த்தி விட்டோம் என்று சொல்லுகின்ற நேரத்தில் காலம் கனிந் திருந்த நேரத்தில் அன்றைக்கு இருந்த அரசு அதுபற்றித் தீர்வு காணாமல் விட்டுவிட்டு, இந்த அரசை மட்டும் இப்பொழுது குற்றம் சாட்டுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருசில கருத்துக்களைச் சொன்ன அவர்கள் மேலும் பேசுகையில் விவசாயம் எப்படிச் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். "டென் கமாண்ட் மெண்ட்ஸ், 10 கட்டளை என்று நினைத்தேன். ஆனால் இது வேறும்

கட்டளைதான்" என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாவேன். 6 கட்டளைகள் இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே காணப்படுகின்றன. "முன்னாலேயே விவசாயத் துறைக்கு இதைப்பற்றித் தெரியாதா? விவசாயத் துறை இதைப் பற்றி அறியாமல் போய் விட்டதா?" என்றெல்லாம் கேள்விகளைத் தொடுத்தார்கள். இதைப்பற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லையா என்று கூட கேள்விக் கணைகளை எழுப்பினார்கள். அவருக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம் விவசாயத் துறையில் புது எண்ணங்கள், யுத்திகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலை நாளுக்கு நாள் ஏற்பட்டுக்கொண்டே தான் இருக்கும். அதற்கேற்றவாறு அரசு சில திட்டங்களை அறிவிக்க வேண்டியிருக்கிறது. பயிர் விளைச்சலை அதிகமாக்குவது, உற்பத்தியை அதிகமாக்குவது, விவசாயிகளுக்கு நன்மை செய்வது போன்ற அரசின் நல்லெண்ணத்தின் அடையாளமாகத்தான், உறுப்பினர்கள் சொன்ன வார்த்தையின்படி, இந்த 6 கட்டளைகளைக் கொடுத்திருக்கிறோம். "வீரிய நாற்றுக்களை உற்பத்தி செய்தல்" மற்றும் "பாய்" நாற்றங்காலை உபயோகப்படுத்துதல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கோடிட்டுக் குறிப்பிட்ட வார்த்தைகளை நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். "தூக்கி மூலையில் போடப்பட்ட திட்டங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திலிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. மணியைப் போன்ற வசதி உள்ளவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் அப்படித் தூக்கி குப்பையிலே போடுகின்ற செலவைச் செய்யலாம். ஆனால் ½ ஏக்கர், 50 சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை, சிறு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், இந்த "பாய்" நாற்றங்காலை உபயோகப்படுத்துதல் என்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால், அதற்குத் தேவைப்படுகின்ற நாற்றங்காலை ஏற்படுத்த வேண்டுமென்றால், 8 சென்ட் நிலம் வேண்டும். "பாய்" நாற்றங்கால் மூலமாக 8 சென்ட் நிலம் தேவையில்லை. அரை சென்ட் நிலம் போதும். அரை சென்ட் நிலத்தில் ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான நாற்றங்காலைப் பயிரிடலாம். இது, சிறு விவசாயிகளுக்கு உதவிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட திட்டம். அதைப் போலவே "நீல பச்சைப் பாசி"யைக் கொண்டு உரமிடுதல் திட்டமும் ஒரு நல்ல திட்டம். புளு கிரீன் ஆல்கே என்கின்ற இந்தத் திட்டத்தை இந்தியா முழுவதும் வரவேற்றிருக்கிறார்கள். பசுந்தாள் உரமாக, இயற்கை உரமாக இந்த நீலப் பச்சைப் பாசி கிடைக்கின்ற காரணத்

தால், ஒரு கிலோ உரம் போட்டால், அதன் மூலம் 8 கிலோ அதிகமாக நெல் உற்பத்தியாகும் என்கின்ற கணக்கை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்குக் கூட அதன் விலையைக் குறைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் 2½ ரூபாய்க்கு விற்கப்படுவதை 60 காசு அல்லது 70 காசுக்குக் கொடுக்க அரசு பாடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரங்களை பயிருக்கு அருகாமையில் இடுகின்ற திட்டத்தினைப் பொறுத்தவரை, இதைப்பற்றி முதலிலேயே அரசுக்குத் தெரியவில்லையா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கேட்டார்கள். உண்மையில் நடைமுறையில் விவசாயப் பெருங்குடி மக்கள் அல்லது விவசாயத் துறையில் இருப்பவர்கள் உரத்தை மேலெழுந்தவாரியாகத்தான் போடுவார்கள். அந்த உரம் பயிருக்குப் பக்கத்திலும் விழலாம், தூரத்திலும் விழலாம். பயிருக்குப் பக்கத்திலே, வேருக்குப் பக்கத்திலே உரம் போய்ச் சேர வேண்டுமென்கின்ற ஒரு புதிய வகைக் கருத்தினை இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள். 'கிராவிட்டர் அப்ளிகேட்டர்' என்கின்ற அந்தக் கருத்தினைக் கண்டுபிடித்ததன் மூலம் இன்றைக்கு அந்த உரத்தைப் பயிருக்குப் பக்கத்தில் போடுவதன் மூலம் நேரடியாக உரத்தின் சக்தி பயிருக்குப் போய்ச் சேரக் கூடிய நிலை ஏற்பட்டு உற்பத்தியும் அதிகமாகக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு புதிய சட்டத்தைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் துறைக்கு அந்தச் சட்டம் சம்பந்தப்பட்டதில்லை என்று சொன்னாலும் கூட, நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையில் மட்டுமல்ல, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கும் இந்த அவைக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இந்தச் சட்டத்தினைப்பற்றி நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பேசும்போது பயிர் சாகுபடிதாரர்கள் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் தலைவர் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம் என்று அவர்கள் சொன்ன உடனே நான் அதற்குத் திருப்பி பதில் சொன்னேன். எங்களையெல்லாம் வளர்த்து விட்ட பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் 1968 ஆம் ஆண்டில் இதற்கு வித்திடப்பட்டு சட்டமாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1968 ஆம் ஆண்டில் அது சட்டமாக்கப்பட்ட நேரத்தில் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் யார் என்றால், அவர்கள்தான் மக்களின் பசிப் பிணி மருத்துவர்கள் என்று சொன்னார்கள். பசிப் பிணி மருத்துவர்கள் என்று அவர்களைப்பற்றி அந்த அரிய கருத்தினைச் சொல்லி, "நாட்டில் குறிப்பாக தமிழகத்தில் உள்ள மக்கள் பசிப் பிணியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்

களையெல்லாம் வாழ வைக்க வேண்டுமென்றால், விவசாயிகளாகிய நீங்கள் எல்லாம் மருத்துவர்களாக மாற வேண்டும்'' என்கின்ற எண்ணத்தை வெளியிட்டு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 1968 ஆம் ஆண்டுக்குப் பிறகு 1972 ஆம் ஆண்டில் மீண்டும் அந்தச் சட்டத்திற்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. ஆளுநர் ஆட்சிக் காலத்தில், குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் 1976 ஆம் ஆண்டிலே மீண்டும் அது உயிர் பெற்றது. இன்றைக்கு இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இந்தச் சட்டம் மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது. நான் கேள்வியாகக் கேட்பதாக நினைக்க வேண்டாம். வியப்பாக, ஆச்சர்யமாக மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து கேட்க ஆசைப்படுகிறேன். '1972 ஆம் ஆண்டு உங்கள் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை, அதை ஒரு முடிவுக்கு கொண்டு வந்திருக்கக்கூடாதா?'' 1968 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 4 தவணையாக, குத்தகை பாக்கி வைத்திருப்பதை, அரியர்ஸைச் செலுத்த வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பழைய பாக்கியைச் செலுத்த வேண்டுமென்ற அதே எண்ணத்தில்தான் கலைஞர் ஆட்சியில் மீண்டும் அதைக் கொண்டு வந்தார்கள். 1972 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இதைக் கொண்டு வந்த நேரத்தில் ஏன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்கின்ற கேள்வியை அல்ல, வியப்பான கேள்வியை நான் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகும், இந்தச் சட்டம் தொடர்ந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்தச் சட்டம் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-30)

கடைசியாக ஒருசில அறிவிப்புகளை மட்டும் நான் அறிவிக்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலிருந்து 1979-லிருந்து தோட்டக் கலையை வேளாண்மைத் துறையிலிருந்து பிரித்து ஒரு தனி இயக்குநரகத்தை தோட்டக் கலைக்கென ஏற்படுத்த இருக்கிறோம். நல்ல விதைகளை விவசாய பெருங்குடி மக்களுக்குப் பெற்றுத்தர வேண்டும் என்ற எண்ணத்தோடு விதை சான்றிதழ் இயக்குநரகம் ஒன்றையும் இந்த ஆண்டிலிருந்து ஏற்படுத்தவிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும், விவசாயக் கல்லூரியிலே இடம் கிடைக்கவில்லை

ன்று—பல விவசாயிகளுடைய மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று— ல விவசாயிகள் முறையிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவும், பல்வேறு றுப்பினர்கள் இந்தக் கருத்தினையே இங்கும் தெரிவித்த காரணத்தினாலும், ருகின்ற ஆண்டுகளில், 230 இடங்கள் மட்டுமே இந்த விவசாயக் கல்லூரியிலே ருந்ததை மாற்றி அதை 250 இடங்களாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தரிவித்துக்கொள்கிறேன். அதுபோல 12 இடங்கள் மட்டுமே விவசாயி ளுடைய பிள்ளைகளுக்கென பிரையாரிட்டி பேசிஸில் இப்போது இருந்து ருகிறது. அதை 20 இடங்களாக உயர்த்தி விவசாயிகளின் பிள்ளைகளுக்கு ன்னுரிமை வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு திட்டங்களை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே நாங்கள் தரிவித்திருக்கிறோம். 64 லட்சம் டன் அரிசி உற்பத்தி என்பதை வருகின்ற ஆண்டுகளிலே 65 லட்சம் டன்னாகப் பெருக்கும் சூழ்நிலை இருக்கிறது. காவிரித் தண்ணீரும் வரும், பெய்கின்ற மழையும்கூட காலா காலத்திலே பெய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நல்ல நிலைமை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல பல கருத்துக்களையும், அரிய யோசனைகளையும் அளித் திருக்கிறார்கள். அவைகளுக்கு நான் நன்றி சொல்லிக்கொள்ளும் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் பலருடைய கருத்துக்களுக்கும் யோசனை களுக்கும் நான் பதில் சொல்ல முடியாமல் இருந்தாலும், கண்டிப்பாக அவைகளை அரசு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் கொள்கை விளக்கத்தைப் பற்றி நல்ல கருத்துக்கள் அளிப்பார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்தோம். எதிர்க் கட்சியை விமர்சித்ததோடு முடித்திருக்கிறார்கள். நான் ஒரு விளக்கத்திற்குத் தான் போகிறேன். தயவு செய்து அனுமதிக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த ஆட்சி 20 பேர்களை சுட்டது, நாங்கள் இதுவரையிலே 14 பேர்களைத் தான் சுட்டிருக்கிறோம் என்று . . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் அப்படிச் சொல்லவில்லை என்பதை தயவு செய்து பதிவேட்டுப் புத்தகத்தைப் பார்த்தால் தெரியும்.

திரு. கோ. சி. மணி: வேண்டுமானால் இன்னும் இரண்டு விவசாயிகளைச் சுட்டு முடித்த பிறகு, இந்தப் பிரச்சினையை நாம் தொடரலாம். அன்றைய தினம் நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தார்கள் என்று தெரியவில்லை. அந்தப் பிரச்சினைகளைச் சரிவர அணுகாத காரணத்தால்தான், மக்கள் எங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் இப்போது எதிர்க்கட்சியிலிருந்து சொல்கிறோம், அந்தக் காலம் உங்களுக்கும் விரைவில் வரப்போகிறது. அதை மறந்துவிட்டிருக்கிறீர்கள்.

* * * காலாகாலத்திலேயே ஏன் இந்தச் சட்டம் வரவில்லை, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி ஏன் வைக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், பிள்ளை பெறுவதற்கு முன்னாலேயே அது ஆணா அல்லது பெண்ணா என்று பார்க்காமல், புடவை வேட்டி எடுக்க முடியாது. அதுபோல் என்ன சிக்கல் ஏற்படுகிறதோ அதற்குத்தான் தீர்வு காண வேண்டுமே தவிர, நான் சொன்ன சட்டம் ...

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் எந்தக் கட்சியிலே இருந்தேன் என்ற சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பினார்கள். அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: விவாதத்திற்கு வெளியே செல்ல வேண்டாம், விஷயத்திற்கு வாருங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: திரு. சாதிக் அவர்களைக் கேட்டால் தெரியும். 1965 இந்தி எதிர்ப்புப் போராட்ட புத்தகத்தைப் பார்த்தால் எந்தக் கட்சியிலே இருந்தேன் என்பது தெரியும். மேலும், * * * நான் சொல்லுகின்றபோது பொதுமக்களிடத்திலிருந்து வந்த புகாரை வைத்துத்தான் சொன்னேனே தவிர, ஆதாரத்துடன் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அதற்கென்று தனியாக நேரம் குறித்தால் கண்டிப்பாகச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன், வேண்டுமானால் அதைப் பின்னாலே வைத்துக்கொள்ளலாம்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. கோ. சி. மணி: சாதாரண உறுப்பினர் ஒருவர் இந்த அவையிலே குற்றச்சாட்டு ஏதாவது சொன்னால் கூட, ஆதாரத்துடன் சொல்ல வேண்டுமென்று நிபந்தனையிருக்கிறது. ஒரு அமைச்சர் பொறுப்பில் இருந்து கொண்டு இப்படி ஏனோ தானோ என்று பேசலாமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பொறுப்பு எடுத்தே பேசியிருக்கிறார். ஆகவே, * * * பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம்.

திரு. கோ. சி. மணி: "சட்டம் என்பது வேறு, சட்டத்திற்கு உரிய திருத்தம் என்பது வேறு", என்று ஒரு வழக்கறிஞராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது வியப்பாக இருக்கிறது. விவசாயிகளுடைய கடன் நிவாரணச் சட்டம் என்பது 1930-லேயே கொண்டு வரப்பட்டது. ஆனால் அதற்குரிய திருத்தம் 1968லே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு 1972-லே இப்படி ஒரு பிரச்சினை வந்தது . . . . . .

திரு. ஆ. நல்லசிவன்: காவிரி நீர் சம்பந்தமாக நான் 'சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டும்' என்று சொன்னது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு ரிட் போட்டு பிறகு அதை வாபஸ் வாங்கினார்கள். அன்றைக்கு, கருநாடக அரசிடம் 'சில அணைகளை நீங்கள் கட்டக்கூடாது' என்று நாம் கேட்டோம். சட்டப்படி அவர்கள் அணை கட்டுவதை நாம் தடுக்கக்கூடாது என்று கூட வாபஸ் வாங்கலாம். ஆனால் அணையைக் கட்டுவதன் மூலமாக நமக்கு உரிய தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை வரக்கூடாது. 1974-லே நமக்கு எவ்வளவு தண்ணீர் தரப்பட்டதோ அந்த அளவு தண்ணீர் நமக்குத் தொடர்ந்து தரவேண்டும் என்று நாம் கருநாடக அரசிடம் வற்புறுத்த வேண்டும். அன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கருநாடகத்திலே இல்லை என்று சொன்னார்கள். கடந்த இரண்டு வருஷங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் அங்கே இருக்கிறது. இப்போதும் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். நாம் 1974ஆம் ஆண்டிலே எவ்வளவு தண்ணீர் பெற்றோமோ அந்த அளவு தண்ணீர் கிடைத்தாக வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது சம்பந்தமாக, நாம் ஏன் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகக் கூடாது? அமைச்சர் அவர்கள் இதற்குச் சரியான பதில் சொல்ல வேண்டும்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 எப்ரல் 17

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : முதலிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வழக்கறிஞராக இருந்த ஒருவருக்கு புத்தி புகட்ட வேண்டிய . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதுதான் முடிந்து விட்டதே.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சட்டத்திற்கும், திருத்தத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே திருத்தங்களை நாங்கள் கொண்டுவரவில்லை. ஆனால், அந்தச் சட்டமே மீண்டும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. It is not an amendment என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையை எழுப்பினார்கள். 1924-லே எவ்வளவு தண்ணீர் நமக்கு வந்தது. 1974-லே எவ்வளவு வந்தது என்று கேட்டார்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் இப்போது புள்ளிவிவரங்களைச் சொன்னால் அது பின்னாலே நமக்குக் கெடுதலாக அமைந்துவிடும். ஏனென்றால், இந்தப் பிரச்சினை இன்னும் முடியவில்லை. இந்தப் பிரச்சினையில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காவிரி பற்றி Facts Finding Committee என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. இந்திய அரசு தனியே இது சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களிலும் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகவே, எவ்வளவு தண்ணீரை நாம் உபயோகப்படுத்தினோம் என்பதைக் காட்டிலும் நமக்கு பாசனத்திற்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இது பற்றிய பேச்சு வார்த்தைகளை நாம் இப்போது நடத்திக் கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 6-30)

*திரு. க. இராமமூர்த்தி: அரசுப் பண்ணைகளைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இதில் என்னுடைய வாதம் இதுதான்: அரசு விவசாயப் பண்ணைகளை நடத்தும்போது, அரசுக்கு இருக்கிற பல்வேறு சலுகைகள், சவுகரியங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்திற்கு நல்ல தரமான விதையும், தரமான உரமும் கிடைக்கின்றன. விவசாயக் கல்லூரிகளில் படித்துப் பயிற்சி பெற்ற [illegible] துறையோடு விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. விவசாயத்தைப்

1979 எப்ரல் 17]   [திரு. க. இராமமூர்த்தி]

பற்றி நன்கு அறிந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். தேவையான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. நிலத்தை உழுவதற்குத் தேவையான நல்ல இயந்திரங்கள் இருக்கின்றன. இவ்வளவு வசதிகள் இருந்தும், அரசுப் பண்ணைகளில் நஷ்டம் இருக்கிறது என்றால், அது எப்படி என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தற்போது நஷ்டத்தைக் குறைத்திருப்பதாகச் சொன்னார்கள் நிலத்தைத் திருத்துவதற்காகச் செய்யப்படும் முதலீடு இந்த நஷ்டத்தில் சேர்க்கப்படுவதில்லை. எனவே நஷ்டம் வருவது என்பது நியாயமில்லாத ஒன்றாகும். இந்த நிலையில் நஷ்டத்தில் அவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. நஷ்டத்தைப் போக்கும் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில், 15, 20 ஆண்டுகளுக்கு முன்பே, மலேசியா போன்ற வெளிநாடுகளிலிருந்து இத்தகைய விற்பனைக் கூடங்களைப் பார்வையிட வேண்டுமென்று இந்தியாவுக்கு வந்தவர்களை மத்திய அரசு தமிழகத்தில் இருக்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைச் சென்று பார்வையிடும்படி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அளவுக்கு மிக ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்த இவ்வொழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், தனியார் துறையோடு போட்டியிடக் கூடிய அளவுக்கு இடைத் தரகர்களை ஒழித்துவிட்ட நிலையில் செயல்பட்டுக் கொண்டிருந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் என்ன காரணத்தாலே இன்றைக்கு மிக அதிகமான இடைத் தரகர்களைக் கொண்டிருக்கிறது? எதன் காரணமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கிற நிலைமை மாறி, தனியார்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் மாறிவிட்டிருக்கின்றன . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றே புரியவில்லை. விளக்கம் கேட்கிறாரா அல்லது அமைச்சர் அவர்களின் உரைக்கு விளக்கம் தருகிறாரா என்றே புரியவில்லை. எதைப்பற்றியாவது விளக்கம் வேண்டுமென்றால், அதைத்தான் கேட்க வேண்டும். நீண்ட சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பது சரியல்ல.

திரு. க. இராமமூர்த்தி : 1744 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடுவதன் மூலம் 75 லட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டம் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையை மாற்றி குறைவான நஷ்டத்தை இந்த அரசு உறுதி செய்திருக்கிறது என்று

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது 75 லட்சம் ரூபாய் நஷ்டம் வருவதை மாற்றி 35 லட்சம் ரூபாய் அல்லது 39 லட்சம் ரூபாய்க்கு நஷ்டத்தை குறைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நஷ்டம் எவ்வளவு குறைக்கப்பட்டாலும், விவசாயம் நஷ்டத்தில் நடத்தப்படுகிறது என்பதுதான் உண்மையாகும். இது தெளிவாகத் தெரிகிறது. இந்த நஷ்டம் வாராமல் தடுக்க அரசாங்கம் இனி என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, நான் ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் சொசைடிகளைப்பற்றிக் குறிப்பிட்டது புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். மிக நன்றாக நடைபெற்று வந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இன்றைய தினம் மிக அதிகமான அளவுக்கு சமூக விரோதிகள் அல்லது இடைத்தரகர்கள் வளர்ந்துவிட்டிருக்கிற நிலை உருவாகியிருக்கிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்த நிலைமையை மாற்ற அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இவ்வளவு நீண்ட சொற்பொழிவைச் செய்தால், அவை எப்படி அடுத்த கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்து விவாதிக்க முடியும்? நேற்றைய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதமே முடியாமல் இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் தயவுசெய்து சுருக்கமான முறையில் தங்கள் விளக்கங்களைக் கேட்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: சுகர் கேன் செஸ் பண்டைப் பொறுத்தவரையில், தொடர்ந்து காங்கிரஸ் ஆட்சிக் காலம் தொடங்கி ரூபாய் 150 லட்சம் சாலை அபிவிருத்திக்காகவும், ரூபாய் 45 லட்சம் ரிசர்ச்சுக்காகவும் செலவழிக்கப்படுகிறது. செலவழிக்க ஒதுக்கப்படுகிற பணத்தில் பெருமளவுக்கு செலவழிக்கப்படாமலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஆண்டுக்காண்டு இந்த இனத்திற்கான தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நிலைமையை மாற்ற அரசு என்ன நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மற்றபடி நான் விவசாய சங்கம்பற்றி ஒன்றும் குறிப்பிட விரும்பவில்லை. இந்தக் கருத்துக்களைக் குறித்து, அமைச்சர் அவர்களின் விளக்கத்தை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வேளாண்மைப் பண்ணைக் கழகத்தைப் பொறுத்தவரையில், நஷ்டத்தை மதிப்பிட்டு, எவ்வளவு நஷ்டம் உண்மையில் வந்தது என்பதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பண்ணைகளை நஷ்டமில்லாமல் நடத்த முடியும் என்பதை மட்டும் தற்போது சொல்லிக் கொள்கிறேன். இலங்கை அகதிகளுக்காக வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் எண்ணத்தோடு இந்த வேளாண்மைப் பண்ணைக் கழகம் இயங்கி வருகிறது. 'ஏபிள் பாடீட் பர்சன்ஸ்' என்று சொல்லப்படும் நல்ல உடற்கட்டுள்ள உடல்நலமுள்ளவர்கள் வேறு வேலைகளுக்குப் போய்விடுகிறார்கள். பாக்கியிருப்பவர்கள்தான் இந்தப் பண்ணைக் கழகத்திற்கு வேலைக்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை காரணமாகத்தான் நஷ்டத்தில் பயிர் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மேலும் தற்போது நெய்வேலியில் 3,000 ஏக்கர் நிலத்தைப் புதிதாக எடுத்திருக்கிறோம். 3,000 ஏக்கர் நிலத்தில், 2,000 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி பயிர் செய்து வருகிறோம். பண்படுத்துவதற்குக் காலதாமதம் ஆகிறது. புதிதாக சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளும் நிலங்களில் உடனே பயிர் நன்றாக விளைவதில்லை. அங்கேயிருக்கிற ஈரப்பதம் நிலை, மண்வளம், நில வளம் ஆகிய இவைகளைப் பரிசோதனை செய்து பார்த்து, பிறகுதான் அந்த மண்ணுக்கு ஏற்ற பயிர் எது என்று கண்டறிந்து அதற்குப் பின்னாலே நல்ல முறையில் சாகுபடி செய்யும் நிலைமை இருக்கிறது. அப்போதுதான் நல்ல விளைச்சலைக் காண முடியும். ஆரம்பத்தில் நஷ்டம் ஏற்படுகிறது என்றாலும், பின்னாலே லாபம் கிடைக்கும் என்ற அடிப்படையில் அரசாங்கம் இத்தகைய பண்ணைகளில் முதலீடு செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டிகள்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தற்போது இடைத் தரகர்கள் அதிகமாகிவிட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, வியாபாரிகளும் விவசாயிகளுக்கு மத்தியில் இடைத் தரகர்களும் இல்லாத நிலைமையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் பாடுபட்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, எங்கே எப்போது இடைத் தரகர்கள் அதிகரித்திருக்கிறார்கள் என்று விவரத்தை அளித்தால், உரிய நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் சிறந்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தற்போது இடைத் தரகர்கள் அதிகமான அளவுக்கு வளர்ந்துவிட்டார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டு.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எத்தனை சதவிதம் அவர்கள் அதிகமாக வளர்ந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால், நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சுகர்கேன் செஸ் பண்டைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இந்த வகையில் ரூபாய் 150 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஆராய்ச்சிப் பணிக்காக ரூபாய் 45 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை களெல்லாம் வீணான செலவுகள் அல்ல. மேலும் இவ்வாறு ஒதுக்கப்படும் பணம் முழுவதையும் அங்கேயேதான் செலவு செய்ய வேண்டும் என்ற அளவுக்கு 'மேண்டேட்டரி புரொவிஷன்' எங்கேயும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் இருக்கையிலிருந்து எழுந்து பேச முனைந்தார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' எதாவது எழுப்புகிறாரா? இவ்வாறு ஒவ்வொரு உறுப்பினரும் விளக்கம் கேட்டுக்கொண்டே போனால், அடுத்த கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்துக் கொள்ளவே முடியாது.

(4) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'மருத்துவமும், மக்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புக்கள் @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

@ 665-738 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள "மருத்துவமும், க்கள் நல்வாழ்வும்' குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் பரிசிலனைக்கு டுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயத் றை குறித்த கொள்கைக் குறிப்பின்மீது நடத்தப்பட்ட விவாதத்திற்கு பதி ளித்து அத்துறையின் அமைச்சர் அவர்கள் இங்கே சொற்பொழிவாற்றினார் ள். பல்வேறு கோரிக்கைகள்பற்றி, அல்லது கொள்கைகள் பற்றி மாண்பு கு உறுப்பினர்கள் அவையில் பேசிய பிறகு, அவைகளுக்குப் பதிலளிக்கும் கையில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அமைச்சர்கள் இரண்டுவிதமான றைகளைக் கடைப்பிடித்து வருவதை நான் பார்த்து வந்திருக்கிறேன்.

உறுப்பினர்களான நாங்கள் அவையில் சொல்லுகின்ற கருத்துக்களை, ழுப்புகிற கோரிக்கைகளைக் குறிப்பிட்டு அவைகளுக்கெல்லாம் நன்றி தரிவித்து வரவேற்ற, பிறகு, உறுப்பினர்கள் பேசியவற்றில் சில பொதுவான ருத்துக்களுக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டு முடித்துவிடுகிற அமைச்சர்கள் ருக்கிறார்கள். இது ஒரு முறை. மற்றும் சில அமைச்சர்கள் ஒவ்வொரு றுப்பினர் பேசும்போது குறிப்பிடுகிற கருத்துக்களையும் குறிப்பெடுத்துக் காண்டு, இன்னின்னார் இன்னின்ன கருத்துக்களைச் சொன்னார்கள், அதற்கு திலாக நான் இதையிதைச் சொல்லுகிறேன் என்று அவற்றிற்கெல்லாம் திலளிக்கிறார்கள்.

(பிற்பகல் 5-40.)

இப்படி இருவிதமான முறைகளில் பதிலளிக்கக் கூடிய அமைச்சர்களைப் ார்க்கிறோம். உறுப்பினர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பதைக் குறிப் படுத்து, அதற்குரிய பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, உறுப் னர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதை இந்தக் கட்டத்திலே சால்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனால்தானே விவாதம் நீள்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : உறுப்பினர்கள் சொல்லுகிற கருத்துக்களை வாதத்திற்குரிய பொருளாக மாற்றாமல், அதற்குரிய விளக்கங்களை அமைச் ர்கள் தருகிறபோது, உண்மையிலேயே உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படு றது. அந்த முறையிலே மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்

கள், உறுப்பினர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பதையெல்லாம் குறிப்பெடுத்து, அதற்குரிய விளக்கத்தைச் சொன்னது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது. அதைப்போலவே அவர்கள் தொடர்ந்து எல்லா சமயங்களிலும் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஏன் இவ்வளவு பூர்வ பீடிகையோடு சொல்லுகிறேன் என்றால், மக்கள் நல்வாழ்வுத் துறையின் கொள்கை குறித்து இங்கே நடக்கிற விவாதத்தின்போது உறுப்பினர்கள் பேசுகிற பேச்சை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பெடுத்துக் கொண்டு அதற்குரிய பதிலை அளிப்பார்கள் என்று கருதித்தான். இதற்கு முன்னால் உறுப்பினர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பதைக் குறித்து குறிப்பெடுத்து பதில் சொல்லுகிற தன்மை அவருக்கு இருக்கிற காரணத்தால் அந்த அடிப்படையிலே அவரும் நல்ல முறையிலே விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்த்து இந்த விவாதத்தில் என்னுடைய உரையை நிகழ்த்த முற்படுகிறேன்.

சென்ற மாதம் 20, 21 ஆம் தேதியில், ஐந்தாண்டுத் திட்டக் கருத்தரங்கிலே கலந்துகொள்ள டில்லிக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்தபோது, நம்முடைய சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலை வட நாட்டுப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் கட்டம் போட்டுப் பிரசுரித்திருப்பதைப் பார்த்தேன். தமிழ் நாட்டு சட்டமன்றப் பேரவையிலே நடந்த மிக முக்கியமான விஷயம் என்று தெரிவித்திருந்தார்கள். வட நாட்டுப் பத்திரிகைகள் இவ்வளவு கவனம் செலுத்துகிறார்களே, அது என்னவாக இருக்குமென்று நானும் மிகுந்த ஆவலுடன் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்தேன். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது, "தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற சோழவரம் என்ற ஊரில் உள்ள சித்த வைத்தியர் ஒருவர் வழுக்கைத் தலையில் மீண்டும் மயிர் முளைப்பதற்கு வேண்டிய புதிய மருந்தைக் கண்டு பிடித்திருக்கிறார்" என்று சொன்னதாகச் செய்தி போட்டிருந்தார்கள். இந்தக் கருத்தை அவர் சொல்லுகிறபோது, அவருடைய அருகிலே மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் உடன் இருந்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. "தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட அந்த மருந்து என்னவென்று கேட்டார், நானும் அந்த மருந்தை அவருக்குச் சொல்லியிருக்கிறேன்" என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொன்னதாகவும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அப்படிக் கேட்கவே இல்லையென்று பதில் சொன்னதாகவும் வட நாட்டுப் பத்திரிகைகளிலே மிகவும் சிறப்பாகப் போட்டிருந்தார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லை. வழுக்கைத் தலையில் மயிர் முளைக்கிறதா என்று பரிசோதித்துப் பார்ப்பதற்காக தொழிலாளர் நல அமைச்சருக்கு அந்த எண்ணெயைக் கொடுக்கலாமே என்றும் பரிசோதித்துப் பார்ப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களுடைய தலையையே பயன்படுத்தலாமே என்றும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் உடனே எழுந்து, வழுக்கைத் தலையாக இருப்பதைப் பற்றித் தனக்குக் கவலையில்லை என்றும் 'Baldness is the symbol of wisdom' என்றும் சொன்னார். "தனியாக இரண்டு பாட்டில் மருந்து வேண்டுமென்று என்னிடம் கேட்டிருக்கிறார்" என்று நான் சொன்னேன். அதை அவர் மறுக்கவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அதை மறுக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். ஆகவே சித்த வைத்தியத்தில் உள்ள அந்த மருந்தை அவர் உபயோகப்படுத்தி வாரேயானால், ஓரிரு மாதங்களில் அதனுடைய பலன் என்னவென்பதை நாமும் தெரிந்துகொள்ளலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, மருந்தின் பெயரைச் சொன்னால், அது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: எனக்கு மட்டுமல்ல, மேலவையில் உள்ள பல உறுப்பினர்களுக்குப் பயன்படும். சித்த மருத்துவத்திலே சில சிறப்பான மருந்துகள் இருக்கின்றன. அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் பல இடங்களில் பல்வேறு வியாதிகளுக்குப் பல மருந்துகள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் பல பேர். அதிலே நாம் கவனமாக இருக்க வேண்டும்.

அமெரிக்க நாட்டிலே, பத்தாண்டுகளுக்கு முன்னால், தலையில் வழுக்கையை நீக்குவதற்கு மருந்து வைத்திருக்கிறோம், ('foll proof method to remove baldness.') என்று விளம்பரம் செய்தார்கள். வழுக்கைத் தலையைப் பற்றிப் பத்தாண்டுகளுக்கு முன்னாலே எனக்கும் கவலை ஏற்பட்டது. அதலே என்ன மருந்து என்று கேட்டு அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அவர்கள்

தங்களுடைய பதில் கடிதத்தில் பத்து டாலர் பணம் கட்டி அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எழுதியிருந்தார்கள். பத்து டாலர் பணம் என்றால் கிட்டத்தட்ட 80 ரூபாய் "The fcolproof method to remove baldness is to wear a wig ; we are manufacturing wondeeful wigs you can wear for 24 hours." என்று எழுதியிருந்தார்கள். மருந்து உற்பத்தியாளர்கள், வழுக்கைத் தலையில் மீண்டும் மயிர் முளைப்பதற்கும், நரையைப் (வெண் மயிரை) போக்குவதற்கும் மருந்து கண்டுபிடித்து விட்டால், உலகத்திலே பல கோடி ரூபாயைச் சம்பாதிக்க இந்த இரண்டு மருந்துகளே போதுமானது. ஆகவே சித்த வைத்தியத்திலே எல்லாவற்றுக்கும் மருந்து வைத்திருக்கிறோம் என்று சொல்லுவது தவறு. ஆராய்ச்சியின் அடிப்படையிலே . . . . . .

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: தலைவர் அவர்களே, எல்லாவற்றுக்கும் மருந்து வைத்திருக்கிறோம் என்று சொல்லவில்லை. பழைய ஏடுகளைப் படிக்கிற நேரத்தில், முடி முளைப்பதற்காக பல்வேறு விதமான எண்ணெய்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. குறிப்பாக செங்கழு நீர் எண்ணெயைப் பயன்படுத்துவதாகத் தெரிகிறது. அந்த எண்ணெயை விரலால் தொட்ட நேரத்தில் விரலிலே முடி முளைத்ததாகவும் சொல்லப்படுகிறது. இதற்குப் பல குறிப்புகள் இருக்கின்றன. சித்த மருத்துவத்திலே பல மருந்துகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாமும் அவை உண்மையாகவே செயல்படுகின்றனவா என்பதை அறிய ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறோம். சில இடங்களில் பொதிந்துள்ள நல்லவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் காரியங்களை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சித்த வைத்தியத்தில் உண்மையாகவே சில சிறந்த மருந்துகள் இருக்கின்றன. ஆனால் அமைச்சர் குறிப்பிட்ட மருந்து பற்றி நான் அறியவில்லை. அதனுடைய பலன் என்னவென்பதை அறிய இரண்டு மூன்று மாதங்கள் கழித்து மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பார்த்தால்தான் புரியும். அது வரையில் I reserve my judgement on this matter. அந்த மருந்தைப் பற்றியோ, சித்த மருத்துவத்தைப் பற்றியோ குறை கூறுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. பல சிறந்த மருந்துகள் சித்த வைத்தியத்திலே இருக்கின்றன. மருத்துவத் துறையிலே தொடர்பு கொண்டிருப்பதால்,

நாங்கள் பல அற்புதமான மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதிலே என்னுடைய முக்கியமான கருத்து பல வியாதிகளுக்கு அந்த மருத்துவத்திலே மருந்துகள் இல்லை.

சித்த வைத்தியத்தில் புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடித்திருப்பதாக கடந்த பத்தாண்டுக் காலமாகச் சொல்லி வருகிறார்கள். சித்த மருத்துவர் லூக்கேமியா புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்துவிட்டதாகச் சொல்லி, அதை திரு. இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்களிடம் ஆராய்ச்சி செய்து பார்த்ததில், எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை. இது மாதிரி பல மருந்துகள் இருக்கின்றன. சில பேர் தகுதியில்லாமலே தங்களைப்பற்றி அரைப் பக்கம், முழுப் பக்கம் விளம்பரம் கொடுத்து வருகிறார்கள். ஆர்.எம்.பி. டிகிரியைப் போட்டு, அதனுடன் டி.ஐ.எம்., பி.ஐ.எம். போன்றவைகளையும் போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆர்.எம்.பி. என்றால் ரூரல் மெடிக்கல் பிராக்டிஷனர் என்று பொருள். அவர்கள் ஒரு ஆறு மாத காலத்திற்குப் படித்து பயிற்சி பெற்றுக்கொண்டு வருகிறவர்கள். அவர்கள்தான் உலகத்திலேயே சிறந்த வைத்தியர் என்று விளம்பரம் செய்துகொண்டு 25 ரூபாய், 50 ரூபாய் என்று வாங்கிக்கொண்டு சில மருந்துகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மருந்துகளையெல்லாம் கொண்டு வந்து பரிசோதித்துப் பார்த்தால், டயாபெட்டீஸ் நோய்க்காக கொடுக்கப்படும் மாத்திரைகளையும், சல்ஃபோனமைட் என்ற மருந்துகளையும் பொடி செய்து கொடுத்திருப்பது தெரிய வருகிறது. ஆகவே சித்த வைத்தியத்திலே எல்லா வியாதிகளுக்கும் மருந்து இருக்கிறது என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே இது போன்ற மருந்துகள் குறித்து கண்காணிப்பாக இருக்க வேண்டும். சித்த மருத்துவத் துறையிலே மிகச் சிறப்பான மருந்துகள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. மஞ்சள் காமாலை நோய்க்கு மிகச் சிறந்த மருந்து இருக்கிறதென்று பேரவையிலே கூட சொன்னார்கள். மஞ்சள் காமாலை நோய்க்கு கீழாநெல்லி மருந்தைக் கொடுப்பார்கள். கிட்டத்தட்ட 15 நாட்களிலிருந்து 21 நாட்களுக்குள் அந்த நோய் போய்விடும். இராஜ்ய நாட்டிலே என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் இந்தியர். அதுவும் நாகர்கோவிலைச் சேர்ந்தவர். எதிர்க் கட்சித் தலைவருக்குக் கூட நண்பர். அவர் கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய் அளவிற்கு இந்த மருந்தைக் கொடுக்க முடியுமா என்று கேட்டார். கீழாநெல்லியைவிட ஒரு சிறந்த மருந்தை நான் பம்பாய் சென்றிருந்தபோது கேள்விப்பட்டேன். அங்கே ஆமணக்கு இலை, மஞ்சள் காமாலை நோயை ஏழு நாட்களுக்குள் சரி செய்கிறது என்று சொன்னார்கள். அதை பரிசோதித்துப் பார்த்ததில் உண்மையிலே ஏழு நாட்களுக்குள் மஞ்சள் காமாலை நோய் போய்விட்டது.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1979 ஏப்ரல் 17

நான் முன்பு எதிர்க் கட்சியில் உட்கார்ந்திருந்தபோது, திரு. சா. கணேசன் அவர்கள் எங்கள் சுதந்திரா கட்சியின் தலைவராக இருந்தார், நான் தொண்டனாக இருந்தேன். கோவை இலையைச் சாப்பிட்டால், மஞ்சள் காமாலை நோய் மூன்று நாட்களில் போகுமென்று சொல்லுகிறார்களே, அது உண்மையா என்று என்னைக் கேட்டார். நான் தெரியாது என்று அப்போது சொன்னேன். பிறகு அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி அவர் சொன்னார். கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் அதை ஆராய்ச்சி செய்து பார்த்தபோது மூன்று, நான்கு நாட்களுக்குள் மஞ்சள் காமாலை நோய் போய்விட்டது. சில சமயங்களில் கண்ணில் மஞ்சள் தெரியாமல் இருக்கும். பைல் ரூபின் டெஸ்டின் மூலம் இரத்தத்தில் அதற்கான அறிகுறிகள் தென்படும். இரத்தத்தில் உள்ள அந்த அறிகுறிகள் இந்த மருந்தின் மூலம் மூன்று நான்கு நாட்களுக்குள் போய்விடுகின்றன என்பதைக் கண்டேன். Memory, intelligene, concentration க்காக 'டேட்டோநியூரால்' என்ற ஆங்கில மருந்து இருக்கிறது. இது ஒரு இலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. திருமதி மஞ்சுபாஷிணி அவர்கள் ஒரு விடுதியை நடத்துகிறார்கள். அந்த விடுதியில் உள்ள நோயாளிகளில் கிட்டத்தட்ட 50 பேருக்கு இந்த மருந்து டாக்டர் சஞ்சீவி அவர்களால் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு இந்த மருந்தைக் கொடுத்ததில் mentally retarded மட்டுமல்லாமல், நம்மைப் போன்று இருப்பவர்களுக்கும் ஞாபக சக்தியை அதிகப்படுத்த மிகச் சிறந்த முறையில் இது பயன்படுகிறது என்பதைப் பார்த்தோம். இது மாதிரி பல

(பிற்பகல் 5.50)

மருந்துகள் இருக்கின்றன. இந்த மாதிரி இருக்கின்ற பல இலைகளைப் பற்றி நான் வெளியே சொல்வது லாபகரமாக இருக்காது என்ற காரணத்தினால், அங்கத்தினர்கள் தனியாக வந்து கேட்டால், அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட மருத்துவ முறைகளை நான் வரவேற்கிறேன். அந்தத் துறை வளர வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். இது விஷயத்தில் நான் ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்போது இருக்கக்கூடிய அரசு சரியான முறையிலே அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சென்ற ஆண்டுகூட பேசப்பட்டது. அது அமைச்சர் அவர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அதற்கு முன்னாலேயும் அப்படிப் பேசப்பட்டது. நானே இரண்டு முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம்

1979 ஏப்ரல் 17] [திரு. ஜி. சுவாமிநாதன்]

ஆட்சியில் இருந்தபோதும் சித்த மருத்துவத்தைப் புனருத்தாரணம் செய்கின்ற வகையில் செயலாற்ற வேண்டும் என்று இரண்டு ஆண்டுகள் அந்த ஆட்சியின் மீது குறைபாடு சொன்னேன். இந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே இந்த சித்த வைத்தியத்திற்காக கிட்டத்தட்ட நான்கு கோடி ரூபாய் அந்த ஆண்டில் செலவழித்திருக்கிறார்கள். 1978-வது ஆண்டிலே அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு 1978-79-லே அதற்காகச் செலவழித்தது 6.49 கோடி ரூபாய். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதற்காகச் செலவழித்த தொகை 19.60 கோடி ரூபாய். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இந்தத் துறைக்கு நிதி சரிவர ஒதுக்கப்படவில்லை, இந்தத் துறை சரியாகச் செயல்படவில்லை என்ற கருத்து நிலவியது. அந்தக் கருத்தை மாற்றுகின்ற வகையிலே 1979-80-ல் ரூ. 95.68 கோடி ரூபாய் அளவிலே செலவழிக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்யாமல் இருந்ததைச் சேர்த்து இந்த ஆண்டு ஈடு கட்ட இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்தக் குறிப்பில் உள்ளது மொத்தமே ரூ. 96 கோடி. கொடுக்கின்ற புள்ளிவிவரம் சரியில்லை என்று நினைக்கிறேன். அது லட்சக்கணக்காக இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அந்தத் தொகை ரூ. 95 லட்சமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அப்படியானால், நிதி குறைந்திருக்கிறது என்று கருதுகிறேன். நான் முன்பு சொன்ன தொகைகள் 6 கோடி, 4 கோடி என்று சொல்லியிருக்கிறேன். அதையும் லட்சக்கணக்கில் எடுத்துக்கொண்டு பேச வேண்டும். அந்த அளவில் இப்போது ஒதுக்கியுள்ள தொகை அதிகம் தான். அதாவது 95 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவழிக்க இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி அதிகமாகப் பணம் ஒதுக்கியிருப்பதால், இந்தத் துறை மிகச் சிறந்த முறையிலே வளர வேண்டும். சித்த மருத்துவத் துறையை நன்றாக வளர்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தத் துறையைப்பற்றி இன்னும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்ல வரும்போது அது இன்னும் சிறந்த முறையில் செயல்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த மாதிரிக் கருத்து பரவலாகச் சொல்லப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த ஆஸ்பத்திரியிலே 50 படுக்கைகள் இருக்கின்றன. அங்கு ஆராய்ச்சி செய்வதற்கு என்று

தனியாகத் துறை வைத்திருக்கிறார்கள். அந்தத் துறைக்கு டாக்டர் ரத்தினவேல் சுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்து வந்தார்கள். அங்கு தேவையான வசதிகள், உபகரணங்கள் இல்லாததால், அங்கே தலைமை ஏற்று ஆராய்ச்சிகளை நடத்த இயலவில்லை என்ற காரணத்திற்காக அவரே அவருடைய பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள். அங்கிருந்து விலகிப் போய்விட்டார்கள். அவருக்கு வேண்டிய கெமிக்கல், எக்ஸ்ரே கருவிகள் இவைகள் எல்லாம் இல்லாமல் அந்த நிலையம் வைக்கப்பட்டு இருந்ததால் அங்கே ஆராய்ச்சிகள் நடத்த முடியாது என்று ராஜிநாமா செய்துவிட்டுப் போய் விட்டார்கள். அந்த நிலைமைகள்தான் இப்போதும் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆராய்ச்சிகள் அங்கே தொடர்ந்து நடக்க வேண்டுமென்றால், வேண்டிய உபகரணங்கள் அங்கே தேவையான அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலிகைப் பண்ணை வைக்கப் போகிறோம் என்று பல இடங்களில், சென்ற ஆண்டிலே குறிப்பிலே சொல்லியிருந்தார்கள். இந்த அரசினர் இந்திய மருத்துவ மனைக்கு எதிராக உள்ள பகுதியில் மூலிகைப் பண்ணையை வைத்திருக்கிறார்கள். அந்த மூலிகைப் பண்ணையில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒன்றும் செய்யவில்லை. அங்கு ஒன்றுமே இல்லை என்ற அளவிலே தான் இருக்கிறது. அது கஷ்டித்துக்கொண்டு வருகிறது. அந்த மூலிகைப் பண்ணை நல்ல முறையிலே நடக்கவில்லை. அந்த மூலிகைப் பண்ணையை அங்கே இருக்கின்ற அரசாங்க சூப்பிரண்டன்டண்ட் அவர்களே மேற்பார்வை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர் தலைமையிலேயே அது இருந்து வருகிறது. அந்த மூலிகைப் பண்ணையை வளர்க்க வேண்டுமென்றால், அங்கே பி.எஸ்.சி. (அக்ரிகல்சர்) படித்தவர்களைப் போட வேண்டும். அந்தப் பண்ணையை விவசாயத் துறையுடன் இணைக்க வேண்டும். அப்படிச் செய்து அந்த மூலிகைப் பண்ணையை வளர்க்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

'மாடர்னைசேசன் ஆப் பார்மஸி' என்ற அளவிலே சில திட்டங்களைச் செயலாக்கப் போகிறோம் என்ற கருத்து இரண்டு ஆண்டுகளாகச் சொல்லப் பட்டு வருகிறது. இன்று சித்த மருந்துகள் அகப்படுவதே இல்லை என்று சொல்லப்பட்டு வருகிறது. அடையாறிலே 'இம்ப்காப்ஸ்' என்று சொல்லக் கூடிய ஒரு நிறுவனத்தில் கிட்டத்தட்ட ரூ. 60 லட்சத்திற்குத்தான் மருந்து உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கின்றது. தேவையான அளவுக்கு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் கொடுக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. அரசாங்கம் அதற்குரிய பணத்தை ஒதுக்கி

செலவு செய்து, அந்தத் துறையை விரிவுபடுதத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாளையங்கோட்டையிலிருக்கும் இந்திய முறை மருத்துவ மனை நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால் அங்கே தேவையான மருந்துகள் உற்பத்தி செய்ய வேண்டிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

யுனானி மருத்துவம் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் சிலர் சொல்லி வருகிறார்கள். யுனானி கல்லூரி ஒன்று தமிழ் நாட்டிலே நாம் ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி சார்பில் ஒன்று ஆரம்பிக்க இருக்கிறோம் என்றும் கருத்து சொல்லி யிருக்கிறார்கள். நம்முடைய அரசு சித்த வைத்தியத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை. அதுபற்றி நான் என் கருத்தைச் சொல்ல வேண்டும். இந்திய மருத்துவத்திலே 3 முறைகள் இருக்கின்றன. ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி என்று இருக்கின்றன. இதற்காக என்று சென்ட்ரல் கவுன்சில் ஆப் மெடிகல்,சையன்ஸ் அண்டு ஹோமியோபதி என்ற நிறுவனத்தை அமைத்திருக்கிறார்கள். இந்திய நாட்டிலே 96 ஆயுர்வேத நிறுவனங்கள் இருக்கின்றன. 36 யுனானி நிறுவனங்கள் இருக்கின்றன. இந்திய நாட்டிலே ஒரே ஒரு நிறுவனமாக, மருந்துகள் செய்வதற்கு பாளையங்கோட்டையிலே தான் இருக்கின்றது. அங்கு உள்ள மருத்துவக் கல்லூரியில் நாம் சேர்த்துக் கொள்வது 40 பேர்கள்தான். இந்த விளக்கத்திலே 44 பேர்கள் என்று சொல்லியிருப்பது உண்மையா இல்லையா என்பதுபற்றிப் போகவில்லை. நான் அறிந்தவரை, அங்கு முன்பு 30 பேர்களைத்தான் சேர்த்துக்கொண்டிருந் தார்கள். இதற்கு முன்பு திரு. அன்பழகன் காலத்திலே அதையே 40 பேர்களாக உயர்த்தியிருந்தார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன். பட்டப் படிப்பிற்கு இன்னும் அதிகமான பேர்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே அவர்களுக்கு ரூ. 75 ஸ்டைபண்ட் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அங்கு வரக்கூடிய விண்ணப்பங்கள் 400, 500 என்று வருகின்றன. ஸ்டைபெண்ட் கொடுக்காமலே இன்னும் 60 பேர்களைச் சேர்த்துக்கொள்ள முடியும். அங்கே படுக்கைகள் இருக்கின்றன. தேவை யான அளவுக்கு அங்கே மருத்துவர்கள் இருக்கின்றார்கள், மருத்துவப் பேராசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அதை விரிவுபடுத்த வேண்டும்.

இன்னொன்று, போஸ்ட் கிராஜுவேட் என்ற அளவிலே, சித்தா எம்.டி. என்ற பட்டப்படிப்புக்கு நம் மாநிலத்திலே ரூ. 200 தான் கொடுக்கிறோம். வெளி மாநிலத்தில் ரூ. 400 ஸ்டைபண்ட் கொடுக்கிறார்கள். நாமும் அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். யுனானியைப்

பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்திலிருந்து அரசே ஸ்டைபெண்ட் கொடுத்து கிட்டத்தட்ட 5 அல்லது 10 மாணவர்களையாவது அந்தக் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும். நம் மாநிலத்திலிருந்து இதற்காக [illegible] 5 பேர் சென்று படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் யுனானியும் வளர்வதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்கள் கொடுத்த நேரத்தைவிட அதிகமாகிவிட்டது. ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரு ஆலோசனைக் கமிட்டி போட்டிருக்கிறார்கள். இந்தக் கமிட்டியை பர்ஸ்ட் கிளாஸ் கமிட்டியாகப் போடவில்லை. அதிலே பெரிய பேராசிரியர்களையெல்லாம் போட்டிருக்கிறார்கள். பர்ஸ்ட் கிளாஸ் கமிட்டி என்று சொன்னால், அவர்களுக்கு 20 ரூபாய் ஒரு கூட்டத்திற்கு வந்தால் கொடுப்பார்கள். அப்படியில்லாததால் அவர்களுக்கு 10 ரூபாய்தான் கிடைக்கும். இதனால் அதில் பங்கு பெறுகின்றவர்கள் வந்து அவர்கள் பணியைச் செய்ய முடியாமல் இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

'கவுன்சில் ஆப் இண்டியன் மெடிசன்ஸ் ரிசர்ச்' என்று டெல்லியிலே இருக்கிறது. அங்கே இதற்காக என்று ஒரு தனிக் குழு இருக்கின்றது. சித்தத்தைப் பொறுத்தமட்டில், ஆயுர்வேதம் (இன்க்ளூடிங் சித்தா) என்று பிராக்கட்டிலே தான் போட்டு சித்தத்தை வைத்திருக்கிறார்கள். சித்தா என்ற வார்த்தையை பிராக்கட்டிலே போட்டிருப்பதைப்பற்றி நாம் கவலைப் படுவதற்குக் காரணம், கிட்டத்தட்ட 90 சதவிகிதம் மற்ற வைத்தியத்திற்கு என்று பணம் ஒதுக்கிவிட்டு, சித்த வைத்தியத்திற்கு 10 சதவிகிதம் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்பதுதான் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே கவுன்சில் என்பதை நாம் தனியாக அமைக்க வேண்டும் என்று நான் சொன்னேன். அதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் தரமான மருத்துவ வசதிகளை அளிக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக பல திட்டங்களை யெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு அதிகமான பொருளை ஒதுக்கியிருக்கிறார்கள், டாக்டர்களைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கிராமப்புற மக்களுக்கு அது பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் அதிலே இப்போது உள்ள குறைபாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிரைமரி சென்டர்களைப் பொறுத்தவரையில், இவ்வளவு செலவு செய்யப்

படலாம் என்று பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிரைமரி சென்டர்களுக்கு மருந்துக்கு என்று ரூ. 14 ஆயிரம் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுகின்ற மருந்து ஒரு ஆண்டுக்குக்கூட போதாமல் இருக்கின்றது. ஒரு லட்சம் பேர்களுக்கு மேல் அங்கு வைத்திய வசதி கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 150 பேரிலிருந்து 200 பேர்கள் வரை அந்த பிரைமரி சென்டர்களுக்கு சிகிச்சைக்காக வருகின்றார்கள். ஒருவருக்கு 20 பைசா என்ற அளவுக்குத்தான் ஒதுக்கிடு இருக்கிறது. அந்தத் தொகையில் ஒரு ஆஸ்ப்ரோ மாத்திரைகூட கொடுக்க முடியாது. இந்த 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிடு கிராமப்புற மக்களுக்கு வைத்திய வசதிகளைச் செய்வதற்குப் போதாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இங்கு உபயோகப்படுத்தப்படுகின்ற மருந்துகளினுடைய அளவை இன்னும் அதிகப்படுத்தினாலொழிய, அந்தத் திட்டம் நன்றாகச் செயல்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6.00)

அடுத்து, வாலன்டரி ஹெல்த் சென்டர்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. அதற்கு மூன்றில் ஒரு பங்கு நிதியை மத்திய அரசும், ஒரு பங்கு நிதியை மாநில அரசும், ஒரு பங்கு சம்பந்தப்பட்ட நிறுவனமும் போட வேண்டுமென்று சொன்னார்கள். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், நான் சார்ந்துள்ள ஒரு நிறுவனத்தின் சார்பாக 6 லட்ச ரூபாய் பணம் ஒதுக்கி, அதற்கு டிரஸ்ட் ஏற்பாடு செய்து, 2 லட்சம் ரூபாய் பணம் முதலீடு செய்து, மாநில அரசையும், மத்திய அரசையும் இரண்டு லட்ச ரூபாய் அவர்கள் பங்காகத் தர வேண்டுமென்று கேட்டு கடிதம் எழுதினோம். அதற்கு ஓராண்டிற்குப் பிறகு, மாநில அரசு, மத்திய அரசுக்கு அதுபற்றிக் கடிதம் எழுதியது. மத்திய அரசு, 6 மாதங்களுக்குப் பிறகு, கடிதம் எழுதி ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்களென்று அறிகிறேன். நிறுவனத்தினர் அந்த மருத்துவ மனையைக் கட்டுவதாகச் சொல்கிறார்கள், ஓராண்டுக்கு 1½ லட்சம் ரூபாய் செலவு செய்வோமென்று சொல்லுகிறார்கள், அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார்கள், அதற்குப் பிறகு அவர்களால் அந்த மருத்துவ மனையை நடத்த முடியாவிட்டால், அதை யார் நடத்துவது என்ற கேள்வியைக் கேட்டார்கள். நிறுவனம் தேவையான பணத்தைப் போடத் தயாராக இருக்கிறது. ஓராண்டுக் காலத்திற்கு 1½ லட்சம் ரூபாய் செலவு செய்ய முடியுமென்று சொன்னோம். இருந்தாலும், அப்படிப்பட்ட கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதே போன்று பல நிறுவனங்கள் அனுப்பிய விண்ணப்பங்களுக்கு பதில் இல்லை. அந்த மாதிரி மூடிவிட்டால், நாங்கள் எப்படி அதை

ஏற்று நடத்த முடியுமென்று மாநில அரசினர் சொல்லிவிட்டார்கள். மத்திய அரசும், அதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று சொல்லிவிட்டது. இந்த ஆண்டு நூற்பாலைகளைப் பொறுத்து, அமோக லாபம் வந்திருக்கிறது. 50 லட்சம் ரூபாய் ஒரு நிறுவனத்திற்கு வந்திருக்கிறது. அதில் கிட்டத்தட்ட 10 லட்சம் ரூபாய் அவர்களால் இதற்கென்று முதலீடு செய்ய முடியும். அந்த நிறுவனம் முதலீடு செய்ய முடியாமல், மருத்துவ மனை வராமலிருப்பதால், முன்னாள் அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் காலத்தில் கால்கோள் விழா நடத்திய அந்த இடத்திற்குப் போக முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அமைச்சரவர்கள் இதில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே போன்று 50 மருத்துவ மனைகளை ஆரம்பிக்கத் தமிழகத்தில் தயாராக இருக்கிறார்கள். எனவே மத்திய அரசும், மாநில அரசும் பேசி, இதில் முடிவு காண வேண்டும்.

அடுத்து, மினி ஹெல்த் சென்டர்சுக்கு மேச்சிங் கிராண்ட் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். குறைந்த அளவிற்கு டாக்டர்களுக்குச் செலவு செய்து, மருந்துகளுக்காக அதிகச் செலவு செய்வது தான் நன்மை பயக்கும். மருந்துகளுக்கு அதிகச் செலவு செய்தால், மேச்சிங் கிரான்ட் அதிகம் கொடுக்க முடியாதென்ற நிலை இருக்கிறது. தேவையான அளவிற்கு எஸ்டாபிளிஷ் மென்ட்டுக்குச் செலவு செய்துவிட்டு, மருந்துகளுக்குக் குறைத்துச் செலவு செய்யுங்களென்று தாக்கீது வருகிறது. இதையும் அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையிலே, நடைமுறையிலே பார்க்கிறபோது, அதிகமான மருத்துவ மனைகள் வந்துகொண்டே இருக்கின்றன. 'சூப்பர் ஸ்பெஷாலிடி' வந்துகொண்டேயிருக்கிறது. அண்மையிலே, நியூராலஜி பிளாக்குக்குத் தேவையான கேஸ்-ஸ்கேன் யூனிட் வாங்க 70 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கோருகிறார்கள். கிராமப்புறங்களுக்குச் செய்வ தாகச் சொல்லுகிறோம். கேஸ்-ஸ்கேன் யூனிட் என்று சொல்லும்போது, மூளையைப் பொறுத்தவரையில், கான்சர் இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்க ஆல் இந்தியா மெடிகல் இன்ஸ்டியூட்டில் வைத்திருக்கிறார்கள். அதை வாங்க வேண்டுமென்று நியூராலஜி டிபார்ட்மென்டில் சொல்லுகிறார்கள். 40 லட்சம் ரூபாய் செலவில், பாடி-ஸ்கேன் யூனிட்டை வாங்கினால் நல்லது தான். சென்னையிலேயே அப்படிப்பட்ட கருவிகளை வாங்கிப் பொருத்து கிறார்கள். சென்னையிலுள்ள மருத்துவ மனைகளுக்கே செலவு செய்கிறார்கள். சென்னையிலே கிட்னி பாங்க் ஆரம்பிக்க வேண்டுமென்று பேசப்படுகிறது. தஞ்சையிலே கோபால்ட் யூனிட் கிடையாது. திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்து சொல்கிறேன். 7, 8 ஆண்டு களாக, தஞ்சையிலே கோபால்ட் யூனிட் வையுங்களென்று சொல்லுகிறோம். கோபால்ட் யூனிட் இன்னும் அங்கு வைக்கப்படவில்லை. எக்ஸ்ரே தெராபி என்று வைத்து, அதுவும் கெட்டுக் கிடக்கிறது. திருச்சி, தஞ்சைப் பகுதியிலே யாருக்காவது கேன்சர் வந்தால், அவர்கள் மதுரைக்குத்தான் போக வேண்டும் அல்லது பாண்டிச்சேரிக்குப் போக வேண்டும் அல்லது சென்னைக்கு வர வேண்டும். அந்தப் பகுதிகளிலே லட்சக் கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் கேன்சர் நோயைக் குணப்படுத்துவதற்கான கோபால்ட் யூனிட் அங்கே கிடையாது. சென்னையிலே எல்லா ஆஸ்பத்திரிகளிலும் கோபால்ட் யூனிட் இருக்கிறது. சென்னைக்குப் பக்கத்திலுள்ள காஞ்சிபுரத்தில் அண்ணா கேன்சர் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அங்கே கோபால்ட் யூனிட் இருக்கிறது. வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவ மனையில் கேன்சர் யூனிட் இருக்கிறது. ஆனால் தென் மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், மதுரை, கோவை தவிர, வேறு இடங்களில் கோபால்ட் யூனிட் கிடையாது. மேலும் தஞ்சையில் அடிப்படைத் தேவைகள்கூட கிடையாது. சென்னையிலே 'இன்டென்சிவ் கரோனரி கேர் யூனிட்' என்று வைத்திருக்கிறார்கள். திரு. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் 6 லட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கி, தஞ்சையிலே நல்ல முறையிலே அதை நடத்துங்கள் என்று சொன்னார்கள். அதை வாங்கிக்கொண்டு, கொஞ்சம் அதிகமாகப் பணம் போட்டு, இன்டென்சிவ் கரோனரி கேர் யூனிட்டை நியூகிளியஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அங்கே விரிவுபடுத்தலாம். அப்படிச் செய்யவில்லை. நியூராலஜி யூனிட் ஒன்று ஆரம்பித்தார்கள். அதற்குத் தேவையான உபகரணங்கள், அசிஸ்டன்டுகள் அங்கே கிடையாது. நெஃப்ராலஜி டிபார்ட்மென்ட் அங்கே கிடையாது. கிட்னி டிரான்ஸ்பிளான்டேஷனுக்குத் தேவையான கருவிகள் சென்னையிலே கிடையாது. டையாலசிஸ் பண்ண 'இன்ஸ்ட்ருமென்ட்ஸ்'. கிடையாது. 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' என்று சொல்லி, 60 லட்சம் ரூபாய்க்குக் கட்டிடம் கட்டுகிறோம். ஆனால் தஞ்சையிலே ஸ்டீம் லாண்டரி கிடையாது. 100 வருடங்களுக்கு முன்புள்ள கிச்சன் அப்படியே இருக்கிறது. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கே இந்த நிலை என்றால், டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ், தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவ மனைகள் எப்படி இருக்குமென்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

நிர்வாகத் துறையைப் பொறுத்த, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்வீசஸ் 10 மாதங்களாக இல்லை. டி.எம்.ஈ. அவர்களே அந்தப் பொறுப்பையும் வகித்துக்கொண்டிருக்கிறார்கள். அது பெரிய

துறை. ஒரு ஆண்டுக் காலமாக இயக்குநரைப் போடாமலிருப்பது நல்லதல்ல. இன்னொரு கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மூன்று துறைகளையும் இணைத்து, சிப் மெடிகல் ஆபீசர் அல்லது சிப் மெடிகல் டைரக்டர் என்று ஒருவரைப் போடுவதாக இருந்தால், நான் அதற்கு வரவேற்புத் தெரிவிப்பேன். இப்போது மூன்று துறைகளும் தனித் தனியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மூன்று துறைகளுக்கும் சேர்த்து ஒரு டைரக்டரைப் போட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சீக்கிரமாக இதைச் செய்ய வேண்டும்.

சென்னையிலே 50 லட்சம் ரூபாய் செலவில் மல்ட்டி-ஸ்டோரிட் கட்டிடம் கட்டியிருக்கிறோம். கட்டி ஓராண்டாகியும், அது வேகன்ட்டாக இருக்கிறது. கருணாநிதி நகரில், 'ஹென்டிகேப்டு பேர்சன்ஸ் ரீ ஹேபிலிடேஷன்' ஆஸ்பத்திரிக்கு 25,000 ரூபாய் செலவு செய்து கட்டிடம் கட்டி, 1½ ஆண்டுக் காலமாக அது சும்மா கிடக்கிறது. 'டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்விசஸ்' அலுவலகத்திற்குப் பின் பக்கம் டிரக் கன்ட்ரோலர் அலுவலகத்திற்கும், அனலிடிகல் லேபாரட்டரிக்கும் என்று 4 வருடங்களுக்கு முன்பு 40 லட்சம் ரூபாயில் கட்டிடம் கட்டி, இன்ஸ்டிருமென்ட் எல்லாம் வாங்கிப் போட்டு, 3½ வருடங்களாக அந்தக் கட்டிடம் திறக்காமல் இருக்கிறது. இப்படி பல இடங்களில் சொல்லலாம். சேலத்திலே, அனலிடிகல் லேபாரட்டரிக்காக ஒரு கட்டிடம் கட்டி 1½ ஆண்டுகாலமாக யாரும் அங்கு போகாத நிலைமை இருக்கிறது. இப்படி 50, 60 லட்சம் ரூபாய் செலவு செய்து, கட்டிடங்களைக் கட்டி, அங்கே ஒருவரும் போகவில்லை என்றால், நிர்வாக இயந்திரம் சரியான முறையில் இயங்க முடியாத அளவிற்கு, தொல்லைகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. பெரிய விஷயங்களைக் கவனிக்கவே நேரம் இல்லையென்றால், சின்ன விஷயங்களை எப்படிக் கவனிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, காலம் மிகவும் அதிகமாக ஆகிவிட்டதால், என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6.10.)

THIRU J. M. MIAKHAN: Mr. Chairman, Sir, I am very happy to get an opportunity to speak on the Policy Notes on Medical and Public Health. I find in the Policy Note that a sum of Rs. 18,000 is provided for each Mini Health Centre out of which only a sum of Rs. 3,000 will be set apart for medicines. This will work out only to Rs. 10 per day. How will this be sufficient for medicines ? After spending so much money on

various items, if we do not provide for the supply of sufficient medicine, there will be no benefit derived by all our efforts. I would, therefore, request the Government to see that the Mini Primary Health Centres and Maternity Centres are staffed properly and are also supplied with sufficient stock of medicines, since those centres will be of no use if there is no supply of sufficient medicines.

I would like to appreciate the Government's desire to have at least one Specialised Hospital in the whole State and to improve the General Hospital at Madras. At the same time, the other Hospitals should not be neglected. For example, certain Departments in the Stanley Hospital are doing yeoman service to the people and the Hospital has also got the necessary facilities and all the medicines are available. I would request the Government to upgrade the Stanley Hospital as an Institute and give the necessary staff for the Institute.

Regarding medicines, we find that much importance is given to allopathic medicines, while the indigenous system medicines are not considered so much important. Though there may be difference between the allopathic medicines and indigenous system medicine, there is no difference between the medicines of the various indigenous systems like Siddha, Ayurveda and Unani. Of course, there may be some difference in the method of treatment; but most of the ingredients of the drugs in the three indigenous systems are the same. There are very many efficacious medicines in indigenous systems.

(Thirumathi Mandakini Krishnamurthi, Vice-Chairman, in the Chair.)

I was having Hepatitis and was admitted in the Hospital for about 15 days Afterwaeds in a week or so, I was suspected to have developed Jaundice. The doctor wanted me to get admitted in the Hospital for 15 days. I told him that I had some work to attend to which was important and I would admit myself in the hospital a week later. But the doctor was adamant and said that I must have rest for 15 days. I took Unani medicine for three days Within two days, I was completely cured.

I sent my urine for examination and it was found that urine was very clear and it did not contain salt or anything like that. I, therefore, make a plea to the Government to consider the fact that there are very good medicines in Unani, Sidhha and Ayurveda systems for diseases like jaundice, etc., and I have personal experience which I have also narrated to the House. There are good medicines for Diabetes, Blood Pressure, Leucoderma, etc. For Leucoderma, there is no proper medicine in Allopathy system of medicine. Many people think that it is an incurable disease. I know personally that at least in about four cases, leucoderma was completely cured by indigenous system of medicines. One lady had patches all over her body. All her fingers were white and even the eye-brow was white. After taking treatment, they all turned black and she is still living. There are such good medicines and it is necessary that wherever there are no effective medicines in Allopathy system, the other systems should be explored. I request the Government to provide extra funds for doing research in indigenous systems of medicine. There are facilities in Arignar Anna Hospital and other places but those facilities are not adequate. From the Policy Note on Medical, I find that in the College of Indian Systems of Medicine, Palayamkottai, four seats allotted to Unani were vacant during 1978–79. It should not have been so. The Unani system should also be encouraged. That system has got very valuable medicines. Though there may be some Unani Research Centres in North India, there is no harm in having such research centres in Tamil Nadu also because the Unani medicine is a very useful medicine. There are very many able and renowned Unani doctors in South India. If their services could be requisitioned, cheap medical aid could be given to the people.

There are very many diseases like guinea-worm and yaws. All these diseases spread due to inadequate and improper supply of drinking water. Though there are schemes, in many places there is no proper water-supply. As a matter of fact, I suspect that even in the City of Madras, drinking-water supply is polluted by the mingling of sewage in some way. I think that it is the main reason for the spread of jaundice in Madras City. It may be that, though I come from Chromepet, I myself contracted jaundice by drinking water in Madras City. The water is supposed to be protected but actually it is not protected. Therefore, I request the Government to see that protected water-supply is given in all places where it is not available. I also request the Government to see that, even in places where protected water-supply is supposed to exist, the supply is properly done.

In congratulate the Government on providing large amounts of money in the Budget for Medical and Public Health. In the diagram of Policy Note, the Revenue Expenditure for 1978–79 for the Directorate of Medical Education and the Directorate of Medical Services is given as about Rs. 6,500 lakhs. Though there has been an overall increase in expenditure when compared to previous years, I find that the increase has been mainly on ' Salaries '. There has been no increase in expenditure on medicines and other such items. The expenditure on medicines and other itmes has been stable over the years, whereas the expenditure on salaries has increased. Therefore, I request the Government to see that the monetary provision for medicines is also increased. There is no use of our having any number of experts without having adequate medicines. Therefore, I request the Government to see that, commensurate with the increase in expenditure on other items, we also spend more on medicines. I also request the Government to bestow some attention on the production of Siddha, Ayurveda and Unani medicines indigenously on a large scale. Of course, Government may be ready to give adequate funds; but the raw materials are not readily available. For example, the herbs and other things are not readily available. They have only to be cultivated and produced because they are not readily available in the market. As has been suggested by anothtr hon. Member, the upkeep of the herbal farms should be entrusted to the proper persons. Horticulturists and others who know the subject must be given the charge of running these farms. There is no use of having a big acreage under these herbal farms without having proper persons to run these farms. Places like Kurtallam and Ooty can also be exploited for having these farms. There are many indigenous materials like ' Tulasi ' leaves and also ' Paakku-paalai ', for which I do not know the English name. These things are very useful. Extracts taken from such materials can even improve the memory and intelligence of students. I personally know that some students who were very dull have

become intelligent after taking such extracts for about two months and have been able to secure good marks in the examinations. I request the Government to see that adequate funds are provided for research into the usefulness of such indigenous materials. I also request Government to see that the hospitals and Primary Health Centres are properly staffed and supplied with adequate stocks of medicines.

Thank you.

VICE-CHAIRMAN (THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI) : As there are eight more hon. Members to speak, I request the hon. Members to confine their speeches to ten minutes each.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாற்றுத் தலைவரவர்களே, "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு" என்று வள்ளுவர் சொன்னார். பகையைப்பற்றி மத்திய அரசு கவனித்துக்கொள்ள வேண்டும். பசி, பிணி இரண்டையும் போக்கி மக்கள் உடல் நலம் பெறும் நிலையை, நல்வாழ்வு பெறும் நிலையை உருவாக்கிக் கொடுக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. வைத்தியம் என்ற முறையில் வைத்தியத்துக்கு தமிழர்கள் நல்ல இடம் தந்திருக்கிறார்கள். நாமும் தந்து வருகிறோம். இன்னும் சொல்லப்போனால், எல்லோரும் சுகாதாரமாக, நலமாக இருக்க வேண்டுமென்ற முறையில் இந்த அரசு எடுத்திருக்கக்கூடிய முயற்சியைப் பாராட்டுகிறேன். 14 கோடி ரூபாயை அதிகமாக இந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பது சிறப்பாகப் பாராட்டத்தக்கது. தொழு நோயைப் போக்கும் முயற்சியில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு அறிஞர்கள் கூட பாராட்டியிருக்கிறார்கள். இது தமிழர்களுக்கெல்லாம் பெருமை தரக்கூடிய விஷயம். 100 நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்துவது பாராட்டுக்குரியது. கிராம மக்களுடைய நல்வாழ்வுக்காக இந்த அரசு மிகுந்த அக்கறை செலுத்தியுள்ளது குறிப்பாகப் பாராட்டத்தக்கது. கிராமத்திலுள்ள மக்கள் பக்கத்திலுள்ள மருத்துவமனைக்குப் போகின்ற நிலை மாறி, கிராமத்தை நோக்கி மருத்துவமனை வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால், எந்த கிராமப்புற மக்கள் தான் இந்த அரசைப் பாராட்டாமல் இருப்பார்கள். 10 இரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. நாளுக்கு நாள் விபத்துக்கள் அதிகமாகிவிட்டதன் காரணமாக இரத்தம் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த விஷயத்தில் அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை பாராட்டத்தக்கது.

சித்த மருத்துவத்துக்கு 95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதில் 69 இலட்சம் ரூபாயை இந்த ஆண்டிலேயே சித்த மருத்துவத்துக்காகச் செலவிடவேண்டுமென்று சொல்லியிருப்பது சித்த வைத்தியத்தில் இந்த அரசு எவ்வளவு தூரம் அக்கறை கொண்டிருக்கிறது, ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டு. சேலம் மாவட்டத்திலுள்ள இளம்பிள்ளையில் ஒரு அரசு மருந்தகம் திறக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு வந்திருப்பது குறித்து அங்குள்ள மக்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதன் காரணமாக சேலம் மாவட்டத்திலுள்ள மக்கள் நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டுவார்கள், மகிழ்ச்சியடைவார்கள்.

(பிற்பகல் 6.20)

அடுத்தபடியாக, சென்னையில் 'நியூராலஜி டிப்பார்ட்மென்டுக்கு' 40 லட்சம் ரூபாய் செலவிலே ஒரு புதிய கருவி வாங்கப்பட்டிருக்கிறது. இது சிறப்புக்குரிய ஒரு செயல். இவ்வளவு பெரிய தொகை செலவாகிறதே என்று அதுபோன்ற கருவிகளை வாங்காமலிருந்தால், இப்போது நாம் வைத்தியத்திலே அடைந்திருக்கின்ற பெரிய முன்னேற்றத்தின் பலனை அடைந்து கொள்ள முடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு, நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தகுந்த உதவியும் அளிக்க முடியும். ஆகவே, இதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கிராமப்புறங்களுக்கு மருத்துவர்கள் போகவில்லை என்று முன்பெல்லாம் குறை சொல்லி வந்தார்களே தவிர, அவர்கள் ஏன் கிராமப்புறங்களுக்குப் போகவில்லை, அவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்வதற்கு நாம் அவர்களுக்கு என்ன வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற முயற்சியிலே தான், இப்போது 62½ லட்சம் ரூபாய் செலவிலே கிராமப்புறங்களிலே மருத்துவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்க திட்டம். நான் மிகவும் பாராட்டுகிறேன்.

பாராட்டுக்களைச் சொல்லி சில கோரிக்கைகளை நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவ ஆலோசனைக் குழு என்று முன்பு ஒரு குழு இருந்தது. இப்போது அந்தக் குழு இல்லை. ஆகவே, மீண்டும் அந்தக் குழுவை அமைத்து அக்குழுவில் ஓய்வுபெற்ற மருத்துவர்களை அங்கத்தினர்களாகச் சேர்க்க எற்பாடு செய்ய வேண்டும்.

சீனியர் ஹவுஸ்-சர்ஜென்ஸி படிக்கிற பயிற்சிக்கு, அதிகம் பேர்களுக்கு பணம் தராது இருக்கிற காரணத்தினாலே அதிகம் பேர் பயிற்சிக்கு வர விரும்பினாலும் பயிற்சி பெற இயலாத நிலை இருக்கிறது. ஆகவே, சீனியர்

ஜெனரல் சர்ஜென்சி பயிற்சி வேண்டுவோர் அனைவருக்கும் நாம் பயிற்சி அளிக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியன் மெடிக்கல் அசோஸியேசன் நடத்தும் பயிற்சி வகுப்புகளுக்கு மூன்று ஆண்டுகளாகத் தரவேண்டியிருந்த பணத்தை இப்போது தந்திருக்கிறார்கள். இன்னும் அதிகப் பணம் ஒதுக்கீடு செய்து அந்த வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அது மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்த வேண்டும். 'பப்ளிக் ஹெல்த்' என்ற முக்கிய பணியை அவர்கள் வகிக்கிறார்கள். வயது முதிர்ந்த நிலையில் அவர்களுடைய அனுபவம் இந்த நாட்டுக்கு மிகவும் தேவைப்படுகிறது. ஆகவே, இந்தச் சிறப்பான காரியத்தையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு, ஒரு கணக்குப் போட்டுப் பார்க்கிறபோது, ஓராண்டுக்கு கணக்குப் போட்டுப் பார்த்தால், 1,000 குழந்தைகள் பிறந்தால் அவற்றில் 100 குழந்தைகள் இறந்துபோகின்ற நிலை தற்போது இருக்கிறது. ஆகவே, குழந்தைகள் நலத்திலே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, டி.சி.எச். வகுப்புகள் அதிகமாக நடத்தி, குழந்தைகளுக்கான மருத்துவர்களை நாம் தயாரிக்க வேண்டும் மருத்துவ மனைகளில் குழந்தைகள் அதிக அளவில் வைத்தியம் செய்வதற்காக படுக்கை வசதிகள் ஏற்படுத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சிறப்புடையது.

குடும்ப நலம் என்று வருகிறபோது, குடும்ப நலத்திற்கென ஒரு தனித் துறையாக அதை மாற்றினால் நல்லது. அதுவும் சிறப்பாக இருக்கும்.

கோயம்புத்தூரிலே மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தியபோது, அதை ஒரு இடத்திலே வைத்து, மருத்துவ மனையை வேறொரு இடத்திலே வைத்தார்கள். அதன் காரணமாக, இப்போது 300-க்கும் மேற்பட்ட மாணவர்களும் மற்றும் அங்கு பணியாற்றும் பேராசிரியர்களும் இங்குமங்கும் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அங்கிருக்கும் மருத்துவக் கல்லூரியும், மருத்துவ மனையும் ஒரே இடத்தில் இருக்கிற ஒரு ஏற்பாட்டைச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

அடுத்தபடியாக, திருச்சிக்கும், சென்னைக்கும் இடையிலே விழுப்புரத்தில் தான் இரத்தம் சேமிக்கும் வங்கி இருக்கிறது. ஈரோட்டுக்கும் சேலத்திற்கும், ஈரோட்டுக்கும் திருச்சிக்கும் இடையிலே இந்த வசதி இப்போது இல்லை. ஆகவே, இந்த இடத்திற்கு மத்தியில் ஒரு இரத்த சேமிப்பு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது சேலத்திற்கு எல்லாம் விமானமே வருகிறது. ஆகவே, ஈரோட்டில் ஒரு இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தால், சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'அனாட்டமி' 'மைக்ரோ பயலாஜி' 'பிஸியாலஜி' போன்ற வகுப்புகளுக்கு மாணவர்கள் இப்போது வருவதில்லை. காரணம், இந்தப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இப்போது உதவித்தொகை அளிப்பதில்லை. மேலும், இந்தப் படிப்பு படித்தால், இதனால் எந்தவிதமான லாபமும் இல்லை என்று அவர்கள் படிக்க வருவதில்லை. ஆகவே, இந்தப் படிப்பு படிக்க வருபவர்கள், முன்பு இருந்தது போலவே, தங்களுடைய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டே படிக்கலாம் என்று இந்தக் கல்வியைத் தருகிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, குடும்ப நலம் பற்றி. குடும்பக் கட்டுப்பாடு என்று இருந்த அந்த வார்த்தையையே, பேரறிஞர் அண்ணா அவர்கள் குடும்ப நலம் என்று மாற்றினார்கள். குடும்ப நலம் என்பதெல்லாம் விஞ்ஞானத்தாலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு தடை, ஒரு வசதி என்று கருதியது மாறி, இன்று அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினையாக அது இருக்கிறது. குடும்ப நலத்தைப் பொறுத்தமட்டில், எல்லா நாடுகளும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. **Love your children** என்று சின நாட்டிலே வைத்திருக்கிறார்கள். அமெரிக்க நாட்டிலே **Planned Parenthood Association** என்று வைத்திருக்கிறார்கள். குடும்ப நலத்தில் நாம் ஏதோ மருத்துவர்களை மட்டும் காட்டி பயப்படுத்தக்கூடாது. எல்.அய்.சி.யில் ஆண்டுதோறும் நிறைய வருமானமும், லாபமும் வருகிறது என்று சொல்கிறார்கள். எல்லோரும் உயிருக்கு பயந்து அதிலே சேரவில்லை. அவர்கள் பலவிதமான ஆட்களை அந்தப் பணியில் ஈடுபடுத்துகிறார்கள். அதுபோன்ற நிலைமை இந்தக் குடும்ப நலத்திலும் வேண்டும். மருத்துவர்கள் என்று மட்டுமல்ல, நாம் பலரையும் இந்தப் பணியிலே ஈடுபடுத்தலாம். சொல்லப்போனால், தமிழ்ப் புலவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களைக்கூட குடும்பநலப் பிரச்சாரத்திற்காக நாம் பயன்படுத்தலாம். காரணம் புலவர்கள் தான் இப்போது அதிகப் பிள்ளைகள் பெற்று கஷ்டப்படுகிறார்கள். குறைந்தபட்சம் அதைத் தவிர்க்கவாவது செய்யலாம்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 ஏப்ரல் 17

அடுத்தபடியாக, மருத்துவ கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு தேர்ந்தெடுக்க இருக்கும் குழுவை ஒரே குழுவாக அமைப்பது சிறப்பு. பல குழுக்கள் அமைத்து, பல பேர் மனநிலையில் மாணவர்களைக் கேள்வி கேட்டு சிரமப்படுத்துகிறார்கள். ஆகவே, ஒரே குழு அமைப்பது சிறப்பு.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரிகளில் 1,115 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது அந்த இடங்களை 1015 என்று குறைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் வேலைவாய்ப்பு அளிப்பதிலே இருக்கின்ற சிரமம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த 100 இடங்களையும் வெளி நாட்டு மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளத்தக்க விதத்தில் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டு நான் அமைகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கை விளக்கம் என்ற அறிக்கையின் பேரில் சில கருத்துக்கள் சொல்லக் கிடைத்த வாய்ப்பிற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கையில் சில நல்ல திட்டங்கள், சிகிச்சைக்கான முறைகள் ஆகியவைகளை அரசு வெளியிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மக்களுடைய நல்வாழ்வைப் பொறுத்தமட்டில், ஆங்கிலத்திலே ஒரு பழமொழி பரவலாக உலகம் முழுவதும் சொல்லப்பட்டு வருகிறது. 'Prevention is better than cure' என்பது அந்தப் பழமொழி. இதிலே வந்துவிட்ட சிகிச்சை செய்வதற்கு கோடிக்கணக்கில் செலவு செய்வதற்காக திட்டங்களை வகுத்து அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், வரக்கூடிய வியாதி வாராமல் தடுப்பதற்கு, தேக்குவதற்கு ஒரு சிறந்த முறை என்ற அளவிலே ஒரு திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால், பாராட்டக்கூடிய அளவுக்கு எந்தத் திட்டமும் இல்லை. இந்தக் கருத்தைச் சொல்லும்போது, ஒரு சம்பவம் என்னுடைய நினைவுக்கு வருகிறது. மக்களிடம் சுகாதார நிலையில் மேம்பாடு ஏற்பட்டால், உயர்வு வந்தால், வரக்கூடிய வியாதிகள் வராமல் தடுக்க வழி ஏற்படும். இந்தக் கருத்து நம்முடைய முந்தைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு சமயத்தில் சொன்ன கருத்து, அது பொருத்தமான கருத்து என்று எனக்குப் படுகிறது. அவர் முதலமைச்சராக இருந்தபோது, அமெரிக்காவுக்குச் சென்றார்கள். முதலிலே வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிய பிறகு அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அந்தப் பாராட்டு விழாவிலே அவர்கள் சிறப்புரையாற்றும்போது, "நான் அமெரிக்காவிலே பல விஷயங்களைப் பார்த்தேன். ஆனால், ஒரேயொரு விஷயம் எனக்கு வியப்பு அளிக்கக்கூடியதாக இருந்தது என்று சொன்னார்கள். என்னவென்றால், அமெரிக்க நாடு முழுவதும், எந்த ஊருக்குச் சென்றாலும், ஒரு 'ஈ' ஒரு 'கொசு' கூட

1979 ஏப்ரல் 17] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அவர்கள் பார்க்கவில்லை என்று சொன்னார். அமெரிக்க நாடு முழுவதும் அப்படிப் பார்க்கவில்லை என்று சொன்னார். அந்த அளவுக்கு அங்கே சுகாதாரம் இருக்கிறது என்ற கருத்தை அவர்கள் அன்றைய தினம் பேசினார்கள். அந்த நிலை இங்கும் வரவேண்டும். நான் தமிழகத்திற்கு மட்டும் சொல்லவில்லை. இந்தியா முழுவதற்கும் அந்த நிலை வர வேண்டும். அந்த நிலை நம் நாட்டிலே ஏற்பட இன்னும் எத்தனை ஆண்டுகள் தேவைப்படும் என்று எனக்குத் தெரியவில்லை. எப்படியும், அந்த நிலையை அடைய நாம் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதனை தமிழக அரசு ஒரு அடிப்படைக் கொள்கையாக வைத்துச் செயல்பட முனைய வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதற்காகத்தான் இந்த உதாரணம் சொன்னேன்.

இங்கே பேசிய நண்பர்கள் தண்ணீரிலே கலப்படம் இருக்கிறது, காற்றிலே கலப்படம் இருக்கிறது என்று சொன்னார்கள். பாக்டரிகளை நடத்துகிறவர்கள் கழிவுநீரை விடுகிறார்கள். இந்தக் கழிவுநீர் வியாதிகள் பரவ காரணமாக இருக்கின்றது. குறிப்பாக தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரைச் சுத்தப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆனால், சிறிய சிறிய தொழிற்சாலைகள் இப்போது லட்சக்கணக்கில் இருக்கின்றன. அங்கிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கை இப்போது இல்லை. நான் முன்பு இன்டஸ்ட்ரீஸ் சப்ஜெக்டிலே பேசும்போது கூட சொல்லியிருக்கிறேன். அரசாங்கமே அந்தக் கழிவுநீரைச் சுத்தம் செய்யும் பொறுப்பை மேற்கொண்டு, அதற்குரிய தொகையை தவணை முறையில் அந்தத் தொழிற்சாலை உரிமையாளர்களிடமிருந்து படிப்படியாக வசூலிக்க வேண்டுமென்று நான் கருத்து சொன்னேன். தோல் தொழிற்சாலைகளால் மட்டும்தான் இந் நிலை உருவாகிறது என்று சொல்ல முடியாது. பலவிதமான வேறு தொழிற்சாலைகளிலிருந்தும் கழிவுநீர் வந்து சுகாதாரத்தைக் கெடுக்கும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, இவைகளைத் துப்புரப்படுத்தக்கூடிய முழுப் பொறுப்பையும் அரசே மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30.)

அதைப் போலவே காற்றையும் துப்புரவில்லாமல் செய்துவிட்டார்கள். மோட்டார் கார்களில் பெட்ரோலுடன் கெரோசின் கலப்பதன் மூலமாகவும் டீசல் எண்ணெயுடன் கெரோசின் கலப்பதன் மூலமாகவும், சைலென்சர்களிலிருந்து வருகிற புகை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இது நாம் சுவாசிக்கும்

காற்றைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. இதை நாம் தடுத்தாக வேண்டும். அதைப் போலவே பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வருகிற புகை காற்றை அசுத்தப்படுத்தி, மக்களின் சுகாதாரத்தைக் கெடுக்கும் வகையில் அமைந்திருப்பதால், அதையும் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது மருந்துகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சித்த வைத்தியம், அலோபதி ஆகிய எல்லா முறைகளிலும் நல்ல மருந்துகள் இருக்கின்றன. என்னுடைய அனுபவத்தில் கண்டதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உடல் நலமில்லாமல் இருக்கும் போது, மருந்துக் கடைக்குச் சென்று டாக்டர் சொன்ன மருந்தை வாங்கிச் சாப்பிட்டு குணமடைகிறோம். சில சமயங்களில் தொடர்ந்து சாப்பிடும்போது, உடல் க்ஷீணதசை அடைவதையும் பார்க்கிறோம். நன்றாகத் தேறிக்கொண்டு வந்தார், இப்போது உடம்பு இப்படிக் கெட்டுவிட்டதே என்று பார்த்தால், நாம் வாங்கிச் சாப்பிடுகிற மருந்து 'டூப்ளிகேட்' மருந்தாக இருக்கும். இதன் காரணமாக உடல் நலம் கெடுவதைப் பார்த்திருக்கிறோம்.

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்.)

மாற்றுத் தலைவர் அவர்கள் அதற்குள் மணி அடித்தால் நான் எப்படிப் பேசி முடிக்க முடியும்? இப்போதுதான் நான் பேச ஆரம்பித்திருக்கிறேன். கொஞ்ச நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, நல்ல நாணயமுள்ள மருந்துக் கடைகளில்தான் மருந்துகளை வாங்க வேண்டுமென்று ஏற்படுகிறது. சாதாரண மருந்துக் கடைகளில் நிறைய டூப்ளிகேட் மருந்துகள் விற்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருந்துகளில் சில வகை மருந்துகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை இருக்கின்றன. அவை நல்ல முறையில் குணமளிக்கக்கூடிய மருந்துகளாகும். அப்படிப்பட்ட மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கக் கூடாது என்ற அரசாங்கத்தின் தடை இருப்பதன் காரணமாக, தேவையான அளவுக்கு அத்தகைய மருந்துகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விநியோகம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே இத்தகைய உயிர் காக்கும் அத்தியாவசியமான மருந்துகளை அரசாங்கமே தேவையான அளவில் இறக்குமதி செய்து விநியோகிப்பது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய துணைவியாருக்கு ஒரு கண்ணில் கோளாறு ஏற்பட்டது. அதற்காக மருத்துவத்திற்காக அவரை நான் சென்னை எழும்பூர் அரசாங்கக் கண் ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தேன். அதன் காரணமாக அந்த மருத்துவ மனைக்கு நான் தினமும் சென்று வரும் வாய்ப்பு ஏற்பட்டது. என் மனைவிக்கு அங்கே நல்லவிதமாக மருத்துவம் செய்தார்கள். திருப்தியான முறையில் கண்ணைக் குணப்படுத்தி அனுப்பினார்கள். ஆனால் நாங்கள் அங்கே தங்கியிருந்தபோது கண்ட குறைபாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகம் முழுவதற்கும் அரசாங்கத்தால் நடத்தப்படுகிற ஒரே ஒரு கண் ஆஸ்பத்திரி தமிழகத்தின் தலைநகரான சென்னையில் எழும்பூரில் மட்டும்தான் இருக்கிறது. இவ்வாறு தலைமையிடத்தில் இருக்கிற அந்த ஆஸ்பத்திரியில் பல நேரங்களில் மின்சார பல்பு இல்லாத நிலையைப் பார்த்தேன். சாதாரணமாக 20 பல்புகள் எரிய வேண்டிய அங்கே 4, 5 பல்புகள் மட்டுமே எரிந்து கொண்டிருக்கிற நிலையைப் பார்த்தேன். என்னுடைய துணைவியார் தங்கி மருத்துவம் பெற்ற அந்த அறையிலேயே ஒரு நாள் பல்பு எரியவில்லை. பொதுவாக பாதையில் பல்பு இல்லை, கேட் அருகில் பல்பு இல்லை, என்றிருந்தது. கடைசியில் எங்களுடைய அறையிலேயே பல்பு எறியவில்லை. பல்பு எரியவில்லை, வேறு பல்பு போடுங்கள் என்று கேட்டபோது, நாளைக்கு மாற்றுகிறோம், இன்றைக்கு லேண்ட்டர்ன் வைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு லேண்ட்டர்ன் அனுப்பினார்கள். அது சிமை எண்ணெய் விளக்கு. தொடர்ந்து 2 நாளைக்கும் அந்த லேண்ட்டர்னையே அனுப்பினார்களே யொழிய, பல்பை மாற்றவில்லை. தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரியிலேயே இத்தகைய நிலை என்றால், தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் என்னமாதிரி நிலைமை இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. இதை நான் ஒரு உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாத வகையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது, பல நேரங்களில் பல இடங்களில் "திடீர்ச் சோதனைகளைச்" செய்ததாக பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வந்து கொண்டிருந்தன. இப்போதெல்லாம் அத்தகைய திடீர்ச் சோதனைகளைச் செய்வதில்லையோ என்று நான் நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் திடீர்ச் சோதனைகள் செய்தால் மட்டும் போதாது. மாறுவேடங்களில் சென்று சோதனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாறுவேடம் போடுவது அமைச்சர்

அவர்களுக்குப் பழக்கமான ஒன்று. இப்படி மாறுவேடம் போட்டுக்கொண்டு சென்று ஒவ்வொரு இடத்தையும் கண்காணித்தால்தான், நல்ல பயன் ஏற்படும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள்—அவர்கள் பேரவை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, மேலவை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி—இலவசமாக மருத்துவச் சிகிச்சை பெறும் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு அத்தகைய இலவச மருத்துவ வசதி செய்து தரப்படவில்லை. அப்படி அவர்களுக்கும் இலவசமாக மருத்துவ வசதி செய்து தருவதற்கான ஒரு குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக நான் அறிகிறேன். அதைத் துரிதப்படுத்தி அமுல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே ஓய்வு பெற்ற எம்.எல்.ஏ., எம்.எல்.சிக்களுக்கும் இலவசமாக மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கு அரசாங்கம் வழி வகை செய்ய வேண்டுமென்று பல நாட்களாகக் கேட்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு நான் இந்த அவையில் பேசும்போதுகூட இந்தக் கருத்தைச் சொன்னேன். இந்த ஆண்டும் அதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அரசு விரைவில் இந்தக் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி நகரில் மருத்துவக் கல்லூரி ஒன்று துவங்க வேண்டுமென்ற திட்டமொன்று கடந்த 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக திட்ட அளவிலேயே இருந்து வருகிறது. அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், திருச்சியில் மருத்துவக் கல்லூரி ஏற்படச் செய்தால், எல்லாக் காலத்திற்கும் அது அவருக்குச் சிறப்பாக அமையும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிப்பட்ட கவனம் செலுத்தி, திருச்சியில் மருத்துவக் கல்லூரி அமைய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆங்கிலேயர் காலம் தொட்டு யுனானி கல்லூரி ஒன்று தமிழகத்தில் செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால் 1960 ஆம் ஆண்டில் அந்தக் கல்லூரி நிறுத்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பேசும்போது ஒரு தகவலை இங்கே தந்தார்கள். எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் பெண்களுக்காக ஒரு யுனானி வகுப்பு நடத்தப்படுவதாகவும், அதைப்போலவே நியூ காலேஜில் சில யுனானி வகுப்புகள் நடத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்கள். அதை வரவேற்கிறேன். என்றாலும் அரசு சார்பில் தமிழகத்தில் ஒரு யுனானி கல்லூரி துவக்கப்பட வேண்டும். அதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்வாழ்வுத் துறையில் மிகச் சிறப்பான பணிகள் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தில் இங்கே பலவகையான கருத்துக்களை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக அரசு அறிக்கைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு தமிழில் மொழிபெயர்க்கப்படுகிற காரணத்தால், அவைகளைப் படித்துப் புரிந்து கொள்வது என்பது சில நேரங்களில் சிரமமாக இருக்கிறது. அதிலும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றக்கூடிய வல்லமை பெற்றவர்கள். தமிழ் இலக்கியங்களில் மிக நல்ல ஈடுபாடு உடையவர்கள். எனவே அதன் காரணமாக அவருடைய துறையினைப் பொறுத்தவரையில், அறிக்கைகள் தமிழில் எழுதப்பட்டு, பிறகு அவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகிற முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால் " Health is investment in people " என்று "உடல் நலமே மக்களின் முதலீடாகும்" என்று போட்டிருக்கிறார்கள். "உடல் நலமே மக்களின் முதலீடாகும்" என்று போட்டிருக்கிறார்கள். இந்த மொழிபெயர்ப்பை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இது தவறாகத் தெரியவில்லை. கருத்தில்கூட தவறு இல்லை. ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் இதைச் செய்த காரணத்தால் "மக்கள்மீது போடப்படும் முதலீடாக உடல் நலம் இருக்கிறது" என்ற வகையில் இந்தக் கருத்து அமைகிறது. மக்கள் முதலீடு மக்களே போடுகிற முதலீடு போல் இது தோன்றுகிறது. அப்படித் தோன்றினால், அந்தக் கருத்தில் தவறு இல்லை. ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கு ஏற்ப தமிழில் அது வர மறுக்கிறது. இப்படி உள்ளே படிக்கும்போது, பல்வேறு இடங்களில் கருத்து வேறுபாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் இதற்கும் நல்வாழ்வுத் துறையின் வளர்ச்சிக்கும் அதிகமான சம்பந்தமில்லை. நல்வாழ்வுத் துறை வளர்ச்சி என்பது மிக நீண்ட காலமாக நமது அரசு செய்து வருகிற காரியமாகும். அதாவும் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பல பிரச்சினைகளை நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள்.

[திரு. க. அறிவழகன்] [1979 ஏப்ரல் 17

மருத்துவக் கல்லூரியில் இருக்கிற பேராசிரியர்கள் 58 வயது வரையில் பணியாற்றலாம் என்ற வாய்ப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஆசிரியர்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6.40)

சித்த வைத்தியத்திற்காக மிகக் குறைவான தொகை செலவிடப்படுகிற சூழ்நிலை சென்ற ஆண்டு வரையில் இருந்ததை மாற்றி இந்த ஆண்டு 95 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிற அளவுக்கு நிதி ஒதுக்கியிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தத் துறையில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் துணைச் செவிலியர்கள்தான். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு பிறகு இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெற்றுவிட்டு துணைச் செவிலியர்களாக வருகிறார்கள். அவர்கள் இரவு பகலாகப் பணியாற்றுகிறார்கள். செவிலியர்களைப் போலவே துணைச் செவிலியர்களும் பணியாற்றுகிறார்கள். துணைச் செவிலியர்கள் மற்றவர்களுடைய துன்பங்களையும் தாங்களே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஒரு காலத்தில் துணைச் செவிலியர்களின் ஊதிய விகிதம் அந்தத் துறையில் உள்ள பல்வேறு பணியாளர்களின் ஊதிய விகிதத்திற்குச் சரிசமமாக இருந்தது. இன்றைய தினம் அவர்கள் ஆற்றக்கூடிய பணிக்கேற்ப அவர்களுக்கு ஊதியம் தரப்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

முதல் சம்பளக் குழு வந்தபோது, துணைச் செவிலியர்களுக்கு 80 ரூபாயில் ஆரம்பித்து 120 ரூபாய் வரை ஊதிய விகிதத்தைப் பெற்று வந்தார்கள். அந்தத் துறையில் உள்ள மருந்து கலப்பவர்களும், இருட்டறை உதவியாளர்களும் அவர்களுக்கு இணையாகப் பெற்று வந்தார்கள். செவிலியர்கள் கூட அவர்களைவிட ஏறக்குறைய அதிகமாகப் பெறவில்லை. இப்போது துணைச் செவிலியர்கள் ஊதிய விகிதம் ரூபாய் 240-ல் ஆரம்பித்து ஆண்டு ஊதிய உயர்வு 5 ரூபாய் என்ற வகையில் 250 ரூபாய் வரையிலும், அதற்குப் பிறகு ஆண்டு ஊதிய உயர்வு 10 ரூபாய் என்ற அளவில் ரூபாய் 300 வரையிலும் பெறுகிறார்கள். அதே நேரத்தில் செவிலியர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு 15 ரூபாய் என்றும், 25 ரூபாய் என்றும் அமைந்திருக்கிறது. செவிலியர்களுடைய சம்பள விகிதம் மிகவும் உயர்ந்திருக்கிறது. துணைச் செவிலியர்களுக்கு இணையாக இருந்த பல பேருடைய சம்பள விகிதங்கள் மிக உயர்ந்திருக்கின்றன. ஆகவே செவிலியர்களுக்குக் கொடுக்கப்படுகிற முக்கியத்துவம் துணைச் செவிலியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் பெரும்பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 17] [திரு. க. அறிவழகன்]

அமெரிக்க நாட்டினுடைய 'பப்ளிக் ஹெல்த் ஹிஸ்டரி' பற்றி ஒரு செய்தியை அந்த நாட்டின் வரலாற்றுப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்கள். "The history of the public health of United States is written in the cemeteries of United States" அதாவது அந்த நாட்டினுடைய சுகாதாரத்தைப் பற்றி அந்த நாட்டினுடைய கல்லறையில் எழுதப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நாட்டில் பல்வேறு நோய்களுக்கு இலக்காகி பல இலட்சக்கணக்கானவர்கள் இறந்து போன பிறகு, அந்த நாட்டில் ஏற்பட்ட பெரும்பான்மையான நோய்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பல்வேறு நோய்களை ஒழித்திருக்கிறார்கள். ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரையில், நோய் வந்த பிறகு, அதைப் போக்குவதற்கு மருத்துவத் துறை முயற்சிகளை எடுப்பதைப் போலவே நோய் வராமல் தடுப்பதற்காக பல்வேறு இடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதற்கான பெரு முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னைத் துறைமுகத்திலே ஏற்றப்படுகிற இரும்பிலிருந்து வெளிவரும் இரும்புத் தூள் காரணமாக வடசென்னையில் ள்ள பெரும்பாலான மக்களின் உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. வடசென்னை நகரத்திற்கு அப்பால் இருக்கிற வடக்குப் பகுதியில் இருக்கிற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகிற பல்வேறு தூய்மை கெட்ட காற்றின் காரணமாக அங்கேயுள்ள மக்களின் நலமும் கெடுகிறது. சென்னையிலுள்ள கூவம் நதியைச் சுத்தப்படுத்த பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்றாலும், ஊருக்கு மத்தியிலே ஒரு சாக்கடை இருப்பதை கவனிப்பாரில்லை என்றுதான் வெளிநாட்டவர்கள் சொல்லுகிறார்கள். மேலும் கூவம் நதிக் கரையிலே இந்த அரசாங்கமும், இதற்கு முன்னால் இருந்த அரசாங்கமும் கண்காட்சிகளை நடத்தியிருக்கின்றன. இதனால் எவ்வளவு கேடுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மைலாப்பூர் பகுதியில் பக்கிங்காம் கால்வாய்க்குப் பக்கத்திலே இருக்கிற பி.எஸ். ஹைஸ்கூலுக்கு, ஒரு விழாவை முன்னிட்டுச் சென்றிருந்தேன். அப்பள்ளியில் உள்ள நான்கு ஆசிரியர்கள் இருதய நோயால் பாதிக்கப்பட்டு பள்ளிக்கே வர முடியாமல் இருக்கிறார்கள். பக்கிங்காம் கால்வாயிலிருந்து ஏற்படுகிற தூய்மை கெட்ட காற்றின் காரணமாக அங்குள்ள ஒரு பள்ளியிலேயே நான்கு ஆசிரியர்கள் இருதய நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றால், கூவம் நதி சென்னை நகரத்திலே எவ்வளவு பேரை நோய்க்கு

ஆளாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் உலக மனித சமுதாயத்திற்கு மக்கள் நல்வாழ்வுத் துறையின் பணிதான் மிகவும் முக்கியமாக இருக்கிறது. மனித சமுதாயத்தில் தீமைகள் வரக்கூடாது என்பதற்காக மேலை நாடுகளில் என்னென்ன முயற்சிகளை எடுக்கிறார்களோ அந்த முயற்சிகளையெல்லாம் இப்பொழுதே நாமும் விரைந்து செய்தால்தான், எதிர்காலத்தவர்களை பல நோய்களில் இருந்து காப்பாற்ற முடியும். இதற்காக இந்தத் துறையிலுள்ள நெறியாளர்கள் மிக விரைந்து பணியாற்ற வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஓடுகின்ற லாரிகளிலிருந்தும், பேருந்துகளிலிருந்தும் வெளிவருகின்ற புகையின் காரணமாக, சிகரெட்டையே பிடித்தறியாத பெண்களுக்குக் கூட நீண்ட நாட்களுக்கு சிகரெட்டைப் பிடித்தவர்களுக்கு வரக்கூடிய நோய்கள் வருகின்றன. இந்தப் புகையின் காரணமாக பள்ளிக்கூட சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம் கூட மிகவும் பாதிக்கப்படுகின்றது. இதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தொண்ணூற்று ஐந்து இலட்சம் ரூபாய் சித்த வைத்தியத்திற்காக ஒதுக்கியிருப்பதற்காக முதலிலேயே நான் பாராட்டினேன். இந்தத் தொகையை எப்படியெல்லாம் செலவிடப் போகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மேலும் சித்த வைத்தியத்தைப் பற்றி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளி வரவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட புத்தகங்களிலெல்லாம் குறிப்பிடப்படுகிற மருந்துகள் எவ்வளவு பயனுடையன என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு பல்வேறு மொழிகளில் அதை மொழிபெயர்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வருகிற மருத்துவ வல்லுநர்கள் இந்த மருந்துகளைப்பற்றி ஆராய்ந்து அதிலே டாக்டரேட் பெறத்தக்க அளவிற்கு நாம் பெரிய ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கித் தர வேண்டும். பல கோடி ரூபாயைச் செலவழித்து சித்த வைத்திய வளர்ச்சியை மேற்கொண்டால், அதனால் உலக மனித சமுதாயத்திற்குப் பெரிய சேவையைச் செய்தவர்களாக நாம் ஆவோம். திருக்குறளின் சிறப்பைப் பரப்புவதைவிட, தொல்காப்பியத்தின் பெருமையைச் சொல்லுவதைவிட, சித்த வைத்தியத்தின் மூலமாக உலக மக்களுடைய உள்ளத்தில் இந்த நாட்டின் சிறப்பை, இந்த நாட்டின் பண்பாட்டை நிச்சயமாக வென்ற முடியும் என்பதால், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : விடவா ? போலவா ?

திரு. க. அறிவழகன் : விடவும், போலவும். இதைச் செய்வதன் மூலமாக தமிழகத்தினுடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்று அழைக்கப்படுகிற நிலை மாறி, உலக மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வுத் துறை அமைச்சராக அவர் விளங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆகவே தமிழகத்தைப்பற்றி உலக அரங்கில் பெருமையோடு எண்ணத்தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய நிதியமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும் இந்தத் துறைக்கு மேலும் கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்குமாறு நிச்சயமாகக் கட்டாயப்படுத்த வேண்டும். அதற்காக அமைச்சர் அவர்கள் நடத்துகிற அறப்போரில் நானும் நிச்சயமாகக் கலந்து கொள்ளுவேன் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொதுவாக கிராமப்புறத்திலே உள்ள மக்கள் நல்ல மருத்துவ வசதிகளைப் பெற்று அவர்கள் நோயற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ வேண்டுமென்ற உயர்ந்த கருத்துக்களோடு பல திட்டங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வகுத்திருக்கிறார்கள் என்று இந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கருத்தின் அடிப்படையிலும், நகர மக்களானாலும், கிராமப்புற மக்களானாலும் எல்லோரும் நல்ல முறையிலே தேக ஆரோக்கியத்தோடு வாழ வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலும் இந்தக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. தொன்றுதொட்டு ஆண்டாண்டுக் காலமாக அறிவியல் வல்லுநர்கள் பல ஆராய்ச்சிகளைச் செய்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6.50.)

இங்கேயும் அப்படிச் செய்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்து சாவாது என்றுமே உயிர் வாழ வேண்டுமென்று ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். உலகத்திலே மருத்துவத் துறையிலே உள்ளவர்கள் இதையே குறிக்கோளாக வைத்து ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மனிதன் இறக்கவே கூடாது என்று நினைக்கிறார்கள். அவன் என்றுமே சாவாது வாழ வேண்டும், இளமையுடன் இருக்க வேண்டும், முதுமையடையக் கூடாது,

என்றுமே வலிமையுடன் இருக்க வேண்டும், மனிதன் எப்போது பார்த்தாலும் இளமை உணர்வோடு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் பத்திரிகைகளிலேகூட பார்த்திருக்கிறோம். சில மேல் நாடுகளிலே அத்தகைய ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். முதுமை அடையாமல் என்றும் இளமையோடு இருக்க வேண்டும் என்பதற்காக மருந்துகளையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர்கள் சொன்னது போல, ஆராய்ச்சிகளின் அடிப்படையில், மருந்துகள் கண்டறிந்து மனிதன் இளமையாக இருக்கக்கூடிய நிலைமைகளைக்கூட உருவாக்கலாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அன்றிலிருந்து இன்றுவரை இந்தக் குறிக்கோள் இருந்துகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், மனிதன் தொடர்ந்து உயிரோடு வாழ வேண்டும் என்பதுதான். உயிரோடு வாழ முடியுமா முடியாதா என்பது வேறு விஷயம்.

மேல்நாடுகளிலே இருக்கின்ற மக்களின் பழக்க வழக்கங்கள் போல் நம் நாட்டில் இல்லை. குறைந்தது ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது என்று மேல் நாட்டில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். இங்குள்ளவர்களுக்கு வசதி இருந்தாலும் கூட, அப்படி மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொள்வது இல்லை. மேல்நாடுகளில் இருப்பவர்கள், சாதாரணமாக மோட்டார், பஸ், ஆகாய விமானம் போன்றவைகளை, ஆறு மாத காலத்தில் ஒரு நாளைக் குறிப்பிட்டு வைத்து, எடுத்துச் சென்று அதன் பாகங்களைப் புதுப்பித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். அதுபோலவே அவர்கள் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்துகொள்கிறார்கள். நம் நாட்டில் உள்ளவர்கள் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைமை வரும்போதுதான் அப்படிச் செய்து கொள்கிறோம். அந்தப் பழக்கம்தான் நம் நாட்டு மக்களிடையே உள்ளது. எவ்வளவுதான் பணம், வசதி படைத்தவர்களாக இருந்தாலும், நம்மிடையே அந்தப் பழக்கம்தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள் இங்கு பொல்யூஷன் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். வாட்டர் பொல்யூஷன், ஏர் பொல்யூஷன், புட் பொல்யூஷன் இருக்கிறது என்று சொன்னார்கள். இதன் காரணமாகவும் மனிதனுடைய உடல்நலக் குறைவு அதிகமாகிக்கொண்டிருக்கிறது. பொதுவாகச் சொல்லுவார்கள். ஒருவன் 35 நாட்கள் ஆகாரம் இல்லாமல் உயிரோடு இருக்க முடியும், ஒரு வார காலம் தண்ணீர்

குடிக்காமல் உயிர் வாழ முடியும் என்று சொல்வார்கள். ஆனால், காற்று உட்கொள்ளாமல் சில மணித்துளிகள் கூட உயிரோடு வாழ முடியாது என்பதை நாம் அறிவோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியது போல, ஆகாய மண்டலமானது எந்த அளவுக்கு நம் நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இந்த விஷவாயுக்களால் நம் மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் பார்க்கிறோம். இந்த விஷவாயுக்கள் கலந்த காற்றை நாம் உட்கொண்டால், நம் நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆசிரியப் பெருமக்கள் கூட இதன் காரணமாக இருதய நோயால் அவதிப்பட்டதாக அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இதையெல்லாம் போக்க ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே ஏராளமான தொழிற்சாலைகளிலிருந்தும் ஏராளமான போக்குவரத்து வாகனங்களிலிருந்தும் வரும் கழிவுப் பொருட்கள்தான் இதற்குக் காரணம் என்று சொன்னார்கள். நகர்ப்புறப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. அவைகளிலிருந்து ஏராளமான கழிவுப் பொருள்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கழிவுப் பொருள்கள், புகைகள் காற்றில் கலந்துவிடுகின்றன. உணவுப் பொருள்களில் கலந்து விடுகின்றன. அந்த அளவில் மக்கள் உட்கொள்ளும் உணவு அல்லது உட்கொள்ளும் காற்று அவர்களைப் பாதிக்கின்றது. அந்தமாதிரி மக்கள் உட்கொள்ளும் காற்று அவர்களைப் பாதிக்காதபடி நல்ல பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எவ்வளவுதான் நாம் நிதி ஒதுக்கீடு செய்து, மக்களுக்கு நோய் வராத அளவுக்குத் திட்டங்களைச் செயல்படுத்தினாலும்கூட, இன்று மக்கள் தொகையும் ஒரு புறம் பெருகிக் கொண்டிருக்கின்றபோது, எதிர்பார்க்கின்ற அளவுக்கு திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உள்ள அளவிலே மக்கள் தொகை பெருகிக்கொண்டிருந்தால், எந்த அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. மாநிலத்திலுள்ள மக்கள் தொகை ஒரு கட்டுப்பாடான அளவுக்கு இருந்தால்தான் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும். இன்றைக்கு 4½ கோடி மக்கள் இருக்கின்றார்கள். 2,000-ம் ஆண்டிலே இந்த ஜனத்தொகையே 9 கோடியாக ஆகிவிடும் என்று சொல்கின்றார்கள். இந்த நிலைமையில் எப்படி கிராமப்புற மக்களுக்கு சரியானபடி நாம் சிகிச்சைகள், வைத்திய வசதிகள் செய்துதர முடியும்? சாதாரணமாக நம் நாட்டிலே ஒரு ஆண்டிலே 12 மில்லியன் மக்களை உற்பத்திசெய்து கொண்டிருக்கின்றார்கள். இது ஆஸ்திரேலியா கண்டத்திலே இருக்கின்ற

ஜனத்தொகைக்குச் சமமாகும். ஆகவே இந்தக் கொள்கைக் குறிப்பிலேகூட மக்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே ஒரு திட்டத்தை வகுத்து மக்கள் எண்ணிக்கையைக் குறைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவுதான் மருத்துவ மனைகள் இருந்தாலும், சிகிச்சை செய்யப்பட்டுக்கொண்டிருந்தாலும், அங்கே இருக்கின்ற குறைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சிகிச்சைப் பணிக்கு உதவியாக மருத்துவ மனைகள் இருக்கின்றன. தனியார் மருத்துவ மனைகளும், வாலண்டரி அசோசியேஷனைச் சேர்ந்தவர்களும் தாமாகவே சிகிச்சை செய்கிறார்கள். அவர்களையும் நாம் அதிகப்படியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அதிக ஊக்கம் கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு குழந்தைகளுக்கு மேற்படாமல் இருக்க வேண்டுமென்று நாம் திட்டம் வகுத்திருக்கிறோம். அப்படிச் சொல்லும்போது, அரசு இன்னொன்றையும் சொல்லலாம். இனி இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு நிச்சயமாக இந்த அரசு வேலை வாய்ப்பு கொடுக்கும் என்று அவர்களுக்குச் சலுகையாக ஒரு உத்தரவு போட வேண்டும். எந்தெந்தக் குடும்பத்திலே இரண்டு குழந்தைகள் மட்டும் இருக்கின்றனவோ அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்று சொல்ல வேண்டும். இப்படி ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வரலாம். மிக முக்கியமாக கிராமப்புறங்களில் இப்படி ஒரு திட்டம் கொண்டு வரலாம். அங்குள்ள மக்களை இப்படி ஊக்குவிக்கலாம். அவர்கள் ஏராளமான குழந்தைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். அது ஆண்டவன் செயல், இறைவனுடைய செயல் என்று சொல்லி ஆண்டவன் மேல் பழி போட்டு விடுகின்றார்கள். அவர்கள் ஆண்டவன் பேரில் பற்று உள்ளவர்கள் என்று நினைக்கிறோம். சிலர் கிராமப்புறங்களில் இன்று இதை ஒரு பாவமாகக்கூட கருதுகிறார்கள். அவர்களுக்கும் இந்தத் திட்டத்தை நன்கு விளக்க வேண்டும். முக்கியமாக குடும்ப நல்வாழ்வுத் திட்டத்தை நாம் அங்கே அமலாக்க வேண்டும்.

புலவர் புலமைப்பித்தன் : ஆண்டவனிடத்தில் முறையிட்டு, கொஞ்சம் குறைக்கச் சொல்லலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : நாம்தான் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆண்டவனே எல்லாவற்றையும் செய்ய மாட்டார்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்று பேச வேண்டும். உட்கார்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது முறையானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : அடுத்து கண் பார்வை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாம் உலகப் புள்ளி விவரப்படி பார்த்தால், உலகத்திலேயே கண் தெரியாதவர்கள் என்று கணக்கெடுத்தால், அவர்களில் ஐந்தில் ஒரு பங்கு நம் நாட்டிலே இருப்பதாகக் கூறுகிறார்கள். குறிப்பாக மதுரை மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால், ஆயிரம் பேர்களுக்கு 48 பேர்கள் கண் பார்வையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. நாகர்கோயிலை எடுத்துக் கொண்டால், 1,000-க்கு 11 குழந்தைகளுக்குக் கண் பார்வை இல்லாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள், கிராமப்புறங்களில் 14 குழந்தைகளுக்குக் கண் பார்வை இல்லாமல் இருக்கின்றதாகச் சொல்கிறார்கள். இளைஞர்கள் ஆவதற்கு முன்னாலே கண்பார்வை இழப்பவர்கள் கிட்டத்தட்ட 30 சதம் பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குச் சத்துணவு கிடைக்காததனாலே, இந்தக் குறை ஏற்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இவர்களில் 90 சதம் பேர்களுக்கு நல்ல சத்துணவு சரியான நேரத்திலே கொடுத்து சிகிச்சை செய்தால், இவர்களுக்கெல்லாம் கண் பார்வை கிடைக்கும். கிராமப்புற மக்களுக்கு இந்தமாதிரி சத்துணவு கொடுத்து தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டும். இதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தக் கருத்தை அவர் கவனத்திலே கொண்டு கண் பார்வை இல்லாதவர்களுக்குக் கண் பார்வை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் மருத்துவ மனையிலே செய்யப்படுகின்றன. ஆனால் உள்ளாட்சித் துறையிலே, நகராட்சித் துறையிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகள் கிடைக்கவில்லை. தனியார் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் இந்த என்.ஜி.ஜி.ஓ.-க்களுக்கு இருப்பது போன்ற வசதிகள் இல்லை. பொதுவாகவே மருத்துவத்திற்கு வெளியாரோடு சேர்ந்து கொண்டுதான் இவர்களும் போகிறார்கள். அரசு மருத்துவ மனைகளில் மருத்துவ வசதி பெறுவதற்கு என்.ஜி.ஜி.ஓ.-க்கள் எல்லாம் சலுகை பெற்றிருக்கிறார்கள். ஆனால்

உள்ளாட்சித் துறையில் உள்ள ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகை இல்லை. எனக்கு திண்டுக்கல் மருத்துவமனை பற்றித் தெரியும். அங்குள்ள தனியார் பள்ளி ஆசிரியர்கள், நகரவை ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் சிகிச்சை கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்க ஆசிரியர்கள், என்.ஜி.ஜி.ஓ-க்களுக்குக் கொடுப்பதுபோல, இவர்களுக்கும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையினுடைய நடவடிக்கைகள் 7 மணி வரைக்கும்தான் நடக்க வேண்டும். இன்னும் பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விரைவாக முடித்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : துணை நிதிநிலை அறிக்கையின் மீது நான் பேசும்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். தமிழகத்திலே அநேக மருத்துவ மனைகள் இருக்கின்றன. அரசு சார்பில் பல நடந்து வருகின்றன. ஆனால் சிறு நீரகம் மாற்றும் சிகிச்சைக்கான மருத்துவ வசதி வேலூரில் உள்ள கிருத்துவ மருத்துவ மனை ஒன்றில் தான் இருக்கிறது. அதற்கான வசதி அங்குதான் இருக்கின்றது. அங்குதான் அந்த சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. சில சமயங்களில் ஆசிரிய நண்பர்கள் இந்த சிகிச்சைக்கு வேண்டிய செலவு, கட்டணத்தைக் குறைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று அரசிடம் கேட்டுப்பாருங்கள் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து ஏதாவது தரட்டும் என்று சொன்னார்கள். அவர்கள் நிதி அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுகிறார்கள். கல்வி அமைச்சர் அவர்களை அணுகலாம் என்ற எண்ணத்தில் அந்த நேரத்தில் சுகாதார அமைச்சரை நான் அணுகவில்லை. காரணம் என்னவென்றால், இதற்கு கிட்டத்தட்ட ரூபாய் 45 ஆயிரம் தொகை தேவைப்படுகிறது. இந்த மாற்று சிகிச்சை செய்து கொள்வதற்கு இந்தத் தொகை தேவைப்படுகிறது. இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு சாதாரண மக்கள் நிலை இல்லை. அரசாங்க மருத்துவ மனைகளிலே இந்த சிகிச்சைக்கு வசதிகள் இல்லை. நிதி அமைச்சர் அவர்கள், "இந்தக் கொள்கைக் குறிப்பு வரும்போது, நீங்கள் சுகாதார அமைச்சர் அவர்களை அணுகி, அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து, அவர்களை வற்புறுத்திப் பாருங்கள். அவர் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, மாநிலத்தில் உள்ள மருத்துவ மனையில் மாற்று சிகிச்சைக்கு வழி செய்ய உறுதி எடுத்தால்,

அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கிட நான் செய்ய முயற்சிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நானும் நம்முடைய மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பின் மீது விளக்கம் கொடுக்கும்போது, இதற்கு ஒரு வாய்ப்பு உண்டாக்குவதற்குத் தகுந்த நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட மருத்துவ வசதி செய்வதாக இருந்தால், மதுரையிலே அந்த வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது எல்லா சிகிச்சையும் சென்னையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் ஓரளவுப் பகுதி மக்களுக்குத்தான் அது பயன்படும். அப்படி மதுரையிலே அமைப்பதாக இல்லாவிட்டால், திருச்சியிலேயாவது அமைக்கலாம் என்ற என் கருத்தை வலியுறுத்திக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-00)

முடிவாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், பல துறைகளிலே, பல வசதிகளை, கல்விக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பல்கலைக் கழகத்திலே இது வரையில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்படவில்லை. எனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், அந்தப் பல்கலைக் கழகப் பொறுப்பாளருக்குக் கடிதம் எழுதி வற்புறுத்தி, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தால், அரசின் ஒத்துழைப்பு கிடைக்குமென்று கூறினால், நிச்சயமாக அங்கு மருத்துவக் கல்லூரி ஏற்பட வாய்ப்பு இருக்குமென்று கூறி, தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்** : துணைத் தலைவரவர்களே, மருத்துவத் துறையிலே நம்முடைய நாடு முன்பு இருந்ததைவிட மிகச் சிறந்த முன்னேற்றம் அடைந்திருக்கிறதென்றாலும், மேலும் முன்னேற்றமடையத்தக்க வாய்ப்புக்களைத் தேட முயல வேண்டுமென்ற கருத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'மஸ்குலர் டிஸ்டிராபீ' என்று ஒரு வியாதி உண்டு. அதிலே எனக்குச் சொந்த அனுபவம் உண்டு. என்னுடைய மூன்று ஆண் குழந்தைகள், அந்த வியாதியால் மடிந்திருக்கிறார்கள். அந்த வியாதிக்கு நம்முடைய நாட்டிலே எந்தவிதமான சிகிச்சையும் இல்லை. நானும் எல்லா மருத்துவ மனைகளுக்கும் சென்று பார்த்து விட்டேன். அந்த வியாதிக்கு சிகிச்சை இல்லையென்றும், ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டுமென்றும் டாக்டர்கள் சொல்லுகிறார்கள். ஆக,

மருந்து கண்டுபிடிக்காத வியாதிகள் நிறைய இருக்கின்றன. ஏன் அவைகளுக்கு மருந்துகளைக் கண்டுபிடிக்காமல் இருக்கிறோம்? நம் நாட்டிலே உள்ள மருத்துவர்கள் அந்த அளவிற்குத் திறமை வாய்ந்தவர்கள் இல்லையா? திறமை வாய்ந்தவர்கள்தான். இருந்தாலும், மேலவைத் துணைத் தலைவரவர்கள் சுட்டிக் காட்டியது போல, அறிஞர் அண்ணா புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தில், தகுந்த சாதனங்களில்லை என்று சொல்லி அங்கு பணியாற்றிய ஆராய்ச்சியாளர் ஒருவர் வெளியேறிவிட்டார். எனவே ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கம் அளித்தால்தான், அவர்களால் ஆராய்ச்சி செய்ய முடியும். எது எது தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ, அதைத் தராத நிலை இருக்கிறதென்று சுட்டிக்காட்டி, பல்வேறு வகையிலே முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஆசிரியர்களிலேதான், 44,000 ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறதென்று நினைத்தோம். எம்.பி.பி.எஸ். படித்தவர்களும் பலர் வேலையில்லாமல் இருக்கும் நிலையைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினரவர்கள் அடுத்த ஒலி பெருக்கியில் பேசலாம். அவருடைய ஒலி பெருக்கி சரியாக வேலை செய்யவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : டாக்டர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேலை வாய்ப்பில்லை என்பதால், வெளி நாடுகளுக்குச் சென்று பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளியுங்கள் என்று கேட்கிறார்கள். அரசாங்கம் அதிகமான அளவிற்குச் செலவு செய்து, எம்.பி.பி.எஸ். படிப்பைத் தருகிறது. எனவே அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு தயங்குகிறது. அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைத் தர விரும்புகிறேன். நகர்ப்புறங்களிலிருந்து நாட்டுப்புறங்களுக்குச் சென்று பணியாற்றும் டாக்டர்களுக்கு, நகரத்திலே கிடைக்கும் ஊதியத்தைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கிராம ஈட்டுப்படி கொடுக்க வேண்டுமென்றும் வேறு பல வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிகளிலே உள்ள மாணவர்களையெல்லாம் சுகாதாரப் பிரிவினர் சோதனை செய்து, அவர்களுடைய உடல் நலத்தைப் பேணும் பணியைச் செய்வது வரவேற்கத்தக்கதாகும். 6 முதல் 11 வயது வரையில் உள்ளவர்களுக்குத்தான் இந்தச் சோதனை விரிவாகச் செய்யப்படுகிறதே தவிர, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இந்தத் திட்டம் முழு அளவில் பரவலாக்கப்படவில்லை. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விரிவான மருத்துவச் சோதனையைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'புதிய ஜெர்மனி' என்ற ஏட்டிலே ஒரு தகவலைப் பார்த்தேன். அந்த நாட்டிலே ஒரு தாய் கர்ப்பமுறுகிறாள் என்றால், அந்தக் காலத்திலிருந்து, அவள் மகவை ஈன்று, அந்த மகவிற்கு 16 வயதாகும்வரை, என்னென்ன ஊசி எந்தெந்த மாதம், எந்தெந்த ஆண்டு போட வேண்டும், எந்த மருந்தை எப்போது கொடுக்க வேண்டுமென்பதற்கு 'சார்ட்' போட்டுக் கொடுத்து, அதன்படி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்குப் பின்னாலே அப்படி செய்யவில்லை என்றால், தண்டனை அளிக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் செய்தியைப் பார்த்தேன். அந்த அளவிற்கு நம் நாட்டிலே செய்தால்தான், எதிர்கால சந்ததியினர் சிறப்பாக திடகாத்திரமாக இருப்பார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டத்தை கன்னியாகுமரி, மதுரை, தென்னாற்காடு, சேலம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்துவதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மருத்துவ மனைகளிலே சுகாதாரம் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் அமெரிக்காவில் ஈ, கொசு கிடையாதென்று சொன்னார்கள். அமெரிக்காவிலே அப்படி இருக்கட்டும், நம்முடைய நாட்டிலே பரவலாக எல்லா இடங்களிலும் அந்த நிலை உருவானாலும் இருக்கட்டும். ஆனால், மருத்துவ மனைகளிலே கூட சுகாதாரம் எப்படி இருக்கிறது? மருத்துவ மனைகளிலேயே சுகாதாரம் இல்லையென்றால், மற்ற இடங்களிலே எப்படி இருக்க முடியும்? நாகையிலே டி. பி. வார்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வார்டுக்குப் போக வேண்டுமென்றால், மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். அப்படிப்பட்ட நிலை அந்த மருத்துவ மனையிலே இருக்கிறது. சுற்றுப்புறம் மிக ஆபாசமாக இருக்கிறது. அந்த இடத்திலே நோய் 'கியூர்' ஆகாது, வளருமென்ற நிலைதான் இருக்கிறது. தஞ்சையிலே உள்ள இராஜா மிராசுதார் மருத்துவ மனை பற்றித் துணைத் தலைவரவர்கள் சொன்னார்கள். அங்கே படுக்கைகள் போதாது. வராந்தாவிலே எந்த நேரத்திலும் நோயாளிகள் படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். செல்வாக்கு படைத்தவர்களுக்குத்தான் படுக்கை கிடைக்குமென்ற நிலைமை இருக்கிறது. டாக்டர்களை வீட்டிற்குச் சென்று, தனியாகக் கவனித்தால்தான், அவர்கள் பேட்டிலே வந்து கவனிக்கும் நிலை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைமையைச் சீர் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தலைஞாயிறு என்பது என்னுடைய ஊர். அங்கே உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தில் போதிய வசதிகள் இல்லை. அங்கேயிருந்து அரசு மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டுமென்றால், வேதாரண்யம் 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ; திருத்துறைப்பூண்டி 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது ; நாகை 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த அளவிற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே அங்கேயுள்ள மருத்துவ மனையை, அரசு மருத்துவ மனையாக மாற்றி, படுக்கைகளை அதிகரித்து, மற்ற வசதிகளையெல்லாம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களிலே ஒரு நாளைக்கு ஒரு நோயாளிக்கு 20 காசுக்குக்கூட மருந்துகள் வழங்க முடியாத நிலை இருக்கிறதென்று அவர்கள் சொன்னார்கள். அதைத் திருப்பிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் போதாதென்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்டான்லி மருத்துவ மனையிலே துப்புரவு ஆய்வாளர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு—அரசுத் துறையிலே இருந்து வந்தவர்களுக்கு—75 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. அதாவது, நேரடியாக அரசுத் துறையிலேயிருந்து வந்தவர்களுக்கு 75 ரூபாய் உதவித் தொகை—ஸ்டைபென்ட்—அளிக்கப்படுகிறது. ஆனால், அதே பயிற்சிக்கு வந்துள்ள நகராட்சி, ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 15 பேர்களுக்கு, இதிலேகூட பாரபட்சம் காட்டப்படுகிறது. அவர்களுக்கு ஸ்டைபென்ட் வழங்குவதில்லை. எனவே, இந்தப் பாரபட்சத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கும்பகோணம் திரு. இருதய ஆண்டவர் தொழுநோய்க் கழக ஊழியர்கள், தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைப்பதற்காக ஒரு சங்கத்தை உருவாக்கி, அங்கே பணியாற்றும் களப்பணியாளர்கள் அதை நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய சீனியாரிட்டி புறக்கணிக்கப்படுவதாலும், அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையாதலாலும், அது குறித்து அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். சுகாதார அமைச்சரவர்களை 19—1—1979 அன்றும், [illegible]—1—1979 அன்றும் பேட்டி கண்டு, குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-10)

21—2—1979 ஆம் நாளில் சங்க நிர்வாகிகள், அதிகாரிகள் எல்லாம் இருந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்களுடைய சங்கத்தைக் கலைக்க வேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்தியிருக்கிறார்கள். ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்குள்ள உரிமை பறிக்கப்படுவது போல் அவர்களுடைய நடவடிக்கை அமைந்திருக்கிறது. சங்கத்தைக் கலைத்தால்தான் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று பயமுறுத்தி கையொப்பம் பெற்றிருக்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால், 1—5—1979 முதல் தொழுநோய்க் கட்டுப்பாடு திட்டப் பகுதியையே மூடிவிடப் போவதாகவும், அவர்கள் அனைவரையும் வேலை நீக்கம் செய்யப்போவதாகவும் பயமுறுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கூட கொண்டு வந்தேன். இது தலைவரவர்களுக்குக்கூட தெரியும். 2 பேர் மீதுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் காரணமாக வைத்து வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். மேலும் 49 பேரை வேலையிலிருந்து நீக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த 49 குடும்பங்களுக்கும் உரிய பாதுகாப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சி சுகாதார மேஸ்திரிகள் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு 130 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. பஞ்சாயத்தில் அவர்களை மாதிரி இருப்பவர்களுக்கு 140 ரூபாய் சம்பளம் 1971 ஆம் ஆண்டிலிருந்தே வழங்கப்படுகிறது. அவர்களுக்கும் 140 ரூபாய் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். நகராட்சியில் பணியாற்றுபவர்களுக்கும் பஞ்சாயத்தில் பணியாற்றுபவர்களுக்கும் இடையே இருக்கும் டிஸ்பாரிட்டியை மாற்ற வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1971 முதல் நகராட்சி சுகாதார மேஸ்திரிகளுக்கும், ரூபாய் 140 ஆக வழங்கி நிலுவைத் தொகை வழங்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகளின் வார்டுகளைச் சுற்றிப் பார்க்க 30 ஆண்டுக் காலமாக 2 ரூபாய்தான் அலவன்ஸ் தந்து கொண்டிருக்கிறார்கள். அதை 15 ரூபாயாக மாற்றியமைக்க வேண்டும். இந்த விஷயத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிவுள்ளத்துடன் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் சுகாதாரத் துறையிலே பணியாற்றினாலும், மருத்துவச் சலுகை மற்றும் ரியம்பர்ஸ்மென்ட் சலுகை போன்ற சலுகைகள் எதுவும் இவர்களுக்குக் கிடையாது. அதையும் அவர்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுகாதார மேஸ்திரியாக 5 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கெல்லாம் முழு ஊதியத்துடன் கூடிய பயிற்சி

யளித்து அதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருந்து கலவை மேஸ்திரிக்கு அலவன்ஸ் கிடையாது. அதையும் கவனிக்க வேண்டும். ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு குளிர் காலப் படியை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாய் சேய் நல விடுதிகளில் முன்பு இருந்து வந்த ஆயாக்களை எடுத்து விட்டார்கள். சம்பளம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருங்கள், விரைவில் அதற்கான உத்தரவு வந்து விடும் என்று சம்பந்தப்பட்டவர்கள் சொல்லி, அவர்கள் சம்பளம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

“காதலுக்கு வழி வைத்து
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்
இதிலென்னக் குற்றம் ?”

என்று பாரதிதாசன் பாடினார். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கோட்டா பள்ளித்துணை ஆய்வாளர்களுக்குக் கோட்டா! கல்வி விரிவாக்க அலுவலர்களுக்குக் கோட்டா! இப்படி கல்வித் துறையில் பணியாற்றக்கூடிய பல்வேறு பிரிவினருக்கு எல்லாம் இவ்வளவு என்று கோட்டா ஒதுக்கப்பட்டிருக்கிறது. சட்டம் இல்லாவிட்டாலும் கூட இவர்கள் ஆசிரியர்களிடத்தில் அதைச் செய்யுமாறு சொல்கிறார்கள். கல்வி போதிக்க வேண்டாம், பள்ளியிலேயே இருக்க வேண்டாம், ஆள் பிடித்து வந்தால் போதும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அது தெரியாதது அல்ல. மனச்சாட்சிப்படி அவர்கள் அதை மறுக்க மாட்டார்கள். இதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருவாரூர் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு ஆசிரியர் சரியாக ஆள் பிடிக்கவில்லையென்று சொல்லி சஸ்பென்ட் செய்யப்பட்டார். அந்த ஆசிரியருக்காக ஆசிரியர் மன்றத்தினர் ‘ரெப்ரசன்ட்’ பண்ணிய பிறகு, அதை ‘கேன்சல்’ செய்கிறேன் என்று சொன்னார்கள். அதன் பிறகு அவ்வாசிரியர் 5 கேஸ் போட்டார். எனினும் அவருடைய சஸ்பென்ஷன் கான்சல் செய்யப்படவில்லை. இதுதான் குடும்ப நலத் திட்டத்திலே ஆசிரியர்களைப் பயன்படுத்தவில்லை என்று அரசு சொல்லுகின்ற லட்சணமா? இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கோ, மற்றவர்களுக்கோ 300 ரூபாய் பெற்றால் கூட, மருத்துவச் சலுகைகள் உண்டு என்றும், ஆனால் பல்வேறு மருத்துவமனைகளில் அத்தகைய உத்தரவு தங்களுக்கு வரவில்லை என்று சொல்லி மருத்துவச் சலுகையைத் தர மறுக்கிறார்கள் என்றும், மருத்துவ மனைகளில் பணம் கலெக்ட் பண்ணுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அதை மாற்றியமைத்து அமைச்சரவர்கள் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1976 ஆம் ஆண்டுக்கு முன்னால் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆசிரியர்களுக்கு எந்தவிதச் சலுகையும் வழங்கப்படவில்லை. இதையும் நான் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நான் கூட இதைப்பற்றி ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். அமைச்சரவர்களும் ஆவன செய்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து அதற்குரிய வழிவகையைச் செய்ய வேண்டும். மருத்துவமும் மக்கள் நல்வாழ்வும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி இந்தத் துறை மேலும் சிறப்பாக இயங்க வேண்டுமென்று சொல்லி இத்துடன் அமைகிறேன்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Deputy Chairman, as the time is up, I will try to be as brief as possible.

MR. DEPUTY CHAIRMAN: Because the hon. Lady Member is always brief in her speech, I now called her to speak.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Sir, I am very much concerned about the new course that has been introduced in the Plus Two stage. We have introduced Nursing as a course in the Plus Two vocational stream. But we have no idea of the standard of coaching or training or on the question whether a Diploma or a Certificate would be given to these Multi-Purpose Health Workers who are being trained in the vocational stream in the Plus Two course. While going through the Report, I saw that nearly 3,454 Dais were trained and I was rather surprised that in a progressive society, we still depended on Dais. I would very much like the Hon. the Health Minister who is very progressive in his outlook to soon replace these Dais with the Multi-Purpose Health Workers who are being trained in this vocational stream in the Plus Two stage.

[Thirumatni Mandakini Krishnamurthi] [1979 ஏப்ரல் 17

I have also seen in the report that some amount is being spent on Multi-Purpose Health Workers. This expenditure and the expenditure on training Dais can be eliminated in the Health Department because the Education Department has taken up the training of Nurses in the Plus Two stage. We can have this Nursing course in the Plus Two stage changed into a Multi-Purpose Health Workers' training course and this might be included in the Sixth Plan because we are starting Mini Health Centres and because we have taken up this course as a job-oriented course. If the course is terminal, for those who are in dire need of employment, immediate employment opportunity should be provided. For those who want to go for higher studies, there are courses like B.Sc. (Nursing) and such other courses. For those who need employment, some kind of Diploma should be given and they should be absorbed because they are much better trained than the Dais whom we are at present having.

(பிற்பகல் 7-20.)

From the Policy Note, I find that in addition to the existing four centres for training Auxiliary Nurse-Widwives, five more centres are going to be opened. With that, we will be having nine Training Centres for Auxiliary Nurse-Midwives for all the 14 districts, with facilities for training 540 Auxiliary Nurses every year. But, I am sorry to say that none of these training centres is located either in Madras or at Kancheepuram. Government have now thought of opening the new training centres at Ramanathapuram, Nagapattinam, Cuddalore, Nagercoil and Erode which are almost very near to each other. If one of these centres could be located either at Kancheepuram or at Madras, the girls who have taken 'Nursing' as a subject in the Plus Two course would be benefited. In the Plus Two system, they are undergoing only the 'Nursing' course and those who want to practise midwifery can join the six months' midwifery course if training facilities are available for such girls in nearby places. If training centres for Auxiliary Nurse-Midwives are located in places near Madras, I

1979 ஏப்ரல் 17] [Thirumathi Mandakini Krishnamurthi]

think the girls who study 'Nursing' under the Plus Two system would get the opportunity of undergoing six months' training in midwifery. Therefore, it would not be advisable to have all these training centres concentrated in one area. I would be very much thankful if the location of these centres could be planned in a better way so as to provide equal opportunities to girls studying 'Nursing' under the Plus Two system in different parts of Tamil Nadu, to undergo the six months' midwifery course.

Sir, I find that nine urban areas have been declared as areas where Malaria is prevalent. For some time in the past, we had absolutely eradicated Malaria. But now we find that it is showing its ugly face again. Some time back, I read about a particular gadget which was very powerful and which had been tried in some malarial areas. I think we should launch a campaign and combat this disease so that we would be able to eradicate the prevalence of Malaria.

We hear that jaundice and also filaria are prevalent in Madras City. Especially, the Saidapet area is very famous for the prevalence of filarial disease. Now, when a patient with a contagious disease is admitted in the contagious diseases hospital, the Corporation authorities are informed and they immediately go to the area where the patient lives and take up spraying, etc. In the same manner, cases of jaundice and filaria should also be reported by the hospital authorities to the Corporation authorities so that necessary action could be taken. I feel that the Water and Sewage Board should also co-operate with the Corporation authoritiesin taking preventive steps because we find that there is a lot of contamination of drinking water resulting in the increase of jaundice cases.

With these words, I once again thank you for giving me this opportunity. I hope that something concrete will be done to provide more facilities for nurses' training in the development of which I am very much interested.

Thank you.

* திரு. அ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கடைசியாகப் பேசுகிறார்கள். எவ்வளவு விரைவாக முடிக்கிறார்களோ, அவ்வளவு விரைவாக அவையும் முடியும். ஆகவே, விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசும் போது, முக்கியமாக ஒரு விஷயத்தை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது முக்கியமான விஷயமாக இருப்பதால், எனக்குக் கொடுத்திருக்கும் நேரம் இந்த ஒரு விஷயத்திற்கேகூட போதாது என்று நான் நினைக்கிறேன். 'ட்ரக்ஸ் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன்' தற்போது 'டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் அண்ட் பிரிவென்டிங் மெடிசின்' அவர்கள் பொறுப்பிலே இருக்கிறது. அவர்கள் தான் ஸ்டேட் ட்ரக்ஸ் கண்ட்ரோலர். அங்கே 72 அதிகாரிகள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வேலையின் தன்மை காரணமாக டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசஸ் மற்றும் மெடிக்கல் சர்விஸ்லே உள்ள அதிகாரிகளுக்கும் அவர்களின் வேலைகளுக்கும், ட்ரக்ஸ் கண்ட்ரோலர் அட்மினிஸ்ட்ரேஷன்லே இருக்கக்கூடிய வேலைகளுக்கும் ஒரு முரண்பாடு இருக்கிறது. 'ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன்'லே உள்ளவர்கள் சாதாரணமாக மருந்துகள் உற்பத்தி செய்வதிலே என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன, எப்படியெப்படி அந்தத் தவறுகளைத் திருத்த வேண்டும் என்பதை ஆராய்ந்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்கிறார்கள். இவ்விதம் ஆலோசனை சொல்லவேண்டிய அந்த 'ட்ரக்ஸ் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனிலே' உள்ளவர்களை, டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் மற்றும் பிரிவென்டிவ் மெடிசினிலே வைத்திருப்பதால் 'ட்ரக்ஸ் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன்' என்பது நடைமுறையிலே பயனுடையதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஒரு பிரச்சினையைப்பற்றி ஆதாரத்தோடு பேசுவதற்காகத் தான் நான் இங்கே நிற்கிறேன். ட்ரக்ஸ் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனிலே மருந்துப் பொருட்களின் தரத்தைக் கண்காணிப்பது, லைசென்ஸ் வழங்குதல், ஆய்வு செய்தல், மருந்துகள் திருட்டுப் போவதைத் தடுப்பது, வழக்குகள் போடுவது, மருந்துகளை சோதனை செய்தல் இப்படி பலவிதமான வேலைகளை அவர்கள் செய்கிறார்கள். பலவிதமான ஊழல்கள் நடைபெறும்போது அவற்றைக் கட்டுப்படுத்த, தடுக்க, ஒரு இலாக்காவாக அது இருக்கிறது. அந்த இலாக்காவை டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் திடம் வைப்பதால், என்ன முரண்பாடு என்றால், டைரக்டரேட் ஆப்

பப்ளிக் ஹெல்த்லே இருப்பவர்கள் எம்.பி.பி.எஸ். படித்திருக்கிறார்கள். ஆனால் டிரக்ஸ கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷல்லே இருப்பவர்கள் மருந்துகளைத் தயாரிப்பதிலும், அவைகளைச் சோதனை செய்வதிலும் அனுபவம் பெற்றிருக்கிறார்கள். பிஃபார்ட் பட்டதாரிகள், மற்றும் ஸ்பெஷலிஸ்ட்கள் தான் அங்கே இருக்கிறார்கள். இப்படி மொத்தம் 72 பேர்கள் இருக்கிறார்கள். அங்கு இருக்கும் இந்த 72 பேர்களில் எத்தனை பேர்கள் பி.ஃபார்ம் கிராஜுவேட்ஸ், எத்தனை பேர் ஸ்பெஷலிஸ்ட்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த பி.ஃபார்ம் படித்தவர்களுக்கும், மெடிக்கல் எம்.பி.பி.எஸ். படித்தவர்களுக்கும் இருக்கும் இந்த முரண்பாடு அவர்களுக்கிடையில் தனிப்பட்ட முறையிலே இருக்கும் முரண்பாடு என்று கருதாமல் அவர்கள் இருவருக்கும் இருக்கும் வேலையின் தன்மையிலே இருக்கும் முரண்பாடு என்று கருதி, 'ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனுக்குத் தனியாக டைரக்டரேட் ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால், இப்போது இருக்கும் தகராறு தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல, இந்தத் துறையை நான்கு ஐந்து கமிட்டிகள் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்திருக்கின்றன, அந்த கமிட்டிகள் வரையறுத்துள்ள கருத்துதான் இது. 1954-லே மத்திய அரசு நியமித்த பாக்மபா கமிட்டி, 1966-லே மத்திய அரசு நியமித்த போர்க்கர் கமிட்டி, 1975-லே மத்திய அரசு நியமித்த ஹாத்தி கமிட்டி ட்ரக்ஸ் என்கொயரி கமிட்டி. இப்படியாக இந்த கமிட்டிகள் அனைத்தும் ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன் தனி டைரக்ட்ரேட்டாகத்தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றன. அப்படி இருந்தும் தமிழ்நாடு அரசு ஏன் அந்தக் கமிட்டிகளின் அறிக்கையை அமுல்படுத்தவில்லை? குறிப்பாகச் சொன்னால், தமிழ் நாட்டினுடைய சட்டசபை எஸ்டிமேட்ஸ் கமிட்டி 1972-ம் ஆண்டைய கமிட்டி ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன் தனியாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1972-ஆம் ஆண்டு தமிழ் நாடு எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்பது சரியல்ல. 1974-ஆம் ஆண்டு எஸ்டிமேட்ஸ் கமிட்டி.

திரு. ஆ. நல்லசிவன் : 1974-ஆம் ஆண்டு சட்டசபை எஸ்டிமேட்ஸ் கமிட்டி தனியாக இதற்கு ஒரு டைரக்டரேட் வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறது. போர்க்கர் கமிட்டி தன்னுடைய பரிந்துரையை அளித்தபோது, மேற்கு வங்கத்திலே ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனைத் தனியாக

வைத்திருக்கிறார்கள், அதுபோன்று தனியாக வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ட்ரக்ஸ் கன்ட்ரோலிலே 'ஸ்டேன்டர்ட் டெஸ்ட்' 'மேனுபாக்சரிங்' சம்பந்தமான பல விசேஷப் பிரச்சினைகள் இருக்கின்றன, அவற்றுக்கான விசேஷப் படிப்பும், பயிற்சியும் இல்லாதவர்களிடம் இந்தப் பிரிவை ஒப்படைக்கக்கூடாது என்று தெளிவாக 1966-லே அமைக்கப்பட்ட போர்க்கர் கமிட்டியும், 1974-லே நம்முடைய சட்டசபை எஸ்டிமேட்ஸ் கமிட்டியும் தெரிவித்து, இதற்கென்று தனியாக 'ரிக்வசிட் க்வாலிபிக்கேஷன்' உள்ளவர்களைக் கொண்ட செப்பரேட் டைரக்டரேட்டாகத்தான் இந்த ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன் இருக்க வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றன. 1975-லே அமைக்கப்பட்ட ஹாத்திக் கமிட்டி இன்னொரு கருத்தையும் தெரிவித்திருக்கிறது. மருந்துகளை வாங்கி விற்கிற அதிகாரிகளே மருந்து உற்பத்திக்கான லைசன்ஸ் வழங்கும் அதிகாரிகளாக இருக்கக்கூடாது. அவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கக் கூடாது. அப்படி கொடுக்கப்படுமேயானால் லஞ்சம் மலிந்துவிடும், ஊழல் மிகுந்து விடும் என்று ஹாத்திக் கமிட்டி தெளிவாகத் தெரிவித்திருக்கிறது. இவ்வளவும் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை, குஜராத், மகாராஷ்ட்டிரம், கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் ஒத்துக்கொண்டிருக்கின்றன. அமுல் நடத்தியும் இருக்கின்றன. நம்முடைய திராவிட நாட்டிலேயே மற்ற மூன்று மாநிலங்களும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த மாநிலங்களில் இந்த 'ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன்' தனியாகப் பிரிக்கப்பட்டு, தனி டைரக்டரின் கீழ் இருக்கிறது. தமிழ்நாடு மட்டும் ஏன் அப்படிச் செய்யவில்லை, ஏன் அதைச் செய்ய தமிழ்நாடு மறுக்கிறது? ஏன் செய்யவில்லை என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். எனக்குத் தெரிந்தவரையில், the medical people are not prepared to part with their power. யாருக்குத்தான் மனது இருக்கிறது? மெடிக்கல் சைடில் இருப்பவர்களுக்கு இதை விட்டுவிட மனது இல்லை. அப்படி, அதற்கென்று தனியாக ஒரு டைரக்டரேட் வேண்டுமென்று ஒரு ப்ரப்போசல் வந்தால், அப்போதைக்கப்போது இருக்கும் டைரக்டர் இருக்கிறாரே, அவர் அதற்கு குறுக்கே நிற்கிறார். ஏதோ இந்த இலாக்கா தங்களுக்காகவே இருக்கிறது என்ற எண்ணத்திலே அவர் இருக்கிறார். இந்த 'ட்ரக்ஸ் கன்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன்' அவர்களிடத்திலே இருக்கிறது, அவர்கள் அதை ஒரு ஸ்டெப் மதர்லி அட்டிட்யூட் என்ற அடிப்படையிலேதான் கவனிக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இரண்டு அசிஸ்டென்ட் ட்ரக்ஸ் கன்ட்ரோலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேரும் ஒரே ரூமில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு ப்யூன் வசதி கூட

கிடையாது. டெலிபோன் வசதி கிடையாது. இரண்டு பேருக்கும் ஒரு காமன் டேபிள்தான் இருக்கின்றது. வெளியில் பார்த்தால், பெரிய அசிஸ்டென்ட் ட்ரக்ஸ் கன்ட்ரோலர்கள் என்று இருக்கிறது. இரண்டு பேருக்கும் ஒரே ரூம், ஒரே மேஜை, ஸ்பேராக ஒரு ஸ்டூல் கூட கிடையாது. நான் கேட்கிறேன், இவ்வளவு உயர்ந்த அதிகாரிகளுக்கு ஏன் வசதிகள் தரப்படவில்லை? மெடிக்கல் சைடில் இருக்கின்ற அதிகாரிகள் குறித்து எப்படி இந்த மனப்பான்மை, இந்த ஆட்டிட்யூட் வருகிறது? ட்ரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் 25 பேர்கள் மெட்ராஸ் சிட்டியிலே இருக்கிறார்கள். சீப் ட்ரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள் 4 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு மொத்தமாக 10 டேபிள்களும், 14 நாற்காலிகளும் தான் இருக்கின்றன. அவர்கள் இருக்கின்ற அறையிலே ஒரு ஜன்னல்கூட கிடையாது.

(பிற்பகல் 7.30.)

25,000 சேல்ஸ் லைசென்ஸ் 750 மேனுபேக்சரிங் லைசென்ஸ் தமிழ் நாட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் அனைத்தையும் பார்த்துக் கொள்வதற்கு இரண்டே இரண்டு செக்ஷன்கள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு செக்ஷனுக்கு ஒரு சூப்பரின்டென்டென்ட், மூன்று அசிஸ்டென்ட்கள், இரண்டு ஜூனியர் அசிஸ்டென்ட்கள். இப்படி இரண்டு செக்ஷன்கள் தமிழ் நாடு முழுவதுமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற லைசென்ஸ்களை கண்காணிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இலாக்காவைப் பொறுத்தவரையில், ஆண்டுக்கு ஆண்டு வேலை கூடிக் கொண்டே போகிறது. 1964 முதல் அவர்கள் வெட்டரிநெரி டிரக்ஸ்ஸை மேற்பார்வையிட்டு வருகிறார்கள். 1964-ல் காஸ்மெட்டிக்சும் அவர்கள் பொறுப்பில் வந்தது. 1966-ல் ஆயுர்வேதிக், சித்தா மற்றும் யுனானி டிரக்சும் இவர்கள் பொறுப்பில் வந்தன. இப்படி வேலை கூடிக்கொண்டே போனாலும், அதற்குத் தகுந்தாற்போல் ஆட்கள் அதிகரிக்கப்படவில்லை.

இந்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எதையாவது டைப் செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்கு டைப்ரைட்டர்கள் கிடையாது. தவறு செய்கிற நிறுவனங்களின்மீது வழக்குப் போட வேண்டுமென்றால், அதற்கு டைப் செய்ய வேண்டும். இன்றையதினம் வழக்குப் போடுவதற்கு தேவைப்படுவனவற்றை இவர்கள் எங்கே போய் டைப் செய்கிறார்கள் என்றால், மருந்து தயாரிக்கும் கம்பெனிகளிலேயே செய்கிறார்கள். அவர்கள் தயவில்தான் டைப் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வாறு டைப் செய்ய முடியாத நிலையில் பல சார்ஜ்-ஷீட்டுகளைக் கையாலேயே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு டைப் செய்யக்கூட அவர்களுக்கு வசதி செய்து

தரப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற உதவியாளர்களும், பியூன்களும் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. ஒரு டிரக் இன்ஸ்பெக்டருக்கு ஒரு ஜூனியர் அசிஸ்டெண்ட்டும் பியூனும் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களுக்கு என்று தனியாக அலுவலகம் இல்லாத நிலையில் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்களுடைய அலுவலகத்திலேயே இவர்கள் ஒண்டுக் குடித்தனம் இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்தக் காரணத்தால் டிரக் இன்ஸ்பெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கிளார்க்கும் பியூனும் டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிசராலேயே பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு உதவியாக இருக்க முடியவில்லை.

இவைகளைப்பற்றி 1974-லும், 1976-லும் டிரக் இன்ஸ்பெக்டர்ஸ் அசோசியேஷன் அண்டு தமிழ்நாடு கெமிஸ்ட் அண்டு டிரக்கிஸ்ட் அசோசியேஷன் மூலமாக அரசாங்கத்திற்கு ரெப்ரசன்டேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1978-ஆம் ஆண்டிலும் இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அரசாங்கத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

1978-ஆம் ஆண்டு குற்றாலத்தில் அமைச்சர் அவர்களும் இலாக்கா அதிகாரிகளும் கூட, ரீஜனல் டிரக்ஸ் கண்ட்ரோல் ஆபீஸ் திறப்பதாக முடிவு செய்தார்கள். வருஷம் ஒன்றாகிறது. என்றாலும் அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இன்னொரு முக்கியமான கருத்தையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்குப் போதிய வாகன வசதிகள் கிடையாது. இதன் காரணமாக இந்த அதிகாரிகள் தாங்கள் கைப்பற்றும் பொருள்களை கோர்ட்டுக்குக் கொண்டு போகவும் அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்குக் கொண்டு போகவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்தத் துறையில் பணியாற்றும் ஜாயிண்ட் கண்ட்ரோலருக்கு என்று சொந்தத்தில் தனியாகக் கார் கிடையாது. அவர் அடிக்கடி தலைமைச் செயலகத்திற்கு வர வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக அவர் அடிக்கடி டிரக்ஸ் இன்ஸ்பெக்டரின் ஸ்கூட்டரை வாங்கிக் கொண்டு செக்ரடேரியட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. ஸ்டேட் கண்ட்ரோலருக்கு அடுத்த நிலையில் இருப்பவருக்கு இந்த நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதுமாக இருக்கிற நிலைமைகளை மேனேஜ் செய்கிற இவருக்கு சொந்தத்தில் ஒரு வண்டி கிடையாது. இந்த விவரங்களையெல்லாம் எதற்குச் சொல்லுகிறேன்

என்றால், இந்த அளவுக்கு ஒரு 'ஸ்டெப் மதர்லி ட்ரீட்மெண்ட்' இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதற்காகத்தான். மாநிலம் முழுவதும் டிரக் கண்ட்ரோல் செய்ய ஒரு அமைப்பை ஏற்படுத்திவிட்டு, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தராமல் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடத்தான் இதைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட ஆட்டிட்யூட் ஏன் ஏற்படுகிறது என்றால், இந்த டிரக் கண்ட்ரோல் ஆர்கனைசேஷன் தங்களைக் கண்காணிக்க செயல்படுகிற ஒரு அமைப்பு; இந்தக் கூட்டத்திற்கு ஏன் வசதி செய்து தர வேண்டும் என்று மெடிகல் சைடில் இருக்கிறவர்களில் சிலர் நினைக்கிறார்கள். டிரக் கண்ட்ரோல் பிரிவில் இருப்பவர்களுக்கு இப்படித்தான் தோன்றுகிறது. வேறு காரணம் இருக்குமென்றால், அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எதற்காக இவர்களுக்கு ஜன்னல்கூட இல்லாத அறை தரப்பட வேண்டும் என்ற காரணத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

அடுத்து டிரக் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு 1975-76-ல் ஒதுக்கப்பட்டதைவிட அதிகமான நிதி ஒதுக்கீடு இப்போது செய்யப்படவில்லை. ஆனால் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் காம்பவுண்டு சுவர் எழுப்புவதற்கு பிரையாரிட்டி கொடுத்து அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை கொடுப்பது என்றால், அதற்கு ஒரு நியாயம் வேண்டாமா? சென்ற ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காம்பவுண்டு சுவர் கட்ட பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் டிரக் கண்ட்ரோலுக்கு அதிகமான பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த நிலையில் சென்ட்ரல் கவுன்சில் ஆப் ஹெல்த், டிரக் கண்ட்ரோல் பிரிவுக்கு விசேஷ நிதி உதவிகள் கொடுக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்கிறது.

இந்த டிரக் கண்ட்ரோல் பிரிவில் மருந்துகளை டெஸ்ட் செய்வதற்கு லேபரேட்டரிகள் தேவைப்படுகின்றன. இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் டெஸ்டுக்காக எடுக்கும் எல்லா சாம்பிள்களும் தற்போது சென்னை கிங் இன்ஸ்டிடியூட்டுக்குத்தான் வருகின்றன. எங்காவது ஒரு மருந்து பாதகமாக இருக்கிறது என்று சந்தேகப்பட்டு, அதன் சாம்பிள் எடுத்து, கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்பப்பட்டால், அதன் ரிசல்ட் வருவதற்கு 3 வருஷமாகிறது. இதற்குள் தரக் குறைவான அல்லது பாதகமான மருந்து என்று கருதப்படுகிற அந்த மருந்து அனைத்தும் விற்கப்பட்டு முடிந்துவிட்டிருக்கும். அதற்குப் பிறகு டெஸ்ட்டின் ரிசல்ட் வந்து என்ன பிரயோசனம் என்று எனக்குப் புரியவில்லை. இதன் காரணமாக டிரக் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனுக்குத் தனியான ஒரு லேபாரட்டரி வேண்டும் என்று முடிவு செய்து

அதற்காக ரூ. 17 லட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த லேபரேட்டரிக்கு 5 லட்சம் ரூபாய்க்கு மேல் பெருமானமுள்ள எக்விப்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். இரண்டு மாடிக் கட்டிடம் கட்டியாகிவிட்டது. அதன் கிரவுண்ட் புளோர் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்குக் கொடுக்கப்பட்டு விட்டது. மற்ற இரண்டு மாடிகளும் காலியாக இருக்கின்றன. இப்படி 17 லட்சம் ரூபாய் முதலீட்டில் கட்டிடம் கட்டிய பிறகு இந்த லேபரேட்டரிக்குத் தேவைப்படும் ஆட்களை 1977 ஆம் ஆண்டு தேர்ந்தெடுத்தார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக அனுப்பிவைத்தார்கள். அரசாங்கத்தில் என்ன சொல்லிவிட்டார்கள் என்றால் இப்படித் தேர்ந்தெடுத்தது சரியல்ல, பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாகத்தான் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று திருப்பியனுப்பிவிட்டார்கள். இப்படி அரசாங்கம் முடிவெடுத்ததன் காரணமாக அந்த லேபரேட்டரி இன்று வரை செயல்படாமலேயே இருந்து வருகிறது. 1973 ஆம் ஆண்டு 17 லட்சம் ரூபாயைச் செலவழித்து கட்டப்பட்ட கட்டிடத்தில் இன்னும் லேபரேட்டரிக்கான பணி துவங்கப்படவில்லை, இரண்டு மாடிகள் காலியாகவே இருக்கின்றன. இதற்கிடையில் 'புட் அனாலிசிஸ்' செய்யும் பிரிவினர் அதாவது உணவுப் பொருட்களை அனலைஸ் செய்யும் பிரிவினர் அந்தக் கட்டிடத்தைத் தங்களுடைய லேபரேட்டரியை அமைத்துக் கொள்ளக் கொடுக்க வேண்டுமென்று கோரி வருவதாக அறிகிறேன். அப்படி அவர்களுக்கு இந்தக் கட்டிடத்தைக் கொடுக்கும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்கிற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த லேபரேட்டரிக்காக, மாநில அரசு முதலீடு செய்த 17 லட்சம் ரூபாய் போதாதென்று மத்திய அரசு வேறு தனியாக ஒரு 19 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதாகவும் அறிகிறேன். இந்தத் தொகையை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளப் போகிறதா இல்லையா என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது இந்தப் பிரிவினர் 'சீஸ்' செய்யும் (கைப்பற்றும்) பொருள்கள் அனைத்தும் கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு டெஸ்டிங்கிற்காகச் செல்கின்றன. கிங் இன்ஸ்டிடியூட்டைப் பொறுத்தவரையில், அவர்களும் ஒரு மருந்து மானுபாக்சரர்ஸ் (தயாரிப்பாளர்) தான். அரசாங்கம் வாங்குகிற இஞ்செக்ஷன்ஸ் முழுவதும் கிங் இன்ஸ்டிடியூட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதைப்போன்ற இஞ்ஜெக்ஷன்களை உற்பத்தி செய்யும் செக்ஷன் அனைத்தும் 'ஏர்-கண்டிஷன்' செய்யப்பட வேண்டுமென்ற கட்டாயம் இருந்த போதிலும், இங்கே 'கிங் இன்ஸ்டிடியூட்'டைப் பொறுத்தவரையில், இந்த கண்டிஷன் வற்புறுத்தப்படவில்லை. தனியார் கம்பெனிகளில் இஞ்ஜெக்ஷன் உற்பத்தி செய்யும் இடத்தில் ஏர் கண்டிஷனர் இல்லையென்றால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் கிங் இன்ஸ்டிடியூட்டில் டிரக் இன்ஸ்பெக்டர்களை உள்ளே சென்று பார்வையிடவே விடுவதில்லை. எதற்காக இந்த விதி விலக்கு என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இப்படி ஏர் கண்டிஷனர்களை வற்புறுத்தாதன் காரணமாக கிங் இன்ஸ்டிடியூட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு மருந்து 'கண்டாமினேஷன் அல்லது பொல்யூஷன்' ஆகி, மக்களை பாதித்தால் அதற்கு என்ன தடுப்புமுறை வைத்திருக்கிறார்கள் என்று புரியவில்லை. அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிங் இன்ஸ்டிடியூட் மருந்து எங்காவது ஒரு இடத்திற்குப் போய் அது தரக்குறைவாக இருக்கும் என்று சந்தேகித்து ஒரு டிரக் இன்ஸ்பெக்டர் அதன் சாம்பிளை கிங் இன்ஸ்டிடியூட்டுக்கே அனுப்பினால், அது தரக்குறைவான மருந்து என்று கிங் இன்ஸ்டிடியூட்டில் ஒப்புக்கொள்வார்களா? யார் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களே டெஸ்ட் செய்வது என்றால், உண்மையை ஒப்புக்கொண்டு அது தரக்குறைவானது என்று அறிவிப்பார்களா? இந்தக் கண்டிஷனை, கிங் இன்ஸ்டிடியூட்டைப் பொறுத்த வரையில், ஏன் வலியுறுத்தவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 7-40.)

அடுத்து, மருந்து வாங்குகிற பிரச்சினை. மருந்து பூராவையும் ஆஸ்பத்திரியிலே வாங்குகிறார்கள். அதிலே பெரிய மோசடி நடப்பதாகத் தகவல் இருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள அரை டசன் ஹோல்சேல் டீலர்களிடம்தான் மருந்துகள் வாங்கப்படுகின்றன. இவர்கள் பஞ்சாப், அரியானா, இந்தூர் ஆகிய இடங்களில் கழித்துக் கட்டப்பட்ட சப்-ஸ்டாண்டர்ட் மருந்துகளைத்தான் விற்கிறார்கள். தமிழ் நாட்டில் பார்மசிஸ்ட் கோர்ஸ் படித்தவர்கள் ஸ்மால் என்டர்பிரானார்ஸ் என்ற முறையிலே 'டிட்கோ', 'சிட்கோ' போன்ற அரசுத் துறை நிறுவனங்களிடமிருந்து பணம் பெற்று மருந்துகளைத் தயாரிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து மருந்துகளை வாங்குவதில்லை. அதற்கு மாறாக தேவையான

மொத்த மருந்தும் ஹோல்சேல் டீலர்களிடமிருந்தே வாங்கப்படுகிறது. அப்படி வாங்கும்போது, முதலாளிகள் எக்ஸ்ப்ளாய்ட் பண்ணுகிறார்கள். ஆகவே மருந்தை சென்ட்ரலைஸ்ட் பர்சேஸ் முறையில் வாங்க வேண்டும். ஆஸ்பத்திரிகளே வாங்க அனுமதிக்கக் கூடாது. அரசு நிறுவனங்களிடமிருந்து பண உதவி பெற்று மருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து சர்க்காரே சென்ட்ராலைஸ்ட் பர்சேஸ் முறையில் வாங்க வேண்டும். அப்படிப்பட்ட நிறுவனங்களில் மருந்துகள் கிடைக்காமல் போனால், மற்ற பெரிய நிறுவனங்களில் வாங்கலாம். சர்க்காரே மொத்தமாக வாங்கும் போது, மருந்து தயாரிப்பாளர்களிடமே நேரிடையாக வாங்க வேண்டும். ஏன் அரசு ஹோல்சேலர்களிடம் போய் நிற்கிறது? ஒன்று, சென்ட்ரலைஸ்ட் பர்சேஸ், இரண்டு தமிழ்நாடு சர்க்கார் உதவி பெற்று மருந்துகளைத் தயார் செய்யக்கூடிய சிறுதொழில் நடத்துபவர்களிடம் மருந்துகளை வாங்க வேண்டும்; மூன்று கிடைக்காத மருந்துகளை தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து நேரிடையாகவே வாங்க வேண்டும்; என்ற இந்த மூன்று அம்சங்களின்படி மருந்துகளை வாங்கினால் எந்தவிதத் தவறுகளும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கவர்ன்மென்ட் மெடிக்கல் ஸ்டோரில் 10 கோடி ரூபாய்க்கு மருந்துகளை வாங்குகிறார்கள். அதற்கு ஹாண்ட்லிங் சார்ஜ் என்று 10 சதவீதம் செலவு செய்கிறார்கள். அதாவது கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவுக்கு ஹாண்டிலிங் சார்ஜ் என்று செலவு செய்கிறார்கள். இந்த ஒரு கோடி ரூபாயில் மக்களுக்கு எவ்வளவோ நல்ல பணிகளைச் செய்யலாம். ஏனென்றால் ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டருக்கும் 16 ஆயிரம் ரூபாய்க்குத்தான் மருந்து கொடுக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் என்றால், பல ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வாங்கலாம். கவர்ன்மென்ட் மெடிகல் ஸ்டோரிலிருந்து வாங்குகிற மருந்துக்கு ஹாண்ட்லிங் சார்ஜ் முறையைக் கைவிட வேண்டும். அதிலே என்ன கோளாறு என்று கவனிக்க வேண்டும். பத்து சதவிகிதம் ஏன் செலவு செய்கிறார்கள் என்று கவனிக்க வேண்டும்.

மருந்துகள் களவு போகின்றன. தமிழ் நாட்டில் எந்த ஆஸ்பத்திரியிலும் ஸ்டாக் ரிஜிஸ்டர்கள் சரியாக எழுதப்படவில்லை. கள்ளக் கணக்குதான் எழுதப்படுகிறது. அங்கிருப்பவர்களே மருந்துகளை வெளியே எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் விநியோகம் பண்ணதாக எழுதுகிறார்கள். அரசு மருந்துகளை வைத்திருந்தவர்களைக் கண்டுபிடித்து கோர்ட்டில் கேஸ் போடப்பட்டது. ஆனால் எந்த ஆஸ்பத்திரி ஸ்டாக் ரிஜிஸ்டர்களிலும் மருந்து குறைந்திருப்பதற்கான கணக்கைக் காணோம். நோயாளிகளுக்கு விநியோகம்

செய்ததாக கள்ளக்கணக்கு எழுதியிருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? ஃபார்மசிஸ்டுகளையும் மெடிக்கல்மென் கீழ் வைத்திருக்கிறார்கள். அதனால் நடவடிக்கை சரியாக எடுக்க முடியவில்லை. ஆகவே அவர்களை இன்டிபென்டென்ட் டைரக்டரிடம் விட வேண்டும். மெடிக்கல் மென்னோடு சேர்த்துவிடக் கூடாது. இப்படிச் சொல்லும்போது, மெடிக்கல் மென் அனைவரும் மோசம் என்று நான் சொல்லுவதாகக் கருதக்கூடாது. அவர்களுடைய வேலைகளுக் கிடையேயுள்ள முரண்பாடுகள்தான் இதற்குக் காரணம். சரியான கணக்குக் காட்டவில்லையென்றால், பிடிபடுவோம் என்ற பயம் அவர்களுக்கு இருந்தால் தப்பு செய்ய மாட்டார்கள். டிரக் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷனைக் கொண்டுபோய் மெடிக்கல் மென் கீழே வைக்கக் கூடாது. இண்டிபென்டெண்ட் டைரக்டரிடம் விட வேண்டும். பி. பார்மசி கிராஜுவேட்டுகளை டைரக்டராகப் போடலாம். அப்போது எந்தப் பிரச்சினையும் வராது.

கடைசியாக, ஆஸ்பத்திரியில் ஏற்படும் சாவைப்பற்றிச் சொல்லுகிறேன். பென்சிலின் மருந்தை உபயோகப்படுத்துவதால் சாவு ஏற்படுகிறது. ஆஸ்துமா, தோல் வியாதி இருப்பவர்களுக்குப் பென்சிலின் ஊசி போட்டால், சாவு ஏற்படுமென்று பொதுவாக ஒரு கருத்து இருக்கிறது. அப்படி சாவு ஏற்பட்டால், அந்த மருந்து பரிசோதனைக்காக டிரக் கண்ட்ரோல் துறைக்கு வருகிறது. அங்கே உள்ள போனால் உயர் பொறுப்பிலுள்ள மெடிக்கல் மென் தன்னுடைய ஆட்களைப் பாதுகாக்கிறார் உண்மையில் முறையான போலீஸ் இன்வெஸ்டிகேஷனுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு டிரக் கண்ட்ரோல் இன்டிபென்டென்டாக இருக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். இல்லையென்றால், அவர்கள் செய்வதைக் கண்காணிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே மெடிக்கல் மென்னை ட்ரக் கண்ட்ரோல் அட்மினிஸ்ட்ரேஷன் தலைமையிடத்தில் போட்டது சரியல்ல. இது மன்டை கட்டு, நரியைக் காவலுக்கு வைப்பதைப் போல இருக்கிறது. ஆகவே டிரக் கண்ட்ரோலை டைரக்டர் ஆப் ஹெல்த் சர்விசிடம் ஒப்படைப்பது சரியல்ல. அரசு கமிட்டிகள் முழுவதும் டிரக் கண்ட்ரோலை தனி டைரக்டரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு அரசு ஏன் இதுவரை அதைச் செய்யவில்லை என்பதைத் தெரிவிக்க வேண்டு மென்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒரு பிரச்சினையைப் பேசி முடிப்பதற்கே மாண்புமிகு உறுப்பினருக்கு 25 நிமிடங்கள் ஆகியிருக்கிறது. மேலும் எவ்வளவு நேரம் ஆகும் என்பது தெரியவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : மூன்றாயிரம் எம்.பி.பி.எஸ் கிராஜுவேட்டுகள் கிராமப்புறத்திற்கு தற்காலிகமாக வேண்டுமென்று விளம்பரம் செய்ததாகவும், அதற்காக 1,500 டாக்டர்கள் வந்ததாகவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறினார் என்று 8—4—1979 'தினத்தந்தி' (சென்னைப் பதிப்பு) தமிழ்ப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆனால் கிராமப புறத்திற்கு 300 எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் வேண்டுமென்று மூன்று மாதங் களுக்கு முன்பு விளம்பரம் வந்ததாகவும், அதற்காக 1,500 டாக்டர்கள் அப்ளை பண்ணியதாகவும், அவர்களில் பல பேருக்கு பல சென்டர்களில் இன்டர்வியூ கூட நடந்திருப்பதாகவும், ஆனால் இன்னும் ஆர்டர் வரவில்லையென்றும் இப்போது தகவல் கிடைத்திருக்கிறது. இதில் எது சரியென்று தெரிய வில்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : துணைத் தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கிற மருத்துவர்களிலிருந்து, கிராமப்புறங்களில் பணி யாற்ற விருப்பம் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதற்குக் காரணம், தமிழ் நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்ட பலர் இன்னும் பணியில் வந்து சேராமல் இருப்பதுதான். 1975 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இன்னும் 95 பேர் பணியில் சேராமல் இருக்கிறார்கள். இதனால் பல கிராமங்களில் மருத்துவர்கள் இல்லையென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தே இந்த அரசு பணியில்லாமல் இருக்கிற மருத்துவர்களிலிருந்து சிலரை எடுக்க ஏற்பாடு செய்தது. அதற்காக சில சட்ட திட்டங்களையும் விதித்தோம். அதாவது தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் கிராமப்புறங்களிலே மூன்றாண்டுக் காலம் தங்கி யிருக்க வேண்டும். அப்படி பணியாற்றத் தவறினால், அதற்காக ஐந் தாயிரம் ரூபாய்க்கு பிணையம் முறையில் எழுதிக் தர வேண்டுமென்று விளம்பரம் செய்யப்பட்டது. 1,200 பேர் மனுச் செய்திருக்கிறார்கள். அவர்களை அழைத்து நேரில் கேட்டபோது, தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்படாததால், இந்த வேலைக்கு வரத் தயாராக இல்லை யென்றும், வந்தாலும் பிறகு லீவ் போட்டுவிட்டு படிக்கச் சென்றுவிடுவோம் என்றும், கிராமத்திற்குப் போகத் தயாராக இல்லையென்றும் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் கூறியதைக் கூட பதிவு செய்து வைத்திருக்கிறோம். அதிலே 300 பேரைத் தேர்ந்தெடுத்து ஒரு லிஸ்ட் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : கிராமங்களில் பணி செய்ய மூவாயிரம் டாக்டர்கள் வேண்டுமென்று ஏன் விளம்பரப்படுத்தினார்கள் என்று புரியவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : விளம்பரத்தில் எவ்வளவு பேர் தேவையென்று போடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான குறிப்பை இந்த அவையிலே தந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விளம்பரம் வரவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8—4—1979 நாளிட்ட தினத்தந்தி பத்திரிகையைப் படித்திருந்தால், தெரியும். அப்படி இல்லையென்றால், அதை அவர் அப்போதே மறுத்திருக்க வேண்டும். 8—4—1979 சென்னை பதிப்பில் மாண்புமிகு அமைச்சர் சொன்னதாக தற்காலிகமாக கிராமத்தில் பணியாற்ற மூவாயிரம் டாக்டர்கள் வேண்டு மென்று விளம்பரம் போட்டிருந்ததில் "1,200 பேர் விண்ணப்பம் செய்திருக் கிறார்கள்". என்று கொட்டேஷன் போட்டு விளம்பரம் பண்ணியிருக்கிறார்கள். இதை நானாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அரசாங்கத்தின் சார்பாகத் தரப் பட்ட விளக்கத்தையும் பார்த்திருந்தால், இன்னும் தெளிவாகப் புரிந்திருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன் : அடுத்து, திருநெல்வேலி ஜில்லாவில் அம்பா சமுத்திரம் தாலுக்கா எட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் ஒன்றரை இலட்சம் பேர்களுக்கு வைத்தியம் செய்யப்படுகிறது. அந்த ஆஸ்பத்திரியை எக்ஸ் பான்ஷன் செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலேயே வனத் துறையைச் சார்ந்த ரேன்ஜ் ஆபீசர் கட்டடம் தேவையில்லாமல் இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளுவதில் தாமதம் இருக்கிறது என்ற தகவலை நான் ஏற்கெனவே வனத் துறை அமைச்சர் அவர்களிடம் சொன்னபோது செய்கிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த ஆஸ்பத்திரியில் ஏற்கெனவே ஒரு பெண் டாக்டர் இருக்கின்றார்கள். இன்னொரு பெண் டாக்டர் வேண்டுமென்று சிபாரிசு செய்து எழுதியிருக்கி றார்கள். பல மாதங்கள் ஆகின்றன. அங்கு வாட்ச்மேன் இல்லை. ஆகவே வாட்ச்மேன் வேண்டுமென்று 1½ வருடத்திற்கு முன்னால் எழுதினார்கள் அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அந்த ஆஸ்பத் திரிக்கு வருபவர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஆண்டிற்கு 1½ லட்சம் பேர் களுக்கு மேல் வருகிறது. அது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக் கிறது. அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்கும் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒரு அறிவிப்பு. மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் தொடர்ந்து நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-50)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

133. Notification issued with G.O. Ms. No 228, Public Works, dated the 14th February 1979 in regard to an amendment to the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Rules, 1973. [Laid on the table of the House under section 21 (4) of the Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Act, 1973 (Tamil Nadu Act 30 of 1973).]

134. Notification issued with G.O. P. No. 74, Commercial Taxes and Religious Endowments, dated the 29th January 1979 in regard to an exemption in respect of the tax payable under the Tamil Nadu General Sales Tax Act by the Gandhi Seva Sangam, Chatrapatti, Palani taluk, Madurai district, on the sale of hand-made soaps manufactured by the said Sangam. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

135. Notification issued with G.O. Ps. No. 181, Commercial Taxes and Religious Endowments, dated the 19th February 1979 in regard to an exemption in respect of the tax payable under the Tamil Nadu General Sales Tax Act on the sale of an auto-rickshaw by the Khivraj Auto-mobiles, Anna Salai, Madras, to the School for Deaf, Madras, for use of its hostel and to transport the edibles from the Hostel to the canteens run by the deaf girls of the institution. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

136. Notification issued with G.O. Ps. No. 274, Commercial Taxes and Religious Endowments, dated the 12th March 1979 in regard to an exemption in respect of the tax payable under the Tamil Nadu General Sales Tax Act by the Kasthuri Bai Gandhi Mahalir Mandram, Malayadipatti, Rajapalayam, Ramnathapuram district, in regard to the whole of the turnover relating to the sales of articles manufactured by the inmates at the said Mandram. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

B. *Reports, Notifications and other Papers.*

* 125. Policy Note on Medical, 1979-80. (Tamil and English).

* 126. Policy Note on Public Health, 1979-80 (Tamil and English).

* 127. Performance Budget on Medical Education, 1979-80 (English).

* 128. Performance Budget on Medical Services and Family Welfare, 1979-80. (English).

* 129. Performance Budget on Public Health and Preventive Medicine, 1979-80. (English).

* 130. Policy Note on Road Transport Services and Shipping, 1979-80. (Tamil and English).

* 131. Note on Review of Performance of Transport and Shipping Corporations, 1979-80. (Tamil and English).

* 132. Performance Budget on Tamil Nadu Port Department, 1979-80. (Tamil and English).

* 133. Review of the Road Development Programme in Tamil Nadu, 1978-79. (Tamil and English).

* 134. Policy Note on Community Development and Panchayat Development, 1979-80 (Tamil and English).

* 135. Financial Supplement to Policy Note on Community Development and Panchayat Development, 1979-80. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs. on 16th April 1979.

[1979 ஏப்ரல் 17

இணைப்பு I.

[565-ஆம் பக்கத்தின் இனம் 4 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கன்னியாகுமரி மாவட்டம் வழக்கமாகத் தென்கிழக்குப் பருவமழைக் காலத்தில் மழை பெறும். சில சமயங்களில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மழை பெறும். ஆனால், சாதாரணமாக நவம்பரில், மாத சராசரி மழையளவு 84 மி.மீட்டரிலிருந்து 258 மி.மீட்டர் வரை என்பதற்கு மாறாக 1978 ஆம் ஆண்டு நவம்பர் முதல் வாரத்தில் மட்டுமே, எதிர்பாராதவிதமாக 566 மி.மீட்டர் மழையளவு இருந்தது. இதனால், மாவட்டத்திலுள்ள ஏரிகளில் தண்ணீர் அளவு உயர்ந்தது. சில ஏரிகளில் உடைப்புகளும், ஏற்பட்டன. இம்மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன வசதிக்கு உதவி புரியும் முக்கிய ஆறுகளான பழையாறு, முல்லையாறு, குழித்துறையாறு, ஆகியவற்றில் முழு அளவு மழைநீர் பெருக்கெடுத்தோடியது. சித்தாறு 1, சித்தாறு 2, பெருஞ்சாணி, மற்றும் பேச்சிப்பாறை, ஆகிய நான்கு நீர்த் தேக்கங்களிலும் நீர்நிலை திடீரென்று வழியத் தொடங்கியது. நீர்த் தேக்கங்களில், இப்படி நிரம்பி வழிந்த நீரும், வடிகால் நீரும், குறிப்பாக குழித்துறையாறு போன்ற, ஆறுகளின் மூலமாக வடிக்கப்பட வேண்டியிருந்தது. குழித்துறையாறின் நீர்மட்டம் 24 அடியாக உயர்ந்தது. திடீரென்று மழை நீர் நீர்த்தேக்கங்களில் நிரம்பி வழிந்ததாலும், நீர்த் தேக்கங்களிலிருந்து அதிக அளவு நீர் வெளியிடப்பட்டதாலும், ஆற்றங்கரையோரமுள்ள, தாழ்வான பகுதிகள் வெள்ள நீரால் பாதிக்கப்பட்டன.

2. மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி 12,825 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட நெல் பயிரும் 858 ஏக்கரில் பயிரிடப்பட்ட மற்ற பயிர்களும் சேதமுற்றன. 1,500 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களில் மண் மேடிட்டது. இம்மாவட்டத்திலுள்ள, 7 நில அபிவிருத்தி வங்கிகளும், மத்திய கூட்டுறவு வங்கியும், மற்றும் தேசியமயமாக்கப்பட்ட கனரா வங்கி, திருவாங்கூர் மாநில வங்கி போன்ற வங்கிகளும், விவசாயிகளுக்கு கடனுதவியளிக்க ஒப்புதலளித்திருக்கின்றன.

3. கடந்த ஆண்டு நவம்பர் மாத வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, கன்னியாகுமரி மாவட்டம் உட்பட, அளிக்கப்பட்ட சலுகைகளாவன :—

(1) சிறு விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளும், **உரங்கள் 25 சதவிகிதம் குறைந்த விலையிலும் வழங்கல்,**

1979 ஏப்ரல் 17]

(2) யூரியா உரம் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் விலையை இலவச உதவியாகவும், மீதியை கூட்டுறவு கடனாகவும் வழங்கல்.

(3) மண்ணில் புதையுண்ட நிலங்களுக்கும், கிணறுகளுக்கும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்றவருக்கு 50 சதவிகிதம் உதவியாகவும், ஒரு ஏக்கருக்கு அல்லது ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் உதவி.

(4) பாதிக்கப்பட்ட இடங்களுக்கு தென்னங்கன்றுகளை இலவசமாகவும், கரும்பு, வாழை இவற்றிற்கு ஏக்கருக்கு ரூ. 100 உதவித் தொகையாகவும் வெற்றிலைக்கு ரூ. 500 (ஒரு ஏக்கருக்கு) உதவித் தொகையாகவும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 250 க்கும், நபர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கும் மேற்படாமல் உருளைக்கிழங்கு விதைகளுக்கு 25 சதவிகிதம் விலை இலவச உதவித் தொகையாகவும், காய்கறி தோட்டத்திற்கு விதைகள் இலவசமாகவும் சிறு விவசாயிகளுக்கு அளித்தல்.

(5) படகுகள், கட்டுமரங்கள் ஆகியவற்றினை இழந்த மீனவர்களுக்கு 50 சதவிகிதம் இலவச உதவியாகவும், 50 சதவிகிதம் வட்டியில்லாக் கடனாகவும் அளித்து, கடன் தொகையை 30 தவணைகளில் வசூலித்தல்.

4. புயல், மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் முழுவதும் இழக்கப்பட்டால் நிலவரி, தண்ணீர் மேல்வரி, சிறப்பு வரி ஆகியவற்றை தள்ளுபடி செய்து கொடுக்க, வருவாய் வாரிய நிலை ஆணைகளிலும் சம்பந்தப்பட்ட சட்டங்களிலும் வழிவகையுள்ளது.

5. 1977-ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் திங்களில் உண்டான புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பயிர்களின் விளைவு ஆறு அணாவும் (37 பைசா), அதற்குக் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தால் 1387-ஆம் பசலிக்குரிய நிலவரி, தண்ணீர் மேல்வரி, உள்ளாட்சி மேல்வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, சிறப்பு நன்செய்த் தீர்வை, சிறப்பு தண்ணீர் மேல்வரி, பணப்பயிர்களுக்குண்டான வரி, ஆகியவற்றை வருவாய் வாரிய நிலை ஆணையின்படி தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டது. மேலும், நிலவரி தண்ணீர் மேல்வரி, உள்ளாட்சி மேல்வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, ஆகியவற்றிற்கான பழையபாக்கிகளை 1387-ஆம் பசலியில் வசூலிப்பதை 1388-ஆம் பசலிக்கு ஒத்திவைத்தும் அரசு ஆணை பிறப்பித்தது.

6. 1978-ஆம் ஆண்டுப் பெய்த கனத்த மழையினாலும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 1388-ஆம் பசலிக்குரிய நில வரியை வருவாய் வாரிய நிலை ஆணையின்படி தள்ளுபடி செய்து கொடுக்கும்

அல்லது ஒத்திவைக்கும் விஷயம், அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்து அல்லது வசூல் ஒத்தி வைத்து ஆணையிடப்படுமோ அங்கெல்லாம் சிறப்பு வரியும் தள்ளுபடி செய்யப்படும் அல்லது வசூலிப்பு ஒத்திவைக்கப்படும்.

இணைப்பு II.

[567 ஆம் பக்கத்தில் இனம் 4 (2) க்கான அடிக்குறிப்பை காண்க.)

அரசாணை நிலை எண் : 934, கல்வி, நாள் 7—6—66-ல் உத்தரவிட்டுள்ளபடி, 1 முதல் 3 வகுப்புவரை பயிலும், மதிய உணவு பெறும் மாணவர்களுக்கு, பின்வருமாறு பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ் புத்தகம்—1 முதல் 3 வகுப்பு வரை.
ஆங்கிலப்புத்தகம்—3 ஆம் வகுப்புக்கு மட்டும்.
கணிதப் புத்தகம் (பயிற்று மொழி தமிழ் கன்னடம், தெலுங்கு, உருது மற்றும் மலையாளம்) —3 ஆம் வகுப்புக்கு மட்டும்.
விஞ்ஞானப் புத்தகம் (பயிற்று மொழி தமிழ், கன்னடம், தெலுங்கு, உருது மற்றும் மலையாளம்) —3 ஆம் வகுப்புக்கு மட்டும்.

சிறுபான்மை மொழி பேசும் 1 முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு, தேசிய மயமாக்கப்பட்ட எந்தப் பாடப்புத்தகங்களும் இல்லை. ஆந்திர கர்நாடக அரசுகளால் வெளியிடப்படும் சிறுபான்மை மொழிப் பாடப் புத்தகங்களை, அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களே விலைக்கு வாங்கி மாணவர்களுக்கு விநியோகிக்க வேண்டும். இதனால் ஏற்படும் செலவை அரசிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு மாவட்டக் கல்வி அலுவலருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட ஆணையர்களால் 1974-75 வரை இம்முறை பின்பற்றப் பட்டுள்ளது. அதற்குப் பிறகு இது போல நிதி ஒதுக்கீடு செய்யக் கேட்டு, ஆணையர்களிடமிருந்து கோரிக்கை எதும் வரவில்லை. இந்நிலையில் ஊராட்சி ஒன்றியங்களால் இதற்காகச் செலவிடப்பட்ட தொகையைத் திரும்ப அளிக்கவும், மூன்றாம் வகுப்பில் பயிலும் சிறுபான்மை மொழி பேசும் மாணவர்களுக்குரிய பாடப் புத்தகங்களைப் பெறுவதற்காக, தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகத்திடம் விண்ணப்பிக்கும்படியும், ஆய்வு செய்யும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இணைப்பு III

[602 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மருத்துவத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே,

'மருத்துவம்' குறித்த கொள்கை பற்றிய முக்கிய கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

கொள்கை :—

மக்களின் நோயுற்ற அளவினையும், இறப்பு விகிதத்தையும் குறைக்கும் குறிக்கோளே நம் நல்வாழ்வுப் பணிகள் தோன்ற மூலக் காரணமாகும். இக்குறிக்கோளின் அடிப்படையில்தான் ஊரகப் பகுதி வாழ் மக்களுக்கு சிறப்பு மருத்துவ வசதிகள் அளிப்பதிலும் நடைமுறையிலிருக்கும் மருத்துவ வசதிகளை மேம்பாடு அடையச் செய்வதிலும், இவ்வரசு தொடர்ந்து மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கிறது. இத்தத்துவத்தைக் கொண்டு இவ்வரசு ஊரகப் பகுதி வாழ் மக்களின் மருத்துவக் கவனிப்பிற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சார்ந்த நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் தெளிவமைந்த தீவிர பணிகளை வழங்கும் புதுத் திட்டம் ஒன்றை செயல்படுத்தியது. இவ்வாண்டு ஊரகப் பகுதிகளில் விபத்து மற்றும் அவசர கவனிப்பு மருத்துவப் பணிகள் மூலம் அப்பகுதி வாழ் மக்களின் நோயுற்ற அளவினையும், இறப்பு விகிதத்தையும் மேலும் குறைக்கும் மற்றுமொரு புதிய திட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதுபோன்ற வசதிகளைத் தவிர, மாவட்ட வட்ட, மற்றும் வட்ட தலைமையிடமல்லாத இடங்களில் உள்ள மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் சிறப்புப் பணிகள் மேலும் கூடுதலாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த பல ஆண்டுகளில் படிப்படியாக ஊரகப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவது, நல்வாழ்வுப் பணிகளுக்கென ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக பணம் ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தியிருப்பதன் மூலம் அறியலாம்.

ஆண்டு.	* 280— மருத்துவத்தின் கீழ் வருவாய்க் கணக்கில் செலவினம்.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்)
1972—73	23,96.14
1973—74	28,26.31
1974—75	36,09.69

1975—76	41,12.66
1976—77	47,23.97
1977—78	50,43.45
1978—79 (திருத்திய மதிப்பீடு)	55,22.94
1979—80 (வரவு செலவு திட்ட மதிப்பீடு)	60,95.72

* 280 மருத்துவத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கும் செலவினத்தின் ஒரு பகுதி ஒவ்வொரு வருடமும் கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வில் சேர்க்கப்படுகிறது. மேலே காட்டப்பட்டிருக்கும் செலவினத் தொகை அப் பகுதியைச் சேர்த்து காட்டப்படுவதாகும்.

A மருத்துவக் கல்வி.

I மருத்துவக் கல்லூரிகள்—

(அ) பட்டப் படிப்புகள்—

தமிழ்நாட்டில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. எட்டு கல்லூரிகளில் மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், எஞ்சிய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. எட்டு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதில் 30 இடங்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தோருக்காக ஒதுக்கப்படுகின்றன. மூன்று இடங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கும், பத்து இடங்கள் விதவைகளுக்கும் ஒதுக்கப் படுகின்றன.

மருந்தாக்கியல் பட்டப்படிப்பு, சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது. மருந்தாக்கியல் பட்டப்படிப்பின் முதலாண்டில், சென்னை மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 26 மாணவர்களும் ஆண்டொன்றுக்கு சேர்க்கப்படுகின்றனர். இதைத் தவிர இரண்டாவது ஆண்டு மருந்தாக்கியல் பட்டப்படிப்பில் மேற்சொன்ன இரண்டு கல்லூரி களிலும் மருந்தாக்கியல் பட்டயத் தகுதி பெற்றவர்களிலிருந்து கல்லூரிக்கு ஐவர் வீதம் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் பல் நோய்ச் சிகிச்சைக்கான பட்டப் படிப்பு (B.D.S.) நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுதோறும் 33 மாண வர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மருத்துவக் கல்லூரியை சார்ந்துள்ள பல் பிரிவினை தனக்கென சொந்த நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய தனிக் கல்லூரியாக மாற்றக் கருதப் பட்டுள்ளது.

சென்னை மருத்துவக் கல்லூரியை சார்ந்துள்ள பல் பிரிவு தன்னுடைய வெள்ளி விழாவினை 1978-ஆம் ஆண்டில் கொண்டாடியது. வழக்கமான முறையிலிருந்து மாறி இவ்விழா மதுரையில் நடந்தேறியது. இவ்விழாவினை யொட்டி மாநிலம் முழுவதும் ஊரக பல் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன. இம் முகாம்கள் மாவட்டத்திற்கு ஒன்றாக ஊரக பகுதிகளை உயர்விடமாகக் கொண்டு, அப்பகுதிவாழ் மக்கள் பற்களைப் பேணும் கலையையும் பற்களை பாதுகாக்கும் முறைகளையும் மனத்தில் நன்கு அறியும்பொருட்டு நடத்தப் பட்டன. இம்முகாம்கள் தொடர்ந்து நடந்தேறக்கூடிய திட்டத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்டதாகும். ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரி களிலும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் பணியாற்றும் பல் மருத்துவர்களைக் கொண்டு ஆண்டுக்கொரு முறை நடைபெறும்.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் செவிலியர் பட்டப்படிப்பு (B.Sc. Nursing) நடத்தப்படுகிறது. இப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகளாகும். ஆண்டுதோறும் அரசு பணியிலிருப்பவர் 10 பேரும், தனிப்பட்டவர்கள் 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆ) பட்ட மேற்படிப்புகள்—

பல்வேறு துறைகளில் போதுமான அளவுக்கு வல்லுநர்களும் ஆசிரியப் பணியாளர்களும் இல்லை. இதனைச் சரிசெய்ய வெவ்வேறு மருத்துவக் கல்லூரிகளில், பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் பட்டயத் தகுதி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இவ்வாறு நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு, மற்றும் பட்டயத் தகுதி வகுப்புகள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை I -ல் கொடுக் கப்படுகின்றன. இந்திய மருத்துவ மன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களின் இசைவு பெற்ற பின்னர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் 1979-80-ல் சில குறிப்பிட்ட சிறப்புப்பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயத் தகுதி படிப்புகளை துவக்கக் கருதப் பட்டுள்ளது. இந்திய மருத்துவமன்றம், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியை அங்கீகரிப்பதற்கான ஒப்புதலை வழங்கியிருக்கிறது. எனவே மாநிலத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளாகும்.

II. பயிற்சி.

(அ) செவிலியர் பயிற்சி—

ஆண்டொன்றுக்கு 300 மாணவிகள், 6 பயிற்சி நிலையங்களில் செவிலியர் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி உதவிப் பணம் பெறாமல் பயிற்சி பெறும் மாணவிகளின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 3-லிருந்து 50 ஆக உயர்ந்தப்பட்டிருக்கின்றது. 1979-80-லிருந்து பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை 300-லிருந்து 350 ஆக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து, வருங்கால தேவைகளை நிறைவு செய்ய ஆண்டொன்றுக்கு 120 கூடுதல் செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருச்சிராப்பள்ளியிலும், சேலத்திலும் செவிலியர் பள்ளிகளை திறப்பதற்கும் கருதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 100 பேர்கள் செவிலியர் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். தற்சமயம் உள்ள வசதிகளை இவர்களின் எண்ணிக்கையை கூடுதலாக்கி மேம்படுத்துவதன் மூலமும், புதிய பள்ளிகளை 1979-80-ல் திறப்பதின் மூலமும், செவிலியர்களின் தற்கால பற்றாக்குறையை நீக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி.

தற்போது 4 பயிற்சி நிலையங்களில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு நிலையத்திலும் 30 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அரசு மற்றும் ஏழு தனியார் நிலையங்கள் மூலம் தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு மொத்தம் 280 மாணவிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் மருத்துவத் துறையில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களின் இன்றியமையாத தேவையை உணர்ந்து, பயிற்சி பெற்று வருகின்றவர்களுடைய எண்ணிக்கையைத் தேவைக்கேற்ப பெறுவதற்கான அளவில் எண்ணிக்கையை 120-லிருந்து 240-க்கு இரட்டிப்பாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து, இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், நாகர்கோவில், ஈரோடு ஆகிய இடங்களில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி நிலையங்கள் திறக்கவும் கருதப்பட்டுள்ளது. இதனால் ஆண்டுதோறும் அரசு நிலையங்களில் பயிற்சி பெறுகின்றவர்களுடைய எண்ணிக்கை 540 ஆக உயரும். புதிய பயிற்சி பள்ளிகள் திறப்பதற்கும் மற்றும் கூடுதலாக துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் ஆகும் செலவுகளை இந்திய அரசு ஈடு செய்யும்.

(இ) கண் பார்வை வரைவியலாளர் படிப்பு (Optician Course)

நீண்டகாலமாக தமிழகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண் பார்வை வரைவியலாளர் படிப்பு மீண்டும் சென்னை அரசு கண் மருத்துவமனையில் துவங்கப்பட்டுள்ளது. இப்படிப்பிற்கு ஆண்டொன்றுக்கு 30 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். படிப்பின் கால அளவு 2 ஆண்டு காலமாகும்.

(ஈ) மருந்தாக்கியல் பட்டயத்தகுதிப் படிப்பு—

மருந்தாக்கியல் பட்டயத் தகுதி பெறுவதற்கான பயிற்சி தற்சமயம் மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரையில் மட்டும்தான் நடத்தப்பட்டு வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை கீழ்க்கண்ட ஒதுக்கீடுகளுடன் 121 ஆக இருந்தது.

1. அரசு பணியில் இல்லாத மாணவர்கள்	79
2. பாண்டிச்சேரியைச் சார்ந்த மாணவர்கள்	2
3. அரசுப்பணியில் உள்ளவர்கள்	20
4. மருந்து விற்பவர்கள் மற்றும் இரசாயன வல்லுநர்களின் காப்பில் உள்ளவர்கள்.	20

மருந்தாக்கியல் சட்டம் 1948-ன் கீழ் 1981 ஆம் ஆண்டிற்குள் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தும் நிலை அவசியமாக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் 1978-79-ல் இப்பயிற்சிக்கான இடங்களின் எண்ணிக்கை 121-ல் இருந்து 150 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. இதற்குப் பின்னரும் பற்றாக் குறை காணப்படுவதால், 1979 80 ஆம் கல்வி ஆண்டிலிருந்து திருச்சிராப்பள்ளி அரசு தலைமையிட மருத்துவமனையில் இப்பயிற்சியை தொடங்க கருதப்பட்டுள்ளது. இங்கு இப்பயிற்சிக்கு 100 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

III. மருத்துவ ஆராய்ச்சி.

தமிழ்நாட்டில் மருத்துவம் சார்ந்த அறிவியலில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு 1944 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. ஆராய்ச்சிப் பணிக்கு மானியம் கேட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலிப்பதோடு தகுதியுடைய திட்டங்களுக்கு உதவி அளிக்கிறது. தற்போது ஆண்டுதோறும் இக்குழுவிடம் மொத்த மானியமாக ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒப்படைக்கப்பட்டுள்ளது

[1979 ஏப்ரல் 17

IV. கட்டாய சுற்றிருப்பு மருத்துவர்களுக்கும், முதுநிலை பயிற்சி மருத்துவர் களுக்கும் பண உதவித்தொகை குறித்து.

1—4—1978-லிருந்து கட்டாய சுற்றிருப்பு மருத்துவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூபாய் 275-லிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்தப்பட்டது. இவர்களுக்கு சாப்பாட்டுக்கு ஈட்டுத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 25-ம் அளிக்கப்படுகிறது.

இதை போலவே முதுநிலை பயிற்சி மருத்துவர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 325 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மற்ற படிகள் ஏதும் கிடையாது.

V மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்.

(அ) படுக்கைகளின் எண்ணிக்கை—

இம்மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளுடன் 21 மருத்துவக் கல்வி மருத்துவமனைகளும் நிறுவனங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இவை பல் வேறு மருத்துவ கல்லூரிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியல் ஒன்று II-வது பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. அக நோயாளி சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சில மருத்துவ மனைகளில் கூடுதலாக படுக்கைகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு மருத்துவ மனைகளில் 1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளில் உள்ள மொத்தப் படுக்கை களின் எண்ணிக்கை -வது பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகள் அனைத்திலும் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 1977-78-ல் 13,507 ஆக இருந்தது, 1978-79-ல் 13,800 ஆக உயர்ந்தது.

(ஆ) மருத்துவ ஆவணத் துறைகள்—

நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் முழு விபரத்துடன் கூடிய நோயாளியின் நோய் பற்றிய துல்லியமான அடங்கல் ஆவணங்களை வைத்து வருவதே மருத்துவ ஆவணங்கள் துறையின் பணியாகும்.

கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மருத்துவ ஆவணத்துறை ஏற்கனவே செயல்பட்டு வருகிறது.

(1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(2) அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

(3) குழந்தைகள் நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

1979 ஏப்ரல் 17]

(4) இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை.

(5) மகளிர்-குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

(6) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.

(7) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

(8) அரசு கண் மருத்துவமனை, சென்னை.

(9) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.

1979-80-ம் ஆண்டில் கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் மருத்துவ ஆவணத்துறையை அமைக்க கருதப்பட்டுள்ளது.

(1) அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

(2) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.

(3) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம் புத்தூர்.

(4) காச நோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் நிலையம், தாம்பரம்.

(5) ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.

(6) திருவொற்றீசுவரர் காசநோய் அரசு மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.

(7) அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

(8) அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.

(இ) புறநகர் மருத்துவமனைகள்—

கே. கே. நகரில் உள்ள புறநகர் மருத்துவமனை ஏற்கனவே முடிக்கப்பட்டு அக மற்றும் புற நோயாளி சிகிச்சை வசதியுடன் செயல்படத் தொடங்கி யுள்ளது. அறிஞர் அண்ணா நகரிலும், தண்டையார் பேட்டையிலும் புறநகர் மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இவைகள் சீக்கிரம் செயல்படத் தொடங்கவிருக்கிறது. பெரம்பூரில் தொடங்கக் கருதப் பட்ட புறநகர் மருத்துமனைக்காக ஏற்கனவே உரிமை பெற குறித்து ஒதுக்கப் பட்ட நிலம் சட்டப்படி ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக உடனடியாகக்

கையகப்படுத்த எதுவில்லாமல் போய்விட்ட காரணத்தால் மாற்று நிலம் ஒன்று தெரிவு செய்ய வேண்டியுள்ளது. தென் சென்னைப் பகுதிக்கும் தகுதி வாய்ந்த இடம் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

(ச) கட்டிடப் பணிகள்----

ரூ. 37.06 இலட்சம் செலவில் 8 இடங்களில் கட்டப்பட்ட கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவைகள் 1978-79-ம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை IV-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

ரூ. 149.28 இலட்சம் செலவில் 10 இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டு அவைகள் வெகு விரைவில் செயல்படத் தொடங்கும். இவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை V-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ரூ. 169.56 இலட்சம் செலவில் 25 இடங்களில் கட்டிடப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகள் பூர்த்தி அடைந்ததும் செயல்படத் தொடங்கும். இவைகளின் பட்டியல் பிற்சேர்க்கை I-ல் கொடுக்கப் பட்டுள்ளது.

1979-80-ல் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்கள் மேற்கொள்ள கருதப் படுகிறது.

(1) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ரூ. 2 இலட்சம் செலவில் அவசர கை அறுவை சிகிச்சைப் பிரிவிற்கு மேல் இரண்டாவது மாடி கட்டுதல்.

(2) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சுற்றி ரூ. 1.50 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டுதல்.

(உ) சாதனங்கள் வழங்குதல்—

1978-79-ல் ரூ. 27.79 இலட்சம் மதிப்பில் நவீன மருத்துவக் கருவிகள் வாங்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இவைகளின் விபரங்கள் VII-வது பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது.

VI வெள்ள நிவாரணம்

புயலும் வெள்ளமும் 1978 நவம்பரில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளையும், சென்னை மாநகரத்தையும் அதைத் தொடர்ந்து 1978 டிசம்பரில் சென்னை மாநகரத்தையும் சூறையாடியபொழுது மாநிலத்திலுள்ள பல்வேறு

மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும், மாவட்ட, மற்றும் வட்ட மருத்துவமனைகளிலிருந்தும் மற்றும் பிற அரசு மருத்துவ நிலையங்களிலிருந்தும் மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்கள், பட்ட மேற்படிப்பு பயிலும் மருத்துவர்கள், மற்றும் மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு அறுவை மருத்துவர் பொறுப்பின்கீழ் பணியாற்றிய மருத்துவக் குழுக்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மருத்துவ உதவிகள் வழங்கியதோடு, நோயைக் குறைப்படுத்தக் கூடியதும், தடுக்கக்கூடியதுமான நிவாரணப் பணிகளை வழங்குவதில் உதவின. 24 மணி நேரமும் இடைவிடாது ஆற்றப்பட்ட தன்னலமற்ற பாராட்டுத் திறனுடைய இச் சேவை மனநிறைவுடையதாக அமைந்ததோடல்லாமல், சமுதாயத்தாரால் பாராட்டப் படுமளவிற்கும் அமைந்தது. உடனடி நடவடிக்கைகள் ஆங்காங்கு விழிப்புணர்ச்சியுடன் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் தொற்றுநோய் எதும் பரவ வாய்ப்பில்லாமல் போயிற்று.

VII புதிய திட்டங்கள்.

மருத்துவமனைகளில் அவசர கவனிப்பிற்காகவும் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காகவும் உதவக் கூடிய நவீன மற்றும் உயிர்காக்க உதவும் மருத்துவக் கருவிகளைத் தருவித்து வழங்குவது இவ்வரசின் எண்ணமாகும். இக்கருவிகள் மாநிலம் முழுவதும் விரிவாக வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் தமிழ் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள நோயாளிகள் மருத்துவ அறிவியலில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களின் பலனை அடையும் நிலையில் இருப்பார்கள். இம் மேலான எண்ணத்திற்கிணங்க இவ்வரசு 1979-80-ல் ரூ. 156.50 இலட்சம் செலவில் 6 புதிய திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கக் கருதியுள்ளது. இத்திட்டங்களின் விபரங்கள் பிற்சேர்க்கை VIII-ல் தரப்பட்டுள்ளன. இந்த 6 திட்டங்களில் செவிலியர்கள் மற்றும் மருந்தாளர்களுக்கான பயிற்சியளிக்கும் வகையில் இரண்டு பள்ளிகள் திறக்கப்படவிருப்பதைப் பற்றிய விபரம் எற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இத் திட்டங்களின் முக்கிய தனிச் சிறப்புகள் சில கீழே சொல்லப்படுகின்றன.

1. இரண்டு தலைமையிட மருத்துவமனைகளுக்கும் இரண்டு மருத்துவக் கல்லூரி நிலையங்களுக்கும் மின் ஆக்கிகள் ஒதுக்கம் செய்தல்.

தற்சமயம் இரண்டு தலைமையிட மருத்துவமனைகளில் மின் ஆக்கிகள் இல்லை. மருத்துவமனைகளின் இன்றியமையாப் பணிகளை பராமரிக்க மின் ஆக்கிகள் மிகவும் இன்றியமையாதவை. ஆதலால் திருச்சிராப்பள்ளி மற்றும் நாகப்பட்டினத்தில் உள்ள தலைமையிட மருத்துவமனைகளுக்கும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சென்னை குழந்தை நல நிறுவனத்திற்கும் மின் ஆக்கிகள் அமைக்க கருதப்பட்டுள்ளது.

2. சென்னை மருத்துவக் கல்லூரியை உயர்நிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக உயர்த்துதல்.

ஒவ்வொரு மாநிலத்திலும் மக்களுக்குச் சிறப்புச் சிகிச்சை அளிப்பதற்கும், மருத்துவத்துறையில் ஆராய்ச்சியைப் பெருக்குவதற்கும் தனித்தகுதி பெற்ற நிறுவனம் ஒன்றாவது அவசியம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் நாட்டுப் பகுதிகளில் உள்ள ஏனைய கல்லூரிகளில் பெரும்பான்மையளவு சிறப்பு மருத்துவப் பணிகள் அமைய வேண்டியதும் அவசியமாகும். இதனால் மருத்துவம் மற்றும் அறுவை மருத்துவத்தில் திறமையுள்ள மருத்துவர்களையும் மற்றும் சிறப்பு பணிகளையும் சென்னை நகருக்கு வெளியில் அமைந்திருக்கும் மருத்துவக் கல்லூரிகளுக்கும் பரப்ப வேண்டியது அவசியமாகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், ஏனைய நகரங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளின் மேம்பாட்டிற்கு ஏராளமான திட்டங்களுக்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாண்டிலும், புதிய கட்டிடங்கள் கட்டவும், மருத்துவக் கருவிகள் வாங்கவும், சிறப்புத் துறைகளைத் திறக்கவும் சென்னைக்கு வெளியில் அமைந்திருக்கும் கல்லூரிகளில் சிறப்பறிஞர்களை நியமிக்கவும் கருதப்பட்டுள்ளது. இருப்பினும் இம்மாநிலத்தில் தனித்தகுதி பெற்ற நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்குடன் ரூ. 32 இலட்சம் மொத்தச் செலவில் சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் பொது மருத்துவ மனையைச் சார்ந்த எல்லாத் துறைகளையும் உயர்நிலைத் துறைகளாக்க கருதப்பட்டுள்ளது. இதற்காகத் தேவைப்படும் பணியாளர்கள் தமிழ்நாடு மருத்துவப் பணியிலிருந்து நியமிக்கப்படுவார்கள்.

இந்த உயர்நிலைப்படுத்தும் செயல் முறையில் ஒரு பகுதியாக சென்னை நரம்பியல் நிறுவனத்தில் ஸ்டிரோக் சென்டரைத் துவங்குவதும், அதே நிறுவனத்திற்கு "ஹிடாசி கம்ப்யூடரைஸ்டு டோமாகிராபிக் ஸ்கான்" வாங்குதலும் அமையும். இந்த நிலையத்தை ஏற்படுத்துவதின் மூலமும், மேற்சொன்ன கருவிகளை பொருத்துவதன் மூலமும் தமிழகத்தின் தலைநகரில் உள்ள பொது மருத்துவமனை இந்தியத் துணைக் கண்டத்தில் முதன்மையான தாக அமையக்கூடும்.

3. மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை மற்றும் அவசரக் காலப் பணிகளுக்கான ஏற்பாடு.

ஊரகப் பகுதிகளில் விபத்திற்குள்ளானவர்களுக்கு உடனடியாகவும், பயனுள்ளதாகவும் சிகிச்சையளிக்கும் ஏற்பாட்டிற்காக 1979-80-ல் ஒரு புதிய திட்டம் உருவாக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் எல்லா முதலுதவி மற்றும் புத்துயிர் கொடுக்கும் கருவியுடன் கூடிய அவசர மருத்துவ ஊர்

ஊர்திகள் ((Ambulances)) விபத்து நடந்த இடங்களுக்கு விரைவதற்கும், காயம் பட்டவர்களுக்கு முதலுதவி வழங்குவதற்கும் உடனடி சிகிச்சைக்காக மாவட்டத் தலைமையிட மருத்துவமனைக்கோ அல்லது வட்ட மருத்துவமனைக்கோ அவர்களைக் கொண்டு செல்வதற்கும் பயன்படும் வகையில் வட்ட மருத்துவமனைகளில் நிறுத்தி வைக்கப்படும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், முதலுதவி நிலையங்களாகவும், வட்ட மருத்துவ மனைகள் விபத்துக்குள்ளாவோர்க்கு அவசர சிகிச்சையளிக்கும் வாய்ப்புகள் பெற்றதாகவும், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் மேல் சிகிச்சை [illegible] அமையும். ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் 30 படுக்கைகள் அமைக்கப்படும். மற்ற உயிர் காக்கும் பிரிவுகளும் வட்ட மருத்துவ நிலையங்களில் செயல்படும். முதல் கட்டமாக மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ. 118.32 இலட்சம் மொத்தச் செலவில் விபத்து சிகிச்சை மற்றும் அவசர காலப் பணிகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலும் இப்பணியினை ஏற்படுத்துவது இவ்வரசின் குறிக்கோளாகும்.

VIII கிங் நிறுவனம், கிண்டி.

கிண்டியிலுள்ள கிங் நிறுவனம் ஒரு பெரும் சுகாதார ஆய்வுக் கூடமாக மட்டுமல்லாமல் கல்வி—ஆராய்ச்சி நிலையமாகவும் செயல்படுகிறது. இந்நிறுவனத்தில் உறைய வைத்து உலர வைக்கும் அம்மைப்பால், காலரா, டைபாயிட், நோய் தடுக்கும், நோயைக் குணப்படுத்தும் மருந்துகளும், அம்மைப்பால், இசிவு நோய்த் தடுப்பு மருந்து, விலங்குகளின் குருதி நிணநீர் ஆகியவையும் தயாரிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனம் காலரா, டைபாயிட் முதலிய நோய்த் தடுப்பு மருந்துகளை பல மாநிலங்களுக்கு வழங்கி அதற்கான செலவுத் தொகையைப் பெற்று வருகிறது. சமீபத்தில் இந்த நிறுவனம் மேற்கு வங்காளத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உபயோகத்திற்காக ரூ. 1,72,000 மதிப்புள்ள 10,20,000 அளவுள்ள (doses) காலரா, டைபாயிட் தடுப்பு மருந்துகளை மேற்கு வங்காள அரசுக்கு வழங்கியுள்ளது.

தொத்து நோய் பற்றி ஆய்வு செய்வதற்கும் எங்கும் பரவியுள்ளதும் அசாதாரணமான கூறுகளுடன் கூடியதுமான நோய்கள் பற்றி அந்தந்த இடங்களுக்கே சென்று விரிவாக ஆய்வு செய்வதற்கும் நடமாடும் ஆய்வுக் கூடம் ஒன்று செயல்படுகிறது. மக்கள் திரளாகக் கூடும் இடங்களான வர்த்தகப் பொருட்காட்சிகள், சந்தைகள், திருவிழாக்கள் போன்ற இடங்

களுக்கு ஒரு குழுவுடன் கூடிய பிரிவு ஒன்று அனுப்பி வைக்கப்படுகிறது. நோய்கள் மக்களிடையே பரவாமல் தடுப்பதிலும், காலரா போன்ற நோய் மக்களிடையே பரவாவண்ணம் தடுப்பதற்கு அவற்றை முன்னதாகவே கண்டறிவதிலும் இக்குழு உதவி புரிகிறது.

இந்த நிறுவனத்தின் இரத்த சேமிப்பு மத்திய நிலையம் ஒருவருக்கு இரத்தம் ஏற்றுதல், நினைவிழந்தவர்களை மீண்டும் நினைவு பெறச்செய்து முனைப்பாக மருத்துவச் சிகிச்சை அளித்தல் ஆகியவற்றில் மருத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கிறது. உலர வைத்த பிளாஸ்மா, ஈரக்கசிவுள்ள பிளாஸ்மா, நிணநீர் ஆகியவை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள எல்லா இரத்த சேமிப்பு நிலையங்களுக்கும், தனியார் நிலையங்களுக்கும், இரயில்வேத் துறைகளுக்கும், இந்தியாவில் உள்ள ஏனைய சில மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள எல்லா இரத்த சேமிப்பு நிலையங்களுக்கும் இன்றியமையாத இரத்த சேமிப்பு சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

பிறந்த குழந்தைகளுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் கட்டாயமாக அம்மை குத்த வேண்டியிருப்பதால், தமிழ்நாட்டிற்கும், இதர மாநிலங்களுக்கும் அம்மைப்பால் வழங்கப்பட்டு வருகிறது.

சென்ற பல ஆண்டுகளாக இசிவு நோய்க்கான டாக்சாய்ட் மருந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக மேம்படுத்தப்பட்ட நல்ல தரமான Vaccines Tetanus Toxoid, PTAP உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பால், நிணநீர், இரத்தப் பொருள்கள், மூலக்கரைசல்கள் முதலியவை இந் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சில பொருட்களின் தரக் கட்டுப்பாட்டைக் கவனிக்கும் பணியை முழுநிலையில் அமைந்த உயிரியல் சார்ந்த கட்டுப்பாடு ஆய்வுக்கூடத் துறை கவனித்து வருகிறது. இது இந் நிறுவனத்தின் ஒரு முக்கியமான அங்கமாகத் திகழ்கிறது. மேலும் 1940 ஆம் ஆண்டு மருந்துகள்-ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் C, C-1 விவர அட்டவணைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளைப் பகுப்பாய்வு செய்வதற்குரிய அரசு பகுப்பாய்வாளரின் (சிறப்பு மருந்து) மாநில ஆய்வுக் கூடமாகவும் இந்நிறுவனம் செயல்படுகிறது. மேற்சொன்ன சட்டத்தைச் செயல்படுத்துவதில், பல்வேறு கூட்டுப் பொருட்களால் தயாரிக்கப்படும் பலவகையான மருந்துப் பொருட்கள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் அரசின் பல்வேறு மருத்துவமனைகள், அரசின் ஏனைய நிறுவனங்கள் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள், இரயில்வே மற்றும் இதர தனியார் நிறுவனங்களில்

வாங்கப்படும் மருந்துகளின் மாதிரிகளுடன் மருந்துகளும் இந்த நிலையத்தில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இதற்கு முழுவதும் தேவையானதும் மிகவும் நவீனமானதும், நூதனமானதுமான கருவிகளுடன் இத்துறை அமைந்துள்ளது.

புதிய திட்டங்கள் :

(1) **வெறி நாய்க்கடியின் நச்சு அகற்றுகிற மருந்து**.—வெறி நாய்க்கடியின் நச்சு அகற்றுகிற மருந்துக்கு இம்மாநிலத்தில் அதிகத் தேவை உள்ளபடியால், அம்மைப்பால் தயார் செய்வதற்குப் பதிலாக புதிய திட்டமாக இம்மருந்தைத் தயார் செய்வது என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) **வெறி நாய்க்கடி நோய் தடுப்பு நிணநீர்**.—மக்களின் உபயோகத்திற்காக வெறி நாய்க்கடி நோய் தடுப்பு நிணநீர் குதிரைகளிடமிருந்து உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவும் ஒரு புதிய திட்டமாக எடுத்துக் கொள்ளப்படும்.

(3) **டிப்திரியா டிடானஸ் டாக்ஸாய்ட் (DT)**.— இந்த ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டு என்பதால் பெருமளவு குழந்தைகளின் உயிரிழப்புக்கு காரணமாக இருக்கின்ற தொண்டை அடைப்பான் நோயிலிருந்து காப்பதற்கு தேவையான மருந்து 1978-79-ம் ஆண்டில் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இது படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் அதிகரிக்கப்படும்..

(4) **டிப்திரியா பெர்டூஸிஸ்-டிடானஸ் டாக்ஸாய்ட் (DPT)**.— இம் மருந்து மூன்று விதமான கூட்டுப் பொருட்களைக் கொண்டது. இவைகளில் இரண்டு கூட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. (டி.டி.) மூன்றாவது கூட்டுப் பொருளான பெர்டூஸிஸ் (கக்குவான் இருமல்) உற்பத்தி செய்ய எடுத்துக்கொள்ளப்படும்.

(5) **ஆண்டி வெனின் (பாம்புக்கடி விஷத் தடுப்பு)**.—விஷமுள்ள பாம்புக் கடிகளின் சிகிச்சைக்கு உபயோகப்படுத்தப்படும் ஆண்டி வெனின் என்னும் மருந்தை உற்பத்தி செய்வது, 1978-ல் ஒரு புதிய திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

B மருத்துவப் பணிகள், மற்றும் குடும்பநலத்துறை.

I மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

(அ) 1978-79 ஆம் ஆண்டு சாதனைகள்.

இம்மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் இருக்கின்றன. 1977-78-ம் ஆண்டில் இம் மருத்துவமனைகளின் படுக்கைகளின் எண்ணிக்கை 4,054 ஆக இருந்தது. 1978-79-ம் ஆண்டில் இம்மருத்துவமனை

களில் பொதுப் பிரிவுகளில் 281 படுக்கைகளும், தொழு நோயாளிகளுக்கான தற்காலிக சிகிச்சை அளிக்கக்கூடிய பிரிவுகளில் 120 படுக்கைகளும் அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மொத்தப் படுக்கைகள் எண்ணிக்கை 4,455 ஆக உயர்ந்திருக்கிறது.

1978-79ம் ஆண்டில் கூடுதலாக சேர்க்கப்பட்ட படுக்கைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:—

		பொதுப் பிரிவு படுக்கைகள்.	தொழு நோய் பிரிவு படுக்கைகள்
	(1)	(2)	(3)
1.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை உதகமண்டலம்.	40	..
2.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, ஈரோடு.	22	20
3.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, சேலம்,	4	20
4.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, புதுக்கோட்டை.	100	20
5.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, நாகப்பட்டினம்.	115	..
6.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, திண்டுக்கல்.	..	20
7.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, நாகர்கோவில்,	..	20
8.	அரசினர் தலைமையிட மருத்துவ மனை, காஞ்சிபுரம்.	..	20
		281 +	120
		401	

(ஆ) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் திட்டங்கள் :

1978-79ஆம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 50,000 செலவில் கழிவுநீர் அகற்று ஏற்பாட்டிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தர்மபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முன்னாள் படை வீரர்களுக்காக ரூ. 90,000 செலவில் 12 படுக்கைகளுடன் கூடிய பிரிவினைக் கட்டவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. முன்னாள் படைவீரர் நலநிதி யிலிருந்து ரூ. 51,136 நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

1979-80-க்கான கட்டிடத் திட்டங்கள் :

(i) மதுரை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் ரூ. 2 இலட்சம் செலவில் ஒரு புறநோயாளித் தொகுதி கட்ட கருதப் பட்டுள்ளது ; மற்றும்

(ii) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 14.65 இலட்சம் மொத்தச் செலவில் புறநோயாளித் தொகுதியும் மகப்பேறு தொகுதியும் கட்ட கருதப்பட்டுள்ளது.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத் துறைகள் ஏற்படுத்துதல் :

தற்சமயம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும்தான் மருத்துவ ஆவணத் துறைகள் இயங்கி வருகின்றன. இதன் தொடர்ச்சியாக சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி வேலூர் ஆகிய நான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத் துறைகள் ஏற்படுத்த கருதப் பட்டுள்ளது.

(ஈ) அரசு பதிவிதழ் பெறாத அலுவலர்கள் மருந்தகம் :

பத்து பெரும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் மற்றும் சென்னை நகரிலும் செயல்பட்டு வரும் அரசு ஊழியர்களுக்கான மருந்தகங் களை பெறும் விரிவாக்கும் நோக்குடன் ரூ. 11.67 இலட்சம் மொத்தச் செலவிற்கும், 1979-80 ஆம் ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் செலவிற்கும் ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

II வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

(அ) 1978-79 ஆம் ஆண்டு சாதனைகள் :

இம்மாநிலத்தில் 108 வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் இருக்கின்றன. 1977-78 ஆம் ஆண்டு வரை இம்மருத்துவமனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 5,653 ஆக இருந்தது. இம்மருத்துவமனைகளில் 31—12—1978 வரை 130 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 5,783 ஆக உயர்ந்துள்ளது.

1978-79-ல் கூடுதலாக சேர்க்கப்பட்ட படுக்கைகளின் விவரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன :

1.	அரசு மருத்துவமனை, குளித்தலை	..	1[illegible]
2.	அரசு மருத்துவமனை, திருவள்ளூர்	.. ..	1[illegible]
3.	அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை	..	[illegible]
4.	அரசு மருத்துவமனை, மணப்பாறை	.. ..	1[illegible]
5.	அரசு மருத்துவமனை, சிதம்பரம்	.. ..	[illegible]
6.	அரசு மருத்துவமனை, விழுப்புரம்	.. ..	[illegible]
7.	அரசு மருத்துவமனை, சங்கரி	.. ..	2[illegible]
8.	அரசு மருத்துவமனை, ஒரத்தநாடு	.. ..	[illegible]
9.	அரசு மருத்துவமனை, தாம்பரம்	.. ..	2[illegible]
10.	அரசு மருத்துவமனை, ராசிபுரம்	.. ..	2[illegible]

1979-80 ஆம் ஆண்டில் படுக்கைகளின் எண்ணிக்கையில் மேலும் 52 உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டிடத் திட்டங்கள் :

1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(i) மொத்தம் ரூ. 2.80 இலட்சம் செலவில் மதுராந்தகம், நாங்குநேரி, சீர்காழி, திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ரூ. 70,000 செலவில் அறுவை சிகிச்சை அரங்கங்கள் கட்டுதல்.

(ii) தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் ரூ. 8.75 இலட்சம் செலவில் புதிய அரசு மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்.

1979-80-க்கான திட்டங்கள் :

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படும் :—

(i) இராசிபாளையம் அரசு மருத்துவமனையில் ரூ. 40,000 செலவில் பிணப் பரிசோதனை கொட்டகை கட்டுதல்.

(ii) மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் ரூ. 1.90 இலட்சம் செலவில் புற நோயாளி பிரிவு கட்டுதல்.

(iii) மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் ரூ. 1.50 இலட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்.

(iv) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ரூ. 2.00 இலட்சம் செலவில் 32 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுதல்.

(v) வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் ரூ. 2.00 இலட்சம் செலவில் புற நோயாளி பிரிவு கட்டுதல்.

III வட்டத் தலைமையிடங்களில் அல்லாத மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

(அ) 1978-79 ஆம் ஆண்டு சாதனைகள் :

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளும், 5 காச நோய் மருத்துவம் மற்றும் நலம் பேண் மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,724 படுக்கைகள் உள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் ஐந்து அரசு மருந்தகங்கள் மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன. இவைகளில் 82 படுக்கைகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால் இம்மருத்துவமனைகளின் மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 2,806 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1978-79-ல் படுக்கைகள் அதிகரிக்கப்பட்ட மருத்துவ நிலையங்களின் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

1.	அரசினர் மருத்துவமனை, உடையார்பாளையம்		6
2.	அரசினர் மருத்துவமனை, மேலப்பாளையம்	..	10
3.	அரசினர் மருத்துவமனை, பெருநாழி	.. ..	4
4.	அரசினர் மருத்துவமனை, இடப்பாடி	.. ..	10
5.	அரசினர் மருத்துவமனை, சுப்பிரமணியபுரம்	..	28
6.	அரசினர் மருத்துவமனை, மல்லூர்	.. ..	8
7.	அரசினர் மருத்துவமனை, சாப்டூர்	..	10
8.	அரசினர் மருத்துவமனை, கம்பம்	.. ..	6
			82

கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களில் மேலும் 56 படுக்கைகள் கூடுதலாக்கப் படவிருக்கிறது.

1.	அரசினர் மருத்துவமனை, முத்துப்பேட்டை ..	8
2.	அரசினர் மருத்துவமனை, செய்யூர்	28
3.	அரசினர் மருத்துவமனை, கொடுமுடி ..	20
4.	அரசினர் மருத்துவமனை, ஆடுதுறை ..	8
		56

(ஆ) கட்டிடத் திட்டங்கள் :

1978-79-ல் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்பளிப்புத் தரப்பட்டுள்ளது :—

(1) கன்னியாகுமரி மாவட்டம், கொளச்சல் அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன் கூடிய பிரிவு, அறுவை அரங்கம், சமையல் கூடம், மற்றும் மருத்துவ அதிகாரி குடியிருப்பு ரூ. 2.50 இலட்சம் செலவில் கட்டுதல்.

(2) 1977 ஆம் ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட சில கட்டிடப் பகுதிகளை இடித்து விட்டு திருவரங்கம் அரசு மருத்துவமனையில் ரூ. 7 இலட்சம் செலவில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவு கட்டுதல்.

(3) நாகூர் நகராட்சி மருந்தகத்தைச் சுற்றியுள்ள மனையில் 24 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை அமைக்க ரூ. 5.25 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுதல்.

(4) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அரசு மருத்துவமனையில் ரூ. 85,000 செலவில் 15 படுக்கைகள் கொண்ட கூடுதல் பிரிவு கட்டுதல்.

(5) சேலம் மாவட்டம், இடப்பாடியில் உள்ள மருந்தகத்தை ரூ. 25,500 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

(6) மதுரை மாவட்டம், சாப்டூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 18,950 செலவில் 10 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக மாற்றுதல்.

(7) சேலம் மாவட்டம், மல்லூரில் உள்ள அரசு மருந்தகத்தை ரூ. 19,970 செலவில் 8 படுக்கைகளுடன் கூடிய மருத்துவ மனையாக மாற்றுதல்.

1979-80-ம் ஆண்டிற்கான திட்டம் :

(1) சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு மருத்துவ மனையில் 0.75 இலட்சம் ரூபாய் செலவில் எக்ஸ் கதிர் தொகுதி கட்டுதல்.

(2) சோழவந்தானில் ரூ. 3.30 இலட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு, பிரசவ அறை, அறுவை சிகிச்சை அரங்கம் கொண்ட புதிய மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுதல்.

(3) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி அரசு மருத்துவமனையில் ரூ. 2.00 இலட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு, பிரசவ அறை அறுவை சிகிச்சை அரங்கம் கட்டுதல்.

(4) திருவரங்கம் அரசு மருத்துவமனையில் ரூ. 3.00 இலட்சம் செலவில் இரண்டு மருத்துவ அதிகாரிகள் குடியிருப்பு இல்லங்களை புதிதாக கட்டவும் மற்றும் அலுவலகம், கிடங்கு அறை, பல்சிகிச்சைப் பிரிவு, பரிசோதனைச் சாலை, இரத்த சேமிப்பு வங்கி முதலிய வசதிகள் அமைவதற்கு மருத்துவ மனையின் முதல் மாடியில் சில சேர்ப்புகளும் மாற்றுதல்களும் செய்தல்.

(5) புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் ரூ. 2.00 இலட்சம் செலவில் அக நோயாளி சிகிச்சை வசதிகள் அளிப்பதற்கு 20 படுக்கைகள் கொண்ட பிரிவு, பிரசவ அறை, அறுவை சிகிச்சை அரங்கத்துடன் மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுதல்.

(6) இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி அரசு மருத்துவ மனையில் ரூ. 3.00 இலட்சம் செலவில் அக நோயாளி சிகிச்சைப் பணிகள் அளிப்பதற்கு தற்சமயம் உள்ள மருந்தக இடத்தில் சிறிய சமையல் அறைக்கான வசதிகளுடன் 20 படுக்கைகள் கொண்ட பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கம், பிண அறுவை கொட்டகை, பரிசோதனைக் கூடம் முதலியன கட்டுதல்.

(7) தஞ்சாவூர் மாவட்டம், சித்தமல்லியில் 10 படுக்கைகளுடன் அக நோயாளி சிகிச்சை வசதிகள் அளிக்க ரூ. 2.00 இலட்சம் செலவில் மருத்துவ மனைக் கட்டிடம் கட்டுதல்.

IV. அரசு மருந்தகங்கள் :

இம்மாநிலத்தில் 162 மருந்தகங்கள் உள்ளன. அவைகளில் 244 படுக்கைகள் உள்ளன.

1978-79 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

(i) கீழ்க்கண்ட கிராமங்களில் 7 அரசு மருந்தகங்கள் திறத்தல்.—

1. பெரியபட்டினம்.—இராமநாதபுரம் மாவட்டம்.

2. உச்சிநத்தம்.—இராமநாதபுரம் மாவட்டம்.

3. வாலிநோக்கம்.—இராமநாதபுரம் மாவட்டம்.

4. மேற்பனைக்காடு.—புதுக்கோட்டை மாவட்டம்.

5. கோனாப்பேட்டை.—புதுக்கோட்டை மாவட்டம்.

6. இளம்பிள்ளை.—சேலம் மாவட்டம்.

7. காடிகுப்பம்.—வட ஆற்காடு மாவட்டம்.

(ii) கோயம்புத்தூர் மாவட்டம், பர்கூர் அரசு மருந்தகத்தில் ரூ. 90,000 செலவில் பணியாளர் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.

(iii) பின்வரும் அரசு மருந்தகங்களில் ஆறு படுக்கைகள் கொண்ட பிரிவு, மகப்பேறுக்கான பிரசவ மற்றும் அறுவை அரங்கம், சமையற் கூடம் ரூ. 5,00 இலட்சம் மொத்தச் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டுதல் :—

(1) அரசினர் மருந்தகம், பள்ளிகொண்டா, வட ஆற்காடு மாவட்டம்.

(2) அரசினர் மருந்தகம், மாத்தூர், தர்மபுரி மாவட்டம்.

(3) அரசினர் மருந்தகம், மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

(4) அரசினர் மருந்தகம், தோகைமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(5) அரசினர் மருந்தகம், ராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

1979-80 ஆம் ஆண்டுக்கான திட்டம்.

1979-80-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிடத் திட்டங்கள் மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது :—

) சமீபத்திய வெள்ளத்தினால் கன்னியாகுமரி மாவட்டம் ஆத்தூரி லுள்ள அரசு மருந்தகம் பாதிக்கப்பட்டதால் ரூபாய் 1.00 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல்.

( ) செங்கல்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையில் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் மருந்தகம் கட்டுதல்.

(iii) தஞ்சாவூர் மாவட்டம், மங்கநல்லூரில் ரூபாய் 2.00 இலட்சம் செலவில் மருந்தகக் கட்டிடம் கட்டுதல்.

மேலும்,

(iv) சுற்றுப்புற கிராமங்களில் வாழும் 24,500 மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஈரோடு வட்டம் அரசூரில் ஓர் அரசு மருந்தகம் திறக்க அரசு கருதியுள்ளது.

(ii) 15,000 மக்களுக்கு மருத்துவப்பணிகள் அளிப்பதற்கு ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கோட்டைப் பட்டினத்தில் ஓர் அரசு மருந்தகம் திறக்க அரசு கருதியுள்ளது.

(iii) டி. போளூர் ஊராட்சி ஒன்றியத்தினரால் நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தினைப் பெற்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், குணமங்கலத்தில் ஓர் அரசு மருந்தகம் கட்ட அரசு கருதியுள்ளது. ஓர் நிலையான கட்டிடம் கட்டப்படுகின்றவரை ஊராட்சி ஒன்றியம் வாடகை இல்லாமல் ஓர் கட்டிடம் அளிக்கவும் சம்மதித்திருக்கிறது.

(iv) மானாமதுரை அரசு மருந்தகத்திற்கு ரூ. 1 இலட்சம் கூடுதல் செலவில் மேம்பாடுகள் செய்தல்.

V. எக்ஸ் கதிர் சாதனங்கள்.

1978-79 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டம். நாகர்கோவில் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ஒரு 100 எம். ஏ. எக்ஸ் கதிர் பிரிவினை வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1979-80-ல் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள கருதப்பட்டுள்ளது :—

1. திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 100 எம். ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

2. தூத்துக்குடி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் 200 எம். ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

3. திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை அரசு மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட எக்ஸ் கதிர் பிரிவுக்கு 109 எம்.ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

4. தென் ஆற்காடு மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் 50 எம். ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

5. புதுக்கோட்டை மாவட்டம், வளையப்பட்டி அரசு பாப்பாயி மருத்துவ மனையில் 100 எம் ஏ. எக்ஸ் கதிர் சாதனம்.

VI தனித்துறைகளை ஏற்படுத்துவது.

(1) இரத்த சேமிப்பு வங்கி.

அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைக்காகவும், அறுவை சிகிச்சைக்காகவும் மற்றும் பிரசவத்திற்காகவும் நோயாளிகளின் எண்ணிக்கை நாள் தோறும் அதிகமாகிக் கொண்டிருப்பதால் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தல்

[1979 ஏப்ரல் 17

மிக அவசியமாகும். மேலும். இவ்வரசின் "விபத்துக்கள் மற்றும் அவசரப் பணிகள்" என்ற புதிய திட்டத்தினை செயலாக்கவும் இரத்த சேமிப்பு வங்கிகள் அத்தியாவசியமாகும். 31—3—1978 முடிய மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்திராத மருத்துவமனைகளில் 40 இரத்த சேமிப்பு வங்கிகள் இயங்கி வந்தன.

1978-79-ம் ஆண்டு, கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :—

(i) அரசு மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(ii) அரசு மருத்துவமனை, ஆம்பூர், வட ஆற்காடு மாவட்டம்.

சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு மருத்துவமனையில் ஒரு இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்த மேட்டூரிலுள்ள ரோட்டரி சங்கம் வழங்கியுள்ள நன்கொடையினை ஏற்றுக்கொள்ள அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1979-80-ம் ஆண்டு கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது :—

(i) அரசு மருத்துவமனை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.

(ii) அரசு மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

(iii) அரசு மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

(iv) அரசு மருத்துவமனை, அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

(v) அரசு மருத்துவமனை, பெரியகுளம், மதுரை மாவட்டம்

(vi) அரசு மருத்துவமனை, சிவகெங்கை, இராமநாதபுரம் மாவட்டம்

(vii) அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

(viii) அரசு மருத்துவமனை, விருத்தாச்சலம், தென் ஆற்காடு மாவட்டம்.

(ix) அரசு மருத்துவமனை, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.

(x) அரசு மருத்துவமனை, தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

1979 ஏப்ரல் 17]

(2) பல் மருத்துவச் சிகிச்சை பிரிவுகள்.

1978-79ஆம் ஆண்டில், கீழ்க்காணும் ஐந்து இடங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியது :—

(i) அரசு மருத்துவமனை, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

(ii) அரசு மருத்துவமனை, திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

(iii) அரசு மருத்துவமனை, சிதம்பரம், தென் ஆற்காடு மாவட்டம்.

(iv) அரசு மருத்துவமனை, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

(v) அரசு மருத்துவமனை, பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

தற்போது மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்திராத மருத்துவமனைகளில் 88 பல் மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

(3) முட நீக்கியல் துறை.

1978-79 ஆம் ஆண்டில் உதகமண்டலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முட நீக்கியல் துறை ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியது. தற்போது 10 முட நீக்கியல் சிகிச்சை பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ஒரு முட நீக்கியல் துறை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

(4) காது, மூக்கு, தொண்டை மருத்துவத் துறை,

1978-79 ஆம் ஆண்டில், தர்மபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், காது, மூக்கு, தொண்டை மருத்துவ பிரிவு ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியதனால் மொத்தம் 12 காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள் தற்போது இயங்கி வருகின்றன.

1979-80 ஆம் ஆண்டில், புதுக்கோட்டை, உதகமண்டலம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

(5) பால்வினை நோய் சிகிச்சைக்கான மருந்தகங்கள்.

தற்சமயம் பால்வினை நோய் சிகிச்சைக்கான மருந்தகங்கள் எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், குன்னூர், பத்மநாபபுரம், கிருஷ்ணகிரி, நாமக்கல் ஆகிய இடங்களில் உள்ள வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் இயங்கி வருகின்றன.

[1979 எப்ரல் 17

2. கீழ்க்கண்ட மருத்துவ நிலையங்களில், 1979-80 ஆம் ஆண்டு மாநிலத் திட்டத்தின் கீழ் பால்வினை நோய் சிகிச்சைக்கான மருந்தகங்கள் தொடங்கப் கருதப்பட்டுள்ளது.

(i) அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை.

(ii) அரசு மருத்துவமனை, உடுமலைப்பேட்டை.

(iii) அரசு மருத்துவமனை, பழனி.

(iv) அரசு மருத்துவமனை, திருவண்ணாமலை.

(v) அரசு மருத்துவமனை, கரூர்.

இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆகவே மத்திய அரசு செய்யும் நிதி உதவியினை பயன்படுத்தி கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் பால்வினைநோய் சிகிச்சைக்கான மருந்தகங்களை ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது.

(i) அரசு மருத்துவமனை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டம்.

(ii) அரசு மருத்துவமனை, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.

(iii) அரசு மருத்துவமனை, சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்.

(iv) அரசு மருத்துவமனை, திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம்.

(v) அரசு மருத்துவமனை, கூடலூர், நீலகிரி மாவட்டம்.

(6) கண் மருத்துவம்.

1977-78ம் ஆண்டு வரை 11 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 2 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1978-79ம் ஆண்டில், புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஒன்று அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது 12 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் 2 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் உள்ளன.

1979-80ம் ஆண்டில் தர்மபுரி, நாகப்பட்டினம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் இரண்டிலும் ஒவ்வொரு கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

1979 எப்ரல் 17]

மத்திய அரசு அளிக்கவிருக்கும் 2.50 இலட்ச ரூபாய் மைய உதவியை பயன்படுத்தி கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் அக நோயாளிகள் கண்நோய் சிகிச்சை அளிக்கக் கருதப்பட்டுள்ளது :—

(i) அரசு மருத்துவமனை, திருவில்லிபுத்தூர்.

(ii) அரசு மருத்துவமனை, சிவகங்கை.

(iii) அரசு மருத்துவமனை, கானாடுகாத்தான்.

(iv) அரசு மருத்துவமனை, பழனி.

(v) அரசு மருத்துவமனை, அறந்தாங்கி.

(7) மனநோய் மருத்துவமனை.

1978-79 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மனநோய் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :—

(i) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, புதுக்கோட்டை.

(ii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, காஞ்சீபுரம்.

(iii) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, இராமநாதபுரம்.

(iv) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.

(v) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வேலூர்.

(vi) மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தூத்துக்குடி.

தற்போது 11 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மனநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

(8) சிசு நோய் மருத்துவம்.

தற்போது எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் சிசு நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது.

கீழ்க்கண்ட அரசு மருத்துவமனைகளில், 1979-80-ல் சிசு நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது :—

(i) அரசினர் மருத்துவமனை, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

(ii) அரசினர் மருத்துவமனை, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

iii) அரசினர் மருத்துவமனை, விழுப்புரம், தென் ஆற்காடு மாவட்டம்.

(iv) அரசினர் மருத்துவமனை, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

(v) அரசினர் மருத்துவமனை, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

VII. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.

1978-79 வரை, 132 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இவைகளில் இதுவரை 110 மருந்தகங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மீதமுள்ளவை எடுத்துக் கொள்ளப்படுவது வெவ்வேறு நிலைகளில் உள்ளது.

VIII. தொற்று நோய்கள்.

(அ) தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாட்டில் தொழுநோய் மிக அதிகமான அளவில் பரவியுள்ளது. ஆயிரத்தில் 10 முதல் 40 பேர்களிடம் இந்நோய் காணப்படுகிறது. தொழுநோய்க்கு ஆளானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதே தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்ட மாதிரியின் அடிப்படையில் இத்திட்டம் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகிறது. மத்திய அரசின் 100 சதவீத உதவியுடன் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய திட்டங்கள் மைய அரசு ஆதரவு பெற்ற திட்டங்களாக இருக்கின்றன.

நான்காவது திட்ட முடிவில், நான்காவது திட்டத்தின்போது துவங்கப்பட்ட புதிய பணிகளின் செலவினை மாநில அரசு ஒப்புவிக்கப்பட்ட செலவினமாக ஏற்றுக்கொள்கிறது.

மத்திய அரசு ஒவ்வொரு வருடமும் மாநில அரசு அடைய வேண்டிய இலக்கினைக் குறித்து, நிதி ஒதுக்கீடு செய்கிறது. மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாநில அரசு மத்திய அரசின் இலக்கினை அனுமதிக்கிறது.

ஐந்தாவது திட்ட சமயத்தில், மத்திய அரசின் இலக்கும் மாநில அரசின் சாதனையும் பின்வருமாறு :—

பிரிவுகள் வகைகள். (1)	1974-75 மத்திய அரசு குறித்துள்ள இலக்கு. (2)	மாநில அரசு அனுமதி வழங்கியது. (3)	1975—76 மத்திய அரசின் இலக்கு. (4)	மாநில அரசு அனுமதி வழங்கியது. (5)	1976-77 மத்திய அரசு குறித்துள்ள இலக்கு. (6)	மாநில அரசு அனுமதி வழங்கியது. (7)
அரசு தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு.	5	5+2*	10	10	19	10
பழைய பிரிவுகளை உயர்நிலைப் படுத்துதல்.	3	3	5	5	7	4
நகரத் தொழுநோய் நிலையங்கள்.	5	5	20	20	23	23
எஸ். இ. டி.	50	10*	..	..	..	..
*மீதமுள்ள 40 எஸ். இ. டி. பிரிவுகளுக்குப் பதிலாக, இரண்டு தொழு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.						
தற்காலிக மருத்துவ பிரிவுகள்.	2	2	8	8	15	15
மறுபடி அறுவை சிகிச்சை செய்யும் பிரிவுகள்.	..	..	3	3	6	6
மாவட்ட தொழு நோய் அதிகாரி.	3	3	5	5	4	4

[1979 ஏப்ரல் 17

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியளவும் செலவினமும் பின்வருமாறு :—

வருடம்.	மத்திய அரசின் உதவி.	மாநில அரசின் ஏறத்தாழ செலவினங்கள்.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1974-75	4.18	71.19
1975-76	24.69	73.59
1976-77	40.83	77.91
1977-78	71.30	78.36
1978-79	61.00 (சனவரி 1979 வரை).	84.63

ஒவ்வொரு வருடத்திலும் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் வருடாந்திர கணக்கீட்டின் மூலம் (Annual Epidemiological Survey) உள் மதிப்பீடு என்ற சிறப்பு முறை ஒவ்வொரு துணை நிலையத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 11 வயதுக்குள்ள பள்ளி மாணவர்களிடையே தொழு நோய் பற்றியுள்ளவர்களை கண்டறிய ஏற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்கள் பரிசோதனைத் திட்டம், 1978-79 ஆம் ஆண்டு முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

சுகாதார ஆய்வாளர்களுக்கு பள்ளி மாணவர்கள் பரிசோதனைத் திட்டம் பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. நகரக தொழுநோய் மருத்துவப் பணியாளர்களுக்கும் பள்ளி மாணவர்கள் பரிசோதனைத் திட்டம் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாதனை பின் வருமாறு :—

சோதனை செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.	13,19,986
தொழு நோய் இருக்கிறதா என கண்டறிந்த பேர்கள்.	14,050

1979 ஏப்ரல் 17]

(ஆ) காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்—

தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராமப்புறங்களிலுள்ள மருந்தகங்கள் (Rural Dispensaries) ஆகியவற்றில், காச நோயினை கண்டறிதல், சிகிச்சையளிக்க வசதிகள் ஆகியவை உள்ளன.

மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், புற நகர் நிலையங்களில், நோயினை கண்டறிதல் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிகமான அளவில் நோயாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு, சிகிச்சைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதுவரை (30—9—1978 முடிய) சுமார் 8.7 இலட்சம் மக்களிடையே இந்நோய் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் காசநோய் சிகிச்சைக்காக 3,505 படுக்கைகள் மருத்துவ மனைகளிலும் காசநோய் நிலையங்களிலும் உள்ளன. உசிலம்பட்டியில் ஏற்கனவே இருக்கும் பணியாளர்களுடன் ரூ. 1 இலட்சம் செலவில் ஒரு புதிய 15 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு காச நோய்ச் சிகிச்சைக்கென இயங்க ஆரம்பித்துள்ளது. ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட புதிய பிரிவு ரூ. 1,37,000 செலவில் கட்டப்படுகிறது.

மாவட்ட காச நோய் மருத்துவ நிலையங்கள் மட்டுமின்றி, மார்பு நோய் மருத்துவப் பிரிவுகள் எனப்படுகிற காசநோயினை கண்டறியும் சிறப்பு நிலையங்கள் பூவிருந்தவல்லி, விழுப்புரம், அருப்புக்கோட்டை, திருவண்ணாமலை, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு நிலையங்களுடன் இணைந்த 23 பி.சி.ஜி. குழுக்கள் மூலமாக இருபது வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்படுகிறது. இதுவரை (30—9—1978) முடிய 135 இலட்சம் பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை கிராமப்புறங்களுக்கும் பயனுள்ள நிலையான திட்டமாக விரிவாக்க மத்திய அரசின் மருத்துவப்பணி பொது இயக்குநர் (Director-General of Health Services) மாற்றுத் திட்டத்தினை சிபாரிசு செய்துள்ளார். ஏற்கனவே பி.சி.ஜி. குழுக்களில் உள்ள தொழில் நுட்ப பணியாளர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட இருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பி.சி.ஜி. தொழில் நுட்ப பணியாளர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பணியாளர்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்துவது

பற்றி பயிற்சி அளிப்பார்கள். பயிற்சி பெற்ற இந்த பணியாளர்கள் கிராமங்களில் தகுதியுள்ள பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்துவார்கள்.

1979-80 ஆம் ஆண்டில் எடுக்கப்பட இருக்கும் முயற்சிகள்—

பி.சி.ஜி. குழுவின் உதவியுடன் பீடி சுற்றும் தொழிலாளிகள் கைத்தறி நெசவாளிகள் ஆகியோரின் மத்தியில் காசநோய் உள்ளதா என கண்டறியும் பொருட்டு செங்கல்பட்டு, சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் முதல் சுற்றாக விரிவான சுகாதார திட்டமாக செயல்படுத்தப்படும். பின்னர் மற்ற மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும். இவ்வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கென 15.35 இலட்சம் ரூபாயும், பீடித் தொழிலாளிகளுக்கு 9.66 இலட்சம் ரூபாயும் இத்திட்டத்திற்கென செலவாகும்.

20—2—1979-ல் மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கும் சிறைக்கைதிகளுக்கும் ஒரு விரிவான சுகாதார ஆய்வு திட்டத்தினை இந்த அரசு துவக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, காச நோய் மற்றும் மார்பு நோய் நிலைய மருத்துவ அதிகாரிகளின் குழுவும் நடமாடும் பெரிய எக்ஸ் கதிர் பிரிவும் இணைந்து சிறைச்சாலையின் எல்லா சிறை கைதிகளுக்கும் முழு உடலாய்வு இரத்த பரிசோதனை, மார்பு எக்ஸ் கதிர் சோதனை ஆகியவை நடத்துகின்றன. காச நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களை மார்பு நோய் நிலையத்தில், முழுவதுமாக ஆராய்ந்து தீவிர சிகிச்சை தேவையானவர்களை தாம்பரத்திலுள்ள காசநோய் நிலையத்தில் சேர்க்கவும், மற்றவர்களை காச நோய் நிலையம் அல்லது சிறைச்சாலை மருந்தகத்தில் சிகிச்சையளிக்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களை சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் தொடர்புள்ள சிறப்புப் பகுதிகளுக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்கள்.

தனியார் மருத்துவ நிலையங்களுக்கு மானியம் அளித்தல்—

(1) இராமலிங்கம் காச நோய் நிலையம், பெருந்துறை, கோயம்புத்தூர் மாவட்டம் — ரூ. 1,00,000.

(2) மகாத்மா காந்தி நினைவு காச நோய் நிலையம், செங்கிப்பட்டி, தஞ்சை மாவட்டம். — ரூ 58,000.

தமிழ்நாடு காசநோய் கழகம்.

தமிழ்நாடு காச நோய் கழகம், டெல்லியிலுள்ள காச நோய் கழகத்துடன் இணைந்து விரும்பித் தொண்டாற்றும் ஒரு அமைப்பாகும். இந்தக் கழகம் அரசின் காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு, உறுதுணையாக செயல்படுகிறது.

தமிழ்நாடு காச நோய் கழகத்துடன் இணைந்து 15 மாவட்ட காச நோய் கழகங்கள் உள்ளன. மாவட்ட ஆட்சியாளர்கள் மாவட்ட காச நோய் கழகங்களின் தலைவர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு மற்றும் மாவட்ட காச நோய் கழகங்களுக்கு வரக்கூடிய முக்கிய வருமானம், காசநோய் வில்லைகளை விற்பதன் மூலம் கிடைக்கிறது. இது வரை 29 காச நோய் வில்லைகள் விற்கும் இயக்கங்கள் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது.

1978 ஆம் ஆண்டு அதிக அளவில் காச நோய் வில்லைகளை விற்பனை செய்தமைக்காக இந்தக் கழகத்திற்கு சுழற் கோப்பை பரிசாக வழங்கப்பட்டது.

இந்த காச நோய் வில்லைகளை விற்பனை செய்து கிடைத்துள்ள பணம், அரசின் முயற்சியால் காச நோயினை கட்டுப்படுத்த எடுக்கும் திட்டங்களாக காச நோயாளிகளுக்கென காச நோய் பிரிவுகள் கட்டுதல், எக்ஸ் கதிர் கருவிகள், மைக்ராஸ்கோப், தேவையான கருவிகள் வாங்குதல் மருந்து மற்றும் சுகாதார கல்வி ஆகியவற்றிற்கு உதவியளிக்க பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு காசநோய் கழகத்தின் நிதியிலிருந்து சென்னை, தஞ்சை ஆகிய இடங்களில் தனியார் மருத்துவர்கள், அரசு மருத்துவ நிலையங்களில் உள்ள மருத்துவ அதிகாரிகள் ஆகியோருக்கு இரண்டு மறு பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டன. மதுரை மாவட்டம், காந்தி கிராமத்தில் காச நோயைப் பற்றிய கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

தஞ்சையில் நடைபெற்ற இந்த கழகத்தின் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களில் மக்கள் நலனில் அதிக ஈடுபாடு கொண்ட உறுப்பினர்கள் தமிழ்நாடு காச நோய் கழக சேர்மனிடம் ரூபாய் 12,355 நன்கொடையாக அளித்தனர்.

தமிழ்நாடு முழுவதும், 17—2—1979 முதல் 23—2—1979 வரை காச நோய் தடுப்பு வாரம் நடத்தப்பட்டது.

1978-79 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட தொகை மாவட்ட காச நோய் கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

(அ) நாமக்கல், ராசிபுரம், ஆத்தூர், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் 12 படுக்கைகள் கொண்ட பிரிவினைக் கட்ட கூடுதல் தொகையான ரூபாய் 33,600 அளித்தல்.

(ஆ) காப்பர் மலையில் உள்ள காச நோய் நிலையத்தில் சவக்கிடங்கு அமைக்க ரூபாய் 12,500 அளித்தல்.

(இ) பெரம்பலூர், மணப்பாறை, ஜெயங்கொண்டான் ஆகிய இடங்களில் 10 படுக்கைகள் கொண்ட காச நோய் பிரிவினைக் கட்ட ரூபாய் 1,80,000-த்தினை அளித்தல் (ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 60,000 செலவு).

2. சுகாதார கல்வி திட்டத்திற்கென ரூபாய் 20,000 அளித்தல்.

3. சங்கரன் கோவிலில் உள்ள அரசு மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட பிரிவினைக் கட்ட கூடுதல் செலவினமாக ரூபாய் 6,000-த்தினை அளித்தல்.

IX. தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி.

தனிப்பட்ட மன்றங்கள், கூட்டமைப்புகள், சங்கங்கள் சமயப்பணி (மிஷினரி) மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருத்துவ நிறுவனங்களில் தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகின்றது. இம்மாநிலத்தில் வழங்கப்படுகின்ற பலவகைப்பட்ட மானியங்கள் பின்வருமாறு :—

(1) தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு நிர்வாக செலவிற்கான மானியங்கள்.—மருத்துவப்பணி குடும்பநலத்துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை தாக்கல் செய்த பின்னர், இம்மானியங்கள் வழங்கப்படுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதாக ஆய்வு அதிகாரிகள் அறிவித்த பின்னரே இந்த மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிடமிருந்து நிர்வாக மானியங்களை 36 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1977-78-ம் ஆண்டில் மானிய உதவியாக ரூபாய் 22.38 லட்சம் வழங்கப்பட்டது.

(2) கட்டிட மானியங்கள்.—மருத்துவப் பணிகளுக்கென கட்டிடங்களை கட்டுவதற்காக, ஒவ்வொரு கட்டிட பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டுச் செலவில் பாதியளவுக்கு தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்

படுகின்றன; ஒவ்வொரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில் வழங்கப்படுகின்ற இம்மானியத் தொகை, அரசு வரையறுத்த குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இருக்கும். 1977-78 ஆம் ஆண்டில் கட்டிட மானியங்களாக ரூபாய் 1.89 லட்சம் வழங்கப்பட்டது.

(3) கருவிகளுக்கான மானியம்.—கருவிகளுக்கான மானியங்கள், சாதனம் வாங்கும் செலவில் பாதி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. நிறுவனங்கள் சாதனங்களை வாங்கிய பிறகும், வாங்கியதைப் பற்றிய தணிக்கை செய்யப் பெற்ற கணக்கு விவர அறிக்கையை கொடுத்த பின்னரும், இம்மானியங்கள் அளிக்கப்படுகின்றன. இம்மானியம் பெறுவதற்கு எந்த நிறுவனமும் இதுவரை முன்வரவில்லை.

(4) தனியார் தொழு நோய் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் (Capitation Grants) அளித்தல்.—தொழு நோயாளி ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 25 வீதம் தொழு நோயாளியைச் சார்ந்துள்ள உடல் நலமுள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 12 வீதமும் தனியார் தொழு நோய் மருத்துவ நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மையுள்ள தொழு நோயாளிகளுக்கும், தொழு நோய் குணமாகி உறுப்புகள் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவை சிகிச்சை பெற்று வரும் தொழு நோயாளிகளுக்கும், குட்டியால் ஏற்படக்கூடிய புண்ணுக்கு சிகிச்சை பெறும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ள தொழு நோய் தொற்றுமுடைய, ஆனால் தொழு நோய் சார்பில்லாத நோயாளிகளுக்கும் (Non-Lepromatous patients) சிகிச்சையளிக்கும் தனித் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படத்தக்கதாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து இம் மானியங்கள் பெறும் தொழு நோய் மருத்துவத் தொண்டு நிறுவனங்களின் தற்போதைய எண்ணிக்கை பதினொன்று ஆகும். சராசரியாக ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியமாக இவற்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 4.40 இலட்சம் வழங்கப்பட்டது.

X. அரசு இலவச கண் சிகிச்சை முகாம்.

புரை நோயினாலும், ஏனைய கண் நோய்களினாலும் பார்வையிழந்திருக்கும் ஏழை மக்களுக்கு மருத்துவ நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன், அரசு இலவச கண் சிகிச்சை முகாம் 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தொடங்கப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்பட்டது.

[1979 ஏப்ரல் 17

2. 28—2—1979 வரை நடைபெற்ற 46 முகாம்களில் 10,305 புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டும் 70,246 பேர்களுக்கு புற நோயாளிகளுக்குரிய சிகிச்சை அளிக்கப்பட்டும் 6,605 பேர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டும் இருக்கின்றன.

3. இந்த ஆண்டு முதல் தமிழகத்தில் இருக்கின்ற சிறைச்சாலைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் சிறைவாசிகளுக்கும் சிறைச்சாலைகளிலேயே கண் சிகிச்சை வழங்குவதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

ஹோமியோபதி.

ஹோமியோபதி கல்வியும், ஹோமியோபதி நடைமுறை பயிற்சி முறையும், தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவமுறை மற்றும், ஹோமியோபதி நடைமுறை பயிற்சி சட்டம் 1971-ன்படி முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவ முறைக்கு உத்வேகம் கொடுக்க வேண்டிய தேவையை உணர்ந்து அம்முறையை இம்மாநிலத்தில் பரப்புவதற்காக தமிழக அரசு ஹோமியோபதி மருத்துவத் துறையை அங்கிகரிக்கப்பட்ட மருத்துவ முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் ஹோமியோபதி மருந்து நடைமுறை பயிற்சியாளர்களை பதிவு பெற வகை செய்ய ஒரு ஹோமியோபதி மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. அரசினால் அமைக்கப்பட்ட முதல் ஹோமியோபதி மன்றத்தின் காலம் 1977 ஆம் ஆண்டு மே திங்களில் முடிவடைந்தது. மேற்படி மன்றத்தை திருத்தி அமைப்பதற்கான தேர்தல் முடிந்து மன்றம் திருத்தி அமைக்கப்பட இருக்கிறது.

இந்த மருத்துவத்தை பரப்புவதற்காக, 25 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனையை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வட்டாரத்துக்குள் அரசு நடத்தி வருகிறது. இக்கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும், 21 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாணவர்களுக்கு 6 மாத உட்துறை பயிற்சியுடன் கூடிய, ஹோமியோபதி மருந்துகள், அறுவை (D.H.M.S.) முறை 4 ஆண்டு பட்டயப் படிப்புக்கு (Diploma) இக்கல்லூரி பயிற்சி அளிக்கின்றது. மத்திய ஹோமியோபதி மன்றத்தினால் அங்கிகரிக்கப்பட்ட பாட திட்டங்களுக்கு இணங்க இப்பயிற்சிக்கு பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லா மருத்துவத் துறைகளுக்கும் பொதுவாக உள்ள வியாதிகளை கண்டு பிடிக்கும் நவீன யுக்திகளையும் மற்ற அடிப்படை விஞ்ஞான முறைகளையும் இங்கு கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 17]

இந்திய முறை மருத்துவ (சித்த மருத்துவம்) பட்டப்படிப்பு பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைபோல், ஹோமியோபதி உட்பயிற்சி பெறும் மாணவர்களுக்கென உதவித்தொகை மாதத்திற்கு ரூ. 95-லிருந்து ரூ. 175 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களின் நலனுக்கு கல்லூரிக்கு பஸ் ஒன்று வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. சென்னை நகரத்திற்குள்ளேயே கல்வி நிலையங்களை கொண்டுவருவதை தவிர்க்க வேண்டும் என்ற கொள்கையை கருத்தில் கொண்டு ஹோமியோபதி கல்லூரிக்கும் மாணவ விடுதிக்கும் கட்டடங்கள் கட்டத் தேவையான இடத்தை தேர்ந்தெடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஹோமியோபதி மருந்தகம் ஒன்று திண்டுக்கல்லில் திறக்க அரசினரால் உத்தரவிடப்பட்டு, அம்மருந்தகம் 1977 அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றது. மற்றொரு மருந்தகத்தையும், சேலத்தில் அமைக்க அரசினரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

XII குடும்ப நலத் திட்டம்.

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் எவ்வித கட்டாயமோ அல்லது நிர்ப்பந்தமோ இன்றி செயற்படுத்தப்பட்டு வருகின்றது. குடும்பநலத் திட்டத்தின் மூலம் ஏற்கப்படுகின்ற சிறு குடும்ப நெறி பொருளாதார முன்னேற்றத்தையும் நல்வாழ்வுத் தரத்தையும் உயர்த்தும் என்பதை மக்கள் பெருமளவில் உணர்ந்து இத் திட்டத்திற்கு தாங்களாகவே முன்வந்து ஆதரவு தருகின்றனர். மதத்தால் மாறுபடுபவர்கள் கூட இத் திட்டத்தால் ஒன்றுபட்டு வருவதை தமிழகம் கண்டு கொண்டிருக்கிறது.

2. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் நோக்கங்களை எய்துவதற்காக மாநில நிலையிலிருந்து தொடங்கி கிராம அளவு வரையிலான எல்லா நிலைகளிலும் நிறுவப்பட்ட அமைப்பு ஒன்று மாநில நல்வாழ்வுப் பணிகளின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகச் செயல்பட்டு வருகிறது. மாநிலக் குடும்பநலக் கழகம், மருத்துவப் பணிகள் குடும்பநல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு பிரிவாகச் செயல்படுகிறது. இது குடும்பநல தாய்-சேய் நலத் திட்டங்களின் பல்வேறு பணிகளைச் செயல்படுத்துகிறது என்பதோடு அவற்றிற்கு வழிகாட்டியாயும் உள்ளது. கிராமப் பகுதிகளில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், குடும்பநலத் திட்டத்தின் இன்றியமையாத நோக்கங்களை மக்களுக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்கின்ற முக்கிய நிலையங்களாகச் செயல்படுகின்றன. தொடக்க நல்வாழ்வு நிலையம், மக்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல், பெண்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல், தாய்-சேய் நலப்பணிகள் ஆகிய பணிகளைச் செய்கின்றது. தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒவ்வொன்றிற்கும், 10,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை

நிலையம் வீதம் துணை நிலையங்கள் உள்ளன. அத்துணை நிலையங்களின் பணிகளை, துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்கள் கவனிக்கின்றனர். துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் ஒவ்வொருவரும், தத்தம் பகுதியில் தாய்-சேய் நலப்பணி, குடும்பநலப் பணி, ஆகியவற்றைக் கவனிக்கின்றனர்.

3. நகரப் பகுதிகளில் குடும்பநல பணிகளையும், தாய்சேய் நலப்பணிகளையும் அங்குள்ள நகர்ப்பகுதி குடும்பநல நிலையங்கள் கவனிக்கின்றன. இவை அரசாலும், உள்ளாட்சி மன்றங்களாலும் தொண்டு நிறுவனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

4. இந்திய அரசு கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஒவ்வொரு ஆணுக்கும் ரூ. 100 என்ற வீதத்திலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 120 என்ற வீதத்திலும் ஈட்டுத் தொகை வழங்கப்படுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும் தலைப்பும்.	ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை. ரூ.	பெண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை. ரூ.
(1)	(2)	(3)
1. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள ஒத்துக் கொண்டவருக்கு ரொக்க உதவித் தொகை.	70	70
2. மருந்துகள், கட்டுக்கட்டுதல் ஆகியவைகளுக்கான செலவு	10	15
3. உணவுச் செலவு	5	20
4 போக்குவரத்துச் செலவு ..	5	5
5. பல்வகை நோக்கங்களுக்கான நிதி (மாநிலத்தின் பங்கு)	10	10
மொத்தம் ..	100	120

மேற்சொன்ன தொகைக்கு மாறாக, தாமாக மனம் ஒப்பி கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன் வருவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்காக ஒவ்வொரு ஆண் அறுவை சிகிச்சைக்கு ரூ. 115-ம் ஒவ்வொரு

பெண் அறுவை சிகிச்சைக்கு ரூ. 145-ம் செலவழிக்க தமிழ்நாடு அரசு 1978-79-ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு :—

தொடர் எண்ணும் தலைப்பும்.	ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை. ரூ.	பெண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை. ரூ.
(1)	(2)	(3)
1 அறுவை சிகிச்சை செய்து கொள்ள ஒத்துக் கொண்டவருக்கு ரொக்க உதவித் தொகை.	75	85
2 மருந்துகள் கட்டுக்கட்டுதல் ஆகியவைகளுக்கான செலவு.	10	15
3 உணவுச் செலவு	5	20
4 போக்குவரத்துச் செலவு ..	5	5
5 பல்வகை நோக்கங்களுக்கான நிதி :—		
(i) குடும்ப நலத் திட்டத்தை ஏற்கும்படி ஊக்கமூட்டுபவர்	10	10
(ii) மருத்துவர்	3	5
(iii) மயக்க மருந்து கொடுப்பவர் ..		3
(iv) மருத்துவத் துணைப் பணியாளர்கள்.	2	2
(v) கருணைத் தொகை, விந்துக் குழாய் இணைத்தல் சமூக ஊக்கத் தொகை அளித்தல், குடும்ப நல முனைப்பு இயக்கம் நடத்துதல், அறுவைக் கருவிகள் ஆகியவற்றுக்காகும் செலவு.	†5	..
மொத்தம் ..	115	145

† ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை, பெண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சை ஆகிய இரண்டுக்கும் இது பொருந்தும்.

5. மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் ஆண்டு தோறும் குடும்பநலத் திட்டம் குறித்த முனைப்பு இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. 1978-79 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற முனைப்பு இயக்கங்களை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்தது.

6. கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம்.—1973-79 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு 2,76,700 கருத்தடை அறுவை சிகிச்சைகளை செய்ய வேண்டுமென்று இந்திய அரசு நிர்ணயித்தது. 15—3—1979 ஆம் நாள் வரை 1,89,464 கருத்தடை அறுவைகள் செய்யப்பட்டன. குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கங்கள் மாவட்டங்களில் நடத்தப்படுகின்றன. நமது மாநிலத்திற்கு இந்திய அரசு நிர்ணயித்த அளவை 31—3—1979-ல் எய்த இயலும் என்று நம்பப்படுகிறது.

7. கருத்தடை வளையம் பொருத்துதல்.—தமிழ்நாட்டில் 1978-79 ஆம் ஆண்டிற்கு 41,700 பேர்களுக்கு கருத்தடை வளையங்களை பொருத்தவேண்டுமென்ற இலக்கை இந்திய அரசு நிர்ணயித்துள்ளது. 15—3—1979 ஆம் நாள் வரை 23,396 பேர்களுக்கு கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன. முனைப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டு வருவதால் நிதியாண்டின் இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்த முடியும் என்று நம்பப்படுகிறது.

8. மரபு முறையிலான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துதல்.—15—3—1979 ஆம் நாள் வரை 1,21,726 பேர்கள் மரபு முறையிலான கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்தும் முறையை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஒரு மாதத்தில் வழங்கப்படும் கருத்தடை சாதனங்களின் சராசரி எண்ணிக்கை ஆறு இலட்சமாகும். மரபு முறையிலான கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. கருத்தடை சாதனங்களை வழங்குவது மேலும் உயர்த்தப்படும்.

9. மாத்திரைகள்.—15—3—1979 வரை 29,425 அளவு மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து உட்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை 2,720.

10. தாய்சேய் நலத் திட்டம்.—தாய்மார்களுக்கு குழந்தைகளுக்கும் நோய்த்தடுப்பு, உடல் நலன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அதிக கவனம் செலுத்துவதன் அவசியத்தை (குறிப்பாக தொற்று நோயிலிருந்து காக்க

குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல்) இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வகை நலப்பணியின் கீழும் 15—3—1979-ம் நாள் வரை பயன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கையினைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

முதல் நிலை முத்தடுப்பு ஊசி	5,07,296
பேரளவு முத்தடுப்பு ஊசி (Booster) ..	84,303
தொண்டை அடைப்பான். நரம்பிசிவு நோய் தடுப்பூசி குத்தப் பெற்றவர்கள் (D.T) பள்ளிச்சிறார்கள்.	
நரம்பிசிவு நோய்த் தடுப்பூசி (T. T) கருவுற்றிருக்கும் பெண்கள்).	3.52,130
தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவின்மையால் ஏற்படும் ரத்த சோகையைத் தடுப்பதற்கான மருந்து.	
(இருப்புச் சத்து நிறைந்த மாத்திரைகள்)	
தாய்மார்கள்	385,193
குழந்தைகள்	4,13,138
வைட்டமின் ''ஏ'' குறைவினால் குழந்தைகளுக்குக் கண் குருடாவதைத் தடுப்பதற்கான மருந்து.	
(வைட்டமின்) 'ஏ' கரைசல்)	
குழந்தைகள் முதலாவது அளவு (Dose) ..	11,02,101
இரண்டாம் அளவு	3,04,749

11. பிரிட்டிஷ் உதவித் திட்டம்.—வட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடத்தை கட்டுவதற்கும், 6 படுக்கைகளைக் கொண்ட பிரிவுகளைக் கட்டுவதற்கும், அவற்றிற்கான அறுவை சிகிச்சைக் கருவிகளை வாங்குவதற்கும், இத்திட்டத்தின் கீழ், மைய அரசு மூலம், பிரிட்டிஷ் அரசு உதவி புரிகிறது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களில்

தற்போதுள்ள மகப்பேறு அறைகளை அறுவைச் சிகிச்சைக் கூடங்களாக மாற்றுவதற்கும், அவற்றிற்கான அறுவை சிகிச்சைக் கருவிகளை வாங்குவதற்கும் பிரிட்டிஷ் அரசு உதவி புரிகிறது.

1976-77-ல் இத்திட்டத்தின்கீழ் 6 வட்ட மருத்துவமனைகளும், 10 தொடக்க நல்வாழ்வு நிலையங்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. 6 வட்ட மருத்துவமனைகளுக்கான அறுவை சிகிச்சைக் கூடங்களும், 6 படுக்கைகளைக் கொண்ட பிரிவுகளும் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றிற்குத் தேவையான அறுவை சிகிச்சைக் கருவிகளும் வாங்கப்பட்டன. 10 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் உள்ள மகப்பேறு அறைகள் அறுவை சிகிச்சைக் கூடங்களாக மாற்றப்பட்டு அவற்றிற்குத் தேவையான அறுவை சிகிச்சைக் கருவிகளும் வாங்கப்பட்டன.

1977-78-ல் 9 வட்ட மருத்துவமனைகளும், 12 தொடக்க நல்வாழ்வு நிலையங்களும் தெரிந்தெடுக்கப்பட்டன. 12 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில், மகப்பேறு அறைகளை அறுவை சிகிச்சைக் கூடங்களாக மாற்றும் பணி 5 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் முடிக்கப்பட்டது. ஏனைய 7 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. 9 மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக் கூடங்களைக் கட்டும் பணியும், 6 படுக்கைகளைக் கொண்ட பிரிவுகளைக் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் 31—3—1979 ஆம் நாளுக்கு முன்னர் முடிக்கப்பட்டு விடும். 9 வட்ட மருத்துவமனைகளுக்கும், 12 தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் தேவையான அறுவை சிகிச்சைக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன.

1978-79-ல் இத்திட்டத்தின்கீழ், 9 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. இந்த தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கான அறுவை சிகிச்சைக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மகப்பேறு அறைகளை அறுவை சிகிச்சைக் கூடங்களாக மாற்றும் பணி 31—3—1979-க்கு முன்னர் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12. மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை.—இம்மாநிலத்தில், தற்போது மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சையை, கல்லூரி இணைந்த மருத்துவமனைகள் 9-ம், இரண்டு தொண்டு நிறுவனங்களும், 13 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளும் செயல்படுத்தி வருகின்றன.

1978-79-ல் மகப்பேறுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 10 படுக்கைகளைக் கொண்ட மகப்பேற்றுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை பிரிவையும், அறுவை சிகிச்சை அரங்கத்தையும் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி நடைபெற்று வருகிறது. ஆந்திர மகிள சபா மருத்துவமனையில் 10 படுக்கைகளைக் கொண்ட, மகப்பேற்றுக்குப் பிறகு செய்யப்படும் கருத்தடை அறுவை சிகிச்சை பிரிவையும், அறுவைச் சிகிச்சை அரங்கத்தையும் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

13. கிராம குடும்ப நலத்திட்ட நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.—27.32 இலட்சம் ரூபாய் செலவில் தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் 10-ல் குடும்பநல நிலையங்களையும், பணியாளர் குடியிருப்புகளையும் கட்டுவதற்கும், சேலம், திண்டுக்கல்லிலுள்ள துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் நிலையங்களில் தொடக்க நல்வாழ்வு நிலைய இணைப்புக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும், 1978-79-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

14. "தாய்"களுக்கு (மருத்துவச்சிகள்) பயிற்சி அளித்தல்.—மருத்துவமனைகளுக்குச் செல்லாமல் வீடுகளிலேயே மகப்பேறு பார்க்கும் "தாய்"களுக்கு (மருத்துவச்சிகள்) இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1977-79-ல் 3454 "தாய்"களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 3,411 பேர்களுக்கு மகப்பேறு உபகரணப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு மத்திய அரசிடமிருந்து வந்தவுடன் வழங்கப்படும்.

15. மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல்.—தாய்மார்கள் தொடர்ந்து கருவுறுவதால் அவர்கள் உயிருக்கு ஆபத்து விளையும். ஆகவே தொடர்ந்து கருவுறுவதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி உதவும் பொருட்டு, தமிழ்நாட்டில், தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ முறையில் கருவைக் கலைத்தலுக்கான வசதிகள் 1971 ஆம் ஆண்டு மருத்துவ முறையில் கருவைக் கலைத்தல் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளன. தற்போது இந்த வசதி 77 அரசினர் மருத்துவமனைகளிலும், 23 தனியார் மருத்துவமனைகளிலும் உள்ளது.

16. டேனிஷ் உதவித் திட்டம்.—மக்களுக்கு முழுச் சுகாதார வசதி அளிக்கும் பொருட்டு இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக இம்மாநிலத்தில், தென்னாற்காடு, சேலம் ஆகிய இரு மாவட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் இவ்விரு மாவட்டங்களிலும் ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்

படும். இதற்கு டேனிஷ் அரசு குறிப்பிடத்தக்க அளவிற்கு நிதி உதவி அளிக்கும். திட்டப் பணியாளர்கள் மேற் கூறிய திட்டத்தைச் செயலாக்கு வதற்கான செயல்திட்டங்களை திட்டமிட்டு வகுக்கும் பொருட்டு அவரவர்க்குரிய பதவி இடங்களில் அமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு "டேனிடா" அதிகாரிகளும் அவர்களது ஆலோசகர்களும் நடத்தும் மக்கள் நல்வாழ்வுக்கான மறு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

17. கருத்தடை ஆதரவாளர்களுக்கு அளிக்கப்படும் மக்கள் நல்வாழ்வுப் பயிற்சி முகாம்கள்.—1977-78 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு இந்திய அரசின் ஒப்புதல் கிடைத்தது. இத்திட்டத்தின் கீழ், தொடக்க நல்வாழ்வு நிலைய எல்லைக்குள் வருகின்ற கிராமங்களிலிருந்து 40 கருத்தடை ஆதரவாளர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வட்டாரத் தலைமையிடத்திலாவது அல்லது தொடக்க நல்வாழ்வு நிலையத்திலாவது ஒரு நாளைக்கு குடும்ப நலம் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு பயிற்சியின் போது பல்வேறு கருத்தடை முறைகளும் விளக்கப்படுகின்றன. பயிற்சி முடிந்த பின்னர், குடும்ப நலத்திட்டம் எவ்வாறு மக்களுக்குப் பயனளிக்கிறது என்றும், எவ்வாறு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் கிராம மக்களுக்கு விளக்குவர்.. இந்திய அரசு அமைத்துள்ள முறைப்படி கருத்தடை ஆதரவாளர்கள் 40 பேர் பயிற்சி பெறுகின்ற ஒவ்வொரு பயிற்சி முகாமிற்கும் ரூ. 200-க்கு மிகையாகாமல் செலவழிக்கலாம்.

இந்திய அரசு, 1978-79 ஆம் ஆண்டில் அத்தகைய முகாம்கள் நடத்துவதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த முகாம்கள் இம்மாநகரத்தின் நகர்ப்புறப் பகுதிகளில் 1978 ஆகஸ்டு திங்கள் 16, 17, 18 ஆம் நாட்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. இந்த ஆண்டில், இம் மாநிலம் முழுவதிலும் ரூ. 1.35 இலட்சம் செலவில் 678 முகாம்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

18. ஊராட்சிகளின் பணி.—1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் முன்னுரை, அச்சட்டத்தின் நோக்கங்களைப் பற்றிக் கூறுகையில் "மக்கட் தொகைப் பெருக்கத்தின் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் உணவு உற்பத்தியும் பெருக வேண்டுமென்பது தேசிய நலத்தைப் பொறுத்தமட்டில் அவசியமானதாகும். அதன் பொருட்டு மக்கட் தொகைப் பெருக்கமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்" என்று கூறுகிறது. எனவே குடும்ப நலத்திட்டம் ஊராட்சி ஒன்றியங்களின் செயல் வரம்புக்குள்ளேயே செயல்படுத்தப்படலாம் என்பது வெளிப்படையாகிறது. குடும்ப நல முகாம்களை நடத்தும் பொருட்டும் அந்தந்த மாவட்டங்களில் குடும்பநலத் திட்டங்களை செயலாக்கும் பொருட்டும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் ஊராட்சி ஒன்றியங்கள்,

ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 அளிப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. ரூ. 3 இலட்சத்திற்கும் அதிகமாக பொது நிதி வைத்துள்ள ஊராட்சி ஒன்றியங்கள், மேலே குறிப்பிட்ட குடும்ப நலத் திட்டத்தைச் செயலாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்களுக்குக் கொடுத்த 5,000 ரூபாய்க்கும் அதிகமாக ரூ. 25,000 வழங்குவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது.

இத்திட்டம் மாவட்ட ஆட்சியாளர்களின் மேற்பார்வையில் நடந்தேறி வருகிறது. மாவட்ட ஆட்சியாளர்கள் இத்திட்டம் வெற்றிபெற தங்களது ஒத்துழைப்பைத் தந்துள்ளார்கள்.

19. தனிப்பட்ட மருத்துவர்கள், தனியார் மருத்துவ நிலையங்களின் பங்கு.—குடும்ப நலத் திட்டத்தில் தனிப்பட்ட மருத்துவர்களையும் ஈடுபடுத்த மைய அரசு வழி வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட மருத்துவர்கள் கருத்தடை அறுவை சிகிச்சைகளைச் செய்தும் கருத்தடை வளையங்களைப் பொருத்தியும் இந்த வகைகளில் ஏற்படும் செலவுக்காக அவர்கள் அரசிடமிருந்து தொகை பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட முறையில் ஆண் அறுவை சிகிச்சை செய்துகொள்ள வரும் ஆண்களுக்கு அறுவை சிகிச்சை செய்தல், மருந்து கொடுத்தல், மருந்திட்டுக் கட்டுதல், தொடர் சிகிச்சை அளித்தல் ஆகிய வகையில் ஏற்படும் செலவுக்காக நபர் ஒன்றுக்கு ரூ. 30 என்ற விதத்திலும் கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ள வரும் பெண்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல், மருந்துகள் கொடுத்தல் மருந்திட்டுக் கட்டுதல் தொடர் சிகிச்சை அளித்தல் ஆகிய வகையில் ஏற்படும் செலவுக்காக நபர் ஒன்றுக்கு ரூ. 5 என்ற விதத்திலும் ஒவ்வொரு மருத்துவருக்கும் தொகை வழங்கப்படும். இச் செலவுகள் குறித்து தேவையான கைச்சாத்துகள்/ஆவணங்கள்/சான்றிதழ்கள் கொடுக்கப்படுவதின் பேரில் மாவட்டக் குடும்ப நல. தாய்-சேய் நல அதிகாரிகளால் இத்தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

20. குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம்.—குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமானால் பிரச்சாரப் பணி முழுமூரமாக முடுக்கிவிடப்பட வேண்டும். 1977-78 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திற்கு ரூ. 8.24 இலட்சம் ஒதுக்கிய மைய அரசு 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 15.88 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்தொகையினைக் கொண்டு, விளம்பரப் பலகைகள், சுவர்ச் சித்திரங்கள், நாடகங்கள், பாடல்கள், வில்லுப்பாட்டு, கருத்தடை சாதனங்களை விளம்பரப்படுத்தும் உலோகத் தகடுகள், பெருந்து விளம்பரப் பலகைகள், திரைப்படங்கள், அனைத்து இந்திய வானொலியிலும், செய்தி தாள்களிலும், மாதப் பத்திரிகைகளிலும் பொருட்காட்சிகளிலும், விளம்பரங்கள் செய்தல், திரைப்படக் கொட்டகைகளில் சிலைடுகள் போட்டுக் காட்டுதல் ஆகிய வழிகளில் குடும்ப நலத் திட்டம் பற்றி தீவிரமான முறையில் பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

[1979 ஏப்ரல் 17

குடும்ப நலப் பிரச்சார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்காக, மைய அரசு விழா கொண்டாடப்படுகிறது. முதற்கண் இந்த இருவார விழா இருவார விழா கொண்டாடப்படுகிறது. முதற்கண் இந்த இருவார விழா 1978 அக்டோபர் திங்களில் கொண்டாடப்பட்டது. இரண்டாவது தடவை இப்படிப்பட்ட இருவார விழா கொண்டாடுவதற்குப் பதிலாக மைய அரசு கேட்டுக்கொண்டதின் பேரில், 1979 சனவரியில் குடும்ப நல்வாழ்வுத் திங்கள் விழா கொண்டாடப்பட்டது. இதற்கு மக்கள் அளித்த ஆதரவைக் கண்டு மகிழ்ந்து குடும்ப நலப் பணிகளை மேலும் பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டி இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தும்படியும், 1979 ஆம் ஆண்டில் சனவரி, பிப்ரவரி, மார்ச்சுத் திங்களை குடும்பநல மும்மாத விழாவாக கொண்டாடும்படியும் மைய அரசு மாநிலங்களைக் கேட்டுக்கொண்டது.

21. நாடகக் குழுக்களுக்கும், கலை நிகழ்ச்சிகளுக்கும் ஊதிய விதத்தை உயர்த்துதல்.—குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை விளக்கும் வகையில், நாடகங்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்துவதற்காக நாடகக் குழுக்களுக்கும் கலைநிகழ்ச்சிக் குழுக்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுவந்த ஊதியம் வருமாறு—

குடும்பநலம் பற்றி ஒரு நாடக நிகழ்ச்சி நடத்துவதற்கு ரூ. 570, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒலிபெருக்கிக்கு ரூ. 30, மேடை அமைப்பதற்கு ரூ. 40-ம் இதில் அடங்கும்.

வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கதாகாலட்சேபம் போன்ற ஒரு கலை நிகழ்ச்சி நடத்துவதற்கு ரூ. 100.

இந்த ஊதிய விதங்கள் அண்மையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அதன்படி குடும்பநலம் பற்றி ஒரு நாடகம் நடத்துவதற்கு (ஒலிபெருக்கிக்கு ரூ. 30, மேடை அமைப்பதற்கு ரூ. 40, தவிர) ரூ. 700 ஊதியமும் ஒரு கலை நிகழ்ச்சிக்கு ரூ. 250 ஊதியமும் வழங்கப்படுகின்றன.

குடும்பநலம் பற்றிய சிறந்த முதல் மூன்று கட்டுரைகளுக்கு வழங்கப்படும் ரொக்கப்பரிசு விதத்தை 1,000 ரூபாய், 750 ரூபாய், 500 ரூபாயிலிருந்து முறையே 3,500 ரூபாய், 2,250 ரூபாய், 1,500 ரூபாயாகவும் அரசு உயர்த்தியுள்ளது.

22. மானிய உதவி.—நகர்ப் பகுதி குடும்ப நல நிலையங்கள் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி நிலையங்கள் மகப்பேற்றுக்குப்பின் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் நிலையங்கள் முதலியவற்றை நடத்துவதற்காக தொண்டு நிறுவனங்களுக்கும், உள்ளாட்சி

979 ஏப்ரல் 17]

மன்றங்களுக்கும் அரசு மானிய உதவி அளித்து வருகின்றது. இந்த மானியங்கள் மைய அரசு நிர்ணயித்துள்ள முறையில் வழங்கப்படுகின்றன. தற்போது 13 தொண்டு நிறுவனங்களும், சென்னை, மதுரை மாநகராட்சிகள் உட்பட 19 உள்ளாட்சி மன்றங்களும் இந்த மானியத்தைப் பெற்று வருகின்றன.

23. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு.—இந்த ஆண்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 920.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

C. இந்திய மருத்துவத்துறை.

I. கொள்கை.

இந்திய முறை மருத்துவத்திற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கே உரித்தானதும், பழமை வாய்ந்த நமது பாரம்பரியம் மிக்க நாகரிகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றதுமான சித்த மருத்துவத்திற்கு ஆதரவளித்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது முக்கியமான கடமையாகும். இந்திய முறை மருத்துவத்தின் ஏனைய பிரிவுகளான ஆயுர்வேதம், யுனானி, இயற்கை வைத்தியம், யோகாசன முறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்ற பணியிலும், இந்த அரசு முழு ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது.

கணிசமான தொகையினை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் என்ற விருப்பத்தின் பேரில், அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் காரணமாக, பல புதிய திட்டங்களைச் செயலாக்க முன்வந்துள்ளதை கீழ்க்காணும் பட்டியல் நன்கு விளக்கும் :—

ஆண்டு. (1)	மொத்தச் செலவு. (2)	உடனடியான செலவு. (3)
	(ரூபாய் இலட்சங்களில்)	
1972-73	3.24	3.01
1973-74	7.29	6.47
1974-75	19.60	7.02
1975-76	13.31	9.97
1976-77	17.99	13.69
1977-78	4.04	2.69
1978-79	6.49	3.68
1979-80	95.68	47.69

[1979 ஏப்ரல் 17

இந்த ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள மொத்தச் செலவினங்களும், உடனடிச் செலவினங்களும், முந்தைய ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட பெருமத் தொகையினைப் போன்று ஏறத்தாழ 5 மடங்கு அதிகமாகவும், கடந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டினைப் போன்று 15 மடங்கு அதிகமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

II. மருத்துவ நிவாரணம்.

1. அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனை, சென்னை.—இந்திய முறை மருத்துவத்திற்கென, தனியாக ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு 1968-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அது 1970-ம் ஆண்டில் அரும்பாக்கத்தில் நிறுவப்பட்டது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வந்த இந்திய முறை மருத்துவப் பிரிவு, அங்கிருந்து மாற்றப்பட்டு அரும்பாக்கத்தில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் செயல்படத் தொடங்கியது. இந்த மருத்துவமனைக்கு "அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனை" எனப் பெயரிடப்பட்டது. இம்மருத்துவ மனை 100 படுக்கை வசதிகளுடன் 14—4—1970 முதல் செயல்படத் தொடங்கியது. ஒரே வளாகத்திற்குள், சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளில் புறநிலைப் பிணியாளருக்கும், அகநிலைப் பிணியாளருக்கும் மருத்துவச் சிகிச்சை வாய்ப்புகளை நல்கும் சிறப்புத் தன்மையை இந்த மருத்துவ மனை கொண்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் புதிதாகக் கட்டப்பட்ட பகுதியில் மேலும் 50 படுக்கைகள் 1976-77-ம் ஆண்டில் சேர்க்கப் பட்டன.

அரசு அலுவலர்களுக்கென்று, மேற்சொன்ன மூன்று மருத்துவ முறைகளின் கீழ் புறநிலைப் பிணியாளர் சிகிச்சைப் பிரிவுகள் இம்மருத்துவ மனையில் தனியாக அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் தலைமைச் செயலகம், சேப்பாக்கம் அலுவலக வளைவு, சைதாப்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருந்தகங்களில், சித்த மருத்துவ முறையின்கீழ் புறநிலைப் பிணியாளருக்கான சிகிச்சை வசதிகள் அமைந்துள்ளன. இந்த மருந்தகங்கள் சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையோடு இணைக்கப்பட்டுள்ளன.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையை விரிவாக்கும் நோக்குடன், கீழ்க்கண்ட திட்டங்களை 1979-80-ல் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

(1) கழிவு நீர் வடிகால் வசதிகள் அமைத்தல்.—ரூபாய் ஐந்து இலட்சம்.

1979 ஏப்ரல் 17]

(2) இந்த மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச்சுவர் எழுப்புதல்.—ரூபாய் 2.85 இலட்சம்.

(3) நவீனப்படுத்தப்பட்ட அட்டிற்சாலை அமைத்தல்.—ரூபாய் ஒரு இலட்சம்.

(4) நூலகம் ஒன்று ஏற்படுத்துதல்.—ரூபாய் 27,000.

2. பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள மருத்துவமனை.—சித்த மருத்துவமுறையின்கீழ் புறநிலைப் பிணியாளர் மற்றும் அகநிலைப் பிணியாளருக்கான சிகிச்சை வசதிகள் கொண்ட 208 படுக்கைகளுடைய மருத்துவமனையொன்று பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவ கல்லூரியுடன் இணைந்துள்ளது.

3. சித்த மருத்துவப் பிரிவுகள்.—14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் வட்டத்தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத ஊர்களிலுள்ள 59 மருத்துவமனைகளிலுமாக தற்போது மொத்தம் 73 சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதில் 1978-79ல் தொடங்கப்பட்ட 10 சித்த மருத்துவப் பிரிவுகளும் அடங்கும். அவை கீழ்க்காணும் வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத்தலைமையிடமல்லாத ஊர்களிலுள்ள மருத்துவ மனைகளில் தொடங்கப்பட்டுள்ளன :—

(1) அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்

(2) காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

(3) பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(4) கம்பம், மதுரை மாவட்டம்.

(5) ஏர்க்காடு, சேலம் மாவட்டம்.

(6) பவானி, கோயம்புத்தூர் மாவட்டம்.

(7) உளுந்தூர்பேட்டை, தென்னாற்காடு மாவட்டம்.

(8) ஆம்பூர், வடாற்காடு மாவட்டம்.

(9) அறந்தாங்கி, தஞ்சாவூர் மாவட்டம்.

(10) மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.

வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடமல்லாத ஊர்களிலுள்ள 15 அரசினர் மருத்துவமனைகளில், 1979-80 ஆம் ஆண்டில் சித்த மருத்துவப் பிரிவுகள், ரூபாய் 4.65 இலட்சம் செலவில் தொடங்கப்படும். 1979-80-ல் திட்டத்திற்காகும் தொடர் செலவினம் ரூ. 3.66 இலட்சமாகும். தொடராச் செலவினம் ரூ. 0.45 இலட்சமாகவும் இருக்கும்.

மாவட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் அமைந்துள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கைகளுக்கேற்ப, 5 முதல் 10 படுக்கைகள் வரை சித்த மருத்துவ முறையின்கீழ் சிகிச்சையளிப்பதற்காக ஒதுக்கப்படுகின்றன. இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைக்கென்று 15 படுக்கை வசதிகள் கொண்ட தனிக் கட்டிடம் கட்டுவதற்கும் சிதம்பரத்தில் நகராட்சி மன்ற பழைய மருத்துவமனைக் கட்டிடத்தில் சித்த மருத்துவத்தில் தொக்கண முறையையும் ஆயுர்வேதத்தில் நவரக்கிழி முறையையும் பெருமளவு பயன்படுத்தும் மருத்துவமனை துவங்குவதற்கும் ரூ. 6.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. அரசு நடத்தி வரும் இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள்.—இம் மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் 13 அரசினர் மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளில் 8 மருந்தகங்கள் சித்த மருத்துவ முறையிலும் 5 மருந்தகங்கள் ஆயுர்வேத முறையிலும் இயங்கி வருகின்றன.

5. முறையான மருந்தகங்களும், கிராம மருந்தகங்களும்.—இந்திய முறை மருத்துவத்தின்கீழ் மாநகராட்சிகளும், நகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், கோவில்களும் 371 கிராம மருந்தகங்களையும், 137 முறையான மருந்தகங்களையும் நடத்தி வருகின்றன. கிராம மருந்தகங்கள் பெரும்பாலும் பரம்பரை அல்லது பாரம்பரியப் பயிற்சியுடைய பதிவு பெற்ற மருத்துவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. முறையான மருந்தகங்கள், இந்திய மருத்துவப் பட்டதாரிகளாலும், பட்டயத் தகுதி பெற்றவர்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன. முறையான அல்லது கிராம மருந்தகங்களைப் பராமரிக்கும் பொருட்டு உள்ளாட்சி மன்றங்கள் ஏற்கும் மொத்தச் செலவின் ஒரு பகுதியினை அரசு மானியமாக வழங்கி வருகின்றது.

ஒதுக்குப்புறக் கிராமங்களில் வசிக்கும் மக்கள், மருத்துவ வசதிகளைப் பெறும் வகையில் 1979-80-ம் ஆண்டில், புதிதாக 20 கிராம மருந்தகங்கள் தொடங்கப்படும். இதற்காகும் மொத்தச் செலவு தொடர் செலவினம் ரூபாய் 2.99 இலட்சம் ஆகும்.

பிரபலமான சித்த வைத்தியர் ஒருவர் சித்தா தைலம் ஒன்றினைப் பயன்படுத்தி இளம்பிள்ளை வாத நோய்ச் சிகிச்சையளிப்பதற்காக டாக்டர் மாசிலாமணி பிரிவொன்று சேலத்திலுள்ள தலைமையிட அரசினர் மருத்துவமனையில்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சிகிச்சைக்காக 1—12—1978 முதல் இதுவரை 26 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும், குணமடைவதற்கான அறிகுறிகள் திருப்திகரமாக உள்ளன எனவும், அரசுக்கு அறிக்கை வந்துள்ளது. இந்த சிகிச்சையின் முடிவுகள், கட்டுக் கோப்பான சூழ்நிலையில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

III. இந்திய மருத்துவமுறை மருந்து செய்நிலையங்கள் :—

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையுடன் இணைந்துள்ள மருந்து செய்நிலையம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சித்த, ஆயுர்வேத, யுனானி மருந்துகளைத் தயாரித்து வருகிறது. இந்த மருந்து செய் நிலையத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையிலும், சென்னை நகரிலுள்ள 4 சித்த மருந்தகங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மருந்து செய் நிலையத்தினை எந்திரமயமாக்கத் தேவையான எந்திரங்களை வாங்கும் பொருட்டு இந்திய அரசு ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஒப்பளித்துள்ளது. இதன் பொருட்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இன்னும் ரூபாய் 7 இலட்சம் உதவிப் பணம் வெவ்வேறு கால கட்டத் தவணைகளில் தருவதாக மைய அரசு உறுதியளித்துள்ளது.

ரூபாய் 15 இலட்சம் செலவில் இந்த மருந்து செய் நிலையத்திற்கு வேண்டிய கூடுதல் கட்டிடங்களை கட்டவும், வாயு உற்பத்திக் கலைக்கூடம் திறக்கவும், நீராவிக் கொதிகலம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருந்து செய் நிலையத்தினை எந்திர மயமாக்குவதற்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 7.75 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை, இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள மருந்து செய் நிலையம், அக்கல்லூரியுடன் இணைந்துள்ள 208 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையின் தேவையினைப் பூர்த்தி செய்ய வேண்டி ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புள்ள சித்தா மருந்துகளை உற்பத்தி செய்து வருகின்றது. 1978-79 ஆம் ஆண்டில், இந்த மருந்து செய் நிலையத்தினை எந்திர மயமாக்கும் பொருட்டு ரூபாய் 68,000 செலவு செய்ய ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

IV. மூலிகைப்பண்ணைகள்.

இந்திய முறை மருந்து செய் நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும், கிடைத்தற்கரியனவும், எப்போதும் கிடைப்பனவும் ஆகிய மூலிகைகளையும், மருந்துச் செடிகளையும் வளர்த்து அந்த இனங்கள் அழிந்து போகாமல் பராமரிக்கின்ற வகையிலும் ஏற்கனவே அமைந்துள்ள மூலிகைப் பண்ணைகள் தவிர, கூடுதலாக கீழ்க்கண்ட இடங்களில் மூலிகை பண்ணைகளை இந்த மாநிலத்தில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) கொல்லி மலைப் பகுதியில் இயற்கையாக வளர்ந்துள்ள மருந்து மூலிகைகளைச் சேகரித்து விற்பனை செய்ய ஒரு மூலிகைப் பண்ணை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1979-80-ல் ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்படும். இந்தத் திட்டம் லாம்ப் (Lamp) கூட்டுறவுச் சங்கத்திற்கு உதவுவதாகவும், மலைவாழ் பழங்குடியினருக்கு லாபம் தரவல்ல வேலை வாய்ப்புகளை உண்டாக்கவும் பயன்படும்.

(2) மதுரை காமராசர் பல்கலைக் கழக வளைவுக்குள் 20 ஏக்கர் பரப்பில் ஒரு மூலிகைத் தோட்டம் அமைத்தல். இத்திட்டத்திற்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 50,000 செலவிடப்படும்.

(3) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் "முக்கொம்பு" என்ற இடத்தில் மூலிகைப் பண்ணை அமைத்தல். இத்திட்டத்திற்கு 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) மதுரை மாவட்டத்தில் வைகை அணைக்கட்டில் ஒரு மூலிகைப் பண்ணையும், சிறுமலைக் குன்றுகளில் மற்றொரு மூலிகைப் பண்ணையும் அமைத்தல். இத்திட்டத்திற்காக, 1979-80 வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடாக ரூபாய் 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் அமைந்துள்ள மூலிகைப்பண்ணை.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் 9.2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையை, 1979-80 ஆம் ஆண்டில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1979-80 வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காகத் தொடர் செலவினமாக ரூபாய் 23 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூ. 83 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீரப்புலி ஒதுக்கக் காட்டில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணை.

கன்னியாகுமரி மாவட்டம், வீரப்புலி ஒதுக்கக் காட்டில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையினை ரூபாய் 8.37 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1979-80 வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

V. மருத்துவக் கல்வி.

மருத்துவப் பட்டப்படிப்பு.

பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவ கல்லூரியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வழங்கும் பி.எஸ். எம். எஸ். பட்டத்திற்கான சித்த மருத்துவக் கல்வி, மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. 1978-79-ம் கல்வியாண்டு முதல், ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40-லிருந்து 44 ஆக (உதவித் தொகை பெறத் தகுதியுள்ள 30 இடங்களும், உதவித் தொகைபெறத் தகுதி இல்லாத 14 இடங்களும்) உயர்த்தப்பட்டுள்ளது.

பி. எஸ். எம். எஸ். சித்த மருத்துவப் பட்டப்படிப்புக்காக இக்கல்லூரியிலுள்ள 44 இடங்களில் 4 இடங்களை, கேரள மாநில மாணவர்களுக்கு பரிமாற்று முறையில் அரசு ஒதுக்கம் செய்துள்ளது. இதுபோன்று கேரள மாநில அரசும், தமிழக மாணவர்கள் நால்வரை, கேரளத்திலுள்ள இரு ஆயுர்வேத மருத்துவப் படிப்புக் கல்லூரிகளில் பி.ஏ., எம்.எஸ்., பட்டப் படிப்பில் சேர்த்துக்கொள்ள இணங்கியுள்ளது.

முதுநிலை மருத்துவப் படிப்பு.

பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் "மருத்துவம்" "குணபாடம்" ஆகிய இரு பிரிவுகளில் முதுநிலை சித்த மருத்துவப் பட்டப்படிப்பு 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாத முதல் மைய அரசின் முழுநிதி உதவியுடன் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், இந்தப் படிப்பிற்கு ஒரு பிரிவுக்கு 10 மாணவர்கள் வீதம் இரு பிரிவுகளிலும் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் ரூபாய் 200 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இதுவரை 23 மாணவர்கள் எம்.டி. முதுநிலைப்பட்டம் பெற்றுள்ளனர்.

இந்திய முறை மருந்து செய்பட்டயத்தகுதி படிப்பு.—சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் இரண்டாண்டு கால இந்திய முறை மருந்து செய்பட்டயத்தகுதி படிப்பிற்கு 1974-75 ஆம் ஆண்டு

முதல் ஆண்டுதோறும் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த மருத்துவமனையில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று பிரிவுகளிலும் மருந்து செய்முறை பயிற்சியளிக்கப்படுகிறது. பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் சித்தா பிரிவில் மட்டும் மருந்து செய்முறைப் பயிற்சியளிக்கப்படுகிறது. 1978-79 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சிக்கு 21 மாணவர்கள் (யுனானிப் பிரிவுக்கு மாணவர்கள் முன்வராத காரணத்தால் 4 இடங்கள் காலியாக உள்ளன) சேர்க்கப்பட்டனர். ஒவ்வொரு மாணவருக்கும், மாதந்தோறும் ரூ. 30 உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியினை விரிவாக்கம் செய்தல்.—இக்கல்லூரியில் எல்லாவகையிலும் நிறைவு பெற்ற உடற் கூற்றியல் தொகுதி ஒன்றினை ரூபாய் 3.40 இலட்சம் செலவில் கட்டவும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ரூபாய் 20,000-த்தில் பேருந்து ஒன்று வாங்கவும் அரசு ஒப்பளித்துள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய கட்டிடங்களை இக்கல்லூரியில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) ரூபாய் 3.80 இலட்சம் செலவில் இளம்நிலை மருத்துவர் தங்குமிடம் கட்டுதல்.

(2) ரூபாய் 18.50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மாணவர்களுக்கான விடுதி கட்டுதல்.

(3) ரூபாய் 6 இலட்சம் செலவில் மாணவிகளுக்கான விடுதி கட்டுதல்.

யுனானி மருத்துவக் கல்லூரி.—1960 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரி மூடப்பட்டதிலிருந்து, யுனானி மருத்துவக் கல்வி வழங்கும் பிரிவுகள் இந்த மாநிலத்தில் இதுவரை அமையவில்லை. இந்த இடைவெளியினை நிரப்பவும், இந்த மருத்துவ முறையினை இளைய தலைமுறையினருக்கு வழங்கிடவும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் யுனானி மருத்துவக் கல்வி கற்பிப்பதற்கு யுனானி பிரிவு ஒன்று 1979-80 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 2.45 இலட்சம் ஆகும்.

கிழக்கத்திய மருத்துவச் சங்கத்தின் தென்னிந்திய கிளை, இந்த யுனானி கல்விப் பிரிவிற்கான கட்டிடம் கட்டித்தர இசைவளித்துள்ளது. யுனானி மருத்துவப் பட்டப்படிப்பின் அடிப் படைக் கல்விக்கான இரண்டாண்டுகளை

புகுமுகப் வகுப்பினை (அதாவது யுனானி மருத்துவப் பட்டப் படிப்பிற்கான முதல் இரண்டு ஆண்டுகள்) ஆண்களுக்கு, சென்னை புதுக்கல்லூரியும், பெண்களுக்கு சென்னை, எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரியும் அரசுக்குக் கூடுதல் செலவுகள் ஏதுமின்றி நடத்தித்தர இசைவு தந்துள்ளன.

ஆயுர்வேதக் கல்வி.—1978-79-ம் ஆண்டில், கோயம்புத்தூரிலுள்ள தனியார் ஆயுர்வேதத் தர்ம நிறுவனம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரம்பிற்குட்பட்டு பி.ஏ., எம்.எஸ். ஆயுர்வேதப் பட்டப் படிப்பு கல்லூரி ஒன்றினைத் தொடங்கியுள்ளது.

ஆயுர்வேத, யுனானி மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்.—தற்போது ஆயுர்வேத, யுனானி மருத்துவக் கல்வியின் பயிற்று மொழியாக முறையே சமஸ்கிருதமும், உருதும் இருந்து வருகின்றன. 1964 ஆம் ஆண்டு, பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் ஆயுர்வேதப் பயிற்சி சமஸ்கிருதத்திலும், யுனானிப் பயிற்சி உருது மொழியிலும் தொடங்கப்பட்டபோது, மொழி அறியாக் காரணமாக மாணவர் கவரும் இப்பிரிவில் சேர முன்வரவில்லை. எனவே, தமிழக மாணவர்கள் ஆயுர்வேத, யுனானிப் பயிற்சிப் பிரிவுகளில் சேர்ந்துபயனடையும் வகையில் வரும் ஆண்டுகளில் ஆயுர்வேத, யுனானி மருத்துவக் கல்வியினைத் தமிழ் மொழியிலேயே பயிற்றுவிக்கலாம் என்ற நோக்குடன் ஆயுர்வேத யுனானி மருத்துவ நூல்களை முறையே சமஸ்கிருதம், உருது ஆகிய மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர, சித்தமருத்துவத் தமிழ் இலக்கியங்களையெல்லாம் அவற்றில் அமைந்துள்ள நிறைந்த அறிவுச் செல்வமும், குறிப்பிடத்தக்க அம்சங்களும் பிறமொழி பேசுகின்றவர்களுக்கும் வெளிப்படுத்தும் நோக்குடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயுர்வேத, யுனானி மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்திடவும், சித்த மருத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திடவும் 1979-80 ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

VI. *இந்திய மருத்துவமுறை ஆராய்ச்சி*.—புது டில்லியிலுள்ள இந்திய மருத்துவ முறை, ஓமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழுவின் ஆதரவுடன் சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு, மாநில அரசு இட வசதியும், படுக்கை வசதிகளும் செய்து தந்

துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவுகள் அனைத்தையும், புது டில்லியிலுள்ள இந்திய மருத்துவமுறை, ஓமியோபதி மத்திய ஆராய்ச்சிக் குழு ஏற்றுக்கொள்கிறது

(1) சித்த, ஆயுர்வேத யுனானி முறைகளில் மருந்து ஆராய்ச்சிப் பிரிவுகள்.

(2) சித்தமுறை மத்திய ஆராய்ச்சி நிலையம்.

(3) கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையம்,

புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவத்துறை, ஓமியோபாதி மத்திய ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் பாளையங்கோட்டையில் அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியில் மூலிகைச் செடிகள் (சித்தா) மேற்பார்வைப் பிரிவு ஒன்றும், சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

சித்த மருத்துவ மத்திய ஆராய்ச்சிப் பிரிவிற்கு ரூபாய் 6 இலட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் ஒன்று கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் மருந்துப் பரிசோதனைக்கான பிராணிகள் கூடம் ஒன்றும், அட்டிறச் சாலை ஒன்றும் அமையும்.

மாநில அளவிலான ஆராய்ச்சித் திட்டங்கள்.—நோய்களின் தன்மைகளைக் கண்டறியவும், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை அரசினர் மருத்துவமனையில் முழு வசதிகளும் கொண்ட நோய்க்குறியல் மருந்துச் சோதனைக் கூடம் ஒன்று அமைக்கவும், உயிர்வேதியியல் சோதனைக்கூடம் ஒன்று ஏற்படுத்தவும், ஊடுகதிர் தளவாடங்கள் வாங்கவும், திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 6.39 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், வட்டார யுனானி மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று துவங்கவும், அதற்கான கட்டிடத்தினை மாநில அரசின் செலவில் அமைத்துத் தரவும், பணியாளர் மற்றும் உபகரணங்களுக்குத் தேவையான செலவுகளை மைய அரசு ஏற்றுக்கொள்ளவுமான இந்திய அரசின் செயற் குறிப்பொன்று மாநில அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

VII. சித்த மருத்துவ அறிவியல் மேம்பாட்டுக் குழு :—

சித்த மருத்துவ அறிவியல் மேம்பாட்டுக் குழு, 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பனைஓலைச் சுவடிகள், கையேட்டுப்பிரதிகள், அச்சிடப்பெற்ற அரிய நூல்கள் ஆகியவைற்றை திரட்டுதல், பாளையங்கோட்டை

இந்திய முறை அரசினர் மருத்துவமனைக் கல்லூரியில் நடத்தப்படும் பி.எஸ். எம். எஸ். சித்த மருத்துவப் பட்டப்படிப்பு, எம். டி. சித்த மருத்துவப் பட்டமேற்படிப்பு ஆகியவற்றுக்கான சித்த வைத்தியப் பாட நூல்களையும் திரட்டப்பட்ட சுவடிகள் போன்றவற்றையும். அச்சிட்டு வெளியிடுதல் இக்குழுவின் பொறுப்பாகும். இக்குழு 1977 ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது:—

இக்குழு தொடங்கப்பட்ட நாள் முதல் அது ஆற்றியுள்ள குறிப்பிடத்தக்க பணிகளாவன:

(1) அச்சிடப்பெற்ற அரிய நூல்கள்	699
(2) பனை ஓலைச் சுவற்கள்	848
(3) கையேட்டுப் பிரதிகள்	99
(4) தட்டச்சுப் பிரதிகள்	306

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அச்சிட்ட அரிய நூல்கள், ஓலைச் சுவடிகள், கையேட்டுப் பிரதிகள் ஆகியவைற்றுள், 119 நூல்கள் பிழைகள் நீக்கப்பெற்று படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 74 நூல்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளன. 9 அரிய அச்சிட்ட நூல்களை மறுபதிப்பிட்டு வெளியிடவும், இதுவரை திரட்டப்பட்ட நூல்களைப் பற்றிய "விளக்கப்பட்டியல்" ஒன்று தயாரித்து அச்சிட்டு வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 11 சித்த மருத்துவப் பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டு பாட நூல்கள் அச்சில் உள்ளன.

மறைந்த சித்த மருத்துவ மேதை திரு. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள சித்த மருத்துவ வரலாறு எனும் ஆங்கில நூல் விரைவில் வெளியிடப்படும்.

திரு. சாம்பசிவன் பிள்ளை எழுதிய சித்த மருத்துவ அகராதி எனும் நூலின் 4 ஆம் பாகமும், 5 ஆம் பாகமும் இலவசமாக அச்சிடப்பட்டு கோயம்புத்தூரில் உள்ள ஜி. டி. நாயுடு அறக்கட்டளை அச்சகத்திலிருந்து வரப்பெற்றன.

பொதுமக்களின் பயன் கருதி "நல்வாழ்வுக்கு ஒரு நல் மருத்துவம்" எனும் சிறு நூல் ஆங்கிலத்திலும் (Simple Home Remedies). வெளியிடப்பட்டுள்ளது.

VIII. இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுக் குழு.

சித்த மருத்துவத்தினை மேம்பாடடையச் செய்வதற்கும் பொது மக்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை அதிகமாக்கவும் உரிய வழி முறைகளை ஆய்ந்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு 1978 ஆம் ஆண்டு

ஆகஸ்டு திங்களில் "இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுக் குழு" அமைக்கப்பட்டது. 1—9—1978-முதல் செயல்படத் தொடங்கியுள்ள இக்குழு அரசுக்கு அனுப்பியுள்ள முதலாவது அறிக்கையினை அரசு பரிசிலித்து வருகின்றது.

IX. தொண்டாற்றும் நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்தல்.

இந்திய மருத்துவ முறையில் இலவசச் சிகிச்சையளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானிய உதவியளித்து வருகின்றது. மக்களுக்குத் தொண்டாற்றுகின்ற இந்நிறுவனங்களின் பராமரிப்புச் செலவில் துண்டு விழும் தொகையின் ஒரு பகுதியினை ஈடு செய்கின்ற வகையில் இந்த மானிய உதவி வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் ஆண்டுதோறும் மானிய உதவி பெற்று வருகின்றன :—

	ஆண்டு ஒன்றுக்கு (ரூபாய்).
(1) திருவெங்கடாமமை ஆயுர்வேத மருந்தகம், மயிலை, சென்னை.	5,000
(2) ருக்மணி நிறைவு மருத்துவமனை, பட்டுக் கோட்டை.	2,000
(3) அருள்மிகு இராமநாதசுவாமி தேவஸ்தான ஆயுர்வேத மருந்தகம், இராமேஸ்வரம்.	2,000
(4) ஸ்ரீ வெங்கடேச ஔஷதாலயா, சென்னை	5,000

X. யோகாசன முறை சிகிச்சை :—

யோகசான சிகிச்சை முறைக்கு அங்கிகாரம் வழங்குவது பற்றியும், இந்த முறையினை தமிழகத்தில் மேம்பாடடையச் செய்வது. பற்றியும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு தமிழக அரசு ஓர் குழுவினை அமைத்துள்ளது. அண்மையில் இக்குழு அரசுக்கு ஒரு ஆரம்ப அறிக்கையினைத் தந்து சில பரிந்துரைகளையும் அனுப்பியுள்ளது. இப்பரிந்துரைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன. மாநிலத்தில் தற்போது இயங்கி வருகின்ற யோகாசன நிலையங்களுக்கு அரசு மானிய உதவி அளிக்கவேண்டியது பற்றியும் இக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

திருப்பதியிலுள்ள "இந்திய யோகாசனம் மற்றும் யோகாசனத் தொடர்பான அறிவியல் பயிற்சி நிலையம் (பதிவு செய்யப்பட்டது) ஆஸ்த்துமா, மஞ்சட் காமாலை போன்ற சிலவகையான நோய்களை யோகாசன முறையில் குணப்படுத்துவது பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றது. இந்நிறுவனத்தின் பராமரிப்புச் செலவில் துண்டு விழும் தொகையினை ஈடுசெய்யும் வகையில் பங்கு பெறும் பிற மாநிலங்களுக்குச் சமமாக (ஆந்திரா மற்றும் கர்நாடகா) ரூபாய் 3 லட்சத்திற்கு மேற்படாத தொகையினை மானிய உதவியாக வழங்குவதற்கு இந்த அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்திற்கு ரூபாய் 3 லட்சம் மானிய உதவி முன்கூட்டியே அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தின் முழுப் பொறுப்பினையும் அண்மையில் ஆந்திர மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது..

தற்சமயம் தமிழகத்தில் மொத்தம் 25 யோகாசன நிலையங்கள் உள்ளன. சென்னை, அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள இதய நோய் சிகிச்சைத் துறையுடன் யோகாசனப் பிரிவு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அண்மையில் சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் யோகாசன ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், திடமான இதயக் துடிப்பு ஆய்வுக்கூடம் ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளன.

XI. இயற்கைமுறை மருத்துவம் :

இயற்கைமுறை மருத்துவத்தினையும் தமிழகத்தில் இருந்து வரும் நோய் சிகிச்சைப் பிரிவுகளில் ஒன்றாக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இயற்கை முறை சிகிச்சை பற்றிய அனைத்து விவரங்களையும், இந்த முறையினை மேம்பாடடையச் செய்வதற்கான வழிகளையும் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு அரசு அமைத்துள்ள ஆலோசனைக் குழு இந்த சிகிச்சை முறை பற்றிய பாடங்கள், பாடத்திட்டங்கள் குறித்த வரைவு அறிக்கை ஒன்றை அரசிற்கு அளித்துள்ளது. இது அரசின் ஆய்வில் இருந்து வருகின்றது. ஐதராபாத், இயற்கை முறை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு, தமிழகத்திலிருந்து 4 பேரை 1979—80 ஆம் ஆண்டு முதல் அனுப்பிவைக்கலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சியாளர் ஒருவருக்கு மாதந்தோறும் ரூ. 250 உதவித் தொகை தரப்படும். இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்குச் செலவாகும் தொகை ஏறத்தாழ ரூ. 13,000 ஆகும்.

இந்தியமுறை மருத்துவத்தின் மேம்பாட்டிற்காக 95.68 லட்சம் ரூபாய் செலவில் புதிய திட்டங்களை வகுத்து, 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 47.69 லட்சம் செலவிட அரசு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியமுறை மருத்துவத்தின் வளர்ச்சிக்கென இந்த அரசு மிக்க ஆர்வத்துடன் முயன்று வருகின்றது.

பிற்சேர்க்கை I.

1978–79 ஆம் ஆண்டில் மாநில மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்டமேற்படிப்பு, பட்டயத் தகுதி வகுப்புகளுக்கான பட்டியல்.

வரிசை எண்ணும் படிப்பின் பெயரும்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.					
	சென்னை, மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 எம்.டி. (பொது மருந்தியல்).	21	20	12	19	5	77
2 எம்.டி. (நோய் குறியியல்).	4	..	..	2	..	6
3 எம்.டி. (நுண்ணுயிரியல்).	6	..	..	2	..	8
4 எம்.டி. (தாய்மை மருத்துவம்).	13	8	..	5	..	26
5 எம்.டி. (உடல் அமைப்பியல்).	4	4	..	4	..	12
6 எம்.டி. (சமூக தடுப்பு மருத்துவம்).	1	..	..	..	..	1
7 எம்.டி. (மருந்தாக்கியல்).	4	..		4	..	[illegible]

பிற்சேர்க்கை I—தொடர்ச்சி.

1978–79 ஆம் ஆண்டில் மாநில மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்டமேற்படிப்பு, பட்டயத் தகுதி வகுப்புகளுக்கான பட்டியல்—தொடர்ச்சி.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
8 எம்.டி. (சட்டஞ் சார்ந்த மருத்துவ இயல்).	2	..	..	2	..	4
9 எம்.டி. (சிசு நோய் மருத்துவம்).	17	2	..	3	..	22
10 எம்.டி. (உள நோய் மருத்துவம்).	2	..	..	1	..	3
11 எம்.டி. (மயக்க மருந்தியல்).	5	3	..	5	..	13
12 எம்.டி. (எக்ஸ் கதிர் முறை நோய் அறிவியல்).	4	..	..	..	..	4
13 எம்.டி. (எக்ஸ் கதிர் முறை நோய் சிகிச்சை இயல்).	4	..	..	..	..	4
14 எம்.டி. (மேக நோய் இயல்).	4	..	..	..	..	4
15 எம்.டி. (தோல் நோய் இயல்).	5	1	..	..	..	6
16 எம்.டி. (உயிர் வேதியியல்).	4	..	..	..	1	5
மொத்தம் ..	100	38	12	47	6	203

[1979 ஏப்ரல் 17

பிற்சேர்க்கை 1—தொடர்ச்சி.

978–79ஆம் ஆண்டில் மாநில மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்டமேற்படிப்பு, பட்டயத் தகுதி வகுப்புகளுக்கான பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண்ணும் படிப்பின் பெயரும்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.					
	சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
17 எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை).	21	20	12	18	6	77
18 எம்.எஸ். (உடற்கூறு ஆய்வு இயல்).	4	.	.	2	..	6
19 எம்.எஸ். (கண்நோய் இயல்).	6	.	..	6	..	12
20 எம்.எஸ். (காது, மூக்கு, தொண்டை இயல்).	6	..	..	4	..	10
21 எம்.எஸ். (முடநீக்கியல் மருத்துவம்).	4	..	..	3	..	7
22 எம்.எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	4	2	..	..	..	6
மொத்தம்	45	22	12	33	6	118

1979 ஏப்ரல் 17]

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
23 எம்.டி.எஸ். (பல்வலியால் ஏற்பட்டுள்ள வீக்கம்),	3	..	..	..	..	3
24 எம்.டி.எஸ். (ஒரல் சர்ஜரி).	4	..	..	..	..	4
25 எம்.டி.எஸ். (ஆபரேடிவ் சர்ஜரி).	3	..	..	..	..	3
26 எம்.டி.எஸ். (ஆர்த்தோடென்ஷியா).	4	..	..	..	..	4
மொத்தம் ..	14	..	..	..	..	14

பட்டயத் தகுதிப் படிப்புகள்.

வரிசை எண்ணும் படிப்பின் பெயரும்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.					
	சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1 டி.ஜி.ஓ.	36	16	8	16	6	82
2 டி.சி.எச்.	36	12	8	12	3	71
3 டி.எம்.ஆர்.டி.	8	8	..	12	..	28
4 டி.எம்.ஆர்.டி.	8	..	..	..	..	8
5 டி.எல்.ஓ.	24	4	4	12	3	47
6 டி.ஏ.	12	12	..	20	2	46
7 டி.ஓ.	16	..	..	12	6	34
8 டி. ஆர்தோ	8	4	8	4	..	24
9 டி.வி.	16	..	..	4	..	20
20 டி.சி.பி.	9	..	..	..	..	9
11 டி.சி.டி.டி.	12	..	..	..	..	12
12 டி.டி.	12	4	..	..	..	16
13 டி.பி.எம்.	8	..	..	6	..	14
14 டிப்ளமா இன் பிஸிகல் மெடிசின்.	4	..	..	..	..	4
15 பி.எஸ்.எஸ்.சி. டி.பி.எச். ஆக மாற்றப்பட்டுள்ளது.	10	..	..	..	..	10
16 எல்.பி.எச்.	1	—	..	..	..	1
மொத்தம் ..	220	60	28	98	20	426

உயர்நிலை சிறப்புத் துறைகள்.

வரிசை எண்ணும் படிப்பின் பெயரும்.	சென்னை மருத்துவக் கல்லூரி சென்னை.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி சென்னை.	மதுரை மருத்துவக் கல்லூரி மதுரை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
எம்.சி.எச். (சிசுநோய் அறுவை சிகிச்சை இயல்).	3	..	2	5
எம். சி. எச். (பிளாஸ்டிக் சர்ஜரி).	3	2	2	7
எம்.சி.எச். (நீரோ சர்ஜரி) ..	..	..	2	2
எம்.சி.எச். (ஜெனிடோயூரினரி சர்ஜரி).	4	..	..	4
எம்.சி.எச். (தொராசிக் சர்ஜரி).	3	..	..	3
மொத்தம் ..	13	2	6	21
டி.எம். (கார்டியாலஜி) ..	3	..	..	3
டி.எம். (நீராலஜி) ..	4	..	..	4
டி.எம். (நெப்ராலஜி) ..	1	..	..	1
டி.எம். (கேஸ்ட்ரோ என்ட்ராலஜி).	2	..	..	2
மொத்தம் ..	10	..	..	10
எம். பார்மஸி .	..	..	3	3
பெரு மொத்தம் ..	23	2	9	34

[1979 ஏப்ரல் 17

பிற்சேர்க்கை II.

மருத்துவக் கல்வி மருத்துவமனைகளும் நிறுவனங்களும்.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.
4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
5. அரசு கண் மருத்துவமனை, சென்னை.
6. அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை.
7. அரசு மகப்பேறு, மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள், குழந்தைகளுக்கான மருத்துவமனை, சென்னை.
8. அரசு ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.
9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.
10. அரசு திருவொற்றீசுவரர் காச நோய் மருத்துவமனை, சென்னை.
11. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை.
12. அரசு காச நோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் மருத்துவமனை, தாம்பரம்.
13. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.
14. அரசு இராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.
16. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.
17. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. கோயம்புத்தூர்.
18. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.
19. அரசு மார்பு நோய் நிலையம், சேத்துப்பட்டு, சென்னை-31.
20. அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிறுவனம், காஞ்சிபுரம்.
21. கிங் நிலையம், கிண்டி.

1979 ஏப்ரல் 17]

பிற்சேர்க்கை III.

மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

	1977-78.	1978-79.
1. அரசு பொது மருத்துவமனை, சென்னை	1,621	1,621
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை ..	1,020	1,121
3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.	420	420
4. (அ) அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.	620	662
(ஆ) அரசு சைதாப்பேட்டை மருத்துவமனை, சென்னை (அரசு இராயப்பேட்டை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது)	32	32
(இ) அரசு புறநகர் மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை (அரசு இராயப்பேட்டை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது)	..	100
5. அரசு கண் நோய் மருத்துவமனை, சென்னை	328	328
6. அரசு கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, சென்னை ..	675	685
7. மகப்பேறு மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் பெண்கள் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை, சென்னை ..	534	574
8. அரசு ராசா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை	426	462

[1979 ஏப்ரல் 17

	1977–78.	1978–79.
9. குழந்தை நல நிறுவனம், குழந்தைகள் மருத்துவமனை சென்னை	250	250
10. அரசு திருவொற்றீசுவரர் காச நோய் மருத்துவமனை, ஓட்டேரி	222	222
11. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை	1,800	1,800
12. அரசு காச நோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் மருத்துவ மனை. தாம்பரம்	750	750
13. அரசு ராசா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சாவூர்	612	612
14. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் ..	589	589
15. (அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி	663	663
(ஆ) அரசு பிரெய்டா மொன்னியர் மருத்துவமனை, களக்காடு (திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யுடன் இணைக்கப்பட்டது).	30	30
16. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்	805	805
17. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு.	416	416
18. (அ) எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை	1,394	1,394

1979 ஏப்ரல் 17]

	1977-78.	1978-79.
(ஆ) அரசு காசநோய் மருத்துவம் மற்றும் நலம்பேண் நிலையம், தோப்பூர் (மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டது) . ..	182	182
(இ) அரசு தொற்று நோய் மருத்துவ மனை, தோப்பூர் (மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டது)	50	50
(ஈ) அரசு காலரா சேகரிப்பு மையம், தோப்பூர் (மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது).	28	28
(உ) அரசு மருத்துவமனை, பாலரங்கபுரம் (மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை யுடன் இணைக்கப்பட்டது) ..	40	40
19. அரசு மார்பு நோய் நிலையம், சேத்துப்பட்டு	..	..
மொத்தம்	13,507	13,800

பிற்சேர்க்கை IV.

1978–79ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட கட்டிடங் களுக்கான விவரம்.

1. புற்றுநோய் பிரிவு, அரசினர் மருத்துவமனை, இராயப் பேட்டை, சென்னை.

2. மகப்பேறு பிரிவில் கூடுதல் பகுதி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

3. 30 படுக்கைகள் கொண்ட விபத்துக்கள் சிகிச்சைப் பிரிவு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம் புத்தூர்.

4. பிணவறை பகுதி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

[1979 ஏப்ரல் 17

5. புதிய புறநோயாளி பிரிவு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

6. கூடுதல் விரிவுரைக் கூடம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.

7. 150 படுக்கைகளுக்கான மூன்றடுக்கு மாடி கட்டிடம், மகப்பேறு மகளிர் நோய் இயல் நிறுவனம், மகளிர் சிறுவர் அரசு மருத்துவமனை, சென்னை.

8. மாற்றங்கள் செய்யப்பட்ட குடும்பநல அறுவை அரங்கம், அரசு ராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

பிற்சேர்க்கை V.

கட்டி முடிக்கப்பட்டு விரைவில் செயல்படவிருக்கும் கட்டிடங்களின் விவரப் பட்டியல்.

1. கே. கே. நகர் மருத்துவமனையில் செயற்கை உறுப்புகள் நிலையத்திற்கான கட்டிடம்.

2. அறிஞர் அண்ணா நகரில் 100 படுக்கைகளுடன் கூடிய அரசு புறநகர் மருத்துவமனைக்கான கட்டிடம்.

3. காரப்பேட்டையில் 100 படுக்கை வசதிகளுடன் புற்றுநோய் மருத்துவமனைக் கட்டிடம்.

4. தண்டையார்பேட்டையில் 100 படுக்கைகளுடன் கூடிய அரசு புறநகர் மருத்துவமனைக்கான கட்டிடம்.

5. அரசு கண் மருத்துவமனையில் புறநோயாளிப் பிரிவின்மேல் இரண்டாவது மாடிக் கட்டிடம்.

6. சென்னை மருத்துவக் கல்லூரியிலுள்ள சிற்றுண்டி விடுதிக்கு மேல் கூடுதலாக மூன்று மாடிக் கட்டிடம்.

7. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28 படுக்கைகள் கொண்ட அறுவைச் சிகிச்சைப் பிரிவு கட்டிடம்.

8. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பார்வையாளர் காத்திருக்கும் கொட்டகை.

9. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய விரிவுரைக் கூடம்.

10. அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் தற்போதுள்ள குடிநீர் மற்றும் நீர் வசதிகளுக்கு மேம்பாடு வேலைகள்.

1979 ஏப்ரல் 17]

பிற்சேர்க்கை VI.

நடைபெற்று வரும் கட்டிடப் பணிகளின் விவரப்பட்டியல்.

1. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பிரசவம் மற்றும் பெண்கள் அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கு சறுக்குப் பாதை அமைத்தல்.

2. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய அறுவை அரங்கில் ஒரு பகுதி கட்டுதல்.

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொழு நோய்க்கு தற்காலிக மருத்துவச் சிகிச்சைப் பிரிவு.

4. சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் பல மாடி இணைப்புக் கட்டிடம்.

5. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விலங்குக்கூடம் கட்டுதல்.

6. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரண்டு ஆழ் கிணறுகள் அமைத்தல்.

7. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அக நோயாளிச் சிகிச்சைப் பிரிவிற்கும் பிரசவப் பிரிவுக்கும் இணைப்பு தாழ்வாரம் அமைத்தல்.

8. செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் மருந்தாக்கியல் பகுதிக்கு கட்டிடம் கட்டுதல்.

9. தஞ்சாவூர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் காங்கிரீட்டில் மேல் நிலைத் தொட்டி கட்டுதல்.

10. தஞ்சாவூர் அரசினர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் எலும்பு முறிவு வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

11. தஞ்சாவூர் அரசினர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் நீர்த் தேக்க தொட்டி கட்டுதல்.

12. தஞ்சாவூர் அரசினர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் அறுவை அரங்கங்கள் கட்டுதல்.

13. தஞ்சாவூர் அரசினர் ராசா மிராசுதார் மருத்துவமனையில் முதல் மாடியில் தாமஸ் கூடத்தில் உள்ள அறையை மாற்றியமைத்தல்.

14. குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் நீராவி சலவை நிலையம் அமைக்க கட்டிடம்.

பிற்சேர்க்கை—VI தொடர்ச்சி

நடைபெற்று வரும் கட்டிடப்பணிகளின் விவரப்பட்டியல்—தொடர்ச்சி

15. மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் காங்கிரீட்டில் மைய மேல் நிலைத் தொட்டி கட்டுதல்.

16. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சமூக மற்றும் தடுப்பு நோய் இயல் மருத்துவப் பகுதிக்கு மேல் முதக் மாடி கட்டுதல்.

17. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் விலங்குள் கூடம் கட்டுதல்.

18. காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையத்திற்கு 250 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக் கட்டிடம்.

19. காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் நிலையத்திற்கு உயர் மின்னழுத்த வசதி செய்தல்.

20. அரசினர் பொது மருத்துவமனையில் விபத்துச் சிகிச்சை பிரிவு கட்டுதல்.

21. சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் ஒட்டு அறுவைச் சிகிச்சைப் பிரிவில் தற்போதைய அவசர கை அறுவை பிரிவிற்கு மேல் முதல் மாடிகட்டுதல்.

22. சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவிற்கு மேல் நான்கு மாடிகள் கட்டுதல்.

23. ஒட்டேரி அரசு திருவொற்றீசுவரர் காச நோய் மருத்துவமனையில் தற்போதுள்ள கட்டிடத்திற்கு மாறுதல்கள் செய்தலும் பிணவறைப்பகுதிக்கு குளிர் சாதனம் அமைத்தலும்.

24. சென்னை அரசினர் மனநோய் நிலையத்தைச் சார்ந்த தொழிற் பயிற்சி மருத்துவப் பகுதி மற்றும் மறுவாழ்வு நிலையத்திற்கு ரொட்டி தயாரிக்கும் பிரிவிற்கென கட்டிடம் கட்டுதல்.

25. திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சறுக்குப்பாதை அமைத்தல்.

பிற்சேர்க்கை—VII

நிறுவனங்கள். (1)	சாதனங்களின் பெயர். (2)	விலை. (3) (ரூபாய் இலட்சத்தில்)
1. அரசினர் இராயப் பேட்டை மருத்துவ மனை, சென்னை.	ஹேமோடையலி செட் 1.	0·87
2. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.	கார்டியோ தொராசிக் சர்ஜரி சாதனம்—1.	7·50
3. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	அண்டர் வாட்டர் கட்டிங் டையாதெர்மி மிஷின் சிஸ்டோஸ்கோப்.	0·98
4. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	ஈ. ஈ. ஜி. மிஷின்—1.	0·70
5. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	ஸ்பெக்ட்ரோ மீட்டர் ..	0·77
6. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.	கான்டாக்ட் சூப்பர்பிசியல் தெரபி யூனிட்-1.	2·37
7. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	500 எம். ஏ. எக்ஸ்ரே மிஷின்—1.	2·22
8 மனநோய் மருத்துவ நிலையம்	ஈ. ஈ. ஜி. மிஷின் ..	0·70
9. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.	500 எம். ஏ. எக்ஸ்ரே மிஷின்—1.	1·85
10. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.	50 எம். ஏ. எக்ஸ்ரே யூனிட்—2.	0·65

[1979 ஏப்ரல் 17

பிற்சேர்க்கை—VII—தொடர்ச்சி

நிறுவனங்கள்.	சாதனங்களின் பெயர்.	விலை.
(1)	(2)	(3)
11. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை, (காது, மூக்கு, தொண்டை துறை).	ஆபரேஷன் மைக்ராஸ்கோப்,	0·07
12. அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை	இருதயநோய் மும்முர சிகிச்சைப் பிரிவிற்கான சாதனங்கள்.	1·58
13. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை,	ஆட்டோமேடிக் பிலிம் பிராஸஸர்.	1·73
14. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை	பெட்ஸைடு மானிட்டர்-4, 2 டெபிபிரிலேட்டர்	1·65
15. அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	மொடுலார் சிஸ்டம்	0·50
16. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.	பார்மகாலஜி துறைக்கு சாதனங்கள்.	1·41
17. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.	ஹெட்லேம்ப்மிஷின்	0·61
18. அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	200 எம். ஏ. 100 கே. வி. எக்ஸ்ரே பிளாண்ட்.	1·60
		27·79

1979 ஏப்ரல் 17]

பிற்சேர்க்கை—VIII

1979-80 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல்.

வரிசை எண்ணும், திட்டமும்.	மொத்தச் செலவு.	1979-80 செலவு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையிலும், நாகப்பட்டினம் தலைமையிட மருத்துவமனையிலும் சென்னை குழந்தை நல நிறுவனத்திலும் மின் ஆக்கிகள் அமைத்தல்.	20·00	12·50
2. சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் நரம்பியல் துறையில் ஸ்டுரோக் சென்டரை துவக்குதல்.	23·54	7·00
3. திருச்சிராப்பள்ளியிலும், சேலத்திலும் செவிலியர்கள் மற்றும் மருந்தாளர் பள்ளிகள்.	122·62	51·00
4. மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் துறைகளை உயர் நிலைப் படுத்தல்.	32·00	1·00
5. சென்னை அரசு பொது மருத்துவ மனையில் நரம்பியல் துறையில் சி. டி. எச். ஸ்கான்னர் வழங்குதல்.	40·00	40·00
6. மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை மற்றும் அவசரகால பணிகளுக்கான ஏற்பாடு.	118·32	45·00
மொத்தம் ..	356·48	156·50

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

புதன்கிழமை, 1979 ஏப்ரல் 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, நிறைய நேரம் தேவைப்படுவதால், கேள்வி நேரத்திலே கொஞ்சம் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

Sembanur Ancient Monument.

* 300A. *Q.*—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that the Ancient Monument which was built hundred years ago, at Sembanur Panchayat in Kallal Union of Karaikudi Taluk, was demolished and some valuable things in it have been stolen ; and

(*b*) if so, the action taken thereon ?

செம்பனூர் புராதன நினைவுச் சின்னம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காரைக்குடி வட்டம், கல்லல் ஒன்றியத்தில் உள்ள செம்பனூர் ஊராட்சியில் நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட புராதன நினைவுச் சின்னம் இடிக்கப்பட்டு அதில் உள்ள விலை உயர்ந்த பொருள்கள் களவு போய் விட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்): (அ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவில் உள்ள புராதன நினைவுச் சின்னம் என்று கூறப்படுவது சுமார் 100-லிருந்து 150 வருடங்கட்கு முன்னால் கட்டப்பட்ட சிவகெங்கை மன்னரின் உறவினர் ஒருவரின் சமாதி என்று தெரியவருகிறது. கவனிப்பாரற்று புதர்கள் சூழ்ந்த புறம்போக்கு நிலத்தில் உள்ள அந்தச் சமாதியிலிருந்து விலை உயர்ந்த பொருள்கள் ஒன்றும் களவு போகவில்லை.

(இ) எழவில்லை.

Telephone Booths near Taxi-stands.

* 300B. Q.—Thiru S. RAMAKRISHNA THEVAR (on behalf of Thiru K. RAMAMOORTHI): Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether there is any proposal with the Government to provide Telephone Booth facilities near the Taxi-stands in Madras City ; and

(b) if so, the stage at which the matter now stands ?

வாடகைக் கார்கள் நிற்கும் இடங்களில் தொலைபேசி அறைகள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் (திரு. க. இராமமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரத்தில் வாடகைக் கார்கள் நிறுத்தி வைக்கப்படும் இடங்களுக்கு அருகில் தொலைபேசி அறை வசதிகளை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பில்): (அ) & (இ) ஆம். சென்னை நகர காவல் துறை (போக்குவரத்து) துணை ஆணையாளர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களிலே டாக்சி ஸ்டான்டுகளிலே டெலிபோன் வைத்திருக்கிறார்கள். அங்கேயிருந்து அழைத்தாலும், டாக்சி வரும் வாய்ப்பு இருக்கிறது. அந்த மாதிரி சென்னையிலே இல்லாமல் இருக்கக் காரணம் என்ன? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: சென்னை, தொலைபேசித் துறை பொது மேலாளர் அவர்கள், தொலைபேசிக் கூண்டு நிறுவ நிலையான கட்டுமானங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே எத்தனை இடங்களில் கட்டுமானங்களை அமைக்க வேண்டுமென்பதுபற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: எம்.எல்.ஏ. விடுதிக்குப் போக வேண்டுமென்று சொன்னால், டாக்சிகள் வர முடியாதென்று சொல்லி, மறுக்கக்கூடிய சம்பவங்களைப் பல உறுப்பினர்கள் இந்தச் சபையிலும், பேரவையிலும் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: வினா, டாக்சி ஸ்டான்டுகளில் தொலைபேசி நிறுவுவது பற்றியதாகும். டாக்சி வரவில்லை என்பது வினாவிற்குத் தொடர்புடைய கேள்வியாகாது. ஏற்கனவே போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அது குறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். திரும்பவும் அரசு இதை கவனத்தில் கொள்ளும் என்று கூற விரும்புகிறேன்.

Sub-Court at Namakkal.

* 301. Q.—THIRU S. RAMAKRISHNA THEVAR (on behalf of THIRU A. BALASUBRAMANIAM) : Will the Hon. the Minister for Law be pleased to state :

(a) whether there is any proposal with the Government to constitute a Sub-Court at Namakkal, Salem district ; and

(b) if so, the date on which it will be constituted ?

நாமக்கல்லில் சார்பு நீதிமன்றம்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் (திரு. ஆ. பாலசுப்ரமணியம் சார்பில்): மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், நாமக்கல்லில் சார்பு நீதிபதி நீதிமன்றம் ஏற்படுத்தும் கருத்தேதும் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அது எப்போது ஏற்படுத்தப்படும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) and (*b*) The constitution of a Sub-Court at Namakkal has been sanctioned by Government in their order, dated 6th December 1978 and the Sub-Court has now started functioning from 4th March 1979.

Chief Judicial Magistrate.

* 302. *Q.*—THIRU C. RAMALINGAM (on behalf of THIRU E. S. VENKATESAN) : Will the Hon. the Minister for Law be pleased to state :

(*a*) whether there is any proposal to equate the post of the Chief Judicial Magistrate, the head of the Criminal Unit of the Judiciary in the District, with that of the District Revenue Officer for purposes of pay ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

நீதித்துறை முதன்மை குற்றவியல் நீதிபதி.

திரு. சி. இராமலிங்கம் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்) : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட நீதித்துறையின் குற்றவியல் பிரிவின் தலைமைப் பதவியாக உள்ள நீதித்துறை முதன்மை குற்றவியல் நீதிபதி பதவித்தரத்தை, சம்பள விகிதங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட வருவாய் அதிகாரியின் பதவித் தரத்திற்கு இணையாகக் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Headmasters of Higher Secondary Schools.

* 303. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that a condition is prescribed to the effect that, for appointment as Headmasters of Higher Secondary Schools, one should have teaching experience of two years in such Schools ;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) whether there is any proposal with the Government to change the designation of the post 'Headmasters of **Higher** Secondary Schools' to **Principal** ?

உயர் இடைநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் இடைநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் நியமனத்திற்கு, இரண்டாண்டுகள் அப்பள்ளிகளில் பணிபுரிந்த அனுபவம் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

(உ) உயர் இடைநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் பதவிப் பெயரை 'முதல்வர்' (Principal) *என்று மாற்றி அழைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?*

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : *(அ) ஆம்.*

(இ) மேல்நிலைக் கல்வி இயங்கும் முறையும் உயர்நிலைக் கல்வி இயங்கும் முறையும் வேறுபட்டுள்ளதாலும், உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியாக நியமனம் பெற 5 ஆண்டுகள் பி.டி. ஆசிரியராகப் பணிபுரிந்த அனுபவம் வேண்டுமென்று விதி உள்ளது போல் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவிக்கும், மேல்நிலைப்பள்ளியில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் தேவை என்று கருதப் பட்டதாலும், முதுகலைப் பட்டம் பெறாது தற்காலிகமாக மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியாக நியமிக்கப்பட்டவர்கள் அதனைப் பெறவும், மேல்நிலைப் பள்ளி நிர்வாகங்களில் முன் அனுபவம் மூலம் பதவி உயர்வுக்குத் தகுதி பெற்றிடவும் வாய்ப்பளிக்கும் வகையில் இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(உ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : *தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் சென்ற ஆண்டுதான் துவக்கப்பட்டன. அப்படி இருக்கும்போது, எப்படி தலைமையாசிரியர்கள் இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற முடியும்? முன்பே அந்தப் பள்ளிகளைத் துவக்கியிருந்தால் பரவாயில்லை. சென்ற ஆண்டு பள்ளிகளைத் துவக்கிவிட்டு, இரண்டு ஆண்டுகள் அனுபவம் வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது பொருத்தமாக இல்லை. எனவே இது குறித்து அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா ?*

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : *இரண்டு ஆண்டுகள் அனுபவம் தேவையென்று இப்போது சொல்லியிருக்கிறோம். அந்த அனுபவத்தைப் பெறும்போது, அந்த வாய்ப்புகளை அப்போதிருக்கும் சூழ்நிலையில் அவர்கள் பெறுவார்கள். இதில் ஆச்சரிப்படுவதற்கோ, அதிசயப்படுவதற்கோ ஒன்றுமில்லை. பட்டப் படிப்பு படித்தவர்கள்கூட தலைமையாசிரியர்களாக இருக்கிறார்கள். ஆனால், மேல் நிலைப்பள்ளிகளில் எம்.ஏ. படித்தவர்கள்தான்*

தலைமை ஆசிரியர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். எனவே தகுதிகளை உயர்த்திக்கொள்ள இந்த இரண்டு ஆண்டுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது இரண்டு ஆண்டுக்கால அனுபவம் என்றும் அப்போது சொல்லிக் கொள்ளலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரு பள்ளியை நிர்வாகம் செய்வது என்ற அடிப்படையிலே பார்த்தால், ஏற்கெனவே தலைமை ஆசிரியர்களுக்குப் பல ஆண்டு அனுபவம் இருக்கிறது. பாட போதனை என்பது வேறு, நிர்வாகம் என்பது வேறு. ஏற்கெனவே அவர்களுக்குத் தலைமை ஆசிரியர் அனுபவம் இருப்பதால், மீண்டும் இரண்டு ஆண்டுக்கால அனுபவம் தேவை என்பது பொருத்தமுடையதாக இல்லை. ஆகையால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இது குறித்து மறுபரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைமை ஆசிரியராக இருந்த ஒரு தகுதியை மட்டும் வைத்து நாம் தரவில்லை. அப்படித் தருவதாக இருந்தால், வேறு பலருக்குக் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமலிருக்கும். எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற முறையிலே, யோசித்து, இந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மேல்நிலை வகுப்புகள் புதிதாகக் கொண்டுவரப் பட்டன. மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கல்வித் தகுதியையும், அனுபவத் தகுதியையும் வரையறை செய்கிறோம். அவர்கள் அனுபவத் தகுதியை இனிமேல்தான் பெற முடியும். எனவே அப்படி வரையறை செய்வது முறையா? மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, முதுகலைப் பட்டமும், ஆசிரியர் பயிற்சிப் பட்டமும், 15 ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்த அனுபவமும் இருக்க வேண்டுமென்று வைப்பது தான் சரியாக இருக்கும். இனிமேல் பெறப் போகும் அனுபவத்தை நிபந்தனையாக விதிப்பது முறையல்ல. அப்படி இல்லாமல், அந்த ஸ்கேல் ஆப் பே இரண்டு வருஷங்கள் கழித்துதான் அமுலுக்கு வருமென்று சொல்லுவது நியாயமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முதுகலைப் பட்டம் பெறாதவர்கள் நிறைய பேர் இன்றைக்கு தலைமை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய வாய்ப்புக் கொடுக்காத நிலை ஏற்பட்டால், பிரச்சினைகள் மேலும் உருவாகும். அந்த வாய்ப்புகளை அவர்களுக்கும் தர வேண்டுமென்று தான் இரண்டு ஆண்டுகள் அனுபவமென்று வைத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளுக்கு 5 ஆண்டுகள் என்ற நிலைமையில், இதற்கு இரண்டு ஆண்டுகள் என்று வைத்திருக்கிறோம். இது நீடித்து இருப்பது நல்லதுதான்.

திரு. பி. ஆர். தாமஸ் : உயர் இடைநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நிபந்தனைகள் என்பது ஊதிய உயர்வைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்ற பிறகுதான் ஆண்டு ஊதிய உயர்வு பெற முடியுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. ஒரு ஆண்டு பணியாற்றியதற்கு, அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வை வழங்க, அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டு ஆண்டுக் காலம் என்று நாம் வைத்திருப்பதன்மூலம், சிலருக்குப் பாதுகாப்பு தருகிறோம். அப்படி இல்லை என்று எடுத்துவிட்டால், உடனடியாக எம்.ஏ., பி.டி. பட்டம் பெற்றவர்கள்தான் தலைமை ஆசிரியர்களாக வருவார்கள். பி.ஏ., பி.டி. படித்து, அனுபவம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியர்களாகும் வாய்ப்பை நேரடியாக இழக்கும் நிலைமைகள் ஏற்படும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது, தமிழாசிரியர்கள்கூட தலைமை ஆசிரியர்களாகும் வாய்ப்பு இருக்கிறது.

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு துணைக் கேள்விகள் அனுமதித்துவிட்டேன். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்கும் நேரத்தில், மூன்றாவது துணைக் கேள்வி கேட்கிறீர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, வினாவில் மூன்றாவது உட்பிரிவு குறித்து கேள்வி கேட்க விரும்புகிறேன். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மொத்தக் கேள்விக்கும் சேர்த்து துணை வினாவா அல்லது ஒவ்வொரு உட்பிரிவுக்கும் ஒரு துணை வினாவா?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மூன்றாவது பிரிவிற்கு, அமைச்சரவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். மத்திய அரசு கல்வித் துறை நடத்தும் மேல்நிலைப் பள்ளிகளில், உயர் இடைநிலைப் பள்ளிகளில் முதல்வர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கல்லூரிக் கல்வி பள்ளிகளில் வந்திருப்பதாக அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். எனவே தலைமை ஆசிரியர் என்ற பெயரை முதல்வர் என்று மாற்ற முடிவு செய்தால் நல்லதாக இருக்கும். அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படுமா?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைப் பள்ளிக் கல்வி உயர் நிலைப் பள்ளிக்கு வந்திருப்பதை தெளிவாக எடுத்துக்காட்டும் வகையில் மேல் நிலைப் பள்ளிகளில் "தலைமையாசிரியர்" என்ற பதவியின் பெயர் நீடிக்க

வேண்டும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோதும், வருகின்ற தேசிய கல்விக் குழுவினுடைய முடிவின் அடிப்படையில் பார்க்கின்றபோதும் இனிமேல் உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி என்று இருவிதமான கல்வி இருப்பதற்குப் பதிலாக 12 ஆண்டுக் கல்வித் திட்டம் என்கின்ற மேல்நிலைக் கல்வி மட்டும் வர இருப்பதால், இனிமேல் ஒரு தலைமையாசிரியர்தான் இருக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அவைக்கு வந்த உடன் எல்லோருக்கும் ஒரு பார்க்கெட்டு கொடுத்தார்கள். அதுபற்றி ஒரு தகவலைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இவ்வளவு நாட்கள் இந்த அவையில் இருக்கிறீர்கள். கேள்வி நேரம் முடியட்டும்.

Examination for Diploma in Teacher Education.

* 304. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thiru S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Examination system in vogue during 1975-77 for Diploma in Teacher Education, has been changed ;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) whether there is any proposal with the Government to revert back to the old system ?

ஆசிரியர் பயிற்சிப் பணிக்கு தேர்வுமுறை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பணிக்கு (Diploma in Teacher Education) 1975 முதல் 1377 ஆம் ஆண்டு வரை இருந்து வந்த தேர்வு முறை மாற்றப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) மீண்டும் பழைய முறையையே கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) 1975-76 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த முறையை மாற்றி புது பாடத் திட்டம் கொண்டு வந்த போது இரண்டாண்டுகளுக்கு புது முயற்சித் திட்டமாக Try out கொண்டு வரப்பட்டது. அப்போதே அரசு இந்தத் திட்டத்தின் செயலாக்கத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு ஆராய்ந்து, முன்னேற்றத்திற்குத் தேவையான மாற்றங்களை அரசுக்கு அனுப்பி வைக்க பள்ளிக் கல்வி இயக்குநரைக் கேட்டுக் கொண்டது. அதற்கேற்ப பல்வேறு குழுக்களின் ஆலோசனையின் பேரில் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு திட்டத்தில் சில மாறுதல்கள் செய் ப்பட்டு, முடிவான ஒரு பாடத் திட்டம் ஆசிரியர்களின் தரத்தையும், திறமை யையும் உயர்த்த வேண்டி 1977-78 முதல் அனைத்து ஆசிரியப் பயிற்சிப் ள்ளிகளிலும் கொண்டு வரப்பட்டுள்ளது.

(உ) இல்லை. இந்தப் புதிய பாடத் திட்டம் பல கல்வித் துறை நிபுணர் ளால் வகுக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்ட (upgraded) முறையாதலால் தைக் கைவிட்டு பழைய முறையைக் கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு ல்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : புதிய பாடத் திட்ட முறையிலே ஆசிரியர் பயிற்சி பற்று வருகிறார்கள். 1979 ஆம் ஆண்டிலிருந்து ஒரு நாளைக்கு ஒரு தேர்வு ன்கிற முறையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு ஏற்பாட்டினை அறிவித் ருக்கிறார்கள். இதன் மூலம் அவர்கள் பகுதி பகுதியாக எழுதித் தேறக் டிய வாய்ப்பு இல்லை. பகுதி பகுதியாக எழுதி அவர்கள் வெற்றி பெறக் டிய வாய்ப்பினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் காடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர்களைச் சேர்க்கின்ற போது, மார்க்குகள் மற்றும் ஜாதி விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுத் ாலும் கூட, நிறைய மார்க்குகள் வாங்கியவர்களுக்குத்தான் சேர வாய்ப் ருக்கிறது. அப்படிப்பட்ட மாணவர்கள் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ளாக மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் ஆசிரியர்களாகப் பணி ாற்றுகிறவர்களுக்கு "கம்பார்ட்மென்ட் சிஸ்டம்" போன்ற முறையைப் பின் ற்றுவது அவசியம்தானா என்பதுபற்றி ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. அதுபற்றி ஆராயலாம்.

Vocational Text Books.

* 305. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Text Books are not published for the vocational subjects ; and

(*b*) if so, the reasons therefor ?

தொழிற்பயிற்சிப் பாடப் புத்தகங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிற்பயிற்சிப் பாடங்களுக்கென பாடப்புத்தகங்கள் வெளியிடப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) தொழில் கல்வியின் நோக்கமே "செய்முறை தான்". ஆகவே பாடப்புத்தக முறையைக் கையாளவில்லை. தொழிற் கல்வியில் முழுக் கவனமும் படிப்பில் மட்டுமின்றி செய்முறையிலும் செலுத்தப்படவேண்டும். ஆதலால் தொழில் கல்வி ஆசிரியர்களுக்குப் பயன்படும் வழிகாட்டு நூல்கள் (Guide Books) தயாரித்தால் போதுமானதென தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் வழிகாட்டு நூல்கள் தயாரித்து வெளியிடப்படுகின்றது.

திரு. பி. ஆர். தாமஸ் : முன்பு இரு கூறாக்கப்பட்ட பாடத் திட்டம் அமுலிலிருந்த காரணத்தால், அத்திட்டம் தோல்வியடைந்தது என்று கூறுகிறார்கள். நல்ல வழிகாட்டியாக இருக்கக்கூடிய பாடப்புத்தகங்கள் இல்லாவிட்டால், நகர்ப்புறத்திலிருக்கின்ற மாணவர்களுக்கும் கிராமப்புறத்திலிருக்கின்ற மாணவர்களுக்கும் படிக்கக்கூடிய வசதி குறைகிறது. தொழிற்பயிற்சி பாடங்களுக்கென பாடப்புத்தகங்களை வெளியிடுவது பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறுபடியும் ஆராய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தொழில் கல்விக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது 15—12—1977 அன்று தொழிற் பயிற்சிக்கு வழிகாட்டி நூல் தயாரித்தால் போதும் என்று சிபாரிசு செய்தது. மேல்நிலைப் பள்ளி கல்வி போர்டும் தொழில் கல்வி பயில்பவர்களுக்கு வழி காட்டி நூல் போதும் என்கின்ற கருத்தினை ஆமோதித்திருக்கிறார்கள். அதைத் தான் இப்பொழுது பின்பற்றி வருகிறோம். இத்திட்டம் எந்த அளவில் செயல்பட்டு வருகிறது என்பதைப் பார்த்த பிறகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

Teachers' Day.

* 306. *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU K. MEENAKSHISUNDARAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to declare the Teachers' Day as a Public Holiday and to celebrate the day and honour the Teachers ; and

(*b*) if so, when it will be implemented ?

ஆசிரியர் தினம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் தினத்தை பொது விடுமுறை நாளாக அறிவித்து, அரசே விழா எடுத்து ஆசிரியர்களைக் கௌரவிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பெரிய கல்வி அறிஞரான முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பிறந்த நாளை ஆசிரியர் தினம் என்று நாடு பூராவும் கொண்டாடி வருகிறோம். அப்படிப்பட்ட ஒரு சிறந்த நாளுக்கு இப்பொழுது விடுமுறை இல்லை. விடுமுறை என்று அறிவிப்பதில் அரசுக்கு எந்தவித சங்கடமும் கிடையாது, நிதி இழப்பும் கிடையாது. ஆசிரியர் தினத்தைப் பொதுவிடுமுறை நாளாக அறிவிப்பதன் மூலம் ஆசிரியர்களுக்கு உரிய மரியாதையை இந்த அரசு தேடிக் கொள்ளும். இதுகுறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர் நாளன்று ஆசிரியர்கள் ஆசிரியர்களாகப் பணி புரியட்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளை "ஆசிரியர் தினம்" ஆகக் கொண்டாடுகிறோம். ஆசிரியர்களில் சிலரைச் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்து, கௌரவப்படுத்துகிறோம். அதைப்போல மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளை, "மாணவர் நாள்" ஆகக் கொண்டாட அரசு ஏற்பாடு செய்யுமா ? மாணவரில் நல்ல மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பரிசு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றித் தனிக் கேள்வி போட வும்.

Transfer of Teachers.

* 307. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to transfer the Tutor-*cum*-Wardens in the Government Harijan Welfare Boys' Hostels as teachers in Government High Schools, and in lieu of them, to transfer the Teachers in Government High Schools as Tutor-*cum*-Wardens in the above Hostels ; and

(*b*) if so, the reason therefor ?

ஆசிரியர்களை மாற்றல் செய்தல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசு அரிசன நலத்துறை மாணவ விடுதிகளில் பணியாற்றும் உதவி ஆசிரியர்-காப்பாளர்களை (*Tutor-cum-Warden*) உயர்நிலைப் பள்ளி களுக்கு ஆசிரியர்களாக மாற்றுவது என்றும், அதற்குப் பதிலாக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைக் காப்பாளர்களாக மாற்றுவது என்றும், அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(இ) உதவி ஆசிரியர் காப்பாளர் Tutor-*cum-Wardens* பதவியும் உயர்நிலைப்பள்ளி பி.டி., ஆசிரியர் பதவியும் சமநிலைப்பணிகளாதலால் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதுகுறித்து மிக விவரமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நேரில் கூறிவிட்ட காரணத்தினால், விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. காப்பாளர்களை ஆசிரியர்களாக மாற்று வதன் மூலம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் இது செய்யப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறப் போவதில்லை. இந்த நிலையை நான் மாண்பு மிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நல்ல ஆசிரியர்கள் தொடர்ந்து பள்ளிகளிலே பணியாற்றும் வண்ணம், பள்ளிகளில் கல்வியின் தரம் உயரும் வண்ணம் இம்மாதிரி அவர்களை மாற்றா மலிருக்க அரசு முடிவெடுக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : என்ன நோக்கத்திற்காக இந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கத்தை நிறைவேற்று வது தான் இந்த அரசாங்கத்தின் கடமை. தவறைத் தொடர்ந்து யார் செய்துகொண்டிருந்தாலும், அவர்கள் அந்தப் பதவியில் இருக்கமாட்டார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : வார்டன்கள் யாராவது தவறு செய்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நல்ல நடைமுறை தான். அதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர்களாக இருப்பவர் களை வார்டன்களாக வேலை பார்க்க அனுமதிப்பது என்பதும் அதுமாதிரி வார்டன்களாக இருப்பவர்களை ஆசிரியர்களாக வேலை பார்க்க அனுமதிப்பது என்பதும் ஆசிரியர்களுக்கு மீண்டும் மீண்டும் தவறு செய்வதற்கு பயிற்சி கொடுப்பதுபோல் ஆகாதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : காப்பாளர்களாகப் பணி யாற்றுபவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள்தான். வார்டன்களாக அவர்கள் ஏன் போடப்படுகிறார்கள் என்பதை யோசிக்க வேண்டும். இதெல்லாம் பரஸ்பர மாற்றம் தான். ஓராண்டு வார்டனாக இருந்தவர்கள் தொடர்ந்து வார்டனாக இருக்கக் கூடாது, மீண்டும் அவர் ஆசிரியராகப் போய் பணியாற்ற வேண்டும் என்று தான் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நோக்கத்தை அரசு நிறைவேற்றி வரு கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அரிசன நலத் துறை மாணவ விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்கள் மிக மிக ஏழைகள். அவர்களுக்கு உணவு கொடுப்ப தோடு சிறப்பாக அவர்கள் கல்வியைப் பெறுவதற்குரிய முறையை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லது, அது அரசின் கடமையும் கூட. அந்த வகையில் பி.ஏ., பி.டி., படித்திருப்பவர்களை அந்த வார்டன் பதவிக்கு என்று மட்டும் நிய மிப்பது நல்லது. அப்படி நியமித்தால், அவர் அவருடைய முழு நேரத்தையும் அரிசன மாணவர்களின் முன்னேற்றத்திற்காகச் செலவழிக்க முடியும். எனவே நான் சொல்லியபடி, காப்பாளர்களை அந்தப் பணிக்கென்று மட்டும் நியமித்து, பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டாலும், அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி கொடுப்பதற்குரிய ஒரு சிறப்பு ஏற்பாட்டினையும் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது அந்த ஏற்பாடு செய்யப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுகிறது.

திரு. பி. ஆர். தாமஸ் : ஆசிரியர்கள் புதிய கணிதம், புதிய அறிவியல் போன்றவைகளில் பயிற்சி பெற்று வந்த உடன் அவர்களைக் காப்பாளர்களாகப் போட்டு விடுகிறார்கள். இதனால் கல்வி பயிற்றுவிக்க திறமையான பயிற்சி

பெற்ற ஆசிரியர்கள் பள்ளிகளில் இல்லாமல் போவதனால், கல்வியின் தரம் குறைகிறது என்பதை மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்களா? பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இம்மாதிரி காப்பாளர்களாகப் போடாமலிருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் தான் ஆசிரியர் பணிக்கும் காப்பாளர் பணிக்கும் அமர்த்தப்படுகிறார்கள். எந்த ஒரு ஆசிரியரும் ஓராண்டு காலம் தான் விடுதியில் காப்பாளராகப் பணிபுரிய முடியும். ஓராண்டு காப்பாளராகப் பணியாற்றிய உடன் அவர் மீண்டும் ஆசிரியராகப் பள்ளிக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்பது தான் அரசாணையின் நோக்கம். ஆனால் இதில் இருக்கின்ற சங்கடங்கள் என்னவென்றால், சில ஆசிரியர்கள் தொடர்ந்து விடுதியில் காப்பாளர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனால் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றனவே தவிர, அரசு ஆணையில் எந்தவித சிக்கல்களும் இல்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போதும் பயிற்சி பெற்றவர்களை வார்டன்களாகப் போடுகின்ற அந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு ஆசிரியர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, பிறகு வார்டன் பணியும் ஆற்ற வேண்டுமென்ற வசதி வந்திருக்கிறது. ஆனால். நான் சொன்னமாதிரி, ஆசிரியர் பயிற்சி பெற்ற ஒருவரைத் தனியாக வார்டனாகப் போட்டு விடு முறையில் அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்தால் இந்தமாதிரி குறைபாடுகள் வராது. அந்த வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் தனியாகத் திட்டம் ஒன்றை வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விடுதிக் காப்பாளர் அவருடைய பணியை ஆற்றுகிறார். அதோடல்லாமல், தனியாகப் பயிற்சி அளிக்க உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுகின்ற ஒரு பி.டி. ஆசிரியரையும் இந்த அரசாங்கம் தனியாகச் சம்பளம் கொடுத்து அமைத்திருக்கிறது.

Teacher-Wardens.

*308. Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that Teacher-Wardens posted to serve in Harijan Welfare Hostels. are subjected to much hardship as they have to personally bear the cost in advance for the purchases made for the maintenance of the Hostels ; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

ஆசிரியர்-விடுதிக் காப்பாளர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசனநல விடுதிகளில் பணிபுரிவதற்கென்று நியமிக்கப்படும் ஆசிரியர்-விடுதிக் காப்பாளர்கள், விடுதியை நிர்வகிப்பதற்குத் தேவைப்படும் பொருட்களை வாங்குவதற்காகும் செலவை முன் கூட்டியே ஏற்கவேண்டியுள்ளதால் பெருந்துன்பத்திற்குள்ளாகின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதுகுறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பி. சௌந்தரபாண்டியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தக் கேள்வி கொடுத்து ஓராண்டுக்கும் மேலாகிறது. இப்போதுதான் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கப்படுகிறது. அந்த விடுதிக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தக்காரர்கள் சரியாக நியமிக்கப்படவில்லை. விடுதிக்குத் தேவையான உணவுப் பொருள்கள், விறகு, அரிசி போன்ற தானியங்களைக் கிட்டங்கிகளிலிருந்து எடுத்து வருதல் போன்றவற்றுக்குத் தேவைப்படும் போக்குவரத்துச் செலவு, பாத்திரங்களுக்கு ஈயம் பூசும் செலவு எல்லாம் அந்தக் காப்பாளரே முன் கூட்டி செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஈயம் பூசுவதற்கு முன்பெல்லாம் 35 ரூபாய் செலவானதென்றால், இப்போது 75 ரூபாய்க்கும் மேலாகச் செலவாகிறது. இந்த நிலைமைகளின் காரணமாக பல தவறுகள் அங்கே ஏற்படுகின்றன. ஆகவே, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற தக்க ஆணை பிறப்பித்து, அந்த விடுதியை நல்லமுறையில் நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரிசி போன்ற தானியங்களை தற்போது கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலமும், உணவுப் பொருள்கள் வழங்குகின்ற வாணிபக் கழகத்திடமிருந்தும் கடனாக வாங்குகிறோம். அவர்களுக்கு எந்தவிதமான முன்பணமும் கொடுக்கப்படவில்லை. முன்பெல்லாம் ஈயம் பூச வேண்டுமென்றாலும், சென்னையிலே வந்து நெறியாளர் அவர்களுடைய ஆணை பெற வேண்டும். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சென்னையிலே வந்து ஆணை பெறவேண்டிய தேவையில்லை, அந்த இடத்திலேயே பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறோம். ஆகவே, ஆணைபெறுவது சம்பந்தமாக, பிரச்சினைகள் ஏதும் இல்லை. பணம் சம்பந்தமாக அவர்கள் முன்கூட்டியே செலவு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்,

[1979 ஏப்ரல் 18

டாக்டர் இரா. சனார்த்தனம்: அரிசன நல விடுதிகளில் அங்கே இருக்கிற மாணவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஆசிரியர் கண்காணிப்பு, மேற்பார்வை போன்ற பணிகளைச் செய்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, அப்படிச் செய்ய அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கருத்துப்படிதான் ஒவ்வொரு மாணவர் விடுதியிலேயும் மாணவர்களுடைய பிரதிநிதிகள் 5 பேர் கொண்ட ஒரு குழு அமைத்து அவர்கள் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்பார்கள் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

Strike in Government Erskine Hospital, Madurai.

* 309. Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that the Medical Officers and Non-Medical Officers of the Government Erskine Hospital, Madurai, went on a lightning strike during the month of September, 1978; and

(*b*) if so, how long the strike continued?

மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் வேலை நிறுத்தம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவர்களும் மற்றைய அலுவலர்களும் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எத்தனை நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: (அ) இரு பயிற்சி மருத்துவர்களுக்கும், ஒரு நோயாளிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் 29—9—1978 முதல் வேலை நிறுத்தம் நடந்தது. இதில் உள்துறை பயிற்சி மருத்துவர்கள் (House Surgeons) முதுநிலைப் பயிற்சி மருத்துவர்கள் (Senior House Surgeons and Resident internees மற்றும் மேல்நிலைப் பட்டப்படிப்பாளர்கள் (Post Graduate Students) ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டனர்.

(இ) 22—9—1978 முதல் 24—9—1978 வரை 3 நாட்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது.

1979 ஏப்ரல் 18]

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, மூன்று நாட்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் திரும்பத்திரும்ப ஏற்படாமலிருப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? இதுபோன்று மாநிலத்தில் எத்தனை மருத்துவ மனைகளில் திடீரென்று வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன? அதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, இம்மாதிரி வேலை நிறுத்தங்கள் இனிமேல் நடைபெறாமலிருப்பதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: நோயாளியாக இருந்த ஒருவருக்கும், அங்கே பணியாற்றுகின்ற ஹவுஸ் சர்ஜன்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாகத்தான் இத்தகைய வேலை நிறுத்தம் நடை பெற்றது. மதுரையில் தான் நடந்திருக்கிறது. வேறு இடங்களிலே நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் வேறு காரணங்களுக்காக நடந்திருக்கின்றன. ஆனால், வேலை நிறுத்தங்கள் நடைபெற்ற நோக்கில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களுக்கு என்ன குறைகள் என்று கேட்டு, அவைகள் தீர்க்கப்பட்டுவிட்டன.

திரு. க. இராமமூர்த்தி: நோயாளிக்கும் மருத்துவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மற்ற இடங்களிலே ஏற்பட்ட வேலை நிறுத்தத்திற்கு வேறு காரணங்கள் இருக்கலாம் என்றும் சொன்னார்கள். எதுவாக இருந்தாலும், வெளியாருடைய தலையீடு இதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்பதையும் பல நேரங்களிலே பணியாற்றுகின்ற டாக்டர்கள், மருத்துவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை நிலவுகிறது என்று சொல்லி வேலை நிறுத்தத்திலே ஈடுபடவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றனர் என்பதையும். இதன் விளைவாக சமுதாயம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது என்பதையும் கருத்தில்கொண்டு, இனிமேல் இதுபோன்ற நிலைமைகள் உருவாகாமல் மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படுவதை இந்த அரசு விரும்பவில்லை. பாதுகாப்பு தேவைப்படுகின்றபோது, பாதுகாப்பு அளிக்கும் வழிவகைகளை இந்த அரசு செய்திருக்கின்றது. சில நேரங்களிலே அங்கே செல்கின்ற நோயாளிகளும் பாதிக்கப்படுகிறார்கள். இரண்டு பக்கத்திலேயும் தவறுகள் நடக்கின்றன. இரு சாரரிடத்திலும் தவறுகள் இருக்கின்றன. இனிமேல், தவறுகள் ஏதும் நடக்காமலிருக்க, தக்க வழிவகைகளை அரசு செய்யும்.

[1979 ஏப்ரல் 18

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நோயாளிக்கும் ஹவுஸ் சர்ஜன்களுக்கும் ஏற்பட்ட தகராறு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த அடிப்படையில் எழுந்த தகராறு என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஸ்ட்ரைக்கில் பங்குகொண்ட பணியாளர்கள் எத்தனை பேர்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : ஒரு நோயாளிக்கு ஊசி போட்ட நேரத்தில் அந்த ஊசி அதிகமாக வலித்ததாகவும், அந்த நோயாளி ' இதுவரையில் பலர் எனக்கு ஊசி போட்டிருக்கிறார்கள், அவைகள் வலிக்கவேயில்லை, ஆனால் இன்றைக்கு நீங்கள் போட்ட இந்த ஊசி மட்டும் வலிக்கிறது, பெரிய ஊசியாகப் போட்டிருக்கிறீர்கள், கழுவாமல் போட்டிருக்கிறீர்கள் ' என்று சொல்லி, இதனால் வாக்குவாதம் ஏற்பட்டு, அந்த வாக்குவாதம் தடித்து, இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. ஹவுஸ் சர்ஜன்கள் இந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். ஆனால், மருத்துவர்கள் பணியாற்றினார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மருத்துவமனைகளில் இப்படி திடீரென்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள். கோவையில் கூட இப்படி வேலை நிறுத்தம் நடந்து, பல உயிர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாயிற்று. ஆகவே, இந்த நிலைமைகளைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, காவல் துறையைப் போல, இதையும் ஒரு ' எஸன்ஷியல் சர்விஸ் ' ஆக்கி, இதுபோன்ற வேலை நிறுத்தம் செய்வதைத் தடைசெய்ய ஆணை பிறப்பிக்கப்படுமா ? பொதுமக்கள் பிரதிநிதிகள் ரெப்ரசென்டேஷன் கொடுக்கச் செல்லும்போது கூட, அந்தக் காகிதத்தை வாங்கி கிழித்தெறிகிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, இதை ஒரு ' எஸன்ஷியல் சர்விஸ் ' ஆக மாற்றும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : படித்துவிட்டு மருத்துவர் வேலைக்கு வந்திருப்பவர்கள் ' நாம் படித்துவிட்டு மனித சமுதாயத்திற்குப் பணியாற்ற வந்திருக்கிறோம், பணியாற்ற வேண்டும் ' என்று அந்த மதிப்பை உணர்ந்து, கடமையுணர்வோடு இது ஒரு எஸன்ஷியல் சர்விஸ் என்பதையும் உணர்ந்துதான் பணியாற்றுகிறார்கள். அதிலே எந்தவிதமான அவநம்பிக்கையும் நாம் கொள்ளத் தேவையில்லை. ரெப்ரசென்டேஷனுக்குப் போகும்போது கிழித்துவிடுகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள், ஒன்றை நான் சொல்லிக்கொள்கிறேன், ரெப்ரசென்டேஷனுக்குச் செல்லுகின்ற நேரத்தில் எப்படிச் செல்ல வேண்டும் என்று நாமும் உணர்ந்து செல்ல வேண்டும், அவர்களும் எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த முறையில் இரு சாராரும் நிலைமைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கான வழிவகைகளை நாமே வகுத்துக்கொள்ள வேண்டும்.

1979 ஏப்ரல் 18]

Government Hospital, Gingee.

* 310 *Q.*—THIRU K. RAMAMOORTHI : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government for the expansion of the Government Hospital at Gingee in South Arcot District, by constructing one Operation Theatre and a Ward with additional beds ; and

(*b*) if so, when the same will be constructed ?

செஞ்சி, அரசினர் மருத்துவமனை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தி ஒரு அறுவை சிகிச்சைக் கூடமும், கூடுதல் படுக்கைகளுக்கான கூடமும் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம், எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : (அ) & (இ) இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தென் ஆற்காடு மாவட்டத்திலே மிக அதிகமாக மக்கள் கூடுகிற இடம் செஞ்சி. மிகுந்த அளவிலே அவதிகளுக்கும், கஷ்டங்களுக்கும் பின் தங்கிய மக்கள் ஆளாகியிருக்கும் இடம் செஞ்சி. அங்கிருக்கும் மருத்துவமனையிலே அறுவை சிகிச்சைக் கூடம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இல்லை. தற்போது இல்லையென்றாலும், அங்கு அறுவை சிகிச்சைக் கூடம் அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு இனிமேலாவது உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன் : தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சியிலே தற்போது செயல்படுகின்ற அரசு மருத்துவமனையில் 28 படுக்கைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தற்போது அங்கு ஒரு புதிய மருத்துவக் கூடமும், 6 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டிடம் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் கட்டி—அத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. அதோடு மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் 32,580 பேர்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக உள்ள நோயாளிகளின் கணக்கைப் பார்த்தால், வெளி நோயாளிகள் 1975-லே 464, 1976-லே 486 பேர்கள், 1977-லே 498 பேர்கள். உள்நோயாளிகள் 1975-லே 19 பேர்கள், 1976-லே 20 பேர்கள், 1977-லே 20 பேர்கள். அறுவை சிகிச்சையைப் பார்த்தால், பெரிய அறுவை சிகிச்சை

1975 ஆம் ஆண்டு 9, 1976 ஆம் ஆண்டு 21, 1977 ஆம் ஆண்டு 32, சிறிய அறுவை சிகிச்சையைப் பார்த்தால் 1975 ஆம் ஆண்டு 87, 1976 ஆம் ஆண்டு 673, 1977 ஆம் ஆண்டு 102. ஆகவே, இப்போது புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற இந்தக் குடும்பநலக் கட்டிடத்தையும் சேர்த்து, தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்கிறோம். மேலும், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வட்ட மருத்துவமனைகள் கட்ட திட்டங்கள் இருக்கின்றன. அப்போது இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

(முற்பகல் 11-00)

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சர் அவர்கள் அவையில் அளித்த புள்ளி விவரங்களை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த மருத்துவ மனைக்குப் புற நோயாளிகளானாலும், உள்ளிருப்பு நோயாளிகளானாலும் அதிகமான அள வுக்கு வாராததற்குக் காரணமே இந்த மருத்துவ மனை not fully equipped அதாவது முழுமையான அளவுக்கு மருத்துவ வசதிகள் இல்லாமையேயாகும். இதன் காரணமாக அருகில் உள்ள கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் போங்கள் என்று அங்குள்ளவர்களே நோயாளிகளிடம் சொல்லுகிறார்கள். சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை நாடி வந்தாலும், டாக்டர்கள் அவர்களை கடலூருக்கோ பாண்டிச்சேரிக்கோ போங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு அந்த மருத்துவமனையில் மருத்துவ சாதனம் ஏதுமில்லாமல் இருக்கிறது. எனவே இந்த மருத்துவ மனைக்கு முன்னுரிமை கொடுத்து மருத்துவ வசதி களை அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: பொதுவாக வட்டார மருத்துவ மனைகள் சில விதிமுறைகளுக்குட்பட்டு இருக்க வேண்டும் என்று எண்ணி, அதற்குப் பின்னால் தேவைப்படுகிற அளவுக்கு சிறிது சிறிதாக முக்கியமான சிறப்புப் பகுதிகளை ஏற்படுத்துகிற பணியை இந்த அரசு செய்து வருகிறது. அந்த வகையில் செஞ்சி மருத்துவமனைக்குத் தேவையானவற்றை இந்த அரசு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், பொதுவாக மக்களிடம் ஒரு உணர்வு இருக் கிறது. தங்கள் பகுதிக்கு அருகில் 25 மைல் அல்லது 30 மைலில் பெரிய மருத்துவ மனைகள் இருந்தால், அங்கே சென்று வைத்தியம் செய்து கொள்ள லாம் என்ற உணர்வு இருக்கிறது. இதன் காரணமாக அருகிலுள்ள கடலூர் அல்லது விழுப்புரம் மருத்துவ மனையைத் தேடிப் போய்விடுகிறார்கள் என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்.

சித்த மருந்து பாட்டில்கள் கொடுக்கப்பட்டது குறித்து.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று காலை அவைக்கு நாங்கள் வரும்போது உறுப்பினர்களான எங்களுக்கு இரண்டு பாட்டில்கள் வழங்கப்பட்டன. அவை எதற்காக என்று தெரிந்தால், நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மருத்துவத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றையதினம் சித்த மருத்துவத் துறையில் தயாரிக்கப்பட்டுள்ள இரண்டு முக்கியமான பொருள்களை மாண்பு மிகு உறுப்பினர்களுக்குத் தர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சித்த மருத்துவத் துறையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் இவைகளைத் தர ஏற்பாடு செய் யப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்டவைகளில் ஒரு பாட்டில் ‘நன்னாரி மணப்பாகு’ என்ற பெயருடையது. சுத்தமான நன்னாரியிலிருந்து அதன் ‘எசன்சை’ எடுத்து அதோடு சர்க்கரையைக் கலந்து தயாரிக்கப்பட்டிருக் கிறது. இதை அருந்துவதன் மூலம் பொதுவாக வேர்க்குரு வராமல் தடுக்க லாம். தோலில் வருகிற வேர்க்குருவைத் தடுப்பதில் இந்த எசன்ஸ் உபயோக மாக இருக்கும்.

அதைப் போலவே ‘காலசாரி வடகம்’ என்ற ஒன்றும் தரப்பட்டிருக்கிறது. இது ‘லேசஞ்சஸ்’ போன்ற ஒன்று. இருமல் வருகிறபோது இதை உபயோகிக்க லாம். அதைப் போலவே தொண்டைக் கம்முதல், சளி போன்றவைகளை நீக்க இது பயன்படும். இவையிரண்டுமே சித்த மருத்துவத் துறையில் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உறுப்பினர்களுக்கு விளக்கும் வகையில் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: இதை எப்படிச் சாப்பிடுவது என்று தெரிவித்தால், உபயோகமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தராசன்: நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர் அவர்களே தண்ணீரைக் கொண்டு வந்து இதைக் கலந்து கொடுக்க வேண்டும் என்று கேட்காமல் எப்படிச் சாப்பிடுவது என்று மட்டும் கேட்டிருக்கிறார்கள். இவைகளைத் தண்ணீரில் கலந்து சாப் பிடலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எப்படிச் சாப்பிடுவது என்று அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன் மொழிவதற்குமுன் ஒரு விளக்கம் கோரும் வகையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

பேரவையில் முக்கியமான மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படும் போது அதன் தொடர்பாக ஏதேதோ உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதாக அறிகிறேன். அதைப்போல் இந்த அவையில் வழங்குவது குறித்து . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைகள் தின்பண்டங்கள் அல்ல. அவைகளெல்லாம் இந்த அவை உறுப்பினர்களுக்கு வேண்டாமென்று நான் சொல்லிவிட்டேன்.

3. கவன ஈர்ப்பு.

(1) 1973 ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 20,000 பட்டதாரி ஆசிரியர்களில் பலருக்கு ஏற்பட்ட தற்காலிகப் பணிநீக்கம், ஈட்டிய விடுப்பில் ஏற்பட்ட இழப்பு, பணிக்காலத் துண்டிப்பு, ஊதிய இழப்பு ஆகிய பிரச்சினைகள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, "1973 மார்ச் மாதத்தில் தங்கள் கோரிக்கைகளுக்காக அமைதியான ஜனநாயக நடவடிக்கையில் ஈடுபட்ட சுமார் 20,000 பட்டதாரி ஆசிரியர்கள் அரசின் வேண்டுகோளுக்கிணங்க நடவடிக்கையை நிறுத்திய பிறகும் தற்காலிகப் பணி நீக்கத்தின் காரணமாக இழந்த சுமார் 15 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பு, நிரந்தரப்படுத்தாத ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட பணிக்காலத் துண்டிப்பு, ஊதிய இழப்பு ஆகிய பிரச்சினைகள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் விவர அறிக்கையொன்று@ வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்தப் பிரச்சினை குறித்து கடந்த செப்டம்பர் திங்களில் கேள்வி நேரத்தில் ஒரு வினா எழுப்பப்பட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலளிக்கும் போது, இக் கோரிக்கையைப் பணிவுடன் பரிசீலனை செய்வதாகக் கூறினார்கள், ஆசிரியர்கள் மாநாட்டில் இந்த அமைச்சரவையின் சார்பில் கலந்து கொண்டு பேசிய இந்த

@ 909 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் சார்பில் கலந்து கொண்டு பேசிய இந்த அவையின் முன்னவர் மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்களும் இக்கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாக மாநாட்டு மேடையிலேயே அறிவித்து, நாங்களும் அதற்காக அவருக்கு அப்போது நன்றி தெரிவித்துக் கொண்டோம். இந்த நிலையில் அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படாமல் இங்கே ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேலை நிறுத்தம் செய்த நாட்களுக்குச் சம்பளம் தருவதில்லை என்ற முடிவைத்தான் அரசு எடுத்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: போராட்ட காலத்தின்போது, ஆசிரியர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஊதியப் பணம் அப்படியே இருக்கிறது. இதற்காகக் கூடுதல் நிதிச் செலவு ஒரு ரூபாய்கூட அரசுக்குக் கிடையாது என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போதுகூட, இவர்களை நாங்கள் பாவம் செய்தவர்களாகக் கருதவில்லை, எனவே பரிவோடு உங்கள் கோரிக்கையைக் கவனிக்கிறோம் என்று உறுதி கூறினார்கள். எனவே அந்த அடிப்படையில் மறுபரிசீலனை செய்து இதில் நல்லதொரு முடிவெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்சினைமட்டும் அரசாங்கத்தின் முன்னாலில்லை. கல்லூரி ஆசிரியர்களின் வேலைநிறுத்தப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது. அதைப் போலவே என். ஜி. ஓ வினர் வேலை நிறுத்தப் பிரச்சினையும் பரிசீலனையில் இருக்கிறது. அரசு நிருவாகத்தை ஒழுங்காக நடத்த வேண்டுமென்றால், ஊழியர்களை வேலைநிறுத்தம் செய்யும் வகையில் அல்லது அப்படிச் செய்ய அவர்களைத் தூண்டும் வகையில் எந்த நடவடிக்கையையும், முடிவையும் எடுக்கக்கூடாது என்பதை அரசு மிகவும் யோசித்து முடிவு செய்து, அதனடிப்படையில் வேலைநிறுத்தம் செய்த நாட்களுக்கு ஊதியம் தருவதில்லை என்ற பொதுவான நிலையை தற்போது மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 20,000 பட்டதாரி ஆசிரியர்கள் பலருக்கு ஏற்பட்ட தற்காலிகப்பணி நீக்கம், ஈட்டிய விடுப்பில் ஏற்பட்ட இழப்பு, பணிக்காலத் துண்டிப்பு, ஊதிய இழப்பு ஆகிய பிரச்சினைகள் குறித்து

[1979 ஏப்ரல் 18

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் போராட்டம் தொடர்பாக ஆசிரியர் சங்கங்கள் கொடுத்த வேண்டுகோளுக்கு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். மன்னிப்புக் கடிதம் கொடுப்பதை ரத்து செய்வது, அதைப் போலவே பதிவேடுகளில் இதுபற்றிய குறிப்புகளை அகற்றுவது என்று ஆணை பிறப்பிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆசிரியர் இயக்கங்கள் சார்பில் மேலவை உறுப்பினர்கள் சார்பில் நான் அவருக்கு நன்றிகூட அப்போது தெரிவித்திருக்கிறேன். ஆசிரியர்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுப்பது ரத்[illegible] பட்டது, பதிவேடுகளில் குறிப்பு எழுதப்பட்டதும் நீக்கப்பட்டது. எனவே அந்த அடிப்படையில் ஆசிரியர்களுக்கு இழப்பு ஏற்படுவதென்பது சரியில்லை. ஆகையால் இந்த இழப்பைத் தவிர்க்கும் வகையில் அரசு ஆணை [illegible] முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாங்கமும் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை என்ற காரணத்தால்தான், தண்டனை என்ற நிலையிலிருந்து அதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. ஆனால் அரசாங்கம் வேலை நிறுத்தத்தைத் தூண்டுவதை உற்சாகப்படுத்தும் வகையில், ஆதரிக்கிற வகையில் எந்த முடிவையும் மேற்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் அரசு செயல்படுகிறது. வேலை நிறுத்தம் செய்தாலும் நாம் பாதிக்கப்பட மாட்டோம் என்ற எண்ணம் உருவாகிற வகையில் அரசு எந்த முடிவையும் எடுக்கும் வாய்ப்பில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : இங்கே அளிக்கப்பட்ட அறிக்கையில் ஆசிரியர்களுக்கு இழப்பு ஏற்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைக்குச் சற்று முரணாக இருக்கிறது. 1968 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் தனியார் பள்ளியைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வசதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வசதி அரசுத் துறை ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே இருக்கிறது. அதோடு தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, ஓராண்டு அல்லது இரண்டாண்டுகளுக்குப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வசதியில்லை. இதன் காரணமாக அவர்களுக்குப் பணி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்காவது பொதுவான ஆணை பிறப்பித்து இழப்பைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

(முற்பகல் 11-10)

(2) செங்கற்பட்டு மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்ற விருப்பமில்லாத பி.டி. ஆசிரியர்களிடம் பதவி உயர்வை விட்டு விடுவதாக உறுதிமொழி கேட்கப்படுவது குறித்து.

டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. அறிவழகன் சார்பில்) : மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"செங்கல்பட்டு மாவட்டத்தில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்கள் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்ற விருப்பமில்லாவிடில், அவர்கள் எதிர்கால பதவி உயர்வு போன்ற நலன்களை விட்டுவிட வேண்டுமென காஞ்சிபுரம் முதன்மைக் கல்வி அலுவலர் உறுதிமொழி எழுதிக் கொடுக்க வேண்டுமென அறிக்கை விட்டுள்ளதால் அவ்வாசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, மாற்றுதலுக்கு உட்படாமலிருக்க சில ஆசிரியர்களுக்கு சில நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும். கணவன், மனைவி பிரிந்து வர முடியாமல் இருக்கலாம். இருக்கிற இடத்தில் கடன் தொல்லைகள் இருந்து, கடனைக் கொடுத்தவர்கள் அவர்களை அனுப்ப முடியாமல் இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக அவர்கள் மாற்றுதலுக்கு உட்படாமல் இருந்தால், அந்தச் சூழ்நிலையைக் கருதி அவர்களுக்குப் போதிய அவகாசம் தர நடவடிக்கை எடுப்பது நியாயமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுவது என்பது எதிர்காலத்திலே அவர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பைத் தாவிருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லையென்றால், தேவையில்லை என்பதை எழுதித் தர வேண்டிய கடமை இருக்கிறது. நிர்வாகத்திற்கும் அது தேவையாக இருக்கிறது.

@ 909-910 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

4. அரசின் தீர்மானங்கள்.

(1) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. இரத்தின பாலகுருசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு நன்றாக ஆராய்ந்து பல திட்டங்களைப் போட்டு, மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற முறையிலே ஊரகத்திற்கென்றும், நகரத்திற்கென்றும் இரண்டாகப் பிரித்து கொள்கை விளக்கங்களைக் கொடுத்திருக்கிறது. அந்தக் கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தென்னார்காடு மாவட்டத்திலே இந்த ஆண்டு ஒரு பல்நோய்ப் பிரிவு துவக்கப்பட்டு அது செம்மையான முறையிலே நடந்து வருகிறது. அதே நேரத்திலே ஒரே ஒரு குறை நீண்ட நெடுங்காலமாக தென்னார்காடு மாவட்டத்திலுள்ள மக்களுக்கு இருந்து வருகிறது. அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி இல்லையே என்ற ஏக்கம் அங்குள்ள மக்களுக்கு இருக்கிறது. இதைப்பற்றி நாங்கள் பல முறை அரசுக்குத் தெரிவித்தும், இன்று வரையில் அந்தக் குறை போக்கப்படவில்லை. தென்னார்காடு மாவட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. பல்நோய் பிரிவை ஏற்படுத்தியதைப் போலவே மருத்துவக் கல்லூரியையும் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முழு முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்..

நம்முடைய மாநிலத்தில் உள்ள பல மருத்துவ மனைகளிலே உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். சிதம்பரம் மருத்துவ மனையில் நான்கு இடங்களைத்தான் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் 6 படுக்கைகளை அதிகப்படுத்தினால், அங்கு வருகிற நோயாளிகளை வராண்டாவில் படுக்க வைக்கிற முறையைப் போக்குவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே சிதம்பரம் மருத்துவமனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தென்னார்காடு மாவட்டத்திலே பல்கலைக் கழகம் இருப்பதால், அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இதோடு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அவையின் முன் வைத்திருக்கிற நல்வாழ்வுக் கொள்கைக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்

டிருக்கிறேன். குறிப்புகளைப் படித்துப் பார்த்தேன். அதில் எல்லாவிதமான நோய்களைப் போக்குவதற்கும் திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் காது கேளாத ஏழை மக்களுக்கு காது கேட்கும் கருவிகளை வழங்க திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. கலைஞர் காலத்தில், கண் சிகிச்சை முகாம்களை அமைத்து, கிராமத்தில் உள்ளவர்களையெல்லாம் பஸ்ஸில் அழைத்து வந்து இலவசமாகக் கண் சிகிச்சை செய்து அவர்களுக்குக் கண்ணாடி வழங்கியதைப் போல, காது கேளாத ஏழை எளிய மக்களுக்கெல்லாம் ஒலி கேட்கும் கருவியை வழங்கி உதவி செய்ய இந்த ஆண்டு ஒரு திட்டத்தைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பி.ஐ.எம். பட்டதாரிகள் பற்றி ஒரு விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் எந்த அளவுக்குச் சமுதாயத்திலே மதிக்கப்படுகிறார்களோ அதே அளவுக்கு மதிப்பை பி.ஐ.எம். பட்டதாரிகள் தங்களுடைய சிகிச்சையின் மூலமாகப் பெற்று அறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலேயே அவர்கள் சிறப்புக்குரியவர்களானார்கள். ஐந்தாண்டுகள் பணியாற்றிய எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் மேலும் எம்.டி. படிக்க வேண்டுமென்றால், இரண்டாண்டுகளே போதுமென்று கால அவகாசம் கொடுத்திருக்கிறோம். ஆனால் பத்தாண்டுகள் பணியாற்றியிருந்தாலுங்கூட பி.ஐ.எம். படித்தவர்கள் மூன்றாண்டுகள் படித்தால் தான் எம்.டி. பட்டத்தைப் பெற முடியும் என்ற நிலை இருக்கிறது. தகுதியிலும், திறமையிலும் எம்.பி.பி.எஸ். படித்தவர்களோடு மதிக்கத் தகுந்தவர்கள் என்ற அடிப்படையிலே, பி.ஐ.எம். படித்த டாக்டர்களுக்கும் இரண்டாண்டுகள் படித்தாலே எம்.டி. பட்டம் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நெல்லை மாவட்டத்தில், விவசாயிகளும், நெசவாளர்களும் நிறைந்த நகரம் புளியங்குடி. நாற்பத்தெட்டாயிரம் மக்கள் தொகையைக் கொண்டது. அங்கு பெயரளவுக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் மட்டுமே இருக்கிறது. நோயாளிகளுக்குச் சிகிச்சை வேண்டுமென்றால், புளியங்குடியிலிருந்து எட்டு மைலுக்கு அப்பாலுள்ள கடையநல்லூருக்குச் செல்ல வேண்டும். அல்லது பத்து மைல்களுக்கு அப்பாலுள்ள சங்கரன்கோவிலுக்குத்தான் செல்ல வேண்டும். மிக மோசமான கேஸ் என்றால், நாற்பது மைல்களுக்கு அப்பால் உள்ள பாளையங்கோட்டை பெரிய மருத்துவ மனைக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டும். பிரசவ விடுதியும் அங்கே இல்லை. போஸ்ட்மார்ட்டம் பண்ணும் சோதனைக் கூடமும் இல்லை. ஆகவே இதையெல்லாம் கவனித்து அங்கே ஒரு மருத்துவமனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவில்பட்டி நகரம் வளர்ந்து வருகிற நகரமாகும். அங்கே இரண்டு மில்கள் இருக்கின்றன. பருத்தி அறவை மில்கள் 25 இருக்கின்றன. அங்கே நிறைய தாய்மார்கள் வேலை செய்கிறார்கள். சாத்தூர் வட்டாரத்தைப் போலவே கோவில்பட்டியிலும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பெரிய நகரத்தில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் ஒரு பெண் டாக்டர் இல்லாத குறை இருக்கிறது. பெண் டாக்டர் இல்லாததால், அங்குள்ள தாய்மார்கள் தங்களுடைய நோய்களை அப்படியே மனதிலே அடக்கிக் கொண்டு சங்கடப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அந்தக் குறையையும் தீர்க்க வேண்டுகிறேன்.

மதுரையிலே ஈ.எஸ்.ஐ. நடுவர் முகாம் இருக்கிறது. அங்கே கடந்த 7 மாதங்களாக நடுவர் இல்லாத காரணத்தால், க்ஷயரோகம், இருதயநோய் ஆகிய நோய்களுக்கு ஆளானவர்கள் சிக்லிஸ்ட் வேண்டுமென்றால், அதைப் பெற முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நடுவர் இல்லாத குறையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹெல்த் இன்ஸ்பெக்டர், சூப்பர்வைசர் ஆகிய சுகாதாரத் துறைப் பணியாளர் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றால், காவல் துறையினரைப் போல அவர்களுக்கும் யூனிபார்ம் கொடுக்க வேண்டும். சுகாதாரத் துறை ஆய்வாளருக்கு அதிகப் பொறுப்புகள் இருக்கின்றன. உணவுக் கலப்படத்தைக் கண்டுபிடிக்கிறார்கள், லைசென்ஸ் வழங்குகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தக்க அலுவலகம் இல்லை. அவர்களுக்கும் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் கேட்ட நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆ. திராவிடமணி : மேலும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு கடைநிலை ஊழியர்களைக் கொடுத்து பணியைச் செய்ய உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விளக்கக் குறிப்பிலே மக்கள் நல்வாழ்வுத் துறையிலே எடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல்களின் அடிப்படையிலே இந்தத் துறை செய்து வருகிற பணிகளைப் பாராட்டுகிற அதே நேரத்தில், இந்தப் பணி முழுமை பெறவில்லை என்ற குறையையும் சொல்லித்தான் ஆகவேண்டிய நிலையிருக்கிறது.

ஊரக உடல்நலப் பணிகளைப் பொறுத்தவரையில், தொற்று நோயில் ஆரம் பித்து அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆட்சிகள் மாறினாலும் இந்தக் கொள்கையில் எந்த ஆட்சிக்கும் மாறுபாடு இருக்க முடியாது. ஆனால் எப்படி நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பார்க்

(முற்பகல் 11-20)

கின்றபோது, நான் மிகுந்த பணிவோடு சொல்ல விரும்புகிறேன். பல பகுதி களிலே இதற்கான மருந்துகள் அல்லது தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற் கான மருந்துகள் இல்லை என்பதோடு மட்டுமல்ல, அவசியமான நேரத்திலே, அதைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு அங்கே பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பிலே சொல்லியிருக் கிறார்கள். தென்னாற்காடு மாவட்டம் உட்பட சில மாவட்டங்கள்—குறிப்பிட்ட மாவட்டங்களில் தொற்றுநோய்கள் பரவுகின்ற வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற இடங்கள் இருக்கின்றன. இதுபோன்ற பகுதிகளிலே மிகப்பெரும் அளவுக்கு தடுப்பு மருந்துப் பற்றாக்குறை இருக்கின்றது. அவசியம் வரும்போது, மிக அவசியமான மருந்துகள் தேவைப்படும்போதெல்லாம், பயன்படுத்த முடியாத நிலையில் மருந்துப் பற்றாக்குறை இருக்கின்றது. திண்டிவனத்திலே இப்படி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒழிந்து போய்விட்ட நோய்கள் எல்லாம் திரும்ப வருகின்றன. அதற்காக நான் அமைச்சர் அவர்களையோ அவர்கள் துறையையோ குறை சொல்லவில்லை. காலரா நோய் பல ஆண்டுகளாக இல்லாமல் இருந்தது. இன்றைக்கு அது திரும்ப வந்திருக்கிறது. மலேரியா நோய் பல ஆண்டுகளாக இல்லாமல் இருந்தது. அதுவும் திரும்ப வந்திருக்கிறது. அம்மை நோய் வந்திருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்துச் சொன்னால், ஆயிரம் ரூபாய் என்றுகூட அறிவிப்பு கொடுத்தார்கள். இன்றைக்கு அதுவும் மீண்டும் தலை தூக்கிக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் தடுப் பதிலே நாம் மிகுந்த கவனம் செலுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அந்த மருந்துகள் எப்படி கொடுக்கப்படுகின்றன, எப்படி விநியோகம் ஆகின்றன என்று தெரியவில்லை. மருந்துகள் தேவைப்படுகின்ற நேரத்தில் அந்தத் துறையிலே இருப்பவர்கள் தவிக்கின்ற நிலைமைகளை நாம் காண முடிகிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சில மாதங்களுக்கு முன்னால், அக்டோபர் அல்லது நவம்பரிலே என்று நினைக்கிறேன், திண்டிவனத்திலே புயல் வெள்ளம் மற்ற நிலைமைகள் காரணமாக, காலரா நோய் கண்டிருக் கிறதோ என்று சந்தேகப்பட்டார்கள். இரண்டொருவர் இறந்துகூட போனார்கள். அவர்கள் காலரா நோய் காரணமாகத்தான் இறந்தார்கள் என்று

சிலர் சொன்னார்கள். இல்லை காலராவினாலே இறக்கவில்லை, உணவு கெட்டதன் காரணமாக இறந்தார்கள் என்பது மற்றவர்களுடைய கணிப்பு. எதுவாக இருந்தாலும், தடுப்பு நடவடிக்கை எடுக்கும் அவசியம் வந்தது. அதற்கான மருந்துகள் அப்போது இல்லை. சுற்றுப்புறத்தைத் தூய்மைப் படுத்துவதற்கு வேண்டிய மருந்துகள் இல்லை என்று பொறுப்பிலே இருந்த அதிகாரிகளிடமிருந்து பதில் வந்தது. அந்த நேரத்தில் கொஞ்சம் சுண்ணாம்பு 'Lime' தான் வந்திருந்தது. அதைத் தான் வைத்துக்கொண்டு திண்டாடினார்கள். மருந்துகள் எதுவும் வரவில்லை. இந்தமாதிரி நிலைமைகள் தான் இந்தத் துறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. போதுமான அளவுக்கு அதற்கு வேண்டிய தடுப்பு மருந்துகளைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வந்தும் சரியாக விநியோகம் இல்லாமல் இருக்குமானால், அதை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று இந்த அரசு, புள்ளிவிவரம் எடுத்துப்பார்க்கிறது. இத்தனை ஜில்லாவுக்கு, இத்தனை உள்ளாட்சி ஒன்றியத்திற்கு என்று கணக்குப் பார்த்துப் பயனில்லை.

தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலே பார்க்க வேண்டும். இது போன்ற மாவட்டங்கள் மிகவும் பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. இங்கு வியாதிகள் பெருகுவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் திரு விழாக்கள் அடிக்கடி நடக்கின்றன. அதற்கு மக்கள் குடும்பத்துடன், குழந்தை குட்டிகளுடன் வருகின்ற நிலை இருக்கிறது. அத்துடன் பொருளாதார நிலையின் காரணமாக அவர்கள் சுத்தமாக இருக்கக்கூடிய நிலை அல்லது அதற்கான பயிற்சி இல்லாத நிலைமைகள் இருக்கும். மேலும் திருவிழாக்காலங்களிலே, குடிநீர், சுற்றுப்புறங்கள் முழுவதும் பாழாகிக் கிடக்கும். அதன் காரணமாக தொற்று வியாதிகள் வரக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி பல இடங்களிலே சந்தைகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. இது போன்ற விழாக்கள் நடைபெறுகின்ற பகுதிகளுக்கு கொஞ்சம் அதிகாரிகளை அதிகமாக அனுப்புவதுடன், மருந்துகளும் அதிகமாக அனுப்பி கவனிக்க வேண்டும். இந்த மாதிரிப் பகுதிகள் குறித்து மிக அதிகமான அளவுக்கு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொண்டாக வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, சுகாதார நிலையங்களைப்பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்தத் துறையைப்பற்றி நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் இந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களைக் காண முடியவில்லை. தேவைப்படுகின்ற நேரத்திலே அவர்கள் கிடைக்கமாட்டார்கள். அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளை கவனிக்காமல் இருக்கும் நிலையும் இருந்து

கொண்டிருக்கிறது. ஒருவேளை அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு வயதாகி விட்டதா அல்லது அங்கே பெண்கள் குறைவாகப் போட்டிருக்கின்றார்களா என்பது தெரியவில்லை. ஆரம்பத்திலே இருந்த வேகமும் ஈடுபாடும் இன்றைக்குக் காணோம். அவர்களைப் போய்க் கூப்பிட்டால்கூட, அவர்கள் வருவதாக இல்லை. கர்ப்பத்தோடு இருக்கின்ற பெண்களுக்காக அவர்கள் கணவன் போக வேண்டியிருக்கும்போது, இதற்காகத்தான் போகின்றோம் என்று சொல்லிக் கேட்க முடிவதில்லை. இப்படி அலைந்து கொண்டு, தேடிக்கொண்டிருப்பதற்குக்கூட சில பேர்களுக்குக் கூச்சமாக இருக்கும். அவர்கள் அப்படிக் கூச்சப்படுகிறார்கள். அவர்கள் அந்த நேரத்தில் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிக்கொண்டிருக்க முடியாது. இந்தக் காரணங்களால் அவர்களை ஆஸ்பத்திரியில் குறிப்பிட்ட நேரத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வாய்ப்பு இல்லாமலும், அவர்களேகூட அந்த இடத்திற்குச் சென்று அடைய முடியாத நிலைமைகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில், அது ஒரு நல்ல முயற்சி என்று சொல்லிக்கொள்கிறேன். அந்த சுகாதார நிலையங்கள் இன்னமும் முழுமையாகச் செயல்படுகின்ற அளவுக்கு அங்கே அதிகாரிகளை நியமித்து, வேண்டிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அங்கே உள்ள பணியாளர்கள் எல்லாம் பல இடங்களிலே கஷ்டமான நிலைமையில் இருந்துகொண்டு செயல்படுகின்ற அளவிலேதான் இருக்கிறார்கள். அவர்களது சொந்த நிலை பற்றியும் நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் நாம் செய்துகொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் போதாது. அவர்கள் குழந்தைகளுடைய எதிர்காலம், படிப்பு மற்றவைகளில் எல்லாம் அவர்கள் கவனம் செல்வதால், அவர்கள் அதற்காக வெளியே போகவேண்டியதாக இருப்பதால், கிராமப்பகுதிகளில் தங்கி பணியாற்றக்கூடிய சூழ்நிலைகள் இல்லை. சிலர் குடும்பங்களை வெளியூரிலே வைத்துக்கொண்டு இங்கே பணியாற்றுவதாகவும், அதனால் அவர்கள் கஷ்டப்படுவதாகவும் சொல்கிறார்கள். பல நாட்கள் கிராமத்தில் இருப்பதாகக் கணக்குக் காட்டிவிட்டு ஊருக்குச் சென்று விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த முறை தவறு என்றாலும்கூட, அதிலே இருக்கின்ற உண்மை நிலைமைகளை நம்மாலே உணர முடிகிறது. அதையெல்லாம் தீர்க்கின்ற அளவுக்கு வழிமுறைகளைக் காண வேண்டும்.

அடுத்து, மலைப் பகுதியைப் பொறுத்து ஒன்று சொல்லியிருக்கிறார்கள். நெருக்கடி காலத்திலே அப்போது ஒடுக்கப்பட்டிருந்த மக்கள், அடிமைத் தனத்தின் காரணமாக ஒடுக்கப்பட்டிருந்த மக்களை அந்த அடிமைத் தளையி

லிருந்து மீட்டோம். அதற்குப் பிறகுதான் எவ்வளவு கொடுமையான பெண் நோய்களுக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள், அவர்கள் கொத்தடிமைகளாக இருந்த காலத்தில் அவர்களை மற்றவர்கள் எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு அவர்களுடைய சுகாதாரத்தைக் கெடுத்திருக்கிறார்கள், அவர்கள் உடல்நிலை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் கண்டோம். அவர்களை மீட்பதற்கு அதிகாரிகளையெல்லாம் அங்கே அனுப்பி வைத்தோம். அவர்களுடைய வியாதிகள் அதிகமாகியிருக்கின்றதே தவிர குறையவில்லை என்ற தகவல்தான் வருகின்றது. இந்த விஷயத்தில் இந்தத் துறை முறையாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில், நான் உண்மையிலேயே வெகுவாகப் பாராட்ட விரும்புகிறேன். மாநிலத்திலே இருக்கின்ற கல்லூரிகளிலே எல்லாம் உயர் படிப்பு கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற நிலைமை பாராட்டக் கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. இது ஒரு நல்ல முன்னேற்றமாகும். சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்துள்ள பல் பிரிவினை தனக்கென சொந்த நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய தனிக் கல்லூரியாக மாற்றக் கருதப்பட்டுள்ளது என்ற தகவலை இங்கே கொடுத்திருக்கிறார்கள். இது போன்று மாநிலத்திலே இருக்கின்ற அத்தனை கல்லூரிகளிலும் பட்ட மேற்படிப்பு வந்திருக்கிறது என்று ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். இது முறையாக திட்டமிட்டதால் வந்து இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்காக இந்தத் துறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போன்ற காரியங்களை இந்தத் துறை செய்து வருகின்றதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஒன்றை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

மருத்துவத் துறை இயங்குகின்ற முறை சரியாக இருந்தாலும்கூட எங்கோ சில இடங்களில் செயல்படுகின்ற முறைகளில் கைகள் கட்டப்பட்டிருக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக மக்கள் மருத்துவத்தினுடைய முழுப் பலனையும் அடைய முடியாமல் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், என்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தையே சொல்ல விரும்புகிறேன். அங்கேயுள்ள தலைமை மருத்துவ மனையிலே எத்தனை டாக்டர்கள் கடந்த ஆண்டிலே விடுப்பு எடுத்துக்கொண்டு சென்றார்கள் என்ற புள்ளி விவரத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். ஏன் அந்த நிலை வந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தலைமை மருத்துவ மனையிலே இருக்கிறவர்கள் விடுப்பு எடுத்துக்கொண்டு, சென்று

விடுகிறார்கள். அவர்களுக்குப் பதிலாக, சிதம்பரம், திண்டிவனம் தாலுக்கா மருத்துவ மனைகளிலுள்ள, உயர் படிப்பு படித்த டாக்டர்களுக்கு சார்ஜ் கொடுத்து, தலைமை மருத்துவ மனையிலே பணி புரிய வைக்கிறார்கள். அவர்களும் விடுப்பு போட்டுவிட்டுச் சென்று விடுகிறார்கள். ஏன் இந்த நிலைமை வருகிறது என்பது தெரியவில்லை, புரியவில்லை. தலைமை அதிகாரியாக இருப்பவரிடம் யாரும் பணியாற்ற முடியாத நிலைமை ஏன் வருகிறது என்பது புரியவில்லை. யாராவது ஒருவர், இருவர் விடுப்பில் சென்றால், அப்படி விடுப்பில் போகிறவர்கள்மீது தவறு இருக்குமென்று நினைக்கலாம். அங்கே பணி புரிகிற அத்தனை பேர்களும் இந்த நிலைமைக்கு ஆளாகிறார்களென்றால், அந்தத் துறை எந்த அளவிற்குக் கெட்ட பெயர் எடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுக் கூட்டங்களிலே சிலரைப் பாராட்டுகிறோம்.. இது போன்ற பதவிகளிலே உள்ளவர்களை, பெரிய பதவிகளில் உள்ளவர்கள் பொதுக்கூட்டங்களில் வானளாவப் புகழ்வதால், அவர்கள் இவர்களே நம்மைப் புகழ்ந்து விட்டார்கள் என்ற மமதையில் செயல்படுகிறார்கள். அவர்கள் ஏதாவது தவறு செய்தால், அவருக்குப் பரிந்துகொண்டு அமைச்சர்கள் வருவார்களோ, முதலமைச்சர் வருவாரோ, வேறு யாராவது வருவார்களோ என்று அஞ்சும் நிலைமை துறையிலுள்ள அதிகாரிகளிடம் இருக்கிறது. அதனால் அந்தத் துறை சீரழிந்த நிலையில் இருக்கிறது. இது நல்லதல்ல. இந்த நிலைமை அந்தத் துறையைப் பாழ் படுத்திக்கொண்டிருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சில மாவட்டங்களிலே, சில அதிகாரிகளைப் போடும்போது எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். எங்களுடைய பகுதியிலே உள்ள அதிகாரி, ஏற்கெனவே திண்டிவனம் தாலுக்கா மருத்துவ மனையிலே பணியாற்றி, அங்கே பல தகராறுகள் ஏற்பட்ட பிறகு, மாற்றலாகிப் போனார். யார் பக்கம் நியாயம், யார் தவறு செய்யவில்லை என்பதற்குள்ளே நான் போகவில்லை. ஆனால் அவர் அந்த மாவட்டத்திலேயே உயர்ந்த பதவி பெற்றவுடன், அவருடைய ப்ரெஜுடிஸ் அந்த திண்டிவனத்தின் மீது திரும்புகிறது. அமைச்சரவர்கள் மருத்துவத் துறை கொள்கைக் குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதில், திண்டிவனம் என்ற பெயர் எங்கேயாவது வருகிறதா என்று பார்த்தால், இல்லை. திண்டிவனத்தைத் தண்டிக்க இதைவிட வேறு என்ன வழி இருக்க முடியுமென்று எண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது. ஓராண்டுக் காலத்தில் அல்லது இரண்டு ஆண்டுக் காலத்தில் ரிட்டையர் ஆகிப் போகப் போகிறோமென்பதால், எதை வேண்டுமானாலும் செய்யலாமென்று நினைப்பவர்களிடம், பெரிய பொறுப்பினை ஒப்படைத்து, அவர்கள் தலைமையின்கீழ் பல மருத்துவ மனைகள் இயங்கும்போது, எங்கே நாம் சென்று கொண்டிருக்கிறோமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களுடைய

பகுதியிலே பொது மேடைகளிலும், இந்த அவையிலும் அமைச்சரவர்கள், மருந்து இல்லையென்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுப்போம், அப்படிப்பட்ட நிலைமை வரக் காரணமில்லை என்று அறிவிக்கிறார்கள். கேட்டால் கொடுக்கிறோமென்றும் சொல்லுகிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் தாலுக்கா தலைமை மருத்துவ நிலையங்களுக்கான இன்டென்ட் எத்தனை மாதங்கள் காத்துக் கிடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பல மாதங்கள் கழித்துத்தான் மருந்துகளைத் தந்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்தப் பேப்பர்களையெல்லாம் வாங்கிப் பார்க்க வேண்டும்.

புற நோயாளிகளைப் பொறுத்தவரையில், நாள்தோறும் அவர்கள் எண்ணிக்கை எங்கள் மாவட்டத்தில் குறைந்து வருகிறது. என்ன காரணம்? நோயாளிகள் குறைந்துவிட்டார்களா? மக்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டதா? அல்லது, மருந்து இல்லை என்பதால், தினமும் மருத்துவமனைக்கு வந்து ஏமாந்து, இனி மருத்துவமனைக்கே போகக்கூடாது என்ற நிலைமைக்கு அவர்கள் வந்திருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திண்டிவனத்தில் படுக்கைகள் பல மாதங்களாக இல்லை. கட்டில்கள் ரிப்பேருக்குப் போகின்றன. உண்மையான காரணங்களுக்காக அது தடைபட்டுப் போனால், அதுபற்றி ஒரு கேள்வி கேட்டவுடன், அந்த வேலை செயல்படுகிறது. கேள்வி கேட்டவுடன் வருகிறதென்றால், என்ன பொருள்? பேப்பர்களைப் பார்க்க நேரம் கிடையாது, அதைப் பார்க்கும் எண்ணம் கிடையாது, அங்கேயுள்ள டாக்டர்களை முறையாக நடத்தும் எண்ணம் கிடையாது என்பதுதான் பொருள். அதே நேரத்தில் இவர்கள்மீது யாரும் குற்றமும் சொல்ல முடியாது. அப்படி குற்றம் சாட்டினாலும் யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தனக்கு மேலே இருக்கும் அதிகாரிகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்று, தான்தோன்றித்தனமாக **D.M.O.** நடத்தால், அந்தத் துறை எந்த நிலையிலே போய் நிற்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லோருக்கும் பாதுகாப்புத் தர அரசு இருக்கிறது. மருத்துவர்களுக்குத் தனியாகப் பாதுகாப்பு தரவேண்டும். கடந்த கால கசப்பான அனுபவங்கள், சில எண்ணங்களை உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கின்றன. 50 ரூபாய், 100 ரூபாய் லஞ்சம் வாங்கியதாக டாக்டர்களைக் கைது செய்வதைப்பற்றி விளம்பரப்படுத்துவதை தயவு செய்து பரிசீலித்தாக வேண்டும். அதைக் கைவிட்டாக வேண்டும். லஞ்சம் வாங்குவது என்பது மிகப் பெரிய கொடுமை. அதிலும் வியாதியின் காரணமாக சிகிச்சைக்கு வருகிறவர்களிடம் லஞ்சம் வாங்குவது மிகப் பெரிய கொடுமை. ஆனால் மருத்துவர்களைக் கைது செய்து, சிறைக்குள்ளே தள்ளுவதை விளம்பரப்படுத்துவது, பொதுவாக அந்தத் துறையை

அழிப்பதாக இருக்கிறது. அந்தத் துறையின்மீது மக்களுக்கு இருக்கும் மிகப் பெரிய நம்பிக்கை, அற்றுப்போகும் நிலைமையை உருவாக்குகிறது. முக்கியமான துறைகளில் உள்ளவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் கட்டாயம் ஏற்படும்போது, அவர்கள் தவறு செய்யும்போது, அல்லது காவல்துறை அல்லது அமைச்சர்கள் செல்லும்போது, குறைந்தபட்சம் பத்திரிகைகளுக்குத் தகவல் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். துறையின் மூலமாக நடவடிக்கை எடுங்கள். ஆனால் அதை விளம்பரப்படுத்திச் **செய்வதால், துறைக்கு மிகப் பெரிய தீங்கைச் செய்கிறோம்.**

அமைச்சரவர்கள் பதவி ஏற்ற பிறகு பல இடங்களுக்கு, மாறு வேடமிட்டுச் சென்றார்கள். பல மருத்துவமனைகளுக்குச் சென்றார்கள். சில மருத்துவமனைகளுக்கு மாறுவேடமில்லாமல் சென்றார்கள். பல இடங்களிலே, பலவற்றைக் கண்டுபிடித்தார்கள். அது பத்திரிகையிலே விளம்பரமாயிற்று. நான் மிகத் தெளிவாக அதைப்பற்றிச் சொல்கிறேன். கடைசியில் என்னவாயிற்று? எப்படி இதையெல்லாம் கண்டுபிடித்துக்கொண்டு வரலாமென்ற பிரச்சினை விவாதத்திற்கு ஆளாயிற்றே தவிர, எதிர்பார்த்த பயன் கிடைத்ததா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். திடீரென்று போய்ப் பார்ப்பதிலே தவறு ஒன்றுமில்லை. அப்படிப் போய் பார்க்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்வதற்கு ஒரு வரையறையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மருத்துவர்கள் அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். அதைப்போலவே நர்சுகள் அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். மாவட்டங்களுக்கு அமைச்சரவர்கள் செல்லுகிறார்களென்றால், இவற்றின் நிர்வாகிகளை அழைத்துப் பேச வேண்டும். அசோசியேஷன் ரெப்ரசென்டேடிவ்களை அழைத்துப் பேசுங்கள். பல பகுதிகளிலே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்று அவர்களிடம் கூறுங்கள். அதற்குப் பிறகு திடீரென்று போய்ப் பார்ப்பதிலே, சர்ப்ரைஸ் விசிட் செய்வதிலே அர்த்தமிருக்கிறது. அப்படியில்லாமல், ஒரு நாள் செல்வது, இதைக் கண்டுபிடித்தார், அதைக் கண்டு பிடித்தார் என்று உடனே பத்திரிகையில் விளம்பரம் வருகிறது. இரண்டு நாட்களுக்குப் பிறகு குற்றம் சாட்டப்பட்டவர் வந்துவிட்டார் என்று சமாதானங்கள் வருகின்றன. கடைசியாக பலனற்றுப் போகும் நிலைதான் ஏற்படுகிறது. இந்த நிலைமையைத் தடுக்க, வார்னிங் கொடுத்து, அசோசியேஷன் ரெப்ரசென்டேடிவ்களோடு பேசி, அந்தப் பகுதியில் இப்படி நிலவுகிறது என்று சொல்லி, அதற்குப் பிறகு போவதுதான் முறை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை நான் இன்ஸ்பெக்ஷன் பண்ண வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், எப்படி இன்ஸ்பெக்ஷன் செய்வது என்பது பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை. தெளிவாகச் சொன்னால், எங்கள் இருவருக்கும் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

திரு. க. இராமமூர்த்தி : அமைச்சரவர்கள் இன்ஸ்பெக்ஷன் போவது பற்றிச் சொல்லுகிறார்கள். நான் சொல்லுவது சர்ப்ரைஸ் ரெய்ட் செய்வது பற்றியது . . .

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : 'சர்ப்ரைஸ் செக்' செய்வது பற்றித்தான் நானும் கேட்கிறேன். எப்படிச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றித் தெளிவாகச் சொன்னால் நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : 'சர்ப்ரைஸ் செக்' செய்யும்போது பெரிய அதிகாரிகளோடு சென்றால், தவறுகள் நடந்திருந்தால், அதைக் கண்டுபிடிக்க முடியும். அமைச்சர் அல்லது உறுப்பினர் என்ற முறையில் சர்ப்ரைஸ் விசிட் போகும் போது, சில டாக்டர்களைப் பார்க்க முடியவில்லை என்றால், அவர்களைக் காணோம், அவர்கள் எல்லாம் வீட்டிற்குப் போய்விடுகிறார்கள், அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது வீண் என்று பத்திரிகையில் தகவல் வருகிறது. இரண்டு நாட்களுக்குப் பிறகு, அவர்கள் கோர்ட் வேலையாகச் சென்றார்கள், வேறு வேலையாகச் சென்றார்கள் என்று சமாதானம் வருகிறது. அதை ஏற்றுக் கொள்கிறோமென்றால், அதன் காரணமாக அந்தத் துறை எந்த அளவிற்கு பலவீனமாகிவிடுகிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு இடத்திற்கு 'சர்பிரைஸ் விசிட்' போவதை அதிகாரிகளுக்குச் சொல்லிவிட்டுச் செல்லலாமே என்கிற ஒரு வழி முறையை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்கிறார். அதிகாரிகளுக்குச் சொல்லி விட்டுப் போனால், அது 'சர்பிரைஸ் விசிட்' ஆக இருக்காது. ஒரு அதிகாரிக்குத் தெரிந்தால், அது பல அதிகாரிகளுக்கும் தெரிந்து விடும். அப்படிச் சொல்லாமல் திடீரென்று 'சர்பிரைஸ் விசிட்' என்ற முறையில் செல்லுவதால், சிலவற்றைக் காண முடிகிறது. ஒருவேளை பத்திரிகைகளில் வருவதை வேண்டுமானால் உறுப்பினர் தவறு என்று சொல்லலாம். 'சர்பிரைஸ் விசிட்' என்று சொல்லிவிட்டு அதிகாரிகளை அழைத்துப் போவதானால், எதற்காக 'சர்பிரைஸ் விசிட்' செய்கிறோமோ அதனுடைய பலனை நிச்சயமாக நாம் பெற முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : அதிகாரிகளை அழைத்துச் செல்ல வேண்டுமென்று சொல்லுகின்றபோது, சம்பந்தப்பட்ட ஊரிலுள்ள உயர் அதிகாரியை அழைத்துச் செல்லலாம். டாக்டராக இருந்தவர் அந்தத் துறையைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர் என்கின்ற முறையில் அவரையும் அழைத்துச் செல்வது என்பது வேறு. எங்களைப் போன்ற பொதுத் துறையிலே இருப்பவர்கள் அப்படிப் போகும்போது, முழு விவரமும் தெரியாத நிலையில் போவது என்கின்ற நிலை வேறு. அப்படிப் போகின்ற நிலை வரும்போது, வெறும் கற்பனை எண்ணங்களின் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : நான் ஓரளவிற்கு இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, இந்தத் துறை எப்படி எப்படி பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் தெரிந்து கொண்டதற்குப் பிறகு தான், இந்தத் துறையை கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். சர்பிரைஸ் விசிட் போகிறோம் என்றால், சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அங்கிருந்து வந்த குற்றச்சாட்டுகளை, குறைபாடுகளைப் பார்த்த பிறகு தான் போகிறோம். இன்னும் சொல்லப்போனால், தவறு செய்பவர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் வந்து நடவடிக்கை எடுத்த பிறகும் அவர்கள் தவறைத் திருத்திக் கொள்ளாத நிலையில் புகார் வரும்போது தான், இப்படிப்பட்ட இடங்களுக்கு 'சர்பிரைஸ் விசிட்' போகிறோமே தவிர, வேறு எந்த வழியையும் பின்பற்றிப் போகவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதாவது பெரிய அதிகாரியையும் அழைத்துக் கொண்டு போகலாமே என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படிப் போகும்போது, அந்த அதிகாரியினுடைய உதவியாளர் தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தகவல் தந்து விடுகிறார்.

திரு. க. இராமமூர்த்தி : அனுபவம் இல்லாமல் மாண்புமிகு அமைச்சரவர்கள் இம்மாதிரிச் செய்கிறார் என்று நான் சொல்லவேயில்லை. அப்படி நான் நினைக்கவும் இல்லை. எவ்வளவுதான் அந்தத் துறையில் நாம் ஈடுபாடு கொண்டிருந்தாலும், வெளியிலிருந்து கொண்டு ஈடுபாடு கொள்வது என்பது வேறு. அந்தத் துறையிலேயே பிறந்து வளர்ந்து அந்தத் துறையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வது என்பது வேறு. உயர்அதிகாரிகளுக்குச் சொல்லி அவர்களுடன் போனால், அவர் வேறு அதிகாரிகளுக்குத் தகவல் தந்து விடுகிறார் என்கிற நிலை இருக்குமானால், அதற்காக என்னுடைய அனுதாபத்தை நான் தெரிவித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : உயர்அதிகாரிகளுக்கு சொல்லி அவர்களுடன் போனால், அவர் வேறு அதிகாரிகளுக்குத் தகவல் தந்து விடுகிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி நான் சொல்லவேயில்லை. மேலும் அந்த ஊரிலுள்ள அதிகாரியை நான் அழைத்துச் செல்கின்றபோது, "ஊரிலுள்ள அதிகாரிகள் எல்லாம் ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்" என்ற குற்றச்சாட்டு வரும். அதையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : ஊர் சுற்றுகின்ற பொறுப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மட்டும் வைத்துக்கொண்டால் ஆட்சேபனையில்லை. ஒரு தகவலை அவைக்கு நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குக் கிடைத்த அந்தத் தகவல் உண்மையாக இருக்கக்கூடாது. மேல் பட்டப் படிப்புக்காக, எம்.டி., எம்.எஸ்., போன்ற படிப்புக்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர், ஏப்ரல் மாதங்களில் தேர்வு நடைபெறுவது உண்டு. அது சம்பந்தமாக அப்ளிகேஷன் கொடுப்பதும் உண்டு. இந்த ஆண்டு ஏப்ரல் தேர்வு எழுத அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த அப்ளிகேஷன்களை வைத்துக் கொண்டு அக்டோபர் தேர்வையும் முடித்து விடுவது என்கிற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு இன்றைக்குத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால், அப்ளிகேஷன் போடக் காத்திருக்கும் பல பேருக்கு வாய்ப்பு மறுக்கப்படக் கூடிய நிலை, விஷயத்தை திசை திருப்பி விடுகின்ற நிலை ஏற்படும். அந்தத் தகவல் உண்மையாக இருக்குமானால், மாண்புமிகு அமைச்சரவர்கள் விசாரித்து அதை முறைப்படுத்த வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்குதான் ஏறத்தாழ நூறு மைல் தூரம் டிரங்க் ரோடு இருக்கிறது. ஓசூர் தொடங்கி தொழுதூரில் அந்த ரோடு முடிகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொடங்கி செங்கற்பட்டு மாவட்டத்தில் முடிவடைகிறது. மிக அதிகமான கார், ஸ்கூட்டர் விபத்துக்கள் ஏற்படுவது இந்த 100 மைல் நீளமுள்ள டிரங்க் ரோட்டில் தான். திண்டிவனத்தில் ஒன்றும் விழுப்புரத்தில் ஒன்றும் ஆக மொத்தத்தில் இரண்டு ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைகள்தான் அந்தப் பகுதியில் இருக்கின்றன. உளுந்தூர்பேட்டையில் ஒரு சாதாரண சிறிய மருத்துவமனை இருக்கிறது. இருக்கின்ற இரண்டு பெரிய மருத்துவமனைகளில் கூட போதுமான மருத்துவ வசதிகள் கிடையாது. அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்ற அந்தப் பகுதியில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாத மருத்துவமனைகள் இருக்கின்ற நிலையில், விபத்து காரணமாக அதிகமான சாவுகள் ஏற்படுகின்றன. இவை அதிகரிக்கும் நிலை இருக்கிறது. அதுமட்டுமல்ல. விபத்தில் அடிபடுகின்றவர்களுக்கு உடனடியாக மருத்துவம் செய்ய இயலாத அவல நிலை நிரந்தரமாக

இருந்துகொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் விழுப்புரத்திலுள்ள மருத்துவமனையிலாவது உயர்தர நவீன கருவிகளை எல்லாம் அமைத்து அதை ஓர் உயர்தர மருத்துவமனையாக உயர்த்த வேண்டுமென்று நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் அந்தப் பகுதிக்கு ஒரு மொபைல் வேன் கட்டாயம் ஒதுக்கப்பட வேண்டும். அந்த வேன் தென் பகுதியிலும் வட பகுதியிலும் செயல்பட வேண்டும் இதுகுறித்தும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக முடிப்பதற்கு முன்னால் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றபோது, வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடுகின்றபோது, அவர்கள் செல்வதற்கு முன்னால் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து விட்டுத்தான் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட ஒரு புதிய நடவடிக்கையை அரசு இப்பொழுது மேற்கொண்டிருக்கிறது. அப்படி எழுதிக் கொடுத்தவர்களுக்குக் கூட எழுதிக் கொடுத்து நெடுநாள் ஆகியும் இதுவரை உத்தரவு வரவில்லை. இதில் கூட தாமதம் என்கின்ற ஒரு நிலை அவசியம் தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அனுப்புவது அல்லது அனுப்ப வேண்டாம் என்று முடிவெடுப்பது என்பது வேறு. அனுப்புவது என்று முடிவு செய்த பிறகு, அவர்களைக் காத்திருக்க வைப்பதும், இங்கேயும் அவர்கள் வேலை செய்ய முடியாமல், வெளிநாடுகளிலும் அவர்கள் சென்று வேலை செய்ய முடியாமல் அவர்களைத் தவிக்க வைக்கின்ற நிலை இருப்பது நல்லதுதானா?

அடுத்தபடியாக, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மருத்துவமனைபற்றி மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் மீண்டும் அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பின்தங்கிய மக்களுக்கு வகுப்புவாத பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் மருத்துவமனைகளில் இடம் கிடைப்பதில்லை. ஏதாவது சில இடங்களில் கொடுத்தாலும், பின்தங்கியவர்களில் எங்கே முன்னேறியவர்கள் இருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்குத் தான் கொடுக்கிறார்கள். அதுவும் சென்னை, கோவை போன்ற இடங்களில் உள்ளவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட வாய்ப்புகள் நிறையக் கிடைக்கின்றன. மாவட்டங்களில் அந்த வாய்ப்பு இல்லை. மாவட்டங்களுக்கென்று தனியாக நிதி ஒதுக்கக்கூடாது என்று இப்பொழுது நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஒரு கருத்தை நான் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். அண்ணா அவர்கள் சொன்ன மாதிரி, மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் தந்து, அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எனக்கு வந்த ஒரு தகவலை அவையின் முன்வைக்கிறேன். தஞ்சையில் சுந்தரபெருமாள் கோயில் கிராமத்தில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. காலஞ்சென்ற கோவிந்தசாமி மூப்பனார் அவர்கள் நிதி உதவி தந்து அந்த மருத்துவமனை அவர்கள் பெயரில் நடத்தப்பட்டு வந்தது. அந்த மருத்துவமனை இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் கட்டப்பட்டதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அங்கு ஒரு தவறு நடந்திருக்கிறது. அது யாருடைய முயற்சியால் நடைபெற்றது என்று தெரியவில்லை. நிதியளித்த கோவிந்தசாமி மூப்பனாருடைய பெயர் இப்பொழுது அழிக்கப்பட்டுள்ளது. அந்தத் துறை இது எப்படி ஏற்பட்டது என்று கண்டுபிடிக்க முயன்றும் கண்டுபிடிக்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. மருத்துவமனைக்கு பாமரிப்புக்காக ஆண்டுதோறும் 2,500 ரூபாய் வருமானம் வரக்கூடிய முறையில் அவர்கள் நிலம் கூட வைத்திருந்தார்கள். நிலத்தின் மதிப்பு 75 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும். ஆண்டு ஒன்றுக்கு இப்போது 6 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வரக்கூடும். இப்பொழுது உள்ளபடியே அதிலிருந்து எந்த அளவுக்கு இந்தத் துறைக்கு வருமானம் கிடைக்கிறது என்பது தெரியவில்லை. யாரோ கேட்பாரற்றோர் அதை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஆர். கோவிந்தசாமி மூப்பனார் லோக்கல் பண்ட் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை, எந்த அளவுக்கு அவர்களிடமிருந்து பணம் நிலம் போன்ற உதவிகளைப் பெற்று அதை நடத்த முடியுமோ அந்த அளவு பணம் இன்னும் மற்ற உதவிகளைப் பெற்ற பிறகு, இன்றைக்கு அவர்களுடைய பெயர் மருத்துவமனையிலிருந்து அழிக்கப்பட்டிருக்கிறது என்றால், அதுகுறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இது குறித்தும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறேன். இந்த ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட மணியம் சர்ட்டிபிக்கெட் உட்பட அத்தனையும் என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு தலைவரவர்களின் அனுமதியுடன் அமைச்சரிடத்தில் தருகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அவசியம் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதுபோன்ற நிலைமைகள் எங்காவது நடைபெறுகிறது என்றால், அதுபற்றிய குறிப்புகளை வேண்டுமென்று தேடுகின்றபோது, காணாமல் போகின்ற நிலை அல்லது இல்லாமல் அழித்து விடுகின்ற நிலை நல்லதல்ல. இப்பொழுது இந்தக் குறிப்பிட்ட மருத்துவமனையில் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறதைப் பார்க்கின்றபோது, மற்ற மருத்துவமனைகளிலும் அந்த நிலை இருக்கிறதோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. இன்னும் நிறைய விஷயங்கள் பேசுவதற்கு எனக்கு இருக்கின்றன என்றாலும், கால அவகாசம் இல்லாததால் பேசுவதற்கான வாய்ப்பு இல்லை. இந்தத் துறையின் பொதுவான இயங்கு முறையைப் பாராட்டுகின்றபோது, தவறு செய்கின்ற பல பேர்கள் மீது உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்காத நிலை

இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவைகளையும் அமைச்சரவர்கள் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

மது விலக்குச்சட்டம் 'ப்ரொகிபிஷன் ஆக்ட்' வந்ததற்குப் பிறகு, பல டாக்டர்கள் நிரந்தரமாக நீதி மன்றங்களிலே இருக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். சர்ட்டிபிகேட் அவர்கள்தான் கொடுக்க வேண்டும். அவர்கள் சர்ட்டிபிகேட் கொடுத்த பிறகு, அன்றாடம் நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. காலைமுதல் மாலை வரையில் அங்கேயேதான் இருக்கிறார்கள். இரவுதான் திரும்புகிறார்கள். மருத்துவமனைக்கு என்று அவர்களை நியமித்துவிட்டு, அனுப்பினால் இன்றைக்கு செஞ்சிக்கு, நாளைக்கு திண்டிவனத்திற்கு என்று அவர்களை மாற்றினால், டாக்டர்களுடைய எண்ணிக்கையை மருத்துவமனைகளில் குறைக்கிறோம் என்பது மட்டுமல்ல, நோயாளிகளைச் சரிவர கவனிக்கமுடியாத ஒரு சூழ்நிலையும் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. கூடுதல் டாக்டர் இருந்தால்தான், அவர்களுடைய பணியைச் சரிவரச் செய்ய முடியும் என்ற நிலைமை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தின் கொடுமை, கொடூரம் அந்த அளவுக்கு இருக்கிறது. ஆகவே, டாக்டர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அல்லது தனியாக அதற்கென்று டாக்டர்களை நியமிக்க வேண்டும். மாவட்டத்திற்கு ஐந்து அல்லது ஆறு டாக்டர்கள் ஒரு சில குறிப்பிட்ட இடங்களிலே இருந்துகொண்டு இப்படிப்பட்ட சர்ட்டிபிகேட்கள் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையைக் கூட ஏற்படுத்தலாம். ஆகவே, மருத்துவமனைக்கு வரும் மக்களை இவ்வாறு பாதிக்க வைத்துவிட்டு, மருத்துவர்களை இந்தப் பணிக்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே திண்டிவனம் மருத்துவ மனையில் அடிப்படை வசதிகள்கூடக் கிடையாது. எக்ஸ்ரே வசதி கிடையாது. அந்த மருத்துவ மனைகளில் இருக்கும் குழாய்களில் தண்ணீர்கூட வருவதில்லை. ஒரு சாதாரண எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்றால் கூட, கடலூருக்கோ அல்லது பாண்டிச்சேரிக்கோதான் செல்ல வேண்டும். ஆகவே, இந்தக் குறைகளையெல்லாம் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான மருத்துவம் மக்கள் நல் வாழ்வுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நான் சில கருத்துக்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொதுவாக கல்விக்கு

அடுத்தபடியாக அதிகமான நிதியை இந்தத் துறைக்காக ஒதுக்கியிருப்பதிலிருந்து இந்தத் துறை எவ்வளவு முக்கியமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். எப்படி ஒரு சமுதாயம் முன்னேற கல்வி மிக அவசியமோ, அதுபோலவே அந்தச் சமுதாயம் நோயற்ற சமுதாயமாக வாழ்வதற்கு மருத்துவமும் பொதுச் சுகாதாரமும் இன்றியமையாதவை என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அது இந்த ஆட்சியிலே மட்டும் ஏற்பட்டதல்ல. 1938-லே இருந்து இந்தத் துறையின் வளர்ச்சியைப் பார்த்தால், அது தெளிவாகும். இந்தத் துறைக்காக 1938-லே 1.24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் வருவதற்கு முன்னாலே பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய ஆட்சியிலேயும் கல்விக்கு அடுத்தபடியாக இந்தத் துறைக்கு முக்கியத்துவம் தந்து 16.75 கோடி ரூபாய் நிதியொதுக்குதல் செய்து, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது அந்த நிதியொதுக்கம் இன்னும் கூடுதலாகி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் 1975-76 ஆம் ஆண்டு இந்தத் துறைக்காக 60 கோடி ரூபாய் என்ற அளவிலே நிதியொதுக்கம் செய்து இந்தத் துறை வளரவேண்டும், நோயற்ற சமுதாயத்தை இந்த நாடு பெற வேண்டும், உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் காரியங்கள் நடந்தேறின. அந்த அடிப்படையில் தான் இந்த அரசும் இந்த ஆண்டு ஏறக்குறைய 96.70 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கி பல்வேறு நல்ல அறிவிப்புக்களைச் செய்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் பாராட்டுகின்ற அதே நேரத்தில் குற்றங்கள், குறைகள் சொல்கின்றோம் என்றால், இந்தத் துறை வளர வேண்டும், செம்மையாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் தானே தவிர, யார் மீதோ கொண்டிருக்கின்ற காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தான் இந்தக் குறைகள், குற்றங்கள் சொல்லப்படுகின்றன என்று தயவு செய்து யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின்படி தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு மருந்துகள் வாங்க 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது கூட, "இந்தத் தொகை போதுமா?" என்று கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அன்றைக்கு இருந்த நிதியாதாரத்தை வைத்துப் பார்க்கும் போது, 10 ஆயிரம் ரூபாய் தான் ஆண்டு ஒன்றுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றுக்கு ஒதுக்க முடிந்தது. இப்போது அந்தத் தொகை 14 ஆயிரம் ரூபாயாக

உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காக நான் இந்த அரசுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் 1 லட்சம் மக்கள் வாழக்கூடிய ஒன்றியப் பகுதியில் இருக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, நாம் சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், ஆள் ஒன்றுக்கு 14 காசுகள்தான் நாம் தருகிறோம். இந்தத் தொகை போதாது. ஆகவே, இன்னும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 5 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் இன்றையதினம் சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த சுகாதார நிலையங்களில் பகுதி நேர டாக்டர் ஒருவரும், முழு நேர டாக்டர்கள் ஆண் டாக்டர்கள் மற்றும் பெண் டாக்டர் 3 பேரும், முதல் நிலை ஆய்வாளர்கள் 3 பேரும், இருக்கிறார்கள். 50 சதவீதம் மானியமாகவும், 50 சதவீதம் செலவு பொது நிறுவனங்கள் அளிக்கும் தொகை மற்றும் நன்கொடைகள் வசூலிப்பதன் மூலமாகவும் இப்படிப்பட்ட சிறு சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கிராமப்பகுதிகளில் மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற கொள்கை வளர்கின்ற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட சிறிய சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் செய்யப்படுகின்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அதைப் போலவே செவிலியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 300 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. 1979-80-லே அந்த இடங்களை 300-லிருந்து 350-ஆக உயர்த்தக் கருதப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 50 பேர்களுக்கு புதிதாக செவிலியர் பயிற்சி அளிக்க இந்த அரசாங்கம் முடிவு செய்திருப்பது, படித்துவிட்டு வேலை கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு வாய்ப்பு அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தத் திட்டத்தையும் நான் பாராட்டுகிறேன். ஏ.என்.எம். பயிற்சி பெறுகின்றவர்கள் ஒரு ஆண்டுக்கு 120 பேர்கள் தான் இருந்தார்கள். அதை மாற்றி இப்போது 200 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் நான் பாராட்டுகிறேன். கண்பார்வை பயிற்சி-ஆப்பரேஷன் கோர்ஸ்-என்று ஒரு கோர்ஸ் முன்பு இருந்தது. இடையில் அது நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது அதை மீண்டும் கொண்டு வந்து ஆண்டு ஒன்றுக்கு 30 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். இப்படி வரவேற்கின்ற நேரத்தில், பாராட்டுகின்ற நேரத்தில், மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று நாம் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்த அரசு அதற்கான முயற்சியிலே ஈடுபடுகிறதா என்றால், இல்லை. சென்னையிலே புறநகர் பகுதிகளான அண்ணாநகர், தண்டையார்பேட்டை போன்ற பகுதிகளிலே திராவிட

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 ஏப்ரல் 18

முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மருத்துவமனைகளுக்கென கட்டப்பட்ட கட்டிடங்கள் இன்னும் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே 9-ம் பக்கத்திலே 'ஈ' பிரிவிலே அதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகும் அங்கே மருத்துவ மனைகள் இயங்க வில்லை என்று சொன்னால், இந்த நாட்டிலே டாக்டர் கிடைக்கவில்லையா? அல்லது மருந்துகள் வாங்குவதிலே தாமதமா? பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டிடம் கட்டப்பட்டு ஒன்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒருவேளை கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டன என்ற ஒரே காரணத்துக்காக அவைகள் அப்படியே விடப்பட்டிருக்கின்றனவா? ஒரு பக்கத்திலே படித்து பட்டம் பெற்ற டாக்டர்கள், வேலை கிடைக்கவில்லை, எங்களுக்கு வேலை வேண்டும் என்று அரசாங்கத்திடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள், அதே நேரத்தில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தைக்கூட இந்த அரசு பயன்படுத்த முயற்சி எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை என்று ஒரு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். 1977-78-ல் 1,29,516 குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது என்று புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால் டிசம்பர் மாதம் வரையில் எவ்வளவு செய்யப்பட்டது என்று பார்த்தால், 69 ஆயிரம் பேருக்குத்தான் செய்திருக்கிறார்கள். ப்ரப்போர்ஷனேட்டாகப் பார்த்தால் கூட, 90 ஆயிரம் பேர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்திருக்க வேண்டும். ஆகவே, இப்படி குழந்தைகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நிர்வாகத்தில் நடைபெறுகிற நேரத்தில், அமைச்சர் அவர்கள்தான் இந்த நிர்வாகத்தைக் கொஞ்சம் தட்டிக்கொடுத்து செம்மையாக இயங்கச் செய்ய வேண்டும், அதற்கு உரிய அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளும் அதிகார வர்க்கமும் எப்பேர்ப்பட்டது என்பது நமக்கெல்லாம் தெரியும். எனவே, ஒரு அரசாங்கம், அதுவும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் சமுதாய நலத் திட்டங்களைத் தீட்டுகின்ற போது, அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட இளம் சிறுவர்களுக்கு என்று திட்டங்கள் திட்டப்படும்போது, அந்தத் திட்டங்கள் செம்மையாக நிறைவேற்றப்பட அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுச் சுகாதாரத் துறையின் மூலம் ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 1976-77-ல் 2.62 லட்சம், 1977-78-ல் 2.51 லட்சம். ஆனால் 1979 ஜனவரி 31 ஆம் தேதி வரையில் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 2 லட்சம் தான் என்று சொன்னால், நான் கேட்கிறேன்,

1979 ஏப்ரல் 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

"ஊசிகள் கிடைக்கவில்லையா? அல்லது போடுவதற்கு மருத்துவர்கள் இல்லையா?" ஆகவே, இப்படிப்பட்ட குறைகளை அரசாங்கம் தவிர்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(நண்பகல் 12-00)

உணவுக் கலப்படக் குற்றங்களைப்பற்றி பத்திரிகைகள் மூலமாக நாம் அறிகிறோம். நாட்டில் ஏராளமான அளவுக்கு உணவுக் கலப்படங்கள் நடக்கின்றன. அதன் காரணமாக இந்த நாட்டில் பல உயிர்கள் மாண்டு போகும் நிலைமை இருப்பதையும் நாம் அறிவோம். அதைத் தடுப்பதற்காக புதிய வசதிகள் நம்மிடமில்லையென்றாலும், இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு எவ்வளவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அந்த வகையில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று பார்த்தால், 1978 ஆம் ஆண்டில் மட்டும் விற்பனைக்கு வைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் 17,541 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இவற்றுள் 3,092 மாதிரிகளில் சோதனை மூலம், கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டறியப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிக் கலப்படம் செய்வோர்மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கலப்படம் என்னும் குற்றத்தைச் செய்வோர் மீது கடுமையான தண்டனை அளிக்கப்படும் வகையில் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த அரசுக்கு நான் ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சிகரமான சட்டம் எதை யெதையோ கொண்டுவருகிற இந்த அரசு இந்தத் துறையிலும் புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மது அருந்தினால் 3 மாதம் சிறைத் தண்டனை, இரண்டாவது முறை அருந்தினால் 6 மாதம் சிறைத் தண்டனை, அடுத்தும் மது அருந்தினால் அவர்களை இந்த நாட்டைவிட்டே வெளியேற்றும் வகையில் நாடுகடத்தும் சட்டமெல்லாம் இந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் உணவில் கலப்படம் செய்கிறவர்கள்மீது கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் எந்தச் சட்டத் திருத்தமும் கொண்டு வரப்படவில்லை. உணவில் கலப்படம் செய்வதைவிட ஒரு சமுதாய விரோதச்செயல் நாட்டில் வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனால் அவர்களெல்லாம் எங்கெங்கேயோ, யார் யாரிடத்திலேயோ, எந்தக் காரணத்தினாலேயோ தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே சிலர் பிடிபட்டு, கோர்ட்டு நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டாலும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தண்டனையெல்லாம் 3 மாத காலச் சிறைத் தண்டனையும் ரூபாய் 500 அபராதமும்தான். இந்த நிலைமை

இருப்பதன் காரணமாகத்தான் கலப்படம் என்பது இன்றையதினம் நாட்டில் ஒரு பெரிய தொழிலாக வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே அரசாங்கம் உணவுக் கலப்படத்தைத் தடுக்க கடுமையான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அங்கீகாரமில்லாமல் 3,100 சிறுபுட்டி பெத்தடின் வைத்திருந்த ஒரு மருத்துவர்மேல் குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்ற விவரமும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பின் 36-வது பக்கத்திலே இந்த விவரம் இருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த நாட்டில் பெத்தடின் வைத்திருப்பவர் ஒருவர்தானா? பெத்தடின் எங்கேயும் இருக்கிறது. அது எங்கெங்கே இருக்கிறது என்று அமைச்சர் அவர்களுக்கே தெரியும். ஆளுங்கட்சியிலே இருந்தால், கொஞ்சம் வசதியோடு வைத்துக் கொண்டிருக்கலாம் என்று சிலர் இருக்கிறார்கள். ஒரு உறுப்பினரே கூட இப்படிப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்டார் என்று பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அவர்மீது தொடரப்பட்ட வழக்கு என்னவாயிற்று என்று இதுவரை யாருக்கும் தெரியாது. அதைப்பற்றி நான் அதிகமாக உள்ளே சென்று வாதிட விரும்பவில்லை. ஆனால் அரசாங்கத்துடன் தொடர்பு இருக்குமானால், அவர்கள் பெத்தடினை சிறு புட்டியில் மட்டுமல்ல, பெரிய புட்டிகளில் தயாரிக்கப்பட்டால் அதையும் வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை தான் இப்போது இருக்கிறது. இன்னும் சில கலைஞர்கள் இதையே தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் ஒருவர்மீது ஒரு வழக்கைப் போட்டுவிட்டோம் என்று இதை ஒரு சாதனையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவித்திருப்பதே ஒரு வேதனையாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெத்தடின் போட்டுக் கொள்ளுகிறவர் உண்மையில் நோயாளியாக இருக்க வேண்டுமே தவிர தனக்கு மயக்க உணர்வு வர வேண்டும் என்று பெத்தடினைப் போட்டுக் கொள்கிறவர்கள் சமுதாயத்தில் அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு உயர்ந்த இடத்திலிருந்தாலும், கடுமையான முறையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விபத்துச் சிகிச்சை மற்றும் அவசர காலப் பணிகளுக்கான சிகிச்சை ஏற்பாடு என்ற அடிப்படையில் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஆனால் ஊரகப் பகுதிகளில் விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாகவும் பயனுள்ளதாகவும் சிகிச்சையளிக்கும் ஏற்பாட்டிற்காக 1979-80-ல் இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் கட்டமாக இதை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு

மாவட்டங்களில் செயல்படுத்த ரூபாய் 118.32 இலட்சம் செலவிடப்படும் என்ற தகவலையும் தந்திருக்கிறார்கள். முதற்கட்டமாக எங்கே இதைச் செயல்படுத்தப் போகிறார்கள் என்று பார்க்கிறபோது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பது எதிர்க்கட்சிக்காரர்களான எங்களுக்கு ஒரு சந்தேகத்தை உண்டாக்குகிறது. இந்த 4 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் இருப்பவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அந்த மாவட்டங்களில் இருக்கிற மக்களுக்கு விபத்து ஏற்பட்டால், அவர்களுக்கு இத்தகைய சிகிச்சை அளிக்கப்படக்கூடாதா? நான் சந்தேகப்படுகிறேன். ஆளுங்கட்சிக்கு எங்கெங்கே செல்வாக்கு இருக்கிறது என்று அரசாங்கம் நம்புகிறதோ அப்படிப்பட்ட மாவட்டங்களில் மட்டுமே இந்தத் திட்டத்தை அமுல்படுத்த விரும்புகிறார்கள். இதனால் மாநிலத்தின் மற்ற மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை வரும் 3 ஆண்டுகளில் விரிவுபடுத்தப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும் 'புரபோர்ஷனேட்டாக' இதை மாவட்டங்களுக்குப் பிரித்து—மதுரை மாவட்டத்தில் இரண்டு இடம், வடாற்காடு மாவட்டத்தில் 2 இடம், செங்கற்பட்டு மாவட்டத்திலே இரண்டு இடம் என்று பிரித்துக் கொடுத்தால்—மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் பரவலாக இத்தகைய சிகிச்சை மூலம் பயன் பெறுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மருத்துவக் கல்லூரி உயர்நிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக உயர்த்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போதுகூட இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்தை அவர்கள் பாராட்டினார்கள். நானும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் ஏதோ இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான், இந்தத் திட்டத்தை உருவாக்கியதைப்போல் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் வாசகம் அமைத்திருப்பது நியாயம்தானா என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் திட்டத்திற்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து முயற்சிகள் தொடங்கப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சென்னை மருத்துவக் கல்லூரியை உயர்நிலை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக உயர்த்தும் முயற்சி மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டது. அப்போது 'ஃபிசியாலஜி, அனாடமி' போன்ற துறைகள் 'அப்கிரேட்' செய்யப்பட்டன. மற்றும் சில பிரிவுகளையும் 'அப்கிரேட்' செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்கள் எப்படி

யும் சென்னை மருத்துவக் கல்லூரியை ஒரு 'போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷனாக' மாற்ற வேண்டும் என்ற பெரு முயற்சியை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்கள். அதைத் தொடர்ந்த இந்த அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறது. அந்த வகையில் அரசாங்கத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் கொள்கை விளக்கக் குறிப்பில் இதற்கு முன்னால் இருந்த அரசுகள் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் குறிப்பிட்டு பாராட்டுதல் தெரிவித்திருக்கிறாரா என்றால், இல்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கிற உணர்வு இருந்தாலும், வெளியே சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு ரூபாய் 32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். இந்த 32 லட்சம் ரூபாயைப் பயன்படுத்தி அனைத்துத் துறைகளையும் 'அப்கிரேட்' செய்து அடுத்த ஆண்டு முதல் அனைத்தும் நன்கு செயல்படும் என்று எதிர்பார்த்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அட்டவணையைப் பார்த்தேன். 1979-80 ஆம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரூபாய் 32 லட்சம் ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருந்தும் இந்த ஆண்டுக்கு ரூபாய் 1 லட்சம் மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அட்டவணை 8-ல் சொல்லப்பட்டிருக்கிறது. மீதி 31 லட்சம் ரூபாய் எப்போது செலவிடப்படும் என்பது பற்றிய எந்த விவரமும் இங்கே கொடுக்கப்படவில்லை.

அடுத்து 'ஸ்ட்ரோக் சென்டர்' துவக்கப்படுவதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்தில் இந்தக் கருவி தேவைதானா என்று விவாதிக்கப்பட்டு அதில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட கருத்துத் தெரிவித்தார் என்று பத்திரிகையில் படித்தேன். எந்த ஒரு கருவியும் சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்றால், அதை எத்தனை லட்சம் ரூபாய் செலவில் வாங்குவதானாலும் நான் பாராட்டுகிறேன். ஆனால் சென்னை போன்ற ஒரு இடத்தில் மட்டுமே இத்தகைய கருவிகளை வாங்கி வைப்பது என்பது எப்படிச் சரியாகும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். இந்த நிலைமை மாறி, மதுரை போன்ற பிற இடங்களிலும் இத்தகைய கருவிகளை வாங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதைப்பற்றி நான் கடந்த ஆண்டே இங்கே குறிப்பிட்டேன். மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதற்கு 'மெரிட்டை' மட்டும்தான் பார்க்கிறோம் என்று அரசாங்கத்தில்

ஒரு கருத்துத் தெரிவித்தார்கள். வேறு எதையும் பார்ப்பதில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பொதுக்கூட்டங்களிலே பேசுகிறார். ஆனால் நீதி மன்றத்திற்கு வந்தால், என்ன வர்தாடுகிறார்கள் என்றால் 'இந்த அரசு மெரிட்டை மட்டும் பார்ப்பதில்லை' 'அதர் ஆக்டிவிட்டிசை'-யும் பார்த்து, பிறகுதான் மாணவர்களைச் சேர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். முற்போக்குச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்றால், 160 மார்க்குக்குக் குறையாமல் வாங்கியவர்களுக்குத்தான் இடம் கொடுக்கப்படும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் 155-க்குக் குறையாமல் வாங்கியவர்களுக்குத்தான் மருத்துவக் கல்லூரியில் இடம் என்று சொன்னார்கள். நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோது, 160 மார்க்குக்குக் கீழே வாங்கியவர்களுக்கும் இந்த அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கொடுத்திருக்கிறது. அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள்? 'அதர் ஆக்டிவிடீஸ்' என்ற பெயரில் அந்த மாணவர் 'ஸ்போர்ட்ஸ் சர்டிபிகேட்' வைத்திருந்தார், அவர் என்.சி.சி. சர்ட்டிபிகேட் வைத்திருந்தார், அவர் கேள்வி நேரத்தில் ஒதுக்கப்பட்ட 75 மார்க்குகளுக்கு 40 மார்க் வாங்குமளவுக்கு மிகுந்த திறமைசாலியாக இருந்தார் என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லித்தான் நீதி மன்றத்திலே வாதாடினார்களே தவிர, மெரிட் அடிப்படையில் ஒதுக்கியதாகச் சொல்லவில்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்பது இந்த அரசாங்கத்தின் திட்டமாக இருக்கிறது.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, பல டாக்டர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் 3,000 க்கும் மேற்பட்ட டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதும், ஏன் நெருக்கடி கால நிலை நீங்கும்வரை, எம்.பி.பி.எஸ். படித்துத் தேறி ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் முடித்தவர்கள் டி.எம்.எஸ். அலுவலகத்தில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்து கொள்வார்கள். பதிவு செய்து கொண்டதன் சீனியாரிட்டி அடிப்படையில் அவர்களுக்கு இதுவரையிலும் வேலை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் திடீரென்று அரசாங்கத்தில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் ஒரு குழு போட்டு வேலையில்லாமல் இருக்கிற டாக்டர்களிடமிருந்து விண்ணப்பம் கோரினார்கள். விண்ணப்பம் செய்து கொள்ளும் டாக்டர்களுக்கு இந்தக் குழு வேலை அளிக்கும் என்று சொன்னார்கள். அந்தக் குழு தேர்ந்தெடுப்பவர்களை நியமிப்பது சரியா, தவறா என்பது வேறு விவகாரம், நான் அதைப்பற்றி இங்கே விவாதிக்க விரும்பவில்லை. ஆனால் நான் என்ன கேட்கிறேன் என்றால், அந்தக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை. இந்த அரசாங்கத்தால் வேலை கொடுக்க முடியவில்லை. காரணம் தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ

அவர்களுக்குத்தான் நிரந்தரமான வேலை தர முடியும். ஆக ஒரே நிருவாகத்தில் இரண்டு விதமான செலக்ஷன் எப்படி இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. எந்த ஆட்சியில் நாமெல்லாம் இருக்கிறோம் என்று உள்ளபடியே எனக்குப் புரியவில்லை. ஒரு மக்களாட்சியில் இப்படிப்பட்ட ஒரு இரட்டைக் கொள்கை எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. ஒரு குழு நியமித்து அதன்மூலம் டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றால், அதில் பல தவறுகள் நடக்க வாய்ப்பிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். கிராமப் புறங்களில் பிற்பட்ட பகுதிகளில் வேலை பார்க்க தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர்கள் மறுக்கிறார்கள். ஆகவே ஒரு குழு நியமித்து இந்தக் குழு தேர்ந்தெடுக்கும் டாக்டர்களை கிராமப்புறங்களுக்கு அனுப்பி அங்கே வேலை செய்யச் சொல்லலாம் என்று தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. எனவேதான் கிராமப்புறங்களில் வேலை செய்ய விருப்பமுள்ள டாக்டர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த முறை டாக்டர்கள்

(பிற்பகல் 12-10)

மத்தியில் ஊழலை உருவாக்குவதற்கும், இலஞ்ச லாவண்யங்களைப் பெருக்குவதற்கும் வித்திடும் என்ற குற்றச்சாட்டை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் ஏறக்குறைய ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு டாக்டரை உருவாக்கியதற்குப் பின்னாலே, டாக்டர்கள் கிராமப் பகுதிகளுக்குப் போகமாட்டோம் என்று சொல்வார்களேயானால், அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இந்த அரசாங்கத்தில் வேலை கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், எந்த டாக்டருக்கு அரசாங்கம் போடுகிற உத்தரவை மீறிச் செல்லக் கூடிய தைரியம் இருக்கும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஆனால் அதை எதற்காக அறிவித்திருக்கிறார்கள் என்றால், ஆளும் கட்சி நினைத்தால், அமைச்சர்கள் நினைத்தால், அதிகாரிகள் நினைத்தால், அவர்களுக்கு வேண்டியவர்கள் இந்த ஆண்டு தேர்வு பெற்றிருந்தாலும், இப்போது வேலை கொடுக்க முடியும் என்பதற்காகத்தான். இவர்களுடைய தயவைப் பெறாதவர்கள் 1957 ஆம் ஆண்டிலே தேர்வு பெற்றிருந்தாலும், வேலை கிடைக்காது என்ற நிலையை இந்த அரசாங்கம் மறைமுகமாகத் தெரிவிக்கிறது என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு தலைவர் அவர்கள் உறுப்பினர் அவர்களுக்கு அரை மணி நேரத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே அரை மணி நேரமாகப் பேசிக்

கொண்டிருக்கிறார்கள். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேச வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் எப்போது முடிக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : தெளிவாகச் சொல்லுகிறேன், நான் ஒரு மணிக்கு முடிக்கப் போகிறேன். இந்த அவையில் ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். ஒரு உறுப்பினருக்கு 45 நிமிடங்கள் தருகிறார்கள். எங்கள் கட்சியில் யாரும் பேசவில்லை, நான் மட்டும் பேசுகிறேன். நான் பேசி முடிக்க ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்டபோது, தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அவை முன்னவர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 12-30 மணிக்குள் முடித்தால் பரவாயில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் பேச ஆரம்பித்த நேரம் 11-50 தான். இன்னும் குறைந்தது 40 நிமிடங்களாவது தேவை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. பிறகு அவையை எப்போது முடிப்பது ? மீண்டும் எப்போது கூடுவது ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எதிர்க் கட்சிகளைப் புறக்கணிப்பதாக இருந்தால், நான் பேசாமலே இருக்கிறேன். எதிர்க் கட்சி என்ற அந்தஸ்து கொடுத்துவிட்டு, ஒரு மணி நேரம் என்று ஏற்கெனவே ஒத்துக்கொண்ட பிறகு, இப்போது இப்படிச் சொன்னால் எப்படி ? அலுவல் ஆய்வுக் குழுவிலேயே, வீராசாமி ஒன்றரை மணி நேரம் பேசுவார் என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 12-40 மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் 11-50 மணிக்குத்தான் ஆரம்பித்தேன். தவறாகக் குறித்து வைத்திருந்தால், அதற்கு நான் பொறுப்பல்ல.

இந்த நிர்வாகத்தின் நன்மையைக் கருதி இன்னும் பல்வேறு குற்றச்சாட்டுகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே எனக்கு மேலும் நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நேற்று, டிரக் கண்ட்ரோல் நிர்வாகத்தைப் பற்றி விளக்கமாகச் சொன்னார்கள். ஆகவே அதிலே போய் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசினால் அதிலே புரட்சிதான் இருக்கும். அவர் ஆட்சிக்கு வந்தவுடனே சென்னை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 ஏப்ரல் 18

நகரத்திலே பத்தாண்டுக் காலம், இருபதாண்டுக் காலம் தொடர்ந்து டாக்டர்கள் வேலை செய்கிறார்களே, அவர்கள் எல்லாம் கிராமங்களுக்குப் போக வேண்டாமா என்று கேட்டார். அப்போதே நாங்கள், முதலமைச்சர் விவரம் தெரியாமல் சொல்லுகிறார் என்று சொன்னபோது, எங்கள் மீது குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு அதை அமுல்படுத்த முடிந்ததா என்றால் இல்லை. ஆகவே இந்த அரசாங்கம் விவரங்களைப் புரிந்துகொள்ளுவதிலே அக்கறை இல்லாமல் இருக்கிறது. சில துறைகளில் நிபுணர்கள் இருப்பார்கள். நியூரோலாஜி ஸ்பெஷலிஸ்ட், செஸ்ட் கிளினிக் ஸ்பெஷலிஸ்ட் என்று இருப்பார்கள். இந்த மாதிரி ஸ்பெஷலிஸ்டாக இருப்பவர்கள், இருபதாண்டுகள் மட்டுமல்ல, தங்கள் வாழ்நாள் முழுவதும் இங்கேயேதான் இருப்பார்கள். ஏனென்றால் அவர்களை மாற்றக்கூடிய அளவுக்குச் சமமான போஸ்டுகள் வேறு இடங்களில் இல்லை. அந்த நிலைமையில் அவர்களை நாங்குனேரியிலா வைக்க முடியும்? ஆற்காட்டிலா புதிய போஸ்டுகளை உருவாக்க முடியும்? இதைப் புரிந்துகொள்ளாமல் பத்தாண்டுகள், இருபது ஆண்டுகளாக டாக்டர்கள் ஒரே இடத்திலே இருக்கிறார்கள், அவர்களை மாற்றப் போகிறோம் என்று சொல்லுவது எப்படிச் சரியாகும்? நல்ல வேளையாக நிர்வாகத்திற்கு வந்த பிறகாவது அதைப் புரிந்துகொண்டு இப்போது அந்தக் கொள்கையைக் கைவிட்டிருக்கிறார்கள் என்பதற்காகத் நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இதைப் போலவே ஒவ்வொரு திட்டத்தையும் அறிவிப்பதற்கு முன்னாலே அதில் உள்ள நிலைமைகளை உணர்வதில்லை. இந்த அரசாங்கம் திடீரென்று ஒரு முடிவை எடுத்தது. அரசாங்க மருத்துவ மனைகளில் பென்சிலின் ஊசியைப் போடக் கூடாது என்று முடிவு எடுத்தார்கள். ஏன் அப்படி திடீரென்று உத்தரவு போட்டார்கள்? இன்றைய தினம் லேடஸ்ட் சயன்ஸ் டெவலப்மென்டில் பென்சிலின் மருந்து இன்றியமையாத ஒன்று. இது யாருக்கும் தெரியாததல்ல. இதையெல்லாம் படித்த டைரக்டர் ஆஃப் மெடிக்கல் எஜுகேஷன் அவர்களும், ஹெல்த் சர்வீஸ் டைரக்டர் அவர்களும் ஏன் பென்சிலின் ஊசியைப் போடக் கூடாது என்று தடுக்கிறார்கள்? ஊசி போட்ட மருத்துவமனையில் இருந்த ஊசியில் தவறா? அல்லது அந்த மருந்தில் தவறா? இல்லை. ஊசியைப் போட்ட டாக்டரிடத்திலேதான் குறை. பென்சிலின் ஊசியைப் போடுவதற்கு முன்னால் நோயாளிக்கு ஆஸ்துமா இருக்கிறதா, ஸ்கின் டிசீஸ் இருக்கிறதா, அலர்ஜி இருக்கிறதா, என்று டெஸ்ட் பண்ண வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியில்லாமல் டாக்டர்கள் தங்களுடைய அதிகமான வேலைப் பளுவின் காரணமாகவோ, வருகின்ற கும்பலின் காரணமாகவோ டெஸ்ட் செய்யாமல் ஊசியைப் போட்டுவிட்டால், நோயாளி இறந்துவிடுகிறார். ஒருவர் இறந்து

79 ஏப்ரல் 18]

ட்டார் என்பதற்காக அந்தப் பென்சிலின் ஊசியை யாருக்குமே போடக் டாது என்று அரசாங்கம் முடிவு எடுப்பதன் காரணமாக, பல நோய்களைத் டுப்பதற்கு இந்த அரசாங்கம் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்ற குற்றச் ாட்டை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக் றேன்.

டிரக் கன்ட்ரோல் துறையின் நிர்வாகத்தைப்பற்றி நான் விளக்கமாகச் சொல்லாவிட்டாலும், எஸ்டிமேட்ஸ் கமிட்டி சொன்ன பரிந்துரையை இந்த அரசாங்கம் பரிசிலனை செய்து பார்க்க வேண்டுமென்று மட்டும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளும் கட்சியினர் நிர்வாகத்தில் உள்ள ஊழலை ஒழிப்போம் என்றும், நிர்வாகத்திலே குறைகளே இருக்காது என்றும், நிர்வாகத்தில் தலையீடுகளே இருக்காது என்றும் மேடையிலும், சட்ட மன்றங்களிலும் பேசுகிறார்கள். ஆனால் நடைமுறையில் நிர்வாகத்தில் எந்த அளவுக்குத் தலையீடுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் உத்தம புத்திரன் அவர்களைப்பற்றி, சட்டமன்றப் பேரவையிலே சொல்லப்பட்டது. அதற்கு அமைச்சர் அவர்களும் விளக்கம் தந்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஒருவருக்கொருவர் சவால் விட்டுக் கொண்டார்கள் என்பது பத்திரிகைகளில் செய்தியாக வந்தது, அந்த விஷயத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

கோயம்புத்தூரில் டாக்டர் கே. கோவிந்தராஜுலு, அசிஸ்டென்ட் முனிசிபல் ஹெல்த் ஆபீசர் பல ஊழல்களைச் செய்கிறார் என்று அரசாங்கத்திற்கு முறையீடுகள் வருகின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதிகாரிகளின் பெயர்களைச் சொல்லாமல் அவர்களுடைய டெசிக்னேஷனை மட்டும் உறுப்பினர் சொல்ல வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அங்கே அந்த டெசிக்னேஷனில் 4 பேர் இருக்கிறார்கள். அதற்காகத்தான் பெயரைச் சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அப்படியென்றால், தலைவர் அவர்களுடைய முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அமைச்சர் அவர்களும் அதற்குரிய பதிலைச் சொல்லத் தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் சொல்லலாம். திடீரென்று ஒரு பிரச்சினையைக் கிளப்புவது சரியல்ல. அந்த அதிகாரியும் இங்கு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாமல், அதனுடைய விவரமும்

அமைச்சர் அவர்களுக்கும் தெரியாமல் இருந்தால், பதில் எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே அதிகாரியின் பெயரைச் சொல்லாமல், அதிகாரி என்று மட்டும் சொல்லலாம். பெயர் சொல்லுவதாக இருந்தால் முதலிலே அமைச்சரிடத்திலே காட்டி, அதற்கு அமைச்சர் பதில் சொல்லத் தயாரான நிலையிலேதான் சொல்ல வேண்டும். அதுதான் முறை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்கள் முறையைச் சொல்லுகிறார்கள். நானும் முறையை அறிந்தவன். தலைவரிடத்திலே அனுமதியைப் பெற்றுத்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முறையை அறிந்திருப்பவரே அப்படிச் செய்யக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் சொன்னால், மாண்புமிகு உறுப்பினருக்கு அனுமதி தரத் தயாராக இருக்கிறேன். ஒருவருடைய பெயரைச் சொன்ன பிறகு, அவர் அந்தத் தவறைச் செய்யாமல் இருந்தால், அவருக்குக் கெட்ட பெயர் வரும். அவர் தன்னைக் காத்துக்கொள்ள இங்கே வழியில்லை. விவரம் தெரியாததால் அமைச்சர் அவர்களும் பதிலைச் சொல்லக் கஷ்டப்படுவார்கள். ஆகவே அதிகாரியின் பெயரைச் சொல்லுவது சரியல்ல.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த அதிகாரியை மாற்றுங்கள் என்று டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் அவர்கள், நெம்பர் ஆர். 285409/நு1/பிஎச்/77-6, நாள் 30—5—1978-ல் ஒரு கம்யூனிகேஷன் அனுப்புகிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: உறுப்பினர் அவர்கள் கடித எண்களை மெதுவாகப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஜீ.ஓ. எண் 863, எச். அண்டு எஃப்., நாள் 25—5—1978-ல் குறிப்பிட்டுள்ள அதிகாரியை மாற்றுங்கள் என்று டைரக்டர் ஆஃப் ஹெல்த் அவர்கள் தன்னுடைய கடித ரெஃபரென்ஸ் நெம்பர் ஆர். 285409/நு1/பிஎச்/77-6, நாள் 30—5—1978 கம்யூனிகேஷன் அனுப்பியிருக்கிறார். அவரைத் தஞ்சாவூருக்கு மாற்ற கம்யூனிகேஷன் அனுப்பியிருக்கிறார். அதற்குப் பிறகு என்ன நடைபெற்றதென்று தெரியவில்லை. திடீரென்று 7—10—1978 அன்று மறுபடியும் ஏன் அவரை மாற்றவில்லையென்று அரசாங்கம் கேள்வியைக் கேட்கிறது. அந்த ரெஃபரென்ஸ் நெம்பர் 285409/பிஎச்/77-11, நாள் 7—10—1978. அதற்குப் பிறகு மறுபடியும் அவரை மாற்றும்படி உத்தரவு போடுகிறார்கள். அவர் மீது ஊழல் புகார் இருக்கிறது, அவர் தவறு செய்திருக்கிறார், அவர் எட்டாண்டு காலமாக அதே

இடத்திலே இருக்கிறார், ஆகவே அவரை மாற்ற வேண்டுமென்று முதலில் சொல்லப்பட்டது. அவரை மாற்ற உத்தரவும் போடப்பட்டது. ஆனால் மாற்றப்படவில்லை. அந்த மாற்றல் உத்தரவை ரத்து செய்யுங்கள் என்று சொல்லி, "requesting the transfer order to be kept in abeyance" உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதற்கிடையிலே மறுபடியும் அரசாங்கத்திற்கு ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அவரை டிரான்ஸ்பர் செய்வதுதான் சரி, அவர் போய்த்தான் ஆகவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர் இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருக்கிறார். அங்கேயிருக்கக் கூடிய அதிகாரிகள் அவரை ரிலீவ் செய்யவில்லை. அரசாங்கம் மீண்டும் வலியுறுத்திய நேரத்தில் அவர் லீவ் போட்டுவிட்டார். நான்

(பிற்பகல் 12-20)

கேட்கிறேன். ஒரு அரசாங்கம் ஒரு உத்தரவைப் போடுகின்றது. அதுவே மாற்றப்படுவானேன்? பிறகு அதை அபேயன்சில் ஏன் வைக்க வேண்டும்? இதற்கு என்று மறுபடியும் வேறு ஒரு உத்தரவு போடுவானேன்? அதற்குப் பிறகு அந்த டாக்டரை லீவிலே போகச் சொல்வானேன்? இது எல்லாம் முறையா? இது சமுதாயத்திற்கு நல்லதல்ல.

ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைபற்றிச் சில கோரிக்கைகள் இருக்கின்றன. நான் கூட சிறைச்சாலையிலே இருந்தேன். சிறைச்சாலையிலேகூட ஒருவருக்கு ரூபாய் 2.50 வெஜிட்டேரியன் உணவுக்காக என்று ஒதுக்குகிறார்கள். நான்-வெஜிட்டேரியன் உணவுக்கு ரூ. 3.10 என்று ஒதுக்குகிறார்கள். ஆனால் பரிதாபம் இந்த நாட்டிலே சிறைச்சாலையைவிடக் கொடுமை இங்கே இருக்கிறது. ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் உள்ள நோயாளிக்குக் கொடுக்கப்படும் உணவுக்கான தொகை ரூ. 1.50 தான். இந்தக் காலத்திலே இது நியாயமா? ரூபாய் 1.50 ஒருவருக்கு மூன்று வேளைக்கு என்று ஒதுக்கினால் அதை வைத்து என்ன வாங்க முடியும்? என்ன சாப்பிட முடியும்? பால் கொடுத்தால் பழமில்லை. பழம் கொடுத்தால் பால் இருக்காது. இரண்டும் கொடுத்துவிட்டால், சாப்பாடு இருக்காது. இப்படி ஒரு நோயாளிக்குக் கொடுத்தால், எப்படி அந்த நோயாளி நோயிலிருந்து மீள முடியும் என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மலேரியா ஊழியர்கள் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பல ஆண்டுகளாகப் பதவி உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதே கேட்டார்கள். அந்த ஆட்சி மாற்றப்பட்டுவிட்டது. துப்புரவு செய்பவர்களுக்கு என்று அவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டுமென்றும் சுற்றுப் பயண அலவன்ஸ் என்று மற்றவர்களுக்குக்

கொடுப்பதுபோல தங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும் கேட்கிறார்கள். ரூபாய் 40 கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படிக் கொடுக்க முடியவில்லை என்றால், 10 ரூபாயாவது சைக்கிள் அட்வான்ஸாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு அரசு உதவி மருத்துவ சங்கம் சென்னை மாவட்ட மகாநாடு 1978 அன்று நடந்தது. அந்த மாநாட்டில் நல்ல விளக்கங்களைப் போட்டு ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அமைச்சருக்கும் இந்தப் பத்திரிகை வந்திருக்கும். மருத்துவ அதிகாரிகள், டி.எம்.ஓ. போன்றவர்கள் எல்லாம் அதில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அதுவும் ஆளுங்கட்சிக்காரர்களுக்கு வேண்டியவர்கள்தான் என்று நான் நினைக்கிறேன். அதிலே 'என் கேள்விக்கு என்ன பதில்', 'நீதிக்குத் தலை வணங்கு' என்றெல்லாம் தலைப்புக்கள் கொடுத்து சில வேண்டுகோள்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்கிறார்கள். 'மருத்துவத்துறையிலே சலீம் என்ற டாக்டருக்கு அளிக்கப்பட்ட சிவில் சர்ஜன் பதவியும், மகப்பேறு துறையில் சிவில் சர்ஜன் பதவி பட்ட மேற்படிப்பு பெற்று ஒரு ஆண்டு அனுபவம்கூடப் பெறாத டாக்டர் ருக்மணி சவரிராஜனுக்கு வழங்கப்பட்டிருப்பது அநீதியில்லையா?'' என்று கேட்டிருக்கிறார்கள். வீராசாமி சொன்னால், அதிலே வேண்டுமானால், நியாயம் இல்லாமல் இருக்கலாம். எதிர்க்கட்சிக்காரன் சொல்கின்றானே என்று வேண்டுமானால், அலட்சியப்படுத்தலாம்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ''கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அண்மையில் மருத்துவத் துறையில், சலீம் என்ற டாக்டருக்கு அளிக்கப்பட்ட சிவில் சர்ஜன் பதவியும், மகப்பேறு துறையில் சிவில் சர்ஜன் பதவி பட்ட மேற்படி பெற்று ஒரு ஆண்டு அனுபவம்கூடப் பெறாத டாக்டர் ருக்மணி சவரிராஜனுக்கு வழங்கப்பட்டிருப்பது அநீதியில்லையா' என்று கேட்கிறார்கள். இதைக் கேட்பவர்கள் யார்? டாக்டர்கள்தான் இந்த அநீதியைக் கேட்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து பதில் வந்ததா என்றால் இல்லை. எங்கே இருப்பவர்கள் சொன்னார்கள்? அனுபவம் வாய்ந்தவர்கள், அந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள், சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன்களாக இருக்கக்கூடியவர்கள், இவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு அரசாங்கம் தங்களுக்கு வேண்டியவர்களை, இந்த அரசுக்கு வேண்டியவர்களை நியமித்திருக்கிறது. இதை இந்த சமுதாயம் நிச்சயமாக எதிர்காலத்திலே தாங்கிக்கொள்ளாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இது முறையானதுதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

'ஆளசரி முறை எந்த நேரத்திலும் நீக்கப்படவேண்டும் என்று திட்டங்களைத் தீட்டி வைத்துள்ள நிலையில், முறைகேடாக, அவசர அவசரமாக இந்த நியமனங்கள் நடைபெற்றிருப்பது, முதல்வரின் சம்மதத்தின் பேரில்தானா? அல்லது மூடி மறைத்தா? இந்த நியமனங்களில் அவசரம் காட்டவேண்டிய பின்னணி என்ன?' என்று கேட்டிருக்கிறார்கள். இந்த நியமனங்களில் இப்படி இருக்கவேண்டிய அவசியம் என்ன? முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமலே இப்படி உத்தரவிட்டிருக்கிறார்களா? குறைந்தபட்சம் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குப் போயிருக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல், அவர்களுடைய ஒப்புதல் இல்லாமலே இப்படி நியமனங்கள் போட முடியுமா? ஏதாவது ஒரு கட்டத்திலாவது அவருக்குத் தெரிந்திருக்க முடியும். எந்தக் கட்டத்திலாவது தெரிந்த பின்னும் இந்த நியமனங்கள் நடைபெற்று வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : கவுரவ டாக்டர்களைப் பொறுத்து அமைச்சரவை கூடி முடிவு செய்யப்படுகிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இது புதுவிதமாக இருக்கிறது. இந்த விஷயத்தையெல்லாம் அமைச்சரவையிலே வைத்துப் பேசமாட்டார்கள். இதை அமைச்சரவைக்கு வைக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். நியமனங்கள் வரும். டிரான்ஸ்பர் ஆக இருந்தால் அதுவும் வரும். அவைகள் அமைச்சர்கள் பார்வைக்கு வரும். நாங்களும் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் தான். எங்களுக்கும் அந்த முறைகள் தெரியும். அமைச்சரவைக்கு முன் வைக்கின்ற விஷயங்கள் என்னென்ன என்பதுபற்றியும், எது எது விவாதிக்கப்படுவது என்பதும் தெரியும். அது எல்லாம் தெரியாமல் இல்லை. பாலிசி மேட்டர்கள் வந்தால், அமைச்சரவையிலே வைத்துப் பேச வேண்டும். அதைப் பற்றியெல்லாம் இங்கே விவரிக்க நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கவுரவ டாக்டர்களைப் பற்றி, மருத்துவர்களைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கான முடிவை அமைச்சரவைதான் செய்யும். மருத்துவத் துறையில் எப்படி எப்படி நடைமுறை என்பதுபற்றி எனக்கும் புரியாமல் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : நான் கவுரவ டாக்டர்களைப் பற்றிச் சொல்லவில்லை. சலீம் என்பவரைப் பற்றித்தான் சொல்லுங்கள் என்று சொல்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல்தான் இந்த நியமனம்

நடைபெற்றிருக்கிறது என்று நான் கருதவில்லை. இது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிந்துதான் நடைபெற்றிருக்க வேண்டும். அப்படி இல்லை என்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதற்குத் துணிவில்லை.

அடுத்து; 'டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் பதவி 1½ வருட காலமாக, முறையான நியமனமில்லாமல், பல்வேறு சிவில் சர்ஜன்கள், அசிஸ்டண்ட் சர்ஜன்கள் பதவிகள் பல மாதங்களாக நிரப்பப்படாமல் காலியாக இருக்கும் பொழுது, ஆனரரி டாக்டர்கள் பதவிகள் அவசர அவசரமாக நிரப்பப் படுகின்றனவே? காரணம் என்ன?' என்று அவர்கள் கேட்கிறார்கள். எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் பதவிக்கு நியமனம் செய்வதில் இந்த அரசுக்கு என்ன சங்கடம் இருக்கிறது? அரசினுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் இல்லையா? அரசுக்கு நல்ல விளக்கம் சொல்லக்கூடியவர்கள் இல்லையா? அவர்களுக்கு நல்ல விளக்கங்களை எடுத்துச் சொல்லக்கூடியவர்கள், தகுதி படைத்தவர்கள், இந்த இலாகாவிலே இல்லாமல் இல்லை. உங்களுக்குப் பிடித்தவர்கள் யாராவது இருந்தால், அவர்களையாவது அங்கே நியமிக்கலாம். ஏன் அந்த நியமனம் செய்யப்படாமல் இருக்கிறது? டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் பதவி 1½ ஆண்டுக்காலமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. இதைப்பற்றி நாட்டிலே படித்தவர்கள் கேள்விப்படும்போது, சிரிக்க மாட்டார்களா? இது என்ன? இது அரசினுடைய சக்தியற்ற தன்மையைக் குறிக்காதா? இப்படிப்பட்ட குறைகளைக்கூட தீர்க்க முடியாதா? ஒரு 'ஹெட் ஆப் தி டிப்பார்ட்மெண்ட்' பதவி இந்த 1½ ஆண்டுக் காலமாக நிரப்பப்படாமல் இருக்கிறது என்று சொன்னால், இந்த அமைச்சரவை நன்கு செயல்படுகிறதா என்ற சந்தேகம் தான் ஏற்படுகிறது.

டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் இன் சார்ஜ் போட்டால்கூட, அவர்களுக்கு 8 மருத்துவக் கல்லூரிகளைப் பார்வையிடுவதற்குத்தான் நேரம் இருக்கும். அவர்கள் செல்லவேண்டிய இன்ஸ்பெக்ஷன் ஆகியவற்றிற்கு அவருக்கு நேரம் இருக்காது. எனவேதான் ஏற்கெனவே ஒன்றாக இருந்த இலாகாவை இரண்டாகப் பிரித்தார்கள். அதற்குப் பிறகு மூன்றாகவும் பிரித்தார்கள். இன்றைக்கு ஒரு டைரக்டர் அவர்கள் செயல்பட்டு விதிமுறைகளையெல்லாம் உருவாக்கவேண்டிய நேரத்திலே 1½ ஆண்டுக்காலமாக இந்த போஸ்ட் பில்லப் செய்யப்படாமல் இருக்கின்றது என்பது நியாயமா?

தமிழ் நாட்டில் குடும்பநலத் திட்டம் என்று போட்ட நாள் முதல் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற நேரத்திலே கட்டாயப்படுத்தப்படவில்லை என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். பதில் சொல்லும் போது அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்லுகிறேன்.

ஊராட்சி ஒன்றியம் கடையம், நாள் 29—1—1979, ந.க.சி. 9073/78. பேப்பரைப் பார்க்க வேண்டாம். இன்னும் சொல்வதென்றால் நிறைய இருக்கின்றன. அதற்கு நேரம் இல்லை. ஆகவே சுருக்கமாகவே சொல்லி முடிக்கிறேன். "இயக்கம் ஆரம்பித்து 10 திங்களுக்கு மேல் ஆகியும், நாளது தேதி வரை நீர் ஒரு நபரைக் கூட அறுவைச் சிகிச்சையில் ஈடுபடுத்தவில்லை. தேசியப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடவில்லை. உண்மையாக உம்முடைய கடமையைச் செய்யவில்லை என்று அது காண்பிக்கின்றது. இதற்காக உம் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது?" என்று அந்தக் குறிப்பில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கட்டாயம் இல்லை என்று சொல்லுகிறார்கள். குடும்ப நலத் திட்டம் தேவையில்லையா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அந்தக் குறிப்பு யாருக்கு அனுப்பப்பட்டது?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 'ஒரிஜினல் ஆர்டர்' என் கையில் இருக்கிறது. அதையே அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அந்த ஆர்டர் யாருக்கு அனுப்பப் பட்டது என்று கேட்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அந்த ஊராட்சி ஒன்றியத்திலே பணியாற்றக்கூடிய அந்த ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஒரிஜனலில் பி.டி.ஓ. கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இதை ரோனியோ போட்டு வைத்திருக்கிறார்கள். டைப் அடித்துக்கூட கொடுக்கப்பட்டதாக இல்லை. அந்தக் குறிப்பின் நம்பர் கூட கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிப் பரிசீலனை செய்துகூட தெரிந்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. தலைவரவர்களே, குடும்பக்

(பிற்பகல் 12-30)

கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடில்லை. இன்னும் தீவிரமாகச் செய்யுங்கள், ஒத்துக்கொள்கிறேன். மத்திய அரசு கொடுத்த இலக்கைக்கூட இன்னும் எட்டவில்லை. 15—3—1979-லே ஒரு இலக்கு சொல்லுகிறார்கள், 31—3—1979-க்குள் முடித்துவிடுவோமென்று சொல்லுகிறார்கள். அப்படி முடிக்க முடியாது. இன்றையதினம் இந்தத் திட்டத்திற்கு அதிகமாக அக்கறை காட்டப்படவில்லை. கட்டாயப்படுத்துவது தவறு என்று இந்த அரசாங்கம் பத்தாம் பசலிக் கொள்கையை வைத்திருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பிரிவினரை—ஆசிரியர்களை இதில் ஈடுபடுத்தக்கூடாதென்று சொல்லுங்கள், ஒத்துக்கொள்கிறேன். பேமிலி பிளானிங் ஊழியர்களை இதில்

கட்டாயப்படுத்தினால் என்ன தவறு? எதற்காக அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம்? மக்கள் தொகை இந்த நாட்டிலே குறைந்தால்தான், போடுகின்ற திட்டங்கள் பலன் தரும். கட்டாயப்படுத்த மாட்டோமென்ற பத்தாம் பசலிக் கொள்கையைச் சொல்லிவிட்டு, இன்னொரு பக்கத்தில் கண்ட ஊழியர்களையும் இதில் ஈடுபடுங்களென்று சொன்னால், அது முறையல்ல. அது மட்டுமல்ல. ஒரு செய்தியைச் சொல்லி, அதன் காரணமாக மத்திய அரசு, தமிழ் நாட்டிற்குக் கொடுக்கும் கிராண்ட் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தோடு சொல்கிறேன். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கம் செய்கிறது! எனக்குக் கிடைத்துள்ள தகவல், கடந்த இரண்டு ஆண்டுகளில் குடும்பக் கட்டுப்பாட்டில் நிறைய முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதுதான். ஆபரேஷன் செய்யாமலேயே, செய்ததாகச் சொல்லி, பணம் வாங்கப்பட்டிருக்கிறது. பல தனியார் மருத்துவ மனைகள் சர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டு, பணம் பெற்றிருக்கிறார்கள். உடனே ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். சுருக்கமாகச் சொல்கிறேன். சர்க்கார் சாமக்குளம் என்ற ஊரிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தில் நடந்த ஊழல்கள்—கோபி என்ற கிருஷ்ணனுடைய மகன், பொள்ளாச்சியில் இருக்கிறான். கருப்பராயன் பாளையம், சர்க்கார் சாமக்குளம். அதைப்போல கிருஷ்ணன், தகப்பனார் பெயர் அழகிரிசாமி நாயுடு; காளிபாளையம், சர்க்கார் சாமக்குளம். கருப்புசாமி, தகப்பனார் பெயர் அய்யாசாமித் தேவர், தென்னூர், போத்தனூர், கொடுத்த விலாசம் இடிகரை, சர்க்கார் சாமக்குளம். பொன்னுசாமி முதலியார், பெருமாள் கோவில் வீதி, கோவை. பாலன், தகப்பனார் பெயர் வேலாயுதம், திருச்சூர், கேரளா, கொடுத்த விலாசம் வெள்ளையன்குறிச்சி, சர்க்கார் சாமக்குளம். ஏற்கெனவே இவர்களெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கள். மறுமுறை இந்த அரசாங்கத்தை ஏமாற்றி, 100 ரூபாய் பெற்றுக்கொள்ள, குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். அது பற்றிய புகார் மனு எனக்கு வரவில்லை. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களுக்கு எழுதி, அதன் நகலை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதைப் பார்க்காமலிருந்தால், அதைப் பார்க்க வேண்டுமென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட முறைகேடுகள் நடக்கின்றன. இது நம்முடைய மாநிலத்திற்குக் கெட்ட பெயரை உண்டாக்கும். இதைக் குறைக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யும் பணி, தனியார் மருத்துவ மனைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கோபால பிள்ளை ஜவஹர் மருத்துவ மனை, நாகர்கோவில்; உல்லியம் மருத்துவ மனை, நாகர்கோவில்; லதா மருத்துவ மனை, கோட்டார்; ஜெயகர் மருத்துவ மனை, நாகர்கோவில் என்று

மருத்துவ மனைகளில் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது. ஆனால் 90 சதவிகிதம் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யாமலேயே, 'பி கேஸ் & பேப்பர் கேஸ்' என்ற முறையில் நடந்திருக்கிறது. 90 சதவிகிதத்திற்குமேல் போலியாக—பேப்பர் கேஸ்—நடந்திருக்கிறது. ஒரு பேப்பர் கேஸ் போட்ட டாக்டருக்கு ரூபாய் 100 என்றும், நபர்களை அழைத்துச் செல்லாமல் பெயரை மட்டும் படிவத்தில் பூர்த்தி செய்து போலிக் கையெழுத்திட்டு டாக்டரிடம் படிவத்துடன் கொடுத்தால், ஒரு கேசுக்கு 100 ரூபாய் கொடுத்துவிட வேண்டுமென்றும் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதன்படி சுமார் 10 லட்சம் ரூபாய், அரசாங்கப் பணம், இந்தத் துறையிலே விரயமாக்கப் பட்டிருக்கிறது என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. அமைச்சரவர்கள் இதைத் தீர விசாரித்து, இல்லையென்று சொன்னால், நான் திருத்திக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆதாரம் கேட்டால், அதையும் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படி அறுவைச் சிகிச்சை செய்யும்போது, சில விதிமுறைகளை வைத்திருக்கிறோம். கூன், குருடு, செவிடு ஆகியோருக்குச் செய்யக்கூடாது, சமுதாயத்தின் நன்மையைக் கருதி அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது, அவர்களுக்கு ஒரு அவயவமில்லை, போதாத குறைக்கு இதையும் செய்யக்கூடாதென்று விலக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் நான் வருத்தத்தோடு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பைத்தியக்காரன், 6 ஆண்டுகளாகப் பைத்தியம், திருமணம் ஆகாதவன், அவனுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் ஒவ்வொருவரும் இத்தனை கேஸ்கள் கொண்டுவர வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுவதால், அவனுக்கு அப்படிச் செய்திருக்கிறார்கள். உத்தண்டி என்ற பைத்தியம் பிடித்தவன், அவனுடைய பெரியம்மா வீட்டிற்குச் சென்றிருக்கிறான். அங்கே சிலம்பாயி என்ற அவனுடைய மைத்துனி, அவனைப் பயன்படுத்தி, திண்டுக்கல் ஒன்றியத்தைச் சேர்ந்த தாடிக்கொம்பு என்ற ஊரிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அவனுக்கு டாக்டர் ஆர். சொக்கையன் என்பவரால் 21—1—1979 அன்று குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு ஆள் கிடைக்கா விட்டால், இந்தத் திட்டத்தை வேண்டுமானால் நிறுத்த வேண்டுமே தவிர, பைத்தியக்காரர்களைக் கொண்டு போய், ஆடு மாடுகளை அறுப்பதுபோல, அறுவைச் சிகிச்சை செய்வது நல்லதல்ல. இந்தச் சமுதாயத்திலே ஊனமுற்று இருந்த ஒருவரை, இன்னமும் திருமணம் ஆகாதவரை பயமுறுத்தி, குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்வது முறைதானா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1979 எப்ரல் 18

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் 11-50-லிருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே 12-50-க்கு அவர்கள் முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவர்கள், 45 நிமிட நேரமாவது ஒதுக்க வேண்டுமென்று கருதுகிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இதையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொடுக்கிறேன்.

(சம்பந்தப்பட்ட பேப்பர்களை, அமைச்சருக்கு துணைத் தலைவர் மூலமாக அளித்தார்.) 1

இன்றையதினம் இந்த அரசாங்கத்தினுடைய பணம், எப்படியெல்லாம் விரயமாகிறதென்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவர்கள், குறிப்பாக சூப்பரின்டென்டென்ட் அல்லது டீன் போன்றவர்கள் அந்தந்த மருத்துவ மனைக்கு வேண்டிய மருத்துவப் பொருள்களை வாங்குவதில் பல லட்சக் கணக்கான ரூபாய் ஊழல் நடக்கிறது. அதைப்பற்றி விளக்கமாக அமைச்சரவர்களுக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. அதே தகவல் என்னிடத்திலும் இருக்கிறது. அதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு மருத்துவ மனைக்கு எதாவது பொருள் தேவைப்படுமானால், அந்த ஆண்டுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் வாங்க வேண்டுமென்பது ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை. ஆனால் சென்னை பொது மருத்துவ மனையில் சிலிகான் டியூபிங்ஸ்—மூன்று ஆண்டுகளுக்குத் தேவையான சிலிகான் டியூபிங்ஸ் 8 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய்க்கு, அக்டோபர் 1977 முதல் எப்ரல் 1979 வரையான காலத்திற்கு வாங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சி வந்த பிறகுதான் அது நடந்திருக்கிறது. அது இறக்குமதி செய்கின்ற பொருள். அதிலே வேடிக்கை என்னவென்றால், இறக்குமதி செய்கின்ற அதிகாரம் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால், போகஸ் கம்பெனிகள் என்று சொல்லப்படுகிற 'கமல், கிஷன், காலியா குரூப்' போன்ற, வருமான வரி செலுத்தாத பதிவு செய்யாத கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியிலிருந்து 10 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப் பட்டிருக்கிறது. சிலிகான் டியூபிங்ஸ் ரூ. 8.51 லட்சம்; டெக்ரான் கிராப்ட்ஸ் பார் ஹார்ட் ஆபரேஷன் ரூ. 1.12 லட்சம்; ஹார்ட் வால்வ்ஸ் 0.54 லட்சம்; ஸ்பான்ஹாஸ்டன் ரூ. 0.41 லட்சம் என்று வாங்கப்பட்டிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், மருந்துகளை வாங்கும்போது, அதன் ஸிவைகளைப்பற்றி டெண்டரிலே குறிப்பிடப்படவில்லை. பிறகு, அவர்கள் மேலும் இந்த அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டுமென்று கருதி, 'டாக்ஸ் சபர்ட்' என்று சொல்லி, 1 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் க்ளெயிம் செய்தார்கள். அதில்

1979 எப்ரல் 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஒரு பகுதியை, டி.எம்.ஈ. சாங்ஷன் செய்து, கொடுத்தாகிவிட்டது. உடனே, அமைச்சரவர்களுக்கு இது குறித்துத் தகவல் வருகிறது. முறைகேடாக பணத்தைக் கொடுக்கிறார்களே என்று ஒருவர் கேட்கிறார். உடனே அமைச்சரவர்கள் விவரம் கேட்கிறார். அவசரம் அவசரமாக இலாகாவில் உள்ளவர்களை மாற்றுகிறார்கள்.

"This has been corrected by the Lay-Secretary, Clerk and Chief Accounts Officer at D.M.E.'s Office and Section Superintendent as Transport and Service charges which is not also permissible". எதாவது எலிஜிபிளிடி உண்டா என்றால் இல்லை. கிளெயிம் செய்து விட்டதைக் கொடுத்த பிறகு, இன்னும் கொடுக்க வேண்டிய பாக்கி இருக்கிற தென்று. 'டாக்ஸ் சபர்ட்' என்ற ஹெட்டுக்குப் பதிலாக, வேறு ஹெட்டைக் கண்டுபிடித்து, டிரான்ஸ்போர்ட் அன்ட் சர்வீஸ் சார்ஜஸ் என்று போட்டு, 1 லட்சத்து 12 ஆயிரம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த

(பிற்பகல் 12-49)

கம்பெனிக்கு இது எலிஜிபிளா என்றால், அதுதான் இல்லை. 'நான்-அவெயிலபிலிட்டி இன் சிரிஞ்ச்' பற்றி ஒன்றைச் சொல்கிறேன். அது இல்லாததால் இருந்த இடங்களிலிருந்து பிச்சை எடுத்தார்கள். இது வெட்கப்பட வேண்டிய விஷயம். சில இடங்களில் குறிப்பாக ஜி.எச்.-ல் அந்தமாதிரி நிலைமை இருந்தது. அதுமட்டுமல்ல. இந்த அரசு 1—10—1978 முதல் 31—3—1979 வரை ஒரு டென்டர் 'கால் பார்' செய்தது. "ஆர்டர்"
in half yearly tender for period from 1st October 1978 to 31st March 1979 to one Kamal Surgicals—a bogus company but no supply". அவர்கள் டெண்டர் எடுத்தார்களே தவிர, அதை சப்ளை செய்ய வில்லை. அவர்களுக்கு இதே போகஸ் தொழில். முதலில் கம்பெனி பெயரால் டெண்டர் எடுப்பார்கள். பிறகு சப்ளை செய்ய மாட்டார்கள். அதன் பிறகு லோக்கல் சப்ளை என்கிற முறையில் இவர்களுடைய சிஸ்டர் கம்பெனி அவர்களை அணுகும். விலை கூட கேட்பார்கள். அவசரத்தில் வாங்க வேண்டுமென்றால், விலை அதிகம் கொடுக்க வேண்டி வரும். அப்படியே அதிக விலை கொடுத்து வாங்குவார்கள். "Tender purchased at higher rate company who are the distributors". Whether recovery done from Kamal Surgicals என்று கேட்டால் இல்லை. நஷ்டத்தை அவர்களிடம் கேட்டார்களா என்றால் அதுதான் இல்லை. இதுதான் இன்றைய நிலை. அதுமாதிரி இன்டிரா ட்ரிப்ஸ் 2 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரம் வரை தேவை. மூன்று ஆயிரம் தேவை என்று எழுதி அனுப்பினால், பிறகு அது 30 ஆயிரம் ஆக மாறிவிடுகிறது. முப்பது ஆயிரம் வாங்கியும் விடுகிறார்கள். இன்ஸ்ட்ருமென்ட் வாங்க 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது என்று

சொன்னால், இப்படிப்பட்ட இன்ஸ்ட்ருமென்டுகளை 12 இலட்சம் ரூபாய்க்கும் வாங்கித் தீர்த்து விட்டார்கள். அய்ந்து ஆண்டு காலத்திலே வாங்க வேண்டியதை ஒரே ஆண்டில் வாங்கிவிட்டார்கள். ஆங்காங்கே குறிப்பாக ஜி.எச்.-ல் முறைகேடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன Davadix suitures கருவிகளுக்கு bulk orders for about 1 1|2 lakhs கொடுத்திருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரிந்து நடைபெறுகிறதா? மாண்புமிகு அமைச்சர்வர்களுக்குத் தெரிந்து நடைபெறுகிறதா? அப்படி இல்லையென்றால், என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்கப்போகிறது? அதிகாரிகள் அரசாங்கத்திற்குத் தெரியாமல் பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு சாதனங்களை வாங்கக் கூடிய துணிவு எப்படி வந்தது? அதுவும் முறைகேடாக வாங்கும் துணிவு எப்படி வந்தது? போகஸ் கம்பெனி என்கிற வகையில் பிளாக் லிஸ்ட்-ல் சேர்க்கப்பட்ட கம்பெனியிலிருந்து வாங்கக் கூடிய துணிவு எப்படி வந்தது? எப்படி போகஸ் கம்பெனியிலிருந்து வாங்க முன் வந்தார்கள்?

அடுத்தபடியாக, ஸ்தான்லிகாஸ் என்று சொல்லுகின்ற முட்டு ஒடிந்து விட்டால் கட்டுப்போட வாங்குகின்ற கருவி "Normal width is 90 centimetres at about 80 paise per metre" 90 பைசாவுக்கு 90 சென்டிமீட்டர் அகலம் என்று இருக்க அதை 80 பைசாவுக்கு வாங்கி சப்ளை செய்ததைப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. அந்த ஹோல்சேல் வியாபாரிக்கு ஒரு பைசாதான் கிடைக்கும். இராஜபாளையத்திலிருந்து ஒரு ஹோல்சேல் வியாபாரி 90 சென்டிமீட்டரை எப்படி இவர்கள் 80 பைசாவுக்கு சப்ளை செய்கிறார்கள் என்று சொல்லி அதிகாரிகளிடத்தில் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் 1 மணி நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு அமைச்சருக்குக் கூட 45 நிமிடங்கள் தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் முடியுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: சில முக்கியமான விஷயங்களைப் பற்றிச் சொல்லி முடியும் வரை துணைத் தலைவரவர்கள் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அனுமதிக்க இயலாது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இன்னும் 15 நிமிடத்திற்குள் முடித்து விடுகிறேன். அதுவரை துணைத் தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் காலை நடவடிக்கைகளை பிற்பகல் 1-30 மணிக்குள் முடிக்க வேண்டும். உறுப்பினர் ஒத்துழைக்க வேண்டும். ஒரு மணி நேரத்திற்குள் முடிப்பதாகச் சொன்னார்கள். ஒரு மணி நேரம் ஆகிவிட்டது என்பதை நினைவு படுத்துகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தயவுசெய்து இன்னும் 15 நிமிடங்கள் கொடுங்கள். பேசுவதற்கு என்னிடம் நிறைய முக்கியமான விவரங்கள் இருக்கின்றன. விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. கால அவகாசம் இடம் தராது. ஆதலால் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இந்த ஆண்டு எம்.டி., எம்.எஸ்., போன்ற தேர்வுகள் நடைபெறவில்லை. போரன்சிக் மெடிசின் என்கிற பிரிவுக்கு இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏராளமான பேர் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். நான் தவறான நோக்கத்தில், விரோதமான எண்ணத்தில் சொல்வதாக யாரும் தவறாக நினைக்கக் கூடாது. நடந்த சம்பவத்தைத் தான் சொல்கிறேன். இரண்டு மலையாளிகளுக்கு அந்த இரண்டு இடங்களையும் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, பயிற்சி பெற்று, டாக்டர்களாக இருப்பவர்களுக்கு தமிழ் நாட்டிலேயுள்ள இரண்டு இடங்களும் கிடையாது என்று இந்த அரசாங்கம் முடிவு செய்யுமானால் தமிழ் சமுதாயத்திற்கு இந்த அரசாங்கம் செய்கின்ற கொடுமை இதை விட வேறு எதுவும் இருக்க முடியாது.

(திரு. நல்லசிவன் இருக்கையை விட்டு எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் ஏற்கெனவே பேசுவதற்கு நேரம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து உட்காருங்கள் The hon. Member Thiru Veerasami is not yielding. The hon. Member Thiru Nallasivan may please resume his seat.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த இலாகா இன்னும் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தில் அவசர நிலை காலத்தில் டிரக்டர் ஜெனரல் ஆப் ஹெல்த் சர்வீசஸ் என்கிற ஒரு பதவி ஏற்படுத்தப்பட்டு, அது சுகாதாரச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவசர காலத்தில் முடிவெடுத்து அந்த அதிகாரி பணியைச் செம்மையாக ஆற்றினார். இப்பொழுது என்ன காரணமோ அவர் அவ்வளவு அதிகமாக அதில் அக்கறை செலுத்தவில்லை. எனக்குக் கிடைத்த தகவலை இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். டி.எம்.ஈ. ஆக இருப்பவரிடம் எனக்கு தனிப்பட்ட எந்த விரோதமும் இல்லை. அவர் அந்தப் பதவிக்கு முயற்சிக்கிறார் என்பது பற்றியும் எனக்குத் தெரியாது. அவர் முதலமைச்சரின் காலில் விழுந்ததாகக் கூட பத்திரிகையில் பார்த்தேன். அது அவரது சொந்த விருப்பம். தனிப்பட்ட

ஒரு பெரிய பதவியில் இருப்பவர், ஒரு ஹெட் ஆப் டிப்பார்ட்மெண்டாக இருப்பவர் முதலமைச்சரின் காலில் அல்லது அமைச்சர்களுடைய காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவதில் தவறு இல்லை. ஆனாலும் 'பிலிம் டிவிஷன்' அதைப் படம் எடுத்துக் காட்டும்போது, அதைப் பார்க்கின்ற மக்கள் மன்றம் என்ன நினைக்கும்? அதிகாரிகளைப்பற்றி மக்கள் மனதில் என்ன தோன்றும் என்பதைப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல. இப்பொழுது அரசாங்கம் ஒரு விசித்திரமான உத்தரவைப் போட்டிருக்கிறது. இப்பொழுது ஹெல்த் டிப்பார்ட்மெண்டில் ஜாயின்ட் செக்ரட்டரியாக இருப்பவர் முன்பு கலைஞரிடம் பிரைவேட் செக்ரட்டரியாக இருந்தவர். இப்பொழுது கலைஞர் மீது வழக்கு ஒன்றைத் தொடுத்திருக்கிறார்கள். அது நியாயமா இல்லையா என்பது நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அவரைக் கூட குற்றவாளி ஆக்கியதாகவும் பிறகு அவர் அப்ரூவர் ஆனார் என்றும் கூட செய்தி வந்தது. அவர் எப்படி சாட்சி சொல்லப்போகிறார் என்பது பற்றியும் கூட எங்களுக்குக் கவலையில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொறுப்பிலிருந்த ஒரு நல்ல அதிகாரி இப்படி அப்ரூவராக மாறிவிட்டாரே என்பதுபற்றி எங்களுக்கெல்லாம் வருத்தம் தான். இப்பொழுது அவரை சுகாதாரத் துறையில் இணைச் செயலாளராகப் போட்டிருக்கிறார்கள். ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் செயலாளர் ஊரில் இல்லாத நேரத்தில், அவர் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அரசாணை நிலை எண் 1830, நாள் 19—10—1978. அதில் என்ன போட்டிருக்கிறார் என்றால், டீச்சிங் சைடில் உள்ளவர்களுக்கெல்லாம் ரிட்டையரிங் ஏஜ் 58 ஆக உயர்த்தப் படுகிறது என்று போட்டிருக்கிறார். அதிலே அவர் "On a pur with the department of Technical Education" என்ற ஒரு வார்த்தையை அவர் போட்டிருக்கிறார். அதற்கு முன்னதாக அந்தத் துறையில் எல்லாப் பிரிவினரும் 55 வயதில் தான் ரிட்டையர் ஆகிக் கொண்டிருந்தார்கள். அவருடைய உத்தரவின் மூலம் அது 58 ஆக உயர்த்தப் பட்டது. டி.எம்.ஈ.-ல் உள்ளவர்களுக்கு ரிட்டயராகிற வயது 58. ஒரே அமைச்சர். ஒரே துறை. எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதில் என்ன வேறுபாடு இருக்க முடியும்? டீச்சிங் சைட் என்பதற்கு என்ன டெபனிசன் என்றால், புரபசர், ரீடர் அல்லது டியூட்டர் என்று இருக்க வேண்டும். டீச்சர் என்கிற பெயரால் கேசுவால்டி பிரிவில் ஒருவர் பணியாற்றுகிறார் என்றால், அவருக்கு ஓய்வு பெறும் வயது 58. அதே நேரத்தில் சிவில் அசிஸ்டென்ட் சர்ஜென் ஒருவர், அவருடைய பெயர் பெருமாள், அவர் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலுள்ள பீடியாட்ரிக் பிரிவில் பணியாற்றுகிறார். அவர் செய்வது டீச்சிங் பணி. ஆனால் அவருக்கு ரிட்டையர் ஆகின்ற வயது 55. அவர் ரிட்டையர் ஆவதற்கு முன்பு டி.எம்.ஈ.

வர்களிடம் இதைப்பற்றி முறையிட்டார். அவரை உடனே ரீடர் என்று டீச்சிங் சைடுக்கு மாற்றி அவரது ஓய்வு பெறும் வயதை 58 ஆக்கி அவரை இப்பொழுது மறுபடியும் கே. கே. நகரிலுள்ள ஆஸ்பத்திரியில் போட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த உத்தரவில் அப்படிப்பட்ட ஒரு வரியைச் சேர்த்திருப்பதன் மூலம் டி.எம்.ஈ.-க்கும் 58 வயது தான் ரிட்டையராகிற வயது என்கிற மாதிரி போட்டிருக்கிறார்கள். கே. கே. நகரில் உள்ள ஆஸ்பத்திரியில் டீச்சிங் போஸ்ட் கிடையாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். டி.எம்.ஈ. நினைத்தால் டியூட்டர் என்று போட்டு, அவரை ஏதாவது ஆஸ்பத்திரிக்கு அனுப்பினால், அவர் ஓய்வுபெற வேண்டிய வயது 58. ஆனால், உண்மையிலே ஒருவர் டீச்சிங் போஸ்டில் இல்லாவிட்டாலும், அவருடைய பதவியின் பெயரை மாற்றின உடனே அவருடைய ஓய்வுபெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்ந்துவிடுகிறது.

(மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மணியடித்தார்.)

இன்னும் பத்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இப்படி ஒரு அநியாயம் நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கின்றன. இவைகள் எல்லாம் களையப்பட வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சீக்கிரமாக முடிக்கவேண்டும்.

(பிற்பகல் 12-50)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு 3¼ லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. இந்த ஆண்டு, இந்த ஆட்சியிலே 14 லட்சம் ரூபாய் செலவு செய்ய ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அரசாங்கம் நிதி ஒதுக்குகின்றபோது, டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்விசஸ் அல்லது யார் ஹெட் ஆஃப் தி டிப்பார்ட்மென்டோ அவர்களுக்கு ஒதுக்க வேண்டும். அது தான் முறை. ஆனால் இந்த விசித்திரமான அரசாங்கம் ஜி. நாமதேவன் என்ற தனி நபர் ஒருவருக்கு "Sanction is recorded to Thiru G. Namadevan for putting up exhibition stalls, etc." என்று சொல்லி சென்னையிலே நடைபெற்ற டூரிஸ்ட் பொருட்காட்சிக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்குகிறார்கள். ஒரு இலாகாவுக்கு ஒதுக்கத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, ஒரு தனி இன்டிவிஜுவலுக்கு அந்த இன்டிவிஜுவல் பேரிலே ஒதுக்க அதிகாரம் கிடையாது. ஏன் இந்த அதிகாரிகள் இப்படி உத்தரவு போடுகிறார்கள்? ஒன்று மட்டும் நான் சொல்லிக்கொள்வேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல தவறுகளைச் செய்தார் என்று நெருக்கடி காலத்தின்போது சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஒரு அதிகாரியை இன்றையதினம் அப்ரூவராக நீங்கள் மாற்றி, அவரை இந்தத் துறைக்கு உயர் அதிகாரியாகப் போட்டு 'அவர் மூலம்

இப்படிப்பட்ட செயல்களைச் செய்தால், எதிர்காலத்தில் வரும் இன்னொரு ஆட்சிக்கு அவர் அப்ரூவராக மாற வேண்டிய நிலைமைகள் ஏற்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மிகவும் அநாகரிகமான செயல். இன்னும் நிறைய விஷயங்களை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினாலும், நேரம் இல்லாத காரணத்தால், ஒரு சிலவற்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய யுனிவர்சிட்டியிலேயிருந்து படித்துவிட்டுப் போகின்ற மாணவர்களுக்குத்தான் உலகத்திலே எங்கு சென்றாலும் மதிப்பும மரியாதையும் இருந்தது. இந்த யுனிவர்சிட்டியிலே எம்.பி.பி.எஸ். படிக்கின்ற மாணவர்கள் உலகத்திலே மதிக்கப்படுகிறார்கள். அந்த மதிப்புக்கு, அந்த மரியாதைக்கு இந்த ஆட்சியிலே எந்த அளவுக்குக் களங்கம் கற்பிக்கப் படுகிறது, ஏற்படுத்தப்படுகிறது என்பதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எம்.பி.பி.எஸ். முடித்து ஹவுஸ் சர்ஜென்ஸி படிக்கும் ஒரு மாணவி அவருடைய மாமனாருக்குக் கடிதம் எழுதுகிறார் என்னவென்றால் . . .

"I am working here in Stanley without taking rest at home. Do you know what I am doing here? Whenever I like, probably twice a week, I go with my daddy and come back with him in car after taking biscuits and tea. My aim is to get a House Surgeoncy Completion Certificate without working at this crucial time."

இந்த அரசாங்கத்தின் மதிப்பைப் பெற்ற ஒருவர், கடந்த ஆண்டு எம்.பி.பி.எஸ். தேர்வு நடந்தபோது மாணவர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட குழுவின் செக்ரட்டரியாகப் பணியாற்றிய ஒருவர், அப்பேர்ப்பட்டவரின் மகள் ஹவுஸ் சர்ஜென்ஸி செய்கின்ற நேரத்தில் "நான என்ன செய்கிறேன் தெரியுமா? தந்தையுடன் போகிறேன், காரிலே போகிறேன், என்ன வேலை செய்கிறேன் தெரியுமா? பிஸ்கெட்டும் டீயும் சாப்பிடுகிறேன். என்னுடைய நோக்கம் எல்லாம் சர்ட்டிபிக்கேட் வாங்குவது தான்" என்று ஒரு கடிதம் தன்னுடைய மாமனாருக்கு எழுதும் நிலைமை இருந்தால், இந்த நிர்வாகம் எவ்வளவு சீர்கேடடைந்திருக்கிறது, இந்த நிர்வாகம் எந்த அளவுக்கு கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன தேவை?

இன்னொரு நிகழ்ச்சியையும் நான் குறிப்பிடுகிறேன். டாக்டர் டி. ஜெகதீசன், புரஃபசர் ஆஃப் யூராலஜியாக ஸ்டான்லி மருத்துவமனையில் பணியாற்றுகிறார். அவர் தன்னுடைய லெட்டர் பேடில் சம்பந்திக்குக் கடிதம்

எழுதுகிறார். என்ன எழுதுகின்றார், மருமகனுக்கு கடந்த ஆண்டு எம்.எஸ்.-க்கு இடம் கிடைக்கவில்லை—இந்தக் கடிதத்தில் டி.எம்.கே.-ன் பெயரையும் இணைத்திருக்கிறார், அந்த விவகாரத்திற்குள் நான் போக வில்லை—அதற்குக் காரணம் கடந்த ஆண்டு எனக்குச் செல்வாக்கு இல்லை. இந்த அரசாங்கம் இந்த ஆண்டு புதிய செல்வாக்கை ஏற்படுத்தித் தந்தது. ஏனென்றால் எம்.பி.பி.எஸ். செலக்ஷன் கமிட்டியிலே செக்ரட்டரியாக நியமிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும், ஆகவே, அமைச்சருக்கும் அவருக்கும் இடையில் தொடர்பு ஏற்படுகிறது, இந்த ஆண்டு வாங்க முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டிலே அமைச்சர் அவர்கள் "தங்களுக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை" என்று மறுத்தால் நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக ஒரு விசாரணை வைக்க வேண்டும், இல்லையென்றால், இப்படி கடிதம் எழுதியவர் மீது, அமைச்சர் அவர்களை சம்பந்தப்படுத்தியிருப்பதால், அந்த டாக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் கடிதத்திலே எழுதுகிறார்—

"My last time effort to get a seat for him" — that is, for his son-in-law—" in Madurai gave me this impression. Besides, I have tried for a political recommendation through Health Minister this time. So, I am sure to succeed in securing a seat for Ms. at Madras, I am ready to spend about Rs. 5,000 for th's".

இப்படி கடிதம் எழுதுகிறார். நான் கேட்கிறேன், ஒரு அரசாங்கத்திலே பணியாற்றக்கூடியவர், ப்ரொபசராகப் பணியாற்றக்கூடிய ஒருவர், தன்னுடைய சம்பந்திக்குக் கடிதம் எழுதி, "அமைச்சர் அவர்களை எனக்குத் தெரியும், பொலிடிக்கல் ரெகமென்டேஷன் அவர் மூலமாக இடம் பெறுகிறது, இதற்காக ஐயாயிரம் ரூபாய் செலவாகும்" என்று சம்பந்திக்கு எழுதினால் இதைவிட இந்த ஆட்சியிலே ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன, நிர்வாகம் சீர்கெட்டுப்போய்விட்டது, நிர்வாகத்திலே தலையீடுகள் அதிகமாகிவிட்டன என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அந்த புரபசர் அவர்களின் பெயர் என்ன?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: டாக்டர் டி. ஜெகதீசன், புரபசர் ஆஃப் யூராலஜி. நான், துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தக் கடிதத்தைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையில் பெயரைச் சொல்லக்கூடாது என்று மரபு இருக்கிறது. உறுப்பினரும் பெயரைச் சொல்லி, பிறகு அமைச்சரும் அந்தப் பெயரைக் கேட்பது நல்லதல்ல.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்தக் கடிதத்தை அவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொடுக்கிறேன். அமைச்சர் அவர்கள் பார்வைக்கு வைத்ததற்குப் பின்னாலே என்னிடம் இந்தக் கடிதத்தைத் திருப்பித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி மருத்துவத் துறை சமுதாயத்திலே ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்காமல், ஊழல்கள், சீர்கேடுகள், தலையீடுகள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப் போயிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்றைபதினம் எவ்வளவோ நல்ல முயற்சிகளை எடுக்கிறார்கள். ஆனால் இப்படி ஒரு ஆரோக்கியமற்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, நான் மிகவும் வேதனையடைகிறேன். நான் இவற்றைக் குற்றச்சாட்டுகளாகக்கூடச் சொல்லவில்லை, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட குற்றங்கள், தவறுகள், சீர்கேடுகள் நடக்காமல், இந்த சமுதாயத்திற்கு நல்ல பணியாற்ற, நோயற்ற சமுதாயத்தை ஏற்படுத்த இந்த இலாக்கா செம்மையாக நடைபெற வேண்டும், அதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு இந்தத் துறை இன்னும் நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்பதற்காக மிகுந்த அக்கறையோடு, பல்வேறு நல்ல யோசனைகளையும், கருத்துக்களையும் இந்தத் துறை வலிவு பெறும் வகையிலேயும், பொலிவு பெறும் வகையிலேயும் தந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் முதலில் என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். முதலில் இந்தத் துறையினுடைய பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இந்திய மருத்துவத் துறையில், குறிப்பாக சித்த மருத்துவத்திற்கு எந்த அளவிற்கு இந்த அரசு இதற்கு முன்னாலே இருந்த அரசு ஒதுக்கிய தொகையை விட மிக அதிகமான அளவுக்கு பணத்தை ஒதுக்கியிருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள். அந்தப் பாராட்டுதலுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் பல்வேறு யோசனைகளையும் அவர்கள் தெரிவித்தார்கள். மஞ்சள் காமாலை நோய்க்கு கீழாநெல்லி மருந்து இருப்பதைப்போல கோவையிலை, ஆமணக்கு போன்ற செடிகளிலிருந்து அதற்கான மருந்தை எடுக்க முடியும் என்று எடுத்துச்சொல்லி பல்வேறு வழிவகைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசு, இடையிலே

சித்த மருத்துவத்துக்கு ஏற்பட்ட தொய்வுக்கு என்ன காரணம் என்பதையெல்லாம் எடுத்துச்சொல்லி, சித்த மருத்துவத்திற்கென்று தனியாக ஒரு பிரிவு வேண்டும் என்று மத்திய அரசோடு வாதாடிக்கொண்டிருக்கிறது என்பதையும், அந்த முயற்சியிலே நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு உரிய மூலிகைப் பண்ணையை நிர்வகிக்கும் பொறுப்பை வேளாண்மைத் துறையிடம் ஒப்படைத்தால், நல்ல பலன் ஏற்படும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தற்போது நாம் மேலும் 5 மூலிகைப் பண்ணைகளைத் துவங்க இருக்கின்றோம். ஆகவே, இந்த மூலிகைப் பண்ணைகளுக்கென்றே தனியாக ஒரு வாரியம், மூலிகை வாரியம் என்று அமைத்து, அதன் நிர்வாகப் பொறுப்பை வேளாண்மைத் துறையிலே நல்ல பயிற்சி பெற்ற ஒருவரிடம் ஒப்படைத்து இந்தத் துறையை நல்லமுறையில் நலம்பெறச் செய்ய வழிவகைகளைச் செய்ய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இன்னொன்றையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது இந்திய மருத்துவத் துறையிலும், சித்த மருத்துவத் துறையிலும் தேவைப்படுகிற மருந்துகளைத் தற்போது 'இன்காக்ஸ்' என்ற சென்னையிலுள்ள நிறுவனம் ஒன்றுமட்டும் தயாரிக்கிறது என்றும் அந்த நிறுவனம் தயாரிக்கும் மொத்த மருந்து, நமது மாநிலத்தின் தேவையில் பாதியைக்கூட பூர்த்தி செய்யவில்லை என்றும், எனவே அதனை விரிவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். சித்த மருத்துவத்துறையில் இந்த ஆட்சி மிகுந்த அக்கறை கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, அந்த நிறுவனத்தில் ஒரே ஒரு கொதி கலன் மட்டும் செயல்பட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றி அங்கே இன்னொரு புதிய கொதிகலனையும் பயன்படுத்துகிற வகையில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இன்காக்ஸ் நிறுவனம் சித்த மருத்துவத்திற்கு மட்டும்தான் பயன்படுகிறது என்றில்லாமல், யுனானி, ஆயுர்வேதம் போன்ற துறைகளிலும் தேவைப்படும் அநேக மருந்துகளைத் தயாரிக்கும் வகையில் வழிவகை செய்திருக்கிறது. அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் உள்ள மருந்து தயாரிக்கும் பிரிவில் 'மெக்கனைசேஷன்' என்னும் இயந்திர முறையில் இந்திய மருத்துவத்திற்குத் தேவையான மருந்துகளையும் தயாரிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு யுனானி மருத்துவத்திற்காகத் தனிக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கான வழிவகையையும் செய்திருக்கிறோம். நேற்றைய தினம் பேசிய உறுப்பினர்கள் யுனானி மருத்துவம் பயில மாணவர்கள் முன்வர மறுக்கிறார்கள் என்று சொல்வது தவறு என்று சுட்டிக்காட்டினார்கள். மாணவர்கள் அப்படி முன்வராததற்குக் காரணம் யுனானி மருத்துவப்படிப்பு உருது மொழியிலும், ஆயுர்வேத மருத்துவப்படிப்பு சமஸ்கிருதத்திலும் இருப்பதால்தான் என்று சொன்னார்கள். எனவே இந்தக் காரணம் கருதியே யுனானி, ஆயுர்வேத மருத்துவப் படிப்பிற்கான அனைத்தையும் தமிழ் மொழியில் மொழி பெயர்க்க இந்த அரசு வழிவகை செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், நமக்குப் பாரம்பரைச் சொத்தாக இருக்கும் சித்த மருத்துவத்தைப்பற்றியும் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கவும் வெளிநாடுகளிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வருகிறவர்களும் இதை உணர்ந்துகொள்ளத் தக்க வகையிலும், இந்தத் துறையிலுள்ள இன்றியமையாத சக்திகளைப் புரிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, ஆண்டொன்றுக்கு 14,000 ரூபாய் மதிப்புள்ள மருந்துதானே தரப்படுகிறது, இது போதுமா என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 14,000 பெறுமானமுள்ள மருந்து மட்டுமே கொடுக்கப்படுகிறது என்பது சரியில்லை. ஆண்டொன்றுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 14,000 மதிப்புள்ள மருந்துடன், அங்கே நடமாடும் மருத்துவக் குழு இருக்கிற நிலையில் மேலும் ரூ. 15,000 மதிப்புள்ள மருந்துகளும் வழங்கப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் அங்கே ஆரம்ப சுகாதார நிலையங்களோடு இணைக்கப்பட்ட துணை நிலையங்களுக்கு, நிலையம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ. 800 மதிப்புள்ள மருந்து என்ற அடிப்படையில் 8 நிலையங்களுக்காக ரூ. 6,400 மதிப்புள்ள மருந்தும் வழங்கப்படுகிறது. ஆக, ஆண்டொன்றுக்கு அந்த மருத்துவமனை ரூ. 35,400 பெறுமானமுள்ள மருந்துகளைப் பெற்றுவருகிறது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், பலநோக்கு சுகாதாரத் திட்டம் தற்போது செங்கற்பட்டு, சேலம், தென்னாற்காடு, மதுரை, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே அங்கேயும் அதிகமான மருந்து கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை வேறு பல மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த

வகையில் அரசும் அந்தத் திட்டத்தை ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவு படுத்துகிற செயலைச் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

காஞ்சிபுரத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பெயரால் உருவாக்கப்பட்ட புற்றுநோய் மருத்துவமனை பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே ரூ. 40 லட்சம் செலவில் சென்னையில் வாங்கி வைக்கப் பட்டுள்ள Scanner சாதனம் சென்னையில் இருப்பவர்களுக்கு மட்டும் தானே பயன்படும், கிராமங்களில் உள்ள மக்களுக்கு எப்படிப் பயன்படும் என்று கேட்டார்கள். அந்தச் சாதனத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே சுட்டிக்காட்டியிருப்பதோடு, அதை எல்லா மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகளிலும் அமைக்க வேண்டு மென்ற கருத்தையும் கூறியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலும், இப்படிப்பட்ட சாதனங்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் விருப்பமாகும். தற்போது அதை சென்னையில் உள்ள பொது மருத்துவ மனையில் மட்டும் வைத்திருப்பதற்குக் காரணம், சென்னைப் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகிறவர்களில் 60 விழுக்காடுக்கும் மேற்பட்டவர்கள் கிராமங்களிலிருந்து வந்து மருத்துவ உதவி பெறுகிறவர்களாவார்கள். மிக விலையுயர்ந்த இந்த மருத்துவ சாதனத்தை இந்தியாவிலேயே முதன்முதலாகப் பெறுகிற மாநிலமே நமது தமிழகம்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வீராசாமி அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களும் பேசுகிறபோது, அதிகமான அளவுக்கு விபத்துக்கள் ஏற்படுவதையும், அத்தகைய விபத்துக்களில் தலையில் அடிபட்டு பலர் இறந்து போவதைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் வாங்கப்பட இருக்கிற இந்த Scanner (Hitachi) என்ற சாதனம் தலையில் அடிபட்டவர்களை உடனடியாகப் படம் பிடித்து தேவையான சிகிச்சை செய்யும் அளவுக்கு அவர்களை மரணத்தின் கோரப்பிடியிலிருந்து காப்பாற்ற உதவக்கூடிய சாதனமாகும். அத்தகைய இயந்திரத்தை வெளிநாடுகளிலிருந்து தான் நாம் தற்போது வாங்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இயந்திரத்தை நாம் வாங்கி அது எப்படி செயல்படுகிறது என்று உணர்ந்தால் தான், பிறகு அதை நமது நாட்டிலேயே செய்யக்கூடிய நிலைமை உருவாகும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். 'மானிட்டர்' என்ற ஒருவகைக் கருவிகூட ஒரு காலத்தில் வெளிநாட்டிலிருந்துதான் இங்கே வரவழைக்கப் பட்டது. ஆனால் இன்றையதினம் அத்தகைய 'மானிடர்களை' இங்கேயே செய்யும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. முதலில் இது போன்ற

இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டு, அவை எப்படி செயல்படுகின்றன என்று புரிந்துகொண்டு இன்றையதினம் அவைகளை இங்கேயே உருவாக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்றிலிருந்து பலவற்றை நாம் பெருக்க முடியும் என்பதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்து, பல்வேறு மாவட்டங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவ மனைகளிலும் சில முக்கியமான கருவிகள் இல்லை என்று குறை கூறினார்கள். யூராலஜி துறையில் டையாலிசிஸ் எக்விப்மெண்ட் இல்லை என்று கூறினார்கள். அதைப் போலவே 'டிரான்ஸ்பிளாண்டேஷன் ஆப் கிட்னிஸ்' செய்வதற்கான சாதனங்கள் இல்லையென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அன்னை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடந்த போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, மருத்துவத் துறைக்கான மானியக் கோரிக்கை வரும்போது, மருத்துவத் துறை அமைச்சரிடம் இதைப்பற்றிக் கேளுங்கள், அவர் அதற்கு ஒப்புக்கொண்டால், அடுத்த ஆண்டு அதற்கு நிதி ஒதுக்க வழிவகை செய்கிறேன் என்று உத்தரவாதம் அளித்தார்கள் என்றெல்லாம்கூட குறிப்பிட்டார்கள். அதனடிப்படையில் இந்த அவையில் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப் பட்டது. இன்றையதினம் நியூராலஜி துறையில் தலையில் ஏற்படுகிற காயங்களைக் கண்டுபிடிக்க உடனடியாகப் படம்பிடித்து சாவிலிருந்து மக்களைக் காப்பாற்ற ஸ்கேனர் என்ற எக்விப்மெண்ட் எப்படி வாங்கப் பட்டிருக்கிறதோ அதைப்போல கிட்னி பெயிலியூர் ஆகும்போது டிரான்ஸ் பிளாண்டேஷன் ஆப் கிட்னிஸ்க்கு வழிவகை செய்து நோயாளிகளை மரணத்திலிருந்து காப்பாற்றும் நிலையை அடுத்த ஆண்டு முதல் இந்தத் துறை நிச்சயமாக உருவாக்கும் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் அவர்கள் பேசும்போது, சித்த மருத்துவ முறைகளைப்பற்றிக் குறிப்பிட்டதோடு, யுனானி மருத்துவ முறையின் மூலம் தனக்கிருக்கிற அனுபவத்தையும் எடுத்துச் சொன்னார்கள். தனக்கு வந்த மஞ்சள் காமாலை நோயை 3 நாட்களில் 3 வேளை யுனானி மருந்தோடு குணப்படுத்தப்பட்டதையும் அந்த முறை பரிசோதனையின் மூலம் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்கள். அப்படிப் பட்ட மருந்துகள் எங்கே எந்தத் துறையில் இருந்தாலும், அவைகளை வெளிக்கொணர்ந்து மக்களுக்குப் பயன்படும் வகையில் புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

'லியூகோமியா' என்று ரத்தத்தில் ஏற்படுகிற புற்று நோய்க்கும், லியூகோடெர்மா' என்று சொல்லப்படுகிற உடம்பில் உருவாகும் வெள்ளைப் டர் நோய்க்கும் மருந்திருக்கிறது; ஆங்கில மருத்துவ முறையில் ருந்தில்லை. ஆனால், இண்டிஜீனஸ் சிஸ்டம் என்று சொல்லுகிற மருத்துவ முறையில் இதற்கு மருந்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட மருந்துகள் எந்த முறையில் இருந்தாலும்—துறையைப்பற்றிய குறுகிய நோக்கமில்லாமல்—மக்களுக்கு அது நிவாரணம் தரும் என்றால், அவற்றை வெளிக் கொணர்ந்து மக்கள் அதன் மூலம் பயன்பெறச் செய்வதற்கு இந்த அரசு தயங்காது. அதற்கான வழிவகைகளைச் செய்வதில் எந்தவிதமான தொய்வும் இருக்காது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

பல மருத்துவமனைகளில் சுகாதார வசதிகள் இல்லையென்று எடுத்துச் சொன்னார்கள். இது குறித்து நான் ஒன்றை மிகுந்த வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மருத்துவ மனைகளில் நோயாளியாக இருக்கிறவர்கள் நூறு பேர் என்றால், அவர்களைப் பார்க்க வருகிறவர்கள் ஆயிரம் பேர்களாக இருக்கிறார்கள். அவர்களை உள்ளே வரக்கூடாது என்று தடுத்தால், அதனால் ஏற்படுகிற பிரச்சினைகள் ஒன்றல்ல, இரண்டல்ல, பல பிரச்சினைகள். பல மருத்துவமனைகளில் நோயாளிகளைப் பார்க்க வருகிறவர்கள், குடும்பம் குடும்பமாக வருகிறார்கள். அதுவும் சாதாரணமாக வராமல் கட்டுச் சோற்றை எடுத்துக்கொண்டு வந்து நோயாளிகளுக்கு எதிரிலேயே உட்கார்ந்துகொண்டு, ஏதோ பிக்னிக்கில் சென்று சாப்பிடுவதைப் போல, அதை உண்ணுகிறார்கள்; தங்களுடைய குழந்தைகளுக்கும் ஊட்டி விடுகிறார்கள். அவர்களைக் கேட்டால், வெகு தூரத்திலிருந்து வந்து விட்டோம். தங்கிவிட்டுத்தான் போக வேண்டுமென்று பிடிவாதமாகச் சொல்லுகிற நிலையையும் பார்க்கிறோம். ஆகவே பொதுமக்கள் ஒத்துழைப் பார்களேயானால், நிச்சயமாக மருத்துவமனைகளிலே நல்ல சுகாதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், மிக நல்ல முறையிலே உள்ள ஜப்லோக் மருத்துவமனையைப் போல தமிழகத்திலேயுள்ள அத்தனை மருத்துவ மனைகளையும் மாற்ற அரசு தயங்காது என்பதை இன்றைக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பல்வேறு மருத்துவமனைகளில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறதென்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதற்குப் பின்னாலே, நம்முடைய

தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிற அண்ணன் திரு. இராகவானந்தம் அவர்களிடம் அதை எடுத்துச் சொல்லி அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, பல்வேறு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் எந்தவித தட்டுத் தடங்கலுமின்றி தண்ணீர் தர குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஆய்வு செய்ய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை இங்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவருவது மருந்துவாழ் மலையைப் பற்றி. அவருடைய மாவட்டம் கடைசியில் இருக்கிறது என்பதற்காக அதைப் புறக்கணித்துவிடக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். மருத்துவத் துறைக்குப் பயன் படுகிறதென்றால், அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, விபத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற இரண்டு பிரிவுகளை 113 இலட்சம் ரூபாயில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்தியிருப்பதைக் குறிப்பிட்டு, இதைப் பிரித்து பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தியிருக்கலாம் என்று சொல்லி, இது மாற்றாந் தாய் மனப்பான்மையல்லவா என்று கேட்டிருக் கிறார்கள். செய்யப்படுவதை கொஞ்சம் கொஞ்சமாக ஆனால் முறையாகச் செய்ய வேண்டும். செய்வதைச் செவ்வனே செய்ய வேண்டும். எல்லாக் காரியங்களையும் தலைநகரிலிருந்துதான் துவக்குகிறோம் என்ற குறைபாடு இல்லாமல் கடைசியாகவுள்ள குமரியையும் கவனிக்கிறோம் என்ற நிலையில் முதலில் இந்தத் திட்டத்தை தென் பகுதியிலேயிருந்து ஆரம்பித்திருக்கிறோம். இது மேலும் விரிவாக்கப்படும். நிச்சயமாக எந்தப் பகுதியையும் ஒதுக்க வேண்டுமென்ற எண்ணம், மாற்றாந்தாய் மனப்பான்மை, இன்றைக்கு இருக்கிற புரட்சித் தலைவருக்கு இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள், தொழு நோய்க்காக தமிழகம் செய்திருக்கிற பணிகளைப் பாராட்டினார்கள். அதனால் தான் மத்திய அரசு கூட இந்த அரசாங்கத்தைப் பாராட்டி தொழுநோய்க்காக அதிகமான தொகையை இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். தொழுநோய்ப் பிரிவைச் சேர்ந்த பணியாளர்கள் நல்ல முறையிலே பணியாற்றுவதால், இந்த நோயால் பிடிக்கப்பட்டுள்ள பல சின்னஞ்சிறார்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த மாநிலத்திலும்

ல்லாத அளவுக்கு இங்கே தொழு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக ருப்பதன் காரணம், தொழுநோய்க்கு ஆளாகியிருக்கிறவர்களை முறையாகக் ண்டுபிடிக்கக் கூடிய ஆற்றலைப் படைத்தவர்கள் நிறைய பேர் மிழகத்திலே இருப்பதுதான். அவர்கள் தாங்கள் பெற்ற பயிற்சியை முறையாகச் செயல்படுத்த வேண்டுமென்று தங்கள் பணியைச் செய்திருக் றார்கள். அதனால்தான் இன்றைக்கு பல இடங்களில் தொழுநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தன்மையைப் பார்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, ஒரு பிரிவினருக்கு ஓய்வு பெறும் வயது 58 என்றும், மற்றொரு பிரிவினருக்கு 55 வயதென்றும் வைத்திருக்கிறார்களே, இரண்டு பிரிவினரும் ஒன்றாகப் படித்தவர்கள்தானே என்று கேட்டார்கள். பல இலாக்காக்களில் ஆசிரியர்கள் என்று சொல்லும்போது, 58 வயது என்று இருப்பதை உணர்ந்து மருத்துவத் துறையிலும் ஆசிரியர்களுக்கு 58 வயதென்று இருக்க வேண்டுமென்ற உணர்வு எங்களுக்கும் வந்தது என்பதை எடுத்துச் சொல்லுகிறேன். ஆசிரியர்களாக இருக்கிறவர்களிலே கூட சில பேர் விடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டினார்கள்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய உரையை முடித்த பிறகு கடைசியில் கேட்கலாம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். The Hon. Minister is not yielding. The hon. Member may please resume his seat.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: டி.எம்.எஸ் டி.எம்.ஈ. ஆகிய இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள். இந்த அரசுக்குக் கூட அது போன்ற எண்ணம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சர் அவர்கள் பேசிய பிறகு விளக்கத்தைக் கேட்கலாம். What is the point of order which the Hon. Member is raising?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: பொதுவாக மன்றத்தில் உறுப்பினர்கள் பேசும்போது, அமைச்சர்கள் விளக்கம் கேட்பதும், அதைப் போலவே அமைச்சர்கள் பேசும்போது உறுப்பினர்கள் விளக்கம் கேட்பதும் உண்டு.

[1979 ஏப்ரல் 18

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எந்த விதியிலே அப்படி இருக்கிறது? What is the rule which enables the hon. Member to interrupt the speech of the Hon. Minister?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நாம் ரூலை மட்டும் பின்பற்றுவதில்லை, நடைமுறையில்.

MR. DEPUTY CHAIRMAN: If it is a point of order, the hon. Member should quote the rule on the basis of which it is raised.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள்.

MR. DEPUTY CHAIRMAN: I wish to bring to the attention of the hon. Member that a point of order can be raised only on the basis of a particular rule of the Council Rules. If the hon. Member cannot quote the rule, then it is not a point of order. The hon. Member must conform to certain regulations. When the Hon. Minister is not yielding, I cannot allow the hon. Member to interrupt. When the hon. Member was speaking, I requested Thiru Nallasivan not to interrupt. Similarly when the Hon. Minister is not yielding, how can the hon. Member ask a question?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: சென்னையிலிருந்து திருச்சிக்கோ, திருச்சியிலிருந்து சென்னைக்கோ வருகிற வழியில், திருச்சியை விட்டால விழுப்புரத்திலேதான் நிறுத்த வேண்டியிருக்கிறது. இதற்கிடையிலே விபத்து ஏற்பட்டால், இரத்தம் கொடுக்க வழிவகை இல்லையென்று சொன்னார்கள். அதைப் போலவே ஈரோட்டிலிருந்து சேலத்திற்கும், ஈரோட்டிலிருந்து திருச்சிக்கும் வருகிற வழியில் நூறு மைல் அளவுக்கு இரத்த வங்கி இல்லையென்றும் சொன்னார்கள். இந்த ஆண்டு பத்து இரத்த வங்கிகளை இந்த அரசு ஏற்படுத்த இருக்கிறது என்பதை உணர்வார்கள் என்று கருதுகிறேன். விபத்துக்குள்ளானவர்கள், இரத்தம் இல்லாத காரணத்தாலே சாவைத் தழுவி விடக் கூடாது என்பதை உணர்ந்து, விழுப்புரத்திற்கும் திருச்சிக்கும் இடையில் பெரம்பலூரில் இரத்த வங்கியை ஏற்படுத்த அரசு பரிசிலனையை மேற்கொள்ளுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள், இரத்தத்தைச் சேமிப்பதற்காக மத்திய வங்கி ஒன்றை சென்னையிலே ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இது நீண்ட காலமாகவே வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதை உருவாக்கும் வழிவகைகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 18]

MR. DEPUTY CHAIRMAN: I find some hon. Members are talking among themselves and I am not able to hear the speech of the Hon. Minister. I request the hon. Members to kindly keep silence.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: குடும்ப நலத் திட்டத்திற்குப் புலவர்களைப் பயன்படுத்தலாம் என்றும் சொன்னார்கள். ஏற்கெனவே குடும்பநலத் திட்டத்திற்கு ஆசிரியர்களைப் பயன்படுத்துகிறார்கள் என்ற பெருங் குற்றச்சாட்டு இருக்கிறது. மேலும் புலவர்களைப் பயன்படுத்தினால, தமிழ் படித்த காரணத்தாலே புலவர்களை குடும்பநலத் திட்டத்திற்குப் பயன்படுத்துகிறார்களா என்ற கேள்வி எழும்பலாம். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சனார்த்தனம் அவர்கள் கூறிய இந்த யோசனையை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை இந்தத் துறை ஆய்ந்தாக வேண்டும்.

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரே குழு வேண்டுமென்று சொன்னார்கள். பல்வேறு குழுக்கள் இருப்பதால் அதிலே சமன்பட்ட தேர்வு முறை இல்லையென்றும், ஆகவே ஒரே குழு அனைவரையும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். இது நல்ல யோசனை என்றாலும், எந்த அளவுக்கு இது செயல்படுத்தப்படும்போது பயன் தரும் என்பதை ஆய்ந்தாக வேண்டும். இதைப்பற்றிய முடிவை இப்போது சொல்லுவதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் பேசுகிறபோது prevention is better than cure என்று சொல்லி வியாதிகள் வருவதற்கு முன்பே அவைகளைத் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அமெரிக்கா சென்று வந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் திரும்பி வந்தவுடனே, "அமெரிக்காவில் ஈ, கொசு ஒன்றுகூட இல்லை, ஆனால் இந்தியாவிலே ஈக்களும், கொசுக்களும் நிறைய பறந்து கொண்டிருக்கின்றன" என்று சொன்னதாகச் சொன்னார். கொசுக்களை

(பிற்பகல் 1-20)

ஒழிக்க வேண்டும் என்பதற்கான பணியினை நல்வாழ்வுத் துறை நீண்டகாலமாக மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் மக்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். சில சமயங்களில் அதற்குத் தேவையான மருந்துகளை எங்கே போடவேண்டும் என்று சொல்லப்படுகின்றதோ அங்கே போடப்படாமல் வேறு சுலபமாகப் போடக்கூடிய இடங்

களிலே போட்டு விடுவதனாலேயே கொசுக்களும் ஈக்களும் பரவுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் சொன்னதுபோல, நகர்ப்புறங்களில் உள்ள தொழிற்சாலைகளிலேயிருந்து வெளி வருகின்ற கழிவுநீர், புகை இவைகள் எல்லாம் உணவை மட்டுமல்ல, நீரை மட்டுமல்ல, காற்றையும் பாழ்படுத்திக்கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைமைகளையும் மாற்ற வேண்டுமென்று எடுத்துக்கூற விரும்புகிறேன். அதற்காகவே இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய அரசு ஒரு தனிக் குழு அமைத்திருக்கிறது. அந்தக் குறைகளைப் போக்குவதற்கு அந்தக் குழு ஆய்வு செய்துகொண்டிருக்கின்றது. அதற்கான வழிவகைகளைச் செய்து வருகிறது. தேவையான மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. அதிலே எந்தவிதமான தடையையும் இதுவரையிலும் இந்த அரசு விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல மருத்துவமனைகளிலே மின் விளக்குகள் இல்லை என்று சுட்டிக் காட்டிப் பேசினார்கள். அப்படிச் சொல்கின்றவர்களுக்கு, மருத்துவ மனைகளில் மின் விளக்குகள் உடனடியாக வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களுக்கு இலவச சிகிச்சைகள் தரப் படுகின்றன. அதுபோலவே அவை உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் தரவேண்டும் என்று கேட்டார்கள். நான் பேரவையிலேயும் அறிவித்திருக்கிறேன். அதுபோலவே உறுப்பினர்கள் குடும்பத்திற்கு, அவர்களுடைய டிப்பெண்டன்ட்ஸ்-க்குச் சலுகைகளை நீடிப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றன என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

திருச்சியிலே மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, சிதம்பரத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று சொன்னார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் ஒன்று என்று வைத்துக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் இப்போது இருக்கின்ற மருத்துவக் கல்லூரிகள் எப்படி இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலே சேர்கின்ற மாணவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக சென்னை மருத்துவக் கல்லூரியிலே வந்து சேர்ந்து விடுகின்றார்கள்.

கடைசியில் செங்கற்பட்டிலே 20 அல்லது 22 பேர்கள்தான் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. திருச்சியிலே ஒரு கல்லூரி, சிதம்பரத்திலே ஒரு கல்லூரி என்று பல கல்லூரிகள் உருவாக்கிக்கொண்டே போவோமானால், தேவையான எண்ணிக்கை, இவ்வளவு மாணவர்கள் இருக்க வேண்டும் என்ற விதிமுறையில் கல்லூரி நடக்கும் நிலைமைக்கு வந்துவிடும். இந்தியன் மெடிகல் கவுன்சிலில் அதற்கு என்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். குறைந்த அளவுக்கு மாணவர்கள் இருந்தால் மருத்துவக் கல்லூரிக்கு வேண்டிய நிதி உதவியை அவர்கள் தரமுடியாத சூழ்நிலைகள் உருவாகலாம் என்பதையும் இங்கே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

யுனானி கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். அதையும் இந்த அரசு தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள் பேசும்போது, தமிழிலேயிருந்து ஆங்கிலத்திலே மொழிபெயர்க்க வேண்டுமென்றும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலே மொழி பெயர்க்கக்கூடாது என்றும் சொன்னார்கள். அவருக்குள்ள தமிழ் ஆர்வம் எனக்கும் உண்டு. சில வார்த்தைகள், முக்கியமான பொருள்களின் பெயர்கள் ஆங்கிலத்திலேதான் வந்திருக்கின்றன. அதனால்தான் ஆங்கிலத்திலிருந்து நாம் சிலவற்றை மொழி பெயர்க்கவேண்டியிருக்கிறது. வேண்டுமானால், தமிழிலேயே கொஞ்சம் அழகான வார்த்தைகளைப் போடுவதற்கு நிச்சயமாக இந்தத் துறை முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு அங்கத்தினர் சுற்றுப்புற சூழ்நிலைகளைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். வடசென்னை துறைமுகத்திலிருந்து வருகின்ற இரும்புத் தாள்கள், தூசுகள் எல்லாம் காற்றில் கலந்து விடுகின்றன, இவைகள் அந்தப் பகுதி மக்களைப் பாதிக்கின்றன என்றார்கள். அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முறையாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டத்தை வகுத்து மத்திய அரசுக்குப் பரிந்துரைத்து அனுப்பியிருக்கிறோம். அவர்களின் ஏற்பை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதியில் தூசியும் வெளிப்பட்டு வருகிறது. அப்படிக் கலக்கின்ற தூசியையும் காற்றையும் போக்குவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவப் புத்தகங்கள் வெளிவர வேண்டுமென்று சொன்னார்கள். சித்த மருத்துவத் துறையினுடைய குறிப்புகள் ஏடுகளிலேயே இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, எழுதி இன்று புத்தகங்களாக வெளி

வரவிருக்கின்றன. திரு. சந்தசாமி முதலியார் அவர்கள் முயற்சியில் அந்தப் புத்தகம் வெளிவரவிருக்கிறது என்பதையும் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் பேசும்போது ஆறு மாதத்துக்கு ஒரு முறை நம் நாட்டிலே உள்ள மக்கள் மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தனி நபர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அது இன்றியமையாத ஒன்று என்பதை நானும் உணருகிறேன். அதைச் சொல்லிவிட்டு அவர்கள் வேறு இன்னொன்றையும் சொன்னார்கள். மக்கள் தொகைப் பெருக்கம் இப்படியே போகுமானால், இந்த நாடு அதைத் தாங்காது என்ற நிலை ஏற்படும் என்றார். எனவே எத்தகைய வழிகளில் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பதுபற்றி பல்வேறு வழிகள் சொன்னார்கள் வாலண்டரி ஆர்கனைசேஷன்களையும் தனியார் மருத்துவ மனைகளையும் அரசு இதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். இந்தத் திட்டத்தை அவர்கள் அமுல் செய்யும்போது சில தவறுகளும் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். தனியார் மருத்துவ மனைகளைப் பயன்படுத்துகின்ற நேரத்தில் தவறுகள் வருகின்றன என்றால், அந்தத் தவறுகளைச் செய்தவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றார்கள். இது ஒரு கொள்கைப் பிரச்சினையாக இருக்கிறது. இதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கண் பார்வை குறைவு இன்றைக்கு நம் நாட்டில் பல குழந்தைகளுக்கு இருக்கின்றது. அதனால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு. குழந்தைகள் ஆண்டில் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் குழந்தைகள் நலத்திற்கென்று பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருப்பதோடு, குழந்தைகளுக்காக 'இம்முனைசேஷன் புரோகிராம்' என்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அதற்கான வழிவகைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பேசிய நமது மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவருடைய மூன்று குழந்தைகளும் தக்க மருந்து எங்கும் கிடைக்காததால் இறந்துவிட்ட நிலைமைகளையும், அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதுபோன்ற பல நோய்

களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்காத நிலைமைகள் இருக்கின்றன. அதிலேயும் ஒரு நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கின்றபோது, புதியதாக இன்னொரு நோய் என்ற அரக்கனுடன் மனிதன் போராடிக்கொண்டிருக்கிறான். அதிலே வெற்றி பெறுவது யார் என்றுதான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும். 5 வயது முதல் 11-வது வயது வரையில் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த வசதி கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்துகொண்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் அதை நிறைவேற்றுவதற்கு வழிவகுத்துக்கொண்டிருக்கிறது.

மருத்துவ மனைகளில் உள்ளிருப்பு நோயாளிகளாக இருக்க வேண்டுமென்றால், அதற்கென்று லஞ்சம் தந்தால்தான் இடம் கிடைக்கும் என்ற நிலைமைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதைத் தடுப்பதற்கு இங்கே இருப்பவர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்தால், நிச்சயமாக இந்தக் குறைபாடு இல்லாமல் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான அளவுக்கு மருந்து வசதிகள் நிச்சயமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி எங்காவது இல்லாமலிருந்தால், எங்கெங்கு எந்தெந்தக் குறைகள் இருக்கின்றன என்பதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வார்களானால், அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கும்பகோணம் மருத்துவ மனையில், கிருத்துவ மருத்துவ மனையில் நடைபெறுகின்ற பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது இன்றைக்கு நம்முடைய சுகாதாரப் பணியாளர்களுக்குத் தனியாக அலவன்ஸ் தரவேண்டும் என்று பேசினார்கள். ஆயாக்களுக்குச் சம்பளம் குறைவாக இருக்கிறது என்றும், சில இடங்களில் ஆயாக்களுக்குச் சம்பளமே தரப்படுவதில்லை என்றும் குறை சொன்னார்கள். அது எங்கே நடக்கிறது என்று சொல்வார்களானால், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அந்த அளவுக்கு இத்துறையிலே சம்பளம் கொடுக்கப்படாமல் இல்லை என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

குடும்ப நலத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் பயன்படுத்துவதுபற்றி இங்கே கோடிட்டுக் காட்டிப் பேசினார்கள். எந்த ஒரு அரசுத் திட்டம் என்றாலும், அந்தத் துறைச் செயலர் அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம்தான் ஒப்படைப்பார்கள். அவர் அந்தப் பொறுப்பையும் எற்றுக்கொள்வார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. எந்தத் திட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய துணை தேவைப்படுகிறது. குறிப்பாக எந்த ஆசிரியர்கள் இதன் காரணமாகப் பழிவாங்கப்பட்டிருப்பார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டினால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கலாம். குடும்ப நலத்துறையில் உள்ள அதிகாரிகள் அவர்கள் காரியங்களை முறையாகச் செய்யவில்லை என்றால், ஒழுங்காகப் பணியாற்றவில்லை என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக் கூறுகிறேன்.

அடுத்து, இங்கே பேசிய நம்முடைய அங்கத்தினர் அம்மையார் அவர்கள் தாய்ஸ் (தாய்கள்) வேண்டாமென்று சொன்னார்கள். அவர்கள் இல்லாமல் இருக்கும் நிலையை உருவாக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி இங்கே ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

இன்றைக்கு பல கிராமங்களில் 'தாய்'கள்தான் பணி புரிகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால், மருத்துவர்கள் மருத்துவம் பார்ப்பதைவிட, 'தாய்'கள் லாவகமாகப் பார்க்க முடிகிறதென்பதை அறியாமல், அவர்களை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பணிக்கு எங்கே போவார்கள் என்ற பிரச்சினை உருவாகும். அவர்களுக்கு வேண்டுமானால் இன்னும் நல்ல முறையில் பயிற்சி கொடுக்க வழி முறைகளைச் செய்யலாம். நாகரிகமான முறையில் அவர்களுக்குத் தேவையான 'கிட்' அரசால் தரப்படுகிறது. எனவே அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வழி முறைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்தத் துறைக்கு பார்ட்-2 ஸ்கீமின்கீழ் அரசு ஏற்பட்ட நாளிலிருந்து 80 லட்சம் ரூபாய்க்கு மேலே கிடைத்ததில்லை. சென்ற ஆண்டு இந்தத் துறை முதலமைச்சரவர்களின் கீழ் இருந்தபோது, 125 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 600 லட்சம் ரூபாயை பார்ட்-2 ஸ்கீமின் கீழ் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருப்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனவே அரசு மருத்துவத் துறையிலே எந்த அளவிற்கு முழுக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறதென்பதை உணர முடியும்.

இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்பதை உணர்ந்துதான் 5 இடங்களிலே குழந்தைகளுக்கான தனி மருத்துவப் பிரிவைத் துவக்க வழி வகைகளைச் செய்திருக்கிறோமென்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். பல்வேறு விதமான தொத்து நோய்கள்—மலேரியா, அம்மை போன்ற தொத்து நோய்கள் எல்லாம் பரவிக்கொண்டிருக்கின்றன. இதை ஒழித்துவிட்டோமென்று நினைத்தாலும், மீண்டும் தலை எடுத்துவிட்டதென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. வீரா்சாமி அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். உண்மையிலேயே மறைந்துவிட்ட சில நோய்கள், சில இடங்களில் தலை தூக்க ஆரம்பித்துள்ளன. அவை மீண்டும் தலை தூக்காமலிருக்க, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். திண்டிவனத்தில் ஏற்பட்ட பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் எந்த இடத்தில் அப்படிப்பட்ட் தெளிப்பு மருந்துகள்—கொசுத் தொல்லையானாலும், அல்லது வேறு எந்தவிதப் பிரச்சினையாக இருந்தாலும், இல்லை என்ற நிலை இருக்கக்கூடாதென்ற நிலையிலே எல்லாவற்றையும் செய்திருக்கிறோம். குறிப்பிட்ட இடத்திலே இல்லையென்றால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டிவனத்திலே அப்படிப்பட்ட நிலையாலே—காலராவால் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு பேர்கள், இறந்தவர்கள் இல்லை. அப்படித்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். உலக்கூரில் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு பேர்கள், இறந்தவர்கள் இல்லை. மைலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு பேர்கள், இறந்தவர்கள் யாருமில்லை. அரக்கோணத்தில் 8 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இரண்டு பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் அந்த இரண்டு பேருக்கும் வயிற்றுப்போக்கு இருந்தது என்ற காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். காலரா என்று அவர்கள் இறந்ததற்குக் காரணம் காட்டவில்லை என்று கூற விரும்புகிறேன். மேலும் அத்தகைய நிலைமைகளுக்குத் தெளிப்பதற்காக உரிய மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொன்னால், அதிகாரிகள் கூறினார்களென்று குறிப்பிட்டார்கள்—அதாவது, முறையாக விநியோகிக்கப்பட்ட மருந்துகள், முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னால், தெரிவித்தால், சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எல்லாவற்றையும் தொட்டுப் பேச விரும்பவில்லை, ஒன்றே ஒன்றைப்பற்றி மட்டும் பேசியாக வேண்டுமென்ற முறையில், 'டிரக் கன்ட்ரோல்' பற்றி எடுத்துச் சொல்லி, அது ஏன் தனியாக ஒரு இயக்குநர் தலைமையில் பிரிக்கப்

படாமல் இருக்கிறதென்பதை எடுத்துக்காட்டி, 1954-லே வந்த கமிட்டி சிபாரிசு செய்தது, 1966-லே வந்த கமிட்டி சிபாரிசு செய்தது, 1974-லே வந்த கமிட்டி சிபாரிசு செய்தது. ஆனால் அதைச் செய்யவில்லை என்று சொன்னார்கள். 1954-லே சிபாரிசு செய்தார்கள். 1966 வரையிலே செய்யவில்லை. 1966-லே சிபாரிசு செய்தார்கள், 1974 வரையிலே செய்யவில்லை. 1975-லே சிபாரிசு செய்தார்கள். அதற்குப் பின்னாலே, போன ஆண்டுவரையிலே செய்யவில்லை. போன ஆண்டு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, அப்படி உருவாக்க வழி வகைகள் செய்யப்பட்டு, இன்றைக்கு அது அரசின் பரிசிலனையில் இருக்கிறதென்பதை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஸ்டெப்மதர் என்று கூறி, அத்தகைய மனப்பான்மை இருக்காதா, அவர்களும் மருத்துவர்களாக இருக்கிறார்கள், மருத்துவர்கள் பயன்படுத்தும் மருந்துகளில் ஏற்படும் கலப்படத்தைத் தடுக்கும் துறை ஆயிற்றே, அந்த மருந்துகளைப் பயன்படுத்துபவர்களே அந்தத் தவறுகளைச் செய்தால் அது எப்படி சரியாகுமென்று எடுத்துச் சொல்லி, வாதிட்டார்கள். அவர்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். நாம் சந்தேகப்படாமல் இருந்தால்தான், முறையாக எல்லாவற்றையும் செய்ய முடியும். அதற்காக இவர்களேதான் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த அரசு ஏற்பட்ட பின்னாலே, ஏற்பட்ட நிலைமையல்ல இது. இந்த அரசு ஏற்பட்ட பின்னாலேதான், அதை ஒரு தனித் துறையாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கிளியின் வாயிலே ரத்தத்தைப் பார்த்து, தன்னுடைய குழந்தையைத்தான் கிளி கொன்றுவிட்டதென்று கருதி, கிளியைக் கொல்லத் துணிந்ததைப்போல, தயவுசெய்து இந்தத் துறையைப்பற்றி சந்தேகிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, மின்சார சாதனங்கள் பொருத்தப்பட்டு, நம்முடைய கையிலே ஒப்படைக்கப்பட்டு, அந்த ஆய்வுக்கூடம் இயங்க வழி வகைகள் செய்யப்பட்டு, விரைவிலே அது துவங்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய குறைபாடுகள் தீர்வதற்கான வழி வகைகளை இன்றைக்கு இந்த அரசு செய்து கொண்டிருக்கிறதென்று கூற விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஜாயின்ட் கண்ட்ரோலருக்குக் கார் இல்லை, அவர் எப்படி பல பணிகளைச் செய்வார் என்று கேட்டார்கள். இது குறித்து விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கே கார்கள் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஒரு மாவட்டத்தைச் சுற்றிப் பார்க்கும் மாவட்ட மருத்துவ அதிகாரிக்கே போக்குவரத்து வாகனம் இல்லாமல், இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே போது

மான அளவிற்கு வாகனங்கள் ஒரு பிரிவிற்கு இருக்குமே தவிர, பல பிரிவுகள் வாகனங்கள் இல்லாமல் இருக்கின்றன. வாகனங்கள் வேண்டுமென்பதை அரசு உணர்ந்திருக்கிறது. மிகச் சீக்கிரத்தில் அதற்கான வழி வகைகளை அரசு செய்யுமென்பதையும் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

கிங் இன்ஸ்டிட்யூட்பற்றி இங்கே சொன்னார்கள். மெத்தப் பெருமையோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கிங் இன்ஸ்டிட்யூட்டில் தயாரிக்கப்பட்ட வேக்சின்கள் உலகப் புகழ் பெற்றவை என்பதையும், அதற்குத் தனிப் பெருமை மருத்துவ உலகத்தில் இருக்கிறதென்பதையும், பிரிட்டிஷ் பார்மகோபியாவை மாற்றி எழுதுவதற்கான வாய்ப்பு கிங் இன்ஸ்டிட்யூட்டிற்குத் தரப்பட்டதென்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே கிங் இன்ஸ்டிட்யூட்டிலே தயாரிக்கப்படுகிற மருந்துகளைப்பற்றி எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. மிகப் பெரிய பெயரை உலக அரங்கில் கிங் இன்ஸ்டிட்யூட் ஈட்டியுள்ளது. அதற்கேற்ப ராஜாவாக அது இருந்துகொண்டிருக்கிறது. எனவே அதன் தன்மையை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தேகிக்க வேண்டாமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள், சிதம்பரம் மருத்துவ மனையில் அதிகப் படுக்கைகள் வேண்டுமென்று சொன்னனார்கள். படுக்கை வசதிகள் முன்பு இருந்ததைவிட இப்போது அதிகப் படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் வேண்டுமென்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு அது பரிசீலிக்கப்படுமென்று தெரிவிததுக்கொள்கிறேன்.

திரு. திராவிடமணி அவர்கள் பேசுகிற நேரத்தில், காது கேட்காதவர்களுக்கு காது கேட்கும் கருவிகள் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். சமூக நல அமைச்சரவர்கள் அதற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் ஆண்டில், காது கேட்கும் கருவிகளை நிறைய வழங்க, வழி வகை செய்யப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்றையும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். எம்.பி., பி.எஸ்., பி.ஐ.எம். ஆகியவற்றை ஒப்பிட்டு, அதிலுள்ள குறைபாடுகளைச் சொன்னார்கள். இன்றைக்கு அத்தகைய பிரச்சினைகள் உருவாவதற்கான காரணத்தை எடுத்துக் கூறியாக வேண்டும். எம்.டி. (சித்தா) மருத்துவப் படிப்பு 3 ஆண்டுகள் என்றிருப்பதை 2 ஆண்டுகளாக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். மத்திய அரசு உத்தரவுப்படி நாம் நிர்ணயித்திருக்கிறோம். அதை இரண்டு ஆண்டுகள் என்று ஆக்குவதற்குரிய

நடவடிக்கைகளை எடுக்க, வழி வகைகளை அரசு செய்யுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் புளியங்குடி பற்றிச் சொன்னார்கள். கோவில்பட்டி இ.எஸ்.ஐ. மருத்துவமனைபற்றி சொன்னார்கள். அவைகளையெல்லாம் கவனத்தில்கொண்டு அரசு ஆவன செய்யுமென்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சுகாதாரப் பணியாளர்களுக்கு யூனிபார்ம் தர வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக அவர்களுக்கு 60 ரூபாய் தரப்படுகிறதென்று கருதுகிறேன். யூனிபார்ம் தைத்துக்கொள்ள பணம் தரப்படுகிறது. யாராவது யூனிபார்ம் போடாமலிருந்தால், அந்தப் பணத்தை வேறு எதற்கோ செலவு செய்துவிட்டார்களென்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முழுமை பெறாத திட்டமாக இது இருக்கிறதென்று எடுத்துச் சொன்னார்கள். காலப் போக்கிலே முழுமை பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் துறை வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறிட விரும்புகிறேன்.

தொற்று நோய்களைத் தடுப்பதற்கான மருந்துகளின் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அப்படி எந்தெந்த இடங்களில்

(பிற்பகல் 1-40)

பற்றாக்குறை இருக்கிறது என்று எடுத்துக்காட்டினார்கள். நல்ல நிலைகளை உருவாக்குவதற்கான வழிவகைகளை அரசு செய்யும். விபத்து ஏற்படுகின்ற நேரத்தில் மிகுந்த சிரமமாக இருக்கிறது என்றும் விழுப்புரம் மருத்துவமனையை சகல வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக விரிவாக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அரசின் கவனத்தில் அது இருந்துகொண்டிருக்கிறது. அதுகுறித்து அரசு வழிவகை செய்யும்.

கல்ராயன் பகுதியைப்பற்றிச் சொன்னார்கள். அது மலைவாழ் பகுதி. மலைவாழ் பகுதியாக இருப்பதால், அதுபற்றி அரசு தனி கவனம் செலுத்தியிருக்கிறது. பதினைந்து அரசினர் மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே தவறு நடந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன எல்லாவற்றையும் பரிசீலித்து, அதுமாதிரி எங்காவது தவறு நடந்திருக்குமேயானால், அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும். அதே மாதிரி மாண்புமிகு உறுப்பினர்களால் தவறான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்குமானால்; அதற்கும் விளக்கங்களைத் தரும் வகையில் இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விராசாமி அவர்கள் பேச்சைத் துவக்குகின்றபோது பாராட்ட வேண்டிய கருத்துக்களைப் பாராட்டுவதாகவும் அதே நேரத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய குறைபாடுகளை எடுத்துக் கூறுவதாகவும் சொன்னார்கள். நானும் பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் பயின்றவன்தான். அண்ணா அவர்கள் ஒன்றை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. விராசாமி அவர்களுக்கும் அது நினைவிருக்கும் என்று கருதுகிறேன். சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறவரை விட கொஞ்சம் கோபமாகப் பேசுகிறவரை நம்பலாம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இவ்வளவு விஷயங்களையும் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். நல்லமுறையில் ஏற்கெனவே அவருக்கு இந்தத் துறையில் அனுபவம் உண்டு என்பதை நான் நன்றாக அறிகிறேன். இந்தத் துறையில் குறைந்த அனுபவம் பெற்றிருக்கிற எனக்குத் தந்திருக்கிற பாடங்களை நல்ல பாடங்களாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் சில குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பெயரை ஒரு கடிதத்தில் பயன்படுத்தியிருப்பதைக் கூட எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அப்படி ஒரு மருத்துவர் எங்கு இருக்கிறார் என்பது கூட எனக்குத் தெரியாது. என்னுடைய பெயரை எப்படிப் பயன்படுத்தினார் என்பதும் எனக்குத் தெரியாது. அதுபற்றி விசாரித்து உண்மையிலேயே அது நிரூபிக்கப்படுமானால், அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து, சாத்தியமான அனைத்தையும் இந்த அரசு செய்யும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதைப் போலவே ஸ்ட்ரோக் சென்டர் ஒன்றை நிறுவி அதற்காக 40 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு மருத்துவத் துறையைப் பற்றி நன்றாகத் தெரியும். மூளையில் வருகின்ற செரிபிரல் ஹேமரேஜ் என்கின்ற நோயாளிகளில் நூற்றுக்கு நூறு பேர் இறந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அதிக விலையானாலும் கூட, மக்களுக்குப் பயன் தரும் என்ற வகையில் தமிழக முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதை வாங்க வழிவகை செய்திருக்கிறார்கள்.

மருத்துவக் கல்லூரி அட்மிஷன் என்று குறிப்பிட்டு, அதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைப் பெருமையோடு எடுத்துச் சொல்ல முடியும் சுப்ரீம் கோர்ட் சமீபத்தில் அளித்த ஒரு ஜட்ஜ்மென்டில் மருத்துவக் கல்லூரித் தேர்வு நல்ல

முறையில் தான் நடைபெற்றிருக்கின்றது என்றும், ஆனால் மாநில நீதிமன்றம் தலையிட்டது தவறு என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. சென்ற ஆண்டு டேப் ரெக்கார்ட் மூலம் பதிவு செய்கின்ற முறையை வைத்தோம். அதன் காரணமாக தவறுகள் குறைந்திருக்கின்றன. வரும் ஆண்டிலும் அந்தமாதிரி முறையை இந்த அரசு பின்பற்றும்.

திடீரென்று படித்து வருகின்ற மாணவர்கள் பதிவுசெய்கின்றார்கள். அவர்களை சீனியாரிட்டி முறையில் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தான் அவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அப்படி அவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, சீனியாரிட்டி அடிப்படையில் தேர்ந்தெடுப்பதில்லை. 1978 ஆம் ஆண்டு படித்து வந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்கள் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1978 ஆம் ஆண்டில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப் பட்டவர்கள் 95 பேர் இன்னும் பணியில் சேரவில்லை. இப்படிப்பட்ட நிலைகள் உருவாகக் கூடாது என்பதற்காகத் தான் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட வழிவகை செய்தோம். தவறு ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் அவர்கள் 5 ஆயிரம் ரூபாய்க்குப் பண முறிவு, ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று வழிவகை செய்தோம். தவறுகள் ஏற்படாமலிருக்க இத்தகைய ஒரு நல்ல நிலையை உருவாக்கினோம். பென்சிலின் ஊசியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். பென்சிலின் ஊசி குழந்தைகளுக்கு மிக மிக இன்றியமையாதது. ஆனாலும் பென்சிலின் ஊசியைப் போடுவதன் மூலம் ஏற்படுகின்ற தவறின் காரணமாகவும், முன் கூட்டியே பரிசோதனை செய்யாததன் மூலமும் சாவு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். சரியான முறையில் பயன்படுத்தினால், சாவு ஏற்படாது என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் பரிசோதனை டோஸ் போடுகின்றபோது கூட இறந்து விடுவது உண்டு. ஆனால் எக்ஸ்டெர்னல் அப்ளிகேஷன் என்ற முறையில் வெளிப்படையாக அதிகமாக பென்சிலினை உபயோகப்படுத்தினால், ரீ-ஆக்சன் வேறு விதத்தில் ஆகி விடுகிறது. அத்தகைய நிலையைக் குறைத்தால் நிச்சயமாகச் சாவு அதிகமாக ஏற்படாது என்று கூறியிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கூட குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். தனியார் பென்சிலின் ஊசியைப் பயன் படுத்துவதை அடியோடு விட்டுவிட்டார்கள். பென்சிலின் ஊசி போடுவதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இல்லை. பென்சிலின் மருந்தின் பெயரைச் சொன்னாலே மக்கள் பயந்தார்கள், மக்களுடைய

பயத்தை நாம் போக்கியாக வேண்டும். அதைப் பயன்படுத்தக்கூடாது என்பதற்கான சட்ட திட்டங்களை, கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்து தற்காலிகமாக அதைத் தடைபடுத்தியிருக்கிறோம். இன்றைக்கு கூட அதைப் பற்றி ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். பென்சிலின் வார்ட் என்று மருத்துவமனையிலேயே ஒரு வார்டை உருவாக்கி, பென்சிலின் ஊசி போட்டவர்கள் அந்த வார்டில் படுத்து உறங்கிப் போக வேண்டுமென்ற நிலையை உருவாக்கலாமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். மக்கள் இதைப் பயன்படுத்துவதைத் தடைப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இல்லை. மக்களை நல்வாழ்வுச் சோலையில் அமர வைக்க வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம்.

கோவை மாவட்டத்தில் கோவிந்தராஜன், ஏ.டி.எச்.ஓ. அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அடிக்கடி ஏன் போடப்பட்ட உத்தரவு இப்படி மாற்றப்பட்டது என்பது பற்றியும் அதில் ஏதாவது தவறு நடந்திருக்கிறதா என்பது பற்றியும் விசாரித்து, தவறு நடந்திருக்குமேயானால், நிச்சயம் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இ.எஸ்.ஐ. மருத்துவமனைபற்றிச் சொன்னார்கள். ரூபாய் 1.50 ஒவ்வொருவருக்கும் உணவுக்காகத் தரப்படுகிறது என்று சொன்னார்கள். சிறையில் கூட இதை விட அதிகமாகத் தரப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் வேதனையோடு சொன்னார்கள். அந்த வேதனை எல்லோருக்கும் உண்டு. அதற்குரிய வழிவகைகளைச் செய்ய அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக பணியிலே இருக்கின்றவர்களுக்கு, மலேரியா ஊழியர் களுக்கு சைக்கிள் அலவன்ஸ் தரவில்லையென்று சொன்னார்கள். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. "எங்களைப் புரிந்துகொள்ளுங்கள்" என்று டாக்டர்கள் ஒரு பத்திரிகை போட்டிருக்கிறார்கள், அவர்கள் எங்கள் இயக்கங்களைச் சார்ந்தவர்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு உங்களைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். இன்றைக்கு எங்களைப் புரிந்து கொண்டவர்களாக இருப்பதால், எங்களைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்துகொண்டார்கள் என்ற காரணத்தாலோ, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எங்களைப் புரிந்துகொண்டு நடக்கிறார்கள் என்ற காரணத்தாலோ அப்படி அவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்கள் சுட்டிக்காட்டியதில், சொல்லியவற்றில் நியாயமானவற்றைச் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது. கவுரவ டாக்டர்களை எடுப்பது தேவை

என்றாலும், பல்வேறு இடங்களில் சிறப்புப் பகுதிகளுக்குத் தேவையான டாக்டர்கள் கிடைத்த பிறகு, கவுரவ மருத்துவ முறைபற்றி முடிவெடுக்கலாம். அதன்படி பணியாற்றலாம் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

மருத்துவர்கள் தவறான முறையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

டி.எம்.எஸ். பதவி 1½ வருடமாகக் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். நான் திடீரென்று மருத்துவமனைக்கு 'விசிட்' போகிறேன். மருத்துவமனையில் மூன்று பிரிவுகள் இருப்பதைப் பார்க்கிறேன். ஒரு பிரிவிலே இல்லாத குறிப்பிட்ட மருந்து இன்னொரு பிரிவில் இருக்கிறது. மருந்து தேவைப்பட்ட பிரிவுக்கு ஏன் அந்த மருந்தை இன்னொரு பிரிவு தரவில்லை என்று கேட்டால், "அது அந்தப் பிரிவைச் சேர்ந்த மருந்து இல்லை, அதனால் கொடுக்கக் கூடாது" என்று சொன்னார்கள். கொடுத்தால் 'ஆடிட் அப்ஜெக்ஷன்' வந்து விடும் என்று சொன்னார்கள் 'Too many cooks spoil the borth' என்று சொல்லுகிற மாதிரி, நிறைய தடைகள் இருப்பதால் தான், தொல்லைகள் வருகின்றன என்று சொல்லி, யோசித்து, "முன்பு ஒன்றாக இருந்து இடைக்காலத்திலே தான் இவை பிரிக்கப்பட்டன. இடையிலே பிரிக்கப்பட்டதை மீண்டும் இணைப்பதில் தவறில்லை" என்பது பற்றி இந்த அரசு இத்தனை நாளாக யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-50)

குடும்பக் கட்டுப்பாட்டிலே நடந்த முறைகேடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கான குறிப்புக்களையும் தந்திருக்கிறார்கள். நிச்சயமாக அதற்கான தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும், தவறான முறையில் குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்கு எந்தவிதமான வழிவகைகளையும் இந்த அரசு எந்தக் காலத்திலும் வகுக்கத் தயாராக இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்

சென்னை மருத்துவக் கல்லூரியிலே சில சாமான்கள் வாங்கியதிலே ஊழல்கள், முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்றும் டெண்டர்கள் விட்டு முறையாகத் தரப்படவில்லை என்றும், தனியார் கடையிலே வாங்கியிருக்கிறார்கள் என்றும், பண விரயம் ஏற்பட்டிருக்கிறது என்றும் எடுத்துச் சொன்னார்கள். அப்படி அந்த அதிகாரிகள் செய்திருந்தால், அவர்கள் மக்களின் பணத்தோடு விளையாடியிருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் மட்டுமல்ல, அதற்கான தண்டனையையும் ஏற்க

வேண்டியவர்கள். தவறுகள் நிகழ்ந்திருந்தால், அந்தத் தவறுகளைச் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லபல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த நல்ல யோசனைகளாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளும். நல்வாழ்வு என்ற நங்கை நடந்து வருகின்ற நேரத்தில் அந்த நங்கைக்கு நல்லபல ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அணிகலன்களாக வழங்கியிருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்ற இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஒரு கிளாரிபிகேஷன் கேட்கிறேன். டி.எம்.எஸ். பதவி நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கிறது. காரணம் மறுபரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படியே நீண்டகாலமாக ஒரு பதவி நிரப்பப்படாமலிருப்பதால், அங்கே ஒரு நிர்வாகக் கன்ட்ரோல் இல்லாமல், எந்தவிதமான பிடிப்பும் இல்லாமல், இருக்கிறது. நெருக்கடி காலத்திலே 'டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஹெல்த் சர்வீசஸ்' என்று ஒரு பதவியை உருவாக்கி, ஹெல்த் செக்ரட்டரியை அந்தப் பதவியிலே அமர்த்தினார்கள். அந்தப் பதவிக்கு அந்த செக்ரட்டரிக்குப் பதிலாக டெக்னிக்கல் சைடிலிருந்து வேறொருவரைப் போட்டால், அதை நான் வரவேற்கிறேன். டி.எம்.எஸ். பதவி 1½ ஆண்டுக்காலமாக நிரப்பப் படாமலிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: விளக்கம் சொல்ல வேண்டாம், கேள்வி கேளுங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 'டீச்சிங்' சைடிலே இருப்பவர்களுக்கெல்லாம், ஓய்வுபெறும் வயதை 58 என்று உயர்த்த பரிசீலனை செய்யப் போகிறோம் என்று சொன்னார்கள். அதிலே எனக்கு ஆட்சேபனை இல்லை. எம்.பி., பி.எஸ். படித்தவர்கள் டீச்சிங் சைடிலும், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடிலும் இருக்கிறார்கள். டி.எம்.இ. அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடிலே இருக்கிறார். ஆனால் அவருக்கு ஓய்வுபெறும் வயதை 58 ஆக உயர்த்திக் கொடுப்பதற்காக ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். அவர் டீச்சிங் சைடிலே இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்: அவர் 'டீச்சிங் ஸ்டாஃப்' என்று யுனிவர்சிட்டியே விளக்கியிருக்கிறது. அவர் கிண்டியில் கிங் இன்ஸ்டிட்யூட்டில் பணியாற்றிய நேரத்திலே 'டீச்சிங் ஸ்டாஃப்'-ஆக இருந்திருக்கிறார்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அந்த விஷயங்கள் இப்போது நீதி மன்றத்திலே இருக்கின்றன. அவர் 'டீச்சிங் ஸ்டாஃப்' அல்ல. இந்த அரசாங்கத்திலே ஒரு கொள்கை இல்லாததுபோல், அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள். யார் மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறார்களோ அவர்கள் தான் டீச்சிங் ப்ரொஃபஷனிலே இருப்பவர்கள் ஆவார்கள். ப்ரொபசர்கள், ரீடர்கள், டியூட்டர்கள் இவர்கள் தான் டீச்சிங் ப்ரொஃபஷனில் இருப்பவர்கள். நம்முடைய டைரக்டர் ஆஃப் மெடிக்கல் எட்யூக்கேஷன் அவர்கள் கிங் இன்ஸ்ட்டிட்யூட்டில் டைரக்டராக இருந்திருக்கிறார் என்றால், அது டீச்சிங் ப்ரொபஷனைச் சார்ந்தது அல்ல. மெடிக்கல் சர்வீஸிலே 'பேமிலி பிளானிங்' இருக்கிறது, அங்கே இருக்கிற டைரகடர் டீச்சிங் வேலை செய்கிறார், அங்கே இன்னொரு டெப்யூட்டி டைரக்டர் இருக்கிறார் . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அமைச்சரிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்க வேண்டுமே தவிர, அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டாம். இந்த அவை மீண்டும் பிற்பகல் கூட வேண்டும். உறுப்பினர் அவர்கள் நிறைய கேட்கலாம். கேட்கவேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் விளக்கம் சொல்ல வேண்டாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அங்கே ஒரு டெப்யூட்டி டைரக்டர் இருக்கிறார், அவர் டீச்சிங் வேலை செய்கிறார். உண்மையிலேயே டீச்சிங் பிரிவிலே பணியாற்றுபவர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 என்று ஆக்குகிறார்களா ? அல்லது தலைமையிலே இருப்பவர்களுக்கு மட்டும் தான் 58 வயது என்று வைக்கப்போகிறார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அது அரசின் பரிசீலனையில் தான் இருக்கிறது. பரிசீலித்து முடிவெடுக்கலாம். ஆனால் 1½ ஆண்டுக் காலம் டி.எம்.எஸ். பதவி நிரப்பப்படாத காரணத்தினாலே அந்த இலாக்காவிலே எந்தவிதமான தொய்வும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஒரு விளக்கம் மட்டும் கேட்கிறேன். டி.எம்.எஸ். பதவி 1½ ஆண்டுக் காலமாகக் காலியாக இருக்கிறது. 'இதிலே ஆடிட் அப்ஜெக்ஷன் வருகிறது. இரு தரப்பிலேயும் மருந்துகள் இருப்பதால், அவைகளைக் கையாள முடியவில்லை, ஆகவே, இன்டிகிரேட் செய்யப் போகிறோம்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் செய்தால், 'ஆடிட் அப்ஜெக்ஷன்' கூட குறையும். ஆகவே, அதுபற்றி அரசின் கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : இன்டிகிரேட் செய்ய வேண்டு மென்று தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : எப்போது அந்தப் பணி முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : சில விதிமுறைகள் அதற்காக வகுக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்தப் பணிகள் முடிந்தவுடன் செய்யப் படும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன. அவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-55)

அவை மீண்டும் பிற்பகல் 4-30 மணி அளவில் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

4. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள 'சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

@ 910–937 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1979 ஏப்ரல் 18

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். அவைமுன் இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகள் விவாதத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் 1½ மணி நேரம் என்ற வகையில் மொத்தம் 3 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நேரத்திற்குள் விவாதத்தை முடிக்க, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ வழக்கமாக நான் கேட்டுக்கொள்வதைப்போல் இது அமைந்துவிடக் கூடாது. எவ்வாறு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றால், ஒன்றின்மீது பேசியவர்கள் மற்ற கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசாமல் தியாகம் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிட நேரம் ஒதுக்கப்படுகிறது. அதற்குள் அவர்கள் தங்களின் பேச்சை முடித்து ஒத்துழைக்க வேண்டும்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 'சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி' கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு எனக்கு வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இங்கே வற்புறுத்த விரும்புகிற கருத்துக்கள் மூன்றே மூன்று கருத்துக்கள்தாம். அதில் முதலாவது என்னவென்றால் இன்றையதினம் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் இல்லை. மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குத் தேவையான அதிகாரங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும். சொல்லப்போனால், அவைகளெல்லாம் சிறிய சட்டமன்றங்களைப் போல், அவைகளுக்குரிய அதிகாரங்களோடு செயல்படும்படி செய்வதோடு, ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின்போதும் அமைச்சரவையின் சார்பில் ஒரு அமைச்சர் கலந்துகொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவையிரண்டும் மிக முக்கியமானவையாகும்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் விவாதம் நடக்கிறபோது, எதைக் கேட்டாலும் "அரசாங்கத்தின் அனுமதி இதற்கு இன்னும் வரவில்லை" என்று அதிகாரிகள் சொல்லுகிற நிலை இருந்து வருகிறது. மிகச் சிறிய காரியங்களை நிறைவேற்றுவதற்குக்கூட அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்திருக்கிற அவசியம் இன்றையதினம் இருந்து வருகிறது. இந்த நிலைமை மாற, திட்டங்கள் போடும்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டொன்றுக்கு பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் பணத்தைச் செலவிடலாம் என்று ஒதுக்கீடு செய்துவிட்டு, அவசியமான காரியங்களுக்கு என்று ஒரு தொகையை ஒதுக்கி, பிறகு நடைமுறைக் காரியங்களுக்கு என்று

1979 ஏப்ரல் 18] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஒரு தொகையையும் ஒதுக்கி, அவைகளைச் செலவிடுவதற்கான அதிகாரத்தை முன்கூட்டியே மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு வழங்கி, முக்கியமான செயல் திட்டங்களுக்கு மட்டும், சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவர்கள் அதைச் செலவு செய்யலாம் என்ற வாய்ப்பினை, வழிமுறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தால், மக்களுக்கு மிக விரைவாக நன்மைகள் போய்ச் சேரும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் சிறிய சட்டசபைக் கூட்டத்தைப் போல் நடத்தப்பட வேண்டும். மாதமொருமுறையாவது கூட வேண்டும். அப்படிக் கூடுவதற்கு முன்னால் உறுப்பினர்களுக்கு முன்னறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும். என்னென்ன திட்டங்கள் விவாதிக்கப்பட வேண்டும் என்பது தெரிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் விவாதம் நடந்து முடிந்த பிறகு, அந்த மாதத்தில் எடுக்கப் படுகிற முடிவுகள் அனைத்தும் அந்த மாதத்திலேயே அமுல்படுத்தப்படுகிற வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் செயல்முறை அமைந்தால்தான் நன்றாக இருக்கும்.,

அதிகாரப் பரவல் முறையை அதிகமாக வலியுறுத்தும் இந்த நேரத்தில் அதிகாரப் பரவல் முறைக்கும் அதன் மூலம் சாதாரண பாமர மக்களுக்கு விரைவில் நன்மை போய்ச் சேருவதற்கும் இது வழி வகுக்கும் என்று சொல்லிக்கொண்டு, ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அமைச்சரவையின் சார்பில் ஒரு அமைச்சர் கலந்துகொள்ளச் செய்வது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இன்றையதினம் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் தொடக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் இயங்குகின்றன. அகில இந்திய அளவில்கூட இது சம்பந்தமான ஒரு கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. அந்தக் கோரிக்கை என்னவென்றால், தொடக்கப் பள்ளிகளும் நடுநிலைப் பள்ளிகளும் ஊராட்சி நிருவாகத்திற்குக் கட்டுப் பட்டிருக்கக்கூடாது என்பது. அதிலிருந்து இப்பள்ளிகள் விடுதலை பெற வேண்டும். அவ்வாறு விடுதலை பெற்று அவைகள் அரசின், கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற இந்தக் கோரிக்கை இன்றையதினம் இந்தியா முழுவதுமாக வலுப்பெற்று வருகிறது. இந்தக் கோரிக்கை மிக நியாயமான கோரிக்கை. பல்வேறு கட்டங்களில் இதைத் தெளிவாகச் சொல்லியிருப்பதால், மீண்டும் மீண்டும் இதை வற்புறுத்தத் தேவையில்லை என்று இந்த அளவோடு இதை விடுகிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 18

அடுத்து, கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கிற ஆசிரியர்கள் கல்வித் துறை சம்பந்தப்பட்ட பணிகளை மட்டுமே செய்வதற்கும், கல்வித் தொடர்பில்லாத வேறு காரியங்களில் ஈடுபட அனுமதிக்காமல் இருக்கும் பொருட்டும், சுயேச்சையாகத் தங்கள் கல்விப் பணியை அவர்கள் ஆற்றும் பொருட்டும் உள்ளூர் அரசியல் செல்வாக்குக்கும், சக்திக்கும் இரையாகாமல், சுற்றுப்புற சூழ்நிலைகளுக்கு இரையாகாமல் கல்வித் துறை வளர்ச்சிக்கு மட்டுமே பாடுபடவும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலிருந்து நடுநிலைப் பள்ளிகளும், துவக்கப் பள்ளிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இப்பள்ளிகள் அனைத்தும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள், கல்வித் துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். இப்படிச் செய்வதன் மூலமாக ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு இருக்கிற நியமன உரிமை பறிபோய்விடும் என்று ஒரு சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். ஆனால் நியமன உரிமையை வைத்துக்கொண்டு கல்வித் துறையின் வளர்ச்சி குன்றும்படியான காரியங்களைச் செய்ய இடமளிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். தமிழகம் இதைச் செய்வதன் மூலமாக பிற மாநிலங்களுக்கு நாம் ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் கோரிக்கை இன்றையதினம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. ஆரம்பக் கல்விக்காக இன்று பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம். அதனுடைய பலன் மக்களைப் போய்ச் சேரவில்லை. இதற்காக ஆசிரியர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் தங்களின் கல்விப் பணியைச் செய்ய முடியாதபடி சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். அவருடைய சொந்தக் கருத்தேகூட இதுவாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன் எனவே அமைச்சரவையில் இதுபற்றி விவாதித்து விரைவாக நல்லதொரு முடிவை எடுக்காவிட்டால், நாட்டில் வேறுவிதமான சூழ்நிலை ஏற்படுமென்பதை சற்று உரிமை கலந்த எச்சரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, கிராமப்புறங்களில் இளைஞர்களுடைய சக்தி அபரிமிதமாக, ஆனால் ஒருமுனைப்படுத்தப்படாமல் இருக்கிறது. படித்த இளைஞர்கள், படிக்காத இளைஞர்கள் ஆகிய இரு பிரிவினரின் சக்தி நாட்டில் மிகப் பெரிய அளவுக்கு இருக்கிறது. அந்தச் சக்தி விலை மதிக்க முடியாத சக்தியாக இருக்கிறது. இத்தகைய இளைஞர்களின் சக்தியை ஒருமுகப்படுத்தி, அவர்களுக்குச் செம்மையான பயிற்சியை அளித்து—ஆங்கிலத்தில் 'லீடர்ஷிப

1979 ஏப்ரல் 18] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

குவாலிட்டி' என்று சொல்லுகிறோமே—தலைமைப் பண்புகளை உருவாக்கும் முயற்சி, அதை நாம் இன்றுவரை உரிய வகையில் மேற்கொள்ளவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதன் காரணமாக அவர்களுடைய சக்தி இன்றையதினம் விரயமாகிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய சக்தியை ஒருமுகப்படுத்தி இந்த நாட்டுக்கு நல்ல பலன் தருகிற சக்தியாக மாற்ற வேண்டும். அந்த வகையில் அரசு அவர்களின் சக்தியை ஒருமுகப் படுத்தி, அவர்களுக்கு உரிய பயிற்சியை அளித்து, அவர்களிடையே தலைமைப் பண்புகளை வளர்த்து, அதன் மூலம் நாட்டுக்கும் சமுதாயத் திற்கும் அவர்கள் பயன்படும் வகையில் நிலைமைகளை உருவாக்கத் தேவையான ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி வளர்ச்சியிலும், சமுதாய வளர்ச்சியிலும் என்னென்ன முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டுமென்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் மிகத் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் துறையின் அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. கா. காளிமுத்து அவர்கள் நல்ல ஆர்வத்தோடும், ஆற்றலோடும் இந்தத் துறையை நிருவகித்து வருகிறார்கள் என்ற முறையில் நான் முதற்கண் என்னுடைய பாராட்டுதல்களை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊர்ப்புற வளர்ச்சியில், நம்முடைய நாட்டு மக்களுடைய வாழ்க்கையிலிருக்கிற எல்லாப் பகுதிகளுமே அடங்கியிருக்கின்றன. இன்றையதினம் கிராமப்புறத்திலுள்ள குழந்தைகள் நல்ல ஊட்டச் சத்துள்ள உணவைப் பெற முடியாத நிலையில், 'கேர்' நிறுவனத்தின் ஒத்துழைப்போடு நல்ல ஊட்டச் சத்துள்ள உணவு அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, 'கேர்' நிறுவனத்தின் மூலம் கொடுக்கப்படுகிற உணவு அந்தக் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையில் ஒரு சிறு பகுதியினரைத்தான் போய்ச் சேருகிறது, முழுப் பகுதியினரையும் சேரவில்லை என்பது தெரிகிறது.

பொதுவாக இப்படிப்பட்ட கொள்கை அறிவிப்பு அறிக்கைகளில் என்ன குறிப்பிடப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன் என்றால், தமிழ் நாட்டிலுள்ள 5 வயதுக்குக் குறைவான எல்லாக் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துள்ள உணவு இத்தனை ஆண்டுக்குள் வழங்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட வேண்டும். நம்முடைய அய்ந்தாண்டுத் திட்டங்களிலெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் நாம் என்னென்ன காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று அறிவிக்கிறோம். நம்முடைய நாட்டின் ஏழை எளிய குழந்தைகள்

[திரு. க. அறிவழகன்] [1979 ஏப்ரல் 18

அத்தனை பெருக்கும் ஊட்டச் சத்துள்ள உணவு வழங்கப்படுவதன் மூலமே அவர்களுக்கு நோய் வராமல் தடுக்க முடியும். மூளை வளர்ச்சி பாதிக்கப் படாமல் தடுக்க முடியும். எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய முக்கியமான பிரதிநிதிகளாக வீற்றிருக்கப் போகிற அவர்கள் ஊட்டச் சத்துக் குறைவு காரணமாக சமுதாயத்திற்குப் பயன்பட முடியாதவர்களாக இருப்பார்கள் என்றால், அதைவிட மிகப் பெரிய தொல்லை அல்லது மிகப் பெரிய சுமை தமிழ்ச் சமுதாயத்திற்கு வேறு எதுவும் இருக்க முடியாது.

(பிற்பகல் 4-40)

ஆண்டில் 300 நாட்களுக்கு, ஒரு இலட்சத்து முப்பதாயிரம் பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். முதல் வகுப்பிலிருந்து ஆறாவது வகுப்பு வரையிலே செல்லுகிற மாணவர்களின் எண்ணிக்கை 20 இலட்சமாகும். அப்படியானால் 5 வயதுக் குழந்தைகள் 25 இலட்சம் பேர்கள் இருப்பார்கள்; நான்கு வயதுக் குழந்தைகள் 30 இலட்சம் பேர்கள் இருப்பார்கள்; ஒன்று முதல் மூன்று வயது வரையில் இருக்கிற குழந்தைகள் 50 இலட்சம் பேர்கள் இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தக் கணக்கு தவறாக இருக்குமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான கணக்கை இந்தச் சபைக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், குழந்தைகளின் கணக்கை, கல்வித் துறையிலிருந்து நான் எடுத்துக்கொண்டேன். ஆகவே எல்லாக் குழந்தைகளுக்கும் சத்துணவு அளிப்பதற்கான பெரு முயற்சியை நம்முடைய சமுதாய வளர்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக கிராமங்களில் மீன் வளர்க்கின்ற பணியை பல்வேறு துறைகள் மேற்கொள்ளுகின்றன. ஆனால் முன்பு போல் மீன்கள், குளம், குட்டைகளில் இப்போது இல்லை என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராமங்களைப் பார்க்கிறபோது, நன்றாகத் தெரிகிறது.

இதற்குக் காரணம், குளம் குட்டைகளை நாம் சரியாக ஒழுங்கு படுத்தவில்லை என்பதுதான். ஒழுங்குபடுத்துகிற திட்டத்தை பொதுப் பணித் துறை செய்யுமா என்று கேட்டபோது, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். ஆகவே சமுதாய வளர்ச்சியில் அக்கறை உள்ள சமுதாய வளர்ச்சித் துறை கிராமங்களில் உள்ள குளங்களையும், குட்டைகளையும் ஒழுங்குபடுத்தி அங்குள்ள ஏழையெளிய மக்களுக்கு மீன் உணவை அதிகப்படுத்துவதற்கான பெரு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1979 ஏப்ரல் 18] [திரு. க. அறிவழகன்]

சமுதாயத் துறையிலே எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் கல்வித் துறையிலே எந்தப் பயிற்சியும் பெறாதவர்கள். அப்படிப்பட்டவர்கள் அந்தத் துறைக்கு நிர்வாகிகளாக இருக்கிற நிலைமை அந்தத் துறையில் உள்ள ஆசிரியர்களுக்கு மன வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்குப் பதிலாக கல்வித் துறையைச் சேர்ந்த ஆசிரியர்களை எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களாக நியமித்தால், அந்த ஆசிரியர்கள் பெருமகிழ்ச்சியடைய வழியிருக்கிறது. ஆகவே ஆசிரியர் பணியாற்றியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கு ஊக்கம் தருகிற முறையிலே அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாண எரிவாயுத் திட்டம் மிக நீண்ட காலமாகச் சொல்லப்படுகிறது. இத்திட்டம் ஆயிரம் கிராமத்திற்கு ஒரு கிராமத்தில்தான் இருக்கிறது. இதற்காக மத்திய அரசு ஸ்டேட் பாங்கியின் மூலமாகச் சில உதவிகளைச் செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும், சமுதாய வளர்ச்சி இலாக்காவின் சார்பில் இப்படிப்பட்ட ஒரு சாண எரிவாயு தயாரிக்கிற நிலையத்தை ஏற்படுத்தி அதிலிருந்து வருகிற எரிவாயுவை முடிந்தால் இலவசமாக, இல்லாவிட்டால் குறைந்த கட்டணத்திலே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைக்குக் கிராமங்களில் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். ஆகவே இத்திட்டத்தைத் துவக்கி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவிலே அமைகிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி-ஊரக வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றிப் பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஊரக வளர்ச்சித் திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டம் என்பது ஒரேயொரு இலாக்காவிலே மட்டும் இல்லை. எல்லா இலாக்காக்களிலும் இருக்கிறது. சமுதாய வளர்ச்சியை பல இலாக்காக்கள் ஒன்று சேர்ந்தால்தான் செய்ய முடியும். இங்கே பல அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பல திட்டங்களைப் போட்டு அனுப்புகிறார்கள். அதிலே ஒரு திட்டம் என்னவென்றால், ஊருணிகளை வெட்ட வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். குடிநீருக்காக பைப்புகளின் மூலமாகத் தண்ணீரை அனுப்பப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே ஊருணிகளை வெட்ட வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் ஆடு, மாடுகள் பைப்பில் வாயை வைத்துத் தண்ணீர் குடிக்க முடியுமா? (சிரிப்பு) ஆடு, மாடுகளுக்குத்

தண்ணீர் கொடுக்க குளம் குட்டைகள் இருக்கத்தான் வேண்டும். பைப் மூலமாக சுத்தமான தண்ணீர், அதாவது 'புரொடெக்டட் வாட்டர்' தரப் போவதாகச் சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஏன் ஆங்கிலத்திற்குப் போகிறார்கள் ?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, நன்றாகப் படித்தவர்கள் 'பூ' என்றும், மற்றவர்கள் 'புட்பம்' என்றும் சொல்லு வார்கள். அது மாதிரி நானும் சொல்லுகிறேன் இங்கிலீஷில். (சிரிப்பு) இந்த மாதிரிச் செய்தால், நாமெல்லாம் சிரித்துவிட்டுப் போவதைவிட வேறு ஒன்றும் செய்ய முடியாது. இதனால் பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. கிராமத்திலே பைப் மூலமாகத் தண்ணீர் வந்து அடுப்பில் உள்ள பாத்திரத்தில் விழும்படி செய்யப் போகிறார்கள் என்றால், கிராமங்களில் இருக்கிற ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் எப்படிக் கொடுப்பது ? இதெல்லாம் மற்றவர்களுக்குத் தெரியாதா ?

முன்பு ஒரு முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து 15 ஆயிரம் ரூபாய்க்கு மாடு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அது ஒரு நாளைக்குப் பதினைந்து லிட்டர் பால் கறக்குமென்றும் சொன்னார்கள். ஏழைகள் வாங்கி உபயோகப்படுத்துவதற்காக இதை இறக்குமதி செய்திருக் கிறோம் என்றும் சொன்னார்கள். இது கேலிக் கூத்தாக இருக்கிறது. பாம ஏழை எப்படி 15 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு மாட்டை வாங்கி ஒரு நாளைக்கு 15 லிட்டர் பாலை உற்பத்தி பண்ணுவான் ? இது பெரிய மனிதர் களுக்குத்தான் உதவும் ; இங்குள்ள உறுப்பினர்களால்கூட அதை வாங்க முடியாது. சில பெரிய மனிதர்கள் நாய் வளர்க்கிறார்கள். அவர்கள் அந்த நாய்க்கு ஒரு நாளைக்கு 5 ரூபாய் செலவு செய்கிறார்கள். அப்படிப்பட்டவர் களுக்குத்தான் இது பயன்படும். அந்த ஆடு மாடுகள் தண்ணீர் குடிப்பதற்கு

(பிற்பகல் 4-50)

எங்கே போவது ? அவைகள் தண்ணீர் குடிப்பதற்கு வேறு மாற்று யோசனை சொல்லுங்கள். எல்லாத் தண்ணீரையும் பைப்பிலே கொண்டுபோக வேண்டும் என்று சொல்கின்றீர்கள். அங்கே இருக்கும் ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்கத் தேவையில்லை என்கிறீர்களா ? அதைப் பற்றிக் கேட்டால் பரிசீலனையில் இருக்கிறது என்பார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : பத்து நிமிடம் என்று நேரம் கொடுத்தால், அதற்குள் என்ன சொல்ல முடியும் ? இங்கே வந்திருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் ரொம்ப விவரம் தெரிந்தவர்கள். கிராமத்திலே உள்ள நல்லது கெட்டதெல்லாம் தெரிந்தவர்கள். வேளாண்மையை எடுத்துக் கொண்டால், அவர்கள் என்ன சொல்கின்றார்கள் ? நெல் வேளாண்மையை விட்டுவிட்டு மற்ற பயிர் வகைகளை, பயறு வகைகளைப் போடுங்கள் என்று கூட சொல்கிறார்கள். ஆடு மாடுகளை வளருங்கள் என்று சொல்கிறார்கள், தண்ணீர்பற்றிக் கேட்டால், அது கிட்டேயே இருக்கிறது என்கிறார்கள். நல்ல தண்ணீர் அங்கே இருக்கிறது என்கிறார்கள். ஆட்டை வாங்குங்கள், மாட்டை வாங்குங்கள், அங்கேயுள்ள நிலத்தில் புல்லை வளர்த்து அதில் மாட்டை மேய்ச்சல் பண்ணுங்கள் என்று சொல்கிறார்கள். அந்த ஆடுகளும் மாடுகளும் தண்ணீர் குடிக்க எங்கே வருவது ? அங்கே என்ன ஊருணிகளா இருக்கின்றன ? அதையெல்லாம் உடனடியாக மராமத்து செய்ய வேண்டும். அப்படி இல்லை என்றால் என்ன ஆகும் ? எல்லாத் துறையிலும் முன்னேற வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் முன்னேறுவதற்கு என்ன வழிவகை இருக்கிறது ? ஏதோ நிர்வாகம் ஓடிக்கொண்டிருக்கிறது ; அதைத்தான் சொல்ல முடியும். நான் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்ல வில்லை. நாங்கள் என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி அதிகாரிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனிதர்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுப்பதற்கு பைப் வைத்துவிட்டோம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊருணி வெட்டக்கூடாது என்றோ, அவைகளை மராமத்து செய்யக்கூடாது என்றோ அரசாங்கம் எந்த ஆணையையும் இடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : இதற்கு முன்னாலே வெட்டிக் கொண்டு இருந்தார்கள். இப்போது இல்லை. இந்த 2 வருடமாக பஞ்சாயத்து யூனியனில் ஊருணிக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லும்போது அது கிடையாது என்று நான் மறுத்துச் சொல்வது நல்லதா ? அங்கெல்லாம் பைப் கொண்டுவந்து விட்டார்கள். அது ரொம்ப பெரிய உபகாரம்தான். அங்கே இருக்கின்ற ஆடு மாடுகளுக்கு, தண்ணீருக்கு என்ன செய்வது ? சிறு பிள்ளைகளுக்கு ஒரு பாட்டிலிலே ரப்பர் வைத்துக்கொடுக்கிறார்களே, அதுமாதிரி வைத்துக் கொடுத்துக் கொண்டிருக்க முடியுமா ? ஒன்றிரண்டு பிள்ளைகளைக் காப்பாற்றுவதே கஷ்டமாக இருக்கிறது. ஊரில் 4 ஆயிரம், 5 ஆயிரம் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டுவது என்றால், எப்படி முடியும் ? ஊருணிகள் கூட வெட்டப்பட்டன என்று, போட்டிருக்கிறார்கள், எத்தனை ஊருணிகள்

வெட்டப்பட்டன? பஞ்சாயத்துக்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்க வேண்டாம். பி.டபிள்யூ.டி.-யில் ஒப்படைத்து, அரசு நிர்வாகத்திலேயே வைத்துக்கொள்ளவேண்டும். அந்த ஊருணிகள் பூராவையும் பி.டபிள்யூ.டி.-யில் வைக்க வேண்டும். ஆடு மாடு அவற்றில் தண்ணீர் குடிக்கும். கிணறுகளில் தண்ணீர் இல்லாமலிருக்கும்போது, மனிதனும் அங்கே தண்ணீர் எடுத்துக் கொள்வான். தண்ணீர் இல்லையென்றால், எவ்வளவு கஷ்டம்? ஒவ்வொரு ஊரிலேயும் 10, 15, 20 ஊருணிகள் இருக்க வேண்டும். அந்தக் காலத்திலே யைப் வைத்தா தண்ணீர் எடுத்துக்கொண்டார்கள்?

நேரம் ஆகிவிட்டது போல் இருக்கிறது. தலைவர் அவர்கள் மணி அடிக்கப் பார்க்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மணி அடிக்கப்பார்க்கிறேன் என்பதல்ல. இப்போது அடிக்கப் போகிறேன். (சிரிப்பு)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: நேரம் இப்போது ஆகிவிட்டது என்பதற்காகச் சொல்லவில்லை. அதைப்பற்றி நான் குறைசொல்ல வரவில்லை. இந்த ஆசிரியர்களைப் பற்றியெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் பஞ்சபாண்டவர்கள். அவர்களைப்பற்றி நான் இங்கே குறைவாகப் பேசத் தயாராக இல்லை. அவர்களைப்பற்றி இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருந்தால், அவர்கள் இருவரையும் ஒரே பஞ்சாயத்தில் போடவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இது அவர்களுடைய வேண்டுகோள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்த மாதிரிதான் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். இங்கே நான் சொல்கிறேன். மூன்று ஆசிரியர்கள் ஒரு இடத்தில் பணிசெய்கிறார்கள் என்றால் அந்த இடத்தில் இரண்டு பேர்கள் கணவனும் மனைவியுமாக இருந்தால் போடுங்கள். இரண்டு பேர்கள் மட்டும் இருக்கின்ற இடங்களிலே, அவ்வாறு போடாதீர்கள். அந்த இடத்தில் அவர்களைப் போட்டால், இரண்டு பேர்களில் ஒருவர்தான் பள்ளிக்கு வருவார். யாராவது வந்தால் கேட்பார்களே என்று அந்தந் தேதியில் கையெழுத்துப்போட்டு வைத்துவிடுவார்கள். இதுதான் நடைமுறையில் நடந்துகொண்டிருக்கின்றது. இதைப்பற்றி மற்றவர்கள் சொல்வதற்குத் தயங்குவார்கள். ஆனால் நான் இதைக் கொஞ்சம் தைரியமாக நிமிர்ந்து சொல்கிறேன். இதனால் என்னைப் பொல்லாதவன் என்றுகூட சொல்வார்கள். அவர்களுக்குச் சம்பளம் போதவில்லை. இன்னும் கொஞ்சம் சம்பளம் கூட்டிக்கொடுக்க வேண்டும். போலீஸ்காரர்களுக்கு இதற்கு முன்பு சம்பளம் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோலவே ஆசிரியர்களுக்கும் கொஞ்சம் சம்பளம் அதிகப்படுத்திக்கொடுங்கள். சம்பளம் கொடுத்து

அவர்களுக்கு நல்ல வாழ்வளிக்க வேண்டும். அவர்களை நல்ல வழியிலே கொண்டுவந்துவிடலாம். பஞ்சாயத்துக்களிலே கிட்டத்தட்ட 350 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் நான் இப்படித்தான் பேசுவேன். கண்டிப்பாகத் தான் பேசுவேன். ஏன் இப்படியெல்லாம் தவறு செய்கின்றீர்கள் என்று கேட்பேன். நானும் அவர்களிடம் தவறாகக் கேட்கமாட்டேன். நான் கண்டிப்புப் பண்ணினாலும், என்னிடம் அவர்கள் அன்பாகத்தான் நடப்பார்கள். நானும் அப்படியே நடந்துகொள்வேன்.

ஆசிரியர்களுக்கு 7, 8 பிள்ளைகள் கூட இருக்கின்றன. ஆனால் இவர்கள் எல்லாம் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வதற்கு எங்கேயிருந்து ஆள் கொண்டு வருகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்களுக்கு இருக்கின்ற பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வதற்கு வேலைக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். ஒரு பிள்ளைக்கும் இன்னொரு பிள்ளைக்கும் இடைவெளிக் காலம் இருக்க வேண்டும். ஒரு பிள்ளையை இன்னொரு பிள்ளை தூக்கி வைத்துக் கொள்கிற அளவுக்காவது இடைவெளிக் காலம் இருக்கட்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். (சிரிப்பு) இப்படி அதிகமான பிள்ளைகள் இருப்பதால், அவர்கள் அந்தப் பிள்ளைகளைத் திட்டுகிறார்கள். அந்தக் குழந்தைகளை அடிக்கிறார்கள். இந்தச் சனியன்களை என்ன செய்வது என்று சொல்வார்கள். இப்படியெல்லாம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். உங்கள் சங்கதி என்ன என்று அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள். இங்கே நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்தந்த இலாக்காவிலேயே இருக்கிறார்கள். அவர்கள் இருந்து என்ன செய்கிறார்கள்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: உறுப்பினர் அவர்களுக்கு எத்தனை குழந்தைகள்?

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: எனக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏராளமான பிள்ளைகள். எனக்கு மூத்தது பெண்பிள்ளை. இளையது ஆண் பிள்ளை. நான் 1944-லிலே வேலூரிலே சிறையில் இருக்கும்போது என் சம்சாரம் இறந்துவிட்டாள். அதற்குப் பிறகு நான் மறு கல்யாணம் செய்து கொள்ளவில்லை. என்னுடைய மகளுக்கும் மகனுக்கும் நிறையப் பிள்ளைகள் இருக்கின்றன. இதுதான் என்னுடைய சரித்திரம்.

இப்போது ஊருணிகள் வெட்டிக்கொடுப்பதற்குரிய மாற்று வழிகளைச் செய்ய வேண்டும். அந்தக் குறைபாடுகளை நான் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதையெல்லாம் யார் நிவர்த்தி செய்கிறார்கள்? இந்தக் குறைபாடுகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதனால் என்ன

பயன் கண்டு? பஞ்சாயத்து யூனியன்களில் முடியாது. அவர்களால் பராமரிக்க முடியாது. ஆகவே பி.டபிள்யூ.டி. இலாகாவில் கொடுத்துவிடுங்கள். பஞ்சாயத்து யூனியன்களில் எத்தனையோ ஊருணிகள் இருக்கின்றன. எத்தனை ஊருணிகள் இருக்கின்றன என்று கணக்கு கேட்கிறார்கள். இப்போது குடிநீர் வாரியத்தினர் பைப் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். பைப் வைத்து தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதை தேவையானவர்களுக்குச் செய்ய வேண்டும்.

இப்போது சாண வாயு பற்றிச் சொல்கிறார்கள். திரு. அறிவழகன் அவர்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். இதையெல்லாம் சர்க்கார்தான் பண்ணிக் கொடுக்கின்றார்கள். மத்திய சர்க்காரிலே இருந்து உத்தரவு போடுகிறார்கள். இந்தச் சாண வாயு நீங்கள் கண்டு பிடித்ததா? மத்திய சர்க்காரிலேயிருந்து ஏதாவது உத்தரவு போடுகின்றார்கள். உடனே இங்கே அதைக் கொணர்ந்து விடுகின்றார்கள். அதற்காகப் பாடுபடுகிறார்கள். சாண வாயு எல்லாம் சும்மா கிடைக்கிறதா? அந்தச் சாணத்தை நாலு நாட்கள் ஊற்றி வைத்துப் பார்க்கிறார்கள் பெண்கள். அதில் வாயு வருகிறதா என்று. அதுதான் நடக்கிறது. அதற்கு அதிகாரிகள் என்ன பண்ணுகிறார்கள்? இந்தச் சாண வாயு வந்துவிட்டால், எவ்வளவு விறகு மிச்சம், எவ்வளவு எரிபொருள் மிச்சம்! இப்போது எரி பொருள்கள் கிடைக்கவில்லை. மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. பெட்ரோல், டீசல் இவைகள் எல்லாம் கிடைக்கவில்லை. இதையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். குடிக்க தண்ணீருக்கு வழியில்லை; ஒவ்வொரு ஊரிலும் ஊருணி வேண்டும். எல்லா நிபுணத்துவமும் செய்கிறார்கள். ஆனால் அங்கே ஆடுமாடுகளுக்கு குடிக்கத் தண்ணீர் வசதியில்லை. அந்த ஆடுமாடுகள் எல்லாம் எங்கே போகும் என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். எம்.ஏ. படித்திருக்கிறோம், நாங்கள் புரொபசராக இருக்கிறோம், நாங்கள் படித்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறோம். அப்படி இருக்கும்போது, நாங்கள் ஏன் அய்யா இப்படிக் காத்துக்கொண்டிருக்கிறோம்? எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

(திரு. அறிவழகன் எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவரை முடிக்க விடுங்கள்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அரசாங்கத்திலே அவர்கள் நல்ல எண்ணத்திலே செய்கிறார்கள். அது பலன் தரக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். ஏதோ பரிசீலனை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் உதவி பெற்று திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். லைசென்ஸ்

(பிற்பகல் 5-00)

கொடுக்கும் நேரத்திலே பார்த்துக் கொடுக்க வேண்டும். ஊருக்கு ஊர் 100 ரூபாய், 200 ரூபாய் என்று கட்டிவிட்டார்கள். லைசென்ஸை வாங்க முடியாமல், கலெக்டர் ஆபீசில் வரிசையாக நிற்கிறார்கள். இத்தமாதிரி எல்லாம் இருக்கிறது. கிராமங்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் பலர் எங்கள் பகுதியிலிருந்து சென்னைக்கு வந்தார்கள். ஊர்க்காரர்களும் அவர்களுடன் வந்திருப்பார்கள். இங்கே அண்ணா சாலையைத்தான் பார்த்திருப்பார்கள். வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடியாது . . .

(மாண்புமிகு தலைவர் மணியடித்தார்)

நல்லபடியாக குடிதண்ணீருக்கு வழி செய்ய வேண்டும். மனிதனுக்கு வேண்டிய குடிதண்ணீருக்கு வழி பண்ணிவிட்டார்கள். ஐம்பது மைல் தூரத்திலிருந்து தண்ணீர் வருகிறது. நான்கு நாட்களுக்கு என்ஜின் வேலை செய்யவில்லை என்றால், என்ன செய்யப் போகிறார்களோ, தெரியவில்லை. அதற்கெல்லாம் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சமுதாய நலக் கொள்கைக் குறிப்பை இந்த மன்றத்திலே வைத்து, மன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில் காரியங்களை ஆற்ற இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை என்பது மிகப் பெரியதொரு துறையாகும். இந்தத் துறையின் கொள்கைக் குறிப்பைப்பற்றி விவாதிக்க, மேலவைத் தலைவரவர்கள் ஒன்றரை மணி நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள்; மிகக் குறைந்த நேரம், பெரிய துறையைப் பற்றிய கொள்கைக் குறிப்பை விவாதிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறதென்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டிலாவது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இதை கவனத்திலே கொண்டு, ஒரு நாள் முழுமையாக ஒதுக்கக் கூடிய அளவிற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தத் துறை குறித்து விரிவான கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். கிராம மக்களுடைய முன்னேற்றத்திற்காக, கிராமங்களின் முன்னேற்றத்திற்காக, பாமர மக்களுடைய நல்வாழ்விற்காக, என் நாட்டின் முன்னேற்றத்திற்காக நடைபெறக்கூடிய காரியங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயிலாகத்தான் நடைபெறுகிறதென்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையிலே, இந்தத் துறையின் கொள்கை விளக்கத்தை உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்,

அவைகளைத் திரும்பத் திரும்பப் படித்தாலும், புதிய ஆட்சியாளர்களுடைய கொள்கை அதிலே பிரதிபலிப்பதாக எனக்குத் தெரியவில்லை. புதிய ஆட்சியாளர்கள் அல்லது உள்ளாட்சித் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அமைச்சரவர்கள், எந்த அடிப்படையிலே உள்ளாட்சித் துறை இயங்கி வந்தது என்பதையும், புதிய ஆட்சியின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டு மக்கள் நன்மைபெற இந்தத் திட்டங்களை மாற்றியமைத்து அல்லது புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோ மென்று சொல்லியிருந்தால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களை அதற்காகப் பாராட்ட முடியும். ஆனால் 1958 ஆம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின்கீழ் இயங்கக்கூடிய அடிப்படையிலேதான் காரியங்கள் இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கின்றன. அதிலே எந்தவித மாற்றமும் இல்லை என்ற அளவிலேதான் இன்றும் அந்தத் துறை இருக்கிறது என்பதை என்னாலே உணர முடிகிறது.

1976 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி கழக ஆட்சி கலைக்கப் பட்டது, உள்ளாட்சித் துறையிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகர மன்றங்கள் கலைக்கப்பட்டு, தனி அலுவலர்களை அரசாங்கம் நியமித்து, ஆளுநர் ஆட்சியிலே ஓராண்டும், அதற்குப் பின்னாலே மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்பு இரண்டு ஆண்டுகள் ஆகியும், இன்னமும் தனி அலுவலர்களே காரியங்களை கவனித்து வருகிறார்கள். தனி அலுவலர்கள் பொறுப்பேற்ற பிறகு, நிர்வாகம் எந்த அளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கிறதென்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ராஷ்டிரபதி ஆட்சி வந்தவுடன், அதிகாரிகளுக்கு ஏற்பட்ட பயத்தின் காரணமாக, சமுதாய நலத் திட்டப் பணிகளிலே கொண்டிருந்த நாட்டம் குறைக்கப்பட்டு, அவற்றைச் செயல்படுத்த அன்றைக்குத் தயங்கிய அதிகாரிகள், மக்கள் ஆட்சி வந்த பிறகும், வந்து இரண்டு ஆண்டுகளாகியும் அதே நிலையைத் தொடர்ந்து நீட்டித்துக் கொண்டிருக்கிறார்களென்பதை என்னால் சொல்லாமலிருக்க முடியாது.

சாலை வளர்ச்சியிலே ஒரு குறிப்பை மட்டும் நான் படித்துப் பார்த்தேன். 1976 ஆம் ஆண்டிலிருந்து 31—3—1978 வரை 131 கிலோ மீட்டர்தான் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டதாக குறிப்புகள் இருக்கின்றன. வளர்ந்து வரக்கூடிய சமுதாயத்தில், கிராமங்களை முன்னேறச் செய்யப் போகிறோமென்று சொல்லும் நேரத்தில், 3 ஆண்டுகளில் 131 கிலோ மீட்டர்தான் நாம் புதிதாக இணைப்புச் சாலைகளை அமைத்திருக்கிறோ மென்று சொன்னால், இது எந்த அளவிற்கு நம்முடைய மக்களுக்கு நன்மை

செய்யக் கூடியதாக அமைந்திருக்கிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உள்ளாட்சித் துறையின் மூலமாகத்தான் கல்வி, பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மருத்துவம், சாலை வசதிகள், குடி தண்ணீர் வசதி, தெரு மின் விளக்கு அமைத்தல், சுகாதார வசதிகளைச் செய்தல் போன்ற கிராமங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் இவைபற்றி, கொள்கைக் குறிப்பிலே பார்த்தால், ஒன்றுமே இல்லை. பள்ளிக்கூடக் கணக்கை எடுத்துப் பார்த்தாலும், புதிதாக ஆட்சிக்கு வந்தவர்கள் இரண்டு ஆண்டுகளில் அதிகமான பள்ளிக்கூடங்களைக் கட்டியதாகத் தெரியவில்லை. புதிதாக ஆரம்பித்த பள்ளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அமைக் கப்பட்ட தெரு விளக்குகள் மிகக் குறைவு. இணைப்புச் சாலைகள் மிகக் குறைவான தூரத்திற்குத்தான் போடப்பட்டிருக்கின்றன. 1,500 மக்கள் உள்ள கிராமங்களை, பக்கத்திலுள்ள பெரு நகரங்களோடு தார் போட்ட சாலைகள் மூலமாக இணைக்க வேண்டுமென்று கழக ஆட்சி இருந்தபோது திட்டமிடப்பட்டு, பணிகள் நடந்தன. ஆனால் அவைகளெல்லாம் அதே நிலையில்தான் இருக்கின்றன. குக்கிராமங்கள் தோறும் சாலைகள் போட வேண்டுமென்று ஏற்கெனவே திட்டமிட்டு, காரியங்கள் நடந்தன. 1976-க்குப் பின்னாலே, அந்தச் சாலைகள் பராமரிக்கப்படாமல், இன்றைக்கு எங்கு பார்த்தாலும் மேடு பள்ளமாக இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், பல கிராமங்களிலுள்ள சாலைகள் கற்றாழை முளைத்து, முள்ளும் கல்லும் நிறைந்துள்ள நிலையில் உள்ளன. அவை ஏற்கெனவே போட்ட சாலைகள் தானா என்று நினைக்கும் அளவிற்கு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன.

(பிற்பகல் 5-10)

அதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் இணைப்புச் சாலைகள் போடாமல் ஏற்கெனவே போட்ட இணைப்புச் சாலை களை நல்ல சாலைகளாக மாற்றி முக்கியத்துவம் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதிலே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மிக வேகமாக கவனம் செலுத்த வேண்டும். அந்த அடிப்படையில் செய்தால், ஏற்கெனவே போட்ட சாலை களைச் செப்பனிடுவதன் மூலம் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா கிராமங்களுக்கும் நல்ல சாலைகளை அமைத்துக் கொடுக்கும் பணியினை உள்ளாட்சித் துறை நல்ல முறையில் செய்ய முடியும். அதன் மூலம் மக்களிடத் திலிருந்து நல்ல பெயரைப் பெற முடியும். 1970 ஆம் ஆண்டிலே உள் ளாட்சித் துறைக்குத் தேர்தல் நடைபெற்றது. அது 1975 ஆம் ஆண்டிலே நடைபெற்றிருக்க வேண்டும். 1975 ஆம் ஆண்டில் நெருக்கடி நிலை

பிரகடனம் செய்யப்பட்டதால், அன்றைக்குத் தேர்தல் நடைபெறவில்லை. அதற்குப் பிறகு ஆளுநர் ஆட்சி வந்து போன பிறகு, இன்றைக்கு 1977 ஆம் ஆண்டிலே புதிய கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது. அப்போதே தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. அறிக்கையில் ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கின்ற பணி போன்ற பணிகள் முடிவுற்றதும் தேர்தல் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். வாக்காளர் பட்டியல் இறுதி வடிவம் பெற்றதும் இந்த ஆண்டு மத்தியில் தேர்தல் நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்தியில் என்றால், ஜூன் மாதமா இல்லை வேறு எந்த மாதத்திலாவதா என்கின்ற விவரம் இல்லை. எந்த மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று உறுதியாகச் சொல்லப்படவில்லை. நடைபெறாது என்ற அச்சம்தான் எனக்கு ஏற்படுகிறது. நடைபெறும் என்று உறுதியான வாசகத்தை அந்த அறிக்கையிலிருந்து நான் பெற முடியவில்லை. தேர்தலை நடத்த ஏன் இந்த அரசு அச்சப்படுகிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதிகாரிகளை நம்பி, காரியங்களைச் செய்கிறீர்கள். அதிகாரிகளை நான் குறை கூறவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், இன்றைக்கு தனி அதிகாரிகள் மூலம் நிர்வாகத்தை நடத்துவதால் அதிகாரிகளிடையே ஒரு பயம் வந்து விட்டது. மக்கள் பிரதிநிதிகள் இருக்கும்போது, பொறுப்பிலேயிருந்து அவர்களை எப்படி இறக்குவது, புதிதாக ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு தனி அதிகாரிகளைப் போடுவது, பிறகு முன்பு இருந்தவர்கள் மீது தவறு செய்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக விசாரணை போடுவது என்கின்ற நிலைமையெல்லாம் இன்றையதினம் பார்க்கின்றபோது, அதிகாரிகள் துணிந்து காரியங்களைச் செய்து, பிறகு விசாரணை என்று வந்து விட்டால், என்ன செய்வது என்கின்ற அச்சம் அவர்களிடையே இருக்கிறது. நானும் ஊராட்சி ஒன்றியத் தலைவராக தொடர்ந்து இரண்டு முறை இருந்தவன்தான். 1958 ஆம் ஆண்டிலேயிருந்து தொடர்ந்து ஊராட்சித் தலைவராக இருக்கிறேன். நெருக்கடி நிலை வந்ததும் என்னுடைய ஊராட்சி மன்றத்தைக் கலைக்க காரணத்தை அதிகாரிகள் தேடித் தேடி ஆராய்ந்து பார்த்தார்கள். ஒன்றுமே கிடைக்கவில்லை. அதன் பிறகு, மிசாவில் நான் கைதாகியிருந்த காலத்தில், காவல் துறை அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரையும் காவல் துறையினுடைய லாரியில் ஏற்றிக்கொண்டு அவர்களிடமிருந்து கட்டாயமாகக் கையொப்பம் பெற்று, கோட்டாட்சித் தலைவரிடம் அவர்களைக் கொண்டுபோய் கூட்டத்தைக் கூட்டச் செய்து, அதிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அப்படியும் தவறைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைக்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். இதற்கு என்று

தனியாக ஒரு கமிஷனை நியமியுங்கள். அதிகாரிகள் தவறு செய்துகொண்டிருக்கிறார்கள். எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில், எத்தனை ஆணையர்கள் தவறு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி நான் சொல்லித்தான் இந்த அரசுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. சென்னையில் மஸ்டர் ரோல் விவகாரம் நடைபெற்றதைப் பார்த்தோம். இன்றைக்கு கிராமப்புறங்களில் ஊராட்சி ஒன்றிய அளவில், மஸ்டர் ரோல் தயாரிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஒன்றியத்தில் மஸ்டர் ரோல் தயாரிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சாலைக்காகவும், குடிநீர் வசதிக்காகவும், பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகவும் கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்குகிறார்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக அப்படிப்பட்ட திட்டங்கள் குறைந்து வந்தாலும் கூட, ஒதுக்கப்பட்ட பணம் அந்தந்தக் காரியத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று நிச்சயமாக மாண்புமிகு தலைவரவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மஸ்டர் ரோல் விஷயத்தில் தவறான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வேகமானவர், துடிப்பானவர், இளைஞர். தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பார்கள். அவர் பாய்வார் என்று பார்த்தால், முதலமைச்சரைவிட மிக 4 அடி தூரம் வரைதான் பாய்கிறார். வேகமாகப் பாய முடியாத அளவுக்கு அவர் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறாரோ என்று நான் அச்சப்படுகிறேன்.

ஆளும் கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் தலையீடு இல்லையா என்றால், நிச்சயமாக அவர்கள் தலையிடுகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகாரிகள் இன்றைக்கு சென்னையிலிருந்து சேலத்திற்குத் தகவல் கொடுக்கிறார்கள். தந்தி வாயிலாக, டெலிகிராம் கொடுத்து ஒரு அதிகாரியை அங்கிருந்து மாற்றுமாறு சொல்லுகிறார்கள். அப்போது நேரம் 12 அல்லது 1 மணி இருக்கும். தகவல் வந்ததும் உடனடியாக டெலிகிராம் வாயிலாக ஊட்டிக்கு மாற்றுகிறார்கள். ஆனால் அதே மாதிரி இன்னொரு அதிகாரியை அதுவும் 80 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியவர் என்று ஆசிரியர்களால் குற்றம் சாட்டப்பட்டவர், லஞ்சம் வாங்குகிற வசூல் அதிகாரி என்று சொல்லி ஊராட்சி மன்றத் தலைவர்களை எல்லாம் பார்த்து ஆசிரியர்கள் எந்த அதிகாரியைப்பற்றி முறையிட்டார்களோ அப்படி முறையிடப்பட்ட ஒரு அதிகாரி, மஸ்டர் ரோலைத் தயாரிக்கிறார் என்று சொல்லி ஓமலூர் ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் யாருக்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்களோ அப்படிப்பட்ட ஒரு வசூல் அதிகாரியை முதலில் காடையாம்பட்டிக்கு மாற்றினார்கள். அதுவும் சிரமத்துக்குப் பிறகுதான் மாற்றினார்கள். ஆசிரி

பர்கள் போராட்டமே நடத்துகிறார்கள் என்று சொல்லி, அங்கிருந்து மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் பிறகு ஊட்டிக்கு மாற்றினார்கள். மீண்டும் அந்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மீண்டும் அவரைத் திருநெல்வேலிக்கு மாற்றுகிறார்கள். மீண்டும் அந்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. மீண்டும் வீரபாண்டிக்கு அவரை மாற்றுகிறார்கள். மீண்டும் அவர் காண்டியாம்பட்டிக்குப் போய் பணிபுரிய அனுப்பப்படுகிறார். இப்படிப்பட்ட மோசமான அதிகாரி என்பதுபற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். என்ன சொல்கிறார்கள் என்றால், ஆறுமுகம் தலையிட்டு காரியங்களைச் செய்கிறார்; இந்த ஆணையர் அதே ஒன்றியத்தில் இருந்தால் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பலமாக இருக்கும் என்ற தவறான தகவலை யாரோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் தந்திருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மீது நான் குற்றம் சொல்லவில்லை.

(தலைவரவர்களால் மணியடிக்கப்பட்டது)

உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு தடவைகூட நான் அந்த ஒன்றியத்திற்குச் சென்றதில்லை. ஆசிரியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொன்னார்கள். உண்ணாவிரதம் இருப்பதாகச் சொன்னார்கள். நேரில் சென்று பார்த்து உங்களுக்கு என்ன குறை இருக்கிறது, நீங்கள் எல்லாம் ஆசிரியப் பெருமக்கள், நல்ல மாணவர்களை உருவாக்கக் கூடியவர்கள், நீங்கள் அமைதியான முறையில் கோரிக்கைகளை வலியுறுத்துங்கள், ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து விட்டால், ஆசிரியர் சமுதாயத்துக்குத்தான் கெட்ட பெயர் வரும், உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நானும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மேல் மட்டத்தில் இருப்பவர்களுக்கும் எழுதி அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். உடனடியாக ஆணையாளர் ஆளும் கட்சியினைப் பிடித்து சோ. ஆறுமுகம் ஆசிரியர்களுக்கு 1,000 ரூபாய் கொடுத்து போராட்டத்தைத் தூண்டி விட்டார், போராட்டத்துக்கு அவர்தான் காரணம் என்று சொன்னதன் காரணமாக, அந்தப் பெரிய ஊழல் அதிகாரியை அந்த இடத்தில் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்து, "இத்தகைய நிலைமைகளுக்கு நீங்கள்தான் காரணம், பொறுப்பு" என்று நான் சொல்ல முடியாதா? ஆனால் நான் அவ்வாறு சொல்ல மாட்டேன். அப்படிப்பட்ட அதிகாரிகளை, ஊழல் அதிகாரிகளை இந்த அரசு ஏன் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன். உள்ளாட்சித் துறை மிக வேகமாகச் செயல்பட வேண்டிய ஒரு துறை. இன்றையதினம் அது மிக மிகத் தாமதமாக மக்களுக்குச் செய்ய வேண்டிய அடிப்படைக் காரியங்களைக் கூட நிறைவேற்றாமல் மிக

மெத்தனமாக நடைபோட்டுக்கொண்டிருக்கிறது என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே வேகமாக கவனத்தைச் செலுத்த வேண்டும். சமுதாயத்திலுள்ள ஏழையெளிய மக்கள் பெரிய மறுமலர்ச்சி பெற வேண்டும். நல்வாழ்வு பெற வேண்டும். இந்தத் துறை வேகமாகச் செயல்படவேண்டும். நல்ல காரியங்களை விரைந்து பாமர மக்களுக்காகச் செய்ய முடியாத இன்றைக்கு இருக்கின்ற நிலையைப் போக்கி இதில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். என்னுடைய ஆசையெல்லாம் இதுதான். கிராமப் புறங்கள் கடந்த 3 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்படுகின்றன. மக்களுக்கு எந்தவித நன்மைகளும் ஏற்படவில்லை. கிராமப் புறத்தின் வளர்ச்சிக்காக இருக்கின்ற உள்ளாட்சித் துறையில் ஊழல் நுழைந்துவிட்டது, அதை உடனடியாகக் களைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-20)

*திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி-ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நான் முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்தத் துறையினுடைய செயலாளரும், இங்கே இருக்கின்ற இயக்குநர்கள் எல்லோரும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், மிகச் சிறப்பாக அவர்களுக்கு ஆவன செய்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் ஆசிரியர் பிரதிநிதிகளாகிய எங்களைப் பஞ்சபாண்டவர்கள் என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் பஞ்ச அதாவது பஞ்சம்—பஞ்சத்திற்குப் பாண்டவர்கள், பஞ்சத்தைப் பார்த்தவர்கள்—பஞ்சப் பாட்டவர்கள் ....

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ரொம்பக் கட்டுப்பாடாக இருக்கிறோம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாதா?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: எங்களுடைய பிரச்சினை அப்படி இருக்கிறது. கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான், குடிக்கத்தான் கற்பித்தானா என அக்காலத்திலே பாடியது போல இக்காலத்திலும் வறுமையில் வாடிப் புலம்பிக்கொண்டுதானிருக்கிறோம். மேல்மட்டத்திலே இருக்கின்ற அமைச்சர்களும் அதிகாரிகளும் எந்த அளவுக்கு அக்கறை செலுத்தி பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று கருதுகிறார்களோ

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 ஏப்ரல் 18

அந்த அளவுக்கு மாவட்டங்களிலே இருக்கின்ற ஆட்சியாளர்கள் செயல்படவில்லை. நான் இங்கே பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறேன். அவைகள் மீது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனுக்குடன் உரிய உத்தரவுகளையும் பிறப்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இங்கே உத்தரவு பிறப்பிக்கப்படுகிறதே தவிர, அந்த உத்தரவுகள் அடிமட்டத்திலே இருப்பவர்களால் செயல்படுத்தப்படுகிறதா என்றால், இல்லை. அடிமட்டத்திலே இருப்பவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இல்லை, அவர்கள் அரசுச் செயலாளர்கள் போல இருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அநாவசியமாக ஆசிரியர்களின் பிரச்சினைகளில் தலையிட்டுக்கொண்டிருக்கிறார். ஆசிரியர்கள் விரும்பிக் கேட்டு, மாவட்டக் கல்வி அதிகாரியின் கன்சர்ன்ஸ் பெற்று, ஆசிரியர்களின் மாறுதலுக்கான உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று நியதி இருக்கிறது. திருத்துறைப்பூண்டி நகர்ப்பகுதி நகராட்சி மன்றமாக 1—4—1979-லே இருந்து மாறுகிறது. மாறுவதனால் கணவன்-மனைவியாக இருப்பவர்கள், மனமொத்த மாறுதல் வேண்டியவர்கள், குடும்பநலத் திட்டத்திலே கொஞ்சம் அதிகமாக ஒத்துழைத்தவர்கள் இவர்களில் நகர்ப் பகுதிக்கு வர விரும்பியவர்கள் எல்லாம் மாறுதல் தரவேண்டும் என்று கேட்டார்கள். ஆசிரியர்களின் இந்த நியாயமான கோரிக்கையின் மீது மாவட்டக் கல்வி அதிகாரி அவர்களின் உத்தரவைப் பெற்று போடப்பட்ட உத்தரவை மாற்றி, திருத்துறைப்பூண்டி பகுதியிலே இரண்டு ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதாகவும் அவர்களை ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று மாவட்டக் கல்வி அதிகாரி தந்த குறிப்பின் அடிப்படையிலே ஏற்கனவே நகர் பகுதிக்கு மாற்றப்பட்டவர்கள்; ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு மாற்றப்பட்டார்கள். அவர்கள் தாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்று ஒரு பெட்டிஷன் கொடுத்தார்கள். அந்த பெட்டிஷன் மீது எந்தவிதமான விசாரணையும் செய்யாமல், சம்பந்தப்பட்ட அந்த ஃபைலைக்கூட வாங்கிப் பார்க்காமல், சட்டப்படி போட்ட மாறுதல் உத்தரவை வேண்டுமென்றே, அநாவசியமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேன்சல் செய்து விட்டார்கள். கணவனும் மனைவியும் ஒன்றாக ஒரு பள்ளியில் பணிபுரிந்தால் ஒருவர்தான் பள்ளிக்குப் போகிறார் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருட்டின தேவர் குறிப்பிட்டார். நிலைமை அப்படியில்லை. தேவர் அவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் என்ற அணியில் அவர் ஒன்றியத்தில், அவருக்கு வேண்டியவர் யாராவது அவ்வாறு இருந்திருக்கலாம். பெருந்தலைவர்கள் என்ன? "நான் யார் தெரியுமா? பஞ்சாயத்து போர்டு மெம்பர்?" என

1979 ஏப்ரல் 18] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ஆசிரியர்களை மிரட்டக்கூடிய-மெம்பர் என்றுகூட சொல்லத் தெரியாதவர்களின் தயவிலே இருப்பவர்கூட இவ்வாறு நடந்துகொள்ளக்கூடும். ஆனால், நாடு பூராவும் இந்நிலை இல்லை.

கணவன்-மனைவி ஒன்றாகப் பணிபுரிய வாய்ப்பளித்தல், மனமொத்த மாறுதல் வேண்டியோருக்கு மாறுதல் தருதல் போன்ற நியாயமான முறையில் நடந்திருந்த மாறுதல் ஆணையை ரத்து செய்தது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் சொன்னபோது, கலெக்டர் அவர்களுடைய ஆணையை நிறுத்தி வைத்து 'ரிமார்க்ஸ்' கேட்கச் சொன்னார். அந்தமாதிரி யாவது ஆட்சித் தலைவர் செய்திருந்தால், சரியாக இருந்திருக்கும். நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் ஊதிய நிர்ணயம் சம்பந்தமான அரசாணையை அவர் அமுல்படுத்தாததை எதிர்த்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். நானும் அதைப்பற்றி இங்கே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். மேலும், அங்கு நடந்த மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்திற்கு என்னை அழைக்கவில்லை என்று குற்றம்சாட்டிப் பேசினேன். இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு ஆசிரியர்களுக்குத் தொல்லை தர வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மாறுதல் உத்தரவை ரத்துசெய்திருக்கிறார். அமைச்சர் அவர்கள் பிறப்பித்த உத்தரவை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு, ஒரு வாரத்திற்கு மேலாக ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்படவில்லை என்றால், ஆசிரியர் மன்றம், ஆசிரியர் கூட்டணி ஆகிய இரண்டு அமைப்புகளும் சேர்ந்து மறியல் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். நான் அவர்களிடம், அமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கைகளை எடுப்பேன் என்று ஒரு உறுதிமொழி அளித்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண்பதோடு, தஞ்சாவூரிலே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் இந்தப் போக்கு உடனடியாகக் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே நடத்தாட்டியர்கள் இருக்கிறார்கள் (கண்டக்டர்கள்). அவர்களுக்கு மாதம் 120 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. அதை இப்போது 20 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பு இருந்ததுபோல் 120 ரூபாய் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கோவை நகராட்சியிலே நடத்தாட்டிகள் 100 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 30 பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்கள். நடத்தாட்டிகள் என்ற பெயரில் அவர்களை எழுத்தர்களாக, அட்டெண்டர்களாகப் பயன்படுத்தி வருகிறார்கள் அட்டெண்டர்களுக்குப் புதிதாக

ஆட்களை நியமனம் செய்கிறபோது, தங்களை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்படவில்லை. அட்டெண்டர்கள் நியமிக்கப்படும்போது, ஏற்கெனவே பணியாற்றிவரும் இந்த நடத்தாட்டியர்களை அந்தப் பதவிகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1969 ஆம் ஆண்டு வறட்சியின்போது கோடை விடுமுறையில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு போடவேண்டுமென்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஈட்டிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த விடுப்பு இன்றுவரையிலும் பல்வேறு நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அந்த விடுப்பை வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1974 ஏப்ரல் முதல் தேதியிலே தேர்வு நிலை பெற்ற ஆசிரியர்களுக்கு அந்த ஆண்டு ஊதிய உயர்வோடு, புஷைலைல் இன்கிரிமென்ட் நாளிலே—வழக்கமாகத் தரப்படுகின்ற ஊதிய உயர்வோடு மேலும் ஒரு ஊதிய உயர்வு தரப்பட வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. அது இன்றையதினம் அமுல்படுத்தப்படவில்லை. ஆகவே, அதையும் அமுல்படுத்தி ஆசிரியர்களுக்கு உரிய ஊதிய உயர்வை அளிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியிலேயும், மற்றும் தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலேயும் உருதுப் பள்ளிகள் இருக்கின்றன. பெண்கள் பள்ளிகள் 20 இருக்கின்றன. ஆண்கள் பள்ளிகள் 17 இருக்கின்றன. நடுநிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. தமிழ் நாட்டிலே உள்ள இந்தப் பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. முஸ்லிம்கள் தமிழ் படிக்க விரும்புகிறார்கள். உருது படித்தால் வேலை வாய்ப்பு இல்லை என்று அவர்கள் தமிழ் படிக்க விரும்புகிறார்கள். ஆகவே, சென்னை மாநகரத்தில் இருக்கும் உருது பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் 5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1974 ஆம் ஆண்டு வேலையில் சேர்க்கப்பட்டு, 1975, 1976, 1977 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர்கள் ஊதிய உயர்வைப் பெற்றனர். ஆனால், 1978-ல் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்காமல் நிறுத்திவிட்டார்கள். அவர்களுக்கு, மீண்டும் ஊதிய உயர்வு அளிக்கலாமா என்று விளக்கம் கேட்டு மாநகராட்சியிலிருந்து அரசைக் கேட்டிருக்கிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்டோர் 209

பேர்கள் இருக்கிறார்கள். ஊதிய உயர்வு அளிக்காததால், அவர்களுடைய வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி போன்ற மற்ற அலவன்சுகள் எல்லாம் குறைகின்றன. இக்குறை உடன் நீக்கப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் அப்பரண்டிஸ் ஆசிரியர்களாக 14—4—1966-லே வேலையில் நியமிக்கப்பட்டவர்கள் சட்டவிரோதமாக வேலையைவிட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 4 பேர்கள்தான் தொடர்ந்து பணியில் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்கள், அவர்களுடைய பணி வரன்முறை செய்யப்படாமல் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்படவில்லை. ஆகவே, அதைத் திரும்பப் பரிசீலித்து அவர்களை மீண்டும் வேலையில் எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்கள் தமிழாசிரியர் தேர்வுக்குரிய என்ட்ரன்ஸ் பாஸ் செய்து, பிரிலிமினரி பாஸ் செய்து, ஃபைனல் பாஸ் செய்து புலவராக வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாத் துறைகளிலேயும், பள்ளிகளிலேயும் பரவலாக வேலை அளிக்கிறார்கள். ஆனால், இந்தக் கார்ப்பரேஷனிலே மட்டும் புலவர் பயிற்சி பெற்றிருந்தால் தான் அவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியும் எனக் கூறுகிறார்கள். பயிற்சிக் கல்லூரியிலோ பள்ளியிறுதித் தேர்விலோ ஆங்கிலத்தில் 40-க்கும் குறையாமல் மார்க் பெற்றிருந்தால்தான் இடந்தர முடியும் எனக் கூறுகிறார்கள். இந்த 'மார்க்' இருந்தால், பின்னர் என்ட்ரன்ஸ் தேர்வு ஏன்? இவ்வாறு ஆறு பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பாதிப்பை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சிப் பள்ளிகளில் தலைமையாசிரியர் நியமனம் முறையாக நடைபெறவில்லை. அவர்களுக்கு முறையாக ஊதியம் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி மதிய உணவுக்கூடப் பொறுப்பு சுகாதார இலாகாவிலே இருந்தது. அது கல்வி இலாகாவுக்கு 1973-லே மாற்றப்பட்டது. கல்வித் துறையிலே உள்ள மேற்பார்வையாளர்கள், தலைமையாசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் எல்லாம் அதைச் செயற்படுத்துகின்ற பணியிலே ஈடுபடுத்தப்பட்டார்கள். இவர்கள் எல்லாம் சமையற்கலை கற்றவர்கள் அல்ல. அதுமட்டுமல்ல, அவர்களுக்கு அதுபற்றிய அனுபவம் இல்லாத காரணத்தினால், சமையல் செய்யப்படுகின்ற உணவில் தரம் இல்லை, சுவை இல்லை, வேளைவேளைக்கு உணவு கிடைப்பதில்லை, இத்தனைக்கும் மேலாக அந்தப்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 ஏப்ரல் 18

பணியிலே ஆசிரியர்கள் ஈடுபட்டிருப்பதால், வகுப்புகளில் ஆசிரியர்கள் இருப்பதில்லை, கல்வியின் தரமும் உயரவில்லை. ஆகவே, உணவுத் துறையை மீண்டும் முன்பு இருந்தது போலவே சுகாதார இலாகாவிற்கு மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைஞாயிறு பேரூராட்சிப் பகுதியிலே, தலைஞாயிறு, கொக்காலடி இணைப்புப் பாதையில் மல்லியநாறு, நல்லாறு பால வேலைகள் டெண்டர் விட்டு இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் துவக்கப்படவில்லை. இதனால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தலைஞாயிறு பேரூராட்சிக்கு உட்பட்ட பழையாற்றங்கரை சாலை பழுதுபார்க்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகின்றன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் இதனாலே பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாலுவேதபதி என்ற பஞ்சாயத்து, வடக்கு-தெற்கு என இருக்கிறது அந்தப் பஞ்சாயத்தை நடுவிலே உள்ள கொட்டையபிடியாறு என்ற ஆறு இரண்டாகப் பிரிக்கிறது. அது உப்பதாறு. அந்த ஆற்றுக்கு நடுவிலே பாலம் இல்லாததால் 55 தோணித்துறை என்ற இடத்திலுள்ள தோணியிலேதான் ஒரே ஊரைச் சேர்ந்த மக்கள் வடக்குப் பக்கத்திற்கும், தெற்குப் பக்கத்திற்கும் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் ஆகவே, அந்த இடத்தில் மிக விரைவிலே ஒரு பாலம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இவைகள் எல்லாம் ஆசிரியர் தொகுதிக்கு அப்பாற்பட்ட விஷயங்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர் பிரதிநிதிகள் ஆசிரியர்களின் பிரச்சினைகளைப்பற்றி மட்டும் தான் பேச வேண்டும் என்பதல்ல முறை. மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசாவிட்டால், ஆசிரியர் பிரச்சினைகளைத் தவிர மற்ற பிரச்சினைகள் பற்றி அவர்கள் பேசவில்லை என்ற குற்றச் சாட்டுக்கும் ஆளாவோம். ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். சில்லறைச் செலவினத் தலைப்பு ஊழியர்களில் அரசுத் துறைகளில் பணியாற்றியவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப் போல ஊராட்சி ஒன்றிய இரவுக் காவலர்கள், பள்ளி ஆயாக்கள், சாலைப் பணியாளர்கள் போன்றவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மகப்பேறு ஆயாக்களும் நிரந்தரம் செய்யப்பட்டு, அவர்களுக்குப் பணிப்பாது

1979 ஏப்ரல் 18] [திரு. ஆ. நல்லசிவன்]

(முற்பகல் 5-30)

காப்பு அளிக்கப்படவேண்டும். கடைநிலை ஊழியர்களுக்கு சைக்கிள் வாங்கக் கடன், மற்றும் வீடு கட்டவும் கடன்களை வழங்க வேண்டும். பள்ளிகளில் 200 பிள்ளைகள் இருந்தால்தான் ஒரு ஏவலாளர் நியமிப்பது என்ற நிலையை மாற்றி 150 பிள்ளைகள் இருந்தாலே ஒரு ஏவலாளர் நியமிக்கப்படலாம் என்று ஆணையிட வேண்டும். தகுதியுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு பதிவுரை எழுத்தர் பணி அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு தகவலை அறிய விரும்புகிறேன். அவர் ஏற்கெனவே அறிவித்தபடி, வரும் ஜூன் மாதத்தில் உள்ளாட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமா என்பதை இங்கே உறுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் 1½ மாதத்திற்கு முன்பு அத்தகைய உறுதிமொழியைத் தந்தார்கள். தற்போது இருக்கும் நிலவரத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நான்கு கட்டமாக நடைபெற வேண்டியிருக்கிறது—அதாவது பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், முனிசிபாலிடிகள், கார்ப்பரேஷன்கள் என்று நான்கு கட்டங்களில் நடைபெற வேண்டியிருக்கிறது. எனவே, அவர் முன்பு வாக்குறுதி அளித்தபடி, ஜூன் மாதத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கான எல்லாத் தேர்தல்களும் நடத்தப்படுமா என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சி நிருவாகத்தில் வேலைகளுக்கான ஆட்களைத் தேர்வு செய்யும்போது, 'கம்யூனல் ரொட்டேஷன்' என்று வழங்கப்படும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை மேற்கொள்ளப்படுகிறது. அந்த அடிப்படையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால், இது சரிவர அமுல்படுத்தப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், அவர்கள் சரியாகக் கண்காணிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். புளியங்குடி நகராட்சி மன்றத்தில் தற்போது சுமார் 50 பேர் வேலை செய்கிறார்கள். அதில் ஒரு நபர்தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கிறார். அவர் பில் கலெக்டராக இருக்கிறார். முறைப்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அடிப்

படையில் ஆட்களை வேலைக்குச் சேர்த்திருந்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய 18 சதவிகிதம் அடிப்படையில் குறைந்தது 8 அல்லது 9 பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும்.

இப்போது அவர்கள் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால், முதலில் ஓப்பன் காம்படிஷன், அடுத்தது பேக்வார்டு கிளாஸ், கடைசியில் ஷெடியூல்டு கேஸ்ட் என்று டர்ன் சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். இந்த வருஷம் அந்த நகர சபையில் ஒரு டைப்பிஸ்ட் வேலை காலியானபோது, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கிடைக்க வேண்டிய அந்த இடத்தை ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்து அவரை நியமித்துவிட்டார்கள். அவர் தற்போது விடுமுறையில் சென்றிருக்கிறார். அப்படி விடுமுறையில் சென்றதால் ஏற்பட்ட காலியிடத்திற்கு ஆள் கேட்கும்போது, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து ஒரு தாழ்த்தப்பட்டவரை அனுப்பும்படி கேட்டு அவரை நியமித்தார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சைக் கேட்டவர்கள் நிரந்தர வேகன்சி ஏற்பட்ட போதே, தாழ்த்தப்பட்டவரை அனுப்பச் சொல்லி கேட்டு நியமித்திருக்கலாம். அப்படிச் செய்யாமல், இப்போது விடுமுறை காரணமாக ஏற்பட்ட லீவ் வேகன்சியில் மட்டும் ஒரு தாழ்த்தப்பட்டவரை நியமித்தால், இப்போது அதை யொட்டி ஒரு தகராறு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 16 ஆம் தேதி 10,000 ஹரி ஜனங்கள் ஒன்றுகூடி நகராட்சியின் இந்தச் செயலை ஆட்சேபித்து ஆர்ப் பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். அடுத்து, உண்ணாவிரதம் மேற்கொண்டிருக் கிறார்கள். 20 ஆம் தேதி பஸ்களுக்கு முன்னால் மறியலும் ஊர்வலமும் நடத்த இருக்கிறார்கள். பேக்வார்டு கம்யூனிட்டியைச் சேர்ந்தவருக்குப் போடப்பட்ட நியமன உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று அவர்கள் கோரி வருகிறார்கள்.

ஏற்கெனவே இருக்கிற சமுதாயப் பிளவுகள், போராட்டங்கள் போதாது என்று இன்றையதினம் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்குமிடையே ஒரு மோதல் ஏற்பட்டிருக்கிறது. புளியங்குடி நகராட்சி மன்றத்தைச் சார்ந்தவர்கள் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையைச் சரியாக அனுஷ்டிக்காத காரணத்தால், இன்றைக்கு 10,000 ஹரி ஜனங்கள் புளியங்குடியில் கூடி போராட்டம் நடத்துகிறார்கள். 20 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துகிற நிலையும் இருக்கிறது. இப்படி நகராட்சி நிரு வாகங்களில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் சரிவரக் கடைப்பிடிக்கபடவில்லை என்றால், என்ன நிலைமைகள் உருவாகும் என்பதற்கு புளியங்குடி ஒரு எச் சரிக்கையாக இருக்க வேண்டும். அங்கே இருக்கும் தாழ்த்தப்பட்ட சமு தாயத்தைச் சேர்ந்த மக்கள் நோட்டீஸ் போட்டு 20 ஆம் தேதி பஸ்களின் முன்னாலே மறியல் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அமைச்சர்

அவர்கள் இனியாவது இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் அரசு தலையிட்டு நியாயம் வழங்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதில் ஒரு தவறு நடந்திருக்கிறது. தவறு நேர்ந்திருக்கிறது என்று உள்ளாட்சித் துறைச் செயலாளர் அவர்களே கையெழுத்துப்போட்டு ஜி.ஓ. ஒன்றை 6—2—1979ல் பிறப்பித்திருக்கிறார்கள். அதில் அவர் பி.டி.ஓ. (வட்டார வளர்ச்சி அலுவலர்கள்) 5 பேருக்குப் பதவி உயர்வு அளிப்பதில் தவறு நேர்ந்துவிட்டது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 1963 ஆம் ஆண்டு வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகப் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டிய 5 நபர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படாமல், அவர்களுடைய ஜூனியர்களுக்கு அப்போது பதவி உயர்வு அளிக்கப்பட்டு, அவர்கள் வட்டார வளர்ச்சி அதிகாரிகளாகப் பணியாற்றி வந்தார்கள். 1966 ஆம் ஆண்டில்தான் இந்த 5 பேருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இப்போது என்ன பிரச் சினை எழுந்திருக்கிறது என்றால், ஜூனியர்களாக இருக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தற்போது டி.டி.ஓ.க்களாகப் பதவி உயர்வு பெற்று விட்டார்கள். 5 சீனியர்கள் பி.டி.ஓ.க்களாகப் பணியாற்றும்போது, அவர் களுடைய ஜூனியர்கள் டி.டி.ஓ.க்களாகப் பதவி உயர்வு பெற்றுவிட்டார்கள். இதற்கு என்ன மூலகாரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், கிராம சேவ கர்களாக (கிரேடு 1) இருந்தவர்களை எக்ஸ்டென்ஷன் ஆபிசர் (எஜூகேஷன்) என்று பதவி உயர்வு அளிக்காமல் அவர்களை எக்ஸ்டென்ஷன் ஆபிசர் (இன்டஸ்ட்ரி) என்று போடப்பட்டதுதான் என்பதாகும். எந்த ஒரு காரியத் திற்கும் அரசாங்கத்தில் காரணத்தைச் சொல்லிவிடுவார்கள். ஒன்று உண்மைக் காரணம், மற்றது பொருத்தமான காரணம். எனவே இந்தத் தவறு எப்படி ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய துறையில் பதவி உயர்வு அளிப்பது என்பது ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை இனியாவது நல்ல முறையில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் இதை நான் இங்கே குறிப்பிடுகிறேன். ஜி.ஓ. எண் 203— நாள் 6—2—1979-ல் பதவி உயர்வு அளிப்பதில் தவறு நடந்துவிட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு யார் காரணம், பொறுப்பு என் பதைப் பார்க்க வேண்டும். இதற்குப் பொறுப்பானவர்கள் மீது சரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 18

அடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் உள்ள குறைபாட்டைக் குறிப்பிட விரும்புகிறேன். காலையில் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதில் உள்ளாட்சித் துறையில் நிலவும் கட்டாயப்படுத்துதல் குறித்துக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மருத்துவத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லுவதில் பயனில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர்தான் அதற்குப் பொறுப்பானவர் என்று இதைச் சொல்ல விரும்புகிறேன்.

கடையம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார். அதை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"தீவிர குடும்ப நல அறுவைச் சிகிச்சை இயக்கத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட குறைபாட்டைக் கண்டிப்பாக ஒவ்வொரு களப் பணியாளரும் கடைப்பிடித்தாக வேண்டும். அவர்கள் தங்களுடைய சாதனைக் குறியீட்டை அடையத் தவறினால், சம்பந்தப்பட்ட பணியாளர்கள்மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கடையம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி கையெழுத்துப் போட்டு அவரிடம் பணியாற்றுகிற அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஒரிஜினலையே இங்கே கொண்டு வந்திருக்கிறேன். இந்த நிலையில் நிர்பந்தப்படுத்துவதில்லை என்று சொல்வது சரியல்ல என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பிரச்சாரத்தின் மூலம் நடத்த வேண்டியவைகளை நிர்ப்பந்தப் படுத்தி செய்யச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் நடைமுறையில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களும் உணர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அதிகாரி தானே இப்படி ஒரு உத்தரவைப் போட்டிருக்க மாட்டார். அவருடைய துறையிலிருந்து அவருக்கு மேலே உள்ள அதிகாரி யாராவது ஒருவர் இத்தகைய உத்தரவை அவருக்குப் போட்டிருந்தால்தான், அந்த அதிகாரி இந்த உத்தரவைப் போட்டிருப்பார் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, தெரு விளக்குகள் பற்றிய பிரச்சினையை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி, 7 மாவட்டங்களுக்குத் தேவையான தெருவிளக்கு மின் கம்பங்களுக்குத் தேவைப்படும் மின்சார பல்புகளுக்காக 6, 7 மாதத்திற்கு முன்னாலே டைரக்டர் ஆப் ரூரல் டெவலப்மெண்ட், ஹரியானாவில் உள்ள ஒரு எலெக்ட்ரானிக் கம்பெனிக்கு ஆர்டர் போட்டிருக்கிறார். அந்த பல்புகள் இதுவரை வந்து சேரவில்லை. அதிகாரிகள், பல்புகள் தேவை என்று அந்தக் கம்பெனிக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். சென்னையில் அந்தக் கம்பெனிக்கு ஒரு ஆபிஸ் இருக்கிறது.

1979 ஏப்ரல் 18] [திரு. ஆ. நல்லசிவன்]

அந்த ஆபிசிலிருந்து ஹரியானா கம்பெனிக்கு 'போன் கால்' போட்டால், பதில்கூட வருவதில்லையாம். இப்படி 7 மாவட்டங்களுக்குத் தேவையான பல்புகளுக்கு ஹரியானாவில் உள்ள எலெக்ட்ரிக் கம்பெனிக்கு ஆர்டர் போட வேண்டிய அவசியம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும். ஏன் காலாகாலத்தில் அந்தக் கம்பெனியால் சப்ளை செய்ய முடியவில்லை என்பதையும் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, ஒரு மின்சாரக் கம்பத்திற்கு 3 பல்புகள்தான் ஒரு வருடத்திற்குப் போடலாம் என்று இருக்கிறது. இப்படித் தரக்குறைவான பல்புகளைப் போடுவதால் 3, 4 மாதங்களுக்குள்ளாகவே இந்த 3 பல்புகளும் தீர்ந்து விடுகின்றன. எனவே பாக்கி இருக்கிற மாதங்கள் பூராவும் தெரு விளக்குகள் எரியாத நிலைமை ஏற்பட்டு ஊர் முழுவதும் இருட்டாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

ஆகவே, தரமான பல்புகளைப் போட்டால், விளக்கெரியும். பல்புகள் தரமாக இருக்கிறதா என்பதை செக்-அப் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டும். பல்புகளை வாங்குவதில், தரக்குறைவானவற்றை வாங்கும் ஊழல் இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். வருடத்திற்கு மூன்று பல்புகள் என்று கணக்கிருக்கிறது. இது வருடம் பூராவுக்கும் போதவில்லை என்ற கம்ப்ளைன்ட் இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழ் நாட்டில் 17 ஆயிரம் ஆழ் கிணறுகள் இருக்கின்றன. ஆழ் கிணறுகளைக் கவனிக்க பஞ்சாயத்து யூனியனில் ஒரேயொரு பிட்டர்தான் இருக்கிறார் என்றும் 70 சதவிகிதம் ஆழ் கிணறுகள் சரியாக வேலை செய்யவில்லையென்றும் சொல்லுகிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மையென்பதைப் பார்க்க வேண்டும்.

கிராமங்களில் இணைப்புச் சாலைகளைப் போடுகிறபோது, ரோடு போட வேண்டுமென்ற உற்சாகத்தில், கிராமத்திலுள்ளவர்கள் தங்களுடைய நிலத்தில் சாலைகளைப் போடும்படி முதலில் சொல்லுகிறார்கள். அதற்குப் பிறகு ரோடு சரியாக பராமரிக்கப்படாததால், நிலச் சொந்தக்காரர்கள் அந்த ரோட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டியெடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இது மாதிரி கம்ப்ளைன்ட்டுகள் தர்மபுரி மாவட்டத்திலிருந்து வருகிறது. ஆகவே இணைப்புச் சாலைகளைப் போடுவதற்கு முன்பே அந்த நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து எழுத்து மூலமாக அந்த நிலங்களை அரசுக்கு அவர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று எழுதி வாங்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 ஏப்ரல் 18

வீட்டு வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. மதுரையிலிருந்து தனசேகரன் என்பவர் எங்களுடைய கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதத்தில், தன் வீட்டு வரி 1977 ஆம் ஆண்டு ரூபாய் 110.15 இருந்ததாகவும், பிறகு 1978 ஆம் ஆண்டு அதை ரூபாய் 291.15 என்று உயர்த்தியதாகவும், பிறகு இவர் அப்பீல் செய்ததால், மதுரை முனிசிபல் அதிகாரிகள் குறைத்ததாகவும் எழுதியிருக்கிறார். ஆனால் இப்போது தள்ளப்பட்ட காலத்தையும் சேர்த்து அவர் 1,200 ரூபாய் கட்ட வேண்டுமென்று டிமாண்ட் வந்திருக்கிறது என்று தனசேகரன் என்பவர் எழுதியிருக்கிறார். ஒரு உதாரணத்திற்காக இதைக் குறிப்பிடுகிறேன். அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் வரியை உயர்த்துகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும்.

374 பஞ்சாயத்துக்களில் ஏறக்குறைய நான்காயிரம் சாலைப் பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 5 வருடம் செர்விஸ் முடித்த அனைவரையும் 1—1—1977 முதல் நிரந்தரமாக்க வேண்டுமென்று ஒரு அரசு ஆர்டர் இருக்கிறது. அதை அதிகாரிகள் அமுல்படுத்தவில்லை. அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டவுன்ஷிப் என்பது தேவையில்லை. டவுன்ஷிப்புகளை நகராட்சிகளாக ஆக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், அங்கு காரியங்கள் சரியாக நடக்கவில்லை. குறிப்பாக இராமேஸ்வரத்தைச் சொல்லலாம். அங்குள்ள ஆஸ்பத்திரி முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கே வரும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு வைத்திய வசதி அளிக்க வேண்டிய பொறுப்பு அதற்கு இருக்கிறது. அங்கு பத்து வருஷத்திற்கு முன் எத்தனை டாக்டர்கள் இருந்தார்களோ, அதே அளவுக்குத்தான் இன்றைக்கும் டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் வரி போடுவது மட்டும் குறைவதில்லை. ஆகவே டவுன்ஷிப்புகளை நகராட்சிகளாக்கினால், மக்கள் பிரதிநிதிகளின் மூலமாக 'ரெப்ரசென்ட்' பண்ண வழியிருக்கும் என்று சொல்லி பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக முதலில் நன்றி தெரிவிக்கிறேன். காந்தியடிகள் இந்தியாவில் இராமராஜ்யம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக சிந்தித்ததின் அடிப்படையிலேதான் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் உருவாக்கப்பட்டது. ஜில்லா போர்டு அளவில் சொல்லக் கூடிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதைத் தீர்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு கிராமத்திலே ஆட்சி முறை வர வேண்டும் என்றும் கிராமங்களில் நடக்கக் கூடிய தவறுகளைத் திருத்திக்கொள்ள

1979 ஏப்ரல் 18] [திரு. செ. முத்துசாமி]

பக்கத்திலேயே இந்த ஆட்சி முறை இருந்தால் மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வாய்ப்பு இருக்கும் என்ற முறையிலேயும் தான் ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டன.

கல்வியைப் பொறுத்த வரையில், ஊராட்சி ஒன்றியங்களில் அதிகாரிகள் தங்கள் விருப்பு வெறுப்புக் கேற்ப நடந்து கொள்ளுகிறார்கள். தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை சென்ற முறை கூட நான் எடுத்துச் சொன்னேன். அதற்கு உதாரணமாக, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை இங்கே நான் சொன்னபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று கனிவோடு, மன மூவந்து உறுதிமொழியைக் கூறினார்கள். அவர் கூறியதற்கேற்ப தகுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்குள்ள ஆணையாளரின் மீது அங்குள்ள ஆசிரியப் பெருமக்கள் லஞ்சப் புகார்களைக் கூறி எழுத்து மூலமாகத் தெரிவித்தும் இருக்கிறார்கள். நானே இரண்டு முறை மாவட்ட ஆட்சியாளரிடத்தும், ஒரு முறை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், உள்ளாட்சித் துறை செயலாளர் அவர்கள் சேலம் வந்தபோது அவரிடத்திலும் இதைத் தெரிவித்திருக்கிறேன். அந்த ஆணையாளரை மாற்றிவிட நடவடிக்கை எடுப்பதாக உள்ளாட்சித் துறைச் செயலாளர் அவர்கள் ஆசிரியப் பெருமக்கள் மத்தியிலே கூறி அப்போதிருந்த போராட்டத்தை நிறுத்தி வைத்தார். அதற்குப் பின்னால் அவர் மாற்றப்பட்டார். முன்பே திரு. பால்ராஜ் அவர்கள் கலெக்டராக இருந்தபோது, நீலகிரிக்கு மாற்றப் பட்ட உத்தரவு பிறகு கான்சல் செய்யப்பட்டது. பிறகு மீண்டும் திருநெல்வேலிக்கு மாற்றும்படி போட்ட உத்தரவும் கான்சல் செய்யப்பட்டது. மீண்டும் அவரை மாற்றிவிட்டு விசாரணையை நடத்துவதாக ஆர்.டி.எல்.எ. செயலாளர் சேலத்திலே சொன்ன பிறகும், அந்த ஆணையாளருக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தால், மீண்டும் அங்கேயே நிறுத்தப்பட்டிருப்பார்? அவர் மீண்டும் அங்கேயே நிறுத்தப்பட்டதன் விளைவு என்ன என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு அதிகாரியை இப்படி சில பேர் தாங்கிச் செல்லுவதால், அந்த அதிகாரி வேண்டுமென்றே சில காரியங்களைச் செய்கிறார். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு ஆசிரியர் கூட்டணி சார்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதே தவறு என்று சுட்டிக்காட்டி அதற்காக ஏன் வேலையிலிருந்து நீக்கக் கூடாதென்று 12 ஆசிரியர்களுக்கு ஷோ-காஸ் நோட்டீசை அனுப்பியிருக்கிறார் அந்த ஆணையாளர் என்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத்

[திரு. செ. முத்துசாமி] [1979 ஏப்ரல் 18

தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களில் 8 பேருக்கு, நிரந்தர வேலை நீக்கம் என் ப்யக்கூடாது என்று கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். நிர்வாகம் சில காரியங்களுக்காக அவரை அங்கே நிறுத்தியிருப்பதன் விளைவாக அங்கே ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஏழை சொல் அம்பலத்திலே ஏறுமா? ஏழை ஆசிரியர்களை அந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தக் கூடிய அந்த ஆணையாளர் அதே ஊராட்சி ஒன்றியத்திலேதான் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று இந்த நல்லாட்சியிலே விரும்புகிறார்களா என்பதை மட்டும் பணிவன்போடு கேட்க விரும்புகிறேன். எனக்கு உடல் நலம் சரியில்லையென்றாலும் கூட, சங்கடப்படக் கூடிய அந்த ஆசிரியர்களுடைய நிலைமையைப் பார்த்து மனம் பொறுக்க முடியாமல்தான் இங்கு வந்து சொல்லுகிறேன். நான் உள்ளதைச் சொல்லுகிறேன், ஆசிரியர்களுடைய உணர்வுகளைச் சொல்லுகிறேன். சமீபத்திலே "தவறு செய்யக் கூடிய அதிகாரிகள் யாராக இருந்தாலும் நான் பார்க்கமாட்டேன், அவர் மீது நடவடிக்கை எடுப்பேன்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இப்படிப்பட்ட மோசமான அதிகாரிக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இருக்குமானால், அதற்குப் பொருள் என்ன? நான் சென்ற முறையே சொன்னேன், ஆனால் இதுவரையில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த ஆணையாளர் 44 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றிருக்கிறார் என்று விஜிலென்ஸ் கமிஷனுக்கு ஆசிரியர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 12 ஆசிரியர்களை விட்டுக்கு அனுப்பக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியர்களை விட்டுக்கு அனுப்பக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தயவு செய்து அந்த ஷோ-காஸ் நோட்டீஸ்களை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆசிரியர்களுடைய வாழ்வுக்கு வழி தேட வேண்டும், அவர்களை விட்டுக்கு அனுப்பக் கூடாது. டிரான்ஸ்பர் நிறுத்தப்பட்ட காரணத்தால் ஆணையாளர் ஆகாரத்தோடு ஆசிரியர்களை விட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று செயல்படுகிறார். "இந்த ஆட்சியிலே அப்படிப்பட்ட நிலைமை வரலாமா?" என்று தமிழறிந்த பெரியவர் இங்கே தலைவராக இருக்கிற காரணத்தாலும், தமிழைக் கற்றுணர்ந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் இருப்பதாலும் கேட்கிறேன். நீதி செத்துவிடக் கூடாது. ஆசிரியப் பெருமக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும். குற்றவாளியையே நீதிபதியாக்கக் கூடிய நிலையைப் போக்க வேண்டும். ஆசிரியர்களை விட்டுக்கு அனுப்புவதற்காக அனுப்பப்பட்டுள்ள ஷோகாஸ் நோட்டீசுகளை முதலில் நிறுத்தி, அதற்குத் தடை விதிக்க வேண்டும். இதையெல்லாம் இங்கேயிருக்கக் கூடிய அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தெரிவித்து, இதற்கு ஒரு முடிவே ஏற்படாதா என்று கேட்டு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பி முடித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 18]

(பிற்பகல் 5.50)

திரு. பி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 'சமுதாய வளர்ச்சி-ஊராட்சி வளர்ச்சி' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பை நான் படித்துப்பார்த்ததால்தான் உள்ளாட்சித்துறை இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை, மக்களுக்குத் தேவையான பல திட்டங்களை வகுத்து செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிந்துகொண்டேன். நான் இந்த புத்தகத்தைப் பார்த்த பிறகுதான் அதைப்பற்றித் தெரிந்து கொண்டேன்.

நான் கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலமாக ஊராட்சி மன்றத் தலைவராக இருந்துகொண்டிருக்கிறேன். நான் இதை எதற்கு எடுத்துச் சொல்கிறேன் என்றால், நாங்கள் எல்லாம் இதைப்பற்றிப் படித்துதான் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சொல்லத்தான் இப்படிக் குறிப்பிடுகிறேன். எங்கள் பக்கத்திலும், தமிழகம் பூராவும் அப்படித்தான் இருக்கிறது என்பதற்காகத்தான் நான் அதைச் சொன்னேன். நாங்கள் இந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம். எங்கள் கட்சிக் காலத்திலேதான் நடந்தது என்று சொல்வதற்குத் தயாராக இல்லை. இது படிப்படியாக காங்கிரஸ்காரர்கள் காலத்திலிருந்து வளர்ந்திருக்கிறது. முதலில் டிஸ்ட்ரிக்ட் போர்டாக இருந்தது. தாலுக்கா போர்டாக இருந்தது. அதுவும் மாறி பல அதிகாரிகள் பொறுப்பில் வந்தது. அது ஊராட்சி ஒன்றியமாக மாறியது. பிறகு அதை பல இலாக்காக்களிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் இதற்காக என்ன செய்து வருகிறார்கள் என்பது இந்தக் குறிப்புப் புத்தகத்தைப் பார்க்கிறபோது தெரிகிறது. காந்தி கண்ட ராமராஜ்யம் நடைபெறுகிறது என்று சொல்கின்ற அளவுக்கு இது செயல்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரையிலே போட்ட திட்டங்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி நான் ஏன் சொல்கிறேன் என்றால், இதிலே சாலை மேம்பாடு, அதே போல பழத்தோட்டங்கள் வளர்ப்பது, குடிநீர் வழங்குவது, இணைப்புச் சாலைகள், மீன் வளம், பயிர்ப் பாதுகாப்பு, வளர்ப்பது போன்ற திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த கொள்கைக் குறிப்பிலே அவைகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை பறங்கிமலை ஊராட்சி ஒன்றியம் சென்னைக்கு அருகிலே இருப்பதால், இந்த அதிகாரிகள் அங்கு சென்று பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். நான் வடஆற்காடு, தென் ஆற்காடு பகுதிகளுக்குச் சென்றிருந்தேன். பல கிராமங்களில் கிணறுகள் வெட்டப்படவில்லை என்று சொல்கிறார்கள். கிணறுகள் வெட்டப்படாமலேயே வெட்டப்பட்டதாக கணக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எங்கே அய்யா கிணறுகள் என்று கேட்டால், அந்தக் கிணறு அடங்கலில் கணக்கில் இருக்கிறது. ஆர்.டி.ஓ. வுக்குப் பெடிஷன் போட்டால், அவர்

கணக்கில் இருக்கிறது என்று சொல்கிறார். அந்தக் குறிப்பிட்ட ஊரிலே 2 கிணறுகள் இருக்கின்றன என்று சொல்வார்கள். முகையூர் ஊராட்சி ஒன்றியத்திலும் இப்படி இருக்கிறது. அங்கே கிணறு வெட்டி அதிலே தூர் எடுத்திருந்தால், தண்ணீர் இருந்திருக்கும். மக்களுக்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். அங்கே வெட்டப்பட்ட கிணற்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் 4 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் செலவழித்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் பயன் இல்லை. இதையெல்லாம் பார்க்கிறபோது, ஏதோ சர்க்கார் திட்டங்கள் வகுத்திருக்கிறது, ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்தவில்லை என்று கருதுவார்கள். கடந்தகாலத்திலே உள்ளாட்சி ஒன்றியத் தலைவர் அவர்கள் அவருடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்துவிட்டதன் காரணமாக இப்படி நடந்திருக்கிறது என்று சொல்வார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் உள்ளாட்சித் தலைவர்கள் தாங்களே பொறுப்பு ஏற்றுக்கொண்டு வெட்ட வேண்டாம் என்று கான்ட்ராக்டர்களிடம் விட்டுவிடுவார்கள். கான்ட்ராக்டர்களிடம் வேலைகளை ஒப்படைத்துவிட்டு, அவர்கள் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் என்றுதான் நாம் நினைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அடுத்ததாக, நான் பள்ளிக் கட்டிடங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்காக நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் கல்வி மான்யத்திலே பண்ணுகிறார்கள். ரூபாய்கள் 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒதுக்குகின்றார்கள். அங்கு 5 வயதுப் பிள்ளைகளை வைத்துச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்தச் சிறுவயது குழந்தைகள் படிக்கின்ற கட்டிடத்தின் மேற்கூறை எப்படி கட்டப்பட்டிருக்கிறது? அதன் கூறையின் மேல் ஆஸ்பெஸ்டாஸ், சிமெண்ட் சீட்டுக்களைப் போட்டு கட்டிவிடுகின்றார்கள். அதன் காரணமாக அந்தக் கட்டிடம் அனல் மயமாக இருக்கிறது. குழந்தைகள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தயவு செய்து நமது அதிகாரிகள், நமது அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி ரூபாய்கள் 20 ஆயிரம், 30 ஆயிரம் செலவு செய்து கட்டும்போது, கட்டிடங்களின் கூறைகளை இப்படிப் போட்டுக் கட்ட வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தமாதிரிக் கட்டிடங்கள் குழந்தைகளுக்கு நல்லதல்ல. ஒரு பக்காக் கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும். ஓலைக் குடிசை போட்டால், அதில் பாதுகாப்புப் போய்விடுகிறது. இந்த நிலைமைகளை மாற்றியமைத்து, இந்த பிள்ளைகளுக்குப் படிக்க வசதியாக பள்ளிக் கட்டிடங்கள் உருவாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை கல்வி இலாக்காவிலேயே சேர்த்துவிடலாம் என்று சொன்னார்கள். நானும் அப்படித் தான் நினைக்கிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே ஆசிரியர்கள் பிரச்சினைதான் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. ஒரு ஆசிரியர் தன்னை மாற்ற வேண்டும் என்பதற்காக 4 பஞ்சாயத்துத் தலைவர்களைப் பிடித்துக்கொண்டு வந்துவிடுகிறார். அங்கே மாற்ற வேண்டும், இங்கே மாற்ற வேண்டும் என்று கேட்பார்கள். குண்டு சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டுகிறது என்று சொல்வார்களே, அது போல அங்கேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். ஒரு பத்து மைல் சுற்று வட்டாரத்தில் உள்ள ஒரு பள்ளிக்குப் போய் பணியாற்றுவார்கள். பிறகு திரும்பி வந்து இந்த ஊர்த் தலைவர் இப்படிச் சொல்கிறார், அந்த ஊர்த் தலைவர் அப்படிச் சொல்கிறார் என்று வருவார்கள். வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்பார்கள். இதை இலாகாவிலிருந்து எடுத்துவிடுவது மிகமிக அவசியம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

ஈ.ஓ. (எஜுகேஷன்) என்று சொல்கிறார்கள். அவர் என்ன பண்ணுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. பஞ்சாயத்துக்களிலே அவர் என்ன காரியம் பண்ணினார் என்று எனக்குத் தெரியவில்லை. அடுத்து ஈ.ஓ. (கோவாப்பரேஷன்) என்று சொல்கின்றார்கள். இவர் எந்த ஊருக்கு எப்போது கூட்டுறவு சங்கம் அமைத்தார் என்று எனக்குத் தெரியவில்லை. அது போல ஈ.ஓ.(பி.), அதாவது பஞ்சாயத்து டெவலப்மெண்ட் ஆபீசர் என்று சொல்கிறார்கள். அவர் எங்கே என்ன டெவலப்மெண்ட் வேலைகள் செய்தார் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படியெல்லாம் நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் நாம் மாற்ற வேண்டும். நம் ஆட்சியிலே இப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் தி.மு.க. போய்க் கொண்டிருந்த அதே பாதையில் நாமும் போகக் கூடாது. அந்தப் பாதையை, வழியை நாம் மாற்றியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைப் பராமரிப்பு. இந்த பராமரிப்புக்காக ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு ஒரு முறை இரண்டாயிரம் மூவாயிரம் என்று செலவழிக்கிறார்கள். உள்ளபடியே அதுகூட சீராக நடக்கவில்லை. பாதைகள் எல்லாம் குண்டும் குழியுமாக இருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் நாம் மாற்ற வேண்டும்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்; நிர்வாகத்தில் இவர்கள் ஏன் தலையிடுகிறார்கள் என்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள். எங்கள் பஞ்சாயத்திலேகூட பம்மல் பேரோட்சி

யில் ஒரு ப்ராடு நடந்திருக்கிறது. அங்கே ஒரு நிர்வாக (E.O.) அதிகாரி ரூபாய் 20,000 பொய் செக் போட்டு, பணம் எடுத்துவிட்டார். அது மேலதிகாரிகளின் விசாரணைக்குப் போயிருக்கிறது. அதில் அது தெரிந்துவிட்டது. அதன் பிறகும் அவர் மீண்டும் அந்த நிர்வாக அதிகாரி வேலைக்கு வந்து கொண்டிருக்கிறார். அவர் அந்தப் பணத்தை மாதா மாதம் திருப்பிக் கட்டுவது என்ற நிலைமையில் அங்கு அவரை வைத்திருக்கிறார்கள். விசாரணையில் அவர் தவறு செய்திருக்கின்றார் என்பது தெரிந்திருக்கிறது. தவறு செய்த அதிகாரிகளை அவர் செய்த தவறு தெரிந்துவிட்டால், வேறு இடத்திற்கு மாற்றுகிறார்கள். இன்னொரு ஊருக்கு அனுப்பிவிடுகிறார்கள். அவர் ஆயுள் பூராவும் பணம் கட்டினாலும் அந்தப் பணத்தைக் கட்டுவது கஷ்டம். இதெல்லாம் அந்தக் காலத்திலே நடந்த நிகழ்ச்சிகள். நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படியெல்லாம் நடக்க வேண்டியதில்லை. இதையெல்லாம் தடுக்கின்ற அளவுக்கு சட்டத்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத் தான் நான் இதை இங்கே எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்ததாக, புறம்போக்கு நிலங்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியனுக்கும் ரெவின்யூ இலாகாவினருக்கும் இந்த விஷயங்களில் ஒத்து வருவதில்லை. இந்த நிலைமைகள் இருக்கின்றன. ஒரு குட்டைப் புறம்போக்கு நிலத்தை நர்சஸ் குவார்டர்ஸ் கட்ட ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டாப் போட்டுக் கொடுத்துவிட்டிருக்கிறார்கள். தூம்பல் பகுதியில் உள்ள ஒரு தூம்பல் நிலத்தைக் கொடுத்துவிட்டார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு ரெவின்யூ இலாகாவுக்கும் இதில் கருத்து ஒற்றுமையில்லை. பல காரியங்களில் அவர்கள் பஞ்சாயத்து நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள். அங்குள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு மதிப்பு இல்லை. அங்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் ஒன்றுக்கு ஒன்று முரணாகச் செயல்படுகின்றார்கள். இந்தக் குறைகளையெல்லாம் மாற்ற, தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதைப்பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்போதோ ஒரு காலத்திலே இயற்றப்பட்ட இந்தச் சட்டதிட்டங்களை வைத்துக்கொண்டு நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவது கஷ்டமாக இருக்கிறது. இதையெல்லாம் மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த மசோதாவிலே பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத்தில் தச்சுப் பட்டறைகள் இருக்கின்றன. அந்தப் பட்டறைகளுக்குத் தச்சு வேலை எங்கேயிருந்து வருகின்றது, தச்சு வேலை செய்து முடிக்கப்பட்ட பொருள்கள் எங்கே போகின்றன, அவைகளை யாருக்குக் கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. படப்பை பஞ்சாயத்து யூனியனுக்கு, எங்கள் உயர்நிலைப் பள்ளிக்கு டேபிள்கள் வேண்டும் என்று ஆர்டர் கொடுத்து

5 மாதமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர்கள் செய்து கொடுக்கவில்லை. அந்த ஊராட்சியில் தச்சுப் பட்டறை இருக்கிறது. இருந்தும் பயனில்லை. அங்கே ஆர்டர் கொடுத்தாலும், அவர்கள் செய்து கொடுப்பதில்லை. ஊருக்கு ஊர் தனி நிர்வாகமாகத் தெரிகிறது. ஒவ்வொரு நிர்வாகமும் அங்குள்ள அதிகாரிகளுக்கு ஏற்ப இருந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இப்போது அங்கே கமிஷனர்களாக இருப்பவர்கள் நல்ல அக்கறை எடுத்துக்கொண்டு செயலாற்ற வேண்டும். தேர்தல் நடக்கிறதா இல்லையா என்பதுபற்றித் தெரியவில்லை என்றாலும், அதைப்பற்றி ஒன்றுமில்லை. ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியைக் கூட ஒழுங்காகக் கூட்டுவதில்லை. 3 கமிட்டிக் கூட்டம் போட்டால், அதில் ஒன்றுகூட கூடுவதில்லை. அந்தக் கமிட்டிகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைப் போட வேண்டும், அப்படிப் போட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன், அதற்காக ஊராட்சிச் சட்டத் திட்டங்களைத் திருத்த வேண்டும் என்பதற்காக நான் இதைப் பேசுகிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கின்ற மருத்துவ வசதிகளும் அப்படித் தான் குறைகளுடன் இருக்கின்றன. அங்கே தேவையான பிளீச்சிங் பவுடர், அம்மைத் தடுப்பு ஊசி இவைகள் எல்லாம் கிடைப்பதில்லை. அங்கே அந்த வசதியில்லாமல் இருக்கின்றது. 34 கிராமங்களுக்கு மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன. கிராமங்களிலிருந்து ஹெல்த் சென்டர்களுக்கு வந்து சேர்வது கஷ்டமாக இருக்கிறது. காலரா போன்ற வியாதி வந்தால் மிகவும் கஷ்டமாகிவிடுகிறது. அந்த ஹெல்த் சென்டருக்கு நோயாளி போய்ச் சேர்வதற்குள் இறந்துவிடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். இந்த வேலைகளையும் சுகாதார இலாகாவில் சேர்த்துவிடவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சீர்திருத்தங்களையெல்லாம் செய்தால்தான், நாம் மக்களிடத்திலே நேரடித் தொடர்பு கொள்ள முடியும். ஊராட்சிகள் அரசு நிதி உதவி பெற்று செலவு செய்கின்றன. அதே நேரத்தில் குறிப்பிட்ட இலாக்காக்களும் தனியாகச் செலவு செய்துகொண்டிருக்கின்றன. எந்தெந்த இடங்களில் எப்படிச் செலவுகள் ஆகின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. நாங்கள் எல்லாம் அரசுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன். அரசு பழைய சட்டங்களைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் காரணமாக பஞ்சாயத்துக்களும், உள்ளாட்சித் துறையினரும் மக்கள் பிரதிநிதிகளும் நல்ல முறையில் சேவை செய்ய முடியும். அதற்கு இந்த அரசு தக்க வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 6-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 6½ மணிக்குள்ளாக கொள்கை விளக்கத்தின்மீதான விவாதத்தை முடிக்க வேண்டும். இன்னும் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேச இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே அடுத்துப் பேசும் உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் 5 நிமிடங்களில் பேச்சை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஊரகங்களெல்லாம் சிறந்து விளங்குவதன் வாயிலாக நாடு சீராக மாறுமென்பதை அறிந்து, இந்த அரசு, திட்டங்களிலே பெரும்பாலான திட்டங்களை ஊரகப் புறங்களை நோக்கிச் செலுத்திக் கொண்டிருப்பதை அறிந்து, நாளைய காலம் நல்ல காலமாக இருக்குமென்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஆனாலும், நான் ஒரு சின்னஞ்சிறு சிற்றூரிலிருந்து வளர்ந்து வந்தவன் என்ற அடிப்படையில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 30 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே அந்த சின்னஞ்சிறு சிற்றூரை நான் எப்படிப் பார்த்தேனோ; அந்தக் காட்சிகளில் கொஞ்சம்கூட மாறாமல் அவைகள் இருக்கின்றன. சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும், அந்த ஊர்கள் இருந்த இடத்தை விட்டு ஓர் அங்குலம்கூட நகரவில்லை என்பதைப் பார்க்கிறபோது, பெற்ற சுதந்திரம் என்னவாயிற்று என்ற கேள்விக்குறி நெஞ்சத்திலே இருந்துகொண்டிருக்கிறது. நான் வேதனையோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியத்திலே தலைவர்களாக இருக்கிறவர்கள் அல்லது ஊராட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள், அந்தத் துறையிலே இருக்கிற அனுபவ பூர்வமான அறிவுரைகளை எனக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பை நான் பெற முடியாவிட்டாலும், நாட்டிலே தாழ்த்தப்பட்டுக் கிடப்பது ஊர்கள் என்றால், அந்த ஊர்களிலே தாழ்த்தப்பட்டுக் கிடக்கிற ஒருசில மக்கள்—அருந்ததியர், சக்கிலியர், சண்டாளர் என்று பிரித்து வைத்து, நாகரிகமான நாடு என்று சொல்ல வெட்கப்படும் நிலைமையில், ஊர்ப் புறங்களில் அவர்கள் எப்படியெல்லாம் நடத்தப்படுகிறார்களென்பதை, நான் ஆண்டுக்கு ஒருமுறை அந்த ஊர்ப் பகுதிகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்போது, பார்த்து வருகிறேன் என்பதை நான் வேதனையோடு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சின்னஞ் சிற்றூர்களிலே, அருந்ததியர்கள் என்று ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறார்களே, அவர்களுக்குத் தனியாகக் குடிநீர் வசதி செய்யப்படவில்லை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அங்கே யெல்லாம் எப்படி முறை வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஜாதி இந்துக்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கு, கடவுளாலே உயர்ந்தவர்கள் என்று கருதி படைக்-

கப்பட்டவர்களுக்கு குடிநீர் நிலையங்கள் ஏராளமாக இருக்கும். தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் குடங்களை வரிசையாகக் கொண்டுபோய் வைக்க வேண்டும். அவர்கள் நீர்தானம் செய்வதுபோல கருதிக்கொண்டு, தண்ணீரை அந்தக் குடங்களில் ஊற்றுவார்கள். இவர்களும் அதை வாங்கிக்கொண்டு, தர்மப் பிரபு தண்ணீர் ஊற்றிவிட்டார் என்று அவர்களைப் பாராட்டுவார்கள். எங்கேயாவது தப்பித் தவறி இவர்கள் குடங்களிலே ஒன்று, அவர்களுடைய குடங்களிலே பட்டுவிட்டால், குடத்தைத் துடைத்துவிடுவார்கள். இதுதான் இன்றைக்கு நடைமுறையில் இருப்பதென்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திரம் கிடைத்து, 32 ஆம் ஆண்டு நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேகூட, சிற்றூர்களிலே இருக்கக்கூடிய கொடுமைகள் எல்லாம் இன்றும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. பாதையைப் போடுங்கள், பளப்பளப்பான கார்கள் போகட்டும், நான் கவலைப்படவில்லை. பலவிதமான வசதிகளைச் செய்யுங்கள், அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், இருக்கிற கொடுமைகள், உறங்காமல் வாழும் ஜாதிக் கொடுமைகள், "இருட்டறையில் உள்ளதடா உலகம், ஜாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே" என்று பாவேந்தர் சொன்னதுபோல், இன்னமும் இருந்துகொண்டிருக்கின்றன என்பதைக் கணக்கிலே வைத்துப் பார்த்து, அதையெல்லாம் மாற்றுவதற்குரிய முயற்சியில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஊர்ப்புறங்களில் இருக்கிறவர்களுக்கு, ஜாதி இந்துக்களுக்குக் கழிவிடமாகக் கருதப்படுவதெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்கின்ற சேரிகள்தான் என்பதை இன்னமும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அருந்ததியர்கள் என்று அழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கும் சேரிகளை, ஜாதி இந்துக்கள் அத்தனை பேரும் தங்களுடைய கழிப்பிடமாகக் கருதுகின்ற நிலைமையை மாற்ற, அங்கேயுள்ள மக்களையெல்லாம் ஊர்வலமாக, கொண்டிப் புத்தூர் என்ற ஊரிலிருந்து சிங்காநல்லூர் நகராட்சிக்கு 1953 ஆம் ஆண்டில் அழைத்துச் சென்றேன். இன்னும்கூட இரவு விடியவில்லை என்று சொல்லுகிறார்களே தவிர, பொழுது புலர்ந்துவிட்டதாகச் செய்தி வரவில்லை. அவர்கள் எல்லா நிலைமைகளையும் பெற வேண்டுமென்பதற்கு முன்னாலே, கழிப்பிடமாக அவர்கள் வசிக்கும் சேரிகளைப் பயன்படுத்தும் நிலைமையை முழுக்க முழுக்க மாற்றும் முயற்சியை முதல் முயற்சியாக வைத்து, அங்கேயுள்ள மேடு பள்ளங்களைச் சமப்படுத்தும் முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டுமென்று கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமத்துவக் கோட்பாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் நம்முடைய அமைச்சர் என்பது நாடு அறிந்த ஒன்று. ஆகவே அவர்கள் இந்தத் துறையை மிகத் தீவிரமாகச் செயல்படுத்திக்-

காட்டி, அண்ணா அவர்களுடைய, தந்தை பெரியார் அவர்களுடைய தத்துவங்களை ஊர்ப்புறங்களில் நடமாடச் செய்யும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று வேண்டி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையிலே தரப்பட்டிருக்கிற சமுதாய வளர்ச்சி, ஊரக வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்பில், நமது அரசு எடுத்துக்கொண்டதாகிய அல்லது எடுக்க இருக்கின்றதாகிய முயற்சிகளை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். சுமார் 40 கோடி ரூபாயை அதற்காக ஒதுக்கீடு செய்திருப்பதையும், மொத்தச் செலவான 151 கோடி ரூபாயில் அது ஒரு பகுதி என்பதையும் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் 1961 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்டன. அப்போது இருந்த டிஸ்டிரிக்ட் போர்ட்—மாவட்டக் கழகங்களை அகற்றிய பிறகு, தாலுகா போர்டுகளுக்கு பதிலாக ஊராட்சி ஒன்றியங்களும், டிஸ்டிரிக்ட் போர்டுக்குப் பதிலாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் ஏற்பட்டன. அவை, நமது நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளிலே எல்லாப் பணிகளையும் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர், திரு. இராமலிங்கம் அவர்கள், இங்கு ஒரு கல்வித் துறை, அங்கு ஒரு கல்வித் துறை; இங்கு ஒரு சுகாதாரத் துறை, அங்கு ஒரு சுகாதாரத் துறை; இங்கு ஒரு கூட்டுறவு அதிகாரி, அங்கு ஒரு கூட்டுறவு அதிகாரி என்றெல்லாம் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் செயல்படாமலிருப்பதைக் கண்கூடாகப் பார்த்துச் சொன்னார்கள். உண்மையில் அந்தத் துறைகள் குறிப்பிட்ட பகுதியிலே சிறப்பாக, ஊராட்சி ஒன்றியங்களின் வழியாக இயங்க வேண்டும், செயல்பட வேண்டுமென்ற கோட்பாட்டின் அடிப்படையிலேதான் நாம் அவைகளை அமைத்திருக்கிறோம். கூட்டுறவுத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை போன்ற பல்வேறு துறைகள், வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் துறைகள். அந்த எல்லைக்குள் செயல்படும்போது, அவற்றுக்குள்ளே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தத்தான் ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து, ஆட்சி செய்யும் நிலையில், மக்களுடைய குறைகளையும், கருத்துக்களையும் தெரிந்து, மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அவை செயல்பட வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய தொகுதிகளைப் பற்றி அறிந்து, சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றும் அமைக்கப்பட்ட முறை அது. 30 ஆண்டுக்கு அப்பால் எந்தமுறையில் செயல்படுகிறது என்

(பிற்பகல் 6-10)

பதைப் பார்க்க வேண்டும். கட்சி சார்பின்றி எல்லோரும் அது நல்லமுறையில் செயல்படவில்லை என்று எடுத்துச் சொல்வதிலிருந்து அது சரியாகச் செயல்பட வேண்டுமென்பதற்கான தேவையை உணர்ந்துகொள்ள வேண்டும். 1975

ஆம் ஆண்டுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இல்லாமல், வெறும் அரசாங்க இயந்திரம் மாத்திரம் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. அது மக்களுடைய தேவைகளைத் தெரிந்துகொள்ளாமலும், தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லாமலும், தெரிந்தாலும் அதுபற்றிக் கவலைப்படாமலும் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏதோ இம்மீடியட் சுப்பீரியராக இருப்பவர்களை, தங்களுக்கு மேலே இருக்கின்ற அதிகாரியைத் திருப்திப்படுத்தி விட்டு, அவர்களிடம் நல்ல பெயரைப் பெற வேண்டும், நல்ல குறிப்பினைப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் செயல்படுகிறார்கள். அப்படிச் செயல்பட்டால்தான், அவர்களுக்கு நல்லது என்பதை உணர்ந்திருக்கிறார்கள். மக்களுக்கு நல்லதைச் செய்து மக்களுடைய நல்ல பெயரை, சிறப்பைப் பெற்றாலும், மேலே இருக்கின்ற அதிகாரியினுடைய நல்ல பெயர் மட்டும் தனக்கு இல்லாவிட்டால், தான் அவரால் வெளியே அனுப்பப்படுகின்ற நிலை வரலாம் என்கின்ற அச்சத்துடன் செயல்படுகிறார்கள். அந்த ஒரு முறை இந்த ஜனநாயக நாட்டிலே 1976 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிந்து 4 ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் வேதனையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் இல்லாத நிலை இருப்பதால், இத்தகைய குறைபாடுகளும் அவல நிலையும் இருந்துகொண்டிருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் இத்தகைய குறைபாடுகளையும் அவல நிலைகளையும் உணர்ந்திருக்கிறோம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நம்மை விட மிகுதி, நான் சொன்ன குறைபாடுகளையெல்லாம் உணர்ந்து ஏப்ரல் 30க்குப் பிறகு ஜூன் மாதத்தில், முடிந்தால் மே மாதத்திலேயே தேர்தலை வைக்க முன்வருவார்கள் என்று நினைக்கிறேன். விரைவில் தேர்தலை நடத்தி என்ன வளர்ச்சியை கிராமங்களில் நாம் ஏற்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அதையெல்லாம் செயல்படுத்த நமக்கு உறுதுணையாக இருக்க முனைவார்கள் என்று நம்புகிறேன். ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு தற்பொழுது அதிகாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. போதுமான அதிகாரம் இல்லை. அப்படி ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகின்ற நிலை நல்லதல்ல. அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நாமெல்லாம் அதிகாரத்தை கோர்வைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்கிறோம். மாநில அரசு தனக்கு இருக்கிற அதிகாரங்களை மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு உபயோகப்படுத்துவதற்கும் வளர்ச்சிப் பணியின் மூலம் ஒன்றியங்களை விரிவுபடுத்துவதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும் மாமியார்

ஆனால் என்ன ஆகும் என்று சொல்லுவார்கள். மருமகள் கூட ஒருநாள் மாமியார் ஆகக் கூடியவள்தான். அதுமாதிரித்தான் இந்த அதிகாரம் பெறுகின்ற முறையும். முதலில் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசைப் பார்த்துக் கேட்கிற நம் இரு கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, அதிக அதிகாரங்களை ஊராட்சி ஒன்றிய அளவிலுள்ள அமைப்புகளுக்குக் கொடுத்து, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் நல்ல முறையில் அவை இயங்கச் செய்ய வேண்டும். டிஸ்ட்ரிக்ட் போர்ட் அமைப்பு முறை இருந்த போது, அதில் பிரசிடென்ட் பொறுப்பில் இருந்த போது, ஒரு "நான்-அபிசியல்", தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தலைவராக இருந்தார். இப்பொழுது டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். அவர் தலைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நேரம் போகாததால் போய் உட்காருகிறார்கள். இன்னும் ஒரு விஷயத்தை, நடந்த சம்பவத்தை நான் இந்த அவையில் வேடிக்கையாகச் சொல்வதைத் தவறாக நினைக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நெருக்கடி காலத்திலிருந்து இன்று வரை அந்த நிலையில் தான் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் தான் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவர். 4 மணிக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. 3 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிடுகிறார். அவர்கள் வருகிறார்கள். "மக்கள் பிரதிநிதிகள் சொல்வதை யெல்லாம் நீங்கள் பேசாமல் கேட்டுக்கொண்டே இருங்கள். ஒன்றும் பேசாதீர்கள். அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்து விட்டு, நம் இஷ்டம்போல் காரியங்களைச் செய்யலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது மாவட்ட டெவலப்மென்ட் கவுன்சிலா, இல்லை மாவட்ட அதிகாரிகளுடைய நல கவுன்சிலா என்று தெரியவில்லை. மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள் இவர்கள் எல்லாம் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு முறை இருந்தது. அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் தலைவராக இருப்பார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவருக்குச் செயலாளராக அங்கு இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் செயலாளராக இருந்து மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறைவேற்றுகின்ற திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். இன்றைக்கு எதைக் கேட்டாலும் 'ரெசல்யூஷன் ரெக்கார்டட்' என்கிற முறையில் 'ரெக்கார்ட்' பண்ணி, அத்தோடு விட்டு விடுங்கள் என்று சொல்லி, ஒரு அவுட்லெட் ஆபீஸ் மாதிரி செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சொல்வதை விட மக்களுக்குச் சொல்லிவிட்டோம் என்கிற முறையில் செயல்படுகிறார்கள். இந்த நிலையை நீடிக்க விடாமல் விரைவில் மாண்புமிகு

அமைச்சரவர்கள் அதை மாற்ற வேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் பிற மாநிலங்களில் எப்படிச் செயல்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர அவர்கள் அறிய வேண்டும். இன்றைக்கு உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு அதிகாரப் பற்றற்ற ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டு, அது வெற்றிகரமாக நடத்தப்படுவதாக நான் அறிகிறேன். அந்த மாநிலத்தில் அதனுடைய செயல்முறை எவ்வாறு இருக்கிறது என்பதை அறிய ஒரு தனிக் குழுவை அனுப்ப மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது மாண்புமிகு அமைச்சரவர்கள் அது பற்றிய தகவலை அறிந்து, இந்த இரண்டு முறைகளில் எது நல்ல முறையோ அதைச் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுத்தினால், அது நல்லபடியாக இருக்கும் என்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையில் சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அதைபபற்றிப் பேச, ஆசிரியர் பிரதிநிதிகள் எல்லாம் ஒருவர் மாறி ஒருவராக மாண்புமிகு தலைவரிடம் எனக்கு 5 நிமிடங்கள் ஒதுக்குங்கள், எனக்கு 5 நிமிடம் ஒதுக்குங்கள் என்று சொன்னார்கள். ஊராட்சி வளர்ச்சி என்பது அவர்களால் அதிக நேரம் பேசப்பட வேண்டிய ஒன்று. இன்றையதினம் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் மாநிலம் பூராவும் 1 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். மொத்தம் மாநிலம் பூராவும் இருக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 2,40,000 தான். அதில் ஒரு இலட்சம் ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் பணிபுரிகிறார்கள். அவர்களிடையே ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஆசிரியர் பிரதிநிதிகள் உற்சாகத்துடன் பேசுவது மாதிரி, கல்வித் துறைப் பிரச்சினை அதிகமாக இருக்கிற உள்ளாட்சித் துறை பற்றியும் அதிக நேரம் பேச அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஊராட்சி அமைப்புகளில் ஒரு கட்சிப் பாகுபாடு இருக்கிறது. அதுதான் நம்முடைய வளர்ச்சிப் பணிகளுக்கு முதல் அணி, முதல் தாத்பர்யம் என்று சொல்ல வேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியம் என்பது 30 ஊராட்சிகள், 5 அல்லது 6 பேரூராட்சிகள் ஆகியவை அடங்கியது. ஆகவே ஒரு பட்டாளத்தையே முழுமையாக ஒரு ஊராட்சி ஒன்றியம் கவர்ந்துகொள்கிறது. எல்லா வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றும் பொறுப்பு அவர்களிடம் தான் இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிற ஒருசில பணிகள் அவர்களுக்குத் தொடர்பில்லாதவை. ஊராட்சி ஆணையருக்கு முதலில் 'பேமிலி பிளானிங் ஓர்க்' கொடுக்கப்பட்டது. பிறகு 'ஸ்மால் சேவிங்ஸ்' பணி கொடுக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் ஒரு கோட்டா இருக்கிறது. இன்னும் கடன் வசூலித்தல் போன்ற பணிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆணையருக்கு இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதன் மூலமே 6 மாத காலம் முடிந்து

விடுகிறது. சமுதாய வளர்ச்சிப் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்வதைவிட அரசாங்கப் பணிகளைச் செயல்படுத்துகிற ஒரு துறையாக இந்த இலாகா செயல்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்குள்ளும் ஒரு தாசில்தார் இருக்கிறார். தாசில்தார் வரி வசூல் செய்கிற அதிகாரி மட்டுமல்ல. இன்றைக்கு அவர் எக்ஸிகியூட்டிவ் அதிகாரம் உடையவராகவும் இருக்கிறார். அவரை பேமிலி பிளானிங், கடன் வசூலித்தல் போன்ற பணிகளைச் செய்யச் சொல்வோம். சிறு சேமிப்பிற்கு என்று தனியாக ஒரு அதிகாரி மாவட்டந் தோறும் இருக்கிறார். அவர்களிடம் சம்பந்தமில்லாத பணிகள் எல்லாம் ஒப்படைக்கப்படுவதனால், வருடத்தில் 6 மாதங்கள் அந்தமாதிரிப் பணிகளைக் கவனிக்கவே அவர்களுக்கு நேரம் போய்விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் வளர்ச்சிப் பணியில் எப்படி ஈடுபட முடியும்? கிராமப் பகுதிகள் எப்படி வளர்ச்சி பெற முடியும்?

அடுத்தபடியாக, 220 நாட்கள் தான் ஒரு வருடத்தில் பள்ளிக்கூட வேலை நாட்கள். அதில் பரிட்சை போக 200 நாட்கள் தான் மிஞ்சும். வருடத்திற்கு இரண்டு முறை இதற்கிடையில் அவர்களுக்கு 'பேமிலி பிளானிங்' பணி வேறு. இருப்பது 200 நாட்கள். இந்த நாட்களில் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து 'பேமிலி பிளானிங்' பணியையும் அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஆசிரியர் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் போய் வேலை பார்த்தால், அங்கு (இ.இ.ஓ.) எஜுகேஷன் எக்ஸ்டென்ஷன் ஆபிசரும் கமிஷனரும் ஆசிரியரைப் பார்த்து கோட்டா முடிந்ததா என்று கேட்கிறார்கள். அதற்கு அந்த ஆசிரியர் 'முடியவில்லை' என்று சொல்லுகிறார். 'அப்படியானால் என் வந்தாய்?' என்று கேட்கிறார்கள். அதற்கு அவர் பாடங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார். அதற்கு அவர்கள் 'உன் கோட்டா முடிந்த பிறகு வா, உன் பேரில் டிசிப்பிளினரி ஆக்ஷன் எடுக்கப்படும்' என்று சொல்லுகிறார்கள். கோட்டாவையும் முடிக்க வேண்டும். ஆளும் கிடைக்க வில்லை. பின் எப்படி முடிப்பதென்றால், அதற்கான வழியைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எடுத்துக்காட்டித் தெளிவாகச் சொன்னார்கள். அதுகுறித்து உண்மையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டும். அந்த அநியாயத்துக்குப் பொறுப்பேற்கக் கூடியவர்கள் உள்ளாட்சித் துறையிலுள்ள அதிகாரிகள், அவர்களிடமிருந்து தான் கட்டளைகள் வருகின்றன. கமிஷனரிடமிருந்து தான் நேரடியாக ஆசிரியர்களுக்குக் கட்டளைகள் வருகின்றன என்கின்ற வகையில் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய கொடுமையால் ஒரு சர்ட்டிபிக்கேட்டை ஆஸ்பத்திரியிலிருந்து வாங்கிய உடன் அவர்களிடம் ஒரு பாரம் கொடுத்து, அதில் ஊரிலே இல்லாத ஆட்களினுடைய பெயரையெல்லாம் எழுதி,

ஆப்பரேஷன் நடத்ததாகப் பொய் ரெக்கார்ட் எழுதி, பணத்தைப் பெற்று, மோசடி செய்கின்ற நிலை இருக்கிறது. அதிகாரிகளுக்கே கூட ஓரளவு இதைப் பற்றித் தெரியும். தெரிந்தும் தவறுகளைத் தவிர்ப்பதில் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள பிரச்சினை எல்லாம் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கோட்டா முடிய வேண்டும், தொல்லை விடவேண்டும் என்பது. ஊருக்கு வளர்ச்சிப் பணி நடைபெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், மற்ற பணிகள் ஆணையர்களிடம் ஒப்படைக்கப் படாமல் தடுக்க, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது ஊராட்சி மன்றங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் எல்லைகளை மாற்றி யமைப்பது, அவைகளின் தரத்தை உயர்த்துவது, சில இடங்களில் இன்னும் அதிகமான ஊர்களைச் சேர்ப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. தேர்தலுக்குப் பிறகு அந்தப் பணிகளைச் செய்தால் நல்லது என்கின்ற என்னுடைய கருத்தினை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்

(பிற்பகல் 6-20)

பட்டவனாவேன். தேர்தல் காலங்களில் இந்த மாற்றங்கள் எல்லாம் செய்கிற போது, அவற்றுக்கு உண்மையிலேயே அரசியல் நோக்கம் கற்பிக்கப்பட்டு, அரசியல் ரீதியாக சந்தேகிப்பதற்கும், அரசியல் ரீதியாக, 'உங்களுக்குச் செய்தால் இந்த பஞ்சாயத்து யூனியன் உங்களுக்கு வரும்' என்று அதிகாரிகள் சொல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். 1975-லே பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளின் எல்லைகள் எல்லாம் எப்படி இருந்ததோ அவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தவுடன் ஓராண்டு காலத்திற்கு உள்ளாக இந்த மாற்றங்களையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகுதான் சில நல்ல மரபுகளை இந்த நாட்டிலே நிலைநாட்டினார்கள். ஜனநாயக ரீதியில் 1947-ல் நாம் சுதந்திரம் பெற்று ஆட்சி அமைத்தாலும்கூட, 1967-லே தான் எதிர்க் கட்சியை மதிப்பதும், எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசுவதும் ஜனநாயகம் என்றால் என்ன என்பதும் தெரியவந்தது. அதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, அண்ணா அவர்கள் எதிர்க் கட்சி வரிசையிலே உட்கார்ந்துகொண்டு, ஜனநாயகத்திலே எதிர்க் கட்சியின் பங்கு என்னவென்பதை எடுத்துச்சொன்னாரோ, அதை 1967-லே அவர்கள் ஆளும் கட்சியாக இருந்து, செய்தார்கள். அந்த நிலையில் ஒரு ஜனநாயக மரபு கிராம அளவிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே வரக்கூடிய

அளவிலே நிலைமைகளை நாம் உருவாக்க அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, ஜனநாயக மரபு காக்கும் வகையில் நாம் நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காலத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் வரிவிதிப்பு நடத்தப்படுகிறது. 1970-லே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இப்போதும் இருக்கிறார்கள் என்று நினைத்துச் செய்கிறார்களோ என்னவோ? அவர்கள் எல்லாம் மூன்று, நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே போய் இருக்க வேண்டியவர்கள். அவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். இப்போது அவர்களும் கூடியிருந்து, இந்த வரி விதிப்பு அநீதி என்று தீர்மானம் போட்டு அனுப்பினார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் வீட்டு வரிகளை உயர்த்துவதற்கு என்றே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வரி விதிப்பைச் செய்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக இருக்கக்கூடிய எல்லா ஊராட்சி மன்றத் தலைவர்களும் ஒன்று கூடி, இந்த வரிவிதிப்பு முறையை ரத்து செய்ய வேண்டுமென்றும், இது அநீதியானது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி இரண்டு நாட்களுக்கு முன்னால் கேள்வி நேரத்திலே கூட அமைச்சர் அவர்களுக்கு நான் சொன்னேன். அவர்கள் எல்லாம் இந்த வரிவிதிப்பைக் குறைக்க வேண்டும், ரத்து செய்ய வேண்டும், இது அநீதியானது என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அவர்களுடைய முறையீடு எந்தவிதமான பலனையும் அளிக்கவில்லை என்று சொன்னார்கள். எல்லா ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் நாகர்கோவிலில் கூட, மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து, நானும் சென்றிருந்தேன், இந்திரா காங்கிரஸ் எம்.பி. திரு. மோசஸ் அவர்களும் வந்திருந்தார்கள். இப்படி எல்லோரும் சென்று, இந்த வரிவிதிப்பு முறை மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்துகொள்ளாமல் வெறும் அதிகாரிகளை மட்டும் வைத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்றும், இதனை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்த பிறகு, அவர்களின் அபிப்பிராயத்திற்கேற்ப வரிபோட்டு, அது முறைசெய்யப்பட்டு, யாராவது அப்பீல் செய்தால் அதையும் பரிசீலனை செய்து, வரிமாற்றம் செய்தால்தான் நன்றாக இருக்கும் என்றும், அப்போதுதான் அநீதிகளைத் தீர்க்கமுடியும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்கள், அது ஏற்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையிலேயே ஊராட்சி ஒன்றியங்களுடைய பணி எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், அந்தந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு நல்ல குடிநீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கைகள் எடுப்பது, சுகாதாரத்தைப்

பற்றி அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது, ஊட்டச் சத்துணவை எப்படி உட்கொள்வது என்பதைப்பற்றிச் சொல்லிக்கொடுப்பது என்பதில் தான் இருக்க வேண்டும். நம்முடைய நாட்டிலே 1930-க்குப் பிறகு படித்தவர்கள் வீட்டில் கூட சத்துணவு சாப்பிடுகின்ற பழக்கமே இல்லை. சத்துணவு அவர்களிடத்திலே இல்லை என்பதால் அல்ல, அவர்களுடைய வீட்டிலேயே சத்துணவுகள் கிடைக்கின்றன. காய்கறிகள் வாங்குகிறார்கள். சத்துணவு அதிலே இருக்கிறது. கீரை வீடுகளின் கொல்லைப்புறங்களிலே கிடைக்கின்றது. இருந்தாலும் அந்தக் கீரையை உண்ணும் எண்ணம் மக்களிடத்திலே இல்லை, ஆகவே, இப்படி இந்தமாதிரியான சத்துணவையாவது உண்ண வேண்டும் என்ற எண்ணம் கூட இந்த நாட்டிலே ஏற்படுத்தப்படவில்லை, இந்த ஊராட்சிகளிலே இருக்கக்கூடிய ஆக்கப்பணிகளுக்கு பல்வேறு கல்லூரி மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு, அங்கு இருக்கக்கூடிய சுகாதார நல பணியாளர்களைச் சேர்த்துக்கொண்டு, ஒரு பிரச்சார அளவிலேயாவது, சுற்று வட்டாரத்தை எப்படி சுத்தமாக வைப்பது, நலமாக வாழ்வது எப்படி என்பதைப்பற்றிப் பிரச்சாரம் மூலமாக மக்களுக்கு உணர்த்த வேண்டிய ஒரு இலாக்கா, இப்படி நல்வாழ்வுக்கு வேண்டிய நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டிய ஒரு இலாக்கா இன்றையதினம் தனக்குத் தொடர்பில்லாத பலவிதமான பளுவைத் தொடர்ந்து சுமந்துகொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறைக்காக தனி இலாக்கா இருக்கிறது. அதனிடத்தில் கல்வியைக் கொடுத்துவிட்டு, இந்த இலாக்கா ஆக்கப் பணிகளிலும், வளர்ச்சிப் பணிகளிலும் தன்னுடைய கவனத்தை ஈடுபடுத்திக் கொள்ளலாம். அப்படி இல்லாமல், கல்வி சொல்லிக்கொடுக்கிறோம், அதற்காக பள்ளிக்கூடங்களை நடத்துகிறோம் என்று சொல்லி, அந்த முயற்சியிலே ஈடுபட்டு, இன்றையதினம் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அங்கிருக்கும் ஆசிரியர்கள் வேறு வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுகிறார்கள். தேர்தல் காலங்களிலே அந்த ஆசிரியர்கள் தேர்தலில் வெற்றி வாய்ப்பு யாருக்கு இருக்கிறதோ அவருக்குப் பின்னாலே அலைந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமைகள்தான் இன்றைக்கு இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களின் கீழே பள்ளிகள் கிடையாது. பிற மாவட்டங்களிலே தான் ஊராட்சி ஒன்றியங்களின் கீழே பள்ளிகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் பள்ளிகள் இல்லாவிட்டாலும், இப்போது அங்கு இருக்கும் பள்ளிகள் சிறந்த முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு ரூபாய் வரிகொடுத்தால், அதிலே 45 பைசா எஜுகேஷன் செஸ் என்று வாங்கிக் கொண்டு, கல்வி நிலையங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள, பராமரித்துக்கொள்ள இயலாத ஒரு சூழ்நிலைதான் இன்றையதினம்

இருக்கிறது. ஈ.ஓ. எஜுகேஷன் அவர்கள் கிராம நல அலுவலராக இருந்து அந்த வேலையை கவனித்து வருகிறார். அவருக்குப் பதிலாக ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் என்றாவது ஒருவரைப் போடலாம். இப்போது ஊராட்சி ஒன்றியத்திலே எஞ்ஜினியர்கள், ஹெல்த் ஆபீசர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் வேறு வேறு இலாக்காக்களிலிருந்து வந்தவர்கள். அவர்களுடைய பேரன்ட் டிப்பார்ட்மென்ட்டிலே அவர்களுக்கு அட்டாச்மென்ட் இருக்கிறது. அவர்கள் ஏதாவது தப்புதவறு செய்தால், அந்த பேரன்ட் டிப்பார்ட்மென்ட்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இருப்பதால், அவர்களுக்கும் அந்த ஒன்றியங்களிலே இருக்கின்ற ஆணையர்களுக்கும் ஒரு கோவார்டினேஷன் கிடையாது. அவர்கள் மீது தவறுசெய்தால் கூட, நடவடிக்கை எடுக்க இயலாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் எஞ்ஜினியர்களாக இருந்தால், அவர்களுடைய பேரன்ட் டிப்பார்ட்மென்ட்லே இருக்கும் எஞ்ஜினியர்களைக் காக்கா பிடித்து வைத்திருந்தால், அவரை ஒன்றும் செய்ய முடியாது. இவர்கள் இருப்பதால், ஊராட்சிகளில் எந்த விதமான பணியும் நடைபெறவில்லை, அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை, அவர்களை மாற்றவும் முடியவில்லை. ஆகவே, அங்கே செய்யப்படும் ஆக்கப்பணிகளுக்கெல்லாம் ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலரையே நியமிக்கின்ற ஒரு நிலைமை வரவேண்டும். எஞ்ஜினியரிங் பாசானவர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை எஞ்ஜினியர்களாக நியமிக்க வேண்டும். பி.ஏ., பி.டி. படித்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களைக் கல்வி அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'குடிதண்ணீர் அளிக்கிற' திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை பஞ்சாயத்து யூனியனிலே இருந்து உலக்கருவி குடிதண்ணீர்த் திட்டம் என்று ஒரு திட்டத்திற்கு ஒரு செயற்குறிப்பு வகுத்து, 35 ஆயிரம் ரூபாய் அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே இருந்து குடிநீர் வாரியத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவாகப் பரிசீலித்து அந்தத் திட்டத்தை விரைவாகத் தொடங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலைக்கு உணவு என்ற திட்டம் பிற மாநிலங்களிலே எல்லாம் செயல்படுத்தப்பட்டு அவர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வேலைகளைச் செய்து முடித்திருக்கிறார்கள். நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், அந்தப் பணியிலே இன்னும் நாம் அதிகமாக ஈடுபடவில்லை. இப்போது தான் 26 ஆயிரம் டன் அரிசி கிடைத்துக் கொஞ்சம் செய்யப்பட்டுவருகிறது. இந்தத் திட்டத்தை நாம் முன்கூட்டியே செய்யத் தவறி,

கடந்த இரண்டு ஆண்டு காலமாக மத்திய அரசிடமிருந்து இதற்கான எந்தவிதமான உதவியையும் நாம் பெறவில்லை. ஆகவே, அதையும் சேர்த்து நாம் பெற்று, இந்த வேலைகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது சாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே இருக்கிறது. அதை ஹைவேஸ் இலாக்காவிடத்திலே ஒப்படைக்க வேண்டும். இப்போது சாலைப் பராமரிப்பு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து சரியாகச் செய்ய முடியவில்லை. எவ்வளவு ஆகும் என்று முன்கூட்டியே கணக்கெடுத்து இன்றையதினம் தொகை ஒதுக்குகிறார்கள். அந்தத் தொகையை வைத்துக்கொண்டு இங்கே இருக்கின்ற சாலைகளைப் பராமரிக்க பஞ்சாயத்து யூனியன்களாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் இயலவில்லை. செல்வாக்கு மிக்க ஒன்றியத் தலைவர்கள் இருக்கும் ஒன்றியத்தில் உள்ள சாலைகளை அமைச்சர் அவர்களிடத்திலோ, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலோ சொல்லி ஹைவேஸ்-ல் அந்த ரோடுகளை எடுக்கிறார்கள். ஆகவே, நெறியான ஒரு கொள்கையைப் பின்பற்றி பெரும்பாலான சாலைகளை ஹைவேஸ் எடுத்துக்கொள்ள தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சிறிய சாலைகள், இணைப்புச் சாலைகள் மற்றும் புதிதாக அமைக்கப்படும் சாலைகள் மட்டும் பஞ்சாயத்து யூனியன்கள் கீழே இருக்க வேண்டும். புதிதாகச் சாலைகள் அமைத்தால், அவைகளை 3 ஆண்டுகளுக்கு பஞ்சாயத்து யூனியன் கீழே வைக்க வேண்டும். மீதியுள்ள ஊராட்சி ஒன்றியப் பொறுப்பில் இருக்கும் அனைத்துச் சாலைகளையும் ஹைவேஸ்-ன் பொறுப்புக்கு விட்டு, எந்த அளவுக்குப் பளுவைக் குறைத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரங்களைப் பரவலாக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், ஜனநாயக ரீதியாக அவைகள் ஏற்படுத்தப்படுவதற்கு, முதற்படியாக, நல்லபடியாக தேர்தல்கள் நடத்தி, இப்போது இயங்காமல் இருக்கின்ற ஊரக வளர்ச்சித் துறையை இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

(பிற்பகல் 6-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 'சமுதாய வளர்ச்சி—ஊராட்சி வளர்ச்சி' குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் மதிக்கத் தகுந்த பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இறுதியாக உரையாற்றிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு

நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, ஒரு ஆபத்தான யோசனையை இந்த அவையிலே தெரிவித்தார்கள். ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலிருந்து அனைத்துப் பணிகளையும் அந்தத் துறைகளுக்கே கொடுத்துவிட வேண்டும் என்று ஊராட்சி ஒன்றியத்தின் அடித்தளத்தையே அசைக்கிற அளவுக்கு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கு நான் சொல்ல வேண்டிய பதிலை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்லி, இந்த ஊராட்சி ஒன்றியங்கள் எந்தக் காரணத்தாலே அமைக்கப்பட்டன என்பதையும், எந்த நோக்கத்திற்காக அவை உருவாக்கப் பட்டன என்பதையும் எடுத்துத் தெரிவித்து, அவைகளின் வளர்ச்சிக்குரிய பல்வேறு நல்ல யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் என்பது வெறும் கூடிக் கலைகிற கூட்டங்களாக அமையாமல் சிறந்த பலன் அளித்திட மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் அதிகமாகத் தரப்பட வேண்டுமென்று திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது தெரிவித்தார்கள். அதற்கு இன்னும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருடைய தலைமையில் அது நடைபெற வேண்டுமென்றும், வேறு மாநிலங்களில் அப்படிப்பட்ட முறைகள் இருக்கின்றன என்றும், அவைகளைக் கண்டறிந்து அவைகளை இங்கே செயல்படுத்த முடியுமா என்று யோசிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

அசோக் மேத்தா குழுவேகூட இப்படிப்பட்ட ஒரு அமைப்பு முறை தேவை என்ற கருத்தைச் சொல்லியது. அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமானால், பல்லாண்டுக் காலமாக உருவாக்கிப் பாதுகாத்து வரும் ஊராட்சி ஒன்றிய அமைப்பு என்பது உயிரிழந்து போகிற நிலைமைதான் உருவாகும். இந்த முறை தேவையில்லை என்றும், இது 'மாவட்டக் கழகம்' என்று முன்பு இருந்த நிலையை உயிர்ப்பிக்கிற ஒன்றாக இருக்கும் என்றும் அப்போது அரசின் சார்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டது. இதை நாம் ஏற்றுக்கொள்ள இயலாததற்கான காரணங்களில் ஒன்று மாவட்டம் முழுவதற்குமாகத் தேர்தல் நடத்துவது என்பது மிக்க சிக்கலானதாகும். மற்ற மாநிலங்களில் சின்னஞ்சிறிய மாவட்டங்கள் நிறைய இருப்பதால், தேர்தல் நடத்துவது அங்கே சுலபமாக இருக்கிறது. அந்த அடிப்படையில் பிரச்சினைகளை எண்ணிப் பார்த்து, இந்த முறை வேண்டாம் என்று அரசின் சார்பில் நாம் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் தேவையற்ற பல பணிகளைத் தம் தலையில் போட்டுக்கொள்வதன் மூலம் தேவையான பல பணிகள் இன்றையதினம் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன என்றார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அல்லது வேறு பணிகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுவதையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இனி ஆசிரியர்கள் முழுக்க முழுக்க கல்விப்பணியாற்றத் தக்க அளவுக்கு அவர்களுக்கு சுதந்திரமான நிலைமை உருவாக எப்படிப்பட்ட நிலைமைகளை மேற்கொள்ள வேண்டுமோ அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு கண்டிப்பாகத் தயங்காது என்பதையும் அந்த வகையில் இந்த அரசு சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் அதற்காகக் கல்வியை ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லுகிற கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் அதை வழிமொழிந்து பேசிய கருத்துக்களையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அப்படித்தான் இருக்கிறது, எனவே மாநிலம் முழுவதும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற கருத்தையும் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்னொரு கருத்தையும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' போல் இருக்கக்கூடும். கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் தொடக்கப் பள்ளிகளைக் கொண்டு வரலாமா என்று தற்போது அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், தமிழகம் முழுவதிலும் ஒரு சீரான முறை இருக்க வேண்டும் என்பதையும், மாறுதல் என்பதும் மொத்தமாக இருக்க வேண்டும் என்பதையும், இடத்திற்கு ஒரு முறை என்று கொண்டுவந்தால் சிக்கலை உருவாக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்றையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் சிறப்பாகவும் முறையாகவும் நடைபெறுவதற்கும், அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படுகிற முடிவுகளை முறையாகச் செயல்படுத்துவதற்கும் வழிவகை காண்பதற்கு இந்த அரசு தயங்காது. அதோடு தேவையான அதிக அதிகாரங்களையும் வழங்குவது குறித்தும், நிச்சயமாக இந்த அரசு ஆலோசிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் பேசுகிறபோது, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவுபற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படி ஊட்டச் சத்துணவு வழங்கப்படுவது என்பது சில வட்டாரங்களில் தான் செயல்படுத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்றும் இதனால் சுமார் 130 பேர் மட்டுமே பயன்படுவதாகவும் தெரிவித்தார்கள். ஆனால் மதிய உணவையும் சேர்த்துக் கணக்கிட்டால் 20 லட்சம் பேருக்கு இதன் பலன் கிடைக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் நகைச்சுவையோடு பேசினாலும், அதில் சிந்தனைக்கிடமளிக்கும் கருத்துக்கள் பல இருந்தன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆடுமாடுகளுக்கு நீர் கிடைக்கிற அளவுக்காவது ஊருணிகளை மராமத்து செய்ய வேண்டும்; பராமரிப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அத்தகைய முயற்சிகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்று சொல்லிக் கொள்வதுடன் குறிப்பாக முகவை, தருமபுரி போன்ற வறட்சி மாவட்டங்களில் இந்தப் பணியைச் செய்யும் முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தவர்கள். அவர் தம் அனுபவத்தையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உள்ளாட்சித் துறையில் எந்தவிதமான மாறுதலையும் காணோம் என்று குறிப்பிட்டார்கள். ஒரே **சீரான பாதையில் பழைய போக்கிலேயே நடைபெறுகிறது என்றும்** குறிப்பிட்டார்கள். பழைய போக்கு என்பது சரியில்லாத போக்கு என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். நல்ல போக்கு, நல்ல வழிகள், நல்ல திட்டங்கள் ஆகியவைகளை அப்படியே ஏற்றுச் செயல்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்ற கருத்தை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, முன்பிருந்த தவறுகள் இன்னும் ஊராட்சி ஒன்றியங்களிலும் மற்ற உள்ளாட்சி மன்றங்களிலும் தொடருகின்றன என்று குறிப்பிட்டார்கள். முன்பிருந்த நல்லவைகளைக் காப்பாற்றவும், தவறுகளை நீக்கவும், அவை தொடராமல் இருக்கவும் எத்தகைய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்தாலும், அவைகளையெல்லாம் இந்த அரசு பரிசீலித்து ஏற்று அமுல் படுத்தத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, புளியங்குடி நகராட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்ததன் மூலம் ஏற்பட்டுள்ள போராட்டம் குறித்தும், அங்கே நிலவும் பதட்டநிலை குறித்தும் இங்கே குறிப்பிட்டார்கள். சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும் மாண்புமிகு அரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களிடமும் இதைத் தெரிவித்துள்ளதாக நான் அறிகிறேன். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும், நகராட்சி களின் ஆய்வாளர் அவர்களிடமிருந்தும் கருத்துக் கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்த பிறகு, நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் உருக்கமாக ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டினார்கள். அதை அருமை நண்பர் இராமலிங்கம் அவர்களும் தெரிவித்தார்கள். ஒன்றிய ஆணையர் ஆசிரியர்களைப் பழி வாங்குகிற அளவுக்கு முயற்சியை மேற்கொள்ளுகிறார், அவர் அங்கேயிருந்து மாறுதல் செய்யப்பட்டார் என்றாலும், எப்படியோ அந்த மாறுதல் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு இருக்கிற வருத்தத்தோடு என்னுடைய வருத்தத்தையும் இணைத்து நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இது நிச்சயமாக அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. தற்போது அது விசாரிக்கப்பட்டு வருகிறது. அங்கே பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் தைரியமாக, கவலைப்படாமல், பயப்படாமல் அந்த ஆணையர் தன்னைப் பழி வாங்கிவிடுவாரோ என்ற அச்சத்திற்கு இடமில்லாமல் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்கிற ஆசிரியர்கள் மீது எந்தவிதமான பழிவாங்குகிற நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று இந்த பேரவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஏதோ அனாதைக் குழந்தைகளாக நிச்சயமாக நடத்தப்படமாட்டார்கள். ஒரு மாறுதல் என்பதே ஒரு அரசாங்க ஊழியருக்கு தண்டனையாக இருக்க முடியாது. தவறு செய்பவர்களுக்கு மாறுதல் ஒரு தண்டனையாகக் கருதப் படுமானால், தவறுகள் நிச்சயமாகத் தொடரத்தான் செய்யும். உண்மையில் அந்த அதிகாரி தவறு செய்திருந்தால், நிச்சயமாக, கடுமையான தண்டனை சட்டப்படி வழங்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாக இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. கா. காளிமுத்து] [1979 ஏப்ரல் 18

மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கிராமப் புறங்களில் உள்ள சேரிகளில் இன்னும் இருந்து வருகிற தீண்டாமைக் கொடுமையைச் சுட்டிக்காட்டினார்கள். அங்கே நடைபெறுகிற கொடுமை களைப்பற்றி அவர் எழுத்து மூலமாகத் தெரிவித்தால், அரசுத் தரப்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் பல சிரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, "ஜூன் மாதத்தில் உள்ளாட்சித் துறை அமைப்பு களுக்கான தேர்தல்கள் நடக்கும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது.— ஒவ்வொரு முறை சட்டமுன்வடிவு வரும்போதும், அவர் அந்தக் கேள்வியை வைத்திருப்பார்—அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுமா ?" என்று இங்கே கேட்டார்கள். ஜூன் மாதம் சோதனை செய்வதைப்போல் இருக்கிறது. நாகப்பட்டினம் இடைத் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டுதான் அவர் இதைக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். எந்த வகையிலும் ஜூன் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவது என்று அரசு முடிவான எண்ணத்தில் இருக்கிறது. அந்த வகையில்தான் செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மே மாதத்திலேயேகூட வைக்கலாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யோசனை சொன்னார்கள். அது எல்லோருக்கும் சிரமமாக இருக்கும் என்பது அவருக்கே தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே திட்டமிட்டபடி உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

ஊராட்சி ஒன்றியங்கள் தேவையற்ற பளுவை வைத்துக் கொண்டிருக் கின்றன என்றும் அந்தப் பளுவை அவர்கள் விட்டுவிட வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். அவற்றையெல்லாம் தேவையற்ற பளுவாகக் கருதுகிற அளவுக்குத் தவறு செய்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேர்தல் நடக்காத காரணத்தால், இப்போது பளுவாக இருக்கலாம். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், பல்வேறு இன்னல்கள் நிர்வாகங்களில் இருக்கலாம். ஆகவே பளுவைக் குறைத்துக் கொள்ள தேர்தல் நடைபெறவிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் மேலே சிரிய கருத்துக்களைக் கூறிய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

1979 ஏப்ரல் 18]

திரு. ம. சங்கரலிங்கம் : துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய நல்ல திட்டத்தைச் சொல்லி, இதை இதர மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னபோது, எல்லா மாவட்டங்களிலும் ஒரே முறை இருக்க வேண்டுமென்ற முறையில் மற்ற மாவட்டங்களில் உள்ளதைப் போல் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமுல் படுத்தலாமா என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதாவது பஞ்சாயத்து யூனியனின்கீழ் கல்வியைக் கொண்டுவர பரிசீலனை செய்வதாக ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இதே கருத்தை 1972 ஆம் ஆண்டிலே ஊரக வளர்ச்சி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவித்தபோது, அப்படிக் கேட்டிருக்கிறார் என்ற செய்தி வந்தவுடனேயே அந்த மாவட்டத்திலுள்ள எல்லாப் பள்ளி ஆசிரியர் களும், எல்லா அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் கொதித்தெழுந்து, கண்டனங் களையும், எதிர்ப்புகளையும் தெரிவித்த பிறகு, அத்திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் 1978 ஆம் ஆண்டிலே இதே கருத்து ஊரக வளர்ச்சி இயக்குநரிட மிருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்தவுடனே, அவர் டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. ஆகியவர்களுக்கு அதைத் தெரிவித்ததும், ஒரு பெரிய எதிர்ப்பு ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், "இந்த முறை தேவையில்லை என்று நான் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன்" என்று சொல்லி அவர் எழுதிய கடிதத்தைக் காட்டிய பிறகுதான் அமர்ந்தது. அமைச்சர் அவர்களுடைய கூற்று இன்னுமொரு பூகம்பத்தை ஏற்படுத்தக் கூடாது. ஆகவே முன்னால் எடுத்த முடிவையே தொடர்ந்து நடத்த வேண்டும். இரண்டு முறைகளில் எது சிறப்பானது, எது நல்லது என்பதை அறிய ஒரு குழுவை அமைத்து அதற்குப் பிறகு முடிவை எடுத்தால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். கன்னியாகுமரியில் உள்ள முறை நல்ல முறையாக இருந்தால், அதை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை அப்படியே நானும் வழி மொழிந்து, உள்ளாட்சி நிறுவனங்களில் இருக்கின்ற அனைத்துப் பள்ளி களையும் அரசுடைமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனநாயகத்தின் அடிப்படையிலே அரசு இதைச் சிந்தித்து இந்த முற்போக்குத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்த முடியா விட்டாலும், கன்னியாகுமரி மாவட்டப் பகுதியில் இருக்கிற நல்ல நிலைமையை யாவது கெடுக்காமலிருக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்

கொள்ளுகிறேன். அதை மாற்றும் சூழ்நிலை ஏற்பட்டால், அதற்காக ஆசிரியர் சமுதாயம் இயக்க வேறுபாடின்றி போராட ஆயத்தமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி அதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி தந்தார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் தன்னுடைய இருக்கையிலிருந்து பேச வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் தெரிவித்ததைப் போல, அதைப்பற்றி இன்னும் தெளிவாக ஆராயும்போது, அவர்கள் வழங்கியிருக்கிற கருத்துக்களையும் சேர்த்து சிந்திக்க அரசு நிச்சயமாகத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, ஆணையாளர் 44 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று புகார் செய்த தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர், செயற்குழு உறுப்பினர் ஆகியவர்களுக்கு, "வேலையிலிருந்து உங்களை ஏன் நீக்கம் செய்யக் கூடாது" என்று ஷோகாஸ் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் மத்தியில் பயமுள்ள சூழ்நிலை உருவாகி வருகிறது. அந்த ஆணையாளர் அனுப்பிய ஷோகாஸ் நோட்டீஸ்களைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதைத் தடுத்து நிறுத்த அரசு தயாராக இருக்கிறது. ஆசிரியர்கள் இப்படிப்பட்ட பயமுறுத்தல்களுக்குப் பலியாகக் கூடாது. எந்தத் தவறாக இருந்தாலும், துணிச்சலாகச் சுட்டிக் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(3) நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள நாட்டுடைமை யாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள நாட்டுடைமை யாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு கஷ்டமான சூழ்நிலையிலே பொறுப்பேற்று, படிப்படியாக ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி போக்குவரத்துத் துறையைத் திறம்பட நடத்துகிற மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். தன்னுடைய புன்முறுவலால், இன்சொல்லால், பண்பாடால் எல்லோரையும் கவர்ந்து திறமையாக தன் துறையை நடத்தி மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

ஏழு போக்குவரத்துக் கழகங்களில் ஐந்து போக்குவரத்துக் கழகங்கள் நல்ல இலாபத்தைக் கொடுக்கின்றன. மற்ற இரண்டும் இலாபத்தைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையில் இயங்குகின்றன. அப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கியதற்காக அவருக்கு எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். நேற்றுகூட பல நல்ல அறிவிப்புகளைத் தெரிவித்து எல்லோரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறார்கள். பேருந்துப் பணியாளர்களுக்காக பல அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் மக்களுக்கும் ஓரிரண்டு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். அதாவது மக்களின் வசதிக்காக லிமிட்டெட் ஸ்டாப்புகளுடன் எக்ஸ்பிரஸ் பஸ்களை

@ 937-950 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். சாதாரண கட்டணத்தைப் போல இரண்டரை மடங்கு கட்டணம் அதற்குக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அது அவ்வளவு நல்லதல்ல என்று கருதுகிறேன். இரண்டரை பங்கு என்பது மிகவும் அதிகம். ஆகவே அதை இரண்டு மடங்காகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொது மக்களுக்கும், பேருந்துப் பணியாளர்களுக்கும் இடையிலே நல்லதொரு சுமுகமான சூழ்நிலை படிப்படியாக வளர்ந்து வருகிறது. இருந்தபோதிலும் எல்லா ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பயணிகளிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் பயணிகளிடம் முரட்டுத்தனமாகவும், மரியாதைக் குறைவாகவும் நடக்கிறார்கள். மரியாதைக் குறைவாக நடந்தாலும், பள்ளிக்குச் செல்பவர்களும், அலுவலகங்களுக்குச் செல்பவர்களும், வேறு பல வேலைகள் உள்ளவர்களும் இதையெல்லாம் பற்றிக் கம்ப்ளெய்ன்ட் செய்ய முடியாது. ஆகவே அது குறித்து அடிக்கடி சர்ப்ரைஸ் ஸ்குவாட்டுகளை அனுப்பி 'செக்' செய்ய வேண்டும். ஒவ்வொரு பஸ்ஸிலும், குறிப்பாக நெரிசல் நேரங்களில் டேப் ரிக்கார்டுகளை வைத்தால் நடத்துநர்கள், ஓட்டுநர்கள் எப்படியெப்படி பேசுகிறார்கள், பயணிகள் என்ன பேசுகிறார்கள் என்று பதிவாகும். அதை வைத்து நிலைமைகளைத் தெரிந்துகொள்ளலாம். இதனால் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் கூட பயந்து மரியாதையாக நடந்துகொள்வார்கள். ஆகவே இந்த முறையை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முடிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெரிசல் நேரங்களில் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக சென்னை நகரத்தில் தினந்தோறும் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சுமார் 27 இலட்சம் மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். காலை எட்டரை மணியிலிருந்து பத்தரை மணி வரையிலும், மாலையில் 4 மணி முதல் ஆறரை மணி வரையிலும் நெரிசல் காரணமாக மிகக் கஷ்டப்படுகிறார்கள். நெரிசல் நேரங்களில் மக்களுக்குள்ள கஷ்டங்களைக் குறைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னை நகரில் இவ்வளவு நெரிசல் இருப்பதற்குக் காரணம், மற்ற நகரங்களைப் போல் இல்லாமல் சென்னை நகரத்தில் பெரும்பாலான மக்கள் பஸ்ஸையே நம்பியிருப்பதுதான். டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் 80 சதவிதம் மக்கள் இரயிலிலும், 20 சதவிதம் மக்கள் பஸ்ஸிலும் பயணம் செய்கிறார்கள். ஆனால் சென்னையில் 80 சதவிதம் மக்கள் பஸ்ஸில்

தான் பயணம் செய்கிறார்கள். இதைக் குறைக்க பல வழிவகைகளைக் கையாளலாம். தனியார் பஸ்களையும், கல்லூரிகளில், பள்ளிகளில், தனியார் நிறுவனங்களில் உள்ள பஸ்களையும் நெரிசல் நேரங்களில் விட்டு நெரிசலைக் குறைக்கலாம். சென்னை நகரத்திலே அதுவும் தெற்குப் பகுதியிலே ரயில் வசதியில்லாமல், பஸ் போக்குவரத்துத்தான் இருக்கிறது. அதனால் நெரிசல் மிக அதிகமாக இருக்கிறது. தெற்குப் பகுதியில் மட்டும் 1981 ஆம் ஆண்டில் சுமார் 29 இலட்சம், 1991 ஆம் ஆண்டில் சுமார் 44 இலட்சம் பயணிகள் தினந்தோறும் பிரயாணம் செய்வார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சுமார் 7.6 லட்சம் பயணிகளிருப்பார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் சுமார் 3.1 இலட்சம் பேர்களைத்தான் ஏற்றிச்செல்ல இயலும். மீதியுள்ளவர்களை எப்படி ஏற்றிச் செல்லுவது என்று பார்க்க வேண்டும். அந்தப் பகுதியிலே இரயிலை விட ஏற்பாடு செய்யலாம். இதற்காக மெட்ரோபாலிடன் டிரான்ஸ்போர்ட் புராஜெக்ட்டும் இரயில்வேயும் சேர்ந்து ஆய்வு செய்து திருவொற்றியூரிலிருந்து—கஸ்தூர்பா நகருக்கு Surface-*cum*-Elevated rail rapid transit system. என்ற திட்டத்தைப் பரிந்துரைத்தன. ஆனால் பணக்கஷ்டம் காரணமாக இந்தத் திட்டத்தை

(பிற்பகல் 6-50)

மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். முதல் பகுதி பீச்-லஸ் பகுதி 8.2 கிலோ மீட்டர், இரண்டாவது பகுதி லஸ்-கஸ்தூரிபா நகர் 4.3 கிலோ மீட்டர், மூன்றாவது பகுதி மெட்ராஸ் பீச்-திருவொற்றியூர் 9.3 கிலோ மீட்டர் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த மூன்றில் முதல் பகுதியை முதலிலே எடுத்துக்கொண்டு அதிலே கூட இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் பீச்-பைகிராப்ட்ஸ் ரோடு 5.2 கிலோ மீட்டர், பைகிராப்ட்ஸ் ரோட்-லஸ் என்று இரண்டாவது பிரிவு 2.9 கிலோ மீட்டர். முதல் பகுதிக்கு ரூ. 3.84 கோடியும், இரண்டாவது பிரிவுக்கு 19.81 கோடி ரூபாயும்தான் செலவு செய்ய வேண்டியிருக்கும். அதை அரசு கவனித்து மைய அரசை வற்புறுத்தி உடனே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த வேலையில் முதல் பகுதியை சீக்கிரமாக எடுத்துக் கொண்டு இப்போதே வேலையை ஆரம்பிக்க வேண்டும். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களை இதைச் செய்ய வற்புறுத்தினால், நிச்சயமாக அந்த வேலை 1982-லேயே முடிவடைந்துவிடும். அப்படிச் செய்தால், நிச்சயமாக ஜனங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் ஜனங்களுடைய கஷ்டங்கள் எல்லாம் மிகவும் குறையும் என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல, இது நல்ல

வேலைவாய்ப்புகளையும் மக்களுக்குக் கொடுக்கும். அது மட்டுமல்லாமல், மக்களுக்கு இந்தப் போக்குவரத்து மிகவும் உதவி செய்கின்ற ஒன்றாகும். இது உண்மையிலேயே அவர்கள் கஷ்டங்களை நிரந்தரமாக நீக்கும். மக்கள் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றால், இந்த ரெயில்வே டிராபிக் ராபிட் டிரான்சிட் சிஸ்டம் குறித்து இந்த அரசு நிச்சயமாக சென்ட்ரல் கவர்ன்மெண்டோடு தொடர்பு கொண்டு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Rapid Transit System proposed for Madras, unlike that of Calcutta and Bombay which is underground; is purely on surface and elevated. It would save Madras from the travails and tremors through which Bombay and Calcutta are now passing and will prevent transport from slowly coming to a grinding halt. A small beginning of the Rapid Transit Project at this stage would prevent a major disaster overtaking the City in the next decade.

ஆகையால் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் மனதிலே கொண்டு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்தில் கருத்துக்களை வழங்க வாய்ப்புக் கொடுத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். அதன் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்துத் துறையை ஏற்றுக்கொண்ட பிறகு அவர்கள் செய்துள்ள மிக முக்கியமான சாதனைகள் குறித்து என்னுடைய உளங்கனிந்த பாராட்டுதலையும், நன்றியையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. க. எஸ். வெங்கடேசன் தலைமை.)

அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்பில் சமுதாயத்தினுடைய பல்வேறு துறையினருக்கு நன்மைகள் அளிக்கக்கூடிய அளவுக்கு மிக கவர்ச்சிகரமான நல்ல பல திட்டங்கள் இருப்பது கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சி யடைகிறேன். குறிப்பாக அவருடைய சாதனைகளில் ஒன்று விரைவுப் பேருந்துக் கட்டணத்தை சாதாரண பேருந்துக் கட்டணத்திற்கு இணையாக வைத்து அன்றுமுதல் இன்றுவரை தக்க வைத்துக்கொண்டிருப்பது. அதையே நீடித்து வைத்துக் கொண்டிருப்பது குறித்து நாட்டிலுள்ள மக்கள் நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கும் அவர்கள் செய்துவருகின்ற நன்மைகள் பாராட்டுக் குரியதாகும். இந்த குழந்தைகள் ஆண்டிலே ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் இலவசப் பயணம் செய்வதற்கு சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். கிராமப்புற மாணவர்களுக்கு பயணக் கட்டணச் சலுகையை அளித்திருப்பது மிகச்சிறப்பான, பாராட்டத்தக்க அம்சமாகும்.

உறுப்பினர்களுடைய கண்ணோட்டத்தில் பார்த்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் மிக உறுதியான நடவடிக்கை எடுத்தது உள்ளபடியே பாராட்டத்தக்கதாகும். அதற்காக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் என் உளங்கனிந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய பணியை மேன்மேலும் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது இதயம் கனிந்த வாழ்த்தினை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விரைவுப் பேருந்துக்களைப் பொறுத்த வரையில், சில கருத்துக்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விரைவுப் பேருந்துகள் பொதுவாகவே குறித்த நேரத்தில் புறப்பட்டு குறித்த நேரத்தில் போய்ச் சேர்வதில்லை. எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால், இவ்வாறு இருக்கலாம் என்று சொன்னால் கூட, அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பேருந்துகள் புறப்படவேண்டிய நேரத்தில் புறப்படுவதில்லை. பிராட்வேயில் புறப்படவேண்டிய பேருந்துகள் அரை மணி நேரம், 40 நிமிடம், ஒரு மணி நேரம் என்று காலதாமதமாகப் புறப்பட்டுச் செல்லும்போது, நிச்சயமாக குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர முடியாது. புறப்படுகின்ற இடத்தில் சரியான நேரத்தில் புறப்பட்டால், சரியான நேரத்தில் அது போய்ச் சேரவேண்டிய இடத்திலே போய்ச் சேரும். ஆக சரியான முறையிலே இங்கே விரைவுப் பேருந்துகள் புறப்படவேண்டிய நேரத்தில் புறப்பட்டால், குறித்த நேரத்தைப் பின்பற்றினால், பல ஆண்டுகளுக்கு முன் இருந்த அந்த நிலைமைகள் ஏற்படும். நிச்சயமாக இந்தப் போக்குவரத்துத் துறைக்கும், அதில் உள்ள தொழிலாளர்களுக்கும் மிகப் பெரிய பெருமை வந்து சேரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பலமுறை இதைப்பற்றி யெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதன்பேரில் திருச்சியிலும், கோவையிலும், மதுரையிலும், சென்னையிலும் நேரடியாக நானே சென்று

பார்த்தேன். பிறகுதான் இதற்கான காரணங்களை ஆராய்ந்து அறிந்தேன். உண்மை என்னவென்றால், அந்த வாகனங்களைப் பராமரிக்கக்கூடிய அளவுக்கு அங்கே "ஒர்க் நார்ம்ஸ்" போதாமல் இருக்கிறது. அத்துடன் டெப்போக்கள் போதுமானவையாக இல்லை என்பதையும் கண்டு அறிந்தேன். அதற்குப் பிறகு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்று தனியாக ஒரு கழகத்தை அமைத்து, இந்தக் குறைபாடுகளைத் தீர்க்க முயற்சிக்கிறோம். வரும் மாதத்தில் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றி விவரம் சேகரித்து அதைச் சொல்லலாம் என்று இருந்தேன். அதையும் அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அதற்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்துகளிலே தூங்கும் வசதி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு Test -க்காக, சோதனைக்காகச் செய்துபார்க்கலாம் என்று சொல்கிறேன். இது என்னுடைய கருத்து. It is only a trial முடியுமா என்று சோதனை செய்து பார்க்கலாம். Sleeper's Berth வசதியை பஸ்ஸில் கொண்டுவரலாம்.

அடுத்து, இந்தப் பேருந்திலே செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது. சிறிய விஷயம் தான். இது பலருக்கு இடையூறாக இருக்கிறது: Grab Bar என்று சொல்லக்கூடிய கைப்பிடிக் கம்பி பஸ்ஸில் ஏறுகின்ற இடத்திலே மிகச் சிறியதாக இருக்கிறது. அந்த Grab Bar என்பதை நிச்சயமாக நாம் சாதாரண வண்டிகளிலே இருப்பது போல நீளமாக இருக்கச் செய்யலாம். வண்டியில் போகும்போது, கண்டக்டர்களும், பயணிகளும் பேருந்துக்குள் நடமாட வேண்டிய சமயங்களில் சிறிய கைப்பிடிக் கம்பி கஷ்டமாக இருக்கின்றது. ஆகவே மற்ற வண்டிகளிலே இருப்பது போல கைப்பிடிக் கம்பி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்துகளிலே டேப் ரெக்கார்டர் வைப்பது நீண்டதூரம் செல்லும் பயணிகளுக்குப் பொழுதுபோக்காக இருக்க உதவும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, விரைவுப் பேருந்துகளை நல்ல சிற்றுண்டி அல்லது உணவு கிடைக்கின்ற இடத்திலே நிறுத்த வேண்டும். இப்போது நிறுத்துகின்ற இடங்களிலே உணவு நல்லதாக இல்லை, என்று பரவலாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு இருந்துகொண்டிருக்கிறது. இதைப்

பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரணம் கண்டறிந்து, அந்த வண்டிகளை நல்ல தரமான சிற்றுண்டிகள், உணவுகள் வழங்கக்கூடிய விடுதிகள் முன் நிறுத்தவேண்டும் என்று ஆணை பிறப்பித்தால், உண்மையிலேயே பயணிகள் அதை வரவேற்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகள் நிற்கக்கூடிய இடங்களில், ஸ்டாப்புகளில், வருகின்ற புறப்படுகிற பஸ்களின் நேரத்தைப் பற்றிய கால அட்டவணையே கிடையாது. விரைவுப் பேருந்துகளில் சாதாரண கட்டணம் இருப்பதால், பலர் அதிலேயே பயணம் செய்ய விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நேரம் தெரிவதில்லை. ஆகவே Stops என்று சொல்லக்கூடிய இடங்களிலே எல்லாம் வருகின்ற நேரம், புறப்படுகிற நேரம் குறித்த அட்டவணை இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேருந்தில் இப்போது சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மட்டும்தான் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. முன்பே கோரியிருக்கிறோம். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் பயணம் செய்யும்போது, அவர்களுடன் இன்னொருவரையும் அனுமதிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதுபற்றி முடிவை இன்றைக்கே அறிவித்தால்கூட நான் மகிழ்ச்சி அடைவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் விடப்பட்டிருக்கின்ற 17 சிடி எக்ஸ்பிரஸ் சர்வீசில், சாதாரண பஸ் கட்டணத்தைவிட 2½ மடங்கு பஸ் கட்டணம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையே இரண்டு மடங்காக அறிவித்தால், அதில் பலரும் பயணம் செய்ய முன்வருவார்கள். போக்குவரத்துக் கழகத்துக்கும் இழப்பு வராமல் இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றவழிப் போக்குவரத்தைப் பொறுத்த வரையில், அதிகமாக வசூல் இருக்கக்கூடிய இடங்களிலே எல்லாம் இந்த மாவட்டப் போக்குவரத்துக் தடங்களை நாம் ஏன் இன்னும் கைப்பற்றவில்லை என்றும் அவற்றை தனியார் முதலாளிகளுக்கு ஏன் விட்டிருக்கிறோம் என்றும் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். சான்றாகச் சொல்கிறேன். சிதம்பரத்திலிருந்து கடலூர் செல்கின்ற வழித்தடம் அதிகமாக வசூல் ஆகின்ற வழித்தடம்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கும் வரை அவையின் காலம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அந்த வழித்தடத்தில் பெரியார் போக்குவரத்துக் கழகம் ஒரே ஒரு பஸ்தான் விட்டிருக்கிறது. அரை மணி நேரத்திற்கு ஒரு முறை பஸ் செல்கின்ற வழித்தடம். அது அதிகமாக வசூல் வருகின்ற வழித்தடம். இதை ஒரு சான்றாக நான் சொல்கிறேன். வசூல் வருகின்ற இடங்களையெல்லாம் தனியார்களுக்கு விட்டுவிட்டு இருக்கிறோம். அதை நாம் எடுத்துக்கொண்டுவிட்டால், அரசுக்கு அதிக வருமானம் வர வாய்ப்பு இருக்கும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 7-00)

ஏழை மக்களுடைய நலனுக்காக இன்னும் அதிகமான டவுன் பஸ்களை விட்டால், ஏழை மக்கள் பயனடைவதற்கும், அவர்கள் போக்குவரத்துத் துறையையும், அரசையும் பாராட்டுவதற்கும் வழிவகை செய்யுமென்பதால், இன்னும் அதிகமான டவுன் பஸ் தடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். East Coast Road —கிழக்கு கடற்கரைச் சாலை என்பது மிக நீண்ட காலமாக விவாதிக்கும் திட்டமாகும். என்ன காரணத்தாலோ அது முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை முழுமையாக நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையோடு, நெடுஞ்சாலைத் துறையும் ஒட்டியிருக்கிறது. ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்திருக்கும் துறைகள் அவை. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்து சில கருத்துக்களை அமைச்சரவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே விரிவாக கோரிக்கை மனுவைக் கொடுத்திருந்தாலும், அவற்றைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுவது என்னுடைய கடமையென்று நினைக்கிறேன். அண்மையிலே ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றைச் சொன்னார்கள். துறைகளினுடைய தலைமை நிலையங்கள் சென்னையிலே குவிந்திருப்பதை மாற்றி, பல்வேறு மாவட்டங்களில் அவற்றை அமைக்கும் வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்து, சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் நான்கு பிரிவுகள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை, பாம்பன், வெள்ளப் பாழ் பணிகள் என்று 4 பிரிவுகளாக இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இப்படி தனிப் பிரிவுகள் இருப்பது போல, கிராமச் சாலைகளுக்கென்று தனித் துறையை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்தத் துறை மிகத் தீவிரமாக கிராமச் சாலைகளில் கவனம் செலுத்தி, கிராமங்கள் மேம்பாடு அடைய உதவ முடியுமென்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஏற்கெனவே நான்கு பிரிவுகள் இருக்கின்றன. இப்போது இன்னொரு பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னேன். இந்தப் பிரிவுகளையெல்லாம் கட்டுப்படுத்தும் அளவிற்கு ஒரு பதவி இருப்பது அவசியம். மத்திய அரசிலே, அனைத்துப் பிரிவுகளையும் கட்டுப்படுத்த டைரக்டர் ஜெனரல் என்று ஒரு பதவியை வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பதவி தமிழகத்தில் இல்லை, எனவே எல்லாப் பிரிவுகளையும் சேர்த்து நிர்வகிக்கும் வகையிலே, டைரக்டர் ஜெனரல் என்ற பதவியை தமிழகத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை ஆகியவை தொழில் நுணுக்கத் துறைகளாகும். எனவே இந்தத் துறைகளுக்கு தலைமைப் பொறியாளர் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். அதற்குமேலே செயலாளர் இருக்கிறார். தொழில் நுணுக்கத் துறைகளைப் பொறுத்த வரையில், அவற்றுக்குச் செயலாளராக இருப்பவர்கள் தொழில் நுணுக்கம் தெரிந்த அதிகாரிகளாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, அய்.ஏ.எஸ். அதிகாரிகள் இருப்பது நிச்சயமாக அந்தத் துறைகளுக்கு உறுதுணையாக இருக்காதென்று எண்ணுகிறேன். வெளி நாடுகளிலே அமைச்சர்கள் அந்தத் துறையையே Specialise செய்தவர்களாக இருப்பார்கள். அங்கே அய்.ஏ.எஸ். அமைப்பு முறை அமைச்சர்களுக்கு நிர்வாகத்தில் உதவுவதாக இருக்கலாம். இங்கே அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் Specialise செய்தவர்களல்ல. எனவே அமைச்சர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள்தான். அவர்கள்தான் செயலாளர் பதவியை அடைய வேண்டும். அய்.ஏ.எஸ். அதிகாரிகள் இதில் அவ்வளவாக உதவ முடியாதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் செய்யக் காலதாமதமானாலும், மேற்கு வங்கத்தில் இருப்பதைப்போலாவது உடனடியாகச் செய்ய வேண்டும். துறையின் நிர்வாகத் தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்களை, Ex-officio Additional Secretary என்று நியமிக்கிறார்கள். எனவே நாமும் தலைமைப் பொறியாளராக இருப்பவரை, Ex-officio Additional Secretary என்று நியமித்தால், அவர்கள் உடனுக்குடன் முடிவெடுத்து, திட்டங்களின் பயனை மக்கள் பெறுகின்ற வகையிலே செயலாற்ற முடியுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வெள்ளப்பாழ் பணிகள் இப்போது அடிக்கடி நடைபெறுகின்றன. இயற்கையின் சீற்றத்தின் காரணமாக பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. புயல், வெள்ளம், நிலச்சரிவு, வறட்சி ஆகியவற்றின் காரணமாக நம்முடைய மாநிலம் அடிக்கடி பாதிக்கப்படுவதால், அதற்கென்று தனி அமைப்பு அல்லது பிரிவு அவசியமானதாகும். நேச்சுரல் கலாமிடீஸ் எனப்படும் இயற்கை பாதிப்புப் பிரிவை Natural clamities பிரிவு என்று நிரந்தரப் பிரிவாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் மணியடித்தார்)

முக்கியமான ஆலோசனைகளைச் சொல்வதால், இன்னும் சில நிமிடங்கள் தலைவரவர்கள் அனுமதிப்பார்களென்று நினைக்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : சில நிமிடங்கள்தான்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்வதால், மாற்றுத் தலைவரவர்கள் சில நிமிடங்கள் மேலும் அனுமதிப்பார் களென்று நினைக்கிறேன். சென்னையிலே எட்டு S.E. அலுவலகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எட்டு அலுவலகங்களும் இங்கேயே இயங்குவதால், நிர்வாகக் குவியல் முறைக்கு அது இடம் வகுக்கிறது. அதற்குப் பதிலாக நிர்வாகத்தைப் பரவலாக்க வேண்டும். எட்டு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களையும் பல்வேறு மாவட்டங்களில் மையமான இடங்களில் அமைத்து இயங்க வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நிமர் ஆய்வு, தொடர் ஆய்வு செய்வதற்கும், Repetation of Marches மூலம் ஆகும் அதிகச் செலவினத்தையும், நேரத்தையும் தவிர்க்கவும் இது உதவுமென்பது என்னுடைய கருத்து.

பாம்பன் தலைமைப் பொறியாளர் அலுவலகம் சென்னையிலே இருக்கிறது. அந்தப் பணிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பான அலுவலகம் பாம்பனுக்கு அருகில் இருக்கும் ஊரில் இருப்பதுதான் சாலச்சிறந்தது. அது சென்னையிலே இருப்பதால், எதிர்பார்க்கும் அளவிற்கு திட்டம் செயல்படாதென்று கூற விரும்புகிறேன். பாம்பன் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தை மதுரையிலோ அல்லது பாம்பனுக்கு அருகிலுள்ள இராமநாதபுரத்திலோ அல்லது எங்கு வசதியாக இருக்குமென்று அமைச்சரவர்கள் கருதுகிறார்களோ அங்கு மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் நிரந்தரக் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் ஒதுக்கிடு செய்யும் தொகைகள் அவ்வப்போது, அந்தந்த

ஆண்டிலே நிச்சயமாகச் செலவு செய்யப்பட்டு, மக்களிடம் போய்ச் சேர, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது பொதுப் பணித் துறையில் இந்த நடைமுறை இருக்கிறதென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறைக்கு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அங்கே இயக்குநர் பதவி இருக்கிறது. அதைத் தலைமைப் பொறியாளர் நிலைக்கு மாற்ற வேண்டும். இதனால் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் மூலமாக பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை, சோதனைகளைச் செய்ய உதவியாக இருக்குமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பட்ட மேற்படிப்பு படித்த பொறியாளர்கள் தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றுகிறார்கள். எம்.எஸ்சி. (இன்ஜினியரிங்), எம்.ஈ. படித்தவர்கள் பலர் பணிபுரிகிறார்கள். அவர்கள் மிக்க அனுபவமும், அதிகக் கல்வித் தகுதியும், ஆற்றலும், அறிவும் பெற்றவர்களென்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்களென்று நினைக்கிறேன். அவர்களுக்குப் பதவி உயர்விலே ஒரு சதவிகிதமாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது டிப்ளமா படித்த இன்ஜினியர்களுக்கு 25 சதவிகிதமும் டிகிரி படித்த இன்ஜினியர்களுக்கு 75 சதவிகிதமும் ஒதுக்கப் படுகிறது. அதாவது 1 : 3 என்ற விகிதத்தில் பதவி உயர்வு தரப்படுகிறது. டிப்ளமாவிற்கும், டிகிரிக்கும் ஒரு வேறுபாட்டைக் காட்டி, பதவி உயர்வில் சதவிகிதம் ஒதுக்குகிறோம். அதே போன்று போஸ்ட் கிராஜுவேட்டுகளுக்கும் குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கினால், அவர்களை உற்சாகப்படுத்தும் அளவிற்கு அது இருக்குமென்பதையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எம்.எஸ்சி. எம்.ஈ., படித்தவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பிலே குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, அதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நான் முன்பே சொன்னதுபோல், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் தான், செயலாளர் அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்ற கருத்தை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். அதைச் செய்வதற்கு விதிமுறைகள் இடம் கொடுக்காவிட்டால், 'எக்ஸ்-அஃபிஸியோ செக்ரட்டரி' என்ற அந்தஸ்தை அவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் விரைவாகக் காரியங்களைச் செய்வதற்கு அது உதவுமென்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். பல்வேறு சீப் இன்ஜினியர்கள் இருப்பதால், அவர்களைக் கட்டுப்படுத்த டைரக்டர் ஜெனரல் இருக்க வேண்டியது அவசியமென்று இந்தச் சமயத்தில்

கூறிக்கொள்கிறேன். இருக்கின்ற சீனியர்மோஸ்ட் சீப் இன்ஜினியரை டைரக்டர் ஜெனரலாகப் போடலாம். அந்த வகையிலே அதையும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றும் அதிகாரம் ரெவின்யூ துறைக்கு இருக்கிறது. அது நெடுஞ்சாலைத் துறைக்கே வர வேண்டும்.

(பிற்பகல் 7-10)

இல்லாவிட்டால் நிச்சயம் சாலையை அபிவிருத்தி செய்ய முடியாது ரெவின்யூ இலாகா என்றால், மக்கள் மனு கொடுப்பார்கள். அவர்களுக்கு Stay கொடுத்து விடுவார்கள். என்ன செய்ய வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறை நினைக்கிறதோ அதை இப்பொழுது அவர்களால் செய்ய முடியவில்லை. நெடுஞ்சாலைத் துறைக்கு அந்த அதிகாரம் இருக்க வேண்டும். உதவிக் கோட்டப் பொறியாளரிடம் அந்த அதிகாரம் ஒப்படைக்கப் படவேண்டும். ஊழல் புகார் வந்தால், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஊழல் எங்கு இருந்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்கது. நானும் வரவேற்கிறேன். ஆனால், ஊழல் செய்கின்ற மிக முக்கியமான கான்டிராக்டர்களுக்கு என்ன தண்டனையை இந்த அரசு வழங்கப்போகிறது? ஊழல் செய்கின்ற கான்டிராக்டர்களை இப்பொழுது Black List- -ல் சேர்த்து விடுகிறார்கள். பிளாக் லிஸ்டில் அவர்களுடைய பெயரைச் சேர்த்து விட்டால் கூட, அவர்களைச் சார்ந்த மகன் பெயரில் அல்லது மனைவி பெயரில் கான்டிராக்ட் எடுத்து திரும்பத் திரும்ப ஊழல் செய்கிறார்கள். ஊழலுக்குப் பெரும் காரணமாயிருக்கிற கான்டிராக்டர் களுக்குக் கடும் தண்டனையை அளிக்கின்ற முறையில் அவர்களுடைய குடும்பத்தினருக்கு, பிளாக் லிஸ்டில் இடம் பெற்றவர்களைச் சார்ந்தவர்களுக்கு மறுபடியும் கான்டிராக்டில் இடம் பெறச் செய்யாதவாறு சட்டம் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால், அதைப் பொதுமக்கள் மிகவும் வரவேற்பார்கள்.

இந்தக் குறிப்புகளையெல்லாம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, மிகப் பரிவுடன் பரிசிலனை செய்து, நல்ல முடிவுகளை எடுத்தால், நிச்சயமாக நெடுஞ்சாலை இலாகாவின் அபிவிருத்திக்கு அத்தகைய முடிவுகள் உதவும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்கு வரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து மீண்டும்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்து வருகின்ற, செய்கின்ற, செய்யப் போகின்ற சாதனைகளுக்கெல்லாம் எங்களுடைய முழு ஒத்துழைப்பும் உண்டு என்று கூறி அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): இனி பேச வருகின்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிடங்களுக்குள் பேசி முடித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரத்தின பாலகுருசாமி: மாற்றுத் தலைவரவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் சுருக்கமாகக் கூற ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பல சலுகைகளை சட்டமன்றப் பேரவையிலே அறிவித்துள்ளார்கள். பேருந்துத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்தும், 1,500 கிலோமீட்டர் அளவுக்கு தொழிலாளர்கள் குடும்பத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களைப் போலவே போக்குவரத்து வசதி அளித்தும், இன்னும் பல்வேறு நிதி உதவி அளித்தும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், மாணவர்களுக்கு பாஸ் வாங்கிக்கொள்ளும் வசதியையும், குழந்தைகள் ஆண்டு என்ற வகையில் ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்குக் கட்டணமில்லாமல் பயணம் செய்யும் சலுகையளித்தும், சலுகைகளை அறிவித்துள்ளார்கள். இவ்வாறு பல்வேறு சலுகைகளை அறிவித்ததன் மூலம், தான் சொல்லிய கொள்கைகளை சொல்லியபடி நிறைவேற்றுகின்ற அரசு, தொழிலாளர் நல அரசு என்பதை எடுத்துக் காட்டியிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1,500 தொழிலாளர்கள் சொந்தமாக வீடுகளைப் பெறும் முறையில் தொழிலாளர்களுக்காக ஒரு மேம்பாட்டுத் திட்ட அடிப்படையில் அந்தச் சலுகையையும் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள். அதைப் போலவே இந்த அவையிலும் சொல்லுவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நான் அதிக நேரம் எடுத்துக் கொண்டு பேச விரும்பவில்லை. நேரம் இப்பொழுது 7-15 ஆகிறது. ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்து விடுகிறேன். திருவண்ணாமலையிலிருந்து தஞ்சைக்கு இடையிலுள்ள மணலூர்பேட்டையில் உள்ள பெண்ணாற்றில் பாலம் கட்ட வேண்டும். அது சோழன் காலத்திலிருந்து ரோடு போக்குவரத்து வசதி செய்யப்பட்ட பகுதியைச் சார்ந்த இடமாகும். அந்தப் பாலம் விடுபட்டிருக்கிறது, பெண்ணாற்றில் பாலம் கட்ட வேண்டு

[திரு. கி.ரா. லெட்சுமிகாந்தன்] [1979 ஏப்ரல் 18

மென்ற யோசனையை நான் அரசுக்கு வலியுறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன். அதைப் போலவே அணக்கரை தொடங்கி கிழக்கே பிச்சாவரம் வரை கொள்ளிடம் வலது கரைக்கும் இடது கரைக்கும் கருங்கல்லில் மற்ற போக்குவரத்து வசதிகளைச் செய்ய வேண்டும். சாலை மேம்பாட்டுத் திட்ட அடிப்படையிலே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை நெடுக நெடுஞ்சாலையில் பல பேர் வீடுகளைக் கட்டிக்கொண்டு போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றார்கள். அத்தகைய ஆக்கிரமிப்புகளை நம்முடைய அரசு அப்புறப்படுத்த வேண்டும். அந்தந்த கோட்டப் பொறியாளருக்கு முழு அதிகாரத்தையும் அளித்து அவற்றை அப்புறப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களையும் வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே சென்னையிலிருந்து சேத்தியாத் தோப்பு வழியாக திருச்சி செல்லும் பாதையில் வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பட்ட மதகு கிட்டத்தட்ட பத்து அடி அகலம் கொண்டதாக இருக்கிறது. ஒரு வண்டி அந்த மதகின் வழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது, இன்னொரு வண்டி வந்தால், ஒரு வண்டி போன பிறகு தான் இன்னொரு வண்டி போக வேண்டியிருக்கிறது. பல காலம் மகஜர் கொடுத்தாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் எடுத்துச் சொல்லப்பட்டு பயனற்றதாகப் போய்விட்டபடியால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டு செய்ய முடியாவிட்டாலும் கூட, அடுத்த ஆண்டாவது சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் அந்தப் பாலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணியைப் பொறுத்தவரை, சிதம்பரம் அருகில் காட்டுமன்னார் கோயில் சர்வராயன் பேட்டை பகுதியிலுள்ள மக்கள் வெள்ள காலத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வராயன் பேட்டைப் பகுதியிலுள்ள 30 கிராமங்களில் மக்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுத்து இன்றுவரை என்ன செய்திருக்கி றார்கள் என்று தெரியவில்லை. அந்தப் பகுதியும் பக்கத்திலிருக்கும் வல்லம் படுகை காட்டுப் பகுதியும் திட்டுப் பகுதியும் வெள்ளக் காலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலை இருப்பதையொட்டி, வெள்ளகாலப் பணிக்காக அவர்கள் பல இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, அங்கே மாளிகை கட்டித் தந்திருக்கிறார்கள். அதைப் போலவே அவர்கள் அங்கு போய் வர வசதியாக அந்தப் பாலத்தையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடலூரிலிருந்து சிதம்பரம் வரை செல்கிற பாதையையும், சிதம்பரத்திலிருந்து

1979 ஏப்ரல் 18] [திரு. இரத்தின பாலகுருசாமி]

விருத்தாசலம் செல்லும் பாதையையும் சரி செய்ய வேண்டும். அந்தப் பாதைகள் இன்றையதினம் சரியாக இல்லை. அவற்றையும் சரி செய்து தர வேண்டும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் பல நல்ல கருத்துக்களையும் திட்டங்களையும் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கின்ற திட்டங்களையும், கருத்துக்களையும் தவிர வேறு எதுவும் சொல்லுவதற்கு இல்லை என்று சொல்லி நான் சொல்லிய அத்தனை யோசனைகளையும் ஏற்று செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாற்றுத் தலைவரவர்களே, நாட்டுடைமைக் கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேச நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப்போவ தில்லை. கடந்த கூட்டத்தொடரின்போது நானும், சட்டமன்ற உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்களும், வேதாரண்யம் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் சேர்ந்து மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையைத் தந்தோம். சென்னையிலிருந்து வேதாரண்யம் வரை ஒரு துரித பேருந்து சென்று கொண் டிருந்ததை இடையில் திருத்துறைப்பூண்டி வரை செல்வதாக மாற்றியமைத் தார்கள். பிறகு திருவாரூர் வரை செல்வதாக மாற்றியமைத்தார்கள். அதற்குப் பிறகு மதுரை வரை பட்டுக்கோட்டை வழியாக விட்டார்கள். அதற்குப் பிறகு அந்தத் துரித பேருந்தை நிறுத்தி விட்டார்கள். அதனால், அந்த வேதாரண்யம் பகுதி மக்கள், கோடிக்கரை பகுதி மக்கள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த அப்பகுதி மக்கள் மிகுந்த தொல்லைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும் மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். ரெயிலில் ஒரே ஒரு சீட்டு தான் ரிசர்வேஷன் சீட். ஒரே நேரத்தில், சட்டமன்றம் கூடுகின்றபோது மூன்று சட்டமன்ற உறுப்பினர் களும் சென்னைக்கு வர வேண்டுமென்றால், திருவாரூர் அல்லது நாகைக்குச் சென்று பேருந்தைப் பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டு மல்லாமல், அந்த வழித்தடம் பொதுமக்கள் எல்லோராலும் வரவேற்கப்பட்ட வழித்தடமாகும். நல்ல கலெக்ஷன் கொடுத்துக்கொண்டு வந்த ஒரு வழித்தட மாகும். அந்த வழித்தடத்தை வேதாரண்யத்துக்கும் திருத்துறைப் பூண்டிக்கும் இடையில் ஒரு பாலம் பழுதடைந்ததால் மாற்றினார்கள். வேதா ரண்யத்துக்கு அந்தப் பேருந்து ஓட முடியாத நிலை ஏற்பட்டதால், திருத் துறைப்பூண்டி வரை ஓடிக்கொண்டிருந்தது. இராமேஸ்வரம் ரெயில் 9-20 மணிக்கு திருத்துறைப்பூண்டியில் புறப்படும். 7-30 அல்லது 8 மணிக்கு அந்த பஸ் போய் திருத்துறைப்பூண்டியிலிருந்து திரும்புகிறமாதிரி ஒரு நிலை இருந்

தால், பேருந்தில் பயணிகள் ஏறிய பிறகு இடம் கிடைக்காத நிலை ஏற்பட்டால், ரெயிலில் போகிற நிலை ஏற்படும். மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு பஸ் அங்கு வாராததால்தான் இடைக்காலத்தில் எல்லோரும் ரெயிலுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. அதனால்தான், கலெக்ஷன் குறைவாக வரக்கூடிய நிலை ஏற்பட்டது. முன்பு ஓடிக்கொண்டிருந்தது போல் எட்டு மணிக்கு அந்தப் பேருந்து வந்துபோகுமானால், அது லாபகரமான ரூட்டாக இருக்கும். மக்களுக்கும் நன்மை செய்வதாக அமையும். அந்தப் பகுதி மக்கள் புறக்கணிக்கப்பட்ட மாதிரி ஒரு நிலையில் இருக்கிறார்கள். இடையிலே எங்களால் கேட்ட அந்தக் கோரிக்கை மாண்புமிகு அமைச்சரவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. பின்னர் ஏனோ நிறுத்தப்பட்டது. அந்த பஸ் ஓட வேண்டுமென்று மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். சரியான நேரத்தில் ரெயில் வருவதற்கு முன்னதாக அந்தத் துரிதப் பேருந்து வராத காரணத்தால் தான், கலெக்ஷன் குறைந்தது. மீண்டும் அந்தப் பகுதி மக்களுக்கு அந்தப் பேருந்தை விட்டு நல்ல ஒரு வாய்ப்பினைத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில பேருந்துகளில் மூன்று சீட், இரண்டு சீட் என்று இருக்கின்றன. நீண்ட தூரப் பயணத்துக்கு இந்த மூன்று சீட்டுகள் மிக மிகத் தொல்லையாக இருக்கின்றன. ஒரு பக்கத்திற்கு இரண்டு சீட்டுகளுக்கு மேல், எந்தப் பேருந்திலும் இருக்கக் கூடாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டமன்றப் பேரவையில் மட்டும் தான் நல்ல பல அறிவிப்புகளைத் தெரிவிப்பார்களா? இந்த மன்றத்தையும் மதிக்கின்ற வகையில் இன்னும் பல்வேறு சலுகைகளைத் தருகின்ற வகையில், நாங்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களைக் கேட்டு பதிலளிக்கின்ற வகையில் இன்னும் பல்வேறு சலுகைகளை அறிவிக்க வேண்டும். இப்பொழுது இருக்கின்ற முறைப்படி நாங்கள் எங்களுடைய துணைவியரை கட்டணம் இல்லாமல் அழைத்துக் கொண்டு செல்ல வாய்ப்பில்லை. நாங்கள்

(பிற்பகல் 7-20)

மட்டும் வருவதற்குத் தான் வாய்ப்பு இருக்கிறது. எங்களோடு எங்களுடைய துணைவியரை அழைத்துக்கொண்டு வருவதற்கு வசதியாக இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கென பேருந்தில் இருக்கும் இரண்டு சீட்டையும் நான்கு சீட் என்று மாற்ற வேண்டும். நாகையிலே பல்லவன் போக்குவரத்துப் பேருந்து நிலையமே இல்லை. இக்குறையை உடன் போக்க வேண்டும். திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி பகுதிகளிலே மிகவும் பழைய பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே தீர்மானம் போட்டு, தலைஞாயிறுக்கு ஒரு புதிய டவுன் பஸ் சாங்ஷன் செய்யப்பட்ட

தாகச் சொல்லப்பட்டது. அந்த பஸ் 'லேலண்ட்'-ஆக இருந்தது என்றும், அதைப் பழுதுபார்ப்பதற்கு திருத்துறைப்பூண்டி டிப்போவில் வசதி இல்லை என்றும் சொல்லி, சாங்ஷன் செய்யப்பட்ட அந்த பஸ் விடாமல் தடுக்கப்பட்டது. 'கண்டம்' பண்ணி மியூசியத்திலே வைக்கப்படவேண்டிய பஸ்கள் தான் அங்கே போய்க்கொண்டிருக்கின்றன. அங்கு புதிய டவுன் பஸ்கள், மினி பஸ்கள் விடுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக வரலாற்றிலே அரசாங்கம் எடுத்து நடத்தும் காரியங்கள் எல்லாம் நஷ்டத்திலே நடக்கின்றன என்று இருந்த நிலைமைகளை மாற்றி அரசுத் துறைகளும் நல்ல வருமானத்தை ஈட்டி கோடிக்கணக்கிலே லாபத்தைப் பெறும் என்ற புதிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய இந்தத் துறைக்கும், இந்தத் துறையை நிர்வகிக்கக் கூடிய அமைச்சர் அவர்களுக்கும் நான் நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிர்வாக நடைமுறை இன்றைக்குச் சிறப்பாக இருக்கிறது. மேலும் இது லாபத்தை மட்டும் ஈட்டிவிட்டால் போதாது என்றும், கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதற்கும், கல்லூரிகளுக்குச் செல்வதற்கும் நகரத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போலவே அவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டேன். அந்தக் கோரிக்கையை தார்மீகமாக ஒப்புக்கொள்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தார்மீகம் என்று அமைச்சர் அவர்கள் அப்போது என் சொன்னார்கள் என்றால் இதுபற்றி பின்னால் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லலாம் என்றும், அந்த நேரத்தில் சொல்ல வேண்டாமென்றும் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்களும் கிராமத்திலே இருந்து படித்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் நிச்சயமாக இதன் நிமித்தம் ஏற்படும் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்வார் என்றுதான் நான் அன்றைக்குக் கேட்டேன். அது இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் பல்வேறு சலுகைகள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே வழங்கப்பட்டிருக்கின்றன. 20 சதவீதம் போனஸ் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே பாராட்டத்தகுந்த ஒரு சிறந்த அம்சம். மற்ற துறைகளிலே, தனியார் பஸ்களிலே முன்பெல்லாம் போனஸ் கொடுக்கப்பட்டது. பஸ் போக்குவரத்தை அரசு எடுத்துக்கொண்ட

பிறகு, போனஸ் இல்லை என்ற ஒரு நிலைமை இருந்தது. ஆனால் இன்றைய தினம் போனஸ் கிடைக்கிறது. இந்த டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட்டுக்கு வேலைக்குச் செல்லலாம் என்ற ஒரு நிலைமை இன்றைய தினம் உருவாகியிருக்கிறது. வேலை இல்லாதவர்கள் அத்தனை பேரையும் கவர்ச்சிகரமாக ஈர்க்கும் வகையில் இந்த அறிவிப்புக்கள் இருக்கின்றன. என்னை யாராவது வந்து பார்த்தால், நீங்கள் டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மெண்ட்டுக்கு வேலைக்குச் செல்லுங்கள், மற்ற துறைகளைவிட அந்தத் துறையில் போனசும் சம்பளமும் கிடைக்கிறது என்று சொல்வேன். இந்த அளவிலே போக்குவரத்து நிர்வாகத்தை நடத்தி வருவது குறித்து மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் பொறுமை உடையவர்கள். பொறுமை என்பது ஒரு சிறப்பான குணம். இந்த குணத்தை சின்ன வயதிலேயே ஆசிரியர்கள் அவர்களுக்கு உருவாக்கியிருக்கிறார்கள். அவர் படித்த பள்ளியிலேயே, ஒரு விழாவுக்கு வந்திருந்தபோது, நான் அவர்களுக்கு இதைத் தெரிவித்தேன். இந்த நாட்டிலே ஒரு மனிதன் சாதனைகள் புரிகின்றான் என்றால், அதற்குக் காரணம் அந்த மனிதனுக்கு இருக்கக்கூடிய அசாத்திய பொறுமை தான். அந்த அடிப்படையிலே அமைச்சரவர்கள் பொறுமையோடு இந்த இலாக்காவை, செம்மையாக, வெற்றிகரமாக நிர்வகிக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய சாலைகளிலே நடைபாதைகளில் கோயில்கள் வைத்துக்கொண்டு போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை விளைவித்துக்கொண்டிருக்கின்றார்கள். தயவு செய்து ஆஸ்திகம், நாஸ்திகம், என்று பார்க்காமல், மக்களுடைய நன்மைக்காக அவைகள் அகற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரு நகரத்திலே ஒரு பகுதியை மாற்றியமைக்க வேண்டுமென்றால், அங்கு இருக்கும் மக்களுக்கு வேறு இடத்தில் இடம் ஒதுக்கி மாற்று ஏற்பாடு செய்து தருகிறோம். அதுபோல, இந்தக் கோயில்களுக்கும் வேறொரு இடத்தில் இடம் ஒதுக்கினால் புனிதம் கெட்டுவிடாது. இந்தக் கோயில்கள் இவ்வாறு இருக்கும் காரணத்தினால், சில நேரங்களில் டிராஃப்பிக் இடைஞ்சல் ஏற்பட்டு, அதனால் பலவிதமான ஆபத்துக்கள் கூட ஏற்படுகின்றன. ஆகவே, இந்த் நெடுஞ்சாலைகளில் நடைபாதையிலே இருக்கக்கூடிய கோயில்களை 'எவிக்ட்' செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் பஸ்களிலே பயணம் செய்வதற்கு இப்போது சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றது. சகோதரர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூட சொன்னார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கு சென்றாலும் ஒரு அட்டென்

டண்டைக் கூட அழைத்துச் செல்லலாம். அவர்களுடைய மனைவியையோ, நண்பரையோ அழைத்துச் செல்லலாம். முன்பு செகன்ட் கிளாசில் அழைத்துச் செல்லலாம் என்று இருந்தது, இப்போது முதல் வகுப்பிலேயே அழைத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. எங்களுக்கு எங்களது துணைவரையாவது பஸ்களிலேகூட அழைத்துவர அனுமதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெரிவித்த கருத்தை நான் வழிமொழிகிறேன். அதற்கான அறிவிப்பை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். எங்களது பகுதியிலே, சேந்தமங்கலம்-பள்ளம்பாறை ரோடு இருக்கிறது. திரு. காளியண்ணன் என்பவர் ஜில்லா போர்ட் பிரசிடென்ட்-ஆக இருந்தபோது, ஒரு தடவை ஜல்லி போட்டார்கள். அந்த ரோடு இப்போது ரோடாக இல்லை. வெறும் புழுதியாக இருக்கிறது. அந்த ரோட்டில் நூற்றுக்கணக்கான கட்டைமாட்டு வண்டிகள் வருகின்றன. ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்த ரோட்டில் நடக்கிறார்கள். பூராவும் புழுதியாகிவிடுகிறது. என்னுடைய தோட்டம் கூட அங்கே இருக்கிறது. எப்போதாவது தான் என்னுடைய தோட்டத்திற்கு நான் போவேன். சைக்கிளில் கூட போக முடியவில்லை. அந்த சாலையைப் பராமரித்து நீண்ட காலமாகிறது. 15 அல்லது 20 ஆண்டுகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அந்த சாலையைச் செப்பனிடுவதற்கு அமைச்சர் அவர்கள் இதைக் குறித்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இத்தனை ஆண்டுகளாக அந்த ரோடு கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகளுடைய பகுதி. அங்கு, கோம்பையிலே நிறைய விளைச்சல் ஏற்படுகிறது. விளைச்சல் செய்யப்படும் அந்தப் பொருட்களைக் கூட கொண்டு வர இயலவில்லை. நீண்டகாலமாக அந்த ரோடு நடைபாதைக்குக் கூட உகந்ததாக இல்லாமல், உடைந்து, நொடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தத் துறையின் சாதனைகளை நான் மிகவும் பாராட்டுகிறேன். தேசியமயமாக்கப்பட்டது எல்லாம் தோல்வியடைந்துவிட்டது என்று தேசியமயமாக்குவதற்கு விரோதமாக இருப்பவர்கள், எப்போதுமே ஒரு தடயம் கிடைத்தால் குற்றச்சாட்டு சொல்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சவாலாக ஒரு நல்ல முன்னேற்றத்தை உருவாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தமிழக அரசு ஏற்படுத்திய ஒரு புதிய சாதனை என்று சொல்லி நான் இந்த அரசை வெகுவாகப் பாராட்டுகிறேன். இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அனுபவத்தை வைத்து இன்னும் பல காரியங்களைச் சிறப்பாகவும் செம்மையாகவும் செய்ய வேண்டும். இது அமைச்சரவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு நல்ல அனுபவம். இந்த அனுபவத்தை நல்ல முறையில் மற்ற துறை

களிலும் பயன்படுத்தலாம். மற்ற துறைகளிலும் லாபத்தை அடையுங்கள். அரசுத்துறை என்றால், நஷ்டத்தை மட்டும் உண்டாக்குவது அல்ல, லாபத்தையும் உண்டாக்க முடியும், மற்றவர்களைப் போல ஊழியர்களுக்குப் போனஸ் வழங்க முடியும் என்று எடுத்துக்காட்டி, இதுபோன்ற புதிய சாதனைகளை மற்ற துறைகளிலும் ஏற்படுத்தவேண்டும்.

ஆசிரியர்களுக்கு கல்விப் பணி ஆற்றுவதற்காக ஒரு அரைக்கட்டணச் சலுகை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் ஒரு குறிப்பிட்ட கிலோ மீட்டருக்காவது வழங்குங்கள். எதுபோல என்றால், முதலில் 'அ' 'ஆ' என்று நாம் எழுதிப் படித்ததைப்போல, முதலில் 'அ' போடுவதைப் போல முதற்படியாக இதைச் செய்யுங்கள். பின்னால் உங்களிடத்தில் படிப் படியாக, கொஞ்சம் கொஞ்சமாக நாங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்கிறோம். ஆசிரியர்கள் ரயிலிலே பிரயாணம் செய்ய மத்திய அரசு சலுகை அளித்திருக் கிறது. ஆகவே, பஸ்களிலே பிரயாணம் செய்ய ஆசிரியர்களுக்குச் சலுகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு என்று வைத்துக்கொள்ளலாம். மே மாத விடுப்பிலே என்று கூட வைத்துக்கொள்ளலாம். மாணவர்களுக்கு இப்போது சலுகைகள் இருக்கின்றன. அவைகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் நிறைய இடங்களுக்குப் போய்வந்தால், அவர்கள் கல்விப் பணியைச் சிறப்பாக ஆற்ற முடியும். அவர்களுடைய நாலேட்ஜ் உயரும். ஆகவே அவர்களுடைய நாலேட்ஜ் உயர்வதற்கு இந்தக் கல்வித் துறையும் உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் நல்ல பல யோசனைகளைச் சொன்னார்கள். அவைகள் செயல்படுத்தப்பட வேண்டுமென்று நானும் சிபார்சு செய்கிறேன். இந்தத் துறையினுடைய சாதனைகள் மேலும் மேலும் வளரட்டும், உயரட்டும், பெருகட்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-30)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and Other Papers.

* 136. Demand No. 33—Policy Note on Housing in Tamil Nadu 1979-80. (Tamil and English)

* 137. Eighth Report of the Committee on Public Accounts on the Accounts of the Government of Tamil Nadu for the year 1973-74 and the Report (Civil) of the Comptroller and Auditor-General of India for the year 1973-74. (Tamil).

இணைப்பு I

[760 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வேலை நிறுத்தம் செய்தனர். அதற்காக அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அரசு ஆணை, எண் 463, கல்வி, நாள் 23—3—1973-ல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களின் பணிநீக்கக் காலத்தை எந்தெந்த விடுப்பிற்கு உரியவர்களோ அந்தந்த விடுப்பாகவோ, அல்லது ஊதியமற்ற விடுப்பாகவோ கருதலாமென்று அரசு ஆணையிட்டது. மேலும் அரசு ஆணை எண் 1671, கல்வி, நாள் 18—7—1977-ல் ஆசிரியர்கள் பணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த தற்காலிக பணி நீக்க குறிப்பை நீக்கம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. எனவே அவ்வாசிரியர்களுக்கு விடுப்பு வழங்கப்பட்டிருப்பதால் பணிக்கால துண்டிப்பு ஏற்பட்டுள்ளது என்று கூற இயலாது.

இணைப்பு II

[763 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1978 மே/ஜூன் திங்களில் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கும், பணி மூப்படைந்த பி.டி. ஆசிரியர்களுக்கும் மேல்நிலைப் பள்ளிகளில் பாடங்களை நடத்துவதற்கு, அவர்களைத் தகுதி செய்து பாடங்கள் கற்றுக் கொடுக்கும் பொருட்டு, பணியிடைப் பயிற்சி அரசின் செலவில் நடத்தப்பட்டன. மேல்நிலைப் பள்ளிகள், 1978 ஜூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து துவக்கப்பட்டுள்ளன. தகுதி படைத்த ஆசிரியர்

* Circulated to all M.L.Cs. on 17th April 1979.

களுக்கு மேல்நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கு மாறுதல் செய்து ஆணைகள் இடப்பட்டன. மேல்நிலைப் பள்ளிகளில் பாடங்களை நடத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள், இம்மாற்றுதல்களைத் தவிர்க்கும் பொருட்டு, மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்ற வழங்கப்பட்ட உத்தரவை ஏற்க மறுத்தனர். இதனால் ஆய்வு அலுவல்களுக்குச் சில இக்கட்டான நிலைமைகள் ஏற்படலாயிற்று. ஆசிரியர்களை தமிழகமெங்கும் அவசியம் பொருட்டு மாறுதல் செய்யலாம் மாறுதல் ஆணையை நிறைவேற்ற தவறினால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம். 11-ம் வகுப்பு (11+1+3) நீக்கப்பட்டு விட்டதால், அதிகப்படியான ஆசிரியர்களை வெளியூர்களுக்கு மாற்றல் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. பணியிடைப் பயிற்சி பெற்ற இவ்வாசிரியர்கள், மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்ற ஆணையிட்டபோது அதனை ஏற்க வேண்டும்.

மேற்கூறிய நிலையில் பள்ளிக்கல்வி இயக்குநர் சில வழிமுறைகளைத் தமக்கு கீழ் பணியாற்றும் ஆய்வு அலுவலர்களுக்கு அனுப்பியுள்ளார். எனவே அந்த வழி முறைகள் ஒன்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டதைப் போன்றதொன்றாகும். புதிய பாடத்திட்டத்தை அமுலாக்கும்போது, அதற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள், பணியாற்ற மறுக்கும்போது இத்தகைய நடவடிக்கைகளை, தவிர்க்க முடியாத நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநர் எடுக்க வேண்டியதாயிற்று.

இணைப்பு III

[833 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

முன்னுரை.

ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தகைய வளர்ச்சி வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவித்து, உழைக்கத் தூண்டும் ஒரு திட்டமாகும். தனிமனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் திட்டம்தான் இது எனினும், மக்களின் ஆக்கங்களிலும் ஊக்கங்களிலும், அரசு பெரும் பங்கேற்று அம்மக்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழி வகுக்கிறது. பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் சமுதாயம் மேம்பட்டுத் திகழச் செய்வதே இதன் இன்றியமையா நோக்கம் எனினும், ஆண்டுகள் உருண்டோடும் போது, பலவகையாகப் பிரிவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய நீரோடைகள், நாட்டு முன்னேற்றம் என்ற ஆற்றில் ஒன்று சேர்ந்து கலக்க, அந்த நாட்டின் வளத்திற்கு அவைகள் இறுதியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொள்கின்றன. மக்கள் தமக்குரிய திட்டங்களைத் தாமே வகுத்து

தாமே நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தை செயலில் காட்டும் முன்னேற்றப் பாதையைத்தான் "சமுதாய வளர்ச்சி" என்ற கைகாட்டி காட்டுகிறது. எனவே அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியில் அவர்களையே ஈடுபடுத்தினால் தேவைப்படும் நேரத்தில் தேவைக்கும் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்ற எண்ணம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இதயமாகும். மேலும், இத்திட்டம், ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை மக்கள் மனமுவந்து அளிக்கின்ற திட்டமாகவும் அமைவதால், வளர்ச்சிப் பணிகளில் தளர்ச்சியின்றி தம்மை ஈடுபடுத்திக் கொள்ள சமுதாயம் முழுவதுமே தூண்டி விடப்படுவதற்கான வாய்ப்பு அப்போது உருவாகிறது. இத்தகைய சாதனை எல்லைகளை அடைய உறுதி அளிக்கும் சட்ட பூர்வமான அமைப்புகளாக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் திகழ்கின்றன.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1979-80-ல் பல்வேறு கோரிக்கைகளில் ஒதுக்கப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு சுமார் ரூபாய் 181.57 கோடியாக இருக்கும். சட்டப் பேரவையின் முன்னுள்ள இக்கோரிக்கையான ரூபாய் 40.90 கோடி என்பது ரூபாய் 181.57 கோடியின் ஒரு பகுதியேயாகும். இக் குறிப்புரையுடன், சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி வளர்ச்சிக்குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்துக் காட்டுகிறது. இதற்கு மேலும் 1—4—1978 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு தேசியத் திட்டம் தொடங்கப்பட்டது. சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் மேம்பாட்டுக்காகவும் அவர்களிடையே வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் இத் திட்டம் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் 100 சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை (S.F.D.A.) வட்டாரங்களிலும் 30 வறட்சி நிவாரணப் பகுதித் திட்ட (D.P.A.P.) வட்டாரங்களிலும், சிறு விவசாயிகள் மேம்பாட்டு முகமை வட்டாரங்களல்லாத மற்றும் வறட்சி நிவாரணப் பகுதித் திட்ட வட்டாரங்களல்லாத 31 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பலன் கொடுக்கும் இத் திட்டம் 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பல தொண்டு நிறுவனங்கள் தொழில் மற்றும் வாணிபக் கழகங்களும் கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அக்கறை கொண்டு பல கிராம வளர்ச்சித் திட்டங்களில் பங்கு கொண்டு வருவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1978-79-ல் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் ஆய்வும் 1979-80 ஆம் ஆண்டின் திட்டங்களும் இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

2. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

(அ) அமைப்பு.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1978) தற்போது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் அடங்கியுள்ள ஜாகிர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப்பகுதியில் ஊராட்சிகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்டவுடன், தனியாக ஓர் ஊராட்சி ஒன்றியம் இப் பகுதியிலும் அமைக்கப்படும்.

(ஆ) நிர்வாக அமைப்பின் வளர்ச்சி.

நிர்வாக அமைப்பும் அது செயல்படும் முறையும் அரசின் பரிசீலனையில் தொடர்ந்து இருந்து வருகின்றன. இதுவரை செய்யப்பட்டுள்ள மாற்றங்களும் இனி செய்யவிருக்கின்ற மாற்றங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அவை யாவன :—

(i) வட்டாரங்கள், அரசின் உதவிகள் அளிக்கப்படுவதற்கு வசதியாக தலை விகித நில வருவாயின் அடிப்படையில் ஆறு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தலை. விகித நில வருவாயின் அடிப்படையில் மீண்டும் வட்டாரங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

(ii) ஊராட்சிப் பொதுத் தேர்தல்களுக்கு முன்பே மிகப் பெரிய வட்டாரங்களைப் பிரிக்கவும்—அவற்றின் எல்லைகளை மாற்றியமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் வட்டாரத்தைத் திருவரங்குளம், புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை என மூன்று வட்டாரங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள போகலூர் வட்டாரமும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கி வட்டாரமும் ஊராட்சி பொதுத் தேர்தல்களுக்கு முன்பே பிரித்தமைக்கப்படவுள்ளன.

(iii) ஊர் வளர்ச்சி நிர்வாகக் கிளைகளில் பணிபுரியும் தொழில் நுட்பமில்லா இதர பணியாளர்களின் பணி விதிகளைச் சீரடையச் செய்யவும் எல்லா நிலைகளிலும் தேக்கத்தைப் போக்கவும் வேலை உயர்வில் அனைவருக்கும் சம வாய்ப்புகள் அளிக்கவும் "ஒரு பணி விதிகள்" அமைக்க முடிவு செய்யப்பட்டு தீவிர நடவடிக்கையில் உள்ளது.

(iv) 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஊராட்சிகளுக்கு கடைசியாகத் தேர்தல் நடைபெற்றது. குறிப்பிட்ட ஐந்தாண்டு காலம் 1975 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவுற்ற போதிலும் சில தவிர்க்க இயலாத காரணங்களால் அனைத்து ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் பதவிக் காலம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களை நிர்வகிப்பதற்கு 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி முதல் 'சிறப்பு அலுவலர்கள்' நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் பதவிக் காலமும் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி அன்று 21 வயது நிரம்பிய வாக்காளர்களின் எண்ணிக்கையை வீடு வீடாகச் சென்று சேகரித்து 1978 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதியன்று 21 வயது பூர்த்தி அடைந்தவர்கள் பெயர்களையும் சேர்த்து வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி முடிவுற்றதும் ஏப்ரல் மாத இறுதியில் இறுதி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்பு தேர்தல்கள் இவ்வாண்டு மத்தியில் நடைபெறவிருக்கின்றன.

(இ) பயிற்சித் திட்டங்கள்.

ஊரக வளர்ச்சி இயக்ககம் நடத்தி வரும் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களில் வெவ்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது :—

(1) மாநில சமுதாய வளர்ச்சி நிலையம்—பவானி சாகர்.

(2) ஊரக வளர்ச்சி பணி பயிற்சி நிலையம்—பவானி சாகர் (பட்டறைப் பிரிவு இணைக்கப்பட்டது); தே. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்); பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம்); சந்திய விஜய நகரம் (வடாற்காடு மாவட்டம்); கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).

மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில், மாவட்ட மற்றும் வளர்ச்சி அலுவலர்களுக்கு ஊராட்சி கொள்கை பற்றிய பயிற்சியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குப் பணிப் பயிற்சி மற்றும் ஊட்டச் சத்துணவுத் திட்டப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஊர்நல அலுவலர்களுக்கு வேளாண்மை, கால்நடை வளர்ச்சிப் பணிகளில் இரண்டாண்டு கால "பணி முன்பயிற்சி" அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல அலுவலர்களுக்கு, வேளாண்மைப் பணிகளில் செறிவுப் பயிற்சியும் கூட அளிக்கப்பட்டு வருகின்றது. கிராமக் கைவினைஞர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்,

கும் ஓராண்டு காலத்திற்குத் தொழிற் கூடப் பயிற்சி, தச்சு மற்றும் கருமார்த் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. பெண் பணியாளர்களுக் குப் பயிற்சி அளிக்கும் வசதிகள் சத்திய விஜய நகரத்திலும், தே. கல்லுப் பட்டியிலும் அமைந்துள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் உள்ளன.

இந்தப் பயிற்சித் திட்டங்கள், அலுவலர்களுக்கு மென்மேலும் பயிற்சி அளிப்பதோடு அவர்கள் தங்கள் பணியினைத் திறம்படச் செயலாற்றுவதற்கும் பெரும் உதவி புரிகின்றன.

(ஈ) நிதி நிலை மற்றும் திட்டங்களின் சாதனைகள்.

ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவு படிப்படியாக உயர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. 1974-75 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

ஆண்டு.		நிதி ஒதுக்கீடு.	ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு.
		(ரூபாய் இலட்சத்தில்.)	
(1)		(2)	(3)
1974–75	..	1,04,22.05	27.87
1975–76	..	1,11,23.87	29.74
1976–77	..	1,16,25.40	31.08
1977–78	..	1,32,55.30	35.44
1978–79	..	1,43,07.36	38.25
1979–80	..	1,81,56.90	48.55

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்று களாகும்.

"உள்ளூர் செஸ் மேல் வரி" யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வரு வாயைப் பெருக்கிக் கொள்ளத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் செஸ் மேல் வரி இணைமானியமாக அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவது இதற்குச் சான்றாகும். 1979-80 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியத்திற்காக மட்டும் ரூபாய் 1,700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கேளிக்கை மற்றும் காட்சி வரிகள் மீது ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டு அத்தகைய வரி மட்டும் ரூபாய் 115 இலட்சத்தை எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சில திட்டங்களைப் பொறுத்த மட்டில், 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படிச் சேகரிக்கப்பட்ட அடிப்படைப் புள்ளி விபரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) கீழே கொடுக்கப்பட்டுள்ளன ;—

தொடர் எண்ணும் அளவு விபரங்களும்.	31–3–1975.	31–3–1976.	31–3–1977.	31–3–1978.
	ஆம் நாள் நிலவரப்படி			
(1)	(2)	(3)	(4)	(5)
1 இணைப்புச் சாலைகளின் நீளம் (கி. மீ.)	35,750	36,681	36,852	36,632**
2 மேநிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், தானியங்கி அழுத்த நீர்த்தொட்டிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை.	6,270	6,796	7,400	7,899
3 குடிநீர்க் கிணறுகள் எண்ணிக்கை.	76,560	79,460	81,310	83,281
4 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் உள்ள தொடக்க நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை.	19,646	19,826	19,922	20,[illegible]71
5 ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்கீழ் உள்ள உயர் நிலைத் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை	3,166	3,175	3,155*†	3,123*†
6 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான பள்ளிக் கட்டிடங்கள்.	17,360	18,034	18,615	18,939

** சில சாலைகளை ஒன்றியச் சாலைகளாக மாற்றியதன் காரணமாக குறைவு ஏற்பட்டுள்ளது.

*† உயர் நிலைத் தொடக்கப்பள்ளிகள் உயர் நிலைப்பள்ளிகளாக மாறியதன் காரணமாக இந்த எண்ணிக்கையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது.

1975-76 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களையும், 1979-80 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டும் :—

திட்டத்தின் பெயர்.	1975–76	1976–77	1977–78	1978–79 திருத்தப் பட்ட திட்ட மதிப்பு.	1979–80 வரவு-செலவு திட்ட மதிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		(ரூபாய் இலட்சத்தில்)			
வேளாண்மை ..	38.12	38.82	39.00	45.00	45.00
கால்நடை வளர்ச்சி ..	10.53	10.02	9.85	10.00	12.00
மீன் வளம் ..	1.90	1.97	2.93	3.00	3.00
இணைப்புச் சாலைகள் ..	67.56	56.00	60.26	75.00	80.00
குடிநீர் வழங்கல் ..	1,91.94*	3,15.58*	1,37.02	1,50.00	1,50.00
பள்ளிக் கட்டிடங்கள் ..	53.16	53.79	54.20	85.00	1,00.00
சமூகக் கல்வி ..	4.20	8.02	8.19	8.00	8.00
மகளிர், குழந்தைகள் நலன் ..	16.12	17.66	16.04	14.57	14.57

* வறட்சி நிவாரணத்திற்காகச் செலவழித்துள்ள தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

4. பணிகள் பற்றிய திட்டங்கள்.

(அ) கிராம வேலைத் திட்டங்கள்

'குடிநீர் வழங்கல்', 'இணைப்புச் சாலைகள்', 'பள்ளிக் கட்டிடங்கள் அமைத்தல்' ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகின்றன. 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய இந்தத் திட்டத்தின் காலம் செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரம் வருமாறு :—

1.	மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் (எண்ணிக்கை). ..	7,899
2.	கிணறுகள் (எண்ணிக்கை)	83,281
3.	இணைப்புச் சாலைகள் (கி.மீ.)	36,632
4.	பள்ளிக் கட்டிடங்கள் (கட்டி முடிக்கப்பட்டவை)	18,939

ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டம்.

ஊர்ப்புற குடிநீர் வழங்கு திட்டம் சம்பந்தமாக சமீபத்தில் நடந்த ஆய்வின்படி தமிழ்நாட்டிலுள்ள கிராமக் குடியிருப்புகள் ஆறு வகைகளாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

ஊர்ப்புற குடிநீர் வழங்கு திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க சில வகை குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இப்பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போது, 1-வது, 2-வது குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதாவது ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிநீர் வசதிகளே இல்லாத குடியிருப்புகள், மற்றும் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் குடிக்கத் தகுதியற்ற குடிநீர் நிலைகள் உள்ள குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்விரு வகையிலும் உள்ள பெரும்பான்மையான வேலைகள் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிந்து விடும். துரித ஊர்ப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகளுக்கு அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கு மத்திய அரசும் உதவி புரியத் தீர்மானித்துள்ளது.

1978-79 ஆம் ஆண்டின் சாதனைகள்.

1978-79 ஆம் ஆண்டு ஊர்ப்புற குடிநீர் வழங்கு திட்டத்திற்கு மாநில அரசு ரூ. 6,00 இலட்சம் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு 'துரித ஊர்ப்புற குடிநீர் வழங்கு திட்டத்தின் கீழ்' ரூ. 2,90 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஆக 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 8,90 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி ஒதுக்கீட்டிற்கு மேலும் கிராம வேலைத்

[1979 ஏப்ரல் 18

திட்டத்தின்கீழ் தேவை அடிப்படையில் வட்டாரங்களுக்கு ரூ. 1,50 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் நன்கொடையைச் சேர்த்து 1978-79 ஆம் ஆண்டு சுமார் ரூ. 12 கோடி இத்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளது.

1978-79 ஆம் ஆண்டில் 1-வது மற்றும் 2-வது வகைக் குடியிருப்புகளில் பெரும்பான்மையானவற்றிற்கு குடிநீர் வழங்கப்பட்டுவிடும். இதன் விவரம் கீழே காண்க:—

தொடர் எண்.	விவரிப்பு.	குடியிருப்புகளின் எண்ணிக்கை. (இலட்சத்தில்.)	பயனடையும் மக்கள்.
(அ)	வகை 1 குடியிருப்புகள் ..	14,98	5.38
(ஆ)	வகை 2 குடியிருப்புகள் ..	8,19	4.52
		23,17	9.90

1-வது, 2-வது வகைக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தைத் துரிதப்படுத்த தமிழ் நாடு குடிநீர் வடிக்கால் வாரியம் இத்திட்டத்துடன் இணைந்து பெரிதும் செயலாற்றி வருகிறது. 31—3—1979,ல் 1-வது மற்றும் 2-வது வகையைச் சார்ந்த 3,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுவிடும்.

1979-80-ஆம் ஆண்டுக்குள் 1-வது, 2—வது வகையைச் சார்ந்த 5,420 குடியிருப்புகளுக்குச் சுமார் ரூ. 25 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று செயல் படுத்தி முடிக்கப்படும்.

1979-80 ஆம் ஆண்டு கிராம வேலைத் திட்டத்தின்கீழ் ரூ. 1,50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைப் பம்புகள் பராமரிப்பு.

மாநிலத்திலுள்ள கைப் பம்புகள் பொருத்தப்பட்ட 17,000 ஆழ் குழாய்க் கிணறுகளைப் பராமரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் 230 இயந்திரக் கம்மியர்களும் 19 இயங்கு குழுக்களும் பணியாற்றி வருகின்றன. மாதம் சராசரியாக 3,000 குறைபாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

1979 ஏப்ரல் 18]

மின்விசைப் பம்புகள் பராமரிப்பு.

செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள ஊர்ப்புறங்களில் இயங்கிவரும் 2,730 விசைப் பம்புகளைப் பராமரிக்கும் பொறுப்பும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றியைப் பொறுத்தே மற்ற மாவட்டங்களில் இயங்கி வரும் விசைப் பம்புகள் பராமரிப்பையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்றுக் கொள்ளும்.

'கிராமக் குடிநீர் வழங்கல்' திட்டங்களுக்காக அரசு மானியமும், பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின்வருமாறு :—

வகை.			அரசு மானியம் (சதவீதம்).	பொது மக்கள் நன்கொடைத் தொகை (சதவீதம்).
I	..	..	50	50
II	..	..	55	45
III	..	..	60	40
IV	..	..	70	30
V	..	..	75	25
VI	..	..	80	20

(ஆ) இணைப்புச் சாலைகள்.

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1979-80-ஆம் ஆண்டு ரூபாய் 80 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இணைப்புச் சாலை வேலைகளை நிறைவேற்ற அரசு மானியமும், பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதங்களும் பின்வருமாறு :—

வட்டாரத்தின் வகை. (1)				அரசு மானியம். (2) (சதவீதம்.)	பொது மக்கள் நன்கொடைத் தொகை. (3) (சதவீதம்.)
I	..	..	..	50	50
II	..	..	..	55	45
III	..	..	..	60	40
IV	..	..	..	70	30
V	..	..	..	75	25
VI	..	..	..	80	20

[1979 எப்ரல் 18

அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென 15 சதவிதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவிதமும், அரிசன நலத் துறை நிதியிலிருந்து பெறப்படுகிறது. குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் 20 சதவிதமும் அரிசனங்கள் பயனுக்காகச் செய்யப்பெறும் பணிகளுக்காக ஒதுக்கப்படவேண்டும்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்.

தொடக்க, முதல் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், உயர் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூபாய் 20,000, ரூபாய் 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு 1974-75 ஆம் ஆண்டு கீழ்க்கண்டவாறு அரசு மானியமும் பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதமும் திருத்தியமைக்கப்பட்டது.

வட்டார வகை.	அரசு மானிய விகிதம்.	பொது மக்கள் நன்கொடைத் தொகை விகிதம்.
(1)	(2).	(3)
I	50	50
II	55	45
III	60	40
IV	70	30
V	75	25
VI	80	20

மலைப்பகுதி வட்டாரங்களைப் பொறுத்தமட்டில் கட்டுமானப் பணிகளுக்கான உச்சவரம்பு 25 சதவிதம் உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80 நிதி நிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) சாலைகளை பராமரித்தல்.

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின். 131 ஆம் பிரிவின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென 'உள்ளூர் சாலைகள் மானியம்' ஒவ்வோராண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. 1979-80 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் மக்கள் தொகை, சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பிரித்து வழங்குவதற்காக ரூபாய் 250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1979 எப்ரல் 18]

(உ) சிறு பாசனம்.

சிறு பாசன அமைப்புகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப்படவும், ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்ட பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாசன அமைப்புக்கும் குறைந்தது ஐந்து ஆண்டுகட்கு ஒரு முறையேனும் பராமரிப்புச் செய்யப்படும். 'உள்ளூர்ப் பாசன மானியம்' என்னும் தலைப்பின் கீழ் அளிக்கப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் தொகையைச் செலவிடும். ஊராட்சி ஒன்றியங்கள் இப்பாசன அமைப்புக்களைச் சரிவர பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு, 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் உள்ள ஆயக்கட்டைக் கொண்ட எல்லா பாசன அமைப்புக்களையும் பொதுப் பணித்துறை எடுத்துக் கொள்ளும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 100 எக்கருக்கும் குறைவான ஆயக்கட்டைக் கொண்ட சிறு பாசன அமைப்புக்களை ஊராட்சி ஒன்றியங்களே தொடர்ந்து பராமரித்து வரும். 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக் கட்டைக் கொண்ட ஏரிகள் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழ் விடப்பட்டு விட்டாலும் ஏரிகளைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியங்களில் எவ்வித குறைப்புமின்றி தற்போதைய அளவிலேயே இருக்கும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏரிகளை மேலும் சிறந்த முறையில் பராமரித்து வரும் நிலையில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1979-80 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத் திட்டத்திற்கென ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஊ) சமுதாயக் கிணறுகளும் ஆற்று நீரேற்றுத் திட்டமும்.

விவசாயத்தில் நம்பிக்கையுடன் உறுதியுடன் குடியானவர்கள் செயல்பட அதிகப்படியான பாசன வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதே சமுதாயக் கிணறு மற்றும் ஆற்று நீரேற்றுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் அதிகப்படியான பணிகளை நிறைவேற்றும் பொருட்டு, சமுதாயக் கிணறுகள், மற்றும் ஆற்று நீரேற்று திட்டப் பணிகளை நிறைவேற்றுவதையும், பராமரிப்பதையும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதியுடன் ஒரு கிணறுக்கு ரூபாய் 40,000 மதிப்பீடு என்ற கணக்கில் ஒரு சமுதாயக் கிணற்றை இறக்க உபரி நிதிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சமுதாயக் கிணறுகளை இறக்க நிதி குறைந்த வட்டாரங்களுக்கு கடன்களும் வழங்கப்படுகின்றன. 1979-80 ஆம் ஆண்டில் மேலும் அதிக சமுதாயக் கிணறுகள் இறக்கப்படும்.

[1979 ஏப்ரல் 18

4. உற்பத்தித் திட்டங்கள்.

விவசாயம், கால்நடை வளர்ச்சி, மீன்வளம்.

1979-80-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசு ஆணைகளின் மூலமும் தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை அளிக்கப்பட்டு உள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத்திட்டம் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டு உள்ளன.

(அ) வேளாண்மை.

(1) வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்.

(2) ஊராட்சித் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்ப கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனைய திட்டங்கள் :—

(1) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனம் வழங்குதல்,

(2) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்,

(3) உதவிகள் விரிவாக்குதல், கிராம விழாக்கள், பொருட் காட்சிகள், போட்டிகள் நடத்துதல்,

(4) வேளாண்மை விரிவாக்கப்பணி-விளக்கப் பாத்திகள் அமைத்தல்,

(5) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

1979-80 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1979 ஏப்ரல் 18]

1979-80-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 12,032 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 10,350 ரூபாய் உள்ளூர் வாசிகள் செலுத்த வேண்டும்—

		ரூ.
(i) வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்	.. ..	2,500
(ii) ஊராட்சித் தோட்டங்கள் பராமரிப்பு	..	400
(iii) ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள்.		9,132
மொத்தம்	..	12,032

(ஆ) கால்நடை வளர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 12 இலட்சம் அரசு மானியமாகத் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் 3,476 மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஈடுத் தொகையாக ரூபாய் 2,045 உள்ளூர் வாசிகளிடமிருந்து பெற வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(1) கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்துதலும் :

(2) கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

(3) கால்நடை, பால் பண்ணை, கோழி நிவளம், பன்றி வளர்ப்பு ஆகியவைகள் மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்க விருக்கும் இதர திட்டங்கள்.

(இ) மீன் வளம்.

இத்திட்டத்தில் மாநிலம் முழுவதற்கும் "ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்" என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்றே மீன் வளங்களின் மேம்பாட்டுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு எங்கெங்கு இயலுமோ அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகின்றது.

1979-80 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் :—

(1) மீன் குஞ்சு வளர்ப்பு—பேணுதல்.

(2) மீன் குஞ்சுகளை வழங்குதல் ;

(3) ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவை முழுவதற்கும்).

5. நல்லப்பணித் திட்டங்கள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியங்கள் தத்தம் பகுதிகளில் அவைகளின் நிதி வசதிக்கேற்ப ஒரு நியாயமான நிதியை ஒதுக்கித் தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி விரிவுபடுத்தி, மேம்படுத்துவதையும், தனியார், தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதையும் ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாக 1958 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (e) பகுதி வகுத்துள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழு பொறுப்பும் ஊராட்சி ஒன்றியங்களையே சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் தற்போது 28,494 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,194 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களாகும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் மொத்தம் 1,30,540 ஆசிரியர்கள் 49,23,000 மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றனர். 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அரசின் செலவு, ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

ஆண்டு.	அரசின் செலவு.	ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் பங்கு.
(1)	(2)	(3)
	ரூபாய் (இலட்சத்தில்)	
1973-74	54,32·41	3,72·00
1974-75	36,36·97	3,92·00
1975-76	38,98·28	4,32·04
1976-77	43,00·02	6,62·94
1977-78	50,69·72	7,41·18
1978-79	54,68·00	8,17·06
1979-80	73,45·00	10,01·60

மதிய உணவுத் திட்டம்.

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் உள்ளாட்சி நிறுவனங்களைப் பங்கு பெறச் செய்து மதிய உணவுத் திட்டத்தை அரசு நினைத்துச் செயல்படச் செய்ய முடிகிறது. இம் மாநிலத்திலுள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண் 17-ல் ரூபாய் 418.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மக்கள் நல்வாழ்வுப் பணிகள்.

ஆதார சுகாதார நிலையங்கள் :

ஆதார சுகாதார நிலையம், சமுதாயத்துக்கு நோய் தடுப்புச் சிகிச்சை யளிப்பது, நோய்ச் சிகிச்சையளிப்பது மற்றும் மக்களின் உடல்நலம் ஊட்டம் பெறச் செய்வது ஆகிய பல்நோக்குடன் நிறுவப்பட்டதாகும். 382 ஆதார சுகாதார நிலையங்கள் தற்போது நிறுவப்பட்டுள்ளன.

தாய்-சேய் நல நிலையங்கள் :

தாய்-சேய் நலப் பணிகளைச் செயல்படுத்துவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத் திட்டத்திற்காக ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடும் மொத்தச் செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படும் தாய்-சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,806 ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் இந்த இனத்தின்கீழ் ரூபாய் 80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :

மருந்தகங்களை நிறுவுவதும் நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதி வசதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, கிராம மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவீதம் (ஆண்டொன்றுக்கு ரூபாய் 5,400-க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்ப நலத் திட்டம்:

குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டம் 374 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(இ) சமூகக் கல்வி.

தற்போது 13,259 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர் நாட்டு நடப்புச் செய்திகளின்மீது, அவர்களுக்குள் விவாதிக்கும் ஒரு நிலையமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூர்ப் பள்ளி ஆசிரியர்கள் அல்லது படித்தவர்கள் வேறு யாரேனும் இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி வைக்க உதவுகிறார்கள்.

திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 13,734 கிராம வானொலி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 30 மன்றங்கள் ஊர்ப்புறங்கள் அனைத்திலும் நிறுவப்பட்டுள்ளன. இம் மன்றங்களின் மூலம் மக்களிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. தற்போது கிராமப்புறப் பகுதிகளில் 12,308 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. வாழ்க்கையில் முன்னேற சிறப்பான வழிமுறைகளை இம் மன்றங்களின் மூலம் கற்று வருகின்றனர். மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுவதற்கெனத் தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் 4,000 ஒதுக்கப்படுகிறது.

6. சிறப்புத் திட்டங்கள்.

(அ) செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

மத்திய அரசு, 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றின் உதவியுடன் 1962-63 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதல் முறையாக செயல்முறை சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது.

கிராமப் பகுதிகளில் குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு உட்கொள்ளும் நிலையைப் பழக்கத்தில் கொண்டு வருவதும், பரப்புவதும், சத்துணவுப் பொருட்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய கிராம மக்களுக்கு உதவுவதும், குறிப்பாகக் கிராமச் சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற மக்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்வதுமே இத் திட்டத்தின் பொதுவான நோக்கமாகும். வேளாண்மைத் துறை, சுகாதாரத் துறை, கல்வித்துறை மற்றும் நாட்டு மக்கள் குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள தாய்மார்கள், குழந்தைகளின் சத்துணவு உட்கொள்ளும் நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட பிற சமூகவர் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே கல்விப் பணிகளை ஒருங்கிணைக்கும் திட்டமாக இச் சத்துணவுத் திட்டம் விளங்குகிறது.

1962-63 ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டம் 75 வட்டாரங்களுக்கு விரிவு படுத்தப் பெற்றுள்ளன. இவற்றில், 38 வட்டாரங்களில் செயல்முறைச் சத்துணவுத் திட்டம் முடிவுற்றது. 23 வட்டாரங்களில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. 1978-79 ஆம் ஆண்டில் மேலும் 14 புதிய வட்டாரங்கள் இத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்முறை ஊட்டச் சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்ட வட்டாரங்களில் இத் திட்டம் 6 ஆண்டுக் காலத்திற்குச் செயலில் இருக்கும். திட்ட காலத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்கான விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு மத்திய அரசு 'யூனிசெப்', மாநில அரசு ஆகியவற்றால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. திட்டம் செயல்படும் காலத்திற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பெற்று நிதி ஒதுக்கங்களைக் கொண்டு, ஒவ்வோராண்டும் என்னென்ன பணியை செய்து முடிக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டு அந்த வகையில் முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன. திட்ட காலத்தில், திட்டத்தினைச் செயல்படுத்தும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பொருள் வடிவிலும், ரொக்க வடிவிலும் ரூபாய் 1.6 இலட்சம் அளவிற்கு 'யூனிசெப்' நிறுவன உதவி கிடைக்கப் பெறுகிறது. இத் திட்டத்தில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான செலவு முழுவதையும் 'யூனிசெப்' நிறுவனம் ஏற்றுக் கொள்கிறது. தவிர, ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 மகளிர் மன்றங்களையும் 5 இளைஞர் மன்றங்களையும் உருவாக்க ரொக்க உதவியாக ரூபாய் 9,500-ம் கொடுக்கப்படுகிறது. திட்டம் செயல்பட்டு வரும் வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஆண்டொன்றுக்கு ரூபாய் 34,000-மும் முன்னால் திட்டத்தைச் செயல்படுத்திய வட்டாரங்களுக்கு ஒரு ஆண்டுக்கு ரூபாய் 20,000-மும் மத்திய அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. 1978-79 ஆம் ஆண்டு முதல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திற்

கும் மைய அரசு ரூபாய் 30,000 உதவித் தொகை அளித்து வருகிறது. இது வரையில் 'யூனிசெப்' அளித்து வந்த உதவித் தொகை நிறுத்தி விட்டபடியால் அதற்கு சிறப்பு ஈட்டுத் தொகையாக இவ் உதவித் தொகையை அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு உற்பத்தி வகைப் பணிகளுக்காக ரூபாய் 51,000 வீதமும் ஊட்டச் சத்து கல்விப் பணிகளுக்காக ரூபாய் 50,000 வீதமும் ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் வழங்குகிறது. சத்துணவுத் திட்டம் செயல்படும் வட்டாரங்களிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் சிற்றூர்களிலும், கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

1. மீன் வளம்.

2. தோட்டக்கலை—

(அ) தலைமையிடத்தில் நாற்றங்கால்,

(ஆ) சமுதாயத் தோட்டம்.

3. கால் நடை வளர்ப்பு—

(அ) கால்நடைப் பண்ணைகளை உருவாக்குதல்.

(ஆ) கோழி முட்டை வளம் பெருக்கும் பிரிவுகள்.

(இ) புழக்கடைப் பிரிவுகள்.

(ஈ) தீவன மேம்பாட்டுத் திட்டங்கள்.

4. வீட்டுத் தோட்டங்கள்.

5. பள்ளித் தோட்டங்கள்.

6. சத்துணவுக் கல்வி—

(அ) மகளிர் மன்றங்களுக்கும் இளைஞர் மன்றங்களுக்கும் உதவி.

(ஆ) உணவளிப்பது குறித்துச் செயல்முறை விளக்கத் திட்டம்.

(இ) பால்வாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

7. பொதுச் சுகாதாரப் பணிகள்—

(அ) ஆய்வு.

(ஆ) மருத்துவப் பரிசோதனை.

(இ) தடுப்பு ஊசி போடுதல்.

செயல்முறை சத்துணவுத் திட்டத்திற்கு 1979-80 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்.

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர் ஆதலால் இன்றியமையாத வளர்ச்சிக் கால கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆண்டில் 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளுக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயாபீன்ஸ், மக்காச் சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் 'சாலடு' எண்ணெய்யும் அல்லது 'பீநட்' எண்ணெய்யும் 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன்பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும் ; அதாவது குழந்தைகள் 80 பேர் ; தாய்மார்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 112 வட்டாரங்களில் அமைந்து கிடக்கின்ற 1,116 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் 1,30,000 குழந்தைகளும், தாய்மார்களும் பயன் பெறுகின்றனர்.

1979-80 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூபாய் 19.00 இலட்சமாகும். இத்தொகையில் 'கேர்' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு வழங்குவதற்கு ஆகும் செலவுகள், பால சேவிகைகள், ஆயாக்கள் ஆகியோருக்கு ஊதியம், பாத்திரங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவு, மற்றும் நிர்வாகச் செலவு ஆகியன அடங்கும்.

(இ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் இம் மாநிலத்தில் 1—4—1978 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகளின் நிலையை உயர்த்துவதும் அவர்களிடையே வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் 161 வட்டாரங்களில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. வறட்சிப் பகுதித் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் ஆகியன செயல்படும்

வட்டாரங்களிலிருந்து 130 வட்டாரங்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இந்திய அரசு மானியமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் வறட்சிப் பகுதி திட்டம் போன்ற தனி திட்டங்கள் செயல்படாத 31 வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசு மானியமாக ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் குடும்பங்களைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு வட்டார அலுவலர்களைச் சார்ந்ததாகும். வர்த்தக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் நிதியை மத்திய அரசின் நிதியுடன் இணைத்து கோழி வளர்ப்பு, கால் நடை வளர்ப்பு, குடிசைத் தொழில் இன்னும் இதர பணித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பும் அவர்களையே சார்ந்ததாகும். இது ஒரு தொடர்ந்து செயலாற்றப்படும் திட்டமாகும். 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 30 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென ரூபாய் 1,000 இலட்சம் இந்திய அரசு மானியமாக அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) கிராம மேம்பாட்டுத் திட்டம்.

கிராமத்திலுள்ள ஏழை மக்களின் துயர் துடைக்கும் பொருட்டு 1978-79-ல் கிராம மேம்பாட்டுத் திட்டம் என்னும் புதியதொரு திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. கிராமங்களைத் தன்னிறைவு அடையச் செய்து, அவற்றை சிறிய நகரங்கள் போன்ற, வளர்ச்சி மையங்களாக ஆக்குவதும் இதன் நோக்கமாகும். இராமநாதபுரம், புதுக்கோட்டை, கோயமுத்தூர், வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, கன்னியாகுமரி, மதுரை ஆகிய மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள 8 ஒன்றியங்களிலுள்ள 80 கிராமங்களில் இத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் கிராம மக்களை சிறு விவசாயி, குறு விவசாயி, நிலமற்ற ஏழைகள் என மூவகையாகப் பிரித்து அவர்கள் கோழிப் பண்ணை வைத்தல், பால் பண்ணை வைத்தல், பன்றி, ஆடு மாடு முதலிய கால்நடைகளை வளர்த்தல் போன்ற தொழில்களை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். இதற்கு ஆகும் செலவின் பெரும் பகுதியை வங்கிகளின் மூலம் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் படிப்படியாக மேலும் பல கிராமங்களுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

(உ) சாண எரி வாயு தயாரிக்கும் திட்டம்.

வேளாண்மைத் தொழிலையே பெரிதும் சார்ந்திருக்கும் கிராமப்புற மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்கோடு வேளாண்மைத் தொழிலை நவீனப்படுத்தி முன்னேற்றம் காண்பதற்கான பரிந்துரைகளை வழங்கும் பொருட்டு தேசிய வேளாண்மைக் குழு ஒன்றை இந்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. அக் குழு கிராமதான ஊர்களையும், சர்வேசேவைப் பண்ணைகளையும் மேம்படுத்த, திட்டக் குழுவோடு கலந்தாலோசனை நடத்தியது. குறிப்பாக கிராமதானப் பகுதிகளில் இதற்கான அணுகுமுறை முன்னோடித் திட்ட அடிப்படையில் அமைய வேண்டுமென்றும் அவ்வாறு அமைந்தால் கிராமதானப் பகுதிகளில் பலர் இதனை விரும்பி ஏற்பர். அதனால் அருகாமையிலுள்ள பல கிராமங்களும் இத் திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளுமென்றும் அக்குழு உணர்ந்தது.

கிராம சமுதாயம் முழுவதிலும் வளர்ச்சியை உண்டு பண்ணுவதையும், கிராமப் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் கிராம முழு வளர்ச்சித் திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. கிராமம் மற்றும் கிராமச் சமுதாயத்தின் வளர்ச்சியே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். இத் திட்டத்தைப் பல சூழ்நிலைகளில் செயலாக்குவதன் மூலமாக கிடைக்கக்கூடிய போதுமான அனுபவத்தைக் கொண்டு சில மாதிரிகளை உருவாக்கி இதை நாடு முழுவதும் செயலாக்குவதே இத் திட்டத்தின் மற்றும் ஒரு குறிக்கோளாகும். முதல் படியாக வேளாண்மையிலும் இரண்டாவது படியாக வேளாண்மை அல்லாத இதர துறைகளின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்படுவதால் கிராமப்புறத்திலுள்ள அனைத்து மக்களும் பயன் பெறுவர்.

இத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்த தமிழ் நாட்டிலுள்ள நெல்லை மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஒன்றியத்திலுள்ள (1) சின்னக் கோயிலான் குளம், (2) நடுவக்குறிச்சி (பெரிய), (3) நடுவக்குறிச்சி (சிறிய), (4) பட்டாடைகட்டி ஆகிய கிராமங்களை தேசிய வேளாண்மைக் குழு தேர்ந்தெடுத்தது. மூன்று கடைசிக் கிராமங்கள் "கிராமதானக் கிராமங்களாகும்". சின்னக் கோயிலான்குளம் கிராமதானக் கிராமமாக அறிவிக்கப்பட உள்ளது.

ஒன்றியப் பணியாளர்களோடு இணைந்து தமிழ்நாடு பூமிதான வாரியம் இத் திட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. கிராம நிலையில் நான்கு கிராமங்களுக்கு ஒன்று விதம் திட்ட செயலாக்கக் குழு உள்ளது. திட்டத்தின் முன்னேற்றப் பணிகளை மேற்பார்வையிட திட்டச் செயலாக்க ஒன்றியம் ஒன்றும் உள்ளது. ஒருவர்க்கொருவர் உதவிடும் வண்ணம் பொருட்களை

வாங்கி வழங்கும் பணியையும் இவ்வொன்றியம் கவனிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த திட்டச் செயலாக்க ஒன்றியத்தின் தலைவராகவும் திட்ட இயக்குநர் ஒன்றியத்தின் செயலாளராகவும் உள்ளனர்.

மாநில அரசு மூலமாக இத் திட்டம் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு நூறு சதவீத மானியத்தை இந்திய அரசு அளிக்கிறது. இத் திட்டத்தில் பயனடைவோர் வட்டியில்லாமல் சுலபத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் குழு மூலமாக மாநில அரசு அளிக்கும் உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த உதவித் தொகை தனிப்பட்டவருக்கு அளிக்கப்படுவதில்லை. திட்டத்தைச் செயல்படுத்தும் குழுவிடம் அளிக்கப்படும். அதை ஈடுகட்ட பயனடைவோர் தாம் பெற்ற கடனை ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் வட்டியில்லாமல் செலுத்திவிடலாம். திருப்பிச் செலுத்தப்பட்ட பணம் திட்டத்தைச் செயல்படுத்தும் குழுவே அதன் நிதியுடன் சேர்த்து மீண்டும் பயனடைவோருக்கு அளிக்க வாய்ப்புள்ளது.

இதுகாறும் இத் திட்டச் செயலாக்கத்திற்கு ரூபாய் 14.35 இலட்சம் மைய அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. அதில் ரூபாய் 12.30 இலட்சம் இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 47.65 இலட்சம் மதிப்பு கொண்ட 1978-79 ஆம் ஆண்டிற்கான திருத்திய முதலீட்டுத் திட்டம் ஒன்று மைய அரசின் ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது.

இத் திட்டத்தால் பலதிறப்பட்ட வருமானங்களை உடைய 1,102 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. இதனால் 4 விழுக்காடாக இருந்த வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 8 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

ஊ. சாண எரிவாயு தயாரிக்கும் திட்டம்.

எரிவாயு தட்டுப்பாட்டைப் போக்கும் பொருட்டும் இரசாயன உரக் குறைப்பாட்டைத் தீர்க்கும் பொருட்டும் மத்திய அரசு 1974-75 ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதும் சாண எரி வாயுக் கூடங்களை நிறுவும் விரைவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்கூடம் சாணத்திலிருந்து சமையல் செய்வதற்கான எரி வாயுவைப் பிரித்தனுப்புகிறது. அத்தோடு நைட்ரஜன் நிறைந்த பயிர்களுக்கான உரத்தையும் பிரித்தெடுக்கிறது.

ஒரு சாண எரி வாயுக் கூடத்தை நிர்மாணிக்க சுமார் 4,000 ரூபாய் ஆகிறது. இந்திய அரசு 20 சதவீத உதவித் தொகையை ஒவ்வொரு கூடம் அமைப்பதற்கு அளிக்கிறது. 75 சதவீத உதவித் தொகை அரிசனங்களுக்கும், மலைச் சாதியினருக்கும் அளிக்கப்படுகிறது. எரிவாயுக் கூடங்களை நிறுவுவதில் அரசு வங்கிகளும், கூட்டுறவுத் துறை வங்கிகளும் கடன் வழங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலமாகக் கிராமப்புறங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு ஊரக வளர்ச்சி இயக்குநரைச் சாரும். 1977-78 ஆம் ஆண்டு இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 2,100-க்கு 1,554 எரிவாயுக் கூடங்கள் அமைக்கப் பட்டன. 1978-79 ஆம் ஆண்டுக்கான இலக்கு 3,000 ஆகும். மாவட்ட ஆட்சியாளர்கள் இலக்கை அடைய தீவிர முயற்சிகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். சாண எரி வாயு சக்தியைக் கொண்டு விசை ஏற்றங்களைச் செயல்படச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நம் மாநிலத்தில் தற்போது 3 விசை ஏற்றங்கள் சாண எரி வாயுச் சக்தியால் இயங்கி வருகின்றன. கிராமப்புறங்களில் பயன்படுத்த எரி வாயு சக்தியிலிருந்து மின் சக்தியைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ) வருமான வரிச் சட்டம் பிரிவு 35 (சிசி)-யின் கீழ் அளிக்கப்படும் சலுகை.

வரி விதிக்கத்தக்க ஆதாயத்தைக் கணக்கிட்டு கிராம வளர்ச்சித் திட்டத்தில் பங்கு கொண்டு அதன் மூலம் ஏற்படும் செலவை அந்த ஆதாயத்திலிருந்து கழித்துக் கொள்ள வகை செய்து 1—9—1977 ஆம் ஆண்டிலிருந்து 35(சிசி) என்ற புதிய பிரிவு ஒன்று வருமான வரிச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டது. நாட்டின் வளமான வருங்காலத்தை உருவாக்கும் இப்பணியில் தொழில்/வர்த்தக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்கலாம். ஊர்ப் பகுதிகளிலுள்ள உடல் வலுவுள்ள அனைவருக்கும் ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்பை அளித்து கிராம மக்களை ஏழ்மை நிலையிலிருந்து மீட்பதே இந்த வளர்ச்சித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இச் சலுகையைப் பயன்படுத்தி இத்திட்டத்தில் பங்கு கொள்வதற்கு முன்பு மத்திய அரசின் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்புதலைப் பெற்றிருக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் இப் பிரிவின் கீழ் செயல்படுத்த கீழ்க்கண்ட திட்டங்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) பள்ளிக் கட்டிடங்கள், மருந்தகங்கள், குடிநீர் வழங்கும் பொருட்டு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

(2) சாலைகள் அமைத்தல், சாலைகளுக்குச் சரளைக்கற்கள் பாவுதல், தார் போடுதல் மூலம் சாலைகளைச் சீரமைத்தல்.

[1979 ஏப்ரல் 18

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களைத் தெரிந்தெடுத்து, அவை அமைக்கப்பட்டுள்ள இடம் அவற்றைச் செயலாற்றுவதற்கு ஆகும் செலவு முதலிய விவரங்களுடன் அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாய்ப்புள்ள நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கலாம். ஊரக வளர்ச்சி இயக்குநர் மாநில அளவில் ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சில தொழில்/வர்த்தக நிறுவனங்கள் எடுத்துள்ள மூன்று மனுக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி ஒப்புதல் அளித்துள்ளார். இந்தச் சலுகையைப் பயன்படுத்தி தொழில்/வர்த்தக நிறுவனங்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்ள பெரிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இதன் விளைவாக நான்கு மனுக்கள் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த தொழில்/வர்த்தக நிறுவனங்கள் குடிநீர் வசதி, ஏரிக்கரைகளை அமைத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம், தடுப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் சுகாதாரப் பணிகள், தையல் யந்திரம் வழங்குதல் போன்ற பணிகளில் ஈடுபட உள்ளன.

(ஏ) பாடி (PADI) நிறுவனம்.

ஊராட்சியின் வளர்ச்சியில் ஈடுபடும் பங்கு கொள்ளும் தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் உதவி.

பாடி (PADI) நிறுவனம் இந்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு பதிவு பெற்ற நிறுவனமாகும். பதிவு பெற்ற தொண்டு நிறுவனங்கள் ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபட அவைகளுக்கு இந்நிறுவனம் உதவி அளிக்கிறது.

(அ) பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய பகுதிகளை முதலில் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அங்குதான் பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தினர் இவ்வுதவியைப் பெற்று அதன் பலனை முழுமையாக அனுபவிக்க முடியும்.

(ஆ) ஆக்கபூர்வமான அடிப்படையில் அதாவது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம், காடு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் இத்திட்டம் அமைய வேண்டும். அல்லது வேலை வாய்ப்பை நல்கக் கூடிய வகையில் உதாரணமாக வேளாண்மையை வேளாண்மைத் தொடர்புடைய தொழிலகங்களாக மாற்றியமைக்கும் நோக்கங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். சமுதாயக் கிணறுகள் அமைத்தல், பட்டுப் பூச்சி வளர்ப்பு, மரம் நடுதல், மீன் வளர்ப்பு, கதர் மற்றும் கிராமத் தொழில், சத்துணவு உற்பத்தி ஆகிய திட்டங்களை அமுல் படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநர் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பாடி நிறுவனத்தில் உதவி பெற்று ஒன்பது தொண்டு நிறுவனங்கள், பண்ணை முன்னேற்றம், வேளாண்மைச் செறிவுப் பயிர்சி, கட்டு மரம் கட்டுதல், மீன் பிடிக்கும் நவீன யந்திரங்கள் செய்தல் போன்ற ஊர் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட உள்ளன. 1979-80 ஆம் ஆண்டில் இன்னும் பல தொண்டு நிறுவனங்கள் இப் பணியில் ஈடுபட முன் வரக் கூடும்.

1979 ஏப்ரல் 18]

(அய்) வேலைக்காக உணவுத் திட்டம்.

மத்திய அரசால் தொடங்கப் பெற்ற வேலைக்காக உணவுத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யவிருக்கிறது.

நீர்ப்பாசனம், வெள்ளம், மண் பாதுகாப்பு, சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் இன்னும் இது போன்ற இதர பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் ஒரு பகுதி தானியமாக அளிக்கப்படும். இது மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படும். இதுவே இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

சுமார் 26,000 டன் அரிசி இந்த ஆண்டிற்குள் இம்மாநிலத்திற்கு இத்திட்டத்தை நிறைவேற்ற அளிக்குமாறு கேட்கப்பட்டு உள்ளது. இன்னும் அதிக அளவு அரிசி அடுத்த ஆண்டு கேட்கப்படும்.

(ஓ) வானொலியும் தொலைக் காட்சியும்.

ஊராட்சிகளில் வானொலிகள் நிறுவும் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிவுக்குள் 46,517 வானொலி பெட்டிகள் வாங்கப்பட்டு மாநிலத்தின் பல்வேறு கிராமங்களில் நிறுவப்பட்டு விட்டன.

வேளாண்மை, குடும்பநலம், பொதுச் சுகாதாரம் மற்றும் பல துறைகளின் நுட்பத்தை ஊர்ப்புற மக்களுக்குப் போதிப்பதற்காக மாநில அரசு 194 தொலைக் காட்சிப் பெட்டிகளை வாங்கி நிறுவச் செய்துள்ளது. அவைகளில் 123 பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. இதற்கு மேலும் இந்திய அரசு பரிசாக 124 தொலைக் காட்சிப் பெட்டிகளை அளித்துள்ளது. அவைகள் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ளன. அனைத்துப் பெட்டிகளையும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள

[1979 ஏப்ரல் 18

"தொலைக் காட்சி பராமரிப்பு நிலையம்" பராமரித்து வருகின்றது. இந்நிலையம் நகராட்சிகளிலும் சென்னை மாநகராட்சியிலும் தொலைக் காட்சிப் பெட்டிகளை நிறுவி பராமரித்து வருகின்றது.

(ஓ). முறைசாராக் கல்வி.

பொருளாதாரத்தில் பின் தங்கிய வகுப்பினரின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து படிக்க முடியாமல் இடையே பள்ளியை விட்டு வந்த 6 வயது முதல் 14 வயது வரை உள்ள சிறுவர்களுக்கு (ஊராட்சி ஒன்றியத்தின் உபரிநிதியிலிருந்து) தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம் இதுவாகும். கல்வித் துறை மூலமாகவும், தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் நிலையங்கள் அமைக்கப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. உபரி நிதி கொண்ட ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 780 நிலையங்கள் உள்ளன. இதைச் செயல்படுத்தும் ஆசிரியர் ஒருவருக்கு மாதம் ரூபாய் 50 மதிப்பு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. 780 நிலையங்களைச் செயல்படுத்த ரூபாய் 4.68 இலட்சம் செலவிடப்படுகிறது. மேலும் 220 கூடுதல் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன. இவைகள் ஏற்கெனவே இந்நிலையங்கள் இல்லாத உபரி நிதி கொண்ட ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட விருக்கின்றன.

(அல்) ஊராட்சி ஒன்றிய உபரி நிதியைப் பயன்படுத்துதல்.

ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 3 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும் பொது நிதி உபரி நிதியாகக் கருத்திற் கொள்ளப்படும். இவ்வுபரி நிதியிலிருந்து ரூபாய் 1 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 1 இலட்சம் முதல் 3 இலட்சம் பெறுமான வேலைகளுக்கு ஒப்புதல் அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளுக்கு அரசு ஒப்புதல் பெற வேண்டும். இந்த உபரி நிதி கீழ்க்கண்ட வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

(1) கிணறுகள் இறக்குதல், குழாய்க் கிணறுகள் அமைத்தல், ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல், தரைமட்ட நீர்த்தேக்கங்கள், மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல், சமுதாயக் கிணறுகள் அமைத்தல்.

979 ஏப்ரல் 18]

(2) ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்துதல், சரளைக் கற்கள் பரப்புதல், சல்லிக் கல் பரப்புதல்.

(3) ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சாலைகளில் பாலங்கள், சிறு பாலங்கள் தரைப் பாலங்கள் அமைத்தல்.

(4) கட்டிடங்கள் கட்டுதல், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கூடுதலான பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

1978-79 ஆம் ஆண்டு 114 ஊராட்சி ஒன்றியங்கள் உபரி நிதியிலிருந்து ரூபாய் 159.48 இலட்சம் வரையிலான தொகையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

இணைப்பு IV.

[889 ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1. நாட்டுடைமையாக்குதல்.

பொதுப் போக்குவரத்து, அரசின் உடைமையாக இருப்பதோடு அதனை அரசே நிர்வகிக்க வேண்டுமென்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. போக்குவரத்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்குவதில் இதுவரை அமைந்துள்ள முன்னேற்றம் வருமாறு :—

ஆண்டு.	சதவீதம்.
1969	25.5
1970	25.2
1971	25.5
1972	26.6
1973	39.8
1974	43.9
1975	46.7
1976	47.7
1977	51.1
1978	52.3
1979	53.2

எனவே நாட்டுடைமையாக்குவதில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை இதிலிருந்து காணலாம். முன்னரே அறிக்கை அளித்துள்ள பட்டாபிராமன் குழு, வழித் தடங்களின் சீரமைப்பு நாட்டுடைமையாக்கல் ஆகியவை தொடர்பாகச் சில பரிவுரைகளைச் செய்துள்ளது. அவை அரசின் பரிசிலனையில் உள்ளன.

பேருந்து வழித் தடத்தை நாட்டுடைமையாக்குவதில் நமது அணுகு முறை ஆக்கப்பூர்வமானது. முக்கியமாக கோடிக்கணக்கான கிராமப்புற மக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். தேசிய நெடுஞ்சாலைகளிலும், மாநில நெடுஞ்சாலைகளிலும் நிலையான போக்குவரத்துப் பணிகளை நடத்தி வருகின்ற பேருந்து உரிமையாளர்களை வெளியேற்றிவிட்டு பொதுமக்களின் நன்மையைக் கருதி அந்த வழித் தடங்களில், போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளை விடுவதனால் அதிக நன்மை ஏற்பட்டுவிடப்போவதில்லை. ஆகவே, இதுவரையில், போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாத அல்லது போதிய அளவுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாத இடங்களுக்குப் போதிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை எய்த விரிவானதொரு ஆய்வு நடத்தப்பட வேண்டும். இருக்கின்ற சாலை வசதிகள், சாலைகளின் நிலை, போக்குவரத்துப் பணிகள் செய்து கொடுக்கப்பட வேண்டிய மக்கட் தொகை, போக்குவரத்து வாய்ப்பினைக் கருத்திற்கொண்டு அறிவிக்க வேண்டிய புதிய வழித்தடங்கள் முதலியனவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டியதும் அவசியம். இவைகளைக் கருத்திற்கொண்டு, இம்மாநிலத்தில் உள்ள சாலை, போக்குவரத்து வசதிகள் குறித்த விரிவான, அறிவியல் ரீதியான ஆய்வு ஒன்றை நடத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காகும் நிதிப் பொறுப்பு, அதிலுள்ள சிக்கல்கள் ஆகியவை இந்த ஆய்விலிருந்து புலனாகும். மேலும், ஏதாவது ஒரு காலக் கட்டத்தில் கிடைக்கின்ற குறைந்த நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு எந்தெந்தப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் இந்த ஆய்வுகள் உணர்த்தும். அன்றியும் சாலைகளைச் சீரமைக்க வேண்டியிராமல் நேரடியாகவே போக்குவரத்து வசதிகள் செய்து கொடுப்பதற்கேற்ற ஊராட்சிகள், போக்குவரத்து வசதிகளே இல்லாத ஊராட்சிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க சீரமைக்க வேண்டியுள்ள சாலைகள், மோட்டார் வாகனங்கள் செல்வதற்கேற்ற வகையில் சாலைகளை மேம்படுத்துவதற்காகும் செலவு சிறிய பேருந்துகள் மற்றும் பெரிய பேருந்துகள் வருவதற்கேதுவான வழித் தடங்கள், முதலியன இந்த ஆய்வின் மூலம் தெரியவரும். மேலும்,

நாட்டுடைமைத் திட்டத்தை தீவிரமாக்கும் முன், அடிப்படை வசதிகளும், பணிமனை வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்து வழித் தடங்கள் முழுவதும் நாட்டுடைமை ஆக்கப்படும் வரையில் இன்னும் சிறிது காலத்திற்கு தனியார் துறையும், அரசுத் துறையும், பேருந்துப் பணியினை நடத்துவதற்கான பகுதிகளை வரையறுத்து தேவையற்ற போட்டி மனப்பான்மையை தவிர்க்க வேண்டியது அவசியமாகும். தொடர்ந்து அதிகமாகிக்கொண்டே வரும் போக்குவரத்துச் செலவுகள், போக்குவரத்துத் தொழிலில் பயன்படுத்தப்படும் பெட்ரோலியப் பொருள்களுக்காகும் அந்நியச் செலாவணி ஆகியவற்றை நோக்கும்போது குறிப்பாக இது முக்கியத்துவம் பெறுகிறது. 1979 ஆம் ஆண்டில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் இறக்குமதி ஆகும் வகையில் ரூபாய் 350 கோடி கூடுதலாக செலவாகும் என அண்மையில் மத்திய அரசு அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து உயர் ரக டீசல் எண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள் ஆகியவற்றின் விலை ஏற்கெனவே உயர்ந்துவிட்டது. எனவே போக்குவரத்து வழித் தடங்களை ஒட்டு மொத்தமாக நாட்டுடைமையாக்குவது பற்றி நினைப்பதற்கு முன்பு தற்போதைய வழித் தடங்களைச் சீரமைப்பதும் திட்டமிட்டு புதிய வழித் தடங்களை ஏற்படுத்துவதும் முற்றிலும் அவசியம். நான் குறிப்பிட்ட ஆய்வு, நமக்குள்ள புள்ளி விவரப் பற்றாக்குறையை நிறைவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, வரும் திங்கள்களில் தெள்ளத் தெளிவானதொரு கொள்கையை வகுக்க உதவியாக இருக்கும்.

2. பயணிப் போக்குவரத்துக் கழகங்கள்.

இம் மாநிலத்தில் கம்பெனிகள் சட்டத்தின் Companies Act கீழ் பதிவு செய்யப்பட்ட ஏழு பயணிப் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகின்றன.

இப் போக்குவரத்துக் கழகங்கள், திறமையாகவும், ஒருங்கிணைந்த முறையிலும், ஆதாயம் அளிக்கும் வகையிலும், முக்கியமாகப் பயணிகளின் வசதிகளைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் போக்குவரத்து வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி வருகின்றன. வணிக ரீதியான திட்டவட்டமான கொள்கைகளின் அடிப்படையில் இப்போக்குவரத்துக் கழகங்கள் அவைகள் பகுதிகளில் போக்குவரத்துப் பணியினைத் திறமையாகவும், ஆதாய முள்ள வகையிலும் நடத்தி வருகின்றன. வளர்ச்சிக்கும் தேய்மானத்திற்கும் தொகை ஒதுக்கியபின் இக்கழகங்கள் 6 சதவீத ஆதாயம் ஈட்டியாக வேண்டும்.

இந்தக் கூட்டுக்கோப்பில் போக்குவரத்துக் கழகங்களின் வேலைகளில் சமூக சேவையையும் இணைக்க முயற்சி செய்துவருகிறோம். முன்னாள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் பேருந்துகளையும் சொத்துக் களையும் மாற்றியும் 1971 ஆம் ஆண்டு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப் பட்ட பேருந்துகளையும் கொண்டு 1972-லிருந்து 1975-க்குள் இக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வாறு மாற்றித் தரப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதி கடனாகவும், மற்றொரு பகுதி, கழகங்கள் அமைக்கப்படும் சமயம் வட்டியில்லாப் பங்குகளாகவும் கருதப்பட்டன. பின்னர், சில கழகங்களுக்குத் தேவைப்படும் நடைமுறை மூலதனத்தைக் கடனாகவும், முன் பணமாகவும் அரசு வழங்கியது. இக்கழகங்களின் கடனைக் குறைப்பதற்காகக் கடனும் வட்டியில்லாப் பங்கும் 1 : 1 என்கிற விகிதத்தில் அமையுமாறு திருத்தி யமைக்கப்பட்டன. இவ்வாறு திருத்தி அமைத்ததனால் போக்குவரத்துக் கழகங்கள் வாணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறும் திறனை அதிகப் படுத்தியது. 1978 மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ள நிலவரப்படி போக்குவரத்துக் கழகங்களின் கடனும், வட்டியில்லாப் பங்கும் பின்வரு மாறு :—

வரிசை எண்ணும், போக்கு வரத்துக் கழகத்தின் பெயரும்.	வட்டியில்லாப் பங்கு.	கடன்.	கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வரையறைகள்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
1. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்).	3,35	3,94	நிரந்தரக் கடன்.
2. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டம்)	1,10	1,08	ஷை
3. பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவு).	3,46	2,50	ஷை
4. பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.	75	1,23	ஷை

(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
5. சேரன் போக்குவரத்துக் கழகம்	50	1	5 ஆண்டு களில் திருப்பிச் செலுத்தத் தக்கது.
6. சோழன் சாலைப் போக்கு வரத்துக் கழகம்.	78	41	ஷை
7. அண்ணா போக்குவரத்துக் கழகம்,	30	8	ஷை
8. கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம்.	1,40	1,35	நிரந்தரக் கடன்.
9. தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகம்.	83	34	ஷை
மொத்தம் ..	12,47	10,94	

இந்தக் கடனுக்கு 12 சதவிதம் வட்டி கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் மொத்தம் 2,166 இலட்சம் ரூபாய் செலவில் 1,354 புதிய பேருந்துகளை வாங்கிவிட்டுள்ளன. இவற்றில் 886 பேருந்துகள், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக வாங்கப்பட்டவை. 468 பேருந்துகள் அதிகமாக வாங்கப்பட்டவை.

இயல்பாக அதிகரித்துவரும் பயணிகள் போக்குவரத்தை நிறைவு செய்வதோடு இப்பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்ததனால் 1978-79 ஆம் ஆண்டில் (சனவரி 1979 வரை) 920 புதிய குடியிருப்புகளுக்குப் பேருந்து வசதி கிட்டியுள்ளது. இன்னும் 15.94 இலட்சம் அதிக மக்கள் இதனால் பயனடைந்துள்ளனர். தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவிக் கழகத்திடமிருந்து கிடைக்கும் தொகையைக் கொண்டு விரைவுப் பேருந்துகளை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும், வெளியூர் பேருந்துகளை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகும், நகரப் பேருந்துகளை எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், படிப்படியாக மாற்றியமைக்கும் திட்டம் மிகச் சிறந்த, அரிதான பேருந்து வாதிக்கு வகை செய்கிறது. பராமரிப்பின் தரம் உயர்ந்துள்ளது. பேருந்துகளைப் பயன்படுத்துவதின் சராசரி அளவு 85-லிருந்து 89 சத விதமாக உயர்ந்துள்ளது.

நகரத்தையே நாடியிருக்கும் போக்குவரத்துத் தொழிலை நாட்டுப்புறத்திற்கும் கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. உட்பகுதியில் இருக்கும் கிராமங்களுக்குப் பேருந்து விடுவதற்காகச் சேரன், பாண்டியன், அண்ணா போக்குவரத்துக் கழகங்கள் 13 சிறிய பேருந்துகளை (குறுகிய சக்கர அடிப் பகுதியைக்கொண்ட பேருந்துகள் உட்பட) கூடுதலாகச் சேர்த்துள்ளனர். இந்த வழித்தடங்களால் கழகங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் அவற்றை ஆதாயக் கணக்கில் ஈடு செய்துகொண்டு நாட்டுடைமைத் திட்டத்தின் முன்னேற்றத்தை நிலை நாட்டுகின்றது.

3. பயணிகளுக்கு வசதிகள்.

1978-79 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை சட்டமன்றத்தில் வைத்து உரையாற்றும்போது பயணிகளுக்குக் கூடுதலான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. அதன்படி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான பயணிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த விரைவுப் பேருந்துகளின் கட்டணத்தில் கிலோ மீட்டருக்கு ·5 பைசா என 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் குறைக்கப்பட்டுள்ளது.

நிழற் குடைகள் கட்டும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் விரைவாகச் செயல் படுத்தப்பட்டு, ஏற்கனவே திட்டமிட்ட 350 நிழற் குடைகளுக்குப் பதிலாக 402 நிழற் குடைகள் கட்டப்பட்டுள்ளன.

சொகுசுப் பேருந்துகள் இன்னும் அதிகமாக விடப்படும் என்று உறுதியளித்ததற்கிணங்க 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள் முதல் சென்னை-திருவனந்தபுரம் வழித்தடத்தில் இரண்டு குளு குளு சொகுசுப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் அதிகமான குளு குளுப் பேருந்துகள் விடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

பேருந்துகள் நடுவழியில் பழுதடைந்துவிட்டால் பயணிகளுக்கு ஏற்படும் வசதிக் குறைவை நீக்கவேண்டி, எஞ்சியுள்ள பயணத்தொலைவிற்கான பயணக் கட்டணத்தை பயணிகளிடம் திருப்பித் தரும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. பேருந்துகள் வழியில் பழுதடைந்தால் பயணிகளுக்கு ஏற்படும் காலதாமதத்தைக் குறைக்கும் வண்ணம் நெடுந்தூரப் பேருந்துகளில் தேவையான கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்தோடு, போக்குவரத்துக் கழகங்கள் வருமானம் இல்லாத வழித்தடங்களில்கூட பேருந்துகளை தொடர்ந்து நடத்தி வருகின்றன. 1978 டிசம்பர் திங்களில் இயக்கப்பட்ட 4,893 பேருந்துகளில் 2,827 பேருந்துகள் வருமானம் இல்லாத வழித் தடங்களில் இயக்கப்பட்டன. இது 57.7 சத விதமாகும்.

புற்றுநோய் நோயாளிகள் சிகிச்சை பெறச்செல்லும்போது போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் சலுகைக் கட்டத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கண்பார்வையிழந்தவர்கள் சென்னை நகரத்தில் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

தமிழ் நாட்டில் நடைபெறும் பலவித பொருட்காட்சிகள் மற்றும் பண்டிகைகளின்போது பயணிகளின் வசதிக்காக தனிப்பேருந்துகளை விடப் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்பாடு செய்கின்றன. அக்காலங்களில் கூட்டம் கூட்டமாக வரும் பயணிகளுக்காகப் போதுமான எண்ணிக்கையில் தனிப் பேருந்துகள் விடப்படுகின்றன. போக்குவரத்தை ஒழுங்காக முறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பயணிகளின் வசதிக்காகத் தேவையான இடங்களில் பந்தல்கள் போடப்பட்டு குடிதண்ணீர் வசதியும் கழிப்பிட வசதியும் செய்து கொடுக்கப்படுகின்றன.

பயணிகளின் வசதிக்காக பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் 10 நாட்களுக்கு முன்பாக இருக்கைக்கு முன்பதிவு செய்து கொள்ளலாம். முக்கியப் பேருந்து நிலையங்களிலும், வழித்தட முடிவு இடங்களிலும் இப்படிப்பட்ட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர போக்குவரத்து அதிகமாகவுள்ள இடங்களில் அந்தந்த இடத்திற்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட இடங்களுக்கான முன்பதிவும் செய்யப்படுகின்றது. இந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு முன்னுரிமை "டோக்கன்களும்" வழங்கப்படுகின்றன.

சென்னை, திண்டிவனம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோயில், சேலம், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, வேலூர் போன்ற இடங்களில் உள்ள பேருந்து நிலையங்களில் பயணிகளுக்குக் கழிப்பிட வசதிகளுடன் கூடிய தங்குமிடத்தைப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவுப் பிரிவு) பராமரித்து வருகிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள பேருந்து நிலையங்களில் சிற்றுண்டி விடுதிகளும் உள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோயில், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர்,

சென்னை ஆகிய இடங்களில் பயணிகள் தங்கும் அறைகளும், சாமான்களை பத்திரப்படுத்தும் அறைகளும் உள்ளன. குழுக்களாக வரும் பயணிகள் தங்குவதற்கு பெரிய கூடங்கள் போன்ற அறைகள் சென்னையில் உள்ளன.

4. விபத்துக்களைத் தடுத்தல்.

விபத்துக்களைத் தடுப்பதற்கும், பேருந்துகளைத் தக்க பாதுகாப்புடன் ஓட்டுவதற்கும் போக்குவரத்துக் கழகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

நகரத்தில் ஓடும் பேருந்துகளைத் தவிர பிற எல்லாப் பேருந்துகளிலும் வேகம் பதிவு செய்யும் கருவியைப் பொருத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. வேகம் பதிவு செய்யும் கருவியைக்கொண்டு, பேருந்தின் வேகத்தை கட்டுப்படுத்துவதோடு அனுமதியளிக்கப்படாத இடங்களில் ஓட்டுநர்கள் பேருந்தை நிறுத்துகின்ற பழக்கமும் கண்காணிக்கப்படும்.

விபத்து இல்லாமல் பேருந்தை நல்ல முறையில் ஓட்ட வேண்டும் என்ற உணர்வை ஓட்டுநர்களின் மனதில் தோற்றுவிக்கும் பொருட்டு விபத்தின்றி ஓட்டுவதற்காக ஓட்டுநர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் போக்குவரத்துக் கழகங்களில் செயலில் உள்ளது. இது நல்ல வரவேற்பை அளித்துள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி, விபத்து இல்லாமல் ஓராண்டு பேருந்தை ஓட்டுபவருக்கு ரூபாய் 100 பரிசாக அளிக்கப்படுகிறது. அடுத்த ஒவ்வொரு விபத்தில்லா ஆண்டிற்கும் ரூபாய் 25 அதிகப்படியாக வழங்கப்படுவதால், பரிசுத் தொகை கூடுதலாகக் கிடைப்பதுடன் ஓட்டுநர்கள் பேருந்துகளை விபத்தின்றி ஓட்டும் காலமும் அதிகரிக்கிறது.

தொடர்ந்து விபத்தில்லாமல் பேருந்துகளை ஓட்டு
கின்ற ஆண்டுகளின் எண்ணிக்கை.

	பரிசுத்தொகை. (ரூபாயில்)
1 ஆண்டு	100
2 ஆண்டுகள்	125
3 ,,	150
4 ,,	175
30 ,,	3,000

ஓட்டுநர்கள் கவனக்குறைவாக ஓட்டுவதால் பெரும்பாலான விபத்துக்கள் நிகழ்கின்றன. பேருந்து ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்க முறையான பள்ளி எதுவும் இல்லாததால் லாரிகளை ஓட்டக் கற்றுக்கொண்டவர்களை அந்த மாதிரி கனரக வாகனங்களை ஓட்டுவதில் அவர்களுக்குள்ள அனுபவத்தை வைத்துப் பேருந்துகளில் ஓட்டுநர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த ஓட்டுநர்கள் அவர்கள் முன்பு "டிரக்" ஓட்டியபோது உண்டான பழக்கங்களுடன் பேருந்தை ஓட்டுகின்றனர். சிறந்த ஓட்டுநர்களை உருவாக்கும் எண்ணத்துடன் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் ஆதரவின் கீழ் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தேவையான உடற்கட்டும் பள்ளியிறுதித் தேர்வுக் கல்வித் தகுதியும் பெற்றுள்ளவர்களும் வாகனங்களை ஓட்டத்தெரியாதவர்களுமான இளைஞர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 32 வாரங்களுக்கு சாதாரண, கனரக வாகனங்களை ஓட்டுதல், மோட்டார் இயந்திரவியல், பொதுமக்கள் தொடர்பு, முதலுதவி ஆகியவற்றில் அவர்களுக்குத் தீவிரப் பயிற்சியளிக்கப்படும். இந்த பயிற்சிக்குப்பிறகு இவர்களைப் போக்குவரத்துக் கழகங்களில் வேலையில் சேர்த்துக்கொள்வதுபற்றி பரிசீலிக்கப்படும்.

விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில், இறந்தவர்களுக்கு ரூபாய் ஆயிரமும், காயம் அடைந்தவர்களுக்கு எந்த அளவுக்குக் காயம் அடைந்துள்ளனர் என்பதை வைத்துத் தொகையளிக்கும் திட்டம் சென்ற ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் போக்குவரத்து ஆணையாளரால் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

5. தொழிலாளர் நல நடவடிக்கைகள்.

தங்களது மேலான வாடிக்கையாளர்களுக்குப் பணி செய்வதுடன், போக்குவரத்துக் கழகங்கள் தொழிலாளர் நலனிலும் அதிக அக்கறை காட்டுகின்றன. எல்லாக் கழகங்களிலும் செயலிலுள்ள நீண்டகால சம்பளத் திட்டம் பல்வேறு கழகங்களுக்கு இடையே ஒரே மாதிரியான சம்பள அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு விதிகள், மருத்துவ வசதிகள் முதலியன இருப்பதற்கு வகை செய்கின்றது. இத்திட்டம் மாநில போக்குவரத்துக் கழகங்களில் இதற்கு முன்னிருந்த பல்வேறு சம்பள நிலைகளைச் சீரமைத்துள்ளது. தொழிலாளர்களின் தகுதி, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் தற்போது சம்பள விதங்களுக்குப் பொருந்துமாறு வகை செய்கிறது.

[1979 ஏப்ரல் 18

இத்திட்டம் பணி உயர்வுக்குப் போதிய வாய்ப்பு இன்றி தொழிலாளர்கள் மனச்சோர்வு அடையாமல் இருக்க வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 30 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளி தன்னுடைய பணியைத் திறமையாகவும் நிறைவுள்ள முறையிலும் செய்திருந்தால், பணிக்காலம் முழுவதும் படிப்படியாக ஊதிய உயர்வு பெற்று குறிப்பிட்ட பதவிக்கு உயர வாய்ப்பு உள்ளது. இதே போன்ற திட்டத்தை அரசுப் பணியாளர்களுக்கும் கொண்டு வருவதற்காக ஊதிரிக்குழு இதனைக் கருத்திற்கொண்டது.

பணி நிலைமைகள், அதாவது அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, விடுப்பு, மருத்துவ வசதிகள் போன்றவையெல்லாம் அனைத்துக் கழகங்களிலும் ஒரே மாதிரியாக இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகப் பணியாளர் அனைவரும் பயன்பெறத் தக்க வகையில் தகுந்த ஊக்கத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இவை கீழ்க்கண்ட நோக்கங்களை அடைவதற்காக உள்ளன :—

(அ) பணியாளர் அதிக சம்பளம் ஈட்டுவதற்கு வாய்ப்பளித்தல்.

(ஆ) அரசுப் போக்குவரத்துப் பணியாளர்கள் தங்களின் நன்னடத்தைச் சார்ந்த சிறந்த பணியின் மூலம் பொது மக்களுக்கு நன்மை செய்தல்.

(இ) தொழிலாளர்களின் வேலை திறத்தை உயர்த்தி அதிக ஆதாயம், குறைந்த செலவு ஆகியவற்றின் மூலம் கழகங்கள் பயன்பெறுதல்.

நீண்டகால சம்பளத் திட்டமும் ஒரே மாதிரியான ஊக்க ஊதியத் திட்டங்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் சீரான போட்டி மனப்பான்மை நிலவ உதவி செய்கின்றன. பணியாளர்களின் கடுமையான உழைப்பு அவர்களுக்கு அதிகமான வெகுமதியை அளிக்கிறது.

கலந்து பேசி ஒப்பந்தம் செய்து கொண்டபிறகு 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் எல்லாப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பொறியியல் கழக பணியாளர்களுக்கு மாதம் ரூபாய் 27 தற்காலிகத் தொகையாக (Ad hoc Payment) அரசு வழங்கியது 1978 ஆம் ஆண்டு அரசு வழங்கியது. மே மாதம் செய்துகொள்ளப்பட்ட இறுதி ஒப்பந்தப்படி அடிப்படை சம்பளத்தில் மாதம் ஒன்றுக்கு ஓட்டுநர்களுக்கு ரூபாய் 15-ம் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் ரூபாய் 10-ம் ஏற்கனவே கொடுத்த அகவிலைப் படியில் ரூபாய் 35-ம் உயர்த்திக் கொடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. தற்காலிகத் தொகையாக. (Ad hoc Payment) வழங்கப்பட்ட ரூபாய் 27, இறுதி உடன்படிக்கையில் கிடைத்த தொகையில் சரிக் கட்டப்பட்டுள்ளது, இடையிடையே கிடைக்கும் சொற்ப ஆதாயங்களில் ஏற்பட்ட உயர்வுகளைச் சேர்த்து ஒவ்வொரு போக்குவரத்துப் பணியாளர்களுக்கும் கிடைத்த மொத்த

1979 ஏப்ரல் 18]

பலன் ரூபாய் 61 முதல் ரூபாய் 69 வரை ஆகும். 1978 ஆம் ஆண்டு ஜனவரி ஜனவரி 1 ஆம் நாள் முதல் மருத்துவ விடுப்பு ஆண்டொன்றுக்கு ஆறு நாட்களிலிருந்து எட்டு நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது, அவையில் கொடுக்கப்பட்ட உறுதிமொழிக்கேற்ப, 51 இடங்களில் சிற்றுண்டிச்சாலைகளையும் பொழுதுபோக்குக்கான வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளையும் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தியுள்ளன. அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் நிருவாகங்களும் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகள் பள்ளி அல்லது கல்லூரிக்கு சென்று வர இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கி வருகின்றன.

கழகம் தொடங்கப்பட்ட நாளன்று அல்லது அதற்குப் பிறகு பணியிலிருக்கும் ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கும்பொருட்டு இறந்தவருடைய ஆதரவில் இருந்த ஒருவருக்கு, வேலை தேடித்தரும் அலுவலகத்தை அணுகாமலேயே, போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பதவி காலியிடத்தில் அவரது தகுதியைப் பொறுத்து அவரைச் சேர்த்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.

அரசு மருத்துவ மனைகளில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற இலவச உட்புற நோயாளி மருத்துவ வசதி போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் குடும்ப நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான போக்குவரத்துக் கழகங்கள் தொழிலாளர் நல அறக்கட்டளைகளை ஏற்படுத்தி தங்களுடைய அதிகப்படியான வருவாயிலிருந்து பெரும் பகுதியை அதற்கு ஒதுக்கியுள்ளன. சேரன் போக்குவரத்துக் கழகம் இதற்காக ரூபாய் 7.3 இலட்சத்தை ஒதுக்கி முன்னோடியாகத் திகழ்கிறது. இந்த நிதி தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் (Note books), பலகைகள், உதவித்தொகை முதலியன வழங்கப் பயன்படுத்தப்படுகிறது.

பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் அவர்களின் பணியாளர்களுக்கு மிகக் குறைவான வட்டி வீதத்தில் எளிதான தவணைகளில் திரும்ப வசூலிக்கப்பெறும் வகையில் திருமணக் கடன் அளிக்கின்றன.

சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகியவை தங்களது பணியாளருக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்குப் பணியாளர் கூட்டுறவு

பண்டக சாலைகளுக்குச் சலுகை கட்டண வட்டி விகிதத்தில் நிதி உதவி செய்கின்றன. பல்வேறு கிளைகளில் பணிபுரியும் பணியாளருக்கு உணவு தானியங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை கூட்டுறவுப் பண்டக சாலைகள் மூலம் வழங்குவதற்காக, சேரன் மற்றும் சோழன் போக்குவரத்துக் கழகங்கள் இயல் ஊர்திகள் (Mobile Vans) ஏற்பாடு செய்திருக்கின்றன. பணியாளர்கள், நகர்ப்புற வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திடமிருந்து வீடு கட்டுவதற்காக கடனுதவிபெற்று "வீடு உமக்கே சொந்தம்" எனும் திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு சேரன் போக்குவரத்துக் கழகம் உதவியுள்ளது. இக்கழகம் அதன் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக, வட்டியைக் குறைத்து அல்லது நிலங்களை மேம்பாடு செய்து கொடுத்து கணிசமான அளவிற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாளர்களுக்கு முறையாக தைத்த சீருடைகளையும் காலணிகளையும் வழங்குகின்றன. போக்குவரத்துப் பணியாளர்களுக்கு சீருடைகள் தைக்கும் பொருட்டு அப் போக்குவரத்து கழகப் பணியாளர்களின் குடும்பங்களிலுள்ள பெண்களைக் கொண்ட கூட்டுறவு தொழிலங்களை ஏற்படுத்துவது குறித்த பிரச்சினை தொழில் வணிக இயக்குநருடன் கலந்தாலோசித்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் (பெருநகர்) பரிசீலனையில் உள்ளது.

1978 ஆம் ஆண்டு மே தினக் கூட்டத்தில் அறிவித்தப்படி, எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் தங்களது ஓட்டுநர்களுக்கு குளுமைக் கண்ணாடிகள் வழங்கி வருகின்றன. அய்ந்து ஆண்டுகளுக்கு மேல் பணியிலிருக்கும் பணியாளர்களுக்கு அவர்களது தேவையைப் பொறுத்து இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை பாண்டியன் போக்குவரத்துக் கழகம் வழங்கி வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த பணியாளர்களுக்கு அவர்களது சேவையைப் பாராட்டும் வகையில் கைகடிகாரங்களை இக்கழகம் பரிசளிக்கின்றது. தங்களது பணியாளருக்கு இருக்க இட வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை இப்போக்குவரத்துக் கழகம் அமைத்திருக்கிறது.

பணியாளர்களது நலனுக்காக அவசர மருத்துவ ஊர்தி Ambulance van ஒன்றை பல்லவன் போக்குவரத்துக் கழகம் வாங்கியுள்ளது. முதல் ஊர்தி எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கவனித்துக்கொண்டு மற்றொரு ஊர்தியும் வாங்கப்படும்.

பணியாளர்களது நலனே அரசின் எண்ணத்தில் முதலிடம் பெறுகிறது. நல்ல வேலை நிலைமைகளையும், தொழிலாளர் கல்வியையும் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் பணி இருப்புப் பயிற்சி கொடுப்பதற்கும் உரிய முக்கியத்துவம்

கொடுக்கப்படும். அப்பொழுதுதான் நீண்டகால சம்பளத்திட்டத்துடன் தொடங்கப் பெற்ற அலுவல் திட்டம் தனது தர்க்க ரீதியான முடிவை எட்டும்.

1978-79 ஆம் ஆண்டில் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் மொத்தத்தில் தொழில் அமைதி ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. பணியாளர்களின் உண்மையான குறைகளைக் கேட்டு, போக்குவரத்துக் கழகங்களும் அரசும் தக்க நடவடிக்கைகளை எடுத்தன.

6. பொது.

போக்குவரத்துப் பேருந்துகளை நடத்துவதிலுள்ள பிரச்சினைகள் குறித்து தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரை தருவதற்காக, தமிழ்நாடு நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து ஆலோசனைக் குழுவை Tamil Nadu national transport consultative Committee அரசு மாற்றி அமைத்துள்ளது. இக்குழுவில் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளைத் தவிர 12 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 3 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழு இருமுறை கூடி பல பயனுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறியது. அக்கருத்துக்கள் பல நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த வரவு-செலவு கூட்டத் தொடரின்போது அறிவித்தபடி ஒவ்வொரு பணிமனைக்கும் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப் படுகிறது.

அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் மக்களுக்கு முடிந்த அளவு குறைந்த கட்டணச் செலவில் வசதிகளை அளிப்பதோடு வியாபார ரீதியில் தனித்தியங்கக்கூடிய நிறுவனங்களாக இருக்கவேண்டிய இரு நோக்கங்களையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இம்மாநிலத்தின் சாலைப் போக்குவரத்துப் பணிகள் இந்நாட்டின் இதர மேம்பட்ட போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒப்பிடக் கூடிய நிலையில் தற்போது உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டில் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலைமை (Financial performance). பொதுவான மன நிறைவு அளிப்பதாக உள்ளது. போக்குவரத்துக் கழகங்கள் பணியாளர்களின் ஒத்துழைப்போடு தமது பணிகளை இன்னும் மேம்படுத்தி இனி வரும் ஆண்டுகளில் இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்தும் என்று நம்புகின்றன.

7. மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனம்.

தமிழக அரசின் சுமார் 6,000 மோட்டார் வண்டிகளை நல்நிலையில் பேணிப் பராமரிக்கும் பொறுப்பு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத்தினுடையது ஆகும். நடப்பு ஆண்டில் புதிய பணிக்களரிகள் காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நாகர்கோயில் ஆகிய இடங்களில் இயங்கத் தொடங்கியுள்ளன. கடலூரிலுள்ள பணிக்களரி விரைவில் செயல்படத் தொடங்கும். தருமபுரியில் பணிக்களரி கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களில் பணிக்களரிகள் ஏற்கனவே இருக்கின்றன. பழுதுபார்க்கும் நிலையங்கள் திருநெல்வேலியிலும், சென்னை, தலைமைச் செயலகத்தின் வளாகத்திலும் இருக்கின்றன.

வண்டிகள் உபயோகமற்றவை என ஒதுக்குவதற்கான நடைமுறையை எளிதாக்கவும் உபயோகமற்றவையென்று ஒதுக்கப்பட வேண்டிய அரசு வண்டிகளை ஆய்வு செய்து அது குறித்து முறையான நடவடிக்கையெடுத்து பரிந்துரை செய்யவும் மூன்று இயந்திரக் கம்மியர்கள் கொண்ட வல்லுநர் குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. அரசுப் பணிக்களரிகள் பரவலாக தற்போது அமைந்திருப்பது போதுமானதாக இல்லாததால், 63 தனியார் பணிக்களரிகளுக்கு வரையறுக்கப்பட்ட வழி முறைகளின் படி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. தனியார் பணிக்களரிகளையே சார்ந்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிக்களரிகளை அமைக்க வேண்டியது அவசியமாகும். 1979-80 ஆம் ஆண்டில் வேலூரில் பணிக்களரி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

—·—

9th, 11th and 16th to 18th April 1979.

Volume CLX (Nos. 1 to 5)

A PAGES

ABDUL WAHAB, THIRU K. S.—

Adjournment motion *re* Bus accident near Kalasapakkam in North Arcot district resulting in death of 13 persons 563

Policy Note on Medical and Public Health, discussion on 605, 624–629

ACCIDENT—

Adjournment motion *re* Bus—near Kalasapakkam in North Arcot district resulting in death of 13 persons. 563–564

ADJOURNMENT MOTION—

Information *re*—

Motion given notice of 270

Motions given notice of by Thiruvalargal A. Balasubramaniam, K. Meenakshisundaram and S. Arumugam 417–418

Motions not taken up 41–43

A—*cont.* PAGES

ADJOURNMENT MOTION *re*—

Bus accident near Kalasapakkam in North Arcot district resulting in death of 13 persons ... 563–564

Loans to farmers in Salem district by Co-operatives, stoppage of sanction 559–563

Police Firing at Aruppukottai 31–41

AGRICULTURAL LANDS RECORD OF TENANCY RIGHTS ACT, 1969—

Revenue Department Notification LI-1 No. 3987 (b) of 1971, dated 7th September 1971, amendment to—, notification laid on the table 379

AGRICULTURAL PROGRAMMES—

Booklets on certain—New variety of crops, laid on the table 380

AGRICULTURE—

Performance Budget on—Department, 1979–80, laid on the table 380

Policy Note on—1979–80, laid on the table ... 380, 420–496

AGRO-INDUSTRIES CORPORATION LIMITED—

Review on—for 1978–79, laid on the table ... 88

ANCIENT MONUMENT—

Question *re* demolition of—at Sembanur Panchayat in Kallal Union of Karaikudi Taluk 739–740

ANIMAL HUSBANDRY—

Performance Budget on—Department, 1979–80, laid on the table 90

Policy Note on—1979–80, laid on the table ... 90

A—*cont.* PAGES

ANNA TRANSPORT CORPORATION LIMITED—

Sixth Annual Report and Accounts of—for 1978, laid on the table 87

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Anna Middle School, Veerakeralampudur, Tirunelveli district, statement *re* closure of 44, 45, 46

B.T. Teachers in Chengalpattu district, statement *re* insistence by Chief Educational Officer on declaration by—to forgo promotion if unwilling to be posted to Higher Secondary Schools 763

Graduate Teachers, participating in agitation for their demand in March 1973, statement *re* hardship caused to—in the form of suspension, loss of earned leave, etc. 760–762

Policy Note on Education, discussion on 48, 71, 73, 82, 265, 276, 278, 279, 284, 286, 287–288, 351–378

Text Books to poor students of linguistic minorities, statement *re* discontinuance of free suply in some Panchayat Unions in Dharmapuri district ... 567–568

ARIVAZHAGAN, THIRU K.—

B.T. Teachers in Chengalpattu District, calling Minister's attention to insistence by Chief Educational Officer on declaration to forgo promotion if unwilling to be posted to Higher Secondary Schools 763

Policy Note on Agriculture, discussion on ... 430–434

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 837–839

Policy Note on Education, discussion on ... 239–249, 331

Policy Note on Medical and Public Health, discussion on 629–633

A—*cont.* PAGES

ARUMUGAM, THIRU S.—

Information *re* Adjournment motion given notice of by ... 418

Policy Note on Agriculture, discussion on ... 590

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 845–851

ASAITHAMBI, THIRU—

Information *re* obstruction to vehicle of Chairman who went to pay homage to late 210–216

B

BACKWARD CLASSES—

Performance Budget on—Department, 1979–80, laid on the table 89

Policy Note on—Department, 1979–80, Annexure to—laid on the table 89

Policy Note on—Department, 1979–80, laid on the table 89

BALASUBRAMANIAM, THIRU A.—

Adjournment motion *re* loans to farmers in Salem district by Co-operatives, stoppage of sanction ... 559–560

Information *re*—

Adjournment motion given notice of by ... 417, 418

Adjournment motion not taken up 42

BALASUBRAMANIAM, THIRU KU. MA.—

Molasses for manufacture of non-edible oils, calling Minister's attention to irregular supply of ... 419

BOOKS AND PUBLICATIONS—

Question *re* text-books for vocational subjects, non-publication of 748

Text-books to poor students of linguistic minorities, Minister's attention called to discontinuance of free supply in some Panchayat Unions in Dharmapuri district 567–568

B—*cont.* PAGES

BUILDING TAXES—

Question *re* representation against enhancement of—by rationalising taxation structure in Panchayats of Kanyakumari district 398–399

BUSINESS ADVISORY COMMITTEE—

See Committees

CASHEW—

Question *re* number of industries based on—and number of workers employed therein 399–405

CATTLE—

Question *re* Jersey Buffaloes, import from Australia of 410–413

CEMENT DISTRIBUTION (LICENSING AND REGULATION) ORDER, 1973—

Framing of—, notification laid on the table ... 88

CHAIRMAN, MR.—

Adjournment motion *re*—

Bus accident near Kalasapakkam in North Arcot district resulting in death of 13 persons ... 563, 564

Loans to farmers in Salem district by co-operatives, stoppage of sanction 559, 560, 561, 563

Police Firing at Aruppukottai 31, 32, 33, 34, 36, 39, 40, 41

Announcement *re*—

Business Advisory Committee's decision ... 20-21, 564

House Committee, election of members to 570

CHAIRMAN, MR.—cont.

Information *re*—

Adjournment motion not taken up 41, 42, 43

Adjournment motions given notice of by Thiruvalargal A. Balasubramaniam, K. Meenakshisundaram and S. Arumugam ... 417–418

Obstruction to vehicle of—who went to pay homage to late Thiru Asaithambi 210, 211, 215, 216

Siddha Medicines, sample bottles given to Members on 18th April 1979 ... ... 759, 760

Obituary reference *re* death of Ponnappa Naidu, Thiru A., former Member of the Council ... 389

Policy Note on Agriculture, discussion on ... 421, 422, 573, 574, 576, 580, 591, 596, 597, 598, 599, 600, 602

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 833–834, 840, 842, 844, 851

Policy Note on Education, discussion on ... 218, 219, 227

Policy Note on Medical and Public Health, discussion on 603, 766

Privileges Committee, election of members to ... 569

CHANK—

Question *re* establishment of industries based on—in coastal areas of Ramanathapuram district ... 405–407

CHIEF JUDICIAL MAGISTRATES—

Question *re* equation of post of—with that of District Revenue Officer 742

CHIT FUNDS ACT, 1961—

Bank of Cochin Limited, inclusion of branches of—as approved banks under—, notification laid on the table 87

CHOLAN ROADWAYS CORPORATION LIMITED

Seventh Annual Report of—for 1978, laid on the table 87

CHRISTIAN CONVERTS—

Question *re* extension of educational and other concessions available to Harijans to—of Scheduled Castes origin 196-197

CINCHONA—

Commercial Budget on—Department, 1979–80, laid on the table 89

Performance Budget on—Department, 1979–80, laid on the table 89

Policy Note on—Department, 1979–80, laid on the table 89

CINEMA—

Question *re* ceiling on number of—shows exhibited by theatres in a day 185-189

COMMITTEE(S)—

Business Advisory Committee, decision of ... 20–21, 564

Committee on Delegated Legislation, Fourth Report of—laid on the table 90

Estimates Committee, Eighth Report of—on action taken by Government on Committee's report on Hospitals and Dispensaries, laid on the table ... 88

House Committee, election of members to ... 570

Privileges Committee, election of members to ... 569

C—*cont.* PAGES

CONDUCT OF ELECTION OF MADURAI CORPORATION COUNCILLORS RULES, 1972—

Amendment to—, notification laid on the table ... 88

CO-OPERATION—

Pamphlets relating to—, laid on the table ... 379

CORRECTIONAL ADMINISTRATION—

Policy Note on—Department 1979-80, laid on the table 90

COURTS—

Question *re* Sub-Court at Namakkal, constitution of 741–742

CYCLONE-FLOOD RELIEF—

Question *re* financial aid to Municipalities for—works, amount of 192–195

D

DAIRY DEVELOPMENT DEPARTMENT AND LIMITED, TAMIL NADU—

Review of Activities of—, 1978–79, laid on the table 496

DAIRY DEVELOPMENT CORPORATION MILK SUPPLY SCHEMES—

Policy Note on—for 1979–80, laid on the table ... 661

DAMODARAN, Thiru A. R.—

Policy Note on Education, discussion on ... 288–299, 365

C—*cont.* PAGES

COMMITTEES—*cont.*

Public Accounts Committee—

Eighth Report of—and Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1973–74, laid on the table 909

Seventh Report of—on Report (Commercial) of Comptroller and Auditor-General of India for 1973–74 (Civil), laid on the table 497

Sixth Report of—on Excesses over Voted Grants and Charged Appropriations for 1973–74, laid on the table 89

Public Undertakings Committee—

Eighth Report of—on report of Comptroller and Auditor-General of India for 1973–74, laid on the table 90

Ninth Report of—on points pertaining to Electricity Board in Report (Commercial) of Comptroller and Auditor-General of India for 1972–73, laid on the table 91

Seventh Report on Supplementary Report of Comptroller and Auditor-General of India for 1973–74, laid on the table 90

Sixth Report of—on paragraphs relating to Veeranam Project in the Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1973–74, laid on the table 88–89

COMMUNAL CLASH—

Minister's attention called to—between Harijans and Hill Tribes near Ooty and burning of 500 houses and 11 persons 216–218

COMMUNITY DEVELOPMENT—

Financial Supplements to Policy Note on—for 1979–80, laid on the table 661

discussion on 833-883

Policy Note on—and Panchayat Development,

Policy Note on—, 1979–80, laid on the table ... 497

PAGES

D—*cont.*

DEPUTY CHAIRMAN, Mr.—

Information *re* Adjournment Motion given notice of 270

Policy Note on Agriculture, discussion on ... 447–448, 450, 463, 488, 490

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 856, 870, 888

Policy Note on Education, discussion on ... 82, 235, 237, 257, 263, 267, 270, 278, 280, 283, 285, 286, 287, 293, 317, 321, 332, 341, 345, **377, 378**

Policy Note on Medical and Public Health, discussion on 637, 638, 640, 642, 645, 648, 649, 657, 660, 788, 789, 791, 792, 800, 802, 803, 805, 807, 815, 816, 817, 831, 832

DIPLOMA IN TEACHER EDUCATION—

Question *re* change in Examination system ... 746–747

PAGES.

D—*cont.*

DISTILLERY RULES, 1960—

Amendment to—, notification laid on the table .. 379

D'MONTE Thiru D. V.—

Policy Note on Agriculture, discussion on ... 441–442

Policy Note on Education, discussion on ... 265–269

DRAVIDAMANI, Thiru A.—

Policy Note on Agriculture, discussion on ... 459–464

Policy Note on Medical and Public Health, discussion on 764–766

E

EDUCATION—

Higher Secondary—in Tamil Nadu, Booklet on—laid on the table 88

Policy Note on—, discussion on 48–86, 218–378

School—, Collegiate—and Technical—for 1979–80, Performance Budgets, laid on the table ... 88

EDMUND, THE HON. THIRU G. R.—

Statement under Rule 82 of the Council Rules *re* Kerosene, distribution of 21–30

ERSKINE HOSPITAL—

See Hospitals and Dispensaries

F

FAMILY WELFARE—

Performance Budget on—, 1979–80, laid on the table 661

Question *re* Extension Educators in—Department, absorption in other suitable posts 18–20

PAGE

F—*cont.*

FILARIASIS—

Question *re* measures to arrest spread of— in Pudukkadai and Thalakkulam areas in Kanyakumari district 15–18

FOREST(S)—

Performance Budget on—, 1979–80, laid on the table 91

Policy Note on—Department, 1979–80, laid on the table 91

H

HANDLOOM(S)—

Performance Budget on— and Textiles for 1979–80, laid on the table 89

Policy Note on— and Textiles for 1979–80, laid on the table 89

HARIJAN(S)—

Performances Budget on— and Tribal Welfare Department, 1979–80, laid on the table 90

Policy Note on— and Tribal Welfare Department, 1979–80, Annexures to—, laid on the table ... 90

Policy Note on— and Tribal Welfare Department, 1979–80, laid on the table 90

Question *re* extension of educational and other concessions available to— to Christian converts of Scheduled Caste origin 196–197

HEADMASTERS—

See Teachers

HOME—

Review of activities of— (Prohibition and Excise) Department during 1978–79, laid on the table ... 91

PAGES

H—*cont.*

HOSPITALS AND DISPENSARIES—

Question *re*—

Government Erskine Hospital, Madurai, lightning strike by Medical Officers and Non-Medical Officers in September 1978 754–756

Government Hospital in Gingee, South Arcot district, expansion of 757–758

HOSTELS—

See Teachers

HOUSE COMMITTEE—

See Committees

HOUSING—

Policy Note on—in Tamil Nadu, 1979–80, laid on the table 909

I

INFORMATION *re*—

Adjournment motion, given notice of 270

Adjournment motion, not taken up 41–43

Adjournment motions given notice of by Thiruvalargal A. Balasubramaniam, K. Meenakshisundaram and S. Arumugam 417–418

Obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi 210–216

Siddha Medicines, sample bottles given to Members on 18th April 1979 759–760

INSTITUTE OF FILM TECHNOLOGY, MADRAS—

Question *re* number of persons working in— on honorary, part-time and full-time basis 1–2

PAGES

I—*cont.*

IRRIGATION—

Demand for— Grants, 1979-80, laid on the table ... 379

Demand on— for 1978-79, statement on follow-up action on suggestions and observations during discussion on—, laid on the table 380

Performance Budget on— and Ground Water, 1979-80, laid on the table 90

J

JANARTHANAM, DR. T. R.—

Information *re* obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi 210-211

Policy Note on Education, discussion on ... 299-302

Policy Note on Medical and Public Health, discussion on 620-624

K

KALIMUTHU THE HON. THIRU K.—

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 833, 841, 881-886, 888

KANNAMANGALAM—REDDIPALAYAM LINK ROAD—

See Roads

KEROSENE—

Statement under rule 82 of the Council Rules *re*—, distribution of 21-30

KHADI AND VILLAGE INDUSTRIES—

Policy Note on—Board for 1979-80, laid on the table 89

PAGES

K—*cont.*

KOLANDAIVELU, THE HON. THIRU P.—

Policy Note on Agriculture, discussion on ... 464, 482, 490, 492, 495, 571-572, 574-508, 601-602

KRISHNASWAMY, THE HON. THIRU K. A.—

Adjournment motion *re* loans to farmers in Salem district by Co-operatives, stoppage of sanction ... 561-563

L

LAKSHMIKANDHAN, THIRU C. R.—

Graduate Teachers, participating in agitation for their demand in March 1973, calling Minister's attention to hardship caused to— in the form of suspension, loss of earned leave, etc. 760-761

Informtion *re* Siddha Medicines, sample bottles given to Members on 18th April 1979 760

Policy Note on Agriculture, discussion on ... 442-446

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 834-837

Policy Note on Educaton, discussion on 55-70 75, 377

Policy Note on Nationalised Road Transport (Services) and Shipping, discussion on ... 892-901

AND REVENUE—

Policy Note on—, laid on the table 379

EATHER—

Finished—exported from Madras, Minister's attention called to accumulation owing to insistence on hygiene certificate 419-420

PAGES

L—*cont.*

LEPROSY—

Policy Note on— Beggars Rehabilitation Programme, 1979-80, laid on the table 90

Question *re* prevention of— and Central Subsidy therefor 414-417

LOANS—

Adjournment motion *re* stoppage of sanction of— to farmers in Salem district by Co-operatives 559-563

M

MADRAS CITY MUNICIPAL CORPORATION ACT, 1919—

Conduct of Election of Madras Corporation Councillors Rules, 1962, amendment to—, notification laid on the table 379

MADURAI CORPORATION—

Minister's attention called to transfer of Sewerage Pumping Station from Division No. 34 to Division No. 33 46-48

MANDAKINI KRISHNAMURTHI, THIRUMATHI—

Policy Note on Agriculture, discussion on ... 446-447

Policy Note on Education, discussion on 84-86

Policy Note on Medical and Public Health, discussion on 645-647

MANI, THIRU KO. SI.—

Policy Note on Agriculture, discussion on ... 421, 477-496, 575, 589, 595, 596, 597

PAGES

M—*cont.*

MANICKAM, THIRU P.—

Policy Note on Agriculture, discussion on ... 455-459

Policy Note on Education, discussion on ... 229, 243

MARKET COMMITTEES—

Question *re* Regulated—, Central Government's assistance for improvement of 200-202

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Anna Middle School, Veerakeralampudur, Tirunelveli district, calling attention to closure of ... 44-46

B.T. Teachers in Chengalpattu district, calling attention to insistence by Chief Educational Officer on declaration by—to forgo promotion if unwilling to be posted to Higher Secondary Schools 763

Clash between Harijans and Hill Tribes near Ooty, calling attention to burning of 500 houses and 11 persons alive in 216-218

Graduate Teachers, participating in agitation for their demand in March 1973, calling attention to hardship caused to—in the form of suspension, loss in earned leave, etc. 760-762

Heavy rainfall in Kanyakumari district, calling attention to damage to crops and consequent loss to farmers 565-566

Leather, calling attention to accumulation of finished leather exported from Madras owing to insistence on hygiene certificate 419-420

Madurai Corporation, calling Minister's attention to transfer of Sewage Pumping Station from Division No. 34 to Division No. 33 46-48

Molasses, calling attention to irregular supply for manufacture of non-edible oils 419

Text-books to poor students of linguistic minorities, calling attention to discontinuance of free supply in some Panchayat Unions in Dharmapuri district 567-568

PAGES

M—*cont.*

MEDICAL—

Policy Note on—and Public Health, discussion on ... 764-833

Policy Note on—for 1979-80, laid on the table ... 661

MEDICAL EDUCATION—

Performance Budget on—for 1979-80, laid on the table 661

MEDICAL SERVICES—

Performance Budget on—for 1979-80, laid on the table 661

MEDICINE—

Information *re* Siddha—, sample bottles given to Members on 18th April 1979 759-760

MEENAKSHISUNDARAM, THIRU K.—

Clash between Harijans and Hill Tribes near Ooty, calling Minister's attention to burning of 500 houses and 11 persons alive in 216, 217, 218

Information *re*—

Adjournment motion, given notice of by .. 270, 418

Adjournment motion not taken up 42, 43

Policy Note on—

Community Development and Panchayat Development, discussion on ... 851-857, 887-888

Education, discussion on 249-265, 322, 376

Medical and Public Health, discussion on ... 639-645

Nationalised Road Transport and Shipping, discussion on 903-905

Walk out by—as protest against denial of permission to move an adjournment motion 43

PAGES

M—*cont.*

MEMBERS OF LEGISLATURE—

Returns of Assets of Subbulakshmi Jagadeesan, the Hon. Thirumathi, Minister for Handlooms and Textiles and Sivaperumal, Thiru M., M.L.A., laid on the table 496

MIAKHAN, THIRU J. M.—

Madurai Corporation, calling Minister's attention to transfer of Sewage Pumping Station from Division No. 34 to Division No. 33 ... ... 46, 47, 48

Policy Note on Medical and Public Health, discussion on 616-620

MILITARY ASSISTANCE—

Question *re* number of instances and expenditure incurred on—sought by State Government between 1st July 1977 and 1st August 1978 ... 179-183

MOLASSES—

Supply of—for manufacture of non-edible oils, Minister's attention called to irregular supply ... 419

MUNICIPALITIES—

Question *re* Cyclone-Flood Relief Wroks, amount of financial aid to Municipalities for 192-195

MUTHUSWAMY, THIRU S.—

Information *re* Adjournment motion, not taken up 41, 42

Policy Note on—

Community Development and Panchayat Development, discussion on 862-864, 888

Education, discussion on ... 273-287, 288, 330, 369, 370, 378

PAGES

M—*cont.*

MUTHUSWAMY, Thiru S.—*cont.*

Policy Note on—*cont.*

Nationalised Road Transport and Shipping, discussion on— 905–908

Text-books to poor students of linguistic minorities, calling Minister's attention to discontinuance of free supply in some Panchayat Unions in Dharmapuri District ... 567–568

Walk out by—as protest against denial of permission to move an adjournment motion 42

N

NALLASIVAN, THIRU A.—

Finished leather exported from Madras, calling Minister's attention to accumulation owing to insistence on hygiene certificate 419–420

Policy Note on—

Agriculture, discussion on 448–455, 597

Community Development and Panchayat Development, discussion on 857–862

Education, discussion on 229–239

Medical and Public Health, discussion on ... 647–659

O

OBITUARY REFERENCE *re*—

Death of Ponnappa Naidu, Thiru A., former Member of the Council 389

PAGES

P

PANCHAYAT DEVELOPMENT—

Financial Supplement to Policy Note on—for 1979–80, laid on the table 661

Policy Note on Community Development and—, discussion on 833–888

Policy Note on—for 1979–80, laid on the table ... 661

Question *re* representation against enhancement of building taxes by rationalising taxation structure in—of Kanyakumari district 398–399

PANDIYAN ROADWAYS CORPORATION LIMITED—

Seventh Annual Report of—for 1978, laid on the table 87

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969—Revenue Department Notification LI-1 No. 3987 (b) of 1971 dated 7th September 1971, amendment to—(G.O. Ms. No. 2902, Revenue, dated 15th December 1978) 379

Agriculture Department, 1979–80, Performance Budget on 380

Agricultural Programmes—New variety of crops, Booklets on certain 380

Agro Industries Corporation Limited (Tamil Nadu), Review on—for 1978–79 88

Animal Husbandry—Performance Budget, 1979–80 90

Animal Husbandry—Policy Note on—, 1979–80 90

Anna Transport Corporation Limited, Sixth Annual Report and Accounts of—for 1978 87

Backward Classes Department, Performance Budget, 1979–80 89

Backward Classes Department, Policy Note on—, 1979–80 89

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE —*cont.*

Backward Classes Department Policy Note on—, 1979-80, Annexure to 89

Cement Distribution (Licensing and Regulation) Order, 1973, framing of—(G.O. Ms. No. 1539, Industries, dated 29th November 1978) ... 88

Chit Funds Act, 1961, inclusion of branches of Bank of Cochin Limited as approved banks under—(G.O. Ms. No. 70, Commercial Taxes and Religious Endowments, dated 25th January 1979) 87

Cholan Roadways Corporation Limited, Seventh Annual Report of—for 1978 87

Cinchona Department
Commercial Budget on—, 1979-80 89
Performance Budget on—, 1979-80 89
Policy Note on—, 1979-80 89

Committee on Delegated Legislation, Fourth report of 90

Committees—
Estimates Committee, Eighth Report of—on action taken by Government on Committee's Report on Hospitals and Dispensaries 88
Public Accounts Committee, Eighth Report of—and Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1973-74 909
Public Accounts Committee, Seventh Report on Supplementary Report of Comptroller and Auditor-General of India for 1973-74 (Civil) ... 497
Public Accounts Committee, Sixth Report of—on excesses over Voted Grants and charged Appropriations for 1973-74 89

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Committees—*cont.*
Public Undertakings Committee, Sixth Report of—on paragraphs relating to Veeranam Project in the Report (Civil) of Comptroller and Auditor-General of India for 1973-74 ... 88-89

Community Development—
Financial Supplement to Policy Note on—for 1979-80 661
Policy Note on—for 1979-80 661

Conduct of Election of Madurai Corporation Councillors Rules, 1972, amendment to—(G.O. Ms. No. 164, Rural Development and Local Administration, dated 31st January 1979, ... 88

Co-operation, pamphlets relating to 379

Dairy Development Corporation Limited, Tamil Nadu—, review of activities of—, 1978-79 ... 496

Dairy Development Department and Milk Supply Schemes, Policy Note on, 1979-80 497

Demand for Irrigation Grants, 1979-80 379

Demand on Irrigation for 1978-79, Statement on follow up action on suggestions and observations during discussion on 380

Distillery Rules, 1960, amendment to—(G.O. Ms. No. 158, Home, dated 17th January 1979) ... 379

Education—
Higher Secondary Education in Tamil Nadu—Booklet on ... 88
Policy Note on ... 88
School Education, Collegiate Education and Technical Education for 1979-80, Performance Budgets on 88

Family Welfare Performance Budget on—for 1979-80 ... 661

Forests, Performance Budget, 1979-80 ... 91

PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

General Sales Tax and other Taxes and Duties ... 90
Handlooms and Textiles,
Performance Budget, 1979-80 89
Policy Note on—for 1979-80 89

Harijan and Tribal Welfare Department—
Performance Budget, 1979-80 90
Policy Note on—, 1979-80 ... 90
Policy Note on, 1979-80, Annexures to ... 90

Home (Prohibition and Excise), Department, review of activities of—during 1978-79 ... 91
Housing in Tamil Nadu, Policy Note on—1979-80 909
Information, Tourism and Film Technology, Policy Note on—for 1979-80 ... 89
Irrigation and Ground Water, Performance Budget. 1979-80 90
Madras City Municipal Corporation Act, 1919—Conduct of Election of Madras Corporation Councillors Rules, 1962, amendment to—(G.O. Ms. No. 163, Rural Development and Local Administration, dated 31st January 1979) 379
Medical—Policy Note on—for 1979-80 ... 661
Medical Education—Performance Budget, 1979-80 661
Medical Services—Performance Budget, 1979-80 661
Members of Legislature—Return of Assets of Subbulakshmi Jagadeesan, the Hon. Thirumathi, Minister for Handlooms and Textiles and Sivaperumal, Thiru M., M.L.A. 496

Panchayat Development—
Financial Supplement to Policy Note on—for 1979-80 ... 661

PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Panchayat Development—*cont.*
Policy Note on—for 1979-80 ... 661
Pandian Roadways Corporation Limited, Seventh Annual Reprot of—for 1978 87

Policy Note on—
Agriculture, 1979-80 ... 380
Department of Correctional Administration, 1979-80 ... 90
Forest Department, 1979-80 ... 91
Khadi and Village Industries Board for 1979-80 89
Land Revenue ... 379
Leprosy, Beggars Rehabilitation Programme, 1979-80 ... 90
Registration Department ... 88
Stamps Administration ... 379
Urban Development—, 1979-80 ... 88

Poompuhar Shipping Corporation Limited, Fourth Annual Reprot of—for 1978 87
Port Department, Performance Budget, 1979-80 661
Prevention Medicine, Performance Budget on—for 1979-80 661
Private Electricity Supply Undertakings (Acquisition) Rules, 1973, amendment to—(G.O. Ms. No. 228, Public Works, dated 14th February 1979) 660

Public Health—
Performance Budget, 1979-80 ... 661
Policy Note on—for 1979-80 ... 661

PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Public Undertakings Committee
Eighth Report of—on Report of (Commercial) Comptroller and Auditor General of India for 1973-74 ... 90
Ninth Report of—on points pertaining to Electricity Board in Report (Commercial) of Comptroller and Auditor General of India 1972-73... 91
Seventh Report of—on Report of (Commercial) Comptroller and Auditor-General of India for 1973-74 90
Revenue Department, 1979-80, Performance Budget on ... 379
Road Development Programme, review of—for 1978-79 661
Road Transport Services, Policy Note on—for 1979-80 ... 661

Sales Tax—
Exemption of Gandhi Seva Sangam, Chatrapatti Palani taluk, Madurai district (G.O. P. No. 74, Commercial Taxes and Religious Endowments, dated 29th January 1979) ... 660
Exemption of Kasthuri Bai Gandhi Mahalir Mandram, Malayadipatti, Rajapalayam, Ramanathapuram district relating to sales of articles manufactured by inmates from — (G.O. Ps. No. 274, Commercial Taxes and Religious Endowments, dated 12th March 1979) ... 661
Exemption of sale of autorickshaw by Khivraj Automobiles, Madras to School for Deaf, Madras, from — (G.O. Ps. No. 181, Commercial Taxes and Religious Endowments, dated 19th February 1979 660

PAGES

P.—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Sales Tax—*cont.*
Notification No. II-(i)/CTRE/105/78, dated 26th July 1978, amendment to — (Memorandum No. 67275-II(2)/78-2 Commercial Taxes and Religious Endowments, dated 19th February 1979) ... 87
Sewerage and Water Supply, 1979-80, Supplement to ... 90
Shipping, Policy Note on—for 1979-80 ... 661
Shipping Corporations—Note on Review of Performance of—for 1979-80 ... 661
State Farms Corporation Limited (Tamil Nadu), review on—for 1978-79 ... 88
Tamil Nadu Poultry Development Corporation Limited, review of activities of—for 1978-79 ... 89
Transport Corporation, note no review of performance of—for 1979-80 ... 661

PERIANNAN, Thiru V. R.—
Adjournment Motion *re* loans to farmers in Salem District by Co-operatives, stoppage of sanction ... 561
Policy Note on Education, discussion on ... 49—55

POLICE—
Adjournment motion *re* firing at Aruppukottai ... 31—41
Question *re* Policemen and Police Officers charged with offence of rape between 15th September 1978 and 3rd October 1978, number of ... 183—185

POLICY NOTE ON AGRICULTURE—
Discussion on ... 420—496
571-602

POLICY NOTE ON COMMUNITY DEVELOPMENT AND PANCHAYAT DEVELOPMENT—

Discussion on ... 833—888

POLICY NOTE ON EDUCATION—

Discussion on ... 48—86, 218—378

Laid on the table ... 818

POLICY NOTE ON MEDICAL AND PUBLIC HEALTH—

Discussion on ... 602—660, 764–833

POLICY NOTE ON NATIONALISED ROAD TRANSPORT AND SHIPPING—

Discussion on ... 889—908

PONNAPPA NAIDU, Thiru A.—

Obituary reference *re* death of—, former Member of the Council ... 389

PONNAIYAN, The Hon. Thiru C.—

Adjournment motion *re* bus accident near Kalasapakkam in North Arcot district, resulting in death of 13 persons ... 563—564

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on ... 889, 893—894

POOMPUHAR SHIPPING CORPORATION LIMITED—

Fourth Annual Report of—for 1978, laid on the table ... 87

PORT DEPARTMENT—

Performance Budget, 1979-80, laid on the table ... 661

PREVENTIVE MEDICINE—

Performance Budget on—for 1979-80, laid on the table ... 661

PRIVATE ELECTRICITY SUPPLY UNDERTAKINGS (ACQUISITION) RULES, 1973—

Amendments to—, notification laid on the table ... 660

PRIVILEGES COMMITTEE—

See Committees

PUBLIC HEALTH—

Performance Budget, 1979-80, laid on the table ... 661

Policy Note on—, for 1979-80, laid on the table — 661

Policy Note on Medical and—, discussion on ... 764—833

PUBLIC HEALTH CENTRES—

Question *re* number of— functioning without doctors for more than three months ... 206—208

PULAMAIPITHAN, Pulavar—

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 870—872

Policy Note on Education, discussion on ... 321—326

Policy Note on Medical and Public Health, discussion on ... 633, 636

Q

QUESTION HOUR—
Dispensation with ... 559

QUESTIONS AND ANSWERS—

Arivazhagan, Thiru K.—

Question *re* Technical High Schools, conversion into Higher Secondary Schools ... 10-11

Balasubramaniam, Thiru A.—

Question *re* Sub-Court at Namakkal, constitution of ... 741-742

Balasubramaniam, Thiru Ku. Ma.—

Question *re* sewing machines to widows, scheme for supply of ... 407—410

Dravidamani, Thiru A.—

Question *re* Kannamangalam-Reddipalayam link road in Arni taluk, North Arcot district, repairs to ... 396-398

Janarthanam, Dr. T. R.—

Qusetion *re* leprosy, prevention of—, and Central subsidy therefor ... 414-417

Lakshmikandhan, Thiru C. R.—

Question *re*—

Graduate Teachers appointed after 1st April 1970 and selected by Public Service Commission, passing of Account Test and Deputy Inspector of Schools Test for sanction of annual increment to ... 395-396

Graduate teachers of Government Schools appointed after 1st April 1970 but not selected by Public Service Commission, denial of leave facilities to ... 393-394

Q.—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Lakshmikandhan, Thiru C. R.—*cont.*

Question *re*—*cont.*

Graduate teachers of Government Schools appointed after 1-4-1970, regularisation of services through Special Test of Public Service Commission ... 391—393

Headmasters of Higher Secondary Schools, teaching experience required for appointment as ... 742—746

Teachers, fare concession to—for travel in State Transport buses ... 11—13

Teachers in Harijans Welfare Department Schools, priority in appointment to those belonging to Scheduled Caste ... 198—200

Teachers of Government High Schools of North Arcot district, imposition of condition for writing examination for higher studies ... 9—10

Tutor-*cum*-Wardens in Government Harijan Welfare Boys' Hostels, transfer as teachers in Government High Schools and vice-versa ... 750—752

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Bus service between Christianpet and Reddipalayam, North Arcot district, stoppage of ... 13—14

Headmasters of Municipal High Schools in Thanjavur district compulsoryily retired during June 1978, number of ... 195—196

Teachers' Day, declaration as Public Holiday ... 749—750

Muthuswamy, Thiru S.—

Question *re* Diploma in Teacher Education, change in Examination system ... 746—747

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Arasu Studios, Guindy, investment by Government on construction of ... 2—3

PAGES

Q.—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

Ramamoorthy, Thiru K.—*cont.*

Question *re* —*cont.*

Cashew, number of industries based on—and number of workers employed therein ... 399—405

Cinema shows, ceiling on number of—exhibited by theatres in a day ... 185—189

Cyclone-Flood Relief works, amount of financial aid to Municipalities for ... 192—195

Government Erskine Hospital, Madurai, lightning strike by Medical Officers and Non-Medical Officers in September 1978 ... 754—

Government Hospital in Gingee, South Arcot district, expansion of 757-

Institute of Film Technology, Madras, number of persons working in—on honorary, part-time and full-time basis ... ...

Military Assistance sought by State Government between 1st July 1977 and 1st August 1978, number of instances and expenditure incurred on 179-

Policemen and Police Officers charged with offence of rape between 15th September 1978 and 3rd October 1978, number of 183-

Regulated Market Committees, Central Government's assistance for improvement of ... 200-202

Small Farmers Development Agency, amount allotted and number of farmers benefitted in South Arcot district under 202-205

Telephone Booths near Taxi-stands in Madras City, provision of 740-741

Tourist homes and guest houses built by Tourism Development Corporation, number, location and capacity of 189-192

PAGES

QUESTIONS AND ANSWERS—*cont.*

Q.—*cont.*

SANKARALINGAM, THIRU M.—

Question *re*—

Building taxes, representation against enhancement by rationalising taxation structure in Panchayats of Kanyakumari district ... 398-399

Filariasis, measures to arrest spread of—in Pudukkadai and Thalakkulam areas in Kanyakumari district 15-18

Public Health Centres functioning without doctors for more than three months, number of 206-208

Tamil Pandits and Physical Education Teachers in Middle Schools, appointment of 389-390

Teachers ordered to be reinstated by Government but not reinstated by Private High Schools from 1975, number of 6-8

SANTOSHAM, THIRU D.—

Question *re* Christian converts of Scheduled Caste origin, extension of educational and other concessions available to Harijans to 196-197

THANGAPANDIAN, THIRU V.—

Question *re*—

Ancient Monument at Sembanur Panchayat in Kallal Union of Karaikudi taluk, demolition of ... 739-740

Chank-based industries in Coastal areas in Ramanathapuram district, establishment of ... 405-407

Fourteenth World Congress of International Orthopaedic Surgeons held in Japan during October 1978, number of Government representatives who participated in ... 208-210

Jersey buffaloes, import from Australia of ... 410-413

Q.—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

THOMAS, THIRU P. R.—

Question *re*—

Extension Educators in Family Welfare Department, absorption in other suitable posts ... 18–20

Teachers ordered to be reinstated by Joint Director of School Education, but not reinstated by Managements, number of—from 20th June 1974 till 19th July 1977 3–6

Teacher-Wardens, posted to Harijan Welfare Hostels, hardship caused to—in personally bearing cost in advance for purchases relating to Hostels 752–754

Text-books for vocational subjects, non-publication of 748

VENKATESAN, THIRU E. S.—

Question *re* Chief Judicial Magistrate, equation of post with that of District Revenue Officer ... 742

R

RAGHAVANANDHAM, THE HON. THIRU S.—

Madurai Corporation, statement *re* transfer of Sewage Pumping Station from Division No. 34 to Division No. 33 ... ... 46–47, 48

Policy Note on Agriculture, discussion on ... 463–464, 573

Policy Note on Education, discussion on ... 330, 331–332

Policy Note on Medical and Public Health, discussion on 774

R—*cont.*

RAINFALL—

Heavy—in Kanyakumari district, Minister's attention called to damage to crops and consequent loss to farmers 565–566

RAJA MOHAMED, The Hon. Thiru K.—

Clash between Harijans and Hill Tribes near Ooty, statement *re* burning of 500 houses and 11 persons alive in 216, 217, 218

Finished leather exported from Madras, statement *re* accumulation owing to insistence on hygiene certificate 419–420

House Committee, election of members to ... 570

Information *re* obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi ... 212–214, 215

Molasses for manufacture of non-edible oils, statement *re* irregular supply of 419

Policy Note on Agriculture, discussion on ... 420, 421, 430

Privileges Committee, election of members to ... 569

Question hour, dispensation with 559

RAMACHANDRAN, The Hon. Thiru M. G.—

Adjournment motion *re* Police Firing at Aruppukottai 32, 34, 35, 36–41

RAMAKRISHNA THEVAR, Thiru S.—

Information *re* Siddha Medicines, sample bottles given to Members on 18th April 1979 759

PAGES.

R—*cont.*

RAMAKRISHNA THEVAR, Thiru S.—*cont.*

Policy Note on Agriculture, discussion on ... 422–429, 573, 574

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 839–845

Policy Note on Education, discussion on ... 70–76

RAMALINGAM, Thiru C.—

Policy Note on Agriculture, discussion on ... 434–440

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 865–869

Policy Note on Education, discussion on ... 270–273

RAMAMOORTHY, Thiru K.—

Adjournment motion *re* Police Firing at Aruppukottai ... 34–36, 37

Policy Note on Agriculture, discussion on ... 421, 465–475, 488, 598–600, 602

Policy Note on Education, discussion on ... 311–321, 358, 360, 367, 368

Police Note on Medical and Public Health, discussion on 766–779, 832, 833

RATHINA BALAGURUSAMY, THIRU—

Policy Note on Agriculture, discussion on ... 475–476

Policy Note on Medical and Public Health, discussion on 764

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on 901–903

PAGES

R—*cont.*

REGISTRATION—

Policy Note on—Department, laid on the table ... 88

REVENUE—

Performance Budget on—Department, 1979-80, laid on the table 379

ROAD DEVELOPMENT PROGRAMME—

Review of—for 1978–79, laid on the table ... 661

ROAD TRANSPORT SERVICES—

Policy Note on—for 1979–80, laid on the table ... 661

ROADS—

Question *re* Kannamangalam—Reddipalayam link road in Arni taluk, North Arcot district, repairs to ... 396–398

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion *re*—

Death of thirteen persons in a bus accident near Kalasapakkam—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Transport 563, 564

Distribution of kerosene—Not taken up but the concerned Members given an opportunity to seek clarifications on a statement made by the Minister concerned under Rule 82 ... 26

Police firing in Aruppukottai—Consent to raising of the matter withheld after the statement of the Chief Minister ... 31, 41

PAGES

R—*cont.*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Adjournment motion *re*—

Stoppage of sanction of loans to agriculturists in Salem district—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Co-operation ... 559, 563

Debate—

Government Officers should be referred to only by designation and not by name ... 791, 807

Decorum—

Members should stand and speak. It is not proper to sit and talk to each other in the House 637

Point of Order—

When a Member wanted to raise a point of order during the speech of a Minister, the Deputy Chairman observed as follows:—

"A point of order can be raised only on the basis of some rule of the Council Rules. If the hon. Member cannot quote the rule, then it is not a point of order. The hon. Member must conform to certain regulations. When the Hon. Minister is not yielding, I cannot allow the hon. Member to interrupt". 816

S

SALES TAX—

Exemption of Gandhi Seva Sangam, Chatrapatti, Palani taluk, Madurai district from—, notification laid on the table 660

Exemption of Kasthuri Bai Gandhi Mahalir Mandram, Malayadipatti, Rajapalayam, Ramanathapuram district relating to sale of articles manufactured by inmates from—, notification laid on the table 661

PAGES

S—*cont.*

SALES TAX—*cont.*

Exemption of sale of auto-rickshaw by Khivraj Automobiles, Madras to School for Deaf, Madras from—, notification laid on the table ... 660

General—and Other Taxes and Duties, laid on the table 90

Notification No. II (1)/CTRE/105/78, dated 26th July 1978, amendment to—, notification laid on the table 87

SANKARALINGAM, Thiru M.—

Anna Middle School, Veerakeralampudur, Tirunelveli district, calling Minister's attention to closure of 44–45

Heavy rainfall in Kanyakumari district, calling Minister's attention to damage to crops and consequent loss to farmers 565–566

Information *re* obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi 214–215

Policy Note on Agriculture, discussion on 591

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 872–881, 887

Policy Note on Education, discussion on ... 326–351

SCHOOL(S)—

Anna Middle School, Veerakeralampudur, Tirunelveli district, Minister's attention called to closure of 44–46

Question *re*—

Conversion of Technical High—into Higher Secondary School .. 10–11

PAGES

S—*cont.*

SCHOOL(S)—*cont.*

Harijan Welfare Department—, priority to those belonging to Scheduled Caste in appointment as teachers in 198–200

SEWING MACHINES—

Question *re* scheme for supply of—to widows ... 407–410

SHIPPING—

Policy Note on—for 1979-80, laid on the table ... 661

Policy Note on Nationalised Road Transport and—, discussion on 899–908

SHIPPING CORPORATIONS—

Note on Review of Performance of—, 1979-80, laid on the table 661

SIDDHA SYSTEM OF MEDICINE—

See Medicine

SMALL FARMERS DEVELOPMENT AGENCY—

Question *re* amount allotted and number of farmers benefited in South Arcot district under ... 202–205

SOMASUNDARAM, The Hon. Thiru S. D.—

Heavy rainfall in Kanyakumari district, statement *re* damage to crops and consequent loss to farmers 565, 566

SOUNDARARAJAN, The Hon. Thiru R.—

Information *re*—Siddha Medicines, sample bottles given to Members on 18th April 1979 769

PAGES

S—*cont.*

SOUNDARARAJAN, The Hon. Thiru R.—*cont.*

Policy Note on Medical and Public Health, discussion on 602, 605, 606, 658, 659, 774, 775, 776, 792, 794 795, 797, 807, 808-833

STAMPS ADMINISTRATION—

Policy Note on—, laid on the table 379

STATE FARMS CORPORATION LIMITED (TAMIL NADU)—

Review on—for 1978-79, laid on the table ... 88

STATEMENT UNDER RULE 82 OF THE COUNCIL RULES *re*—

Kerosene, distribution of 21–30

STUDIOS—

Question *re* Arasu—, Guindy, investment by Government on construction of 2–3

SUB-COURTS—

See Courts

SWAMINATHAN, Thiru G.—

Information *re* obstruction to vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi 211

PAGES

S—*cont.*

SWAMINATHAN, Thiru G.—*cont.*

Policy Note on Education, discussion on 219–229

Policy Note on Medical and Public Health, discussion on 603–616

T

TAMIL NADU POULTRY DEVELOPMENT CORPORATION LIMITED—

Review of activities of—for 1978-79, laid on the table 89

TEACHERS—

B.T.—in Chengalpattu district, Minister's attention called to insistence by Chief Educational Officer on declaration by—to forgo promotion if unwilling to be posted to Higher Secondary Schools ... 763

Graduate—participating in agitation for their demand in March 1973, Minister's attention called to hardship caused to—in the form of suspension, loss of earned leave, etc. 760–762

Question *re*—

Appointment of—in Harijan Welfare Department School, priority to those belonging to Scheduled Caste 198–200

Diploma in Teacher Education, change in examination system 746–747

Fare concession to—for travel in State Transport buses 11–13

Graduate—appointed after 1st April 1970 and selected by Public Service Commission, passing of Account Test and Deputy Inspector of Schools Test for sanction of annual increment to ... 395–396

Graduate—appointed after 1st April 1970 but not selected by Public Service Commission, denial of leave facilities to 393–394

PAGES

T—*cont.*

TEACHERS—*cont.*

Question *re*—*cont.*

Graduate—of Goevrnment Schools appointed after 1st April 1970, regularisation of services through Special Test of Public Service Commission 391–398

Headmasters of Higher Secondary Schools, teaching experience required for appointment as 742–746

Headmasters of Municipal High Schools in Thanjavur district, compulsorily retired during June 1978, number of 195–196

Imposition of condition on—of Government High Schools of North Arcot district for writing examination for higher studies ... 9–10

Number of—ordered to be reinstated by Government but not reinstated by Private High Schools from 1975 6–8

Number of—ordered to be reinstated by Joint Director of School Education but not reinstated by Managements from 20th June 1974 till 19th July 1977 3–6

Tamil Pandits and Physical Education teachers in Middle Schools, appointment of 389–390

Teacher-wardens posted to Harijan Welfare Hostels, hardship caused to—, in personally bearing cost in advance for purchases relating to hostels ... 752–754

Tutor-*cum*-wardens in Government Harijan Welfare Boys' Hostels, transfer as teachers in Government High Schools and *vice versa* ... 750–752

TEACHERS' DAY—

Question *re* declaration of—as Public Holiday ... 749–750

TECHNICAL HIGH SCHOOLS—

See Schools

PAGES

T—*cont.*

TELEPHONE—

Question *re* provision of—booths near Taxi-stands in Madras City 740–741

THANGAPANDIAN, Thiru V.—

Adjournment motion *re* Police Firing at Aruppukottai 31–34, 39

Information *re* obstruction of Vehicle of Chairman who went to pay homage to late Thiru Asaithambi 211, 212 215

Policy Note on Education, discussion on ... 76–83

THOMAS, Thiru P. R.—

Graduate Teachers participating in agitation for their demand in March 1973, calling Minister's attention to hardship caused to—in the form of suspension, loss of earned leave etc., ... 762

Policy Note on Education, discussion on ... 72, 73, 302–310

Policy Note on Medical and Public Health, discussion on 633–639

TOURISM—

Policy Note on Information,—and Film Technology for 1979-80, laid on the table 90

Question *re* Tourist Homes and Guest Houses built by Tourism Development Corporation, number, location and capacity of 189–192

TRANSPORT—

Question *re*—

Bus Service between Christianpet and Reddipalayam, North Arcot district, stoppage of ... 13–14

Fare concession to teachers for travel in State—buses 11–13

Policy Note on Nationalised Road—and Shipping, discussion on 889–908

PAGES

T—*cont.*

TRANSPORT CORPORATIONS—

Note on Review of Performance of—for 1979-80, laid on the table 661

TUTOR-*CUM*-WARDENS—

See Teachers

U

URBAN DEVELOPMENT—

Policy Note on—, 1979-80, laid on the table ... 88

V

VEERASAMI, Thiru Arcot N.—

Policy Note on Community Development and Panchayat Development, discussion on ... 843

Policy Note on Medical and Public Health, discussion on ... 609, 779–808, 815, 816, 831, 832

VENKATESAN, Thiru E. S.—

Policy Note on Nationalised Road Transport and Shipping, discussion on 889–892

VICE-CHAIRMAN (Thiru E. S. Venkatesan)—

Policy Note on Nationalised Transport and Shipping, discussion on 895, 898, 901

VICE-CHAIRMAN (Thiru V. R. Periannan)—

Policy Note on Agriculture, discussion on ... 471

PAGES

V—*cont.*

VICE-CHAIRMAN (Thirumathi Mandakini Krishnamurthi)—

Policy Note on Agriculture, discussion on ... 430

Policy Note on Education, discussion on 71, 76

Policy Note on Medical and Public Health, discussion on 620

W

WALK-OUT—

Protesting against denial of permission to move an adjournment motion 42, 43

WATER-SUPPLY—

Sewerage and—, 1979-80, Demand No. 19, Supplement to—, laid on the table 90

WIDOWS—

Question *re* scheme for supply of sewing machines to 407–410

WORLD CONGRESS OF INTERNATIONAL ORTHOPAEDIC SURGEONS (FOURTEENTH)—

Question *re* number of Government representatives who participated in—held in Japan during **October 1978** **208–210**

12/9/84